தமிழரசு

16.7.1992 — 16.12.1992

மலர் 23 இதழ் 2 16.7.1992
மலர் 23 இதழ் 12 16.12.1992.

V211, N92TA
N92.
192644

தமிழரசு
16-7-1992 ரூ.1

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஊட்டியில், செல்வி கஸ்தூரி என்ற பெண்ணின் தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக தமது சொந்தப் பணத்திலிருந்து ரூ.10,000 நிதி உதவி வழங்கியதோடு, செல்வி கஸ்தூரிக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்தில் மீண்டும் பணியாற்ற உத்தரவிட்டார்கள் (6.7.1992).

இந்த இதழில்...

உதகையில் முதல்வர் ... 2
கர்மவீரர் காமராசர் ... 5
மாங்கனிக் கண்காட்சி ... 8
தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும் ... 9
கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம் ... 17
நூல் நயம் ... 23
புரட்சித் தலைவியின் முதலாண்டு ஆட்சி - ஒரு கண்ணோட்டம் ... 24
நகர் ஊரமைப்பு நலப்பணிகள் ... 31
கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள் ... 33
வனவளம் காப்போம்! ... 35
மாணவர் பக்கம் ... 39
திருச்சி மாவட்ட ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 41
அநாதை — கவியரசர் கண்ணதாசன் சிறுகதை... 42
கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 46

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் - 1
மலர்: 23
இதழ்: 2
16-7-1992

உதகையில் முதல்வர்

மலர்க் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக மே மாதத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஊட்டியின் ரம்மியமான மற்றும் இயற்கை எழிலார்ந்த சூழ்நிலையைப் பேணிக் காக்க வேண்டுமென்றும், ஏற்கெனவே குறைந்து வரும் வனப்பகுதிகள் மேலும் அழிக்கப்படுவதையும், பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவதையும் தடை செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்றும், ஊட்டியின் புராதன அழகையும் சோலா காடுகளின் (Shola Forest) தனித்தன்மையைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

ஊட்டிக்கு வரும் எல்லாச் சுற்றுலாப் பயணிகளையும், வயது வித்தியாசமில்லாமல் கவருகின்ற ஊட்டி ஏரியின் அழகைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற ஆகாயத் தாமரை (Water Hyacinth) என்ற நீர்த் தாவரத்தை முழுமையாக நீக்கி, ஏரியைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, ஊட்டியின் பழைய எழிலைக் கொண்டு வரவேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்கிணங்க, அரசு அதிகாரிகள் இப்பணியில் ஈடுபட்டு ஆய்வு மேற்கொண்டனர், அந்தச் சீரமைப்புப் பணியின் முதற்கட்டமாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 3.7.1992 அன்று ஊட்டி ஏரியையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும், அந்தப் பகுதியில் உள்ள பலவேறு ஆக்கிரமிப்புகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊட்டியைச் சுற்றியுள்ள வடக்கு ஏரிச் சாலை, மான் பூங்கா, அர்பொரேட்டத்தில் (Arobaratum) உள்ள பாதுகாக்கப்

பட்ட தாவர வகைகள் உள்ள பகுதி, குழந்தைகள் பூங்கா ஆகிய இடங்களில் இறங்கிப் பார்வையிட்டார். மான் பூங்காவில் சில மான்களை வாஞ்சையுடன் தட்டிக்கொடுத்து, அவைகளுக்கு உணவையும் தன் கையால் வழங்கினார். அர்பொரேட்டத்தைப் பார்வையிடும் போது அந்தத் தோட்டம் இன்னும் சிறப்பாகப் பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

குழந்தைகள் பூங்காவுக்கு அருகில் அமைந்துள்ள கழிவு நீர்க் கால்வாய் நீரை இனிமேல் சுத்தப்படுத்திய பின்பு தான் விட வேண்டும் என்ற அறிவுறுத்தினார். ஏரியில் புதிதாக வளர்ந்துள்ள ஆகாயத் தாமரை தாவரத்தை ஜூலை மாதம் இறுதிக்குள் முழுமையாக நீக்கவேண்டும் என்றும், பின்னர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆட்களை நியமனம் செய்து புதிதாக வளரும் நீர்த் தாவரத்தை உடனுக்குடன் களைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

ஏரியைச் சுற்றி 200 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளையும், அனுமதியின்றிக்கட்டப்பட்டகட்டடங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். ஏரியைச் சுற்றிப் பசுமையான மரங்களை வளர்த்து, மீண்டும் ஒரு அடர்த்தியான வனப்பகுதியாக அதனை மாற்ற வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

ஏரியின் ஓரத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும், குழந்தைகளுக்கானரயில்செல்லும்பாதையைவிரிவுபடுத்தி, அதன் முடிவில் பொம்மை ரயில் நிலையம் ஒன்றையும், சிற்றுண்டிச் சாலையையும் அமைக்கவேண்டுமென்றும்கருத்து தெரிவித்தார். ஏரியின் நடுவில் தற்போதுள்ள மிதக்கும் சிற்றுண்டிச் சாலையை நவீனமயமாக்க வேண்டுமென்றும், ஏரி அசுத்தமாவதைத் தடுப்பதற்கு எல்லாப் படகுகளிலும் ஒரு சிறிய குப்பைத் தொட்டி, அமைக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார். ஏரி ஓரத்தில் அமைந்துள்ள படகு வீடு மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகிய கட்டடங்களை இயற்கையோடு இணைந்த வனப்பு மிகுந்த கட்டடங்களாக மாற்றி அமைக்கத் திட்டம் மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார். ஏரியைச் சுற்றி அடுக்குத் தளங்கள் (Terracing) நன்முறையில் அமைக்கப்பட்டு ஏரியின் அழகு பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இயந்திரப் படகில் ஊட்டி ஏரியை ஒருமுறை சுற்றி வந்தார். பின்னர், சிறிய ரயிலில் பயணம் செய்து ஏரியின் பலவேறு பகுதிகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் Cairn Hill-இல் உள்ள சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு (Eco Awareness Centre)வருகை தந்து வனத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அருகாமையில் உள்ள 'சோலா காடு'-களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வனத்துறை அதிகாரிகளுடன் சோலா காடுகளைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி ஆலோசனை நடத்தினார். சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு வருகை புரிந்ததன் நினைவாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரக்கன்று ஒன்றை நட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, அதாவது 3 மணி நேரம் இந்த ஆய்வினை மேற்கொண்டார்.

ஊட்டி ஏரியின் அழகுக்கு ஒரு சவாலாக இருக்கின்ற ஆகாயத் தாமரைத் (Hyacinth) தாவரத்தை எவ்வாறு ஒழிப்பது என்பதைக் குறித்தும், ஏரியின் அழகை மேம்படுத்த மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை எவ்வாறு அகற்றலாம் என்பதைக் குறித்தும், இச்சுற்றுலா இடத்தை

ஏழைப் பெண்ணுக்கு உதவி!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் ஊட்டி நகரத்தைச் சார்ந்த செல்வி கஸ்தூரி என்ற 18 வயது பெண், தனது ஏழ்மை நிலையை விளக்கி நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது தாயாருக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க நிதி உதவி செய்ய வேண்டுமென்று 3.7.92 அன்று மனு ஒன்றினைக் கொடுத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவரது ஏழ்மை நிலையையும், பிரச்சினைகளையும் கேட்டறிந்து ஆவன செய்வதாகக் கூறினார்கள். பின்னர் 6.7.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனுதாரர் செல்வி கஸ்தூரியை நேரில் வரவழைத்து, தனது சொந்தப் பணத்திலிருந்து அவருடைய தாயாரின் மருத்துவச் செலவுக்காக ரூ.10,000 வழங்கினார்கள். அப்பொழுது மனுதாரர் செல்வி கஸ்தூரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், தான் கடந்த 8 ஆண்டுகளாக சேரன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் கூட்டுறவுப் பண்டக சாலையில் பணிபுரிந்து வந்ததாகவும், தற்பொழுது பணி நீக்கம் செய்யப்பட்டு வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், முறையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனுதாரர் செல்வி கஸ்தூரியின் கோரிக்கையை ஆய்வு செய்து, அதே இடத்தில் அவரைப் பணி அமர்த்தத் தக்க மேல் நடவடிக்கையை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

மேலும் கவர்ச்சிகரமாக்கச் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், முதலமைச்சரின் செயலாளர் திரு எஸ்.ஆர். கருப்பண்ணன், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கபிலன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனாநாயர், வேளாண்மைப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளர் திரு. கிருஷ்ணசாமி மற்றும் உயர் அதிகாரிகளுடன் பின்னர் ஆலோசனை நடத்தி, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

★ பெண்கள், விழிப்படைந்தால் குடும்பம முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

- பெருந்தலைவர் காமராசர்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி .டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகு குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

இயற்கை அழகுமிக்க அந்தப் பைக்காரா ஏரி கிட்டத்தட்ட 17 கி.மீட்டர் நீளமுள்ளது. அதை விசைப்படகு மூலம் சுற்றிப் பார்த்தார்கள். தற்போது அந்த ஏரி முப்படைகளையும் சேர்ந்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற இடமாக அமைந்திருக்கிறது. இயற்கை எழில் சூழ்ந்த இந்தப் பைக்காரா ஏரிக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அங்குச் சுற்றுலாப் பயணிகளுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் படகு குழாம் ஒன்றை ஏரியின் ஒரு பகுதியில் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் மிக அதிகமான அளவில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுவர்.

சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த இடத்தில் வசதி செய்யும்பொழுது, இயற்கை எழில் மிக்க இந்த ஏரிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். முப்படை வீரர்கள் பயிற்சி நிலையத்திற்கு இடையூறு இன்றி வனத்துறையினரிடம் கலந்து, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் படகுக் குழாமிற்கு ஒரு தனி வழி ஒன்று அமைக்கப்படும். ஆனால், அதே சமயத்தில், சுற்றுலாப் பயணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து, படகு குழாம் செல்ல, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புப் பேருந்துகள் மூலம் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவார்கள். மற்ற தனியார் வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டா. இதன் மூலம் அங்கு உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் பாதுகாக்கப்படும். மேலும், அந்தப் பகுதியில் சுற்றுலா மையம் (Tourist Complex) ஒன்று உருவாக்கப்படும். இதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனச் சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பைக்காரா நீர்த்தேக்கத்திற்குச் சென்றபோது, வெலிங்டனில் உள்ள ராணுவப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் ஒய்.கே. வதேரா அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப. சிவகாமி, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர் ஆகியோர் உடன்சென்றார்கள்.

கர்மவீரர் காமராசர்

— முதல் பக்க அட்டையில்...

ஒருவருடைய புகழ், அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைப் பொறுத்து அமைவதில்லை; எவ்வளவு பட்டங்களையும் - பதவிகளைச் செல்வங்களையும் பொற்றிருந்தார் என்பவைகளின் அடிப்படையிலும் நிலைத்து நீடிப்பதில்லை.

குறிப்பிட்ட அந்த நபர், தனது நலத்தில் எவ்வளவு உறுதியாக இருந்தார் - தன் மனைவி மக்களை எவ்வாறெல்லாம் நலமுறச் செய்திருந்தார் - தன்னுடைய உற்றார் உறவினர்களுக்கெல்லாம் எவ்வளவு உதவிகரமாக இருந்தார் என்பதன் அடிப்படையிலும் அன்னாரின் பெருமை விரிந்து பரவி விழுதுவிடுவதில்லை!

வேறு எப்படி இருந்தால்தான் ஒருவரது புகழும் பெருமையும் நீடித்து நிலைக்கும் என்று தானே கேட்கிறீர்கள்?

கர்மவீரர் காமராசரைப் போல இருந்தால் போதும்; உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இடம் பிடித்து விடலாம்!

ஆம்; மேலே நாம் கூறியவற்றுக்கெல்லாம் நேர் மாறாக வாழ்ந்து மறைந்த பெருமையாளர்தான் காமராசர்.

முதுகுத்தண்டு வளைகிறவரை மூத்து முதிர்ந்து நீண்டகாலம் வாழ்ந்தவரில்லை அவர்.

உயர்நிலைப் பள்ளி வரை கூடச் செல்லாத அவர், ஒரு பட்டத்தையும் பெற்றவரில்லை.

மக்கள் கொடுத்த மாபெரும் ஆதரவால், ஒன்பதாண்டுக் காலம் ஒப்பற்ற தமிழக முதல்வராக அவர் பதவி வகித்தார்.

'அன்றாடங் காய்ச்சி' என்பார்களே? அப்படிப் பட்ட மிக வறிய குடும்பத்தில் பிறந்த அவருக்குத் தெரிந்ததெல்லாம் பிறர்நலம் பேணுவது தானே தவிர, தன்னலம் என்றால் துளியும் தெரியாது.

மனை, மனைவி, மக்கள் போன்ற வாழ்க்கைப் பந்தங்களிலெல்லாம் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரில்லை.

முதலமைச்சராக உள்ள தனது மகனிடம் - 'மாதாமாதம் வீட்டுச் செலவுக்கு அனுப்பும் பணத்தில் ஒரு நூறு கூட்டி அனுப்பு' என்று தாயார் விருதுநகரிலிருந்து சொல்லியனுப்ப, 'அந்தக் கிழத்துக்கு இருநூறு போதாதாமா?' என்று அலட்சியமாகவும், குத்தலாகவும் கேட்ட அவர், உற்றார் உறவினர்களாலெல்லாம் வெறுப்போடுதான் நோக்கப்பட்டாரே தவிர, விருப்போடு எதற்காகவும் அணுகப்படவில்லை.

இவ்வாறான தன்மைகளால் தான் காமராசரின் புகழ் கடல் போல் பரவியிருந்ததே தவிர - 1954 முதல் 1963-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர் வகித்த பதவியினாலோ, எட்டுப்பேர் கொண்ட அவர்தம் அமைச்சரவையினாலோ அல்லவே அல்ல!

'இளமையில் வறுமை இன்னா' என்ற இன்னா நாற்பது பாடல் அடிகளை அனுபவித்துணர்ந்தவர் அவர். இதனாலேதான், தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் - ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கினார்; உயர்நிலைப் பள்ளிப் படிப்பு உயர்குடிப் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி ஏழை எளிய மக்களுக்கும் இலவசமாகக் கிடைத்திட வைத்தார்; பசிப்பிணி என்னும் பாவி அண்டாதபடி நலிந்தோர் குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் பகலுணவு அளித்துப் படிப்பில் கவனம் செலுத்தச் செய்தார்.

1930-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள், விருதுப்பட்டியில் (இன்றைய விருதுநகர்) குமாரசாமி - சிவகாமி ஆகியவர்களின் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தவர் காமராசர். அப்போது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி என்பதாகும்.

இளமை முதலே 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு தவாது' என்பது அவர் எண்ணமாக இருந்தது.

கிராமங்கள் மீதும் கிராம மக்கள் மீதும் அவருக்கிருந்த பற்றும் பாசமும் அளவிடற்கரியதாகும்.

அவருடைய பேச்சிலோ எழுத்திலோ, கரடு முரடான தர்பார் வாசகங்களைக் காணவே முடியாது; எல்லோருக்கும் புரியும் எளிய தமிழிலேயே அவர் எழுத்தும் பேச்சும் இருக்கும். பாமர மக்களெல்லாம் அவரைப் பாசமிக்க தலைவராக மதித்திட இதுவும் ஓர் காரணம்.

மிகச் சிறந்த அரசியல் வாதியாக் அவர் பிற்காலத்தில் வட இந்தியராலும் மதிக்கப்பட்டார்; இதற்கு முழுமுதல் காரணம், அவர் சிறந்த ராஜதந்திரியாக விளங்கியது மட்டுமல்ல; அரசியலை அநாகரிகத்தின் சாயல்கூடப் படியாமல் கையாண்ட விதம் தான் என்பது கற்றறிவாளர் கருத்தாகும்.

'பெருந்தலைவர்' என்று அவரை நாடு பாராட்டிாலும், தன்னை வெறும் தொண்டனாகக் கருதிப்பாடுபடுவதிலேயே அவா மிகக் கொள்வார் அவர்.

எதிரிகள் தன்னை எரி நெருப்பாகச் சாடினாலும் - பதிலுக்குத் தானும் தரக்குறைவாகப் பேசும் குணம் அவருக்கு இருந்ததில்லை.

'படிக்காத மேதை' என்று பாராட்டப் பெற்ற காமராசரை ஒரு முறை 'பூகோளம் படிக்காதவரா நாடாளுவது'? என்று யாரோ விமர்சித்து விட்டார்கள். இது பற்றித் தன்னிடம் கேட்டவர்களிடம் பெரியவர் காமராசர் என்ன சொன்னார் தெரியுமா?

'எந்த நாடு எங்கே இருக்கு, எந்த ஊரு எங்கே இருக்குங்கிற சங்கதியெல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். அதுமட்டுமில்லைங்கிறேன். எந்த ஊரு

வழியா எந்த ஊருக்கெல்லாம் போகலாம், அந்தந்த ஊரு ஜனங்களோட மொழி - நாகரிகம் எல்லாம் என்ன? - எந்தெந்த ஊர்ல என்னென்ன ஆறு ஓடுது, அப்பிடிங்கிறதும் எனக்குப் புரியும். இது போதாதா? கோடுகோடா போட்டிருக்கிற படத்தைப் பார்த்துப் படிச்சாத்தான் பூகோளம்னா அது எனக்குத் தேவையில்லைங்கிறேன்'.

- இதுதான் காமராசர் பதில்; எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது பார்த்தீர்களா?

மிக வறிய குடும்பத்திலே பிறந்து, மிக உயர்ந்த நிலையைத் தம் உண்மை உழைப்பாலே அடைந்த காமராசர், தந்தை பெரியார் அவர்களால் 'பச்சைத் தமிழர்' என்று கூறிப் பாராட்டப் பெற்றார். மூதறிஞர் ராஜாஜி, அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., ஆகியோரும் அவரைப் பலபடப் போற்றிப் புகழ்ந்ததுண்டு.

விடுதலைப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தியின் நம்பிக்கைக்கு உரியவரான அவர் இந்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறை சென்றதுண்டு; தியாகத் தழும்புகளை ஏற்றதுண்டு. படிப்படியான அவரது அரசியல் முன்னேற்றம் இவ்வாறாகப் பலத்த அஸ்திவாரம் உடையதாக இருந்தது.

இந்தியப் பிரதமர் பதவி வகித்த காலத்தில் - ஜவகர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோர் எதிர்பாராமல் மறைந்தபோது, இந்தியாவில் எவ்வித அரசியல் நெருக்கடியும் நேராதிருக்கக் காரணமே காமராசரின் அரசியல் சாமர்த்தியம் தான்' என்று உலகமே உவந்து பாராட்டியதுண்டு.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், சோவியத் நாட்டுக்கும் சென்றபோதும் சாதாரண வேட்டி-சட்டையிலேயே சென்றவர் காமராசர்; அது மட்டுமல்ல; பிறமொழி தெரிந்திருந்தும் தமிழில் தான் பேசுவேன் என்றும் பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

அந்த அளவுக்குத் தாய்மொழிப் பற்றாளராக இருந்த அவரைத் தமிழிலக்கியத்தின் எதிரி என்றார்கள் சிலர்; ஆனால் அந்தப் பொய்வாதம் மெய்யாகவில்லை.

புதுவையில் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இல்லத்தில், திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை முதன் முதல் திறந்து வைத்தபோது தமிழக முதல்வராக இருந்த காமராசர் என்ன பேசினார் தெரியுமா?

'நான் தமிழைப் பற்றியோ தமிழிலக்கியங்களைப் பற்றியோ அவ்வளவாக அறியாதவன் தான்; ஆனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்ப் புலவர்; தமிழ் இலக்கண இலக்கியத்திலெல்லாம் நல்ல தேர்ச்சி பெற்றவர்; அவர் சொல்கிறார் திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று. ஆகவே, இதை நான் ஒத்துக் கொள்கிறேன்.''

- என்று மனம் திறந்து கருத்தறிவித்தார் அவர். அந்தத் திருவள்ளுவரின் படம்தான் பின்னர் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

1972-இல் தாமிரப்பத்திர விருதும் பெற்ற கர்மவீரர் காமராசர் பெரிதும் உடல் நலிவுற்றிருந்தார். காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் (1975) மறைந்தார். தன்னிகரற்ற அந்தத் தியாகத் தலைவனின் மறைவுச் செய்தி தமிழகத்தையே உலுக்கிவிட்டது எனலாம்.

மத்திய அரசு காமராசர் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. சென்னை மாநகரிலே அவரது நினைவாகத் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது; தமிழ்நாடு அரசு - விருது நகரிலும், சென்னையிலும் உள்ள காமராசர் இல்லங்களை நினைவில்லங்கள் ஆக்கியது. மெரீனா கடற்கரைச் சாலை காமராசர் சாலை ஆக்கப்பட்டது. 'காமராசர் மாவட்டம்' உருவாகியது; 'காமராசர் பல்கலைக் கழகம்' அமைக்கப்பட்டது. உழைப்பால் உயர்ந்த அவர் புகழ், தமிழ்போல் தழைத்திடும் என்றென்றும்.

- பி.எல். ராஜேந்திரன்.

மனங்கவரும்

மாங்கனிக் கண்காட்சி

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின் படியும் அதைத் தொடர்ந்து அவர்களது ஆணையின்படியும் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் 5.6.92 முதல் 9.6.92 முடிய அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கண்காட்சியின் தொடக்க விழா 5.6.92 அன்று கிருஷ்ணகிரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் திடலில் நடந்தது. இவ்விழாவில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் திரு. ஆர். ஸ்ரீராம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன் இ.ஆ.ப. அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பு மலர் வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார். மேலும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள், மாங்கனிக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசினார்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் திரு. ஜி. ரங்கராவ் இ.ஆ.ப. அவர்களும், செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். மேலும் கண்காட்சி விழா நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், திரு. எம்.ஜி. சேகர், டாக்டர் வி. புருஷோத்தமன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். தோட்டக்கலை இணை இயக்குநர் திரு. எம்.ஏ. இரியன் நன்றியுரையாற்றினார்.

இக்கண்காட்சியில் தமிழகம் மட்டுமன்றி மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து 50-க்கும் மேற்பட்ட மாங்கனி இரகங்கள் கொண்டுவரப்பட்டன. இக்கண்காட்சியில், 300-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டு மாங்கனி மட்டுமன்றி இதர பழங்கள், காய்கறிகள், வாசனைத் திரவியங்கள், மலைப் பழங்கள், மலர்கள் ஆகியவைகளையும் இக்கண்காட்சியில் போட்டிக்கு வைத்தனர். மேலும், இக்கண்காட்சியில் சிறந்த மாங்கனிக்குப் பரிசும் அதிக அளவு சிறந்த மா இரகங்களை வைத்துப் பரிசுகளைப் பெறுபவர்களுக்குக் கேடயமும் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் 75 அரசுத் துறை அரங்குகளும் 42 தனியார் அரங்கங்களும் இடம் பெற்றன. அரசுத் துறையினர் தத்தம் துறையின் மூலம், அரசு மக்களுக்கு ஆற்றிவரும் நற்பணிகள் திட்டங்கள், பற்றி மக்கள் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில் அரங்கம் அமைத்திருந்தனர்.

இவ்விழாவின் ஒவ்வொரு நாளும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மா சாகுபடிக் கருத்தரங்கு, பட்டுச் சாகுபடிக் கருத்தரங்கு, சொட்டுநீர்ப் பாசனக் கருத்தரங்கு போன்ற கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் நவீன முறைகள் பற்றியும் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், உயர் அலுவலர்கள் மூலம் அறிந்திட இக்கண்காட்சியும், கருத்தரங்குகளும் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன.

மு. கிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டா ஜெ. ஜெயலலிதா அவர்கள் 10.7.1992 அன்று ஊட்டியில் உள்ள 'தமிழகம்' அரசு விருந்தினர் மாளிகையில், சமூகநலத் துறை சார்பில், நலிவுற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்களையும், தம் சொந்தப் பொறுப்பில் சேலை, ரவிக்கை ஆகியவை களையும் வழங்கினார்.

தழைத்தோங்கும்

தமிழ்வளர்ச்சியும் பண்பாடும்

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில திங்களில் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையையும் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். அன்று முதல் தமிழ் வளர்ச்சிக்குப் புதுப்பொலிவும் மெருகும் மிளிரலாயின. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உள்துறை, தொழில் துறை முதலிய பெரிய துறைகளுக்குக் காட்டும் ஆர்வத்தைப்போலத் தமிழ் வளர்ச்சியிலும் பரிவு காட்டியதோடு கலை வளர்ச்சியும், தமிழ் வளர்ச்சியும் நாட்டில் மலரும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு வேராக அமையும் துறையாகக் கருதியதை நன்றியோடு நாம் நினைவு கூர்கிறோம். கலை வளர்ச்சிக்குப் புதிய பொலிவும் தமிழ் வளர்ச்சிக்குப் புதிய வலிவும் பெருகுவதற்கான பல முயற்சிகள் இந்த அரசின் ஓராண்டுச் சாதனைகளாக உருவாகியுள்ளன.

''தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்''

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சிமொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு, மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்தல், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாக அரசு செயலகத்தில 1984-ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப் பெற்றது.

இத்துறையின் பொறுப்பில் அமைநத அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன. தமிழ் வளர்ச்சியும், பண்பாட்டு மலர்ச்சியும் நாள்தோறும் மிக்கோங்கிச் சிறப்பெய்தி வருகின்றன.

தமிழ் வளர்ச்சித் துறை

ஆட்சி மொழித்திட்டச் செயலாக்கத்தில் அமைந்த முன்னேற்றம் குறித்து, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலமைந்த சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும், தமிழாய்வு அலுவலர்களும் ஆய்வு செய்துள்ளனர்.

ஆட்சி மொழி திட்டச் செயலாக்கத்தைத் தன்னாட்சி நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தும் வகையில் அரசுக்குக் கூடுதல் செலவில்லாமல் இப்போதுள்ள அலுவலர்களைக் கொண்டே ஆட்சி மொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்ற ''ஈராண்டு எழுச்சித் திட்டத்தை'' மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் அனைத்துத் தன்னாட்சி நிறுவனங்களிலும் அரசு அலுவலகங்களிலும் ஆட்சிமொழித் திட்டம் முனைப்புடன் செயற்படுத்தப்படும்.

ஆட்சிச் சொல்லகராதி

அரசுப் பணியாளர்கள் இடர்ப்பாடின்றி எளிதில் தமிழைப் பயன்படுத்துவதற்கியலும் பொருட்டு முன்னர் வெளியிடப் பெற்ற ஆட்சிச் சொல்லகராதியின் நான்காம் பதிப்பின் மறுபதிப்பு இவ்வாண்டில் அச்சிட்டுப் பல்வேறு துறைகளுக்குத் தேவைக்கேற்ப வழங்கப் பெற்றது. ஆட்சிச் சொல்லகராதியின் ஐந்தாம் பதிப்பிற்கும், ஆட்சிச் சொல்லகராதியின் இணைப்பு வெளியீட்டிற்கும் புதிய சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன.

ஆட்சிமொழிக் கருத்தரங்கு

அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சிமொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகளைத் திட்டமிட்டு துறை நடத்தி வருகிறது. திட்டமிடப்பெற்றவாறு நீலகிரி, தென் ஆர்க்காடு, சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கருத்தரங்கை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழிற் சிறந்த வரைவுகள்-குறிப்புகள் - பரிசு வழங்கல்

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழிற் சிறந்த வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு திருத்தியமைத்து, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும் 5 பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவு

களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

மாணவர்கள் தமிழ் மொழியின் பால் காட்டும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கக் கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கென ரூ.75,000/- நிதியுதவி வழங்க அரசு இவ்வாண்டில் ஆணையிட்டது. 28 கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கு ரூ.53,500 நிதியுதவியாக வழங்கப் பெற்றது.

மொழியாக்க நூல் வெளியீடு

தமிழிற் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளில் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட இத்திட்டம் வகை செய்கின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை 13 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இம்மொழி பெயர்ப்புத் திட்டத்தின்படி கம்பராமாயணத்தின் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.



தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம்

கடந்த ஆண்டில் வெளிவந்த நூல்களில் 42 சிறந்த நூல்களுக்குப் பரிசாக ரூ.1.27 இலட்சம் "திருவள்ளுவர் திருநாளில்" வழங்கப்பட்டது.

நூற்பதிப்பு நிதியுதவி வழங்கு திட்டம்

இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் 34 நூலாசிரியர்களுக்கு முதல் இரண்டாம் தவணையாக ரூ.96,670 நிதியுதவி வழங்கப் பெற்றது.

தமிழிருக்கை நிறுவுகை - ஆராய்ச்சிப் பணிகள் - பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல் - நிதியுதவித் திட்டம்:

பிற மாநிலங்களில் தமிழ் வளர்க்கும் நோக்கில், அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்படி ரூ.37,56,627 மானியமாக பிற மாநிலங்களுக்கு வழங்கப் பெற்றது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 360 தமிழறிஞர்கள் நிதியுதவி ஒப்பளிக்கப் பெற்றுள்ளனர். ஒவ்வொருவரும் திங்கள் தோறும் ரூ.400 நிதியுதவி பெறுகின்றனர். இவ்வாண்டில் 20 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெற்றது.

வரலாற்று வரைவுத் திட்டம்

முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல்பழங்காலம், சங்க காலம் பகுதி 1 (அரசியல்) சங்ககாலம் பகுதி 2 (வாழ்வியல்) பல்லவர், பாண்டியர் காலம் (முதற் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டில் பல்லவர் பாண்டியர் காலம் - தொகுதி 3-இல் இரண்டாம் பகுதியும், சோழப் பெருவேந்தர் காலம் பற்றிய நான்காம் தொகுதியினையும் வெளியிட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று, தரவுகள் தொகுப்புப் பணி நிறைவடைந்துள்ளது.

விழாக்களும், விருதுகளும்:
திருவள்ளுவர் திருநாள் விழா

திருவள்ளுவர் திருநாளை அரசு விழாவாகத் தமிழ் வளர்ச்சித் துறை நிகழ்த்துகிறது. ஆண்டுதோறும் திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் எழுதும் சிறந்த அறிஞர்களுக்குத் திருவள்ளுவர் விருது

வழங்கப் பெறுகிறது. இவ்விருதுக்குத் தெரிவு செய்யப் பெறுபவர் ரூ.20,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் வழங்கப் பெறுகின்றார். இவ்வாண்டு சனவரித் திங்கள் 15-ஆம் நாளில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப் பெற்றது.

திரு.வி.க. விருது

தெரிவு செய்யப்பெறும் நாடறிந்த எழுத்தாளருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. விருதாளருக்கு ரூ.10,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் அளிக்கப் பெறுகின்றன. 'பெண்ணின் பெருமை' என்னும் பேரிலக்கியம் தந்த திரு.வி.க. பெயரிலமைந்த இவ்விருது, இவ்வாண்டு முதன் முதலாகப் பெண் எழுத்தாளரும், நாடறிந்த கதையாசிரியருமாகிய திருமதி இராஜம்கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப் பெற்றது.

பாவேந்தர் விருது

ஆண்டுதோறும் வழங்கப்பெறும் பாவேந்தர் விருது, கவிஞர் இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கு முதலமைச்சரால் வழங்கப் பெறவுள்ளது.

கம்பர் விழா

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் திருவழுந்தூரில் ஆண்டுதோறும் கம்பர் விழா அரசு விழாவாக நடத்தப் பெறுகிறது. இவ்வாண்டு 22.3.92-இல் திருவழுந்தூரில் கம்பர் விழா மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர் பிறந்தநாள் விழாவும், விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழாவும் சிறப்புற நடத்தப்பெற்றன.

சங்கப் புலவர்களின் பெருமைகளைப் போற்றிப் பரப்பும் வண்ணம் நினைவுத் தூண் நிறுவும் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது. சங்கப் புலவர்கள் வாழ்ந்த இடங்கள் என அறியப்படும் முதன்மையான இடங்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண்கள் நிறுவப்பெறும். இவ்வாண்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள ஒக்கூரில் மாசாத்தியார்-மாசாத்தனார் நினைவுத் தூண் அமைக்கப் பெற்று 10.12.1991-இல் திறப்புவிழா நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருவூரில் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர்க்கும் நினைவுத் தூண் நிறுவப்பட்டு 11.5.1992-இல் திறப்பு விழா நடைபெற்றது. செங்கல்பட்டு-



எம்.ஜி.ஆர். மாவட்டம் இடைகழிநாட்டு நல்லூரில், நல்லூர் நத்தத்தனார்க்கும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாங்குடியில் மாங்குடி மருதனார்க்கும் நினைவுத்தூண்கள் நிறுவும் பணிகள் முடிவடைந்துள்ளன. விரைவில் திறப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன.

திருக்குறள் வகுப்பு

வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு நடத்தப் பெறுகிறது. நாள்தோறும் மாலை இருவேளைகளிலும் வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் பாடலிசையும் நிகழ்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வளர்தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்தும் நோக்கில் அமைந்த இந்நிறுவனத்தில் திங்கள், வாரக் கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. அறிஞர்களும், ஆய்வாளர்களும் கட்டுரையளிக்கும் கருத்தரங்கேற்றமாக நிகழ்வுகள் திகழ்கின்றன. இவ்வாண்டில் தமிழும் பிற துறைகளும், தகவல் பண்பாட்டு நோக்கில் தமிழ்த் திரைப்படம், நாட்டுப்புறத் தெய்வங்கள் விழாக்கள், சடங்குகள், தமிழ் நாளிதழ்களின் தமிழ்ப்பணி ஆகிய பொருண்மைகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தப் பெற்றன. தமிழர் சமூக மரபுச் செல்வம் என்னும் தேசியக் கருத்தரங்கம் இவ்வாண்டில் நடத்தப் பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை ஆந்திரத்தில் திருப்பதியிலும், கருநாடகத்தில் பெங்களூரிலும், கேரளத்தில் திருவனந்தபுரத்திலும் தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து இந்நிறுவனம் சிறப்பாக நடத்தியதன் தொடர்பாக, பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவில் பாவேந்தரின் 100 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளில் மொழியாக்கம் செய்து நூலக வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உயராய்வு நிலையில் மதிக்கப் பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரை நூல்கள் அறக்கட்டளைப் பொழிவுகள் என்ற வகையிலும் இவ்வாண்டில் எட்டு நூல்கள் வெளியிடப் பெற்றன. அறிவியற் பெருந்தகை பெ.நா. அப்புசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்நிறுவனம் இவ்வாண்டில் நிகழ்த்தியது.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்) தமிழர் சமூகவியல், தமிழ் அறிமுக நிலை, சென்னை நகரக் கிளை மொழிகள் ஆய்வு, 18-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழரல்லாதவர்க்கான எளிய இலக்கணம், அழகியல் தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும், பெருந்தகை பெ.நா. அப்புசாமி நூற்றொகை, கணினியின் உதவியால் சொல்லடைவு தயாரித்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான தரவுகள் திரட்டப்

★ ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியிலும் நாட்டின் ஒருங்கிணைந்த நலன் உறைந்து கிடக்கிறது; அதேபோல், பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிதான் பரந்துபட்ட இந்தியாவின் உயர்வுக்கு ஊக்கமளிக்கும் என்பதையும் நாம் உணர வேண்டும்.

பெற்று, பணிகள் வளர்நிலையில் உள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வலுவூட்டுதற்கு, உயர்நிலைக் குழு ஒன்றை அமைக்கவும், இந்நிறுவனத்திற்கு யுனெஸ்கோ நிதியுதவி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரால் தனி வகையில் ஆய்ந்து தொகுக்கப் பெற்ற அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலம் 1985-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தனி இயக்ககமாக 1989-இல் மீளவும் தோற்றுவிக்கப்பட்டு இயங்குகிறது. பேரகரமுதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்கள் சொல்லடைவு செய்யப்பட்டுள்ளன. 'ஆ' முதல் 'ஔ' முடிவுள்ள இரு பகுதிகளை அச்சிடும் பணி இவ்வாண்டில் தொடங்கப் பெற்றுள்ளது.

தொல்பொருள் ஆய்வு இயக்ககம்

தொல்பொருள் ஆய்வுத்துறை 1961-இல் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழகத்தில் 66 வரலாற்று நினைவிடங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையால் தெரிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெறுகின்றன.

கல்வெட்டுப் பிரிவு

கல்வெட்டாய்வாளர்கள் ஆங்காங்கே ஊர்ப் புறங்களுக்குச் சென்று பழங் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் விரிவான ஆய்வு நடத்தியதில் 7,550 கல்வெட்டுக்கள் கண்டறிந்து படிக்கப் பெற்றன. சுமார் 2,000 கல்வெட்டுக்கள் பல்வேறு தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இப்பணியை மேலும் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆழ்கடல் அகழாய்வு

தமிழ்நாட்டு அரசின் பெருமுயற்சியால் ஆழ்கடல் தொல்பொருளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல்பொருள் துறையும், கோவா தேசியக் கடலாய்வு மையமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் ஆய்வுகள் நிகழ்த்தின. ஆய்வின் விளைவாகத் தரை தட்டிய கப்பல் ஒன்றும் சில கட்டடப் பகுதிகளும் கடலடியில் 22 மீட்டர் ஆழத்தில் கண்டறியப் பெற்றன. கடற்கரையை ஒட்டிக் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் சில சிதைந்த பழங் கட்டடப் பகுதிகளும், கடற்கரையிலிருந்து சுமார் 4½ கி.மீட்டர் தொலைவில் கடலடியில் ஒரு கட்டடப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் முழு விவரங்கள் மேலும் ஆய்வில் உள்ளன. தரை தட்டிய கப்பலில் இரும்பு வளையமும், சில ஈயத் துண்டுகளும் காணப்படுகின்றன. இந்த ஈயத் துண்டில் ஒருபுறம் 1792 என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இக்கப்பல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தரை தட்டிய கப்பலாகலாம் என்று உணர முடிகிறது.

வரலாற்றுத் தொன்மையை வரம்பிட்டு அறியவும், இலக்கியக் குறிப்புகளை உறுதி செய்து தெளியவும் முற்படும் இவ்வரிய ஆழ்கடல் அகழாய்வு நெடுங்காலப் பணியாகவும் நினைத்து நினைத்து உறுதி கண்டுபிடிக்க வேண்டிய நிலைப் பணியாகவும் மலைப்பை உண்டாக்குகிறது. முன்னரே சிலமுறை முயன்று நின்று போன இப்பணியில் தனியார்வம் காட்டி இவ்வரசு ஊக்கியுள்ளது. பூம்புகார்ப் பகுதி கடலடியில் மறைந்தது போலவே இப்போது மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியின் கீழும் தரங்கம்பாடி வரையிலும் நிலப்பரப்பு புதைந்திருக்கலாம் என்றெல்லாம் புதிய ஊகங்களும் இப்போது கருத்துக்கு விருந்தாயமைந்துள்ளன. அவ்வகையில் கடலாய்வுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். ரூ.157 இலட்சத் திட்ட மதிப்பீட்டில் செயற்படும் இக்கடலாய்விற்கு, கடந்த ஆண்டில் ரூ.10 இலட்சமும், இவ்வாண்டில் ரூ.10 இலட்சமும், ஒதுக்கீடு செய்யப்பெற்றது.

இவ்வாண்டில் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும் (ஓராண்டுக் காலம்) கோடைக் காலப் பயிற்சியும் (மூன்று வாரம்) நடத்தப் பெற்றன. ஓராண்டுப் படிப்பில் முதுகலை பயின்ற மாணவர்களும், கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும் பயின்றனர்.

கல்வெட்டாய்வாளர் பயிற்சியில் பங்குபெறுவதற்குத் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு வழங்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, இக்கல்வெட்டுப் பயிலகத்தில் இப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பெற்றது.

வரலாற்று வல்லுநர்கள் பலரும் கலந்துகொண்டு கருத்துரைக்கும் வகையில் 16.5.92-இல் கருவூர் வரலாற்றுக் கருத்தரங்கு தொல்பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்றது.

அறிவாராய்ச்சிக்குத் தகைமை விருது!

ஜவகர்லால் நேரு தகைமையாளர் நிதியுதவித் திட்டம் போலவே தொல்பொருளியல், மானுடவியல் போன்ற தொன்மைப் பொருண்மைகளில் ஆய்வு செய்வோர்க்கு நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆராய்ச்சியாளருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு அறிவாராய்ச்சிக்கு அரசளிக்கும் பரிசாகவும் அமைகிறது.

சிறப்புமிக்க கண்டுபிடிப்புகள்

பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள், நடுகற்கள், மதகுக் கல்வெட்டுக்கள் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் என முப்பத்தைந்து தொன்மங்கள் கண்டெடுக்கப் பெற்றன.

சிறப்புக் கண்காட்சி

அழகன்குளத்தில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொருட்களைப் பொதுமக்கள் பார்வையிடச் சிறப்புக் கண்காட்சி அமைக்கப் பெற்றது.

அகழ்வைப்பகங்கள்

ஆறு அகழ்பொருள் வைப்பகங்களில் காட்சிப் பேழைகள், குறிப்பு அட்டைகள், சிற்பங்கள் முதலியன பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள் காண்பதற்கேற்ப பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பதினைந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற தொல்பொருட்கள் பொதுமக்கள் எளிதில் காணும் வகையில் அகழ்வைப்பகங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. இந்திய மாநிலங்களுள் நெடும் பழமை வாய்ந்த பகுதிகள் சிலவும் தமிழகத்தில் கண்டறியப் பட்டுள்ளன. அவ்வகையில் பழந்தரைப் பகுதியாகக் கருதப்படும் பூண்டியில் தொல்மனை நினைவகம் ஒன்றை உருவாக்க அரசு கருதியுள்ளது.

அரசு அருங்காட்சியகத் துறை

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும், பெருமையும் பூண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இக்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல்பழங்காலப் பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டுவந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்த பெருமை அருங்காட்சியகத்திற்குரியது.

மாவட்ட அருங்காட்சியகங்கள்

மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி 1979-ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்த 'அருங்காட்சியகக் கலையரங்கு' இவ்வாண்டில் காண்போர் களிப்புறும் வண்ணம் தன்வளி அரங்காக அமைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவர் அருங்காட்சியகம்

அருங்காட்சியக வளாகத்தில் அமைந்த சிறுவர் அருங்காட்சியகம் வரலாற்றுமாட்சி, வளப்புமிகு பொம்மைக் காட்சிகள் இயற்கை எழில், இயற்பியல், அறிவியல் புதுமைகள்தொடர்பான கூடங்களைக் கொண்டதாகும். கலை இயற்கை

மிதிவண்டியில் நிதி!

பார்வை அற்றோரிடம் அனுதாபம் ஏற்படுவது இயற்கை. ஆனால் வெறும் அனுதாபத்தினால் என்ன பயன்?

இதை உணர்ந்துதானோ என்னவோ, மஹாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஏழு வயது சிறுவன் சுனில் சாஸ்திரி, தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்ய முன்வந்துள்ளான். அதுவும் கூட சாதாரண உதவியல்ல, சாதனையுடன் கூடிய உதவி.

நாட்டின் தலைநகரான புது தில்லியிலிருந்து மஹாராஷ்டிர மாநிலத் தலைநகரான பம்பாய் வரை சைக்கிளில் பயணம் செய்து பார்வையற்றோர் சங்கத்திற்காக நிதி திரட்ட இருக்கிறான் இச்சிறுவன்.

இரு நகரங்களுக்கும் இடைப்பட்ட தொலைவோ 1,400 கி.மீ.

ஜூன் முதல் தேதியன்று புது தில்லியில் உள்ள விஜய் சவுக் (வெற்றிச் சதுக்கம்) என்ற பொருத்தமான பெயர் கொண்ட இடத்திலிருந்து சுனில் சாஸ்திரி தனது சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தான். இந்திய விமானப் படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் என்.சி.சூரி, சிறுவன் சுனிலை அன்போடு அள்ளியெடுத்து வாழ்த்தி, சைக்கிள் பயணத்தை துவக்கி வைத்தார்.

மிதிவண்டியில் நிதி திரட்டப் புறப்பட்டுள்ள சுனிலின் உருவம் சிறிதானாலும் உள்ளம் பெரிதல்லவா!

மாண்புமிகு முதல்வர் அவர்களால்-தமிழகத்தில்- சென்னை மாநகரில்- பெண் போலீசாரே பணியாற்றும் மகளிர் காவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது; மங்கையர் சங்கடம் நீக்கும் இவ்வாறான காவல் நிலையங்கள், விரைவில் தமிழகமெங்கும் அமைக்கப்படும்.



யியல் தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளச் செயல்முறை வடிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் தாமே இயக்கி அறியும் வண்ணம் மின்னணு விளையாட்டுக் கருவி, சுழலாடி வழியாக மின் ஆக்கம், வளிமத் தந்திக் கருவிகள் முதலியன சிறுவர் அருங்காட்சியகத்தில் நிறுவப்பட்டுள்ளன. தொல் பழங்காலத்தே இருந்த மறைந்த பெருவிலங்கின இழைம வடிவங்கள் காட்சியக முகப்பு வெளியில் நிறுவப்பட்டுள்ளன.

கூடங்கள் சீரமைப்புப் பணி

நாற்புறமும் காணும் வகையில் திருத்திய படிமங்களைச் சீரமைக்கும் முதற் கட்டப் பணி முடிந்து இரண்டாம் நிலைப் பணி நடந்து வருகின்றது. பாலூட்டிகள் கூடத்தை மாற்றியமைக்கும் பணியும் முடிக்கப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் பிற காட்சியகங்களை மறுசீரமைப்புச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூடமும் புதுப்பிக்கப்பட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

கலை-பண்பாட்டு இயக்கத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அருங்காட்சியகத்தால் அமைக்கப் பெற்ற 'தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியை'யும் பல்லவபுரம் ஊரமைவுத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள். அருங்காட்சியக மலர் ஒன்றும், தொன்மக் கலைப் படிமங்களைப் பற்றிய ஐந்து பழம்பெரும் நூல்களும் (மறுபதிப்பு) அருங்காட்சி இயக்ககத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

கலை பண்பாட்டு இயக்ககம்

கலை வளம் பொலிந்த நம் தமிழகத்தில் தனியார் அமைப்புகளுடன் அரசின் பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் இணைந்து கலைப் பணிகளை ஆற்றுகின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம், சென்னையிலும் மதுரையிலும் இயங்கும் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையங்கள், சென்னையிலும், குடந்தையிலும் இயங்கும் அரசு ஓவியக் கைவினைத் தொழிற் கல்லூரிகள், மாமல்லையின் கட்டடச் சிற்பக் கல்லூரி ஆகியன கலைப் பணிகளுக்குரிய ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்றன. கலை பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் இவ்வமைப்புகளை ஒருங்கிணைத்துப் புதிய இயக்ககத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென அரசு திட்டமிட்டது. அதன்படி கலை பண்பாட்டு இயக்ககம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் முத்தமிழ்க் கலைவிழா நிகழ்ச்சியோடு தொடங்கி வைக்கப் பெற்றது. தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கம் புகழுடன் பொலியவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால், கலை பண்பாட்டைக் கவினார்ந்த முறையில் வளர்க்கத் தொடங்கி வைக்கப் பெற்ற இவ்வியக்ககம், முத்தமிழ்க் கலை விழாவை ஏப்ரல் (1992) திங்களில் சீரும் சிறப்புமாக நடத்தியது. தொடர்ந்து 37 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெரும் புகழ் ஈட்டியது. நடனம், வாய்ப்பாட்டு, நட்டுவாங்கம், நாட்டிய நாடகம், பட்டிமண்டபம் எனக் கலைகள் பலவும் இந்நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுக் கண்டோர் இதயம் கவர்ந்தன.

கலை பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் வாரந்தோறும் புதன், சனிக்கிழமைகளில் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகள் பாங்குற நடைபெறுகின்றன. வளரும் கலைஞர்களும், பல்துறை வித்தகர்களும் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றனர். இளங்கலைஞர்களை ஊக்குவிப்பது மட்டுமன்றி, முதுநிலைக் கலைஞர்களின் பயனுரைகளையும் பெற்று அவர்களையும் போற்ற வேண்டுமென அரசு கருதியது. இவ்வகையில் திங்கள்தோறும் முதுநிலைக் கலைஞர் ஒருவரின் காட்சியுரை நடத்தவும் அரசு திட்டமிட்டு இதற்கென ரூ.7,500 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கலை பண்பாட்டு இயக்ககத்தின்

அமைப்புகளில் ஒன்றாய் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இயங்குகிறது. இம்மன்றத்திற்கு மாபெரு கலைஞர்களான வயலின் வேந்தர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் ஆகிய இருவரையும் முறையே தலைவராகவும், உறுப்பினர் செயலராகவும் இவ்வரசு நியமித்தது. இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் இவ்வாண்டில் 39 கலைப் பெருமக்கள் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர் முப்பெருங் கலைஞர்கள் 'பொற்கிழி' அளித்துப் போற்றப் பெற்றனர்.

நாதசுரம், நாட்டியம், வாய்ப்பாட்டு, வீணை ஆகிய கலைகளில் ஊக்குவிக்கும் வகையில் 22 இளங்கலைஞர்கள் தெரிவு செய்யப் பெற்றனர். இக் கலைஞர்களுக்குப் புகழ்வாய்ந்த கலை மன்றங்களில் நிகழ்ச்சிகள் நடத்த உரிய வாய்ப்புகள் உருவாக்கி வழங்கப் பெறுகின்றன. இவ்வகையில் இதுவரையில் 38 நிகழ்ச்சிகளை இவ்வியக்ககம் அமைத்து வழங்கியுள்ளது.

பண்பாட்டுக் கொள்கொடைத் திட்டத்தின்படி, பீகார் கலைக்குழுவையும், இலட்சத் தீவுகள் கலைக் குழுவையும் வரவேற்று தமிழகத்தில் 11 கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடத்தப் பெற்றன. தமிழகக் கலைக்குழு குசராத், அரியானா மாநிலங்களுக்குச் சென்று 13 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை சேர்த்தது.

அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரி முத்தாப் பிள்ளை ஆகிய இசைப் பெருமக்களைப் போற்றும் வகையில் சீர்காழியில் 'தமிழிசை மூவர்' விழா, 33 கலை நிகழ்ச்சிகளோடு சீரார்ந்த முறையில் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையத்தால் நடத்தப் பெற்றது. தொன்மைத் தமிழிசையைப் பரப்பும் வகையில் பழந்தமிழ்ப் பணுவல்கள், தேவார, திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், தமிழிசைக் கீர்த்தனைகளும், சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மைய மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு, இம்மாணவர்கள் சென்னை சங்கீத வித்வத் சபையிலும், ராணி சீதை மன்றத்திலும், திருக்கழுக் குன்றம் இசை மாநாட்டிலும், பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகளிலும், பங்கு கொண்டு இவ்விசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ஆடற்கலை பயிலும் மாணவிகள் வள்ளலார், தேவாரமூவர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களுக்கேற்ப நாட்டிய நாடகங்களும் அமைத்து வழங்கினர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாச சுவாமிகள், பம்மல சம்பந்தனார், டி.என். இராசரத்தினம் ஆகிய கலைப் பெருமக்களின் புகழ் போற்றும் வகையில் 'ஐவர் விழா'-வை இயல், இசை, நாடக மன்றம் நடத்தியது.

மதுவின் தீமைகளை விளக்கி மக்களை நன்னெறிப்படுத்தும் கருத்தமைந்த 'வெளிச்சம்' நாடகத்தை இம்மன்றம் 1.5.92-இல் அரங்கேற்றியது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந் நாடக அரங்கேற்ற விழாவிற்குத் தலைமை யேற்றுச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்,'கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்' அமைப்புடன் இணைந்து 'கோடை நாடக விழா'-வை சூன் திங்களில் நடத்தி வருகிறது. எட்டு நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் பல்வேறு நாடகங்கள் அரங்கேறுகின்றன.

கலை பண்பாட்டு இயக்க அமைப்புகளில் ஒன்றான ஓவிய நுண்கலைக் குழுவின் சார்பில் உதகையில் 'வண்ணக் கலையரங்கு' இவ்வாண்டில் திறந்து வைக்கப் பெற்றது. இவ்வியக்கப் பொறுப்பில் இயங்கும் ஜவகர் பாலபவன் பள்ளி மாணவர்களின் 'கோடை விடுமுறைப் பயிற்சி வகுப்புகள்' நடத்தப் பெற்றன. 500 மாணவர்கள் இப் பயிற்சி வகுப்புகளால் பயனுற்றனர். இம்மாணவர்களின் 'கோடை முகாம்' புதுவையில் பயனுற நடத்தப் பெற்றது. இதில் 50 மாணவர்கள் பங்கு பெற்றுப் பயனுற்றனர்.

இவ்வாறு நாளும் பொழுதும் கலை வளர்ச்சியால் பொலிவுற்று மிளிரும் இந்நல்லாண்டின் சாதனைகள் பல்லாண்டுகள் தொடர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை பல்லாண்டு பாடி மகிழ்கிறது.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்கிற நோக்கில், தமிழின் தொன்மையை, வன்மையை, வளப்பை எடுத்துக்காட்டும் வகையில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை பல்வேறு சிறப்புப் பணிகளைப் பாங்காய் ஆற்றி வருகின்றது.

★ நமது மக்கள் தொகையில், ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்திவிடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகம் உள்ள சமூகத்தில் ஒரு அரசின் கடமை என்ற கருத்தில், பெண்கள் முன்னேற்றம், மகளிர் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.

தொற்று நோய் மருத்துவமனை நவீன தொற்று நோய்கள் நிறுவனமாக மாற்றி அமைக்கப்படும்

தண்டையார்ப்பேட்டையில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 1928-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் சென்னை மாநகராட்சித் தொற்று நோய்த்தடுப்பு மருத்துவமனையை, 1992-93-இல் விரிவுபடுத்தி நவீன வசதிகளுடன் கூடிய தொற்று நோய்கள் நிலையமாக மாற்றி அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

354 படுக்கை வசதிகள் கொண்ட தொற்றுநோய் மருத்துவமனையில் தற்போது காலரா, வயிற்றுபோக்கு, சின்னம்மை, தட்டம்மை, டைஃபாய்டு, புட்டாளம்மை, திமிர்க் காய்ச்சல், மலேரியா சுரம் ஆகியவற்றுக்கென 9 பிரிவுகள் தனித் தனியே உள்ளன. இவை அனைத்தும் புதுப்பிக்கப்படவுள்ளன. இவற்றுடன் தொழுநோய், காச நோய்களுக்கான இரு பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு மொத்தம் 11 பிரிவுகளாக இந்நிலையம் செயல்படும். தற்போது 'சி' வகுப்பு சிறப்பு ஒரு வார்டு மட்டுமே உள்ளது. புதிதாகத் தனித்தனி அறைகள் கொண்ட அனைத்து வசதியுடைய 'ஏ' வசதி சிறப்பு வார்டும் இவ்வாண்டு உருவாக்கப்படும்.

புறநோயாளிகள் பிரிவு

புறநோயாளிகளுக்கெனத் தொடங்கப்பட்ட பிரிவு நாளொன்றுக்குச் சராசரி 300 பேருக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. வடசென்னையில் வாழும் தொழிலாளர் மற்றும் குடிசைவாழ் மக்கள் நலத்திற்காக இப்பகுதி புதுக்கட்டடங்களுடன் விரிவுபடுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்கும் வகையில் மாற்றியமைக்கப்படும். பல்வேறு நோய்களுக்கான இரத்தப் பரிசோதனைகளும், குறைந்த கட்டணத்தில் செய்வதோடு ஈ.சி.ஜி., எக்ஸ்ரே முதலிய வசதிகளும் புதிதாகச் செய்து தரப்படும்.

புதிய வசதிகள்

1. 354 படுக்கை வசதிகள் 500 படுக்கைகளாக உயர்த்தப்படும்.

2. தற்போது காலரா நோயாளிகளுக்கு நரம்பூசி மூலம் செலுத்தப்படும் திரவ உற்பத்தி நிலையம் புதுப்பிக்கப்படும்.

3. தற்போதுள்ள சலவை இயந்திர நிலையத்தின் திறனை அதிகரிக்கும் வகையில் புதிய சலவை இயந்திரங்கள் பொருத்தப்படும்.

4. தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கையை உடனுக்குடன் எடுப்பதற்கு வசதியாக செய்திகளை அவ்வப்போது தருவதற்கு வசதியாக மின்னணுத் தொலைத் தொடர்பகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. தொற்று நோய் மருத்துவமனை வளாகம் முழுவதும் மின் விளக்குகள் அமைக்கப்படும்.

6. தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள நுண்ணுயிர் ஆராய்ச்சி நிலையம் விரிவுபடுத்தப்பட்டு பல்வேறு தொற்றுநோய்கள் மருந்துகளுக்கு எதிராகத் தொற்றுநோய்க் கிருமிகள் எவ்விதம் செயல்படுகின்றன என்பன போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. மருத்துவமனையில் குடிநீர் மற்றும் வடிகால்கள் செப்பனிடப்பட்டு பம்பு ரூம் அறைகள் கட்டி புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி மேல்நிலைத் தொட்டி கட்டி ஆழ்துளைக் கிணறு அமைத்து இணைப்புத் தரப்படும். இவ்வாறு கூடுதல் வசதிகளும் மேம்பாட்டுப் பணிகளும் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க மாநகராட்சி நடவடிக்கை எடுத்துவருகிறது.

பொன்மொழிகள்

தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் உயர முடியும்.

- ஆபிரகாம் லிங்கன்

அனுபவம் ஒரு கடுமையான ஆசிரியர்; அது சோதனையைத் தந்த பிறகு தான் பாடத்தைப் போதிக்கிறது.

- பெர்னாட்ஷா

உங்களைத் தெரிந்து கொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள்; பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தைப் பயன்படுத்துங்கள்!

- ஷேக்ஸ்பியர்

• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என்பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

• செயல் - செயல் - எந்நேரமும் செயலில் ஈடுபட்டு, வாழ்க்கையை முழுமையாக வாழ வழி செய்துகொள்.

சுவாமி விவேகானந்தர்.

கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம்

கால்நடை மற்றும் மீனளத் துறையின் மூலம் கடந்த ஓராண்டில் நிகழ்ந்த சாதனைகள் பலப்பல.

20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு, சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம், பால்பண்ணை வளர்ச்சி, கன்று வளர்ப்பு, கோழி வளர்ப்பு கடல் மீனளம், மீனவர்க்கான நிவாரண நடவடிக்கைகள் முதலான பணிகளில் இத்துறை முன்னேற்றம் கண்டு வருகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் பல்வேறு ஆக்கப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையின் செயலாக்கத்திற்காகப் பின்வரும் திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு ரூ.20.55 இலட்சம். செட்டிநாட்டில் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் சாணன் வெள்ளாடுப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ. 10.56 இலட்சம். கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களை மருத்துவப் பரிசோதனை மையங்களாக நிலை உயர்த்துதல் ரூ.0.30 இலட்சம். மதுரையில் வெறி நாய்க்கடி மருத்துவப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ.4.73 இலட்சம்.

உலக வங்கி உதவியுடன் கால்நடை மேம்பாட்டுத் திட்டம்

மூன்று உறைவிந்து சேமிப்பு நிலையங்களைகோயம்புத்தூர், வேலூர், மதுரையில் நிறுவுதல்.

உறைவிந்து தொழில் நுணுக்கம் 243 செய்முறை இனவிருத்தி நிலையங்களுக்கு விரிவுபடுத்துதல்:

செயற்கை முறை இனவிருத்தி வேலை தொடங்க 500 சிறிய அளவிலான திரவ நைட்ரஜன் குடுவைகள் துணை மையங்களுக்கு அளித்தல்.

விவசாயிகளுக்கு இலவசமாகப் பசுந்தீவன விதைகள், கன்றுகள் ஆகியவற்றை அளிப்பது தொடரப்பட்டுள்ளது.

கால்நடைநோய் பரவுவதைக் கண்டறியும் பிரிவு கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையின் விரிவாக்கப்பிரிவு வலிமைப்படுத்தப்படுகிறது.

சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்

1,050 ஆடு வளர்ப்புப் பிரிவுகள், 3,500 கன்று வளர்ப்புப் பிரிவுகள், 25 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக மொத்தம் ரூ.222 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 4,575 விவசாயக் குடும்பங்களுக்கு இப்பிரிவுகளை ஏற்படுத்தியதற்காக, மானியம் அளிக்கப்படுகின்றது.

மத்திய சிறப்பு உதவித் திட்டம்

மாநிலத்தில் 1,550 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்காக ரூ.65.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம், இந்துமத ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 1,550 விவசாயக் குடும்பங்களுக்கும் முழுவதுமாகப் பயனளிக்கிறது. (திட்டச் செலவின் 50 சதவிகிதம் மானியமாகும்).

பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

135 சிறிய பால்பண்ணைகள், 155 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆகியன அமைக்கவும், 80 கலப்பினக் கன்றுகள் வளர்க்கவும், 200 சிறிய பசுந்தீவனப் பண்ணைகள் அமைப்பதற்கும் ரூ.60.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.12.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு 'முர்ரா' இன எருமை மாடுகள் வாங்க ரூ.9.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால்பண்ணை வளர்ச்சித்துறை

எருமைப்பாலின் கொள்முதல் விலை, 23.2.92 முதல் ஒரு கிலோ கொழுப்புச்

சத்து/வெண்ணெய் சத்துள்ள பால் ரூ.67.15-லிருந்து ரூ.90-ஆக உயர்த்தப்பட்டது. இதனால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு ஒரு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாக எருமைப்பால் கிடைத்தது.

பசும்பால் கொள்முதல் விலை, மொத்தத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.32.30-லிருந்து ரூ.36.15 ஆக உயர்த்தப்பட்டது.

தொடக்கப்பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 14.40 இலட்சம் லிட்டர் ஆகும். இதில், நாளொன்றுக்கு 11.64 இலட்சம் லிட்டர்கள் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டன.

பால்பெருக்குக் காலங்களில், புயல், மழைக்காலங்களிலும் தொடர்ந்து பெய்யும் கனத்த மழைக்காலங்களிலும் கூட, சென்னையில் சாதாரணமாக, பால் கொள்முதல் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 1991 நவம்பர் முதல் நாளொன்றுக்குச் சுமார் 2.00 இலட்சம் முதல் 3.00 இலட்சம் லிட்டர் வரையில் பால் அளவு குறைந்தது. இச்சூழ்நிலைகளிலும் கூட, பெருநகர் விற்பனை முந்தைய ஆண்டைவிடவும் 3 சதவீதம் அதிகமாக இருந்தது (நாளொன்றுக்கு 6.70 இலட்சம் லிட்டரிலிருந்து 7.10 இலட்சம் லிட்டராக அதிகரித்தது).

பால் உற்பத்தியாளர்கள் இணையம் விற்பனையில் புதிய சாதனைகளைப் படைத்துள்ளது. இது, கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விற்பனையை விடவும் மிக அதிகமாகும்.

எண்ணற்ற பால்பொருட்கள் விற்பனை செய்யப்படும் வகையில் சில்லறைக் கடைகள் திறக்கப்பட்டன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஐஸ்கிரீம்கள் மற்றும் பால்கோவா ஆகியவற்றிற்குப் பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

ஆய்வுப் பணியாளர்கள்

தவறான செயல்களில் ஈடுபட்டதாகச் சுமார் 80-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. 'ஆவின்' அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 129 மனைகளில் 54 மனைகள் ஒதுக்கப்பட்டன. காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணை ஒன்றை அமைப்பது தொடர்பாக ரூ.34.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. புதிதாக 617 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன; இதனால், 35,000 கிராம உழவர் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்; இவர்கள் கூட்டுறவுப் பால் உற்பத்தி இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவற்றில், மேற்படி 146 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பெண்களுக்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. இதில், சுமார் 7,500 கிராமப் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம் (தாட்கோ)

ரூ.407.44 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு, 25,544 கறவை மாடுகள் வாங்கப்பட்டு பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

கன்று வளர்ப்புத் திட்டம்

சுமார் 2,650 கலப்பினங்கன்றுகளைச் சீரிய முறையில் பராமரிப்பதற்காக 2,650 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. தரமான எருமைக்கன்றுகளை சொந்தமாக வைத்துள்ள உழவர்களுக்கும் முதல் தடவையாக இத்தகைய நிதியுதவி அளிக்கப்பட்டது. 850 எருமைக்கன்றுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

கால்நடை சுகாதாரத் திட்டங்கள்

கிராம அளவில் 4,45,325 கால்நடைளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பு

2,250 கால்நடை மருந்தகங்களில் உறைவிந்து வசதிகளுடன் கூடிய கால்நடை வளர்ப்பு வசதிகள் உள்ளன. கூட்டுறவுச் சங்க அளவிலான பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு 6.25 இலட்சம் செயற்கைமுறை இனவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 75,000 கிடாரிக்கன்றுகள் பிறந்துள்ளன.

உதகமண்டலத்திலும் ஈரோட்டிலுமுள்ள உறைவிந்து நிலையங்களில் 13 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

செய்முறைப்படுத்துதல்

பெருநகர் பால்பண்ணைகளை நாள்தோறும் கண்காணிக்கும் முறையினால் நல்ல பயன் கிடைத்துள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் 7 சதவிகிதமாக இருந்த கொழுப்பு, கொழுப்பில்லாத திடப்பொருள் இழப்பு, 1991-92-ஆம் ஆண்டில் 3.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பெருநகர் பால்பண்ணைகளின் திறனளவு பயன்பாடு சுமார் 128 சதவிகிதம் ஆகும்.

பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள கன்னியாகுமரி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களையும் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.

பிளாஸ்டிக் மணிகளை உருக்கி நாளொன்றுக்கு 10 டன் பாலிதீன் பைகள் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை ரூ.2.5 கோடி செலவில் உளுந்தூர்ப்பேட்டையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்

தமிழ்நாட்டில் கோழி வ்ளர்ப்பை மேம்படுத்தும் பொருட்டு ரூ.100 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் முழுவதும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 12.7.1973 அன்று ஏற்படுத்தப்பட்டது.

வணிக முறையிலான கலப்பினக் கோழிக்குஞ்சு வளர்ப்பு முறையைக் கொண்டு வந்தவுடன் இம்மாநிலத்திலீ கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை 1·2 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. நம்முடைய நாட்டில் தமிழ்நாடு கோழி வளர்ப்பில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 1989-90-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30.95 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூலதனம் 50 சதவிகிதம் கடன்) காமராசர் மாவட்டத்திலுள்ள அனுப்பன் குளத்தில் புதிய கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தைத் தொடங்க அரசு ஒப்புதலளித்துள்ளது. கால்நடை வளர்ப்புத் துறையிடமிருந்து 'டாப்கோ' நிலத்தை எடுத்துக் கொண்டுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் கோழிக்குஞ்சு உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.32.45 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூலதனம் 50 சதவிகிதம் கடன்) கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றுமொரு கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தை ஏற்படுத்த அரசு ஒப்புதலளித்துள்ளது. நிலம் தெரிந்தெடுக்கப்பட்டு உடைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டடப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஜப்பான் வகை குயில் காடைக் குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்பிருப்பதால் 1989-ஆம் ஆண்டிலிருந்து செங்கற்பட்டில் ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றுமொரு ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம் தெக்குப்பாளையத்தில் 1991 ஜூனிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

'டாப்கோ'வின் தீவனக் கலவைப் பிரிவு நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோயம்புத்தூர்), கப்பலூர் (மதுரை) ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், மத்திய அரசும் டாப்கோவும் செலவை சமமாகப் பங்கீட்டுக் கொள்ளும் வகையில், ரூ.21 இலட்சம் செலவில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்தில் 8 மணி நேரமுறை மாற்றுப் பணியில் 50 மெட்ரிக் டன் கோழித் தீவனம் தயாரிக்கும் திறன் கொண்ட நவீன கோழித் தீவன கலவைத் தொழிற்சாலை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோழி வளர்ப்புக்குத் தரமான தீவனத்தைத் தயாரித்து விற்பனை செய்வதை மேம்படுத்த இது பெரிதும் உதவும். கோழித் தீவனத்திற்காகத் தரமுள்ள தனிவலிக் கலவை தயாரிப்பதற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷஞ்சாவடியில் ரூ.1.78 இலட்சம் செலவில் தன் சொந்தப் பயனுக்காக 'டாப்கோ', கனிவளக் கலவைத் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1991 பிப்ரவரியிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

தீவனத் தயாரிப்புப் பிரிவுகள் தயாரித்த கோழித் தீவனத்தை விற்பனை செய்வதற்காக, 'டாப்கோ', சென்னை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், மதுரை, நாமக்கல், தருமபுரி ஆகிய இடங்களில் விற்பனைப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பற்றிருப்பவர்களுக்கும் தேசிய திட்டத்தின் கீழ், சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, 'டாப்கோ', சில்லறை விற்பனை நிலையங்களுக்கு விற்பனை முகவர்களை நியமித்துள்ளது. இதுவரை 96 பேர்களுக்கு இது தொடர்பாக உதவியளிக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களில் 650 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காகச் சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.33.85 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டில் தாமதமாக நிதி வழங்கப்பட்டதால், 1991-92-ஆம் ஆண்டில் தான் பணி மேற்கொள்ளப்பட்டது. 706 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4.50 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூருக்கு அருகே தெக்குப்பாளையத்தில் கோழி தோலுரிக்கும் நவீனக் கூடம் ஒன்றைத் தொடங்கும் மற்றொரு திட்டத்தை மேற்கொள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கருதியுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொழிற்சாலை 1992-93-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

முட்டைகள் ஏற்றுமதி

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், அது தொடங்கப்பட்ட காலத்தி

விருந்து முதல் முறையாக முட்டைகளை அயல்நாடுகளுக்கு அனுப்ப முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை குவைத், துபாய், பஹ்ரைன் போன்ற நாடுகளுக்கு 9 தடவை கப்பல்களில் முட்டைகள் ஏற்றி அனுப்பப்பட்டன. அவ்வாறு கப்பல்களில் மொத்தம் 26.4 இலட்சம் முட்டைகள் அனுப்பப்பட்டன. இதன் மூலம் இது நாள் வரை 1.05 இலட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத்துள்ளது.

மீனளத் துறையின் மூலம் செயல்படுத்தும் புதிய திட்டப் பணிகள் வருமாறு

கடல் மீனளம்

கடலோரப் பகுதிகளிலும், தொலை கடல் பகுதிகளிலும், மீன் பிடிக்கப் பயன்படுத்தக்கூடிய, 28 அடி அளவுடைய 'மரைன் பிளைவுட் மீன்பிடிப் படகு' எனப்படும் புதிய எடைக்குறைவான மீன்பிடிப் படகிற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தற்போதைய அரசு கொண்டு வந்துள்ளது. கியருடன் கூடிய (Gear) ஒவ்வொரு படகின் விலை ரூபாய் ஒரு இலட்சம் ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 70 பிளைவுட் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் 20 சதவிகிதம் உதவித்தொகை நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்க, கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 30.3.92-ஆம் நாளிட்ட அரசாணையில் அரசு ரூ.50.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

சென்னை, மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்தல்

இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகத்தில் பல்வேறுபட்ட கடல் நீர்வாழ் உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்படும். இந்தக் காட்சியகம் இளங்குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொழுதுபோக்கு வசதிகளை அளிப்பதுடன், ஒரு கடல் ஆராய்ச்சி கல்வி மையமாகவும் விளங்கும். இது உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைச் சென்னைக்கு வரவழைக்கும் சிறந்த சுற்றுலா மையமாகவும் விளங்கும். எனவே, சென்னையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்துவது, சென்னை மாநகருக்கு அழகு சேர்ப்பதுடன் பொழுதுபோக்கு வசதிகளையும் அளிக்கும். மேலும் அது கடல் ஆராய்ச்சி மையமாகவும் விளங்கும். தற்போது சென்னை மெரினாக் கடற்கரையில் மீன்காட்சியகம் ஒன்று உள்ளது. மெரினாக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்காக 1991-92-ஆம் ஆண்டில் அரசு ரூ.5.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

உள்நாட்டு மீனளம்

மீன்சினைகள் உற்பத்திக்காக தனியார் மீனவர்களுக்கு நிதியுதவி

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீன்சினைகளின் தேவை 170 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் சராசரி அளவு கிட்டத்தட்ட 60 மில்லியன் ஆகும். அது 170 மில்லியன் மீன் குஞ்சுகளாக உயர்த்தப்படவேண்டும்.

மீன்சினைகள் தேவையில் நமது மாநிலத்தில் பற்றாக்குறையை ஈடுசெய்ய, குறைந்த செலவிலான தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, 10 இலட்சம் மீன்சினைகளை உற்பத்தி செய்வதற்காக 15 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு 25 சதவிகிதம் உதவித்தொகை வழங்க அரசு, 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3.75 இலட்சம் அனுமதித்துள்ளது. மீன்சினைப் பண்ணை ஒன்றுக்கான மூலதனச் செலவு ரூ.1.80 இலட்சம் ஆகும். அரசு 1992-93- ஆம் ஆண்டில் 35 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு ரூ.8.75 இலட்சம் அனுமதித்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட பயன்பெறுவோருக்கு, சென்னையிலுள்ள பணியாளர் பயிற்சி நிறுவனத்தில் மீன்சினைப் பண்ணைகள் நிருவாகம் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற பிறகு அவர்கள் மீன்சினைப் பண்ணைகள் தொடங்க வங்கிக் கடன் பெறுவர். அதன் பின்னர் வங்கிகள் மூலம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் பயன்பெறுவோர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு

கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 14.5.1992-ஆம் நாளிட்ட 154-ஆம் எண். அரசாணையில் தனியார் மீன்குஞ்சு உற்பத்தியாளர் மூலம் 10 மில்லியன் இறால் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யத் தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு மையத்தை ஏற்படுத்துவதற்காக, செலவில் 25 சதவிகிதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு ரூ.2.5 இலட்சம் அனுமதித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அத்தகைய குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ஏழு ஏற்படுத்தப்படும்.

இறால் வளர்ப்பிற்காக உவர்நீர்ப் பகுதிகளை மேம்படுத்துதல்

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ரூ.15.26 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு, 50 எக்டேர் உவர்நீர் நிலப் பகுதியில் இறால் மீன் வளர்ப்புப் பணியை மேற்கொள்ளும். இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பைக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைகுளத்தில் தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக ரூ.25 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த உவர்நீர் மீன் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களை இறால் குஞ்சு பொரிப்பு

நிலையத்தை மேம்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.25 இலட்சம் (மத்திய அரசு பங்கு ரூ.12.5 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.12.5 இலட்சம்) வழங்க அரசு இவ்வாண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, இத்தொகை பெறப்பட்டு தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மீனவர் நல நடவடிக்கைகள்

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு கிராமங்களில் வாழும் கடல்வாழ் மீனவர்கள் தகுந்த நிலத்தை அரசிடம் ஒப்படைத்தால் அந்நிலத்தில் அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 1991-92-ஆம் ஆண்டில், ரூ.3.57 கோடி செலவில், தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில், மீனவர்களுக்காக 27 கிராமங்களில் 2,100 வீடுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் 2,100 மீனவர்கள் பயனடைவர்.

மீனவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் சைமன் காலனியில் 5.12.90 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மீன்பிடி கருவிகளை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட 75 மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

இறந்துவிட்ட மீனவரின் குடும்பத்திற்கு, உடல் ஊனமுற்ற மீனவர்களுக்கு அளிக்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையை அதிகரித்தல்

தமிழ்நாட்டில் 1,66,912 மீனவர்களுக்காகச் செலுத்தப்படும் காப்புறுதி பிரீமியத் தொகையை 1.7.91-ஆம் நாள் முதற்கொண்டு ஆண்டொன்றுக்கு மீனவர் ஒருவருக்கு ரூ.9-லிருந்து ரூ.10.84 ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. இந்தக் காப்புறுதி பிரீமிய தொகையின் அளவு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, 1.7.1991 முதற்கொண்டு விபத்தில் இறந்துவிடுபவர்களைப் பொறுத்தமட்டில் அவர் குடும்பத்திற்கும் நிரந்தரமாக உடல் ஊனமுற்று விடுபவர்களுக்கும் வழங்கப்படும் காப்புறுதி நிவாரண தொகையின் அளவு ரூ.15,000 லிருந்து ரூ.21,000 ஆகவும், ஓரளவிற்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையின் அளவு ரூ.7,500-லிருந்து ரூ.10,500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம்

இதுவரை இத்திட்டத்தின் கீழ், மீனவர் ஒருவரிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் 9 மாதம் வசூலிக்கப்பட்டு, மீனவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் மாநில அரசு அதன் பங்குத் தொகையாக வழங்கி, மொத்தம் வரும் ரூ.180-யை மீன்பிடித் தொழிலை செய்ய முடியாமலிருக்கும் கால அளவில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60 வீதம் 3 தவணைகளில் வழங்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் திங்கள் ஒன்றுக்கு 45 ரூபாய் என்ற அதிகரிக்கப்பட்ட சந்தாத் தொகையை 8 மாதக் காலத்திற்கு வசூலிப்பதற்கும், அவ்வாறு சந்தாத் தொகையைச் செலுத்திய ஒவ்வொரு மீனவருக்கும் மாநில அரசுப் பங்காக மாதமொன்றுக்கு ரூ.45 ரூபாயையும் மத்திய அரசுப் பங்காக மாதமொன்றுக்கு 45 ரூபாயையும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையுடன் சேர்த்து திருப்பிக் கொடுக்க தமிழ்நாடு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. முழுத்தொகையான 1,000 ரூபாய் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், மீன்பிடிக்க இயலாத காலத்தில் 4 மாதத்திற்கு 4 தவணைகளில் மீனவர் ஒவ்வொருவருக்கும், மாதமொன்றுக்கு 250 ரூபாய் என்ற வீதத்தில் திருப்பிக் கொடுக்கப்படும்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

பங்கு மூலதன உதவித்தொகை

தற்போது மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்காக 63 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த ஆண்டில் பங்கு மூலதன உதவித் தொகையாக 85,000 ரூபாய் 5 சங்கங்களுக்கு அளிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மீனவ மகளிருக்கான அலுமினியக் கொள்கலன்கள்

இந்த ஆண்டில் சென்னையிலுள்ள தமிழ்நாடு சமூக நலவாரியம், 24 மீனவ மகளிர் சங்கங்களுக்கு 1,09,600 ரூபாயை மீன்களைக் கொண்டு செல்வதற்காக 1,360 அலுமினியக் கொள்கலன்களை வாங்க, 50 சதவிகிதம் உதவித் தொகையாக வழங்க அனுமதியளித்தது.



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்

சென்னை, மாதவரம் பால்பண்ணையைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்குத் தலைமையிடமாக அமைப்பதற்குப் பொருத்தமான இடம் என அரசு தெரிந்தெடுத்துள்ளது.

பல்கலைக் கழக மானியக் குழுச் சட்டத்தின் (12'B) பிரிவின் கீழ், நிறுவன மேம்பாட்டு மானியங்கள் உட்பட, அனைத்துச் செயல் நோக்கங்களுக்கும் மத்திய நிதியுதவியைப் பெறுவதற்குத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தகுதியுடையதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1.65 கோடியுடன் பால் பண்ணை நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்காக, இறைச்சி மேம்பாட்டுக் கழகத்தின் கொடுவள்ளி வளாகம், இப்பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேம்பாட்டுப் பணிக்காக, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ரூ.53 இலட்சம் மானியத் தொகை அனுமதித்துள்ளது.

கல்வி

1991-92-ஆம் கல்வியாண்டில், பட்டப்படிப்பு நிலையில், பட்ட மேற்

படிப்பு நிலையில், இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பருவமுறை தேர்வு நடத்தும் கல்வி முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கப் படிப்புகளில், கால்நடை அறிவியல் பட்ட மேற்படிப்பும், கால்நடைப் பராமரிப்பும் பொருளாதாரப் படிப்பும் கொண்டுவரப் பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், தூத்துக்குடி, மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து துறைகளில் மீன் அறிவியல் பட்ட மேற்படிப்புப் பாட வகுப்பும், இரண்டு துறைகளில் பி.எச்டி., படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன.

இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பட்டப்படிப்பு நிலையிலும், பட்ட மேற்படிப்பு நிலையிலும் ஆக இரு நிலைகளிலும் 1543-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்படிப்புகளைப் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டில், கால்நடை அறிவியல் பட்டப்படிப்பில் (B.V.Sc.,) 224 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில், 54 பேர் மாணவியர். கால்நடை அறிவியல் பட்ட மேற்படிப்பில் 39 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில் 6 பேர் மாணவியர். மீன் அறிவியல் பட்டப்படிப்பில் 17 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மீன் அறிவியல் பட்ட மேற்படிப்பில் 9 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் முறையே ஒவ்வொரு மாணவியும் உள்ளனர்.

சென்னை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லத்தில், மாணவிகளுக்கென, தனியாக ரூ.14.85 செலவில் ஒரு இல்லம் கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கல்வித் தகுதியின் அடிப்படையில் 14 பேருக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மெட்ரிக் படிப்பிற்குப் பிந்திய படிப்பு பயிலும் 13 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கால்நடை மருத்துவம் பயிலும் 21 மாணவர்களும், மீனளம் பயிலும் 4 மாணவர்களும் படிப்புதவி பெறும் இளநிலை ஆராய்ச்சி மாணவர்களாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

> **புத்தகங்கள் நமக்கு வழி காட்டுவதோடு தனிமையிலே நாம் இருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன், நமக்கு நாமே பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.**
>
> - கோலியர்

இப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர், 17 அறநிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டில் 3 அறநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்வி - பயிற்சி

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில், ஸ்ரீநகரில் உள்ள, வேளாண்மை- தொழில் நுட்பத் துறைக்கான எஸ்.கே. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கால்நடை அறிவியல் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவமனை பயிற்சி, இந்த மருந்தகத்தில் அளிக்கப்பட்டது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கால்நடைப் பரிசோதனை சிகிச்சைத் துறையில், கால்நடை மருத்துவம் குறித்த மூன்று படிப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

கால்நடை உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், கால்நடை வளர்ப்புத் துறை உதவி இயக்குநர்கள், 'டாப்கோ' தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் போன்ற பல்வேறு அமைப்புகளின் அதிகாரிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், பணியிடைப் பயிற்சி வகுப்புகள் 6 நடத்தப்பட்டன. இதில் 87 அதிகாரிகள் பங்கேற்றனர்.

கோழி வளர்ப்பு, பால்பண்ணை, முயல் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கால்நடைக் கலப்புத் தீவனப் பயிர் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வாத்து வளர்ப்பு, மீன் வளர்ப்பு முதலிய வகுப்புகள் இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு மையங்களில் நடத்தப்பட்டன.

ஆராய்ச்சி

மாதவரத்தில், 'வைரஸ்' கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றும், நுண்ணுயிர்க்கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றுமாக, இரண்டு கால்நடை ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டம்

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவப் பெண்களுக்கு மீன்பிடிப் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக, பயிற்சி வகுப்புகள் தொகுதி தொகுதியாக நடத்தப்பட்டன.

கால்நடை மருத்துவப் பயனுக்காகவும் பொதுமக்கள் சுகாதார நலப் பயன்பாட்டிற்காகவும் 'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) என்கிற தனி சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டது.

இங்கிலாந்து நாட்டின், வெப்ப மண்டல கால்நடை மருத்துவ மையம், கால்நடைச் சுகாதார ஆய்வு மையத்தை, கால்நடை காசநோய் ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற இணைப்பு நிலுவையாக அங்கீகரித்தது.

மத்தியஅரசின் தரிசு நில மேம்பாட்டுத் துறை, நடப்பாண்டில் வேளாண்-காடு வளர்ப்புத் திட்டத்திற்காக, ரூ.38 இலட்சம் அனுமதித்தது.

கல்வி, பயிற்சிக்காக, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த சித்தாறு அணை, தூத்துக்குடி மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்திற்கு (FC & RI) மாற்றப்பட்டது.

பாறை வகை லாப்ஸ்டர்கள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் வளர்க்கப்பட்டன. அவற்றைப் பிடித்து வைத்து வளர்க்கும் கால அளவில் அவை, 2 இலட்சத்திற்கு அதிகமான 'லார்வாக்களை' உற்பத்தி செய்துள்ளன.

மருத்துவமனை

கண்காணிப்பு வசதி கொண்ட இ.இ.ஜி. (E.E.G.) இ.சி.ஜி. (E.C.G.) கருவிகள், கண் பரிசோதனைக் கருவிகள் போன்ற நவீன சாதனங்கள் கொண்ட தொடக்கப் பரிசோதனைப் பிரிவு, பொது மக்களின் நலனுக்காகத் தொடங்கப் பட்டது. மேலும் நிணநீர் மாற்றுச் சிகிச்சை, இரத்த மாற்றுச் சிகிச்சை வசதிகள் கொண்ட மும்முரச் சிகிச்சைப் பிரிவும் தொடங்கப்பட்டது.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களின் நலனுக்காக, நடப்பாண்டில் நடமாடும் மருந்தகம் செயல்படத் தொடங்கியுள்ளது●

நூல் நயம்

சன்மார்க்கம்

ஆசிரியர்: மகாத்மா காந்தி
வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்
காந்தி மியூசியம் வளாகம்
மதுரை-625 020.

பக்கம்:48 விலை:ரூ.5/-

அண்ணல் காந்தியடிகளின் 'நீதி தர்மம்' என்ற குஜராத்தி நூலின் மொழி பெயர்ப்பாகும் இது. 1921-ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தென்றல் திரு.வி.க. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார். வாழ்விலும் தொழிலிலும் நீதி கடைபிடிக்க வேண்டும். அதுவே சிறந்த கடவுள் வழிபாடு ஆகும். தன்னலமே நீதியை மறக்கச் செய்யும். தன்னலம் கருதாது உயிர்கட்குச் சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்று சன்மார்க்க நெறியைச் சொல்லும் இந்நூல் ஏழாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. தர்மமும், சத்தியமும் வாழ அறிவுரை நிரம்பிய நூல்.

—மாமூலன்

'இனிப்பு - காரம் - பலகார வகைகள்'

ஆசிரியர்: வசந்தி அம்மாள்
வெளியீடு:
மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:80 விலை:ரூ.10/-

'இனிப்பு - காரம் - பலகார வகைகள்' என்னும் இந்தச் சமையல் புத்தகம் எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளது. பலவகையான இனிப்பு மற்றும் கார வகைகள் தனித்தனியாகப் பட்டியலிடப் பட்டு ஒவ்வொன்றும் செய்முறை பற்றியும் அவற்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் அளவுகள் பற்றியும் விவரமாக தரப்பட்டுள்ளன.

சமையலின்போது கவனிக்க வேண்டியவை பற்றி இந்நூலின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருப்பது உபயோகமானதும் பாராட்டுக்குரியதுமாகும். இல்லத்தரசிகளுக்கும், சமையலில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—ஜே. சந்திரன்

SIDDHA SYSTEM OF HOME REMEDIES

ஆசிரியர்:
டாக்டர் எஸ். சிதம்பரத்தாணுப் பிள்ளை
வெளியீடு:
சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்,
ஈ-32, அண்ணா நகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:125 விலை:ரூ.150/-

நம் உடலில் ஏற்படும் நோய்களைக் குறிப்பிட்டு, மருத்துவ ஆலோசனை அளிப்பதோடு, நோய்தீர்க்கும் மருந்தை எவ்வாறு தயாரிக்க வேண்டும், தயாரிப்பதற்கு என்னென்ன பொருட்கள் எந்த அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும், அதை எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதை விவரமாகவும், தெளிவாகவும் எழுதியுள்ளார் இந்நூலாசிரியர்.

நூல் எளிய முறையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. நோய்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மஞ்சள்காமாலை நோய்க்கு JAUNDICE (ஜாண்டிஸ்) என்பதை ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு MANJAL KAMALAI என்று குறிப்பிட்டு, ஒரு மருத்துவச் சொல் அகராதி தேவையில்லாதவாறு நாம் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

நாள்தோறும் அவ்வப்போது ஏற்படும் சிறிய, பெரிய நோய்களுக்கு எளிய முறையில் நாமே, நமக்கு மருத்துவம் செய்து கொள்ளும் அளவிற்கு இப்புத்தகம் ஒரு மருத்துவராகவே விளங்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்.

—ஆர். இராஜசேகரன்

கேள்வி ஞானம்

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்
வெளியீடு:
பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.15 பக்கம்: 112

கேள்வியும் பதிலும் இணைந்த அறிவுபூர்வமான நூல்.

வாழ வைப்பது எது?
தாயின் அன்பு.
தாழ வைப்பது எது?
தானெனும் அகந்தை.

இப்படிப் பல எண்ணப் பிழிவுகள் இதயத்தைத் தொடுகின்றன.

தையற்கலை வழிகாட்டி ஆண்கள் உடை (இரண்டாம் பாகம்)

ஆசிரியர்: ஆர்.எஸ். பாலகுமார்
வெளியீடு:
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:96 விலை:ரூ.7/-

தமிழ் படிக்கத் தெரிந்து, கொஞ்சம் தையற்கலையில் ஆர்வம் இருந்தால் போதும் இந்நூலின் துணையுடன் ஓர் சிறந்த தையற் கலைஞராக பரிணமிக்க முடியும்.

துணிகளை வெட்டுதல், தைத்தல் மட்டுமல்ல நூல் வகை, ஊசி வகை, துணிகளில் படிந்துள்ள கறைகளை நீக்கும் வகை, இஸ்திரி போடுதல் ஆகியவையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்களின் வகைகள், அவற்றின் பயன்கள் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

இந்நூலுக்கு விளக்கப்படங்கள் மிகமிக அவசியம். அவை குறைவின்றி, தெளிவாக, பெரிய, பெரிய படங்களாக வெளியிடப்பட்டுள்ளன. உண்மையில் இந்நூல் தையல் கலைக்குச் சிறந்த வழிகாட்டி தான்.

- என்.கே. சாமி.

நினைவுகள் உன்னோடு தான்

ஆசிரியர்: லட்சுமி ராஜரத்தினம்
வெளியீடு:
மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:152 விலை:ரூ.17/-

திருமணத்திற்கு முந்திய நாட்களில் மணமகளின் மகிழ்ச்சிச் சிதறல்களோடு கதை தொடங்குகிறது.

அழகிய திறமைமிக்க நல்ல மனிதனான மணமகன், திருமணத்திற்கு முன்பு நோய்வாய்ப்பட்டுச் சுகம் பெற்று, தாலி கட்டிய பிறகு மீண்டும் நோயுற்று... காணாமல் போய்விடுகிறான். இடையில் திருமணத்திற்கு முன்பு வேறு ஒருவனிடம் நெருங்கிப் பழகித் தன்னை இழந்த கதாநாயகி, காணாமல்போன கணவனைத் தேடுகிறாள்.

இறுதியில் கணவனைச் சந்திப்பது தமிழ்த் திரைப்படங்களில் வருவதுபோல் இருந்தாலும் ஆசிரியரின் கதை சொல்லும் முறைக்கும், வேகமான எழுத்துக்காகவும் இக்கதையை சுவைத்துப் படிக்கலாம்.

- என். குமார்.

புரட்சித் தலைவியின் முதலாண்டு ஆட்சி- ஒரு கண்ணோட்டம்

என். இளங்கோ

இந்தியத் துணைக் கண்டத்தின் தேர்தல் வரலாற்றுச் சாதனைகள் அனைத்தையும் முறியடித்து, அரசியலில் இதுவரை யாரும் செய்யாத மகத்தான புரட்சியை ஏற்படுத்தி, போட்டியிட்ட 167 இடங்களில் 163 இடங்களை வென்ற அ.இ.அ.தி.மு.க.-வின் ஈடு இணையற்ற புரட்சித் தலைவி, மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாட்டின் 18-வது முதல்வராக 24.6.1991 அன்று பதவியேற்றார். அவரது சீரிய தலைமையில் பதினெட்டுப் பேர் கொண்ட அமைச்சரவை அன்று பதவியேற்றது.

தமிழக வரலாற்றில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு முதல்வராகப் பொறுப் பேற்ற முதல் பெண்மணி என்னும் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும். இந்தியத் திரு நாட்டில் மாநில முதல்வராகப் பொறுப் பேற்கும் ஆறாவது பெண் முதலமைச்சர் என்ற பெருமைக்கு உரியவர். தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் முதன் முறையாக 30 பெண்கள் உறுப்பினரானார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி. அவர்களின் 366 நாள் ஆட்சி யில் 366-க்கும் மேற்பட்ட சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், முக்கியமான சில சாதனைகள், மட்டும் கீழே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

மலிவு விலை மது ஒழிப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற தும், முதல் நடவடிக்கையாக மலிவு விலை மதுக்கடைகளை மூடிவிட ஆணை யிட்டார். முதல்வரின் முதல் ஆணை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த

முடிவினால் அரசுக்கு கடந்த நிதி யாண்டில் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.320 கோடி ஆகும். என்றாலும் பாமர மக்களை அழிவுப் பாதையில் இருந்து மீட்பதற்காகவே தைரியமான இம்முடி வினை முதல்வர் அவர்கள் எடுத்தார்கள். மது விலக்கின் நன்மைகளை மக்களிடையே விளக்கி, மதுவின் கொடுமைகளிலிருந்து மக்களைமீட்க, தகுந்த பிரச்சார நடவடிக் கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின்படி, மது விலக்குப் பிரச்சாரத் திரைப்படம் ('நீங்க நல்லா இருக்கனும்') ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரூ.2 இலட்சம் செலவில் நாடகம் ஒன்று ('வெளிச்சம்') தயாரிக்கப்பட்டு தமிழ் நாடெங்கும் நடைபெற்று வருகிறது.

சட்டம் ஒழுங்கு நிலைமை.

அமைதிப் பூங்காவாக திகழ்ந்த தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை, மிகப்பெரிய சவாலை எதிர்கொண்ட நேரத்தில்தான் இவ்வரசு பொறுப் பேற்றது. இலங்கைத்தீவிரவாதிகளின் கட்டுப் பாடற்ற பயங்கர நடவடிக்கைகள் முற்றி லுமாக ஒடுக்கப்பட்டன. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் அப்பாவி இலங்கைத் தமிழர்களின் நடமாட்டங்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டன. நமது காவல் துறையினருக்கு இலங்கைத் தீவிரவாதி களால் விடப்பட்ட கடுமையான சவால் களைச் சமாளிக்க ஏதுவாக காவல்துறை நவீன மயமாக்கப்பட்டது. எந்தவித சவாலையும் சமாளிக்கும் வகையில் அவர் களுக்குச்சிறந்த பயிற்சியும் நவீன ஆயுதங் களும் வழங்கப்பட்டன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தொடரவிட்டிருந்தால், தமிழகமும் நிச்சயமாக ஒரு காஷ்மீரா கவோ, ஒரு பஞ்சாபாகவோ மாறி யிருக்கும் என்பதைத்தான் ராஜீவ்காந்தி யின் படுகொலை சந்தேகத்திற்கு இட மின்றிச் சுட்டிக்காட்டியது. தமிழகம் தலைசிறந்த மாநிலமாக, அமைதிப் பூங்காவாக, ஒருமைப்பாட்டின் உறைவிட மாகத் திகழ மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளில் காவல்துறையினரின் பங்கு மகத்தானது.

தொழிற் கொள்கை

இந்தியாவிலேயே முதன்மை மாநில மாகத் தமிழகத்தை கொண்டு வந்தே தீருவது என உறுதிபூண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20.1.1992 அன்று தொழிற்சாலைகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி, முதலீடு திரட்டு தல், ஊக்கத் திட்டங்கள், வரிச்சலுகைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் மேம்பாட்டுக்கான ஒரு புதிய தொழிற் கொள்கையை வெளியிட்டார். இப்புதிய கொள்கையினால் தமிழ்நாட்டின் பொரு ளா தார வளர்ச்சிக்குப் பன்மடங்கு பலன் கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு தொழிற் துறையில் எடுக்கப் பட்ட சில முயற்சிகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் ஆண் டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் நிறுவு திறனுடன் கரும்புச் சக்கை

பொதுமக்கள் அளித்த மனுக்களின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும் பொது மக்களை மாவட்டவாரியாகச் சுழல்முறையில் சந் தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

22.6.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து மனுக் களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் குறை களைக் கனிவுடன் கேட்டு அவைகளுக்குத் தீர்வு காண உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என உறுதியளித்தார்கள்.

22.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 3 பேர்களுக்கு ரூபாய் 47,000-மும், மூவலூர் இராமாமிர்தம் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ.5,000-மும், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2 பேருக்குத் தலா ரூ.5,000 வீதமும், சலவைத் தொழில் செய்ய, சிறுதொழில் செய்ய 5 பேர் களுக்கு ரூ.22,000 கடன் உதவியும், இரண்டு பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ.9,500-ம், 22 பெண்களுக்கு விதவை உதவித் தொகையும் வழங்கினார்கள்.

இதுதவிர விதவை சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், நிலப்பட்டா 7 நபர்களுக்கும், மனைப்பட்டா 15 நபர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 5 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 15 பேர்களுக்கும், தையல் இயந்திரம் 4 பேர்களுக்கும், சலவைப்பெட்டிகள் 5 பேர்களுக் கும், ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், மற்றும் 6 நபர்களுக்கு காலிபர் களும் ஒருவருக்கு காதுகேட்கும் கருவியும் வழங்கப் பட்டன. மொத்தம் 97 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.6.92 அன்று அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

யிலிருந்து செய்தித்தாள் தயாரிக்கும் தொழிற்சாலை.

புகளூர் காகிதத் தொழிற்சாலை ரூ.475 கோடி செலவில் விரிவாக்கம்.

மேட்டூரில் 'டிட்கோ' மூலம் கூட்டுத் துறையில் ரூ.159 கோடி மதிப்பீட்டில் தேனிரும்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

தஞ்சை மாவட்டத்தில் 'டிட்கோ' மூலம் ரூ.75 கோடி செலவில் அலு மினியத் தொழிற்சாலை.

சிவகங்கையில் ரூ.15 கோடி மதிப் பீட்டில் கிராபைட் சுத்திகரிப்பு ஆலை. இத்திட்டத்தில் ரூ.200 கோடி அளவில் உப தொழிற்சாலைகள் அமைய வாய்ப்பு.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் உத்தம சோழபுரத்தில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கூட்டுத் துறையில் 'காஸ்டிக் சோடா' தயாரிப்புத் தொழிற் சாலை.

சிதம்பரனார் மாவட்டம் 'குதிரை மொழித் தேரியில்' இங்கிலாந்து நாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் ரூ.450 கோடி செலவில் ஆண்டொன் றுக்கு 50,000 டன் டைட்டானியம் டையாக்சைடு தயாரிக்கும் தொழிற்சாலை.

திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், நாகப்பட்டினம்- காயிதே மில்லத், தென்னார்க்காடு, செங்கற்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் புதிய சர்க்கரை ஆலைகள்.

ஆலயத் திருப்பணிக்கோர் அற்புதத் திட்டம்

தமிழ்நாடு, பழம்பெரும் கோயில் களின் உறைவிடம் ஆகும். ஆனால், ஆயிரக்கணக்கான சிறு கோயில்கள் சிதைந்த நிலையில் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாகத் திருப்பணி வேலை எதுவும் நடைபெறவில்லை. பல கோயில்கள் அன் றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன. இக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும் பராமரிக்கவும் பெரும் தொகை தேவைப்படுகிறது. இச்சீரிய பணிக்கு 'முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' என்னும் நிதியை ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர் மானித்தார். இந்த நிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.1,00,008 வழங்கித் தொடங்கி வைத்தார். மாநில அளவில் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியமும் மாவட்ட அளவில் குழுக்களும் அமைக்கப்பட்டு இத்திருப் பணி சிறப்பாகச்செயல்பட்டுவருகின்றது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவாக...

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவை என்றென்றும் பசுமையாக மக்களின் மனதில் நிலை நிறுத்தும் வண்ணம் பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது.

இதுநாள் வரை 'செங்கல்பட்டு மாவட்டம்' என அழைக்கப் பெற்ற மாவட்டம் இனி 'செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்' என அழைக்கப்பெறும் வகை யில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.

31.1.1992 அன்று சட்டப்பேரவை யில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

மெரினா கடற்கரையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சதுக்கத்தை மாற்றியமைக் கும் பணி ரூ.1.25 கோடி செலவில் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது.

ஒரு வேளை உணவுகூட இல்லாமல தவிக்கும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, நோயற்ற வலிவுள்ள ஒரு புதிய தலைமுறையை உருவாக்கிட, உலகெங் கிலும் பாராட்டைப் பெற்ற சத்துணவுத் திட்டத்தை அளித்தவர் புரட்சித் தலைவர் என்பதைக் கருத்தில் கொண்டு, இதுவரை 'தமிழ்நாடு அரசு சத்துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப்படுபவை இனிமேல் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத் துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப் படும் என ஆணையிடப்பட்டது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்கு வரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.92 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிட மாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சிறப்புத்தன்னிறைவுத் திட்டம்

ஊரகப்பகுதிகளில், சாலைகளை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதி களை அபிவிருத்தி செய்தல், தெருவிளக்கு களை அமைத்தல், குடிநீர் வசதி, பாசன ஏரிகளைப் புதுப்பித்தல், சத்துணவு மையங்களைக் கட்டுதல், தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தொடங் கப்பட்டது. இத்திட்டத்திற்கென ஒவ் வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

எழில்மிகு சென்னை - 2000

சென்னை மாநகரத்தை எழில் கொஞ்சும் நகரமாக விளங்கச் செய்திட 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டத்தின் கீழ் சீர்மிகு திட்டங்கள் செவ்வனே தீட்டப்பட்டுள்ளன. இதன்கீழ் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றரூ.1,250 கோடி மதிப்பீட்டில் மகத்தான திட்டங்கள் தீட்டப்பட்டுப் படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முதற் படியாக மூர்மார்க்கெட்டின் புதிய வளாகம் 28.11.91 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி சேலை

பொங்கல் திருநாளை முன்னிட்டு 7.1.92 அன்று விழுப்புரத்தில் ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவ சாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்'

அனைவருக்கும் சுகாதார நல்வாழ்வு அளிக்க வேண்டும். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத் திற்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும். நோய்த் தடுப்பு, புது சுகா தாரத் திட்டங்கள் கிராமங்களைச் சென்றடைய வேண்டும். தொழுநோய், காச நோய், கண் நோய் போன்றவை களைத் தீர்க்க கிராம மக்களுக்கு அடிப் படை மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டும், என்ற உயர்ந்த நோக்கங் களுடன் 'புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம்' 18.1.92 அன்று சென்னையில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக நடந்தேறி வருகிறது. இத்திட்டத் தின் மூலம் பத்தாயிரம் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதியில் இருந்து குடிநீர் கொண்டு வருவ தற்கான தெலுங்கு கங்கைத்திட்டம்குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. எஸ். ஜனார்த்தன ரெட்டி அவர்களும் 11.1.92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.இதன்படி சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டு வரும் திட் டத்தை 1995- 96-ஆம் ஆண்டில் நிறை வேற்றி முடிப்பதென ஒப்புக் கொள்ளப் பட்டது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக கிருஷ்ணா நதி நீர்சென்னைக்குக்கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம்

பெண்கள் முன்னேற்றத் திட்டத்திற் கெல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 3.3.92 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார். இதன் மூலம் பெண்களைக் குழுக்களாக ஏற் படுத்தி அவர்கள். தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப்படுவதோடு, மூலப் பொருள் கள் பெறுவதற்கும், உற்பத்தியான பொருட்களை விற்பதற்கும் அரசு ஆங் காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் தொடக்க விழாவில், 10,000-க்கும் மேற் பட்ட பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு உதவிகள் வழங்கப்பட்டன. ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப் பளிக்கும் இந்த உன்னத முயற்சி தமிழ் நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் உதயம்

நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கீழ்த்தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம்- காயிதே மில்லத் மாவட்டமாக 18.10.91 அன்று உதயமானது. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டம் தமிழகத்தின் 22-வது மாவட்டமாகும்.

போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏழு தேசிய விருதுகள்

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தி செயல்திறன், கிராமப்புற பேரக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத்தமிழகப்போக்கு வரத்துக் கழகங்களான 'அன்னை சத்யா', 'சோழன்', 'பட்டுக்கோட்டை அழகிரி', 'இராணி மங்கம்மாள்' ஆகிய போக்கு வரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மை இடம் பெற்றுள்ளன.

மகளிர் காவல் நிலையம்

இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகரில், முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் முதல் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 13.4.92 அன்று கிரீம்ஸ் சாலையில் தொடங்கி வைத்தார்.

மக்கள் தொடர்பு

தமிழகத்தின் வேறு எந்த முதல்வரும் இதுவரை ஏற்படுத்திக் கொள்ளாத நேரடி மக்கள் தொடர்பினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்திக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நேரிடையாக உதவிகளை வழங்கி அவர் களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்து வருகிறார்கள். 9.3.92 முதல்

வாரந்தோறும் பொதுமக்களைச் மாவட்ட வாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நேரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்த மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து, அறுவைச் சிகிச்சைக்காகவும், ஏழைகளின் திருமணச்செலவிற்காகவும், கலப்புத்திருமண உதவியாகவும், சிறு தொழில் தொடங்கவும், விதவைகளுக்கு உதவித் தொகையாகவும், நிலப் பட்டாக்களும், முதியோர்களுக்கும், ஊனமுற்றோர்களும் தேவையான உதவிகள் மற்றும் இதர சமூக நலத்திட்ட உதவிகள் என ஏராளமான உதவிகளை முதல்வர் நேரிடையாக வழங்குவது உண்மையிலேயே ஈடு இணையற்றதாகும்.

காவிரி நதி நீர்ப்பிரச்சினை

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினை முறைப்படியும், சட்டப்படியும், நியாயப் படியும் தீர்க்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசின் அனுமதியைப் பெறாமலும் தமிழகஅரசின் ஒப்புதலைப் பெறாமலும், கர்நாடக அரசு புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தமிழகத்திற்குத் தொடர்ந்து பாதகம் ஏற்படுத்தி வந்தள்ளது. 27 தடவைகள் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் முடிவேதும் ஏற்படாததால் பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது. நடுவர் மன்றத்திடம் தமிழக அரசு இடைக்காலத் தீர்ப்பைக் கோரியது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி நடுவர் மன்றமும் 25.6.91 அன்று ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கியது. இடைக்காலத் தீர்ப்பு முழுத் திருப்தியை அளிக்காவிட்டாலும் உடனடியாக இந்தத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதைத் தமிழக அரசு வரவேற்றது.

கர்நாடக அரசோ, இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்திருப்பது மட்டுமல்லாமல் அதற்கு எதிராக ஒரு அவசரச், சட்டத்தையும் வெளியிட்டது. 'காவிரியில் தண்ணீர் விடவேண்டும்' என்று நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவதற்கு இந்த அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தது. மைய அரசு தலையிட்டு இப்பிரச்சினையில் நியாயம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியது. ஆனால், மைய அரசு உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டது.

இதற்கிடையில் காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் தீர்ப்பை

மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட வேண்டும். அத்தீர்ப்பு இறுதியானது, படுகை மாநிலங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் அவற்றால் அமலாக்கப்பட வேண்டியதுமாகும். இவ்வுத்தரவு கர்நாடக அரசு நிராகரிப்பது நியாயமற்றதாகும். இதனால் உண்டாகும் சிக்கல்களை எடுத்துரைத்து, மத்திய அரசு அவ்வுத்தரவை தனது அரசிதழில் வெளியிடவும், கர்நாடகம் அவ்வுத்தரவை ஏற்றுச் செயல்படவும்,ஆவன செய்யக்கோரி, 5.7.91 அன்று முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்குச் செய்தி அனுப்பினார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதுபற்றிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 11.7.91 அன்று தமிழ்நாட்டைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து இடைக்கால உத்தரவை அமல்படுத்த வலியுறுத்தினர். 16.7.91 அன்று முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து இது குறித்து வலியுறுத்திப் பேசினார். மேலும், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொருட்டு தமிழக அரசே மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தத்தை அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் 26.7.91 அன்று அமைதியான முறையில் நடத்தியது.

நடுவர் மன்றத்தீர்ப்பை ஏற்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரி நதியிலிருந்து பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு 6 டி.எம்.சி. தண்ணீரை ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் விட வேண்டும் என 31.7.1991 அன்று உத்தரவிட்டார்.

22.11.91 அன்று உச்ச நீதிமன்றம் 'காவிரியில் 205 டி.எம்.சி. நீர் திறந்து விட வேண்டும்' எனத் தீர்ப்புக் கூறியது. 'கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது' என்று கூறியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றது முதல் எடுத்த பல்வேறு தீவிர நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றியே இது என அனைவராலும் பாராட்டப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்கள் 3.12.91 அன்று அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் டெல்லி சென்று பிரதமரைக் கேட்டுக் கொண்டார். முதல்வரின் கோரிக்கையை ஏற்று பிரதமர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 'அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொண்ணாக் கொடுமைகளின் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் தமிழகம் நோக்கி ஓடி வந்தனர். அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் தமிழக அரசு தாயுள்ளத்துடன் செய்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் விடாமுயற்சியின் காரணமாக கர்நாடகத்தில் அமைதி திரும்பியது. திக்கற்று தமிழகம் ஓடிவந்த அப்பாவித் தமிழர்கள் கர்நாடகம் திரும்பினார்கள்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி, தமிழக முதல்வர்களுடன் பிரதமர் அவர்கள் 17.2.92 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து நிலைமைகள் ஓரளவு சீரடைந்தாலும் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் ஒரு தீர்வும் ஏற்படவில்லை.

புரட்சித் தலைவி அவர்களுக்கு டாக்டர் பட்டம்

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத்தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயல்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும், தமிழனத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச்சிந்தனைகளை எடுத்துக் கூறும் தெளிவினுக்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு 19.12.1991-ஆம் நாள் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில், டாக்டர் பட்டம் வழங்கப் பட்டது.

முடிவுரை

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு இதுவரை ஏற்படாத மகத்தான சவாலை இலங்கைத் தீவிரவாதிகள் முன்வைத்த, மிகவும் சோதனையானதொரு காலகட்டத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். தமிழகத்தை மற்றொரு பஞ்சாபாக மாற்ற எத்தனித்த கொடுமையான தீவிரவாத நடவடிக்கைகளை இரும்புக் கரம் கொண்டு நசுக்கினார். புரட்சித் தலைவி அவர்களால் தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாக மலரத் துவங்கியது. எந்த ஒரு பொருளாதாரப் புரட்சிக்கும் அமைதியான சூழ்நிலை இன்றியமையாததாகும். அந்தச் சூழ்நிலையை அமைத்தவுடன் புதிய தொழில் கொள்கையினை அறிவித்து, தமிழகத்தில் மகத்தானதொரு தொழில் புரட்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். தொழில் மயமாக்கத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து, அதன் வளர்ச்சிக்கு க்மூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி முன்னேற்றப்பாதையில் தமிழகத்தைப் படுவேகமாக கொண்டு செல்லும் பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும். தமிழகத்தை ஆண்ட எந்த ஒரு முதல் அமைச்சரும் சந்தித்திராத புதிய புதிய சவால்களையும், இன்னல்களையும் சிக்கல்களையும் இந்தப் பெண் முதல்வர் சந்திக்க நேரிட்டது. சரியான நேரத்தில் தீவிரவாதத்தை ஒடுக்கித் தமிழகத்தைப் பேராபத்திலிருந்து காப்பாற்றி இரும்புப் பெண்மணி என்று பெயரெடுத்தார். இவரது நடவடிக்கையால் தமிழகம் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுப் புகழாமல், தமிழக வரலாற்றினை எழுதி விட முடியாது. தமிழகம் முன்னேற்றப் பாதையில் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருந்தாலும், சரியான நேரத்தில், சரியான பாதையில், மிகச் சீரிய தலைமை யேற்று, தமிழகத்தை நடத்திச் செல்கிறார் புரட்சித் தலைவி என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தமிழகத்தின் பொற்காலம் தொடங்கி விட்டது. அரசியல் பொருளாதார சமூகத் துறைகளில் மாபெரும் புரட்சிகள் நடைபெறத் துவங்கி ஓராண்டாகிவிட்டது. இந்த மாபெரும் மறுமலர்ச்சியில் நமது பங்கைத் தவறாமல் செலுத்திட நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். இரண்டாயிரமாவது ஆண்டு துவக்கத்தில், செல்வம் செழித்தோங்கும் குதூகலமான தமிழகத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்!

அறிவியல் விந்தை:

பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் எரியக் கூடிய மின்சாரப் பல்பு!

பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்து எரியக் கூடிய மின்சாரப் பல்பு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வழக்கமான இதரப் பல்புகள் பயன்படுத்தும் மின்சக்தியில், 75 சதவிதத்தைத் தான் இந்தப் பல்பு பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புதிய பல்புக்கு என்ன பெயர் தெரியுமா? 'இ-லாம்ப்'.

வாஷிங்டனில் எடிசன் மின்சாரக் கழகத்தின் ஆண்டுக் கூட்டம் ஜூன் முதல் தேதியன்று நடந்தபோது, இந்தப் புதிய பல்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கலிபோர்னியாவைச் சேர்ந்த 'இன்டர் சோர்ஸ் டெக்னாலஜீஸ் ஆஃப் சன்னிவேல்' என்னும் நிறுவனம் இந்தப் புதிய பல்பை உருவாக்கியுள்ளது.

இந்தப் பல்பு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மணி நேரம் வரையில் எரியும் திறன் படைத்ததாகும்! அதாவது தினசரி 4 மணி நேரம் எரியவிட்டால், பத்திலிருந்து பதினான்கு ஆண்டுக்காலம் வரைக்கும் இந்தப் பல்பு உழைக்குமாம்! இதர சாதாரணமான பல்புகள் 750 முதல் 1,500 மணி நேரமே எரியும் திறன் படைத்தவை. அதாவது 6 மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரையிலேயே இவை உழைக்கும்.

இந்தப் புதிய பல்பு மிகவும் சிக்கனமானதாகும். பல ஆண்டுகளுக்கு இந்த ஒரே பல்பைப் பயன்படுத்துவதன் மூலம், அடிக்கடி பல்புகளை மாற்றும் செலவு குறையும். இதன் மூலம் ஒரு பல்புக்கு 50 டாலர்கள் முதல் 100 டாலர்கள் வரையில் மிச்சம் பிடிக்க முடியும்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இந்தப் புதிய பல்பு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த சில ஆண்டுகளிலேயே இந்தப் புதிய எலெக்ரானிக் பல்பு மிகவும் பிரபலமடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீடுகளிலும், கடைகளிலும் சர்வசாதாரணமாக இது பயன்படுத்தப்படக்கூடும்.

இது எப்படி எரிகிறது?

வெண்ணிற ஒளியுடன் பிரகாசிக்கும் சாதாரணமான பல்புகளுக்குள் கம்பியொன்று இருக்கிறது. மின்சாரம் இந்தக் கம்பி வழியாகப் பாயும்போது அந்தக் கம்பி பிரகாசிக்கத் தொடங்குகிறது. இதனால் வெளிச்சம் பரவுகிறது. இந்தச் சாதாரண விளக்கை 1879-ஆம் ஆண்டில் தாமஸ் ஆல்வா எடிஸன் கண்டுபிடித்தார்.

நீல நிற ஒளியைப் பாய்ச்சுகின்ற டியூப் லைட்களின் உள்ளே ஒருவித வாயு அடைக்கப்பட்டுள்ளது. டியூப் லைட்டின் உள்ளே இருக்கும் எலெக்ட்ரோடுகள் இந்த வாயுவை ஒளிரச் செய்கின்றன.

இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'இ-லாம்ப்'பிலும் இதே வாயுதான் அடைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பல்பினுள், இதர சாதாரண பல்பில் உள்ளது போன்ற கம்பியோ, அல்லது டியூப் லைட்டில் உள்ளது போன்ற எலெக்ட்ரோடுகளோ ஏதுமில்லை. இந்தப் பல்புக்குள் ஒரு காந்தக் கம்பிச்சுருள் வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி உயர் அலைவரிசை கொண்ட ரேடியோ சிக்னல்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த ரேடியோ சிக்னல்கள் பல்புக்குள் இருக்கும் வாயுவோடு கலந்து வினைபுரியும்போது, ஒருவிதப் 'பிளாஸ்மா' உருவாகிறது. இந்தப் பிளாஸ்மாவானது பல்புக்கு உள்ளே பூசப்பட்டிருக்கும் பாஸ்பரஸ் மீது பட்டதும் ஒளி ஏற்படத் தொடங்குகிறது.

சாதாரண ஹோல்டர்களிலேயே இந்த பல்பைப் பொருத்த முடியும். இதரச் சாதாரண பல்புகளைப் போன்ற நல்ல ஒளியை இந்தப் பல்பும் தருகிறது. ஆனால், இதரப் பல்புகளைக் காட்டிலும் மிகவும் குறைவான உஷ்ணத்தையே இது உண்டாக்குகிறது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

தமிழரசு

சந்தா விவரம்

தமிழ் .... ஓராண்டு = ரூ.24

அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :

உதவி இயக்குநர் : தமிழரசு,

(விற்பனை மற்றும் விநியோகம்)

அரசினர் தோட்டம், சென்னை-600 002.

நகர் ஊரமைப்பு நலப் பணிகள்

" உள்ளாட்சித் துறையின் ஓர் அங்கமான நகர்-ஊரமைப்புத் துறையின் இந்த ஓராண்டுக் காலச் சாதனைகள் பற்றி இக் கட்டுரையில் விவரிக்கப்படுகிறது. "

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு மலர்ந்து ஓராண்டு காலமாகிறது. இந்தக் குறைந்த காலத்திலேயே நிறைந்த பணிகளையாற்றிப் பெருமைகொண்டிருப்பது நகர்-ஊரமைப்புத் துறை.

இத்துறை கீழ்க் கண்டுள்ள மூன்று முக்கியப் பணிகளைச் செயலாற்றி வருகின்றது.

1. மண்டலத்திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பது மற்றும் கட்டடங்கள் கட்டுவது தொடர்பான மேல்முறையீடுகளில் தீர்வு காண்பது போன்ற சட்ட பூர்வமான பணிகள்.

2. மைய அர்சின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்டங்களில் நகரங்கள் மற்றும் நகராட்சிகளுக்குத்தக்க உதவியளிக்கும் வளர்ச்சிப் பணிகள்.

3. மனைப் பிரிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கூடங்களுக்குத் திட்ட அனுமதி வழங்குதலில் தக்க ஆலோசனைகள் தெரிவிப்பது.

★ மனிதனின் எல்லா உலகங்களையும்விடப் பெரியது மனம். அது, பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது நினைவுக்கேற்றபடி குறுகத் தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா

சட்டபூர்வமான திட்டங்கள் தயாரிப்பது

இத்துறை கடந்த ஓராண்டில் கீழ்க்கண்டுள்ள 11 நகரங்களுக்கு முழுமைத்திட்டம் தயாரித்து, அவைகளை அரசின் ஒப்பளிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர், காஞ்சிபுரம், மதுராந்தகம், கோயம்புத்தூர், கொடைக்கானல், வேலூர், கடையநல்லூர், பல்கலை நகர், மேலூர், மணப்பாறை, கோபிச்செட்டிப்பாளையம்.

இவற்றில் ஆறு முழுமைத் திட்டங்களுக்கு அரசு இசைவு/ஒப்பளிப்பு அளித்துள்ளது. எஞ்சிய 5 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இத்துறை பலநகரங்களுக்கான 23 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து, அவற்றிற்கு இசைவு அளித்துள்ளது. மற்றும் 17 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இறுதி ஒப்புதலும் அளித்துள்ளது.

வளர்ச்சிப் பணிகள்

மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி உதவிகளை இத்துறை அளித்து வருகின்றது. சிறிய மற்றும் மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.177.68 இலட்சங்கள் செலவில் 15 திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு ஆண்டில் ரூ.238.70 இலட்சங்கள் முதலீட்டில் 11 திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.235.93 இலட்சங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.606.75 இலட்சங்கள் முதலீட்டில் 40 வளர்ச்சிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் ரூ.296.82 இலட்சங்கள் முதலீட்டில் 16 வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.466.64 இலட்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலோசனை மற்றும் அறிவுறுத்தும் பணிகள்

கடந்த ஓர் ஆண்டில் இத்துறை 61,758 மனைகள் அடங்கிய 570 மனை உட்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

பிற பணிகள்

வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதில் நகர வான் வழிப்படங்கள் மற்றும் செயற்கைக் கோள் வழிப்படங்கள் போன்ற நவீனமான தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி வருகின்றது. நகர வான் வழிப்படங்கள் ஆறு நகரங்களுக்கும் மற்றும் மலைப்பிரதேசமான உதக மண்டலத் திற்கும் எடுக்கப்பட்டு அவைகள் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பழம் பெருமை வாய்ந்த நகரங்களின் இயற்கை அழகைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் இந்நகரங்களில் நில உபயோகங்கள் பலவகையாகப் பிரிக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில் கொடைக்கானல் நகரத்திற்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் உதக மண்டலம், குன்னூர், வால்பாறை மற்றும் ஏர்க்காடு போன்ற நகரங்களிலும் முறையான நில உபயோகங்களுக்கான வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சரித்திரப் புகழ் வாய்ந்த மாமல்லபுரம் நகரத்திற்கான பல வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 40 நகரங்களில்

> **• புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிறுத்தப்பெற்றுள்ள கலங்கரை விளக்கங்கள்.**
>
> **—இ.பி.விப்பின்**

1991-92-இல் நிறைவேற்றப்பட்டுவரும் - வணிகமையம், அங்காடி, கடைகள், பேருந்து நிலையம், பூங்கா, நாளங்காடி போன்றவற்றிற்காக, அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகை 606.75 இலட்சம் ரூபாயாகும்.

மேலும் - மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் பல மாவட்டத்தையும் சேர்ந்த 16 நகரங்களில் - சமுதாயக் கூடம், பேருந்து நிலையம், வணிகமையம், கடைகள், அங்காடி மேம்பாடு போன்ற பல திட்டப் பணிகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.296.82216 இலட்சமாகும்.

அதே நேரத்தில் - இந்த வகையில் நகருக்குக் கிடைக்கும் மைய அரசின் உதவி பற்றியும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

மைய அரசு நிதியுதவியோடு 1991-92-இல், சிறிய மற்றும் மத்திய தர நகரங்கள் 15-இல், ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் - பேருந்து நிலையங்கள், சந்தைகள் ஆகிய திட்டப்பணிகள் நிறைவேற 277.48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

குழந்தைகள் கலை விழா

கோடை விடுமுறையை முன்னிட்டும், குழந்தைகளுக்குச் சுற்றுலா, தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையின் பேரில் கடந்த மே மாதம் 22 முதல் 24-ஆம் தேதி வரை 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்', "குழந்தைகள் கலை விழாவை" (Children's Carnival) நடத்தியது.

பொதுமக்களிடமும், குழந்தைகளிடையேயும், பெரிய வரவேற்பைப் பெற்ற இவ்விழாவினைத் தொடர்ந்து விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கும் இச்சமயம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் 'புத்தக விழா' ஒன்றைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கியதன் பேரில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஜூன் 26 முதல் 30-ஆம் தேதி வரை சென்னை தீவுத்திடலில் புத்தக விழாவை நடத்தியது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் முதல் 'புத்தக விழா' (Book Fair) இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தக விழாவில் பள்ளி சிறார்க்கும், கல்லூரி மாணவ மாணவியருக்கும் தேவையான புத்தகங்கள், புத்தகப் பை, எழுது பொருட்கள், இதரப் பொருட்களும் கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டன. தமிழ்ப் புத்தக விற்பனையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் இடம் தரவும், சில வகையான புத்தகங்களைக் குறைந்த விலையில் விற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஐந்து நாட்கள் நடந்த இவ்விழாவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் பல்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளும், பட்டிமன்றங்களும் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசுகளை வழங்கியது.

கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

கிராமப் பகுதிகளில் நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு இயக்கம் பெரும்பங்கு வகிக்கிறது. பயிர்க்கடன், சிறு வியாபாரிகளுக்குக் கடன், குறுகிய கால நடுத்தரக்கால விவசாயக் கடன்கள், நகைக் கடன்கள், பண்ணை சாராக் கடன்கள் போன்ற பல்வேறு கடன்களை வழங்கி ஏழை எளியோர் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுக்கிறது கூட்டுறவு இயக்கம்.

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மக்களின், குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. தமிழகத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல தரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்குப் பணியாற்றி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பிற துறைகளிலும் ஈடுபட்டு மக்கள் தொகையின் எல்லாப் பிரிவினருக்கும் பலனளித்துள்ளன.

உடனடி கடன் வழங்கும் திட்டம்

கடன் வழங்கல் நடைமுறையை எளிதாக்கவும், கடன் தவணைதவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களைத் துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும் நடப்பு ஆண்டில் எல்லாத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நாபார்டு) வழி முறைகளின் படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன.

சிறு வியாபாரிகளுக்குக் கடன்

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவி புரிய அதிக பட்சமாக ரூ.500 வரை ஒருவருக்குத் தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் வழங்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு, தேவை அடிப்படையில் சிறு கடன்கள் வழங்கல் என்ற சிறப்புத் திட்டச் செயலாக்கம் குறித்து கூர்ந்து ஆராய ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், நகரக் கூட்டுறவு வங்கிகளும் இவ்வகைக் கடன்களை வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் 4,371 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.17.74 இலட்சம் அளவிற்கு, மேலே குறிப்பிட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடன்கள் வழங்குவதற்கான நிலவள வங்கிகட்குப் புதிய வழிகள்

பால்பண்ணை, ஆடுவளர்ப்பு, கோழிப் பண்ணை ஆகிய பல தரப்பட்ட காரியங்களுக்காகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் கீழ். மட்டும் இந்நாள் வரை நிலவள வங்கிகள் நாபார்டு உதவியுடன் கடன்களை வழங்கி வந்தன. நிலைமையை அனுசரித்து தொடக்க நிலவள வங்கிகள் பிற இனங்களுக்கும் பின்வருமாறு கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

பண்ணை சாராப் பிரிவுகட்குக் கடன் வழங்கல்

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள உதவித் திட்டத்தின்படி கிராமக் கைவினைஞர் கைத்திறனாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வாணிபம் செய்பவர்கட்குப் பண்ணைச் சாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டு முதல் நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதியுதவி கிராமமக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்யவும் உதவுகிறது. நாபார்டினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காது நிலவள வங்கிகள் இத் திட்டத்திற்குக் கடன் வழங்கலாம் என்பதும், அவ்வாறு வழங்கப்படும் கடன் அளவில் 100 சதவீதம் அளவிற்கு நாபார்டு மறு நிதியுதவி செய்வதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத் திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப் பட்சமாக ரூ.50,000 கடன் வழங்கலாம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதிற்கெதிராக 1991-92-இல் நிலவள வங்கிகள் ரூ.3.84 கோடி அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன.

> உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான், அது தன்னைப் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.
>
> —இங்கர்சால்

விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் திட்டம்

விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் பொருட்டு ஊக்கத்திட்டத்தினைச் செயல்படுத்த கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை எண். 231-இல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி கூட்டுறவுக் கடன்களைப் பெற்றுள்ள அனைத்துக் கடன்தாரர்களும் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய நிலுவையின் அசலை 30.6.1992-க்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும், 1.7.1991 முதல் 30.6.1992 வரை திருப்பிச் செலுத்த வேண்டிய எல்லா நிலுவைகளையும் திருப்பிச் செலுத்த வேண்டும். அந்த மாதிரியான விவசாயிகளுக்கு 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய வட்டி அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு ஊக்கத் தொகையாக வழங்கும் இந்த ஊக்கத் திட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்லாக் கடன்களுக்கும் பொருந்தும்., ஆனால் நகைக் கடன்கள் மற்றும் பண்ணை சாராக் கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தாது.

இந்த ஆணை வழங்கப்படுவதற்கு முன்னர் அல்லது 1.7.1991-க்குப் பிறகு கடனாளிகள் 1.7.1991-இல் உள்ள தவணை தவறிய வட்டி மற்றும் அபராத வட்டியைத் திருப்பிச் செலுத்தி இருந்தால் அவர்களுக்கும் இந்த ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 13 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தால் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசுக்கு இத்திட்டத்தினால் ரூ.69.07 கோடி செலவாகும்.

கூட்டுறவுத் துறையின் முக்கியப் பணிகளின் முன்னேற்றம்

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் விவசாயக் கடன்கள் வழங்குதல், நகைக் கடன்கள் வழங்குதல் பண்ணை சாராக் கடன்கள் வேளாண்மை இடுபொருள் விநியோகம் வேளாண் விளைபொருள் விற்பனை நுகர்பொருள் விநியோகம் மற்றும் கிடங்கு கட்டுதல் ஆகியவையாகும்.

1991-92-ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் அனைத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வனவளம் காப்போம்

வனச் செல்வங்களைப் பாதுகாக்கவும், வன வளத்தை மேம்படுத்தவும், தமிழக அரசு பல்வேறு முக்கியத் திட்டங்களைத் தீட்டி சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

வனத்தைப் பாதுகாப்போம்.
வனச் செல்வங்களைப் பாதுகாப்போம்
வனச் செல்வங்களைத் திருடுவோரைக்
கடுமையாகத் தண்டிப்போம்.

என்ற கோட்பாடுகளுடன் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் நிலப்பகுதி 1,30,057 சதுர கி.மீ. ஆகும். இதில் வனப்பகுதி 22,698.51 சதுர கி.மீ. ஆகும். தேசிய வனக்கொள்கைப்படி, குறைந்தது 33 சதவீதம் வனப்பகுதி இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கையில், தற்போதைய வனப்பகுதி சுமார் 17.45 சதவீதம் மட்டுமே ஆகும். பல்வேறு திட்டப் பணிகளுக்காக 1991-92-இல் ரூ.4,302.71 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, புதுப்பித்தல், உற்பத்தி, சமுதாயக் காடுகள், முன்னிலைக் காடுகள் போன்ற ஐம்பெரும் பிரிவுகளாக வனத்திட்டங்கள் பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. கீழ்க் கண்ட திட்டங்கள் வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில மண் வளப் பாதுகாப்பு	ரூ.116.26 இலட்சங்கள்
மாநிலக்காடு வளர்ப்புத் திட்டம்	ரூ.3,334.11 இலட்சங்கள்
மத்திய அரசு பொறுப்பேற்பவை	ரூ.134.06 இலட்சங்கள்
மத்திய அரசு பொறுப்பேற்பவை (50:50 அடிப்படையில்)	ரூ.273.51 இலட்சங்கள்
தன்னாட்சி நிறுவனங்கள்	—
மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்	ரூ.224.75 இலட்சங்கள்
மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம்	ரூ.220.02 இலட்சங்கள்
மொத்தம்	ரூ. 4,302.71 இலட்சங்கள்

> “வன வளமே சமுதாய வளத்துக்கும், நலத்துக்கும் அடிப்படையாய் விளங்குகிறது. வனத்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நம்முடைய வனவளம் காப்பாற்றப்படுகிறது.”

1992-93-இல் ரூ.5,045 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் வனத் துறையால் செயல்படுத்தப் படும். 1991-92-இல் 44,000 எக்டேர் பரப்பில் காடு வளர்த்தல் 18,000 எக்டேர் பரப்பில் விமானங்கள் மூலம் விதைகளைத்



தூவுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992-93-இல் 1,70,000 ஏக்கர் (68,000 எக்டேர்) பரப்பளவில் பல்வேறு வனத் தோட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

வனச் செல்வங்களைப் பாதுகாக்க நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், வாகனங்கள் வாங்க ரூ.70 இலட்சம் 1991-92-இல் ஒதுக்கப்பட்டு அவைகளை வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுதாய நலக்காடுகள் திட்டம் 1981-82 முதல் சுவிடன் நாட்டு உதவியுடன் மக்களோடு இணைந்த காடுவளர்ப்புப் பணிகளுக்காக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மலைவாழ் மக்கள் நலத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. புறம்போக்கு மற்றும் ஒதுக்கு நிலங்களில் மக்கள் பயன்படும் வகையில் கிராமப் பகுதிகளிலும் சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. முதல் கட்டப் பணிகள் ரூ.57 கோடி முதலீட்டில் 1.38 இலட்சம் எக்டேர் பரப்பளவில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டப் பணிகள் (1988-93) ரூ.85.40 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புன்செய் நிலங்கள், வேளாண்மைக் காடுகள், மரப் பட்டாத் திட்டம், சமுதாய தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், இடைமுகத் தளக்காடு வளர்க்கும் திட்டம், விதைநாற்று உற்பத்தி விரிவாக்கத் திட்டம், ஆராய்ச்சி, பயிற்சி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்காகப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திட்டமிட்ட வனப்பாதுகாப்புப் பணி தொடங்கப்பட்டு 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 2,385 சந்தன மரக் கடத்தல் குற்றங்களைக் கண்டுபிடித்து ரூ.1,147.08 இலட்சம் மதிப்புள்ள 73¼ டன் சந்தனமரம் கைப்பற்றப்பட்டுள்ளது. ஏனைய வனக்குற்றங்கள் 1991- ஆம் ஆண்டு முடிய மொத்தம் 37,710 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.4.3 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. காடுகளில் திருட்டுத்தனமாக மரம் வெட்டுதலைத் தடுக்கும் பொருட்டு மொத்தம் 7 விறகு மண்டிகள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

1991-92-இல் 1,012 டன் சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு ரூ.2,300 இலட்சம் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

வனக் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட 618 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஏப்ரல் மே மாதம் வரை 640 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் வனக்குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே காலக் கட்டத்தில் 20 நபர்கள் குண்டர்கள் சட்டத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1990-91-இல் சந்தனமரக் கடத்தல் குற்றத்திற்காக நான்கு பேர் மட்டுமே குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். 1990-ஆம் ஆண்டு இறுதியில் இத்துறையில் 320 வாகனங்கள் மட்டுமே

இருந்து வந்தன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் செலவில் 168 வாகனங்கள் (129 மோட்டார் சைக்கிள், 39 ஜீப்) போன்றவை வாங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 1992-93- இல் மேலும் சில வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின கீழ் 3 வனக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ரூ.60 கோடி அளவில் 7,800 ஏக்கர் பரப்பளவில் தேயிலை வளர்க்கும் திட்டம் வகுக்கப்பட்டு 1991-92-இல் 330 ஏக்கர் (131 எக்டேர்) நிலத்தில் தேயிலை நடப்பட்டுள்ளது. இதன் செயல்திறன் 2,450 இலட்சம் அளவிற்கு வளர்ந்து 1992-93-இல், 2,470 இலட்சம் அளவிற்கு அதிகரிக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

2. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் உயர் விளைச்சல் தரும் கூழ்மரத் தோட்டம் வளர்க்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. நபார்டு வங்கி கடனுதவி தர முன் வந்துள்ளது. இதன் செயல்திறன் இந்த ஆண்டில் 748 இலட்சம் அளவுக்கு வளர்ந்து 1992-93-இல் 860 இலட்சம் அளவுக்கு உயரும். 1991-92-இல் 12,875 ஏக்கர் (5,180 எக்டேர்) உயர் விளைச்சல் தரும் கூழ் மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு 1992-93-இல் 12,500 ஏக்கர் (5,000 எக்டேர்) அளவில் வளர்ச்சிப் பணி தொடங்கும்.

3. அரசு ரப்பர்க் கழகம் 1991-92-இல் 944 இலட்சம் அளவுக்குச் செயல்திறன் வளர்ந்து 1.056 இலட்சம் அளவுக்கு உயரும் நிலையில் வளர்ந்துள்ளது. ரப்பரின் விற்பனை விலை குறைந்ததால் ரப்பர் பொருட்களின் தேக்கம் உள்ளது. ஆயினும் அவற்றைச் சீர்திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாய் அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேற்கண்ட திட்டப் பணிகளுடன் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் 7 ஆண்டு காலத்தில் 45,000 எக்டேர் பரப்பளவில் வனத் தோட்டங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 1991-92-இல் 5 தோட்டங்கள் நிறுவப்பட்டு நாற்றங்கால் அமைத்தல், உபகரணங்கள் வாங்குதல் போன்ற பணிகள் செயல்படுகின்றன. 45,000 எக்டேர் பரப்பளவில் ரூ.117 இலட்சம் செலவில் தாழ்ந்த வனப்பகுதிகளில் வான்வழி விதைத் தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வண்டலூரில் வன ஆராய்ச்சி

★ மக்களாட்சிச் சிறப்புக் கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழவேண்டுமெனில், நமக்குள் போட்டி பொறாமைகளை வித்திட்டு வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக்காப்பது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமை ஆகும்.

மையம் அமைக்கப்பட்டு 1991-92-இல் ரூ.17.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 1992-93-இல் மேலும் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வனக்கொள்கையைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த வனங்களையும் தரிசு நிலங்களையும் பசுமையாக்குவதே அரசின் முழு முயற்சியாக இருக்கும். பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை முறைப்படுத்தி 10 ஆண்டுகளில் முடிப்பதன் மூலம் நமது திட்ட அணுகுமுறை சிறப்பாக அமையும்.

அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த நம் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றிற்கு நிலையான வருமானம் கிடைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு காடுகள் மூலம் நேரிடையாகவோ மறைமுகமாகவோ வேலைவாய்ப்புகள் கிடைக்கவழிவகை செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களில் பசுமைப் புரட்சி செய்யும் நோக்கில், சமூக காடுகளை வளர்க்கத்தேவையான தொழில் நுட்பம், விதைகள் வழங்கும் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. கோயில் நிலங்கள், நிறுவன நிலங்கள், சமூக நிலங்கள் போன்ற பகுதிகளில் காடுகள் வளர்க்கும் பணி சுவிடன் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள் மூலமும் நபார்டு வங்கயின் உதவியுடனும் தேவையான கடன் வசதிகள் தனியார்கள் பெற அரசு ஒத்துழைப்புத்தரும்.

எனவே, மிகுந்த அளவில் காடுகள் வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளர்ந்து நாட்டுக்கும், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.



கானகம் தரும் பாடம்!

—இரா. இரகுபதி



கோடி கோடிப் பறவைகள்
காட்டில் வாழுது — அவைகள்
நாட்டில் வாழும் மனிதருக்குப்
பாடம் சொல்லுது!

இனிய இனிய தேனீக்கள்
கூடு கட்டுது — அது
இதய முள்ள மனிதருக்கும்
இனிமை ஊட்டுது!

அழகு முகாய்ப் பூச்செடிகள்
ஆட்டம் போடுது — நல்
ஆனந் தத்தை மனிதருக்கு
அள்ளி வழங்குது!

துள்ளித் துள்ளி அருவிகள்
தொடர்ந்து பாயுது — அரும்
தூய்மைதனை மனிதருக்குத்
துலக்கிக் காட்டுது!

கோப தாப விலங்குகளும்
கூடி மகிழுது — என்றும்
கூட்டு றவின் மேன்மையினைக்
காட்டி வாழுது!

★ **உலகத்திலேயே மிகவும் குளிரான பகுதி எது?**

ரஷ்ய நாட்டின் சைபீரியாவிலுள்ள ஓயம்யா கோன் என்ற கிராமம்.

★ **இந்தியாவில் பழமையான நிலக்கரிச் சுரங்கம் எங்கு உள்ளது?**

வங்காளத்தில் ராணிகஞ்ச் என்ற சுரங்கம்.

★ **பால்பாயிண்ட் பேனா யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?**

1937-ஆம் ஆண்டு, ஹங்கேரி நாட்டு லாஸ்லோ ஜோசப்பிரோ என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

★ **இந்தியாவிலேயே எந்த மாநிலத்தில் முதல் முதலாகக் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்கப் பட்டது?**

தமிழ்நாட்டில்.

★ **இந்தியாவில் எத்தனைத் தேசியப் பூங்காக்கள் உள்ளன?**

47 பூங்காக்கள் உள்ளன.

★ **பருத்தி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

சீனா.

★ **கடலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

இந்தியா.

★ **ரப்பர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

மலேசியா.

கே. துரைதமிழ்ச்செல்வி,
ம. சந்தானம்,
அரசு ஆரம்பச் சுகாதார நிலையம்,
பழையனூர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.

துணுக்குகள்

செயற்கைக் கோளில் இந்தியாவின் சாதனை!

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் விண்வெளியில் செலுத்தப்பட்டது. சுமார் 360 கிலோ கிராம் எடையே கொண்ட இந்தச் செயற்கைக் கோள் முன்னாள் சோவியத் யூனியன் ஏவுகணையிலிருந்து செலுத்தப்பட்டது.

செயற்கைக் கோள் தயாரிப்பில் மற்ற நாடுகளுடன் போட்டி போடும் அளவுக்கு இந்தியா வளர்ந்திருக்கிறது. நமது முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' விண்ணில் செலுத்தப்பட்ட இந்த குறுகிய காலத்திலேயே இந்தியா சொந்தமாகவே செயற்கைக் கோள் தயாரிக்கும் முயற்சியில ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் பலநோக்குத் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் 'இன்சாட்-2ஏ' ஜூலை மாதம் தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்ச் கயானாவிலிருந்து விண்வெளியில் செலுத்தப்படவிருக்கிறது. இந்தச் செயற்கைக் கோளின் மொத்த எடை 1.9 டன் ஆகும்.

வெறும் 360 கிலோ கிராம் எடை கொண்ட ஆரியபட்டாவிலிருந்து இன்று 1.9 டன் எடை உடைய இன்சாட்-2ஏ தயாரிப்பில் வெற்றி கண்டிருப்பது, இந்தியா விஞ்ஞானத்துறையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள்கள்:

ஆரியபட்டா - 360 கிலோ கிராம் - 1975 ஏப்ரல் மாதத்தில் சோவியத் யூனியனிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

பாஸ்கரா-1 444 " - 1979 ஜூன்
ரோகிணி - 35 " - 1979 ஆகஸ்ட்
ரோகிணி - 35 " - 1980 - ஜூலை
ரோகிணி - 32 " - 1981 - மே
ஆப்பிள் (Apple) - 650 - 1981 - ஜூன்
பாஸ்கரா-11 - 436 " - 1981 - நவம்பர்
ரோகிணி - 41.5 " - 1983 - ஏப்ரல்
சிராஸ் (SROSS) - 150 ((1987 - மார்ச்
I RS - 1A - 975 " - 1988 - மார்ச்
SROSS - 150 " - 1988 ஜூலை
I RS - 1B - 975 " - 1991 - ஆகஸ்ட்
SROSS - 106 " - 1992 - மே

அனுபவ மொழிகள்

நாம் எவ்வளவு செய்யப் போகிறோம் என்பது அல்ல முக்கியமானது; எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதே முக்கியம். அதிகமாகச் செய்வதைக் காட்டிலும், செய்வதைத் திருந்தச் செய்வதே பெருமை.

- ரஸ்கின்

வளமான காலத்திலே நண்பர்கள் தெரிந்து கொள்வது நம்மை; வறுமைக் காலத்திலே நாம் தெரிந்து கொள்வது அவர்களை!

- இங்கர்சால்

மிகச் சிறிய மாவட்டம்

நாட்டிலேயே மிகச் சிறிய மாவட்டமான தென் காரோ குன்றுகள், ஜூன் மாதம் 18-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மாவட்டத்தில் மொத்த மக்கட் தொகை 62,354. இதன் தலைநகர் பெயர் பக்மாரா.

இந்த மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பில் 34 பேர் மட்டுமே வசித்து வருகிறார்கள். மொத்தம் 539 கிராமங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன.

நவீன ரக ஹெலிகாப்டர்

தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேறிய இலகுரக ஹெலிகாப்டர் ஒன்று நமது நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகில் இத்தகைய ஹெலிகாப்டரைச் சொந்தமாக வடிவமைத்துள்ள 2-வது நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது. இதற்கு முன்பு இத்தகைய இலகுரக ஹெலிகாப்டரை வடிவமைத்த ஒரே நாடு அமெரிக்கா மட்டுமே.

இந்த் ஹெலிகாப்டர் வடிவமைப்பின் மூலம் இந்தியா, விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் எந்த வளர்ச்சி அடைந்த நாட்டுக்கும் குறைந்தது அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

திருச்சி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 22.6.1992 அன்று மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்றார்.

மனுக்கொடுத்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 546 நபர்களைத் தேர்ந்தெடுத்து 13.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருச்சியிலிருந்து அரசுச் செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாகத் தையல் இயந்திரம் 5 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 20 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 45 நபர்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், தமிழக அரசு கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் 10 பேர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், தாட்கோவின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 2 டிராக்டர்கள், 2 மினி வேன்கள், 3 லாரிகள், 2 சுற்றுலாச் சீருந்துகள் ஆகியவையும், நகர்ப்புற வேலைவாய்ப்புக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 50 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 253 பேர்களுக்கு ரூ.2,500 முதல் ரூ.12,500 வரை ரூபாய் 13 இலட்சத்து 8 ஆயிரத்து 944 மானியத்துடன் இணைந்த கடனும், நிலப்பட்டா 5 நபர்களுக்கும், வீட்டு மனைப்பட்டா 50 நபர்களுக்கும், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், முடநீக்கியல் சாதனம் 10 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க நிதி உதவி 10 நபர்களுக்கும், மூன்று சக்கர சைக்கிள் 5 நபர்களுக்கும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் இயந்திரம் 10 நபர்களுக்கும், ஸ்டெபிலைசர் டூல்ஸ் கிட் 10 நபர்களுக்கும், பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகங்கள் 28 பள்ளி மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்பட்டன.

மொத்தம் 546 நபர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். நலத்திட்ட உதவிகள் பெற்ற 546 நபர்களில் 368 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 4 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 பெண் குழந்தைகளுக்குத் தனலட்சுமி, விஜயலட்சுமி, ராஜலட்சுமி, மகாலட்சுமி எனப் பெயர் சூட்டினார்.

அநாதை!

-கவியரசர் கண்ணதாசன்

பதினாறு வருடங்கட்கு முன் நடந்த சம்பவம். நான் மூன்று வயதுக் குழந்தையாயிருந்தேன். என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் பரம ஏழைகள். அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை, ஆம்; என் வாழ்விலேயே பெருத்த மாறுதல் ஏற்படும் நாள், என் தாய் என்னைக் கையில் பிடித்த வண்ணம் தான் வேலை பார்க்கும் எஜமானின் வீட்டிற்குள் நுழைந்தாள். 'இந்தப் பையன்தான் அம்மா' என்று என்னை அவ்வீட்டு எஜமானனிடம் காட்டிக் கூறினாள்.

''பெயர் என்ன?'' என்று கேட்டாள் அந்த அம்மாள்.

''சுந்தரம்'' என்றாள் என் தாய். உள்ளே சென்று சில நிமிடங்கட்கெல்லாம் எஜமானி திரும்பி வந்தாள். கையில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் வைத்திருந்தாள். அதை என் தாயிடம் கொடுத்து என்னைக் கையில் பிடித்துக் கொண்டாள். என் தாய் ''அம்மா உங்க பிள்ளை மாதிரி வச்சுக்கணும்'' என்று கூறி என்னைப் பார்த்து அழுதாள்.

எஜமானி, ''ஏண்டி! உன் பிள்ளை வேறு என் பிள்ளை வேறா? இவனை நான் கடுமையா நடத்துவேன்னு நினைக்கிறியா?'' என்றாள்.

''அம்மா உங்க குணம் எனக்குத் தெரியாதா? பிறந்தா நல்ல இடத்திலே பிறக்கணும் இல்லேன்னாப் பிறக்கப்படாது. பிறந்து மூணு வருஷம் வரை வளர்த்து விட்டுப் பிரியறதுன்னா எந்தத் தாய்க்குத் தான் மனது சம்மதிக்கும்? உலகத்திலே எத்தனைப் பேர் பெரிய பெரிய பணக்காரங்கள்லாம் பிள்ளையில்லாமத் தவிக்கிறாங்க; பெத்தும் பெறாதவளாப் போகணும்னு இருக்கேம்மா - விதி' என்றாள்.

என் பக்கம் திரும்பி, ''சுந்தர் இவங்கதாம்பா இனி உனக்கு அம்மா! சொல்றபடி ஒழுங்காக் கேட்டுக்கிட்டு இருப்பா'' என்று அன்போடு அணைத்து முத்தமிட்டு விட்டு, பெரிய பாரத்தை இறக்கி வைத்து விட்டவள் போல் வெளியே சென்றாள்.

இரண்டு ஆண்டுகள் சென்றன; நான் அவர்களை அப்பா, அம்மா என்றே அழைத்து வந்தேன். அம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நான் வந்த அதிர்ஷ்டம் தான் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். குழந்தை ரேவதி நட்சத்திரத்திலே பிறந்ததால் ரேவதி என்றே பெயரிட்டனர். ஆறு வயதில் என்னைப் பள்ளியில் சேர்த்தார்கள். பெற்றவர்களைப் பற்றிய எண்ணம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. கஷ்டம் என்பதே தெரியாமல் வளர்ந்து வந்தேன். நான் முதலாவது பாரம் படிக்கும்போது ரேவதியையும் பள்ளியில் சேர்த்தார்கள். ஒரு நாள் எங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்திருந்தார்கள். போய் விட்டுத் திரும்பி வந்தேன். என் அறையில் ரேவதி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். சுமார் பத்து வயதிருக்கும். ஒரு பெண் - நல்ல சிவப்பு என்று சொல்லிவிட முடியாது. மூக்கும் முழியுமாய்ப் பார்ப்பதற்கு அழகாயிருந்தாள்.

''யார் ரேவதி அது?'' என்றேன்.

''கமலி அண்ணா! கல்கத்தாவிலுள்ள அத்தையின் மகள்.''

''ஊஹூம்'' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். பக்கத்து அறையில் அம்மா யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். ரேவதியிடமிருந்து அவர்தான் அத்தை என்று தெரிந்து கொண்டேன். அம்மா பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதிலிருந்து தான் முற்கூறிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். சில நாட்களுக்குப் பிறகு அத்தை மாமா எல்லோரும் கல்கத்தாவுக்குப் போய் விட்டார்கள். கமலியும் போய் விட்டாள்.

நான் காலேஜில் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் மாலை வேளை நானும் நண்பன் வாசுவும் பேசிக் கொண்டிருந்தோம். வாசு சொன்னான் ''சுந்தரம் நீ கேசவன் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவன் பெரிய குடிகாரன். உன் அப்பாவோடு கூட ஒரு நாள் சண்டை போட்டு விட்டான்.''

அன்று முதல் நான் கேசவனோடு அதிகம் பேசுவதில்லை. ஒரு நாள் பள்ளி முடிந்து வெளியே வந்தேன். கேசவன் வந்தான். ''சுந்தரம் வா கிளப்புக்கு போய் விட்டுப் போகலாம்'' என்று கூப்பிட்டான். தட்ட முடியவில்லை. போக மனமில்லாமல் போனேன். ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

''இரண்டு கிளாஸ் ஒயின்!'' என்று உத்தரவிட்டான்.

''என்ன கேசவா! இது ஹோட்டல் என்று சொன்னாய்?''

'ஆமாப்பா, ஆமாம்! இது ஹோட்டல் தான். பிராண்டி ஹோட்டல். இன்று ஒரு நாள் சாப்பிட்டுத்தான் பாரேன்'' என்றான் கேசவன்.

''அப்படியானால் நான் போகிறேன்'' என்று எழுந்தேன்.

''வாட்ச்மேன்! இவனைப் பிடித்து வெளியே தள்ளு'' என்று உத்தரவிட்டான்.

காவல்காரன் என்னைப் பிடித்துத் தள்ளினான். தடுக்கி விழுந்தேன். முழங்காலில் சரியான காயம். ஆயினும் பெரிய கண்டத்திலிருந்து தப்பியது போன்ற உணர்ச்சி, கடமையைச் செய்து விட்டதில், சந்தோஷம். வேகமாக நடந்தேன். கேட்டைத் தாண்டும் போது திருடனைப் போல் அங்குமிங்கும் பார்த்தேன் நான் குற்றவாளியல்ல. ஆயினும் உண்மையறியா உலகத்தின் முன் நான் குற்றவாளிதானே? நான் சந்தேகப்பட்டது போல் என் தந்தை அந்த வழியே போனார். அது தான் காலேஜிலிருந்து வீட்டிற்குப் போகும் வழி. என்னைப் பார்த்துவிட்டார். கோபத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தார். நானும் வேகமாக ஓடி, ''அப்பா'' என்றேன். ஒன்றும் பதில் இல்லை. மறுபடியும் ''அப்பா!'' என்றேன், நான் களங்க மற்றவன். என்பதைக் கூற '' சீ...சீ...சீ...'' என்று சொல்லி

விட்டு வேகமாக நடந்தார். நான் நடையைச் சிறிது தளர்த்திக் கொண்டேன். ஏதோ ஓர் எண்ணம் தோன்ற வாசுவைத் தேடிச் சென்றேன். வாசு வெளியே போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது. மெதுவாக வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டின் அருகில் வந்ததும் நின்று உற்றுக் கேட்டேன். வாசு என்னைத் தேடி வந்தவன் அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தான்.

''மடப்பயல்! என்ன சொல்லியும் தெரியவில்லை. அந்தத் தடியனோடு சேர்ந்து குடிக்கக் கூடக் கற்றுக் கொண்டு விட்டான். நாயைத் தூக்கி நடு வீட்டில் வைத்தால்?'' இது அப்பாவின் குரல்.

வாசு ''இருக்காதே சார்! சுந்தரம் ஒரு நாளும் அந்த வேலைக்குப் போக மாட்டானே,''

''நான் கண்ணால் பார்த்தது பொய்யா?''

எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''நாயைத் தூக்கி...'' என்று எனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். ஒரு சிறு அமைதி. வாசு அப்பாவின் சந்தேகத்தைச் சிறிது தணித்திருக்கிறான். ஆனால் பூராவும் தணிவதற்குச் சாத்தியம் இல்லையே? மீண்டும் துக்கம். கண்களைத் துடைத்துக் கொண்டு அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தேன். தந்தையின் கோபம் என்னைக் கண்டதும் எல்லை கடந்தது.

''சீ நாயே; திரும்ப என் முகத்திலே விழிக்கிறதுக்கு உனக்கு வெட்கமில்லே? போடா வெளியே பிச்சைக் காரப் பயலே!'' என்று கையை ஓங்கிக் கொண்டு வந்தார். வாசு என் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, ''நீ ரூமிற்குப் போ சுந்தரம்'' என்றான். நான் அழுது கொண்டே அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் விம்மி விம்மி அழுதேன்.

எழுதிய காகிதங்களை இழுப் பறைக்குள் வைத்து விட்டு மேஜையின்மேல் படுத்தவன் அயர்ந்து தூங்கி விட்டேன். ரேவதி வந்தாள். ''அண்ணா!'' என்றாள். கண் விழித்தேன். அவள் குரலில் ஒலித்த

1943-44 வாக்கில் கவியரசர் கண்ணதாசனின் தொடக்க காலப் படைப்புகளில் ஒன்று 'அனாதை'. இக்கதை இதுவரை எந்தத் தொகுப்பிலும் சேரவில்லை.

கண்ணதாசன் தம் இளம் வயதில் ஜீவா நாரணதுரைக் கண்ணன் அவர்களோடு நல்ல தொடர்பு கொண்டிருந்தார். ஒரு கட்டுரையில் '(1946) ஜீவாவைத் தேடி தூளைமேடு சௌராஷ்டிரா நகருக்கு நடந்து சென்றேன்' என்று எழுதியுள்ளார்.

இக்கதை ஜீவா நாரண துரைக்கண்ணன் நடத்திய 'பிரசண்ட விகடன்' இதழில் மே 15, 1946-இல் வெளிவந்துள்ளது.

- தி.வ. மெய்கண்டார்.

சகோதரபாசம் என் துக்கத்தைச் சிறிது குறைத்தது.

''ஒன்றுமில்லை ரேவதி'' என்று சொல்லிவிட்டு முகத்தைக் கழுவி விட்டுவந்தேன்,

'' அம்மா எங்கே ரேவதி?'' என்று கேட்டேன்.

'' நேற்று மழையில் நனைந்ததனால் சிறிது ஜுரம் அடிக்கிறது. ஹாலில் படுத்திருக்கிறாள். நான் தான் இன்று சமையல் செய்தேன் என்றாள். வேகமாக ஓடினேன் அம்மா அறைக்குள்''அப்பா-அம்மா'' என்று முனகிக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்றேன்.

''சுந்தரம்.... சாப்பிட்டாயா? என்றாள்.

''நான் சாப்பிடுகிறேன் அம்மா, நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லையாமே? ரேவதியைக் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வரச் சொல்கிறேன். சாப்பிடுகிறாயா?''

''வேண்டாமப்பா! வாயெல்லாம் கசக்கிறது. சிறிது நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். நீ போய்ச் சாப்பிடு.''

தொடர்ந்து வரும் துன்பங்களை எண்ணி எண்ணி நலிந்து கொண்டிருந்த உள்ளத்திற்குச் சாப்பாடு வேப்பங்காயாக இருந்தது... ''சரி!'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன். வாசு, கேசவனிடம் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளப் போய் விட்டான்.

அன்று இரவு அம்மாவுக்கு உடம்பு சிறிது அதிகமாக இருந்தது. நான் டாக்டரை அழைத்து வந்தேன். அவர்வந்து பார்த்துவிட்டு மருந்து கொடுத்தார். ''நிமோனியா ஜுரம். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாளைக் காலையில் வருகிறேன்.'' என்று சொல்லி விட்டுப் போனார். இரவு முழுவதும் பயத்துடனே கழிந்தது. காலை சுமார் ஐந்து மணிக்கு அம்மா ஏதோ பிதற்றினாள். நான் இதே நினைவாகப் படுத்திருந்தவன் சிறிது நேரம் சப்தம் கேட்டதும் விழித்துக் கொண்டேன். எழுந்து 'ஸ்விட்'சைப் போட்டேன். அவள் முகம் பார்வைக்கு விகாரமாயிருந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். வெறித்து வெறித்துப் பார்த்தாள். ரேவதியை எழுப்பினேன். ரேவதி விஷயம் புரியாமல் கத்தினாள். அப்பா ஓடி வந்தார். ஆனால் அதற்குள் அன்னை விடை பெற்றுக்கொண்டாள்!

விதியின் விசித்திர விளையாட்டில் இன்பமே துன்பமாக மாறும் பொழுது, துன்பத்தைத் தொடர்ந்து துன்பம் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது.

மறுநாட் காலை உறவினர்களுக்குக் கடிதங்கள் பறந்தன.

ஒருநாள் காலை வாசலில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. அதிலிருந்து அத்தை, மாமா, கமலி எல்லோரும் வந்து இறங்கினர். அத்தை மிகவும் வருந்தினாள்.

பத்து நாளுக்கு பிறகு ஒருநாள் என் கல்யாண விஷயமாகப் பூரண சம்மதம் என்று சொல்லி விட்டார். ஆனால் அத்தை மட்டும் சம்மதிக்கவில்லை.

''எத்தனையோ நல்ல பையன்களையெல்லாம் விட்டு விட்டு எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சொல்கிறாயே அண்ணா?'' என்றாள் எனக்குக் கேட்கும்படியாக, அதற்காக எனக்கு வருத்தமே ஏற்படவில்லை. ''துக்கம் அதிகமாகும் போது அழத்தோன்றாது'' என்ற பெரியாரின் மொழி ஞாபகத்துக்கு வந்தது, நாற்காலியில் உட்கார்ந்து சிந்தனையைச் செல்லவிட்டுக் கொண்டிருந்தேன். அறைக் கதவு திறக்கப்பட்டதைக் கூடக் கவனிக்கவில்லை.

''அத்தான்!'' என்று ஒரு குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

''யாரைக் கூப்பிடுகிறாய்?'' நான் பிச்சைக் காரப் பயல் அல்லவா? எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலை உரிமை கொண்டாடுகிறாயே?'' என்றேன்.

''அத்தான்!'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள். ''அத்தான்! அம்மா உங்களைப் பிச்சைக்காரன் என்றாள். நான் கொள்ளைக்காரன் என்கிறேன்''

''சொல்லம்மா, சொல். என் பிறப்பின் ரகசியமே அதுதானே?''

தனக்குத்தான் சொந்தமானவன் என்று நினைத்தவள் போல இடது கையைத் தோளில்வைத்து வலது கையால் முகத்தை நிமிர்த்திய வண்ணம் ''அத்தான்!'' என்றாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'கமலம்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தேன் என் துக்கமெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது. அவள் முகத்தோடு என் முகத்தைச் சேர்க்கப் போகும் சமயம், அத்தையும் சம்மதித்து விட்டாள் என்பதைத் தெரிவிக்க ரேவதி ''அண்ணா!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தாள்.

''இதேதடா பூஜை வேளையில் கரடி புகுந்தது போல'' என்று நினைத்துக் கொண்டு 'என்ன சனியனே! என்ன வேண்டும்?'' என்றேன்.

''சனியனுக்குத் தானே! பிடித்துக் கொள்ள ஓர் அரசமரம் வேண்டும்'' என்றாள்.

''அதோ!'' என்று அப்பொழுது தான் வந்து கொண்டிருந்த வாசுவைச் சுட்டிக் காட்டினேன்.

''போ! அண்ணா!'' என்று கூறிவிட்டு ஓடி மறைந்தாள் ரேவதி.

நானும் வாசுவும் சிரித்தோம். கமலியும் சிரித்தாள். அன்னையின் படத்தில் செருகியிருந்த பூவும் சிரித்தது.

—'இளந்தமிழன்' இதழிலிருந்து.

சென்னையில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 448 குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதி உதவியும், தலா 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி ஆகியவைகளும் வழங்கினார் (13.7.1992).

கோவை மாவட்டம் வளர்ச்சிப் பணிகள்!

கொங்கு மண்டலம் என்றும் கொங்கு நாடு என்றும் பழங்காலத்தில் கூறப்பட்ட கோவை மாவட்டம் தற்பொழுது பெரியார், நீலகிரி, கோவை என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது.

காடுகளை அழித்து தோட்டங்களை உண்டாக்கி வேளாண்மையில் ஈடுபட்ட கொங்கு நாட்டு மக்கள், வேளாண்மைக்கு நீர் ஆதாரம் குறைந்தபொழுது, நீருக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டி அதன் மூலம் கிணற்றுப் பாசனத்தைப் பெருக்கினார்கள். உழைக்கும் ஆர்வம் கொண்ட கொங்கு மண்டல மக்கள் கிணற்று நீரை மேலே கொண்டு வர மின்மோட்டார் மற்றும் பம்ப்செட்டுகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் அதன் உபயோகம் அதிக அளவில் பெருகி, மின் மோட்டார் பம்ப்செட்டுகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். அதன் மூலம் இப்பகுதியில் தொழில் வளர ஆரம்பித்தது.

கொங்கு மண்டலத்தின் கலசமாக விளங்குகின்ற கோவை மாவட்டம், நல்ல தட்பவெட்ப நிலையைக் கொண்டு விளங்குவதால் பருத்தி உற்பத்தியும், பருத்தி நூல் உற்பத்தித் தொழிலகங்களும் உருவாகின. இதனால் நூற்பாலைகளுக்குத் தேவையான எந்திரங்கள், உபரிப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களும் பெருக ஆரம்பித்தன.

தமிழக அரசு மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், பல்வேறு திட்டங்களையும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் வறுமையை ஒழிக்கவும், கிராம வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டுக்கு 710.90 மி.மீ. மழை பெய்ய வேண்டிய கோவை மாவட்டத்தில் 553.64 மி.மீ. மழையே கடந்த ஆண்டு பெய்துள்ளது. இது (-) 22.12 சதவிகிதக் குறைந்த மழையாகும். இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை மற்றும் வறட்சியைப் போக்க, தமிழ அரசு முதல் கட்டமாக ரூ.97 இலட்சம் ஒதுக்கி 200 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க உத்தரவிட்டது. இதில் 130 ஆழ்குழாய்க் கிணறுகள் கிராமப் பகுதிக்கும், 70 ஆழ்குழாய்க் கிணறுகள் நகர்ப் பகுதிக்கும் ஒதுக்கப்பட்டு மொத்தம் 196 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, தமிழக அரசு கோவை மாவட்டத்திற்கு ரூ.24 இலட்சத்தை ஒதுக்கி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் கிராமப் பகுதிகளுக்கு மேலும் 32 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, இன்னும் ஒரு சில நாட்களில் முடிவடைந்து அவற்றை மக்கள் பயன்படுத்துவார்கள். மேலும் 80 ஆழ்குழாய்க் கிணறுகள் புதுப்பிக்க ரூ.29.60 இலட்சமும் ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பல்லடம், திருப்பூர், பொங்கலூர் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டும், தண்ணீர் கிடைக்காத பகுதிகளில் 39-க்கும் மேற்பட்ட லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

கோவை மாநகரைப் பொறுத்தவரை குடிநீர் வழங்குவது சிறுவாணி அணையாகும். நாம் எதிர்பார்த்த தென்மேற்குப் பருவ மழை பெய்யாமல் தாமதமாகி வருவதால் அணையில் நீர்மட்டம் உயரவில்லை. தற்பொழுது நீரின் அளவு 866.67 மீட்டர் ஆகும். இதில் குறைந்த பட்சம் 863.40 மீட்டர் வரையில் தான் அணையிலிருந்து நீர் எடுக்கலாம். அணையின் அதிக பட்ச நீர் அளவு 878.50 மீட்டர் ஆகும்.

கடந்த ஏழு ஆண்டுகளை விட இன்றைய நிலையில் இவ்வாண்டு தான் சிறுவாணி நீர் அளவு மிகக் குறைவாக உள்ளது. வழக்கமாக இதற்கு முத்திக்குளம், பட்டியாறு ஆறு, பம்பாறு, ஆணைக்கொரையாறு ஆகிய அருவிகளிலிருந்து நீர் வரும். இவ்வாண்டு இதன் மூலம் நீர் வரவில்லை. இப்போதுள்ள நீரின் அளவைக் கொண்டு இனிமேல் கோவை மாநகராட்சிப் பகுதிக்கு 51 எம்.எல்.டி. நீரும், சுற்றுப்புறப் பகுதிக்கு 9 எம்.எல்.டி. நீரும் 14.6.92 முதல் ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டும் பகுதி வாரியாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பருவமழை தவறியுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் இருக்கின்ற நீரின் அளவைக் கருத்தில் கொண்டு, நீரை வீணாக்காமல் அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படிக் கேட்டுக் கொள்வதோடு, முறைகேடாகச் சிறுவாணி நீரை நேரடியாக எடுப்பது, தோட்டத்திற்குப் பாய்ச்சுவது போன்றவைகளைப் பறக்கும் படையினர் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

இந்தியாவிலேயே .20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடமும், தமிழகத்தில் கோவை மாவட்டம் முதலிடமும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் 100 சதவிகிதத்திற்கு மேல் நிறைவேற்றி கோவை மாவட்டம் சாதனை படைத்துள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 117 சதவிகிதமும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 123 சதவிகிதமும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக இந்த ஆண்டு தமிழக அரசு ரூ.4 இலட்சத்தை கோவைக்குப் பரிசாக வழங்கியுள்ளது. மேலும் தமிழகத்திலேயே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சாதனை படைத்ததற்காகவும், முதலிடம் பெற்றதற்காகவும் சுழற் கோப்பையைத் தமிழக அரசிடம் பெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும் தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

- பெருந்தலைவர் காமராசர்.

சிறுசேமிப்பை எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டு 1991-92-இல் இலக்கான ரூ.49 கோடியை மிஞ்சி ரூ.52.64 கோடியைக் கோவை மாவட்டம் வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. இது 106 சதவிகிதம் ஆகும். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பரிசும் வழங்கியுள்ளார்கள். அதேபோல் இந்த ஆண்டிற்குக் கொடுக்கப்பட்டுள்ள ரூ.50 கோடி இலக்கைப் பொதுமக்கள் ஆதரவோடு கோவை மாவட்டம் எளிதில் அடையும் என்பதில் சந்தேகமில்லை. சிறுசேமிப்பில் சிறந்த சாதனை படைத்ததற்காக, கோவை மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ரூ.75 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி கோவை மாவட்ட நிர்வாகம் திருமூர்த்தி அணை சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.5 இலட்சமும், பொள்ளாச்சியில் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு ரூ.6 இலட்சமும், திருப்பூர், பல்லடம் பகுதியில் குடிநீர்க் குழாய் விரிவாக்கம் மற்றும் ஆழப்படுத்த ரூ.3.25 இலட்சமும், அண்மையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு தினத்தன்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ராஜீவ் காந்தி நகருக்குச் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.3 இலட்சமும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.11 இலட்சமும் ஒதுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்தொகை மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

அரசு பதவியேற்றதும் கிராம மக்கள் நலம் பேணுகின்ற வகையில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் அறிவிக்கப்பட்டு ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டு இதன்மூலம் கோவை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமச் சாலைகள்; தார்ச்சாலை, பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள், கிராமக் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சிறுபாசனக் குளங்கள் பராமரிப்பு போன்றவைகளுக்காகச் செயல்படுத்தப்படுகின்றது.

கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் போதிய மருத்துவ வசதிகள் பெறாமல் இருப்பதைக் கண்டு புதிய அரசு பதவியேற்றதும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' நல்ல நோக்கத்தோடு தமிழகம் தழுவிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் அனைத்து கிராம மக்களும் மருத்துவப் பரிசோதனை வசதி பெற்று வருகிறார்கள். தொடர் மருத்துவ வசதியும் செய்யப்படுகின்றது. கோவை மாவட்டத்தில் 461 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, அதன் மூலம் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 351 பேர் பயனடைந்துள்ளனர்.

தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் துறையில், தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதலிடத்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 368 பெண்கள் உட்பட 546 பேருக்கு ரூ.50 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 13.7.92 அன்று சென்னையில் வழங்கினார்.

திற்குக் கொண்டு வரும் சீரிய முயற்சிக்கு ஆதரவாக, முன்னோடியாக, தொழில் புரட்சிக்கே வழி காட்டும் மாவட்டமாகத் திகழ்கிறது என்றே கூறலாம்.

தொழில்களைப் பெருமளவு தொடங்கி, .வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் முகமாக பொள்ளாச்சி, வால்பாறை, பல்லடம் வட்டங்கள் தொழிலில் பின்தங்கியவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு தொடங்கும் தொழில்களுக்கு நிலையாக முதலீட்டின் 15 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. பின்னலாடை ஏற்றுமதி செய்யும் தொழில் முதலியவைகளைத் தனியாகத் தொடங்க திருப்பூர் அருகில் முதலிபாளையத்தில் 86.65 ஏக்கர் நிலப் பரப்பில் திருப்பூர் பனியன் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பாக முதல் கட்டமாக 157 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைக்கு, சிட்கோ மூலமாக அரசின் சலுகைகள் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திருப்பூர், பனியன் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ.1000 கோடி அளவில் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கின்றது. முதலிபாளையத்தில் தொடங்கப்பட்டுள்ள பனியன் தொழிற்பேட்டை மூலம் மேலும் அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கோவை மாவட்டத்தில் சுமார் 17,000 சிறுதொழில்கள் நிறுவனமும், 140 நடுத்தர, பெருந் தொழில்களும் இயங்கி வருகின்றன. 1991/92-ஆம் ஆண்டு 850 புதிய சிறுதொழில்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 8,300 தற்காலிகச் சான்றிதழ்கள் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் தொழில் துறையில் தமிழகத்தின் பெருமையிலும், வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதைப் போல இப்பொழுது சுற்றுலாத் துறையில் வேகமாக முன்னேறி ஒரு சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்று வருகிறது. கோவை வளர்ச்சிக்காக சுற்றுலா, நடப்பாண்டில் கோவை மாவட்ட நிர்வாகம் சிறுசேமிப்புச் சாதனையின் பொருட்டு வழங்கப்பட்ட பரிசுத் தொகையிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கி, பல்வேறு விதமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

கோவை மாவட்ட நிர்வாகத்தின் சீரிய முயற்சியால் இன்று சுற்றுலாத் தலமாக்கப்பட்டிருக்கும் பகுதி பொள்ளாச்சி அருகில் உள்ள திருமூர்த்தி அணையாகும். அணையின் அடிவாரத்தில் அமைந்துள்ள புகழ்மிக்க கோயில் மற்றும் அருவியை இணைக்க இருப்புப் பாலம் ஒன்று தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் காட்டாறு போல் ஏற்படும் வெள்ளத்தால் பலர் மரணம் அடைந்துள்ளனர். இந்த ஆபத்தைப் போக்க தற்பொழுது ரூ.5 இலட்சம் செலவில் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர உல்லாசப் பயணிகளுக்காக இந்த அணையில் 2 மோட்டார் படகுகளும் சமீபத்தில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் தினசரி 200- லிருந்து 250 சுற்றுலாப் பயணிகள் பயனடைகின்றனர்.

தற்போது தனியார் நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் படகுத் துறை (போட் அவுஸ்) ஒன்று வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது. மேலும், சிறுவர்களைக் கவரும் வகையில் முதலைப்பண்ணை ஒன்றும், மான் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும், பயணிகள் தங்குமிடம், உணவு விடுதிகள், பேருந்து நிற்குமிடம் அமைப்பது, காவல் நிலையம் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜி.டி. மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்

[illegible] தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No. TN/MS(C)/PP-23



விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராஃப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

இந்த இதழில்...

இந்தியக்குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா ... 2
மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு ... 4
பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ... 10
நேரு விளையாட்டரங்கம் ... 11
மலட்டுத் தன்மை நீங்க ... 17
காவிரிப் பாசனப் பகுதியில் சனல் பயிர்ச் சாகுபடி ... 21
ஆதிதிராவிடர் நலம் ... 23
சேலம் அரசு அருங்காட்சியகத்தில் இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம் ... 24
நூல் நயம் ... 26
வனவிலங்குப் புகலிடங்கள் ... 27
கோவை மாவட்ட சமுதாய நலப்பணிகள் ... 31
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்: ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 33
படமும் செய்தியும் ... 34
கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... 36
சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 42
ஒலிம்பிக் போட்டி ... 43
மாணவர் பக்கம் ... 45
துணுக்குகள் 46
வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு 47

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் - 17
மலர்:23 இதழ்:3
1-8-1992



இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா

இந்தியத் திருநாட்டின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 13.7.1992 அன்று நடைபெற்ற இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில், டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், எதிர்க்கட்சிகளின் சார்பில் பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்களும் போட்டியிட்டனர்.

டாக்டர் சர்மா அவர்கள் மொத்த வாக்குகளில் 64.78 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார். பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்கள் 33.21 சதவிகித வாக்குகளைப் பெற்றார். செல்லாத வாக்குகள் 1.65 சதவிகிதம் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்குகளின் மொத்த மதிப்பு 10,26,188 ஆகும். டாக்டர் சர்மா அவர்கள் பெற்ற வாக்குகளின் மதிப்பு 6,75,864. பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் பெற்ற வாக்குகளின் மதிப்பு 3,46,485 ஆகும். செல்லாத வாக்குகளின் மதிப்பு 17,199.

வாழ்க்கைக் குறிப்பு

டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 1918-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் போபாலில் பிறந்தார். அவர் செயின்ட் ஜான்ஸ் காலேஜ் (ஆக்ரா) அலகாபாத் பல்கலைக் கழகம், லக்னோ பல்கலைக் கழகம், ஃபிட்ஸ் வில்லியம் காலேஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், லிங்கன்ஸ் இன், ஹார்வார்ட் சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

அவர் ஆங்கில இலக்கியத்திலும், இந்தியிலும், சமஸ்கிருதத்திலும், மாநிலத்திலேயே முதலிடத்தைப் பெற்று எம்.ஏ., பட்டங்களைப் பெற்றார். கேம்பிரிட்ஜில் சட்டப்படிப்பில் பி.எச்டி. பட்டம் பெற்றார். லக்னோ பல்கலைக் கழகத்திலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் சட்ட ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவரது சமூகப்பணிக்காக அவருக்கு லக்னோ பல்கலைக் கழகம் 'சக்ரவர்த்தி' தங்கப்பதக்கத்தைப் பரிசாக வழங்கியது. அவர் ஆந்திரம், பஞ்சாப், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பதவி வகித்தார். அவர் டெல்லிப் பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி பல்கலைக் கழகம், காந்தி கிராமம் ரூரல் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் வேந்தராக (Chancellor) ஆகப் பணியாற்றியுள்ளார்.

இவருக்கு விக்ரம் பல்கலைக் கழகம், போபால் பல்கலைக் கழகம், ஆக்ரா பல்கலைக் கழகம், ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் (திருப்பதி), தேவி அகில்யா விஷ்வ வித்யாலயா (இந்தூர்) ஆகியவை டாக்டர் ஆஃப் லாஸ் (Honoris Causa) பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது. ரூர்கே பல்கலைக் கழகம் 'Doctor of Social Science' என்ற பட்டத்தினையும், மொரீஷியஸ் பல்கலைக் கழகம் 'Doctor of Civil Law' என்ற பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தன.

இவர் சர்வதேச விவகாரங்கள், மொழி, சட்டம், தத்துவம், கல்வி, கிராம வளர்ச்சி, மதங்களைப் பற்றிய ஆய்வு ஆகியவற்றில் தீவிர நாட்டம் கொண்டவர்.

இவருடைய கல்லூரி நாட்களில் ஓட்டப்பந்தயங்கள், படகு ஓட்டுதல், நீச்சல் ஆகியவற்றில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். லக்னோ பல்கலைக் கழகதத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குச் சிறந்த நீச்சல் வீரராக விளங்கினார்.

டாக்டர் சர்மா அவர்கள் 1940-இல் லக்னோவில் தம்முடைய வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். தீவிர சுதந்திரப் போராட்ட வீரரான இவர் விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டும், போபாலில் 'மர்ஜர்' இயக்கத்தில் கலந்து கொண்டும் சிறை சென்றார்.

1952-56-இல் போபால் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தார். பின்பு மத்தியப் பிரதேச அரசியல் அமைச்சராக விளங்கினார் (1956-67). மத்திய தொலைத் தொடர்பு அமைச்சராக 1974-77-இல் பதவி ஏற்றார்.

இவர் போபால் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1950- 52) மத்தியப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1967-68) விளங்கினார். இந்திய தேசிய காங்கிரஸின் பொதுச் செயலாளராக 1968-72-இல் பதவி வகித்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராக 32 ஆண்டுகளும் (1952-84) காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராக 20 ஆண்டுகளும், இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவராக இரண்டாண்டுகளும் (1972-74), போபால் சட்டமன்ற உறுப்பினராகவும் (1952-56) மத்திய பிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் (1956-71) நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1971-77, 1980-84) பதவி வகித்தார்.

டாக்டர் சர்மா அவர்கள் 1987-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

1980-இல் ஆஸ்லோவில் நடைபெற்ற நாடாளுமன்ற மாநாட்டில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். ரஷ்யாவில் கொண்டாடப்பட்ட 40-ஆம் இந்திய விடுதலை நாள் விழாவில் கலந்து கொள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களை இவர் தலைமை தாங்கி அழைத்துச் சென்றார், இவர் ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதிய புத்தகங்கள் இவரது கூர்ந்த அறிவிற்கும், பழுத்த அனுபவத்திற்கும், சிறந்த ராஜ தந்திரத்திற்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இந்தியக் குடியரசுத் தலைவர்கள்

டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 9-வது இந்தியக் குடியரசுத் தலைவராக 25.7.92 அன்று பதவியேற்றார். இவருக்கு முன் இப்பதவி வகித்த எட்டுத் தலைவர்கள் வருமாறு:

1. டாக்டர் இராஜேந்திர பிரசாத்
   26.1.1950 - 13.5.1962
2. டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
   13.5.1962 - 13.5.1967
3. டாக்டர் ஜாகிர் உசைன்
   13.5.1967 - 3.5.1969
4. வி.வி. கிரி
   24.8.1969 - 24.8.1974
5. ஃபக்ருதீன் அலி அகமது
   24.8.1974 - 11.2.1977
6. நீலம் சஞ்சீவ ரெட்டி
   25.7.1977 - 25.7.1982
7. கியானி ஜெயில் சிங்
   25.7.1982 - 25.7.1987
8. ஆர். வெங்கடராமன்
   25.7.1987 - 25.7.1992



★ குடி என்பது வளர்ந்து கொண்டே வரும் ஒரு சமூகத் தீமை.

★ குடிப்பது ஒரு கெட்ட பழக்கம் என்பதைவிட, ஒரு நோய் என்றே அதைச் சொல்ல வேண்டும்.

குடியரசுத் தலைவர் மாளிகை

புதுடெல்லியில் உள்ள மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகையான 'ராஷ்டிரபதி பவன்' ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது ஆங்கில அரசுப் பிரதிநிதிகள் (Viceroys) தங்குவதற்காக இந்த நூற்றாண்டின் முற்பகுதியில்ப் கட்டடக் கலைச்சிற்பி சர் எட்வின் லுடியென்ஸ் என்பவரால் கட்டப்பட்டது.

சிறப்புமிக்க இந்த வைஸ்ராய் மாளிகை 17 மில்லியன் பவுண்டு மதிப்பீட்டில் (இன்றைய இந்திய ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 70 கோடி ரூபாய்) கட்டப்பட்டது. இந்த மாளிகையைக் கட்டி முடிக்க 17 ஆண்டுகள் பிடித்தன. முதன்முதலாக இந்தப் பிரமாண்டமான மாளிகையில் குடியேறினார் இர்வின் பிரபு (1931).

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த வைஸ்ராய் மாளிகை அரசினர் இல்லம் என்று அழைக்கப்பட்டு, பின்னர் 1950-இல் இந்தியக் குடியரசாகப் பிரகடனம் படுத்தப்பட்ட பிறகு, இந்த அரசினர் இல்லம்.

'ராஷ்டிரபதி பவன்' என்று பெயரிடப்பட்டு குடியரசுத் தலைவர் மாளிகையாக ஆக்கப்பட்டது.

'ராஷ்டிரபதி பவன்' 4 மாடிகளுடன் 340 அறைகளைத் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய பிரமாண்டமான மாளிகையாகும். இந்தப் பிரமாண்ட மாளிகையின் நிலப்பரப்பு மட்டும் சுமார் 200,000 சதுர அடியாகும்.

நன்றி 'இந்து'.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு விழா !

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

திரை உலகின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றாகக் கூட்டி, நேசக்கரம் நீட்டி, பாசமழை பொழிந்து, தென்னகத் திரை உலகமே திரண்டெழுந்து, சிறப்புமிக்க ஒரு விழாவை எனக்காக எடுத்து, என்னைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறீர்கள். எல்லாச் சிறப்பும் பொருந்துகிற வகையில், இந்த விழாவினை எடுக்க முனைந்து, வெற்றி கண்டிருக்கிறீர்கள்.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், இத்தனையும் இணைந்த முத்தமிழ் விழாவாக இவ்விழாவினை ஆக்கியிருக்கிறீர்கள்.

சிறிது நேரத்திற்கு முன், தென்னகத் திரை உலகில், தனது இசையின் மூலம் நிரந்தர இடம் பெற்றுள்ள, திரு எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இசைக் குழுவினரின் இசை மழையில், நாம் நனைந்து சொக்கிப் போனோம். பிறகு நாடகத் தமிழின் எழுச்சியினைக் கண்டு களித்தோம். நடனத்தின் வனப்பில் மூழ்கிப் போனோம். பல் சுவை நிகழ்ச்சிகளைப் பார்த்துத் திளைத்தோம். அதை அடுத்து, இயற்றமிழை எடுத்துக் காட்டும், பலரின் அருந்தமிழ்ப் பாராட்டுகளை அள்ளிப் பருகினோம்.

இவையெல்லாம் போதாது என்று பூர்ண கும்பமிட்டு, பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து, நினைவுப் பரிசுகளை வழங்கி என்னைப் பாராட்டி, சீராட்டி, அரசு சிம்மாசனத்தில் அமர்த்திப் போற்றியிருக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து இன்றைய நாள்வரை, பலரால் நான் பாராட்டப் பெற்றேன் என்றாலும்கூட, இன்றைக்கு எனக்குக் கிடைத்த பாராட்டு, ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இன்றைய பாராட்டு என் தாய் வீட்டுப் பாராட்டு! என் குடும்பத்தினர் கொடுத்த பாராட்டு!!

இப்படி நான் சொல்லுவதற்குக் காரணம், என்னை ஆளாக்கி, தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தி, ஏறத்தாழ 18 ஆண்டுக் காலம், வாழ்வும், வளமும் அளித்த அரும்பெரும் திரை உலகம், என் தாய் வீடு என்றால், அது பொருத்தம்தானே!

இன்றைக்குத் தன் குலக்கொடி, தனிப்பெரும் கோலோச்சும் தன்மை கண்டு, வியந்து பாராட்டி, உளமார நீங்கள் மகிழ்வதை என்னால் காண முடிகிறது, உணர முடிகிறது. இந்த நன்னாளை, நலம் மிக்க பொன்னாளை, எண்ணி எண்ணி மகிழ்கிறேன். எனக்கு இப்படி ஒரு மாபெரும் பாராட்டு விழாவைத் திரை உலகமே திரண்டு வந்து, அதன் அனைத்து அங்கங்களும் ஒன்றாக இணைந்து, எடுப்பும், சிறப்பும் மிக்க ஒரு விழாவாக, இப்படி நடத்தும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இவ்வாறு என் மீது அன்பைப் பொழிந்து, என்னைப் பெருமைப்படுத்திய, கலை உலகச் சகோதர, சகோதரிகளுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் மிகச் சிறப்பாக, கலை நிகழ்ச்சிகளை அமைத்து, நடத்திய கலை வித்தகர்கள் அனைவருக்கும், என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த விழாவில் கலந்து கொண்டு, வாழ்த்துரைகள் வழங்கிய திரைப்பட உலகின் சகோதர சகோதரிகளுக்கு, என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலர்ந்த முகத்தோடு, தன் வீட்டுப்பிள்ளை தரணி ஆள்கின்றதே என்ற பெருமையோடு, இவ்விழாவிற்கு விரும்பி வந்து, நிறைந்த நெஞ்சோடு, என்னை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு மாபெரும், மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும், என் உளமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்குகிறேன்.!

நான் திரை உலகில் காலடி எடுத்து வைத்த நிகழ்ச்சி பலருக்குத் தெரியாது. அந்த நினைவை உங்களுடன் இந்தத் தருணத்தில் பகிர்ந்து கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நான் Bangalore, Bishop Cotton Girls' High School-இல் படித்துக் கொண்டிருந்த பொழுது, கோடை விடுமுறைக்காக, என் தாயாருடன் ஒரு முறை சென்னை வந்தேன். அப்பொழுது எனது தாயார் 'ஸ்ரீசைலம் மகாத்மியம்' என்ற கன்னடத் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அன்று இரவு படப்பிடிப்பிற்காக, நான் என் தாயாருடன் ஸ்டுடியோவிற்குச் சென்றேன்.

அன்றைய தினம் அந்த புராணத் திரைப் படத்தில், ஒரு குழந்தை நட்சத்திரம் பார்வதி போல வேடம் அணிந்து நடிக்கும் காட்சி, படமாக்கப்படுவதாக இருந்தது. எல்லோரும் படப்பிடிப்பிற்காக இரவு 9 மணி முதலே தயாராக இருந்தனர். ஆனால் இரவு 10 மணி ஆகியும், அந்தக் குழந்தை நட்சத்திரம் வரவில்லை. படத் தயாரிப்பாளரும், இயக்குநரும் பதட்டம் அடைந்தனர். அன்று படப்பிடிப்பு ரத்தானால், ஏற்படக் கூடிய வீண் நஷ்டத்தையும் எண்ணிக் கலங்கினர். குழந்தை நட்சத்திரத்திற்கு, உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும், அவர் படப்பிடிப்பிற்கு வரமுடியாது என்றும் செய்தி வந்தது.

என்ன செய்வது என்று திகைத்து நின்ற அந்தத் தயாரிப்பாளரும், இயக்குநரும், என்னைப் பார்த்தனர். என் தாயாரை அணுகி, அந்தப்பார்வதி வேடத்தில் என்னை நடிக்க அனுமதிக்குமாறு கோரினர். அவர்களது சிரமங்களை உணர்ந்த என் தாயார், அவர்களுக்கு அப்பொழுது உதவும் எண்ணத்துடன், என்னை அன்று நடிக்க அனுமதித்தார்கள். பார்வதி வேடம் அணிந்து, குழந்தை நட்சத்திரமாக அன்று நடித்ததுதான், நான் திரை உலகில் எடுத்து வைத்த முதல் அடி. அப்பொழுது எனக்கு வயது 7. ஒரே ஒரு காட்சியில் மட்டும் நடிப்பதாக இருந்த நான், நன்றாக நடித்ததைக் கண்ட தயாரிப்பாளர் எனக்காக ஒரு பாடல் காட்சியையே புதிதாக அந்தப் படத்தில் அறிமுகப் படுத்தி, என்னையே அதில் நடிக்க வைத்தார்.

அதன் பின்னர், திரைப்படங்களில் நடிக்கும் எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. ஏனெனில், நான் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆகவேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாதவாறு எனக்கு 'Chinnatha Gombe' மற்றும் 'வெண்ணிற ஆடை', ஆகிய திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபின், என் வாழ்க்கைப் பாதையே மாறி விட்டது. அதன்பின், படிப்படியான என்னுடைய வளர்ச்சி, மற்றும் பல்வேறு கால கட்டங்களில், எனது திரை உலக உயர்வுகளைத்தான் நீங்கள் நன்கு அறிவீர்களே!

திரை உலகம், மற்றவர்களைவிட எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்துள்ள மகத்தான நன்மையை, இந்த நல்ல நேரத்தில் நினைவு கூர்வது, எனது தலையாய கடமையாகும். எனது இன்றைய உயர்விற்குக் காரணமான, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, எனக்கு அறிமுகம் செய்து வைத்த, இச்சீர்மிகு திரை உலகை, நான் எப்படி மறக்க முடியும்? எனக்கு முதன் முதலாக அறிமுகத்தையும், புகழையும், பொருளையும், பெருமையையும் ஈட்டித் தந்த, இந்தத் திரை உலகை, நான் என் வாழ்நாளில் எப்போதும் மறக்க மாட்டேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் மாபெரும் பாராட்டு விழாவை நடத்தியது.

25.7.92 அன்று மாலை, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சிறப்பிக்கும் சீர்மிகு விழா தொடங்கியது.

மாண்புமிகு அமைச்சர்கள், தமிழ்த் திரையுலக நட்சத்திரங்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் மண்டபத்தில் குழுமியிருக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபை, பல்வேறு திரைப்படச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை மேடைக்கு அழைத்து வந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும், மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இதையடுத்து பானுப்பிரியாவின் நடனமும், கவுண்டமணி-செந்தில் மற்றும் எஸ்.வி. சேகர், சின்னி ஜெயந்த் ஆகியோர் நடித்த நாடகமும் நடைபெற்றன.

தொடர்ந்து, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச்சபையின் தலைவர் திரு. ஏ. ரமேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரையுலகின் சார்பில் அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பின்னர் திரு. டி.வி.எஸ். ராஜூ, திரு. டி. ராமானுஜம், திரு. ஜி.வி., திரு. எம். சரவணன், திரு. எல். சுரேஷ், திரு. ராதா ரவி, திரு. மோகன் காந்திராமன், திரு. எம். பக்தவச்சலா, திரு. சங்கரன் நாயர் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

திருவாளர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், கே. பாக்கியராஜ், ஏ.எஸ். பிரகாசம், ஸ்ரீதர், கே. பாலாஜி, பிரபு, கார்த்திக், பாரதிராஜா, விஜயகாந்த், பி. வாசு, எம்.என். நம்பியார், முக்தா சீனிவாசன், சத்யராஜ், டாக்டர் கே. ஜக்கையா (முன்னாள் எம்.பி.) ஏ.சி. திருலோகசந்தர், பி. மாதவன், டி. ராமானுஜம், திருமதி எம்.என். ராஜம், திருமதி பண்டரிபாய், திருமதி மனோரமா, ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்னர், சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் செயலர் திரு ராமனாதன் நன்றி நவின்றார்.

- என். இளங்கோ.

திரை உலகில் உள்ள அனைத்துக் கஷ்ட நஷ்டங்களையும், ஏற்ற தாழ்வுகளையும், நான் அனுபவத்தாலேயே அறிந்தவள். இந்தத் திரை உலக வாழ்வில், எனக்குக் கிடைத்த பாடம், படிப்பினை, அனுபவம், அறிவு அனைத்தும், இன்றைக்கு நான் எடுத்திருக்கும் பொறுப்புக்கு, அடிப்படைகளாகவும், அரண்களாகவும் நிற்கின்றன என்றால், அது மிகையாகாது.

அந்தக் காலகட்டத்தில், எனக்கு ஆதரவு நல்கிய அனைத்துப் பெரியோர்களும், என் மனதில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளார்கள். குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்து நான் நடித்ததும், அவர்களின் நிழலாக நான் நின்றதும், என் மனத்திரையில் நீங்கா நினைவுச் சின்னங்களாகும். எனது ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு என்னைத் திரை உலகில் வழி நடத்திச் சென்றார்.

அதன்பின் அரசியலுக்கும் வா என்று ஆணையிட்டு, அழைத்துச் சென்றார். இன்றைய எனது இந்த உயர்விற்கு, அன்றே அடித்தளம் அமைத்தார். அவரிடம் அரசியல் பாடம் பயின்ற நான், அவர் சுட்டிக் காட்டிய வழியில், அவரது அடி தொடர்ந்து, இன்றைக்குத் தமிழகத்தை வழி நடத்திச் செல்லுகின்ற, ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ளேன் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

ஏழை எளியோரை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டியதை விரைவில் செய்து கொடுக்க, தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசுதான், எங்கள் அரசு. சமுதாயத்தின் பல்வேறு சாரார்களின் குறை களைந்து, நிறை செய்வதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையாகும். இந்தத் தத்துவங்களை உள்ளடக்கிய எங்கள் அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறிய உடனேயே சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் அழைத்து, நேரடியாக அவர்தம் குறைகளைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகள் எடுத்ததை, நீங்கள் நன்கறிவீர்கள். தொழிலதிபர்களை அழைத்துப் பேசினேன்; தொழிலாளர் குறை கேட்டு அறிந்தேன்; வேளாண் பெருங்குடி மக்களின் வெவ்வேறு கோரிக்கைகளைத் தெரிந்து கொண்டேன். மாணவர், ஆசிரியர் பிரச்சினையைக் கேட்டறிந்தேன்; பொதுமக்களை வாரந்தோறும் சந்தித்து வருகிறேன். இதேபோல, நான் திரை உலகப் பிரமுகர்களையும் அழைத்துப் பேசினேன். அதைத் தொடர்ந்து, உங்களின் கோரிக்கைகளை ஆராயுமாறு, தலைமைச் செயலாளருக்கும், உள்துறைச் செயலாளருக்கும், ஆணை பிறப்பித்தேன்.

தமிழகத் திரைப் படத்துறையின் வளர்ச்சியில், மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ள எங்கள் அரசு, விரைவில் சென்னை தரமணியில், 'Film City' என்ற திரைப்பட நகரை நிர்மாணிக்கும். அதன் கால்கோல் விழா அண்மையில் நடைபெற்றதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். ஓராண்டுக் காலத்திற்குள், இந்தத் திரைப்பட நகரைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாகி வரும் இந்தத் 'திரைப்பட நகர்', திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படுகிறது. இந்தத் திரைப்பட நகரில், ஒரு திரைப்படம் எடுப்பதற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, குறிப்பாகப் படப்பிடிப்புத் தளங்கள், பல்வேறு திரைப்படங்களுக்கும் பயன்படுத்தக் கூடிய பொது இடங்களான, ரயில்வே நிலையம், விமான நிலையம், பூங்கா, நீச்சல்குளம், அங்காடிகள், காவல் நிலையம், கோயில்கள், ஆலயங்கள், மருத்துவமனை, போன்ற அனைத்தையும் தத்ரூபமாகக் காட்டக்கூடிய அமைப்புகளும், மற்றும் படப்பிடிப்பு அரங்கம், மறு ஒலிப்பதிவு - அதாவது Re-recording செய்யும் அரங்கம், வீடியோ அரங்கம், போன்ற அனைத்து வசதிகளும் கொண்டதாய் விளங்கும். சர்வதேச அளவிற்குத் தரம் வாய்ந்த, தேவையான வசதிகளை இந்தத் திரைப்பட நகரில் தருவதே எங்களது குறிக்கோள் என்பதை, உங்களிடையே தெரிவித்துக் கொள்வதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய திரை உலகத்தின் மாபெரும் பாதிப்பாக, அச்சுறுத்தலாக, கேபிள் டி.வி., வீடியோ இருந்து வருவதை, திரை உலகம் நன்கறியும். இந்தப் பாதிப்பிலிருந்து திரை உலகத்தைப் பாதுகாக்க, இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழகத்தில்தான், கேபிள் டி.வி., வீடியோ மூலம் திரைப்படம் காட்டுவதை ஒழுங்குபடுத்தச் சட்டம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தொழில்களிலேயே திரைப்படத் தொழில் மிக மிக நுண்ணியது; மக்களை ஈர்க்கும் சாதனங்களில் மகத்தானது; வலிமை மிக்கது. இதில் முத்தமிழ் உண்டு; கண்ணுக்கினிய காட்சி உண்டு; காதுக்கினிய கானம் உண்டு; அறிவுக்கினிய கருத்து உண்டு. திரைப்படம் ஒரு அரிய, சிறந்த கலை. உள்ளதை உள்ளபடி சொல்லுவது சொல்லுவது அறிவியல் - உள்ளதை உணர்ந்தபடி சொல்லுவது கலை. அறிவியல் மூளைக்கு இன்பமூட்டுவது; கலை இதயத்திற்கு இன்பமூட்டுவது. அதனால்தான், கலைக்கு என்றுமே வலிவு அதிகம். திரைப்படக்கலை, எல்லோரையும் எளிதில் சென்றடைவதால், இதில் சொல்லப்பட்ட கருத்து, நீதி, நெறி, படிப்பினை, பலருக்குப் பாடமாக அமைகிறது.

திரைப்படம் ஒன்றினை உருவாக்குவது என்பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை நான் அறிவேன். நடிகர்கள், நடிகைகள், இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, இசை அமைப்பாளர், பாடல் ஆசிரியர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், எடிட்டர், போன்ற பல்வேறு கலைஞர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், அவர்களது உதவியாளர்கள் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்து, ஒருமுகமாக ஒத்துழைத்தால் தான், ஒரு தயாரிப்பாளர் திரைப்படத்தை முடித்து, வெற்றிகரமாக வெளியிட முடியும். தனிப்பட்ட பலரின் திறமைகளை, ஒன்றாக இணைத்து உருவாகும் திரைப்படம், ஒவ்வொருவரின் முத்திரையைத் தன்னகத்தே கொண்டுதான். வெளி வருகிறது.

எனவே, ஒற்றுமை என்பது, திரைப்படத் துறைக்கு மிக மிக அவசியமானது. திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரை அரங்கு உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர், அனைவரும் ஒரு முகமாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குள் விலகல், விரிசல் கூடாது. ஒருவருக்கு ஒருவர் பனிப்போரில் ஈடுபடக் கூடாது. Conflict of interest என்பதை நீக்கி, Commonality of interest என்பதை வளர்த்துக்கொண்டு, செயல்பட வேண்டும். இது இயலாவிட்டால், ஒருவருக்கொருவர், 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற நெறிப்படி, உதவி செய்யாவிட்டாலும், உபத்திரமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

திரைப்படத் தொழிலின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், இது மிக மிக அவசியமான ஒன்றாகும்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவரும், மற்றவர்களும், வெவ்வேறு மட்டங்களில் இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல்களையும், ஆபத்துக்களையும், என்னிடத்தில் பல்வேறு சமயங்களில் விளக்கிக் கூறி இருக்கிறார்கள். எழுத்து வடிவத்திலும், கோரிக்கைகளாகக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், திரைப்படத் தயாரிப்

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார் (22.7.92)

பாளர்கள் சார்பாக, விநியோகஸ்தர்கள் சார்பாக, திரையரங்கு உரிமையாளர்கள் சார்பாக, திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சார்பாக, ஃபெடரேஷன் மூலமாக, அதுவும் 24 கிராஃப்ட்ஸ் (Crafts) தொடர்பாக, எழுப்பப்பட்ட கோரிக்கைகள், பிரச்சினைகள், குறைபாடுகள், இடர்ப்பாடுகள், எல்லாம் அரசு மட்டத்தில் ஆராயப்பட்டன. என்னுடன் நேரடியாக விவாதிக்கப்பட்டன. நீங்கள் கேட்பதை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்ற மனம் எனக்கு இருந்தாலும், வரையறுத்த வருவாய்க்கு ஆட்பட்ட அரசிடம், தற்போது போதிய பணம் இல்லாததால், உங்களின் ஏக்கத்தால் ஏற்பட்ட தாக்கத்தை, என்னால் எவ்வளவு தூரம் ஈடேற்றி வைக்க முடியும் என்று தெரியவில்லை. இருப்பினும், எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்யத் துடிக்கும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு, உங்களை நிச்சயமாக ஏமாற்றாது.

திரைப்படத் தயாரிப்பில், பெரிய முதலீடு செய்து பிரபல நடிகர்களை வைத்து பிரம்மாண்டமான தயாரிப்புகளைச் செய்யும் பெரும் முதலாளிகளும்; சிறு முதலீடு செய்து, நிறையப் படங்களைத் தயாரிக்கும், சிறு சிறு தயாரிப்பாளர்களும் உண்டு. ஏறத்தாழ 95 சதவிகிதத்திற்கு மேல் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் 'சிறு சிறு பட முதலாளிகளின் பெரு முயற்சிதான் என்பதை, நான் நன்கறிவேன். இவர்களை நம்பி, பல இலட்சக் கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள, இச்சிறு முதலாளிகள் தான், திரைப்படத் தொழிலின் இதயத் துடிப்பாக இயங்கி வருகின்றனர். தொழில் ரீதியாகப் பல கஷ்ட நஷ்டங்களை, நாள்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். படத் தயாரிப்பில் ஏற்படும், அளவுக்கு மீறிய செலவினங்கள், அளவுக்கு மீறிய வட்டி விகிதம் போன்றவற்றால், பொருளாதார மூச்சுத் திணறலில், சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ, அரசு ஏற்கெனவே ஒரு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை, செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் சிறு முதலீட்டுப் படங்கள் ஒவ்வொன்றுக்கும், 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப் பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், இந்த உதவித் தொகையை அரசு, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் என்ற நல்ல செய்தியை, உங்களுக்குச் சொல்லுவதில் உவகை அடைகிறேன். மேலும், இந்த ஆண்டு முதல், 50 படங்களுக்குக் குறையாமல், தகுதியின் அடிப்படையில், இவ்வுதவித் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த உதவித் தொகையும், திரைப்படம் திரையிடப்பட்ட 3 மாதங்களுக்குள், வழங்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அரசுக்குச் சொந்தமான இடங்களில், வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க Out-door shooting செய்ய, பல்வேறு துறைகளைத் தனித்தனியே அணுகி, அனுமதி செய்ய தற்போதைய முறையை மாற்றி, Single Window System மூலம், அதாவது, ஒரே இடத்தில் அனைத்துத் துறைகளின் அனுமதியைப் பெறும் வகையில், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரையரங்கு உரிமையாளர்கள், திரையரங்கு நுழைவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கவேண்டும் என்றும், தற்போதைய சூழ்நிலையில் திரையரங்கைப் பராமரிப்பதற்கு அதிகச் செலவு ஏற்படுகிறது என்றும், ஒரு சில மாநிலங்களில் இருப்பதைப்போல், ஒரு சிறு தொகையைப் பராமரிப்புக்கெனத் திரையரங்குகள் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், நீண்ட நாட்களாகக் கோரி வருகிறீர்கள். உங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, குளிர்சாதன வசதியுடைய திரையரங்குகளுக்கு ஒரு டிக்கெட்டிற்கு 25 பைசா வீதமும், பிற திரையரங்குகளுக்கு, ஒரு டிக்கெட்டிற்கு 10 பைசா வீதமும், பராமரிப்புச் செலவுக்கென வசூலித்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று, இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

திரையரங்குகளில் காட்டப்படும் சிலைடுகளுக்குத் தற்போது விதிக்கப்படும் வரியை, நீக்க வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையினை ஏற்று இந்த வரியினை நீக்க அரசு விரைவில் ஆணை பிறப்பிக்கும்.

சென்னை நகரை அழகுபடுத்தும் நன்முயற்சியில் ஒத்துழைத்து, அதே நேரத்தில் விளம்பரங்களை ஒட்ட, தனி இடங்களை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையையும் ஏற்று, திரைப்பட விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, ஒரு சில குறிப்பிட்ட இடங்கள், சென்னை நகரில் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒதுக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழிலாளர் பெருமக்களின் நலன் காக்கும் பொருட்டு, திரைப்படத் தொழிலாளச் சகோதரர்கள், அவர்கள் பணிபுரியும்பொழுது, விபத்தில் சிக்குண்டு இறந்தாலோ, அல்லது காயம் அடைந்தாலோ, அவர்களுக்கு முறையே 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் உதவித் தொகையாக, இனி அரசு வழங்கும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்து போனவர் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும்.

சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், தொழிலாளர் பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். திரைப்பட நகரத்திற்கான ஆலோசனைக் குழுவிடும், அதாவது, Film City Advisory Committee-யிலும், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க முயற்சிக்கப்படும். இதேபோல், மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும், Regional Labour Advisory Committee-யிலும், இவர்களுக்கு இடம் அளிக்கப்படும், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவை தவிர, விற்பனை வரி, கேளிக்கை வரி போன்றவற்றைக் குறைக்க வேண்டும், வேறு சில சலகைகள் வழங்க வேண்டும், எனக் கேட்டிருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, உங்களுக்கு உதவி செய்ய, அரசிற்கு நிறைய மனம் உண்டு; ஆனால் பணம் தான் இல்லை. உங்களின் கோரிக்கைகள் என் மனதிலே, ஆழமாகப் பதிந்திருக்கின்றன. உரிய நேரத்தில், முடிந்ததை உறுதியாகச் செய்வேன் என்பதை மட்டும், இத்தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

உங்களின் சகோதரி என்ற முறையில் நான் உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'உழைப்பே உயர்வு' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாரக மந்திரம், பொதுவாக, வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும், என்றாலும், திரைப்படத் துறைக்கு அது மிக மிகப் பொருத்தமானதாகும். திரை உலகில் ஒருவர், தனது உழைப்பால் மட்டும்தான் உயர, வளர, புகழ் பெற முடியும். எனவே, 'உண்மை - உழைப்பு - உறுதி - துணிவு - நேர்மை' என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுங்கள், அது உங்களை உயர்த்தும்; நீங்கள் ஈடுபட்டுள்ள தொழிலை வாழவைக்கும். அதில் வெற்றிகள் பலவற்றை உங்களுக்குத் தேடித் தரும்!

மதுவின் தீமை பற்றி
அண்ணல் காந்தியடிகள்

★ அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த் தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.

★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக் கேடுதான்.

பிறகு, உயர்வுகள் பல தொடர்ந்து உங்களைத் தானாகவே நாடி வரும்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக, புதிய புதிய தொழில் நுட்பங்களும், புதிய சாதனங்களும் உருவாகி வருகின்றன. இந்த விஞ்ஞான வளர்ச்சியை யாரும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படுவது காலத்தின் கட்டளை. உலக வாழ்க்கையின் இயல்பு. அத்தகைய அறிவியல் மாறுதல்கள் ஏற்படும்பொழுது அவற்றை நாம் வரவேற்பதோடு, அதற்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக் கொண்டு, அவற்றையும் நம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால் தான், வெற்றி காண முடியும்.

தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் பலம் திரைப்படத்திற்கு மட்டுமே உண்டு. செம்மையான கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிந்திட, மக்களிடையே புதுமைக் கருத்துக்களைத் தோற்றுவிக்க, ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட, சினிமாவை விட ஒரு சிறந்த சாதனம் இல்லை என்பதை, என்னால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். எனவே, இன்றைய சினிமாத் துறையில் உள்ளவர்கள் அத்தகையதொரு அரிய சமுதாயப் பணியில், தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதே, எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

அதே நேரத்தில், தனி மனித சுதந்திரத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் காவலர்களாய், திரைப்படத் துறையினர் திகழ வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குறிப்பாக - திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள சகோதர, சகோதரிகள் மீது, மக்கள் வைத்திருக்கும் மகத்தான நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும், நல்லெண்ணத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றி உங்கள் வாழ்க்கையில் உயர்ந்திடுவதோடு, இந்த மாநிலத்தையும், இந்த நாட்டையும் உயர்த்திட, தூளுரையேற்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

சேலம் மாவட்டம்:



பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மாநில அளவிலான பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா 15.7.92 அன்று சேலம் நகராட்சிக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள் கலந்து கொண்டு, பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேருரையாற்றி, அரசின் நலிந்தோர்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மாவட்டச் சிறுசேமிப்புக் குலுக்கலில் 'ஏஏ' மற்றும் 'ஏபி' வரிசையில் சிறப்புப் பரிசு பெற்ற இரண்டு நபர்களுக்கு மாருதி கார் வழங்கியும், குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நபர்களில் பரிசு பெற்ற நான்கு நபர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கியும் சிறப்பித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் துணை இயக்குநர், திரு. இரா: நடேசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தேசப்பற்றையும், நிர்வாகத் திறமையினையும், அன்னாரின் எளிமையையும், பெருமகனார் கல்விக்கு ஆற்றிய அரும்பணிகளையும் குறிப்பிட்டு, சேலம் 2-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். நடேசன் அவர்களும், சேலம் 1-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ஜெயராமன் அவர்களும், நாமக்கல் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். அன்பழகன் அவர்களும் விரிவாகப் பேசினர்.

விழாவிற்குச் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எம்.பி. ஆறுமுகம், அவர்கள் தலைமையேற்று - பெருந்தலைவர் காமராசர் ஆற்றிய அரும்பணிகள் குறித்துப் பேசினார்.

விழாவில், பெருந்திரளான பொது மக்களும், மாணவ மாணவிகளும், முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்துப் பேசினார்.

விழாவின் முடிவில் காது கேளாத சிறுவன் ஒருவன் மாண்புமிகு அமைச்சரை அணுகி தனக்குக் காது கேட்காத குறையைக் கூறி உதவி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயே தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ.300 வழங்கி, காது காட்கும் கருவி வாங்கிக் கொள்ளப் பணித்தார்.

பின்னர், சிறுசேமிப்புத் துறையின் சார்பில் - தேர்ந்தெடுக்கப் பட்டோருக்கு 2 மாருதி காரையும் பல்வேறு பரிசுகளையும் சுமார் 8 இலட்சம் மதிப்பில் வழங்கினார்.

குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குக் குலுக்கல் முறையில் பரிசு கொடுக்கும் திட்டத்தின்கீழ், முதல் பரிசாக 3.75 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப்பதக்கங்களும், இரண்டாவது பரிசாக 3 நபர்களுக்குத் தலா ஒரு தங்கப் பதக்கமும் (3.75 கிராம்) வழங்கினார்.

ஏழை மாணவ மாணவிகள் 40 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்கியதோடு, பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் 9 நபர்களுக்கு இலவசச் சலவைப் பெட்டிகளையும், 7 நபர்களுக்கு இலவச முடிதிருத்தும் கருவிகளையும் வழங்கினார். மேலும் முதியோர் உதவித் தொகை 12 நபர்களுக்கும், இலவச வீட்டு மனைப்பட்டா 26 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர், பல்வேறு பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முடிவில், சேலம் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நா. தில்லை கோவிந்தன் நன்றி கூறினார்.

போதையின் நன்கொடை வாதை

மதியை அழிக்கும்
மதுவை ஒழிப்போம்

கொலையினும் கொடியது குடி!

முதலில் மயக்கம் பிறகு மரணம்
இதுதான் மதுவின் வழக்கம்!



சென்னை நேரு விளையாட்டரங்கம்

பார்சிலோனா போலாகிறது

'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' ஆகிறது!

உலக நாடுகளெல்லாம் உவப்போடு பங்கேற்கின்ற 25-வது ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பெயின் நாட்டிலுள்ள 'பார்சிலோனா நகரில் துவங்கியுள்ளன. இந்திய நேரப்படி 24.7.92 வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு அந்தப் போட்டியினை ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜூவான் கார்லோஸ் களிப்போடு துவக்கிவைத்த கண்கொள்ளாக் காட்சியை நாமெல்லாம் தொலைக்காட்சி மூலம் கண்டு மகிழ்ந்தோம்.

பார்சிலோனா நகரின் இதயப் பகுதியில் இருக்கின்ற மிகப் பெரிய 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியத்தில் இந்த ஒலிம்பிக் போட்டி நடக்கிறது.

முதல் நாளன்றே 172 நாடுகளைச் சேர்ந்த 10,000 விளையாட்டு வீரர்களும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பயிற்சியாளர்களும் அதிகாரிகளும் இதில் பங்கேற்றிருக்கின்றனர்.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்டிரோ, சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் கோர்பச்சேவ், தென்னாப்பிரிக்க நாட்டிலுள்ள கறுப்பர் இனக் காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்களெல்லாம் அவ்விழாவிலே கலந்து கொண்டனர்; இவைகளையெல்லாம், உலகு முழுவதிலுமாக 350 கோடி மக்கள் தொலைக்காட்சியில் கண்டு உவந்ததாகக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

பார்சிலோனா நகரில் உள்ள அந்த 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' போல நம் நாட்டிலும் ஒன்று

இப்போது ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிற ஸ்டேடியத்தின் படமல்ல இது; எதிர்காலத்தில் நடத்தப்படவிருக்கிற சென்னை ஸ்டேடியத்தின் (மாதிரிப்) படம்!



அமையாதா!'... என்கிற கற்பனை தமிழ்நாட்டு மக்களாகிய நமது நெஞ்சங்களில்மட்டும் தழைக்கக் கூடாதா என்ன?

இயன்றவரை அந்த இனிய கனவைக் கைகூடச் செய்திடும் மேலான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது நம்முடைய தமிழ்நாடு அரசு!

ஆம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.7.92 அன்று, சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கத்தைப் பார்வையிட்டாரல்லவா? 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' போல மிக விரைவில் மாபெரும் அளவிலே உருமாற விருக்கிறது இந்த நேரு ஸ்டேடியம்!

தங்கக் கோப்பை கால்பந்துப் போட்டிகள்

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் - இந்த விளையாட்டரங்கில், உலகிலுள்ள அனைத்து நாடுகள் அளவில் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகள் சென்னை யில் உள்ள நேரு ஸ்டேடியத்திலேதான் நடைபெற விருக்கின்றன.

அதற்குத் தக்கதாக - உலகில் உள்ள எல்லா நாடுகளும் விளையாடும் தகுதிபெற்றதாகத் தரம் உடையதாக 'நேரு ஸ்டேடியத்தை' உருவாக்கும் முயற்சியை முனைந்து மேற்கொண்டிருக்கிறது நமது தமிழ்நாடு அரசு.

இதற்காக மட்டும் 30 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் துவக்கப்பட்ட இப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு பெறக் கூடும்.

நல்லிதயம் படைத்தோரின் நன்கொடைகளின் மூலமே இப்பணி தொடர உள்ளது; எனினும் - குறியீட்டுத் தொகையான இந்த 30 கோடி ரூபாயில், மத்திய அரசு தரும் 2 கோடி ரூபாயும், மாநில அரசின் 5 கோடி ரூபாயும் அடங்கும். இதுவரை - சற்றேறக்குறைய 16 இலட்சம் ரூபாய் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற ஏப்ரல் மாதமே இதுகுறித்த அறிவிப்பொன்றைச் செய்தித்தாள்கள் மூலம் வெளியிட்டார்.

நன்கொடைக்குச் சலுகை

நிதிமிகுந்தோர், பொதுமக்கள், அயல்நாடு களில் வாழும் இந்தியர்கள் ஆகியோரிடமிருந்து தான் குறிப்பிட்ட நிதியானது வசூலிக்கப்படுகிறது. இந்நிதிக்கு வருமான வரிச்சட்டம் '80-ஜி' பிரி வின் கீழ், தக்க சலுகை தரப்படுகிறது. கடித எண் டி.ஐ.டி.(இ)/2(34)/92-93 நாள் 15.6.92.

இதற்காகவே - தமிழ்நாடு விளையாட்டு அரங் கங்கள் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) என்னும் புதியதோர் அமைப்பு உருவாக்கப்பட்டு - பதிவும் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே இந்த அமைப்பின் தலைவராவார்.

தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 4.3.92-ஆம் நாள் ஆணையின்படியே இந்தப் புதிய ஏற்பாடு.

எழிலுற மட்டுமல்ல; எல்லா நாட்டு விளை யாட்டு வீரர்களுக்கும் ஏற்றதாகவும் அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள பன்னாட்டுக் குறியளவின் படி, நவீன வசதிகளோடு நம் தமிழகத்தில் அமைய விருக்கிறது இந்த விளையாட்டரங்கம்.

உலகிலேயே, ஆறுமாத காலத்தில் கட்டி முடிக்கப்படவிருக்கும் இந்த அதிநவீன விளையாட் டரங்கம் - இந்தியாவில் உள்ள எல்லா விளையாட் டரங்கங்களில் இணையற்றதாக விளங்கும்.

கட்டுமானப் பணிகள்

விளையாட்டரங்கக் கட்டுமானப் பணியைப் பொறுத்தமட்டில் - திரு. சி.ஆர். நாராயணராவ் மற்றும் எல் அண்டு டி குழுவினர் (L & T Ltd) ஆகி யோர் கட்டடக் கலைஞர்களாக நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள்.

இ.சி.சி. குழுவினர் (ECC Group) கட்டடப் பொறியாளர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

குறித்த காலத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர அவசியத்தால், அதற்கான நிதியாதாரம் குறித்து மக்களிடையே தக்கவாறு பிரச்சாரம் செய்யுமாறு, அரசு கேட்டுக் கொண் டுள்ளது.

பலதரப்பட்ட விளையாட்டுகளுக்கும் ஏற்ப, அமைக்கப்பட்டுவரும் இவ்வரங்கத்தின் அமைப் புக்கு எவ்வித ஊறும் விளைவிக்காத வண்ணம், வணிக வளாகம் (Shopping Complex) ஒன்றும் கட்டப்படவிருக்கிறது. எல்லாமே அண்மைக் காலத்தில் ஒரு சர்வதேச விளையாட்டரங்கம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தெரி விக்கப்பட்டுள்ள வரைமுறைப்படி வகையுற நிறுவப்படும்.

விளையாட்டரங்கின் அமைப்பு

அனைத்து நாடுகள் போட்டிக்கான அள வுடைய கால்பந்தாட்டத் திடல், 8 பிரிவுகள் உடைய ஓடுபாதை, குண்டெறிதல், உயரம் தாண்டுதல், தட்டெறிதல், சங்கிலியில் பிணைக்கப் பட்ட குண்டு வீசுதல், ஈட்டி எறிதல், வளைவு நெளிவு மட்டுமன்றிச் சேரும் சகதியும், மேடும் பள்ளமும், மணலும் நீரும் போன்ற பலவிதத் தடைகளோடும் கூடிய குதிரைப் பந்தயம் (Steeple Chase) ஆகிய போட்டிகளுக்கான இடவசதி கொண்ட தாக இந்த அரங்கம் விளங்கும்.

இவைதவிர, செயற்கைத் தரைப் பரப்பு ஓடு தளமும் இங்கிருக்கும்.

ஒரே நேரத்தில் - இங்கு நடைபெறும் போட்டி களை 40,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்க முடியும்.

முக்கியமானவர்கள், மிக முக்கியமானவர்கள், சிறப்பு அழைப்பாளர்களுக்காக 500 தனி இருக் கைகள் அமைக்கப்படும்.

செய்தித்தாள்கள், வானொலி, தொலைக் காட்சி போன்ற அமைப்புகளைச் சேர்ந்த செய்தி யாளர்கள், படப்பிடிப்பாளர்கள் ஆகியோருக் கென்று தனிப்பட்ட 500 இருக்கைகள் இவ் வரங்கில் இருக்கும்.

மக்களுக்கான வசதிகள்

இந்த அரங்கத்தின் எந்தப் பகுதியில் அமர்ந் தாலும், எவ்விதத் தடையும் இன்றி மக்கள் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் கண்டுகளிக்க முடியும் அத்தகைய வசதியுடன் பார்வையாளர் இருக்கைப் பகுதி அமைக்கப்படுகிறது.

இரண்டு அடுக்குகள் கொண்டதாகப் பார்வை யாளர் மாடம் இருக்கும்.

ஒவ்வோர் அடுக்கிலும் தனித்தனிக் கழி வறைகள், சிறு கடைகள், பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதிகள் ஆகிய யாவும் இருக்கும்.

30 ஆயிரம் பார்வையாளர்களுக்குக் கவர்ச்சி மிக்க கூடைநாற்காலிகள் (Polypropylene bucket Seats) இங்கு போடப்பட்டிருக்கும்.

விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள்

இந்த அரங்கில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வருகை தருவோருக்கென்றே பல்வேறு வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

குறிப்பாக - ஒரே நேரத்தில், 100 பேர் அமர்ந்து கலந்துரையாடத் தக்க தனி அரங்கு ஒன்றும் இங்கே நிறுவப்படும்.

விளையாட்டு வீரர்களுக்கும், நடுவர்களுக்கும், மருத்துவப் பரிசோதனையாளர்களுக்கும் தனித்தனி அறைகள் கட்டப்படும்; அவைகளிலெல்லாம் தனித்தனிக் கழிப்பறைகள் இருக்கும்.

விளையாட்டு வீரர்கள், களத்தில் இறங்கு முன்பு தனிப்பயிற்சி பெறத்தக்க அறைகள், தனிப் பெட்டிகள் (Lockers), போதை மருந்து பற்றிய பரிசோதனைக்கெனத் தனி அறைகள் எல்லாம் உருவாக்கப்படும்; அத்தனையும் குளிரூட்டப்பட்டவைகளாக (Airconditioned) இருக்கும்.

விளையாட்டு வீரர்களும், பன்னாட்டுப் பிரதிநிதிகளும் மட்டுமே அரங்கினுள் செல்வதற்காக மிகுந்த பாதுகாப்புடைய சுரங்கப்பாதைகள் (Subway) அமைக்கப்படும்.

முக்கியமானவர்களுக்காக...

பல்வேறு தரப்பட்ட முக்கியஸ்தர்களின் வாகனங்கள் செல்லுவதற்காகத் தனிப்பாதைகள், கார் நிறுத்துமிடங்கள், லிஃப்ட்டுகள், ஓய்வெடுக்கும் அறைகள், சிற்றுண்டி உணவகங்க்ள் ஆகியவைகளும் இங்கிருக்கும்.

ஆர்டரின்பேரில் உணவளிக்கத்தக்க, கலந்தாய்வுக் கூடங்களும் உண்டு.

மிகமிக முக்கியமானவர்களின் உடைமைகள் வைப்பதற்கெனத் தனித்தனிப் பாதுகாப்புப் பெட்டிகளும் அவ்வறைகளில் வைக்கப்படும்.

செய்தியாளர்களுக்காக...

சென்னையில் அமையவிருக்கும் இந்த விசாலமான விநோத அரங்கில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து, அவை பற்றிய செய்திகளைச் செகம் முழுவதும் பரப்பக்கூடிய செய்தியாளர்களுக்கும் இங்கே பல வசதிகள் செய்து தரப்படும்.

கட்டுப்பாடும் கண்காணிப்பும் உடைய நுழைவு வாயில் வழியாகவே இவர்கள் தமது பகுதிக்குச் செல்ல வேண்டியதாயிருக்கும். இவர்களுக்குத் தனித்தனி மாடங்கள் ஒதுக்கப்படும்.

தத்தம் அலுவலகங்களோடு, உடனுக்குடன் செய்தியாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக ஃபேக்ஸ் (FAX), டெலக்ஸ் (Telex), தொலைபேசி இணைப்புகள் போன்ற செய்தித் தொடர்புச் சாதன வசதிகள் செய்து தரப்படும்.

விளையாட்டரங்கை நோக்கிய, குளிரூட்டப்பட்ட சிற்றுண்டிச் சாலைகளும் அவர்களுக்கு உண்டு. அதைப்போலத் தொலைக்காட்சி வருணனையாளர்க்கென்றும் தனிமேடை உருவாக்கப்படும்.

உடற்பயிற்சியாளர்கள்

ஆண்-பெண் உடற்பயிற்சியாளர்கள் 150 பேர் தங்கத் தக்கதாகச் சமையற்கூடம் - உணவுக் கூடத்துடன் ஒரு தனிக் கட்டடம் இங்கு எழுப்பப்படும்.

இவர்களுக்கென - விருந்தினர்களும் தங்குவதற்கேற்ப இருவர் தங்கும் அறைகள் அமையும்; எல்லா வசதிகளும் அதிலிருக்கும்.

உடற்பயிற்சி செய்வதற்கெனத் தனிக்கூடமும் அங்கிருக்கும்.

விளையாட்டுக் குழுவினர் தனிப்படவும், சேர்ந்தும் கலந்துரையாடல் செய்யத்தக்க அரங்குகளும் அக்கட்டடத்தில் அமையும்.

ஒளி அமைப்பு

இங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை உலகம் முழுவதும் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பத்தக்க மின்விளக்குகள் விளையாட்டரங்கமெங்கும் ஒளிவெள்ளம் பாய்ச்சும்.

உவகையூட்டும் ஒளிவட்டங்களைக் குறுக்கும் நெடுக்குமாகச் செலுத்தத்தக்க 'CIE' குறியீட்டு ஒளியமைப்பும் பொருத்தப்படும்.

அவ்வாறு செலுத்தப்படும் ஒளிக்கற்றைகள், பார்வையாளர்களின் கண்களைக் கூசச் செய்யாதிருக்கும்படியான எல்லாக் கட்டுப்பாடுகளும் 'CIE' மூலமே - அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கும் முறையில் மேற்கொள்ளப்படும்.

ஆங்காங்கே விளக்குக் கம்பங்களிலும், பார்வையாளர் அரங்கின் மேற்கூறைகளிலும் பொருத்தப்படும் சக்தி வாய்ந்த மின் விளக்குகள் இரவைப் பகலாக்கி இன்புறச் செய்யும்.

வண்ணத் தொலைக்காட்சிகளுக்காக-போட்டிகளுக்காக - போட்டியிடுவோர் பயிற்சிக்காக என மூவகைப்பட்ட மின்னியக்கி 'ஸ்விட்ச்' முறை கையாளப்படும்.

அவசரகால ஒளிப்பாய்ச்சு முறையும் கடைப்பிடிக்கப்படும்.

மின்சாரத்தின் உதவியால் மட்டுமன்றி 'ஜெனரேட்டரா'லும் விளையாட்டுத் திடலை ஒளிமயமாக்குவோர் எப்போதும் தயார் நிலையிலிருப்பார்கள்.

ஒலிபெருக்கி அமைப்பு முறை

விசாலமாக இருக்கும் விளையாட்டுத் திடல் முழுவதும் கேட்கத்தக்க ஒலிபெருக்கி வசதி - அவசர கால ஒலி பெருக்கிக்கான தனிப்பிரிவு - போட்டிகள் நடக்கும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கேட்கத் தக்க ஒலி பெருக்கி ஆகியவை இங்கே இருக்கும்.

அவைகளைத் தவிர - பொது அறிவிப்புகள், சிறப்பு அறிவிப்புகள், வண்டி - வாகன அழைப்புகள் ஆகியவற்றுக்கெனத் தனித்தனி ஒலிபரப்புப் பிரிவுகளும் செயல்படும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள்

அவசரகால உதவிக்கென இரண்டுகட்ட வெளியேறும் வழிகள் இவ்வரங்கில் அமையும்.

ஆடுகளத்தில் இருப்போருக்கு இரண்டு வட்டப் பாதுகாப்பு (Ring Security) எப்போதும் இருக்கும். முதலுதவிக்கும், தீயணைப்புக்கும் என வண்டி வாகனங்கள் வரவும் போகவும் இரண்டு தனி வழிகள் விடப்பட்டிருக்கும்.

விளையாட்டரங்கின் முன்புறத்திலும், கீழ்த் தளத்திலும் வனப்புமிக்க வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

அரங்க அமைப்பிற்குத் தனிக்குழு

சென்னை மாநகரில், 1993-இல் நடைபெறவிருக்கும் அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியைக் கருத்தில் கொண்டு, அனைத்து நாட்டுத் தகுதிக்கேற்ப (International Standards) நேரு ஸ்டேடியத்தை மேற்கண்டவாறு எல்லா வசதிகளோடும் உருவாக்க 25 பேர் கொண்ட ஓர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில் தரப்பட்டுள்ள அக்குழு பற்றிய விவரம் வருமாறு:

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் - குழுத் தலைவர்.
2. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் - துணைத் தலைவர்.
3. அரசு தலைமைச் செயலாளர் அவர்கள்: உறுப்பினர்.
4. அரசுச் செயலாளர் - நிதித்துறை : உறுப்பினர்.
5. அரசுச் செயலாளர் - உள்ளாட்சித்துறை: உறுப்பினர்.
6. அரசுச் செயலாளர் - பொதுப்பணித்துறை: உறுப்பினர்.
7. அரசுச் செயலாளர் - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை: உறுப்பினர்-செயலாளர்.
8. அரசுச் செயலாளர் - கல்வித் துறை உறுப்பினர்.

9. காவல்துறை இயக்குநர் (DGP) உறுப்பினர்.
10. காவல்துறைத் தலைவர், சட்டம்-ஒழுங்கு (I G of Police) உறுப்பினர்
11. தனி அலுவலர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
12. ஆணையாளர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
13. நிர்வாக இயக்குநர் - விளையாட்டு வளர்ச்சிக் கழகம்: உறுப்பினர்.
14. திரு. எம். கோபால கிருஷ்ணன், தலைவர்-இந்தியன் வங்கி: உறுப்பினர்.
15. திரு. பி. சிவந்தி ஆதித்தன் - தலைவர் - இந்திய ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்
16. திரு. எம்.ஏ.எம். இராமசாமி, தொழிலதிபர்: உறுப்பினர்.
17. திரு.. ஏ.சி. முத்தையா, தொழிலதிபர்: உறுப்பினர்.
18. திரு. எல்.சி. இராமமூர்த்தி, தொழிலதிபர், தமிழ்நாடு கால்பந்தாட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்.
19. திரு. ஆர். பழனியப்பன், தொழிலதிபர் - தமிழ்நாடு கால்பந்தாட்ட உயர்மட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்
20. திரு. சி.ஆர். விசுவநாதன், தலைவர் - தமிழ்நாடு ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்.

★ தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும், ஜனநாயக முறையில் நாங்கள் கடைசிவரை போராடுவோம்; அதை அடையும்வரை ஓயமாட்டோம்.

21. திரு. கே. முருகன், இணைச் செயலாளர் - இந்தியன் அசோஷியேஷன்: உறுப்பினர்.
22. திரு. எச். கிருஷ்ணமூர்த்தி, நிர்வாக இயக்குநர் - 'மெட்ராஸ் ரீஃபைனரீஸ்' : உறுப்பினர்.
23. திரு. வேணுசீனிவாசன், சுந்தரம் கிளைட்டன் லிமிடெட் - உறுப்பினர்.
24. திரு. எல். புத்தசிங், மண்டல நிர்வாகி- இந்தியன் டொபாகோ கம்பெனி: உறுப்பினர்.
25. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-600 005: உறுப்பினர்.

- இவர்களே அக்குழுவில் அங்கம் வகிப்போராவர்.

நகராட்சிச் செயலாளர் பணிகள்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் அவர்களும் இந்தக் குழுவில் உறுப்பினர் செயலாளராக இருந்து செயல்படுவார்.

பொதுமக்கள் இதற்கென அளிக்கும் நிதியை இவரே பெற்று இந்தியன் வங்கியில் இதற்காகத் தனிப்படத் துவக்கப்பட்டுள்ள கணக்கில் சேர்க்க வேண்டிய முக்கியப் பொறுப்பில் இருப்பவராவார்.

குழுவின் குறிக்கோள்கள்

நேரு விளையாட்டரங்கத்தை விரிவாக்க அமைக்கப்பட்டுள்ள குழுவானது, மிகப் பழமையான இப்போதுள்ள விளையாட்டரங்கக் கட்டடத்தை இடிப்பதை முதற்கட்டப்பணியாக மேற்கொள்ளும்.

அவ்வாறு இந்தப் பணி முடிவுற்றபின், புதிய விளையாட்டரங்கத்தை உருவாக்கும் கட்டுமானப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ளும்.

ஜவகர்லால் நேரு, 10-வது தங்கக்கோப்பைக்கான அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியை அடுத்த ஆண்டில் இக்குழுவே முன் நின்று நடத்தும்.

அரசிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், விளையாட்டரங்கம் உருவாக்கத்திற்குத் தேவையான நிதி திரட்டுவதும் - முறைப்படி அந்நிதியைப் பயன்படுத்தி, குறைவின்றி அரசுக் குறிக்கோளை நிறைவேற்றுவதும் இந்தக் குழுவின் அடிப்படைக் கொள்கையாக இருக்கும்.

பழைய கட்டடங்களை இடித்துப் புதிய அரங்கைப் பொலிவுற நிர்மாணித்த பிறகு - அதை நிர்வகிப்பது, கால்பந்தாட்டப் போட்டி நிகழ்ச்சிகளை முன்னின்று முறைப்படி நடத்துவது போன்ற பணிகளையும் இக்குழுவே மேற்கொள்ளும்.

- இவ்வாறு 4.3.92-ஆம் நாளைய அரசு ஆணை தெளிவாகத் தெரிவிக்கிறது. தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்களின் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) சார்பில் மேற்கண்ட செய்திகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் திரு. ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

- பி.எல். ராஜேந்திரன்.

சென்னை அரசினர் பொதுமருத்துவமனைக்குக் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில், புற்று நோய்ச் சிகிச்சை அளிப்பதற்காக, ரூ.65 இலட்சம் செலவில் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி வாங்க ஆணையிட்டுள்ளார்.

இதே மருத்துவமனையில் சில காலமாக செயல்படாதிருக்கும் 'கோபால்ட் தெரபி' மருத்துவப் பிரிவு விரைவில் பழுதுபார்க்கப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும்.

காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தில் விரைவில் இரண்டாவது 'கோபால்ட் தெரபி' கருவி நிறுவப்படும்.

அதேபோல, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள 'கோபால்ட் டெலி தெரபி' யூனிட், பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தால் ஆண்டு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பாபா அணுசக்தி ஆராய்ச்சித் மையத்திடமிருந்து இந்த யூனிட்டை உபயோகிக்க தடையில்லாச் சான்றிதழ் (No objection certificate) பெற்ற பிறகு, இன்னும் சில நாட்களில் இந்த யூனிட்டும் செயல்படத் தொடங்கும்.

மலட்டுத் தன்மை நீங்க...

மலட்டுத்தன்மை - உலகின் எல்லாப் பகுதிகளிலும் பருவ வயதை அடைந்த ஆண் - பெண்களைப் பாதிக்கும் பொதுவானதொரு பிரச்சினையாகும். இது - வாழும் நிலப்பகுதிக்கு ஏற்ப வேறுபடக்கூடியது. திருமணமான ஆண் பெண்களில் 8 முதல் 15 சதவீதத்தினர் குழந்தை பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

இதன்படி பார்த்தால் உலகில் 5 முதல் 8 கோடிப் பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் எனலாம். மலட்டுத்தன்மை, குறிப்பிடத்தகுந்த அளவு ஏமாற்றத்தையும் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியின்மையையும் தோற்றுவிக்கிறது.

சர்வதேச மற்றும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களின் முயற்சிகளினால் இன்றைய உலகின் மக்கள்தொகைப் பெருக்கம் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் கருத்தடைச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து, பெரிய குடும்பங்களை அமைப்பது குறைந்துள்ளது. இத்தனைப் பின்னணிகளுக்கு இடையிலும், மலட்டுத்தன்மையுடன் இருப்பது அவ்வளவாக முக்கியத்துவம் பெறவில்லை.

ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெறுவதே இன்றைய நிலையிலும் பெருமைக்குரியதாக இருந்து வருகிறது. இன்னும்கூட மலட்டுத் தன்மையைப் போக்க, தடுக்க, அறிந்து சிகிச்சை பெற மருத்துவ உதவி நாடப்படுகிறது.

திருமணமானவர்களுக்குக் குழந்தை பெறும் தகுதி இல்லையென்றால் அது பின்வரும் அடிப்படைகளால் தோன்றியிருக்கக்கூடும்;

முதல் நிலை மலட்டுத்தன்மை

தடையின்றிப் பாலுறவு கொண்டு வந்த போதிலும், திருமணமாகி 2 ஆண்டுகள் ஆன பிறகும் பெண் கருத்தரிக்கா நிலை.

இரண்டாம் நிலை மலட்டுத்தன்மை

பெண்ணானவள் முன்பு கருத்தரித்திருந்தபோதிலும், தற்போது கருத்தரிக்க இயலாத நிலை.

கருத்தரிக்கும் தன்மையில் குறைவு

சில கணவன் மனைவியரிடம் கருத்தரிப்பு நிகழ இயலாத அளவிற்கு (இருவரிடமும்) கருத்தரிக்கும் தன்மையில் குறைவு ஏற்படுவதுண்டு.

மேலே நாம் பார்த்த பல்வேறு விதமான மலட்டுத்தன்மைகளும் பிறவிக் குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது இடையில் பீடிக்கப்பட்டதாலோ நேரிடலாம். பிறவிக் காரணம் ஆண் அல்லது பெண்ணின் இனப்பெருக்க மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் பிறவிக் குறைபாட்டை அடிப்படையாகக் கொண்டது. கருவகங்கள் (Ovaries) வேலை செய்யாமையால் கருவுறுதல் நிகழாமை, போன்றவைகளை இதற்கு

எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இத்தகைய காரணங்கள் முதல்நிலை மலட்டுத்தன்மையின் விளைவுகளாகும்.

ஆண்களும் காரணமாகலாம்

இதே போல ஆண்களிடமும் பிறவிக் கோளாறுகள் உண்டு. எடுத்துக்காட்டாக - ஆணின் இனப் பெருக்க உறுப்பான விந்தகங்கள் (Testis) அடி வயிற்றுப் பகுதியில் புதைந்திருந்து, சிறுவனாக இருக்கும் பருவத்தில் வெளியே தொங்கும் விந்தக உறைக்கு இடம் பெயர்ந்து வருவது வழக்கம்.

ஆனால் சில சமயங்களில் இது நடைபெறுவதில்லை; விந்தகம் முதிர்ச்சியடையாமல் விந்து உற்பத்தி செய்வதில்லை.

இடையில் பீடிக்கப்பட்ட காரணங்களை எடுத்துக்கொண்டால், பெண்களிடம் இரண்டு முக்கியமான ஹார்மோன்கள் உற்பத்தியில் பற்றாக்குறை இருக்கலாம். Follicle Stimulating Hormone (FSH), Luteinising Hormone (LH) என்பன அவை. இவை பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் கருத்தரிப்பே நடைபெறாது அல்லது எப்போதாவது ஒருமுறை மட்டுமே நடைபெறும். இப்படிப்பட்ட நேரங்களில் ஹார்மோன் ஊசிகள் அல்லது விசேட மருந்துகள் எடுப்பது, பெரும்பாலும் மாதவிலக்குச் சுழற்சியைச் சரிப்படுத்தி, கருவுறுதலுக்கு வழிவகுக்கக்கூடும்.

பெண்களிடையே மலட்டுத்தன்மை ஏற்படுவதற்குத் தொற்றுகள் ஏற்படுவது மிகச் சாதாரணமான காரணங்களில் ஒன்றாகும். தொற்றுகள் ஏற்படுவதினால் கருவகங்களிலும், கருக்குழாயிலும் சுவர்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கருக்குழாயின் வழியே கருவானது வெளியேறாதபடி தடுத்துவிடும். கருக்குழாயில் தொற்று ஏற்பட்டுப் பாதிப்பிற்குள்ளானால் அடைப்பு ஏற்படும். கருச் சிதைவு மற்றும் மகப்பேறு சமயத்தில் இப்படிப்பட்ட தொற்றுகள் ஏற்பட சாத்தியம் உண்டு. இதனால் கருப்பை மற்றும் கருக்குழாய்கள் தொற்றுவதுண்டு சேதமடைந்துவிடுவதுண்டு. குறிப்பாக - தவறான முறைகளில் கருச்

குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் தமிழ்நாடு சாதனை!

தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மேலும் குறைக்கப் பட்டுள்ளது. 1989-இல் 1000-க்கு 23.1 என்ற விகிதத்தில் இருந்த பிறப்பு விகிதம் தற்சமயம் 22.1 சதவிதிதமாகக் குறைந்துள்ளது. 1981-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (1981-இல் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 28 சதவிகிதம்). குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தியதன் விளைவாகவே இந்தச் சாதனையை அடைய முடிந்தது.

தமிழ்நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் மக்கட்தொகைப் பெருக்கம் குறைவாக உள்ளது. தமிழ்நாட்டில் மக்கட்தொகை வளர்ச்சி விகிதம் 1.49 சதவிகிதம்.

குழந்தை பிறப்பைப் போலவே குழந்தைகள் இறப்பு விகிதமும் கணிசமாகக் குறைந்துள்ளது. 1989-இல் ஆயிரத்துக்கு 8.6 என்று இருந்தது, 1991-இல் 1000-க்கு 8 ஆகக் குறைந்திருக்கிறது. இது தமிழகத்தில் தற்போது சுகாதார நலம் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கிராமச் சுகாதார உதவியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஏறத்தாழ 5,000 பேர் ஒதுக்கப்பட்டு, அவர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. சுகாதார உதவியாளர்கள் நல்ல முறையில் பிரச்சாரம் செய்வதை ஊக்குவிக்க ஒரு சவரன் தங்கம் பரிசளிக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சிதைவு செய்யப்பட்டால் அல்லது மகப்பேறு நிகழ்ந்தால் இப்படித் தொற்று ஏற்படுகிறது.

ஆய்வின் முடிவுகள்

பிறப்பு உறுப்பு மண்டலத்தில் ஏற்பட்ட தொற்று மலட்டுத்தன்மையை உண்டாக்குவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்று 25 நாடுகளில் உலகச் சுகாதார நிறுவனம் செய்த பெரிய ஆய்வு ஒன்று புலப்படுத்தியுள்ளது. முன்னேறிய நாடுகளில் உள்ள மூன்றில் ஒரு பங்குப் பெண்கள் மலட்டுத்தன்மை உடையவர்களாக இருப்பதாகத் தெரிகிறது.

இவர்களுக்கு அடைபட்ட கருக்குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றுகள் இடுப்புப் பகுதியிலுள்ள உறுப்புகளில் இருந்ததற்கான சான்றுகள் காணப்பட்டன. ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதே அளவு எண்ணிக்கை காணப்பட்டுள்ளது. ஆனால் ஆப்பிரிக்க நாடுகளில் கிட்டத்தட்ட இருமடங்கு (63 சதவீதம்) பெண்களுக்கு மேற்கண்ட வகை தொற்றுகள் ஏற்பட்டுள்ளன. உண்மையில் 40 சதவீத ஆப்பிரிக்கப் பெண்களுக்குக் கருக்குழாய் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இதற்கு முன்பு கருவுற்றவர்களே.

கொனோரியா என்ற பால்வினை நோய்க்கும் கருக்குழாய் அடைப்பு மலட்டுத்தனத்திற்கும் தொடர்பு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உண்டான

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகுக் குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

கொள்ளை நோய்களால் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதுண்டு. இது ஆண்டிபயாடிக்கு மருந்துகளுக்கு எதிர்ப்பை அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட தொற்று பெரும்பாலும் நோயறிகுறி அற்றதாகவே உள்ளது. உடனுக்குடன் மாறுபடுகிற நிலையற்ற நோயறிகுறிகளையே இது உண்டுபண்ணுகிறது.

பால்வினைத் தொற்று நோய்

அண்மையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள Chlamydia எனப்படும் பாக்டீரியா கிருமி மலட்டுத்தன்மையை விளைவிப்பதில் கொனோரியாவைவிட அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கொனோரியாவைப் போலவே இந்த Chlamydia-வும் பால்வினை (தொற்று) நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று ஆணிடமும் சரி பெண்ணிடமும் சரி, எந்த அறிகுறியையும் உண்டுபண்ணுவதில்லை. இப்படிப்பட்ட தொற்றுகள் ஆண்டிபயாடிக்குகளைக் கொண்டு சிறப்பாகக் குணப்படுத்தப்பட முடியும். ஆனால், சிகிச்சையில் பெற்ற வெற்றி, மறுபடியும் தொற்று ஏற்படுவதினின்று பாதுகாப்பை அளித்துவிடாது.

காசநோய் கருப்பையின் சுவர்ப் பகுதியைத் தாக்கி, கருவுற்ற அண்டவணுவைக் கருப்பையில் ஒட்டாதபடி தடுக்கவும், கருக்குழாய்களில் அடைப்பை உண்டாக்கவும் கூடும். பெண்களிடையே ஏற்பட்டுள்ள மலட்டுத்தன்மையில் சுமார் 5 சதவீதம் வரை இப்படிப்பட்ட கோளாறால் விளைவது எனப்படுகிறது.

வேறு சில மலட்டுத்தன்மைக் கோளாறுகளில் உடலுறவு இயல்பான விதத்தில் நடைபெற்றிராது. எனவே புணர்வாயில் விந்து பீய்ச்சப்பட்டிருக்காது. இது கணவன் மனைவி இருவரது அறியாமையினாலும் விளைந்திருக்கலாம். அல்லது பெண்களுக்கு உடலுறவைப் பற்றிய உளவியல் சார்ந்த பயங்கள் நேரிட்டிருக்கலாம்.

இடையில் உண்டான மலட்டுத்தன்மைகளில், விந்தகங்களில் புட்டாலம்மை (பொன்னுக்கு வீங்கி) வைரஸ் (Mumps Virus) தொற்று ஏற்படுவது உண்டு. காசநோயும் சிபிலிஸ் நோயும் கூட விந்தகங்களைத் தாக்கக்கூடும். இதனால் விந்தகங்களிலிருந்து வரும் நாளத்தில் விந்து கடந்துசெல்லாதபடி அடைப்பு ஏற்படும்.

வெளியே தொங்கும் விந்தக உறைக்குக் கீழிறங்கி வராத விந்தங்களைச் சரியாக்கச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சை சரியான முறையில் செய்யப்படாவிட்டால் அல்லது அரிதாக ஒரு சில கேசுகளில் ஹெர்னியா எனப்படும் அண்டவாதத்தை (Inguinal herina) சரிப்படுத்தும் போதும் விந்தகங்களுக்குச் செல்லும் இரத்த ஓட்ட வழி சேதமடைந்து, விந்தகங்கள் பழுதாகி சரிவர இயங்காமல் போய்விடும்.

வெப்பத்தால் விளையும் கேடு

இது விந்தகங்களைச் சுற்றிலும் இரத்தம் பாய்வதன் அளவைப் பெருக்கி அதன் வெப்பநிலையை உயர்த்திவிடும். விந்தகங்களின் வெப்பநிலை உயர்ந்தால் விந்து உற்பத்தி பெருமளவு குறைந்துவிடும் என்பது நன்கு அறியப்பட்டதாகும்.

இறுக்கமான உள்ளாடைகளை அணிவதால் ஆண் மலடு உண்டாகிறது என்று கூறப்படுவதும் உண்மையே. இந்தச் சுருண்ட சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

எனினும் இது விந்து உற்பத்தியில் முன்னேற்றத்தை உண்டு பண்ணுமா என்பதும், இதனால் பெண் கருவுற வாய்ப்பு உண்டா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

குடியாலும் கேடுவரும்

குடிவெறிக்கு ஆளானவர்கள் லைபிடோ ¬Libido) குறைவால் மலட்டுத்தன்மை அடைகின்றனர். சில ஆண்டிபயாடிக்குகள் ¬Antibiotics) மற்றும் ஆண்டி டெப்ரசண்ட்ஸ் ¬Anti depressants) உட்பட சிற்சில மருந்துகளும் விந்து உற்பத்தியைக் குறைக்கும் என்று அறியப்படுகிறது.

பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மையின் காரணங்களைப் பற்றி அறிந்துள்ளதைவிட ஆண்களுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மையின் காரணங்களைப் பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. ஆண்களுக்கு மலட்டுத்தன்மை உண்டாக்கும் இக்காரணங்களில், சிலவற்றையே மருத்

சென்னையில் பழைய தெரு விளக்குகள் புத்தொளி பெறுகின்றன

சென்னை மாநகராட்சி காமராசர் சாலை, இராஜாஜி சாலை, சாந்தோம் நெடுஞ்சாலை, கிரீன்வேஸ் சாலை, சர்தார் படேல் சாலை, அண்ணா சாலை ஆகியவற்றில் பழைய விளக்குகளுக்குப் பதிலாக, 1,500 புதிய சோடியம் ஆவி விளக்குகளை ரூ.60 இலட்சம் செலவில் அமைத்து வருகிறது. அகற்றப்படும் பழைய விளக்குகள் சுத்தம் செய்யப்பட்டும் பழுது பார்க்கப்பட்டும், பேருந்து செல்லும் சாலைகளில் குழல் விளக்குகளுக்குப் பதிலாகப் பொருத்தப்படும். இந்த ஆண்டிற்குள் எல்லாப் பேருந்துத் தடங்களிலும் சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

வட சென்னையில் ஜி.ஏ. சாலை, கல்லறைச் சாலை, புதிய ஆவடிச் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம் தோட்டச் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கல்லூரிச் சாலை, சூரியநாராயணா சாலை மற்றும் தென் சென்னையில் இராம கிருஷ்ணா மடம் சாலை, டி.டி.கே. சாலை, காந்தி மண்டபம் சாலை, பெசண்ட் நகர், 3-வது அவின்யூ, அசோக் நகர் 10-வது அவின்யூ, கவுடியா மடம் சாலை இவற்றில் ரூ.200 இலட்சம் செலவில் சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட உள்ளன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட கொடுங்கையூர், கொளத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம், விருகம்பாக்கம், வேளச்சேரி, தரமணி, திருவான்மியூர் போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளில் 7,000 குழல் விளக்குகள் ரூ.560 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளன. இவை யாவும் மாநகராட்சியின் தரத்திற்கேற்ப புதைமின் கம்பிகளுடன் அமைக்கப்படும்.

கிட்டத்தட்ட 300 கி.மீ. நீளத்திற்கு மாநகராட்சி பல்வேறு பகுதிகளிலும் உள்ள பழைய பழுதடைந்த புதைமின் கம்பிகள் ரூ.200 இலட்சம் செலவில் இந்த ஆண்டு மாற்றியமைக்கப்படும்.

தெரு விளக்குகள் பழுது பார்ப்பதைத் துரிதமாகச் செய்ய ஏற்கெனவே உள்ள 22 எந்திர ஏணிகளுடன் புதிதாக 5 எந்திர ஏணிகள் ரூ.30 இலட்சம் செலவில் வாங்கிச் சேர்க்கப்படும். இரண்டு எந்திர ஏணிகள், 6 பணியாளர்கள் ஒரு இளம் பொறியாளரைக் கொண்ட தனிக் குழுக்கள் பழுது பார்த்தலை விரைவாகச் செய்திட அமைக்கப்பட உள்ளது. பழுது என்ன என்பதைக் கண்டு பிடிப்பதில் காலத்தை வீணாக்காமல், புதிய விளக்குத் தொகுதியை மாற்றி அமைத்துத் தெரு விளக்குகளை உடனடியாகப் பழுது பார்க்கும் முறை செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த ஆண்டு சென்னை மாநகராட்சி ரூ.1.160 இலட்சம், தெரு விளக்குகளுக்காக நிதி ஒதுக்கியுள்ளது.

துவச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும்.

இதனால் தெரியவருவது என்னவெனில், திருமணமானவர்களிடையே உண்டாகும் மலட்டுத்தன்மையில் குறைந்தது 40 சதவீதத்திற்காவது ஆண்கள் பொறுப்பு உடையவர்கள் என்பதாகும்.

ஏராளமான திருமணமான ஆண்-பெண்கள் ஒரு கோளாறும் உடையவர்களல்ல என்று பரிசோதனைகளின் வாயிலாக அறியப்பட்ட போதிலும், குழந்தை பெறாதவர்களாகவே இருக்கின்றனர். கரு வெளியேறுதல், சினைப்படுதல் கருப்பையில் வளர்தல் போன்ற விஷயங்களில் அண்மைக்கால ஆய்வுகள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகளின் வாயிலாகப் பல தம்பதிகளுக்கு வெற்றிகரமாகச் சிகிச்சை அளித்து வருகின்றபோதிலும், பின்னுங்கூட பதிலளிக்கக்கூடாத கேள்விகள் பல உண்டு.

சோதனைக் குழாய்க் குழந்தை (In Vitro fertilization) முறை கருக்குழாயில் அடைப்பு ஏற்பட்ட பெண்களுக்கே பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், மலட்டுத்தன்மையைத் தீர்மானிக்க முடியாத பல நேரங்களில் இந்தச் சோதனைக்குழாய் முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த பத்தாண்டுகளாக இந்தச் சிகிச்சை முறை பெருமளவு பிரபலமடைந்துள்ளது. ஆனால் இதற்கு ஆகும் செலவும் அதிகம். உயர் பயிற்சி பெற்ற நிபுணர்களும் தேவை. இதில் நான்கு அல்லது ஐந்தில் ஒன்றுதான் சிறந்த பலன் தருவதாய் உள்ளது.

எந்தப் பிணியையும் சமாளிக்க முதலாவதாகச் செய்யவேண்டியது அதனைத் தடுக்க முயல்வதேயாகும். பிறவிக் கோளாறுகள் விந்து உற்பத்தியில் உள்ள கோளாறுகள் அல்லது மருந்துகளால், சூழ்நிலையால் அல்லது மன இறுக்கங்களால் உண்டாகும் மலட்டுத்தன்மைக் கோளாறுகள் போன்றவற்றைத் தடுப்பதென்பது கடினமான காரியம் தான்.

ஆனால், பிறப்பு உறுப்புகளில் ஏற்படும் தொற்றுகளை இருபாலரிடமும் தடுக்கமுடியும். கிளாமிடியா (Chlamydia) கொனோரியா (Gonorrhoea) போன்ற பால்வினை நோய்களே இத்தகைய தொற்றுகளுக்குப் பெருங் காரணம். என்றாலும், மலட்டுத்தன்மையை உண்டாக்கும் இத்தகைய தடுக்கப்படக்கூடிய காரணங்களை முறையான சுகாதாரக் கல்வி, சமுதாய ஒழுக்கம், பாலியல் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு குறிப்பிடத்தகுந்த அளவு குறைத்துவிட முடியும்.

'நன்றி: நல்வழி'

காவிரிப்பாசனப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி

எஸ். ஜெயராமன்
பி. நளாயினி
அ. சேக்தாவுது
அ. அப்துல் கரீம்
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்

சணல் பயிர் நார்வகைப் பயிராகும். நார்வகைப் பயிர்களில் பருத்திக்கு அடுத்து சிறப்புடையது சணலாகும். சணல் பயிரிலிருந்து கிடைக்கும் நார் மென்மையும், வலிமையும் உடையது. இந்த நாரிலிருந்து சணல், கோணிப்பை அல்லது சாக்கு, பல வகையான கயிறுகள், தரை விரிப்புகள், காகிதம், பல பயனுள்ள அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் சணல் பயிர் சுமார் 8 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 10.8 இலட்சம் டன் சணல் நார் உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் தற்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் சணல் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகின்றது. சணல் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மகசூலைப் பெருக்கிடவும் அகில இந்திய ஒருங்கிணைந்த சணல் பயிர் ஆராய்ச்சித் திட்டம் தற்பொழுது தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறையில் செயல்படுகின்றது. இந்த ஆராய்ச்சியின் பலனாக காவேரி டெல்டாப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி செய்து அதிக வருமானம் பெற வாய்ப்பு உள்ளது.

சணல் பயிர்ச் சாகுபடிக்கு மணற்பாங்கான வண்டல், ஆற்று வண்டல், வண்டல் மிகுந்த களி மண் முதலியன ஏற்றவை. இப்பயிரை தை முதல் சித்திரைப் பட்டங்கள் வரை விதைகளை விதைத்துச் சாகுபடி செய்ய வேண்டும். எள், உளுந்து பயிர்களுக்கு மாற்றுப் பயிராகக் கோடையில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்றது.

சணல் விதைகள் மிகச் சிறியதாக இருப்பதால் நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும். கடைசி உழவில் எக்டேருக்கு 5 டன்கள் அதாவது பத்து வண்டிகள் தொழு எரு இட வேண்டும். அத்துடன் அடியுரமாக இரசாயன உரங்களில் தலா 20 கிலோ வீதம் தழைச்சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து இட வேண்டும். நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏற்பப் பாத்திகளை அமைக்க வேண்டும்.

சணல் பயிரில் 'ஒலிடோரியஸ்' என்ற டோசா சணலும் 'கேப்சுலாரிஸ்' என்ற வெள்ளைச் சணலும் உள்ளன. டோசா சணல் வகையில் ஜே.ஆர்.ஓ. 524, ஜே.ஆர்.ஓ.878, ஜே.ஆர்.ஓ.7835 என்ற இரகங்களும், வெள்ளைச் சணல் வகையில் ஜே.ஆர்.சி.212, ஜே.ஆர்.சி.321, ஜே.ஆர்.சி.7447 இரகங்களும் சாகுபடிக்கு ஏற்றவை.

சணல் விதைகளைக் கைத்தெளிப்பு முறையிலும் வரிசை விதைப்பு முறையிலும் விதைக்கலாம். கைத்தெளிப்பு முறையில் தெளிக்க எக்டேருக்கு 9 கிலோ விதையும், வரிசையில் விதைக்க எக்டேருக்கு 6 கிலோ விதையும் தேவைப்படும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியிலும் செடிக்குச் செடி 5 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும். அதிக மகசூலுக்கு ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 67 செடிகள் இருக்க வேண்டும்.

விதை விதைத்த 20-25 நாட்களில் முதல் கைக்களையும் 35-40 நாட்களில் இரண்டாவது கைக்களையும் எடுக்க வேண்டும். கூலியாட்கள் கிடைக்காத சூழ்நிலையிலோ அல்லது கைக்களை எடுக்க அதிகச் சாகுபடி செலவு ஆகும் சமயங்களிலோ சணல் விதைகளை விதைப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்போ அல்லது விதைத்த மூன்று நாட்கள் கழித்தோ 'புளுகுளோராலின்' என்றகளைக்கொல்லி மருந்தை எக்டேருக்கு 1.5 முதல் 2 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். பின்னர் விதைத்த 30-35 நாட்களில் ஒரு கைக்களை எடுத்தால் களைகளை நன்கு கட்டுப்படுத்தலாம்.

மேலுரமாக 10 கிலோ தழைச்சத்தை முதல் களை எடுத்த பின்பும் (20-25 நாட்கள்) மேலும் ஒரு முறை 10 கிலோ தழைச் சத்தை இரண்டாவது களை எடுத்த பின்பும் (35-40 நாட்களில்) இட வேண்டும். வறட்சிக் காலங்களில் அல்லது உரப் பற்றாக்குறை சமயங்களில் கைத்தெளிப்பான் மூலம் எக்டேருக்கு 8 கிலோ தழைச்சத்து வீதம் 40-45 நாளில் ஒரு முறையும் 70-75 நாளில் மற்றொரு முறையும் 2 சதம் யூரியா கரைசலை (20 கிராம் யூரியா ஒரு லிட்டர் தண்ணீரில்) தெளித்துப் பயன் பெறலாம்.

சணல் நார்ப் பயிரில் பச்சைத் தண்டுகளின் உயரம் மற்றும் எடை ஆகியவற்றைப் பொறுத்தே மகசூல் கிடைப்பதால் தண்ணீர்ப் பற்றாக் குறை இன்றிச் சாகுபடி செய்ய வேண்டும். சணல் பயிருக்கு 500 மி.லிட்டர் தண்ணீர் தேவைப் படுகிறது. விதைகள் விதைத்தவுடன் முதல் தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு, மண்ணின் தன்மைக்கேற்ப உயிர்த் தண்ணீர் கட்ட வேண்டும். பிற்பாடு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போது மானது. சணல் பயிரில் டோசா வகை ரகங்கள் வறட்சியிலும் நன்கு வளரக் கூடியது. வெள்ளைச் சணல் ரகங்கள் நீர் தேங்கிய பகுதிகளிலும் நன்கு வளரக் கூடியது.

பொதுவாக, கூன் வண்டு, மஞ்சள் மற்றும் சிவப்பு சிலந்திப் பூச்சி, புழுக்கள் போன்றவை சணல் பயிரைத் தாக்கும் பூச்சிகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்த எண் டோசல்பான், ஜெல்த்தேன், பாஸோ லோன் போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை விதைத்த 45 நாட் களிலிருந்து 15 முதல் 20 நாட் களுக்கு ஒருதடவை தேவைக்கு ஏற்ப தெளிக்க வேண்டும். நோய்களில் தண்டு அழுகல் மற்றும் வேரழுகல் நோய் சணல் பயிரைப் பாதிக்கின் றன. இவைகளைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ சணல் விதைகளுடன் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளாக அக்ரோசான் 5 கிராம், டைத்தேன் எம்.45•5 கிராம், பாவிஸ்டின் 2 கிராம் போன்ற ஏதேனும் ஒரு மருந்தினைக் கொண்டு விதை நேர்த்தி செய்து நோய்களைக் கட்டுப் படுத்த வேண்டும்.

சணல் பயிரை விதைத்த 100 முதல் 110 நாளில் அறுவடை செய்யலாம். செடியில் இளங் காய்கள் தோன்றும்பொழுது அறு வடை செய்தால்அதிகஅளவுதரமான நார் மகசூலைப் பெற இயலும். பயிர் சுழற்சித் திட்டத்திற்கும், சூழ்நிலைக்கும் தகுந்தவாறு அதிகப் பட்சமாக 120 முதல் 140 நாட்கள் கழித்தும் அறுவடை செய்யலாம். அறுவடை செய்த பின்பு 20 முதல் 30 சணல் தண்டுகளை வைத்து கட்டுக் கட்டாகக் கட்ட வேண்டும். இவற்றை வயலிலேயே இரண்டு

மூன்று நாட்கள் செங்குத்தாக நிறுத்தி வைக்க வேண்டும். இவ் விதம் செய்வதால் செடியில் உள்ள இலைகள் உதிர்ந்து விடும். இது நிலத்தின் தழைச்சத்தினையும் அங் ககப் பொருட்களின் அளவையும் அதிகரித்து மண்வளத்தை அதி கரிக்கப் பயன்படுகிறது.

அறுவடை செய்த சணல் தண்டு களை 15 முதல் 20 நாட்கள் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். பின்பு நாரினையும், தண்டுகளையும் பிரித்தெடுக்க வேண்டும். பச்சைத் தண்டுகளின் மகசூலாக எக்டேருக்கு 45 முதல் 50 டன்களும், சணல் நார் மகசூலாக எக்டேருக்கு 30 முதல் 32 குவிண்டால் வரையிலும் கிடைக்கின்றது.

ஒரு டன் பச்சைத் தண்டுகளின் விலை ரூ.300 ஆகும். சணல் நார்ப்பயிர்ச் சாகுபடி செய்ய எக்டேருக்கு ரூ.6000 வரை தேவைப் படுகிறது. சணல் பயிரை நல்ல முறையில் சாகுபடி செய்வதால் 110 நாட்களில் எக்டேருக்கு நிகர இலாபமாக ரூ.9000 பெறமுடியும்.

பச்சைத் தண்டுகளை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட முகவரி களைத் தொடர்பு கொள்ளலாம்.

1. தலைமை நிர்வாகி
   சென்னை சணல் தொடர்பக
   நிறுவனம்
   எக்சேஞ்ச் ஹால், எண்-1
   காலேஜ் ரோடு
   புதிய நகர்
   கிழக்கு குரோம்பேட்டை
   சென்னை-600 044

2. விவசாய வாணிபக் கழகம்
   சென்னை சணல் தொடர்பக்
   நிறுவனம்
   அக்ரகார வீதி
   புலவனூர்-607 205
   அண்ணா கிராமம் ஒன்றியம்
   பண்ருட்டி வட்டம்
   தென்னார்க்காடு மாவட்டம்

சணல் சாகுபடி நுட்பங்கள் சம் பந்தமான விவரங்களை மேலும் தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட முக வரியில் தொடர்பு கொள்ளலாம்:

இயக்குநர்
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை-612 101
தஞ்சாவூர் மாவட்டம்

ஆதிதிராவிடர் நலம்



ஆதிதிராவிடர் சமுதாயத் தினர் சமூகத்தில் உள்ள மற்ற வர்களைப் போல வாழ்க்கை நிலை யில் முன்னேற்றமும், பொருளாதார நிலையில் உயர்வும் அடைய வேண் டும் என்ற எண்ணத்தோடு அவர் களுக்கு எனத் தனியாகப் பல திட்டங்களை அரசு தீட்டி விரைவாக நிறைவேற்றி வருகிறது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வினையொட்டி ரூபாய் ஒரு கோடி செலவில் மணி மண்டபம் ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளதும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் நூல் நிலைய வசதி செய்யப்படவுள் ளதும், ஆதிதிராவிடர் சமுதாயத் தினருக்குத் தமிழக அரசு அளித்த பரிசுகளாகும்.

இந்தியாவிலேயே முதல் முறை யாக ஆதிதிராவிடர்களுக்கு எனத் தனியாகத் தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. கோவை, பெரியார் மாவட்டங் களில் அமையவிருக்கும் தொழிற் பேட்டைகளில் தலா 100 தொழிற் கூடங்கள் வீதம் 200 தொழிற் கூடங்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனை வோர்களுக்கென அமைக்கப்பட உள்ளன. 80 கோடி ரூபாய் செல வில் இத்திட்டத்தைத் தமிழக அரசு உருவாக்குகிறது.

இரால் வளர்ப்பு நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் இலாபம் மிகுந்துள்ள தொழில் ஆகும். தமிழ்நாட்டில் கடற்கரை யோரப் பகுதிகளில் ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் ஒரு எக்டேர் வீதம் நிலம் வழங்கப் பட்டு, இரால் வளர்ப்புப் பண்ணை ஒவ் வொன்றும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு அவற்றில் இரால் வளர்க்கும் திட்டத்தை விரை வில் தமிழக அரசு செயலாக்க உள்ளது. இத்திட்ட அமலாக்கத்தில் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த விதவைப் பெண்கள் ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தமிழகத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நல்ல இலாபம் ஈட்டக் கூடிய தொழிலாக இருந்து வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர் குடும் பங்கள் பயன்பெறும் வகையில் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர்த்து தமிழ்நாட்டி லுள்ள ஏனைய மாவட்டங்களில் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு, பட்டுப் புழு வளர்ப்புக்குத் தேவையான பாசன வசதி, பட்டுப்புழு வளர்ப்புக் கூடங்கள், அதற்குத் தேவையான உபகரணங்கள் ஆகியவைகளும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வழங்கப்படும். 400 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் இத்திட் டத்தில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இதுமட்டுமின்றி நிலச் சொந்தக் காரர்களாக உள்ள ஆதிதிராவிடர் 4,000 நபர்களுக்கு அவர்களுடைய நிலத்தில் பட்டுப்புழு வளர்ப்பைத் தொடங்க வசதிகள் செய்து கொடுக் கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உதவியுடன் தமிழக அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கும்.

ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக தாட்கோ மூலம் நிதியுதவி

ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத் திற்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது தாட்கோ மூலமாகச் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் தனித் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் (1992-93) 2000 இந்து ஆதிதிராவிடர் பயனடையும் வகை யில் ரூ.31 கோடி திட்ட மதிப்பீட்டுடன் கூடிய ஒரு திட்டத்தினை 22 மாவட்டங்களில் செயல் படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி செயல் திட்டம் அரசு மானியம் ரூ.3 கோடிக்கும், விளிம்புத் தொகை ரூ.4 கோடிக்கும் மற்றும் வங்கிக் கடன் 24 கோடிக்கும் வகை செய்கிறது.

சேலம் அரசு அருங்காட்சியகத்தில்

இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம்

சேலத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில், ஓமலூர் சாலையில் சேலம் அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ளது. 11.2.1976-இல் தனியாரின் முயற்சியால் தொடங்கப்பட்ட இவ்வருங்காட்சியகம், 1.4.1979-ஆம் ஆண்டு அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு, கடந்த 16 ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

அருங்காட்சியகத்தில் கற்சிலைகள் பிரிவு, முந்து வரலாற்றுப் பிரிவு, தாவரவியல் பிரிவு, விலங்கியல் பிரிவு, நாணயவியல் பிரிவு, புவி அமைப்பியல் பிரிவு, பண்பாட்டியல் பிரிவு, ஓவியங்கள் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளன. அருங்காட்சியகத்தில் மேற்கண்ட பிரிவுகளில் காட்சிப் பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதோடு, பல்வேறு கல்விப் பணிகளும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

கல்வி சம்பந்தப்பட்ட பல்வேறு சொற்பொழிவுகள், காட்சி வில்லைப் படங்கள் (Slides), கண்காட்சிகள், கருத்தரங்குகள், செயற்களங்கள், பயிற்சி வகுப்புகள், சிறுவர் ஓவியப் போட்டிகள், வினாடி-வினாப் போட்டிகள் ஆகியவை அருங்காட்சியகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும், பொதுமக்களுக்காக வாரம் ஒரு முறை கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. இக்கல்விப் பணிகளினால் மாணவர்களும், பொதுமக்களும் மிகுந்த பயனடைகின்றனர்.

அண்மையில், புதிய நிகழ்ச்சியாக 'இயற்கைப் பாதுகாப்பு' (Nature Conservation) என்ற பயிற்சி முகாம் மாணவர்களுக்காக அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. 3.6.92 முதல் 6.6.92 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்ட இப்பயிற்சி முகாமில், சேலம் அரசு கலைக்கல்லூரி, வைஸ்யா கல்லூரி, சேலம் சட்டக் கல்லூரி, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளின் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கு பெற்ற மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களாவர்.

இப்பயிற்சி வகுப்பின் நோக்கம், நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்துவதே யாகும். இருபதாம் நூற்றாண்டின் முடிவில் இருக்கும் நாம் வெகுவிரைவில் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டைச் சந்திக்கவிருக்கிறோம். இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் மிகப் பெரிய பிரச்சினையாக மக்கட் தொகைப் பெருக்கமும், சுற்றுச் சூழல் பிரச்சினையும் நம்மை எதிர் நோக்கியுள்ளன. காடுகள் வெகு விரைவாக அழிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களும், செயற்பாடுகளும் போதுமானதாக இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஒரு நாட்டின் வளமான வாழ்விற்கு அதன் மொத்த நிலப் பரப்பில், காடுகள் 33 சதவிகிதமாக இருப்பது மிகவும் இன்றியமையாததென்று வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால், நமது நாட்டில் 15 சதவிகிதத்திற்கும் குறைவாகவே காடுகளின் பரப்பு அமைந்துள்ளது. மேலும், வன விலங்குகளை அழித்தலும், மனிதனின் செயற்பாடுகளினால் சுற்றுச் சூழல் மாசுபடுதலும் கவனிக்கத் தக்கதாகும்.

இப்பயிற்சி வகுப்பின் முதல் நாளன்று, உயிரினங்களும் அதன் சுற்றுச் சூழலும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பது பற்றியும், காடுகளின் முக்கியத்துவமும், அதன் அழிவினால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகளும் விரிவாக எடுத்துரைக்கப் பட்டன. மனிதனின்றித் தாவரங்களினால் வாழ முடியும், ஆனால், தாவரங்களின்றி மனிதனால் வாழ முடியாது என்ற அடிப்படை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இரண்டாம் நாளன்று, இந்தியாவில் காணப்படும் காடுகளின் வகைபாடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும்; இந்திய வன விலங்குகளின் வகைபாடுகளையும், அவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் உணர்த்தும் வகையில் சொற்பொழிவுகளும், படக்காட்சிகளும் அமைந்திருந்தன.

பசுமை மாறாக் காடுகள், இலையுதிர் காடுகள், முட்புதர்க் காடுகள், சதுப்பு நிலக்காடுகள் ஆகிய பல வகைக் காடுகளும், உயிரினங்களைப் பாதுகாப்பதில் அவற்றின் பங்கு, அல்லது உயிரினங்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பது போன்றவை விளக்கப்பட்டன. மாணவர்களுக்கு உயிரினங்களைக் கண்டு மகிழும் ஈர்ப்புச் சக்தி அதிகமாக வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் வன விலங்குகள், தாவரங்கள் பற்றிய எழில் மிகு காட்சி வில்லைப் படங்கள், சொற்பொழிவுகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

மூன்றாம் நாளன்று; சுற்றுச் சூழல் மாசு படுதல் (Pollution), மாசு படுதலின் வகைகள், அதனால் ஏற்படும் பாதிப்பு அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பன பற்றியும் விளக்கம் தரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளால் சுற்றுச் சூழல் மிக அதிக அளவில் பாதிக்கப் படுகிறது. மேலும், மாசுக் கட்டுப்பாடு என்பது வளர்ந்துவரும் நாடுகளிலும் முக்கியப் பிரச்சினை ஆகிவிட்டது. இவற்றை மாணவர்கள் தெளிவாக அறியும் வண்ணம் படக்காட்சிகள், சொற்பொழிவுகள் நடைபெற்றன.

நான்காம் நாளன்று; நீர்-நிலம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும், இவற்றை எவ்வாறு அதிகப் பயன் பெறும் வகையில் பயன்படுத்த இயலும் என்பது பற்றியும் விளக்கப் பட்டது. மேலும், சக்தியை (Energy) சேமிப்பது எவ்வாறு என்பது பற்றியும், மாற்றுச் சக்திப் பொருட்களின் (Alternative Energy Sources) தத்துவம் பற்றியும் விளக்கப்பட்டது.

வரலாறு, கலை, அறிவியல் முதலிய பல்வேறு கல்விப் பிரிவில் படிக்கும் இம்மாணவர்கள், இந்த நான்கு நாட்கள் பயிற்சி வகுப்பின் மூலம் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை மிகவும் உணர்ந்தவர்களாயினர்.

இப்பயிற்சியில் பங்கு கொண்ட மாணவர்கள் அனைவரும் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்த செயல்வீரர்களாக, இக்கருத்தை மற்றவர்களிடையே பரப்புபவர்களாக, தம் கல்லூரிகளிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பவர்களாகத் திகழ்வார்கள் என்று பெரும் நம்பிக்கை கொள்ளலாம்.

இயற்கையைக் கண்டுகளிக்கும் பொருட்டு, மலை வழிப் பயணமாக (Trekking Programme) மாணவர்களை அழைத்துச் செல்லுதலிலும், இயற்கை சூழ்ந்த வனப்பகுதிகளில் வினாடி-வினாப் போட்டிகள், ஓவியப் போட்டி நடத்துதலிலும், சேலம் அருங்காட்சியகம் ஏற்கெனவே முன்னோடியாக உள்ளது. அருங்காட்சியக வளாகத்தில் தற்பொழுது நடத்தப்பட்ட இப்பயிற்சி வகுப்பை சேலம் மாவட்ட வனப் பாதுகாவலர் திரு. எஸ். பாலாஜி அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தம் தொடக்கவுரையின்போது, அழிந்து வரும் காடுகளின் முக்கியத்துவம் பற்றியும், மாணவர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கைப் பற்றியும் விரிவாகப் பேசினார். பயிற்சியின் நிறைவு நாளன்று சேலம் ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.எம்.வெள்ளியங்கிரி அவர்கள், மாணவர்கள் இயற்கையைக் கண்டு மகிழ்வதன் அவசியத்தை எடுத்துரைத்து, பங்கு பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்

சென்னைக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம்

சென்னை மெரீனா கடற்கரையில், ரூ.5 கோடி செலவில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்று அமைக்கப்படுகிறது.

கடலில் உயிரினங்கள் எப்படி வாழ்கிறதோ, அதே அமைப்பில் கடலைப் போலக் காட்சியகம் அமைக்கப்படும். ஆசியா கண்டத்திலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் அமைக்கப்படும்.

இந்த காட்சியகம் அமைக்கும் திட்டத்தில் முதல்கட்டமாக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் துவக்கப் பட்டுள்ளன. இந்த காட்சியகத்தின் கடல்வாழ் உயிரினங்களான ஜால், டால்பின் போன்ற மீன் வகைகள் கடலில் உள்ளது போல இங்கு அமைக்கப்பட்டிருக்கும்.

நூல் நயம்

கிரியா யோகம்

மூலம்: நித்யா முக்தானந்தா
தமிழில்: மகரிஷி க. அருணாசலம்
பக்கம்:52 விலை:ரூ.6/-

ரிஷிகேசம், தெய்வநெறிக்கழக நிறுவனரான பரமஹம்ச சிவானந்தரின் முதன்மை மாணாக்கரான நித்ய முக்தானந்தர், பல ஆண்டுகள் தமது குருநாதரின் நேர்ப் பார்வையில் 'கிரியா யோகம்' பயின்று அனுபவம் அடைந்தவர். அவர் எழுதிய ''கிரியா யோக்'' என்ற இந்தி நூலின் தமிழ் வடிவம் இது.

'கிரியா யோகம்' என்றால் என்ன?

யோக நூல்களில் சொல்லப்படும் பதினைந்து நாடிகளில் மிக முக்கியமானவை மூன்று நாடிகள். பிங்கலை, இடா, ஸுஷுசும்னா (சுழுமுனை) என்பன. சுழுமுனை மிக முக்கியம் வாய்ந்தநாடி. சாதாரணமாக காற்று மூக்குத் துவாரங்கள் வழியாக போய்வந்து கொண்டிருக்கிறது. சுழுமுனைநாடி புருவங்களிலிருந்து புருவங்களின் மத்தியில் திருகுடி என்னும் இடத்திலிருந்து முதுகந்தண்டின் அடி நுனிவரை இருக்கிறது. இந்த அடிநுனியை மூலாதாரம் என்கின்றனர். மூலாதாரம் ஒரு விரற்கடை அளவுக்கு மூடியுள்ளது. இதை ஒரு மனப் பயிற்சியால் வெப்பமூட்டி கரைத்து அங்குள்ள உயிர் ஆற்றலை சுழுமுனை குழல்வழியே திரிகுடிக்கு ஏற்றுகின்றனர். ஏறிய ஆற்றல் அவ்வழியே இறங்குகின்றது. இப்படி விரும்பியபோது ஏற்றவும் இறங்கவும் செய்யும் செயலே கிரியா யோகம்.

உடலோம்பலில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் உயிர் எடுத்ததன் பயனை இழந்துவிடாமல் உயிரை வளர்க்கும் இந்தத் தந்திரத்தை பயின்றுபயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூலை தமிழில் தந்துள்ளதாகச் சொல்கிறார் அறிஞர் மகரிஷி க. அருணாசலம். அவரின் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

பிரணாயாமம் செய்வோருக்குப் பெரிதும் பயன்படும் இந்நூல்.

—மாமூலன்

குறள் வழிச் சிந்தனைகள்

ஆசிரியர்: ப. முருகன்
வெளியீடு:
திநியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை-98.
பக்கம்:142 விலை:ரூ.14/-

வான்புகழ் வள்ளுவர் பெருமை பேசும், பைந்தமிழ்க் கட்டுரைகளின் பெட்டகம். இரண்டடித் திருக்குறள் குறித்த 27. கட்டுரைகள் இந்நூலில் அடக்கம்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., சிலம்பொலி செல்லப்பன், சி.பா., முதலான தமிழறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் கவின்மிகு தொகுப்பு.

உடற்கல்வியும் சுகாதாரக் கல்வியும்

ஆசிரியர்கள்: எஸ். டேவிட்சன்
வை. இளங்கோ
வெளியீடு:
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-வது தெரு,
சென்னை-14.
பக்கம்:213 விலை:ரூ.25/-

உடல் நலம் பெற உடற் பயிற்சிகள் இன்றியமையாததாகிறது. அவற்றை வ்லியுறுத்துகிறது இந்தப் புத்தகம். எளிய நடையில், தக்க விளக்கப் படங்களும் உள்ளன. பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள கையேடு.

கீழ்க்காணும் இரண்டு நூல்களும் மதுரை, காந்திய இலக்கியச் சங்கத்தால் வெளியிடப் பெற்றவை.

1. பிரார்த்தனை அர்த்தமும் ஆற்றலும்
விலை:ரூ.5 பக்கம்:48

அண்ணல் காந்தியடிகள் பிரார்த்தனை என்ன? ஏன்? எப்படி? என்பதை விளக்கும் கையேடு.

2. பதினொரு மகா விரதங்கள்
விலை:ரூ.5 பக்கம்:58

அண்ணல் காந்தியடிகள் மேற்கொண்ட விரதங்கள் குறித்து விளக்கும் நூல் இது. சத்தியம், அகிம்சை, எளிய வாழ்க்கை முதலான பண்புகளின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்கிறோம்.

எங்கள் போதிமரம்

ஆசிரியர்: தென்னம்பட்டு ஏகாம்பரம்,
வெளியிட்டோர்:
கலைஞன் பதிப்பகம்,
10, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
பக்கம்:124 விலை:ரூ.16/-

கவியரங்கில் பாடிய கவிதைகள், தனிக் கவிதைகள், ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம் என 33 தலைப்புகளின் கீழான கவிதைத் தொகுப்பே இந்நூல்.

கடலில் சிறிது தூரத்திற்கு அலை; அதன்பின் அமைதியான நீர்ப்பரப்புப் போல, இந்நூலின் தொடக்கப் பக்கங்கள் சிலவற்றில் மரபுக் கவிதைகள்; அதன்பின் புதுக் கவிதைகள் காணப்படுகின்றன; ஒன்று அப்படி இருந்திருக்கலாம் அல்லது இப்படியிருந்திருக்கலாம் என்பது நம் எண்ணம். ஆனால், ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற நினைவில் ஆசிரியர் எழுதியிருக்கலாமோ என்னவோ?

அத்தனைக் கவிதைகளிலும் புதுப் புதுச் சொல்லாட்சிகள் - புதுக் கற்பனைகள் - புதுப்புது கருத்துக்கள் இருப்பது படிக்கும் எவருக்கும் மன நிறைவளிக்கும்.

-'சோழராஜா'.

உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள்

ஆசிரியர்: கே.ஜி.எஃப். பழனிச்சாமி
வெளியீடு:
சேது அலமி பிரசுரம்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:104 விலை:ரூ.13/-

''உழைப்பை விற்கலாம்; ஆன்மாவை விற்க முடியாது. இதயத்தில் ஈரமும், இரத்தத்தில் சூடும், மூளையில் விரைவும், ஆன்மாவில் சாந்தியும் பெறுவோர் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள்' ரஸ்கின் சொன்ன பொன்மொழி இது. இதுபோன்ற நம்நாட்டு, மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் சிந்திய சிந்தனை முத்துக்கள் அடங்கிய நூல்.

பரீட்சையில் நிறைய மதிப்பெண் பெறுவதற்கு ஏற்ற வழிகள்

ஆசிரியர்: எஸ்.ஆர். கோவிந்தராஜன்
வெளியீடு:
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:80 விலை:ரூ.10/-

பள்ளிக்கூடமெல்லாம் இப்போது திறந்திருக்கிறது. மாணவர்கள் புத்தகச் சுமையோடு சென்று கொண்டிருக்கிறார்கள். தேர்வுகளும் ஒவ்வொன்றாக வரவிருக்கின்றன. வருகின்ற தேர்வுக்கு இப்போதிலிருந்தே தயாராக வேண்டும். அதற்கு வழி காட்டுகிறது இந்நூல். 'தேர்வில் வெற்றி பெறுவது எப்படி?' இதற்கு விளக்கம் தரும் கையேடு.

- பி.வி. கிரி.

வன விலங்குப் புகலிடங்கள்

தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம்,கர்நாடக மாநிலங்களில் இருக்கும் முக்கியப் பறவை சரணாலயங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

தமிழ்நாடு: முதுமலை, கோடிக்கரை, ஆனைமலை, முண்டன் துறை, களக்காடு, கிண்டி, வேடன்தாங்கல்.

கேரளம்: தேக்கடி (பெரியார்), இராவிகுளம்.

கர்நாடகம்: பாண்டியூர், நாகர் ஹலே, ரங்கன்திட்டு.

ஆந்திரம்: நெல்லப்பட்டு.

முதுமலை நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் மைசூர் செல்லும் பாதையில் இந்தச் சரணாலயம் உள்ளது. அடர்ந்து வளர்ந்த தேக்கு மரங்களும், மூங்கில் புதர்களும் மிகுதியாக நிறைந்த வனப்பகுதி இது. இங்கே யானை, காட்டெருமை, கடமான், புள்ளிமான், காட்டு நாய் (Dhole) சிறுத்தை, மலைப்பாம்பு, நீர்நாய், முதலை போன்ற விலங்குகளும் பல்வகைப் பறவைகளும் வாழ்கின்றன.

ஒவ்வோராண்டும் பிப்ரவரி மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை இந்தச் சரணாலயத்தைச் சுற்றிப் பார்க்க ஏற்ற பருவம். அபயாரண்யம், கார்குடி மிசினகுடி, தெப்பக்காடு போன்ற இடங்களில் தங்குமிடமும், உண்ணும் வசதிகளும் உள்ளன. தெப்பக்காட்டில் இந்திய அரசு சுற்றுலாத் துறையின் இளைஞர் விடுதி இருக்கிறது. உதகை மைசூர் பேருந்தில் சென்று தெப்பக்காட்டில் இறங்கிக் கொள்ளலாம். முன்கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ள Wild Life Warden, Mahalingam Buildings, Coonoor Road, Ooty என்ற முகவரிக்கு எழுதலாம்.

கோடிக்கரை சரணாலயம்

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்துக்கு அருகே உள்ளது. இங்கே சதுப்பு நிலங்களும், கடலோரத்தில் சிறிய காடும் இருக்கின்றன. புள்ளி மான், பிளாக் பக், பெரல் போனிஸ், பெரல் பன்றிகள், குள்ள நரிகள், முயல்கள் போன்ற விலங்குகளும், பூநாரை (Flammingo) போன்ற நீர்ப் பறவைகளும், கடற்கரையில் கல்ஸ் (Gulls) டெர்ன்ஸ் (Terns), ntl; வேடர்ஸ் (Weders) போன்ற பறவையினங்களையும் காணலாம்.

பூநாரை இல்லம் என்னும் ஓய்வு மாளிகை 'சுற்றுலாப் பயணிகளுக்கென்று இருக்கிறது. திருத்துறைப் பூண்டியிலிருந்து புகை வண்டி, பேருந்து மூலமாகச் செல்ல வசதியுண்டு. மேலும் விவரங்களை அறியத் தஞ்சை மாவட்டக் காட்டிலாகா அலுவலருடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆனைமலை சரணாலயம்

கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இது உள்ளது. ஆனைமலையில் உள்ள 'டாப்ஸ்லிப்' (Top Slip) என்ற இடத்திலிருந்து சரணாலயத்தின் எல்லை துவங்குகிறது. அடர்த்தியான மழைக் காடுகளும், தேக்கு மரங்களும், ஆனைமலையில் உள்ளன. சிங்கவால் குரங்கு (Lion Tailed Mecaque) நீலகிரி வரை ஆடு (Nilgiri Tahr), யானை, காட்டெருமை, சிறுத்தை, கரடி, காட்டுப்பன்றி, காட்டு நாய், நீலகிரி லங்கூர் குரங்கு, கடமான், புள்ளிமான், நான்கு மரிமான்,

சுற்றுலாப் பயணிகளுக்கு ...

பலவிதமான அணில்கள் போன்றவற்றை இங்கே காணலாம். புலிகள் இருப்பது தெரிந்தாலும், அபூர்வமாகவே தென்படுகின்றன.

டாப் ஸ்லிப்பில் தங்கவும், உண்ணவும் வசதி உண்டு. பொள்ளாச்சியிலிருந்து பரம்பிக்குளம் செல்லும் பேருந்து இவ்வழியாகச் செல்லுகிறது.

இடவசதிக்கு:

Wild Life Warden
Annamalai Sanctuary
Mahalingapuram, Pollachi.
என்ற முகவரியை அணுகலாம்.

முண்டன்துறை சரணாலயம்

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ளது. வறண்ட இலையுதிர்க் காடுகளை இந்தச் சரணாலயத்தில் அதிகம் காணலாம். இங்கே புள்ளிமான், கடமான், கரடி, குரங்குகள், காட்டு நாய், சிறுத்தைப் புலி, முதலியவைகளைக் காணலாம். சிங்கவால் குரங்குகள் இங்கு நிறைய இருக்கின்றன.

அக்டோபர் முதல் ஜனவரி வரை சுற்றுலா சென்று மிருகங்களைக் காணலாம். இங்கே தங்க வசதியும், உண்ண வசதியும் உண்டு.

தேவைகளுக்கு:

Wild Life Warden,
Shencottai-2
என்ற முகவரியை அணுகவேண்டும்.

களக்காடு சரணாலயம்

திருநெல்வேலி நகரத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது களக்காடு எனும் கிராமம். அங்கிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் இந்தச் சரணாலயம் தொடங்குகிறது. இந்தச் சிங்கவால் குரங்குகளுக்குப் புகழ்பெற்ற இடம். ஒரே இடத்தில் 4 வகைக் குரங்குகளையும், அதாவது சாதாரணக் குரங்கு, நீலகிரிக் குரங்கு, பானட் மெக்காக் (Bonnet Meccaque) சிங்கவால் குரங்கு அனைத்தையும் காணலாம். நீலகிரிக் காட்டாடு, கடமான் வகை, கரடி, காட்டெருமை, யானை, புலி, பறக்கும் அணில், சிறுத்தை, காட்டு நாய், பாங்கோலின் (Pangolin) உட்பட பல விலங்குகள், பல வகைப் பறவைகள், ஊர்வன ஆகியவற்றை இங்கே காணலாம்.

செப்டம்பர் தொடங்கி மார்ச் வரை நல்ல பருவம், சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் 'செங்கலத்தேரி இல்லம்' என்னும் தங்கும் இல்லம் உள்ளது. இதற்கு நடந்துதான் செல்ல வேண்டும். உணவுக்கு வேண்டியவற்றைக் களக்காடு கிராமத்திலிருந்து தான் கொண்டு செல்ல வேண்டும்.

மற்ற விவரங்களுக்கு,

Wild Life Warden,
Kalakadu Sanctuary,
Tirunelveli
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

வேடந்தாங்கல் பறவை சரணாலயம்

சென்னையிலிருந்து சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தச் சரணாலயம், கருங்குழியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள வேடந்தாங்கல் கிராமத்தில் ஒரு சிறிய பாசன ஏரியில் நிறையக் கடம்ப மரங்கள் உள்ளன. நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரையில் இங்கே கார்முரன்ஸ் (Carmorants), ஈக்ரேட்ஸ் (Egrets), சாம்பல் நிறக் கொக்குகள், ஹெரான்ஸ் (Herons), அகலவாய் கொக்குகள் (Open billed Stocks), டார்டர் (Darter), ஸ்பூன் பில் (Spoon Bill), வெள்ளை இப்பிஸ் (White Ibis), நைட் ஹெரான் (Night Herons), கிரிப் (Crebe), கிரே பெலிகன் (Gray Pelican), கார்கானி சிறவுகள் (Garganey), ஷாவெலஸ் (Shovellers), துடுப்பு வால் பறவைகள் (Pin Tails), வாத்துகள், உள்ளான்கள், சேன்டு பைப்பர் (Sand Pipers) போன்ற இடம் பெயர்ந்து வரும் பறவைகளும் இங்கேயே இருக்கக்கூடிய கூட்ஸ், கடல் அலா (Terns) நீர்க்கோழி (Moorhens) ஆகிய பறவைகளையும் இங்கே காணலாம்.

தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகத்திலிருந்து வேடந்தாங்கலுக்குப் பேருந்து வசதி உண்டு. தங்குவதற்கு உணவு வசதியுடன் கூடிய வனத்துறை ஓய்வு இல்லம் உள்ளது.

முன் ஏற்பாடு செய்துகொள்ள,

Wild Life Warden,
49, 4th Main Road,
Adyar, Madras-20
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

கிண்டி தேசியப் பூங்கா

சென்னை நகரில் அடையாற்றுக்கும், கிண்டிக்கும் இடையே சுமார் 2.82 ச.கி.மீ. பரப்பளவில் இந்தப் பூங்கா அமைந்துள்ளது. புள்ளிமான், பிளாக்பக் (Black Buck) குள்ள நரி, ஏறத்தாழ 187 வகைப் பறவையினங்கள் இங்கு உள்ளன. சுற்றிப் பார்க்கச் சிறு கட்டணம் செலுத்த வேண்டும்.



கர்நாடக மாநிலம்

பண்டிபூர் சரணாலயம்

மைசூர், உதகை நெடுஞ்சாலையில் முதுமலை சரணாலயத்திற்கு அடுத்தாற்போல் உள்ளது. முதுமலையைப் போலவே, இங்கும் விலங்குகளும், பறவைகளும் உள்ளன. தங்கவும், உண்பதற்கும், ஓய்வு விடுதிகள் உள்ளன.

மேலும் விவரங்களுக்கு
The Field Director
Bandipur Tiger Reserve,
Government House Complex
Mysore City
என்ற முகவரியுடன் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

நாகர் ஹூலே சரணாலயம்

இது மைசூரிலிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் யானை, புள்ளிமான், காட்டெருமை, காட்டுப்பன்றி, பானெட், மெக்காக் குரங்கு, காட்டுநாய் ஆகியவற்றைக் காணலாம். பெங்களூர், மைசூரிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு. உணவுடன் தங்க வசதியுண்டு.

தேவைகள் குறித்து:
Assistant Chief Conservator of Forests
Wild Life Sub-Division
18th Cross, Malleswaram
Bangalore
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ரங்கன்திட்டுப் பறவை சரணாலயம்

மைசூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு அருகே உள்ளது. காவிரி ஆறு இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கப்பட்டிணத்தைச் சூழ்ந்து பின்பு ஒன்று சேருகிறது. இங்குள்ள சிறிய தீவுகளில் பறவைகள் கூடு கட்டிக் குஞ்சு



பொரிக்கின்றன. நீர்க்காக்கை, Carmorants, Darter, Pondheron, Cattle Egrets, Night Heron, Egrets, Open Bill Storks, White Ibis, Spoon Bills, Flying Fox, Stone Plaver, River Tern முதலிய அநேக விதப் பறவைகளை இங்கு ஜூலை மாதம் முதல் காணலாம். சிறிய படகுகளில் ஏறி, பறவைகள் கூடு கட்டியுள்ள தீவுகளைச் சுற்றி வரலாம். இங்கே சில முதலைகளையும் காணலாம்.

கேரள மாநிலம்

இராவிகுளம் பூங்கா

மூணாறிலிருந்து சுமார் 22 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது இந்தச் சரணாலயம். உயர்ந்த மலைகளில் நீலகிரிக் காட்டாடுகளை இங்கு காணலாம். யானை, காட்டெருமை, கடமான், வரை ஆடு, நீலகிரிக் குரங்கு, சிங்கவால் குரங்கு, பெரிய அணில், சிறுத்தை போன்றவை இங்கு காணப்படுகின்றன.

அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சென்று காண நல்ல பருவம். மூணாறுக்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

தங்குமிடத்திற்கு

The Divisional Forest Officer,
Munnar, Idukki District
Kerala
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

கருத்தடை செய்து கொண்டோர்க்குத் தங்கப்பதக்கம் பரிசளிப்பு

சென்னை மாநகரில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இரண்டாவது தங்கப் பதக்கக் குலுக்கல் 15.7.92 அன்று மாலை சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள மாநகராட்சி தாய்சேய் நல மையத்தில் நடைபெற்றது.

கடந்த ஜூன் மாதம் சென்னை மாநகராட்சி மருத்துவ மனைகள், அரசு மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகள், தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மருத்துவ மனைகளில் மொத்தம் 2,520 பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். இவர்களுக்குப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டிருந்தன. கூப்பன்களின் மறு பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, குலுக்கல் நடைபெற்றது. சென்னை மாநகராட்சியின் துணை ஆணையாளர் திரு. சி. சந்திரமௌலி இ.ஆ.ப., அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்தார்.

முதல் பரிசு அடையாறு காந்தி நகரைச் சார்ந்த திருமதி இலட்சுமிக்குக் கிடைத்தது. இவருக்கு 3.750 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

மூன்று இரண்டாவது பரிசுகள் - முறையே பல்லாவரத்தைச் சேர்ந்த திருமதி சாந்தி, வில்லிவாக்கத்தைச் சார்ந்த திருமதி பொன்மலர், கொடுங்கையூரைச் சேர்ந்த திருமதி ஜூலியட் ஆகியோருக்குக் கிடைத்தன.

இவர்களுக்குத் தலா 3.750 கிராம் உள்ள ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். குலுக்கல் விழாவில் இந்திய மக்கள் தொகைத் திட்டம் ஐந்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹைமா பாலச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார்.

பெரியார் சரணாலயம்

மதுரையிலிருந்து கோட்டயம் செல்லும் பாதையில் 140 கி.மீட்டர் தொலைவில் குமுளி அருகில் உள்ளது இந்தச் சரணாலயம். பெரியாற்றின் குறுக்கே அணை எழுப்பியதால் உண்டான செயற்கை ஏரி இங்குள்ள அனேகக் குன்றுகளைச் சூழ்ந்து கொண்டுள்ளது. இக்குன்றுகளில் யானை, காட்டெருமை, புலி ஆகியவற்றைக் காணலாம். மேலும், காட்டுப் பன்றி, நீலகிரிக் குரங்கு, கடமான், காட்டு நாய், புலி ஆகியவற்றையும் பார்க்கலாம். படகில் பயணம் செய்துதான் இந்தச் சரணாலயத்தைப் பார்க்க முடியும். அதிக அளவில் கழுகுகளையும், பலவிதப் பறவைகளையும் இங்கே காணலாம். ஏரியில், ஆமைகள், நீர் நாய்கள், நீர்ப் பறவைகளும் உள்ளன.

மதுரை - கோட்டயத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கும், அருகில் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள குமுளி என்ற ஊரிலும் தங்க வசதிகள் உண்டு.

மற்ற விபரங்களுக்கு:

The Field Director,
Periyar Tiger Reserve,
Thekkady (Near Kumili)
Kerala

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆந்திர மாநிலம்

நெல்லப்பட்டுப் பறவை சரணாலயம்

சென்னைக்கு வடக்கே 100 கி.மீட்டர் தொலைவில் துரைவாரி சத்திரம் என்றும் ஊருக்கு அடுத்தாற்போல் இந்தப் பறவை சரணாலயம் உள்ளது. பெலிகன் பறவைகள், இங்கே ஒரு பாசன ஏரியில் கூடு கட்டிக் குஞ்சு பொரித்து வருகின்றன.

நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை இங்கு இப் பறவைகளைக் காணலாம்.

('மதராஸ் நாச்சுரலிஸ்ட் சொசைட்டி'யின் 'நமது சுற்றுப்புறம் -ஒரு கண்ணோட்டம்' தொகுப்பு ஆசிரியர்கள் வி.ஜே. ராஜன் - எம். செல்வகுமார்.)

கோவை மாவட்டம்:

சமுதாய நலப்பணிகள்

1992-93-ஆம் நிதியாண்டில் சுமார் 2,239 வேலைகள் ரூ.606.238 இலட்சத்தில் நிறைவேற்றத் திட்டமிட்டு செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரம் மற்றும் நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முதல் தவணையாக ரூ.199.310 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைப் பயன்படுத்தி, சென்ற ஆண்டு நிலுவை வேலைகளும், நடப்பு ஆண்டில் கூட்டுக் குடியிருப்புகள், பத்து இலட்சம் கிணறுகள் திட்டமும் செயல் படுத்தப்படவுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக ரூ.26.670 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து 5 பாசனக் குளங்கள் மேம்படுத்தும் பணியும், 15 புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், 18 கி.மீ. மெட்டல் சாலை அமைக்கும் பணிகளும் துரித கதியில் நடந்துவருகின்றன. இதுவரை சுமார் 10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 15.8.92-க்குள் முடிக்கப்படும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் நிதியாண்டில் ரூ.843.30 இலட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் எடுக்கப்பட்டு, இதுவரை 658 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1992-93-ஆம் நிதியாண்டில் ரூ.1,122 இலட்சம் மதிப்புள்ள வேலைகளை எடுத்துச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரமும் நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் குறித்து புதிதாகக் கோவை மாவட்டத்தில் கணக்கெடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 4,74,074 குடும்பங்களில் 1,83,871 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இது மொத்தக் குடும்பங்களில் 39 சதவிகிதமாகும். கணக்கெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து 1992-93- ஆம் நிதியாண்டில் உதவி செய்யவேண்டிய குடும்பங்களைத் தேர்வு செய்ய ஊராட்சி அளவிலான குழுக்கள் (Task Force) கூட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கென மத்திய அரசு மானியமாக முதல் தவணையாக ரூ.30.431 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1992-93-ஆம். நிதியாண்டில் 11,000 குடும்பங்களுக்கு ரூ.324 இலட்சம் மானிய உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (டிரைசம்)

இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் நிதியாண்டில் 1,348 நபர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டு அரசு ஒதுக்கீடும் கிடைத்துள்ளது. பயிற்சியளிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சாண எரிவாயுக் கலன்கள் அமைத்தல்

1991-92-ஆம் நிதியாண்டில் 1,020 கலன்கள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், குறியீட்டினை மிஞ்சி 1,247 கலன்கள் அமைக்கப் பட்டு, கோவை மாவட்டம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.

நடப்பு நிதியாண்டில் 1,200 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 57 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் 150 கலன்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தூளா (புகையில்லா அடுப்புகள் அமைத்தல்)

இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 6000-க்கு மேல் 8800 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 6000 அடுப்புகள் கிராமப் புறப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் (டோக்ரா)

இத்திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே 49 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு வகையான உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் 59 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கிடத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 328 பெண்களுக்கு ரூ.7.470 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் திட்டம்

சமூகக் காடுகள் திட்டம் கோவை மாவட்டத்தில் 1992-93-இல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம், ரூ. 28.380 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. 13,50,000 செடிகள் வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 'சிடா' நிறுவனத்தின் உதவியுடன் இந்த நிதியாண்டில் 21 கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 21 சமூகக்காடு விரிவு அலுவலர்கள், 105 ஊர்நல அலுவலர்கள், 1000 தொகுப்பு வீடுகள் பயனாளிகள் மற்றும் 20 காவலர்களுக்கு 22.7.92 முதல் ரூ.51,625 செலவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

1991-92-இல் திட்டப்பணிகள் சாதனை விவரம்

1. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

வ. எண்.	பணியின் விவரம்	சாதனை	மதிப்பீடு ரூ.லட்சத்தில்
1.	தொகுப்பு வீடுகள்	1980	306.250
2.	பள்ளிக் கட்டடங்கள்	78	107.640
3.	ஊராட்சிக் கட்டடங்கள்	19	13.300
4.	சத்துணவு மையங்கள்	72	50.400
5.	பாசனக் குட்டைகள்	112	109.300
6.	பாசனக் குளங்கள் மேம்படுத்துதல்	14	14.850
7.	சாலைகள்	181.02 கி.மீ	296.680
8.	ஊராட்சி வேலைகள்	1452	13.084
9.	சிறு பாலங்கள்	3	6.820
10.	சமூகக் காடுகள்	15.000 (450 எக்டேர்)	28.380

2.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை	9942	மானியம் ரூ.258.246 இலட்சம்
3.	கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி பெற்றவர்கள்	1470	ரூ.21.060 இலட்சம்
4.	சாண எரிவாயுக்கலன் அமைத்தல்	1247	இஃது மாநிலத்தில் முதலிடம்
5.	தூளாக்கள் அமைத்தல் எண்ணிக்கை	8800	ரூ.5.456 இலட்சம்.

சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு...

"சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத் தனியார் பள்ளிகளைவிட அதிகமாகச் சம்பளம் - அரசாங்க விகிதத்தில் வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் இருக்கும் வேலைப் பளுவும் இவர்களுக்கு இல்லை. ஆகையால், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் முழு மூச்சுடன் பணியாற்றி, தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடு பட வேண்டும்.

"மாநகராட்சிப் பள்ளிகளில் சுமார் [illegible] இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களுள் கூர்மையான அறிவுடைய மாணவர் களைப் பல சோதனைகள் நடத்தித் [illegible] அவர்களுக்கு மிகச் சிறந்த [illegible] வழிவகை செய்யப்படும். [illegible] துவர்கள் [illegible] மாணவர் [illegible] மூன்று நாட்கள் [illegible] செய்யப்படும்."

[illegible]

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்

ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும், பொதுமக்களை மாவட்ட வாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

20.7.92 அன்று, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலிருந்து வந்திருந்த 8000-க்கும் மேற்பட்ட பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களின் குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர் களுக்கு உத்தரவிட்டார்.

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 17 பேர்களுக்கு ரூ.2,39,250, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச் சைக்காக இருவருக்கு ரூ.40,000 மற்றும் முதி யோர் ஓய்வுத் தொகை 71 நபர்களுக்கும் ஆக மொத்தம் 90 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பர்கூர் தொகுதியிலுள்ள 69 சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க, சத்துணவுக் கூடங்கள் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.9,60,000-க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினார்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் தாம்பரம், கடப்பேரியைச் சேர்ந்த ராமசாமி என்பவரின் மகன் முருகன் என்ற பையன், தான் ஊனமுற்றவன் என்றும், தன்னால் நடக்க இயலாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தன்னை ஊனமுற்றோர் விடுதியில் தங்க வைத்துக் படிக்க உதவி செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 20.7.1992 அன்று தலைமைச் செயலகத்தில் மனுகொடுத்தார்.

அவருடைய மனுவில் வேண்டியுள்ள கோரிக் கையை உடனே செயல்படுத்துமாறு அதிகாரி களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை யிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட் டத்தில் உள்ள கூடுவாஞ்சேரியில் உள்ள அரசு மானியத்துடன் பிரபாவதி டிரஸ்டினால் நடத்தப் படும் ஊனமுற்றோருக்கான பள்ளியில், மனு கொடுத்த நாளான 20.7.1992 திங்கட்கிழமை யன்றே சேர்க்கப்பட்டு திரு. முருகன் அவர் களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சாம்ப சிவம் என்ற வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் தன்னை முதியோருக்கான இல்லத்தில் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர் களிடம் மனு கொடுத்தார். அம்மனுவைப் பரி வுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை உடனடியாகச் செயல்படுத்து மாறு உத்தரவிட்டதின் பேரில், திரு. சாம்பசிவம், சென்னை ஆந்திர மகிள சபா நடத்தும், முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

படமும் செய்தியும்

திருப்பதி செல்லும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்திறங்கிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, அவரது துணைவியார் திருமதி விமலா சர்மா ஆகியோரை, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் மாலை அணிவித்து அன்புடன் வரவேற்றனர் (27.7.92).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 27.7.92 அன்று, தலைமைச் செயலகத்தில் மின்னணுத் தொலைபேசி இணைப்பகத்தைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் இரத்தக்கசிவினால் பாதிக்கப் பட்ட செல்வி வசந்தாவுக்கு மருத்துவச் செலவிற்காக ரூ. ஒரு இலட்சத்திற்கான வைப்பு நிதிப் பத்திரத்தை வழங்கினார் (20.7.92).

அமெரிக்காவில் சிகிச்சை பெற்று, தாயகம் திரும்பிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை, விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர் (20.7.92).

போர்க்கால அடிப்படையில்:

கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள்

மிகப் பெரிய மலை!

சுரங்கப்பாதை கூடத் தெரிகிறது... துணிந்து உள்ளே செல்கிறோம்.

அங்கே நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்!

மேலே மேலே செல்கிறோம்.

இப்போது, 600 மீட்டர் வரை, போகலாம் என்கிறார் ஒருவர்.

அப்படியானால், இது எங்கே போகிறது? எதற்காக இந்தச் சுரங்கம்?

அது ஒரு கதை... உண்மைக் கதை!

பில்லூர் குடிநீர்த் திட்டம்

கோவை நகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது செல்வபுரம். இங்கு உள்ளதுதான் கட்டன் மலை. இந்த மலையில்தான் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

'நீரின்றி அமையாது' உலகு என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு மிக முக்கியமான திட்டம்தான், கோவை மாவட்டப் பில்லூர் குடிநீர்த் திட்டம்.

கோவை நகரிலிருந்து 70 கி.மீ. தூரத்தில் உள்ளது பில்லூர் அணை. பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை. இந்த நீரைக்கோவை மாவட்டத்திற்கு வழங்க, போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடந்து வருகின்றன.

பொதுவாக, சுரங்கப்பாதை விவசாயத்திற்கும், ரயில்பாதை அமைப்பதற்கும், மின் திட்டத்திற்கும்தான் அமைப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், குடிநீருக்காக மலையைக் குடைந்து சுரங்கப்பாதை அமைக்கப்படுவது, இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும். அதுவும் 4½ கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்படுவது என்பது, விந்தைக்குரிய செய்தியாகும்.

●●

கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதேபோல நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் கூடலூர் குடிநீர்த் திட்டமும் துரிதகதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

●●

உலக வங்கி உதவியுடன் ரூ.100 கோடி செலவில், இப்போது இந்தப் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக, இந்தச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருவதும், இதில் சுமார் 500 பேர் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

குடிநீர்ப் பஞ்சம் நீங்கிட...

கோவை குடிநீர் வழங்கும் திட்டம், உலக வங்கி உதவியுடன், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர்ச் சுரங்கங்கள், குடிநீர் வடிகால் வாரியத்திற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கட்டுமானம் செய்து தரப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கோவை, மதுக்கரை, செட்டிப்பாளையம், எட்டிமடை, ஒத்தக்கால் மண்டபம், திருமலையாம்பாளையம், வெள்ளலூர், பெரிய நாயக்கம்பாளையம், கூடலூர், துடியலூர் உட்பட பல பகுதிகளுக்குக் குடிநீர் கிடைக்கும் அதாவது, இத்திட்டம், கோவை மாவட்டத்தில் உள்ள 476 கிராமப் புறக் குடியிருப்புகள், 20 நகர்ப்புற ஊராட்சிகளுக்குக் குடிநீர் அளவினைக் கூடுதல் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் பல்லாண்டுக் காலமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. அதற்கு விடிவுகாலம் பிறந்து விட்டது. இந்த அரிய திட்டத்தின் மூலம் குடிநீர்ப் பஞ்சம் நீங்கி, மக்கள் குதூகலிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

கோவை குடிநீர்த் திட்டம், சிறுவாணியை ஆதாரமாகக் கொண்டு, 95,100 மக்கட்தொகைக்கு, நாளொன்றுக்கு 11.35 மில்லியன் லிட்டர் வீதம் 1927-இல் பணி தொடங்கப்பட்டது. இது 1931-இல் முடிக்கப்பட்டது. அதிகத் தேவையைப் பூர்த்தி செய்ய நாள் ஒன்றுக்கு 34.1 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க 1974-இல் வார்ப்பு இரும்புக் குழாய்கள் பதிப்பிக்கப்பட்டன.

வளரும் கோவை நகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, நாளொன்றுக்கு 101.4 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு, 12.47 இலட்சம் மக்கட்தொகையின் தேவையைப் பூரத்தி செய்ய 1982-இல் கோவைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

தற்போது பயனில் உள்ள இச் சிறுவாணி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கோவை உள்ளூர்ப் பகுதிகளுக்கு இடைக்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. எனவே தான், மேற்கண்ட புதிய திட்டம் உருவாகி, இப்போது துரிதகதியில் இயங்கி வருகிறது.

பில்லூர் அணையில்!.

கோம்பை மலை!

இங்கே 40 மீட்டர் ஆழமுள்ள ராட்சதக் கிணறு தோண்டப்பட்டு உள்ளது.

மின்சார இழுவை மூலம், கிணற்றுக்குள்ளே கொண்டு செல்லப் படுகிறோம்!

இருபுறமும் சுரங்கப்பாதை குடையப்படுவதை அங்கே பார்த்து வியக்கிறோம்.

இது 3,850 மீட்டர் நீளத்திற்குக் குடையப்பட்டு, பிறகு வெள்ளியங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் குழாய்ப் பாதைகள் மூலம் இணைக்கப்படும்.

கோம்பை மலையிலிருந்து, சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு 4½ கி.மீ. தூரமுள்ள கட்டன் மலைவரை பில்லூர் அணைப்பகுதியில், தண்ணீரைச் சுரங்கத்தின் வழியாகக் கொண்டு வரும் வேலை இப்போது மிகச் சுறுசுறுப்பாக, துரிதமாக நடைபெற்று வருகிறது.

1991-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இந்தப் பணிகள் தொடங்கின. 1993-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் கோவை நகர்க் குடிநீர்ப் பஞ்சம் தீரும்.

பில்லூர் அணை!

கடல் போன்று பரந்த நீர்ப் பரப்புள்ள பவானி ஆற்றின் பவனி கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

பில்லூர் அணையின் நீளம் 356.620 மீ. கொள்ளளவு 44.37 மில்லியன் கன மீட்டர் (1568 மில்லியன் கன அடி), நீர்ப்பிடிப்புப் பரப்பு 1503 சதுர கி.மீ. (460 சதுர மைல்).

இந்த அணையின் நீரோட்டப் பகுதியில் ராட்சத நீர் ஊற்றுக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. அதையொட்டிச் சிறுபாலம் ஒன்று க்கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கிணற்றிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீரை விசை நீரேற்றிகள் மூலம் அருகே அமைக்கப்பட்டு வரும் சுரங்கத்திற்குச் செலுத்தப்படும். அதாவது, நெல்லிமரத்தூரில் இந்தச் சுரங்கப்பாதை உள்ளது. இதுவே, மேற்கண்ட குடிநீர்த் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுவரும் சுரங்கப் பாதையின் தொடக்கமாகும்!

இப்படி நாலாபக்கமும், சுரங்கப்பாதை அமைக்கும் பணி, தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல், இரும்புக் குழாய்கள் பதித்தல் முதலான பணிகளும் திட்டமிட்டு, ஒரே சமயத்தில், ஒழுங்காக, துரிதமாக நடைபெற்று வருவதை இங்கே நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

சுத்திகரிப்பு நிலையங்கள்

வெள்ளியங்காடு!

இங்குதான், தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கான நிலையங்கள் வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன.

முதலில் தண்ணீரிலுள்ள வண்டல் மண் தெளிய வைக்கப்பட்டும். பிறகு, தண்ணீரில் மருந்து கலந்து தெளிய வைக்கப்படும்.

அதன்பிறகு, தண்ணீர் நன்கு தெளிய வைக்கப்படும்.

மூன்று கட்டங்களில் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு, பிறகு விநியோகிக்கப்படும்.

ஒருபுறம் பெரிய பெரிய இரும்புக் குழாய்கள் இருப்பதைப் பார்க்கிறோம்.

அந்தக் குழாய்களுக்கு உள்ளும் புறமும் சிமெண்ட் கலவை கருவி





கோவை மாவட்டம், நெல்லிமரத்தூரில், அமைந்துள்ள சுரங்கப் பாதையின் ஆரம்பம்.

மூலம் தெளிக்கப்படுகிறது. இதனால், இரும்பு துருப்பிடிக்கா வண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

அடுத்த கட்டத்தில், இந்தக் குழாய்கள் பூமியில் இறக்கப்பட்டு, இணைக்கப்படுகின்றன. அதாவது, குழாய்களை இணைத்துப் பற்ற வைக்கப்படுகிறது.

பிறகு இந்தக் குழாய்கள் கட்டன் மலையில் உள்ள குகைக்கு உந்தப்படும். தூய நீர் குகையிலிருந்து 1500 மி.மீ. விட்டமுள்ள சிமெண்ட் குழாய்கள் மற்றும் வெவ்வேறு விட்டமுள்ள கல்நார்க் குழாய்களில் புவிஈர்ப்புச் சக்தியின் மூலமாக, கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். கோவை மாநகராட்சிக்குத் தேவையான நீர், முக்கியக் குழாயிலிருந்து சக்திச்சாலையைக் கடக்குமிடத்தில் துணை முக்கியக் குழாய் மூலம் சிவானந்தபுரத்தில் கட்டப்படும் முக்கிய மேல் நிலைத் தொட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிறகு பகிர்ந்தளிக்கப்படும்.

உலக வங்கி பாராட்டு!

'தமிழ்நாட்டில் உலக வங்கி உதவி மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள், செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை உலக வங்கி பாராட்டி இருக்கிறது' என்று உலக வங்கித் திட்டத் தலைமைப் பொறியாளர் திரு. வி.ஆர். வைத்தியநாதன் அவர்கள், செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்

அவர்மேலும் கூறுகையில்-

தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் உலக வங்கி நிதி உதவியின் 2-வது தவணையின் மூலம் கோவை, சேலம் மாவட்டங்களுக்குக் குடிநீர்த் திட்டப் பணிகளை மேம்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் கோவை மாவட்டத்தில் 500 கிராமங்களும், சேலம் மாவட்டத்தில் 260 கிராமங்களும் குடிநீர் வசதி பெறும்.

இந்தப் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் உலக வங்கியின் மூலம் ரூ.322 கோடி செலவில் நிறைவேற்றப்படும். உலக வங்கி குடிநீர்த் தட்டுப்பாடுள்ள இடங்களுக்குக் குடிநீர் வழங்க 2-வது தவணையாக இந்தத் தொகையைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் பொள்ளாச்சி, திருவண்ணார் மலை, காஞ்சிபுரம், சங்கரன்கோயில், புதுக்கோட்டை, மணப்பாறை ஆகிய நகரங்களுக்கும் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1985-இல் உலக வங்கியிடமிருந்து முதல் தவணையாகப் பெற்ற ரூ.142 கோடி நிதியிலிருந்து மாநிலத்தில் 44 நகரங்களுக்குக் குடிநீர் வசதியை விரிவாக்கியதுடன் கோவை, மதுரை, சேலம் நகரங்களின் குடிநீர்த் திட்டப்பணிகள் மேம்படுத்தப்பட்டன. இந்த நிதியிலிருந்து ஒரு சிறு தொகை குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக வங்கயிடமிருந்து பெற்ற நிதியுதவியில் கணிசமான தொகையைச் சேமிக்க முடிந்தது.

தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளைப் பார்வையிட்டு திருப்தி வெளியிட்ட பிறகு, உலக வங்கி கூடுதலாக நிதியுதவியைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது.

நிர்வாக வழிமுறைகளை எளிதாக்கியதன் மூலம் 6.50 கோடி மதிப்பீட்டிலான ஒப்பந்தப் புள்ளி

ரூ.100 கோடி செலவில் சுரங்கம் மூலம் கோவைக்குக் குடிநீர்! 20 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்!

களை 6 மாதங்களுக்குள்ளாகவே முடிவு செய்ய முடிந்தது.

கணிப்பொறிகளை (Computer) பயன்படுத்தியதன் மூலம் கணிசமான நேரமும் பணமும் மிச்சப்படுத்தியதுடன், பணியின் முன்னேற்றங்களையும் உடனுக்குடன் கண்காணிக்க முடிந்தது.

கோவை, மதுரை, சேலம் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் குழாய்களில் சேதம் ஏற்பட்டு தண்ணீர்க் கசிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒரு புதிய திட்டத்தை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வாரியம் திட்டமிட்டிருக்கிறது. 'வாப்கோஸ்' (WAPCOS) என்ற மைய அரசு நிறுவனத்துடன் இணைந்து இந்த நீர்க் கசிவு கண்டுபிடிக்கும் பணி செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 30 முதல் 40 சதவிகிதம் வரை குழாய்க் கசிவு காரணமாக வீணாகும் தண்ணீர் சேமிக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, மாநகராட்சி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அங்கு வாழும் மக்களின் சமுக, பொருளாதார நிலையின் அடிப்படையில் தண்ணீர் வரி வசூல் செய்யப்படும். இந்தப் புதிய வரி வசூல் திட்டத்தின் மூலம் குறைந்த வருவாய் உடைய மக்களிடம் குறைவான வரி வசூல் செய்வதுடன், மாநகராட்சிக்குக் குடி நீர் வரி மூலம் நிறைவு நிதி கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

நீலகிரி மாவட்டத்தில்...

இயற்கையன்னை களிநடம் புரியும் ஊட்டி!

விண்ணைத் தொடும் நெடிய மரங்கள். கண்ணைக் கவரும் பன்னிற மலர்கள். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலன பசுமைக் கூட்டங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக குளுமை தவழும் சூழ்நிலை.

இங்கிருந்து, பார்சன் பள்ளத்தாக்கு நீர்த்தேக்கத்துக்குச் செல்கிறோம்.

ரூ.7½ கோடிச் செலவில், ஊட்டிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுவதை நேரில் பார்க்கிறோம்.

இப்போது இதன் விரிவாக்கப் பணி நடக்கிறது. தற்போது 10 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. பிறகு, 30 இலட்சம் காலன் தண்ணீர் விடப்படும். இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டபின், ஊட்டிக்குத் தண்ணீர்ப் பஞ்சமே இருக்காது. இங்கும், தற்போது ஒரு தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் துரிதமாகக் கட்டப்பட்டு வருகிறது.

கூடலூரில்...

ஊட்டியிலிருந்து நேரே கூடலூருக்குச் செல்கிறோம்.



கோவை மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; கட்டன் மலையில் சுரங்கப் பாதை.



பவானி ஆற்றின் குறுக்கில் கட்டப்பட்டுள்ள பில்லூர் அணை.

இங்கே, கூடலூர் குடிநீர் துணைத் திட்டம் செயல்படுவதை நேரில் பார்க்கிறோம்.

கூடலூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில், ஹெலன் நீரோடையின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

அந்த இடத்திற்குப்போக வேண்டும்.. காடு முரடான பாதை... அதுவும் ஒற்றையடிப் பாதை... ஜீப்பில் போய்ச் சேருவதற்குள் போகும் போதும் என்றாகி விடுகிறது.

ஒரு அரை நாள், அங்கு நாம் போய் வரச் சலித்துக் கொள்கிறோம்.

ஆனால், மக்களுக்குக் குடிநீர் தடை இல்லாமல் வழங்க வேண்டும் என்னும் நோக்கில், முதலில் அந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான ஆக்கப் பணிகளைச் செய்து வரும் அரசையும், அரசு ஊழியர்களையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

உலகில் அதிகமாக மழை பெய்யும் சிரபுஞ்சிக்கு அடுத்தபடியாக,

இரும்புக் குழாய்கள் துருப்பிடிக்கா வண்ணம் அதன் மீது, சிமெண்ட் கலவை தெளிக்கப்படுகிறது.





வெள்ளியங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையம்.

கூடலூரைச் சொல்லுகிறார்கள். ஆம். இங்கு மார்ச், ஏப்ரல் தவிர ஆண்டு முழுவதும் மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த வளமான பூமியில் காபி, தேயிலை, மற்றும் ஏலம், கிராம்பு, மிளகு முதலான வாசனைத் திரவியங்கள் விளைகின்றன.

கூடலூருக்குக் குடிநீர்

கூடலூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு பேரூராட்சியாகும். 1981-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, பேரூராட்சியின் மக்கட்தொகை 21,983 ஆகும். தற்போது பேரூராட்சியின் அருகில் ஓடும் நான்கு ஓடைகளை நீர்மூலமாகக் கொண்டு, நீரேற்றிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வழங்கப்பட்டு வரும் தண்ணீர் மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. மேலும் கோடை காலங்களில் நீரோடைகள் வறண்டு விடுகின்றன. எனவே, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் தமிழ்நாடு அரசு ரூ.281.15 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் மேற்கண்ட இத்துணைத் திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான தண்ணீர் பாண்டியாறு ஆற்றின் குறுக்கே 26 மீ நீளமும், 2 மீ. உயரமும் கொண்ட ஒரு சிற்றணை கட்டி, அதிலிருந்து நீர் எடுக்கப்பட உள்து. நாளொன்றிற்கு 2.87 மில்லியன் லிட்டர் இயல்பு நீர், 2.60 கி.மீ. நீளத்திற்கு வெவ்வேறு அளவுகளுள்ள வார்ப்பிரும்புக் குழாய்களின் மூலம் புவி ஈர்ப்புச் சக்தியினால் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீர் புவிஈர்ப்புச் சக்தியால் 17.34 கி.மீ. நீளத்திற்குப் பல்வேறு அளவுகளுள்ள இரும்பு, வார்ப்பு மற்றும் கலாய்க் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்குத் தேவையான நீர், முக்கியக் குழாய்களிலிருந்து வெவ்வேறு இடங்களில் 6 துணை முக்கியக் குழாய்கள் மூலமாக நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்பு பகிர்மானக் குழாய்கள் மூலமாக, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவியுடன் செலவாகும் தொகையை, கூடலூர் பேரூராட்சி 25 சதவிகிதம் கடனாகவும், 75 சதவிகிதம் மானியமாகவும் ஏற்கிறது.

இப்போது இந்தத் திட்டம் முடிவுறும் தறுவாயில் உள்ளது.

குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை

இவ்வாறு, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கோடை காலத்திலும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படா வண்ணம், அரசு பல நீர் ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆயத்தப் பணிகள் அனைத்தையும் ஒழுங்காகவும், அதே சமயத்தில் துரிதமாகவும் செய்து வருகிறது.

எதிர்காலத்தில் குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை உருவாகிட, எல்லா வகையிலும் அரசு அரும்பணியாற்றி வருகிறது என்றால், அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

–பி.வி. கிரி.

ஹெலன் நீரோடையின் குறுக்கே உள்ள தடுப்பணை.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

சேலம் மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக் கணக்கான பொதுமக்களிடமிருந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.5.92 அன்று மனுக்களைப் பெற்று அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்தார். அன்று மனு கொடுத்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 520 நபர்களைத் தேர்ந்தெடுத்து, 27.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சேலத்திலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 40 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 10 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவி 51 பெண்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதி உதவி 7 நபர்களுக்கும், கலப்புத் திருமண நிதி உதவி 15 நபர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 3 பேர்களுக்கும், கடும் உடல் ஊனமுற்றோர் பராமரிப்புத் தொகை ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 168 நபர்களுக்கு ரூ.11.41 இலட்சம் மானியத்துடன் இணைந்த கடனும், லாரி வாங்க 3 பேர்களுக்கு ரூ.13.24 இலட்சம் மானியத்துடன் இணைந்த கடனும், உடல் ஊனமுற்றோர் 15 பேர்களுக்கு வங்கி மூலம் நிதி உதவியும், உழவு மாடுகள் வாங்க 5 பேர்களுக்கும், ஆட்டோ ரிக்ஷா வாங்க ஒருவருக்கும், காலணி தயாரிக்க ஒருவருக்கும், ஆயில் மில் நிறுவனக் கடன் ஒருவருக்கும், பாய்த்தொழில் செய்ய ஒருவருக்கும், புத்தகப் பைண்டிங் தொழில் செய்ய ஒருவருக்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், வீட்டுமனைப் பட்டா 30 பேர்களுக்கும், நிலப்பட்டா 5 பேர்களுக்கும், முன்னாள் இராணுவத்தினர் மகள் திருமண நிதி உதவி 2 நபர்களுக்கும், நலிந்தோர் நல நிதி உதவி 10 நபர்களுக்கும், பட்டு வளர்ச்சிக் கடனுதவி 10 நபர்களுக்கும், கதர் கிராமத் தொழில் நிதி உதவி 20 பேர்களுக்கும், இருதயச் சிகிச்சைக்காக முதல்வர் நிவாரண நிதி உதவி ஒருவருக்கும், விதவைகள் உதவித்தொகை 5 நபர்களுக்கும், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், உடல் ஊனமுற்றோர் 20 பேர்களுக்குச் சக்கர வண்டிகளும், காதொலிக் கருவிகள் 5 பேர்களுக்கும், முடநீக்கியல் சாதனம் (காலிபர்) 12 பேர்களுக்கும் சக்கர நாற்காலி ஒருவருக்கும், விதவைகளின் குழந்தைகள் 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், ஏழை மாணவர்கள் 10 பேர்களுக்குப் பாடப் புத்தகங்களும், நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 50 பேர்களுக்குக் கடனுதவியும் வமங்கப்பட்டன.

மொத்தம் 520 நபர்களுக்கு ரூ.41.994 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அன்று நலத்திட்ட உதவிகள் பெற்ற 520 நபர்களில் 345 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 9 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6 ஆண் குழந்தைகளுக்கு இராமச்சந்திரன், ராஜராஜன், வெற்றிவேந்தன், சக்கரவர்த்தி, கார்த்திகேயன், நரசிம்மன் என்றும், 3 பெண் குழந்தைகளுக்கு இராஜலட்சுமி, விஜயலட்சுமி, மகாலட்சுமி என்றும் பெயர் சூட்டினார்.

ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா நடைபெறும் மான்ஜூயிக் ஸ்டேடியம்.

ஒலிம்பிக் போட்டி

உலகில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியது, சிறப்பு வாய்ந்தது, ஒலிம்பிக் போட்டி ஆகும். இந்த ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமான 1896-ஆம் ஆண்டு முதல் இதுவரை 21 போட்டிகள், உலகின் பல்வேறு இடங்களில் நடந்தன. மூன்று ஒலிம்பிக் போட்டிகள் உலகப் போரின் காரணமாக கைவிடப்பட்டன. 25-வது ஒலிம்பிக் போட்டி தற்சமயம் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனாவில் நடைபெற்று வருகிறது.

இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நடந்த ஆண்டும், இடமும்:

முதலாவது ஒலிம்பிக் போட்டி : 1896 - கிரீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரம்.

2-வது போட்டி : 1900 - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

3-வது போட்டி : 1904 - அமெரிக்காவிலுள்ள செயிண்ட் லூயிஸ்.

4-வது போட்டி : 1908 - இங்கிலாந்திலுள்ள இலண்டன் நகரம்.

5-வது போட்டி : 1912 - ஸ்வீடன் நாட்டிலுள்ள ஸ்டாக் ஹோம் நகரம்.

6-வது போட்டி : முதலாவது உலகப்போர் மூண்டதையொட்டி போட்டிகள் ரத்து செய்யப்பட்டன.

7-வது போட்டி : 1920 - பெல்ஜியம் நாட்டிலுள்ள ஆண்ட் வெர்ப் நகரம்.

8-வது போட்டி : 1924 - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

9-வது போட்டி : 1928 - நெதர்லாந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரம்.

10-வது போட்டி : 1932 - அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சலஸ் நகரம்.

11-வது போட்டி : 1936 - ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரம்.

12-வது போட்டி, 13-வது போட்டி: 1940-இல் நடக்கவிருந்த 12-வது போட்டியும், 1944-இல் நடக்கவிருந்த 13-வது ஒலிம்பிக் போட்டியும் இரண்டாவது உலகப் போர் காரணமாக கைவிடப்பட்டன.

14-வது போட்டி : 1948 - இங்கிலாந்தி

லுள்ள இலண்டன் நகரம்.

15-வது போட்டி : 1952 - பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி நகரம்.

16-வது போட்டி : 1956 - ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள மெல்போர்ன் நகரம்.

17-வது போட்டி : 1960 - இத்தாலி நாட்டி லுள்ள ரோம் நகரம்.

18-வது போட்டி : 1964 - ஜப்பான் நாட்டி லுள்ள டோக்கியோ நகரம்.

19-வது போட்டி : 1968 - மெக்சிகோ நாட்டிலுள்ள மெக்சிகோ நகரம்.

20-வது போட்டி : 1972 - ஜெர்மனி நாட்டி லுள்ள மூனிச் நகரம்.

21-வது போட்டி : 1976 கனடா நாட்டி லுள்ள மாண்ட்ரீல் நகரம்.

22-வது போட்டி : 1980 ரஷ்யா நாட்டி லுள்ள மாஸ்கோ நகரம்.

23-வது போட்டி : 1984 - அமெரிக்காவி லுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம்.

24-வது போட்டி : 1988 - தென் கொரியா விலுள்ள சியோல் நகரம்.

25-வது ஒலிம்பிக் போட்டி ஸ்பெயின் நாட்டி லுள்ள பார்சிலோனா நகரில் 25.7.1992 முதல் நடைபெற்று வருகிறது. 172 நாடுகளைச் சேர்ந்த பதினாறாயிரம் வீரர்கள், வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்கிறார்கள். ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் அதிக நாடுகள் பங்கு பெறு வதும், அதிக எண்ணிக்கையில் வீரர்கள், வீராங் கனைகள் பங்கு பெறுவதும் இந்த 25-வது ஒலிம்பிக் போட்டியில்தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

32 ஆண்டுகளுக்குப் பிறகு தென்னாப்பிரிக்கா இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெறு வது குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 25 விளையாட்டுப்போட்டிகள் இடம் பெறுகின்றன. இவற்றில் இந்தியா மொத்தம் 12 விளையாட்டுகளில் பங்கு பெறுகிறது. அவை யாவன: ஹாக்கி, ஜூடோ, வில்வித்தை, பளு தூக்குதல், மல்யுத்தம், பாய்மரப் படகுப்போட்டி, அத்லெட்டிக்ஸ், துப்பாக்கி சுடுதல், டேபிள் டென்னிஸ், டென்னிஸ், இறகு பந்து மற்றும் குத்துச்சண்டை.

Barcelona '92

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி - 1992

★ இதற்கு முன்னர் கடந்த ஒலிம்பிக் போட்டிகளுடன் ஒப்பிடும் போது, இப்போது நடைபெறும் பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி பல சிறப்பு அம் சங்களைப் பெற்றுள்ளது.

★ மிக அதிக அளவில் 257 பதக்கங்கள் இந்த ஒலிம்பிக் போட்டி யின்போது வழங்கப்படுகின்றன. இது 1988-இல் சியோலில் வழங்கப் பட்ட பதக்கங்களைக் காட்டிலும் 15 கூடுதலாகும்.

★ ஒலிம்பிக் போட்டி வரலாற்றி லேயே முதன் முறையாக இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் போட் டியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் ஒலிம்பிக் குழுவின் விருந்தினர்களாக நடத்தப்படு கிறார்கள்.

★ இதுவரை நடைபெற்ற எந்த ஒலிம்பிக் போட்டியின்போதும் இல்லாத அளவுக்கு இந்த பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி யின் போது, அதிக அளவில் தொலைக்காட்சி வருமானம் கிடைக்கு மெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1960-இல் ரோம் நகரில் நடை பெற்ற ஒலிம்பிக் போட்டியை முதன் முதலாகத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பியபோது 21 ஐரோப்பிய நகரங்களிலிருந்து சுமார் 400 மில்லியன் மக்கள் போட்டியைக் கண்டுகளித்தனர். 1988-இல் நடைபெற்ற சியோல் ஒலிம்பிக் போட்டியை, 150 நாடுகளிலிருந்து சுமார் 3 மில்லியன் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். 1992 ஒலிம்பிக் போட்டியை, 170 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3.5 மில்லியன் மக்கள் பார்க்கக் கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

★ புறக்கணிப்பு இன்றி அநேகமாக அனைத்து நாடுகளும் பங்குகொள் ளும் ஒரே ஒலிம்பிக் போட்டி 1992 போட்டிதான் என்பது குறிப்பிடத் தக்கது.

அறிவுச் சுடா

நம் நாட்டில் இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கும் மிகப் பழமையான செய்தித் தாள் எது?

'பாம்பே சமாச்சார்'

மிக அதிகத் தடவை ஆஸ்கர் விருது பெற்றவர் யார்?

வால்ட் டிஸ்னி. 35 முறை விருது பெற்றவர்.

உலகிலேயே தேயிலையை அதிக அளவு உற்பத்தி செய்வதும், பயன் படுத்துவதும், ஏற்றுமதி செய்வதும் எந்த நாடு?

இந்தியா.

பியானோவைக் கண்டுபிடித்த நாடு எது?

இத்தாலி.

வில்லியம் சேக்ஸ்பியர் எழுதிய கடைசி நாவல் எது?

'தி டெம்பஸ்ட்'.

கிரிக்கெட் மட்டைகள் எந்த மரத் திலிருந்து தயார் செய்யப்படுகின்றன?

வில்லோ மரத்திலிருந்து.

1968-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெற்றன?

மெக்ஸிகோவில்.

கிரிக்கெட்டில் பத்தாயிரம் ஓட்டங் களைக் குவித்து உலக சாதனை படைத் தவர் யார்?

சுனில் கவாஸ்கர்.

மிகச் பெரிய பறவை எது?

நெருப்புக் கோழி

பின்நோக்கிப் பறக்கும் திறன் கொண்ட ஒரே பறவை எது?

தேன்சிட்டு.

1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கட் தொகை எவ்வளவு?

84.39 கோடி

மதுரை செ. மதுக்குமார்

மாணவர் பக்கம

கூட்டுறவால் கோடி இன்பம்!

ஏழுவண்ணம் இணைந்தகொடி ஒன்று ஒன்று
இணையில்லாத கூட்டுறவாம் நன்று நன்று
ஏழைவாழ்வில் ஏற்றும் ஒளி இன்று இன்று
ஈடில்லாத உயர்வுதரும் என்று என்று
பல்வழியும் கைகொடுக்கும் நின்று நின்று
பாமரரும் பயன்பெறலாம் சென்று சென்று
நிழல்கொடுக்கும் ஆலமரக் கன்று கன்று
நெருங்கி வந்தால் துயர் துடைக்கும் வென்று வென்று
தேன்கூடு ஒப்புமையாம் கண்டு கண்டு
தெவிட்டாத தேனமுதைக் கொண்டு கொண்டு
ஒருவர் நலம் பலர் உழைப்பில் உண்டு உண்டு
பலரும் வாழ ஒருவர் துணை தண்டு தண்டு
கொடுப்பதுவும் கொள்வதுவும் அண்ணே அண்ணே
கொள்கையிது என்றறிவீர் முன்னே முன்னே
கொண்டகடன் தீர்த்துவிட்டால் பின்னே பின்னே
கோடியின்பம் கொள்வதுதான் என்னே என்னே
வேற்றுமையில் ஒற்றுமையாம் கண்ணே கண்ணே!

- முத்துராசு.

பொன்மொழிகள்

அறிவாளி தேர்வு செய்வது அடக்கத்தைத் தான். கனிகளைச் சுமந்திருக்கும் மரக்கிளை, பூமியை நோக்கித் தானே தன் தலையைத் தாழ்த்து கிறது.

- பேகன்

சந்தர்ப்பம் தானாக வரக்கூடியது அல்ல; மனிதன்தான் அதனைத் தானாக உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும்.

- பெர்னாட்ஷா

நேற்றைய நாளை எண்ணிக் கவலை வேண்டாம், இன்றைய நாள் தருவதை அனுபவி யுங்கள்; நாளைக்காகத் திட்டம் தீட்டுங்கள், அதுவே உங்கள் நாள்!

- லாங்ஃபெல்லோ

பத்து ஆசிரியர் ஒரு குருவுக்குச் சமம், நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம், ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்.

- மனுநீதி

துளிகள்

வனத்துறை அலுவலர்களுக்கு முதல்வர் நிதி உதவி

தமிழகக் கேரள எல்லையில் குமிளிக்கு அருகாமையிலுள்ள அமராவதி குளம் என்ற இடத்தில் தமிழக வனத்துறையினரால் உருவாக்கப் பட்டிருந்த தேக்கு மற்றும் இலவ மரத் தோப்பு களை அழித்து, வனத்துறைக்குச் சொந்தமான, பாதுகாக்கப்பட்ட நிலம் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது.

1.7.1992 அன்று தமிழக வனத்துறையினர், இந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகச் சென்ற போது, வனத்துறை அலுவலர்கள் மீது 100 பேர் கொண்ட ஆக்கிரமிப்பாளர் கும்பல் ஒன்று நாட்டுத்துப்பாக்கியால் சுட்டது. இதில் வனக் காவலர் திரு. பாலகிருஷ்ணன், படுகாயமடைந்து மரணமடைந்தார். அந்தச் சம்பவத்தின்போது, மற்றொரு வனக் காப்பாளர் ஒருவர் படுகாய முற்று மதுரை பொது மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டிருக்கிறார். அதேபோல வன அலு வலர்கள் 5 பேர் இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்து உள்ளனர்.

மரணமடைந்த வனக்காவலர் திரு. பால கிருஷ்ணன் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதி யிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். அதேபோல, படுகாயம் அடைந்து மதுரை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வனக்காப்பாளருக்கு ரூ.50,000-மும், காயமடைந்த 5 வன அலுவலர் களுக்குத் தலா ரூ.5,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

வாசனைத் திரவியம் ஏற்றுமதியில் சாதனை!

நமது நாட்டின் வாசனைத் திரவியம் ஏற்று மதியில் புதிய சாதனையாகச் சென்ற ஆண்டில் (1991-92-இல்) ரூ.364.02 கோடி மதிப்புள்ள 1,30,567 டன் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூபாய் மதிப்பில் 50 சதவிகிதமும், ஏற்றுமதி அளவில் 19 சதவிகிதமும் அதிகமாகும். சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.300 கோடி மதிப்புள்ள 1,15,000 டன் வாசனைத் திரவியங்கள் ஆகும்.

வாசனைத் திரவிய ஏற்றுமதியில் உலக அளவில் சென்ற ஆண்டு இந்தியாவின் பங்கு 33 சதவிகிதமாகும்.

நடப்பு ஆண்டில் (1992-93) ரூ.426 கோடி மதிப்புள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி

• கடந்த நிதியாண்டில் ரூ.1,118.44 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளித் துணிகள் இந்தியா விலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் ஏற்றுமதியான ரூ.841.13 கோடியை விட 41 சதவிகிதம் அதிகமாகும். அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளுமே பெரு மளவில் கைத்தறித் துணிகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. ஏற்றுமதியை ஊக்கு விக்கக் கைத்தறி வளர்ச்சி ஆணையகம் பல புதிய டிசைன்களை அறிமுகப்படுத்த முயற்சி எடுத்து வருகிறது.

வறுமைக் கோடு

தனிநபர் மாதச் செலவு அடிப்படையில் வறுமைக்கோடு கணக்கிடப்படுகிறது. இது கிராமப் புறங்களில் 49 ரூபாய் 9 காசாகவும், நகர்ப் புறங்களில் 56 ரூபாய் 64 காசாகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 1981-88-ஆம் ஆண்டு கணக்குப் படி வறுமைக் கோட்டக்குக் கீழே 23 கோடியே 76 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். இது மொத்த மக்கள் தொகையில் சுமார் 30 சதவிகித மாகும். இதில் 19 கோடியே 59 இலட்சம் பேர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்.

நமது நாட்டில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் தான் அதிகபட்சமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கிறார்கள். இங்கு சுமார் 4 கோடியே 48 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிக் கிறார்கள்.

வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு



வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஒரு இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (துணை வேலைவாய்ப்பு அலுவல கங்கள் மற்றும் சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உட்பட) இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்புகளையும், வேலை தேடுவோரையும் இணைக்கும் பணியை வேலைவாய்ப்பு அலுவல கங்கள் புரிந்து வருகின்றன. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஒவ் வொரு வருவாய் மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு அரசு தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் பொறியி யலைச் சார்ந்த பிரிவுகளும், பொறி யியலைச் சாராத தொழில் பிரிவு களும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேலைவாய்ப்புப் பிரிவு

கீழ்க்காணும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக் கெனச் சொந்தக் கட்டடம் கட்டு வதற்கு ரூ.77.24 இலட்சம் தொகைக்கு அனுமதி வழங்கப் பட்டது.

கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, மதுரை. மேற்காணும் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகப் புதிய கட்டடம் ரூ.23.75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுத் திறப்பு விழா 15.5.92 அன்று கோவையில் மாண்புமிகு

தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள், வேலைவாய்ப்பற்றோர்க்கான நிவாரணம் போன்ற பணிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சாதனைபடைத்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கெனக் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன. ஏனைய வேலைவாய்ப்பு அலுவல கங்களின் கட்டுமானப் பணி 1992-93-ஆம் நிதியாண்டில் முடியு மென எதிர்பார்க்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோரின் கல்வித் தகுதிக்கேற்ப அவர்களைப் பணியில மர்த்தும் பணியினைக் கவனிப்பதற் காக, ஏற்கெனவே உள்ள 9 சிறப்புப் பிரிவுகளைத் தவிர, கீழ்க்காணும் 4 இடங்களில் உடல் ஊனமுற்றோருக் கான சிறப்புப் பிரிவுகள் அரசால் துவக்கப்பட்டன.

வேலூர், ஈரோடு, உதக மண்டலம், தூத்துக்குடி. விலை மதிப்பீட்டுக் கணக்கு மற்றும் மேலாண்மைத் துறையில் வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆகிய வற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ.-இல் 5 ஆதி திராவிட இன மாணவர்களுக்கு இத் துறையின் மூலம் பயிற்சி அளிக்கப் பட்டது. ஐ.டி.ஐ. மற்றும் என்.எ.சி. சான்றிதழ் பெற்ற ஆதிதிராவிடர் இன வேலையற்ற மாணவர்களுக்குத் தொழிற் சாலைகளில் உரிய பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், மத்திய அரசு, வங்கிகள், இரயில்வே ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற ஆதிதிரா விடர்களில் இதுவரை 4,228 பேர் களுக்குத் தகுந்த முன்னோடிப் பயிற்சி அளித்து அவர்கள் அந்தந்த வேலைக்கான போட்டித் தேர்வு களில் தேர்ச்சிபெற வகை செய்யப் பட்டது.

மைய அரசு உதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலு வலகப் பணிகளைக் கம்ப்யூட்டர் மூலம் செய்யும் திட்டம் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் அடையாறு, அண்ணாநகர், கோயம்புத்தூர், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ.13.65 இலட்சமும், மைய அரசு ரூ.3.68 இலட்சமும் வழங்கியுள்ளன. அடையாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அனைத்துப் பணிகளும் கம்ப்யூட்டர் மூலம் செய்யப்படுகிறது. அண்ணா நகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் அனைத்துப் பணி களும் படிப்படியாகக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் துவங்கப்பட்டுள்ளது கோவை மற்றும் திருச்சி மாவட்ட

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், அவ்வலுவலகப் பணிகள் அனைத்தும் படிப்படியாக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் தொடங்கப்படும். மேலும் மதுரை, வேலூர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை, மதுரை, சென்னையிலுள்ள தொழிற் நுட்ப அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கம்ப்யூட்டர் மயமாக்க அரசு ரூ.4.96 இலட்சம் வழங்கியுள்ளது. தவிரவும், மைய அரசு ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் 1992-இல் இத்துறை சம்பந்தப்பட்ட ஒரு அரங்கு அமைக்க அரசு ரூ.40,000-க்கு ஒப்புதல் வழங்கியது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சம்பந்தமாக மிக அழகான அரங்கு ஒன்று 1,000 சதுர அடியில் அமைக்கப்பட்டது. 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சி 6.1.92 முதல் 9.4.92 வரை நடைபெற்றது. இத்துறையின் அரங்கில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை விவரிக்கும்படியான விளக்கப் படங்கள், சுவரொட்டிகள், புகைப் படங்கள், மற்ற கவர்ச்சியான தளவாடங்களும் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

16.6.91 முதல் 11.6.92 வரையிலான காலக் கட்டத்தில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் (5 ஆண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருந்து உரிய வயது மற்றும் இதர தகுதிக்கு உட்பட்டவர்கள்) எனத் தெரிந்தெடுக்கப்பட்ட 1,33,338 நபர்களுக்கு (பட்டதாரிகள்-9,946, பி.யூ.சி./பிளஸ்-2 - 46,768 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. - 76,624) வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகையாக ரூ.9,19,60,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் இதர தகுதிக்குட்பட்ட 1,124 பார்வை அற்ற நபர்களுக்கு ரூ.12,72,950 வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-க்குரிய காலத்தில் தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட 29,661 மனுதாரர்களில் 10,655 பணியிடங்கள் பெண்களால் நிரப்பப்பட்டுள்ளன. இது 30 சதவிகிதத்திற்கும் மேற்பட்டதாகும். மேலும் இந்தக் காலத்தில் மொத்தம் 1,104 உடல் ஊனமுற்ற நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பயிற்சிப் பிரிவு

தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த தென்காசி மற்றும் அம்பாசமுத்திரத்திலுள்ள கிராமிய அடிப்படைச் சேவை நிலையங்கள் (Rural Basic Service Centre) இத்துறைக்கு மாற்றப்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களாக உயர்த்தப்பட்டன.

அம்பத்தூரில் உணவகம் மற்றும் உணவு தயாரித்தல் (Hotel and Catering Trade) பிரிவுடன் அடிப்படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) தொடங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கோவையில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு 1991-92-ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

சேலம் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விடுதி கட்டும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினருக்கு மதுரை மற்றும் கோவையில் பிளாஸ்டிக் புராசசிங் (Plastic Processing Trade) பிரிவு ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிண்டியில் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில் இரசாயனப் பிரிவிற்காக (Chemical Trades) அடிப்படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரக்கோணம், தேனி, தாராபுரம், நாகர்கோவிலில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கவும், இந்நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் கூடுதல் பணிமனை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு தொழிற் பிரிவுடன் கூடிய 72 இருக்கைகள் கொண்ட பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றினை மதுரையில் ஆரம்பிக்கவும், அதற்குப் புதிய கட்டடம் கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டத்தின் கீழ் (Evening Class Scheme for Industrial Workers) இந்த ஓராண்டில் 1,925 தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

டிரைசம் (Training of Rural Youth for Self Employment) திட்டத்தின் கீழ் 374 கிராமப்புற இளைஞர்கள் தொழில் நுணுக்கத்தையும், தாமே சுயமாக வேலைவாய்ப்பினைப் பெறக் கூடிய திறமையினையும் பெற்றுள்ளனர்.

'தாட்கோ' (TAHDCO) திட்டம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வோராண்டில் 101 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Nehru Rozgar Yojana Scheme) 488 நகர்ப்புற வேலைவாய்ப்பற்ற ஏழை இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ●

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை: இந்தியாவின் 9-வது குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்ற டாக்டர். சங்கர் தயாள் சர்மா அவர்கள் (25.7.92)

நான்காம் அட்டை: தென்னிந்தியத் திரைப் பட வர்த்தக சபை அளித்த மாபெரும் பாராட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (25.7.92)

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தென்னிந்திய

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி [illegible]
ஆயத்த ஆ[illegible]
கதர் பாலி[illegible]
பாப்[illegible]
மற்றும் [illegible]

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

இந்த இதழில்...

வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ... 2
வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மின்கலப் பேருந்து ... 8
கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 9
படமும் செய்தியும் ... 10
'வெள்ளையனே வெளியேறு'— வீர வரலாறு ... 12
தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 16
இருபது அம்சத் திட்டம்— இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதலிடம்! ... 17
நூல் நயம் ... 18
நெஞ்சையள்ளும் குற்றாலம் ... 19
சரித்திரத்தில் பொறி பறந்த நேரம்! (கவிதை) ... 23
மானிடவியல் படிமங்கள் ... 24
வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள் .. 27
தோட்டக்கலைத் துறையின் சாதனைகள் ... 31
காந்திய நெறியில் கலைவாணர் ... 33
பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 39
அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள் ... 42
மாவீரன் பகத்சிங் ... 46

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் -
மலர்:23 இதழ்:4
16-8-1992

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

''வெள்ளையனே வெளியேறு'' இயக்கப் பொன் விழா நிகழ்ச்சியில், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். (9.8.1992).

நான்காம் அட்டை:

குற்றால அருவியின் எழில்மிகு தோற்றம்.

‘வெள்ளையனே வெளியேறு’

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7,8 ஆகிய இரு நாட்களும் பம்பாயில் நடைபெற்றது. மகாத்மா காந்தியடிகளும், நேரு, படேல் போன்றவர்களும் கலந்துகொண்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாகத் தீரர் சத்தியமூர்த்தி, காமராசர் போன்ற பலரும் பங்கேற்றனர்.

இதற்கு முன்பாக - வார்தாவில் ஜூலை 6-ஆம் நாள் கூடிய கூட்டத்திலேயே வெள்ளையர்களை ‘இந்தியாவை விட்டு வெளியேறு’ (Quit India Movement) என ஆணையிடும் இயக்கத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது.

எனினும் - இந்த பம்பாய்க் கூட்டத்திலேதான் அதற்கான தீர்மானம், பண்டித நேருவால் கொண்டு வரப்பட்டு, சர்தார் வல்லபாய் படேலால் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

“இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி,

இந்த நாளில் நாம் சூளுரை ஏற்போம்!”

பொன்விழாக் காணும் ஒரு மாபெரும் இந்தியப் புரட்சியை, நன்றியுணர்வோடு நினைவு கூரும் இந்த நன்னாளில், நமது விடுதலைக்கு உழைத்திட்ட நல்லோரைச் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

‘சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை - அது எங்கள் உயிர் மூச்சு’ என்று முழக்கமிட்டு, எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத் தியாகத் தழும்பேறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், இந்த அரங்கினில் அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய சந்ததியினருக்குச் சுதந்திரத்தின் பெருமையை எடுத்துச் சொல்லத் தகுதியான பெரியவர், விடுதலைப் போராட்ட வீரர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள், இன்று நம்மிடையே தமிழகத்தில் உள்ள அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களின் பிரதிநிதியாக வீற்றிருக்கிறார்கள். சிலம்புச் செல்வர் அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்று, காந்தியடிகளின் முன்னணித் தொண்டராக விளங்கியவர். காந்திய நெறிகளால் கவர்ந்திழுக்கப்பட்ட அவர், அன்னைத் தமிழுக்கும் அருந்தொண்டாற்றி வருகிறார். அவர் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதில் நமக்குத்தான் பெருமை. அவர் இவ்விழாவில் கலந்து கொண்டு தமது சிறப்புரை மூலம் நினைவுகூர்ந்த, சுதந்திரப் போராட்டக் கால உண்மைகள், நம்மை அந்தக் காலக் கட்டத்திற்கே அழைத்துச் சென்றன. அவர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தமையை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

தனிச்சிறப்புக் கொண்டது

‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டுகளிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித் திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவு கூர்கின்றோம். இந்த நினைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமையும், புகழும் உடைய தனிச்சிறப்புக் கொண்டது.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, நம் விடுதலைக்காகப் போராடிய தியாகச் செம்மல்களைப் பாராட்டிப் போற்றுவது, நம் ஒவ்வொருவரின் பிறவிக் கடனாகும். வாழ்நாளெல்லாம் பாராட்டிப் பின்பற்ற வேண்டிய பெரும் கடமையாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர், இதே ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாளினை எண்ணிப் பார்க்கின்றேன்! எத்தனையோ அடக்குமுறைகளை, அவிழ்த்துவிட்ட அச்சுறுத்தல்களை நடைமுறையாக்கிச் செயல்படுத்திய, ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நம் தாய்த் திருநாட்டின் அடிமை விலங்கை அகற்றியே ஆகவேண்டும், என்ற ஒரே சிந்தனையில் செயல்பட்ட தியாக சீலர்களின் நாட்டுப் பற்றை எண்ணி, வியக்கின்றேன்!

அன்றைய தினம், அண்ணல் காந்தியடிகள் ஆற்றிய வீர உரை, இன்றும், அரை நூற்றாண்டுக்குப் பிறகும், உயிர்த்துடிப்புள்ள வாசக

இயக்கப் பொன் விழா

இந்திய விடுதலைப் போரின் மகுடம்போல் விளங்கிய, 50 ஆண்டுகளுக்கு முந்திய அந்நாளை நினைவு கூர்ந்து சிறப்பிக்கும் வகையிலேயே - தமிழ்நாடு அரசால் - ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கப் பொன்விழா கடந்த 9.8.1992 அன்று சென்னையில் மிகச் சிறப்போடு கொண்டாடப்பட்டது.

அவ்விழாவில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி, காந்தி மண்டபத்தில் எழுப்பப்படவிருக்கும் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டி, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை இது:

அதற்கு ஆதரவாக என்றும் உறுதுணை நிற்க,

சென்னை விழாவில் முதல்வர் உரை!

மாக, நம் இதயச் சுவர்களில் எதிரொலிக்கின்றது. அதை நினைக்க நினைக்க, நம் நெஞ்சத்தில் விடுதலைக்கனல் கொழுந்துவிட்டு எரிவதை, இன்றும் நம்மால் உணர முடிகிறது.

செய் அல்லது செத்து மடி!

“Everyone of you should, from this moment onwards, consider yourself a free man or woman, and act as if you are free and are no longer under the heel of imperialism. I am not going to be satisfied, with anything short of complete freedom.

Do or die. We shall either free India or die in the attempt.’

— என்று அண்ணல் காந்தியடிகள் முழங்கினார்.

வைரம் பாய்ந்த இந்த வார்த்தைகள், இப்போது சொல்லும்போதே நமக்கு இவ்வளவு உணர்ச்சியூட்டுமானால், அன்று அடிமைப்பட்டு, அல்லலுற்றுக் கிடந்த மக்களுக்கு, அது எவ்வளவு ஆவேசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

‘வெள்ளையனே வெளியேறு’ என்ற வீர முழக்கம், நாடெங்கும் ஒலித்து, அதை அடக்க ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. மக்களோடு இராணுவம் மோதியது. நிராயுதபாணியான மக்களைத் துப்பாக்கியால் இராணுவம் சுட்டுப்பொசுக்கியது.

அன்று பற்றி எரிந்த விடுதலைத் தீ, 5 ஆண்டுக் காலத்தில் பாரதமாதாவின் விலங்குகளை உடைத்து, விடுதலை தந்தது. அதன் பயனாகத்தான் இன்று,

நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட்டு, வல்லமை கொண்டு, வையகம் புகழ வாழுகிறோம்; புதிய வரலாறு படைக்கின்றோம்.

சுதந்திரப் போராட்டமே அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த ஒரு அரசியல் கட்சியும், அந்நியர் ஆட்சிக்கு ஆதரவு தந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு கட்சியும் நமது நாட்டில் விடுதலைக்காகப் பல சோதனைகளை எதிர்கொண்டு போராடியுள்ளது.

தனி உரிமை கொண்டாட முடியாது!

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ, இடத்தினரோ, மொழியினரோ இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவு கூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையையும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத்தருணத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவுகளால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல், தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள், என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றிகளை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

எங்களுக்கு வழிகாட்டட்டும்

இந்த விழா வழங்குகின்ற உத்வேகம், புத்துணர்ச்சி, நம்மிடம் தொடர்ந்து நிலைத்து இருக்க வேண்டியது, தற்போது மிகமிக அவசியம். இலட்சியப் பாதையில் வீறுநடை போட, உங்களது தியாகம் எங்களுக்கு வழிகாட்டட்டும்; உங்களது வீரம், எங்கள் விழிகளுக்குள் ஒளி ஊட்டட்டும், என்று வேண்டுகிறேன்.

எதிர்கால நம் தலைமுறையினருக்கு, இந்த நன்னாளை நினைவூட்டும் முகத்தான், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா ஆண்டு நினைவுத்தூண் ஒன்றை நிறுவிட, அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான அடிக்கல்லினை, இந்தப் புனித வேளையில் நாட்டியதை எண்ணிப், பெருமை அடைகின்றேன்.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, என்றென்றும் போற்றிப் புகழும் எங்கள் அரசு, 'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ஆண்டில்', நமது தமிழகத்தில் உள்ள விடுதலை வீரர்களைப் பாராட்டும் முகத்தான், இச்சீரிய விழாவினைச் சென்னையில் எடுத்துள்ளது.

விடுதலைப் போராட்டத்தியாகிகளின் கோரிக்கைகள் பல, நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன, என்பதை நான் அறிவேன். அரசிடம் உதவி நாடி வரும் மக்களுள், தலையாய இடம் அளிக்கப்பட வேண்டியவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று நான் குறிப்பிட்டால், அதனை மறுக்க முடியாது.

நமது நாட்டின் விடுதலைக்காகத் தங்களை வருத்திக்கொண்டு, சிறையில் வாடிய அத்தியாகசீலர்களுக்கு, அந்நியா ஆட்சியின் கொடுமைகளால், தாங்கொணாத் துயரமடைந்தும், சிறிதும் மனம் தளராது, தாம் கொண்ட சுதந்திர வேட்கையில் உறுதியாக இருந்த அந்த நல்லவர்களுக்கு, நாம் முன்னுரிமை கொடுப்பது தான் முறையாகும். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள், அரசாலும் அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கென ஒருசில சிறு உதவிகள் புரிவது, அரசின் கடமை ஆகும். அந்த அடிப்படையில்தான், இந்நன்னாளில் கடமை உணர்வோடு, அவர்கள் பயன்பெறத்தக்க வகையில், ஒருசில அரசு சலுகைகளை அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசு அளிக்கும் சலுகைகள்

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு, மத்திய அரசும், மாநில அரசும், ஒய்வூதியம் வழங்கி வருகின்றன. தற்போது, மத்திய அரசு வழங்கும் மாத ஒய்வூதியமாக 750 ரூபாயைத் தமிழகத்திலுள்ள 1,706 தியாகிகள் பெற்று வருகின்றனர்.

மத்திய அரசு வழங்கும் ஒய்வூதியத்துடன், தமிழக அரசு வழங்கும் மாத ஒய்வூதியமான 100 ரூபாயையும் சேர்த்து, 850 ரூபாய் பெற்று வரும் தியாகிகள், 4,023 பேர் உள்ளனர்.

மாநில அரசு வழங்கும் மாத ஒய்வூதியமான, 400 ரூபாயை மட்டும் பெற்று வரும் தியாகிகள், 6,681 பேர் இருக்கின்றனர்.

இனி இவர்கள் அனைவரும் மொத்த ஒய்வூதியமாக, ஒவ்வொரு மாதமும், 1,000 ரூபாய் பெறும் வகையில், ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆணையின்படி, இந்த மாதம் முதல், 750 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 250 ரூபாய் கூடுதலாகவும்; 850 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 150 ரூபாய் கூடுதலாகவும்; இதுவரை மாநில ஒய்வூதியமாக 400 ரூபாய் பெற்று வந்தவர்களுக்கு, 600 ரூபாய் கூடுதலாகவும் வழங்கப்படும்.

மேலும், சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாத ஒய்வூதியமான 400 ரூபாயை - 500 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 15,169 விடுதலை வீரர்களும், அவர்தம் குடும்பத்தினரும், இந்த அறிவிப்புகளைப் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். அரசிற்கு நிதி நெருக்கடியான இந்தச் சூழ்நிலையிலும், நாட்டிற்கு உழைத்த நல்லோருக்கு, இந்நன்னாளில் நாம் ஏதாவது உதவவேண்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான், அரசிற்கு 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், அதனைப் பொருட்படுத்தாது, விடுதலை வீரர்களின் ஒய்வூதியங்களை உயர்த்தி ஆணையிட்டுள்ளேன்.

இதுவரை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய, சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச பஸ் பாஸ் சலுகையை சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, நீண்ட காலமாகவே அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

இந்த நன்னாளில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும், இலவச பஸ் பாஸ் வழங்கலாம் என்ற முடிவை அரசு எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, மேலும் பல கோரிக்கைகள் உள்ளன என்பதையும் நான் அறிவேன். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, விரைவில் உங்களுக்கு நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இவ்விழாவில் கலந்து கொள்ள, அனைத்து மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள, ஏறத்தாழ 1000 விடுதலை வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, இவற்றை எடுத்துச் செல்ல, பயணப்பெட்டி ஒன்றையும் அரசு கொடுத்துச் சிறப்பித்துள்ளதை எண்ணிப் பெருமைகொள்கிறேன்.

விடுபட்ட விடுதலை வீரர்கள்

இன்றைய விழாவில், குறிப்பிட்ட ஒரு சில விடுதலை வீரர்களை மட்டும்தான் அழைத்துச் சிறப்பிக்க முடிந்தது. தமிழகத்தில் உள்ள எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களும், இன்று இவர்கள் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, வருகின்ற ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளன்று, நடைபெற இருக்கும் சுதந்திர நாள் விழாவில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களினால் சிறப்பிக்கப்படுவார்கள்.

இன்றைய விழாவில் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரருக்கும், பொன்னாடை அணிவித்து, பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, அவற்றை எடுத்துச் செல்லப் பயணப் பெட்டி ஒன்றும், சுதந்திர தினத்தன்று, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரித்திரப் புகழ் கூறும் இந்நன்னாளில், தமிழகத்தில் வாழும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும், என் அன்பு வாழ்த்துக்களை, மகிழ்ச்சியுடன் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்

அதே நேரத்தில், இந்தியாவைக் காக்கின்ற ஒப்பற்ற பணியில், தங்களை எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ளவும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி, அதற்கு ஆதரவாக என்றென்றும் உறுதுணையாக நிற்கவும், தமிழ்நாடும், தமிழக மக்களும், இந்த விழாவின் மூலம் சூளுரை ஏற்போம்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், பொதுத்துறைச் செயலர் திரு. பெ. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா நிகழ்ச்சிகளைச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்துரைத்தார்.

கலைவாணர் அரங்க நிகழ்ச்சி: சிறப்பு அம்சங்கள்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழாவும், அது தொடர்பான நினைவுத் தூண் அடிக்கல் நாட்டு விழாவும் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், 9.8.92 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டார்; சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்துக் கவுரவித்து, நினைவுப் பரிசு வழங்கி, கிண்டியில் இருக்கும் காந்தி மண்டபத்தில் எழுப்பப்படவிருக்கும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார்.

மேடையில், மகாத்மா காந்தி அடிகள் உருவப்படம் பூச்சரங்களின் நடுவிலே பொலிவுறத் திகழ்ந்தது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா - நினைவுத் தூண் அடிக்கல் நாட்டுவிழா' என்ற எழுத்துக்கள் மலர்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கண்காட்சி

விழா நடைபெற்ற கலைவாணர் அரங்கின் வெளிப்புறம், மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறையினர் புகைப்படக் கண்காட்சி அமைத்திருந்தார்கள்.

விடுதலைப் போராட்டக் காலக் களக் காட்சிகள் பல அதில் இடம் பெற்றிருந்தன.

அமைச்சர் கே.ஏ.கே.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாகத் தமிழகத்தில், அரசு சார்பில் இந்த விழா நடைபெற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முனைந்து நிற்பதே காரணம். அன்றைய தேசிய உணர்வு அணையாமல் காத்த பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கு உண்டு; அதன்பின் புரட்சித் தலைவருக்கு உண்டு; அதற்குப் பிறகு அவர் அடியொற்றி நடக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு. ஆகவேதான் அவர் இன்று ஒரு தேசியத் தலைவர்போல் திகழ்கிறார்!'

தலைமைச் செயலாளர்

அரசு தலைமைச் செயலாளர், திரு.டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்:

'மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெருமுயற்சியால் நடத்தப்படும் இந்த விழாவானது, இந்திய வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாக இடம் பெறும். முதல்வர் அவர்களின் இந்தத் தேசிய உணர்வானது தியாக சீலர்களால் பெரிதும் போற்றப்படும். 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்; அன்பு தன்னில் செழித்திடும் வையம்' என்று பாடினார் பாரதியார். அந்த வகையில், இந்த அரசு சாதிமத பேதமற்ற சமுதாயம் காணப் பாடுபட்டு வருகின்றது.

வாழப்பாடி இராமமூர்த்தி

தனது வாழ்த்துரையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதாவது:

'இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் பெருமைப்படுத்துவதற்காக இந்த விழா எடுப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள் அன்று தேசியக் கொடிகளையெல்லாம்அறுத்துத்தீயிலிட்டபோது, அருணா ஆசப் அலி என்கிற வீரப் பெண்மணி ஒருவரே, பூனாவில், யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு நமது தேசியக் கொடியை ஏற்றினார். அதேபோல, இந்நாட்டில் பயங்கர வாதங்கள், அராஜகங்கள் தலை தூக்கியபோது, அதையெல்லாம் அடக்கிப் பெருமை கொண்ட வீரப் பெண்மணிதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'தமிழகம் இன்று தேசிய நீரோட்டத்தோடு கலந்திருப்பதை, என்னைப் போன்ற தேசியவாதிகளெல்லாம் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களே! எத்தகைய துன்பம் வரினும் சரி; எங்களைப் போன்ற தேசியவாதிகள் - சுதந்திரப் போராட்ட வீரர்கள் - தியாகிகளெல்லாம் உங்கள் பின்னால் நிற்கத் தயாராக இருக்கிறோம். எனவே, எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் நீங்கள் தைரியமாகச் செயல்படலாம்'.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.

'இந்தியா சுதந்திரம் பெற்றதென்றால், அன்றைய தினம் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் வெறும் மனிதாத்மா அல்ல; மகாத்மா என்பதுதான் முக்கிய காரணம். அவர் தொடங்கிய ஆகஸ்ட் போராட்டத்தால், தேசமே சிறைச்சாலை ஆகிவிட்டது. 'தேசத்தையே சிறைச்சாலையாக்கிவிட்டு நீங்கள் சூப்பிரண்டெண்டாக இருக்கிறீர்கள்' என்று அதுபற்றி வைஸ்ராய்க்கே கடிதம் எழுதினார் காந்தியார்.

'டாக்டர் எம்.ஜி.ஆர். ஒரு சிறந்த தேசியவாதி போலவே திகழ்ந்தார்; பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடினார்; மகளிர் முன்னேற வேண்டும் என்று அவர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் மகளிர் பல்கலைக்கழகம் அமைத்தார். அவர் இன்று இல்லாவிட்டாலும், அதே ஒன்றுபட்ட அமைப்பாக இருந்து முதல்வர் அவர்கள் ஆட்சி செலுத்துவது கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்'.

அமைச்சர் டாக்டர் நாவலர்

அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பியபின், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய முதல் விழா இது. டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதாவது:

'அருமை பெருமைமிக்க இந்த விழாவைத் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைக்கிணங்க கொண்டாடுகிறது என்றால், தமிழ்நாட்டில் உள்ள ஆறுகோடி மக்களும் கொண்டாடுவதாகவே பொருள். இந்த நேரத்தில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்னுயிர் நீத்தோரனைவருக்கும் நாம் வீரவணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த பெருமையாளர் என்பதனாலேதான் காந்தியாரை 'வாழ்க நீ எம்மான்' என்று பாரதி பாடினான். விடுதலைப் போராட்ட வீரர்களே! நீங்களெல்லாம் அன்று செய்த தியாகத்தின் நோக்கத்தை இன்றுள்ள இளைய தலைமுறையினர் பின்பற்றிச் செயல்பட முன்வரவேண்டும்'.

> • சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்தான். **—தந்தை பெரியார்**

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரையாற்றினார்:

'நல்லவர்களைப் பாராட்ட நல்லவர்களாலேயே முடியும்; வல்லவர்களைப் பாராட்ட வல்லவர்களாலேயே முடியும். அதேபோல், தேசியவாதிகளின் தியாகத்தைப் பாராட்ட புரட்சிகரமான எண்ணத்தைத் தன் மனதிலே கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஒருவராலேதான் முடியும் என்பதை, இந்த விழாவின் மூலம் இந்தியத் துணைக் கண்டமே கண்டு பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நாளில், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட தியாக தீபத்தை ஏந்திப் பிடித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் கரத்தை வலுப்படுத்த தேசியவாதிகளெல்லாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில், தலை நிமிர்ந்த இந்தியாவைக் காணப் பாடுபடும் முதல் முதலமைச்சராகத் திகழ்பவர் நம் புரட்சித் தலைவி அவர்களேயாவார்'.

வாழ்த்துரை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூணுக்கு அடிக்கல் நாட்டினார். அக் கல்வெட்டில், பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா நினைவுத் தூண்'

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடித் திங்கள் 25-ஆம் நாள் (9.8.92) அடிக்கல் நாட்டப்பட்டது.

- டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., தலைமைச் செயலாளர் தமிழ்நாடு அரசு.

தியாகிகளுக்குப் பாராட்டு:

இதற்குப் பிறகு சிறப்புரை ஆற்றி முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆயிரம் பேர்களைச் சிறப்பிக்கும் வகையில் - அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கிப் பயணப்பெட்டி ஒன்றும் அளித்து மகிழ்ந்தார்.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி., திரு. தளவாய், திரு.டி.செங்கல்வராயன், திரு.ஜெகதீசன், திருமதி மகாலட்சுமி பாரதி, திருமதி கமலா சுப்பிரமணியம் உட்பட 50 விடுதலைப் போராட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாமே மேடையில் சிறப்புச் செய்தார்.

பார்வையாளர் பகுதியிலிருந்த மற்றவர்களுக்கெல்லாம், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. க. பொன்னுசாமி, மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவரவர் இருக்கைக்கே சென்று பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

தியாகிகள் சார்பில்...

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் - விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்தமைக்காக - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பிலும், தியாகிகள் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

- இவ் விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல். ராஜேந்திரன்.

மின்கலப் பேருந்தினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பார்வையிட்டுப் பயணம் செய்தார் (1.8.92)

வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு மின்கலப் பேருந்து

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு ரூ.5 இலட்சம் செலவில் பேட்டரியினால் இயங்கும் புதிய பேருந்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இந்தப் பேருந்தினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 2.8.92 அன்று வண்டலூரில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

உயிரியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் பேட்டரியில் இயங்கும் இந்த மின் பேருந்தைத் தமிழக அரசு வாங்கியுள்ளது. இந்த மினி மின்கலப் பேருந்து சத்தமில்லாமல் செல்வதால் விலங்குகளின் அருகில் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.

இன்னும் ஒருமாதக் காலத்திற்குள் இதே போன்று மேலும் இரண்டு மின்கலப் பேருந்துகள் தமிழக அரசின் சார்பில் வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு வழங்கப்படும்.

தற்போதுள்ள எண்ணெய்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டும், இறக்குமதி செய்யப்படும் எண்ணெயை நம்பி இருக்கும் தன்மையைக் குறைக்கும் பொருட்டும், எண்ணெய் உபயோகிப்பதை மிச்சப்படுத்தவும், அதனால் ஏற்படும் அன்னியச் செலாவணியைச் சேமிக்கும் பொருட்டும், இரைச்சல் மற்றும் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கவும், சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், ஊட்டியில் சேரன் போக்குவரத்துக் கழகமும் தலா ஐந்து மின்கல ஊர்திகளைப் பரிசோதனை முறையில் இயக்கிட அரசு அறிவுரை வழங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து குறித்த 1992-93 கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

இதை ஒட்டி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் சென்னையில், மின்கலத்தினால் இயங்கும் ஐந்து ஊர்திகளை வாங்கி இயக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, பல்லவன் போக்குவரத்துக் கழகம், போபாலில் உள்ள பாரத கனரக மின்னியல் நிறுவனத்திடமிருந்து (BHEL) பேருந்து ஒன்றுக்குச் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து பேருந்துகளை வாங்கியுள்ளது. பேருந்து ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் Department of Non Conventional Energy and sources இடமிருந்து மானியம் பெறப்பட உள்ளது.

இவ்வூர்தி மின்கலத்தில் உள்ள மின்சக்தியினால் இயங்குகிறது. இது அதிகப்பட்சமாக ஒரு மணிக்குச் சுமார் 40 கி.மீ. வேகத்தில், சுமார் 70 கி.மீ. தொலைவு வரை செல்லும். இவ்வூர்தியை மீண்டும் இயக்குவதற்கு மின்கலன்கள் சுமார் 10 மணி நேரம் சார்ஜ் செய்யப்பட வேண்டும். இவ்வூர்தி 96 வோல்ட் 300 ஆம்பியர் ஹவர் லெட் ஆசிட் டிராக்சன் பாட்டரி உதவியால் இயங்குகிறது.

இந்த ஊர்தியின் மொத்த எடை சுமார் 4000 கி.கி. இதில் 18 பேர் செல்லலாம்.

இந்த மின்கல ஊர்தியினால், எண்ணெய்க்குப் பதில் மின் சக்தியைப் பயன்படுத்தி அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம். இரைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மாசு ஏற்படுவதைத் தடுக்கலாம்.



கோவை மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

கோவை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 481 பேர்களைத் தேர்ந்தெடுத்து 3.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கோவையிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 9 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 19 பேர்களுக்கும், காதொலிக் கருவி 23 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சித் திட்டக் கருவிகள் 8 பேர்களுக்கும், பட்டு வளர்ச்சிக்கென நிதியுதவி 4 பேர்களுக்கும், சவரப்பெட்டி 5 பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

கலப்புத் திருமண உதவி 7 நபர்களுக்கும், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி ஒருவருக்கும், விழியிழந்தோர் திருமண உதவி ஒருவருக்கும், விதவை மகள் திருமண உதவி 10 பேர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் சாலை விபத்து நிவாரண உதவி 3 பேர்களுக்கும், நலிந்தோர் நல உதவித் திட்டத்தின்கீழ் 113 பேர்களுக்குக் கடன் உதவியும், விபத்து நிவாரண உதவி 2 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 34 பெண்களுக்கு ரூ.1,70,000 நிதி உதவியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 111 நபர்களுக்கு கடன் உதவியும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 4 நபர்களுக்கு ரூ.10,75,087 வட்டியில்லாக் கடனும், உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கும், தாட்கோவின் மூலம் தொழில் தொடங்க 4 பேர்களுக்கு ரூ.13,03,000-மும், வீட்டு மனைப் பட்டா 23 பேர்களுக்கும், விதவை ஓய்வூதியம் 13 பேர்களுக்கும், குடிசை மாற்று வாரிய நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 27 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், கைத்தெளிப்பான் 5 பேர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 2 பேர்களுக்கும், பெண் ஆட்டோ ஓட்டுநர் கடனுதவி ஒருவருக்கும், விதவை குழந்தைகள் 10 பேர்களுக்கும், ஏழைக் குழந்தைகள் 20 பேர்களுக்கும் இலவசப் பாடநூல்களும், மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவி இருதய அறுவைச் சிகிச்சைக்காக 24 நபர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

மொத்தம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 481 நபர்களுக்கு ரூபாய் 40,63,589 பெறுமானமுள்ள உதவிகளை அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 340 பேர் பெண்களாவர்.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 நபர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக மாண்புமிகு முதல்வர் நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.1,63,000 நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி. காந்தகுமாரி பட்நாகர் அவர்களுக்குத் தமது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்தார் (29.7.'92).

சென்னை நகரில் போக்குவரத்துக் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நவீன ரக மோட்டார் சைக்கிள் மற்றும் கருவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார் (3.8.'92).

கோவையில் கே.ஜி. மருத்துவமனையில் ரூ.10 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவப் பிரிவுக் கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார் (28.7.'92).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலிருந்து வந்திருந்த மனுதாரர்களுக்குத் தலைமைச் செயலகத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (10.8.92).

'வெள்ளையனே வெளியேறு' வீர வரலாறு!

என். இளங்கோ

இருநூறு ஆண்டுக்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய நாடு ஒன்று திரண்டு ஓரணியாகப் பிரம்மாண்டமாக எழுந்து நின்று, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு மாபெரும் சவாலை விடுத்த நாள், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாளாகும்!

அந்நாள் நம் விடுதலைப் போரின் வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களாகப் பிரகாசிக்கும் பெருநாள்! பிரமிக்க வைக்கும் நமது சக்தியை நாமே உணர்ந்த நன்னாள்! சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள். கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்!

இரண்டாவது உலகப்போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை! 1941 டிசம்பர்த் திங்களில் போரில் குதித்த ஜப்பான் நாடு, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை வென்று, ரங்கூனைக் கைப்பற்றி, இந்தியாவின் கிழக்கு எல்லையில் நின்று கொக்கரித்துக் கொண்டிருந்த நேரம்!

ஜப்பான் இந்தியாவுக்குள் எந்நேரமும் நுழையலாம் என அனைவரும் அஞ்சிக் கொண்டிருந்த நேரம் அது! அதே கால கட்டத்தில் இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்க இங்கிலாந்தை அமெரிக்கா நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால், இங்கிலாந்தின் பிரதமர், வின்ஸ்டன் சர்ச்சில் இதற்குப் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தார். ஆங்கில சாம்ராஜ்யத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நான் பிரதமர் ஆகவில்லை என்று சர்ச்சில் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ('I did not become the King's First Minister to preside over the liquidation of the British Empire') மக்களுக்குத் தங்களை எந்த அரசு ஆளவேண்டுமென முடிவு செய்யும் உரிமை அனைவருக்கும் உண்டு என்று கூறும் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் (Atlantic Charter) அமெரிக்காவும், இங்கிலாந்தும் கையெழுத்திட்ட பின், இது இந்தியாவுக்குப் பொருந்தாது என ஆணித்தரமாகச் சர்ச்சில் கூறினார்.

ஆனால், உலகப் போரில் பர்மாவை நோக்கி ஜப்பான் நெருங்கி வந்து கொண்டிருக்கும் சமயம், இந்தியர்களைச் சமாதானப்படுத்தவும், அமெரிக்க நிர்பந்தத்தைத் திருப்திப்படுத்தவும், கிரிப்ஸ் மிஸனை (Cripps Mission) சர்ச்சில் இந்தியாவிற்கு அனுப்பினார். சர் ஸ்டோபோர்ட் கிரிப்ஸ் (Sir Stafford Cripps) இந்தியாவிற்கு ஒரு புதிய திட்டத்துடன் வந்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். உலகப் போர் முடிவுக்கு வருவதற்கு முன்பே இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்கப்படும். போருக்குப்பின் இந்தியா தனக்கெனப் புதியதோர்

அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக உலகப் போரில் இங்கிலாந்தை இந்தியா முழுமையாக ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டார். ஆனால், யாரையும் திருப்திப்படுத்தாத இந்தத் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, இரண்டு நூற்றாண்டுகளாக நம்ப முடியாத ஆங்கிலேயர்களை இன்று நம்ப இந்தியர்கள் தயாராக இல்லை.

நடைபெற்றுக் கொண்டிருந்த உலகப் போரில் இங்கிலாந்து தோற்று விடக்கூடிய அபாயமும் இருந்தது. தோற்றுப் போகக் கூடிய நாட்டின் வாக்குறுதிகளை நம்ப இந்தியத் தலைவர்கள் தயாராக இல்லை. அது, வீழ்ச்சியுறுகின்ற வங்கிக்கு வழங்கப்படும் முன் தேதியிட்ட காசோலை போன்றதாகும் என வர்ணிக்கப்பட்டது. (It was like a post-dated cheque on a crashing bank) எனவே, கிரிப்ஸ் மிஸன் படுதோல்வியைத் தழுவியது. அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களைப் பற்றி அண்ணல் காந்தியடிகள் கொண்டிருந்த அபிப்பிராயம் அடியோடு மாறியது. ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் மிகுந்த வருத்தத்தைத் தருவதாக அண்ணல் கூறினார்.

'I used to say that my moral support was entirely with Britain. I am very sorry to confess that today my mind refuses to give that moral support. British behaviour towards India has filled me with great pain' என்று காந்தியடிகள் கூறினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருந்தால் தான் ஜப்பானியர்கள் இந்தியாவில் ஊடுருவுவார்கள். ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிவிட்டால் ஜப்பானியர்கள் நம் மீது படையெடுக்க மாட்டார்கள் என ஆணித்தரமாக நம்பினார்.

'The presence of the British in India is an invitation to invade India. Their withdrawl removes the bait' என வாதிட்டார். வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறினால் நம் பாதுகாப்பை நாம் கவனித்துக் கொள்ளலாம் என முழங்கினார்.

★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால், குடிப்பழக்கத்தை விலக்க வேண்டும்.

சூரியன் மறையாத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தையே நடுங்க வைத்த - சிந்திக்க வைத்த நாள்! நமக்குப் பூரண சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திய ஒப்பற்ற நாள்! கோடானு கோடி இந்தியர்கள் ஆண்டாண்டுக் காலமாக எதிர்பார்த்த முழு விடுதலை நம்மை நோக்கி ஓடி வரத் தொடங்கி விட்டது என்பதை நாடு உணர்ந்த மகத்தான நாள்! - 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஒன்பதாம் நாள்!

அகிம்சைப் புரட்சியாக ஒரு மாபெரும் **ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க மகாத்மா எண்ணினார். அந்த மகத்தான** எண்ணத்தைத் தொடர்ந்து 1942-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் பதினான்காம் நாள் காங்கிரஸ் செயற்குழு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

'இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும்' என அத்தீர்மானம் கூறியது.

1920-ஆம் ஆண்டிற்குப் பின் தேக்கி வைக்கப்பட்ட அகிம்ஸா பலத்தை முழுவதுமாகப் பயன்படுத்தி, அண்ணல் காந்தியடிகளின் தலைமையின் கீழ் நாடு தழுவிய அறப்போராட்டம் தொடங்கும் என அது அகிலத்திற்குப் பறை சாற்றியது. இந்த 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் 8.8.1942 அன்று ஏற்றுக் கொண்டு, நாடு தழுவிய மாபெரும் அறப்போராட்டத்தை அறிவித்தது. அன்று மாலை அண்ணல் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்:

'இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாகக் கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை. நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம்முயற்சியில் செத்து மடிவோம்!'

'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் தொடங்கியது. **மறுநாள் காலை அண்ணல் காந்தியடிகளும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள்.** தலைவர்களைக் கைது செய்தால் போராட்டத்தை நசுக்கி விடலாம் எனத் தப்புக் கணக்கு போட்டனர் ஆங்கிலேயர். நாடெங்கும் கொழுந்து விட்டெரிந்த விடுதலைத் தீயை, அண்ணலின் கைது என்னும் பஞ்சை வைத்து அணைத்துவிடப் பார்த்தனர் ஆங்கிலேய அறிவாளிகள். பஞ்சு பற்றியது. நகரங்கள் கொதித்தன. நாடே கொந்தளித்தது. ஊரெங்கும் நாடெங்கும் கதவடைப்பு. வேலைநிறுத்தம் ஊர்வலங்கள் தொடர்ந்தன. அகிம்சா வழியில் நடைபெற்ற இப்போராட்டத்தைக் கைது, தடியடி, துப்பாக்கிச் சூடு ஆகியவற்றின் மூலம் நசுக்கப் பார்த்தது ஆங்கிலேய அரசாங்கம். விளைவு - அறப்போராட்டம் வன்முறையில் இறங்கியது. The police repression let loose by the police goaded to fury crowds that had intended to act quite peacefully' என ஒரு ஆங்கிலேயப் பத்திரிகையாளர் அருமையாக வர்ணித்தார்.

அண்ணல் காந்தியடிகள் தொடங்கியது அறப்போர். அதை வன்முறையாக்கியது ஆங்கிலேயர்கள். சென்னை, பீகார், பம்பாய், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஆகிய பகுதிகளிலே வாழ்ந்த மக்கள், ஆங்கிலேயரின் அடக்குமுறையின் சின்னங்களை அடித்து நொறுக்கத் தலைப்பட்டனர். தபால் நிலையங்கள் எரிக்கப்பட்டன. ரயில்கள் கவிழ்க்கப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. போர்த்தளவாடங்கள் தயாரிப்பது நிறுத்தப்பட்டது.

தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால், நாட்டின் பல்வேறு பகுதிகள் தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டன. இப்பகுதிகளில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்றே கூறலாம்.

வங்காளத்தில் மித்னாபூர், உத்திரப்பிரதேசத்தில் பாலியா மற்றும் பல்வேறு மாவட்டங்களில் 'இணை அரசாங்கங்கள்' 'Parallel Governments) நடைபெற்றன. சோசலிஸ்ட் குடியரசுப்படை போன்ற குழுக்கள் இக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தகைய தனித்தனி நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி முறையான கொரில்லாப் போராக உருவாக்க ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அயராது பாடுபட்டனர். வன்முறை தொடர்ந்து பரவியது.

''இந்த வினாடியிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைச் சுதந்திர மனிதனாக கருதிச் செயல்பட வேண்டும். பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதைக் குறித்தும் நான் திருப்தி அடையப் போவதில்லை நாம் செய்வோம் அல்லது செத்து மடிவோம். நாம் இந்தியாவை விடுதலை செய்வோம் அல்லது அம் முயற்சியில் செத்து மடிவோம்'' என்று முழங்கினார் அண்ணல் காந்தியடிகள்.

1919-இல் பஞ்சாப் பிரச்சினைக்குப் பின் முதன்முறையாக மக்களை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது. நவீன ஆயுதங்களைக் கொண்டு அப்பாவி மக்களை மூர்க்கத் தனமாகத் தாக்கினர். இயந்திரத் துப்பாக்கிகளால் சுடப்பட்டும் விமானத் தாக்குதலுக்கு ஆட்பட்டும், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். பத்தாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். மக்களின் போராட்டத்தை நசுக்கப் பயங்கரமான முறைகள் கையாளப்பட்டன. செப்டம்பர் இறுதியில் ஆங்கிலேயர் போராட்டத்தை நசுக்கி நாட்டை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். போராட்டத் தீயின் கடைசிப் பொறி 1943-இல் அணைக்கப்பட்டது.

போராட்டம் நசுக்கப்பட்டாலும் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் இந்தியச் சுதந்திர வீர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய போராட்டமாகும்!

நம்மையும், நமது சக்தியையும், நமக்கும் நாட்டுக்கும் ஆங்கிலேயருக்கும் உலகத்திற்கும் உணர்த்திய உன்னதப் போராட்டமாகும்!

ஆங்கிலேயரின் ஆட்சியின் சவப் பெட்டியில் அடிக்கப்பட்ட முதல் ஆணி இப்போர்! விரைவில் வரப்போகும் விடுதலைக்கு முதல் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்த்து மலர்கள் தாம் இப்போர்!

இப்போராட்டம் நடைபெற்று ஐம்பதாண்டு நிறைவுறும் இந்நன்னாளில், விடுதலை வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்து அவர்களது உணர்வுகளை இதயத்தில் சுமந்து, புதியதோர் இந்தியாவை வலிமை மிக்க இந்தியாவை - வளமிக்க இந்தியாவை, இல்லாமையை இல்லாதாக்கி, உலகில் முதன்மை நாடாக்கி 2000-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்திட அயராது உழைப்போம்! வெற்றி நமதே!

★ மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.
- மகாத்மா காந்தியடிகள்

தருமபுரி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

தருமபுரி மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 426 பேர்களைத் தேர்ந்தெடுத்து 10.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தருமபுரியிலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அன்று அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக, 26 பேர்களுக்கு ரூபாய் 43,874 மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களும் சலவைப்பெட்டி 6 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 7 பெண்களுக்கு ரூ.35,000-மும், கலப்புத் திருமண உதவி 2 பேர்களுக்கும், விதவை மகள் திருமண உதவி 5 பேர்களுக்கும், விதவை உதவித்தொகை 5 பேர்களுக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலிகளுக்கான உதவித்தொகை 4 பேர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித்தொகை 2 பேர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 நபர்களுக்கு ரூபாய் 16 இலட்சத்து 90 ஆயிரம் கடனுதவியும், ரூபாய் 10 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் 3 நபர்களுக்கு டிராக்டர் வாங்கக் கடனும், 11 நபர்களுக்கு தொழில் முதலீட்டுக் கழகக் கடன் உதவியாக ரூபாய் 51 இலட்சத்து 86 ஆயிரமும், 8 நபர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 85 ஆயிரம் தாட்கோ கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 9 நபர்களுக்குக் கடனுதவியும், பட்டு வளர்ச்சிக்காக 24 பேர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 74 ஆயிரத்து 400 கடனுதவியும், 20 பேர்களுக்குக் கூட்டுறவு நிலவள வங்கிக் கடனுதவியாக ரூபாய் 4 இலட்சத்து 2 ஆயிரமும், மண்பாண்டத் தொழில் செய்ய 15 நபர்களுக்குக் கடனுதவியும், 34 பெண்களுக்குத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 400 கடனுதவியும், தெளிப்பு நீர்ப்பாசனத்திற்கென 2 பேர்களுக்குக் கடனுதவியும், ரூபாய் 60 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் 24 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், ரூபாய் 28 இலட்சத்து 18 ஆயிரத்து 950 மதிப்பீட்டில் 158 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும், 9 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், இருவருக்கு ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டன.

மொத்தம் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 426 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 23 இலட்சத்து 64 ஆயிரத்து 524 பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 229 பேர் பெண்களாவர்.

இதுதவிர, கடந்த 5.7.92 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம், பாலூர் புதூரில் ஏற்பட்ட வன்முறைத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவித்தொகையாக ரூபாய் 57,000 வழங்கினார்.

ஆக மொத்தம் அன்று (10.8.92) 454 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 21 ஆயிரத்து 524 ரூபாய் பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

●● இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. ●●

தொடர்ந்து முதலிடம்

இருபது அம்சத் திட்டம்—இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்

நம் நாட்டின் ஒட்டு மொத்தமான பொருளாதார நெருக்கடி நிலைமை, நமது பணியை மிகவும் கடுமையாக்கியுள்ள போதிலும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம்.

1991-92-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு ரூ.1,600 கோடி நிர்ணயிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டின் திட்ட அமலாக்கம் மேற்காணும் திட்ட ஒதுக்கீட்டை மிஞ்சுமென எதிர் கொள்ளப்படுகிறது.

1992-93-ஆம் ஆண்டுக்குரிய உயரளவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1,751 கோடி என வரையறை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சருடைய அயராத முயற்சிகளின் காரணமாக, 1992-93- ஆம் ஆண்டிற்கு அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டுமெனக் கோரப்பட்டது நியாயமான கோரிக்கையே என மத்தியத் திட்டக்குழுவால் உணரப்பட்டு, இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1992-97 குறித்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும் இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாளில் புதுதில்லியில் நடைபெற்றது எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.10,200 கோடியாக மத்தியத் திட்டக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு தொகையான ரூ.5,700 கோடியை ஒப்பிடும்போது, மேற்காணும் திட்ட ஒதுக்கீடு 77 சதவிகிதம் அதிகமாகும் என அறியலாம்.

இருபது அம்சத் திட்டம்

இருபது அம்சத் திட்டம் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தை மனதிற்கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டமாகும். வறுமையை அகற்றி, ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இருபது அம்சத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், உபரி நிலங்களைப் பிரித்து வழங்கும் திட்டம், கொத்தடிமைகளிலிருந்து மீட்கப்பட்டோர் மறுவாழ்வு, நோய்த் தடுப்புக் குடும்ப நலத் திட்டங்கள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு, மரம் நடுதல், கிராமப்புறங்களுக்கு மின்வசதி, பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு, மரபுசாரா எரிசக்தி உபகரணங்களைப் பிரபலப்படுத்துதல் ஆகியவை தொடர்பான திட்டங்கள் போன்று, இருபது அம்சத் திட்டத்தின் கீழ் வருகின்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளின் செயல்பாட்டை மத்திய அரசு மறு ஆய்வு செய்கிறது.

மத்திய அரசு பல்வேறு மாநில அரசுகளின் செயல்பாடுகளை ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்த்த பின்னர், 1991-92-ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது என அறிவிப்புச் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு இத்தகைய சாதனையை இதற்கு முன்னர், 1982-83, 1984-85, 1988-89 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளிலும் நிகழ்த்தியுள்ளது.

மாநில அளவில், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, பெரியார், காமராசர், திண்டுக்கல்-அண்ணா ஆகிய ஐந்து மாவட்டங்கள் 1991-92-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைமுழுமையாக எய்தி, முதலிடத்தைப் பெற்றுள்ளன.

நூல் நயம்

பெண்களும் சமூகமும்

ஆசிரியர்: அ. ஜெய்குமார்
வெளியீடு:
உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி,
சென்னை-600 001.

பக்கம்:136 விலை:ரூ.15/-

புராண காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் வரை பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருவதை இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது. பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறியுள்ள நூலாசிரியர், பெண்டிர் நலன் காப்பதற்காக அரசு நடைமுறைப்படுத்திய ஆணைகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

பெண்ணுக்குத் தாலி கட்டும் வழக்கம் கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் நமது நாட்டில் நிலவவில்லை என்பது ஆய்வு முறையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்நாளில் ஆடவர்க்கு இணையாகச் சில பெண்கள் பட்டம் பதவி பெற்று ஒளி வீசித் திகழ்வதையும் குறிப்பிடத் தவறவில்லை• நூலாசிரியர் இனிய எளிய நடை இந்நூலின் சிறப்பம்சம்.

—தமிழ்ப்பித்தன்

நகரத்தார் யார்? எவர்? (முதல் தொகுதி)

ஆசிரியர் மற்றும் வெளியீடு:
பழ. அண்ணாமலை,
8, நைனியப்பன் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:242 விலை:ரூ.35/-

ஒருவரைப் பற்றித் தெரிந்துகொள்ள 'முகவரி' மிக மிக அவசியமாகிறது. இந்த வகையில் பல தொகுப்புகள் வெளி வந்துள்ளன. வெளிவருகின்றன. எழுத்துலகில் 'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' தொகுப்பு அந்தந்தக் கால கட்டங்களில் வெளிவந்திருக்கின்றன. இதேபோலப்பல மொழிகளிலும் வெளிவருகின்றன.

'நகரத்தார் யார்? எவர்?' என்னும் இந்நூலில் நகரத்தார்களின் நனிபுகழ் வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. இச்சமூக எழுத்தாளர்கள், வணிகப் பெருமக்கள் முதலானோர் பற்றிய குறிப்புகளைத் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

டாக்டர் தயாவின் கிறிஸ்து நெறிக் கவிதைகள்

ஆசிரியர்: அருள்திரு டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ்
வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:73 விலை:ரூ.35/-

இந்நூலில் 31 கவிதைகள் உள்ளன. இயேசு பெருமானின் பெருமைகளைச் சித்திரிக்கும் சித்திரங்களாக இவை விளங்குகின்றன. முதல் பாடலிலிருந்து முடிவு வரை எல்லாப் பாடல்களுமே தித்திக்கும் தேனமுதங்களாகத் திகழ்கின்றன.

அகவல், எண்சீர் ஆசிரிய விருத்தம், ஆறடித் தரவு, வஞ்சித் துறை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, நேரிசை ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, திருப்புகழ்ச் சந்தம், எழுசீர் விருத்தம் இவ்வாறு பல இலக்கண மரபுகளில் கவிதைகள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

'அருமை பெருமை அகன்றாய் போற்றி
வெறுமைக் கோலம் விழைந்தாய் போற்றி
மனித உருவில் வந்தாய் போற்றி
புனித அன்பைப் பொழிந்தாய் போற்றி
ஏழைக் கோலம் ஏற்றாய் போற்றி
கோழைக்கு உதவும் குமரா போற்றி'

என்று சிலுவை ஏறிய செம்மலைப் போற்றுகின்றார் கவிஞர். பாடவும், படிக்கவும் ஏற்ற இனிய நூல்.

எழுத்தும் நானும்

ஆசிரியர்: சு.ரா.
வெளியீடு:
மகாகவி பதிப்பகம்,
2, ஜயசங்கர் தெரு,
சென்னை-33

பக்கம்:80 விலை:ரூ.7.50/-

வி.எஸ். சுந்தரராஜன் என்ற பெயருக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சு.ரா. என்னும் பழம்பெரும் எழுத்தாளரின் அனுபவ முத்திரைகள் இந்நூலில் பதிக்கப்பட்டுள்ளன.

எழுத்துப்பணி, பத்திரிகை உலக நுழைவு, அரசுப் பணி என்று தன் வாழ்க்கை நிலைகளை நிலையுறுத்தியுள்ளார் ஆசிரியர். தம் எழுத்துக்கு உதவியவர்களையும் அவர்களது புகைப்படத்தையும் வெளியிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நூலுக்கு டாக்டர் விக்கிரமன் முன்னுரை எழுதிச் சிறப்பித்திருக்கிறார்.

நாளைய உலகம் நமது கையில்

ஆசிரியர்: வே. எழிலரசு
வெளியீடு:
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:128 விலை:ரூ.16/-

வாழ்க்கை வயல் முழுவதும் நம்பிக்கை நாற்றங்கால்களை நடவு செய்யுங்கள்.

நம்பிக்கைதான் வாழ்க்கையின் ஜீவ நாடி.

பணம், காற்று, தண்ணீர் இவைகளை விட நம்பிக்கை ஆதாரமானது. அதிக வலிவுடையது.

- என்று கட்டுரை தொடங்குகிறது. நமக்கும் நம்பிக்கை பிறக்கிறது, இது ஒரு நல்ல நூல் என்று. முழு வாழ்வு வாழ்வதற்கு, முழு மனிதனாகத் திகழ்வதற்கு, முன்னேற்றக் கருத்துக்கள் பல இந்நூல் முழுவதும் விரவியுள்ளன. ஆசிரியரின் அப்பழுக்கற்ற சிந்தனைச் சிதறல்கள் ஒவ்வொன்றும் முத்துக்கள்.

ஸ்டில் மேதை நாகராஜ ராவ்

ஆசிரியர்: நீலம்
வெளியீடு:
சாந்தி பதிப்பகம்,
44, அண்ணாசாலை,
சென்னை-600 002.

பக்கம்:80 விலை:ரூ.15/-

திரைப்பட உலகில் 'ஸ்டில்' நாகராஜ ராவ் பேரும் புகழும் பெற்றவர். தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, காமிராவில் கைவண்ணம் காட்டியவர் அவர்.

பல்வேறு கோணங்களில் அவர் எடுத்த படங்கள் பலரால் பாராட்டப் பெற்று விடுகின்றன. மிக அற்புதமான அவரது படங்கள், அழியா ஓவியங்களாக விளங்கி வருகின்றன. அன்னாரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் அழகிய நூலே இது. இளம் புகைப்படக் கலைஞர்கள், இந்த மேதையின் வாழ்க்கையை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி.கிரி

தென்றிசை அன்னம் குற்றாலம்

என். ரெங்கநாதன்

தமிழ்நாட்டின் தென் மாவட்டமான திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென் பொதிகை மலை தழுவி வரும் தென்றலோடு திருக்குற்றாலத்து அழகு சிந்தும் அருவிகளில் நீர் சொட்ட மலரின் மணமும், மலையில் வளர்ந்துள்ள பல்வேறு மூலிகைகளின் மணத்தையும் அள்ளி வரும் சாரலும் தோன்றும் ஆனி, ஆடி, ஆவணி (ஜூன் முதல் செப்டம்பர் வரை) திங்கள்களில் நாட்டின்பல பகுதிகளிலிருந்து குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருந்து மக்கள் அலை மோதுவர்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலோ - அப்பப்பா! கூட்டம் சொல்லி முடியாது. இயற்கை எழில் கொஞ்சும் செழுமை மிகு குற்றால அருவிகள் நாட்டவர் அனைவரையும் ஆண்டுதோறும் தவறாது வருகை தரத் தூண்டுகின்றன. வானத்தைத் தொட்டு நிற்கும் மலை முகடுகளும், வனப்பு மிகுந்த பறவைகளின் இன்னிசையும், வண்டூரும் மலர்களும், வழிபாட்டிற்குரிய தெய்வச் சிலைகளும், வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்பங்களும் திருக் குற்றாலத்தில் கண்டு களிக்கத்தக்கன.

திருக்குற்றாலம் தென்காசி ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும், மதுரையில் இருந்து 160 கி.மீ. தூரத்திலும், திருநெல்வேலியில் இருந்து 60 கி.மீ. தூரத்திலும், திருவனந்தபுரத்திலிருந்து 115 கி.மீ. தூரத்திலும் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஏறத்தாழ 550 அடி உயரத்தில் உள்ளது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் உள்ள 'குத்தாலம்' என்ற ஊரை வேறுபடுத்துவதற்காக, குற்றாலத்தை திருக் குற்றாலம் என்றே அழைக்கிறார்கள்.

ஸ்பா ஆப் சௌத்

குற்றாலம் தென்னாட்டு ஸ்பா என்ற பெருமையுடைத்து. ஸ்பா என்பது பெல்ஜியம் நாட்டில் உள்ள ஊற்று நீர் வளம் நிறைந்த ஆரோக்கியத் தலம். அந்த ஊற்று நீர் மருத்துவ குணங்களைக் கொண்டதாக இருக்கும். அதே போல் குற்றாலம் இருப்பதால் முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் இப்பெயரை இவ்விடத்திற்குச் சூட்டினர்.

இலக்கியத்தில் குற்றாலம்

''மலையார் சாரல் மகவுடன்
வந்த மடமந்தி குலையார்
வாழைத் தீங்கனி மாந்தும்
குற்றாலம்''

என்று தமிழிலக்கிய 'வோர்ஸ்ட் வொர்த்து' திருஞானசம்பந்துப்பெருமானால் போற்றப்பட்ட இத்திருத்தலம் தென்னாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கில் பழம்பெருமை வாய்ந்தது. சிவபெருமானின் ஐவகை அம்பலங்களுள் ஒன்றான சித்திர சபையினைக் கொண்ட சிறப்புடைத்து.

திருக்குற்றாலத்தில் கோயில் கொண்டுள்ள திருக்குற்றால நாதரின் பெருமையினை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

''சுற்றாத ஊர் தோறும் சுற்ற
வேண்டாம் புலவீர்
குற்றாலம் என்றொருகாற்
கூறினால் - வற்றா
வடவருவியானே மறு
பிறவிச் சேற்றில்
நடவருவி யானே நமை.''

அருவியைத் தாங்கியுள்ள குற்றாலம் மலை மூன்று கொடுமுடிகளைப் பெற்றுள்ளது. அவை பட்சிப் பொற்றை, வாலியம் பொற்றை, திருமலை பொற்றை ஆகிய பெயர்களைப் பெற்று 'திரிகூட மலையாக'க் குற்றாலக் குறவஞ்சியில் பாராட்டப்படுகிறது.

இயற்கை வளம்

இயற்கை அன்னையின் எல்லையில்லாப் பேரழகு இம்மலையில் எங்கும் பொங்கி வழிகிறது. தேக்கு, மயிலை, கோங்கு, அத்தி, புன்னை, ஆல், இலுப்பை, தென்னை, பலா, கமுகு, வாழை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சந்தனம், மங்குஸ்தான் ஆகிய மரங்கள் மணம் பரப்பி நிற்கின்றன. இம்மலையில் பூத்துக் குலுங்கும் மல்லிகை, செண்பகம், முல்லை, வெட்சி ஆகியவை வருவோரை வரவேற்கும் வண்ண மலர்களாகத் திகழ்கின்றன.

'பக்கம் வாழைப் பாய்
கனியோடு
பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி
தூங்கும் குற்றாலம்' -

என்று பாடுகிறார் சம்பந்தர், வேங்கை மரங்கள் சூழ்ந்த சோலையில் கோல வண்டுகள் குற்றால நாத்தரைப் பண் சுமந்த பாடலால் பாடும்.

'கொம்பார் சோலைக் கோல
வண்டு யாழ்செய் குற்றாலம்'
என்பார் ஞானசம்பந்தர்.

நில மலர்கள் சூழ்ந்த அணைகளை உடைய சோலைகளில் கோல மஞ்ஞை பேடையோடு ஆடும் குற்றாலத்தின் செந்நெல் வளத்தினைச் செழுமையினைத் திரிகூட ராசப்பக்கவிராயர்,''

''கன்னிமாப் பழுத்துக்
கதலித்தேன் கொழித்துச்
செந்நெல் காத்து அளிக்கும்
நன்னகர்ப் பதியான்''
என்று பாடுவார்.

நெஞ்சை அள்ளும் அருவிகள்

குற்றால அருவிகளின் அழகைக் கான 'ஆயிரங்கண் போதாது வண்ணக்கிளியே - குற்றால அழகை நாம் காண்பதற்கு வண்ணக்கிளியே' என்று பாடி மகிழ்கிறார் கவிஞர். மலர்களும் கனிகளும் அங்கே மண்டிக் கிடிக்கும் அருவிகள் ஒன்றா, இரண்டா! ஒன்பது அருவிகள்! அவைகளை வர்ணிக்க அழகு தமிழில் வார்த்தைகள் இல்லை.

''போதும் பொன்னும் உந்தி
அருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும்
குற்றாலம்'

- திருஞான சம்பந்தர்

குற்றால அருவிகள் காட்சிக்கும் மாட்சிக்கும் உரியவை. உடல் நலமும், உள்ள வளமும், தரும் குற்றால அருவி, நோயகற்றும் மூலிகை மணத்துடன் நீராடும் மக்களுக்குப் புதுத்தெம்பும், எழுச்சியும் நல்குகின்றது.

பொதிகை மலை திரிகூடமலை எனப்படும் குற்றால மலையிலிருந்து உருவாகிவரும் சிற்றாறு, தேனருவி, செண்பக அருவி, வற்றாத வட அருவி என்னும் பேரருவி, சிற்றருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி, புது அருவி, பழத்தோட்ட அருவி என்று ஒன்பது அருவிகளாகப் பாய்ந்தோடிச் செல்வகைக் .காணக் கண் கோடி வேண்டும்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 10 இலட்சம் ஊனமுற்றோர் நலத்திற்காக 1992-93-ஆம் ஆண்டிற்குச் சுமார் ரூ.700 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில், தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோரின் நலன் மற்றும் மறுவாழ்வினை முழுமையாகக் கவனிப்பதற்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கான நலப்பணிகளை மேம்படுத்தும் பொருட்டும், சமுதாயத்தின் மிகவும் நலிவுற்ற இந்தப் பிரிவினரின் நெடுநாள் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் தற்போதுள்ள சமூக நலத்துறை பிரிக்கப்பட்டு 'ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்' உருவாக்கப்பட்டுள்ளது.

தேனருவி

''தேனருவித் திரை எழும்பி
வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுக்கும்''

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் நயமுற நவிலும் 'தேனருவி' மலையடிவாரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் மலை மேல் நடந்தால் நூறு அடி உயரத்தில் இருந்து விழும் அழகிய காட்சியினைக் காணலாம். தேனைப் போன்று மெல்லிய ஒழுங்குடன் "மலர்களைப் போன்று நீர்த் துளி சிதறி விழுகிறது. அக்காட்சியைக் காணாத கண்ணும் கண்ணோ?

அருவி தண்ணீர் விழும் இடத்திலிருந்து சுமார் 30 அடி தூரத்திற்கு நீண்ட குளம் போன்ற பகுதியில் நீந்தி மகிழ்ந்து விளையாடலாம்.

செண்பக அருவி

தேனருவியிலிருந்து புறப்பட்டோமானால் சுமார் 2½ கி.மீ. தூரத்தில், செண்பக அருவியினைக் காணலாம். தேனருவித் தண்ணீர் சிற்றாறு மலைக் குன்றுகளில் ஓடி மறுபடியும் ஓரிடத்தில் 30 அடி உயரத்தில் இருந்து அருவியாக விழுகிறது. 'செண்பக மரங்கள் நிறைந்த செழுமையான காட்டு வழியே பாய்ந்து வருவதால் இது 'செண்பக அருவி' எனப் பெயர் பெற்றது போலும். செண்பக தேவியின் சிறு கோயிலும் இங்கே இருக்கிறது. ''தேன் அலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்'' என்று குற்றாலக் குறவஞ்சியில் புகழப்படும் இவ்விடம் நிலா விருந்துக்கும், மனைப்புற விருந்துக்கும் ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

வட அருவி எனப்படும் பேரருவி

செண்பக அருவியிலிருந்து வரும் தண்ணீர் சுமார் 2 கி.மீ. தூரம் அடர்ந்த மா மரங்கள் சூழ்ந்த காட்டின் வழியே வந்து மாவடித் துறையைக் கடந்து சுமார் இருநூற்று தொண்ணூறு அடி உயரத்திலிருந்து இழுமென 'இழிதரும் அருவி'யாக ஓசையெழுப்பி விழுகின்றது. வட அருவி எனவும் அழைக்கப்படும் இப்பேரருவியில் இரவு, பகல் என்ற வேறுபாடினின்றி மக்கள் எந்நேரமும் குளித்து மகிழ்வர். வெகு உயரத்தில் இருந்து ஒரே வீழ்ச்சியாக இஃது விழுமாயின் இவ்வருவியில் நீராடுவதே இயலாததொன்றாவிடும். அதனால் இயற்கையிலேயே இடையில் பெரும் பாறையில் விழுந்து பொங்கிப் பரந்து விரிந்து மேலெழுவதால் இதனைப் ''பொங்குமா கடல்'' என்று அழைப்பர். மழைக் காலங்களில் இப்பகுதியை மலையின் உச்சியிலிருந்து இதனைப் பார்க்கும்பொழுது நிலை தடுமாறி பலர் இறக்கவும் நேரிடுகிறது. அதனால் குற்றால சாரல் காலத்தின் போது தடுப்பு அரண்கள் அமைக்கப்படும். காவல்துறையின் கண்காணிப்பும் இருக்கும். எத்தனை முறை குளித்தாலும் எப்பொழுது குளித்தாலும் நீர்க்கோவை போன்ற ஊறுகள் நேராச் சிறப்புடையவை குற்றால அருவிகள்.

கண்கொள்ளா ஐந்தருவி

பேரருவியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் சிற்றாற்றின் ஒரு கூறு ஐந்தருவிகளாக விழுகிறது. ஆண்கள், பெண்கள் குளிப்பதற்கு என்று பிரிக்கப்பட்டுள்ளது. காட்சி அலங்கார ஒளிப்பிழம்புகள் இரவில் அருவியின் இயற்கை அழகுக்கு மெருகூட்டுகின்றன. அமைதியாகக் குளிக்க ஏற்ற அருவி. பந்தற் கூரைப் பாறை முருகன் திருக்கோயிலுடன் திகழ்கிறது.

புலியருவி

பாசுபத்தன் அருவி எனப்படும் புலியருவி 'குழந்தைகள்' குளிப்பதற்கேற்ற இடம். கலைத் தந்தை கருமுத்து தியாகராசனாரால் புதுப்பிக்கப்பட்ட ஐயனார் கோயிலும், அருவியும் அவரை என்றும் நினைவு கூர்வன. பெயர்க் காரணம் கேட்டால் 'புலிகள் இங்கு வந்து நீரருந்தும்' என்று கூறுவர்.

பழைய குற்றால அருவி

முப்பது அடி உயரத்தில் இருந்து விழும் பழைய குற்றால அருவி பேரருவியிலிருந்து சற்று தூரத்தில்



இருந்தாலும், சாரலின் போது சிறப்புப் பேருந்துகளும், வேன்களும் இயங்குகின்றன. திரு. காமராசர் முதலமைச்சராக இருந்த பொழுது மக்கள் குளிப்பதற்கேற்றவாறு செம்மைப்படுத்தப்பட்டதாகக் கூறுவர். ''சுள் சுள்' என்று விழும் அருவித் துளிகள் இங்கு குளிப்போரை மகிழ் விக்கும்.

சிற்றருவி

பேரருவிக்கு மிக அருகில் அமைந் துள்ள சிற்றருவி இரண்டு அருவி களாகப் பிரிக்கப்பட்டு ஆண்கள், பெண்கள் என்று தனித்தனியாகக் குளிக்க வசதி உண்டு. குளியலறை யில் குளிப்பது போல் இருக்கும். இங்கு குளிக்க நகரியத்தினர் சிறப்புக் கட்டணம் வசூலிப்பர்.

புது அருவி, பழத்தோட்ட அருவி, (சாமியார் அருவி) போன்ற அருவிகள் தற்பொழுது பிரசித்தம் பெற்று வருகின்றன.

திருக்குற்றால நாதசுவாமி திருக்கோயில்

மாணிக்கவாசகப் பெருந்தகை யார் தம் திருக்கோவையாரில் ''குற்றாலத்துக் கோல பிண்டி பொழில் வாய்தட வரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே'' எனச் சிறப்புற்ற குற்றால நாதர் திருக் கோயிலில் இறைவனுக்கு வலப்புறம் குழல் வாய் மொழி அம்பிகையும், இடப்புறம் பூரண மேரு ரூபமாக இறைவி பராசக்தியும் கொலுவீற்றி ருக்கிறார்கள்.

கோயிலில் உள்ள பிரகாரத் திலிருந்து பேரருவியின் அழகைக் கண்டு ரசிக்கலாம்.

இத்தலத்தில் வருடத்தில் சித்திரை விசு, ஐப்பசி விசு, மார்கழித் திருவாதிரை போன்ற திருவிழாக்கள் பத்து நாட்களும், தை மகத் தெப்பம் ஒரு நாளுமாக நடைபெற்று வருகின் றது. திருவிழாக் காலங்களில் இங்கு நடைபெறும் தாண்டவ தீபாரா தனையைப் போல் தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாது. காண்பவர்கள் கண்ணையும், கருத் தையும் ஒருங்கே ஈர்க்கக் கூடியது.

சுற்றுலா வளர்ச்சி

ஏழைகளின் நல்வாழ்வுத்தலம் என்ற பெயர் பெற்ற குற்றாலம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் சுற்றுலாத்தல மாகும்.

சாரல் சீசனின் போது அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பு பேருந்துகளை இயக்குகின்றன.

தனியார் வேன்களும் அதிக அள வில் விடப்படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் உணவுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. உல்லாசப் படகு சவாரிக்கும் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சார்பில் தகவல் மையமும் இயங்குகின்றது. சாலை களும், அருவிப் பகுதிகளும் புதுப் பிக்கப்படுகின்றன.

தங்குமிடங்கள்

குற்றால நகரியத்தின் சார்பில் சிறுகுடில்கள், ஒருவர் தங்கும் அறை, இருவர் தங்கும் அறை, குடும்பம் தங்கும் அறை என்று பல்வேறு தங்கும் விடுதிகள் கட்டப் பட்டுள்ளன. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும்.

இவைத்தவிர கோயிலின் சார் பில் கட்டப்பட்ட தங்கும் விடுதிகள், வனத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை சார்பில் கட்டப்பட்ட ஆய்வு விடுதிகள், போக்குவரத்துக் கழகம் தொழி லாளர் அமைப்பு ஆகியவற்றின் ஓய்வு விடுதிகள், தனியார் விடு திகள் எனப் பலவகை தங்கும் விடுதிகள் உள்ளன. அருகில் உள்ள தென்காசியிலும் தனியார், அரசு தங்கும் விடுதிகள் உள்ளன. தென் காசி புகைவண்டி நிலையத்தில் தங்கும் விடுதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

பொழுது போக்கு

சாரல் 'சீசனி'ல் சாரல் திரு விழா நடத்தப்படுகின்றது. திரை யரங்கம், பூங்கா, பாம்புப் பூங்கா, படகுச் சவாரி, பொருட்காட்சி போன்றவையும் இதர பொழுது போக்கு அம்சங்களாகும்.

முடிவாகக் கூறினால், பார்த்தால்
பரவசம்
குறித்தால் உடலில் சுகம் -
உள்ளத்தில்
ஆனந்தம் இதுதான் குற்றாலம்.

சுருங்கக் கூறினால் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் இடம், அழகின் சிரிப்பு குற்றாலம். குற்றாலம் சென்று அருவிகளில் குளித்து மகிழ்வோம்!

- நன்றி: 'திட்டம்'.



இன்சாட்

முதன் முதலாக, முழுவதும் நம்நாட்டுப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது தலைமுறை பல நோக்குச் செயற்கைக் கோள் இன்சாட் - 2ஏ ஜூலை மாதம் 10-ஆம் தேதி பிரெஞ்சு கயானா வில் உள்ள கூரு என்ற இடத் திலிருந்து சக்தி வாய்ந்த 'ஏரியன்' என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

தற்போது விண்ணில் அது வெற்றிகரமாகச் சுற்றி வருகிறது. கர் நாடகாவில் ஹசனில் உள்ள தலைமை விண்வெளிக் கட்டுப் பாட்டு மையத்தின் கீழ் இது இயங் கும். செலுத்தப்படுவதற்கு முன் இன்சாட் 2ஏ-வின் மொத்த எடை 1906 கிலோ, நீளம் 23 மீட்டர். வானிலை பற்றிய விவரம், புயல் எச்சரிக்கை குறித்து இச் செயற்கைக் கோள் தெரிவிக்கும். தொலைத் தொடர்பு, தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்பிற்கும் இச் செயற்கைக்கோள் உதவும்.



மானிடவியல் படிமங்கள்

கடந்த ஏப்ரல் மாதம் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 'தென் இந்தியப் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சியின் ஒரு பகுதியே 'மானிடவியல் படிமங்கள்' ஆகும்.

நமது வரலாற்றுக் காலப் படிமங்களை அறியு முன், இந்தியாவின் வெண்கலக் காலத்தைப் பற்றியும், முந்தைய வரலாற்றுத் தொல்பொருளியல் மக்கள் வெண்கலத்திலிருந்து வடித்த அரும்பொருள்கள் யாவை? அவை சமூக, பொருளாதார மற்றும் சமய வாழ்வில் எவ்வகையில் சம்பந்தப்படுத்தப்பட்டன; அவ்வித அரும்பொருள்கள் 2000 - 2500 ஆண்டுகளுக்குப் பிறகு எப் புதையல் தடயங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன என்பதை எல்லாம் ஒன்று திரட்டி, ஒட்டு மொத்தமாக, அவைகளின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணம் ஆகியவைகளைக் கோவையாகக் காட்ட முற்படுவதே இந்த மானிடவியல் படிமங்கள் என்ற சிறப்புக் காட்சியின் உள்நோக்கமாகும்.

இவைதவிர, நமது கிராமிய, நாட்டுப்புற மக்களிடம் எளிய முறையில் வெண்கலத்தினாலாகிய கிராமியத் தெய்வங்களின் கலைப் பொருள் படைப்புகள், இம்மக்களின் சமய, தெய்வீக வழிப்பாட்டு முறைகள், அவர்களின் எளிய பண்பாடு நம்மிடமிருந்து எவ்வாறு சற்று வேறுபட்டுள்ளது என்பதையும் இக்காட்சி வெகு தெளிவாகக் காட்டுகிறது.

இவைகளைத் தவிர, நம்மோடும், கிராமிய மக்களோடும் இன்றும் வாழ்ந்து வருகின்ற, நமது காலத்துடன் வாழ்ந்து வருகின்ற, ஆனால் தனித்து மலைக்காடுகளில் வாழ்ந்துவரும் நமது பழங்குடிகளின் படிமங்கள் யாவை? அவைகள் கலைப் படைப்புகளா? சமயத்துடன் கொண்டுள்ள தொடர்பு, நம்மைப்போன்றமக்களால் அவர்களின் கலைக்கு ஏற்பட்ட சிதைவு, ஆகியவைகளையும் ஒருவாறு அறிய முயலுவதே இந்தச் சிறப்புக் கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

இவை தவிர, வழிபாட்டில் உதவக்கூடிய வெண்கல அரும்பொருள்கள், இசைக்கருவிகள், ஆபரணங்கள், கலயங்கள், வெண்கல விளையாட்டுப் பொருள்கள், ஆகியவையும் காட்சிக்கு வைக்கப்பட்டள்ளன.

சிந்து நதிப் பண்பாட்டு நாகரிகம் தான் இந்தியாவின் வெண்கலக் காலத்தின் உதயத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. சுமார் கி.மு. 3500 ஆண்டுகளுக்கு முன் இந்நதிப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல நடனப் பெண், (மாதிரி உருவம்), செம்புக் கோடாரிகள், அம்பு முனை, தூண்டில் முள் ஆகியவைகளை ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் இந்தியாவின் கங்கை நதிப்புறச் செம்புப் பண்பாடு தமிழகத்திலும் (காலம் சுமார் கி.மு. 4000) பரவியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் இராமநாதபுர மாவட்டச் சிவந்திப்பட்டியில் நமது அரசு அருங்காட்சியகத்தினால் சில ஆண்டுகளுக்கு முன், காப்பாட்சியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதையல் செம்புக்

டாக்டர் நே. தேவசகாயம்
காப்பாட்சியர்
மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை-8

கலவைப் பிடிக்கத்தியும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர, பீகார், பரகுண்டாவில் 1887-இல் திரு. ராபர்ட் புட் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட பெரிய வெண்கலக் கோடாரியும் முதல்முறையாகக் காட்சியில் இடம் பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக, தென்னகத்தில் வெண்கலக் காலம் இரும்புக் காலத்துடன் கோக்கப்பட்டுள்ளதைத் திருநெல்வேலி ஆதிச்சநல்லூரில் திரு. அலெக்ஸாண்டர் ரே அவர்களால் கண்டெடுக்கப்பட்ட வெண்கலக் கடா, புலி, சேவல், எருமை உருவம் கொண்ட கிண்ணங்கள், வளையல்கள், மணிகள், ஆகியவை விளக்குகின்றன. தவிர, இதில் சிறப்பு இடத்தைப் பெறுவது வெண்கலச் சிறிய தாய் தெய்வப் படிமமாகும். இது வீட்டு வழிபாட்டிற்காக, தெய்வங்களின் உருவங்களைச் செய்து வழிபடும் பழக்கம் தோன்றிய காலத்தைச் சுட்டி காட்டுவது போல உள்ளது. இதன் காலம் கி.மு. 8 முதல் கி.பி. முதல் நூற்றாண்டாகும். அடுத்ததாக, தமிழகத்தில் நீலகிரியில் திரு பிரீக்ஸ் அவர்கள் 1878-ஆம் ஆண்டு தோண்டி எடுத்த வெண்கல மணிகள், கலயங்கள், வளையல்கள், கண்ணுக்கு மை தீட்டும் வெண்கலக் குச்சிகள், மோதிரங்கள் இடம் பெறுகின்றன. இவை தவிர மிகவும் புகழ் பெற்ற தாமரை மலர் போன்ற சித்திர வேலைப்பாடுள்ள வெண்கலக் கிண்ணம், மத்தியத்தரைக்கடலில் கி.மு. 3000 ஆண்டுக் காலத் தங்க கிண்ணத்தைப் போன்றுள்ளதாக இருக்கிறது. இது வெண்கலக் காலத்தின்கலை ஆர்வத்தை மிகச் சிறப்பாகக் காட்டுகிறது.

அடுத்ததாக, உள்ள காட்சிப் பெட்டிகளில், நாட்டுப்புறப் படிமங்களான மதுரை வீரன், முனியன், முனியப்பன், காளி, விநாயகர், மற்றும் பூசாரி உருவங்கள் இடம் பெறுகின்றன. இவை எழும்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களில் விசாரணை முடிந்து அரசிற்கு உடைமையாக்கப்பட்டவைகளாகும். மற்றும் சில கிராமியப் படிமங்கள் மாவட்டங்களிலிருந்து புதையலாகக் கிடைத்தவையாகும்.

ஒரிஸ்ஸா கோண்டர் பழங்குடிகளின் படிமங்கள், மனித, பறவை, விலங்குகள் உருவத்தினாலானவை. இவை தங்கள் குலக் குறிகளாக வழிபட்டு, திருமண ஊர்வலங்களில் முன்னதாக எடுத்துச் செல்லவும், பின்னர் தங்களின் முன்னோருக்குப் படைப்பதாகவும் கூறப்படுகிறது. பொதுவாக, பழங்குடி மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் தாங்கள் செய்யும் உருவத்தின் வடிவமைப்பில் செலுத்தும் கவனத்தைவிட, கண்ணுக்குத் தெரியாத உட் சக்தியை அப்படிமங்களில் கொண்டுவருவதை, இப்படிமங்களில் காணலாம். கர்நாடகத்தின் பூத ஆலயங்களில், பித்தளை உருவங்கள் இறந்தவர்களையும், பூதங்களையும், சாந்தப்படுத்துவதற்காகப் படைக்கப்படுகின்றன. இவ்வகைப் படிமங்கள் மெழுகு உருக்கு முறையில் தயாரிக்கப்படுகின்றன.

வெண்கலத் தெய்வப் படிமம், ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

பித்தளை மற்றும் வெண்கலத்தினாலான வழிபாட்டுச் சடங்குப் பொருள்களான விஷ்ணு பாதம், சக்கரம், வழிபாட்டு இசைக்கருவிகளான தாளம், சேமங்கலம், பூசாரி கைச்சிலம்பு, விபூதி கிண்ணம் ஆகியவை இக்காலச் சமய நடை முறைகளைக் காட்டுகிறது.

நமது மக்களின் வாழ்க்கை, பொழுதுபோக்கு முறைகளைக் காட்ட வேலூரிலிருந்து பெறப்பட்ட வெண்கல வெற்றிலை உலக்கு, மற்றும் வீட்டு விளையாட்டுப் பொருளான மலபாரின் வெண்கலப் பல்லாங்குழி, தாயம் ஆகியவைகளும் காட்சியில் இடம் பெறுகின்றன.

திருவாச்சுடர், கிரீடம், பூக்கள் ஆகிய விக்கிரகங்களின் வேலைப்பாடான ஆபரணம் 1934-ஆம் ஆண்டு தஞ்சை, நன்னிலம், மணக்கல் கிராமத்தில் புதையலாகக் கண்டெடுக்கப்பட்டவையாகும். இவை தெய்வீக வழிபாட்டுக் கலாச்சாரத்தைக் காட்டுவனவாக உள்ளன.

ஆக மொத்தத்தில், வெண்கலக் காலத்தின் தோற்றம், வளர்ச்சி, பரிமாணத்துடன், நாட்டுப்புற, பழங்குடிகளின் படிமங்களும், நம் நாட்டு மக்களின் சமய, பொழுதுபோக்கு வெண்கலப் பொருள்களும் சேர்ந்து படைக்கப்பட்டுள்ள இந்த 'மானிடவியல் படிமங்கள்' என்ற சிறப்புக் கண்காட்சி முதல் தடவையாக, சிறப்பு அரும்பொருள்களைக் கொண்டு அமைந்திருப்பது கண்ணிற்கு விருந்தாகவும், கல்வி வளர்ச்சிக்கு உதவியாகவும், அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள்

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் 17.7.92 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் தமிழகத்திலும், குறிப்பாக சென்னை நகரிலும் உள்ள போக்குவரத்து நெரிசலைச் சீரமைப்பது குறித்தும், போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, ஆய்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்தார்.

தமிழக உள்துறைச் செயலாளர், திரு மலைச்சாமி, போக்குவரத்துத்துறை ஆணையர் திரு. சிவசுப்பிரமணியம், இணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், துணைப் போக்குவரத்துத்துறை ஆணையர், மண்டல போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளின் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இனி செயல்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. விரைவில் சென்னை அசோக் நகரில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 2-வது தளத்தில் சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அலுவலகம் (மேற்கு) செயல்படும் என்றும், பல்வேறு மாவட்டங்களிலும் இவ்வலுவலகங்களக்காக நிலங்கள் கையகப்படுத்தும் நடவடிக்கை மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நியமனத்தில் நீதிமன்றங்களின் தடையாணை காரணமாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கான வழிவகைகளும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

போக்குவரத்துத் துறை அதிகாரிகளும், அலுவலர்களும் தமிழகம் எங்கும் உள்ள வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதென்றும், உரிமம் இல்லாத வாகனங்கள், உரிமம் இல்லாமல் வாகனங்களை ஓட்டுதல், வரி கட்டாமல் வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகியவையும் குறிப்பாக மணல், செங்கல் ஆகியவைகளைக் கொண்டுச் செல்லும் லாரிகள் தற்போது வேகக் கட்டுப்பாட்டை மீறியும், ஆபத்தாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டும் நிலையையும் கண்காணிக்க வேண்டுமென்றும் துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில், டிரைவர் சீட்டில் இருவர் பயணம் செய்வது, அதிகக் கட்டணம் கேட்பது, குறைந்த தூரத்திற்கு வர மறுப்பது, பயணிகளிடம் மரியாதைக் குறைவாக நடப்பது ஆகியவைகள் குறித்துக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மேலும், இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை பெருகி வருவதால், சென்னை நகரின் முக்கியச் சாலைகளின் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்படுவதால் துரிதமாகவும் சொகுசாகவும் பயணம் செய்யும் வகையில் பேருந்துகளை விடுவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும், துரிதப் போக்குவரத்திற்கு உதவிடும் மாற்று யோசனைகளைக் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

★ சென்ற ஆண்டில் மார்ச் முதல் செப்டம்பர் வரை 4,83,931 வெளிநாட்டினருக்கு இந்தியாவிற்கு வருவதற்காக விசா அளிக்கப்பட்டது.

★ தற்போது இந்தியாவில் 80,000 திபெத் நாட்டினர் அகதிகளாக உள்ளனர்.

★ சென்ற ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை பர்மாவில் இருந்து ஏறத்தாழ 70,000 குடும்பங்களைச் சேர்ந்த 2,10,270 இந்திய வம்சா வழியினர் நம் நாட்டுக்கு வந்துள்ளனர்.

★ நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஐந்தாவது முறையாக 1991-இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் சாதனைகள்

வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழகத்தின் நிலவளம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. இத்துறை கீழ்க்கண்டவகையில் உழவர்களுக்கு உதவி வருகிறது.

1. மண் அரிப்பைத் தடுத்தல் மற்றும் மண்ணில் ஈரம் காத்தல்.
2. பாசன வளங்களை உருவாக்குதல்/நிலைப் படுத்துதல் மற்றும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர் உபயோகத்திற்கு வழிவகுத்தல்.
3. கிணறு, ஏரி, ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.
4. வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தேவையான பண்ணைக் கருவிகள் குறைந்த வாடகைக்கு அளித்தல்.
5. வளம் குன்றிய பாழடைந்த நிலையிலுள்ள நிலங்களையும், தரிசு நிலங்களையும் மேம்படுத்தி நிரந்தரமாகப் பயன்தரும் மாற்று நில உபயோக முறைகளைப் புகுத்துதல்.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை இத்துறை மேற்கொள்கிறது.

மண், நீர்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம், பாசனப்பகுதி மேம்பாடு, நிலமேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் மேற்கூறிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

புதிய முயற்சிகள்
நுண்ணிய நீர்ப்பாசன முறைகள்

நீர் உபயோகத்தினை உகந்த அளவிற்கு உயர்த்திடவும், சிக்கனத்தைப் புகுத்திடவும், ஒரு புதிய உத்வேகத்தோடு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அமைத்துக்கொள்ள முன்வரும் உழவர்களுக்கென ரூ.40.01 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. உழவர்களைக் கவரும் வகையில் மானிய விகிதங்களையும் அரசு மாற்றியமைத்துள்ளது.

நிலப்பரப்பு மானிய விகிதம் மானிய அளவு

1. ஒரு எக்டேர் வரையில் 50சதவிகிதம் ரூ.12,500/எக்டேர்
2. ஒரு எக்டேருக்கு மேல் 2 எக்டேர் வரை 40 சதவிகிதம் ரூ.10,000/எக்டேர்
3. 2 எக்டேருக்கு மேல் 3 எக்டேர் வரை 30 சதவிகிதம் ரூ.7,500/எக்டேர்

உழவர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 301 உழவர்கள் இத்திட்டத்தின் மூலம் 1991-92-இல் பயனடைந்

மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல், பாசன வளங்களை உருவாக்குதல், நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் சிக்கன நீர், உபயோகத்திற்கு வழி வகுத்தல் முதலான பணிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை உறுதுணையாக உள்ளது.

துள்ளனர். மேற்கூறிய மானிய விகிதத்தில் 1992-93-ஆம் ஆண்டு சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்து பயனடைய இருக்கும் உழவர்களுக்கு அரசு ரூ.187.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தரமான பொருட்களை உபயோகப்படுத்தவும், தங்கு தடையில்லாமல் நீர்ப்பாசன அமைப்புகள் இயங்கவும், உழவர்களுக்குப் பயற்சி தரவும், விரிவான முறையில் நடைமுறைகளை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது.

தோட்டக்கலை வளர்ச்சிக்கென, சொட்டு நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்திட மத்திய அரசு நிதியுதவியோடு, ரூ.101.57 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும், தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முன்வரும் உழவர்களுக்கு 50 சதவிகிதம் மானியத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 457 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

மாநிலத்தில் அதிக பரப்பளவு மானாவாரி நிலங்கள் மண் அரிப்பிற்கு உட்பட்டு நிலச் சீரழிவிற்கு இலக்காகின்றன. மண்ணைப் பாதுகாத்து நீர்வளத்தைப் பராமரித்து உற்பத்தித் திறனை உயர்த்தவேண்டியது மிக அவசியத் தேவையாக உள்ளது. மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளின் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 1991-92-இல், 76,462 எக்டேர் நிலங்களும் இவ்வாண்டு மே மாதம் முடிய 8,248 எக்டேர் நிலங்களும் பயனடைந்துள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1991-92-இல் 454 எக்டேரிலும், இவ்வாண்டு 11 எக்டேரிலும் செயல்படுத்தியுள்ளது. மேலும் இப்பணிகள் குந்தா மற்றும் கீழ்பவானி பகுதிகளில் நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 7,596 எக்டேரிலும் இவ்வாண்டு 465 எக்டேரிலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1991-92-இல் 1,573 எக்டேரிலும் இவ்வாண்டு 67 எக்டேரிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 1,648 எக்டேரிலும், இவ்வாண்டு 130 எக்டேரிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

காற்றரிப்புத் தடுப்புத் திட்டத்தின் மூலம் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1991-92-இல் 1,007 எக்டேரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் 4,063 எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொண்ட மண்வளப் பாதுகாப்புத் பணிகளினால் 1991-92-இல் 4,457 ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியினரைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தேயிலையிலிருந்து மூலிகை

தேயிலையிலிருந்து மூலிகை மருந்துகளைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் கல்கத்தாவிலுள்ள தேயிலை ஆராய்ச்சிச் சங்கம் ஈடுபட்டுள்ளது. தேயிலையில் வைட்டமின் B-12, புரோட்டீன், தாது உப்புக்கள், வைட்டமின்-கே ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஜப்பானில், தேயிலைச் சாற்றிலிருந்து இரத்த அழுத்தம், கொழுப்புச் சத்து ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய மாத்திரைகள் தயாரித்து விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

நில மேம்பாடு

வேளாண்மைப் பொறியியல் துறை நிலத்தைச் சமன்படுத்தி பயன்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும் நில மேம்பாட்டுத் இத்திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு 115 புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் 1,72,062 மணிகளும், இவ்வாண்டு 42,589 மணிகள் பணி செய்தும், 177 உழுவைகள் (டிராக்டர்கள்) மூலம் 1991-92-இல் 1,15,021 மணிகளும், இவ்வாண்டு 12,370 மணிகள் பணி செய்தும் சாதனை படைத்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் 1991-92-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்துச் சீரமைக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளது. கும்பகோணம் மகாமகம் குளத்தில் தூர் எடுக்கும் பணியினையும் வேளாண்மைப் பொறியியல் துறை புல்டோசர்கள் மூலம் குறுகிய காலத்தில் நிறைவேற்றிப் பாராட்டினையும் பெற்றது.

சிறுபாசனம்

இத்திட்டத்தில் சிறுபாசனக் கருகிகளாகிய வேளாண்மைப் பொறியியல் துறையின் 157 ஆழ்துளைக் கருவிகள், 92 பாறைவெடி மற்றும் 46 நீள் துளைக் கருவிகள், 387 கைத்துளைக் கருவிகள், 17 காற்றழுத்தக் கருவிகள், 25 மின் தடைக் கருவிகள் மற்றும் 2 மின் அளவியல் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி 1991-92-இல் 5,823 குழாய்க் கிணறுகளும், 3,501 வடிமுனை குழாய் கிணறுகளும் 6,011 கிணறுகளில் நீர் பெருக்கத்தை உண்டாக்க கிணற்றுக்குள் குழாய்க் கிணறு அமைத்தும், கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளும் செய்து வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது. இவ்வாண்டு 1,074 குழாய்க் கிணறுகளும், 714 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைத்து, 1,135 கிணறுகளில் நீர்ப்

குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக...

சென்னை நகரில் உதவி ஆணையர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகங்களில் சில இடைத்தரகர்கள் வெளியிலிருந்து செயல்படுகின்றனர் என்றும், அவர்கள் அங்கீகரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்களை விற்கின்றார்கள் என்றும் புகார்கள் பெறப்படுகின்றன.

இந்த இடைத்தரகர்களை நீக்கவிட்டு நிர்வாகத்தைச் சீரமைக்கும் வகையில் குடும்ப அட்டை, ஒப்புவிப்புச் சான்றிதழ், நீக்கல் சான்றிதழ் மற்றும் கடை, வருமானம், முகவரி மாற்றம் கோரி மனு செய்பவர்களுக்கென்று அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், தொடர்புடைய உதவி ஆணையர் அலுவலகங்களில் விற்பனைக்கென்று வைக்கப்பட்டுள்ளன. மேற்படி படிவம் ஒன்றின் விலை ரூபாய் ஒன்று ஆகும். மேற்படி படிவத்தில் நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. பொதுமக்கள் குடும்ப அட்டை தொடர்புடைய கோரிக்கைகளுக்காக மேற்படி அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களிலிருந்து பெற்று உபயோகிக்கும்படியும், இடைத் தரகர்களை ஊக்குவிக்காமல் இருக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெருக்கத்தை உண்டாக்கியும் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை கிணறுகள் அமைக்க, ஆழப்படுத்த சிறு, குறு மற்றும் மலை வாழ் விவசாயிகளுக்கு முறையே ரூ.3,000, ரூ.4,000 மற்றும் ரூ.5,000 மானியம் வழங்கப்பட்டு 1991-92-இல் 5,232 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மொத்தம் ரூ.105 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்

காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம், ஆழியாறு, பெரியார்-வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 47,576 எக்டேர் பரப்பளவிலும், இவ்வாண்டு 8,197 எக்டேர் பரப்பளவிலும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் காவிரி, கீழ்பவானி, பெரியாறு- வைகை பாசனப் பகுதிகளில் 1991-92-இல் 15,493 எக்டேர் பரப்பளவில் சுழற்சிமுறை நீர் பங்கீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1991-92-இல் 187 கசிவு நீர்க் குட்டைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10.926 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டன. இவ்வாண்டு இது வரை 237 கசிவு நீர்க்குட்டைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 10.258 இலட்சம் மனித வேலை நாட்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டங்கள்

மானாவாரி விவசாயத்திற்கெனத் தேசிய நீர்வடிப் பகுதி முகடு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 594 நீர் வேகக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம்

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் டானிடா உதவியுடன் 1991-92-இல் தரம் பாதிக்கப்பட்ட 1,650 எக்டேர் நிலப்பரப்பில் நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுப் பணிகளும், 1,110 எக்டேர் நிலப்பரப்பில் காற்றரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளும், 1,028 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நிலமேம்பாட்டுப் பணிகளும், 2,140 எக்டேர் நிலப்பரப்பில் தேரிநில மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

பண்ணை இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்

விவசாய இயந்திரங்களை இயக்கவும், அதனைப் பராமரிக்கவும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு திருச்சி, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு 1991-92-இல் 157 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பண்ணை இளைஞர்களுக்கும் உதவும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறை சாதனை படைத்துள்ளது.

நிலவிற்குச் செல்லலாம்!

(புலவர் கு. அண்ணாமலை)

வட்ட நிலா வானிலே
வருகுது பார் தம்பிநீ
சுட்ட தோசை போலவே
தோன்றும் அந்த வெண்ணிலா
கெட்டிக் கார தம்பிநீ
கையில் பிடிக்க ஓடிவா
எட்டிப் பிடிக்க முயன்றிடு
ஏணி கொண்டு வந்திடு
நம்ப மாட்டேன் பாட்டிநீ
நாளும் சொல்லும் கதையிது
எம்பும் இராக்கெட் கொண்டுவா
ஏறிச் சென்று பறக்கலாம்
நீண்ட பயணம் செய்யலாம்
நிலவில் காலை வைக்கலாம்
புதுமை பலவும் பார்க்கலாம்
பூமியில் வந்து சேரலாம்!

தெரிந்து கொண்டால் நல்லது

இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

ஆந்திரப்பிரதேசம் -	ஐதராபாத்
பீகார் -	பாட்னா
ஹரியானா -	சண்டிகர்
ஜம்மு, காஷ்மீர் -	ஸ்ரீநகர் (கோடை) ஜம்மு (குளிர்)
கேரளா -	திருவனந்தபுரம்
மணிப்பூர் -	இம்பால்
நாகாலாந்து -	கோஹிமா
ராஜஸ்தான் -	ஜெய்பூர்
திரிபுரா -	அகர்தலா
அருணாசலப் பிரதேசம் -	இடாநகர்
கோவா -	பானாஜி
இமாசலப்பிரதேசம் -	சிம்லா
மத்தியப்பிரதேசம் -	போபால்
மேகாலயா -	சில்லாங்
ஒரிஸ்ஸா -	புவனேஸ்வர்
சிக்கிம் -	காங்டாக்
உத்தரப்பிரதேசம் -	லக்னோ
அஸ்ஸாம் -	திஸ்பூர்
குஜராத் -	காந்திநகர்
கர்நாடகா -	பெங்களூர்
மகாராஷ்டிரா -	பம்பாய்
மிசோரம் -	ஐஜால்
பஞ்சாப் -	சண்டிகர்
தமிழ்நாடு -	சென்னை
மேற்கு வங்காளம் -	கல்கத்தா

யூனியன் பிரதேசங்கள்

அந்தமான், நிகோபார் - போர்ட் பிளேயர்
தத்ரா நகர் ஹவேலி - சில்வாஸா
டாமன் டையூ - டாமன்
இலட்சத் தீவுகள் - கவரத்தி
சண்டிகர் - சண்டிகர்
டெல்லி - டெல்லி
பாண்டிச்சேரி - பாண்டிச்சேரி

- எல்லாவிதப் படிப்பும், எல்லாப் பயிற்சிகளும் மனிதனை மனிதனாக உருவாக்குவதற்குத்தான்.
- 'நான்' 'எனது' என்பவை மூட நம்பிக்கைகளாகும்.
- எளிமையில்தான் வெற்றி ரகசியம் அடங்கி இருக்கிறது.
- கருத்துக்களை எடுத்துச் செல்லும் ஒரு வாகனமே மொழி.

உலகிலேயே மிக ஆழமான ஏரி!

உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?

அதுதான், ரஷ்யாவில் உள்ள பைக்கால் ஏரி.

இது பனி சூழ்ந்த சைபீரியாவில் உள்ளதால் இதை 'சைபீரியாவின் முத்து' என்று அழைக்கின்றனர். இந்த ஏரியைப் 'புனித ஏரி' என்றும் 'வாழும் அருங்காட்சியகம்' என்றும் அழைக்கின்றனர்.

பைக்கால் ஏரியின் உயர்ந்தபட்ச ஆழம், 1,637 மீட்டர் அதாவது ஒரு மைலுக்கும் மேல் ஆழம் உள்ளது இது!

இந்த ஏரிக்குள் 36 நதிகளும், சிற்றோடைகளும் கலந்து கலக்கின்றன.

இந்த ஏரியில் 27 தீவுகள் உள்ளன. விஞ்ஞானிகளின் ஆய்வுக்கூடமாகத் திகழும் இந்த ஏரியின் அடியில் வெப்ப நீரூற்றுக்கள் உள்ளன.

உலகில் எங்கும் இல்லாத 1,500 வகையான உயிரினங்கள் இங்கு உள்ளன. இங்கு மட்டும் 60,000 சீல்கள் எனப்படும் பிராணிகள் வாழ்கின்றன!

இந்த ஏரி ஆறு மாதம் நீர்ப்பரப்பாக இருக்கும்; ஆறு மாதம் பனிக்கட்டியாக உறைந்து விடும்!

இந்த ஏரியின் கரையில் வளரும் ஒரு வகைப் புல்லுக்குத் 'தெய்வப்புல்' என்று பெயர்.

—ஆதாரம்: 'தினமணி'

தோட்டக்கலைத்துறையின் சாதனைகள்

1991-92-ஆம் ஆண்டு தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவற்றில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களில் 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையைவிட 12 சதவிகிதம் அதிகமாகும்.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பழங்கள், காய்கறி உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டுதோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தி 74.27 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை களில் பழங்கள் உற்பத்தி 31.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களைவிட 10.5 சதவிகிதம் அதிகமாகும். இதுபோன்றே காய்கறிகளின் உற்பத்தி 37.46 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவை 1990-91-ஆம் ஆண்டின் சாதனையை விட 12 சதவிகிதம் அதிகமாகும்.

தோட்டக்கலைத் துறையின் மூலம் 1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம். 2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 5. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், 6. பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் ஆகிய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி 12,000 எக்டேர் பரப்பளவில் நிலையான தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்டது.

கிராமப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஊட்டச் சத்துள்ள பழங்கள் கிடைக்கும் வகையில் கிராமப்புறங்களில் ஊட்டச்சத்துத் தோட்டம் என்ற திட்டம் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 37,500 குடும்பங்கள் பயன்பெற்றனர். இத்திட்டத்திற்காக ரூ.18.70 இலட்சம் செலவிடப்பட்டது.

காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வீரிய இரகக் காய்கறி சிறுதளைகள் வேளாண்

பெருமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ரூ.2 .37 இலட்சம் செலவிடப்பட்டு 3,200 விவசாயிகள் பயனடைந்தனர். இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ.10.50 இலட்சத்தை அதிகமாக ஒதுக்கியுள்ளது.

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம் பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2,600 பழங்குடி மக்களுக்குப் பழத்தோட்டங்கள் இலவசமாக அமைத்துத் தரப்பட்டது. இத்திட்டத்திற்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.82 இலட்சம் செலவிடப்பட்டது.

பழைய தோட்டங்களில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பழைய தோட்டங்கள் புனரமைப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மா, கொய்யா, எலுமிச்சை போன்ற பழத்தோட்டங்கள் 600 எக்டேர் பரப்பளவில் புனரமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.7.64 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து 50 முன்னோடித் தோட்டக்கலை விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அண்டை மாநிலங்களில் அதிக அளவில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளுக்கு நவீன சாகுபடி செய்யும் முறையை அறிந்து கொள்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேசிய தோட்டக்கலை வாரிய உதவியுடன் தோட்டக்கலை விளை பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்புக் கிடங்குகள் கட்ட, விளை பொருட்களை விளையுமிடத்திலிருந்து எடுத்து தொலைவிலுள்ள இடங்களுக்கு விற்பனை செய்ய உதவும் வகையில் லாரி வாங்க, மேலும் தோட்டக் கலைப் பொருட்கள் அழுகாமல் பாதுகாக்க குளிர்ப்பதன அறைகட்டுதல், ஆகிய வசதிகள் செய்ய தமிழக அரசு மானியம் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் மாங்கனிகளின் உற்பத்தியை அதிகமாக்கும் நோக்கத்துடனும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தியாகும் பல வகைப்பட்ட மாங்கனிகளைத் தமிழ்நாடு வேளாண் மக்கள் காண்பதற்காகவும், கிருஷ்ணகிரியில் அகில இந்திய மாங்கனி விழா, தமிழக அரசினால் நடத்தப்பட்டது. இம்மாங்கனி விழாவில் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. மேலும் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில் மலர்க் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

53 தோட்டக்கலைப் பண்ணைகள் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தோட்டக்கலைப் பண்ணைகளில் பல்வேறுபட்ட தோட்டக்கலைப் பயிர்கள் 202 இலட்சம் எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்களின் மூலம் வேளாண் மக்களுக்கு வழங்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறையில் பல்வேறு திட்டங்கள் ரூபாய் 11 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தடுப்பூசி

சென்னை மாநகராட்சி இந்த ஆண்டு சென்னை நகர எல்லைக்குள் 80 ஆயிரம் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட ஏற்பாடுகள் செய்துள்ளது என சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம் தெரிவித்தார்.

அவர் 29.7.92 அன்று தண்டையார்ப்பேட்டை நேத்தாஜி நகர் சீதக்காதி நகர் மெட்ரிக் குலேசன் பள்ளியில் தட்டம்மைத் தடுப்பூசி முகாம் ஒன்றைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதை அறிவித்தார். அவர் மேலும் பேசுகையில், நம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுள் முக்கியமானது மக்கள் தொகைப் பெருக்கம் தற்போது 85 கோடி மக்கள் தொகையுடைய நம்நாடு கி.பி. 2025-இல் 150 கோடியாக அதிகரிக்கும் என்று தெரிவித்து, மக்கள்தொகைக் குறைப்பு மிகமிக அவசியம் என்றார். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சம் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சையளிக்கப்படும் என்றும், அனைத்து முதல் வகுப்பு மாணவர்களுக்கும் இது செய்யப்பட்டு விட்டது என்றும், மற்ற வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் செய்து முடிக்கப்படும் என்றும் கூறினார்.

அரிமாச் சங்க மாநில ஆளுநர் திரு. கே.ஜே. தாமஸ் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய டாக்டர் ஆர்.நஞ்சுண்டராவ் அவர்கள், இந்தியாவில் இண்டு கோடி குழந்தைகளைத் தட்டம்மை தாக்குகிறது. இதில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரணம் ஏற்படுகிறது. இக்கொடுமையைத் தடுக்க 7-வது மாதத்தில் குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி போட வேண்டும். 130 குடிசைப் பகுதிகளைத் தத்தெடுத்து அங்கு வாழும் மக்களுக்கு நலக் கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இருக்கிறோம் என்று கூறினார்.

டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணா நன்றி கூறினார். சென்னை மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு. ச. சந்திரமௌலி, இந்திய மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஹைமா பாலச்சந்தர், மாநகராட்சித் தலைமைப் பொறியாளர் திரு. கா.பா. விப்ரதாஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.

காந்திய நெறியில் கலைவாணர்

—புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணல் காந்தியடிகளிடமும் காந்திய நெறியிலும் மிகுந்த பற்று வைத்திருந்தார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். தமது நாடகங்களிலும் திரைப்படங்களிலும் சொற்பொழிவுகளிலும் காந்தியக் கொள்கையை நீண்ட நெடுங்காலமாகவே அவர் வலியுறுத்தி வந்தார். காந்திய நெறிகளைப் பிரச்சாரம் செய்வதில் அவர் தன்னிகரற்றவராகவும் விளங்கினார். கிந்தனார் கதாகாலட்சேபம் போல காந்தி மகான் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் அவர் வெற்றிகரமாக நடத்தி வந்தார். அண்ணலிடம் அவர் கொண்டிருந்த அன்புக்கு அளவே இல்லை.

இந்திய விடுதலை இயக்கத்தில் அண்ணல் பற்பல அற்புதங்களை உருவாக்கி, மக்களை எல்லாம் நாட்டு விடுதலை உணர்வுக்கு ஆளாக்கி வந்த சமயத்தில், தமிழகத்தில் பல நாடக ஆசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் நாடகங்களின் மூலம் தேச பக்தியை வளர்த்து வந்தார்கள். பலர், தேச பக்திப் பாடல்களை எழுதியும் பாடியும், மகிழ்ந்தார்கள்; மகிழ்வித்தார்கள். அதன் காரணமாக நடிகர் பலர் அந்நிய ஏகாதிபத்திய அரசினால் கைது செய்யப்பட்டனர்; நாடகங்கள் பல தடை செய்யப்பட்டன.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா, ஸ்காட்லாந்து நவீனம் ஒன்றை அடித்தளமாக வைத்து, தேச பக்தியை வலியுறுத்தும் 'பாணபுரத்து வீரன்' என்னும் நாடகத்தை நூல் வடிவில் தீட்டியிருந்தார். அந்நாடகத்தின் அருமையை உணர்ந்த டி.கே.எஸ். சகோதரர்கள் 'தேசபக்தி' என்னும் தலைப்பில், அதனை 1931- ஆம் ஆண்டில் அரங்கேற்றம் செய்தனர். டி.கே.எஸ். சகோதரர்கள், கே.ஆர். ராமசாமி ஆகியோருடன் கலைவாணரும் அந்நாடகத்தில் நடித்து வந்தார். நாடகம் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. விடுதலை இயக்கத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கு அந்த நாடகம் தூண்டியது.

நாடகத்தின் இறுதிக் காட்சியில், கதாநாயகனான பாணபுரத்து வீரன், ஊர்க் குடிமக்களை விடுதலைப் போருக்கு ஆயத்தம் செய்வான். அப்போது குடிமக்கள் அனைவரும் தம் கைகளில் கிடைத்த பொருள்களை எல்லாம் ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு வருவார்கள். கம்பு, கட்டாரி, கோடரி, கடப்பாரை, அரிவாள் போன்ற ஆயுதங்களை ஏந்தியவாறு குடிமக்கள் வேடம் போட்ட நடிகர்கள் மேடைக்கு வருவார்கள். கடைசிக் குடிமகனாகக் கலைவாணர், தன் கையிலே கைராட்டினத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டு மேடைக்கு வந்து, 'இந்த ராட்டினத்தை வச்சே ஏகாதிபத்திய வெறியர்களை நாட்டை விட்டே ஓட்டிடுறேன்' என்று கூறுவார். 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமொன்று' செய்து, கைராட்டையினாலேயே வெள்ளையரை ஓட்டி விடலாம், என்று முழங்கிய அண்ணலின் கொள்கையை நாடகத்தில் தக்க வகையில் புகுத்திப் பொதுமக்களிடம் சபாஷ் பெற்றார் கலைவாணர்.

இந்தியத் திருநாடு அந்நியரின் பிடியிலிருந்து விடுபடுவதற்குரிய நாள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம். நாடெங்கும் தேச உணர்வு மிக்க நாடகங்கள் - திரைப்படங்கள் உருவாகி வந்தன. கலைவாணர் தமது நாடக மன்றத்தின் மூலமாக 'நாம் இருவர்' என்னும் தேச உணர்வு மிக்க நாடகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் எதிர்பாராமல் கிரிமினல் வழக்கொன்றின் காரணமாக அவர் சிறைத் தண்டனை பெற்றார். அதனால் நாடகம் டி.ஏ. மதுரம் அவர்களின் முயற்சியால் அரங்கேற்றம் செய்யப்பட்டது. சென்னை ஒற்றை வாடை அரங்கில் பல மாதங்களாக அந்நாடகம் நடைபெற்று வெற்றிக் கொடியை நாட்டியது. பின்னர் ஏ.வி.எம். நிறுவனத்தார் அந்நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டுப் பொதுமக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றனர். நாம் இருவரின் சிறப்புக்குக் கலைவாணரும் காரணமாக இருந்தார் என்பது அடிப்படை உண்மை.

நாடு முழுவதும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அண்ணல் காந்தியடிகள் முனைப்புக் காண்பித்து வந்தார். அவரது தலையாய கொள்கைகளில் மதுவிலக்கும் ஒன்றாகும். 1947 அக்டோபர் 2-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட வாரியாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. குடிப்பழக்கத்தின் கொடுமையைத் தலைவர்கள் அவ்வப்போது மேடையில் எடுத்துரைத்து மக்களுக்கு அறிவூட்டி வந்தார்கள். கலைவாணர், மதுவிலக்கின் அவசி

யத்தை எடுத்துரைப்பதற்காக ஒரு திரைப்படத்தையே தயாரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் கதை, வசனம் எழுதப்பட்ட 'நல்ல தம்பி' என்னும் அந்தப் படத்தில், அண்ணல் வலியுறுத்திய மதுவிலக்குக் கொள்கையை, மண்ணுலகில் மட்டுமின்றி தேவருலகுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார் கலைவாணர்! ஜமீன் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற - அண்ணலின் கொள்கைகள் பலவற்றை அந்தத் திரைப்படத்தில் காட்சிகளாக்கிக் காண்பித்தார் கலைவாணர்.

பட முதலாளிகளிடம். பணம் வாங்கிக் கொண்டு திரைப்படத்தில் நடித்து வந்தவர்தான் கலைவாணர் என்றாலும் சம்பாதித்த பணத்தைத் தானும் தன்னைச் சார்ந்தவர்களும், மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்னும் சுயநலப் பண்பு படைத்த வரல்லவர் அவர். இல்லை என்று வந்தவர்களுக்கெல்லாம் அள்ளி வழங்கிய வள்ளல் அவர்.

அண்ணல் காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரது நினைவைப் போற்றும் வகையில், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்து, தமது ஊரான நாகர்கோவிலில் ஒரு நினைவுத் தூணை எழுப்பினார் கலைவாணர். அண்ணலும் மறைந்து விட்டார். அவருக்கு நினைவுத் தூண் எழுப்பிய கலைவாணரும் மறைந்து விட்டார். ஆனால் அந்தத் தூண் இன்றும் நிலைத்து நிற்கிறது. அண்ணலின் மீது கலைவாணருக்கு இருந்த பற்று, பாசம், அன்பு, மரியாதை ஆகியவற்றைக் காவியம்போல நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அண்ணல் காந்தியடிகள் வெள்ளிக்கிழமையன்று மறைந்தார். காந்தியத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த கலைவாணர், அப்போது ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதிலே அவர் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்:

'வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஞாயிற்றுக் கிழமை அரசு விடுமுறை நாளை மாற்றி இனிமேல் காந்தியடிகள் மறைவெய்திய வெள்ளிக் கிழமையை விடுமுறை நாளாக்க வேண்டும்' என்பதுதான் அந்த வேண்டுகோள்.

அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அண்ணல் காந்தியடிகள் மறைவெய்திய வெள்ளிக் கிழமையில்தான் கலைவாணரும் மறைந்தார்.

முன்ஷி பரமு பிள்ளை என்னும் மலையாள எழுத்தாளரின் சமூகக் கதை ஒன்றை மணமகள் என்ற பெயரில் திரைப்படமாக்கினார் கலைவாணர். படத்தை அவரே இயக்கவும் செய்தார். அத்துடன் ஊருக்கெல்லாம் அறிவுரை கூறி

(கலைவாணர் நினைவு நாள்: ஆகஸ்ட்டு — 30)

அன்பு நெறியைப் போதித்து வரும் ஆசிரியர் பாத்திரத்தை ஏற்று நடித்தார். படம் வெளிவந்த பின்னர், அதனைப் பொதுமக்களின் முன்னிலையில் நாடகமாகவும் நடத்தி வந்தார். நாடகத்தில் அவர், ஆசிரியர் பாத்திரத்தை ஏற்க வில்லை. வில்லன் பாகவதரின் நண்பனாக வேடம் தாங்கி நடித்தார். நாடகத்தில் ஒரு கட்டம்.

தீய காரியம் ஒன்றைச் செய்வதற்குக் கலைவாணரிடம் யோசனை கேட்பான் அந்த வில்லன். கலைவாணர் யோசனை சொல்வதற்கு முயற்சிப்பார். அப்போது ஏதோ ஒன்று தடை செய்வது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படும். உடனே மேடையில் சுற்று முற்றும் பார்ப்பார். அங்கே அண்ணல் காந்தியடிகளின் மார்பளவு உருவச் சிலை ஒன்று இடம்பெற்றிருக்கும். அண்ணலின் கருணை பொங்கும் விழிகளும் அமைதி தவழும் முகமும் கலைவாணரின் மனத்தில் சங்கடத்தை ஏற்படுத்தும். உடனே சிலையை மேடையிலுள்ள திரைச் சீலையின் பக்கம் பார்க்குமாறு திருப்பி வைத்துவிட்டு யோசனை சொல்லத் தொடங்குவார். அப்போதும் அவருக்கு மனஉறுத்தல் தோன்றும்; பின்னர் ஒரு துணியைக் கொண்டு சிலையின் முகத்தை மறைப்பார். மறுபடி யோசனை சொல்வதற்கு முனைவார். அப்போதும் அவருக்கு உறுத்தல் இருந்து கொண்டே இருக்கும். உடனே அண்ணலின் உருவச் சிலையை இருகைகளாலும் அப்படியே எடுத்து, மேடையை விட்டு அப்புறப்படுத்தி - கண்பார்வைக்குத் தெரியாத இடத்தில் வைத்துவிட்டுத் திரும்பி வருவார். 'இப்பக் கேளு! யோசனை சொல்றேன்' என்பார் தனது நண்பனான வில்லனிடம்.

தெருவிளக்குகளை எரிய வைப்பதில், தீவிர கவனம்

தெருவிளக்குகளை எரிய வைப்பதில் சென்னை மாநகராட்சி தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. விளக்குகள் எரியவில்லை எனப் புகார்கள் ஏதேனும் வந்தால் அவை உடனடியாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

குடிசைப் பகுதிகளில் விளக்குகள் சரியாக எரியவில்லை என்று புகார் வந்ததன் காரணமாக குடிசைப் பகுதிகளில் விளக்குகளை எரியச் செய்வதற்குத் தீவிரத் திட்டம் ஒன்றைத் தீட்டி சென்னை மாநகராட்சி கடந்த சில நாட்களாகச் செயல்படுத்தியது.

இந்தத் திட்டத்தில் 590 குடிசைப் பகுதிகளில் மொத்தமுள்ள விளக்குகள் 8,000 ஆகும். இந்த 8,000 விளக்குகளிலுள்ள குறைபாடுகளை நீக்கி, அவை அனைத்தையும் எரியும்படி சென்னை மாநகராட்சி செய்துள்ளது. இதற்குத் தனியாக ஆட்களும், வண்டிகளும் ஒதுக்கப்பட்டு, மின் துறையின் உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதுமட்டுமல்லாது, குடிசைப் பகுதிககளில் முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. குழல் விளக்குகள் பொருத்தப்பட்டால் ஓர் ஆண்டுக் காலமே எரியும், அதற்கு மாறாக இந்தச் சோடியம் ஆவி விளக்குகள் மூன்று ஆண்டுக் காலம் பயன் அளிக்கும். அதிக வெளிச்சத்தையும் தரும். இதன் மூலம் குடிசைப் பகுதிகளில் அதிக ஒளி பெற வாய்ப்புள்ளது. இன்னும் 100 சோடியம் ஆவி விளக்குகளைக் குடிசைப் பகுதிகளில் பொருத்துவதற்குச் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை மாநகரில் மொத்தம் 60,000 விளக்குகள் இருக்கின்றன. இப்பொழுது எரியாத விளக்குகளின் எண்ணிக்கை 2,600 மட்டுமேயாகும். இது மொத்த விளக்குகளில் 4.2 சதவிகிதமாகும். தீவிர செயல்பாட்டிற்குப் பிறகு சுமார் 25 சதவிகிதம் எரியாமல் இருந்த தெருவிளக்குகள் 4.2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் திருவல்லிக்கேணி மண்டலம் முன்னணியில் இருக்கிறது. இந்த மண்டலத்திலுள்ள மொத்த விளக்குகள் 4,439 ஆகும். இதில் எரியாத விளக்குகள் 115 மட்டுமேயாகும். இந்த மண்டலத்தில் எரியாத விளக்குகள் 2.6 சதவிகிதமாக இருக்கிறது. இது ஒரு சாதனையாகும்.

பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணா சாலை, ராஜாஜி சாலை, காமராசர் சாலை ஆகிய சாலைகளில் மின் ஒளியை அதிகரிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் புதிய சோடியம் ஆவி விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ளன. இதே போன்று அண்ணா சாலையிலும் புதிய சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாது ராஜாஜி சாலை, காமராசர் சாலைகளில் நடுவில் மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. இதனைச் செய்து முடித்தால், இந்தச் சாலைகளில் வெளிச்சம் கணிசமான அளவுக்கு அதிகரிக்கும்.

பேருந்து செல்லும் சாலைகள் அனைத்திலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் இவை செய்து முடிக்கப்படும்.

காந்தியடிகளின் பொம்மை அருகில் இருந்தால் கூட, தீய எண்ணம் ஒருவருக்கு உருவாகாது என்பதை, எடுத்துக்காட்டு உவமை அணிபோலக் குறிப்பால் உணர்த்தினார் கலைவாணர். (இக் காட்சி திரைப்படத்தில் கிடையாது; நாடகத்திற்கென்றே கலைவாணரால் அமைக்கப்பட்டது.)

இந்திய நாட்டிலிருந்து ருஷ்ய நாட்டிற்கு 1950-ஆம் ஆண்டில் சென்ற கலைக்குழுவில் தமிழகத்தின் சார்பில், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், டைரக்டர் கே. சுப்ரமணியம், ஒளிப்பதிவாளர் நிமாய்கோஷ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ருஷ்யாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலைவாணர் சொற்பொழிவாற்றினார். அவர் தமிழில் ஆற்றும் உரையை கே. சுப்ரமணியம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க, ஆங்கில உரையைக் கேட்டு ருஷ்யர் ஒருவர், ருஷ்ய மொழியில் பெயர்த்து வந்தார்.

காந்தியத்திற்கும் கம்யூனிசத்துக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் குறித்துத் தமது உரையிலே விளக்கிக் கொண்டு வந்தார் கலைவாணர்.

கம்யூனிசம் ஜெட் வேகத்தில் செல்கிறது. எங்கள் காந்தியம் மாட்டு வண்டி வேகத்தில் செல்கிறது' என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்தை கே. சுப்ரமணியம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆனால் ருஷ்யர், தமது மொழியில் பெயர்க்கவில்லை. கம்யூனிசத்தைப் பற்றிக் கலைவாணர் ஏதோ குறை கூறுகிறார் என்று ருஷ்யர் நினைத்துக் கொண்டார். அதனால்தான் அவர் மொழி பெயர்க்கவில்லை. தனது கருத்து ருஷ்ய மொழியில் பெயர்க்கப்படவில்லை என்பதைக் கலைவாணர் புரிந்து கொண்டு விட்டார்.

'நான் சொல்லும் கருத்தெல்லாம் ருஷ்ய மொழியில் பெயர்த்துச் சொல்லப்பட்டால்தான் நான் மேற்கொண்டு பேசுவேன். இல்லையென்றால் உரையாற்ற மாட்டேன்' என்று தெரிவித்து விட்டு இருக்கையில் அமர்ந்துவிட்டார் கலைவாணர். ஒரு வகையில் அன்று, அவர், அங்கே அறப்போரையே நிகழ்த்தி விட்டார். பின்னர் அந்த ருஷ்யர் வேறு வழியின்றி, கலைவாணர் சொல்லிய அந்தக் கருத்தை மொழி பெயர்த்துக் கூறினார்.

ருஷ்ய நாட்டுக்குச் சென்று காந்தியத்தை வலியுறுத்தியது மட்டுமல்லாமல், காந்திய நெறியில் அறப்போரையும் செய்தார் கலைவாணர். இறுதி வரை அவர் அண்ணலின் தொண்டராகவே திகழ்ந்தார்; கடைசி மூச்சு உள்ளவரை காந்தியத்தை மறவாதவராக வாழ்ந்தார்.

உழைப்பே உயர்வு!

கவிஞர் அ. மறைமலையான்

விதைக்காமல் கதிர்மணிகள் விளைவ தில்லை;
வேர்க்காமல் உலைக்களத்தில் கருவி இல்லை;
செதுக்காமல் கருங்கல்லை சிலைகள் இல்லை;
தேம்பாமல் குழந்தைக்குப் பாலும் இல்லை;
உதைக்காமல் உந்துவண்டி ஓட்டம் இல்லை;
உருகாமல் மெழுகுவத்தி ஒளியும் இல்லை;
மிதிக்காத களிமண்ணால் பாண்டம் இல்லை;
மிகச்சிறிய பலன்பெறவும் உழைப்பே மூச்சு!

உறங்கிவிட்ட வீணையினால் இசைதான் ஏது?
உருளாத சக்கரத்தால் பயணம் உண்டோ?
வருங்காலம் நிகழ்காலம் எல்லாம் ஏது
வையம்எனும் பூப்பந்தே சுழலா விட்டால்?
நெருங்கிவரும் வாய்ப்பெல்லாம் விலகும் அன்றோ
நீள்துயிலில் உழைக்காத மனிதன் கண்டே!
பெருங்கவலை பேரச்சம் சூழும்; இந்தப்
பிறப்புக்கே சிறப்பேது உழைக்கா விட்டால்?

துணுக்குகள்

64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத்தொழிற் பயிற்சி

இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை நல்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், அம்பத்தூர் மற்றும் மதுரையிலுள்ள 2 தொழிற்பயிற்சி நிலையங்களில் தலா 32 மாணவர் வீதம் 64 ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்புத் தொழில் பயிற்சி (Plastic Processing Operator Trade) என்ற புதிய பயிற்சியை அளித்திட ரூ.18,12,000 மானியமாக வழங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

• உலக மக்கட்தொகை ஆண்டுக்கு 92 மில்லியன் வீதம் அதிகரித்து வருகிறது.

• உலகில் ஆண்டுதோறும் சுமார் 17 மில்லியன் எக்டேர் பரப்பளவுள்ள வனங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

• பூமிக்கு மேலே வாயு மண்டலத்தைச் சுற்றியுள்ள ஓசோன் அடுக்கு (Ozone layer) விஞ்ஞானிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு நினைத்ததைக் காட்டிலும் மிக விரைவாக இரு மடங்கு அளவில் சுருங்கிக் கொண்டு வருகிறது.

புதிய ஒலிபரப்பு

நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக ஒலிபரப்பு நிலையங்களிலிருந்ம் ''அப்னே அதிகார்'' என்ற நிகழ்ச்சி ஜூலை மாதம் ஐந்தாம் தேதியிலிருந்து ஒலிபரப்பப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வர்த்தக ஒலிபரப்பில் பகல் 12.20 மணிக்கு ஒலிபரப்பப்படும். நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கும்போது சந்தையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் மக்களுக்கு அறிவுறுத்துவதாகும். கணவன் மற்றும் மனைவி கதாபாத்திரங்களின் உரையாடல் வாயிலாக, நுகர்வோரின் பிரச்சினைகளும் அவற்றைச் சரிசெய்யும் வழிகளும் இந்த நிகழ்ச்சியில் சொல்லப்படும்.

நீர்

நீரின் உபயோகத்தைச் சொல்லத் தேவையில்லை. வீட்டு உபயோகத்திற்கும், இதரத் தேவைகளுக்கும் இப்போது பயன்படும் நீரின் அளவு ஆண்டொன்றுக்கு 25 பில்லியன் கன மீட்டர் ஆகும்.

2025-ஆம் ஆண்டில் 40 பில்லியன் கன மீட்டர் நீர் தேவைப்படும். நகரங்கள், தொழிற்பேட்டைகள், வறட்சிப் பிரதேசங்கள் எனக்குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் நீரின் தேவை அதிகமாக இருப்பது கவலை தரும் விஷயமே.

அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு ஏற்ப, 2050-இல் 450 மில்லியன் டன் உணவு தானியங்கள் விளைவிக்கப்பட வேண்டும். இதற்கேற்ப பாசன வசதியும் அதிகரிக்கும். எனவே, வருங்காலம் வளம்பெற நீரைச் சிக்கனமாகச் செலவழிப்போம்!

நாணயம்

'நாணய'த்துக்குள்ள மதிப்பே தனிதானே! ஒரு ரூபாய் நாணயங்களைத் தயாரிப்பதற்காக 1,455 மெட்ரிக் டன் எவர்சில்வரை அரசின் நாணயச்சாலைக்கு வழங்கும் ஆர்டர், பலத்த சர்வதேசப் போட்டிகளுக்கிடையே நமது சேலம் எஃகு ஆலைக்குக் கிடைத்திருக்கிறது.

வட்ட வடிவில், நாணய உருவில் இது முத்திரை பதிப்பதற்காக நாணயச்சாலைக்குப் போய்ச் சேரும். ஏற்கெனவே 25 காசு, 50 காசு நாணயங்களுக்காக 3,300 மெட்ரிக் டன் எவர்சில்வரை சேலம் ஆலை வழங்கியிருக்கிறது. இதனிடையே, உலக அளவிலான தர நிர்ணய அளவுகோலான ISO 9000-ஐப் பெறும் தகுதியைச் சேலம் எஃகு ஆலையின் தயாரிப்புகள் எட்டிவிட்டன!

பெரியார் மாவட்டத்தில்:

வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1992-93-ஆம் ஆண்டிற்கு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 10,830 நபர்களுக்கு ரூ.270.750 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. இதில் நாளது வரை 718 நபர்களுக்கு ரூ.13.38 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. நாளதுவரையில் 45 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டிற்கான டிரைசம் பயிற்சியாளர்கள் 1,400 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு, 10.6.91 மற்றும் 1.9.91 முதல் பயிற்சி தொடங்கப்பட்டது. இது வரை 686 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். மீதி நபர்கள் 31.8.92-இல் தங்களது பயிற்சியை முடிப்பார்கள். பயிற்சி முடித்த 686 நபர்களில் 176 நபர்கள் சுயவேலை வாய்ப்பும், 510 நபர்கள் ஊதிய அடிப்படையிலும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் 96 நபர்களுக்குத் தாங்கள் பெற்ற பயிற்சியில் தொழில் புரிய மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜூன் திங்களில், இருதய அறுவைச் சிகிச்சை இனங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.41 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு இருபது அம்சத் திட்டத்தினை, பெரியார் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக, தமிழக அரசு பெரியார் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ரூ.4 இலட்சம் வழங்கி உள்ளது. இத்தொகையினைக் கொண்டு 10 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1992-93-ஆம் ஆண்டிற்கு, வறட்சி நிவாரணத் திட்டப்பணிகளுக்காக, ரூ.32 இலட்சம் ஒதுக்கீட்டில் கன்னிவாடி பேரூராட்சி, மொங்கநல்லாம்பாளையம், சென்னிமலை பேரூராட்சி ஒட்டன்குட்டை, அந்தியூர் வட்டாரம் காக்காயனூர், பெருந்துறை வட்டாரம் ராக்கியாபாளையம், காங்கயம் வட்டாரம் செம்மாங்குழிபாளையம், தாராபுரம் நகராட்சி, ஈரோடு வட்டாரம் ஈரோடு ஜவுளிநகர், வெள்ளக்கோவில் பேரூராட்சி புதுப்பை, மூலனூர் பேரூராட்சி ரசினாம்பாளையம், தாராபுரம் வட்டாரம் தளவாய்ப்பட்டினம், சத்தி வட்டாரம் திக்கரை, ஈரோடு வட்டாரம் மூலப்பாளையம், தாராபுரம் வட்டாரம் சுண்ணாம்புக்காடு ஆகிய இடங்களில் திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும்பணி தொடங்கப்பட்டு, தாராபுரம், ஈரோடு ஜவுளி நகர் ஆகிய இரண்டு இடங்களில் கிணறுகள் முடிவு பெற்று உள்ளன.

ரூ.10.48 இலட்சம் ஒதுக்கீட்டில் குழாய் நீட்டிப்பின் மூலம் குடிநீர் வழங்கும் பணிகள் 5 இடங்களில் தொடங்கப்பட்டு, மூலனூர் மற்றும் வெள்ளக்கோவில் பேரூராட்சிகளில் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.6 இலட்சம் செலவில் 303 ஆழ்குழாய்க் கிணறுகளில் தூர் நீக்கம் செய்யப்பட்டு, குடிநீர் வழங்கும் பணி சீரமைக்கப்பட்டு உள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.33.75 இலட்சம் ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட 75 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 1992-ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 9,206 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது.

பெரியார் மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் இல்லாத 2,857 குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் மே மற்றும் ஜூன் மாதங்களில் 3,349 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளன.

கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், பிற்பட்ட மாணவ, மாணவியர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைரூ.4,92,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.3,24,268 மதிப்பீட்டிற்குப் பாடப்புத்தகங்கள் வழங்கிச் செலவு செய்யப்பட்டு, 8,600 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.7,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மிகப் பிற்பட்ட வகுப்பினருக்குப்

பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.2,68,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.1,74,490 மதிப்பில் பாடப்புத்தகங்கள் வழங்கிச், செலவிடப்பட்டுள்ளது. இதனால் 4,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் ரூ.5,75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 8,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகப் பிற்பட்டோர் இனத்தவர்களுக்கு நிலம் கையகம் செய்து வீட்டுமனை வழங்க ரூ.6.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை ரூ.3,91,195 செலவிடப்பட்டு, 175 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிட நலத் துறையின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 351 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு ரூ.67,817 செலவு செய்யப்பட்டுள்ளது.

152 அரசுப் பள்ளிகளில், 9 மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மாண மாணவிகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இராணுவம் மற்றும் காவல் துறையில் சேருவதற்கு முன்பயிற்சி அளிக்க ரூ.1.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு 86 தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 15 நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குச் சிலேட்டுகளும், பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட நலத்துறையின் கீழுள்ள பர்கூர், உண்டு உறைவிட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 1992-93 கல்வியாண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் நடப்பாண்டில் வேளாண் துறையின் கீழ் ரூபாய் ஒரு கோடி செலவில் பல்வேறு வகையான மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. தரமான நெல் விதைகள் வாங்கிட ரகத்திற்கேற்ப கிலோவுக்கு ரூபாய் ஒன்று முதல் ரூ.2 வரையும், பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் விவசாயிகளுக்கு 'ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.19.8 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விதைகள் வாங்கிட கிலோவுக்கு ரூ.4 வீதமும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும், வேளாண் கருவிகள் வாங்கிட 50 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க ரூ.42.7 இலட்சம் செலவில் பல்வேறு மானிய உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன

டால்பின்

சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டினால் ஒன்றும் அறியாத பிராணிகள் கொல்லப்படும் சோகக் கதையைக் கேளுங்கள். கங்கை நதி அசுத்தமடைவதால் அதில் வாழுகின்ற டால்பின்கள் இறந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கங்கையைத் தூய்மைப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறமிருக்க, இந்த டால்பின்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவற்றை 'அழிந்து வரும் உயிரின வகை'யாக அறிவித்ததுடன், பீகாரில் கங்கையிலேயே 'விக்ரமஷிலா டால்பின் சரணாலய'த்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.

தரமான எண்ணெய் வித்து விதைகளை விவசாயிகளிடமிருந்து வாங்கி அரசு வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு இதுவரை 245 டன் நிலக்கடலை விதைகளும், 6 டன் எள் விதைகளும், 4 டன் இதர வித்தைகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இப்பணி தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக மே 1992 மாதம் முடிய மொத்தம் 306 நபர்களுக்கு ரூ.75.55 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது. இதில் 6 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.1.10 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின்கீழ், 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

இத்திட்டத்தின் கீழ், பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டு உள்ள ஆண் பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.10 ஆயிரத்திற்கு மிகாமல் இருந்தால், சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பு உள்ளது.

நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 127769.700 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டு 1200 ஏக்கர் அளவில் மல்பரிப் பயிர் இறவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 376.95 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 1992 வரை 24 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 360 பயன் தாரர்களுக்கு மல்பரிப் பயிர்க் கடனும், 720 பயன்தாரர்களுக்கு ரூ.61,40,500 பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களுக்கான கடனும், 400 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைக்கக் கடனும், புதிய கிணறு அமைக்க 3 பேருக்கும், கிணறு ஆழப்படுத்த 12 பேருக்கும், 15 தனியார் நூற்பகங்களுக்கும் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1992 முதல் ஜூன் 1992 முடிய 436 நபர்களுக்கு, குடும்ப நிவாரண நிதியாக ரூ.13,08,000 வழங்கப்பட்டு உள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 3 நபர்களுக்கு ரூ.20,000-மும், 32 நபர்களுக்குச் சாலை விபத்து நிவாரண நிதியாக ரூ.48,000-மும் மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும் கவிதைப் போட்டி

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் புரட்சித் தலைவி - மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான பள்ளிக் கல்லூரிகளில் பயிலும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் கவிதைப் போட்டியை நடத்தி, சிறந்த கவிஞர்களுக்குப் பரிசுகள் வழங்க முடிவு செய்துள்ளது. தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி வரையில் உள்ள மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும், 17 வயது முதல் 25 வயது வரையிலான கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு ஒரு போட்டியும் நடத்த மன்றம் திட்டமிட்டுள்ளது.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இளம் கவிஞர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கவிதையினை எழுதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும்:-

1. கவிதை, தங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக் கவிதையாகவோ அமைக்கலாம்.

2. கவிதை, இருபது வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று தலைப்புகளுக்குள் ஏதாவது ஒரு தலைப்பில் கவிதை எழுதலாம்:-

பள்ளி மாணவ-மாணவிகளுக்கு:

அ. எங்கள் கையில் எதிர்காலம்.
ஆ. காலம் கனியும்.
இ. நேயம் வளர்ப்போம் நெஞ்சம் நிறைவோம்.

கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு:

அ. கனவுகள் கரை ஏறும்.
ஆ. சிறகுகள் விரிப்போம் சிந்தனை வளர்ப்போம்.
இ. சேறும் சோறும்.

4. ஒருவர் ஒரு தலைப்பின்கீழ் மட்டுமே கவிதை எழுதுதல் வேண்டும்.

5. கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கவிஞர்கள் கவிதையினை இணைத்து கீழ்க்கண்ட விவரங்களைப் படிவம் போன்று பூர்த்தி செய்து, 'உறுப்பினர்-செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'பொன்னி', 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை-600 028' என்ற முகவரிக்கு 24.8.1992 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அ. கவிஞர் பெயர் -
ஆ. வயது -
இ. தந்தை பெயர் -
ஈ. வீட்டு முகவரி -
உ. பள்ளி/கல்லூரி பெயர் -
ஊ. படிக்கும் வகுப்பு -

உறுதிமொழி

இத்துடன் அனுப்பியுள்ள ' ' என்ற தலைப்புள்ள கவிதை என் சொந்தக் கற்பனையே. இது தழுவலோ அல்லது மொழிபெயர்ப்போ அன்று என்று உறுதியளிக்கிறேன்' என எழுதிக் கையொப்பமிட்டுக் கவிதையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

பரிசீலனைக்குப் பிறகு தகுதியுள்ள கவிஞர்கள் கவிதைப் போட்டியில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள்.

தேர்வு செய்யப்படும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ- மாணவிகளுக்குத் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசு - ரூ.1,000 வீதம் 2 பரிசுகள்.
இரண்டாம் பரிசு - ரூ.500 வீதம் 2 பரிசுகள்.
மூன்றாம் பரிசு - ரூ.300 வீதம் 2 பரிசுகள்.
ஆறுதல் பரிசுகள் - ரூ.100 வீதம் 4 பரிசுகள்.

1992 செப்டம்பர் 11-ஆம் தேதியன்று சென்னை, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் நடைபெறும் 'இயல் விழாவில்' பரிசுகள் வழங்கப்படும்.

இக்கவிதைப் போட்டி தொடர்பான அனைத்து விளக்கங்களிலும் மன்ற உறுப்பினர்-செயலாளர் அவர்களின் தீர்ப்பே இறுதியானது.

அரசு ஊழியர்களுக்கு மேலும் சலுகைகள்!

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு அலுவலக சங்கங்களுடன் 1.8.92 அன்று தலைமைச் செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார். அலுவலக சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை அறிவித்தார்.

23.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகச் சட்டப் பேரவையில் அமைச்சுப் பணியாளர்களின் கோரிக்கைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளை அறிவித்திருந்தார். அதன்படி கீழ்க்கண்ட பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது.

தற்போது பல துறைகளின் ஒரு உதவியாளருக்குக் கீழ் 3 அல்லது 4 இளநிலை உதவியாளர்கள் இருக்கிறார்கள். இதனை மாற்றி ஒரே சீராக அனைத்துத் துறைகளிலும் 2 உதவியாளர்களுக்கு ஒரு இளநிலை உதவியாளர் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 11,854 இளநிலை உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

அதேபோல், பல துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 10 அல்லது 15 உதவியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலை இருந்து வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி, அனைத்துத் துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் 5 உதவியாளர்கள் அல்லது 5 இளநிலை உதவியாளர்கள் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 2,050 உதவியாளர்களுக்குக் கண்காணிப்பாளர் பதவி உயர்வு கிடைக்கும்.

அலுவலக மேலாளர் (Office Manager) ரூ.1820-3200 என்ற ஊதிய விகிதத்தில் தற்போது 250 பணியிடங்கள் இருக்கின்றன. இந்த ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இக்கோரிக்கையினை ஏற்று இவர்களுக்கு ரூ.2000-3200 என்ற ஊதிய விகிதத்தை வழங்க இந்த அரசு தீர்மானித்துள்ளது.

பல துறைகளில் அமைச்சுப் பணியாளர்கள் மேலாளர் பதவிக்கு மேல் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. இவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் அனைத்துத் துறைகளிலும் அந்தந்தத் துறைகளில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உயர் பதவிகள் தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை	தோற்றுவிக்கப்படவிருக்கும் புதிய பணியிடம்
100-க்குக் கீழே	ஒரு அலுவலக மேலாளர்
100-க்குக் மேல்	ஒரு உதவி
500-க்குக் கீழ்	இயக்குநர்
500-க்கு மேல்	
2500-க்குக் கீழ்	ஒரு துணை இயக்குநர்
2500-க்கு மேல்	ஒரு இணை இயக்குநர்

இந்தப் புதிய பணியிடங்களுக்கு அமைச்சுப் பணியாளர்களே பணியமர்த்தப்படுவார்கள்.

இந்தப் பதவி உயர்வு அளிக்கும் திட்டத்திற்கான ஆணை (1.8.1992) வெளியிடப்படும். இத்திட்டத்தின் வாயிலாக 14,000 அமைச்சுப் பணியாளர்கள் பயன் அடைவார்கள். ஏற்கெனவே இந்தத் திட்டம் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனை மாற்றி நடப்பாண்டில் உடனடியாக 50 சதவிகிதமும், அடுத்த நிதியாண்டில் அதாவது 1993-94-இல் ஜூலை 1993-க்குள் மீதமுள்ள 50 சதவிகிதமும் செயல்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனை விரைவாகச் செயல்படுத்துவதன் வாயிலாக அமைச்சுப் பணியாளர்களுக்கு உடனடியாகப் பலன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்படி ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டு 214 பணியாளர் பிரிவுகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு புதிய ஊதிய விகிதங்களுக்கான ஆணைகள் இன்று பிறப்பிக்கப்படும். இந்த ஊதிய விகிதங்களில் உள்ள மாற்றங்கள் 1.6.1988-இல் இருந்து அதாவது ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தி நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு பணப்பயன் 1.4.1992 முதல் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும். புதிய ஊதிய விகிதம் கிடைக்கக் கூடிய 214 பிரிவினர்களில் பல தொழில்நுட்பப் பிரிவினர்களும் அடங்குவார்கள்.

கடுமையான நிதிநிலையின் காரணத்தினால் புதிய அகவிலைப்படி விகிதங்களை இந்த அரசு வழங்கும்பொழுது 4 மாதங்களுக்கான அதாவது 1.1.92-இல் இருந்து 30.4.92 வரை உள்ள நிலுவை அகவிலைப்படித் தொகையை மட்டும் அரசு அலுவலர்களின் சேம நல நிதியில் கணக்கு வைக்கப்பட்டு இந்தத் தொகை 12 சதவிகித வட்டியுடன் அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் என்று ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று இதில் சில மாற்றத்தைக் கொண்டு வரத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஓய்வுபெறும் கட்டத்தில் இந்த நிலுவைத் தொகையைத் திரும்ப அளிப்பது என்ற நிபந்தனை கைவிடப்பட்டு இந்த நிலுவைத்தொகை ஏற்கெனவே உள்ள விதிமுறைகளின்படி அரசு அலுவலர்களுக்குச் சேமநல நிதியிலிருந்து வழங்கப்படும் முன் பணங்களுக்குக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தற்போது செலவீட்டுப்படிகள் (Out of pocket expenses) சென்னையில் நாள் ஒன்றுக்கு ரூ.4 என்ற விகிதத்திலும் மாவட்டங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.3 என்ற விகிதத்திலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை ஒரே சீராக மாற்றி நாள் ஒன்றுக்கு ரூ.10 என்று உயர்த்தப்பட்டு 1.8.92-இல் இருந்து வழங்கப்படும்.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றக்கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு ஆண்டுதோறும் 2 இணைச் சீருடைகள் வழங்கப்படுகின்றது. இதனை மாற்றி நடப்பாண்டிலிருந்து 4 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இதரத் துறைகளில் பணியாற்றக் கூடிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு 3 இணைச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை மாற்றி ஆண்டுதோறும் 3 இணைச் சீருடைகள் வழங்கப்படும். இந்தச் சீருடைகள் அனைத்தும் கைத்தறி மற்றும் காதி பாலியஸ்டராக வழங்கப்படும்.

அரசு ஊர்தி ஓட்டுநர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று அவர்களுடைய சங்கக் கட்டடத்திற்கு ரூ.2.5 இலட்சம் நன்கொடையாக வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த ஆண்டு முதல் இவ்வரசு, மாசற்ற பணிபுரியும் அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குப் பரிசு வழங்கும் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த

முடிவு செய்துள்ளது. இதன்படி பரிசுத்தொகை ஊர்தி ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.500 என்ற அளவில் சிறு சேமிப்புச் சான்றிதழாக வழங்கப் படும். இத்திட்டத்தின்படி குறைந்தது 10 ஆண்டுகள் பணி முடித்து விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்கள் இந்தப் பரிசுக்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். அதேபோல 20 ஆண்டுகள் பணிமுடித்து, விபத்து இல்லாமல் சிறப்பாகப் பணிபுரிந்த அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

அலுவலக உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது இளநிலை உதவியாளர் பதவிக்கு அலுவலக உதவியாளர்களுக்கு 10 சதவிகிதம் என்ற ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்படும்.

தலைமைச் செயலகம் மற்றும் இதரத் துறை களில் பணியாற்றக்கூடிய சுருக்கெழுத்து தட்டச்சர் களுக்குப் பணி விதிமுறைகளில் மாற்றம் செய்து மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் உடனடியாக வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்குப் பண்டிகை முன்பணம் இதுவரை வழங்கப்பட்டு வருகிற ரூ.500-லிருந்து ரூ.750-ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி செலவாகும்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி உயர்வு பற்றி, சங்கப் பிரதிநிதிகளின் கோரிக் கையைப் பரிசீலனை செய்து, 1993-94-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது அறிவிக்கப்படும்.

மேற்கண்ட முடிவுகளை அரசு அறிவித்திருப்ப தால், வேலைநிறுத்தம் பற்றிய அறிவிப்பினை, அலுவலர் சங்கப் பிரதிநிதிகள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1.8.92 அன்று அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கை சம்பந்தமாக, சங்கப் பிரதிநிதிகளுடன் கோட்டை யில் பேச்சு வார்த்தை நடத்தி சில முடிவுகளை அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக அரசு அலுவலர் சங்கங்கள் அமைச்சுப் பணியாளர் களுக்கு மேலும் சில பயன்கள் தரும் வகையில் தங்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர் களை மீண்டும் கேட்டுக் கொண்டனர்.

அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4.8.92 அன்று அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதி களை அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கத்திரும் பவும் தனது இல்லத்திற்கு அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவற்றை அறிவித்தார்.

(1) அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர் தம் நிலையில் உள்ளவர்கள் சம்பந்தமான கோரிக் கைகளைப் பொறுத்தவரை ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றி அமைப்பதில் பல்வேறு சிக்க லான புதிய பிரச்சினைகள் உருவாகக் கூடிய சூழ்நிலையில் இதனைக் கைவிடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. எனவே, அடுத்த ஊதியக்குழு ஏற் படுத்தும் வரை ஊதிய விகிதங்களைப் பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.

(2) அதே நேரத்தில் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளவர்களின் மனம் தளராமல் அவர்களை உற்சாகப்படுத்திப் பணி யாற்றும் வகையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன.

5 சதவிகித தனி ஊதியம் (Perso nal Pay) பழைய ஊதிய விகிதம் ரூ.475-775-லிருந்து ரூ.775-1025 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள பதிவுறு எழுத்தர்கள் போன்றவர் களுக்கும், பழைய ஊதிய விகிதம் ரூ.610-1075-லிருந்து ரூ.950-1500 என்ற ஊதிய விகிதத் திற்குச் சென்றவர்களுக்கும் ரூ.975-1660 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்ற அலுவலர்களுக் கும், பழைய ஊதிய விகிதம் ரூ.705-1230-லிருந்து ரூ.1200-2040 என்ற புதிய ஊதிய விகிதத்திற்குச் சென்றுள்ள உதவியாளர் போன்ற பிரிவினர்களுக்கும் பழைய ஊதிய விகிதம் ரூ.905-1545-லிருந்து புதிய ஊதிய விகிதம் ரூ.1600- 2660-க்குச் சென்றுள்ள கண்காணிப் பாளர்களுக்கும் வழங்கப்படும். இந்தச் சலுகை ஆகஸ்ட் 1992 முதல் அமலுக்கு வரும்.

மேற்கண்ட பதவிகளில் உள்ளவர்களுக்கும், அதனை ஒட்டியுள்ள தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் உள்ளவர்களுக்கும் இந்தத் தனி ஊதியம் பொருந்தும். மேலும் மேற்கண்ட பதவிகளுக்குள் பதவி உயர்வு கிட்டும் கட்டத்திலும் இந்தத் தனி ஊதியம் தொடரும்.

(3) தற்போது தேர்வு நிலைத் தகுதிக்குச் செல்வதற்குத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

இதனை அடுத்து, அரசு அலுவலர் சங்கங்கள் மேலும் ஊதிய விகிதங்களைப் பற்றி அடுத்த ஊதியக் குழு அமைக்கப்படும் வரை பிரச்சினை களை எழுப்புவது இல்லை என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் உள்ள தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித் தார்கள்.

இதனைத் தொடர்ந்து 5.8.92 அன்று நடை பெற இருந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் போராட்டம் கைவிடப்பட்டது என்று அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்தார்கள். மேலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இப்பிரச்சினையைச் சுமுகமான முறை யில் முடித்து வைத்ததற்குத் தங்களுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தை யின்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நிதிச் செயலாளர் திரு. என். நாராயணன் மற்றும் முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன் ஆகி யோர்களும் கலந்து கொண்டார்கள்.

இன்று நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி அண்டு டி) பிரிவின் தலைவர் திரு. கே.ஜி. மோகன், செயலாளர் திரு. என். சங்கரன், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஒன்றியத்தின் தலைவர் திரு. சிவ. இளங்கோ, செயலாளர் திரு. நெல்லை மணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. பாலசுப்ரமணியன், செயலாளர் திரு. பி.எஸ். சௌந்தரபாண்டியன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே. கங்காதரன், செயலாளர் திரு. எம்.ஆர். அப்பன் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் (சி அண்டு டி) தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் மற்றும் இதர சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

மின்மயம்!

இந்திய இரயில்வேயில், முதன் முதலாக மின்மயம் தொடங்கப்பட்டது 1925-இல். பம்பாயி லுள்ள விக்டோரியா டெர்மினலுக்கும், குர்லா துறைமுகத்திற்கும் இடையில் முதல் மின்சார இரயில் ஓடியது. இது 1930-இல் கல்யாண் ரயில் நிலையம் வரை விரிவாக்கப்பட்டது.

சென்னை புறநகர்ப் பிரிவு மின்மயம் 1929-இல் செய்யப்பட்டது. பத்து ஆண்டிற்குள் மொத்தம் 388 கிலோ மீட்டர் தூரம் மின்மயமாக்கப் பட்டது.

பெருநகரங்களான தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னைக்கிடையேயும் வேறு சில முக்கிய தடங் களிலும் மின்மயமாக்கும் பணி தொடர்ந்தது. அத்தியாவசியப் பொருட்களான உணவு தானி யங்கள், சிமெண்ட், உரம், நிலக்கரி, இரும்புத் தாது ஆகியவற்றை விரைந்து எடுத்துச் செல்ல மின் ரயில் உதவியது.

தற்போது, 1991-92-இல் தில்லி-சென்னை, தில்லி -பம்பாய், கல்கத்தா-பம்பாய் (நாக்பூர் வழி) ஆகிய மூன்று முக்கியத் தடங்கள் முழுது மாக மின்மயமாக்கப்பட்டன.

கடற் செல்வம்

'திரைகடலோடித் திரவியம் தேடு' என்பது பழமொழி. திரைகடலுக்குள் திரவியம் தேடு என்பது புதுமொழி. நம் நாட்டின் முப்புறமும் சூழ்ந்துள்ள கடலின் மடியிலிருந்து பிடிக்கப்பட்ட மீன் வகையறாக்களின் மூலம் 1991-92-இல் நமக்கு 578 மில்லியன் அமெரிக்க டாலர் கிடைத் துள்ளது (ரூ.1,424 கோடி). 1988-89-இல் இத்துறையின் ஏற்றுமதி மதிப்பு ரூ.597.85 கோடி அளவிலேயே இருந்தது. (412.88 மில்லியன் அமெரிக்க டாலர்).

இறால் மீனுக்கே அதிக வரவேற்பு; இத்துறை யின் ஏற்றுமதியில் 45 சதவிகித மதிப்பில், 74 சதவிகிதத்தையும் இறால் மீனே தட்டிச் செல் கிறது. ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளே பெருமளவில் இறக்குமதி செய்கின்றன.

இத்துறை மேலும் வளர்ச்சி பெற, ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு அரசு ஊக்கம் அளித்து வரு கின்றது. கடல்வள ஏற்றுமதி வளர்ச்சி ஆணைய கத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.14.25 கோடி ஒதுக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்கள்

எளிய கருவிகளால் நமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலை உணர்வுடன் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்கள் வெளி நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வரு கின்றன. இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் நமக்குக் கணிசமான அந்நியச் செலாவணி கிடைத்து வருகின்றது.

1990-91-ஆம் ஆண்டில் கைவினைப் பொருள் ஏற்றுமதி மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி ரூ.1,220 கோடியாகும். இது 21 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகின்றது. சென்ற நிதியாண்டில் ரூ.1,810 கோடி கிடைத்தது. இது 48.5 சதவிகித வளர்ச்சியாகும். நடப்பு ஆண்டில் ரூ.2,076 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- நன்றி 'தூவானம்'.

மாவீரன் பகத்சிங்

— ரகமி

நம் நாடு ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை அடைய, ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடிய வீரர்களுள் வட நாட்டில் அஞ்சா நெஞ்சனாகத் திகழ்ந் தவன் தான் பகத்சிங்! இவனது பெயரை அறியாத இந்தியரே இல்லை எனலாம்.

நம் தமிழ்நாட்டில் 1911 ஜூன் 17-இல் மணியாச்சி ரயில்வே ஜங்க்ஷ னில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷை, செங்கோட்டை வாஞ்சி என்ற இளைஞன், தன்னிடமிருந்த பிஸ்டலினால் சுட்டுக் கொன்று, அடுத்த சில நிமிடங்களில் அதே பிஸ்டலினால் தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் அடைந்தான்.

தென்னாட்டில் நிகழ்ந்த இச்சம்பவம் அடுத்து 18 ஆண்டுகள் கழித்து வட நாட்டில் 1929-இல் பஞ்சாப் வீரன் எனப் புகழப்படும் வீர இளைஞன் பகத்சிங்கின் துணிச்சலான குண்டு வீச்சுச் சம்பவம் மிக முக்கியமானதாகும்.

தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த ஃபைஸலாபாத் என வழங்கும் 'லியால் பூர்' முன்பு பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்திருந்தது. (ஃபைஸலாபாத் தான் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகள் நடக்குமிடம்.) லியால்பூரில் சுதேசியம், தேசபக்தி, சுதந்திர உணர்ச்சி இம் மூன்றும் நிறைந்த சர்தார் அர்ஜூன் சிங் பரம்பரையைச் சேர்ந்த சர்தார் கிஸன் சிங்கிற்கு 1907 செப்டம்பர் 28-ல் பகத்சிங் இரண்டாவது புதல்வராகப் பிறந்தான்.

பள்ளியில் சேர்க்கப்பட்ட பகத்சிங் படிப்போடு, எந்நேரமும் முரட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து, இதர மாணவர் களை வீண் வம்புகளுக்கு இழுத்தல், கலாட்டா, தெருச் சண்டைகளில் ஈடு பட்டான். மெட்ரிகுலேஷன் தேறிய பகத்சிங் கல்லூரியில் சேர்ந்ததும், அங்கு சுகதேவ், யஷ்பால் என்ற இரு நண்பர்கள் இவனிடம் நெருங்கிப் பழகினர். மாணவப் பருவத்திலிருந்தே இம் மூவரும் ஆங்கிலேய ஆட்சி ஒழிப்பு, நாட்டு விடுதலை போன்ற எண்ணங்களில் கவனம் செலுத் தினர். அதோடு அச்சமயம் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாசபை கூட்டத் திற்குச் சென்ற பகத்சிங், தலைவர்களின் பிரசங்கத்தினால் அவனது மனதில் சுதந்திர உணர்ச்சி மேலும் தீவிரமாகியது.

இச்சமயம் வடநாட்டில் பல இடங் களில் 'பப்பர் அகாலி சங்கம்' தோன்றி ஆங்கிலேய ஆட்சியை எதிர்க்கப் பல இளைஞர்களை ஊக்குவித்ததில், பகத் சிங்கும் இச்சங்கத்தில் சேர்ந்து பல திட் டங்களைத் தீட்டினான், தங்களது திட்டங் களை நிறைவேற்ற ஆங்கிலேயர்கள் மீது வெடிகுண்டுகளை வீச, குண்டுகளைத் தயாரிக்கப்பெரும்பணம் தேவைப்படவே, இக்கோஷ்டியைச் சேர்ந்த சில தீவிர வாதிகள் 1926-இல் 'கா கோரி' என்ற ரயில்வே ஸ்டேஷனில் ரயிலை நிறுத்தி, அதில் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய சர்க்கார் கஜானா பெட்டிகளைக் கொள்ளை அடித்தனர். கொள்ளைக் கூட்டத்தாரை போலீஸ் பிடித்தபோது, பகத்சிங் அவர்களிடம் அகப்படாமல் தப்பிவிட்டான். பின்னர் 'காகோரி ரயில் கொள்ளை வழக்கில்' பகத்சிங்கின் நெருங்கிய நண்பர்கள் நால்வர் தூக்கி லிடப்பட்டதும், மனம் குமுறிய அவன் ஆட்சியாளர்களை எப்படியாவது பழி தீர்த்துக் கொள்வதில் முனைந்தான்.

பகத்சிங்கின் எண்ணத்தைத் துப்பறிந்த ரகசிய போலீஸ், பகத்சிங்கை கண் காணித்தது. 1926-இல் லாகூரில் ராம் லீலா வைபவத்தில் நடந்த வெடிகுண்டு வீச்சுக்குப் பகத்சிங்கும் காரணகர்த்தா வாகி இருக்கலாம் என வீணான காரணம் காட்டி அவனைக் கைது செய்தனர். இதனைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாத பகத்சிங் முறைப்படி ஜாமீனில் வெளி வந்து புரட்சி வேலையில் ஈடுபட்டான்.

1928-இல் நாளுக்கு நாள் நாடெங் கும் விடுதலைப் போராட்டம் பலமடை வதைக் கண்ட ஆங்கிலேயர்கள், மக்களை நேரிடையாகச் சந்தித்து அவர்களுக்குத் திருப்தியாக ஆட்சியை நடத்துவதைப் பற்றி ஆராய 'சைமன் கமிஷன்' என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்தது. இதில் பெரும்பாலும் வெள்ளையர்களே இருந் தார்களே தவிர, ஒரு இந்தியப் பிரதிநிதியு மில்லை. இதனால் இக்குழு எங்குச் சென் றாலும் பகிஷ்கரிப்பதென்று காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானித்து 'சைமன்! திரும்பிப் போ' (Simon go back) எனக் கூக்குரலிட்டனர். லாகூருக்கு வரும் சைமன் கமிஷனை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் நடத்த, லாலா லஜ்பத்ராய் மற்றும் சில தலைவர்கள் புறப்பட்டனர். ஊர்வலத்திற்குத் தடை விதித்ததோடு, அதனை மீறுவோர் கடுமையாகத் தண்டிக் கப்படுவர் என்றும் அறிவித்தது.

தடையை மீறி லாலா லஜ்பத்ராய் ஊர்வலம் நடத்திய போது இந்தியர்கள் மீது வெறிகொண்ட லாகூர் பெரிய போலீஸ் அதிகாரி ஸ்காட் என்பவரும், இவருக்குத் துணையாக 'சண்டர்ஸீம்' கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப் பிர யோகம் செய்தபோது லாலா லஜ்பத்ரா யைப் பலமாக தாக்கினார்கள். பலத்த காயங்களுடன் லாலாஜி நவம்பர் 17-இல் காலமானார். இதனால் பஞ்சாப் மக்கள் கொதித்தெழுந்து லாலாஜியை கடுமையாகத் தாக்கிய பெரிய போலீஸ் அதிகாரியான ஸ்காட்டை பதிலுக்குத் தீர்த்துக் கட்டுவதென்று முடிவெடுத்து இதனை நிறைவேற்றி வைக்கும் வேலை பகத்சிங், ராஜகுரு, சந்திர சேகர் ஆஸாத் ஆகிய மூவரிடம் ஒப் படைக்கப்பட்டது.

சமயமும் நெருங்கியது. லாகூர் போலீஸ் நிலையத்திற்குள் ஸ்காட் வந் திருப்பதாக விஷயமறிந்த இம்மூவரும் போலீஸ் நிலையத்திற்கு அருகிலேயே ரிவால்வருடன் பதுங்கியிருந்தனர். திடீரென நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வெளிவந்த நபர் தூரப் பார்வைக்கு 'ஸ்காட்'டைப் போலிருக் கவே, ராஜகுரு தனது பிஸ்டலினால் அவரை குறிபார்த்துச் சுட்டான். பகத் சிங்கும் இரண்டு மூன்று முறைகள் சுடவே வந்த நபர் குண்டுகளுக்குப் பலி யானார். ஆனால் பலியானது ஸ்காட் அல்ல! அவருக்குத் துணையாக இருந்த சாண்டர்ஸ்! இதனைக் கண்ட போலீசார் சுட்ட கொலையாளியைத் தேடினர். போலீசில் சிக்காமல் இம்மூவரும் மாறு வேடத்தில் தப்பித்து விட்டனர்.

சுமார் நான்கு மாதங்களாகியும் போலீஸில் பகத்சிங் மற்றும் அவனது நண்பர்களைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. இருப்பினும் எல்லா இடங் களிலும் ரகசியப் போலீஸ் தீவிரமாயினர். 1929 ஏப்ரல் 8-இல் டில்லி சட்டமன்றம் கூடியது. அங்கு ஆங்கிலேய அதிகாரிகள் அமர்ந்திருந்த பக்கத்தில் திடீரென்று வெடிகுண்டுகள் வெடித்தன. குண்டுகள் வெடித்த இடம் பெரும் பள்ளமாகிய தோடு, அருகிலிருந்த மரச்சாமான்களும் தவிடுபொடியாயின. மண்டபம் முழு வதும் பயங்கரப் புகை மண்டலம். கூடி யிருந்த அனைவரும் அங்குமிங்கும் ஓடினர். போலீசும் குண்டு வெடித்ததின் காரணத்தை அறிய அங்கு மண்டபத்தைச் சுற்றி ரோந்து பார்த்ததில், அங்கு இளைஞர்கள் இருவரும் கைகளில் பிஸ்டல், வெடிகுண்டுகளுடன் காட்சி அளித்தனர். அவர்களில் ஒருவன் பகத் சிங்! மற்றொருவன் புத்துரகேஸ்வரதத்! இருவரும் தங்களிடமிருந்த பிஸ்டலையும், வெடிகுண்டுகளையும் அருகேயிருந்த மேசைமீது வைத்துவிட்டு 'புரட்சி ஓங்குக!', 'ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று கோஷமிட்டு அசையாமல் நின்றனர். உடனே போலீஸ் இருவரையும் கைது செய்து, அவர்கள் மீது குற்றங்களும் சாட்டினர்.

டில்லி கோர்ட்டில் நடந்த விசாரணை யில் பகத்சிங், கேஸ்வரதத் இருவருக்கும் ஆயுள் தண்டனை தீர்ப்பாகியது. சிறை யில் தன்போன்ற தீவிரவாதிகளை மிகக் கேவலமாக நடத்துவதைக் கண்ட பகத்சிங் சிறையிலேயே உண்ணாவிரதம் இருந் தார். தொடர்ந்து சுமார் ஒரு மாத காலம் தீவிர உண்ணாவிரதம் இருந்த பகத்சிங் கின் வேண்டுகோளை ஆட்சியாளர்கள் ஏற்று, சிறைக் கொடுமையைச் சற்று தளர்த்தினர்.

போலீஸ் அதிகாரி 'சாண்டர்ஸ் கொலை', டில்லி சட்டமன்றத்தில் வெடி குண்டு வீச்சு சம்பந்தமாகப் போலீஸார் பலரைக் கைது செய்தனர். தவிர லாகூரில் வெடிகுண்டு தயாரிப்புப் பட்டறையை நடத்தியதாகவும், மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் செய்தது பெரும் ராஜ துரோகமான செயலென்றும் காரணங்கள் காட்டி, இதில் பகத்சிங், கேஸ்வரதத் இருவரையும் குற்றவாளியாகச் சேர்த் தனர். ஏற்கெனவே வேறொரு வழக்கில் பலர் கைதாகி இருந்தனர். இதில் சுகதேவ், ராஜ குரு, விஜய குமார் சிங் மூவரும் பகத்சிங்குடன் சேர்ந்தனர். ராஜத் துரோகக் குற்ற விசாரணைகள் கோர்ட்டிற்குக் கொண்டு வராமல் சிறைக்குள்ளேயே நட்ந்தது. விசாரணை யைக் கவனிக்கப் பொதுமக்களை விடா மல் சில குறிப்பட்டவர்களே விசேஷ அனுமதியின்பேரில் வரமுடிந்தது. ஆனால் பகத்சிங் இந்த விசாரணை பப்ளிக் கோர்ட்டில் நடந்தால் மக்கள் பார்த்து, இதனால் அவர்கள் வெளியில் பிரச்சாரங்கள் செய்ய முடியும் எனக் கருதி அவன் மீண்டும் சிறைக்குள் போராட்டங்கள் நடத்தினான். கடைசி யில் சர்க்கார் சிறைக்குள் நடக்கும் விசாரணையைப் பொதுமக்கள் எவ்விதத் தடையுமின்றி பார்க்க அனுமதித்தது.

ஒவ்வொரு நாளும் விசாரணையின் போது பொதுமக்கள் திரண்டு வந்து, விசாரணையை நேரில் கண்டு, மனக் கொதிப்பும் அடைந்தனர். கைதிகளை விலங்கு இட்டபடியே சிறைக்குள் உணவு அருந்துவது, நீதி விசாரணையிலும் விலங் குடன் வரவேண்டும் என்ற உத்தரவுகளை யெல்லாம் பகத்சிங் தீவிரமாக எதிர்த் தான். தேசத்துரோகக் குற்றவாளிகளின் ரகசியங்களை அறிய அரசு, அக்குற்ற வாளிகளில் சிலரை சர்க்காருக்குச் சாதக மாகப் பயன்படுத்தி அவர்களுக்குச் சலுகை காட்டி, இதர குற்றவாளி களின் ரகசியங்களை அறிவது வழக்கம். இந்நிலையில் ஜெய்கோபால் என்ற குற்ற வாளி தனது நண்பர்களைக் காட்டிக் கொடுக்கும் 'அப்ரூவராக' (அநுகூலசத்ரு) மாறி பகத்சிங், மற்றும் அவனுடைய நண் பர்களின் ராஜத் துரோகச் செயல்களை வெளிப்படுத்தினான். விசாரணையில் பல திடுக்கிடும் சம்பவங்கள் வெளிப் பட்டன. எல்லாக் குற்றங்களிலும் பகத் சிங்கின் புரட்சிச் செயல்களே காரணமாக இருந்ததோடு, இவனுக்குத் துணையாக ராஜகுரு, சுதேவ் ஒத்துழைத்தது ருசுவாகி யது. பகத்சிங், மற்றும் இரு நண்பர்கள் எவ்வளவு எதிர்த்து வாதாடியும், இவர் களின் வாக்கு மூலங்கள்எடுபடவில்லை. இதைப்பற்றி பகத்சிங் கவலைப்படவே இல்லை.

1930 அக்டோபர் 4-ந் தேதி பகத்சிங், மற்றும் அவனது சகாக்கள் தங்கியிருந்த இடத்திற்கு கோர்ட்டிலிருந்து தீர்ப்பு வந்தது. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இம் மூவருக்கும் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பு கூறப்பட்டது. தீர்ப்பைக் கேட்டு பகத்சிங் எக்களித்தான். அவனது நண்பர்களும் கைகொட்டி நக்கைத்தனர். தீர்ப்பை எதிர்த்து பகத்சிங் லண்டன் மாநகரிலுள்ள பிரீவிகௌன் சில் கோர்ட்டிற்கு அப்பீல் செய்தான். அப்பீல் மரண தண்டனையை எதிர்த்து அல்ல! இந்தியாவில்புரட்சியை ஆங்கிலே யர்கள் நன்கு அறியவே, இந்த அப்பீல் கடைசியில் அங்கு அப்பீலில் கீழ் கோர்ட்டுத் தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்தது.

★ குடிப்பழக்கம் நம் நாட்டிலிருந்து அகலுவதற்குச் சமூக ஊழியர்களும், சிறப்பாகப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.

★ போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறாவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனிதமான கடமையாகக் கொள்வீர்களாக!

★ மதுவை ஒழிப்பதற்கு மருத்துவர்கள் சரியான வகையில் உதவக் கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண் களுக்கும் - மாணவர்களுக்கும் சிறப் பான உரிமையுண்டு.

சில ஆங்கிலேய அதிகாரிகள், இம் மூவரிடம் கவர்னர் ஜெனரலுக்கு விசேஷ கருணை மனு அனுப்புங்கள். உங்கள் தூக்குத் தண்டனை ரத்தாகும் என்பதற்கு பகத்சிங், 'எங்கள் மீது பல குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. தவிர பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியை எதிர்த்துப்போர்தொடுத்ததாய்எங்கள் மீது ராஜத் துரோகமும் சாட்டப்பட்டுள்ளது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே நாங்கள் தேசத்துரோகக் குற்ற வாளிகள்! நாங்கள் பாரத நாட்டுக்காரர்.! நாங்கள் பிறருக்கு இரக்கம் காட்டுவோமே தவிர, நாங்கள் இதுவரை இரக்கம் கேட்ட தில்லை. நாங்கள் மூவரும் உங்களிடம் இரக்கம் பிச்சை கேட்கப்போவதில்லை. எங்களைத் தூக்கு மேடைக்கு அனுப்பு வதை விட உங்களிடமுள்ள பீரங்கி வாயில்கள் முன்போ, அல்லது துப்பாக்கி முனைகள் முன்போ நிறுத்தியோ சுட்டுத்

அறிவியல் விந்தை

நுண்ணலை துணி உலர்த்தி

துணியை வெயிலில் காயப்போட்டு உலர்த்துவார்கள். அந்தத் துணியை உலர்த்துவதற்கு 'மின்துணி உலர்த்தி' என்ற கருவியும் பயன்படுகிறது. வெப்ப வாயுவின் உதவியாலும் துணியை உலர்த்தும் முறையும் இருக்கிறது. தற்போது 'நுண்ணலை துணி உலர்த்தி' (Micro Wave Dryer) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மேக்னட்ரான் என்ற வேதியியல் பொருளிலிருந்து நுண்ணலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவை தண்ணீரின் மூலக் கூறுகளை ஆவியாக்கித் துணியிலிருந்து வெளியேற்றிவிடுகின்றன. ஆகையால், துணி உலர்ந்து விடுகிறது.

மின்துணி உலர்த்தி, 66 டிகிரி செல்ஷியஸ் வரை, துணியைச் சூடேற்றிச் செயல்படும். இதன் காரணமாகச் சில வகை உயர்ந்த துணிகள் பாழாகிவிடும். ஆனால் நுண்ணலை துணி உலர்த்தி, 38 டிகிரி செல்ஷியஸ் வரையே செயல்படும். அதை 32 டிகிரி செ. வரை குறைக்கலாம். ஆகையால், எந்த வகை மென்மையான துணியையும் இது பாதிப்பதில்லை. அது மட்டுமல்ல.

மின்துணி உலர்த்திக்குத் தேவைப்படும் மின்சாரத்தில், 25 டிகிரி குறைவான அளவே இதற்குப் போதும். இதற்கு முன்பு, இப்படிப்பட்ட ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், அது வெற்றி பெறவில்லை. தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள கொர்ரிங் அறிவியல் ஆராய்ச்சியகமும், வெப்ப ஆற்றல் கழகம் என்ற மற்றொரு நிறுவனமும் இணைந்து இந்தப் புதுக் கருவியைக் கண்டுபிடித்திருக்கின்றன. இன்னும் மூன்றாண்டுகளுக்குள் இது விற்பனைக்கு வரும்.

இதைப் போன்ற 'நுண்ணலை அடுப்பும்' அமெரிக்காவில் உள்ளது. அது மக்களிடையில் பரவலாகப் பயன்பட்டு வருகிறது.

செயற்கைத் தோல்!

அறுவை மருத்துவம் நடக்கும்போது, வேறு ஒருவருடைய இரத்தம் பயன்படுகிறது. கண் சீர் கெட்டுவிட்டால், மற்றொருவரின் கண் பொருத்தப்படுகிறது. ஆனால், ஒருவருடைய உடம்பிலுள்ள மேல் தோல் தீப்புண்ணால் கரிந்து விட்டால், இன்னொருவருடைய தோலை எடுத்துப் பொருத்த முடிவதில்லை. இது தீப்புண் ஆற்றும் மருத்துவர்களுக்குத் தொல்லை தருவதாக இருக்கிறது. வேறு ஒருவருடைய தோலை எடுத்துத் தீப்புண்பட்டவரின் உடம்பில் வைத்து மருத்துவம் செய்ய முயன்றால், அதை, அந்த உடம்பு ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கிவிடுகிறது.

உடம்பின், சிறு பாகத்தில் தீப்புண் ஏற்பட்டுவிட்டால், அந்த உடம்பின் மற்றொரு பகுதியிலிருந்து கொஞ்சம் தோலை எடுத்து எரிந்து போன பாகத்தில் வைத்து மருந்திட்டால் அது விரைவில் ஆறிவிடுகிறது. ஆனால், உடம்பில் பாதி அளவுக்குத் தோல் எரிந்து விட்டால், அவரைக் காப்பாற்றவே முடியாது.

ஆகவே, இப்படிப்பட்டவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஆய்வு நடந்து வருகிறது. அதன் விளைவாகச் செயற்கைத் தோல் உருவாக்கப்படும் நிலை இப்போது இருக்கிறது. அந்தச் செயற்கைத் தோலை எந்த உடம்பும் ஏற்றுக் கொள்ளும். இதனால், வருங்காலத்தில் பலருடைய உயிரைக் காப்பாற்ற முடியும்.

நிலா வண்டி

எட்டு சக்கரங்கள்; ஏறக்குறைய கிராமத்து மாட்டு வண்டி போன்ற உருவமைப்பு; நண்டின் கால்போன்ற பிடிக்கும் உறுப்புகள்; குத்தூசி போன்ற சில பகுதிகள் - இப்படி, இவற்றைக் கொண்ட வண்டி ஒன்று தற்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அது பூமியில் ஓடாது, நிலவில் ஓடப்போகிறது. அதை 'நிலா வண்டி' என்று சொல்லலாம். நிலாவிற்குச் செல்லப்போகும் விண்வெளி வீரர்கள், இதில் ஏறிக் கொண்டு அங்கே சுற்றிவரப் போகிறார்கள்.

இந்த வண்டி மேலும் பல தனிச் சிறப்புகளைக் கொண்டது. இது அழுத்தம் தாங்கக் கூடியது. கதிர்வீச்சு, மிகு வெப்பம், ஆகியவற்றைச் சமாளிக்கும் தன்மை உடையது. எவ்வித அதிர்ச்சிக்கும் ஈடுகொடுக்கக் கூடியது.

முன்பு ஒரு வண்டி நிலாவில் ஓடியது. அதில் சில குறைபாடுகள் இருந்தன. அவை, இந்தப் புதிய வண்டியில் நீக்கப்பட்டன. இந்த வண்டி ஆறு மாதம் வரை இயங்கும். இது 1999-ஆம் ஆண்டுக்குள். தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- டாக்டர் மலையமான்.

தள்ளுங்கள்! நாங்கள் மகிழ்ச்சியோடு செல்லுகிறோம். இதனைத்தான் நாங்களும் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். மிக விரைவிலேயே முன்பு 1857-இல் நடந்த 'இந்திய சுதந்திரப் போர்' மறுபடியும் வர இருக்கிறது. அதில் சத்தியமும் நேர்மையும் ஜெயிக்காவிடில் அத்துடன் அப்போர் நின்று விடாது. தொடர்ந்து நடக்கும். எங்களோடு இந்தப் போராட்டம் நின்றுவிடாது. தொடர்ந்து நடக்கும். இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறாக அமையும்! நாங்கள் எங்கள் கடமையைச் செய்து விட்டோம் ("I have done my duty to the Country") நாங்கள் பாரத தேசச் சுதந்திரத்திற்காக உயிர் துறப்பதைக் கௌரவமாக நினைக்கிறோம். தண்டனையை நிறைவேற்றுங்கள்'' என்று கர்ஜித்தான்.

1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் நாள் மாலை 6 மணி! பாரத நாட்டு விடுதலைக்காகத் தனது வாழ்நாட்களை அர்ப்பணித்த மாவீரன் பகத்சிங், அவனது இரு நண்பர்களான ராஜகுரு, சுகதேவ் 'புரட்சி வாழ்க!' 'ஏகாதிபத்தியம் ஒழிக!' 'மக்கள் ஆட்சி வாழ்க!' என்ற கோஷங்களுடன் தங்களுக்காக அலங்கரிக்கப்பட்ட தூக்குமேடையில் ஏறி நின்று தூக்குக் கயிற்றுக்கு முத்தமிட்டனர். இரவு சுமார் 7½ மணிக்கு அம் மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது!

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து, நம் பாரத தேசத்தை மீட்கப் புரட்சி செய்து வீர மரணம் அடைந்த பகத்சிங்கை, இளைஞர்களிடம் புரட்சிக் கனலை ஏற்படுத்திய தலைவனை, புரட்சியின் சின்னமாகிய எரிகின்ற தீப்பந்தத்துடன் (Torch) ஒப்பிட்டு அவ்வீரனுடைய சிலையையும் கையில் தீப்பந்தத்துடன் அமைத்து இன்றும் 'காஜியாபாத்' மக்களின் தியாக உணர்வையும், நன்றி மறவாத தன்மையையும் பிரதிபலிக்கச் செய்து, இளைஞன் பகத்சிங் ஜீவிய சிலையாக நிற்கிறான்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

1-9-1992 ரூ.1

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.



இந்தியச் சுதந்திர நாள் விழாவையொட்டி- மேதகு தமிழக ஆளுநர் திரு. பி.என். சிங் அவர்கள் 15.8.92 அன்று அளித்த தேநீர் விருந்தில்- முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு... தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமாரி பட்நாகர்- மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கரன்சிங் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த இதழில்...

ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர் ... 2
பிரதமர் — முதல்வர் சந்திப்பு ... 3
சுதந்திர தின விழாவில் முதல்வர் உரை ... 4
பர்கூர் மக்களுக்கு முதல்வர் நலத்திட்ட உதவிகள் ... 9
ராஜீவ்: வாழ்க்கை வரலாறு ... 11
ஓட்டுநர்களும் குடிப் பழக்கமும் ... 17
விளாகம்: மாதிரி கிராமம் ... 19
தமிழ்த்தென்றல் திரு.வி.க. ... 24
மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள் ... 27
என்ணெய்ப்பனை ஆராய்ச்சி ... 30
கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ... 33
தொழிலாளர் நலம் பெறட்டும் (கவிதை)... 39
பரிபூரண மதுவிலக்குக் கொள்கை ... 43
வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களுக்கு முதல்வர் உதவிகள் ... 46

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆவணித் திங்கள் - 16

மலர்:23 இதழ்:5

1-9-1992

இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர்

இந்தியாவின் 9-ஆவது குடியரசுத் துணைத் தலைவராக திரு. கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. கே.ஆர். நாராயணன் 4.2.1921 அன்று கேரளாவில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். பல்வேறு சோதனைகளைக் கடந்து பொருளாதாரத்தில் முதல் வகுப்பில் தேறிப் பட்டம் பெற்றார். திருவாங்கூர் பல்கலைக்கழகப் பேராசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் சில ஆங்கிலப் பத்திரிகைகளில் பணிபுரிந்தார்.

நாடு சுதந்திரம் அடைந்தபின், இலண்டனில் இவரை இந்தியத் தூதரக அதிகாரியாக பண்டித நேரு நியமித்தார். இதைத் தொடர்ந்து தாய்லாந்து, துருக்கி, ரங்கூன், டோக்கியோ, ஆஸ்திரேலியா, சீனா போன்ற பல்வேறு நாடுகளில் தூதராகப் பணியாற்றினார்.

இந்தியா-சீனா உறவு மிகவும் பாதிக்கப்பட்ட கால கட்டமான 1963 முதல் 1967 வரை சீனத் தூதராக இருந்தார். இந்தியா-சீனா போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தூதர் உறவு ஏற்பட்டபோது, 1976-இல் இவரே மீண்டும் சீனத் தூதராகச் சென்றார்.

1978-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப் பட்டார். அதற்குப் பின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவரகள் இவரை அமெரிக்கத் தூதராக அனுப்பினார். நான்கு ஆண்டுக்காலம் அப்பதவி வகித்துவிட்டுத் தாயகம் திரும்பிய திரு. கே.ஆர். நாராயணன், அரசியலில் குதித்தார். 1984-இல் கேரளா ஒட்டப்பாலம் பாராளுமன்றத் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். இதைத் தொடர்ந்து வெளிவிவகாரத் துணை ராஜாங்க அமைச்சரானார்.

19.8.92 அன்று நடைபெற்ற குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட, திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை எதிர்த்துச் சுயேட்சை வேட்பாளர் திரு. ஜோகிந்தர் சிங் போட்டியிட்டார். இத் தேர்தலில் திரு. கே.ஆர். நாராயணன் மகத்தான வெற்றியடைந்தார்.

இத் தேர்தலில் 92.4 சதவிகிதம் வாக்குகள் பதிவாயின. இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான 768 உறுப்பினர்களில் 711 எம்.பி.-க்கள் வாக்களித்தனர். திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு 700 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஜோகிந்தர் சிங் அவர்களுக்கு ஒரே ஒரு ஓட்டு மட்டும் பதிவாகி இருந்தது. பத்து ஓட்டுக்கள் செல்லாதவையென அறிவிக்கப்பட்டன.

திரு. கே.ஆர். நாராயணன் குடியரசுத் துணைத் தலைவராக 21.8.1992 அன்று பதவி ஏற்றார். குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் புதிய குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதுடெல்லி ராஷ்டிரபதி பவன் அசோக மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு பிரதமர், மத்திய அமைச்சர்கள், முன்னாள் பிரதமர்கள் திரு. வி.பி. சிங், திரு. சந்திரசேகர், பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பிரதமர் - முதல்வர் சந்திப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, 17.8.'92 அன்று காலை புது டெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தச் சந்திப்பின் போது, தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ம்ாண்புமிகு பிரதமருடன் பேசினார்.

தமிழ்நாட்டிலுள்ள அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யும், தமிழக அரசின் திட்டத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், நிலக்கரி இறக்குமதிக்குச் சுங்கவரி விலக்கு அளிக்க வேண்டுமெனவும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்துக்கு அனுமதி பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தோடு தொடர்புடைய சென்னைக் குடிநீர் வழங்கல் விநியோகத் திட்டத்தை விரைவுபடுத்த மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். உலக வங்கியின் கோரிக்கைக்கிணங்க இந்தத் திட்டத்திலுள்ள சில இடையூறுகளைக் களைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் உதவ வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் பெருகிவரும் மின்சாரத் தேவையைச் சமாளிக்க கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். இதற்காக உள்நாட்டிலேயே கிடைக்கும் அணுமின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தூத்துக்குடித் துறைமுகத்தைச் சுங்க தீர்வையற்ற துறைமுகமாக உருவாக்கினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூறிய முதல்வர், கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடியில் சுங்கத் தீர்வையற்ற ஒரு துறைமுகத்தை உருவாக்க அனுமதி அளிக்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அயல் நாட்டுக் கூட்டுடன், அதுவும் முக்கியமாக சிங்கப்பூர் நாட்டு ஒத்துழைப்புடன் தொழிற்சாலைகளை உருவாக்க, சென்னைக்கு அருகே சிங்கப்பூருக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் மையம் ஒன்றை அமைப்பது குறித்த திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக பல்வேறு வசதிகளை அளிக்க சிங்கப்பூர் அரசுடன் தொடர்பு கொள்ளுமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழக அரசின் நிதிநிலை- குறிப்பாக சிறு சேமிப்புக்காக வழங்கப்பட்டுவந்த வருமான வரி விலக்கை திரும்பப் பெற்றது போன்ற விஷயங்கள் இந்த பேச்சு வார்த்தையின்போது இடம் பெற்றன.

தமிழக அரசு எதிர் நோக்கியுள்ள விசேஷ பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.



“மத்திய அரசோடு சுமுகமான உறவு உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபு என்கிற புரட்சித்தலைவரின் அந்த வரலாற்றுப் பாதையில் நமது அரசு வீறுநடை போடுகிறது”

சுதந்திரதின விழாவில் முதல்வர் பெருமிதம்!

தாயகம் விடுதலை பெற்ற இந்தத் தங்கத் திருநாளைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கொண்டாடும் இந்த இனியவேளையில், விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் பாரதத் தாயின் மணிக்கொடியை, சரித்திரப் புகழ்மிக்க இந்தக் கோட்டையில் ஏற்றி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த மாபெரும் வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கும் தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள் ஆகிய அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் அதே நேரத்தில், எல்லோர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ’ என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப, ‘பூரண சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை’ எனப் பிரகடனம் செய்து, ‘வெள்ளையனே வெளியேறு’ என வீர முழக்கமிட்டு, 50 ஆண்டுகள் நிறைவேறியதை நெஞ்சில் பதிக்கும் ஆண்டிலே, வருகின்ற விடுதலைத் திருநாள் என்பதால், இந்த நாளின் வரலாற்றுப் பெருமை இரட்டிப்பாகிறது.

வரலாற்று நாயகர்கள்

எந்தக் கோட்டை ஆங்கில ஆதிக்கத்தின் அதிகாரக் கோட்டையாக இருந்ததோ, அந்தக் கோட்டையில், பாரதத் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதும், அதைப் பெருமிதத்தோடு நாம் பார்ப்பதும், பெருமையோடு பார்த்துப் பரவசப்படுவதும், எத்தனைச் சிறப்புக்குரியது என எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இந்த மாபெரும் பெருமையை நமக்கு வழங்கிய வீரத்தின் விளை நிலங்களான, வரலாற்று நாயகர்களை, தியாகத்தின் திருவுருவங்களை, நன்றிப் பெருக்கோடு நான் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதந்திரக் காற்றை, நாம் சுவாசிப்பதற்காகத் தங்களது மூச்சை நிறுத்திக் கொண்டவர்கள், என்றென்றும் நம் இதயத்தில் நிலைத்து நிற்கிறார்கள். அவர்களது வீரத்தையும், தீரத்தையும் எண்ணிப்பார்க்கிற நாளாக, இந்த நாள் விளங்குகிறது.

இந்தத் திருநாளில் அந்தப் பெருந்தகையாளர்களுக்கு, உங்களோடு சேர்ந்து என் வீர வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்த நாள், விடுதலையை வென்றெடுத்த திருநாள் மட்டுமல்ல; நாமெல்லாம் ஒன்றுபட்ட திருநாளும் கூட!

‘வாழ்கின்றார் முப்பது கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்குமே’ என்பதுதான் முன்பு இந்தியா இருந்த நிலை! இப்படிப் பிரிந்து பிரிந்து பேதப்பட்டுக் கிடந்த நம்மை, இணைத்துப் பிணைத்த நாள்தான், இந்தப் புனித நாள்.

நமது தலையாய கடமை

பெற்ற விடுதலையைப் பேணிக்காப்பதும், ‘இந்தியா ஒன்றே’ என்ற ஒற்றுமை உணர்வை எப்போதும் வளர்ப்பதும், நமது தலையாய கடமை, எனவேதான், நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற தீய உணர்வு தலைதூக்குகிற போது எல்லாம், அதை வேரோடு கிள்ளியெறியக் கிளர்ந்தெழுந்துள்ளது எங்கள் அரசு.

விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை எய்துவதிலும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது எங்கள் அரசு.

இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும், நம் செந்தமிழ் நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுப்பதும், முரண்பட்டவை அல்ல என்றே கருதுகிறேன்.

காவிரிப் பிரச்சினை

தாய்த் திருநாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில், எவருக்கும் முன்னால் நிற்கின்ற நாம், நம் மாநிலத்தின் அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும், மற்ற எவரைக் காட்டிலும் முன்னால் நிற்கிறோம்.

இந்த இரண்டிலுமே வெற்றி பெறுகிறோம் என்பதுதான் நமது அரசு படைத்திருக்கிற தனிப் பெருமையாகும். இந்த அடிப்படையில் அமைந்ததே காவிரிப் பிரச்சினையில் நாம் அடைந்த வெற்றி ஆகும்.

இந்த மண்ணின் உயிர்ப்பிரச்சினையும், உரிமைப் பிரச்சினையுமாகிய, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு, உச்சநீதிமன்றத் தீர்ப்பு நமக்குக் கிடைத்த தார்மீக வெற்றி! நமது நியாயக் குரலுக்கு நீதி செவிகொடுத்தது. நியாயம் மறந்த சில உள்ளங்கள் அதை மதிக்க மறுக்கின்றன.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாகிய காவிரிப் பிரச்சினையில், உரிய வெற்றியை அடைந்தே தீருவோம்! நாம் ஈட்டிய வெற்றியின்

விடுதலை நாள் விழா

இந்தியாவின் 46-வது விடுதலை நாள் விழா சென்னைத் தலைமைச் செயலகத்தில் 15.8.1992 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கோட்டையை வந்தடைந்த போது, அங்கு குழுமியிருந்த ஆயிரக் கணக்கானோரின் வாழ்த்தொலிகள் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் முப்படை அதிகாரிகள், காவல்துறைத் தலைவர், திரு. எஸ். ஸ்ரீபால், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் - சென்னை நகர ஷெரீப், திரு. சுரேஷ் கிருஷ்ணா ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சரியாக, காலை 8.30 மணிக்குக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பட்டொளி வீசிப் பறந்த தேசியக் கொடியிலிருந்து பூமாரி பொழிய, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியக் கொடிக்கு முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார்.

பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோட்டைக் கொத்தளத்தில் விடுதலை நாள் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து, முதல்வர் அவர்கள், உடல் ஊன முற்ற குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமாரி பட்நாகர், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலானவர்கள் பலரும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

பலன் கிடைக்கும்வரை இப்பிரச்சினையில் நாம் ஓயமாட்டோம்; ஒதுங்க மாட்டோம் என்கிற உறுதிமொழியே இவ்விடுதலை நாளில் நாம் மேற்கொள்ளும் சபதமாகும்.

கச்சத் தீவுப் பிரச்சினை

இந்த மண்ணின் ஒரு பகுதியாக இருந்து, இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்ட கச்சத்தீவை, மீண்டும் பாரதத்தோடு இணைக்க வேண்டும் என்று, கடந்த ஆண்டு இதே நேரத்தில் இதே இடத்தில் குறிப்பிட்டேன்.

அந்த என் உணர்வினை அரசின் சார்பில் நம் சட்டமன்றப் பேரவையிலேயே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். இந்திய நாட்டின் இறையாண்மை கருதியும், தமிழக மீனவரின் உரிமை காக்கவும், நாம் விடுத்திருந்த கோரிக்கைக்கு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அதுபற்றி 'ஆழ்ந்தும் விரிவாகவும் பரிசீலிக்கிறோம்' என ஆறுதல் தரும் பதில் அனுப்பி இருக்கிறார்.

மத்திய அரசோடு சுமுகமான உறவும், நம் உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்குக் காட்டிச் சென்ற வரலாற்றுப் பாதைகளாகும். அந்த வெற்றிப் பாதையில், நம் அரசு வீறுநடை போடுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த தத்துவங்களைச் செயலாக்குவதே இந்த அரசின் இலட்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சுதந்திரம் என்பது அரசியல் விடுதலையோடு நின்றுவிடுவதன்று, விடுதலை பெற்ற நாடு, ஆண்டாண்டுக் காலம் அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நாடு, தன் பொருளாதார சமூகக் கட்டமைப்புகளைச் சீர்படுத்திக் கொள்ளச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது, அதன் தலையாய கடமை ஆகும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் எங்கள் அரசு பல அரிய சாதனைகளை ஆற்றியுள்ளது. பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த பி அண்டு சி ஆலை, எங்களுடைய சீரிய முயற்சியால் தான் மீண்டும் திறக்கப்பட்டு, 8,000 தொழிலாளர்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மற்றும் கே.சி.பி. ஆலைகள், எங்கள் முயற்சியால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

எந்தப் பிரச்சினையானாலும்...

கிறித்துவக் கல்லூரிப் பிரச்சினையாகட்டும், அரசு ஊழியர்கள் பிரச்சினையாகட்டும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாகட்டும், மக்கள் நலனைப் பாதிக்கின்ற எந்தப் பிரச்சினையானாலும், எங்கள் அரசு உடனடியாக அதில் தலையிட்டு, நேரிடையாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அமைதியான வழியில் அப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதை, நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கை, பெருவாரியாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டம், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் வாழும், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகள், மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, 42 கோடி ரூபாய் செலவில், இலவசமாக சேலை-வேட்டிகளை வழங்கியது எங்கள் அரசு.

நாம் விடுதலை பெற்றதன் நோக்கமே, இவை போன்ற அடித்தளத்து மக்களுக்கு உதவும் திட்டங்களை மேற்கொள்வதும், அவர்களுக்குச் சேவை செய்வதுமே ஆகும்.

மகளிர் மேம்பாடு, இந்த அரசின் கவனத்தை எந்த அளவுக்கு ஈர்த்திருக்கிறது என்பதற்கு, நமது செயல்பாடுகளும், குறிப்பாக ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு என்னும் திட்டமும், ஏற்ற எடுத்துக்காட்டுகளாகும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள், இவர்கள் நலம் காக்க, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் உயர்ந்து விளங்க, அரசு அரிய பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

புதியதோர் புரட்சி

இதுவரை எந்த அரசும் செய்ய முன்வராத புரட்சியாக, ஆதிதிராவிடர்களுக்கென முதன் முறையாக, 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைகளை, கோவை, பெரியார் மாவட்டங்களில் அமைக்க, எங்கள் அரசுதான் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சியிலும் அரசு ஆர்வத்தோடு திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்றும், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 27 சதவிகிதம் என்ற அளவோடு இல்லாமல், தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது போல, 50 சதவிகிதம் அளவுக்கு இருக்க வேண்டும் என்றும், வற்புறுத்தி, சட்டப்பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

இதுபோன்ற சமூகத்தின் நலிந்த தரப்பினரின் நலம் காப்பதில், எங்கள் அரசு முன் நிற்கிறது.

மருத்துவ வசதிகள், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் எல்லா ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறப்பு மருத்துவ நலத்திட்டத்தின்கீழ், ஊர்ஊராக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதை, நீங்கள் அறிவீர்கள்.

மருத்துவரைப் பார்க்க மக்கள் வருவதைவிட, மக்களிடம் மருத்துவர் செல்ல வேண்டும் என்னும் நம் விருப்பத்தின் செயற்பாடாக, இன்று, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இன்றைக்கு ஆலயங்களிலே திருப்பணிகள், ஓர் அமைதியான ஆன்மீகப் புரட்சிக்கு அடிப்படை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

அண்டை மாநிலமான கர்நாடகம், உச்ச நீதிமன்ற ஆணையினை மதித்துக் காவிரி நீர் தர மறுத்தாலும், இயற்கை அன்னை, நம் நியாயமான உரிமைகளைக் காக்கும் வகையில் கை கொடுத்து உதவியுள்ளது. தமிழகத்தில், தானிய விளைச்சல் இந்த ஆண்டு, 90.7 இலட்சம் டன் என்று, இதுவரை அடையாத உயர்ந்த நிலையை எய்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

• ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

சமுதாய முன்னேற்றம்

இந்நிலை, வள்ளுவப் பெருந்தகையின்
'குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

- என்ற குறள் வரிகளை மெய்ப்பித்துள்ளது.

சமுதாய முன்னேற்றத்துக்காக நாம் எடுத்து வரும் முயற்சிகள் பல. எந்த மாறுதலும் அடிப்படையிலிருந்து தொடங்கவேண்டும். எனவேதான் 'அடித்தள' மக்களுக்குத் தன்னிறைவு அளிக்கின்ற திட்டங்களை, நாம் செயல்படுத்தி வருகின்றோம்.

திங்கட்கிழமைதோறும், மாவட்ட வாரியாக மக்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, உரிய கவனத்தோடு அவற்றைப் பரிசீலித்து, விரைந்து உரிய நடவடிக்கைகளையும், உதவிகளையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

புகழ்க்கொடை வழங்கப்படும்

கடந்த சில நாட்களுக்கு முன்னர், பெங்களூரில் உள்ள பயிற்சி நிறுவன விமானப்படைத் தளபதி என்னைச் சந்தித்தபொழுது, முப்படையும் சார்ந்த விருதுபெற்ற படை வீரர்களின் சார்பாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார். முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் அவர்கள் புரிந்த வீரசாகசச் செயலுக்காக வீரப்பதக்கங்களும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காகச் சேவா பதக்கங்களும் மத்திய அரசு வழங்கி வருகிறது. அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், சில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர்களுக்கு மட்டும் மாநில அரசு புகழ்க்கொடையாகப் பண முடிப்பு வழங்கிவந்தது. புகழ்க்கொடை பெறத் தகுதியான விருதுகள் பெறும் பட்டியல் 1990-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டதுடன், பரிசுத் தொகையும் உயர்த்தப்பட்டது.

இந்த ஆணை 1990-ஆம் ஆண்டு முதல் விருது பெறும் வீரர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இதனை நாடு சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15, 1947 முதல் அமல்படுத்தினால் 1990- க்கு முன்னர் விருதுபெற்ற முப்படை வீரர்களும் பயன் பெறுவர் என்றும், இக்கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அனைவரும் பயன்பெறத்தக்க வகையிலும் இந்தக்

கோரிக்கையை ஏற்று, அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்பு வழங்குவது 1947-ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன். இதனால் 1990-ஆம் ஆண்டுக்கு முன்னர் விருதுபெற்ற 207 முப்படை வீரர்களுக்கு அரசு 5 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாயைப் புகழ்கொடை யாக விரைவில் வழங்கும்.

விடுதலை வீரர்களை நினைவு கூர்வதிலும், இன்று நம்மிடையே வாழும் அந்தத் தியாக சீலர்களைக் கௌரவிப்பதிலும், சிறப்புச் செய்வதி லும், நம் அரசு முன் நிற்கிறது. கடந்த 9-ஆம் தேதியன்று 'வெள்ளையனே வெளியேறு' என்னும் வீர இயக்கத்தின் பொன் விழா நாளை முன் னிட்டு, நம் அரசு நடத்திய விழாவில் தியாகி களுக்கெல்லாம், விடுதலைப் போராட்ட வீரர் களுக்கெல்லாம், பாராட்டு நடத்தியதோடு, அவர் களது ஓய்வூதியத்தை வேறுபாடின்றி அனைவர்க் கும் ஒரே சீராக ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன். அது மட்டுமல்லா மல், நமது அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய, அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன்

வசதி இல்லாதவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்ய, 20 ஆயிரம் ரூபாய் உதவி, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரந் தோறும் இலவச அரிசி, இறந்த நெசவாளர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று, சமுதாயத்தின் சகல தரப்பின ருக்கும் உதவிகளை அள்ளித்தந்து, சாதனைகளைப் படைத்து வருகின்றது எங்கள் அரசு என்றால் அது மிகையாகாது.

சாதிமதங்களைப் பாரோம்

நமது ஒற்றுமை உறுதிப்பட வேண்டுமானால், வளர்ச்சிப் பாதையில் நாம் ஏறுநடைபோட வேண்டுமானால், சாதிகளையும், மதங்களையும் அரசியலாக்கும் சக்திகள், தோற்கடிக்கப்பட வேண்டும்.

சாதி அடிப்படையில் அரசியல் அமைப்புகள் உருவாவது, நம்மை - நம் வளர்ச்சியைப், பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளும் பிற்போக்கு நடவடிக்கைகளாகும்.

இன்னுமொரு செய்தியையும் இந்தப் புனித வேளையில், பொறுப்புமிக்க நம் மக்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது, என் கடமையாகும்.

நாம் எடுக்கின்ற தீர்மானங்கள், தீட்டிவரும் திட்டங்கள், செயலாக்கி வரும் சாதனைகள், இவற்றில் மக்களின் பங்கு மகத்தானது. திட்டங் களின் பயன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், ஜனநாயகம் வெற்றி பெறத் தங்களது பங்கேற்பு எவ்வளவு அவசியமானது என்பதை, மக்கள் உணர வேண்டும்.

எனவே அரசின் பணிகளில் தோளோடு தோள் நின்று, ஊக்கம் தர வேண்டியது, உங்கள் கடமை என்பதை, இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று நாம் நாமாக இருப்பதற்கு யார் காரணமோ, அவர்களை எல்லாம் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்கிறேன்.

இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசு, பேரறிஞர் அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசு; சுருங்கக்கூறின், இது உங் களின் அரசு என்பதை, மட்டற்ற மகிழ்வோடும், பெருமிதத்தோடும் கூறிக்கொண்டு,

'பாரத பூமி பழம் பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'

என்று எல்லோரையும் வேண்டிக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

'தமிழரசு' 1.8.1992 தேதிய இதழ் அட்டைப்படமும்- குடியரசுத் தலைவரைப் பற்றிய கட்டுரையும் மிகவும் அற்புதம்.

—எஸ்.பி.ஆர். சுபா,
சென்னை-24.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கமானது, வருங் காலத்தில் ஒலிம்பிக் போட்டி நடத்து மளவுக்கு உருவாக்கப்படுவதாகத் 'தமிழரசு' மூலம் அறிந்து மகிழ்ந் தோம்; ஒலிம்பிக் போட்டி பற்றியும் வெளியிட்டிருந்தீர்கள்; இதே போலத் தொடர்ந்து ஒரு விளை யாட்டுப் பகுதி வெளியிடலாமே?

—ஆர். சிவகுகன்
திருச்சி.

கோவை, நீலகிரி மாவட்டங் களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு மேற்கொண்டிருக்கும் அரிய பணிகள் பற்றிய கட்டுரை யைப் படித்தோம்; இதே பகுதியில் இருந்தும் எங்களுக்கே தெரியாத பல செய்திகள் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது எங்களை மிக மிக மகிழ்வித்தது.

—தி. உமா, ஆர். சித்தார்த்தன்
கோயம்புத்தூர்.

16.7.92 'தமிழரசில்' கர்ம வீரர் காமராசர் பற்றிய கட்டுரை ஒன்று வெளியிட்டிருந்தீர்கள்; அதில் அவர் பிறந்த ஆண்டு 1930 என்று இருக்கிறது; அது தவறு. அது 1903 என்று இருந்திருக்க வேண்டும். அதுதான் சரி.

—அ. கருத்தோவியன்
கருகம்பத்தூர், வேலூர்-13.

(ஆசிரியர்: நீங்கள் குறிப்பிட் டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.)

'தமிழரசு' பாராட்டுக்குரியதாக வும், விலை மதிப்பற்றதாகவும் விளங்குகிறது; வாழ்த்துகள். ஆனால், சரியான தேதியில் புத்தகம் வெளி வருமானால் இன்னமும் சிறப்பாக இருக்குமே.

—வி. அன்னப்பன்,
சென்னை-12.

பார்கூர் மக்களுக்கு முதல்வர் வழங்கிய பல்வேறு உதவிகள்...



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தனது தொகுதியான பர்கூர் மக்களின் குறைகளைத் தீர்க்க, அங்கே இயங்கிக் கொண்டிருக்கும் தனது அலுவலகம் மூலம் அந்தத் தொகுதி மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றைப் பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி அவர்களுடைய, குறைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அந்த அடிப்படையில், பர்கூர் தொகுதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மனுக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் படித்துப் பரிசீலனை செய்து, 4-வது கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் 92 நபர்களுக்கு 19.8.1992 அன்று தனது இல்லத்திற்கு அவர்களை வரவழைத்து, அவர்களது பல்வேறு குறைகளைத் தன்னுடைய சொந்தச் செலவில் நிறைவேற்றி வைத்தார்.

5 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 10 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், தச்சு வேலைக் கருவிகள் இருவருக்கும் வழங்கினார்கள். மேலும் டீக்கடை வைக்க நிதி உதவி கோரியிருந்த மனுதாரர்கள் நால்வருக்கு-பாய்லர், டீ கெட்டில், ஸ்டவ், பால் பாத்திரம் முதலான 20 வகையான உபகரணங்களை வழங்கினார்.

அதேபோல், சிற்றுண்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய ஒருவருக்கு ஸ்டவ்,இட்லிப் பாத்திரம், வாணலி, அடுக்கு, வாட்டர் ஜக் முதலான 26 வகையான உபகரணங்களை வழங்கினார். பெட்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு வியாபாரம் செய்ய 27 கண்ணாடி ஜாடிகளில் பிஸ்கட், சாக்லெட் மற்றும் தின்பண்டங்கள் ஆகியவற்றையும் வழங்கினார். கட் பீஸ் துணிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு அவர்கள் தலையில் சுமந்து வியாபாரம் செய்யும் அளவிற்குத் துணி வகைகளை வாங்கி வழங்கினார்.

சைக்கிள் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்குத் தலா 6 சைக்கிள்கள் வீதமும் அதனுடன் சைக்கிள் ரிப்பேர் செய்வதற்கான சாதனங்களையும் வழங்கினார். வியாபாரம் செய்ய நிதி உதவி கோரிய 5 நபர்களுக்கும், தொழில் கருவிகள் வாங்க நிதி உதவி ஒருவருக்கும், பொதுவாக நிதி உதவி கோரிய 15 நபர்களுக்கும், இருதய நோய், ஆஸ்துமா, வாத நோய் போன்ற நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சைக்காக நிதி உதவி கோரிய 21 நபர்களுக்கும், ஊனமுற்ற 13 நபர்களுக்கும் நிதி உதவி அன்றுவழங்கினார்.

செவித்திறன் குன்றிய ஒருவருக்குக் காது கேளாதவருக்கான கருவி மற்றும் பண உதவியும், உடல் ஊனமுற்ற இருவருக்கு மூன்று சக்கர வண்டியும் பண உதவியும் வழங்கினார். மிதி வண்டி கோரிய 5 நபர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தனிப் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள்; அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களது இல்லத்திற்கு வரவழைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்ட பின்னர் பர்கூருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள்

அவர்கள் அனைவருடைய போக்குவரத்து, உணவு மற்றும் தங்குவதற்கான செலவுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே தம் சொந்தச் செலவில் ஏற்றுக் கொண்டார்.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு - ஒரு புதிய திட்டம்

விரைவான பலன்களை எதிர்நோக்கித் தீட்டப்பட்டுள்ள புதிய மக்கள் தொகைக் கட்டுப்பாடுத் திட்டம், அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டது. மாநிலங்களுக்கும், மத்திய நிர்வாகப் பகுதிகளுக்கும் (யூனியன் பிரதேசங்களுக்கும்) நிதி ஒதுக்குவதில் ஒரு புதிய முறை (Cafeteria approach) கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்புதிய முறையின்படி, ...திய அரசின் உதவியை அதிக ...வில் பெற, மாநிலங்கள் ...பு விகிதத்தில் வீழ்ச்சியைக் ... வேண்டும். தற்போது ... முறையில் இருக்கும் ...றயின்படி, குடும்பக் ...ப்பாடு செய்து ...ண்டவர்களின் ...ணிக்கையின் அடிப்படையில் ...லங்களுக்கு ஊக்கத் தொகை ...ங்கப்படுகிறது. இந்த ...ணிக்கையைச் சரி பார்க்க ...ாத காரணத்தினால், இந்த ... ரத்து செய்யப்படுகிறது. ...ம் தம்பதிகளை மையமாகக் ...ண்ட புதிய திட்டம் ஒன்று ...போது வகுக்கப்பட்டுள்ளது.

...ாநில அரசுகள், மத்திய ...வாகப் பகுதிகள், ...யவைகளின் ஒப்புதலுடன் ஒரு ...திய செயல் திட்டம் ...க்கப்பட்டுள்ளது.

இச்செயல் திட்டத்தில் தனி நபர்களுக்கு வழங்கப்படும் பல சலுகைகள் ரத்து செய்யப்படுகின்றன. அதற்குப் பதிலாக சமூக அடிப்படையிலான சலுகைகளும், சிறு குடும்பத்தைக் கொண்டுள்ள நபர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

சமூக அடிப்படையிலான சலுகைகள் அரசின் பல்வேறு சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுடன் சம்பந்தப்படுத்தப்படும். சலுகைகளை வழங்கும் வகைகளை முடிவு செய்யும் பொறுப்பு மாநில அரசைச் சாரும்.

தற்போது மாநில அரசுகளுக்கு, லூப் பொருத்துபவருக்கென ரூ.10-ம் (IUD Insertion) ஆண் கருத்தடைக்கு ரூ.180-ம் (Vasectomy), பெண் கருத்தடைக்கு ரூ.200-ம் (Tubectomy) வழங்கப்படுகிறது.

கருத்தடைச் சாதனங்களை மேம்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவரை இலவசமாக வழங்கப்பட்டஇவை, இனிமேல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படும். பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சில இடங்களில் இலவசமாகவும் வழங்கப்படும். ஏனெனில் இவை இலவசமாக வழங்கப்படும்போது நிறைய வீணாவதுடன் பிறப்பு விகிதத்திலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படவில்லை. கருத்தடைச் சாதனங்களின் தரமும் மேம்படுத்தப்படும்.

குடும்ப நலச் சேவை மையங்களின் தரம் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களிலுள்ள சேரிகளிலும் அடிப்படைச் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

2000-வது ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரம் என்னும் இலட்சியத்தை அடையும் வகையில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பாதுகாப்புத் திட்டம் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் மூன்று வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் வைட்டமின் ஏ மாத்திரைகள் வழங்குவது, ஆரம்பச் சுகாதார மையங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருவது போன்றவை அடங்கும். இத்திட்டம் இறப்பு விகிதத்தைக் குறைப்பதிலும், குடும்ப நலத்திட்டத்திலும் பெரும் பங்கு வகிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆதாரம்:
பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, ஏர்மார்ஷல் திரு. ஆர்.கே. தவான் அவர்கள் சந்தித்து உரையாடினார் (12.8.92).

ராஜீவ்

ஆகஸ்ட் 20 ராஜீவ் காந்தியின் 48-வது பிறந்தநாள் நினைவாக:

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்றபின், இந்நாட்டின் பிரதமர் பதவியை அலங்கரித்த - ஜவகர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், சரண்சிங், திருமதி இந்திராகாந்தி ஆகியோரையடுத்து, ஆறாவதாக அப்பதவிக்கு வந்த பெருமையாளரே திரு. ராஜீவ் காந்தி அவர்கள்.

திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1984 அக்டோபர் 31-இல் படுகொலை செய்யப்பட்ட பிறகு, அப்பதவியில் அமர்த்தப்பட்ட இவரே, அதுவரை இருந்த பிரதமர்களையெல்லாம்விட வயதில் இளைஞராக இருந்தார். அதேநேரத்தில் - பாரம்பரியப் பெருமைமிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவர், அனுபவ முதிர்ச்சியும் உடையவராக இருந்தார்.

இளமைக்கேற்ற சுறுசுறுப்பு அவரிடம் எப்போதும் குடிகொண்டிருந்தது. அவர் வேகத்திற்குப் பணியாற்ற அரசு உயர் அதிகாரிகளெல்லாம்கூட திணறிப்போன சம்பவங்கள் - நாட்கள் பல உண்டு.

அந்தத் திறமையாளரின் வரலாறு இது:

திரு. ராஜீவ் காந்தி அவர்கள், 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசியலில் நுழைந்ததிலிருந்தே, அவரது அன்னை திருமதி இந்திராகாந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப்பட்டார்.

20.8.1944 அன்று,ராஜீவ் - பம்பாயில் இந்திராகாந்தி-பெரோஸ் காந்தி தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. 'ராஜீவ்' என்றால் தாமரை என்று பொருள்படும்.

பேரக்குழந்தை ராஜீவ் பிறந்தபோது, தாத்தாவான பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

ராஜீவுக்குப் பத்து வயதானபோது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பிறகு - பூனாவில் உள்ள டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார். இவருக்கு 16 வயதானபோது, தந்தையார் பெரோஸ் காந்தி இறந்து போனார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர், 'டிரினிடி' கல்லூரியில் 'மெக்கானிகல் என்ஜினியரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு, தமது எதிர்கால மனைவியான சோனியா மெய்னோ என்ற இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார். அந்த முதல் சந்திப்பே காதலாக மலர்ந்தது.

ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்தது.

படிக்கும்போதே தாத்தா நேரு அளித்த ஊக்கத்தின்பேரில், விமானம் ஓட்டும் பயிற்சியிலும் ராஜீவ் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்திற்குப் பின், டகோடா விமானத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லுமளவுக்கு திறம்மிக்க விமானியாக அவர் திகழ்ந்தார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஓட்டும் தகுதி பெற்றார்.

அரசியலிலே நுழையும் வரை, இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் விமானியாகப் பணிபுரிந்தார்.

1981-ஆம் ஆண்டு மே 10-ஆம் நாள், தன் வேலையை விட்டுவிலகி முதலில் வேண்டாவெறுப்போடுதான் அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிடும் அவசியத்திற்கு ஆளானார். அத்தேர்தலில், அனைவரும்

● முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும்; அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.

எதிர்பார்த்ததற்கு மேலாக 2 இலட்சத்து 37 அயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

அத்தேர்தலுக்குப் பின், அரசியல் நுணுக்கங்கள் அவருக்கு அத்துபடியாயின.

1981 - ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ்(இ) தேசியச் செயற்குழு உறுப்பினரானார். 1983 பிப்ரவரி 2-ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி(இ) பொதுச்செயலாளராகவே பொறுப்பேற்றார்.

பின்னர், அவர் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில், தமது அன்னையுடன் அவர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றார். அங்கு ஐ.நா. 37-வது பொதுச் சபைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அந்தக் கன்னிப்பேச்சே கருத்தாழம் மிக்கதாக இருந்தது.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணிசேரா நாடுகள் இயக்கத்துக்கு ராஜீவ் காந்தி அவர்கள் தலைவர் ஆனார்.

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி, உலக ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும் அரும்பாடுபட்டு வந்தார். இதன் காரணமாக, நான்காண்டுகளுக்கு முன்பே இவர் பெயர் நோபல் பரிசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டது. 1985-இல் பஞ்சாப்-அசாம் ஒப்பந்தங்கள் இவரால் கையெழுத்திடப்பட்டன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இவர் மேற்கொண்ட வீரமும் விவேகமும் முயற்சியும் குறிப்பிடத்தக்கவை. ராஜீவால் அமைதி காப்புப்படையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவரால் 1987-இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் நம் நாட்டுச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது.

1988-இல், மாலத்தீவில் அந்நாட்டு அதிபர் கயூமுக்கு எதிராக நடைபெற்ற புரட்சியை அடக்க இந்தியப் படைகள் திரு. ராஜீவால் அனுப்பி வைக்கப்பட்டன.

ஜவகர் ரோஜர் யோஜனா, பஞ்சாயத்து ராஜ் போன்ற மசோதாக்கள் இவரால்தான் கொண்டுவரப்பட்டு அமல்படுத்தப்பட்டன.

1989-இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் இவருக்கு ஒரு சோதனையாக அமைந்தது.

அத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தபின், திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமர் பதவியை இழந்தார்.

வளைகுடாப் போர் மூண்டபோது, அதை அரும்பாடுபட்டு முடிவிற்குக் கொண்டுவரச் சமாதான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டார்; இதுவே இவர் மேற்கொண்ட கடைசிச் சமாதான முயற்சியாகும்.

ராஜீவ் இந்தியத் திருநாட்டின் பிரதமராக இருந்த சமயத்தில், கொலை பாதகர்களால் இரண்டு முறை அவர் உயிருக்குக் குறி வைக்கப்பட்டது.

ஆனால், 1991 மே, 21-இல், தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுபோது - திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் கொலை வெறியர்களால் மிகக் கொடுமையான முறையில் கொல்லப்பட்டார்.

ஜவகர்லால் நேரு குடும்பத்தில் கடந்த பதினோராண்டுகளில் மூன்று கொடிய சாவுகள் நிகழ்ந்துள்ளன. 1980-இல் திரு. சஞ்சய் காந்தி விமான விபத்தில் சிக்கிக் கொடூரமாக உயிரிழந்தார்.

1984-இல் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் தமது பாதுகாவலராலேயே பயங்கரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

21.5.1991 அன்று தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள், சென்னைக்கு அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் எதிர்பாராத பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகிப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது உடல் அரசு மரியாதைகளுடன், டில்லியில் யமுனை நதிக்கரையில், அன்னையார் இந்திராகாந்தி நினைவிடம் அருகே 24.5.1991 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.15 மணியளவில் அவருடைய புதல்வர் ராகுல் காந்தியால் எரியூட்டப்பட்டது.

கடந்த மே 21-ஆம் தேதி, இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ராஜீவின் மறைவிடத்தில், நினைவில்லம் அமைப்பதற்கெனத் தமிழக அரசு 12 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது.

- 'முடிகொண்டான்'



காளான்களின் மருத்துவக் குணங்கள்

'நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்' என்ற கேலிப் பேச்சுக்கு இனி இடமில்லை. காளான்கள் இப்போது மனிதனின் முக்கிய உணவு வகைகளில் ஒன்றாக மாறி வருகின்றன. அதிக புரோட்டீனும், பெரும்பான்மை வைட்டமின்களும் கொண்டவை அவை. அதே சமயம், அவை சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டிருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

'அமானிடா மஸ்காரியா' என்ற காளான், சுரப்பிகளின் வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. ஓமியோபதி மருத்துவ முறையில், மூளையின் செயல்பாட்டினைச் சரிசெய்ய இது மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

'சைலோசைப் மெக்ஸிகேன்' எனப்படும் காளான் மனநோய்களுக்கு மருந்தாகும்.

'ஆரிகுலேயா பாலிடிரைகா' என்ற வகை, இரத்தத்தில் 'கொலஸ்ட்ராலை'க் கட்டுப்படுத்துவதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இதில் இன்னொரு ரகம், இரத்தக் கொதிப்பைக் குறைக்கும் சக்தி கொண்டது. மேற்கண்ட வகைகள் நீங்கலாக, பாக்டீரியா எதிர்ப்புத்திறன், மஞ்சை எதிர்ப்புச் சக்தி, வைரஸ் கிருமி எதிர்ப்புத்திறன் முதலிய காரணங்களுக்காகச் சில வகைக் காளான்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக ஒரு விதக் காளானிலிருந்து கிடைக்கும் 'லென்டினன் சல்பேட்' என்ற பொருளுக்கு 'AIDS' நோயைக் கட்டுப்படுத்தும் குணம் இருப்பதாக ஜப்பான் நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

சீனாவில் மட்டும் 107 வகையான மருத்துவ ரகக் காளான்கள் வளர்க்கப்படுகின்றன.

கேரளாவில் நிலத்தடியில் வளரும் காளான் ஒன்று, ஆயுர்வேத மருத்துவர்களால் மஞ்சள் காமாலை, காது வலி முதலிய நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது.

குளிர் காலத்தில்

கோழிப்பண்ணை

பராமரிப்பு

கோழிகளின் உற்பத்தித் திறன் தொடர்ந்து நிலையானதாக இருக்க, வெப்ப தட்பச் சூழ்நிலைக்கேற்ப அவைகளை நன்கு பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். கோடை காலத்தில் கூடுதலான வெப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது போலக் குளிர் காலத்திலும் கூடுதலாகக் குளிரிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். மழை மற்றும் பனி ஆகியவற்றால், கோழிகள் உள்ள வீட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு, கோழிகளின் வளர்ச்சி குறைந்து முட்டை இனக் கோழிகளில் முட்டை இடும் திறனும், கறிக்கோழிகளில் எடைகுறைவாகும்நிலையும்ஏற்படும். எனவே, கோழிப்பண்ணையாளர்கள் குளிர் காலத்தில் கோழிகளைப் பராமரிக்க வேண்டிய வழிமுறைகளை அறிந்து தகுந்த முன்னேற்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கோழி வீட்டின் கூரை பராமரிப்பு

பெரும்பாலும் கோழிகளின் வீடுகள் கூரையால் வேயப்பட்டுள்ளதால், நாளடைவில் கூடை பழுதடைந்து ஓட்டை ஏற்படலாம். இதை மழைக்காலம் ஆரம்பிக்குமுன்பே சீர்படுத்தவேண்டும். தேவைப்பட்டால் புதிய கூரை அமைக்கலாம் அல்லது ஓட்டை விழுந்த இடங்களில் புதிய கூரை போட்டுச் சரி செய்யவேண்டியது மிகவும் அவசியம். இதனைச் சீர்செய்யாவிடில், மழைக் காலத்தில் ஒழுகல் ஏற்பட்டு கோழி வீட்டினுள் மழை நீர் புகுந்து ஈரமாக்கிவிடும். இதனால், முட்டையிடும் கோழிகள் நனைந்து தீவனம் சரிவரத் தின்னாமல் முட்டை குறைந்துவிடும். கறிக்கோழிகளின் வளர்ச்சித் திறன் குறைந்து எடை குறைந்துவிடும். ஆழ்கூளம் நனைந்துவிடும். இதன் விளைவாகக் காக்கிடியோசிஸ் என்ற இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படும். கோழிகளில் இறப்பு ஏற்படலாம். இதனால் பொருளாதார நட்டம் ஏற்படக் கூடும்.

டாக்டர் என். மாரிமுத்து
கால்நடை பராமரிப்புத்துறை
விவசாயக் கல்லூரி, மதுரை.

பண்ணை பக்கவாட்டில் திரை அமைத்தல்

மழைச்சாரல் கோழி வீட்டினுள் புகாமலிருக்கப் படுதா அல்லது கோணிச் சாக்குகளைப் பக்கவாட்டுத் திரையாக மழை பெய்யும் நேரங்களில் தொங்கவிடவேண்டும். மழை நின்றவுடன் படுதாவினைச் சுருட்டி வைக்கவேண்டும். இரவு நேரங்களில் படுதாவினை இறக்கி விட்டுக் காலையில் வெயில் வந்தவுடன் மீண்டும் சுருட்டி, கட்டி வைக்க வேண்டும். அதிகாலையில் சுற்றுப்புறம் குளிராக இருக்கும். எனவே, சூரிய வெப்பம் வந்த பின்பு பக்கவாட்டுத் திரைகளைச் சுருட்டி வைக்கவேண்டும்.

ஆழ்கூளம் பராமரிப்பு

ஆழ்கூளம் எந்த நேரத்திலும் இல்லாமலிருப்பது மிகமிக அவசியம்.





மழைச் சாரல் மற்றும் மழைத் தண்ணீர் ஒழுகுதல் மூலம் ஆழ்கூளம் நனைந்து விட்டால், அதை உடனே அப்புறப்படுத்த வேண்டும். இல்லையேல் கோழிகளுக்கு இரத்தக் கழிச்சல் நோய் உண்டாகும். கோழி எச்சத்தில் சுமார் 70 சதவிகிதத்துக்கு மேல் ஈரப்பதம் இருப்பதாலும், மழைக் காலங்களில் சுற்றுப்புறம் ஈரப்பதத்துடனிருப்பதாலும், ஆழ்கூளம் விரைவில் உலர்வதில்லை. இதனால் காக்சிடியோசிஸ் எனும் இரத்தக் கழிச்சல் நோய் வரக்கூடும். ஆழ்கூளத்தில் ஈரப்பதம் 25 சதவிகிதத்துக்குமேல் இருந்தால் அம்மோனியா வாயு உற்பத்தியாகி கோழிகளைப் பாதிக்கும். கண் எரிச்சல் ஏற்படும். தீவனம் உட்கொள்வது குறையும்.

முட்டை இனக் கோழிகளில் முட்டை உற்பத்தி குறைந்துவிடும். கறிக் கோழிகளில் வளர்ச்சி குறைந்து எடை குறைந்து விடும். இதனால் பண்ணையின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். இந்நிலையைத் தவிர்க்க, பண்ணையில், 100 ச.அடி. பரப்பிற்கு 8 முதல் 10 கிலோ என்ற விகிதத்தில் சுண்ணாம்புத்தூளைத் தூவி நன்கு கிளறி விடவேண்டும். ஆழ்கூளத்தின் ஈரத் தன்மையைப் பொறுத்து வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை அப்படி விடுவது அவசியம். கூட்டு முறையில் வளர்க்கப்படும்போது ஈத்தொல்லையை நீக்க மழைக் காலத்தில் கோழி எச்சத்தின் மீது சுண்ணாம்புத்தூள், மலத்தியான், சுமத்தியான் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும்.

கூடுதலாக வெப்பம் அளித்தல்

குளிர்காலத்தில் காலையில் பனிமூட்டமாக இருக்கும். இதனால் சற்றுப்புறக் காற்று, ஈரப்பதத்துடனிருக்கும். இவ்விதச் சூழ்நிலையில் எலக்ட்ரிக் ஹீட்டர் பயன்படுத்தி கோழி வீட்டில் வெப்பம் கொடுத்தல் அவசியம். இதோடு நன்கு பகல் வெளிச்சம் வரும்வரை செயற்கை வெளிச்சம் கொடுத்து பல்புகளை எரியவிட வேண்டும். இதனால் கோழிகள் ஒரே இடத்தில் அடையாமல் பரவலாக நடந்து திரியவும் தீவனம் உட்கொள்ளவும் ஏதுவாகும். ஒரு நாளைக்கு 16 மணி நேரத்துக்குக் குறையாமல் வெளிச்சம் கிடைக்கவேண்டும்.

தீவனம் அளித்தல்

கோடை காலத்தில் சிலர் பண்ணைத் தீவனத்துடன் தண்ணீர் கலந்து பிசைந்து வைப்பார்கள். இப்படிக் கூளத்தை குளிர் காலத்தில் மாற்றி உயர் தீவனமாகக் குளிர் காலத்தில் கொடுக்க வேண்டும். குளிர் காலத்தில் கோழிகளுக்குக் கூடுதலாக எரிசக்தி தேவைப்படுவதால் எப்போதும் கொடுக்கப்படும் தீவனத்தைவிட எரிசக்தி கூடுதலாகக் கிடைக்கும்படி தீவனக் கலவையை மாற்றி அமைக்கத் தீவனம் தயாரித்துக் கொடுக்கவேண்டும். கோழிகளுக்குத் தேவையான கூடுதல் வெப்பம் கிடைக்க கரும்பாலைக் கழிவு (Molasses) ரைஸ்பாலிஷ், மக்காச் சோளம் போன்றவற்றைத் தீவனத்தில் கலந்து கொடுக்கலாம்.

தண்ணீர் அளித்தல்

குளிர் காலத்தில் தண்ணீர் பொதுவாகக் குளிர்ச்சியாக இருக்கும். குளிர்ச்சியாக உள்ள நீரைக் கோழிகளுக்குக் கொடுத்தால், உட்கொள்ளும் அளவு குறைந்துவிடும். இதனைத் தவிர்க்க, குளிர் காலத்தில் கொடுக்கும் தண்ணீரைச் சிறிது சூடாக்கிக் கொடுத்தால் உட்கொள்ளும் தண்ணீரின் அளவு அதிகரிக்கும். இதனால் வளர்ச்சி விகிதம் பாதிக்காமலிருக்க வாய்ப்புண்டு.

குளிர் காலத்தில் ஏற்படும் நோய்கள்.

குளிர் காற்று மனிதர்களைப் பாதிப்பதுபோல் கோழிகளையும் பாதிக்கின்றன. சுற்றுப்புறக் காற்றும் மிகவும் ஈரப்பதம் நிறைந்ததாக இருப்பதால் கோழிகளில் சளி, நுரையீரல் நோய், இரத்தக் கழிச்சல் போன்ற நோய்கள் ஏற்படலாம். இவற்றிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க ஈரப்பதம் அதிகமுள்ள ஆழ் களத்தை உடனே அப்புறப்படுத்தி, புதிதாக உலர்ந்த ஆழ்கூளம் போடவேண்டும். வளர்க்கப்படும் கோழிகளின் எண்ணிக்கை அப்பண்ணையின் பரப்பளவுக்கு எத்தனை வைத்துப் பராமரிக்க முடியுமோ அதற்குமேல் கூடுதலான எண்ணிக்கையில் வளர்க்கக் கூடாது. நெருக்கடியைத் தவிர்க்கவேண்டும். குளிர் காலத்தில் கோழித் தீவனத்தில் அவசியம் காக்சிடியோஸ்டேட் மருந்து கலந்து கொடுக்கவேண்டும். சளி, நுரையீரல் நோய் வராமலிருக்க ஆண்டிபயாடிக் மருந்து நீரில் கலந்து கொடுக்க வேண்டும். முட்டை இனக் கோழிகளில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம். குளிர் காலத்தில் கோழிகளின் உற்பத்தித் திறன் குறையாமலிருக்கவும் நோய்ப் பாதுகாப்புச் செய்யவும் மேற்கூறிய பராமரிப்பு முறைகளைக் கோழிப் பண்ணையாளர்கள் கடைப்பிடித்து, பண்ணையின் பொருளாதாரம் கூடுதலாக்கக் குளிர் காலத்தில் கோழிகளை நன்கு பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.



நூல் நயம்

பேரறிஞர் அண்ணா

ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு:

உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித்தெரு,
சென்னை-600 001.

பக்கம்:194 விலை:ரூ.25/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருவாழ்வு, நமக்கெல்லாம் வழிகாட்டியாக, குறிப்பாக இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

இந்த நூலில், அவரது வாழ்க்கைப் பயணங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணாவின் எழுத்து, பேச்சு, தொண்டு எல்லாம் தொகுப்பெற்றுப் படிப்போர்க்குப் பயன் தருவனவாக அமைந்துள்ளன. எல்லாரும் படிக்க வேண்டிய நூல்.

திருக்குறள் எளிய உரை

ஆசிரியர்: புலவர் ச. சீனிவாசன்

வெளியீடு:

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:267 விலை:ரூ.12/-

வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு எளிய இனிய உரை எழுதியுள்ளார் ஆசிரியர். எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளத் தக்க வகையிலே குறளும், அதற்கு நேரே அதன் பொருளும் கொடுத்திருப்பது இந் நூலின் சிறப்பம்சம். நூலின் இறுதியில் திருவள்ளுவமாலையும், செய்யுள் முதற் குறிப்பு அகர வரிசையும் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மலிவு விலையில், கையடக்க அச்சமைப்பு கொண்டது இந் நூல்.

—பி.வி.ஜி.

ஆயிரம் விடுகதைகள்

ஆசிரியர்: சௌந்தரி நடராசன்

வெளியீடு:

முத்துசுந்தரி பிரசுரம்,
12, திருவள்ளுவர் தெரு,
ஔவை நகர், பாடி,
சென்னை-600 050

பக்கம்:132 விலை:ரூ.16/-

விடுகதைகள் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை சொல்லி மகிழும் ஒரு வினாடி வினாவாகும். அத்தகைய விடுகதைகள் இந்நூலில் நிறைந்துள்ளன. உதாரணத்துக்குச் சில:

அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல; நிலையாக இருக்காது நிலவும் அல்ல - அது என்ன? (புகை)

அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல; அழகான வாலுண்டு குரங்கும் அல்ல - அது என்ன? (பட்டம்)

தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?

ஆசிரியர்: எஸ்.ஆர். கோவிந்தராசன்

வெளியீடு:

கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:187 விலை:ரூ.24/-

மாணவர்கள், எழுத்தாளர்கள், ஏன், எழுதத் துடிக்கும் எல்லோருமே பிழையின்றி எழுத வேண்டும். எழுத்துப் பிழைகள், நல்லவயலில் களைகள் போன்றவை. அவற்றைக் களைதல் வேண்டும். அதற்கு வழி வகை கூறுகிறது இந்நூல்.

பிழை இல்லாமல் எழுத வேண்டுமானால், ஓரளவாவது இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும். 'எளிய அடிப்படை இலக்கணம்' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரத்தினச் சுருக்கமாக இலக்கணம் கற்க வழி கோலுகிறார்.

குறுந்தொகை ஓவியங்கள்

ஆசிரியர்:

டாக்டர் சரளா இராசகோபாலன்,

வெளியீடு:

ஒளிப் பதிப்பகம்,
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18

பக்கம்:160 விலை:ரூ.20/-

தமிழ் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவ்வக் காலக்கலை, நாகரிகம், பண்பாடு முதலான தன்மைகளை எடுத்துக்காட்டி அந்தத் தமிழ்ச் செல்வங்களை மனத்தில் பதிக்க வேண்டும். அத்தகைய செல்வங்களுள் ஒன்றுதான் குறுந்தொகை.

அத்தகைய குறுந்தொகைக் காட்சிகள் சிலவற்றை எழுத்தோவியமாகத் தீட்டியுள்ளார் ஆசிரியர். எளிய நடையில், எல்லாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பு.

—பி.வி. கிரி

காந்தியடிகள் கண்ட கடவுளும் சமயமும்

தொகுப்பாசிரியர்:

வீ.சேரந்தையா பிள்ளை

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:177 விலை:ரூ.16/-

அண்ணல் காந்தியடிகளுக்கு ஆன்மீகமும், சமயமும் இரு கண்களாக விளங்கின. அவர்தம் வாழ்நாள் முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு உண்மையான ஆன்மீகவாதியாகவும் விளங்கினார். அவரது கருத்துக்கள் நூல் முழுவதும் விரவியுள்ளன.

காந்தியடிகள் கண்ட கடவுள், நம்பிக்கை, பகுத்தறிவு, ஒழுக்கம், பிரார்த்தனை, வழிபாடு, அருள்நெறி முதலான தத்துவங்கள், தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூல்.

வள்ளுவம் பன்னோக்குப் பார்வை

ஆசிரியர்: ப. முருகேசம்

வெளியீடு:

நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

பக்கம்:163 விலை:ரூ.16.50/-

இது ஒரு அருமையான தொகுப்பு நூல். வான்புகழ் வள்ளுவர் குறித்து, பல்துறை அறிஞர் பெருமக்கள் எழுதிய 25 கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், டாக்டர் க.த. திருநாவுக்கரசு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் சுப்புரெட்டியார், டாக்டர் ந. சஞ்சீவி முதலானோரின் அரிய கருத்துக்கள் நிறைந்த படைப்புகள் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஓட்டுநர்களும் குடிப்பழக்கமும்

பொதுத் தொண்டில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓட்டுநர்களின் ஒவ்வொரு உறுப்பும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஏதாவது ஒரு உறுப்பு ஊனப்பட்டிருந்தால் கூட, ஓட்டுநர் தொழிலைச் செம்மையாகப் புரியவே இயலாது.

ஆரம்ப காலத்தில் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் கொண்டவர்கள் ஓட்டுநர் தொழிலுக்கு வந்துவிட்டால் எக்காலத்தும் கடமை தவறாத நற்பண்பும், கருணை மாறாத செயல் திறனும், உயிர்களின் மீது அன்பும், பரிவும், தேசாபிமானமும் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். அதனால் தான் ஓட்டுநர் தொழில் ஓர் உயர்ந்த தொழிலாக மதிக்கப்படுகிறது.

ஒரு நாட்டின் கண்போன்றவர் ஓட்டுநர்

பல உயிர்களைப் பாதுகாத்திட வேண்டிய பொறுப்பு மிக்க ஒவ்வொரு ஓட்டுநருக்கும் உடல்நிலை பாதிக்கப்படாமல் முடிவெடுக்கும் தன்மையும், உடல் உறுப்புக்கள் இயங்கும் தன்மையும் சிறப்பாக இருத்தல் வேண்டும்.

சாதாரணமாக ஒரு குதிரை பூட்டிய வண்டியை ஓட்டுபவர் அக் குதிரை ஏதாவது இடக்குப் புரிந்தால் என்ன செய்கிறார்? எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறார். அதே போல் 110 குதிரை சக்தி திறனைக் கொண்ட ஒரு வாகனத்தை ஓட்டுகின்ற ஓட்டுநர் எவ்வளவு சிரமத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது? நல்ல திடகாத்திரமாக இருப்பவர்களாலேயே நிலைமைகளைச் சமாளிக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதிலும் மதுபானத்தை அருந்தி வாகனத்தை ஓட்டுவதாயிருந்தால்.... அய்யகோ! விளைவுகளை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.

குடி குடியைக் கெடுக்கும்

குடிப்பதால் தன்னிலை மறப்பதோடல்லாமல் உணர்வுகளையும், மனநிலையையும் மயங்கச் செய்கிறது. மூளையும் பாதிக்கப்பட்டு, முடிவெடுக்கும் தன்மையும் குறைந்து விடுகிறது. கண்கள் பார்க்கும் தன்மையையும், தசைநார்கள் தளர்ந்து உடல் உறுப்புகள் இயங்கும் கட்டுப்பாடுகளையும் இழந்து விடுகின்றன.

மதுபானம் அருந்தும் பழக்கமுடைய சில ஓட்டுநர்களை அண்மையில் ஆய்வுக் கூடத்தில் விசாரித்த போது...

'நான் எவ்வளவு குடிச்சாலும் ஸ்டெடியா இருப்பேங்க''...

''நான் எப்பவுமே 'நிதானத்தை' மட்டும் விட மாட்டேங்க'...

- என்றெல்லாம் கூறினார்கள்.

இப்படி ஸ்டெடியாக இருப்பதாகக் கூறிக்கொண்டு இருப்பவர்களால் எத்தனை விபத்துக்கள் விளைந்து, உயிர்ச் சேதங்கள் பொருட் சேதங்கள் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாக உலக ஏடுகள் பக்கம் பக்கமாக எழுதி வருவதை நாம் படித்து வருகிறோம்!



மதுபானம் அருந்தியதும் ஏறக்குறைய 20 அல்லது 40 நிமிடங்களில் மதுவானது இரத்தத்தில் கலந்து போதையை உண்டாக்குகிறது. மதுவின் அளவு இரத்தத்தில் 0.10 சதவிகிதம் மேற்பட்டால் மயக்க நிலை ஏற்பட ஏதுவாகும்.

சட்டரீதியாக ஓட்டுநர் ஒருவர் பணிபுரியும்போது சிறிதளவுகூட மது அவர் இரத்தத்தில் கலந்த அறிகுறியே இருக்கக்கூடாது. இருந்தால் 'குற்றப்பத்திரிகை' தாக்கல் செய்யலாம். அவரது உரிமம் பறிக்கப்படலாம்.

குடிபோதையில் வாகனத்தை ஓட்டுவது செக்ஷன் 117 மோட்டார் வாகனச் சட்டப்படி குற்றமாகும். அவை...

சிற்றுந்துகளாக இருந்தாலும் சரி;
சரக்குந்துகளாக இருந்தாலும் சரி;
பேருந்துகளாக இருந்தாலும் சரி;

எந்தவொரு சூழ்நிலையிலும் ஓட்டுநர் மதுவருந்தி ஓட்டுவது பெருங்குற்றமாகும். வாலிபர்களானாலும், வயதானவர்களானாலும் மதுஅருந்தி வாகனத்தை ஓட்டுவது முடியாத, இயலாத காரியமாகும். அதனால் பொதுச்சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஓட்டுநர்கள் மது அருந்துவதை நிறுத்தி, தமது குடும்பத்திற்கும், தாய் நாட்டிற்கும் நன்மை செய்தல்வேண்டும்.

மோட்டார் வாகனச் சட்டம் 71

வரையறுக்கப்பட்ட வேகக்கட்டுப்பாடு எல்லைகள்

வாகனங்கள் — நகர்ப்புறங்கள் — மற்ற புறநகர்கள்

சிற்றுந்துகள் 50 கி.மீ. எல்லை
(கார், டாக்சி, இல்லை
மோட்டார் சைக்கிள்)

பேருந்துகள் 35 கி.மீ. 60 கி.மீ.
(பயணிகள் பேருந்து)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் சங்கப் பிரதிநிதிகள் 12.8.92 அன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

சிறுவாகனங்கள் 35 கி.மீ. 50 கி.மீ.

நடுத்தரச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(டெம்போக்கள்)

கனரகச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(லாரி-டிரக்)

இவை அல்லாத வாகனங்கள் 20 கி.மீ. 30 கி.மீ.

இந்த வரையறுக்கப்பட்ட வேகத்திற்குமேல் வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.

போதையில் மூடிய பாதை
(உண்மைச் சம்பவம்)

குடிபோதையினால் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று மேட்டுப்பாளையம் சாலையில் நீலமலைராணியின் நுழைவு வாயிலில் நிகழ்ந்தது. அன்றையதினம் மாலை மணி 3.30. கோலமிகு குன்னூரை நோக்கி மேட்டுப்பாளையத்திலிருந்து பயணிகள் பேருந்தொன்று பாங்காகச் சென்று கொண்டிருந்தது.

அதே நேரத்தில் உதகையிலிருந்து கீழ்நோக்கி நன்கு பாரமேற்றப்பட்ட 'சரக்குந்து' ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. பேருந்தானது 'தூரிப்பாலம்' எனப்படும் ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய வழியினைக் கொண்ட இரும்பு இணைப்புப் பாலத்தை நெருங்கியதும், முறைப்படி முன்னால் வாகனம் ஏதாவது வருகின்றதா?... ஏதாவது 'ஹாரன்' சப்தம் கேட்கின்றதா?... என்பதை நன்கு தெரிந்து, உறுதி செய்தபின்னர், ஓட்டுநர் பாலத்தைப் பயன்படுத்தினார். பாலத்தின் முக்கால் பாகத்தையும் கடந்துவந்து கொண்டிருக்கும்பொழுது, உதகையிலிருந்து கீழ் நோக்கி வரும் சரக்குந்து நிற்காமல், வேகத்தையும் குறைக்காமல் பாலத்தை நெருங்குவதை உணர்ந்த பேருந்தின் ஓட்டுநர் உடனே ஒலி கொடுத்தார். முகப்பு விளக்கினை ஒளிரவிட்டார்.... இருந்தும என்ன பயன்?... தொடர்ந்து இரண்டு மூன்று நாள் ஓடியதனால் அசதியாக இருக்கிறது. மலைவழித் தடத்தில் கை, கால்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று அந்தச் சரக்குந்து ஓட்டுநர் 'மது' அருந்தி இருந்தார்.

அதனால் கண்பார்வை செயல்படும் தன்மை முடிவெடுக்கும் தன்மை, உடல் உறுப்புக்கள், உணர்வுகள் மயங்கிய நிலையில், "மேலே வரும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்" என்கிற சாலை விதியினையும் அனுசரிக்காமல், சாலை எச்சரிக்கைச் சின்னத்தையும் பார்க்காமல், ஒரு பேருந்து மட்டுமே செல்லக்கூடிய பாதையினைக் கொண்ட பாலத்தில் முழுவதும் கடந்துவிட்ட பேருந்து செல்ல வழிவிடாமல், எதிர்பார்க்கும் தன்மையை இழந்து புகுந்துவிட்டார்..

விளைவு...? மகப் பயங்கரமாக... மயிர்க்கூச்செறியும்படியாக நிகழ்ந்துவிட்டது. சரக்குந்தானது பாலத்தின்மீது மோதி இரும்புக் கிராதிகளின் மீதேறி, பயணிகள் பேருந்தின்மீது சாய்ந்துவிட்டது. பேருந்தின் ஓட்டுநர் மிகவும் சாதுரியமாக, லாவகமாகப் பேருந்தை நிறுத்திவிட்டார். இல்லையெனில் பல விலை மதிப்பில்லாத உயிர்கள் அங்கே பலியாகி இரத்த ஆறு ஓடியிருக்கும்.

இதனால் அன்றையப்பொழுது அனைத்து வாகனங்களும் அந்த வழியில் செல்லமுடியாமல் 100 கி.மீ. அதிகமான மாற்றுவழியில் திருப்பிவிடப்பட்டன. அதனால் எத்தனைப் பேருக்குச் சிரமம்! எவ்வளவு வேதனை!!

அத்தனையும் - மது அருந்திய அந்த ஓட்டுநராலன்றோ உணர்வுகளை, உடமைகளை, இழக்க நேர்ந்தது... அது மட்டுமா?

ஆயிரமாயிரம் வாகனங்களுக்கு வீணான எரிபொருள் செலவு...

அவசர வேலை நிமித்தம் பயணம் செய்வோருக்கு உரிய நேரத்தில் போய்ச் சேரமுடியாமை...

பொதுவுடமைப் பொருட்கள் சேதம்!!

அத்தனையும் குடியைக் கெடுக்கும் குடியினால் வந்ததன்றோ! ஆகவே, குடிப்பதை நிறுத்துவோம்! குடிகளைக் காப்பாற்றுவோம்!!

தகவல்:
சேரன் போக்குவரத்துக் கழகம்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் விளாகம் மாதிரி கிராமம்

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், மிகவும் பின் தங்கிய மற்றும் வறுமைக்கோட்டிற்கும் கீழே வாழும் அதிகமாக நெசவுத்தொழில் செய்யும் மக்களைக் கொண்ட 25 கிராமங்களை மாதிரி கிராமங்களாகத் தேர்வு செய்து அக்கிராமத்தினருக்குக் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களை வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் தமிழ்நாட்டிலேயே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த 'விளாகம்' கிராமம் மாதிரி கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமம், திருக்கழுக்குன்றம் கருங்குழிச் சாலையில் 10-வது கிலோ மீட்டரில் பிரியும் கிளைச் சாலையில் 2-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

விளாகம் - ஒரு கண்ணோட்டம்

விளாகம் கிராமத்தில் மொத்தம் 269-குடும்பங்கள் உள்ளன. 193 குடும்பங்கள் கிராமத்தின் மத்தியிலும் 76 குடும்பங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலும் உள்ளன. ஆண்கள் 564 பேர்களும், பெண்கள் 460 பேர்களும், குழந்தைகள் 393 பேர்களும் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் 76 குடும்பங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 64 குடும்பங்களும், பிற்படுத்தப்பட்டோர் 114 குடும்பங்களும் இதர வகுப்பினர் 15 குடும்பங்களும் உள்ளனர். உடல் ஊன முற்றோர் 6 பேர்களும், விதவைகள் 13 பேர்களும் உள்ளனர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 555 பேர்களும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 584 பேர்களும் உள்ளனர்.

50 குடும்பத்தினர் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். 70 நபர்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளார்கள். 138 வீடுகள் மின்சார வசதியைப் பெற்றுள்ளன. 247 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். 66 நபர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். 2 நபர்கள் விசைத்தறி வைத்து உள்ளனர். 66 நபர்கள் சொந்தத் தறிகள் வைத்து உள்ளனர். 83 நபர்கள் நெசவுக் கூலி வேலைகள் செய்கிறார்கள். 263 நபர்களுக்குச் சொந்தமாக வீடுகள் உள்ளன. இவர்கள் 194 கால்நடைகளையும், 50. பறவைகளையும் வைத்துள்ளனர்.

ஆண்டு வருமானமாக 125 குடும்பங்கள் ரூ.4,000-க்குள்ளும் 83 குடும்பங்கள் ரூ.4,000 முதல் ரூ.6,000-க்குள்ளும், 36 குடும்பங்கள் ரூ.6,000 முதல் 8,500-க்குள்ளும், 17 குடும்பங்கள் ரூ.8,500 முதல் 11,000- க்குள்ளும், 8 குடும்பங்கள் ரூ.11,000-மும் அதற்கு மேலும் பெற்று வருகின்றன.

திட்டங்களைச் செயல்படுத்த அலுவலர்கள் குழு

இக்கிராம மக்களை, வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டு வந்து சேர்த்திட கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களைத் தலைவராகவும், உதவி இயக்குநர், துணை இயக்குநர் மாநில அளவிலான நெசவாளர் சேவை மையம், முதன்மைக் கல்வி அலுவலர், நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மாநிலக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் உதவி இயக்குநர் கைத்தறி நூல் மற்றும் துணிநூல் துறை அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தனியார் தறி முதலாளிகளின் பிடியில் சிக்கி, மிகவும் குறைந்த கூலிக்கு நெசவு செய்து அதனால் சொற்ப வருவாய் பெற்று வாழும் நெசவாளிகளின் வருமானத்தை உயர்த்தவும், வருவாயை நிரந்தரமான மற்றும் நம்பகமானதொன்றாக மாற்றிடவும் இவர்களையும் கூட்டுறவின் கீழ் கொண்டு வருவது இன்றியமையாதது என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கிராமத்தின் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி ரூ.25 இலட்சம் அரசு திட்டத் தொகையாக ஒதுக்கீடு செய்து பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

கோட்டப் பொறியாளர் சர்க்கரை அபிவிருத்தித் திட்டம், கடலூர் மூலம், நெடுஞ்சாலையிலிருந்து விளாகம் கிராமத்திற்கு 3 கி.மீ.

ஆ. கோபாலன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம்

• விளாகம் கிராமத்தின் ஒரு தோற்றம்

தூரம் சாலை வசதி செய்யபப்பட உள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விளாகம் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிதண்ணீர் இணைப்பு செய்துதர நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது. விளாகம் கிராமத் திற்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள வள்ளிபுரம் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் விரிவாக்க மையம் ஒன்று தொடங்கவும், பேருந்து வசதியும் இக்கிராமத்திற்கு அதிகப் படுத்தப்படும். தற்போது உள்ள ஆரம்பப் பள்ளியை நடுத்தரப் பள்ளியாக ஆக்க நடவடிக்கை எடுக் கப்படும். தொலைபேசியுடன் தந்தி வசதி கொண்ட ஒரு கிளை அஞ்சல் நிலையம் ஒன்று தொடங்கப்படும்.

பொழுதுபோக்கு வசதிக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி வைப்பதற்காக • சிறிய கட்டடம் ஒன்றும், படிப்பதற்கான பொது நூலகத்திற்குச் சிறிய கட்டடம் ஒன்றும் கட்டிச் செயல் படுத்தப்படும். கால்நடை மருத்துவ வசதிக்கு, தற்போது வள்ளிபுரத்தில் இயங்கிவரும் கால்நடை மருத்துவ நிலையத்திலிருந்து இக்கிராமத்திற் கெனக் கிளை அமைத்து மருத்துவ வசதி ஏற்படுத்தவும் கூட்டுறவு விரி வாக்க அலுவலர் மூலம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

கைத்தறித்துறையில் தற்போது புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தகுதி வாய்ந்த புதிய உறுப்பினர் களைச் சேர்க்கவும் தகுதியற்றவர் களுக்கு நெசவுப் பயிற்சியளிக்கவும் உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி யளிக்கவும் அவர்களின் சராசரி வருமானத்தை உயர்த்தவும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தர, காஞ்சிபுரம் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அவர்களால் தெரி விக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புத்துறை யின் சார்பில் குறைந்த பட்சம் ஐந்து சென்ட் நிலமுள்ளவர்களுக்கு இல வசமாகப் புல்விதை வழங்கி வளர்ந்த புல்லை விலைக்குக் கொள்முதல் செய்து இக்கிராமத்தவருக்கு உதவ முடிவு செய்யப்பட்டது. முதியோர் கல்வி வசதி செய்யவும், பட்டுப்புழு வளர்த்து வருவாய் பெறவும், வரு வாய்த்துறையின் சார்பில் தகுதி வாய்ந்த நபர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கவும் பட்டா இல்லாத வர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் படும். சமூகக் காடுகள் வளர்ப்பின் கீழ் இக்கிராம மக்களுக்குத் தென்னை, பப்பாளி, தேக்கு, முருங்கைக் கன்றுகள் பயிர்செய்ய இலவசமாக வழங்கப்படும். குறைந்தது 2 மாடு களுக்கு மேல் வைத்து இருப்பவர் களுக்குச் சாண எரிவாயு வசதி செய்யப்படும். சமூக நலத்துறையின் சார்பில, அனைத்து நலத்திட்ட உதவிகளையும், அதை எப்படிப் பெறவேண்டும் என்று கிராம மக் களுக்கு அறிவித்து உதவிகள் செய் யப்படும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து நலத்திட்டங்களும் இக்கிராம மக் களுக்குச் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

விளாகம் கிராம மக்களை மேம்படுத்த மேம்பாட்டுத் திட்டங்கள்

மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் 40 நபர்களுக்குக் கைத் தறிகள் வழங்கவும், 5 நபர்களுக்கு

• விளாகம் கிராமம் மேம்பாட்டுப் பணிகள் குறித்து நடை பெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அலுவலர்கள்.

விசைத்தறிகள் வழங்கவும், 33 நபர்களுக்கு வீடு கட்டவும், உதவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 37 நபர்களுக்கு ஆடுகள் வாங்கி வளர்த்து ஆட்டுப்பண்ணை வைக்க வும், 28 நபர்களுக்குப் பால் மாடுகள் வாங்கவும், 2 நபர்களுக்கு மாடு களுடன் டயர் வண்டி வழங்கவும் 3 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கவும் ஒருவருக்குப் பவர் டிரில்லிங் கொடுக்கவும், 4 நபர்களுக்குப் பம்ப்செட் வைக்கவும், ஒரு நபருக்குத் தச்சுத் தொழில் கருவி களும், 3 நபர்களுக்கு வாத் துகள் வாங்கவும், 3 நபர்களுக்குச் சலவைக் கருவிகள் பெறவும், 2 நபர்கள் காய்கறிக் கடைகள் வைக் கவும், 2 நபர்கள் ஆயில் என் ஜின்கள் வாங்கவும், ஒருவர் டிராக் டர் வாங்கவும், 2 நபர்கள் இட்லி கடை வைக்கவும் உதவிடத் திட்ட மிடப்பட்டு, செயலாக்கம் பெற்று வருகிறது.

இக்கிராமத்தில் உள்ளவர்களுக் குச் சொந்தமாக வீடுகள் கட்டக் கடன் தொகையும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது. பட்டு வளர்ப் புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வீட்டிற்கு 10 மரக் கன்றுகள் இலவசமாகக் கொடுத்து வளர்க்கப்பட உள்ளது. மாடுகள் அதிகம் வளர்க்கும் குடும்பத்தின ருக்கு 'பையோகாஸ்' அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங் கப்படவுள்ளது. மண்சாலைகள் அனைத்தும், மெட்டல் சாலைகளாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் வசிக்கும் வில்லி யர்கள் எனும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக் கும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட வுள்ளது. இத்தகைய திட்டங்களி னால் வறுமைக்கோட்டிற்கும் கீழே இருந்து ஏழ்மையில் உழன்று வாடிக் கொண்டிருக்கும், விளாகம் கிரா மத்து மக்களுக்கு ஒரு விடிவுகாலம் காத்து இருக்கிறது.

★ இந்தியாவில் சராசரியாக, தனி நபர் சமையல் எண்ணெய் நுகர்வு ஆண்டொன்றுக்கு 7.14 கிலோ வாகும். உலக சராசரி 14.5 கிலோவாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் நிலையான வளர்ச்சி காணப் பட்டாலும், சமையல் எண்ணெய்த் தேவைக்கும் விநி யோகத்துக்கும் இடையே பெரிய இடைவெளி காணப் படுகிறது.

1990-91-இல் பற்றாக்குறை ஆறு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் இது ஏழு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இடைவெளியைப் போக்க அரசு சமையல் எண்ணையை இறக்குமதி செய்தது. 1989-90-இல் 6.07 இலட்சம் டன்னும், 1990-91-இல் 1.08 இலட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்பட்டது.

நம்மை வாழவைக்கும் பூண்டு!



எஸ். அனந்தகுமார்,
தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம்,
புதுக்கோட்டை-622 303.

நமது உணவில் வெள்ளைப் பூண்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. இது உணவில் மணத்திற்காகவும், சில மருத்துவப் பயன்களுக்காகவும் சேர்க்கப்படுகிறது.

முற்காலத்திலிருந்தே நமது முன்னோர்கள் வெள்ளைப்பூண்டின் பெரும்பயனை உணர்ந்து சமையலுக்கும், மருந்துக்கும் பயன்படுத்தி இருக்கிறார்கள். வெள்ளைப்பூண்டின் பிறப்பிடம் ஆசியா. முதலில் சீனாவிலிருந்து, ஸ்பானிஷ்காரர்கள், போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்கள் இதைத் தங்கள் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அதன் பின் வெள்ளைப் பூண்டு உலகம் முழுவதும் பரவியது.

பூண்டிலிருந்து 'அல்லிசாடின்' என்ற மருந்தைத் தயாரிக்கிறார்கள். நாட்டு வைத்தியத்தில் பூண்டிலிருந்து மாத்திரைகள், லேகியங்கள், தைலம் ஆகியவை தயாரிக்கப்படுகிறது.

பூண்டில் காரம் இருக்கிறது. ஒரு வித நெடி உள்ளது. நமக்கு ஏற்படும் பலவித நோய்களைக் குணமாக்கும் மருத்துவச் சக்தி பூண்டுக்கு உள்ளது. வெள்ளைப்பூண்டு உடலுக்கு உற்சாகம் தருகிறது. கண் நலம் பேணுகிறது. செரிமான சக்தியைத் தூண்டுகிறது. இருதய பலத்திற்கும், வாத நோயைக் குணப்படுத்தவும் உதவுகிறது. வாயு தொந்தரவு, மலச்சிக்கல், மூல நோய்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுவதோடு மட்டுமின்றி, இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறுகளை நீக்குகிறது. வெள்ளைப்பூண்டிற்குப் பாக்டீரியாவை அழிக்கும் சக்தி உள்ளது. டைபாய்டு, காலரா மற்றும் தோல் நோய்களைக் குணமாக்குகிறது. சிறுநீரை அதிகரிக்கிறது. சீதபேதி, உஷ்ண பேதியை நீக்குகிறது.

★ பூண்டைத் தட்டி ரசம் செய்து, சாதத்தோடு சாப்பிட்டால் கபம் குறையும்.

★ பூண்டை வதக்கிப் போட்டு, வற்றல் குழம்பு செய்து சாப்பிட - குளிரால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும்.

★ பூண்டுடன் சிறிது ஓமத்தை நசுக்கிப் போட்டு, கசாயம் வைத்துக் குழந்தைகட்குக் கொடுக்க குழந்தைகளின் வாந்தி, கொட்டாவி குறையும்.

★ வெற்றிலைக் காம்பு, வசம்பு, திப்பிலி, பூண்டு இவைகளைச் சம அளவு எடுத்து வெந்நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க - குழந்தைகளின் மாந்தம் குறையும், சளித் தொல்லையும் குறையும்.

★ பூண்டுச் சாற்றைக் காதில் இரு துளிகள் விட, காதுவலி குணமாகும்.

★ பூண்டுச் சாற்றில், சிறிது உப்பு கலந்து - உடம்பில் எங்கேனும் சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் பூசினால் சுளுக்கு மறையும்.

★ வெறும் பூண்டுச் சாற்றை தடவி, நீவி விட்டாலும் சுளுக்கு மறையும்.

★ காய்ச்சிய பசும்பாலில் இரண்டு, மூன்று பூண்டைப் போட்டு பருக நன்கு தூக்கம் வரும், ரத்தக் கொதிப்பு அடங்கும்.

★ பசும்பாலில், பூண்டை வேக வைத்து அப்பூண்டைச் சாப்பிட்டு பாலைக் குடித்தால் வாய்வுத் தொல்லை குறையும், ஈசினோபிலியா குறையும்.

★ பூண்டுத் தைலத்தை உடலில் தேய்த்து வர சருமத்தில் ஏற்படும் நமைச்சல், அரிப்பு மறையும்.

★ பூண்டு - கபத்தை வெளியேற்றும், மலத்தை இளக்கும்.

★ வெள்ளைப் பூண்டு, வசம்பு, ஊமத்தை வேர் இவைகளைச் சம அளவு எடுத்து, நன்கு அரைத்து, நல்லெண்ணையில் கலந்து, காய்ச்சி, நன்கு சிவந்து வரும்போது இறக்கி விடவும். இந்த எண்ணெய்யை ஆறாத புண்கள், காயத்தின் மேல் பூசினால் ஆறிவிடும்.

★ பூண்டையும், குப்பைமேனி இலையையும் அரைத்துச் சாறு எடுத்து, இச்சாறைக் குழந்தைகட்குக் கொடுக்க, வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியே வந்துவிடும்.

★ பூண்டைப் பொன்னாங்கண்ணிக் கீரையோடு சேர்த்து சாப்பிட மூல நோய் நீங்கும்.

★ பூண்டில், சிறிது எலுமிச்சை சாறுவிட்டு அரைத்து இருவேளை சாப்பிடக் கீல் வாதம் குணமாகும்.

★ பூண்டையும் - துத்தி இலையையும் சேர்த்து, லேசாக நசுக்கி, நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி, எண்ணையை முகப்பருவில் தடவ, முகப் பரு மறையும்.

★ பூண்டு, மிளகு, துத்தி இலை இவைகளை, ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து, இத்தோடு 15 கிராம் வசம்பு சேர்த்து நன்றாக அரைத்துப் பெண்கள் சூதக காலத்தில் சாப்பிட, சூதக வலி வராது.

★ பூண்டு, மிளகு, கரிசலாங் கண்ணிக் கீரை மூன்றையும், அரைத்துக் காலையில் மட்டும் மூன்று நாட்கள் நெல்லிக்காய் அளவு சாப்பிட சோகை நோய் குணமாகும்.

★ அரைக்கீரையோடு, பூண்டு, சீரகம், பச்சை மிளகாய் சேர்த்து, புளி சேர்க்காமல், சமையல் செய்து சாப்பிட வாயுத் தொல்லை நீங்கும்.

★ பூண்டு பல் ஒன்றை சுட்டு சிறிது சர்க்கரை சேர்த்துப் பாலில் இட்டுக் காய்ச்சி குழந்தைகட்குக் கொடுத்து வர கபம் நீங்கும்.

★ பூண்டைப் பச்சையாகச் சாப்பிட வாதநோய் நீங்கும்.

★ ஏதாவது விஷப் பூச்சிகள் கடித்து விட்டால், கடித்த இடத்தில் பூண்டை அரைத்துக் கட்ட விஷமிறங்கும்.

★ பூண்டை நசுக்கி, சாறெடுத்து, சாலை உள் நாக்கில் தடவ, உள் நாக்கு வளர்ச்சி குறையும்.

★ பூண்டுசாறையும், இஞ்சிச் சாறையும் சம அளவு கலந்து காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிட நெஞ்சுக் குத்து நீங்கும்.

★ ஒரு வெள்ளைப்பூண்டு, 7 மிளகு, 9 மிளகாய் இலை இவைகளைச் சேர்த்து அரைத்து காலை, மாலை சாப்பிட்டால் குளிர் காய்ச்சல் போய்விடும்.

★ பூண்டு, வசம்பு, ஓமம் இவைகளைச் சம அளவு எடுத்து - இடித்து மூன்று நாட்கள் சாப்பிட மாந்த ஜன்னி குறையும்.

★ பூண்டைப் பொடி செய்து, தேனில் குழைத்து தலை, புருவத்தில் பூச்சிவெட்டு ஏற்பட்டு, முடி வளராமலிருக்குமிடங்களில் தேய்த்து வர முடி வளரும்.

★ பச்சைப் பூண்டை உண்பதால் உடல் பலம் பெறும், உற்சாகம் ஏற்படும். அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுவலி மறையும், புளிப்பால் உண்டாகும் எரிச்சல் நீங்கும். ரத்த அழுத்தம் குறையும்.

★ பூண்டை, சுண்ணாம்பு நீரில் நனைத்துக் கட்ட நகச்சுற்று குறையும்.

★ பூண்டை நெய்யில் வறுத்து, உணவு உண்ணும்போது, சாதத்தில் சேர்த்து 40 நாட்கள் சாப்பிட - வாய்வுத் தொல்லை மறையும்.

★ பூண்டுச் சாற்றையும், எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்த்து, குழைத்துத் தொடை இடுக்குகளில் ஏற்படும் கக்கூஸ் படையில் தடவ, படை மறைந்துவிடும்.

★ வெள்ளைப் பூண்டு-2, வெற்றிலை-2-ம், சேர்த்து அரைத்து தேமல் மேல் தேய்த்துவரத் தேமல் மறைந்துவிடும்.

★ பூண்டை நசுக்கி, நீரில் கரைத்து நல்ல பாம்பு இருக்குமிடங்களில் தெளித்தால் அந்த நெடியில் பாம்பு ஓடிவிடும்.

★ பூண்டு உடல் வலியைப் போக்கும். பூண்டை, வெல்லத்தோடு சேர்த்து கொடுத்தால் உடல் வலி மறையும்.

★ பூண்டுச் சாற்றை டி.பி. நோயாளிகள் பருகி வந்தால், டி.பி. குறையும்.

★ பூண்டையும், சிறிது உப்பையும் சேர்த்துத் தின்றால் - திடீரென ஏற்படும் வயிற்றுவலி, நெஞ்சு எரிச்சல், நெஞ்சுக் கரிப்பு குறையும்.

- நன்றி: 'நில வளம்'

மூலிகைச் செடி

நாட்பட்ட நோய்கள் பல, நாட்டு வைத்திய முறையின்படி, பச்சிலைகளையும், மூலிகைகளையும் கொண்டு குணமாக்கப்பட்டு வருகின்றன. அந்த மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பல்வேறு மாநிலங்களில் கூடுதலாக 22,206 எக்டேர் நிலப்பரப்பில் மூலிகைச் செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதற்காகச் சுற்றுச் சூழல் - வனத்துறை அமைச்சகம் அந்த மாநிலங்களுக்கு 14.16 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், பஞ்சாப், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஒரிசா, பீகார், அரியானா, ஜம்மு-காஷ்மீர், குஜராத், மத்தியப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

சுகாதாரம்

• கி.பி.2000-வது ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்காக 1983-ஆம் ஆண்டின் தேசிய சுகாதாரக் கொள்கை விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ரூ.100 கோடி செலவில் குழந்தை பிறப்பு மற்றும் பராமரிப்பு சம்மந்தமான மையமொன்றை இந்தியாவில் நிறுவ ஜப்பான் திட்டமிட்டுள்ளது. ரூ.250 கோடி செலவில் 13 மாநிலங்களில் உள்ள 143 மாவட்டங்களில் தொழுநோய் ஒழிப்புத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள் தொழுநோய் ஒழிப்பு இலக்கினை எட்ட வாய்ப்புள்ளது. பார்வை இழப்புக் கட்டுப்பாடு திட்டத்திற்காக உலக வங்கி ரூ.250 கோடியை இந்தியாவிற்கு அளிக்கும். அமெரிக்க நாட்டு உதவியுடன் ரூ.800 கோடி செலவில் புதிய முறையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ்த் தென்றல்

திரு.வி.க

புலவர் புனிதவதி நமசிவாயம்

தமிழகத்தில் அரசியல் கருத்துக் களை அழகிய தமிழில் எழுத முடியும், பேசமுடியும் எனத் 'தேச பக்தன்' இதழின் வாயிலாகத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டியவர் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள். தமிழ்த் தென்றல், இராயப்பேட்டை முனிவர்; தேசபக்தன் முதலியார்; என்றெல்லாம் தமிழர்கள் செல்ல மாக அழைத்தார்கள் இவரை.

இந்தியா அந்நிய ஆதிக்கத்தினின் றும் விடுதலை பெற்ற திங்கள் ஆகஸ்ட் திங்கள். இச்சிறப்பு மிக்க ஆகஸ்ட் 26, 1883-இல் திரு.வி.க. தம் தாய் தந்தையர்க்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். வறுமைச் சூழலில் வாணிபம் செய்யத் திரு வாரூரிலிருந்து சென்னைக்கு அருகே உள்ள துள்ளம் எனும் கிராமத் திற்குக் குடியேறினர், பெற்றோர். அங்கு தான் திரு.வி.க. பிறந்தார். துள்ளத்தில் பிறந்தவராயினும் முன்னோர் பிறந்த ஊரின் பெய ரையே தம் பெயர் முன் இட்டு மகிழ்வார். திருவாளர் திருவாரூர் வி. கல்யாணசுந்தரம் என்றே தம் நூற்களில் குறிப்பர்.

இவரின் தாயின் பெயர் சின்னம்மாள், தந்தையின் பெயர் விருத்தாசலனார். திரு.வி.க.-வின் வளர்ச்சி, வாழ்க்கை பல விதமான சோதனைக்கு இலக்காகியது. முதலில் வறுமைச் சூழலில் நிலவியது. தந்தை யின் தளராத உழைப்பால் வாழ்க்கை நடைபோட்டது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காகத் திரு.வி.க.-வின் குடும்பம் சென்னை இராயப்பேட்டையை நாடியது. அரிசி மண்டி வைத்து வாழ்ந்தனர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரி யில் மெட்ரிகுலேஷன் வரை பயின் றார். அப்பள்ளியில் தமிழாசிரிய ராய் விளங்கிய யாழ்ப்பாணம் ந. கதிரைவேற்பிள்ளை தொடர்பு ஏற்பட்டது. கதிரைவேற்பிள்ளை வழக்கு ஒன்றில் சான்று கூறச் சென்றதால் திரு.வி.க.-வின் தேர்வு தடைப்பட்டது.

திரு.வி.க. அவர்கள் ந. கதிரை வேற்பிள்ளை அவர்களிடம் சில தமிழ் நூல்கள் பாடங்கேட்டார், மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், யாழ்ப்பாணம் சுவாமி நாத பண்டிதர், திருக்குறள் சிதம்பர முதலியார், மறைமலையடிகளார் முதலியவர்களிடம் தமிழ் நூல்கள் பயின்றார். மற்றும் இவர் கடலங் குடி நடேச சாஸ்திரியார், பாம்பன் சுவாமிகள், அயோத்தியதாஸ் பண்டிதர், சக்ரவர்த்தி நாயனார், அப்துல் கரீம், ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் தொடர்பால் பல்கலைச் செல்வரானார்.

இவர் ஸ்பென்சர் அண்டு கம் பெனியில் சிறிது காலம் பணி செய் தார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ் ஆசிரியராய் அமர்ந்தார். சிறந்த ஆசிரியராகப் புகழ் பெற்றார். இவரது அடிமனம், தேசப்பற்று, தேச சேவையில் ஈடுபட்டது. காரணம் பள்ளிப் படிப்பு நின்றதும் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் திருவல்லிக் கேணி சிவனடியார் திருக்கூட்டத் திலும் சேர்ந்து தொண்டு செய்தார். அதுவல்லாது ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரிடமும் அன்னிபெசன்ட் அம்மையாரிடமும், எஸ். சீனிவாச அய்யங்காரிடமும் நெருங்கிப் பழகிப் பல பொதுத் தொண்டு களில் ஈடுபட்டார்.



• பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, மூடப்பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும்.

- ஜவகர்லால் நேரு.

பொதுத்தொண்டு, தேசபக்தி காரணமாகத் தமிழ் ஆசிரியர் பதவி யினின்றும் விலகினார். உடன் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராய் அமர்ந்தார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் 'நவசக்தி' எனும் இதழினைத் தோற்றுவித்தார். இவ் விதழ்களில் அரசியல் கருத்துக்களைத் தமிழில் நன்கு விளக்க முடியும் என்ற நிலையில் சிறந்த முறையில் நடத்தினார். அதில் அரசியல் அறிவோடு கலைச் செல்வத்தையும் வழங்க முற் பட்டார். சிறப்புமிக்க தலையங் கங்கள் எழுதுவதில் மிக வல்லவர். இவரது தலையங்கத்தை மட்டும் படிப்பதற்கென்றே நவசக்தி இதழி னைத் தவறாது படித்தவர்கள் பலர். நவசக்தி இதழ் சிறப்பாக வெளி வந்ததற்கு மூல காரணம் இவரது சகோதரர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் 'சாது அச்சுக் கூடம்' என்ற சிறந்த அச்சகம் ஒன்றை நடத்தி வந்ததே.

இவர் கமலாம்பிகை எனும் அம்மையாரை 1912-இல் மணந்து ஆறு ஆண்டுகள் குடும்ப வாழ்க்கை நடத்தினார். ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பிறந்து மறைந்தன. துணைவியாரும் மறைந்தார். மறுமணம் செய்து கொள்ளவில்லை.

என் கடன் பணி செய்து கிடப் பதே என்ற நெறியில் - இவர் பணி இடைவிடாது தமிழ்த் தொண்டு, சமூகத் தொண்டு, அரசியல் தொண்டு தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு எனப் பல்வேறு துறை களில் சிறந்து விளங்கியது.

திரு.வி.க. அவர்களின் தேசியம் இறைவழி நிற்கும் அரசியல் வாழ்வு. மகாத்மாவின் அரசியல் வாழ்வும் ஒத்துழையாமை இயக்கமும் சமய வாழ்வின் அடிப்படையில் மலர்ச்சி பெற்றிருந்தன. ஆகவேதான் திரு.வி.க.-விற்கு மகாத்மாவின் நெறியில் கவர்ச்சி ஏற்பட்டு மகாத் மாவை அடிகளாக்கி 'காந்தி அடி களும் மனித வாழ்க்கையும்' என்னும் நூலை இயற்றினார்.

திரு.வி.க. தொழிலாளர் நலனுக் காகவும் அரும்பாடுபட்டார். காரல் மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை அறம் இவரைக் கவர்ந்தது. முதலாளி-தொழிலாளி வேற்றுமையைக் களைய முற்பட்டார். திரு. வாடியா எனும் அறிஞரின் உதவியால் 1918-இல் இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கமாகிய 'சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத்' தோற்று வித்தார். அதன் வளர்ச்சிக்கு அருந் தொண்டுகள் செய்தார். தொழிலாளர் நற்பணியில் தீவிர மாக உழைத்த திரு.வி.க.-வை ஒரு சமயம் ஆங்கில அரசு நாடு கடத்த வும் திட்டமிட்டது. இதனைச் சர் தியாகராயர் தடுத்து நிறுத்தினார் என்பது நினைவு கூரத்தக்கது.

மகளிர் சமுதாயம் சிறந்து விளங்க இவர் புரிந்த தொண்டுகள் ஒப்பற்றவை. பெண் பிறவியே உயர்ந்தது என்றும் விழுமிய பண்பு டையது எனவும் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தார். மகளிர் சமூகநல அமைப்புகளுக்கு ஆதரவு நல்கினார். இல்லற நெறியே சிறந்த நெறி எனப் போற்றினார். போலித் துறவினைச் சாடினார். தீண்டாமை ஒழிப்பிலும் சாதிவேற்றுமை நீக்கத்திலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். இவைகளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழகம் முழுவதிலும் பரவச் செய்தார்.

தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக இந்தி மொழி நுழைந்தபோது அதனைத் திரு.வி.க. எதிர்த்தார். இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தந்தை பெரியார் அவர்களின் சிறப் பியல்புகளை 'நவசக்தி' இதழில் தலையங்கமாகத் தீட்டி 'சிறையில் கிழச் சிங்கம்' என்ற தலைப்பிட் டார். அரசு இத்தலையங்கத்துக்குப் பணிந்தது.

இளைஞர்களை ஊக்குவித்து அறவழி கூறி அவர்களை இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கச் செய்ய இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. இளைஞர் முன் னேற்ற அமைப்புகள் பலவற்றில் ஈடு பட்டிருந்தார்.

திரு.வி.க. அவர்கள் எத்துறை யில் ஈடுபட்டுத் தொண்டு செய்த போதிலும் அன்பு, எளிமை, தூய்மை, பொதுமை ஆகிய நெறிகளே அவரு டைய வாழ்வில் முகிழ்த்தன. இவரு டைய நடை, உடை, பழக்கம் தமிழகம் எங்கும் உள்ள இளைஞர் களையும் தொழிலாளர்களையும் கவர்ந்தன. தூய்மையான இவரது உள்ளத்தை அளந்து கூற இயலாது. இவர் உள்ளத்தின் பொதுமை காலம், இடம், நிறம், சாதி, சமயம், கட்சிக் கருத்து முதலிய பல வேறு பாடுகளைக் கடந்து பலரிடத்தும் அன்பு செலுத்தும் ஆன்மநேயம் ஒருமைப்பாடு உடையது. இயற்கைக் காட்சியில் அதிக ஈடுபாடு. இவர்தம் தமிழ் எழுத்து நடை இவருக்கே உரிய கவிதை நடையாய் விளங்கும். சொற்களில் இனிமை தவழும். மேடைப் பேச்சிலும் கேட்போர் உள்ளத்தைக் கவரச் செய்தார் அரசியல், சமயம், இலக்கியம், சீர்திருத்தம் முதலிய பல துறை களிலும் நூல்கள் செய்துள்ளார். இவரெழுதிய கவிதை நூல்கள் பதி னைந்திற்கும் மேற்பட்டன.

பெரிய புராணத்துக்கும் காரைக் கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை, திருக்குறள் பாயிரப்

சென்னை நகரப் போக்குவரத்துக்
காவலர்களுக்கு நவீன மோட்டார் சைக்கிள்



சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர் களுக்கு நவீன கருவிகள் வாங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, உலக வங்கி மற்றும் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் சார்பாக சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர் களுக்கு நவீன கருவிகள் வாங்க ரூ.68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன் முதல் கட்டமாக, ரூ.31 இலட்சத்து 86 ஆயிரம் செலவில் நவீன கருவிகள் வழங்கும் விழா அண்மையில் சென்னையில் நடந்தது. இந்த விழாவில் சென்னை நகரப் போக்குவரத்து ஆய்வாளர்கள் மற்றும் துணை ஆய்வாளர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 35 புதிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நவீன மோட்டார் சைக்கிள்களின் முன் பகுதியில் உயர்ந்த கண்ணாடி பொருத்தப்பட்ட பாதுகாப்பு உறை அமைக்கப்பட்டுள்ளது. முதல்வர் போன்ற முக்கிய பிரமுகர்கள் வரு வதைத் தெரிவிக்கும் பொருட்டு முன்பகுதியில் இரண்டு சைரன்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன இவற்றைத் தவிர சுழலும் விளக்குகள், பொது மக்களுக்கு முக்கிய செய்திகளைத் தெரிவிக்கும் பொருட்டு தனியாக 'மைக்' வசதி, ஆவணங்கள் வைக்க வசதியாகத் தனிப்பெட்டி மற்றும் ஒயர்லெஸ் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்களை 'என்பீல்டு' நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது. ஒரு மோட்டார் சைக்கிளின் விலை ரூ.35 ஆயிரம் ஆகும்.

பகுதிக்கு விளக்கவுரை இயற்றியுள் ளார் இவர்.

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து; தமிழ்த் தென்றல், தமிழ்ச் சோலை; முடியா-காதலா சீர்திருத் தமா; இந்தியாவும் விடுதலையும், என்ற நூல்களும்...

முருகன் அல்லது அழகு; மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை; உள்ளொளி; பரம்பொருள் வாழ்க்கை வழி முதலிய அன்னாரின் நூல்களில் மிகச் சிறந்தவை. இப்படிப் பல நூல்கள்.

உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்; முருகன் அருள் வேட்டல், திருமால் அருள்வேட்டல், பொதுமை வேட்டல்; புதுமைவேட்டல்; கிறித்து வின் அருள்வேட்டல்; கிறிஸ்து மொழிக் குறள், இருளில் ஒளி; முதுமை உளறல்; முதலியன இவரது கவிதை நூல்கள்.

தமிழ்மொழி, தமிழர் வாழ்வு நெறிமலர்ந்து செழிக்கப் பல அறிஞர்கள் ஒத்துழைப்போடு 'சென்னைத் தமிழ்ச் சங்கம்' என்ற அமைப்பினைக் கண்டார். அதன் வாயிலாகப் பல்வேறு ஆக்கப் பணிகள் செய்வித்தார். சுமார் 40 ஆண்டுக்காலம் தமிழ்நாடு எங்கனும் சென்று தொண்டாற்றினார். இவரைச் சிலர் பௌத்தர் எனவும் சிலர் சமணர் எனவும், சிலர் கிறிஸ்துவர் எனவும், சிலர் வேதாந்தி எனவும் கூறுவர். ஆனால் இவரது நெறி சமரச சுத்த சன்மார்க்க நெறி யின்பால்பட்டது. ஓயாது உழைத்த இவர் தம் வாழ்நாள் முடிவில் இரண்டு ஆண்டுகள் கண் ஒளி மங்கித் துன்பப்பட்டார். மருத்துவம் செய்துகொள்ள மறுத்தார். 17.9.1953-இல் இயற்கை எய் தினார்.

மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள்!

அ.ப.ஜெயபால்

'குடி குடியைக் கெடுக்கும்' என்னும் விளம்பரங்களின் மூலம் மதுவின் தீமைகள் பற்றி அன்றாடம் பிரச்சாரங்கள் செய்து வந்த போதும் மதுவின் ஆதிக்கம் நாட்டில் அதிகமாகிக் கொண்டே வருகின்றது.

மதுவை அருந்துபவர்களின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது என்று அறிந்திருந்தாலும் அதனால் ஏற்படுகின்ற கடுமையான விளைவு களைப் பற்றி எவரும் கவலைப் படுவதே இல்லை.

பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருப்பார். அவர் தினசரி மதுவை அளவுக்கு மீறி அருந்திவிட்டு மதி மயக்கத்தினால் மற்றவரின் நலனைப் பாதிக்கும்படி நடந்து கொள்வார். ஆனால் பார்ப்பதற்குத் திடகாத்திர மாக இருந்த அவர் திடீர் என்று ஒரு நாள் எதிர்பாராமல் இறந்து விடு கிறார். இவரது இறப்பு இயற்கை யாக ஏற்பட்டது அல்ல! மதுவினால் ஏற்பட்டதுதான். மது தினசரி தன் வாழ்நாளின் கணக்கைக் கழித்துக் கொண்டு வருவதைப் புரியாமல் இருந்தமையால்தான் ஏற்பட்டது.

மது அருந்துவதினால் விரைவில் மரணம் நம்மை அணுகுகிறது என் பதை அறிந்திருப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் மதுவினை நாடி மதி மயங்கமாட்டார்கள். மது அருந்துவதினால் எப்படி மரணம் ஏற்படுகிறது என்பதை இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண் டியது அவசியம். ஆகையால் மது வினால் மரணம் எப்படி ஏற்படு கிறது என்பதனைப் பார்ப்போம்.

மது அருந்தும்போது அது தொண்டை, உணவுக் குழாய் ஆகியப் பகுதிகளை மூடியிருக்கும் மெல்லிய ஜவ்வில் இறங்கும்போது எரிச்சல் உண்டாகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ் வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண் களை உண்டாக்குகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ் வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண் களை உண்டாக்குகின்றது. பின் வயிற்றில் உட் சுவர்களில் சிறுகுடல் பகுதியில் தையாமின், போலிக் அமிலம் கொழுப்பு, வைட்டமின் பி-1, பி-12, அமினோ அமிலங்கள் சிலோஸ் ஆகிய பல ஊட்டச்சத்துக் களை உறிஞ்சாதபடி மது தடுத்து விடுகிறது.

வயிறு டியோடினம் பகுதிகளில் அமைந்த மெல்லிய ஜவ்வினால்



தனியார் வனங்களிலுள்ள மரங்களை வெட்டுவதற்குக் கட்டுப்பாடு: மாண்புமிகு முதல்வர் உத்தரவு

வனப்பகுதியிலுள்ள தனியார் நிலங்களில் மரங்கள் வெட்டுவதற்குக் கட்டுப்பாடு விதித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வனத்துறை உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, வனத்துறையில் மட்டும் ரூ.17 கோடியே 87 இலட்சம் பெருமானமுள்ள பொருட்கள் பிடிபட்டுள்ளன. வனக் குற்றங்களுக்காக 182 பேர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் [illegible] பாட்டுக்காக ரூ.1.27 கோடி செலவில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வனத்துறையினருக்கு நவீன துப்பாக்கிகள் வாங்க ரூ.18 இலட்சமும், வயர்லெஸ் கருவிகள் வாங்க ரூ.67.90 இலட்சமும், வாகனங்கள் வாங்குவதற்காக ரூ.37 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் மரம் வெட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன்பு வனத்துறைச் செயலாளரிடம் கலந்து பேசிய பிறகே வனத்துறை அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டும்.

மலைவாழ் மக்கள் நலனுக்காக அவர்களுக்கு அதிக விளைச்சல் தரும் புளி, வேப்ப மரக் கன்றுகளை வனத்துறையினர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மரங்கள் 4 ஆண்டுக் காலத்திலேயே பயன் தரத் தொடங்கிவிடும். இந்த ஆண்டு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படும். இந்த மக்கள் [illegible] விதிமுறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளப் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.

1993-ஆம் ஆண்டுக்குள் அனைத்து வனப் பகுதிகளிலும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேக்கு மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அனுமதி அளிக்கும் எல்லா இடங்களிலும் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும். இதைத் தவிர விறகுக்காகக் கருவேலம் மரம் போன்ற மரங்களை அதிக அளவில் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது.

உட்கவரால் 95 சதவிகிதம் மது ஈர்க்கப்படுகிறது. இரத்த ஓட்டத்தில் மது கலந்த பின் உடலில் உள்ள எல்லாச் செல்களையும், திசுக்களையும் அடைகிறது. மது இரத்தத்தில் சிவப்பு அணுக்களை குவியலாகச் சேர்த்து இரத்த ஓட்ட வேகத்தைக் குறைத்து திசுக்களுக்குப் பிராண வாயு செல்லாமல் தடுத்து விடுகின்றது. மேலும் கிருமிகளுக்கு எதிராகப் போரிடும் வெள்ளை அணுக்களின் சக்தியைக் குறைக்கிறது. சிவப்பு அணுக்களின் உற்பத்தியைக் குறைத்துச் சோகை நோயையும் உருவாக்குகிறது. மது கணையத்தில் உள்ள செல்களை உறுத்தி வீங்கச் செய்கிறது. இதனால் செரிமான நீர்கள் செல்ல முடியாமல் தடுக்கப்படுகின்றது.

இரசாயனங்கள் சிறுகுடலுக்குள் செல்ல முடியாததால் கணையத்தையே ஜீரணிக்க ஆரம்பித்து மிகக் கடுமையான 'ஹெமொராஜிக்பான் கிரிடிடிஸ்' எனப்படும் நோயை ஏற்படுத்துகிறது. மது குடிப்பவர்களை இந்நோய் தாக்கினால் ஐந்தில் ஒருவர் முதல் தாக்குதலிலேயே மரணமடைகிறார். இந்த நோய் கணையத்தைச் சேதப்படுத்தி இன்சுலின் தட்டுப்பாட்டை உண்டாக்கி நீரிழிவைத் தோற்றுவிக்கும். மது கல்லீரலின் செல்களில் எரிவூட்டி வீங்கச் செய்து சிறுகுடலை நோக்கிச் செல்லும் சிறுகுழாயை அடைகிறது. இதனால் கல்லீரலினால் பித்த நீர் வடிக்கப்படுவது தடைப்பட்டு மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகின்றது.

கடைசியில் கல்லீரலை ஈரலரிப்பு நோய் தாக்குகின்றது. குடிக்காதவர்களைவிட, குடித்தவர்களின் கல்லீரல் எட்டு மடங்குகடினமாகி விடும். இதயத்தின் தசைகளை வீங்கச் செய்து நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது. கொழுப்பை ஒரே இடத்தில் குவியச் செய்து ஊனம் ஆக்கச் சிதைவு மாறுபாடுகள் சரியாக நடைபெறாமல் செய்கிறது.

மேலும், மூத்திரப்பையின் உட்சுவரைப் பாதித்துச் சரியாக விரியாமல் செய்து நீர்ப்பிரித்தலின் திரவ விரயம் ஏற்படுத்துகின்றது.

மதுவினால் புரோஸ்டிரேட் சுரப்பிகள் வீங்கி - ஆண்களின் உடலுறவுத் தன்மையை மோசமாகப் பாதிக்கின்றது. மற்றும் மூளையின் முக்கியப் பகுதிகளைப் பார்த்து இணைத்துச் செயல்படாமல் தடுத்து குழப்பம் ஏற்பட்டு தொடர்புகளைத் துண்டித்து மூளையின் செயல்பாட்டை மந்தப்படுத்தி மயக்க நிலையை நீட்டித்து மரணத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் இம்மதுவிற்கு அடிமையாகி மரணமடைவதைத் தவிர்க்க வேண்டும்.

'குடி குடியைக் கெடுக்கும்' என்பதுடன் 'மது மரணத்தைக் கொடுக்கும்' என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

மது அருந்துபவர்கள் மதுவின் தீமைகளை அறிந்து திருந்துவார்களானால், மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்களை தவிர்க்கலாம்.



திட்டக்குழு உறுப்பினர் பெற்ற இணையற்ற கௌரவ விருது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினர்களில் புகழ்பெற்ற முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். நடராஜன் ஒருவராவார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதியில் பிறந்து - மதுரையில் படித்து - சென்னையில் மருத்துவத்துறையில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கி ஓய்வு பெற்றுள்ள இவருக்கு அண்மையில், இணையற்ற சிறப்பு விருது ஒன்று கிடைத்திருக்கிறது.

1950-இல், இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் படித்து எஃப்.ஆர்.சி.எஸ்., பட்டம் பெற்ற இவரை இவருடைய பொதுச் சேவைக்காக The Royal College of Surgeons of England என்ற அமைப்பானது பாராட்டி, கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். பட்டமளித்துச் சிறப்பித்திருக்கிறது!

இந்தியா-ஜப்பான் இராணுவ மருத்துவமனை, சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னைப் பொது மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை ஆகியவைகளிலெல்லாம் - மருத்துவராகவும், பேராசிரியராகவும், முதல்வராகவும் இருந்து 1976-இல் ஓய்வுபெற்றவர் டாக்டர் எம். நடராஜன். இப்போது பல அமைப்புகளில் முடநீக்கியல் துறை ஆலோசகராக இருப்பவர்.

'1991-92-ஆம் ஆண்டுக்கான இந்தக் கவுரவ விருதானது முடநீக்கியல் துறை மருத்துவச் சிறப்பிற்காக எனக்கும் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த இதயநோய் மருத்துவ நிபுணரான டாக்டர் அலய்ன் கார்பென்டியார் என்பவருக்குமாக, எங்கள் இரண்டே இரண்டு பேருக்கு மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த யுனிவர்சிடி தொடங்கி இந்த நூறாண்டுக் காலத்தில், அவ் விருதைப் பெறும் இரண்டாவது இந்தியன் - முதலாவது தமிழ்நாட்டுக்காரன் நான்தான்....'

- என்றெல்லாம் பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் டாக்டர் எம். நடராஜன் 'எனது இத்தகைய பெருமைக்கும் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டு மருத்துவத்துறை பெற்றிருக்கும் வளர்ச்சியும் ஒரு முக்கியக் காரணமாகும்' என்று மனந்திறந்து சொன்னார்.

டென்மார்க், ஒல்ட்டோ, ஜெர்மனி, சிங்கப்பூர், சான்ஃபிரான்சிஸ்கோ, ஜெனீவா, ஆக்ஸ்போர்டு, மணிலா, பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து போன்ற பல இடங்களுக்கும் அழைப்பின்பேரில் பறந்து போய்ப் பல மருத்துவக் கருத்தரங்குகளில் பங்கேற்றுச் சிறப்பித்த புகழும் - சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்றவர் திட்டக்குழு உறுப்பினரான டாக்டர் எம். நடராஜன். இணையற்ற எஃப்.ஆர்.சி.எஸ். கௌரவ விருது அவருக்குக் கிடைத்ததில் தமிழக மருத்துவத்துறையே பெருமைப்படலாம்தானே!

- பி.எல்.ஆர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, சிகாகோ கான்சலேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள திரு. கே.ஆர். சின்கா அவர்கள் சந்தித்தார் (11.8.'92).

காவிரிப் பாசனப் பகுதியில் எண்ணெய்ப் பனை அறிமுக ஆராய்ச்சி!

- சுப. இராமநாதன், பெ. நளாயினி, அ. ஷேக் தாவுத், அ. அப்துல் கரீம்,
ஒருங்கிணைந்த எண்ணைய்ப்பனை ஆராய்ச்சித் திட்டம், ஆடுதுறை.

நமது நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி தற்போதுள்ள தேவையைவிட மிகக் குறைவாக இருப்பதால் பெருமளவில் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. எண்ணெய் உபயோகத்தைப் பொறுத்த மட்டில் நமது நாட்டில் நபர் ஒருவரால் ஆண்டு ஒன்றுக்கு 5 கிலோ எண்ணெய் மட்டுமே உபயோகப் படுத்தப்படுகிறது.

இது, மேலை நாடுகளில் உபயோகிப்பதைவிட சுமார் ஆறில் ஒரு பங்கு மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் இருந்து கிடைக்கின்ற எண்ணெய் அளவை ஒப்பிடுவோமேயானால் சராசரியாக நிலக்கடையில் இருந்து ஏக்கருக்கு 150 கிலோ எண்ணெயும், எள்ளிலிருந்து 36 கிலோ எண்ணெயும் ஆமணக்கு என்கிற கொட்டைமுத்துவிலிருந்து 89 கிலோ எண்ணெயும், சூரிய காந்தியிலிருந்து 162 கிலோ எண்ணெயும் கிடைக்கிறது.

உலகிலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா முன்றாவது இடத்தையும், நிலக் கடலை மற்றும் எள் உற்பத்தியில் முதலிடத்தையும் வகித்தும் தனி மஙிதர் ஒவ்வொருவரும் உபயோகிக்கும் எண்ணெயின் அளவு மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணம் தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருந்துவரும் மேற்கூறிய எண்ணெய் வித்துப் பயிர்களின் சாகுபடியும் எண்ணைய்ப் பனை போன்ற எண்ணெய்ச் சத்து மிகுந்த பயிர்களின் அறிமுகமின்மையுமே யாகும். தற்போதுள்ள எண்ணெய் வித்துப் பயிர்கள் பெருமளவில் மானாவாரிப் பகுதிகளில் தகுந்த இரசாயன உரமோ நுண்ணுயிரோ இடாமலே பயிரிடப்படுவது மகசூல் குறைவதற்கான மற்றொரு காரணம். எனவே, தமிழ்நாட்டில் எண்ணைய்ப் பனைச் சாகுபடியை அறிமுகப் படுத்தும் நோக்கத்துடன் இப்பயிர்ச் சாகுபடி பற்றிய ஆய்வுகள் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் 1989-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றன.

மூன்றாண்டு எண்ணெய்ப்பனை

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் மானாவாரிப் பயிராக வளர்ந்து வந்த எண்ணெய்ப் பனையின் சிறப்பு அம்சம், எந்த எண்ணெய் வித்துப் பயிரிலும் இல்லாத அளவு எண்ணெய் உற்பத்தியாகும். எண்ணெய்ப் பனையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கரில் 1,600 கிலோ முதல் 2,400 கிலோ வரை எண்ணெய் பெற முடிகிறது. இந்தியாவில் தற்போது கேரள மாநிலத்தில் 9,000 ஏக்கரிலும் அந்தமான் தீவுகளில் 4,500 ஏக்கரிலும் எண்ணெய்ப் பனை பயிர் செய்யப்பட்டு வருகிறது.



எண்ணெய் எடுப்பதற்கு உகந்த முற்றிய பழங்கள்

சாகுபடிக் குறிப்புகள்

எண்ணெய்ப் பனைக்கு உகந்த வெப்பநிலை 20 டிகிரி செ. முதல் 35 டிகிரி செ. வரை ஆண்டிற்கு 2,000 - 2,500 மி.மீட்டர் மழை பரவலாக உள்ள பகுதிகளில் வளரும் தன்மையானதாக இருந்தாலும், 4 மாதங்கள் வரை வறட்சி நிலவும் பகுதிகளிலும் சூழ்நிலையைத் தாங்கி வளரும் திறன் கொண்டது.கோடையில் பாசன வசதி அவசியம் தேவை. பெரும்பாலும் எல்லா வகையான மண் வளத்திலும வளரக் கூடிய தன்மையுடையது.

பனைக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த எண்ணெய்ப் பனையில் 3 ரகங்கள் உள்ளன. அவை 1. டுரா 2. பிஸிஃபெரா 3. டெனிரா ஆகியவையாகும்.

டெனிரா ரகம் முதல் இரண்டு ரகங்களையும் கலப்பு செய்து பெறப்பட்ட வீரிய ஒட்டு ரகமாகும். எண்ணெய்ப் பனை நடவுக்கு முக்கோண முறையில் கன்றுக்குக் கன்று இடைவெளி 9 மீட்டர் இருத்தல் அவசியம். இவ்வாறு நடவு செய்தால். ஒரு ஏக்கருக்கு 60 கன்றுகள் வரை நடலாம். பருவ காலங்களில் அதாவது மே, ஜூன் மா்தங்களில் நடவு செய்தல் நன்று. நட்ட 3 ஆண்டுகளுக்கு, பகுதிகளுக்கு உகந்த ஊடு பயிர் செய்தால், நடைமுறைச் செலவுகளை ஈடுசெய்ய முடியும்.

எண்ணைய்ப் பனையின் வேர்ப் பாகத்தைச் சுற்றிலும் எப்போதும் களைகள் இல்லாமல் இருத்தல் அவசியம். இதற்குக் களைக்கொல்லிகளை உபயோகப்படுத்தலாம். பெர்னாக்சோன் என்ற களைக்கொல்லியை மட்டும் உபயோகப்படுத்தல் கூடாது.

உரமிடுதல்

முதல் ஆண்டில், கன்று ஒன்றுக்கு 400 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 400 கிராம் சாம்பல் சத்து, இரண்டாவது ஆண்டு 800 கிராம் தழைச்சத்து 400 கிராம் மணிச்சத்து 800 கிராம் சாம்பல்சத்து மூன்றாவது ஆண்டு முதல் 1200 கிராம் தழை, 600 கிராம் மணி, 1200 கிராம் சாம்பல் சத்து இடவேண்டும். மக்னீசியச் சத்துக்குறைவாக உள்ள அறிகுறிகள் தென்படின் மக்னீசிய உப்பு இட வேண்டும். இந்த உர அளவுகளை இரு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதி மே மாதத்திலும் இரண்டாம் பகுதி செப்டம்பர் மாதத்திலும் மரத்திலிருந்து 2 மீட்டர் இடைவெளியில் மரத்தைச் சுற்றி அளித்தல் வேண்டும். தழை உரம் மற்றும் மக்கிய தொழுஉரம் அதிக அளவில் இடுவது மிகச் சிறந்தது.

கோடைக் காலங்களில் மரம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 100 லிட்டர் தண்ணீர் அளிக்கப்பட வேண்டும். கோடையில் நீர்ப் பற்றாக்குறை மகசூலைப் பெரிதும் பாதிக்கும்.

பின்செய் நேர்த்தி

பாசன நீரைச் சேமிக்கச் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது சிறந்தது. காய்ந்த மற்றும் பூச்சி நோய் தாக்கிய மட்டைகளையும், பாளைகளையும் முதல் மூன்றாண்டுகளுக்கு அகற்ற வேண்டும். மரம் மகசூலுக்கு வரும் போது 40 மட்டைகளை மட்டும் மரத்தில் வைத்துவிட்டு இதர மட்டைகளை அகற்றி விடலாம். அதிக அளவில் மட்டைகளை அகற்றுதலும் மகசூலைப் பாதிக்கும். மரத்தை ஆண்டுக்கு ஒருமுறை சுத்தம் செய்வது கோடைப்பருவத்தில் செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான பின்செய் நேர்த்தியாகும்.

பயிர்ப்பாதுகாப்பு

எண்ணெய்ப்பனையை ஆந்த்ராக்நோஸ் எனப்படும் இலைப்புள்ளி நோய், குருத்து அழுகல் நோய், குலை தவறுதல் ஆகியவை தாக்குகின்றன. இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம்.45 அல்லது கேப்டான் 20 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து அடிக்கலாம். தாமிர வகை பூஞ்சாணக் கொல்லிகளை உபயோகப்படுத்தக் கூடாது. குருத்தழுகல் நோயைக் கட்டுப்படுத்த நோயால் தாக்கப்பட்ட கன்றுகளை அழித்து விட வேண்டும். குலை தவறுதல் நோயின் அறிகுறிகள் குலையின் காய்பிடிக்காமல் இருத்தல், குலை

காய்தல், குலை அழுகல் ஆகியன வாகும். இந்த நோய் 20 சதம் வரை பாதிப்பை உண்டாக்கும். இந்த நோய்க்குக் காரணம் அதிக அளவில் மட்டைகளைக் கழித்தல், நீர்ப் பற்றாக்குறை மற்றும் பராமரிப்புக் குறைவு ஆகியவைகளாகும். நோயைக் கட்டுப்படுத்த சிபாரிசுப் படி மட்டைகளைக் குறைத்தல் ஆண் பூக்களை வெட்டி எறிதல், பாசன வசதி செய்தல் ஆகியன அவசிய மாகும்.

தென்னையைத் தாக்கக்கூடிய காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூன் வண்டு ஆகியன இம்மரத்தை யும் தாக்குகின்றன. அத்துடன் பழுத்த குலையைப் பறவைகள் அதிகம் தாக்குகின்றன. இதைக் கட்டுப் படுத்த வெடிச்சத்தம் ஏற்படுத்துதல், தோட்டத்தின் வெளிப்புறம் இருக் கும் மரங்களில் இறந்த பறவை களைத் தொங்கவிடுதல் ஆகியன செய்யலாம். தவிர, இத் தோட்டத் தில் எலி, முள்ளம்பன்றி, அணில், குரங்குகள் மற்றும் காட்டு நாய் களின் தாக்குதலும் மிகுந்து காணப் படும்.

சாதனை

பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப் பில் இந்தியா புதிய சாதனை படைத் துள்ளது. தேயிலை மற்றும் தோட்டப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் 'டைகோஃபோல்' என்ற அதிகத் திறனுள்ள பூச்சிக்கொல்லி மருந்தை இனி இந்தியா சொந்தமாகவே தயாரிக்கும்.

உலகில் அமெரிக்காவும், இஸ் ரேலும் மட்டுமே இதுவரை இம் மருந்தைத் தயாரித்தன. அரசு நிறு வனமான இந்துஸ்தான் இன்செக்டி சைட்ஸ் நிறுவனம் தனது ஆராய்ச்சி களின் மூலம் 'டைகோஃபோல்' தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித் துள்ளது. நமக்கு ஆண்டொன்றுக்கு 20 கோடி டன் அளவுக்கு இம் மருந்து தேவைப்படுகிறது. ஆனால், 2 கோடி டன் மட்டுமே கிடைக் கிறது - அதுவும் இறக்குமதி மூலம். இந்நிலை இனி இல்லை. முயற்சி களுக்கு வானமே எல்லை என்ப தற்கு இதைவிடச் சிறப்பான சாட்சி இல்லை!

- நன்றி: 'தூவானம்'.

அறுவடை

நட்ட 4 ஆண்டுகளில் முதல் அறுவடை செய்யலாம். அறுவடைக் காலத்தில், தோட்டம் தவறாமல் கண்காணிக்கப்பட வேண்டும். குலையிலிருந்து ஓரிரு பழங்கள் கீழே விழ ஆரம்பிக்கும் தருணம் தான் அறுவடைக்கு ஏற்ற பருவம்.

எண்ணெய்ப்பனை மகசூல் பழுத்த குலை எடையிலேயே கணக்கிடப் படுகிறது. ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு 8 முதல் 10 மெட்ரிக் டன்கள் வரை கிடைக்கும். அதிலிருந்து 20 சத விகிதம் அதாவது 1.6 முதல் 2.0 டன்கள் எண்ணெய் பிழியலாம். சராசரியாக ஒரு குலை எடை 30 கிலோ இருக்கும். 100 கிலோ எடையுள்ள குலைகளும் உண்டு.. ஒவ்வொரு குலையிலும 1,000 முதல் 2,000 பழங்கள் வரை இருக்கும் எண்ணெய்ப்பனையி லிருந்து இரு வகையான எண்ணெய் எடுக்கப்படுகின்றது. ஒன்று நார்ப் பகுதியிலிருந்து கிடைக்கும் எண் ணெய் - இரண்டாவது கொட்டைப் பகுதியினுள் உள்ள பருப்பிலிருந்து கிடைக்கும் எண்ணெய்.

எண்ணெய் பிழியும் ஆலை

ஒரு மணிக்கு 3 டன்கள் குலை களைப் பிழியக் கூடிய சக்தியுடைய ஆலை அமைக்கக் குறைந்தது 500 ஏக்கரில் எண்ணெய்ப்பனை சாகு படி செய்யவேண்டும். குலைகள் அறுவடை செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அறைத்து எண் ணெய் பிழியப்பட வேண்டும். 100 ஏக்கர் வரை இருக்கும் தோட் டங்களுக்கு மனித சக்தியால் இயக் கக் கூடிய ஆலைகளை அமைத்துக் கொள்ளலாம்.

எனவே, நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் எண்ணெய்ப்பனை பயிரிடுவதால், நமது நாட்டில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை விரைவில் காணலாம்.



எண்ணெய்

தமிழ்நாட்டின் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடி கிராமத்தில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, ஆண்டொன் றுக்கு 5 இலட்சம் டன் எண் ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண் டதாய் இருக்கும். சென்னை சுத்தி கரிப்பு ஆலை அமைக்கவுள்ள இந் தத் தொழிற்சாலைக்குச் சமீபத்தில் தான் மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதை நிறுவு வதற்கு ரூ.155 கோடி தேவைப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதர வாயுக்களிடமிருந்து சமையல் வாயுவைப் பிரித்தெடுக்கும் வசதி யும், அவற்றை நறுமணப்படுத்தும் வசதிகளும் பனங்குடி ஆலையில் ஏற்படவுள்ளது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 15,000 மில்லியன் டன் சமையல் வாயு, ப்ரோ பேன் 1,600 மில்லியன் டன், திரவ வடிவில் இயற்கை வாயு 6,000 மில்லியன் டன் கிடைக்கும்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1996-97) பெட் ரோலியப் பொருட்களுக்கான நமது வருடாந்திரத் தேவை 79 மில்லியன் டன் அளவை எட்டக்கூடும். இது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 102 மில்லியன் டன் அளவை நெருங்கக்கூடும். தேவை யைக் கூடிய மட்டிலும் உள்நாட்டு உற்பத்தியை வைத்தே சமாளிக்கும் நோக்கோடு அரசு பல திட்டங் களைத் தீட்டி, செயலாற்றி வரு கிறது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி

வெள்ளை ஏகாதி பத்தியம் வீழ்த்தப்பட வேண்டு மானால், அவர்கள் இங்கே காலூன்றக் காரணமான வியாபாரத்துறையை முதலில் நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற ஓர் ஒப்பற்ற திட்டத்தை முதலில் வகுத்த பெருமை யாளர்தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார். இந்த உயரிய நோக்கத்தோடு தான் 'சுதேசி கப்பல் கம்பெனி' யைத் துவக்கினார் இவர்.

இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் என்ற சிற் றூரில், உலகநாதப்பிள்ளை-பரமாயி அம்மாள் தம்பதியின ருக்குப் பிறந்தவர் தான் வ.உ. சிதம்பரனார். 5.9.1872-இல் பிறந்தவரான இவர், இளமைக் காலக் கல்வியை ஒட்டப்பிடா ரத்தில் முடித்தார். தனது மகன் ஆங்கிலக் கல்வி பெறுவதற் காகவே இவருடைய தந்தை யார் ஒட்டப்பிடாரத்தில் ஓர் ஆங்கிலப்பள்ளி நிறுவினார். அதன் பின்னர் இவருடைய படிப்பு தூத்துக்குடியில் தொடர்ந்தது. சேவியர் உயர் நிலைப் பள்ளியிலும், கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்து வந்த வ.உ.சி. தமிழிலும் ஆங்கிலத் திலும் பெரும்புலமை மிக்க வரானார்.

23-வது வயதில், திருச் செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம் மைக்கும் வ.உ.சி.-க்கும் திருமணம் நடந்தேறியது. தம்முடைய சுயசரிதையை மட்டுமல்ல; மாண்புறக் குடும்பம் நடத்திய தனது

முதல் மனைவியைக் குறித்தும் 'வள்ளியம்மை சரித்திரம்' என்ற அரிய கவிதை நூலை ஆக்கிய பெருமையாளர் இவர்.

சிதம்பரனாரின் பாட்டனாரும், பெரிய தந்தையாரும், தந்தையாரும் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிந்தோர் ஆவர். அந்த வேட்கை இவரையும் ஆட்கொண்டது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று 1895-ஆம் ஆண்டு வாக்குவல்லமை மிகுந்த வழக்கறிஞர் ஆனார்.

ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞர் தொழில் தொடங்கினார் வ.உ.சி. பரம்பரை பரம்பரையாக வழக்கறிஞர் தொழில் நடத்தும் குடும்பத்தார் ஆகையால், அந்நாளில் அவ்வீடு 'வக்கில் ஐயா வீடு' என்றே ஊர்மக்களால் குறிப்பிடப்பட்டது.

நமது வ.உ. சிதம்பரனார், குற்றவியல் துறையில் நிகரற்ற வழக்கறிராகத் திகழ்ந்தார். ஐந்தாண்டுக்குப் பின் இவருடைய வழக்கறிஞர் தொழில் தூத்துக்குடியிலே தொடரலாயிற்று. நேர்மையின் நிலைக்கலனாக விளங்கிய இவரிடமிருந்த வாதத்திறமையால் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. இதனால் பொருளாதார மேம்பாடு இவருக்கு உண்டாயிற்று.

இந்த நிலையில், 1901-ஆம் ஆண்டில், மனைவி வள்ளியம்மை இயற்கை எய்தினார். பிறகு சில காலத்தின்பின், உற்றார் உறவினர் வலியுறுத்தலின் பேரில் முதல் மனைவியின் குடும்பத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மையை மணம் முடித்துக்கொண்டார். நான்கு ஆண் மக்கள், நான்கு பெண் மக்கள் இவருக்கு.

தலைசிறந்த பேச்சாற்றல் மட்டுமல்ல; இணையற்ற எழுத்தாற்றலும் இவருக்குண்டு. அதன் காரணமாகவே 'விவேகபானு' என்ற மாத இதழ் வ.உ.சி.-யால் தொடங்கப்பெற்றது.

'தமிழ்நேஷனல்', 'இந்து நேசன்' ஆகிய பத்திரிகைகளும் இவரால் நடத்தப் பட்டன. மெய்யறிவு, மெய்யறம், எனது பாடல் திரட்டு, வ.உ.சி. கண்ட பாரதி சுயசரிதை போன்ற நூல்களையும் எழுதினார். தமிழ்ப் புலமை மிக்கவர் ஆதலால் இன்னிலை, திருக்குறள், சிவஞானபோதம் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சிவஞானபோதம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளிலே இவருக்கிருந்த நாட்டம் மகத்தானது. 'தீண்டாமை நமக்கு வேண்டாமே' என்று பேசுவதோடு மட்டும் நின்றுவிடாமல் சகஜானந்தா என்ற பிற்பட்ட வகுப்பினரையும், இராமையா தேசிகர் என்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினரையும், தம் வீட்டிலேயே ஆதரித்து அன்பு காட்டி வந்தவர் வ.உ. சிதம்பரனார்.

சைவ சித்தாந்த சபை, மதுரைத் தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம், பிரம்ம சங்கம் போன்ற பல சங்கங்களில் உறுப்பினராக மட்டும் அல்ல; கைத்தொழில் சங்கம், தருமசங்கம் ஆகியற்றைத் தோற்றுவித்த சிறப்பும் சிதம்பரனாருக்கு உண்டு.

விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணானந்தரின் சந்திப்பு, வ.உ.சி.-யின் உள்ளத்தில் சிறிது சிறிதாக சுதந்திரக் கனல் மூட்டியது.

'மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிட 'சுதேசிக் கப்பல் கம்பெனி' 10 இலட்சம் ரூபாய் பங்கு முதலீட்டில் துவங்கப்பட்டது. மதுரை தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் இதற்குத்


V. O. Chidambaram Pillay,
PLEADER.
KOILPATTI, S. I. R.
6-6-25.

வ.உ.சி. கையெழுத்து

தலைவராகவும், வ.உ.சி. செயலாளராகவும், சி. விஜய ராகவாச்சாரியார் சட்ட ஆலோசகராகவும் பொறுப் பேற்றார்கள். வெள்ளையர் வியாபாரம் இதனால் சற்று நொடித்தது.

இந்தக் காரணத்தால், சிதம்பரனாரை எப்படியும் ஒடுக்கியே தீர்வது எனக் கருதிய ஆங்கிலேய அரசினர் பலவகையிலும் தொல்லை கொடுக்கலாயினர்.

திலகரையே தம் குருவாகக் கொண்டு தேசியம் வளர்ப்பதில் தீவிரம் காட்டலானார் வ.உ.சி. மகாகவி பாரதியாரும் சொல்வல்லார் சுப்பிரமணிய சிவாவும் இந்திய விடுதலைப் போரில் இவரோடு தோளோடு தோள் நின்றார்கள்.

1905-இல், திருநெல்வேலியில் இவரால் 'தேசாபிமானிகள் சங்கம்', 'ஜன சங்கம்' ஆகியவை உருவாக்கப் பட்டன.

வேகமும் நுணுக்கமும் மிக்க இவருடைய சொற்பெருக்கு நாடெங்கும் மக்களை எழுச்சிமயமாக்கவே, வெள்ளையராட்சி வெகுண்டெழுந்தது. அப்போதிருந்த திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை தூண்டுதலால் அரசாங்கமே சிதம்பரனார் மீது பேசியும், எழுதியும் நாட்டின் அமைதியைக் குலைத்தார் என்று வழக்குத் தொடுத்தது.

கல்வி

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், ஒன்பது முதல் 45 வயதுக்குட்பட்டவர்களில் எத்தனைப் பேர் எழுத்தறிவில்லாமல் உள்ளனர் என்பது குறித்து ஓர் ஆய்வு நடத்தப் பட்டது. அதில் 5,06,243 பேர் எழுத்தறிவின்றி உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 1,79,172 பேர் ஆண்கள், 3,27,071 பேர் பெண்கள். இதில் 1,65,196 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பையும், 19,586 பேர் மலைவாழ் வகுப்பையும் சார்ந்தவர்கள். இந்த மாவட்டத்தில் தொடங்கப் பட்டிருக்கும் முழு எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் இவர்கள் கல்வி பெறுவார்கள்.

பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி

தமிழ்நாட்டில் 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு நடப்புக் கல்வியாண்டில் (1992-93) 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பெண்களுக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும். இந்த வகுப்புகளில் முப்பது மாணவியர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர். இம் மாணவியர் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வுக்காகப் பயிற்சி பெறுவர்.

மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இப்பயிற்சியினைத் தருவார்கள். நிலம் மற்றும் கட்டட வசதிகள் உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமே இந்தப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

வழக்கு முடிவில் - வ.உ. சிதம்பரனாருக்கு 40 ஆண்டு காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிறைச்சாலையில் அடைக்கப் பட்ட இவர், மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார். கொடிய வெள்ளையர் அங்கே, வ.உ.சி.யை எண்ணெய்ச் செக்கு இழுக்கச் செய்து பெரும் இன்னலுக்கு ஆளாக்கினார்கள்.

இதற்கிடையில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' ஆங்கிலேயர் சூழ்ச்சியால் சீர்குலைந்து போன செய்தியும் சிதம்பரனார் நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாக வந்தது.

இந்திய விடுதலைப் போரில், இன்னுயிரும் துச்சமென முழுமூச்சோடு இறங்கியதன் காரணமாக 35-ஆம் வயதில் அடைக்கப்பட்ட சிங்கத் தமிழர் சிதம்பரனார், 1912- ஆம் ஆண்டு டிசம்பரில் விடுதலை செய்யப் பட்டார்.

சிறைக்குள்ளிருந்த காலத்திலேயே மிகவும் நோய்வாய்ப் பட்டு நலிந்த வ.உ.சி., விடுதலை பெற்று வெளியே வந்தபின் - பழைய வேகத்தோடு சுதந்திரப் போரில் ஈடுபட இயலாத நிலை, வறுமை அரவணைக்க, வழக்கறிஞர் தொழிலும் நடத்த வகையின்றிச் சென்னை வந்து சேர்ந்தார். அரிசி-நெய் வாணிபம் செய்து வாழ்க்கை நடத்த முயன்றார். அதுவும் இயலாத நிலையில் மீண்டும் கோவில்பட்டியிலும் தூத்துக்குடியிலும் வழக்கறிஞர் தொழிலைத் தொடர முயன்று தோற்றார். நலிந்த நிலையிலேயே தூத்துக்குடியில் 18.11.1936- இல் 'தென்னாட்டுத் திலகம்' எனப் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரனாரின் இன்னுயிர் பிரிந்தது.

அன்னாரின் சுடர்வீசிய சுதந்திர உணர்வுக்குப் பெரும் மதிப்பளிக்கும் வகையில் - தமிழக அரசு 1986 அக்டோபர் 19-ஆம் நாள் ஒட்டப்பிடாரத்தில் வ.உ. சிதம்பரனார் பிறந்த இல்லத்தை அரசுடைமையாக - நினைவு இல்லமாக மாற்றியது. சிதம்பரனார் மாவட்டம் அமைத்துச் சிறப்பும் செய்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

மத்திய அரசு அன்னாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

சென்னைத் துறைமுகத்தின் முன்னால், சிலை உருவாகி நிற்கும் வ.உ.சிதம்பரனார், தன்னலம் கருதாமல் பொது நலமே கருதிப் பாடுபட்ட தியாக சீலராவார்.

['பூவழகி பதிப்பக வெளியீடான 'கட்டபொம்மன் முதல் காந்தியார் வரை' நூலிலிருந்து.]

விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் இணைந்து ''விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்'' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை ஆகஸ்டு 6-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தின.

இத்தகைய கருத்தரங்கை முதன்முறையாக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்க்குறியியல் துறை நடத்தியது. இத்துறை, நீண்டகாலமாகப் புற்றுநோய் ஆய்வில் ஈடுபட்டு, கால்நடைப் பணியாளர்கட்கு, புற்றுநோய் அறிதலில் புதிய உத்திகளை அளித்து வருகிறது.

புற்றுநோய், மனிதர்களைப் போலவே, கால்நடைகளையும், பறவைகளையும் கொடூரமாகத் தாக்கவல்லது. கால்நடைகள் மற்றும் பறவைகளில் ஏற்படும் புற்றுநோயால் பெருத்த பொருளாதாரச் சேதம் பண்ணையாளர்கட்கு உண்டாகிறது. மாடுகளில் இரத்தப் புற்றுநோய், 'சைனஸ்' புற்றுநோய் முதலியனவும், பறவைகளில் 'லிம்பாய்ட்' புற்றுநோயும் குறிப்பிடத்தக்கன. புற்றுநோய் ஆய்வுத்துறையில், அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள், இவ்வகைப் புற்றுநோய்களின் இயல்புகள் குறித்து அறிவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

முதன்முதலில் ''புற்றுநோய்த் தடுப்பூசி'' கோழிகளுக்கு ஏற்படும் 'மேரக்ஸ் நோயிற்கு' எதிராகவே தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவைபோன்ற தடுப்புமுறைகளைப் பெற, ஆய்வக விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். மேலும் ஆய்வக விலங்கினங்கள், மனிதப் புற்றுநோய்களுக்குத் தகுந்த மாதிரிகளாக விளங்குகின்றன.

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கம் 'புற்றுநோய் ஆய்வு' என்ற தலைப்பிட்டு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தும் பெருமையினை, இந்தியாவின் முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளது. இக்கருத்தரங்கில், இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 150 புற்றுநோய் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். புற்றுநோய் ஆய்வின் புதிய பரிமாணங்களையும், முன்னேற்றங்களையும் வல்லுநர்கள் தங்களுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்ள இக்கருத்தரங்கு வழிவகுத்துள்ளது. இக்கருத்தரங்குகள் மூலம், கால்நடைகளின் புற்றுநோயினால் ஏற்படும் பொருளாதார இழப்பினை ஈடுகட்ட வழிமுறைகளை உருவாக்க இயலும்.

மனிதர்களுக்கு ஏற்படும் புற்றுநோயைக் களைய விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். ஆதலால், இக்கருத்தரங்கு மனிதர்களின் இக்கொடிய நோய்கள் தீர ஏற்ற புதிய அணுகுமுறைகளை முன் வைக்கும் என நம்பப்படுகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர். வி. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கினை, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் தொடங்கி வைத்து விழா மலரை வெளியிட்டார். விழா மலர் முதல் பிரதியை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு. கே.எம். நாராயணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர். பி. ரிச்சர்ட் மாசிலாமணி அவர்களின் திருவுருவப் படத்தினை, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர். எஸ். பி. அன்புமணி அவர்கள் திறந்துவைத்து அவருக்குப் புகழஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கத்தின் தலைவர் டாக்டர். எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக விலங்கியல் சுகாதார கல்வி மைய இயக்குநர் டாக்டர். வேணுகோபாலன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

—ஜே. சந்திரன்

அந்நியச் செலாவணி ஈட்டும்

ஆமணக்கு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் வீரத்தின் விளைநிலம்... ஆனால் வேளாண் மைக்கு, வானம் பார்த்த பூமி, நல்ல வளமான செம்மண் நிறைந்துள்ள பூமி, எனவே, இம் மண்ணுக்கேற்ற விளைபொருட்களைத் தேர்வு செய்து, விவசாயம் செய்வதில் இம்மாவட்ட வேளாண்துறை ஆர்வம் காட்டிவருகிறது.

இதன் முதற்படியாக இம்மாவட்டத்தில் எளிதில் சாகுபடி செய்யக் கூடியதும், மானாவாரி நிலத்திற்கு ஏற்றதும், வறட்சியைத் தாங்கக் கூடியதுமான ஒரு பணப்பயிரை, அதிலும் அந்நியச் செலாவணி ஈட்டும் சக்தி பெற்ற பயிரைப் பயிரிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளோம். அந்தப் பயிரின் பெயர்தான் ஆமணக்கு!...

இம் மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் இப்பணப்பயிரைப் பயிர் செய்ய வைப்பதன் முக்கியத்துவத்தை விவசாயப் பெருங்குடி மக்களிடையே கருத்தரங்கு, கண்காட்சி, விளக்கக் கூட்டங்கள் நடத்திப்பரப்பி வருகிறது இம் மாவட்டம். இந்த 'ஆமணக்கின்' மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கணக்கிட்டால் நமக்கு ஆச்சரியமே மேலோங்குகிறது. ஆம்... இதோ பாருங்கள் பட்டியலை!...

1. மசகிற்கு
2. மருத்துவத்திற்கு
3. சோப்பு செய்திட
4. கிரீஸ் தயாரிக்க
5. மெட்டல்சோப் செய்ய
6. பிரேக் எண்ணெய்
7. பெயிண்டு தயாரிக்க
8. செயற்கை மரப்பலகை
9. மெழுகு தயாரிக்க
10. அழகுச் சாதன பொருட்கள்
11. ஒட்டுப் பொருட்கள்
12. அச்சு மை தயாரிக்க
13. ஸ்நோ தயாரிக்க
14. நைலான் தயாரிக்க
15. தொழிற்சாலைக் கரைபொருள்
16. பிளாஸ்டிக் தயாரிக்க
17. லூப்ரிகேசன் ஆயில் தயாரிக்க இது பயன் படுகிறது.

தமிழ்நாட்டில் ஆமணக்குப் பயிர் சுமார் 27,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 4,200 மெ.டன் ஆமணக்கு விதை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆமணக்கு விதையில் 50 முதல் 52 சதவிகிதம் வரை எண்ணெய்ச்சத்து உள்ளது. ஆமணக்கு எண்ணெய் அதிகக் குளிரிலும் உறையாது. முக்கியமாக ஆகாய விமானங்களின் இயந்திரங்களுக்கு 'லூப்ரிகேசன்' எண்ணெயாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருகிறது.

சாகுபடி முறைகள்

ஆமணக்குப் பயிரை இறைவையிலும், மானாவாரியிலும், தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடு பயிராகவும், வரப்புப் பயிராகவும், பயிரிடலாம். தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆமணக்கு மானாவாரியில் கலப்புப் பயிராக நிலக்கடலை, சிறுதானியங்களுடன் பயிர் செய்யப் படுகிறது. கரும்பு, பருத்தி, மிளகாய் ஆகிய வற்றுடன் வரப்புப் பயிராகப் பயிரிடலாம். மானாவாரிப் பயிரை ஜூலை முதல் நவம்பர்-டிசம்பர் மாதங்களிலும், பாசனப் பயிரை டிசம்பர்-ஜனவரி முதல் ஜூன்-ஜூலை மாதங்களிலும் பயிர் செய்யலாம்.

ஆமணக்குப் பயிருக்கு வண்டல் கலந்த செம்மண் பூமி சிறந்தது. களர் அமிலத் தன்மை உள்ள நிலத்தைத் தவிர்க்கவும் வடிகால் வசதி அவசியம் இருக்கவேண்டும்.

நிலம் தயாரிப்பும், அடியுரமும்

ஆமணக்குப் பயிர் செய்வதற்கு முன்னால் ஓரிரு மழைக்குப்பின் நிலத்தை நன்றாகப் பண்படுத்தி உழவு செய்ய வேண்டும். பின்பு ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட்டு ஒருமுறை உழவு செய்ய வேண்டும். ஆமணக்குப் பயிருக்கு ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 6 கிலோ மணிச்சத்து மற்றும் 6 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்கள் அடியுரமாக இடவேண்டும்.

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை

விதையும், விதைப்பும்

ஆமணக்கினைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவைப் படும். கலப்புப் பயிராகப் பயிரிட்டால் ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. நீண்டகால இரகங்களான டிஎம்வி.1, டிஎம்வி.2, டிஎம்வி.3 மற்றும் எஸ்.ஏ.1 இரகங்களுக்கு 90.90 செ.மீ. இடைவெளியில் விதைக்கவேண்டும்.

குறுகியகால இரகங்களான எஸ்.ஏ.2, டிஎம்வி.4 மற்றும் டிஎம்வி.5 இரகங்களை 60-45 செ.மீ. இடைவெளியில் தனிப்பயிராக விதைக்க வேண்டும். கலப்புப் பயிருக்கு 30 செ.மீ. முதல் 45 செ.மீ. வரை இடைவெளி தேவை.

பின்செய் நேர்த்தி

விதைத்த 10-வது நாளில் 20 மணிநேரம் நீரில் ஊறவைத்த விதையைக் கொண்டு இடைவெளியை நிரப்பவேண்டும். விதைத்த 15 அல்லது 20 நாட்களில் செடிகளைக் கலைத்து தேவையான எண்ணிக்கை மட்டும் இருக்கும்படி செய்ய வேண்டும். வரிசைக்கு இடைவெளியில் ஜூனியர்ஹோ கருவியால் களை எடுக்கவேண்டும். செடிகள் நன்கு வளர்ந்து இடைவெளி மூடும் வரை இந்த இடை உழவு அவசியம்: விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் களையும் பின்பு 20 நாட்கள் கழித்து இரண்டாவது களையும் எடுப்பது நல்லது.

பயிர்ப் பாதுகாப்பு

ஆமணக்கில் முக்கியமாக இலைப்புழு தாக்குதல் விதைத்த 45 முதல் 55 நாட்களில் காணப் படும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மாலத்தியான் 50 சதவிகிதம் இ.சி. 800 மி. அல்லது பென்தியான் 100 சதவிகிதம் இ.சி.400 மி. அல்லது நனையும் செவின் 800 கிராம் இதில் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும். இம்மருந்தினை 2 அல்லது 3 முறை தெளிக்க வேண்டி இருக்கும்.

பயிர் சிலந்தி தாக்குதல் காணப்பட்டால் நனையும் கந்தகம் ஏக்கருக்கு 600 கிராம் தெளிக்க வேண்டும். மானாவாரியில் இலைப்புழுக்களைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதவிகிதம் அல்லது என்டோசல்பான் 4 சதவிகிதம் தூள் மருந்தினை ஏக்கருக்கு 10 கிலோ தூவவும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த பூக்கும் தருணத்திலிருந்து இலைப் புழுக்களுக்கு தெளிக்கும் மருந்தையே 20 நாட் களுக்கு ஒருமுறை தெளிக்கவேண்டும்.

அறுவடை

ஆமணக்கின் குலையில் இரண்டு அல்லது மூன்று காய்கள் காய்த்திருப்பின் அந்தக் குலையை அறுவடை செய்யலாம். ஆமணக்கில் இரண்டு அல்லது மூன்று முறை அறுவடைசெய்ய வேண் டும். முற்றிய குலைகளை அறுவடை செய்து காய வைத்து விதை எடுக்கும் கருவி அல்லது தடியால் அடித்து விதையைப் பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை மூன்று நாட்களுக்கு நன்றாக வெயிலில் காயவைத்துப் பிறகு சேமிக்கவேண்டும்.

சாகுபடி செலவினம் தோராயமாக ஏக்கருக்கு

1. நிலம் தயாரித்தல்	— ரூ.260
2. விதை 4 கிலோ	ரூ.40
3. விதை நேர்த்தி மருந்து	— ரூ.2
4. விதைக்க ஆகும்செலவு	— ரூ.200
5. உரம் தொழுஉரம் 10 வண்டி	— ரூ.250
தழைச்சத்து 12 கிலோ— 26 கிலோ யூரியா	— ரூ.83
மணிச்சத்து 6 கிலோ 38 கிலோ சூப்பர்	— ரூ.48
சாம்பல் சத்து 6 கிலோ 10 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ்	— ரூ.17
6. களை எடுத்தல்	— ரூ.120
7. பயிர்ப் பாதுகாப்பு	— ரூ.300
8. அறுவடை மற்றும் இதர செலவினம்	— ரூ.150
மொத்தம்	ரூ.1,470

வரவினம்:

மகசூல் (தனிப்பயிரானால்)

ஏக்கருக்கு — 300 கிலோ முதல் 400 கிலோ (350 கிலோ)

வரவு—கிலோ 10 ரூபாய் வீதம்	ரூ.3,500
செலவு	— ரூ.1,470
ஏக்கருக்கு நிகர லாபம்	— ரூ.2,030

ஊடுபயிர் மற்றும் வரப்புப்பயிர்ச் சாகுபடி செய்வதால் வருமானம்:

செலவு:

ஏக்கருக்கு விதை 2 கிலோ	— ரூ.20
விதைப்பு செய்ய செலவு	— ரூ.20
அறுவடை மற்றும் சுத்தி செய்யும் செலவு	— ரூ.60
மொத்தம்	ரூ.100

வரவு:

மகசூல் ஏக்கருக்கு 100 கிலோ சராசரி கிலோ ரூ.10 வீதம்	ரூ.1000
செலவு	— ரூ.100
ஏக்கருக்கு நிகர லாபம்	ரூ.900

நம் நாட்டில் இல்லாத வளம் இல்லை. இருக்கின்ற செல்வத்தில் எதை எப்படிப் பயன்படுத்தினால், அது நாட்டுக்கும், நமக்கும் நல்லது என்று ஆய்ந்து அதன்படி செயலாற்றிப் பணி புரிந்தால் நாம் வளர்வோம்! நாடும் வளம்பெறும்!

கல்வி என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல; வாழ்க்கையின் முதன்மையை முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான்

தொழிலாளர் நலம் பெறட்டும்!



இல. பழனியப்பன்

உழைப்பின் பெருமையினை உள்ளபடி சொல்வதென்றால்
உண்மைக்கு மறுபெயரே உழைப்பென்பார் சான்றோர்கள்
சலிப்பில்லா உழைப்பாலே சாதனைகள் கைகூடும்!
சன்மார்க்க நெறியினிலே வேதனைகள் மறைந்தோடும்!

இன்றைக்குத் தொழிலாளர் இருக்கின்ற நிலைமையினை
இதமாகப் படம்பிடித்து நாமிங்கே கண்டிடுவோம்!
என்றைக்கும் 'குடி'யோடு இன்ப'மது' காணுவதால்
எத்தனையோ குடியிங்கு அடியோடு சாய்ந்ததன்றோ!

எத்தனையோ திட்டங்கள் இந்நாட்டில் வந்தபின்னும்
இல்லாமைகோலோச்சக் காரணமேன் தோழர்களே!
முத்தான உழைப்பதனை மூலதனம் ஆக்கிவிட்டால்
இத்தரையில் பொற்காலம் இனிதே மலர்ந்துவிடும்!

உற்பத்தி வளர்ந்தோங்க உழைப்பே உயிர்நாடி!
உலகின் நலன்காட்டும் ஒழுங்கான கண்ணாடி!
கற்பித்த கல்வியுடன் கவினுழைப்பும் சேர்ந்துவிட்டால்
கட்டாயம் இந்நாட்டில் கவலைகள் பறந்தோடும்!

தொழிலாளர் நலம்பெற்றால் சமுதாயம் மேன்மையுறும்!
தொடராக மக்களுக்குப் பெரும்நன்மை கூடிவரும்!
எழிலான வாழ்க்கைநிதம் ஏற்றமுடன் தேடிவரும்!
ஏற்றத் தாழ்வுகளும் எங்கோ போய்மறையும்!

நிர்வாகம் தொழிலாளர் நேர்மையுடன் இணைந்திட்டால்
நிச்சயமாய்த் தொழிலுறவு நீங்காது நிலைத்திருக்கும்
துவேகம் இந்நாட்டில் பூரிப்பாய் வந்துவிடும்!
த்துணர்வு நம்மனதில் பூத்துக் குலுங்கிநிற்கும்!

கடமையும் உரிமையும் கண்களாய்க் கொண்டவரே
கனிவான தொழிலாளர் என்றிடுவார் நண்பர்களே!
உடைமை கருதாமல் ஓரணியில் இணைந்திருப்பின்
உலகத்தில் தொழிலாளர் உயர்ந்திடுதல் நிச்சயமே!

மாம்பழத்தின் கதை

உலகில் பயிரிடப்படும் ஆறு மிக முக்கியப் பழவகைகளில் மாம்பழமும் ஒன்று. இந்தியாவுக்கே சொந்தமான இந்த மாம்பழம் சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாக நமது நாட்டில் பயிரிடப்பட்டு வருகிறது.

தற்சமயம் நமது நாட்டில் புயிரிடப்படும் பழவகைகளில் 42 சதவிகிதப் பரப்பில் யாம்பழமே பயிர் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 9.5 மெட்ரிக் டன் மாம்பழங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது நமது நாட்டில் உற்பத்தியாகும் மொத்த பழவகைகளில் சுமார் 40 சதவிகிதம் ஆகும். இனிய சுவையும், உயர்ந்த நறுமணமும் கொண்ட மாம்பழத்தில் வைட்டமின் ஏ மற்றும் சி அடங்கியிருப்பதால் இது அனைவராலும் விரும்பி உண்ணக்கூடிய ஒரு பழமாகும்.

மாம்பழ உற்பத்தியில் இந்தியா

உலகில் சுமார் 63 நாடுகளில் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டாலும், உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிக அளவில் மாம்பழம் ஊற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது, உலகில் தயாராகும் மாம்பழங்களில் 60 சதவிகிதத்துக்கு மேல் நமது நாட்டில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவிற்கு அடுத்தபடியாக மெக்சிகோ, பாகிஸ்தான், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகள் மாம்பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

மாம்பழ வகைகள்

பழவகைகளிலேயே மாம்பழம் ஒன்றுதான் பலவகைகளில் (Varieties) உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 41 இனங்களில் சுமார் 360 வகை மாம்பழங்கள் விளைகின்றன. இவற்றில் சுமார் 20 வகை பழங்களே வணிக ரீதியில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நமது நாட்டில் விளையும் மாம்பழ வகைகளில் மிக முக்கியமானவை நீலம், அல்போன்சோ, பேகம் பள்ளி, லங்ரா, தேசரி, பாதாமி போன்றவைகளாகும்.

இந்தியாவில் மாம்பழப் பருவம் பொதுவாக மார்ச் மாதம் தொடங்கி ஜூலை மாதம் முடிவடையும். இவற்றில் தென்னகத்தில் விளையும் அல்போன்சோ, மதராஸி போன்ற ரகங்களே முதலில் அங்காடிகளுக்கு விற்பனைக்கு வருகின்றன. இந்த ரகங்கள் பிப்ரவரி மாதம் நடுவிலேயே விற்பனைக்குத் தயாராகி விடுகின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் விளையும், தேசரி, லாங்ரா போன்ற ரகங்கள் ஏப்ரல் மாதம் இறுதியில் விற்பனைக்குத் தயாராகி ஜூலை மாதம் இறுதி வரை கிடைக்கும்.

மாம்பழ ஏற்றுமதி

உலகில் உற்பத்தியாகும் மாம்பழங்களில் சுமார் 60 சதவிகிதம் இந்தியாவில் விளைந்தாலும் உலக அளவில் நமது மாம்பழ ஏற்றுமதி 10 சதவிகிதத்துக்கும் குறைவே ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள மாம்பழங்கள் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

தொன்றுதொட்டு மேற்காசிய நாடுகளே நமது நாட்டிலிருந்து அதிக அளவில் மாம்பழங்களை இறக்குமதி செய்கின்றன. இதிலும் குறிப்பாக ஐக்கிய அரசு குடியரசு சிற்கே பெருமளவில் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துடன் பிரிட்டன், கனடா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் சிறிய அளவில் மாம்பழங்கள் நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சில கடுமையான விதிமுறைகளின் காரணமாக, உலகின் மிகப் பெரிய விற்பனை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு நமது நாட்டிலிருந்து மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. மாம்பழங்களைப் பக்குவப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் நமது நாட்டில் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

இந்தியாவிலிருந்து தற்சமயம் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழம் ஏற்றுமதியாகின்றது. ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தான் அதிக அளவில் நம்மிடமிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்கிறது. இதைத் தொடர்ந்து பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் நமது மாம்பழங்களுக்கு முக்கிய வியாபாரத் தலங்களாகும். தற்சமயம் இந்தியா மார்ச், ஏப்ரல் ஆகிய இரு மாதங்களில் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழங்களை ஏற்றுமதி செய்கிறது.

மாம்பழ உற்பத்தி

நமது நாட்டில் ஆண்டுக்கு 9 முதல் 10 மெட்ரிக் டன் வரை மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றில் உத்திரப் பிரதேசம் 34.27 சதவிகிதமும், ஆந்திரப் பிரதேசம் 19.09 சதவிகிதமும், பீகார் மாநிலம் 13.44 சதவிகிதமும், ஒரிஸ்ஸா மாநிலம் 8.22 சதவிகிதமும் உற்பத்தி செய்கின்றன.

- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள்- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (24.8.92).

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, மாண்புமிகு மொரிசியஸ் நாட்டுக் கல்வி மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் சந்தித்தார் (24.8.92).

வாழவைத்த தெய்வங்களே வாழ்க!

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்த ''வாழ வைத்த தெய்வங்களே வாழ்க'' என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒலி நாடா வெளியீட்டு விழா 25.8.92 அன்று சென்னை தேனாம்பேட்டை காமராசர் நினைவு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ''வாழ வைத்த தெய்வங்களே வாழ்க'' என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒலி நாடாவினையும் ''திராவிட சக்தி'' என்னும் நாட்டிய நிகழ்ச்சியின் ''ஒலி நாடா'' வினையும் வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

இந்நாடாக்களின் முதல் பிரதிகளை சட்டப்பேரவைத் தலைவர் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தயாரித்த ''வாழவைத்த தெய்வங்களே வாழ்க'' - ஒளி நாடா அரங்கத்தில் ஒளி பரப்பப்பட்டது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எழுதி, திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்கள் தயாரித்தளித்த ''திராவிட சக்தி'' என்னும் நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவியர்கள் பங்கு கொண்ட இந்த நாட்டிய நிகழ்ச்சி அனைவரது கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவர்ந்தது.

அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், செய்தியாளர்களும், ஏராளமான பொதுமக்களும் வருகைதந்து சிறப்பித்த இந்நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் அவர்கள் நன்றி நவின்றார்.

—விழாத் தொகுப்பு:
என். இளங்கோ

முதல் அட்டை:

இந்தியாவின் 46-ஆம் விடுதலை நாள் விழாவினையொட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலுள்ள கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றி வைத்துச் சிறப்புரையாற்றினார் (15.8.'92).

நான்காம் அட்டை:

இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் புதுடெல்லியில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார் (17.8.'92).

பரிபூரண மதுவிலக்குக் கொள்கை

மாண்புமிகு முதல்வர் உரை

இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனித சமுதாயத்தில் மிகக் கொடுமையான கேடு எனக் கருதப்படும் மது அரக்கனை, வேரோடு வீழ்த்திடும் முயற்சி, பன்னெடுங்காலமாகவே பண்பாளர்கள் பலராலும் தொடரப்பட்டு வருகிறது. ''இது ஓர் சமுதாயக் கொடுமை; இதனை விரட்டுவது என்பது, வெள்ளையர்களை விரட்டுவதைவிட வேகமாக நடக்க வேண்டியது'', என அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். மதுப்பழக்கம் அறவே அற்ற நாடென்ற பேற்றினை, இந்திய நாடு முழுமையாகப் பெற வேண்டும் எனக் கனவு கண்டார். அதுவே அவரது லட்சிய ராமராஜ்யம் என்ற நோக்கத்தோடு, இடையறாத மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

''உண்ணற்க கள்ளை.....'' எனக் கறாராகக் 'கள்ளுண்ணாமை' அதிகாரம் தந்த வள்ளுவர் பிறந்த மண், நம் தமிழ் மண் என்கிற காரணத்தால், மற்றெந்த மாநிலங்களை எல்லாம் விட, நம் தாயகமாம் தமிழகத்தில், 'மதுவிலக்கு' பரிபூரணமாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மது போதையோடு தள்ளாடுபவன், மனிதனாகக் கருதப்படவே கூடாதவன் என்னும் அளவுக்கு, மதுப்பழக்கம் வெறுக்கப்பட்டு வந்தது.

எனவே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணத்தில், மதுவிலக்குக் காரணமாக அரசுக்கு ஏற்பட்டு வந்த நிதி இழப்பைச் சுட்டிக்காட்டியபோது, ''எத்தனைக் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அதன் காரணமாக மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்'' எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அண்ணாவின் வழித்தோன்றலும் அவரது இதயக்கனியுமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், அந்த நெறியிலிருந்து மாறுபாடின்றி, கடுமை காட்டி வந்தார். அவருடைய அரசியல் வாரிசென, உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, உங்கள் சகோதரியான நானும், அந்நன்னெறி வழியினின்று, துளியும் பிறழா நடவடிக்கைக்ளையே மேற்கொண்டு வருகிறேன்.

மது மயக்கம் என்பது இம்மியும் இல்லா, பரிபூரண மதுவிலக்கு மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிடும் இலக்கினைக் கொண்டே, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். பரிபூரண மதுவிலக்குக் கொள்கையில், அழுத்தமான பிடிப்பினைக் கொண்டிருந்த, இத்தனை தலைவர்கள் தோன்றி, இக் கொள்கைக்கெனக் குரல் கொடுத்து வந்தும் கூட, இன்றைக்கு மதுவினை முழுமையாக ஒழிக்க முடியாமைக்கு, அடிப்படைக் காரணம் என்னவென்பதைத் பலரும் அறிந்திருக்கிறீர்கள்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்ட வரை, மதுவென்பது என்னவென்றே அறியாதிருந்த ஒரு தலைமுறைக்கு மதுவை அறிமுகப்படுத்தி - சாராயம், கள், பிராந்தி, விஸ்கி - என என்னென்ன தீமைகள் இருந்ததோ, அத்தனை போதைப் பொருள்களையும் தங்கு தடையின்றி விற்பனை செய்து, இத் தலைமுறையினையே கெடுத்து நாசமாக்கிய பெருமை, அண்ணாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த கருணாநிதியையே சாரும். அவரால் புகுத்தப்பட்டு, கெடுத்து நாசமாக்கப்பட்ட, ஓர் சமுதாய அமைப்பைச் சீர்திருத்த, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, எவ்வளவு சிரமமாய் இருந்தது என்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாக்கிய அவரே, அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை எதிர்நோக்கினார். எனவே, சிறிது காலம், தற்காலிகமாய் மதுவிலக்கைத் தளர்த்தி, பின்னர், படிப்படியாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், முதலில் கள், சாராயக் கடைகளை அடியோடு மூடினார்.

ஆனால் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைபோல், புரட்சித் தலைவருக்குப் பின்னர், ஒரு தலைமுறையையே கெடுத்த கருணாநிதி, மீண்டும் ஆட்சிக்கு வந்த காரணத்தால், தன் பழைய பாணியை விட, கொஞ்சம் கூடுதலாகவே மது அரக்கனை ஆரத் தழுவத் தொடங்கினார். முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில், மலிவு விலை மதுக் கடைகளை காண நேரிட்டது.

சென்ற பொதுத் தேர்தலின் போது, தமிழகம் எங்கும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, ஆங்காங்கு தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையோடும், என்னிடம் முறையிட்ட முதல் கோரிக்கையே, ''அம்மா; இந்தப் பாவிகள் திறந்த சாராயக் கடைகளை நீங்கள் தான் மூட வேண்டும்'' என்ற கோரிக்கை ஆகும். எனவே தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த உடன், நான் போட்ட முதல் கையெழுத்தே, கருணாநிதியின் மலிவு விலை மதுக்கடைகளை மூடும் கையெழுத்துதான் என்பதைத் தமிழகமே அறியும்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடியவுடன் எல்லோரும் நினைத்தது, கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என்பதாகும். ஆனால் அதனைத் தடுக்கவும் ஓர் வழி கண்டுபிடித்து, மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்ட அதே வேளையில், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் - விற்போர் - கடத்துவோர் அனைவரையும் கண்காணித்துத் தடுக்கும் பொறுப்பு, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுடையதாகும் - மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து, தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டதையும் அறிவீர்கள்.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்னரும் கூட, பூரண மதுவிலக்கு என்ற நம் இலக்கை எய்த முடியவில்லையே என்ற ஏக்கம், எனக்கு இல்லாமல் இல்லை. என் ஒரே கையெழுத்தால், கருணாநிதி புகுத்திய மலிவு விலை மதுக்கடைகளைத் துரத்த முடிந்தது. ஆனால் கருணாநிதியால் கெடுக்கப்பட்ட, மது என்பதையே என்னவென்று அறியாதிருந்த ஓர் இளம் தலைமுறையினையே திருத்தி, மதுப்பழக்கத்தில் இருந்து விடுபடச் செய்வது என்பது, ஒரு கையெழுத்தால், அல்லது ஓர் அரசாங்கச் சட்டத்தால், முடியாதென்றே கருதுகிறேன். சட்டத்தால் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டாலும், அதன் பாதிப்பு, ஏழை எளியோர் மற்றும் அப்பாவி மக்கள் மீது, மிக அதிகமாய் இருந்திடும் என்றும் கருதுகிறேன். எனவே, இன்றைக்கு மலிவு விலை மதுக்கடைகளை மூடிய கையோடு, மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுவிட்ட ஓர் சமுதாயத்தையே திருத்தி, அதிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

என் தலைமையில் அமைக்கப்பட்டு - பல்வேறு சான்றோர்கள், கல்விமான்கள், சமூக சேவகர்கள், கலை உலகத்தினர் ஆகியோர் இடம் பெற்றுள்ள மதுவிலக்குப் பிரச்சார உயர் மட்டக்குழு,

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் சார்பில் ரூ.25 இலட்சம்- மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் நேரு விளையாட்டரங்கச் சீரமைப்புக்கான நிதியாக வழங்கப் பட்டது (21.8.92).

ஏற்கெனவே பல முடிவுகள் மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசின் மூலம் 'வெளிச்சம்' என்னும் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 'நீங்க நல்லா இருக்கனும்' என்னும் திரைப்படமும், மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கெனத் தயாராகி வருவதையும், அது தமிழக மக்களின் கவனத்தை விரைவில் கவர்ந்து, ஓர் நல்வழிப் பாதையில் அவர்களை நடத்திச் செல்ல உள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவின் கொடுமைகளை, தீமைகளை, மக்களுக்கு எடுத்து விளக்கி, மது என்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பது மட்டுமல்லாமல், ஓர் சமுதாயத்தையே நாசப்படுத்தும் அளவுக்கு, வீட்டுக்கு வீடு தீங்கு விளைவிப்பதாகும் என்ற கருத்தை, மக்கள் மனதில் வேரூன்றச் செய்யும் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வழியில் சிறந்த சிந்தனையாளரும், சீர்திருத்த நோக்கம் கொண்டவருமான, கல்வி அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்துள்ள, 'வாழ வைத்த தெய்வங்களே, வாழ்க' என்னும் இப்பிரச்சார கேசட், இப்போது வெளியிடப்பட்டது.

இத்தகைய பிரச்சாரங்கள் மூலம், மதுப்பழக்கத்திற்கு ஆளானோர் மனதில், ஓர் மாற்றத்தை உருவாக்க முடியும்; மதுவை அடியோடு கண்ணுக்குத் தெரியாத தூரம் வரை, துரத்த முடியும் என்ற நம்பிக்கையோடு, இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் நம்பிக்கை ஈடேறும்; இதில் வெற்றி காண்போம் என்ற உறுதி எங்களுக்கு உண்டு. 'மது அரக்கனை வீழ்த்தி - பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினோம்', என்ற திக்கு நோக்கி, விரைந்து செல்லும் நம் பயணத்தில், ஓர் மைல் கல்லாக அமையும் இக்கேசட்டை, மெத்த மன ஆறுதலுடன் வெளியிடுகிறேன்.

இந்தச் சிறப்புக் கேசட்டை வெளிக்கொணர்ந்துள்ள கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கு இடையே, எப்படி இந்த மதுவிலக்குப் பிரச்சாரக் கேசட்டை எழுதி தயாரித்தார், என்பதை எண்ணிப் பார்த்து வியக்கின்றேன். மதுரை வெற்றி மாநாட்டிற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் என்னைச் சந்தித்தபொழுது, தான் உருவாக்கும் 'திராவிட சக்தி' என்ற நாட்டிய நாடகதை, மாநாட்டில் அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் முடிந்தால் அரங்கேற்றலாம் என்று சொன்னேன். இந்த நாட்டிய நாடகத்தை, எப்படியும் மாநாட்டில் சிறப்பாக அரங்கேற்ற வேண்டும், என்ற ஒரே குறிக்கோளுடன், இரவு பகல் என்று பாராது, தான் விமானத்தில் பயணம் செய்யும் பொழுதும், இடைவிடாது எழுதி முடித்து, சிறப்பாக அதனைத் தயாரித்து, மதுரை மாநாட்டிலேயே அவர் அரங்கேற்றினார்.

பத்தே நாட்களில் இந்த நாட்டிய நாடகம் தயாரிக்கப்பட்டது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுப்பது போல, மிகக்குறுகிய கால அவகாசத்தில், சிறப்பாக இசை அமைத்துக் கொடுத்த, திரு எல். வைத்தியநாதன் அவர்களையும், நடனம் அமைத்துக் கொடுத்த திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும். அது மட்டுமல்ல, இதிலுள்ள மற்றொரு சிறப்பிற்குரிய அம்சம் என்னவென்றால், இந்த நாட்டிய நாடகத்தில் பங்கு பெற்ற அத்தனை நடனமணிகளும், கல்வி பயின்றுவரும் மாணவிகள் ஆகும்.

இந்த இளம் மாணவிகள், மிகுந்த ஈடுபாட்டுடன், இரவு பகல் என்று பாராது, பயிற்சி பெற்று, ஒரு சில நாட்களில் இந்த நாட்டிய நாடகத்தைச் சிறப்புற, வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய கலை ஆர்வத்திற்கும், நினைவாற்றலுக்கும், நம் இயக்கத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் பிடிப்பிற்கும், மதிப்பிற்கும், அவர்களுடைய இந்தக் கடும் உழைப்பே சிறந்த எடுத்துக்காட்டாகும். எனவே, தங்களது குடும்ப நிகழ்ச்சி போல் எண்ணி, இவ்வளவு ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், மனமுவந்த பாராட்டுக்களையும் வழங்குவதோடு, அவர்களது எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டும் என்பதற்கான என் வாழ்த்துக்களையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர் அன்பு அண்ணன் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் ஒரு அமைச்சர் மட்டுமல்ல; ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் ஒரு தலை சிறந்த கலைஞர்; புலமை மிக்க கவிஞரும் கூட. இதனை நாம் இப்போது கண்டு களித்த 'திராவிட சக்தி' நாட்டிய நாடகத்திலிருந்து, உணர்ந்து கொள்ள முடியும். தம்முடைய திறமையையும், அறிவையும், நாட்டு மக்களின் நலனுக்காகவும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவரை, நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது இச்சீரிய முயற்சிகளுக்கு என் சார்பாகவும், கழக உடன் பிறப்புகள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எல்லா வளமும் பெற வேண்டும்; இது போன்ற அவரது முயற்சிகள் மேலும் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வ்ணக்கம்.

(25.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேசட் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.)

இராமநாதபுரம் மாவட்டத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, எழுத்தறிவு இல்லாத 10 முதல் 45 வயதிற்குட்பட்ட சுமார் 2.50 இலட்சம் பேர் பயன்பெறுவார்கள். இதற்காக மாவட்ட அறிவொளி இயக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் முன்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து மனுக் கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 570 நபர்களைத் தேர்ந்தெடுத்து 24.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேலூரிலிருந்து அரசு செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நிதி உதவித் திட்டத்தின்கீழ், 77 பெண்களுக்குரூபாய் 3 இலட்சத்து 85ஆயிரம் நிதி உதவியும், கலப்புத் திருமண நிதியுதவி 14 பெண்களுக்கும், 29 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 7 விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண நிதி உதவியும், இருவருக்கு அனாதைத் திருமண நிதி உதவியும், 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், 11 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்குச் சவரப் பெட்டிகளும், 20 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், 10 நபர்களுக்குக் காதொலிக் கருவிகளும் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 20 நபர்களுக்கு ரூபாய் 45 இலட்சம் மூலதன மானியமாகவும், தாட்கோ தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், 12 பேர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் கடன் உதவியும், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 123 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ 19.48 இலட்சமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 28 நபர்களுக்கு ரூ.1.7 இலட்சம் கடனுதவியும், டிரைசம் பயிற்சி பெற்ற 26 நபர்களுக்குக் கடனுதவியும்,சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் 35 பேர்களுக்கு ரூ.2.96 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டது.

கள்ளச்சாராயம் காய்ச்சி பின்னர் மனம் திருந்திய 7 பேர்களுக்கு மறுவாழ்வுக் கடனுதவியும், கூட்டுறவு வங்கி மூலமாகச் சிறுதொழில் தொடங்க 12 நபர்களுக்கு ரூ.7.55 இலட்சம் கடனுதவியும், மாநில நிலவள வங்கி மூலமாக 4 பேர்களுக்கு ரூ.6 இலட்சம் கடனுதவியும், 10 நபர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளும், 15 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், நலிந்தோர் நல உதவி 10 நபர்களுக்கும், விபத்து நிவாரண நிதி 9 பேர்களுக்கும் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் கர்நாடகத் தமிழர் நிவாரண நிதியாக, 6 நபர்களுக்கு ரூ.1.4 இலட்சமும், இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒருவருக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டது.

மொத்தம் 570 நபர்களுக்கு ரூ.1,22,48,200 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து இருநூறு மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 386 நபர்கள் பெண்களாவர்.

இதுதவிர, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 11 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூபாய் 1 இலட்சத்து 92 ஆயிரத்து 500 நிதி உதவியும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆக மொத்தம் ரூபாய் 1,24,40,700 (ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து நாற்பது ஆயிரத்து எழுநூறு) மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று குழந்தைகளுக்கு, ராமச்சந்திரன், கண்ணம்மா, ராஜலட்சுமி என்று பெயர் சூட்டினார்.

கொடைக்கானலில் காட்டுத் தீயைத் தவிர்க்க

ரூ.32 இலட்சத்தில் திட்டம்

கொடைக்கானல் வனப் பகுதியில் ஆண்டுதோறும் காட்டுத் தீயினால் நூற்றுக் கணக்கான எக்டேர் காடுகள் எரிந்து நாசமாகின்றன இதனைத் தவிர்க்க 31.80 இலட்சம் ரூபாயில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் 40 சதவிகிதப் பகுதியை உள்ளடக்கியது தான் கொடைக்கானல் வனக் கோட்டமாகும். இக்கோட்டத்தின் பரப்பு 40 ஆயிரத்து 740 எக்டேர். இதில் சீகைத் தோட்டங்கள் 7 ஆயிரத்து 691 எக்டேரிலும், கற்பூரத் தோட்டங்கள் 5 ஆயிரத்து 998 எக்டேரிலும், தைல மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், பைன் மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், ஆல் நேப்பாள பைஸ் தோட்டங்கள் 50 எக்டேரிலும், இலவமரத் தோட்டங்கள் 153 எக்டேரிலும், தேக்கு மரத் தோட்டங்கள் 112 எக்டேரிலும் சோலா மரத் தோட்டங்கள் 181 எக்டேரிலும், வேறு பல்வகைத் தோட்டங்கள் 300 எக்டேரிலுமாக மொத்தம் 19 ஆயிரத்து 366 எக்டேரில் உள்ளன.

இவைதவிர 3 ஆயிரத்து 168 எக்டேரில் புல்வெளிகளும், இயற்கைக் காடுகள் 12 ஆயிரத்து 408 எக்டேரிலும், சோலை வனம் ஆயிரத்து 442 எக்டேரிலும், கற்பாறைகள் மற்றும் பாறை சார்ந்த நிலங்கள் 4 ஆயிரத்து 384 எக்டேரிலும், 21 ஆயிரத்து 404 எக்டேர் பரப்பளவு உள்ளது.

தொழில் நிறுவனங்களுக்காகக் கூழ் மரக் கட்டைகளும், சீகை மரப் பட்டைகள் 86 ஆயிரத்து 500 டன் இந்த ஆண்டு வழங்கப்பட உள்ளது. டேன் இந்தியா, சௌத் இந்தியா விஸ்கோஸ், சேஷசாயி பேப்பர் போர்டு, தமிழ்நாடு செய்தித் தாள் நிறுவனம் ஆகியவற்றிற்கு விற்கப் படுகிறது.

டன் 2 ஆயிரத்து 500 ரூபாய் விலையில் 10 ஆயிரத்து 200 டன் சீகைப் பட்டைகளும், சீகை மரக் கட்டைகள் டன் ஆயிரத்து 50 ரூபாய் விலையில் 49 ஆயிரத்து 300 டன்னும், கற்பூர மரக் கட்டைகள் டன் 769 ரூபாய் விலையில் 17 ஆயிரம் டன்னும், பைன்மரக் கட்டைகள் டன் 840 ரூபாய் விலையில் 10 ஆயிரம் டன்னும் சுமார் 10 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 500 எக்டேரில் சீகை மரத் தோட்டங்களும் மர உற்பத்தியும், 350 எக்டேரில் தைல மரத் தோட்டங்களும், பைன் மரத் தோட்டங்களும், கற்பூர மரத் தோட்டங்களும் வனத் துறையால் உற்பத்தி செய்யப்படுகின்றன. சோலை மற்றும் புல்வெளிப் பகுதிகளின் முக்கியத்துவத்தைக் கருதி புதிய பகுதியோ, புல்வெளிப்

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 538 மனுதாரர்களுக்குப் பல் வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (21.8.92).

பகுதியோ தோட்டங்கள் எழுப்பப் படுவதில்லை. புல்வெளிப் பகுதிகள் குறைந்தால் வன விலங்குகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவது டன் வனச் சூழலும் கெட்டுவிடும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் ஒவ்வொரு ஆண்டும் காட்டுத் தீ ஏற்படுகின்றது. இதனால் நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் அழிந்து விடுகின்றன. மரங்கள் எரிவதுடன் அபூர்வ வன விலங்குகளும் அழிந்து விடுகின்றன. கொடைக்கானல் மலைப் பகுதியில் புல்வெளிகள் அதிகமாக உள்ளதும் நெருப்புப் பரவக் காரணமாகிறது. மழை பெய் யாமல் வறட்சி ஏற்படும் காலங் களில் இந்தக் காட்டுத் தீ அதிக அளவில் ஏற்படுகிறது.

இம்மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் கவனமின்றி வீசி எறியும் சிகரெட் துண்டுகள் தீப்பிடிப்பதற்கு முக்கியக் காரணமாகும். கால்நடை மேய்ப்பவர்கள் தங்கள் கால்நடை களுக்குப் புதிதாகத் துளிர்ந்த பசுமைத் தீவனம் வேண்டுமென்பதற் காகக் காடுகளில் உள்ள காய்ந்து போன புல்பூண்டுகளில் தீ வைத்து விடுகின்றனர். காடுகளுக்கு அருகில் உள்ள தோட்டங்களைச் சேர்ந்த வர்கள் தங்கள் தோட்டத்துச் தேவை யற்ற கழிவுகளை எரிப்பதற்காக வைக்கும் நெருப்பும் காடுகளுக்குப் பரவிவிடுகிறது. காடுகளைப் பயிர் செய்யும் நிலங்களாக மாற்ற ஆக்கிர மிப்பாளர்கள் தீ வைத்து விடுகின் றனர். கடந்த கோடையின் போது இப்படி காடுகளுக்குத் தீ வைத்ததாக 45 பேரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காட்டுத் தீ ஏற்படாமல் தடுப்ப தற்காக ஒவ்வொரு ஆண்டும் தீத் தடுப்புக் கோடுகள் தேவையான இடங்களில் செதுக்கப்படுகின்றன தீத்தடுப்புக் காவலாளிகள் நியமிக் கப்படுகின்றனர். இவையல்லாது, சிறப்புத் தடுப்புக் குழுக்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன இருந்தபோதும் காட்டுத் தீ ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. இதற்காக ரூ.31.80 இலட்சத்தில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயார் செய்யப் பட்டு, 91 நவம்பரில் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

கெங்குவார்ப்பட்டி, பேரிஜம், வந்தரேவு, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் காடுகளில் தீப்பிடித் தால் உடனுக்குடன் கொடைக் கானல் அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்க வயல்லெஸ் கருவியுடன் வசதி செய்யப்படும். நவீன வாக னங்கள், தீயணைப்புக் கருவிகள் வசதியுடன் தயாராக இருக்கும் 30 பேர் கொண்ட குழு உடனடியாகத் தீப்பிடித்த இடத்திற்குச் சென்று, தீ மேலும் பரவிவிடாமல் தடுத்து அணைக்கும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் மூன்றரைச் சதவிகிதப் பரப் பில் மட்டுமே சோலை வனங்களும் 30.4 சதவிகிதப் பரப்பில் மட்டுமே இயற்கை வனங்களும் உள்ளன. சோலை வனங்களைப் பாதுகாப்ப தற்காக முள்கம்பி வேலிகளும், செயின் லிங் வேலிகளும் அமைக்கப் பட்டுள்ளன. இதை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் 20 எக்டேரில் சோலை வனம் வளர்க்கப்பட்டு வரு கிறது. இந்த ஆண்டு இது 30 எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகில் 3 இடங்களில்தான் சோலைவனங்கள் உள்ளன. அதில் ஒன்று கொடைக்கானல் மலைப் பகுதி என்பதால், அதைப் பாது காப்பதில் தீவிர கவனம் செலுத்தப் படுகிறது. இந்தச் சோலைவனப் பகுதி அதிகரிப்பதால் வன விலங்கு களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

ஏழை மற்றும் விதவைப் பெண்கள் 200 பேருக்குக் குறைந்த விலையில் மூஞ்சிக்கல், ஏரி ஆகிய இடங்களில் வனத் துறை மூலம் விறகு விற்பனை செய்யப்படுகிறது. காட்டுக்குள் சென்று விறகு வெட்டு வதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் பாம்பார்புரத் தில் வனத்துறை மூலம் கால்நடைப் பராமரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. வனப் பகுதிக்குள் செல்லும் கால்நடைகளுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்தக் கால்நடைகள் மூலம் வன விலங்கு களுக்கு நோய் ஏற்படுவது தவிர்க்கப் படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

M. 8576
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

16-9-1992 ரூ.1

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

DIPR/1642/MS/92

இந்த இதழில்...

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் உரை ... 2
தந்தை பெரியார் வாழ்க்கைக் குறிப்புகள் ... 6
குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா ... 9
பேரறிஞர் அண்ணா வாழ்க்கைக் குறிப்புகள் ... 13
ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி ... 17
தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக் கிராமிய நடனங்கள் ... 19
அரிய சிற்பம் கண்டுபிடிப்பு ... 21
தருமபுரி மாவட்டத்தில் அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம் ... 24
விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்கள் ... 27
சென்னை தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆண்டு விளையாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 33
ஆசிரியர் தினவிழா ... 35
முன்னாள் மேயர் என். சிவராஜ் ... 37
வாழ்த்துவோம்! வணங்குவோம்! ... 41
டாக்டர் இராதாகிருஷ்ணன் ... 43
கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள் ... 45

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆவணித் திங்கள் - 31
மலர்: 23 இதழ்: 6
16-9-1992

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்த வேண்டும்:

புதுடெல்லியில் நடைபெற்ற மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை

மக்கள் தொகை மற்றும் குடும்ப நலம் பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் துணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக முதல் அமைச்சரை இந்தத் துணைக் குழுவுக்கு நியமித்து இருப்பதை, குடும்ப நலத் திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்தி வரும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுக் கொள்கைகளுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

நமது எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்தான் மையமாக அமைய வேண்டும். கட்டுப்பாடு இல்லாத மக்கள் தொகைப் பெருக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, திருப்திகரமான பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித்தர நமது பொருளாதாரம் இடம் தரவில்லை. இப்போதுள்ள மக்கள் தொகை மட்டும் அல்ல, எதிர்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி மதிப்பீடு நமது பொருளாதார வளத்திற்குப் பெரும் சுமையாகவே இருக்கும். உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மூலம் அடையும் பொருளாதார வளர்ச்சியின் சிறு பலன்களைக் கூட, ஆண்டு தோறும் பெருகிக் கொண்டே போகும் மக்கள் தொகை வளர்ச்சி மூலம் நாம் இழக்க நேரிடுகிறது.

கடந்த 1976-ஆம் ஆண்டில் மத்திய அரசு தனது மக்கள் தொகைக் கொள்கையைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதன் கட்டாயத்தையும் அது வலியுறுத்தியது.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,000 பேருக்கு 35 ஆக இருந்த குழந்தை பிறப்பு விகிதத்தை 6-வது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் (1980-இல்) 25 ஆகக் குறைத்திடவும் மத்திய அரசு கொள்கை அளவில் திட்டம் வகுத்து இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட குழந்தைப் பிறப்பு விகிதம் 1990-இல் 1,000 பேருக்கு 29.1 ஆகவே இருந்துள்ளது.

எட்டாவது திட்டக்கால இறுதியில், அதாவது 1997-ஆம் ஆண்டில், பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 26.7 ஆக இருக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கு கூட

நான் சாதாரண ஆள்தான் என்றாலும்...

நான் சாதாரண ஆள்தான் என்றாலும், உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி; சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லாதவன்; சொந்தத்திற்கும் பணம் சேர்க்க வேண்டிய தேவையில்லாதவன்; சாதி உணர்ச்சி, சாதிப்பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டுமென்பவன்; 70 ஆண்டு உலக அனுபவம், 30 ஆண்டு வியாபார அனுபவம்.

- தந்தை பெரியார்.

நமக்கெல்லாம் பெரிய சவாலாகவே இருக்கிறது.

நமது மக்கள் தொகைக் கொள்கை, நம் குறிக்கோள்களை வெளிப்படுத்துவதாகவே மட்டுமே இருக்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன். இந்த இயக்கம் தேசிய கிராம அளவில் அனைத்துத் துறைகளில் உள்ளவரையும் சாதி மத பேதமற்று அனைத்து மக்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பெருகி வரும் மக்கள் பெருக்கத்தால் நிலைமை மோசமாகத்தான் உள்ளது என்றாலும் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். மக்கள் தொகைத் திட்டங்களை நாம் வெற்றிகரமாக அமல் நடத்தி வருவதே இதற்குக் காரணம்.

சில மாநிலங்கள் இதில் குறிப்படத்தகுந்த சாதனைகளை நிகழ்த்தி உள்ளன.

கேரளாவில் பிறப்பு விகிதத்தை 1990-இல் 1,000 பேருக்கு 19 ஆகவும் தமிழ்நாட்டில் 22.4 ஆகவும், ஆந்திராவில் 25.6 ஆகவும் குறைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பக் கட்டுப்பாட்டில் உள்ள பிரச்சினைகளைக் கருதும்போது இரு ஒரு சாதனையே ஆகும்.

உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 30 பேராக உள்ளது. இதில் உத்திரப்பிரதேசம் 1,000 பேருக்கு 35.7 பேர் என முதலிடத்தை வகிக்கிறது.

இதை நன்கு உணர்ந்த மைய அரசு 1,000 பேருக்கு 40 பேர் பிறப்பு விகிதம் உள்ள 90 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு பிறப்பு விகிதத்தைக் குறைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

எது எப்படி இருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப்போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

எங்கள் சொந்த மாநிலத்தில் இந்தப் பணி குறித்து ஆய்வு நடத்தினோம். தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் கடந்த 1990-இல் மிகக் குறைந்த அளவு பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 15.7 ஆக இருந்தது. கோவை மாவட்டத்தில் 17 ஆகவும், தர்மபுரி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பிறப்பு விகிதம் அதிக அளவிலான 1,000 பேருக்கு 23.6 ஆகவும் இருந்தது. தேசிய அளவைக் காட்டிலும் இது குறைவுதான்.

பெரியார் கோவை மாவட்டங்களில் வாழும் மக்களின் முன்னேறிய பொருளாதார நிலையும் பிறப்பு விகிதக் குறைவுக்குக் காரணமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் விவசாய மாவட்டங்களாக விளங்கும் தர்மபுரி, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களின் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அவை பின்தங்கிய மாவட்டங்களாகும். வளமான பொருளாதார நிலைமை, குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. அது சிறு குடும்பத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. குறுகிய காலக் கட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் பலன் தரும் என்றாலும் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் அணுகினால் நல்ல கல்வி, நல்ல பொருளாதார வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் வசதிகளைப் பெருக்குவது போன்றவைதான் சிறந்த பலன்களைத் தரும் என்பதையே இது காட்டுகிறது.

இது தொடர்பான வேறு சில விஷயங்களை இந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். 1992 மே மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசும் போது, குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றிக்குப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, கட்டுப்பாடுள்ள மூலதனப்

பொருட்களை வழங்குவது மறுக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட காட்கில் திட்டப்படி தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் பெறும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப் படையாகக் கொள்ள வேண்டும். நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதி ஒதுக்கீடு செய்யும்பொழு தும் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுபடுத்துவதில் சாதனைகள் புரிந்த மாநிலங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக 8-வது திட்ட மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பநலத்திற்கான செயற்குழு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, மாறாக சமுதாய பங்கேற் பினையே அது வலியுறுத்துகிறது. நாம் எதிர் பார்க்கும் பலன்களை அடைய தனிநபர் பங் கேற்பு மிகவும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்திற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகைகள் தவறாகப் பயன்படுத்தப்பட வில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், ஊக்கப் பரிசுகளுக்காகத் திட்டங்களை வகுத்துச் செயல்படலாம். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கே ஊக்கப் பரிசும், விருதும் போய்ச் சேரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும். சமூகம் முழுமைக்கும் பயன்படும் வகையில் இந்த ஊக்கப் பரிசு அமைய வேண்டும்.

குடும்ப நலத்திட்டத்தில் குறிப்பிட்ட இலக்கை எட்டும் மாநிலங்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தில் சமூகத்தின் அனைத் துத் தரப்புத் தலைவர்களையும் ஈடுபடுத்த வேண்டி யது அவசியம் ஆகும். குடும்ப நலத் திட்டத்துக்கு ஆதரவாக மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதற்காகக் கட்டாயக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்" என்று சொல்ல வில்லை.

ஒவ்வொரு தனி மனிதனையும் சந்தித்துச் சிறிய குடும்பத்தின் தன்மைகளை எடுத்துக்கூறி அதனால் வீட்டுக்கும், நாட்டுக்கும் என்ன பயன் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காக வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும்.

முழு எழுத்தறிவு இயக்கத்தின் வெற்றியை நாம் முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும். முழு எழுத்தறிவு இயக்கத்தில் சமுதாயம் மொத்தமும், ஈடுபடுத்தப்படுவதைப்போல, அரசு மற்றும் தனி யார் துறையில் உள்ள நிபுணர்களின் ஒத்துழைப் புடன் நாடு முழுவதும் குடும்ப நலத்திட்டத்துக் கான இயக்கம் தொடங்கப்பட வேண்டும். அதில் தனி நபர்களும் சமுதாய மொத்தமும் ஈடுபடுத்தப் பட வேண்டும். இதுபோன்ற இயக்கம்தான் மக்கள் பெருக்க ஆபத்தை வெற்றிகரமாகச் சமாளிக்க உதவும்.

அறிஞர் அண்ணா ஒரு மகத்தான சக்தி!

"அண்ணா"

இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது.

இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக உரு வாகியிருக்கிறது.

இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண் மையான ஜனநாயக அரசியல் அறிஞர், அண்ணா அவர்களே.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

இது தொடர்பாக நான் தமிழ்நாட்டில் முழு நல்வாழ்வுக்கான செயல் திட்டத்தின் வெற்றிக் கதையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 6 மாதங்களில் 10 ஆயிரம் நல வாழ்வு முகாம்களை ஒவ்வொரு வாரமும் கிராம அளவில் நடத்தினோம். அப்போது டெட்டனஸ் தடுப்பு ஊசி போடுவது, முத்தடுப்பு ஊசி போடுவது, வைட்டமின் மாத்திரைகள் வழங்குவது போன்ற சேவைகள் இந்த முகாம் மூலம் வழங்கப்பட்டன. இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களிடம் சிறு குடும்பங்களின் அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இந்த முகாம்களில் கலந்து கொள்வதற்கு மக்களிடையே பெரும் ஆர்வம் காணப்பட்டது. இந்த முகாம்களின் மூலம் சமுதாயத்துக்கு மிகுந்த பயன் கிடைத்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ், மாவட்ட நிர்வாகம் குடும்பநலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

5 ஆயிரம் பேருக்கு ஒரு சமூகச் சேவகர் அல்லது செவிலியர் உள்ளனர்.

பலநோக்க சமூகச் சேவகர் பெரும் பங்காற்ற வேண்டி இருக்கும். சமூகச் சேவகர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்

'அறிஞர்' பட்டம் பெற்ற வரலாறு:

1945-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திரு. செய்குத்தம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும்போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடைய தாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்குத்தம்பி பாவலர் மிகவும் வியப்படைந்தார்.

கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்குத் தம்பிப்பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குத்தம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந் தார். அண்ணா அவர்களுக்கு 'அறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி மிகழ்ந்தார். அதன்பிறகு அண்ணாவை எல்லாரும் 'அறிஞர் அண்ணா' என்று அழைக்கலாயினர்.

பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு 'பேரறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். 'அறிஞர் அண்ணா' அவர்கள் 'பேரறிஞர் அண்ணா' என்று அழைக்கப்பட்டார்.

டும். அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

சமூகச் சேவகர்கள் மக்களின் சாதாரண நோய்களுக்கு மருந்துகளை இலவசமாக வழங்கப் போதுமான நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண் டும். இதன் பலனாகக் குடும்ப நலத் திட்டத்தில் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தலாம்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் ஒரு முழுமை யான குடும்ப நலத் திட்டமாக (Total Family Welfare Programme) விளங்க வேண்டும். அது பல்வேறு உடல் நல அம்சங்களைப் பற்றிய கல்வி யைப் போதிக்க வேண்டும். நல்ல பொருளாதார வளர்ச்சிக்கும் குடும்ப நலத்திற்கும் உள்ள தொடர் பினை அனைத்து மக்களும் அறியும் வகையில் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டு வசதியான வாழ்க்கை வாழ வழி வகுக்கும்படி இந்தக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து மட்டங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அளவில் எல்லா அரசுத்துறை நிறு வனங்களையும் சம்பந்தப்படுத்தி மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதன் தலைவராக மாவட்ட ஆட்சித்தலைவர் இருக்க வேண்டும்.

குடும்ப நலத்திட்டம் பற்றித் தேசிய அளவில் அனைத்து மட்டத் தலைவர்களையும் ஈடுபடுத்தி விவாதம் நடத்தப்பட வேண்டும். அதில் மக்கள் நல்வாழ்வு அலுவலர்கள் தங்களுடைய பணியைச் சிறப்பாக ஆற்றிடப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

என் ஆலோசனைகள் மீது இந்த துணைக்குழு தக்க பரிசீலனை நடத்தும் என்று நான் நம்பு கிறேன்.

—புதுடெல்லியில் 27.8.92 அன்று நடைபெற்ற, மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

பெரியார் புரட்சி மொழிகள்

- **★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.**
- **★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.**
- **★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.**
- **★ விதியை நம்பி மதியை இழக்காதே.**
- **★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.**
- **★ மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.**
- **★ பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.**
- **★ பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.**
- **★ தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய' வேண்டும்.**

தந்தை பெரியார் வாழ்க்கைக்குறிப்பு



1879 - பெரியார் மாவட்டம், ஈரோட்டில் *17.9.1879* அன்று, வெங்கட்ட நாயக்கர்-சின்னத் தாயம்மை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

1890 - பள்ளிப் படிப்பை விட்டு நிறுத்தப் பட்டு, மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

1898 - பத்தொன்பதாம் வயதில் பதின்மூன்று வயது நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார். இருபத்தொன்றாம் வயதில் ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். அக்குழந்தை ஐந்து மாதத்தில் இறந்தது. பின்னர் குழந்தை இல்லை.

1904 - இருபத்தைந்தாம் வயதில் தந்தையாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு துறவு பூண்டு, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்று பின் தந்தையாரால் அழைத்து வரப்பட்டார். வெங்கட்ட நாயக்கர் மண்டி, ஈவெ. இராமசாமி நாயக்கர் மண்டி என்று ஆயிற்று.

1911 - தந்தையார் மறைவு.

1914-1918 - காங்கிரஸ் மாநாடுகளை முன்நின்று நடத்தினார். ஈரோடு நகர் மன்றத்தலைவர் பதவியில் பல ஆண்டுகள் இருந்தார். சுமார் 28 கௌரவப் பதவிகள் வகித்தார்.

1919 - நகர் மன்றத் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்தார்.

1920 - கௌரவப் பதவிகளை ராஜினாமா செய்தார். காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

காந்தியடிகளின் சீடரானதும், ஆடம்பர ஆடையை விட்டுக் கதர் உடுத்தினார். எண்பது வயதுத் தாயார், மனைவி, மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களையும் கதர் உடுக்கச் செய்தார். திருச்செங்கோட்டில் கதர் ஆசிரமத்தைத் திறந்தார்.

மதுதரும் மரங்களை வெட்ட வேண்டும் என்று காந்தியடிகள் சொன்னபோது, சேலம் தாதம் பட்டியில் தன் தோட்டத்திலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

1921 - தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக இருந்தார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை நடத்திச் சிறைவாசம் ஏற்றார்.

1923 - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். ஈரோட்டில் பெரியார் இல்லம் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவல்கமாக மாறியது.

1924 - இந்தியாவிலேயே முதன் முதலாகக் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோயில்முன் தீண்டாமை ஒழிப்புச் சத்யாக்கிரகம் நடத்தி இருமுறை சிறைப்பட்டார். 'வைக்கம் வீரர்' என்று போற்றப்பட்டார்.

1925 - தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றினார். 'குடியரசு' வார ஏட்டை ஈரோட்டில் தொடங்கி சுயமரியாதை உணர்வுகளைப் பரப்பினார்.

காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் தனது வகுப்புரிமைத் தீர்மானம் ஏற்கப்படாததால், காங்கிரஸிலிருந்து வெளியேறினார்.

1926 - சமுதாயத்தில் வர்ணாச்சிரமத்தை விரட்டுவதற்காகச் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார்.

1927 - ''வருணாச்சிரமம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும்'' என்று காந்தியடிகளிடம் வாதாடினார்.

1928 - 'ரிவோல்ட்' ஆங்கில ஏடு தொடங்கினார்.

1929 - முதல் மாநிலச் சுயமரியாதை மாநாட்டைச் செங்கல்பட்டில் கூட்டினார். கல்லூரி மாணவராக இருந்த பேரறிஞர் அண்ணா இதில் பார்வையாளராகக் கலந்து கொண்டார். டிசம்பரில் மலேயா நாட்டில் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார்.

மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றனர்.

1930 - ஈரோட்டில் மாநில இரண்டாவது சுயமரியாதை மாநாடு கூட்டினார்.

1931 - விருதுநகரில் மாநில மூன்றாவது சுயமரியாதை மாநாடு கூட்டினார்.

1932 - இலங்கை, எகிப்து, ரஷியா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுக்கல், இங்கிலாந்து முதலிய நாடுகளில் 11 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

1933 - 'புரட்சி' வார ஏட்டின் மூலம் சம தர்மப் பிரச்சாரம் செய்தார். மனைவி நாகம்மையார் இயற்கை எய்தினார்.

1934 - 'பகுத்தறிவு' வார ஏட்டைத் தொடங்கினார். 'பகுத்தறிவு' நாளிதழையும் சிறிது காலம் வெளியிட்டார்.

1935 - நீதிக் கட்சிக்கு ஆதரவு அளித்தார். 'பகுத்தறிவு' மாத ஏடு துவக்கினார். திருப்பூர் மாநாடு ஒன்றில் பேரறிஞர் அண்ணாவைக் கண்டு, அவரது சுயமரியாதை உணர்வைப் பாராட்டினார்-

1936 - தாயார் மறைவு.

1937 - கட்டாய இந்தியை எதிர்த்துக் காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தினார்.

1938 - செப்டம்பர் 26 - கட்டாய இந்தியை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சி நடத்திச் சிறைவாசம் ஏற்றார். சிறையிலிருக்கும்போதே நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுயமரியாதை

இயக்கம் நீதிக்கட்சியுடன் இணைந்தது.

1938 - சென்னையில் டாக்டர் தருமாம்பாள் தலைமையில் கூடிய பெண்கள் மாநாட்டில் ''பெரியார்'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1940 - பம்பாயில் டாக்டர் அம்பேத்கரை பேரறிஞர் அண்ணாவுடன் சந்தித்தார்.

1944 - ஆகஸ்டு 19 - சேலம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவின் தீர்மானத்தால் நீதிக் கட்சி, திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது.

1949 - ஜூலை 9 - மணியம்மையுடன் திருமணம். பேரறிஞர் அண்ணாவும், அவரது தோழர்களும் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறினர்.

1950 - செப்டம்பர் 18 - பெரியாரின் பொன் மொழிகள் நூலுக்காக ஆறுமாதம் சிறைத்தண்டனை விதிக்கப் பெற்று, பத்து நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

1951 - வகுப்புரிமைக்காகக் கிளர்ச்சி நடத்தி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்தார்.

1954 - பெருந்தலைவர் காமராசர் ஆட்சியை ஆதரித்தார்.

1967 - மார்ச் - பேரறிஞர் அண்ணா, தமிழக முதல்வரானதும், தந்தை பெரியாரைநேரில் சந்தித்து ஆசி பெற்றார். அதைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''நான் எவ்வளவோ அவர்களைத் திட்டினேன். ஒரு வார்த்தை அவர்கள் திருப்பிச் சொல்லவில்லை. அதிகாரம் கிடைத்தபோது, தந்தையிடம் மகன் வருவதுபோல, எந்த விதமான சங்கோஜமும் இல்லாமல் வந்தார்கள். எனக்குத்தான் அவர்கள் முகத்தைப் பார்க்கவே வெட்கமாய் இருந்தது' என்று குறிப்பிட்டார் தந்தை பெரியார்.

1973 - டிசம்பர் 19 அன்று சென்னை தியாகராய நகரில் ஆற்றிய சொற்பொழிவு அவரது இறுதிச் சொற்பொழிவு, அதுவே அவரது மரண சாசனம்.

டிசம்பர் 24 காலை 7.22 மணிக்குத்தந்தை பெரியார் தம் 95-ஆம் வயதில் மறைந்தார். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

டிசம்பர் 25 - அரசு மரியாதையுடன் அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, தேக்கு மரப் பெட்டியில் வைக்கப்பட்டு மாலை 4.57 மணிக்கு, சென்னை பெரியார் திடலில் அடக்கம் செய்யப்பட்டது.

நினைவில் பெரியார்

1974 - ஆம் ஆண்டில் தமிழக அரசு வாங்கிய கப்பலுக்கு 'எம்.வி. தமிழ்ப் பெரியார்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1975 - ஈரோட்டில் பெரியார் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, பெரியார்-அண்ணா நினைவகமாக 17.9.1975 அன்று திறக்கப்பட்டது.

1978 - பெரியார் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

செப்டம்பர் 17 அன்று மைய அரசு ஈரோட்டில் பெரியார் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு அமலாக்குவது பற்றிய அறிவிப்பை 18.9.1978 அன்று ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

1979 - செப்டம்பர் 24 அன்று ஈரோட்டைத் தலைமை இடமாகக் கொண்ட பெரியார் மாவட்டத்தை அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

பெரியார் புரட்சி மொழிகள் அடங்கிய நினைவுத் தூண்கள் மாவட்டத் தலைமை இடங்களில் நிறுவப்பட்டன. ''பெரியார் புரட்சி மொழிகள்'' நூல் வெளியிடப்பட்டது. ''பெரியார் வாழ்க்கை வரலாறு'' ''பெரியார் வாழ்க்கைச் சித்திர நூல்'' வெளியிடவும், வைக்கத்தில் நினைவகம் எழுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1980 - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பெரியாரின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

''குழந்தைகள் திரைப்பட விழாவை ஆண்டுதோறும் அரசே நடத்தும்!''

குழந்தைகள் திரைப்பட விழாவைத் துவக்கிவைத்து மாண்புமிகு முதல்வர் உரை

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில், குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா 10.9.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுப் பெருமைப் படுத்திய இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர், திரு.க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார். செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கத்தில் வரவேற்புரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில் சிறுமி உஷா வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் விழாவின் தலைமை யேற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம் - வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி ஆகியோருக்கும் சிறுவர் சிறுமிகளே பூச்செண்டு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

விளக்கேற்றித் துவக்கிவைத்தல்:

தனக்கு மலர்ச்செண்டு வழங்கிய சிறுமிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பு முத்தமிட்டார். போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்கு 'மிக்கி மவுஸ்' சின்னமுடைய நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அளித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குழந்தைகள் திரைப்பட

விழாவைக் குத்துவிளக்கேற்றித் துவக்கிவைத்தார்.

வாழ்த்துரைகள் :

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

முதல்வரின் விழாப் பேருரை :

மாணவ மாணவிகளின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''இன்று உங்களோடு கலந்து கொண்டு இருப்பதிலும் குழந்தைகள் திரைப்பட விழாவினைத் துவக்கி வைப்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாவது அனைத்து நாட்டுக் குழந்தைகள் திரைப்பட விழாப் போட்டியை 1981-ஆம் ஆண்டில் நடத்தும் விருந்துபசரிப்பாளராகச் சென்னை மாநகரம் இருந்தது என்பதையும், அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவ்விழா அமைப்புக் குழுவின் தலைவராக இருந்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, தற்போது தமிழ்நாட்டில் குழந்தைகள் திரைப்பட விழா இன்று மீண்டும் நடைபெறுகிறது.

இந்தக் குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் மட்டுமல்ல மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற இதர நகரங்களிலும் இனி நடைபெறும்.

குழந்தைகள் திரைப்பட விழாவை நடத்துவதற்கு ஏதுவாக, குழந்தைகள் திரைப்படச் சங்கம் மூலம் தயாரிக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட படத்தின் சிறப்புக் காட்சி நடத்தப்படும்போது, கேளிக்கை வரிக்கு விலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ளோம்.

குழந்தைகளுக்கான திரைப்படத்தைக் கலைவாணர் அரங்கில் திரையிடும் பழக்கத்தையும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளோம்.

சிறப்புக் காட்சிகள் :

கலைவாணர் அரங்கத்தில் குழந்தைகள் திரைப்படம் காட்டுவதுடன் கூட, சென்னை மாநகரில் உள்ள இதர ஆறு திரையரங்க உரிமையாளர்களும் குழந்தைகளுக்குச் சிறப்புக் காட்சி நடத்த முன் வந்திருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பை நான் பாராட்டுகிறேன். அந்தத் திரை அரங்குகளின் உரிமையாளர்களைப் பின்பற்றி மேலும் பல உரிமையாளர்கள் குழந்தைகள் திரைப் படத்தைத் திரையிட முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த விழாவில் பெரும்பாலும் தமிழ், ஆங்கிலத் திரைப்படங்களே காட்டப்படும் என்று கேள்விப்பட்டேன். இனி வரும் ஆண்டுகளில் இந்தியாவின் இதர மண்டலங்களில் இருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் பரிசு பெற்ற திரைப்படங்களை வரவழைத்துத் திரையிட விரும்புகிறோம். இதனால், சக்திவாய்ந்த சாதனமாக விளங்கும் சினிமா மூலமாக, சிறந்த கலாச்சாரத் தொடர்பு ஏற்படும் வாய்ப்பு நமது குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

திரைப்படச் சங்கம் :

நமது முதல் பிரதமரும், குழந்தைகளின் மேல் அளவற்ற பாசம் கொண்டவருமான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தைகளுக்கான திரைப்படத்தை ஊக்குவிப்பதின் அவசியத்தை உணர்ந்தார். இதன் விளைவாக 1955-ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான திரைப் படச் சங்கம் நிறுவப்பட்டது.

ஆயினும், பல்வேறு காரணங்களால் குழந்தைகளுக்கான திரைப்பட இயக்க வளர்ச்சியில் மெதுவான முன்னேற்றமே ஏற்பட்டுள்ளதை உணர்கிறேன்.

குழந்தைகளுக்கான திரைப்படச் சங்கம் சில நல்ல திரைப்படங்களைத் தயாரித்து உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அவ்வாறு தயாரிக்கப்பட்ட திரைப் படங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இவ்வகையில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டது இந்திய நாடு. நமது நாட்டின் கல்வித் தரம் மிகவும் குறைவு. உலகிலேயே மிக மிகக் குறைந்ததும் ஆகும். ஆயினும், புத்தகங்களை வெளியிடுவதில் முன்னணியில் உள்ள உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

உலகில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் ஒன்றான இந்தியாவில்தான் நாம், இன்றும் உள்ளோம். நம்முடைய வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைவு. ஆனால், உலகில் உள்ள திரைப் படம் தயாரிக்கும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தியாவில் உள்ள எந்தக் குடும்பமும் அல்லது எந்தத் தம்பதியும் குழந்தை இல்லாமல் இருக்க விரும்புவதில்லை.

புத்தக வெளியீட்டிலும், குழந்தைகள் புத்தகம் உற்பத்தியிலும் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குழந்தைகளுக்கான திரைப்படம் தயாரிப்பதில் வருந்தத் தக்க வகையில் அடிமட்டத்தில் உள்ளோம். இந்த நிலையை மாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது.

குழந்தைகளுக்கான திரைப்படத் தை ஏராளமான எண்ணிக்கையில் உற்பத்தி செய்யத் துவங்குவது சிறந்ததாகும். மக்களிடையே தகவல், கல்வி ஆகியவற்றைப் பரப்பும் சக்திவாய்ந்த சாதனமாகவும், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் சாதனமாகவும் சினிமா உள்ளது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

சமுதாயத்தின் கலாச்சாரம், வாழ்க்கை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பிரசித்திபெற்ற கலையாகவும் சினிமா ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆகவே, நவீன சமுதாயத்தில் குழந்தைகள் திரைப்படம் முக்கிய அங்கம் வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

வண்டலூர் பூங்கா

சென்னை வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயிரியல் பூங்காவின் முகப்புத் தோற்றம் மாற்றியமைக்கப்படுவதுடன் வேறு பல வசதிகளும் செய்யப்படும்.

குழந்தைகள் திரைப்படம்

குழந்தைகள் திரைப்படம் குழந்தைகளுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல் வயது வந்தவர்களுக்கும் முக்கியமானதாகும். ஏனெனில் குழந்தைகள் படம் மூலமாகவே, குழந்தைகளைப் பற்றி வயது வந்தவர்கள் நன்கு தெரிந்து கொள்கிறார்கள். அத்துடன் குழந்தைகளுடன் மிகவும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய தேவை, விருப்பம், மனப்பாங்கு, உணர்ச்சிவயப்படுதல் ஆகியவற்றை நன்கு தெரிந்து கொள்ளவும் குழந்தைகள் திரைப்படம் உதவுகிறது.

இந்தியச் சமுதாயம் விரைவாக மாறி வருகிறது. பழமைக் கருத்துக்கள் உடைந்து நொறுங்குகின்றன. புதிய எண்ணங்கள் இன்னும் எழவில்லை. கூட்டுக் குடும்பங்கள் பிரிவது, நமது நாட்டில் ஏற்பட்டு வரும் மாபெரும் சமுதாய மாற்றமாகும்.

இந்தச் சூழ்நிலையில், குழந்தைகளை நன்கு பராமரித்து அவர்கள் நலமாகவும், அறிவுமிகுந்தவர்களாகவும், நாட்டின் நல்ல குடிமகனாகவும் ஆக்குவது மிகவும் முக்கியமானதாகும். தகவல் தொடர்புச் சாதனம் ஒவ்வொன்றையும், குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். இவ்வகையில் சினிமா இத்தேவையைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. இந்த ஆதாரத்தை நாம் போதிய அளவில் உபயோகித்துக் குழந்தைகளுக்குச் சரியான கல்வியையும், முழுமையான சரியான கேளிக்கையையும் அளிக்காதது துரதிர்ஷ்டமேயாகும்.

நாம் அனைவரும் குழந்தையாக இருந்துள்ளோம். நம்மில் பலர், நமது குழந்தைப் பருவ நினைவுகளைப் பெரிதும் விரும்புகிறோம்.

தற்போது நாம் உள்ளதை விட, குழந்தைப் பருவத்தில் குழந்தைகளைப் போல் நாம் வெகுவேகமாகக் கற்றோம்.

மேதை பெர்ட்ராண்ட் ரஸல் - குழந்தைகளின் பேரார்வம் அவை வளர வளரக் குறைந்து விடுகிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார். இது அறிவியல் உண்மையாகும். ஆகவே, எல்லா வகையான கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் குழந்தை இருக்கும்போதே, அக் குழந்தை சிறந்த முறையில் கற்க நாம் ஆவன செய்ய வேண்டும். இதைக் குழந்தைகள் திரைப்பட இயக்கம் செய்ய முடியும்.

தமிழ்நாடு அரசின் செய்தி-சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்துள்ள குழந்தைகளுக்கான திரைப்பட விழாவைத் துவக்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த இயக்கத்திற்கு எங்களால் இயன்ற எல்லா வகையான ஊக்குவிப்பையும் அளிக்க நாங்கள் விரும்புகிறோம். இதன் ஆரம்பமாகக் குழந்தைகளுக்கான திரைப்பட விழாவைத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நடத்தும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் அனைவரும் இந்த விழாவில் பங்கு கொண்டு, இந்த விழாவை மகிழ்ச்சியானதாகவும், நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகவும் ஆக்குவீர்கள் என்று நம்புகிறேன்.''

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.

நன்றியுரை:

விழா முடிவில் - தென் பிராந்தியக் குழந்தைகள் திரைப்படத்துறை மேலாளர் திரு. சுபாஷ் பிலே நன்றி உரையாற்றினார்.

குழந்தைகள் சார்பில், செல்வி பிருந்தா நன்றி கூறினார்.

விழா முடிவில் குழந்தைகளுக்கான திரைப்படம் ஒன்றும் கலைவாணர் அரங்கில் திரையிடப்பட்டது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர்

'பெரியார்' ஒரு தனி மனிதரின் பெயரல்ல. ஒரு நாட்டின் நூற்றாண்டு வரலாறு. மனித சமுதாயத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

உலகில் தோன்றி மறையும் கோடானு கோடி மனிதர்களில் மிகச் சிலரே இப்படி வரலாறாக, வாழ்க்கையின் தத்துவமாக வாழ்ந்து மறைகின்றனர்.

இத்தகைய ஒரு சிறப்பு. பெறற்கரிய பேறு, தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது. இந்த மண்ணிலேதான் பெரியார் பிறந்தார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று முழங்கினார் பாரதியார். அந்தத் தமிழகம்தான், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரை, விடுதலை வீரரை, பகுத்தறிவுப் பகலவனை, புத்துலகச் சிற்பியை - தந்தை பெரியாரை - உலகிற்கு வழங்கியது.

மென்மையாக உடலைத் தீண்டி, மெய்சிலிர்க்க வைக்கும் தென்றல் காற்றல்ல பெரியார்; சுழன்றடிக்கும் சூறாவளி.

சலசலவென்று ஒலி எழுப்பி, கண்களுக்கு விருந்தாய், கானிலே வளைந்தோடும் சிற்றாறல்ல பெரியார்; பொங்கிப் பாயும் கங்கை நதி.

காண்போர் மனம் கவரும் வெள்ளிப் பனி மலையல்ல பெரியார்; வெடித்துச் சிதறும் எரிமலை.

ஆம்! அவர் சித்தார்த்தனாகத்தான் பிறந்தார். ஆனால், புத்தராக மாறவில்லை!

போர்க்கோலம் பூண்டார்;

சமூக அநீதிகளை, அக்கிரமங்களை அழிக்கப் புறப்பட்டார்.

கொடுமைகளைக் கண்டு அஞ்சுவது கோழைத்தனம், ஒதுங்குவது ஈனத்தனம் என்று வீரமுழக்கமிட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கால வீர வரலாறு படைத்தார்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்.

பேரறிஞர் அண்ணா வாழ்க்கைக் குறிப்பு

1909-செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரத்தில், எளிய நெசவாளர் குடும்பத்தில், நடராசன், பங்காரு அம்மாள் தம்பதியருக்கு 15-9-1909 அன்று பிறந்தார். இவரது வளர்ப்புத் தாய் சிற்றன்னை இராசாமணி அம்மையார்.

1914-காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார்.

1927-காஞ்சிபுரம் நகராட்சியில் சில திங்கள் பணிபுரிந்தார்.

1928-சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்.

1929-பிப்ரவரி 17,18 தேதிகளில் செங்கல்பட்டு நகரில் நடந்த முதல் மாநில சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

1930-பச்சையப்பன் கல்லூரி முதல்வர் உதவியால், சம்பளச் சலுகை பெற்று, பி.ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்து படித்தார்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே, பெற்றோர் விருப்பப்படி, 1930-இல் காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும், இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது.

1932-நீதிக்கட்சி அமைச்சரவையில் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த பொப்பிலி அரசர் தொடர்பு பேரறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்டது.

1935-திருப்பூரில் நடந்த செங்குந்த வாலிபர் மாநாட்டில் முதன்முதலாக தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடினார். அன்று முதல் தந்தை பெரியாரைத் தமது ஒரே தலைவராக ஏற்றார்

பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருள் வசதி இன்மையால் மூன்று திங்களுக்கு மேல் சட்டப் படிப்பைத் தொடர முடியவில்லை.

சென்னையில் உள்ள தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சில திங்கள் பணியாற்றினார்.

நீதிக்கட்சித் தலைவர் பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து தொடங்கிய 'பால பாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராக இருந்து தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார்.

1936-சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்து நாயக்கன்பேட்டையில் நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

1938-'விடுதலை', 'குடியரசு' ஏடுகளின் துணை

ஆசிரியர் ஆனார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக இருந்தார்.

செப்டம்பர் 26-இல் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று நான்கு மாதம் சிறைவாசம் ஏற்றார்.

1939-நீதிக்கட்சியின்பொதுச்செயலாளர் ஆனார்.

1940-பம்பாயில், தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் சந்திப்பின்போது, மொழிபெயர்ப் பாளராகக் கலந்து கொண்டார்.

1942-மார்ச் 7 - 'திராவிட நாடு' வார ஏட்டின் ஆசிரியர் ஆனார்.

1944-ஆகஸ்டு 19 - சேலம் நீதிக்கட்சி மாநாட் டில், பேரறிஞர் அண்ணா தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது.

1946-ஜூலை 29 - நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தர் பாரதி தாசனுக்கு, பேரறிஞர் அண்ணா பொற்கிழி அளித்தார்.

1947-ஆகஸ்டு 15 நாடு விடுதலை பெற்ற திரு நாளைப் பெரியார் துக்க நாள் எனல் பொருந் தாது என்று திராவிடநாடு ஏட்டில் பேரறிஞர் அண்ணா எழுதினார்.

1948-ஜூலை 17 - இந்தி எதிர்ப்புப் போராட்டத் தில் சிறைவாசம் ஏற்றார்.

1949-ஜூலை 9 - தந்தை பெரியார் - மணியம்மை திருமணம் நடந்தது.

பேரறிஞர் அண்ணாவும் மற்றும் பலரும் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறி 17.9.1949-இல் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர்.

தி.மு.க.-வின் முதல் பொதுச் செயலாளர் ஆக பேரறிஞர் அண்ணா ஆனார்.

1950-செப்டம்பர் 18 - ஆரியமாயை என்னும் நூல் எழுதியதற்காக ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

1952-ஆகஸ்டு - இந்தி எதிர்ப்பு அறப்போர் - இந்தி எழுத்துகளை அழித்தார்.

1953-ஜூன் 15 - தி.மு.க.-வின் அதிகார பூர்வ நாளேடான ''நம்நாடு'' ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ஜூலை 15 - மும்முனைப் போராட்டத்தில் முன்னதாகக் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

1956-மே 17-20 - திருச்சியில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பொதுத் தேர்தலில் பங்கேற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தி, தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிடு



பெரியார் நம்மைப் பிரியார்!

கவிஞர் சிங்காரவேலன்

விடியாத தமிழர்க்கு விடியல் தந்தே
விரிகதிராய் ஈரோட்டில் எழுந்த சிங்கம்!
படியாமை அறியாமை நோயில் வீழ்ந்தோர்
பகுத்தறிவாம் ஒளிபெறவே செய்த தங்கம்!
தடியூன்றி வாழ்ந்திட்ட நாளில் கூட
தமிழ்வளர்த்து இனம்காத்த உழைப்பின் குன்றம்!
இடிபோன்ற முழக்கத்தால் எழுச்சிப் பேச்சால்
இருட்சூழ்ச்சி தனைவென்ற இரும்பு நெஞ்சம்!

வதற்குப் பொதுமக்கள். அனுமதியைப் பெற்றார்.

1957-மார்ச் - காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூன் - 'ஹோம்லேண்ட்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

1958-ஜனவரி 3 - சென்னை வந்த பிரதமர் பண்டித நேருவுக்கு ஜனவரி 6-ஆம் தேதி கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டதால் கைது செய்யப் பட்டுச் சிறைவாசம் ஏற்றார். 5 நாள் கழித்து விடுதலை ஆனார். ஏப்ரல் 23, தடையை மீறிய குற்றத்திற்காக மீண்டும் சிறைவாசம் ஏற்றார்.

1959-சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது.

1962-பிப்ரவரி - காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

ஜூலை-19 - விலைவாசி உயர்வு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கைதாகி வேலூர் சிறை யில் பத்து வாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்தியா மீது சீனா போர் தொடுத்தது. அவர் விடுதலை பெற்ற உடன் நாட்டின் யுத்த முயற்சிகளுக்குப் பல உதவிகள் செய்தார்.

1963-ஜனவரி - கட்சியின் கோரிக்கை பிரிவினை அல்ல என்பதற்கேற்ற மாற்றம் செய்து கட்சியைக் காப்பாற்றினார். புதிதாக, ''காஞ்சி'' என்னும் வார ஏட்டினைத் தொடங்கினார்.

நவம்பர்-17 - கட்டாய இந்தி 17-வது மொழிப் பிரிவுச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் நவம்பர் 16 அன்றே கைதாகி ஆறு மாதம் கடுங் காவல் தண்டனை பெற்றார்.

1965-ஜனவரி 26 - முதல், இந்தியை இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க நாடாளுமன்ற ஆட்சி மன்றக்குழு சிபாரிசு செய்ததை எதிர்த்து, 'ஜனவரி 26 துக்க நாள்' என, தி.மு.க. அறி வித்தது தொடர்பாக அண்ணா சிறைவாசம் ஏற்றார்.

ஜூலை - சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடு களுக்குச் சென்றார்.

1967-பிப்ரவரி - பொதுத்தேர்தலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். பொதுத்தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களில் வெற்றி.

மார்ச் - நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 6.3.1967 அன்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஏப்ரல்-26 - தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.

மே-15 - ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ஜூலை-18 - சென்னை மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என்று அழைக்க அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் செய்திடும் பெயர் மாற்றத் தீர் மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒருமன தாக நிறைவேற்றச் செய்தார்.

ஜூலை-23 - சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற மைய அரசை வற்புறுத்தி, தமிழ் நாடெங்கும் 'சேலம் எழுச்சி நாள்' கொண்டாடி. னார்.

ஆகஸ்ட்-16 - 'சீரணி' கண்டார்.

செப்டம்பர்-19 - சென்னையில் கூவம் சீர மைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

1968 - ஜனவரி 1 - உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணா வின் உருவச்சிலை சென்னை-அண்ணா சாலை யின் மையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 2- தமிழ் வளர்த்த சான்றோருக்கும், கற்புக்கரசி கண்ணகிக்கும் சென்னைக் கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைத்துப் போற்றினார். ஜனவரி 3 - உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத் தைச் சென்னை மாநகரில் நடத்தினார். திருக் குறள் ஆராய்ச்சிக்கு ரூ.9 இலட்சம் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜனவரி-23 - தாய்மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம் ஆகிய இரு மொழித் தீர்மானத் தைச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றச் செய்தார்.

பெரியார் ஒருவர்தான்!

'பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்ட் தல்ல. அது 35 ஆண்டுகளுக்கு மேற் பட்டது. 'வைக்கம் வீரர்' என்பதை இந்த அடியேன் கைப்பேனாதான் சூட்டியது.

திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால், அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று!

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் இராம சாமியாகத்தானிருக்க முடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர்; பெரியார் ஒருவர்தான்!

- தமிழ்த் தென்றல் திரு.வி.க.

ஏப்ரல், மே - அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் சென்று வந்தார். அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகத்தில் சப்பெல்லோஷிப் விருது பெற்றார். வாடிகன் நகரில் போப்பாண்டவரைச் சந்தித்தார்.

செப்டம்பர்-8 - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங் கப்பட்டது.

செப்டம்பர்-16 - அமெரிக்காவில் உலகப்புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவமனையான மெமோரியல் மருத்துவமனையில் டாக்டர் மில்லரால் அண்ணா வுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

நவம்பர்-6 - சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பினார். டிசம்பர் 1 - உடல் நலம் கெட்டிருந்தும் டாக்டர்கள் ஆலோசனையை மீறி, தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

1969-ஜனவரி 14 அன்று பொங்கல் தினத்தில் சென்னை தியாகராய நகரில் கலைவாணர் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அண்ணாவின் கடைசிப்பொதுநிகழ்ச்சி.

ஜனவரி-25 - அமெரிக்க டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணாவுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்தார்.

பிப்ரவரி-3 - (பிப்ரவரி 2 நள்ளிரவு 12.20 மணி) சென்னையில் மறைவு. அண்ணாவின்

உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிப்ரவரி-4 - அண்ணாவின் உடல் அரசு மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு எதிரில் மெரினா கடற்கரையில் காலை 11.30 மணிக்குச் சந்தன மரப்பெட்டியில் வைக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.

நினைவில் அண்ணா

தமிழக அரசு அண்ணா துயிலும் அந்த இடத்தில் கல்லறை எழுப்பி, ''எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'' என்று அதில் எழுதி வைத்து, அணையா விளக்கை ஏற்றிவைத்து, அண்ணா சதுக்கத்தை உருவாக்கி இருக்கிறது. அங்கு அண்ணாவின் அழகு தமிழைக் கேட்க ஒலிச்சாதன வசதி அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா நூலகமும், அண்ணா நூல்கள் விற்பனைக் கூடமும் அண்ணா சதுக்கத்தை அணி செய்கின்றன.

1969 தமிழகச் சட்டப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

1970-பிப்ரவரி 3 - மைய அரசு அண்ணா நினைவாக 20 காசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

1971-சென்னை நகரில் மவுண்ட் ரோடுக்கு, அண்ணா சாலை என்ற பெயர் சூட்டப்பட்டது.

தமிழக அரசு வாங்கிய இரண்டு கப்பல்களுக்கு 'எம்.பி. தமிழ் அண்ணா' என்ற பெயரும், 'தமிழ் அண்ணா' என்ற பெயரும் சூட்டப்பட்டன.

1978-சென்னை, கிண்டியில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு 'அண்ணா பல்கலைக் கழகம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1980-செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த இல்லத்தைத் தமிழக அரசு 16.9.1980 அன்று 'அண்ணா நினைவு இல்லமாக' மாற்றியது.

1985-செப்டம்பர் 15 - அன்று, மதுரை மாவட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நினைவாக, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட, அண்ணா போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழர் தேடிய செல்வம்!

—பி.வி. கிரி

சமுதாயம் விழிப்புறவே
சத்தான படைப்புகளை
அமுதான தமிழ்மொழியில்
அடுக்கடுக்காய் வழங்கியவர்!

அறியாமை நீங்கிடவே
அறிவுச்சுடர் ஏந்திநாளும்
இருளாலே சூழநின்ற
இளைஞர்களை எழுப்பியவர்!

எடுப்பான எழுத்துகளால்
எண்ணங்களைக் கோத்திட்டே
துடிப்பான ஏடுகளில்
தொடர்ந்துநிதம் எழுதியவர்!

மேடையெலாம் முழக்கஞ்செய்து
மேதினியோர் போற்றிடவே
தேடியதோர் செல்வம்போல்
தோன்றியவர் நம்அண்ணா!



ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 538 பேர்களைத் தேர்ந்தெடுத்து 21.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கடலூரிலிருந்து அரசுச் செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக 4 பேர்களுக்குத் தையல் இயந்திரங்களும், சலவைப்பெட்டி 4 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 50 பெண்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து 50 ஆயிரமும், கலப்புத் திருமண உதவி 7 பேர்களுக்கும்,விதவையின் மகள் திருமண உதவி 5 பேர்களுக்கும், விதவை மறுமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3 பேர்களுக்கும், 12 நரிக்குறவர்களுக்குப் பாசிமணி செய்வதற்கு கடன் உதவி ரூ.72 ஆயிரமும் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்கு 123 நபர்களுக்கு ரூ.20 இலட்சத்து 39 ஆயிரத்து 850 வழங்கப்பட்டது. 49 மீனவர்களுக்கு ரூ.10 இலட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டில் விசைப்படகிற்கான இயந்திரமும் (Out Board Motor) வழங்கப்பட்டது. ஏழை மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையாக 10 நபர்களுக்கு ரூ.10 ஆயிரமும், 124 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 33 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும் வழங்கப்பட்டன.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிரானைட்ஸ் தொழில் தொடங்க ஒருவருக்கு ரூ.48 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது. ஆக மொத்தம் 538 பேர்களுக்கு 1,36,81,591 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்றுத் தொண்ணூற்று ஒன்று மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 359 பேர் பெண்களாவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருத்தாசலம் பகுதியைச் சேர்ந்த திருமதி தேவகி என்பவரின் குழந்தைக்கு 'சக்கரவர்த்தி' என்று பெயர் சூட்டினார்.

தருமபுரி மாவட்டத்தில் பழங்காலக் கிராமிய நடனங்கள்

பழங்காலத்தில் தமிழக மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகையாக நிலத்தைப் பாகுபாடு செய்திருந்தனர். இவற்றில் முல்லை நிலமென்பது காடும் காட்டைச் சேர்ந்த நிலமுமாகும். இக்காட்டில் வாழ்ந்த மக்களுக்கு முக்கியத் தொழில் ஆநிரைகள் மேய்த்தலும், அதன் மூலமாக வரும் பொருளைப் பெற்று வாழ்தலுமாகும்.

அம் முல்லை நில மக்களுக்குத் தெய்வம் 'திருமால்' ஆகும். இன்னும் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டைச் 'சேவை' என்ற சொல்லால் குறிப்பதை வைணவத் தலங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக, 'அரையர் சேவை' 'திடுத்துழாய் சேவை' என்றும் இறைவன் தரிசனத்தைச் 'சேவை சாதிப்பது' என்றும் குறிப்பர்.

தருமபுரி மாவட்டத்தின் வடகோடியில் மலை சூழ்ந்த காடுகளும் அக்காட்டினை அடுத்த ஊர்களும் இருக்கின்றன. இன்று பெரும்பாலும் தெலுங்கு மக்கள் இங்கு வாழ்ந்தாலும், அடுத்துள்ள ஆந்திர மாநிலத்தின் தாக்கமும் அப்பகுதிகளில் இருந்து குடியேறியவர்களின் கலப்பும் இதற்குக் காரணங்களாகும். இவற்றுக்கிடையில் முழுக்க முழுக்கத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மிகச் சிறிய கிராமமே 'காட்டூர்' ஆகும்.

பழங்காலத்தில் காடுகெடுத்து நாடக்கி, குடியிருப்புகளை உருவாக்கிக்கொண்ட அவர்கள் தங்கள் வாழ்விடத்துக்குக் 'காட்டூர்' என்றே பெயர் வைத்துக்கொண்டனர். இக்காட்டுப் பகுதியில் உள்ள சிறிய மலைக்கு 'எத்துலா மலை' எனப்பெயர். ஆகையால், இவ்வூரை 'எதுலா மலைக்காட்டூர்' என்றே பெயர் வைத்து அழைக்கின்றனர். இச்சொல் 'எதிலாமலை' என்ற சொற்றொடரிலிருந்து வந்திருக்க வேண்டும். 'இணையிலாதமலை' என்று இதற்குப் பொருளாகும். மரங்களடர்ந்த காடாக இப்பகுதியும், மலையும் இருந்தது என்பதற்கு அடையாளமாக இன்றும் இம்மலையும் மலையைச் சுற்றி உள்ள சிறிய காட்டுப் பகுதியும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து, இப்பகுதி முல்லை நிலத்தைச் சார்ந்தது என்றும், இப்பகுதிக்குத் 'திருமால்' வழிபடு கடவுளாக இருக்கிறார் எனவும் உணரலாம். ஆகவே, இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டை வைணவ முறைப்படி 'சேவையாட்டம்' எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் வேறிடங்களிலிருந்து இங்கு குடியேறியவர்கள் அல்லர். இவர்கள் இப்பகுதியின் பழங்குடியினரேயாவர். சேவையாட்டம் ஒரு குழு உணர்ச்சியுடன் ஆடுவதாகும். இவ்வாட்டத்தில் வீரமும், பக்தியும் கலந்திருக்கக் காணலாம் இவ்வாட்டத்தில் கையில் பிடித்திருக்கும் கோல்(பிரம்பு) ஆநிரை மேய்த்தலின் அடையாளம். சிவந்த ஆடைகள் வீரத்தின் அடையாளம். சிலவகை ஆபரணங்கள் அணிந்திருப்பர். தலைக்கவசம், மார்புக்கவசம் முதலியன இன்று எளிமையாக உருமாறியிருந்தாலும் அவை வீரர்கள் அணியும் உடற்கவசங்களின் வேற்று வடிவங்களேயாகும்.

காட்டில் இயற்கையாகப் பொறுக்கியெடுத்த மயிலிறகுகள் இவர்கள் உடலைச் சுற்றிக் கட்டிக்கொள்ளும் அலங்காரப்பொருள். கண்ணனை வழிபடுவதற்கு அடையாளமாக மயிலிறகுக் கொண்டை இவர்கள் தலையை அலங்கரிக்கும். காட்டில் இயற்கையாகக் கிடைத்த மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழலும் உறுமி எனப்படும் மேற்கருவியும் இதற்கு இசைக்கருவிகளாக இசைக்கப்படுகின்றன. வேறு எங்கும் காணப்படாத 'தலை உறுமி' எனும் தலையில் அணிந்து இசைக்கப்படும் ஒரு வாத்தியம் இங்கு சிறப்பிடம் பெறுகிறது. இக்கருவியை உடலில் வேறெங்கும் அணியாது தலையில் அணிவதற்கு இவர்கள் கூறும் காரணம் மெய்சிலிர்க்க வைக்கிறது. பௌர்ணமி நாளில் புலியால் கொல்லப்பட்ட பசுந்தோலைக் கொண்டு செய்யப்பட்டதால், பக்தியுடன் சிறப்பிடம்

←

—சி.சு. சரவணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.

கொடுக்கப்பட்டு, தலையில் அணிந்து இசைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். கண்ணன் அணிந்த திலகம் இவர்கள் நெற்றியை அலங்கரிக்கும்.

பனிரெண்டு அடைவுகளுடன் இவ்வாட்டம் ஆடப்படுகின்றது. இக்கருவிகளே தம் இசையின் மூலம் மாறி மாறி இசைக்கப்படும் போது ஆடிக்கொண்டே ஆடைகளை மாற்றிக் கொள்கின்றனர். இரண்டு புல்லாங்குழல்கள், இரண்டு தலை உறுமிகள் இவ்வாட்டத்தின் இசைக்குழுவாகும். தொடக்கத்தில் திருமாலுக்குச் செய்யும் வழிபாட்டு நாட்களிலும் வீரச் செயல் புரிந்த நாட்களிலும் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டம் இன்று திருமாலுக்குச் செய்யும் திருவிழா நாட்களில் ஆடப்படுகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே விரதமிருந்துதான் கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் இப்பொருள்களை முறைப்படிப் பூசை செய்து எடுப்பர்.

இச் சேவையாட்டம் தற்போதும் இம்மாவட்டத்தில் இப்பகுதி மக்களால் ஆடப்பட்டு, கிராமியக்கலை எவ்விதத்திலும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

பேரிக்காய் சாப்பிடுங்கள்

பேரிக்காய் சாப்பிடுங்கள் பலவீனத்தாலோ அல்லது வேறு காரணங்களினாலோ இதயம் படபடப்புக்கு உள்ளாகிறதா? கை, கால்களில் நடுக்கமும் வியர்வை கொட்டுதலும் உண்டாகிறதா? அப்படியானால் தொடர்ந்து பேரிக்காய் சாப்பிட்டு வந்தால் மேற்கூறிய தொல்லைகள் நீங்கப்பெறலாம்.

வளர்கின்ற பருவத்தில் உள்ள பிள்ளைகளது எலும்புகள் உறுதியாகவும், சீராகவும் வளர பேரிக்காய் உதவும். ஆப்பிளைப்போல் கடித்து உண்பதால் பற்கள் பலம்பெறுகின்றன.

கருவுற்ற பெண்டிரும், தாய்ப்பால் தரும் மகளிரும் இப்பழத்தை உண்பதால் தேவையான போஷாக்கைப் பெறுவதுடன் பால் சுரப்பும் அதிகமாகும்.

வைட்டமின் ஏ, பி, மற்றும் சுண்ணாம்பு நிறைந்த இப்பழம் ஜீரண மண்டல உறுப்புகளுக்கும் வேண்டிய சத்துக்களை தந்து நல்ல பசியை உண்டாக்குகிறது. உணவும் எளிதில் சீரணமாகும்.

நன்றி: கூட்டுறவு

அரிய கற்சிற்பம் கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் உள்ள ஆனாங்கூர் என்னும் கிராமத்தில் இருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால், கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரன் என்று கருதப்படும் அரிய கற்சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலம் தொட்டு ஆனாங்கூர் என்னும் இவ்வூர் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமை கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. இதனைப் புலப்படுத்தும் கல்வெட்டு இவ்வூர் அருகில் உள்ள கால்வாய்க் கரையில் கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வூரின் வடமேற்குப் பகுதியில் அகஸ்தீஸ்வரர் கோயில் ஒன்றும் அமைந்துள்ளது. தற்போதைய கட்டட அமைப்பைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், இக்கோயில் கர்ப்பக் கிருகத்தின் உட்புறச் சுவரில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு காணப் பெறுதலாகும். கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் இதுவே பழமையானதாகும்.

இக்கோயிலில் மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள துண்டுக்கல்வெட்டுக்களும் சில இங்கு உள்ளன. இக்கிராமத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலக் கல்வெட்டில் இவ்வூர் தெய்வத்தின் பெயர், ''மகாதேவர்'' என்றும் ஊரின் பெயர் 'ஆனாங்கூர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இவ்வூரில் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்திலேயே ஒரு சிவன் கோயில் இருந்தது என்பதும், பின்னாளில் அதன் இடிபாட்டின் மீது குலோத்துங்கச் சோழன் காலத்தில் இக்கோயில் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கலாம் என்பதும் அறிய முடிகிறது.

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் இக்கோயிலுக்கு விளக்கு எரிக்க 24 கழஞ்சுப்பொன் தானமாகத் தனிப்பட்ட ஒருவரால் வழங்கப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் தெய்வத்தின் பெயர் ''ஆனாங்கூர் உடையார்'' என்று உணர முடிகிறது. வேறு ஒரு கல்வெட்டு மூலம், இக்கிராமம் பனையூர் நாட்டிற்குட்பட்ட

பொன்மொழிகள்

குடிப்பழக்கம் மனிதனைப் படுபாதாளத்தில் ஆழ்த்திக் குடும்பங்களையும், குழந்தைகளையும் நாசமாக்குகிறது.

●

நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகள் பள்ளிகளும், கல்லூரிகளும்தான். அங்குதான் எதிர்கால உலகமே உருவாக்கப்படுகிறது.

●

தீயை அணைக்க நீர் கேட்டால், சாம்பலாகப் போனபின் கொண்டு வரும் நீர் போன்றது, தக்க சமயத்தில் செய்யாத உதவி.

பகுதியாக விளங்கியது என்பதும் தெரியவருகிறது.

இக் கற்சிற்பத்தின் வடிவமைப்பைக் கொண்டு பார்க்கையில் கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் அல்லது இந்திரனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இறைவன் யானை மீது அமர்ந்து காட்சி தருவதாக உள்ளது. இத்தெய்வமும் அதன் வாகனமும் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் தலையில் அணிந்துள்ள மகுடம் ஜடாமகுடமா? அல்லது கிரீடமகுடமா? என்பதை எளிதில் அறிய இயலாவண்ணம் உள்ளது.

வலது மேற்கையில் சக்தி ஆயுதமும், இடது மேற்கையில் அக்கமாலையும் உள்ளன. வலது கீழ்க்கை லோல ஹஸ்தமாகக் கீழே தொங்கிய நிலையிலும் இடது கீழ்க்கையைத் தொடை வைத்தும் காணப்படுகிறார். தடித்த உருவில் காணப்பெறும் கழுத்தணியும், கையணிகளும் இச்சிற்பத்தின் பழமையை உறுதி செய்கின்றன. யானையைப் பொருத்தமட்டில் அதன் முகப் பகுதியை மட்டும் காணமுடிகிறது. தந்தங்கள் குட்டையாகவும், காதுப்பகுதி மிகவும் அகலமாகவும் காணப்படுகின்றது.

யானை மீதமர்ந்து காணப்பெறும் முருகன் அல்லது இந்திரன் உருவம் பலகைக் கல்லில் பெரிதாக வடிக்கப்பட்டுக் காணப்படுவது இதுவே முதன் முறையாகும். மலையைக் குடைந்து செதுக்கப்பட்ட உருவம் ஒன்று மகாபலிபுரத்தின் அருகே உள்ள சாளுவன்குப்பம் பகுதியில் அமைந்து உள்ள புலிக்குகையில் முன்புறச் சுவரில் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் கிழக்குப் பக்கத்தில் சுமார் 50 கஜ தூரத்தில் கஜலட்சுமி மற்றும் கன்னிமார் எழுவர் கொண்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கன்னிமார் எழுவரில் (தாய்மார் எழுவர்) ஐவர் உருவம் மட்டுமே கிடைத்துள்ளன. அவை அமர்ந்த

நிலையில் வலது கையில் உரிய ஆயுதமேந்தியும், இடது கையை இடது தொடை மீது வைத்த் நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றின் உருவ அமைதியைக் கொண்டு பார்க்கையில் இவைகளும் முருகன் அல்லது இந்திரன் சிற்பத்தின் காலத்தைச் சார்ந்தவை என்று கருதலாம்.

தாமரை மலர் மீது அமர்ந்த நிலையில் காணப்பெறும் கஜலட்சுமி, இருகைகளிலும் தாமரை மலர் ஏந்தியும், இருபக்கமும் யானைகள் தும்பிக்கையை உயர்த்திய நிலையிலும் காணப்படுகிறார்.

தாமரை மலர்ப் பீடத்திற்குக் கீழ் இரு பூதகணங்களும் உள்ளன.

இத்துறையைச் சார்ந்த திரு. கோ.முத்துசாமி, கல்வெட்டாய்வாளர், இவ்வூரிலும் இவ்வூரைச் சுற்றியுள்ள ஏரிப்பகுதியிலும் கல்வெட்டாய்வு மேற்கொண்டபோது மேற்குறிப்பிட்ட சிற்பங்களுடன் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எட்டுக் கைகளுடன் கூடிய இரண்டு துர்க்கைச் சிற்பங்களையும் ஒரு விஷ்ணு சிற்பத்தையும் கண்டுபிடித்துள்ளார்.

போலியைக் கண்டு ஏமாறாதீர்!

அவசரமாக ரயிலில் பயணம் செய்பவர்கள், ஏமாற்று இடைத் தரகர்கள் கொடுக்கும் போலியான பெயரைக்கொண்ட டிக்கெட்டு களை வாங்கி ஏமாந்துபோவது தெரிந்ததே. அத்தகைய போலி டிக்கெட்டுகளை வாங்கி ஏமாறா தீர்கள் என்று தொலைக்காட்சி மூலமும், பத்திரிகை மூலமும் மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1991-இல் போலியான டிக் கெட் மூலம் பயணம் செய்த 9,153 பேரை ரயில்வே வாரிய சிறப்புக் கண்காணிப்புக் குழு பிடித்தது. இவ் வாண்டு மே மாதம் வரை இது போன்று 2,796 பேர் பிடிக்கப் பட்டனர்.

1991-இல் போலியான பெயர் களில் டிக்கெட்டுகளை வாங்கி விற்பனை செய்த 2,269 இடைத் தரகர்களை இக்குழு பிடித்தது. இவ் வாண்டு மே மாதம் வரை 983 போலி இடைத்தரகர்களை இவ் வாரியம் பிடித்துள்ளது.

மின்சாரம்

கடல் அலைகள், காற்றா லைகள், நீர், நிலக்கரி இவற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. இப்போது சூரிய ஒளியைக் .கொண்டும் மின்சாரம் தயாரிக்கும் முறையை மத்திய மின்னணு நிறுவனம் அமலாக்கி வருகிறது. சூரிய மின்கலம் சூரிய ஒளியை நேரடியாக மின்சாரமாக மாற்றுகிறது. இந்தச் சூரிய மின்கலங் களை உற்பத்தி செய்வதில் உலகில் ஐந்தாவது இடத்தை மத்திய மின் னணு நிறுவனம் வகிக்கிறது.

ஊரக மற்றும் கிராமப்பகுதி களுக்கு ஏற்ப இந்நிறுவனம் சூரிய மின்கலங்களை வடிவமைத்துக் கொடுக்கிறது. இதுவரை இந்நிறு வனம் 26,000 மின்கலங்களை உற் பத்தி செய்து ஊரகப்பகுதிகளுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம், தொலைத்தொடர்பு, முதியோர் கல்வி மையங்கள், கிராம மருத்துவ மனைகள், ஆகியவற்றுக்குப் பயன் படுகிறது.

—நன்றி: 'தூவானம்'

அஞ்சல் சேவை

கிராமங்கள், கிராமப் பஞ்சாயத்துகள் எல்லா வற்றிலும் அஞ்சல் நிலையங்களை அமைப்பதற்கு அரசு எண்ணியுள்ளது. அந்த அஞ்சல் நிலையங் களில் பொதுத் தொலைபேசி இணைப்பு வசதியும் இருக்கும். நாட்டில் தற்போது 1,20,266 கிளை அஞ்சல் நிலையங்கள் இயங்குகின்றன. நாடு விடுதலை அடைந்த சமயத்தில் 22,216 அஞ்சல் நிலையங்களே இயங்கின. அஞ்சல் நிலையங்களின் வளர்ச்சி, .புறப்பணியாளர்களின் துணையின்றிச் சாத்தியமாகியிருக்காது. தற்போது 2,94,372 புறப் பணியாளர்கள் அஞ்சல் சேவையில் ஈடு பட்டுள்ளனர்.

அஞ்சல் சேவையை மேம்படுத்துவதற்காக, இரவு நேர விமான அஞ்சல் சேவையை மீண்டும் தொடங்கவும், அஞ்சல் பொருட்களின் காகிதத் தரத்தை உயர்த்துவதற்கும், பணவிடைகளை 'ஃபாக்ஸ்' வாயிலாக அனுப்புவதற்கும் திட் டங்கள் உள்ளன.

வாசனையோடு வளம்

வாசனைத் திரவிய எண்ணெய் மற்றும் பிசின் ஏற்றுமதி மூலம் 1991-92-இல் 56 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இப் பொருட்களின் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் அமெரிக்கா வாங்கியது. இத்துறையில் ஆண்டுக்கு 30 சதவிகித வளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு இருக் கிறது. இவற்றின் ஏற்றுமதி முனைப்பிற்கு உதவும் முகமாக, இப்பொருட்களின் மீதான ஏற்றுமதி வரி ஓராண்டுக்காலத்துக்கு (1993 ஜூன் இறுதி வரை) விதிக்கப்படாது என அரசு சலுகை அளித் துள்ளது.

ஐந்து நிமிடம் போதுமே!

உள்ளூர்த் தொலைபேசி அழைப்பு ஒன்றின் காலக்கெடு தற்போது ஐந்து நிமிடங்களாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முப்பதாயிரத் திற்கும் மேற்பட்ட இணைப்புகளைக் கொண்டி ருக்கும் மின்னணுத் தொலைபேசித் தொடர்பகங் களில் இம்முறை அமலாகியுள்ளது. தில்லி, பம்பாய், அகமதாபாத், சூரத், பரோடா, ராஜ் கோட், சென்னை, கல்கத்தா, பெங்களூரில் இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுருங்கப் பேசி, சீராகச் செயல்பட உதவிடு வோம்!

சென்ற ஆண்டில் ஏழு இலட்சம் புதிய தொலைபேசி இணைப்புகள் கொடுக்கப்பட்டன. இருந்தபோதிலும், இவ்வசதிக்காகப் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 24 இலட்சம் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

தருமபுரி மாவட்டத்தில் அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சீரிய தலைமையின் கீழ் செயல்படும் தமிழக அரசு, மக்கள் போற்றும் மகத்தான திட்டங்களைத் தீட்டி, அந்தத் திட்டங்களின் பலன் மூலை முடுக்குகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் செயல்படுத்தி வருகின்றது.

அரசுத் திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து, அதன் பயனை அடைகின்ற வகையில் அரசு பல்வறு வகையில் விளம்பரப்' பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில், 18.7.92 முதல் 26.7.92 வரை தருமபுரி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அரசு நலத் திட்டப்பணிகள் விளக்க முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம் முகாமினையொட்டி மாவட்டத் தலைநகர் தருமபுரியில் மாவட்ட விளையாட்டரங்கில் அனைத்துத் துறைகள் பங்கேற்கும் அரசுத் திட்டப் பணிகள் விளக்கப் பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. இந்தப் பொருட்காட்சியில் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் 31 இடம் பெற்றிருந்தன. 4 கைத்தறிக் கூட்டுறவுச் சங்க அரங்குங்கள், 15 தனியார் அரங்குகள் ஆகியவை இடம் பெற்றன.

பொருட்காட்சியில் தினசரி கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், ஆறு வீடியோ திரையரங்கங்கள் அமைக்கப்பட்டு, அதில்- பல்வேறு துறைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட வீடியோ கேசட் மூலம், வீடியோ படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு, அரசுத் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தருமபுரி மாவட்டத்தில் இம்முகாமானது தருமபுரி கோட்டத்தில் உள்ள நல்லம்பள்ளி, பென்னாகரம், கம்பைநல்லூர், மொறப்பூர், கிருஷ்ணாபுரம் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய இடங்களிலும் கிருஷ்ணகிரி கோட்டத்தில் வேப்பணப்பள்ளி, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, மத்தூர், காவேரிப்பட்டணம், பாலக்கோடு ஆகிய இடங்களிலும், ஒசூர் கோட்டத்தில் ஒசூர், பாகலூர், பேரிகை, சூளகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய இடங்களிலும் நடைபெற்றது.

முகாம் நடைபெறும் நாட்களில், கோட்ட அளவில் தினசரி காலை 8 மணி முதல் இரவு 12 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காலை நிகழ்ச்சிகள்

குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துணவு வழங்குதல், கால்நடைகளுக்கு இலவச மருத்துவம்,

தமிழக மாவட்டங்களும் தலைநகரங்களும்

1. சென்னை - சென்னை-600 005
2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் - வேலூர்-632 001
3. தென்னார்க்காடு - கடலூர்-607 001
4. திருச்சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளி-620 008
5. இராமநாதபுரம் - இராமநாதபுரம்-623 501
6. திருநெல்வேலி-கட்டபொம்மன் - திருநெல்வேலி-627 009
7. கன்னியாகுமரி - நாகர்கோவில்-629 001
8. தர்மபுரி - தர்மபுரி-636 705
9. நீலகிரி - உதகமண்டலம்-643 001
10. காமராசர் - விருதுநகர்-626 001
11. திண்டுக்கல் அண்ணா - திண்டுக்கல்-624 001
12. நாகப்பட்டினம் காயிதேமில்லத் - நாகப்பட்டினம்-611 001
13. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். - காஞ்சிபுரம்-631 501
14. திருவண்ணாமலை சம்புவராயர் - திருவண்ணாமலை-606 601
15. தஞ்சாவூர் - தஞ்சாவூர்-613 001
16. புதுக்கோட்டை - புதுக்கோட்டை-622 001
17. மதுரை - மதுரை-625 020
18. சேலம் - சேலம்-636 007
19. பெரியார் - ஈரோடு-638 001
20. கோயம்புத்தூர் - கோயம்புத்தூர்-641 018
21. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் - சிவகங்கை-623 560
22. வ.உ. சிதம்பரனார் - தூத்துக்குடி-628 001

- தகவல்: அ. கந்தசுவாமி

இலவசக் கண் பரிசோதனை, முதியோர் ஒய்வூதியம் பெறத்தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக்கடனுதவி பெற ஆலோசனைகள் வழங்கி மனுக்கள் பெறுதல், இலவச நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்க மனுக்கள் பெறுதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளல், ஏழைகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்குதல், சுய தொழில் தொடங்குவோர்க்குத் தக்க ஆலோசனை வழங்குதல், குடும்ப நலம் - சிறுசேமிப்பு பற்றி, தக்க ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

தீண்டாமை, மதுவிலக்கு, சிறுசேமிப்பு, தேசிய ஒருமைப்பாடு, வரதட்சணை ஒழிப்பு, மகளிர் கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், சாலை விதிகள் கடைப்பிடித்தல், அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல் ஆகியவை பற்றி, பொதுமக்கள், அலுவலர்கள் அடங்கிய குழு விவாதம் நடைபெற்றது.

மாலை நிகழ்ச்சிகள்

கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், நாடகங்கள், விளையாட்டு, கரகம், காவடி மற்றும் அரசு சாதனைகளை விளக்கும் வீடியோ படக்காட்சிகள் நடைபெற்றன.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் தருமபுரி மாவட்டத்தில் தினசரி மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரே நேரத்தில் மூன்று இடங்களிலும் காலை நிகழ்ச்சியாக மேலே உள்ள நலத்திட்டப் பணிகளும், பிற்பகல் நிகழ்ச்சியாக 3 இடங்களில் குழு விவாதமும், இரவு நிகழ்ச்சியாக ஒரே நாளில் 16 இடங்களில் நாடகங்கள் வில்லுப்பாட்டு போன்றவைகளும், 48 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும் நடைபெற்றன.

கால்நடைச் செல்வம்

சமீபத்திய கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 192.8 மில்லியன் மாடுகள், 79.1 மில்லியன் எருமைகள், 44.9 மில்லியன் செம்மறி ஆடுகள், 100 மில்லியன் ஆடுகள், 10.7 மில்லியன் பன்றிகள், 253.7 மில்லியன் கோழி-வாத்து பறவை இனமும், சுமை தூக்கப் பயன்படும் 3 மில்லியன் கால்நடைகளும் உள்ளன.

இவற்றின் மூலம் நாம் அடையும் பல்வேறு பயன்களின் மதிப்பு ரூ.445 பில்லியன் (1990-91)! இது, நமது வேளாண் உற்பத்தியில் 25 சதவிகிதமாகும். இவற்றின் மூலம் (1991-92-இல்), நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாலின் அளவு 56.4 மில்லியன் டன்கள்; முட்டைகளின் எண்ணிக்கையோ 22,002 மில்லியன்; கம்பளி அறுவடை 43.4 மில்லியன் கிலோ!

ஆக, முகாம் நடைபெறும் 7 நாட்களில் 21 இடங்களில் நலத் திட்டப்பணிகள் விளக்க முகாமும், 336 இடங்களில் வீடியோ படக்காட்சிகளும், 94 இடங்களில் கலை நிகழ்ச்சிகளும், தலைமையிடப் பொருட்காட்சியும் சேர்த்து, சிறப்புற நடைபெற்றன.

நலத்திட்ட முகாம்கள் நடைபெற்ற இடங்களில் பல்வேறு துறையின் மூலம் சிறிய அளவிலான கண்காட்சிகளும் நடைபெற்றன. அந்தச் சிறிய அளவிலான கண்காட்சியைப் பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.

அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் அதில் பங்கேற்று, தங்களது துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

சம்பந்தப்பட்ட துறைகள் ஆற்றுகின்ற பணிகளை மக்கள் நேரில் கண்டு தாங்கள் அதன் மூலம் என்ன பயன்பெறமுடியும் என்பதை அறிந்து அரசு அலுவலர்களுடன் கலந்துபேசி நிவர்த்தி செய்து கொண்டனர்.

மாலையில் குழு விவாதத்திலும் அலுவலர்களும், மக்களும் கலந்துரையாடினர். மக்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர். அலுவலர் அதற்கான தகுந்த விளக்கம் அளித்தனர். முகாம் நடைபெற்ற எல்லா இடங்களிலும் கூட்டம் நடத்தப்பட்டது. மக்கள் திரளாக

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தலைநகரில் நடைபெற்ற பொருட்காட்சி மற்றும் கோட்ட அளவில் நடைபெற்ற சிறிய பொருட்காட்சி ஆகியவற்றில் 30-க்கு மேற்பட்ட அரசுத் துறைகளும் அதைச் சார்ந்த அலுவலர்களும்-இடைவிடாது நடந்த ஒரு வார கால முகாமில் பங்கேற்றுச் சிறப்பாகச் செய்தனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறையைச் சார்ந்த அலுவலர் அதிக அளவில் இதில் ஈடுபட்டு முகாம் ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

அரசுத் திட்டப் பணிகள் விளக்க முகாம் தொடக்க விழா 18.7.92 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள் பொருட்காட்சியினைத் திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றினார். மேலும் விழாவில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் திட்டப்பணிகள் விளக்க முகாமினைத் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி, விழாப் பேருரையாற்றினர். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், டாக்டர் வி. புருஷோத்தமன், திரு. கே.ஏ. மனோகரன், திரு. எம். வெங்கடராமரெட்டி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

அரசு திட்டப் பணிகள் விளக்க முகாம் நிறைவு விழா 26.7.92 அன்று நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி **சுற்றுலா**த்துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த அரங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

இந்நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசு சிறப்புப் பிரதிநிதி (புதுடில்லி) மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே.வி. தங்கபாலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. இரா. நடேசன் அவர்கள் நன்றி கூறினார்.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி

உதவி

எண்ணூரில் உள்ள புதிய துறை முகத்தை மேம்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.559.25 கோடி நிதி உதவி அளிக்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக் கரியை எடுத்துச் செல்ல இத்துறை முகம் பயன்படுத்தப்படும். இந்த நிதியுதவியைத் தவிர, எண்ணூர் துறைமுகத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.450.45 கோடியை அளிக்கு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரதீப் துறைமுகத்தை மேம்படுத்து வதற்கும் இவ்வங்கி ரூ.559.89 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இந்தியாவில் உள்ள துறைமுகங் களை மேம்படுத்துவதற்கு டச்சு அரசாங்கம் தொழில்நுட்ப உதவி யினை நல்கும்.

நன்றி 'தூவானம்'.

அரசு மருத்துவமனைகளில் மறுவாழ்வு மையங்கள்

குடிப்பழக்கம் என்பதும் ஒரு நோய்தான். விஞ்ஞான வளர்ச்சி யின் காரணமாக இந்தக் குடிப் பழக்க நோயைக் குணப்படுத்தும் சக்தியும் தற்போது ஏற்பட்டுள்ளது.



மது மற்றும் போதை மருந்து பழக்கத்துக்கு ஆளானவர்களை அப் பழக்கத்திலிருந்து மீட்டு அவர் களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகை யில் அரசு மருத்துவமனைகளில் மறு வாழ்வு மையங்கள் விரைவில் அமைக்கப்படும்.

எல்லா மாவட்ட மருத்துவமனை களிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இத்தகைய மையங்கள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த மையத்தில் மருத்துவர்கள், சமூகநல ஊழியர்கள் உட்பட பல்வேறு வகையான மருத்துவத்துறை உதவியாளர்கள் இருப்பார்கள். நடப்பு ஆண்டி லேயே இந்த மையங்கள் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்கள்

நமது நாடு ஒரு விவசாய நாடா கும். விவசாயமே நமது நாட்டின் மிகப் பெரிய தொழில் ஆகும். விவசாயத்தில் நமது நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் மொத்த வருவாயில் முதலிடம் வகித்து வந்த வேளாண் மைத்துறை இரண்டாவது இடத்திற் குத் தள்ளப்பட்டு விட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தோடு, வேளாண்மை போட்டியிட இயல வில்லை.

நாம் வேளாண்மையில் தன்னி றைவு பெறப் புதியபுதிய உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. புதிய கன்னிப் பிரதேசங்களைப் பாசனப் பகுதியில் கொண்டுவருவதால், புதிய புதிய பாசன முறைகளைப் பயன்படுத்தி பாசன நீரைச் சேமித் துப் பாசனப் பகுதியைப் பெருக்கி, விளைச்சலைப் பன்மடங்குபெருக்கி னாலும் வேளாண்மையில் இயந் திரத்தை உபயோகிப்போரின் பங்கு குறைவாக இருப்பதால் நாம் நமது இலட்சியக் கனவை நனவாக்க இயல வில்லை. அதனால் வேளாண் தொழில் மிகக்கடினமான தொழில் என்ற கருத்தையே நமது மக்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே விவசாயம் ஒரு பரம்பரைத் தொழி லாகத்தான் வளர்ந்து வருகிறது.

புதியவர்கள் வேளாண்மையில் நாட்டம் இல்லாமல் உள்ளனர். வானம் பொய்த்து விடுவதாலும், வேளாண்மை முறையின்றி உள்ள தாலும் விவசாயப் பெருமக்களே, பெரும்பாலும் இளைய தலைமுறை யினரே நகரத்தை நோக்கி - வேறு தொழிலை நாடுகின்றனர்.

வேளாண்மையில் உள்ள பல் வேறு இடர்ப்பாடுகளை உணர்ந்த வேளாண் பொறியியல் வல்லு நர்கள், வேளாண் தொழிலை இலகு வாக மாற்றத் தேவைப்படும் பல் வேறு இயந்திரங்களை வேளாண் மையில் புகுத்தியுள்ளனர். வேளாண் மைக்குத் தேவைப்படும் முதல் மூன்று முக்கிய மூலப்பொருளான நிலம், நீர், விதை இவை மூன்றிலும் இயந்திரத்தின் மூலம் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தி வேளாண் தொழிலை இலகுவான தொழிலாக மாற்றிய தோடு அல்லாமல், வேளாண்மைத் தொழிலைப்பற்றி இளைய தலைமுறையினரிடையே கொண்டுள்ள ஒரு தவறான கருத் தைப் பெருமளவு மாற்றியுள்ளது. முறையான நேரத்தில் வேளாண் பொறியாளர்கள் ஆற்றிய பங்கு பெருமளவு போற்றதக்கதாகும்.

நமது இளைய தலைமுறையினரி டையே, வேளாண்மைத் தொழிலில் நம்நாடு தன்னிறைவு அடைய முடியும், அடையச் செய்யலாம் என்ற ஒரு நம்பிக்கை எழுந்துள்ளது.

வேளாண் தொழிலில், பொறியாளரது பங்கு என்ன?

வேளாண் தொழிலுக்குத் தேவைப் படும் நிலம், நீர், பயிர் (அ) விதை, மனித ஆற்றல் இவை அனைத்தும் நம் நாட்டில் தேவையான அளவு உள்ளன. ஆனால், தேவைப்படும் நேரத்தில் ஏதாவது ஒன்று குறைந் தாலும் வேளாண் தொழிலைச் செவ்வனே செய்ய இயலாது. இவை நான்கும் முறையற்றுப் பிரிந்திருந் தாலும், சேர்ந்திருந்தாலும் நினைத்த இலக்கை அடைய இயலாது. இந் நான்கின் சரிவிகிதச் சேர்ப்பினால் ஒரு நாட்டின் வரலாற்றை மாற்றி அமைக்க முடியும்.

வேளாண்மைக்கு அடிப்படை யானது நிலம். நிலம் நல்ல முறை

யில் பண்படுத்தப்பட்டபிறகே விவசாயம் செய்ய இயலும். மேடான நிலத்தைச் சமன் செய்ய மண்தள்ளு இயந்திரம் (புல்டோசர்) பயன்படுகிறது. மனித ஆற்றலைப் பயன்படுத்திச்சமன் செய்ய ஆகும் செலவையும், நேரத்தையும் விட மூன்றில் ஒரு பங்கு நேரமும், செலவுமே புல்டோசர் மூலம் ஆகும். மேலும், மனித ஆற்றலின் மூலம் சமன் செய்வதை விட மிகத் துல்லியமாக , விரைவாகச் சமன் செய்ய புல்டோசரால் ஏதுவாகும். தோட்டப்பயிர் பயிரிடப்படும் நிலங்களைச் சமன் செய்வதால், நிலம் சிறிதளவும் வீணாகாமல் விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற இயலும்.

புல்டோசரால் சமன் செய்யப்பட்ட நிலத்தைப் பண்படுத்த உருவாக்கப்பட்ட இயந்திரம் உழுவை இயந்திரமாகும். உழுவை இயந்திரம் விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். நன்செய் நிலமானாலும், புன்செய் நிலமானாலும் பொன்னிலமாக மாற்றுவது உழுவை இயந்திரமாகும்.

உழுவை இயந்திரத்தின் கருவிகளான தட்டுக் கலப்பை, கொத்துக் கலப்பை போன்ற கருவிகளை உபயோகித்து கன்னி நிலத்தை, விளைநிலமாக மாற்ற இயலும். 6 ஜதை மாடு கட்டி இருசால் ஏர் உழ, ஒரு ஏக்கருக்குச் சுமார் 6 மணி நேரம் ஆகும். ஆனால் 4 ஏக்கர் நிலத்தை உழ, இயந்திர உழுவை உதவியினால் சுமார் 8 மணி நேரத்தில் முடித்துவிடலாம். நேரமும் செலவும் மிகமிகக் குறையும். மேலும், விவசாயத்தில் அனைத்துப் பணிகளும் பருவத்தை முடிக்க வேண்டி இருப்பதால், இயந்திர உழுவை ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது.

கன்னி நிலத்தை ஆழப் பிளந்து நன்கு உலர வைத்தல் வேண்டும். அதன் பின்னரே அதை நன்கு உழுது விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்ற முடியும். ஒரு பருவமழை வந்த பின்னர், மாடு கட்டி பூமியைப் பிளந்து காய்த்லும், மறுபடியும் ஒரு பருவ மழை வந்த பின்னர் நன்கு உழுதலும், மறுபடியும் நன்கு காய்தலும் அவசியம். அடுத்த மழை வந்த பிறகே பயிர்ச் சாகுபடிக்குப் பக்குவமாக இருக்கும். இரு பருவ மழைக்கு (அல்லது) ஏறக்குறைய ஓராண்டிற்குப் பிறகே நிலத்தைப் பக்குவமாக மாற்ற இயலும், அதாவது நிலத்தடி நீரை உபயோகப்படுத்த முடியாத இடத்தில் ஓராண்டு ஆகும். நிலத்திலுள்ள ஈரப்பதத்தைப் பொறுத்தே மாடு கட்டி உழ இயலும். ஆனால், இயந்திர உழுவையில், தட்டுக் கலப்பை மாட்டிப் பூமியைப் பிளந்து நன்கு புரட்டுவது, மிக மிக எளிதானது. ஈரப்பதம் அதிகமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஓரிரு நாட்கள் காய்ந்த பிறகு கொத்துக் கலப்பையை மாட்டி பெருந்துகள்களை மிக மிகச் சிறிய துகள்களாக உடைத்து, விவசாயத்திற்கு ஏற்றமுறையில் மாற்ற இயலும். கன்னி பூமியை, விளை நிலமாக மாற்ற ஒரு வாரம் போதுமானது.

அதேபோல நன்செய் நிலத்தை நன்கு உழுது நிலத்தைப் பயிர் செய்ய சேறு ஆக்க வேண்டும். இதற்கு மாடு கட்டி கலப்பை ஓட்டினால், குறைந்தது 15 நாட்களாவது வேண்டும். ஆனால், சக்கரக் கலப்பை கொண்டு ஒரே மணி நேரத்தில் நன்கு நிலத்தைக்குழைத்து சேறாக்க இயலும். இயந்திர உழுவையில் முதல் உழவு மற்றும் இரண்டாம் உழவு மிக எளிதாக்கப்படுகிறது. அதனால், விவசாயம் என்பது பரம்பரைத் தொழில் என்ற வரைமுறையிலிருந்து விலகி, அனைவரும் நாடும் வண்ணம் ஏற்றதாக இயந்திர உழுவை மாற்றுகிறது.

"இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது. திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்பது அமெரிக்காவிலுள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்து ஆகும்".

- அமெரிக்கப் பேராசிரியர் ஜான்ரைவி.

(ஆதாரம்: 'ஆனந்த விகடன்' 16.7.1972)

இதைத்தவிர இயந்திர உழுவையைக் கொண்டு ஆழமற்ற கிணறுகளிலிருந்து நீர் இறைக்கவும், உரம் மற்றும் விளைபொருள் இவைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் உபயோகப்படுத்தலாம். இயந்திர உழுவைக்கு, விவசாயத்தில் பணியில்லாக் காலங்களில், மற்ற பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதால் உபரி வருமானம் அதிகரிக்கிறது.

இயந்திர உழுவையில் முதலீடு அதிகம் என்றால் மாற்று வழியாக சிறிய பவர்டில்லர்களை உபயோகப்படுத்தலாம். இதற்கு முதலீடு குறைவு: ஆனால், டிராக்டருக்குரிய அத்தனைச் சிறப்புகளும் இதற்குண்டு.

இதைத்தவிர, இயந்திர உழுவையினால் நிலத்தை ஓரளவு சமன் செய்தல், பரம்படித்தல் ஆகிய வேலைகளுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். சுருங்கக் கூறினால், இயந்திர உழுவை விவசாயத்தை இயந்திர மயமாக்க உதவும் ஓர் அடிப்படை இயந்திரமாகும்.

விவசாயத்திற்கு நிலம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல நீரும் மிக முக்கியமான மூலப்பொருளாகும். மனிதன் கவலை ஏற்றம் கட்டி நீர் இறைத்த காலம் போய், நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் தேவையான நீரை மிக மிக ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மேலேற்றி, பயிருக்குப் பாய்ச்சப்படுகிறது. ஆதலால், மழை பொய்த்துவிடினும் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் ஆழத்திலுள்ள நீரை மேலேற்றி பாசனம் பண்ண இயலும் என்ற ஓர் நம்பிக்கையை மக்களிடையில் ஊட்ட முடிந்ததால், விவசாயம் அனைவரும் நாடும் தொழிலாக மாற்ற முடிந்தது.

நீர் இறைக்கும் இயந்திரம் விவசாயத்திற்குக் கிடைக்கப்பெற்ற மற்றுமோர் அரிய வரமாகும். அதனால், கவலை மற்றும் ஏற்றம் கூட்டி இறைப்பதற்கு வசதியாகப் பெரிய விட்டமுள்ள, குறைந்த ஆழமுள்ள திறந்த வெளிக்கிணறு அமைப்பதை விட்டுவிட்டு, நீர்த் தேவைக்கேற்றபடி மிக மிக ஆழமுள்ள குழாய்க்கிணறுகள் அமைக்க முடிந்தது. திறந்தவெளிக் கிணறு அமைக்கும் செலவு மற்றும் நேரத்தை விட, ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆகும் நேரம் மற்றும் செலவு மிக மிகக் குறைவு. நீர் கிடைக்கும் ஆழத்தைப் பொறுத்து நீர் மூழ்கி இறைக்கும் இயந்திரம் அல்லது சாதாரண நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவற்றைப் பொருத்திக் கொள்ளலாம்.

இதுமட்டுமல்லாமல், கிடைக்கும் நீரை நன்செய் மேட்டு நிலத்திற்கும் எடுத்துச் சென்று குழாய் மூலம் பாசனம் செய்வதற்கு முயலுவதால் நீர்ப்பாசனம் என்பது இளம் பாலகனுக்கும் புரிந்த, இயலுகின்ற ஒன்றாக முடிகிறது. நீர் இறைக்கும் இயந்திரம் இருப்பதால், மழை இல்லாவிடினும், ஓர் ஆழ்துளைக் கிணறு அமைத்து, நிலத்தின் எந்த மூலைக்கும், எந்த மேட்டுக்கும் நீர் பாய்ச்ச முடியும். அதனால், மானாவாரி சாகுபடி என்ற பிரிவு இனி வருங்காலத்தில் தோட்டப் பயிர்ச் சாகுபடிப் பிரிவு என்று மாறும். மானாவாரிச் சாகுபடி என்ற சொல்லே பழக்கத்திலிருந்து அறவே விடுபடும் என்பதில் சிறிதளவும் ஐயமேயில்லை.

இதற்கும் ஒருபடி முன்னேறி இன்று பாசனம் மிக மிக எளிதாக்கப்பட்டுவிட்டது. கிடைக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய பாசன முறைகளான, தெளிப்புப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய் நுண்பாசனம் என்று முன்னேறியுள்ளது. பயிருக்கு நீர்த் தேவையான வேர்ப் பகுதியில் பாசனம் செய்யப்படுவதால், நீர்த் தேவை மிக மிகக் குறைகிறது. அதனால், அதிகப்படியான நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர முயலுகின்றது. இதைத் தவிர, இச் சிக்கனப் பாசன முறையிலேயே உரம் மற்றும் மருந்துகள் பயிருக்கு அளிக்க முடிவதால் 'ஒரே கல்லில் இரு மாங்காய்' என்ற பழமொழி பழைய மொழியாகி, இன்று 'ஒரே கல்லில் பல மாங்காய்' என்று நம்மால் பல இடத்தில் அடிக்க இயலுகிறது.

இன்று பாசனம் என்ற ஒரு சொல் 'பயிர்களுக்கேற்றவாறு பாசனம்' என்று பலவகையாகப் பிரிந்து பாசனத்தில் நம்நாடு ஓர் நுணுக்கமான அறிவைப் பெற்றிருக்கிறது.

பால்

உலகில், அதிகக் கால்நடைகளைக் கொண்டிருக்கும் நாடு என்ற பெருமை நமக்கு உண்டு. பால் உற்பத்தியில் உலகில் மூன்றாவது இடத்தை இந்தியா வகிக்கிறது. 1980-81-இல் 3.16 கோடியாக இருந்த பால் உற்பத்தி, 1990-91-இல் 5.37 கோடி டன்களாக அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் கறவை மாடுகள் அதிகம் தேவைப்படுகின்றன. இதற்கு ஆண்டுக்கு 3 கோடி கால்நடைகளைக் கருவுறச் செய்யவேண்டும்.

பயிர்

விவசாயத்திற்குத் தேவையான மற்றொரு மூலப்பொருள் விதையாகும். நல்ல விதை நல்ல விளைச்சலைக் கொடுக்கவல்லது. நல்ல விதையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க நம்மால் முடியும். வேளாண் பொறியாளரது உதவியால் நல்ல விதையைத் தேர்ந்தெடுக்க முடியும். விதைப் பிரிப்பு இயந்திரம் மற்றும் விதைச் சுத்திகரிப்பு இயந்திரம் இவற்றை உபயோகிப்பதால் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுக்க இயலும். அதனால் நல்ல விளைச்சலைப் பெற இயலும்., நல்ல விதையைத் தேர்ந்தெடுத்த பிறகு விதைக்கும் இயந்திரம் (Seed Drilles) மூலமாகச் சிலவகை எண்ணெய்ப் பயிர்களை விதைக்க இயலும். அதனால் ஆட் கூலியும், வேலையும் மிக மிகக் குறைகிறது. பயிருக்குப் பயிர் விட வேண்டிய தூரம் மிகத்துல்லியமாகப் பராமரிக்க முடியும். போதுமான இடைவெளி இருப்பதால் நல்ல விளைச்சலைப் பெறமுடிகிறது.

பயிர் நன்கு வளர்ந்த பின், மருந்து தெளிப்பதற்குப் பாசன முறையில் அன்றி ஸ்பிரேயர் மூலமாகவும் மருந்து தெளிக்கலாம். அதனால் மருந்து எல்லாப் பயிர்களுக்கும் ஒரே சீராகத் தெளிக்க முடிகிறது. கையினால் தெளிக்க முடியாத மருந்துகளை ஸ்பிரேயர் மூலமாகத் தெளிப்பதால் விவசாயிகளுக்கு உண்டாகும் ஆபத்தைத் தவிர்க்க முடிகிறது. நேரமும், செலவும் மிச்சமாகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பயிர் அறுவடைக்குத் தயாராகும் போது, அறுவடை இயந்திரம் மூலம் அறுத்தெடுத்து, தானியத்தை தனியாகப் பிரித்தெடுக்கலாம். அதே போல எண்ணெய் வகைப் பயிரான மணிலாக் கொட்டையைப் பிரித்தெடுக்க இயந்திரம் உள்ளதால் பல நாட்கள் மனிதன் செய்ய வேண்டிய வேலையை இயந்திரம் சிலமணி நேரத்தில் முடித்து விடுகிறது.

அறுவடைக்குத் தயாரான பயிர்களை அறுத்தெடுத்து தானியத்தை உமி மற்றும் தோலிலிருந்து பிரித்தெடுத்து தரம் வாரியாக மெருகேற்றிப் பிரித்து மூட்டை கட்டிப் போடுமளவிற்கு இன்று இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்துள்ளன. அவற்றை உபயோகிப்பதால் அறுவடை முடிந்த அடுத்த நாளில் சந்தைக்குத் தானியத்தையோ, பயிர்வகைகளையோ அனுப்ப முடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

நமது விவசாயிகள் இன்னும் சிறிதளவு மனம் மாறி விஞ்ஞானத்தோடு ஒன்றுபட்டு முன்னேறத் தயாரானால் நாற்று நடவும், களையெடுக்கவும் இயந்திரங்கள் மார்க்கெட்டில் குவிந்து விடும். அவர்களது வேலை மிக மிக எளிதாக்கப்பட்டு விடும். அதனால் அவர்களது மீதியுள்ள மனித உழைப்பை, இயந்திரங்கள் இல்லாத பகுதியில் செலவு செய்ய முன்வருவார்களானால், நமது நாட்டில் பொருளாதாரம் மற்ற நாட்டின் பொருளாதாரத்தை மிஞ்சி, பொறாமைப்படத்தக்க வகையில் அமையும்.

மனித ஆற்றல்

ஒரு காலத்தில், விவசாயம் முழு அளவு மனித ஆற்றலை நம்ப வேண்டியிருந்தது. விவசாயம் பருவத் தொழில் ஆகையால் கூலியாட்கள் கட்டுப்பாடு அதிகம் இருந்தது. ஆனால், இன்று வளர்ந்துள்ள சமுதாயத்தில் இயந்திரத்தின் பங்கு அதிகமாகி மனித ஆற்றலின் பங்கு மிக மிகக் குறைந்துள்ளது. மிகக் குறைந்த மனித ஆற்றலைப் பயன்படுத்தி, பல ஏக்கர் பண்ணை

நினைத்ததைச் சாதிக்கும் நேர்மைவாதி!

நமது மாபெரும் தலைவர் பெரியார் தமக்குச் சரியெனப்பட்டதை எவருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாது, பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்றவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ அதைப் பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. தம் கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களோ என்ற பயம், அவருக்கு இருப்பதே இல்லை.

பெரியார் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால், அவர் பிடிவாதக்காரரல்ல. தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

—சர் ஏ.டி. பன்னீர்செல்வம்

யில் விவசாயம் மிக இலாபகரமாகச் செய்யலாம் என்ற உண்மையை இன்று உலகம் உணர்ந்துள்ளது. இதனால் நேரமும், செலவும் மிக மிகக் குறைகிறது. விவசாயத்தில் பயன்பட்ட மனித ஆற்றலை மற்ற தொழில்களில் ஈடுபடுத்த ஒரு வாய்ப்பை இன்றைய இயந்திரங்கள் மனித சமுதாயத்திற்கு அளித்துள்ளன. இதைத் தவிர விவசாயத்தில் பயன்படக்கூடிய இயந்திரங்களைப் பராமரிக்க, பழுதுபார்க்க வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இன்றைய விவசாயத்தில் இயந்திரத்தின் ஆற்றலே, மனித ஆற்றலை விட அதிகமுள்ளது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

'பட்டம்' என்ற குறுகிய வட்டத்தை விட்டு விவசாயம் இன்று வெளி வந்துவிட்டது. இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விவசாயத்தில் ஓராண்டுப் பயிர் என்ற நிலை மாறி 90 நாட்கள் பயிர் என்று ஆண்டு 3 போகம் நல்ல விளைச்சலை நாம் பெற முடிகிறது எனில், அவற்றிற்குப் பெருமளவு காரணம் விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களேயாகும். விஞ்ஞானத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது. புதிய புதிய உத்திகள், இயந்திரங்கள் கண்டுபிடிப்பதன் மூலம் வேளாண் சமுதாயத்தின் வேலை மிக மிக எளிதாக்கப் படுகிறது. வேளாண் விவசாயிகளும், இதை உணர்ந்து, விஞ்ஞானத்தோடு ஒன்றுபடத் தயாரானால் களர் மேட்டையும் புதிய பாசனமுறைகள் மூலம் நல்ல விளைநிலமாக்கலாம். ஐந்து ஏக்கரில் பத்து ஏக்கருக்கு உண்டான விளைச்சலைப் பெறலாம்.

இவ்வியந்திரங்களின் பலனை அதிகம் பெற வேளாண் மக்கள் முன் வரவேண்டும். நமது பயிர்ச் சாகுபடிப் பரப்பு நமது வேளாண் மக்களிடத்தில் சிறிய சிறிய பரப்புகளாகப் பிரிந்து இருக்கின்றன. சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் மொத்த சாகுபடிப் பரப்பில் 75 சதவிகிதம் உள்ளனர். இவர்கள் தங்களிடம் ஒற்றுமை இல்லாத காரணத்தால், இவ்வியந்திரங்களில் தனித்தனியே முதலீடு செய்து உபயோகப்படுத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இவர்கள் இதன் பயனை நன்கு உணர்ந்தாலும், தங்களது நிதி நிலைமையைக் கருத்தில் கொள்வதால், இயந்திரங்களின் பலன் இவர்களுக்கு ஒரு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. இதை நன்கு உணர்ந்த நமது அரசும், மண் தள்ளும் இயந்திரம், உழுவை மற்றும் தேர்வு செய்யப்பட்ட கருவிகளை மட்டும் வேளாண் பொறியியல் துறை மூலம் மிகக் குறைந்த வாடகைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தது. தற்சமயம் மேற்கூறிய இயந்திரங்களுக்கு வேளாண் மக்களிடத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. அதன் பலனை நன்கு உணர்ந்த விவசாயிகள் வங்கியின் மூலம் நிதி ஆதரவு பெற்று மிக முக்கிய இயந்திரங்களை, பொதுவாக உழுவையை வாங்கிப்பலனை அடைகின்றனர்.

இன்றைய விவசாயிகளின் பிரச்சினையை உணர்ந்த அரசு வேளாண் பொறியியல் துறையின் மூலம், சிறு, குறு விவாசாயிகளை ஒன்றுபடுத்தி, அவர்களது தொழிலுக்கு அடிப்படைத் தேவையான நீரை அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயக் கிணறுகளை அமைத்து, ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளது.

இதேபோல, சிறு, குறு விவசாயிகள் ஒன்றுபட்டு அரசிடமிருந்து, விவசாயத்திற்குப் பயன்படும் இயந்திரங்களைப் பெற்று அதன் பலனைப் பெறுவார்களேயானால், தமிழகத்தில் வேளாண்மையில் தன்னிறைவு பெறுவோம். நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு ஓர் முன்னோடியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இராமு. சக்திவேலு, பி.இ.,
செயற் பொறியாளர் (வே.பொ.)
மற்றும்
பி.வி. சுப்பிரமணியன், பி.இ.,
உதவிப் பொறியாளர் (வே.பொ.)
சென்னை.

சிக்கனமே சீரான வாழ்வு

சிக்கனந்தான் சிறந்ததொரு வாழ்வளிக்கும்
சிந்தையில் கொண்டுவிட்டால் உயர்வளிக்கும்
எக்கணமும் அதன்வழியே சிறந்ததாகும்
என்றுமில்லை துன்பமென்று மகிழ்ந்திடலாம்

வரவுக்குள் செலவுதனை அடக்கவேண்டும்
வகையற்ற செலவுகளை முடக்கவேண்டும்
பரவுகின்ற ஆசையை விலக்கவேண்டும்
பகுத்தறிவால் வாழ்வுதனைத் துலக்கவேண்டும்

பெருமைக்கு வழிவிட்டு அலையவேண்டாம்
பெருந்துன்பம் கொண்டுநிலை குலையவேண்டாம்
வரும் பொருளின் அளவுதனை அறியவேண்டும்
வந்ததற்குள் நம்வாழ்வை நடத்தவேண்டும்

வீட்டுக்குள் சிக்கனத்தை வளர்க்கவேண்டும்
விளைகின்ற நன்மையை உணரவேண்டும்
நாட்டுக்கும் அவ்வழியே நன்மையாகும்
நம்மவர்கள் கடைப்பிடித்து வாழவேண்டும்

—கவிஞர் பூவேந்தன்

மாணவர் பக்கம்:

மயிலே! மயிலே!

இந்தியாவின் தேசியப்பறவை மயில் என்று உங்களுக்குத் தெரியும்.

மயில்களில் இரண்டு வகை உண்டு. இந்தியாவிலும், இலங்கையிலும் காணப் படும் மயில் நீல மயில் என்றும், மலேசியா, இந்தோனேஷியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காணப் படும் மயில், பச்சை மயில் என்றும் அழைக்கப்படுகிறது.

பச்சை மயிலுக்கே மதிப்பு அதிகம். அதாவது, அந்த மயிலுக்கே விலை அதிகம். நன்கு தோகை வளர்ந்த ஒரு இணை மயில்களின் விலை எவ்வளவு தெரியுமா? சுமார் 28,000 ரூபாய்!

பச்சை மயில்களின் வண்ணத் தோகை கண்ணைப் பறிக்கும். இதில் ஆண்-பெண் இரண்டும் அடங்கும். ஆனால், இந்தியாவில் உள்ள நீலமயில் வகையில் ஆண் மயில் மட்டுமே அழகுடையது- வண்ணத் தோகை கொண்டது. பெண் மயிலின் வண்ணம் சுமாராகத் தான் இருக்கும்.

பிரிட்டனில், நாரிச் எனும் நகருக்கு அருகில் மிகப் பெரிய மயில் பண்ணை உள்ளது. இங்கு ஆயிரம் மயில்கள் உள்ளன.

ஐரோப்பாவில், மயில்களைச் செல்லப் பறவைகளாக வளர்க்கிறார்கள்.

—ஆதாரம்: தினமணி

எல்லாரும் ஒன்று

(மயிலை முத்தெழிலன்)

இந்தியா என்பது நம்நாடு;
இன்பத் தமிழகம் நம்வீடு!
இந்தியப் புகழைத் தினம்பாடு;
இந்தியங் காக்கப் பாடுபடு!

ஆற்றுச் செல்வம் நமக்குண்டு;
அன்னைத் தமிழோ கற்கண்டு!
ஏற்றம் கொண்ட குறளுண்டு;
எண்ணிலா இயற்கை வளமுண்டு!

நல்லவர் வழியில் சென்றிடுவோம்
நம்பங்க யாவும் வென்றிடுவோம்!
எல்லாரும் ஒன்றென வாழ்ந்திடுவோம்;
என்றும் மகிழ்வில் ஆழ்ந்திடுவோம்!



நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுங்கள்!

மாண்புமிகு முதல்வர் உரை

தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், இந்தப் பள்ளிக்கூடம், எனது 'தாய் வீடு' போன்றது. எனது வாழ்வில் மகிழ்ச்சியான நாட்கள் பலவற்றை, நான் இங்குக் கழித்திருக்கிறேன்.

அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது 1964-ஆம் ஆண்டு நடந்த விளையாட்டு விழா. அதில் நான் ஒரு மாணவியாகக் கலந்துகொண்டேன். அத்துடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவிகளில், ''சிறந்த மாணவி''க்கான சுழற் கேடயத்தையும் நான் பெற்றேன்.

சுமார் 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும், அந்த இனிமையான நிகழ்ச்சி எனது நெஞ்சில் பசுமையாக உள்ளது.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் உயர் கல்வி பயில பெரிதும் விரும்பினேன். ஒரு கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால், அந்த இளமையான வயதில் எனது குடும்பத்திற்குத் துணைபுரிய வேண்டிய பொறுப்பு எனது தோளில் விழுந்தது. அதனால், தொடர்ந்து படிக்க இயலவில்லை. இப்போது, முதலமைச்சர் என்ற முறையில், தமிழகத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நாங்கள் படிக்கும்போது டெலிவிஷன், வீடியோ போன்ற மாணவ மாணவிகளின் கவனத்தைத் திசை திருப்பும் சாதனங்கள் இல்லை. இப்போது இதுபோன்ற ஏராளமான பொழுது போக்குச் சாதனங்கள் வந்துவிட்டன. இவற்றுக்கு மத்தியில் மாணவ-மாணவிகள் மணிக்கணக்கில் டெலிவிஷன், வீடியோவின் முன்பு உட்கார்ந்திருப்பதை அறிகிறேன். இது அவர்களின் உடலுக்கும், மனதுக்கும் கேடு விளைவிக்கும்.

எனவே, உங்களது நேரத்தை, அதிகப்பட்சம் நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே செலவிடுங்கள். மாணவப் பருவத்தில் படிப்பவைதான்

மனதில் நிறையும். அது, உங்கள் வாழ்வின் இறுதி வரை துணை நிற்கும். நான், இன்று வரையில் ஒவ்வொரு இரவிலும் படிப்பதற்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கி வருகிறேன்.

கடந்த 1964-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தின் சார்பில் சுழற்கேடயம் வழங்கப்பட்டது. ஆங்கிலத் திறமை, பொது அறிவு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி போன்றவற்றுக்காக அந்தக் கேடயத்தை நான் பெற்றேன்.

இப்படி ஒட்டுமொத்த திறமைக்கான பரிசைப் பெற்ற கடைசி மாணவி நான்தான் என அறிகிறேன். இதற்கான காரணம் இதுபோல் எல்லாத் திறமையும் ஒருங்கிணைந்த மாணவியாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதுபோன்ற சிறந்த மாணவிகளை உருவாக்கி, அவர்கள் படிப்பை முடித்து வெளியேறும்போது, சுழற்கேடயம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டுவந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இதற்கான கேடயத்தை நானே வழங்குகிறேன்.

அத்துடன், எனது சொந்தப் பணத்தில் இருந்து ஒரு இலட்ச ரூபாயைப் பள்ளிக்கூடத்திற்காக வழங்குகிறேன்.''

(தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 29.8.92 அன்று ஆற்றிய உரை)

பொன்மொழிகள்

மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

- தந்தை பெரியார்.

உண்மை, அன்பு, மனத்தூய்மை இவற்றை எதிர்க்க எதனாலும் முடியாது. நீ மனத் தூய்மை உள்ளவனாக தன்னலமற்றவனாக, அன்பானவனாக இருந்தால், சாவைக்கூடக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.

- சுவாமி விவேகானந்தர்.

நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

- பேரறிஞர் அண்ணா.

உங்கள் வீட்டுத் திண்ணை சும்மா இருக்குமானால், அதை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாற்றுங்கள். அது ஒரு கோவிலைக் கட்டியதற்கு ஒப்பாகும்.

- மூதறிஞர் இராஜாஜி.

ஆசிரியர் தின விழா

மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவருமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள், ஆசிரியர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இவ்வாண்டு ஆசிரியர் தின விழா 5.9.1992 அன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு நல்லாசிரியர்களுக்கு விருதுகளையும், 1992 பொதுத் தேர்வுகளில் மாநிலத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசுகளையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றுப் பேசுகையில், ''ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு தலைமையாசிரியர் மூலமாக அனைத்து ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முறையாக வாழ்த்துரை அனுப்பியிருக்கிறார்கள். சமுதாயத்தில் உள்ள அனைவரும் ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஆசிரியர் தின விழா கொண்டாடப்படுகிறது. அரசின் சார்பில் மக்கள் ஆதரவோடு இந்த விழா நடைபெறுகிறது.

''மற்ற தொழில்களுடன் போல ஆசிரியர் தொழிலை ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. மாணவர்கள் அனைவரையும் அறிவுடையவர்களாக, ஆற்றல் உடையவர்களாக ஆக்கும் மகத்தான பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. எனவே, ஆசிரியர் பெருமக்கள் சமுதாயச் சேவையாக, மக்களுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி ஆசிரியர் பணியில் ஈடுபட வேண்டும். அன்புள்ளத்தோடு செய்யும் தொழில் ஆசிரியர் தொழில். ஆகவேதான், ஆசிரியர்களைப் போற்றுகிறோம். அவர்களது தன்னலமற்ற சேவைக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்''. என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சார்பில் ஆசிரியப் பெருமக்களுக்கு இரண்டு செய்திகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1. 1990-91, 1991-92 ஆகிய இரு ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுநிலை ஆசிரியர்களை முந்தைய ஆட்சி நியமித்தது. அதை

தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்துக்குப் பாராட்டு!

1986-87-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் 6 மாவட்டங்களில் டேனிடா திட்டத்தின் கீழ் முதல்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திட்டங்களை டென்மார்க் நாட்டிலிருந்து வந்த டேனிடா திட்ட அலுவலர்கள் அண்மையில் தமிழகத்திற்கு வருகை செய்து பார்வையிட்டனர். மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில் இந்தத் திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக இந்த அலுவலர்கள் பாராட்டு தெரிவித்தார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டேனிடா திட்டத்தினைப் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த டென்மார்க் நாட்டு அலுவலர்கள் இசைவு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற ரூ.15 கோடி நிதியுதவி வழங்க இந்தக் குழு உறுதியளித்துள்ளது.

பெண்களுக்குப் பயிற்சி: இந்த டேனிடா 2-வது கட்ட திட்டத்தின்கீழ், மகளிர் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதன்படி அடுத்த ஏழு ஆண்டுகளில் ஆண்டுகளில் 70 ஆயிரம் பெண்கள் வீதம் சுமார் 5 இலட்சம் பெண்களுக்கு, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற விவசாயப் பணிகளில் பயிற்சி அளிக்கப்படும். பெண் விவசாய அலுவலர்கள் மூலம் இந்தப் பயிற்சியை அளிக்க அரசு பரிசீலனை செய்து வருவதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அன்று எதிர்க்கட்சியாக இருந்த எங்கள் அ.இ.அ.தி.மு.க. கட்சி எதிர்த்தது. வன்மையாகக் கண்டித்தது. ஒரே தகுதியுள்ள ஆசிரியர்களில் புதிதாக நியமிக்கப்படுபவர்களைக் குறைந்த சம்பளம் (தொகுப் பூதியம்) கொடுத்து வேலை வாங்குவது கொத்தடிமை முறைக்குச் சமமாகும் என்று கண்டித்தோம். ஆகவே, ஒப்பந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து வருகிறார்கள்.

2. நோய்வாய்ப்படும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து இதுவரை ரூ.950 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், சில ஆசிரியர்கள் இருதய, சிறுநீரக மற்றும் புற்று நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற இந்தத் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்த உதவித் தொகையை ரூ.25 ஆயிரமாக உயர்த்துவது குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து வருவதாகக் கூறினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், "நாட்டில் எந்தச் செல்வத்தையும்விட சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அறிவுச் செல்வம் எந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நாடு வளருகிறது. அறிவுத் திறனை மட்டும் வளர்த்தால் போதாது. ஆற்றல் திறனையும் வளர்க்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப அறிவியலாக மாற்றப்பட வேண்டும். குழந்தைகளை அறிவாளிகளாக ஆக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1901-இல் தமிழ்நாட்டில் 100-க்கு 6 பேர்தான் எழுதப்படிக்க தெரிந்தவர்களாக இருந்தனர். ஆனால், இன்று 100-க்கு 64 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆக்கப்பட்டு தமிழகம் எழுத்தறிவில் இந்தியாவில் இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது.

"தமிழக அரசு இந்த ஆண்டு கல்விக்காக ரூ.1,518 கோடி ஒதுக்கியிருக்கிறது. மாநிலத்தின் வருவாயில் 23 சதவிகிதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. ஆண்டுக்கு ஆண்டு ஆசிரியர்களின் வசதி வாய்ப்புகளும் வளர்ந்து வந்திருக்கின்றன. கல்வியின் மூலமாகத்தான் அறிவுச் செல்வத்தையும், ஆற்றல் செல்வத்தையும் நாம் பெறமுடியும். ஆசிரியப் பணியிலிருந்து விலகிய பிறகும் தங்கள் தொண்டு தொடர வேண்டும்.

பிறருக்கு எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் 228 ஆசிரியர்களுக்கு 'நல்லாசிரியர் விருது'களையும் , 1992 எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளி (பிளஸ் 2) பொதுத் தேர்வுகளில் அதிக மதிப் பெண்கள் பெற்ற 193 மாணவ மாணவியர்க்குக்குக் காசோலையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் ஆசிரியர் தேசிய நல நிதிக்கு, சென்னை மாவட்டத்தின் சார்பாக ரூ.4 இலட்சத்து 35 ஆயிரத்துக்கான காசோலையை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலச்சந்தர் இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சரிடம் வழங்கினார்.

முன்னதாக, கல்வித்துறைச் செயலர் திரு. வி. சங்கர சுப்பையன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் ஏராளமான பள்ளிக் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

முன்னதாக வண்ண உடை அணிந்த பள்ளி மாணவிகள் அமைச்சர்களை மலர்தூவி வரவேற்றனர்.

ஜே. சந்திரன்.

நூற்றாண்டு விழாக் காணும் முன்னாள் மேயர் என். சிவராஜ்

ந.அ. கருணாகரன்

1992, செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள், சென்னையின் முன்னாள் மேயர் ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்ட மறைந்த பெரியவர் என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளாகும்.

அப்பொழுது சென்னை மாநிலத்தின் ஓர் ஊராகவும், இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ள ஊராகவும் உள்ள கடப்பையில் 1892-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் நாள் பிறந்தார் என். சிவராஜ். இவரது தாயின் மூத்த சகோதரர் வி.ஜி.வேணுகோபால் இல்லம் கடப்பையில் இருந்தது.

மூன்று மாதங்கள் வரையில் கடப்பையிலும், பின்னர் சென்னை இராயப்பேட்டையிலும் வளர்ந்தார். நான்காம் வகுப்பு வரை வீட்டிலேயே பயின்று 1902-இல் சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் சேர்ந்து படித்து, வெஸ்லி கல்லூரியிலேயே இண்டர் மீடியட்டை முடித்து, சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டத்தையும், சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டத்தையும் பெற்றார்.

வி.ஜி. வேணுகோபால் பிள்ளை அவர்களின் இளைய சகோதரர் வி.ஜி. வாசுதேவ பிள்ளையின் மகள், மீனாம்பாளை 1918 ஜூலை 10-இல் சிவராஜ் அவர்கள் திருமணம் செய்துகொண்டார். அவரது தாய் மாமன்களாகிய வேணுகோபால் பிள்ளை, வாசுதேவப் பிள்ளை இருவருமே நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்கள். சென்னை மாநகராட்சி, மீனாம்பாளின் தந்தையின் பெயரில் வட சென்னையில் வாசுதேவப் பிள்ளைத் தெருவையும், வாசுதேவப் பிள்ளைப் பூங்கா ஒன்றையும் அமைத்தது. சிவராஜ் அவர்கள் நீதிக் கட்சியில் சேர்ந்து தீவிரமாக ஈடுபட்டதற்குக் காரணமே அவரது தாய் மாமன்கள் தாம். அவரது செயல்பாட்டிற்கெல்லாம் அவரது மனைவி மீனாம்பாள் உறுதுணையாக நின்று ஊக்குவித்தார்.

1923-இல் திரு. சிவராஜ் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் செனட் உறுப்பினராக விளங்கி, பணியாற்றி வந்தார். சென்னை சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியில் அமர்ந்து பின்னர் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். 1926 முதல் 1936 வரை சென்னை சட்டமன்றத்தில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினராக விளங்கி வந்தார்.

1929 ஆகஸ்ட் 25-இல் மதுரையில் நடைபெற்ற மதுரை மற்றும் இராமநாதபுரம் தென் இந்திய நல உரிமைச் சங்க இளைஞர் மாநாட்டிற்குத் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றினார். ஆந்திராவில், நெல்லூரில் 1929 அக்டோபர் 5,6 நாட்களில் திரு. எம். முனுசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் 11-வது மாநில மாநாட்டில் திரு. என். சிவராஜ் கலந்து கொண்டு, சர்.பி. பாத்ரோ, பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோரை ஆதரித்துப் பேசினார்.

ஆங்கில அரசு ஏழு அங்கத்தினர்கள் அடங்கிய சைமன் குழுவுடன் ஒன்பது இந்திய உறுப்பினர்களைக் கொண்ட இந்திய

நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:

சென்னையின் முன்னாள் மேயர், மறைந்த திரு. என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னை, இராயப்பேட்டையில் அவர் வாழ்ந்த ஆண்டித் தெருவுக்கு 'மேயர் சிவராஜ் வீதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட திரு. என். சிவராஜ் அவர்களின் நினைவாக, சென்னையில் வெண்கலத்தால் செய்யப்பட்ட அவருடைய சிலை ஒன்று நிறுவப்படும்.

(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 25.3.1992 அன்று நடைபெற்ற செய்தி-சுற்றுலாத்துறைக் கொள்கை விளக்கக் குறிப்பில்)

மத்தியக் குழு ஒன்றையும், பத்து மாகாண குழுக்களையும் நிறுவி இந்தியாவின் நிலையை ஆராய அனுமதித்தது. சென்னை மாகாணக் குழுவில் என். சிவராஜ் இடம் பெற்றார்.

பம்பாய் மாநிலத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டனர்.

என். சிவராஜ் அவர்களுக்கு இலண்டன் வட்டமேசை மாநாட்டிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பாரின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட ராவ் பகதூர் ஆர் சீனிவாசன் 1930 டிசம்பர் 3-லும், டாக்டர் அம்பேத்கர் 1931 ஜனவரி, 4-லும், 1932 நவம்பர் 9-லும் எழுதிய கடிதங்களில் அவர்களது பணி செம்மையாக நடைபெறுகிறது என்றும்

களில் இவர் காலத்தில் கட்டாயக் கல்வி வலியுறுத்தப்பட்டவுடன், பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா என்பதைக் கண்காணிக்க 4 தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

திரு. என். சிவராஜ், வீணை, சித்தார், ஆர்மோனியமும் நன்றாக வாசிக்கக்கூடிய கலைஞர். மேல் நாட்டு நடனம் ஆடுவதிலும் இசையிலும் ஆர்வம் கொண்டவர். குதிரைச் சவாரி செய்வதில் வல்லவர். சென்னை ரேஸ் கிளப்பின் மேலாளராகவும் விளங்கினார். தென்னக விளையாட்டுக் கழகத் தனித்

பேரறிஞர் அண்ணாவுடன்...

ஜின்னாவுடன்... (இடையில் இருப்பவர் கிரிப்ஸ்)

பச்சையப்பன் கல்லூரியில் 1929 பிப்ரவரி 14-இல் சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையின் பன்னிரெண்டாம் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டிற்கு சிவராஜ் தலைமை தாங்கி 1928 ஜனவரி 29- இல் ஆதிதிராவிடர்களின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், அதே ஆண்டில் அக்டோபர் மாதத்தில் நடந்த The Madras Provincial Depressed Classes Federation-னின் தலைவரான இரட்டைமலை சீனிவாசன் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கையையும், அங்கீகரிக்கச் செய்தார். 1929 பிப்ரவரி 18-இல் சென்னைக்கு வருகை தந்த சைமன் குழுவிடம் இரட்டைமலை சீனிவாசன் மற்றும் ஆதிதிராவிடத் தலைவருடன் சிவராஜும் சென்று அக்குழுவை சென்னை மன்றோ சிலைக்கு அருகில் எதிர்கொண்டு வரவேற்று தங்கள் மனுக்களை வழங்கினார்கள்.

இலண்டனில் 1930, 1931, 1932-இல் நடந்தேறிய மூன்று வட்டமேசை மாநாடுகளில், சென்னை மாநிலத்தின் சார்பாக ராவ்பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களும்,

அதில் வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்தார்கள்.

1945-46-இல் என். சிவராஜ் சென்னை மேயராக விளங்கினார். 194 ஜனவரி 29-இல் குடிசைப் பகுதிகளின் முன்னேற்றப் பணிக்காக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான குழுவினை நகரசபையில் உருவாக்கி அதன் தலைவரானார். சென்னை மாநகரில் மதுவிலக்கைத் தீவிரப்படுத்தினார். மாநகராட்சிப் பள்ளி

தலைவராகவும் விளங்கினார். **இவர் மேயராக விளங்கிய காலத்தில்தான் 'நேரு விளையாட்டு அரங்கம்' கட்டப்பட்டது.**

1945 டிசம்பர் 25-ந் தேதி மாலையில் சென்னை கர்ன்ஸ்மித் மைதானத்தில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அகில இந்திய செட்யூல்டு வகுப்பினரின் பெடரேஷனின் தேர்தல் கூட்டத்தில் மேயர் என். சிவராஜ்

டாக்டர் அம்பேத்கருடன்...

பண்டித நேருவுடன்...

தலைமை தாங்கினார். டாக்டர் அம்பேத்கரின் ஆங்கில உரையை அக்கூட்டத்தில் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

சென்னைக்கு தெற்கே செங்கல்பட்டுப் போகும் பாதையில் தாம்பரம் ரெயில் நிலையத்திற்கு மேற்கே பெருவழிப்பாதையை ஒட்டிய இடத்தில் இடத்தில் ஒரு நகரை உருவாக்கி 1946 செப்டம்பர் 1-இல் மேயர் சிவராஜ் அவர்களால் அந்த நகருக்கு 'பெரியார் ராமசாமி நகர்' என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த விழாவில் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

திரு. என். சிவராஜ் அவர்களுக்குப் பிரிட்டிஷ் அரசு ராவ் சாகிப் என்ற பட்டத்தையும், ராவ் பகதூர் என்ற பட்டத்தையும் வழங்கியது.

1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். மீண்டும் 1957-இல் நடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957 முதல் 1962 வரை நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். 1959 மே 8-இல் சீனா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

சான்பிரான்சிஸ்கோ, அமெரிக்கா,

முன்னாள் குடியரசுத் தல ஜாகீர் உசேனுடன்...

கனடா, பர்மா, மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டு, அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றிய விளக்கங்களைப் பற்றி விவாதித்தார்.

1964 செப்டம்பர் 29-ஆம் நாள் காலை 5.30 மணி அளவில் மாரடைப்பால் காலமானார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 121-வது பிறந்த நாளையொட்டி, சென்னைத் துறைமுகம் அருகிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு 5.9.92 அன்று காலை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மகாகவி பாரதி



மக்கள் கவிஞர்

சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த தேசியச் சிமிழ்களில் அவற்றை அடைத்து விட முடியாது. புராதன சம்பிரதாயங்களின், கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி, ஆவேசமாக எறிகிறார் அவர் சுடுசொற்களை.

பாரதியை, 'தேசியக்கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒருசாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம், கவிஞரின் மற்றொரு தன்மையை- அதாவது பாரதி மக்கள் கவிஞர் என்ற உண்மையை - மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

—பேரறிஞர் அண்ணா

உலகக் கவி

பாரதி தமிழ்நாட்டின் கவி மட்டுமல்லர்; அவர் உலகக் கவி. அவருடைய கவிதைகளை எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டும்.

—பண்டித நேரு

தமிழன் பெற்ற பேறு

மாகாண மொழிகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி போன்றவற்றினிலே, சென்ற முந்நூறு ஆண்டுகளிலே பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.

—மூதறிஞர் ராஜாஜி

உலகக் கவிஞர்

பாரதியார் உலகக் கவிஞர், உலகமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழத் தகுந்த உயரிய எண்ணங்களையும், கருத்துக்களையும் அவரது பாடல்களில் காணலாம்.பாரதியின் பாடல்களை அச்சில் படிப்பதைவிட, அதனைப் பிறர் உணர்ச்சியோடு பாடக் கேட்பதால் பெரும் பயன் ஏற்படும்.

—பெருந்தலைவர் காமராஜர்

வளர்ச்சி

என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு, பாரதியின் தோழமையினால் விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

—வ.உ.சிதம்பரனார்.

வாழ்த்துவோம் வணங்குவோம்



எஸ். நல்லரசு

செப்டம்பர் - 15!

தமிழ்நாட்டின் வரலாற்றில் இது ஒரு நன்னாள்! பேரறிஞர் அண்ணா பிறந்த பொன்னாள்! நம் கண்ணில் படுவது அண்ணா சிலை! அண்ணா சாலை! அண்ணா சதுக்கம்! அண்ணா மேம்பாலம்! அண்ணா பல்கலைக் கழகம்! அண்ணா மாவட்டம்!

இப்படி எங்கு சென்றாலும் நம் கண்ணிலும் கருத்திலும் நீக்கமற நிறைந்து நிற்கும் அண்ணா, தமிழ் நாட்டின் தலைசிறந்த தலைவராக, தமிழகத்தின் முதல்வராக, தரணியெங்கும் வாழும் தமிழ் மக்களின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டின் பெயரையும் புகழையும் உலகெல்லாம் பரப்பி உயர்ந்தார்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக'', என்றார் வள்ளுவர். வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு ஏற்பப்புகழோடு தோன்றி, புகழோடு வாழ்ந்தவர், தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர் பேரறிஞர் அண்ணா. 1909-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க காஞ்சிபுரத்தில் பிறந்தார்.

தமிழக மக்களின்பால் அவர் பொழிந்த அன்பாலும், அருள் தொண்டாலும் மக்களுக்கு அவர் அண்ணனானார். 'அண்ணா, அண்ணா' என்றே தமிழக மக்கள் அனைவராலும் அழைக்கப்பட்டார்; போற்றப்பட்டார்.

எம்.ஏ. பட்டம் பெற்ற அண்ணா இந்த நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தன்னை ஒப்படைத்தார். அவர் படித்து முடித்த காலத்தில் பதவிகளெல்லாம் அவரை எதிர்கொண்டு அழைத்தன. படித்த படிப்பை எல்லாம் பதவிக்குப் பாதகாணிக்கையாக்கிட, அண்ணா விரும்பவில்லை.

பாராண்ட தமிழினம், 'பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டுக்' கிடந்ததைக் கண்டார். சாதிமத பேதங்களால் முட்டி மோதிக் கொண்டு சீரழிந்து கிடந்தது சமுதாயம். வறுமையில் வாடிக்கொண்டு தனது தாழ்நிலைக்குத் தலைவிதிதான் காரணம் என்று மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தனர் மக்கள்.

இந்தச் சமுதாயத்தைத் திருத்தித் தன்மான உணர்வூட்டி, பழம் பெருமை மீட்டித் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திட தனது வாழ்வை அர்ப்பணித்தார். ஈரோட்டுச் சிங்கம், சீர்திருத்தச் செம்மல், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைத் தம் தலைவராகக் கொண்டார்.

தந்தை பெரியார் அண்ணாவுக்குத் தலைவர்; அனைவருக்கும் பெரியார். அவருடைய பிறந்த நாள் அடுத்து வருகிறது செப்டம்பர் 17-இல். தந்தையும் தனயனுமாய் இலட்சியத்தால் பிணைந்த இருவரது பிறந்த நாளும் இணைந்து வருகின்றன ஒரே வாரத்தில்.

பாவலர் பாராட்ட, காவலர் தாலாட்ட, கற்றறிந்தோர் சீராட்ட வளர்ந்த தமிழுக்கும், பத்தாக, எட்டாக, பதினெட்டாகப் பல்கிப் பெருகிய இலக்கியங்களுக்கும் சொந்தக்காரர்களான தமிழர்கள் தலைகுனிந்து கிடந்ததை அண்ணா கண்டார். தமது பேச்சையும் மூச்சையும் எண்ணத்தையும் எழுத்தையும் தமிழ்நாட்டுக்கே அர்ப்பணித்தார்.

'ஏ' தாழ்ந்த தமிழகமே! தன்னை மறந்த தமிழகமே' என்று கூவித் தமிழகத்தைத் தட்டி எழுப்பினார்.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நுழைந்து மாணவர் களிடம் தமது சொல்லாற்றலால் கருத்துப்புரட்சி செய்தார். அவரது பேச்சுக்கும் எழுத்துக்கும் இருந்த காந்த சக்தி இளைஞர் சமுதாயத்தை ஈர்த்தது. மூத்த சமுதாயத்தைத் திருத் தியது. மாணவர்களும் - இளைஞர் களும் அண்ணாவின் சுட்டு விரல் ஆணைக்குப் பணிந்து நின்றனர்.

படித்தவர்கள், பட்டதாரிகள் முதல் பாமரர் வரை அண்ணாவைப் பின் தொடர்ந்தனர். அவரையே நம்பினர். அண்ணா முதலமைச்சர் ஆனார்.

ஆட்சியில் அமர்ந்த அண்ணா,

ஏழைகளை வாழவைக்கத் திட்டம் தந்தார். முதன்முறையாக வரியில்லாத வரவு - செலவுத் திட் டத்தைத் தந்தார்.

வறுமையில் வாடிய ஏழை களுக்கு வயிற்றுக்கு உணவு தந்தார். படியரிசித் திட்டம் தந்து பாமரரை வாழவைத்தார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே-ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்று பாடினார் பாரதியார்.

ஆனால், அந்தச் செந்தமிழ்நாடு சொந்தப் பெயர் இல்லாமலே 'சென்னை மாகாணம்' என்ற வேறொரு பெயரைத் தாங்கி நின் றது. இந்த இழிநிலையை மாற்றித் 'தமிழ்நாடு' எனும் இனிய பெய ரைத் தமது அமுதவாயால் தமிழ் மண்ணுக்குச் சூட்டி, தரணிக்கு நம் தமிழ்நாட்டை அறிமுகப்படுத்தினார். தமிழனைத் தலைநிமிரச் செய்தார் அண்ணா.

தீண்டாமை ஒழிப்பிலே தீவிரம் காட்டிய அண்ணா, சாதிக் கொடு மைக்கு முடிவுகட்ட கலப்புத் திரு மணத்திற்கு அரசாங்கமே பரிசு வழங்கிடும் அரிய திட்டத்தை அறி முகப்படுத்தினார். இந்தியாவில் வேறு எங்கும் நடந்திராத புதுமை இது. இதனால் தாழ்த்தப்பட்டோர் தலைநிமிர்ந்தனர். தன்மானம் பெற்றனர்.

அண்ணாவின் அறிவாற்றலைப் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள 'ஏல்' (Yale University) பல்கலைக் கழகம் அண்ணாவை அழைத்துச் சிறப்புப் பட்டம் வழங்கிச் சிறப் பித்தது. முன்பெல்லாம் இந்தச் சிறப்புப் பட்டம் அமெரிக்கர்களுக்கு மட்டுமே கிடைத்தது. இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற முதல் வெளிநாட்டவர் அண்ணாதான்.

தாம் பட்டம் பெற்றது மட்டு மல்ல, அந்தப் புகழ்மிக்க பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தி, குறளின் பெருமையை தமது ஆங்கிலப் புலமை மூலம் எடுத்துரைத்தார்.

தமிழ் மக்கள் வாழ்வு சிறக்க, தமிழ்நாட்டின் பெருமை பாரெங்கும் பரவிடத் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய அண்ணா புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உடல் நலிந்தது.

தமிழ் மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழா நடந் தது. அந்த விழாவில் கலந்து கொண் டால் உடல் மேலும் மோசமடையும். உயிருக்கு ஆபத்து என்று கூறி மருத் துவர்கள் தடுத்தனர். ஆனால், எது வாழ்வின் இலட்சியம் நிறை வேறும் இந்த விழாவில் கலந்து கொள்ளப் பயன்படாத உயிர் எனக்குத் தேவையில்லை'', என்று சொல்லிவிட்டு, விழாவில் அண்ணா கலந்து கொண்டார். தமிழ்நாடு என்ற பெயரைத் தந்தார். அதற் காகத் தம் வாழ்வையும் தந்தார்.

அண்ணா தலைசிறந்த பேச் சாளர், எண்ணற்ற பேச்சாளர்களை உருவாக்கினார். ஒப்பற்ற எழுத் தாளர், எழுத்தாளர் பரம்பரை யையே உருவாக்கினார்.

அவர் ஒரு புதிய தமிழ் நடை யைத் தந்தார். தமிழ் மேடைக்கு உயி ரூட்டினார். அண்ணா இல்லையேல் தமிழ் இல்லை. தமிழ்நாடு இல்லை; தமிழருக்குத் தன்மான வாழ்வும் இல்லை.

தமிழின் மூச்சாய், தமிழரின் மூச்சாய் இருந்த அண்ணா 1969 பிப்ரவரி - 3-ஆம் நாள் மறைந்தார். தமிழகம் துயரத்தில் மூழ்கியது.

'நடக்கக் கூடாதது நடந்து விட் டது. நாட்டில் இருள் சூழ்ந்து விட்டது', என்று கூறித் தந்தை பெரியார் வேதனைப்பட்டார்.

அண்ணாவின் இறுதி ஊர்வலத் தில் அண்ணாவின் உடலைக் காணவும். வணங்கவும் திரண்ட தைப் போன்ற பெருங்கூட்டம் உலக வரலாற்றில் வேறு எந்த இறுதி ஊர்வலத்திலும் எங்கும் எப்போதும் திரண்டதில்லை என கின்னஸ் புத்தகம் கணக்கெடுத்துக் கூறுகிறது. (கின்னஸ் புத்தகம் 1984).

தமிழுக்குத் தொண்டு செய்து
சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சு வல்லோன்;
தமிழன், வீரன்;
தமதென்றும் தமரென்றும்
பார்ப்பதன்றித் தமிழ்நாட்டின்
நலத்தினுக்கே.

'உயிர், உடல் அமைகவென உழைக்கும் மேலோன்!' என்று பாவேந்தர் பாரதிதாசன் அண்ணா வைப் பற்றிப் பாடினார்.

தமிழுக்காகவும், தமிழர் வாழ்வுக் காகவும் உயிரையும் உடலையும் தந்து உழைத்தவர் அண்ணா. அவர் வளர்த்த தமிழால், அவர் தந்த தமிழால், அவர் காத்த தமிழால் அவரை வாழ்த்துவோம்; வணங்கு வோம்; அவர் வழி நிற்போம்.

வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெறவேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடா முயற்சியும் மிகமிக அவசியமாகும்.

- பேரறிஞர் அண்ணா.



தத்துவமேதை

டாக்டர் இராதாகிருஷ்ணன்

ஒடிசலான உடலும், திண்ணிய நெஞ்சமும், கீழே பஞ்சகச்சமும் மேலே கோட்டும், தலையில் வெள்ளைத் தலைப்பாகையுமான தோற்றம் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குச் சொந்தம். அமைதியான-அதே சமயத்தில் ஆழ்ந்த அழுத்தமான சொற்பொழிவாற்றல் மிக்கவர் அவர். தாய்மொழி தெலுங்கானாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவ்வம் மொழிப் பண்டிதர்களே வியக்கும்படியான சொல்லாட்சி அவருடையது.

அவரது முன்னோர்கள், சர்வபள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். நடுத்தரக் குடும்பமொன்றின் தலைவரான திரு. வீராசாமி என்பார், பிழைப்புத் தேடி, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் வந்து குடியேறினார். அவருக்கு ஐந்து பிள்ளைகள்; ஒரே பெண். அவர்களில் இரண்டாவது மகனாக 1888ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி பிறந்தவர்தான் நமது டாக்டர் இராதாகிருஷ்ணன்.

வருங்காலத்தில் தலைசிறந்த தத்துவஞானியாகவோ, எதிர்கால இந்தியாவின் குடியரசுத் தலைவராகவோ தமது மகன் விளங்கப் போகிறார் என்று அந்தத் தந்தைக்குத் தெரியாது. தாமே தன் அன்பு மகனுக்கு ஆரம்பக் கல்வியைப் போதித்தார். பன்னிரண்டு வயதிற்கு மேலேதான் அவர் பள்ளியிலேயே சேர்க்கப்பட்டார். தந்தையார் மூலமே வடமொழியறிவும் வாய்க்கப்பட்ட அவர், கிறிஸ்துவக் கல்விக் கூடங்களில் படித்ததால் அந்த மதம் பற்றியும் இளமையிலேயே ஏராளமாகத் தெரிந்து கொண்டார். கிறிஸ்துவ வேதமான பைபிளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்.

திருத்தணியில் பள்ளிப் படிப்பு முடிந்தது. கல்லூரிப் படிப்பு, வேலூர் ஊரிசுக் கல்லூரியில் தொடர்ந்தது. அங்கே எஃப்.ஏ. படிப்பு முடிந்ததும், சென்னையில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் தத்துவப் படிப்பு அவரை ஆட்கொண்டது. இதற்கு இராதாகிருஷ்ணனைத் தூண்டியவர். அவரது சித்தப்பா மகனேயாவார். எம்.ஏ. வகுப்பிலும் தத்துவப் படிப்பை மேற்கொண்ட அவரை, அப்போது சுவாமி விவேகானந்தரின் விவேகம் மிக்க ஆன்மீகச் சொற்பொழிவுகள் அதிகம் கவர்ந்தன. வேதாந்தம். பயில விரும்பிய அவர், அத்துவைதத் தத்துவத்தை ஆழ்ந்து கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

கல்லூரி வாழ்வு தொடங்கு முன்பே, அக்கால வழக்கப்படி அவர் இல்லறவாசியாக்கப்பட்டு விட்டார். ஆம், அவருக்குப் பால்யப் பருவத்திலேயே திருமணம் முடிந்து விட்டது.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் முதன் முதலாக அவருக்குத் தர்க்க இயல் (Logic) துணைப் பேராசிரியர் வேலை கிடைத்தது. கல்விக் கண் திறக்கும் ஆசிரியர் பணியே சிறந்தது என்று முடிவெடுத்துக் கொண்ட அவர் சென்னை-சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து எல்.டி. பட்டம் பெற்றார்.

அதன் பின்னால், பிரஸிடென்சி கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர் பதவியே அவருக்கு அளிக்கப்பட்டது.

அவர் தயாரிக்கும் கட்டுரைகளும், ஆற்றும் சொற்பொழிவுகளும் மாணவர்களை மட்டுமல்ல; பேராசிரியர்களையும் வியந்து பெருமூச்செறிய வைப்பவைகளாக இருந்தன. எனவே, மாணவர்கள் மட்டுமன்றி, பேராசிரியப் பெருமக்களும் அவ்வப்போது அவரை அணுகிப் படிப்புத் தொடர்பான ஐயம் நீக்கிக் கொள்வாராயினர்.

அதன்பின், ராஜமகேந்திரத்தில் உள்ள கலைக் கல்லூரியில் அவர் தத்துவ விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பிறகு, மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் தத்துவநூற் பேராசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், மிகச் சிறந்த கற்றறிவாளரான இராதாகிருஷ்ணனைத் தமது தத்துவப் போதகப் பேராசிரியராகக் கொண்டு கல்கத்தா பல்கலைக் கழகம் பெருமை பெற்றது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், மான்செஸ்டர் கல்லூரியும் - மற்றும் உலகெங்கும் உள்ள பிரசித்தி பெற்ற கல்வியமைப்புகளும் ஆர்வத்தோடு அவரை அழைத்து அறிவார்ந்த சொற்பொழிவாற்றச் செய்து சிறப்பித்தன; சிறப்புற்றன.

நாளடைவில் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான அவர், ஐந்தாண்டுக் காலத்திலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று, அங்கு சென்று ஒரு பிரிவின் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியர் பதவியை மீண்டும் ஒப்புக் கொண்டு உயர்வுற்றார். மிகச் சிறந்த கல்விமான் ஆன அவரை நோக்கி, காசிப் பல்கலைக் கழகம் துணைவேந்தராக வரும்படி நேசக்கரம் நீட்டியது. மிகப்

பெருந்தொகையை அதற்கான ஊதியமாகத் தர அவர்கள் இசைந்தார்கள். ஆனால், டாக்டர் இராதாகிருஷ்ணனோ அதற்கு முழுமையாகச் சென்றுவிட இயலாத நிலையில், துணைவேந்தரின் கௌரவப் பதவியை மட்டும் வகிப்பதாக இசைவளித்தார்.

இதற்கிடையே பல்வேறு ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் அவர் தலைமை தாங்கிப் பெருமை கொண்டார். சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற பல்வேறு நாடுகளும் அவரது திறமையை உணர்ந்து அவரை அழைத்துத் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்து அறிவு வளம் பெற்றன.

மேனாட்டில் போய்ப் படித்து விட்டு வந்தால் தான் மேதைமையடைய முடியும் என்ற நிலையை முற்றிலும் மாற்றிக் காட்டிய பெருமை இராதாகிருஷ்ணனுடையதாகும். இந்தியாவிலேயே படித்து மேதைமை கொண்ட அவரை மேனாடுகளெல்லாம் விரும்பியழைத்துப் பாராட்டிப் பெருமை கொண்டன.

இந்து மதத்தைப் போலவே புத்த மதத்தையும் ஆராய்ந்து, இரண்டிலும் உபநிடதக் கொள்கைகளே பரவலாகக் காணப்படுகின்றன என்று அறிவித்த சிறப்பினர் அவர்.

இவ்வாறெல்லாம் இந்தியாவின் புகழை உலக அரங்கில் ஓங்கி நிற்கச் செய்த அவருக்கு, 1952-இல் இந்நாட்டின் உதவிக் குடியரசுத் தலைவர் பதவி கிடைத்தது. அதற்கடுத்த சில காலத்திலேயே 'பாரத ரத்னா' விருது அவருக்கு அளிக்கப்பட்டது.

1962-இல் இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன், 1967-இல் அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

பல்வேறு மதங்கள், மொழிகள் பற்றி ஆராய்ச்சியிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். உலகப் பல்கலைக் கழகங்கள் பலவும் அன்னாருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தன. இப்படி அவர் பெற்ற டாக்டர் பட்டங்களின் எண்ணிக்கை மட்டும் 133 ஆகும். 'டெம்பிள்டன் நிறுவனத்தார்' அவருக்கு 96 ஆயிரம் டாலர் மதிப்புள்ள பெரும் பரிசு ஒன்றையே வழங்கிக் கௌரவித்தார்கள்.

இந்தியத் தத்துவத்திலும் ஆன்மீக வளர்ச்சியிலும் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு எண்ணற்ற கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் ஆக்கிச் சான்றோர்க்குள்ளே சுடர்விட்டுப் பிரகாசித்தார் அவர். முப்பதுக்கும் மேலான அரிய நூல்களை எழுதினார். பெண் கல்வி முன்னேற்றத்திற்காக அவர் பெருமுயற்சி மேற்கொண்டார்.

அனைத்துலகிலும் தம் காலடி படாத, உரைகேட்டு உவக்காத முக்கிய நாடுகளே இல்லை என்ற அளவுக்குப் புகழ் பெற்றிருந்த சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 1950-இல், இந்தியத் தூதராக ரஷ்ய நாட்டிலும் இருந்தவர். ஸ்டாலினாலேயே அப்போது புகழ்ந்து பேசப்பட்டவரும் கூட.

தன்னிகரற்ற தத்துவ மேதையான அவர் தமது 86-ஆம் வயதில் 17.4.1975 அன்று, உடல் நலம்குன்றி இயற்கை எய்தினார்.

— பி.எல்.ஆர்.

சென்னைக் கடற்கரையை அழகுபடுத்த முதல்வர் உத்தரவு

சென்னை மாநகரை எழில் மிகுந்த நகரமாக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில் ரூ.1,500 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னையிலுள்ள மெரீனா கடற்கரையை அழகுபடுத்த 2 கோடி ரூபாயும், எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்த 1.5 கோடி ரூபாயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியுள்ளார். இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருவதாக, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள், அண்மையில் சென்னை மெரீனா கடற்கரையில் துப்புரவுப் பணிகளைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் இதைத் தெரிவித்தார்.

சென்னை நகரின் சாலைகள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் இவ்வாண்டு சுமார் 20 ஆயிரம் மரக்கன்றுகளை நட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. சென்னை நகரிலிருந்து மட்டும் சுமார் 2 ஆயிரம் டன் குப்பை அன்றாடம் அகற்றப்படுகிறது.

கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள்

சின்னஞ்சிறிய விரல்கள் படைக்கும் சித்திர விசித்திரங்கள் சிந்தைக்கு விருந்தாய் அமைகின்றன.

கண் கவரும் அந்தக் காட்சிப் பொருள்கள், கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன.

கல்லும், மண்ணும், காகிதமும், துணியும், உலோகமும் கைவினைஞரின் கைபட்டதும், உருவகம் பெறுகின்றன. நம் உள்ளத்தைக் கவருகின்றன.

இவ்வாறு உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் வகையிலே, சென்னை நகரிலே பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் பல இடங்களிலே நடைபெற்று வருகின்றன. அவற்றுள் காதிகிராப்ட் பொம்மைக் கண்காட்சியும், சென்னை அண்ணாசாலையில் நடைபெறும் காதி கிராமோத்யோக் பவன் பொம்மைக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கவை.

காதி கிராப்டில்

மாலை நேரம்!

ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று கூட்டம் அலைமோதுகிறது.

சிறிய, பெரிய பொம்மைகள் அங்கே காட்சியளிக்கின்றன.

வழக்கம்போல் இந்த ஆண்டும், அழகிய பொம்மைகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

கடவுளர் திருவுருவங்கள், தலைவர்கள், மரங்கள், பறவைகள் முதலான பொம்மைகள் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தன. மெல்லிய கண்ணாடிக் குழாயிலிருந்து நுணுக்கத்தோடு தயாரிக்கப்பட்ட பொம்மைகளும் கண்காட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, பொம்மைகள் சென்னை கொசப்பேட்டை, கடலூர், பண்ருட்டி, விழுப்புரம் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தக் கண்காட்சியில் ரூபாய் இரண்டிலிருந்து, ரூபாய் இரண்டாயிரம் வரை பொம்மைகளை வாங்கலாம்.

தமிழ்நாடு, தொன்மையான மட்பாண்டத் தொழிலுக்கும், சிறப்பான கலைவேலைப்பாடுகளுக்கும் பெயர் பெற்றதாகும் என்பது நாமறிந்ததே. கலைநுட்பம் வாய்ந்த அழகிய பூந்தொட்டிகள், கலைநயம் மிக்க தண்ணீர் ஜாடிகள், டெரகோட்டா பொம்மைகள், வழவழப்பான நவீன மட்பாண்டங்கள், நமது பண்டைய கலாச்சாரத்தை விளக்கும் பல்வகைப் பொம்மைகள், மெழுகினால் தயாரான பொம்மைகள், ஏழைகளின் குளிர் சாதனப் பெட்டிகள் ஆகியவை இங்கே கிடைக்கின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கடந்த 32 ஆண்டுகளாக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர, பல்வேறு நலத்திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. வாரியத்தின் 4 அலகுகள் மூலமாகவும், 112 மட்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், மட்பாண்டத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் 12,473 மட்பாண்டத் தொழிலாளர்கள் அவர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நிதி உதவி அளித்துள்ளது. 1991-92- ஆம் ஆண்டில் வாரியம் ரூ.14.61 கோடிக்கு மட்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழ்நாட்டில் 89,864 மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு, வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 38,000 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

நவராத்திரிப் பொம்மைக் கண்காட்சிக் காலங்களில் இக்கதர்

அங்காடியில் அதிக அளவில் பொம்மைகள் விற்பனையாவதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏழை, எளிய கைவினைஞர்கள் பயனடைகின்றனர்.

மின் விசையுடன் இயக்கக்கூடிய நவீன வீலா சக்கரம், முன்னேற்றமடைந்துள்ள மட்பாண்டச் சக்கரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவற்றில் அதிக அளவில் பல்வேறு மட்பாண்டப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு வசதியாக, சென்னைக்கு அருகில் உள்ள செவ்வாய்ப்பேட்டையில், ஒரு மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய தென் மாநிலங்களில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்களுக்கு இங்கு 5 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது ஒவ்வொருவருக்கும் ரூ.350 உதவித் தொகையும் பயணப்படிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் தொழில் செய்யும் மட்பாண்டக் கைவினைஞர்கள் அப்பகுதியிலேயே பயன்பெறும் வகையில், 4 இடங்களில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

உற்பத்தி அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைவினைஞர்கள் மூலம் உற்பத்தியாகும் பொம்மைகள் ஆண்டு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், பெரும் அளவு விற்பனை நவராத்திரி விழாக் காலத்தில் தான் நடைபெறுகிறது.

களிமண் பொம்மைகள், காகிதப் பொம்மைகள் போன்றவை மிக அதிக அளவில் இங்கு விற்பனையாகும் பொம்மை வகைகளாகும்.

மேற்கு வங்காளம், கோலாப்பூர், கேரளா, ஆந்திரா முதலிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து புதிதாகப் பொம்மைகள் வரவழைக்கப்பட்டு, இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய கலைவேலைப்பாடு மிகுந்த பொம்மைகள், கைவினைஞர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் ஏராளமான அளவில் வாங்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. கலை அழகு, தரம் மட்டுமல்லாது நியாயமான விலையிலும் பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் இங்கு விற்பனை பன்மடங்கு அதிகரித்து வருவதே இதற்குச் சான்றாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் நவராத்திரிக் கொலுக் கண்காட்சிக் காலங்களில் அதாவது 1990-இல் ரூ.18.10 இலட்சத்துக்கும், 1991-இல் ரூ.22.50 இலட்சத்துக்கும் பொம்மைகள் விற்பனை ஆயின.

இவ்வாண்டு நவராத்திரிக் கொலுக் காலத்தில் பொம்மைகள் ரூ.30 இலட்சத்திற்கு விற்பனை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



காதி பவனில்

சென்னை அண்ணாசாலையில் உள்ள காதி கிராமோத்யோக் பவனில் பொம்மைக் கொலு தொடங்கப்பட்டுள்ளது.

கண்ணைக் கவரும் வகையிலே வண்ணப் பொம்மைகள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

வகை வகையான பொம்மைகளைப் பார்க்கும்போது, எல்லாவற்றையும் வாங்க வேண்டும் போல் தோன்றுகிறது.

கடவுளர் சிலைகள் முதல் காய்கறி, பழங்கள் வரை மிக நேர்த்தியாக, கலை நுட்பத்துடன் செய்யப்பட்டிருக்கிற பாங்கைக் கண்டு மகிழலாம்.

கிராமப்புற ஏழை எளியோர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட, இது போன்ற பொம்மைக் கண்காட்சிகள் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது.

இந்த ஆண்டு, காதி பவன் பொம்மைக் கொலுவில், புதிய வகைகளாக மகளிர் பூப்பந்தாட்டம், முதியோர் கல்வி, அகத்தியர் காவேரி, மண் உண்ட கண்ணன், யசோதை- தயிர் கடைதல், வசுதேவர், இலட்சுமி நரசிம்மர், பகீரதன் பிரயத்தனம், லிங்கோத்தரன், வரம் தரும் தேவியர், பழக்கடை, காய்கறிக் கடை, அரிசிக்கடை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு, பொம்மைக் கண்காட்சி மூலம் ரூ.4.40 இலட்சம் விற்பனை நடந்தது. இவ்வாண்டு, ரூ.5.50 இலட்சம் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது நடைபெறுகிற இக்கண்காட்சியில் ரூ.1 முதல், ரூ.8,000 வரையிலான விலையில் பொம்மைகள் உள்ளன.

மரத்தாலான வேலைப்பாடு உள்ள விநாயகர் (இதன் விலை ரூ.8008), திருப்பதி வெங்கடாசலபதி, சமயபுரம் மாரியம்மன், இலட்சுமி நரசிம்மர் முதலான பொம்மைகள் காட்சியில் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

—பொ. மறைமலை



உன்னைக் குடிக்கும் மதுவைக் குடித்தால்
உலகம் உனக்குச் சுடுகாடு!
உண்மையைச் சொன்னால் உயிரிருந் தும்நீ
உலவித் திரியும் வெறுங்கூடு!

விலங்காய் உன்னை விரைவினில் ஆக்கும்
விசித்திரத் திராவகம் மதுவாகும்
வெட்கம் மானம் எல்லாம் போக்கும்
வெறியின் திரவம் அதுவாகும்!

கட்டிய மனைவியின் உயிரைத் தின்னும்
காலன் தானே குடிகாரன்!
கட்டிக் கரும்பாம் குழந்தையின் ரத்தம்
களிப்புடன் உறிஞ்சும் சதிகாரன்!

மதுவின் கோப்பையை மண்ணில் எறிந்தால்
மக்கள் இனத்தில் நீஒருவன்
மாட்டேன் என்றால் மரணக் கோட்டையின்
மதிலைத் தாவும் பெருமடையன்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

முன்னாள் மேயர் திரு. என். சிவராஜ்
(29.9.1892 — 29.9.1964)

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

காதிகிராஃப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

DIPR/1642/MS/92

நித்தியத்தின் புன்னகையே நீடுழி நீ வாழ்க!

— கவிஞர் இளந்தேவன்

சத்தியத்தின் ஒளிச்சுடர்நீ
சாந்தத்தின் திருவுருநீ
நித்தியத்தின் புன்னகைநீ
நேசத்தின் வார்ப்படம்நீ

அன்புக்கு விரிவுரைநீ
அகிம்சைக்குப் பொருளுரைநீ
பண்புக்குப் புகலிடம்நீ
பாரதத்தின் உயிர்க்குரல்நீ

பொக்கைவாய்ப் புன்னகையால்
'பொய்' அழிக்கும் போர்வீரா
திக்கிருக்கும் வரையிருப்பாய்!
திசைகடந்தும் புகழ்வளர்ப்பாய்!

அட்டைப்பட விளக்கம்:

இந்த இதழில்...

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா... 2
முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா ... 6
தந்தை பெரியாரும் பெண்மையும் ... 9
அந்த வசந்தம் -அறிஞர் அண்ணா ...12
காமராசர் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ...19
ரோமானிய அரும்பொருள் கண்காட்சி ...24
எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் ...27
குடிப்பழக்கத்தால் வரும் கேடு (கவிதை) ...31
திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ...34
விஷச் சாராயத்தால் ஏற்படும் விளைவுகள் ...37
பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உயிரியல் பூங்கா திறப்பு விழா ...43
பாடநூல் நிறுவனத்தின் பணிகள் ...45

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023 192444
புரட்டாசித் திங்கள் - 15
மலர்:23 இதழ்:7
1-10-1992

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 84-வது பிறந்தநாள் விழா, தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 15.9.92 அன்று காலை சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்ட இந்தக் கவின்மிகு விழா, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர் - இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையுரை நிகழ்த்த - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா மேடை, மலர்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

செய்தித்துறைச் செயலர்

இவ்விழாவில், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் - தமிழகம் வளம்பெற வேண்டும்; முன்னேற வேண்டும்; ஏழைகள் நல்வாழ்வு காணவேண்டும் என்கிற நோக்கத்தோடு ஏழை எளியோருக்கான பல நலத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். புகழ்பெற்றார். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் போலவே தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வல்லவராகத் திகழ்கிறார்."

-இதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர் இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவிக்க - மேடையிலிருந்த மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவ்வாறே கவுரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்ச்சியையடுத்து - பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்; அப்படம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

"அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறந்த நாள் விழாக் காணும் இந்நேரத்தில் அவரது துணைவியாருக்கு நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஐந்து இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்ததை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மக்கள் நலத்திட்ட உதவிகள், உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று அடிக்கடி புரட்சித் தலைவர் அவர்கள் கூறுவார்; அதைச் செயல்படுத்திவரும் புரட்சித் தலைவிக்கு மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து ஒளிமயமான எதிர்காலம் உருவாக வழிவகுக்கவேண்டும்."

கல்வி அமைச்சர்:

· தம்முடைய வாழ்த்துரையின் போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் இளமைக்கால வாழ்வை நினைவு கூர்ந்தார்; மேலும் அவர் பேசியதாவது;

"சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட அண்ணா அவர்கள், அக்கட்சி பணக்காரர் கையிலிருந்து ஏழைகள் கைக்கு மாற வேண்டும் என்றோர் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினார். அத் தீர்மானம் "அண்ணாதுரை தீர்மானம்" என்றே அன்றைய தினம் குறிப்பிடப்பட்டது. நாடு நலம்பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலேயே அவர் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டார். இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிகோலினார். இனி இந்த நாடு சென்னை ராஜதானியல்ல; 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். ஆங்கிலம்-தமிழ் என்ற இரு மொழிக் கொள்கையைக் கொண்டுவந்தார். அண்ணா வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான இந்த அரசும் இந்திக்கு இடம் தராது."

சட்டப் பேரவைத் தலைவர்:

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசியதாவது:

"நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலவாம் அறிஞர் அண்ணாவின் அரசை - அண்ணாவின் புகழ், புரட்சித் தலைவரின் புகழ் பட்டுப்போகா வண்ணம் இன்றைய தினம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நடத்தி வருகிறார். எனவே - அறிஞர் அண்ணாவின் வாரிசாக மட்டுமல்ல; அவரது இதயக் கனியாம் புரட்சித் தலைவரின் வாரிசாகவும் விளங்கிவருபவர் புரட்சித் தலைவி அவர்கள். அதிகாரத்தை நிலைநிறுத்த அல்ல; அண்ணாவின் கொள்கையை, புரட்சித் தலைவரின் கொள்கையை நிலைநிறுத்தவே மாபெரும் மக்கள் சக்தியாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்.

நிதி அமைச்சர்:

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சியூட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள்; எங்களைப் போன்றவர்களை ஆளாக்கி, ஜனநாயக நெறிமுறைகளை அமல்படுத்தியவரும்கூட. வீழ்ந்துகிடந்த தமிழர்களைக் கல்லடிக்கும், சொல்லடிக்கும் அஞ்சாமல் தலை நிமிரச் செய்த பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கே உண்டு; அதன்பின் அறிஞர் அண்ணா அவர்களும், அவருக்குப் பிறகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் அப்பெருமையைப் பெற்றிருந்தார்கள்; அவர்கள் மறைவுக்குப் பின்னால், அவர்கள் வாரிசாகச் செயல்பட்டு வருபவர்தான் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள். தமிழ்நாடாம் இந்த நிலத்தைப் பண்படுத்திய பெருமை பெரியாருடையது. இதைப் பயன்தரத் தக்கதாக்கிய பெருமை அண்ணாவினுடையது; இதை உரமுள்ளதாக்கிய பெருமை புரட்சித் தலைவருடையது; அப்படிப்பட்ட தமிழகத்தைப் பூஞ்சோலை ஆக்கிவரும் பெருமை-கனிகுலுங்கும் தோட்டமாக ஆக்கிவரும் பெருமை நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களையே சேரும்."

முதல்வர் உரையும் நலத்திட்ட உதவிகளும்:

இதற்கெல்லாம் பிறகு - மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - அறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறையில் செம்மையுறப் பணியாற்றிய பொறியாளர்களுக்கு 'அண்ணா விருது'கள் அளித்தார்.

கலப்புத் திருமணம் புரிந்து கொண்டோருக்குப் பரிசுகளும், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கி, முடிவில், விழாப்பேருரையாற்றினார்.

செய்தித்துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் நன்றி கூறினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.

அறிஞர் அண்ணாவைப் போல இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் ஜனநாயகத்தை வளர்த்தவர்கள் இல்லை!

அண்ணா பிறந்த நாள் விழாவில் முதல்வர் உரை

எந்த மாமனிதரின் காலடிச் சுவடுகளை, நாம் காலம் தோறும் பின்பற்ற வேண்டுமோ, எந்த தவப் புதல்வரின் கருத்துகளை, நாம் காலகாலத் திற்கும் செயல்படுத்த வேண்டுமோ, அந்த மாமனி

தரான பேரறிஞர் அண்ணாவின் பிறந்த பொன் னாளை, இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாள், இன்றைய காலகட்டத்தில், ஒவ் வொரு தமிழனும் தன்னையும், தனது இலக்கையும் அறிந்துகொள்ள வேண்டிய நன்னாள்.

நாம் அறிஞர்களுக்கும், சான்றோர்களுக்கும் இப்படி விழா நடத்துவது, அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் வகுத்துத் தந்துள்ள பாதையில், நாம் சரியாக நடைபோடு கிறோமா, என்பதைத் தெரிந்துகொள்ளவும் தான்!

சிலர் - பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடு வார்கள்.

சிலர் - பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக் காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ் பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல; தமிழுக் கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்ப னிட்டு, முன்னே செல்வது * போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', - என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று; அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று. ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்பு தான், பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் பாதையை உருவாக்கிய தொண்டர் மட்டுமல்ல; அந்தப் பாதையில், ஏறுநடை போடும் வீரர்கள் பலரை உருவாக்கிய தீரர். நல்ல நாற்றங்காலையும் உருவாக்கி, அதில் நல்ல பயிர்களையும் வளர்த்துத் தந்த, சொல்லேர் உழவர் ஆவார் நம் அண்ணா. அவரது இந்த முயற்சிகளின் நன்கொடை தான், இன்று நாம் காண்கின்ற, உலகம் வியந்து பாராட்டுகின்ற தமிழ்ச் சமுதாயம்; இன்று நாம் அமைத்திருக்கும் இந்த அரசு! எனவே தான் ஆண்டுதோறும் எழுச்சி யோடு, அண்ணாவின் பிறந்த நாளைக் கொண் டாடுவதில், நாம் பெருமிதம் கொள்கிறோம்; பெருமகிழ்ச்சியடைகிறோம்; பெருமைப்படு கிறோம்!!

அண்ணா அவர்களால் ஈர்க்கப்படாத எழுத் தாளரில்லை, பேச்சாளரில்லை, கலைஞர்களில்லை, அரசியல் நிபுணர்களில்லை, பகுத்தறிவுச் செம்மல் களில்லை, போராட்ட வீரர்களில்லை - குழந்தை களுக்குக்கூடத் தெரியும்!

ஆகவே தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறை குறிப் பிட்டார்கள்; - ''அண்ணா என்கிற இந்தப் பெயர், இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு மகத்தான சக்தி! அந்தச் சக்தி வெளிக்கொணர்ந்த வரலாறுதான், தமிழர்களின் தன்மான வரலாறு!''

ஒரு காலத்தில் இரும்புத் திரைபோட்டு, மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த, அந்த காந்த சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக, மாந்தருள் ஓர் மாணிக்க மாய், இமயமாய் உயர்ந்தது.

அவரைப் பார்த்து எள்ளி நகைத்தோர், ஏகடியம் பேசியவர்கள் எல்லாம், அண்ணாவின் புகழ்பாடும் நிலைமைக்குச் சரித்திரம் அவர்களை ஆளாக்கியது.

ஏனென்றால், மாற்றாரை மதிக்கும் மனப் பக்குவம், அவரைப் போல எவருக்கும் இருந்த தில்லை. அண்ணாவின் உள்ளம், அன்பு உள்ளம்- தொண்டு உள்ளம்.

'தூய உள்ளம், அன்புள்ளம் பெரிய உள்ளம்,
தொல்லுலக மக்கள் எல்லாம்
ஒன்றே என்னும் தாயுள்ளம்'. அந்த தன்னிகரற்ற தலைவரின் உள்ளம்.

இந்தியத் துணைக் கண்டத்து அரசியலில், ஜனநாயகத்தை, அண்ணாவைப் போல வளர்த்த வர்கள் இல்லை. வன்முறை அவர் அறியாதது. வஞ்சகம் அவருக்குத் தெரியாதது. ஆகவேதான், ''தென்னாட்டுக் காந்தி'', என்று அவர் அழைக்கப் பட்டார்.

அண்ணாவின் நினைவு வரும்போதெல்லாம், எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் ஒன்றும் நினைவுக்கு வரும்:

**''தமிழுக்குத் தொண்டுசெய்து
சிறைக்குச் சென்றோன்;
தலைசிறந்த பேச்சுவல்லோன்;
தமிழ வீரன்;
தமர் என்றும் தான் என்றும்
நினைப்பதன்றித்
'தமிழ்நாட்டின் நலத்திலுக்கே
உயிர் உடல்கள்
அமைக' என இரவு பகல்
உழைக்கும் மேலோன்'**

—என்னும் இந்தப் பாடல், அண்ணாவை நாம் எப்படி நினைவு கூர வேண்டுமோ, அப்படி நினைவு கூர்கின்ற பாடலாக அமைந்திருக்கிறது.

அண்ணாவின் கனவுகள் அன்று புரட்சித் தலைவரால், இன்று அவரது பாதையில் வீறு நடைபோடும் உங்கள் அரசால், உங்கள் சகோதரி யின் தலைமையில் நிறைவேற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் மேம் பாட்டுக்காகச் செயல்படும் அரசு, இந்த அரசு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணாவின் எண்ணங்களுக்கு, உருக் கொடுக்கும் அரசு; அவரது கொள்கைகளை நெஞ்சில் சுமந்து செயலாற்றும் அரசு.

அந்தப் பேரறிஞர் பெருந்தகையின் 84-ஆம் பிறந்த நாளாகிய இன்று, அண்ணாவின் பெண் ணுரிமைக் கனவுகள் நனவாக்கப்பட்டதை எண்ணி மகிழ்கிறேன். திராவிட இயக்கத்தின் இலட்சிய விளக்கு, ஒரு பெண்ணாகிய என் கையில் இன்று ஒப்படைக்கப்பட்டிருப்பதற்குக் கால இயற்கைக்கும் தமிழக மக்களுக்கும், என் நன்றியைக் காணிக்கை யாக்கிக் கொள்கிறேன்! பேரறிஞர் அண்ணாவின் புகழையும், பெருமையையும், என்றென்றும் காப் போம் என்று உறுதி பூண்டு; தானே தமிழாகவும், தமிழகமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த வரலாற்று நாயகரை வணங்கி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

-15.9.92 அன்று, சென்னை யில் நடைபெற்ற அறிஞர் அண்ணா அவர்களின் 84-வது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை.

தமிழ்நாட்டிலுள்ள வனத்துறைக் காவலர் களுக்கு ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் வழங்கப் படும். இதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.18 இலட்சம் ஒதுக்கியுள்ளார் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நிருபர்களிடம் சென்னையில் தெரிவித் தார். இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை ரூ.16 கோடி பெறுமானமுள்ள கடத்தல் சந்தன மரங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

நான்காம் அட்டை:

திருச்சியில்

முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா!

திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா விளையாட்டரங்கில், 15.9.92 அன்று மாலை நடைபெற்ற 'அண்ணா பிறந்த நாள் - தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா' நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாடு அரசு காவல்துறை சார்பில், நடத்தப்பெற்ற இவ்விழாவில்- மாண்புமிகு முதல்வர் அவர்களை, உள்துறைச் செயலர் திரு. கே.மலைச்சாமி இ.ஆ.ப., காவல்த்துறைத் தலைமை இயக்குநர் திரு. சு.ஸ்ரீபால் இ.கா.ப., மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி ஆகியோர் வரவேற்றார்கள்.

காவல் துறையினர் அளித்த அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்- வீரச்செயல் மற்றும், சிறந்த தொண்டாற்றிய காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், ஊர்க்காவல் படையினர் ஆகிய 83 பேருக்குப் பதக்கங்களை வழங்கினார்.

அவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாகத் திரு. சு.ஸ்ரீபால் இ.கா.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்; திரு. கே.மலைச்சாமி இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.



தமிழினத்திலுள்ள அனைத்துத் தரப்பினரின் நிலையான வணக்கத்திற்கும், மரியாதைக்கும், போற்றத்தக்க புகழுக்கும் பெருமைக்கும் உரிய, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த - திருநாளில், நாடு காக்கும் நற்பணியில் ஈடுபட்டிருக்கும், சீருடை அலுவலர்களாகிய உங்களைச் சிறப்பிக்கும் இந்த இனிய விழாவில், பங்கு பெறுவதில் மட்டற்ற மகிழச்சி அடைகிறேன்.

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை, ஊர்க்காவல் படை, என்னும் நான்கு துறைகளைச் சார்ந்த, கடமை வீரர்களாகிய உங்களது வீரத்தை, விவேகத்தை, தொண்டினை, வியந்து பாராட்டி, அரசு இன்று விழா எடுக்கிறது.

தமிழக மக்களின் உயிரை, உடலை, உடைமையைக் காக்கும், உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கும் உங்களுக்கு, விருது வழங்கும் வீரவிழா, பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளாகிய இன்று எடுக்கப்படுவது, ஏற்புடையது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களைத் தந்து, தமிழர்களுடைய உரிமைகளின் காவலராய் விளங்கியவர், பேரறிஞர் அண்ணா!

அந்தக் காவிய நாயகன் பிறந்த நாளில், காவலர்களுக்கு விருது வழங்குவது என்பது, எவ்வளவு பொருத்தமானது என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

மற்றவர்களைவிட, மாபெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலையில், நீங்கள் எப்போதும் இருக்கிறீர்கள். மக்களைக் காப்பதும், சத்தியத்திற்குத் துணை நிற்பதும், நீங்கள் என்றென்றும் பின்பற்றவேண்டிய தலையாய கடமைகள் ஆகும்.

தூங்காமை, கல்வி, துணிவுடைமை, என இம் மூன்றும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு இலக்கணமாகும் என்பது, வள்ளுவப் பெருந்தகையின் கூற்றாகும். ஆனால் உங்களுக்கு, அம் மூன்றும் மெத்த அவசியம் என்பது, நடைமுறை உண்மையாகும்.

கடமை நெஞ்சமும், மேற்கொண்ட பணியை மேலும் சிறப்புறச் செய்யும் திறனும், தடைகண்டு தளராது போராடும் மனத்துணிச்சலும் பெற்றவர்கள் நீங்கள்.

இந்தச் சிறப்பியல்புகளை எல்லாம், இயல்பாகவே பெற்றிருக்கின்ற உங்கள் அனைவர் மத்தியில், உங்கள் சகோதரர்கள் ஒரு சிலர் செயற்

பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு: மாண்புமிகு முதல்வர் கண்டனம்

பெட்ரோலியப் பொருட்களின் விலைகளை 15.9.1992 முதல் மத்திய அரசு உயர்த்தியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நடுத்தர மக்கள் தங்கள் அன்றாடப் போக்குவரத்துக்கும் பிற பணிகளுக்கும் பேருந்துகளையே பயன்படுத்துவதால் டீசல் விலை உயர்வு நடுத்தர மக்களை மிகவும் பாதிக்குமென முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பொரும்பாலான விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு டீசலைப் பயன்படுத்துவதால் விவசாயிகள் இந்த டீசல் விலை உயர்வினால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வரும் இந்தச் சமயத்தில் மத்திய அரசு ஒருதலைப் பட்சமாக இவ்வாறு டீசல் விலையை உயர்த்தி இருப்பது, விலைவாசி உயர்வைக் குறைக்கத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பயனளிக்காமல் செய்துவிடும்.

சமையல் வாயுவின் விலையை உயர்த்தியிருப்பதையும் முதல்வர் அவர்கள் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

நகரங்களிலும், சிறிய நகரங்களிலும், தற்போது கிராமங்களிலும் கூட சமையல் வாயு அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் இந்த விலை உயர்வு பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று முதல்வர் அவர்கள் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பெட்ரோலியப் பொருட்களின் இந்த விலை உயர்வினால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, அதனால் ஒட்டுமொத்தமாக எல்லாப் பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாக அமைந்துவிடும் என முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

எனவே இது குறித்து மறுபரிசீலனை செய்து பொதுமக்களின் நலன் கருதி, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வைத் திரும்பப் பெறும்படி மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரிய செயல் புரிந்து, இன்று 'முதலமைச்சர் விருது' பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அந்த வாய்ப்பு ஒரு சிலருக்கே அளிக்கப்பட்டிருந் தாலும், அவர்களது வெற்றியில், உங்கள் அனை வரின் ஒருமித்த உழைப்பையும் நான் காண் கிறேன்.

எனவே உங்களோடு சேர்ந்து, அவர்களை நான் வாழ்த்துகிறேன்; படைத்த சாதனைகளுக் காகப் பாராட்டுகிறேன். அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகத்தில், துப்பாக்கி கலாச்சாரம் தோன்றக் காரணமாய் இருந்த சூழ்நிலையை, முற்றிலும் நீக்குவதற்கு, முழுத் துணையாய் இருந்த வர்கள் நீங்கள். மது அரக்கனை வெல்லும் மகத் தான போரில், உங்கள் பணி பாராட்டுக்குரியது.

இன்று தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, பாங்குறப் பராமரிக்கப்படுகிறதென்றால், அதற்குக் காரணம் நீங்கள்!

சமுதாயமும், அரசும், உங்களிடம் எதிர்பார்ப் பவை ஏராளம். இந்த எதிர்பார்ப்புகளை, உரிய வகையில் நிறைவேற்றி வைக்கும் திறமையும் வேகமும், உங்களிடம் உண்டு என்பதை நான் அறிவேன்.

''நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும். ஆனால் நமது உழைப்பு ஒருநாளும் வீணாகாது'', என்ற பேரறிஞர் அண்ணாவின் நம்பிக்கை, நடைமுறை தத்துவமாக உங்களிடம் மிளிர்கிறது. உழைப்புக்குத் தகுந்த மதிப்பும், உரிய சிறப்பும் வழங்குகிற வகையில், நம் தமிழக அரசு இந்த விழாவினை எடுத்து, உங்களைக் கௌரவிக் கிறது.

எங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்ததும், காவலர் களின் நலம் பேணி, வளம் காண, பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தியதை, அனைவரும் அறிவீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்முன், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் இத்துறைக்குச் செலவிடப்பட்டது. இது, 1991-92-ஆம் ஆண்டிற்கு, 250 கோடி ரூபா யாக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு, 275 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தி உள்ளோம்.

10 ஆண்டுகளில் சுமார் 12.50 கோடி ரூபாய் செலவு செய்து, சுமார் 1,500 வீடுகளைத்தான், காவலர் வீட்டு வசதிக் கழகத்தினர், கட்டி இருந் தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் அக்கழகத்தினைப் புதுப்பித்து, ஒரே ஆண்டில், 12¼ கோடி ரூபாய் செலவு செய்து, சுமார் 1,000 வீடுகளுக்குக் குறையாமல் கட்டும்படி, அந்த வீட்டு வசதிக் கழகத்தின் பணியினை, முடுக்கி விட்டிருக்கிறோம். 10 ஆண்டுகளில் 1,500 வீடுகளைக் கட்டிய இக்கழகத்தின்மூலம், ஒரே ஆண்டிலேயே 1000 வீடுகள் கட்டப்பட உள்ளது, எங்கள் வேகத்திற்கும், விரைந்து பணி முடிக்கும் செயலாற்றலுக்கும், எடுத்துக்காட்டாகும்.

இதுபோல எங்கள் அரசு, காவலர்களுக்கு

விரைந்து செய்துள்ள நன்மைகளில் சிலவற்றை, எடுத்துச் சொல்லுவது கடமையெனக் கருதுகிறேன்.

- காவல் நிலையங்களுக்கு என 223 புதிய ஜீப்புகள் வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றன.
- சீருடைப்படி உயர்த்தப்பட்டு இருக்கிறது.
- பயணப்படிக்காகக் கூடுதல் ஒதுக்கீடு செய்யப் பட்டு இருக்கிறது.
- புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- காவலர் நல நிதி உயர்த்தப்பட்டு இருக்கிறது.
- பணியில் இருக்கும்போது, வீர மரணம் அடைந்த வர்களின் குடும்பத்தினருக்கு, வழங்கப்படும் உதவித் தொகை, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- காவல்துறை பணியாளர் தங்குவதற்கு, சென்னை யில் ஒரு ஓய்வு இல்லம் கட்ட, அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.
- தமிழகத்தில் உள்ள எல்லாக்காவலர் குடியிருப்பு களில் உள்ள கழிப்பிடங்கள், நீரடி கழிப்பிடங் களாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்க; தற்போது உள்ள விலை விகிதப்படி, 50 சதவிகிதம் மானியமாக வழங்க ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

தந்தை பெரியாரும் பெண்மையும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் பெண்மைக்கு ஏற்றம் கொடுத்தார். அவர் வாழ்க் கைத் துணைநலம் பற்றிக் கூறினார். ஈன்றாளுக்குச் சிறப்பிடம் தந்தார். சங்க காலத்தில் ஔவையார் அரசிய லிலும் பங்கேற்றுப் பெண்மையின் பெருமையை நிலை நாட்டினார். பின்னாளில் காரைக்கால் அம்மை யார் சமயத்துறையில் பெண்மையின் சமநிலையை வெளிப்படுத்தினார்.

சங்க காலத்தில் கல்வியாலும் பிறவற்றாலும் தலை நிமிர்ந்திருந்த பெண்மை, இடைக்காலத்தில் தாழ்வு நிலையில் சிறைப்பட்டது. இதன் விளைவால் சமுதாயம் சீர் கெட்டது. எனவே, அண்மைக் காலத்தில் இதைப்பற்றிச் சில சிந்தனை யாளர்கள் எண்ணிப் பார்த்தனர். வடக்கில் இராசாராம் மோகன்ராய். பெண்மையின் நலம் தேடும் தொண் டில் முன்னோடியாய்த் திகழ்ந்தார். தெற்கில், மாயூரம் நீதிபதி வேத நாயகர் பெண்மையின் நன்மை வழிக்குக் கால்கோள் இட்டார். அவருக்குப்பிறகு, திரு.வி.க. பெண் ணின் பெருமையை எடுத்துக் கூறி னார். பெரியார் பெண்ணடிமையை மாற்றப்பாடுபட்டார். பின்னர், பாரதியும், பாரதிதாசனும் பெண்மை யின் உயர்வுக்குப் பெரிதும் முயன் றார்கள்.

பெரியார் தன் உரையாலும் செயலாலும் பெண்களுக்கு நன்மை சேர்க்க முயற்சி செய்தார். அவர் ஓரிடத்தில் கூட 'பெண்மை' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அவர் பெண்ணடிமை என்ற சொல் லையே எங்கும் கையாண்டிருக்கிறார். இதிலிருந்து அவர் மனத்தில் பெண்கள் அடிமையாய் இருக்கும் நிலை எந்த அளவுக்கு ஆழப்பதிந் திருந்தது. என்பதை உணர முடி கிறது.

அவர் கூறியிருக்கிறார். 'ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டு மானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்கம் என்பதோ, கற்பு என்பதோ, ஆண் பெண் இருபாலருக்கும் சொந்தமானதேயன்றி, பெண் களுக்கு மட்டும் உரியதல்ல. இன் றைய சீர்கேடான நிலைக்கும் பெண் மக்கள் மிருகங்களை விடக் கேவல மாகக் கருதப்பட்டதும் அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாக

பேராசிரியர்
டாக்டர் சரளா இராச கோபாலன்

பெண் மக்களின் அடிமை, ஆண்களால் உருவாக்கப்பட்டதல்ல. அது இறைவனால் அமைக்கப் பட்டது என்று பெண்களில் பலர் நம்பினார்கள். இந்த நம்பிக்கை யையே ஒழிக்க வேண்டுமென்று பெரியார் விரும்பினார், எடுத்துக் கூறினார்-

மண்ணடிமைக்கும், நாட்டின் சீரழிவுக்கும் பெண்ணடிமையே காரணம் என்று ஆணித்தரமாக எண்ணப்பட்டதும் மனித ஜென்மத் துக்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லை என மதித்து வந்ததும் அதனால் இவன் ஒழுக்கத்தை விட்டு விட்டு வாழ்வதும் காரணமாகும்'' என்று அவர் கூறியிருக்கிறார். (குடியரசு 22.12.1929).

பெண் விடுதலைக்கு ஆண்களை விடப் பெண்களே பெரிதும் தடை யாக இருக்கிறார்கள். என்பது அவ ருடைய கருத்து. பெண் இல்லாமல்

பெரியாருக்கு அண்ணா அளித்த பரிசு!

''...நெடுந்தொலைவு போன மகன், திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல, இன்று பெரியாரைப் பார்க்க வந்திருக்கிற நானும், ஓர் அன்புப் பரிசை-கனியை- ஏதோ என்னால் இயன்றதை- கொண்டு வந்திருக்கிறேன்.

...சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடு பட்டு வருகிறார். பகுத்தறிவுத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

''இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கிச் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' கொண்டு வரப்போகிறோம் என்ற நல்ல செய்தியை அன்புப் பரிசை- கனியை- பெரியாரிடம் அளிக்கிறேன்''.

இவ்வாறு 7.6.67-இல் திருச்சி பெரியார் மாளிகையில் பொதுவுடைமைத்' தலைவர் ப. சீவானந்தம் அவர்களுடைய புதல்வியின் திருமண விழாவிலேயே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

இதைக் கேட்டதும், பெரியாரின் உற்சாகம் கங்கு, கரையையெல்லாம் உடைத்துக் கொண்டு பொங்கிப் பெருகியது! தம் பருத்த மேனி குலுங்கச் சிரித்து மகிழ்ந்து கைதட்டினார்.

பூரிப்பில் மிகுந்த பெரியார் அவர்கள் ''இதை அண்ணா அவர்களின் அருள்வாக்காகவே எடுத்துக் கொள்கிறேன்'' என்று கூறிப் புகழ் மாலை சூட்டினார் அண்ணாவுக்கு!

NK

ஆண் வாழ முடியும். ஆண் இல்லாமல் பெண் வாழவே முடியாது என்றும் தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகப் படைக்கப்பட்டிருக்கிறது என்று பெண்கள் எண்ணிக் கொண்டிருப்பதே அந்நிலைக்குக் காரணமாக இருக்கிறது என்றும் அவர் ஆய்ந்துரைக்கிறார்-

கற்பு பெண்களுக்கு மட்டும் தான் தேவை; அது ஆண்களுக்குத் தேவையில்லை என்று கூறப்பட்ட கருத்தை அவர் எதிர்த்தார்; கற்பு என்பதைச் சுகாதாரத்தையும் சரீரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கையாளப்படுவதில்லை கற்பு பெண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்து இதை உணர்ந்து கொள்ளலாம்' என்று அவர் சொல்கிறார் (குடியரசு 23.12.1936).

பெரியாருடைய தங்கை மகள் ஒன்பது வயதுச் சிறுமி 'அம்மாயி'- க்குத் திருமணம் நடைபெற்றது. ஆனால், முப்பது நாட்களுக்குள் ஒன்றும் அறியா அச்சிறுமி விதவையானார். இதைக் கண்ட பெரியார் மனம் வருந்தினார். அவளுக்கு மறு வாழ்வு தரவேண்டும் என்று துடித்தார். உரிய பருவத்தில் அவளுடைய மறு திருமணத்திற்கு முயற்சியை மேற்கொண்டார்.

ஆனால், உற்றவரும் மற்றவரும் எதிர்த்தார்கள். அதைக் கண்டு அவர் அஞ்சவில்லை. வாடிப்போகவிருந்த அந்த இளம் விதவைக்குத் திருமணம் செய்து பூச்சூடும் நிலையை உருவாக்கி மகிழ்ந்தார். இப்படிச் செய்யததன் மூலமாக - தன் குடும்பத்திலேயே புதுமையை - புரட்சியை அவர் செய்து காட்டினார்.

தேவதாசி முறை பெண்மைமேல் சுமத்தப்பட்ட இழிநிலை. இது இந்நாட்டில் மட்டுமே பூத்துக் குலுங்கியது. இதைக்கண்டு காந்தியடிகள் வருந்தினார். அவர்கள் தம் தொழிலிலிருந்து விலகி வாழ வேண்டுமென்று கூறினார். அவர்களைச் 'சகோதரிகளே' என்று அழைத்த திரு.வி.க. அவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். தேவதாசி முறையை ஒழிக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மசோதா கொண்டு வந்தார். பெரியார் இதற்கு முழுமையான ஆதரவு நல்கினார். பொட்டு கட்டும் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்காக முன் நின்றார்.

பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தால், அவர்களால் எந்த நிலையிலும் வாழ முடியும் என்பது பெரியாரின் சிந்தனை. எனவே, பெண்கள், துணிவுடன் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று அவர் வழிகாட்டினார்.

நாட்டில் மக்கள் தொகை பெருகுவதை மாற்றுவதற்கு இன்று கருத்தடை வலியுறுத்தப்படுகிறது. பெரியாரும் கருத்தடையை ஆதரித்திருக்கிறார். ஆனால் அவர் கூறிய காரணம் வேறானது. ஏற்றுக் கொள்ளவும் தக்கது. பெண்கள் விடுதலை அடையவும், சுயேச்சை நிலை பெறவும் கருத்தடை அவசியம் என்று கூறியுள்ளார் அவர்.

பெண்மையின் முன்னேற்றத்திற்குக் கல்வி அவசியம். ஆனால், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று கூறப்பட்டு வந்தது. பெண் கல்வியை வேதநாயகரும் வற்புறுத்திப் பாடினார். பெரியாரும் பெண் கல்வியின் இன்றியமையாமையை விளக்கினார். "1,2,3 கூட எண்ணத் தெரியாத நிலையில் பெண்களைக் கட்டிக் கொண்டு அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது என்றால் எப்படி முடியும்'' என்று அவர் கேள்வி' கேட்டிருக்கிறார். பெண்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். 'கன்னிகாதானம்' என்ற சொல்லே அகராதியிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்பதும் அவருடைய எண்ணமாகும். பெண்கள் நகைகளை அணிவதையும் அவர் வெறுத்தார். அவர்கள் நகை தாங்கிகளாக இருப்பதை மாற்ற முனைந்தார்.

அவர் பெண்மைக்காகப் பாடுபட்டார். பேசினார். எழுதினார். செயலிலும் செய்து காட்டினார்.

பெண்கள் சமுதாயத் தொண்டிலும் பங்கு ஏற்க வேண்டும் என்று செஞ்சார விழைந்தார். தன் மனைவி நாகம்மையையும், தங்கை கண்ணம்மாளையும் பொதுவாழ்க்கையில் ஈடுபடுத்தினார். கிளர்ச்சிகளில் பங்கேற்கச் செய்தார்.

இப்படி, உள்ளம், உரை, உழைப்பால், பெண்மைக்கு அவர் ஏற்றம் தர முயன்றார். இதைப் பெண்கள் எண்ணிப் பார்த்தனர். அவருக்கு நன்றி காட்ட நினைத்தனர். 13.11.1938-இல் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில், ஈ.வெ. ராமசாமியாக இருந்த அவருக்கு ''பெரியார்'' என்ற 'பட்டம் தந்தனர். பேருவகை கொண்டனர். அவருடைய தொண்டால், பெண்மை உயர்ந்தது. மனத்திண்மை கொண்டது, உண்மை உணர்ந்தது. நன்மையும் பெற்றது. •

அந்த நாள்!

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும்விட அவருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாள்கள் எனக்கு மிகவும் இனிமையான நாள்கள். இன்றும் அவைகளை நினைவிற் கொண்டுவரும்போது இனிமை பெறுகிறேன். - பேரறிஞர் அண்ணா

களர் நிலத்தைச்சீர்திருத்த செலவு குறைவான வழிமுறைகள்

தமிழ்நாட்டில் சுமார் 2,300 எக்டர் அதிகக் களர்கொண்ட நிலங்களாக உள்ளது. குறிப்பாகத் தென்ஆர்க்காடு, சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களில் இம்மாதிரியான நிலங்கள் அதிகம் உள்ளது. இந்நிலங்களைச் சீர்திருத்துவதற்கு ஜிப்சம் ஒரு சீர்திருத்தியாகும். ஜிப்சத்தின் விலை குறைவாக இருந்தாலும் களர்நிலத்தைத் திருத்துவதற்கு அதிக அளவு (டன் கணக்கில்) தேவைப்படுவதால் சீர்திருத்தச் செலவு அதிகமாகிறது.

களர்நிலத்தைப் பரிசோதனையிட்டுக் காரநிலைக்குத் தகுந்தாற்போல் ஜிப்சம் தேவை நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த உவர் மற்றும் களர் மண் ஆராய்ச்சி நிலையம், திருச்சியில் நடத்திய ஆராய்ச்சியின் மூலம் ஜிப்சம் அளவு குறைத்துக் களர்நிலத்தைச் சீர்திருத்தம் செய்யலாமென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்முறைப்படி மண்பரிசோதனைப் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட ஜிப்சம் தேவையில் நான்கில் ஒருபங்கு (25 விழுக்காடு) இட்டால் போதுமானது. நல்ல பலன்கிட்ட இந்த அளவு ஜிப்சத்தோடு எக்டருக்கு ஐந்து டன் என்ற அளவு வேப்பந்தழையும் இடவேண்டும்.

நிலத்தைப் பகுதிகளாகப்பிரித்து வரப்புகட்டி மண்பரிசோதனையின் அளவில் 25 விழுக்காடு ஜிப்சத்தை ஒரே சீராகத்தூவி நிலத்தை மேலாக உழுது விடவேண்டும். 15 நாட்களுக்கு நீர் நிறுத்தவேண்டும். பின்பு நீரினை வடித்துவிட்டு வேப்பந்தழை மிதித்து ஒரு வாரத்தில் நெற்பயிர் நடவேண்டும். கார்நிலங்களுக்கு கோ.43 நெல் சிறந்தது. சுமார் 30 நாள் வயதுடைய நாற்றுகளைக் குத்திற்கு நான்கு நாற்றுகள் வீதம் நடப்பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் பரிந்துரைக்கப்படும் தழை, மணி, சாம்பல் சத்தைவிட 25 சதம் அதிகத் தழைச்சத்து அளித்தால் களர்நிலங்கள் நல்ல பலனளிக்கிறது என்பதும் ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது. களர் சீர்திருத்தம் செய்தமையால் நெல் விளைச்சல் சுமார் 23 விழுக்காடு அதிகமாயிற்று. ஆகையால் களர்நிலத்தைச் சீர்திருத்தி நல்ல பலனடைய—

- பரிசோதனையில் நிர்ணயிக்கப்பட்ட ஜிப்சம் தேவையில் நான்கில் ஒரு பங்கு (25 விழுக்காடு) இட்டால் போதுமானது.
- வேப்பந்தழை எக்டருக்கு 5 டன் என்ற அளவில் இடவேண்டும்.
- கோ.43 நெல் இம்மாதிரி சீர்திருத்தம் செய்த வயலில் குத்திற்கு நான்கு நாற்றுக்கள் விகிதம் பயிரிடவேண்டும்.
- தழைச்சத்து 25 விழுக்காடு அதிகமளிக்கவேண்டும்.
- சிங்சல்பேட் எக்டருக்கு 25 கிலோ அளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறை யாவையும் கடைப்பிடித்து களர்நிலத்தில் நல்ல பலன் பெற விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

அந்த வசந்தம்

பேரறிஞர் அண்ணா

அந்த 'வசந்தம்'

[illegible]

-1967ல் தந்தை பெரியார் அவர்களின் 89 வது ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் கைப்பட 'விடுதலை' மலருக்கு எழுதிய கட்டுரை.

[illegible]

[illegible]

மாலை நேரத்திலே நல்ல மலர்களுக்கிடையே தனிமையில் இருப்பதால் ஏற்படும் இன்பம் போன்றது தான், அமைதியான இல்லற வாழ்க்கையும்.

- பேரறிஞர் அண்ணா.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

★ பிறருடைய துன்பத்தைத் தன்னுடைய தாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ, அவனே உண்மையான தொண்டன்.

தந்தை பெரியாரின் 114-வது பிறந்த நாள் விழா

தமிழகத்தில் பகுத்தறிவுச் சுடர் ஏற்றிய தந்தை பெரியார் அவர்களின் 114-வது பிறந்த நாளை யொட்டி, சென்னையில், அண்ணா மேம்பாலம் அருகே உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 17.9.1992 அன்று காலை, மாலை அணிவித்தார்.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை யொட்டி, சென்னை அண்ணா மேம்பாலம் அருகே உள்ள பெரியார் சிலையைச் சுற்றிப் பெரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த வட்டாரமே வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தபின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடையில் நின்றபடி மக்களைப் பார்த்துக் கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

பெரியாரின் நாட்டுப் பற்று!

ஈரோட்டில் பெரியார் ஈ.வே. இராமசாமி மதுவிலக்கு சம்பந்தமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அங்கு நடைபெற்ற மது விலக்குப் பணிகளை காந்திஜி பாராட்டியிருக்கிறார். 'சென்னையும், ஆந்திராவும் மெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. வங்கத்தைப் போன்று அங்கும் 1,500 பேர் கைதானால் நான் வியப்படையமாட்டேன். மதுவிலக்கில் ஈரோடு மட்டும் அஞ்சாது பணியாற்றி வந்திருக்கிறது. அதனால் இராமசாமி நாயக்கருக்கு ஒரு மாதச் சாதாரணச் சிறைத்தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது. இந்தச் சிறிய ஊரில் மட்டும் ஏற்கெனவே 37 பேருக்குத் தண்டனை கிடைத்து விட்டது. இப்போது நாயக்கரின் மனைவியாரும் அவருடைய சகோதரியும் மறியல் செய்யப் போகிறார்கள்'' என்று, (28.12.1921-இல் வெளியான) 'யங் இந்தியா' இதழில் எழுதினார்.

முக்கியமான தமிழகத் தேசபக்தர்கள் மீது வழக்குத் தொடரப் பெற்று வந்த காலம் 1924 ஜூன். அவ்வாறு வழக்குத் தொடரப் பெற்றவர்களில் பெரியார் ஈ.வே. இராமசாமி ஒருவர். பம்பாய்க்குச் சென்றிருந்த ராஜாஜி, பெரியார் ஈ.வெ. இராமசாமி மீது தொடர்ந்த வழக்கு விசாரணை அக்டோபர் 18-ஆம் தேதியன்று வருகிறது என்பதற்காக, அவசரமாகத் திரும்பி வந்தார். தேவதாஸ் காந்தி, மேலும் ஒருநாள் தங்கியிருந்து விட்டுப் போகுமாறு சொன்னதைக் கூட அவர் ஏற்கவில்லை. சென்னைக்கு நான் 18-ஆம் தேதிதான் போயாக வேண்டும். அன்றுதான் இராமசாமி நாயக்கரின் வழக்கு இறுதி விசாரணை, அவர் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப் பெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை கிடைக்கலாம். எங்களுடைய காங்கிரஸ் நடவடிக்கைகளுக்குத் தீவிரம் நிறைந்த தலைவராக (Head and Active Master) அவர் இருந்து வந்திருக்கிறார். என்று ராஜாஜி இரயிலிலிருந்து 16.10.1924-ஆம் தேதி காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். •

> அடக்கம், பொறுமை, புத்திக்கூர்மை, திறமை, தியாகம், பிறர் நலன் பேணுதல், எளிமை, அழகு இவையே பெண்களின் மொத்த வடிவம்.
>
> - தமிழ்த் தென்றல் திரு.வி.க.

மாணவர் கடன்!

அறிஞர் அண்ணா

தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கி, பார் மகிழத் தருவதற்கே சூல்கொண்டு உலவுவது மேகம். தன் தோகைகளை விரித்துக் கலாப மயில் ஆடுவது தானே கண்டு களித்திடவா? பிறர் காண! பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்களைக் கொண்டு தானேயோ அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்ளுகின்றாள்? இல்லை. மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்? ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க! பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு; பொற்குவியல்; புள்ளிக் கலாப மயில்; கார்மேகம்; நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள். இசைபட மக்கள் வாழ உமது ஆற்றலை ஈந்திட வந்துள்ளீர். இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்...

ஆற்றல் மிக்க அறிவுப்படி எழுந்தபடி இருந்திட வேண்டும். அதற்கான பயிற்சிக் கூடம் பல்கலைக் கழகம்...

எவருக்கும்கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் சிந்தித்து உண்மையறிந்து, அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து ஆளடிமையாகாமல் அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்...

''உண்மையெனில் உயிர்கொடுத்தேனும் காத்திடுவோம்; அன்று எனில், உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம்'' என்று முழக்கமிட்டு அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன். இந்நாட்டுத் தேள் எனின் கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிறநாட்டுத் தேன் எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்? எங்கிருந்து கிடைத்தாலும் ஏற்புடையதெனின் எமதாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை...

மக்கள் தொகையுடன் பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனைச் சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான் நாட்டு நிலை உயர்ந்திட நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள்...

நாட்டிலே ஒற்றுமை வேண்டும். இது குறிக்கோள். அனைவரும் ஏற்கத்தக்கது. இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்...

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்; இனிய எளிய இலட்சியம். கூடி வாழ்வோம். உன்னிடம் உள்ளது எனக்கு. என்னிடம் உள்ளதும் எனக்கு என்று முறை வகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக் குட்டியைத்தின்று, ஓநாய், ''என்னோடு ஒன்றாக ஆடு இணைந்துவிட்டது. நாங்கள் இணை பிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்'' என்று கூறுவது போன்ற முறையில், 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்...

தமிழ்-முரசு ஆகட்டும்; பண்பாடு கவசம் ஆகட்டும்; அறிவு-படைக்கலன் ஆகட்டும்; அறநெறி- வழித்துணை ஆகட்டும்! உறுதியுடன் செல்வீர்; ஊக்கமுடன் பணி புரிவீர்; ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ, தரணிக்குத் துணை நின்றிடும் தகுதி பெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

(மதுரைப் பல்கலைக்கழகப் 'பட்டமளிப்பு விழாப் பேருரையிலிருந்து)

மதுவிலக்குப் பிரச்சார வரிகள்

''மதுவைத் தீண்டுமுன் மனைவி மக்களை நினை.''

''குடிக்கு நீ அடிமையானால்-உன் குடும்பம் வறுமைக்கு அடிமையாகும்.''

''குடிப்பவனுக்கோ ஒரு வேளை இன்பம்; குடும்பத்துக்கோ ஓயாத துன்பம்.''

''உடலை, உணர்வை, உயிரைப் பறிக்கும் குடிப்பழக்கம் வேண்டவே வேண்டாம்.''

''மறக்கக் குடித்தவன் மறக்கப்படுவான்.''

''மதுவை நாடாதே, மரணத்தைத் தேடாதே.''

''குடி குடியைக் கெடுக்கும்''.

காமராசர் மாவட்டத்தில்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் இந்திய அரசின் 90 சதவிகித நிதி உதவியுடன் மகாராட்டிரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் - டையூ, டாமன் ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் 25 வட்டங்கள் அடங்கிய ஏழு மாவட்டங்களில் 26,425 சதுர கி.மீட்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வேழு மாவட்டங்களில் காமராசர் மாவட்டமும் ஒன்று. இத்திட்டத்தின் கீழ் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் ஆகிய 3 வட்டங்கள் அடங்கும். இத்திட்டம் வெகுகாலமாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுகிறது.

மலைப்பிரதேசங்களில் சமச்சீர் நிலை மிகவும் நுட்பம் வாய்ந்தது ஆகும். சுற்றுப்புறச் சூழல், அபிவிருத்தித் திட்டங் களுடன் இணைந்து செயல்படும்பொழுது சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே சமச்சீர்நிலையைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையில் சமச்சீர் நிலையைத் தொடர்ந்து பேணவும், அபிவிருத்தி செய்யவும் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் முக்கியத்துவம் தருகிறது. ஆகவே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இழந்துபோன சமச்சீர்நிலையை மீண்டும் நிலைப்படுத்துதலே ஆகும். 1. மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினைப் பாதுகாத்தல். 2. மேல் மண் அரிப்பைத் தடுத்தல். 3. மேல் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல் ஆகியன இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு, கீழ்க்கண்ட துறைகளின் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப் படுகிறது.

1. வேளாண்மைப் பொறியியல் துறை

அ) சமஉயரக் கற்சுவர் கட்டுதல்
ஆ) வண்டல்மண் படியும் குளம் கட்டுதல்
இ) மரம் நடுதல்

2) தோட்டக் கலைத்துறை

நீண்ட ஆயுட்கால மரங்கள் வளர்த்தல்

3) காடுகள் வளர்ப்புத் துறை

அ) கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல்
ஆ) சம உயரக் கற்சுவர் கட்டுதல்
இ) காடுகள் வளர்த்தல்

எஸ்.கே. மூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
- விருதுநகர்.

இஃதன்றி - பட்டுப்பூச்சி வளர்த்தல், சிறுதொழில் மேம்பாடு ஆகிய திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 1986-87 முதல் 1991-92 வரை ரூ.87.73 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. 2,530 ஏக்கர் பரப்புள்ள நிலம் பல்வேறு மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்திட்டப்பகுதியில் இதுவரை 513 தடுப்பு அணைகளும், 64 வண்டல் மண் படியும் குளங்களும் கட்டப்பட்டுள்ளன.

மேலும் தோட்டக் கலைத்துறையின் வாயிலாக 1986-87 முதல் 1991-92 வரை 14.74 இலட்சம் ரூபாய் செலவில் 2,250 ஏக்கர் பரப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பரப்பில் 85 சதவிகிதம் மா, கொய்யா, ஆகிய தோட்டப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. மீதி உள்ள இடங்களில் சப்போட்டா, இலந்தை மற்றும் எலுமிச்சை ஆகியவை வளர்க்கப்படுகின்றன. மொத்தத்தில் 903 விவசாயிகள் இதனால் பயனடைந்துள்ளனர்.

பரதாழ்வார் என்ற விவசாயி கொய்யா, எலுமிச்சை ஆகியவற்றை 3 ஏக்கர் பரப்பில் வளர்த்துள்ளார். இவர் 1986-87 முதல் தொடர்ந்து தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்து வருகிறார். தண்ணீர்ப் பற்றாக்குறை, தொழிலாளர் பிரச்சினை ஆகிய முக்கிய இரண்டு காரணங்களினால் இவர் தோட்டப் பயிர்கள் வளர்க்க ஆரம்பித்ததாகக் கூறினார். முன்னதாக இவர் நெல் சாகுபடி செய்து கொண்டிருந்தார். கிருஷ்ணன் கோயிலில், 1990 வரை தன் நிலத்தைத் தரிசாக வைத்திருந்தவர் தற்போது இத்திட்டத்தினால் தோட்டக் கலைப் பயிர் வளர்த்துப் பயனடைந்துள்ளார். அவர் 1991-92-இல் தோட்டக் கலைத்துறையின் உதவியுடன் கொய்யாக் கன்றுகளை 50 சதவிகித மானிய விலைக்குப் பெற்று, தரிசாக இருந்த தன் நிலத்தில் பயிர் செய்துள்ளார். தரிசாக இருந்த தன் 4 ஏக்கர் நிலத்தை இத்திட்டத்தினால்தான் தற்போது பயிர் நிலமாக மாற்ற முடிந்தது எனவும் பின்வரும் ஆண்டுகளில் நல்ல வருவாய் பெற முடியும் என்ற நம்பிக்கையையும் இவர் தெரிவித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வெங்கடேசபுரம் என்ற இடத்தில் மாநில அரசு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பெரும்பழத் தோட்டம் விவசாயிகளின் தோட்டக் கலைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இங்கு ஒரு திறந்தவெளிக் கிணறு வெட்டவும், சில கன்றுகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு பனித்துளிக்கூடம் அமைக்கவும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 7.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை செய்ய வேண்டும் என்று பாடினார் பாரதி. தரமான தமிழ்ப் புத்தகங்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென "நேஷனல் புக் டிரஸ்ட்" பாடுபடுகிறது.

வரும் செப்டம்பர் 30-லிருந்து 1993 மே 9 வரை தமிழ்நாட்டில் 32 நகரங்களில் புத்தகக் கண்காட்சிகளை இந்நிறுவனம் நடத்துகிறது. ஒவ்வொரு நகரத்திலும் ஐந்து நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களின் படைப்புகள், இலக்கிய வெளியீடுகள், பிற மொழிகளின் நூல்கள் முதலியன இடம் பெறும்.

விழுப்பனூரில் ஒரு நபரின் நிலத்தில் மண் அரிப்பைத் தடுக்கவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் தொடர்ந்தாற்போல் 3 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. இத்தடுப்பணைகளில் நீர் தேக்கப்படுவதினால் இப்பகுதியில் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகின்றது. சிங்கம்மாள்புரத்து மலைப்பகுதியில் 7 ஏக்கர் பரப்பிற்குச் சம உயரக் கற்சுவர் கட்டப்பட்டுள்ளது. இக்கற்சுவர் மழைநீர் வழிந்து சாயாமலும், மண்ணை அரித்துச் செல்லாமலும் தடுக்க மிகவும் உபயோகமாய் உள்ளது. இக்கற் சுவர்கள் மண் அரிப்பைத் தடுக்க மிகவும் உபயோகமாய் உள்ளன.

கொக்கன்குளம் காட்டுப் பகுதியில் சமஉயரக் கற்சுவர்களும் தடுப்பு அணைகளும் வண்டல் மண் குளங்களும், மண் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு கட்டப்பட்டுள்ளன. காடுகள் வளர்த்தல் மூலம் சமச்சீர் நிலை முன்னேற்றம் அடைவதால் இதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. 50 எக்டேர் பரப்பிற்குப் பனிமர வகையைச் சேர்ந்த காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் நீர்த்தேக்கப் பணிகள் செய்ததின் மூலம் இயற்கை வளங்களான தேக்குப் போன்ற மரங்கள் நன்கு வளர்கின்றன.

காமராசர் மாவட்டத்தில் உள்ள செண்பகத் தோப்பு என்ற இடத்தில் இப்பகுதியில் ஆங்காங்கே பரவலாக வாழும் 22 பழங்குடி குடும்பத்தினருக்கு மலைச் சாதியினர் மேம்பாட்டிற்கென அரசு உதவித் திட்டம் ஒன்று செயல்படுகிறது. இப்பழங்குடி மக்களின் புனர்வாழ்வுக்கு என 8.66 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்க்கவும், இப்பழங்குடியினர் வசிக்கவும் 6 வீடுகளும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முசுக்கொட்டைச் செடி வளர்க்க 0.50 ஏக்கர் நிலம் வழங்குதலும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். தற்போது 13.42 ஏக்கர் நிலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திறந்தவெளிக் கிணறு ஒன்று வெட்டி முடிக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் குடியமர்த்தப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த ஆண்டுகளில் இத்திட்டம் ஒரு குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதுவரை தரிசாகவும் பயிரிடப்படாமலும் இருந்த நிலங்களில் இத்திட்டத்தின் கீழ் தற்போது பழ மரங்கள் வளர்க்கப்பட்டுவருகின்றன, முதல் 1992 வரை இப்பகுதியில் பழ மரங்கள் வளர்ப்பு பன்மடங்கு பெருகியுள்ளது எனத் தெரிகிறது. இதுவரை வெங்காயம், மிளகாய், பருத்தி, வேர்க்கடலை, எள் ஆகியவற்றைப் பயிரிட்ட விவசாயிகள் இத்திட்டத்தினால் தற்போது மா, கொய்யா, ஆகியவற்றை மிகுந்த அளவிலும் சப்போட்டா, எலுமிச்சை போன்றவற்றைச் சிறிய அளவிலும் பயிரிடுகிறார்கள். இத்திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம் பயிர்த் தோட்டங்களின் காட்சிகளில் ஒரு செழுமையான மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

வண்டல் மண் குளங்கள், கசிவுநீர்க் குட்டைகள், சமஉயரக் கற்சுவர்கள், தடுப்பணைகள் ஆகிய பொறியியற் திட்டங்களினால் காடு வளர்த்தல், மண் மற்றும் அதன் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இத்திட்டப் பகுதி அடைந்துள்ளது. இப்பகுதி மக்கள் தற்போது உள்ளதைவிட அதிக அளவில் செயல்பட்டால் சமச்சீர் நிலை மேம்பாட்டையும், சமச்சீர் நிலைப் பாதுகாப்பையும் எய்தும் பொருட்டு ஒருங்கிணைந்து செயல்படும் இந்த மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். •

கொள்முதல் செய்யும் நெல்லுக்கு அதிக விலை: மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் நெல் ஏகபோகக் கொள்முதல் செய்யப்படும் பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் குறுவை நெல்லுக்குச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40 அதிகம் உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்தப் புதிய கொள்முதல் விலை 1.9.92 முதல் அமலுக்கு வரும்.

அதன்படி சென்ற ஆண்டு ரூ.230 கொள்முதல் செய்யப்பட்ட சாதாரண ரக நெல் தற்போது குவிண்டால் விலை ரூ.270 வீதம் கொள்முதல் செய்யப்படும்.

அதேபோல் ரூ.240-க்கு வாங்கப்பட்ட சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.280 வீதமும், ரூ.250-க்குக் கொள்முதல் செய்யப்பட்ட மிகச் சன்னரக நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.290 வீதமும் இனி, தமிழக அரசு, விவசாயிகளிடமிருந்து வாங்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழக அரசின் கொள்முதல் நடைமுறையில் ஏற்கெனவே உள்ள ஏனைய நிபந்தனைகள் சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் இருக்கும். அரசினுடைய ஏகபோக நெல் கொள்முதலுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமெனத் தமிழக விவசாயிகளைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

அவர்தாம் பெரியார்

- பாவேந்தர் பாரதிதாசன்



அவர்தாம் பெரியார் - பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில் .... (அவர்)

மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப்பெரும் படையின் தொடுப்பு
.... (அவர்)

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும் .... (அவர்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும்தலை மேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை .... (அவர்)

பழந்தமிழ்த் தலைவர்

- கவியரசு கண்ணதாசன்

கார்கா லத்துக் கறுத்த மேகங்கள்
மண்ணிடைப் பொழியும்மழைபோல் நாட்டில்
சீர்திருத் தத்தைத் திறம்படச் சொன்னவர்
செந்தமிழ் எழுத்தில் திருத்தம் செய்தவர்
மதுவிலக் கென்பதை மனதால் விரும்பி
மனையின் தென்னை மரங்களை வெட்டி,
செயலில் காட்டிய திறமிகு தலைவர்
கடைகளி லிருந்து கதருடைஎடுத்து
தெருவினில் விற்ற தேசியச் செம்மல்
சரியோ தவறோ தனக்குள் பட்டதை
புட்டுப் புட்டுப் புகன்றதோர் நேர்மையர்
எதிர்ப்பில் பிறந்து எதிர்ப்பில் வளர்ந்து
இறுதி வரைக்கும் இயங்கிய சாரணர்
கருத்து மாற்றங்கள் காணினும் அவரை
ஒப்புக் கொண்டனர் ஒவ்வொரு தலைவரும்!
தனக்கென என்று தனிவழி வகுத்து,
வந்தவர் கணக்கோ வாராதவர் கணக்கோ
பாராது சென்ற பழந்தமிழ்த் தலைவர்

குழந்தைவழி நலக் கல்வித் திட்டத் தொடக்க விழா

குழந்தைவழி நலக் கல்வி பள்ளிக் குழந்தைகள் மூலம் எளிய நலவாழ்வுக் கருத்துகளைச் சமுதாயத்தில் பரப்பும் நலக் கல்வி முறையாகும். இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் இக்கல்விமுறை வெற்றிகண்டுள்ளது. இந்தியாவில் சென்னையில் இம்முறை சிறந்த பயனளித்து வருகிறது. சென்னை மாநகராட்சி புலியூர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் இத்திட்டத்தை, மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு. இரா.பூர்ண லிங்கம் 25.8.'92 அன்று தொடங்கி வைத்தார்.

''எங்கு மக்கள் ஆரோக்கியமாக நோயில்லாமல் நீண்ட நாள் வாழ்கிறார்களோ, அங்கு மக்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதில்லை. அங்கு மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்து காணப்படுகிறது. இது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப் பட்டுள்ளது. குழந்தைவழி நலக் கல்வி தடுப்பூசிகள் போட்டு நோய் வருமுன் குழந்தைகளைக் காப்பது, வயிற்றுப் போக்குக்கு எளிய மருத்துவம், தன் சுகாதாரம், சுற்றுப்புறச் சுகாதாரம் இவற்றை மக்களிடையே பரப்புவதாகும். குழந்தைகள் மூலம் செய்தி அறிந்தால், அதை மக்கள் எளிதில் உணர்ந்துகொண்டு அதன் படி நடப்பார்கள். எனவே, இத் திட்டத்தில் குடிசைப் பகுதிகளில் வாழும் எழுதப் படிக்க அறியாதவர்கள் .பயன்பெறுகிறார்கள். சென்ற ஆண்டு பத்து பள்ளிகளில் பரீட்சார்த்தமாக இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டம் 30 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படுகிறது'' என்று அவர் தொடக்க உரையில் கூறினார். இத்திட்டத்தைச் சிறப் பாகச் செயல்படுத்திய 6 மாநகராட் சிப் பள்ளிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேசிய இந்திய மக்கள் தொகைத் திட்ட இயக்குநர் திருமதி தங்கம் சங்கரநாராயணன்; இத் திட்டத்தால் குறிப்பிட்ட பயிற்சி பெற்ற மாணவர்களின் நல அறிவும், அதைப் பிறருக்கு எடுத்துக் கூறும் திறனும் வளர்ந்துள்ளன. பொதுமக்களிடம் இது எந்த அளவிற்கு நன்மை செய்துள்ளது என்பதைக் கண்டறிய விரைவில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்' என்று கூறினார். பின்னர் அவர் கொடி அசைத்து, மாணவர் பேரணி ஊர் வலத்தை தொடங்கி வைத்தார். பின்னர், ஊர்வலம் அருகில் உள்ள குடிசைப் பகுதிகளுக்குச் சென்று நலக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்ச்சி ஏற் படுத்தும் நோக்கத்துடன் கலை நிகழ்ச்சிகளை நடத்தியது.

இவ்விழாவிற்கு மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு. சு.சந்திர மௌலி வரவேற்புரை கூறினார். டாக்டர் ஹைமாபாலச்சந்திரன் திட்டத்தை விளக்கி உரையாற்றினார். டாக்டர் கொடிமணி நன்றி கூறினார். விழாவில் யூனிசெப் உறுப்பினர் திரு. கிறிஸ்டியன் உரை யாற்றினார். •



ரோமானியர் - தமிழர்களின் தொல்லியல் தடயங்கள் - சிறப்புக் கண்காட்சி வழியாக

ரோமானிய அரும்பொருள் கண்காட்சி

ஏழு மலைகளில் எழுந்துள்ள திருப்பதி திரு நகரம் போன்றே, ஏழு மலைகளில் அமைக்கப்பட்ட மேலோக நகரம் (Eternal City) என்று ரோம் நகரத்தை இன்றளவும் குறிப்பிடுவது வழக்கமாகும். ரோம் நகரம் உலகத்திலேயே சிறந்த நாகரீகக் கவர்ச்சியைக் கொண்ட நகரம் என்றும் போற்றப்படுகிறது. இதைப்போன்றே ரோமானியர் ஆட்சியும் பழமையும் சிறப்பும் கொண்ட ஆட்சியாகும். கி.மு. 753-இல் தோற்றுவிக்கப்பட்டு, சுமார் 700 ஆண்டுகள் வரை குடியரசாகப் பணியாற்றி, பிறகு அகஸ்டஸ் மன்னர் முதல் வல்லரசர்களின் ஆட்சியின் கீழ், சீரும் சிறப்பும் பெற்று உலகத்தின் நாகரீக வளர்ச்சிப் படிகளில் சுமார் 1300 ஆண்டுகள் ஈடுபாடு கொண்டிருந்ததே இப்பெரும் ஆட்சியாகும். ரோமுலஸ் (Romulus) தலைமையில் ரோம் நகரம் உருவாக்கப்பட்டு, கலை, ஓவியம், சிற்பம், கட்டடம், உடற்பயிற்சி, விளையாட்டுகள், போட்டிகள், வியாபாரம், வாணிபம், வங்கிகள், பண்டமாற்று, தொழில் வளர்ச்சி, கல்வி, மொழி, அழகு, பேச்சுவன்மை ஆகிய கலை, கலாச்சாரப் பண்பாடுகளில் சிறப்பாக மேலோங்கி நின்றது என்பது நன்கு தெரிந்ததே. இவையாவும் இன்றளவும் பல நாட்டாரை வசீகரிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இந்த ரோமானிய ஆட்சி மேற்கு ஐரோப்பா முழுமையும், ஆப்பிரிக்காவின் மேற்பகுதி, தென்மேற்கு ஆசியாவின் பகுதிகளை உள்ளடக்கி சுமார் 2,500,000 சதுரமைல் பரப்பளவைக் கொண்டதாக இருந்தது.

ரோமர்களின் சமூக வாழ்க்கையில், செல்வந்தர், நகரத்தார், கிராமத்தார் எனப்படுபவரான இவர்கள் மாளிகைகளிலும், வீட்டு வசதி அடுக்ககங்களிலும், சாதாரண குடிசைகளிலும் முறையே வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெரும்பாலோர் விவசாயிகளே. கோதுமை, பார்லி, பருப்பு வகைகள், திராட்சை, ஒலிவ எண்ணெய் ஆகியவைகளைச் சாகுபடி செய்தனர். சிலர் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டனர். இலத்தீன் மொழியைக் கற்றனர். மேலும் கிரேக்க மொழி, இலக்கியம், கட்டடக் கலை, சிற்பக்கலை, இவர்களைக் கவர்ந்தது. பாந்தியன் என்று அழைக்கப்படும் சிறப்பு அரைவடிவ கோபுர வளைவுகளையும், கட்டடப் பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டனர். ரோம் நகரத்தில் மக்கள் பாண்ட பானைக்கலையில் சிறந்திருந்தனர். இவர்கள் கடின உழைப்பாளிகள். தங்கள் முயற்சியில் பெற்ற மதுபானம், ஒலிவ எண்ணெய், தங்கள் நாட்டில் காய்ந்த களிமண்ணினால் சுடப்பட்டுச் செய்யப்பட்ட சிறப்புப் பானைகளான தூது வட்டில் வடிவப் பாண்டங்கள் (Rouletted Pottery), அரிட்டைன் பாண்டங்கள் (Arretine Pottery), ஆம்போரா இருகை பிடி மது மண் சாடி (Amphorae jars)களை வெளி நாடுகளுக்கு முக்கியமாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தனர். மாற்று இறக்குமதியாகத் தானியங்கள், உலோகங்கள், பளிங்கு கல், மெல்லிய நூல் துணிகள், கம்பளம், தந்தம், பட்டு, வாசனைத் திரவியங்களைப் பெற்றனர்.

நே. தேவசகாயம்
காப்பாட்சியர்
மானிடவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி. இராசமோகன்
உதவி காப்பாட்சியர்

17-ஆம் நூற்றாண்டில் வாணிபத்தின் வழியே நம்நாட்டிற்கு வந்த ஆங்கிலேயரும், ரோமானியர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல. அவர்களின் கட்டடக் கலையிலும் ரோம-கிரேக்கரின் சிறப்பியல்புகளைக் கொண்டதாக இருந்தது. சென்னை மாகாணத்தில் சென்னை நகரத்தில் 1789-ஆம் ஆண்டிற்கு முன் பொதுமக்களின் நிதியிலிருந்து உருவாக்கப்பட்டதே எழும்பூரில் எழும்பியுள்ள பாந்தியன் என்று அழைக்கப்பட்ட, இந்நாளில் கம்பீரமாக அரைவட்ட கோபுரங்களுடன் எழில்மிகு காட்சியளிக்கும் அருங்காட்சி வளாகத்தில் காட்சியளிக்கும் அருங்காட்சியகப் பழம் பெரும் கட்டடங்களே ஆகும். இச்சரித்திர மிக்க கட்டடங்களில் தான் 1793-ஆம் ஆண்டில் காரன்வாலீசுக்கும், 1802-ஆம் ஆண்டில், சென்னை ஆளுநர் இராபர்ட் கிளைவிற்கும், 1805-ஆம் ஆண்டில், தளபதி ஜெனரல் ஆர்தர் வெல்லெஸ்லிக்கும், 1807-ஆம் ஆண்டில் ஆளுநர் மெல்விற்கும் வரவேற்பு மற்றும் மரியாதை 'விருந்துகளும் நடைபெற்றன. 1830- ஆம் ஆண்டில் அரசு இக்கட்டடங்களை ரூ.25,000-க்கு வாங்கிச் சிறிது காலம் கழித்து மாவட்ட ஆட்சியரின் அலுவலகமாக பணியாற்றிய பின்பு 1851-ஆம் ஆண்டில் அருங்காட்சியகம் அமைக்கப் பெற்றது. அருங்காட்சியகம் அமைக்க இச்சரித்திரக் கட்டடங்கள் சிறப்பானவைகளே! இக்கட்டட அமைப்புகள், கலைவேலை, கட்டட அமைப்பு ஆகியவை வெளித்தோற்றத்திலிருந்தே இது கிரேக்க-ரோமானிய கலையை தழுவியதாக தெரிய வருகிறது. முக்கியமாக அரைவட்ட வடிவில் அமைந்துள்ள கலை அரங்கின் பகுதி, கன்னிமரா நூலகத்தின் பழமைப்பகுதி, மற்றும் நூற்றாண்டு மண்டபத்தின் ஒரு பகுதியும் பாந்தியன் என்று கூறப்படுகிற கிரேக்க- ரோமானிய கட்டடத்தின் சாயலை உடையதாக இருப்பதை காணலாம்.

இதன் அடிப்படையில், இவ்வித கட்டடத்தில் ரோம அரும்பொருள்களை ஒரு சிறப்புக் கண்காட்சிக்கு அமைத்தல் மிகவும் சிறப்புடையதாகும் என்று எண்ணி, இவ்வருங்காட்சியகமும், சர்.சி.பி. இராமசாமி ஐயர் அறக்கட்டளை, சென்னையும் இணைந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 10-ஆம் நாள் முதல் செப்டம்பர் 15-ஆம் நாள் வரையில் ரோம தொல்பொருளியல் அரும்பொருள்களும், ரோம நாணயங்களும், நகைகளும் சேர்த்து காட்சிக்கு அமைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டு கட்டடமும் அதன் உட்புறம் உள்ள சதுரத் தூண்களும் ரோமானிய கட்டட அமைப்பை ஒருவாறு நமக்கு நினைவூட்டுகிறது. இக்காட்சிப் பொருள்கள், ரோமானியருக்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்ட வாணிப உறவையும், இதர சமூக உறவுகளையும் நமக்கு நினைவூட்டுகிறது. இக்கருத்தை வலுப்படுத்தும் காட்சிப் பொருள்கள் மற்றும் ஆய்வுத் தடயங்கள் முதல் முதலாக சென்னை அருங்காட்சியகத்தினால்தான் கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

1939-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் வெள்ளளூரில் கண்டெடுக்கப்பட்ட புதையலில், மன்னன் அகஸ்டஸ்ஸின் தங்க நாணயங்களும், தங்க நகைகளும் ரோமனியரின் கலைத் தன்மையை நமக்குக் காட்டுகின்றன. இப்புதையலில் கிடைத்த பத்து தங்க நகைகளுள், நான்கு பெரிய மோதிரங்களும், குதிரை உருவம் கொண்ட கார்னீலியன் மோதிரக் கல்லும், கதிர் அரிவாள் போன்ற துண்டும், பூவேலைப்பாடு கொண்ட இரண்டு பாசிகளும், ஒரு தங்கப் பதக்கமும் அடங்கும். சிங்கம், மீன் உருவம் பொறிக்கப்பட்ட மோதிரங்கள் இந்திய பொற்கொல்லரால் செய்யப்பட்டிருக்கலாம். உரோமானிய மகளிர் ஒருவள் ஆடை அணிதலும், கிரேக்கப் போர் வீரனின் உருவம் அல்லது கற்பனை விலங்கு உருவம் ஆகியவை மோதிரங்களில் சித்திரிக்கப்பட்டிருப்பதிலிருந்து இம்மோதிரச்

சிதார் இசைமேதை இரவிசங்கருக்கு மாக்சேசே விருது

ஆசியாவின் நோபல் பரிசு என்று கருதப்படும் மாக்சேசே விருது சிதார் இசைமேதை இரவிசங்கருக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டிற்கான இந்த விருது இவரது கலைத்திறனுக்காக வழங்கப்படுகிறது. இந்த விருதினை, பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் திரு. பிடல் ராமோஸ் அண்மையில் வழங்கினார்.

'யவனர்கள்' ஓவியக் காட்சி



உரோம நகைகள்

சித்திரங்களை ரோம் நகரப் பொற்கொல்லர் செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்தகைய விரல் மோதிரங்கள் திருமண மோதிரங்களாகவோ அல்லது சிறப்பு நிகழ்ச்சிகளில் பாசத்தையும் நட்பையும் காட்டும் அடையாளமாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

இதைப் போன்றே 1991-ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கோனேரிப்பட்டி கிராமத்தில் புதையலாகப் பெறப்பட்ட ஒரு ஜோடி தங்க கால் தண்டைகள் சிறந்த, நுணுக்க வேலைப்பாடுகள் கொண்டதாக உள்ளன. இது ரோமானியப் பொற்கொல்லரின் தொழில்நுட்பத்துடன் இந்தியப் பொற்கொல்லர்களின் திறமையில் செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து, 1940-ஆம் ஆண்டு பாண்டிச்சேரியை அடுத்த அரிக்கமேட்டில் இவ்வருங்காட்சியக முன்னாள் மானிடவியல் காப்பாட்சியரும், அருங்காட்சியக இயக்குநருமான டாக்டர் எ. ஐயப்பன், பிரெஞ்சு நாட்டுத் தொல்பொருள் வல்லுநருடன் சேர்து அகழாய்வு நடத்தி, கண்ணாடி மணிகள், ரோம்நாட்டுப் பானை ஓடுகள் ஆகியவைகளை இவ்வருங்காட்சியத்திற்குச் சேகரித்தார். இதன் பிறகு தான் முறையான அடுக்குதள அகழாய்வுகளை (Stratigraphical Excavation) சர். மார்ட்டிமெர் வீலர், கசால், விமலா பெக்லி, பேராசிரியர் இராமன் ஆகியவர்கள் அரிக்கமேட்டில் நடத்தினார்கள். இவர்கள் ஆய்வினால் சேகரித்த அரும்பொருள்கள் இவ்வருங்காட்சியச் சிறப்புக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவுடன் ரோமாபுரி கொண்டிருந்த வாணிபத் தொடர்புகளைப் பற்றிய செய்திகள் ஸ்டாபோ, பிளினி, தாலமி, பெரிப்புளுஸ் போன்றவர்களின் குறிப்புகளிலிருந்தும், முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கிய நூல்களின் வாயிலாக யவனர்களின் (மேற்கு நாட்டவர்) ஆடை, அலங்காரமும், இருப்பிடம், தொழிற்கூடங்களை நாம் ஒருவாறு அறியலாம். ரோம் நகர வணிகர்கள் கி.மு. முதல் நூற்றாண்டில் மத்திய தரைக்கடல் பகுதியிலும் செங்கடல் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தி அவ்வழியே, வாணிபத்தை மேற்கொண்டு மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இறங்கினர். உள்நாட்டின் காடுகள், மலைகள் யாவையும் கடந்து பாலக்கோடு கணவாய் வழியாகக் கோவையை அடைந்தனர். கோவையில் பெரில் ¬டீளயலமூ, கிரிஸ்டல் (Crystal) போன்ற சிறப்பு மிக்க கற்களைப் பெற்றனர். அருகிலுள்ள ஈரோடு, ரோமானியர்களுக்கு வேண்டிய இரும்பு, எஃகு மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. யவனர்கள் என்ற பெயருடன் நமது நாட்டு மக்களுடன் ஒன்றறக் கலந்தனர். பிறகு கோரமாண்டல் கடற்கரைப் பகுதிக்கு வியாபாரத்தில் சென்று அக்கரையோரமான அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டிணம், கரூர், உறையூர், காரைக்காடு (கடலூர் அருகில்), அழகன் கோவில், வாசவசமுத்திரம் (மகாபலிபுரம் அருகில்), காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் தங்களை நிலைப்படுத்தினர்.

வியாபாரத்தின் வழியாக ஈடுபட்ட இவர்கள், தச்சர்களாகவும், கொல்லர்களாகவும், கலை வல்லுநர்களாகவும் காலப்போக்கில் மாறி, தங்கள் கலைத் திறமையைக் காட்ட ஆரம்பித்தனர். திடமாக உள்ள பலர் காவலர்காளகவும், படையில் உதவியாளராகவும் சேர்ந்து இந்திய அரசர்களுக்கு உதவினர். அழகுமிகு யவனப் பெண்டிர் அரண்மனைகளில் உதவியாளராகவும், குதிரைப் படையைக் கவனிப்பவராகவும், படையில் வில், அம்புகளைச் சரிபார்ப்பவராகவும் இத்தகைய சிறு சிறு பணிகளில் தங்களையும் இந்திய சமுக அமைப்பில் ஈடுபடுத்திக் கொள்ள முற்பட்டனர். இவைகளை விளக்கும் வகையில், ''யவனர்கள் இந்தியாவில்'', ''ரோமரின் கடற்கரைப் பகுதி'' ''ரோமரின் பானைக் கடை'' ''ரோம் ஆட்சியின் வரலாறு'' போன்ற தலைப்பில் பெரிய அளவில் ஓவியங்கள் வரையப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் சென்னை அமைந்தகரை அருகில் அரசு அருங்காட்சியகத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட மது பானம் வைக்கும் கைப்பிடியில்லாத கூர்மையான மண்சாடி கிடைத்திருப்பது, சென்னை நகரிலும் ரோமரின் கலை மாட்சியை நன்கு காட்டுவதாக உள்ளது. நமது நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வாணிபம் செழித்திருந்தது என்பதற்குப் புதையலாகக் கிடைத்துள்ள ரோமர், அரேபியர், மற்றும் வெனீசியர் தங்க, வெள்ளி, செப்பு நாணயங்கள் (கி.மு. 1-ஆம் நூற்றாண்டு முதல் - கி.பி. 4- ஆம் நூற்றாண்டு வரை) பரவலாகக் கோவை, திருச்சி, கரூர், மதுரை, அழகன்குளம், தஞ்சை, போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைகளும் இங்கு காட்சியில் இடம் பெறுகின்றன.

ரோமர்-இந்திய வாணிபத் தொடர்பு, சமூக பண்பாட்டுக் கூறுகள், ரோமாபுரி ஆட்சியின் சரித்திர வரலாறு படிகள், கடற்பயண வழிகள், நம்நாட்டு இயற்கை மூல கனிப் பொருள்கள், இந்திய ரோம ஆய்வு முறை விதிகள், நெறிகள், அகழாய்வுகள், ஆகியவைகளை நாமும், நமது மாணவர்களும் நன்கு அறிந்துகொள்ள இந்தச் சிறப்புக் கண்காட்சி உதவும், தொடக்க நிலை முயற்சி அளிக்க, எல்லா விதத்திலும் தூண்டுகோலாக இருக்கும் என நம்புகிறோம். •



எழுத்தும் தெய்வம் எழுதுகோலும் தெய்வம்!

ஜி. கணேசன்

'கத்தி முனையை விட பேனா முனை வலிது' இது வழக்கத்தில் உள்ள பழைய பழமொழி என்றாலும் இன்றளவும் உண்மையே, எழுதும் திறமை, சாமர்த்தியம் இவைகள் ஒருபுறம் இருப்பினும் தரமான எழுதுகோல்கள், மற்றும் எழுத்து உபகரணங்கள் இருந்தால் தான் எழுதுவது சாத்தியப்படும்.

தரமான எழுதுகோல்கள், காகிதங்கள் உபயோகிப்பின் ஒருவருடைய கையெழுத்துக்கூட முன்னேற வழியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

கடைகளில் நாம் பல விதமான எழுதுகோல்களை பார்க்கிறோம்.

இன்று பிரபலமான எழுதுகோல்களாக, பால் பாயிண்டு வகை பேனாக்கள், ஜாட்டர் வகை பேனாக்கள், வரைபடப் பேனாக்கள் (ஸ்கெட்ச் பென்) மற்றும் கறுப்பு லெட் பென்சில் வகையறாக்கள் உள்ளன.

இன்றைக்குப் பென்சில்கள் பேனாக்களின் உபயோகம் மிக அதிக அளவில் இருப்பதால், தரமுள்ளவைகளாக இவைகள் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் அடிப்படையில், இந்தியத் தர நிர்ணய அமைவனம் இவ்வகைப் பொருள்களுக்கு தர நியமங்களை உருவாக்கியுள்ளது.

டிராயிங் பென்சில்கள், தச்சர்கள் பென்சில்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உபயோகப்படுத்தும் பென்சில்கள் என்று நான்கு வகையான கருப்பு லெட் (Black Lead) பென்சில்கள் தரத்தினைப் பற்றி எடுத்துச் செல்வது IS: 1375 - 1981 என்னும் இந்தியத் தர நியமம்.

கருப்பு லெட் பென்சில் வகைகள் கிராபைட் மற்றும் ஒரு வகைக் களிமண் சேர்க்கையால் உருவாக்கப்பட்டு மரத்தினால் செய்யப்பட்ட கூடு போன்ற அமைப்பின் உள்ளே வைக்கப்படுகிறது.

டிராயிங் பென்சில்களில் 13 கீழ்க்கண்ட வகைகள் உண்டு. 6B, 5B, 4B, 2B, B, HB, 2H, 3H, 4H, 5H, & 6H இதில் 'B' என்னும் சொல் மிருதுத் தன்மையினையும், கருமையையும் குறிக்கும் 'H' என்பது பென்சிலின் கடினத்தன்மை. Hardness of the pencils 'HB' வகையறாக்கள் சுருக்கெழுத்தாளர்கள், பத்திரிகை நிருபர்கள் உபயோகத்திற்கானவை.

பொதுவாக எழுத உபயோகப்படும் பென்சில்கள் மூன்று வகையாவன:

அ. Hard (H & 2H) கடினத்தன்மை வாய்ந்தவை.

ஆ) Medium (HB) கடினத்தன்மையுமில்லாமல், மிருதுத் தன்மையுமில்லாமல் நடுத்தரமானவைகள்.

இ) Soft (B & 2B) மிருதுத்தன்மை கொண்டவை.

Corrosion Test, உலோக வகைப் பேனாக்களுக்கு மட்டும் ஸ்பிரிங்குக்கான கம்பிஷன் டெஸ்டு இவை கூறப்பட்டுள்ளன.

இது தவிர, பேனா எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கான பரிசோதனைகளையும் உள்ளடக்கியது இத்தர நியமம். இவைகளையும் தவிர, சீரான உபயோகத்திற்காக கிளிப் ஆக்ஷன் பரிசோதனை, லோட்டெஸ்டு இவைகளும் இந்த IS:3707:1984 தரநியமத்தில் உள்ளடக்கம்.

இதேபோல், IS:10559 - 1983 என்றும் தர நியமம் ஜாட்டர் வகைப் பேனாக்களுக்கு என்று உருவாக்கப்பட்டது.

தேவையான மூலப் பொருள்கள், அளவுகள், மற்றும் நன்றாக எழுத முடிகிறதா என்று கண்டறியும் சோதனை, நீடித்த தன்மை, ஸ்டார்டின் டெஸ்டு, கிளிப் மற்றும் செயல் திறன் சோதனை துரிதப்படுத்தப்படும். ஏஜிங் சோதனை, பிளேமபிள் சோதனை, பேனாவில் உள்ள ஸ்பிரிங்குக்கான கம்பிரஷன் சோதனை, ஹார்டுனெஸ், கரோஷன் ரெஸிஸ்டன்ஸ், லோட்டெஸ்டு இவைகளை உள்ளடக்கியவை.

IS:10560 - 1983 பேனா ரீபில்கள் பற்றியது. என்னும் தர நியமம் ஜாட்டர் பால் IS:10562 - 1983 என்னும் தர நியமம் ஸ்கெட்ச் பேனா.

இவ்வகை ஸ்கெட்ச் பேனாக்களை மாணவர்களும், ஓவியர்களும் உபயோகப்படுத்துகின்றனர்.

உருவகம், அளவுகள் (ஸ்லிப்பின் டையா மீட்டர், ஸ்லிப்பின் பலம், wear of slip, Friction of slip & blackness of pencil marking) இவை சொல்லப்பட்டுள்ளன.

இவை தவிர பென்சிலின் மேல் செய்யப்படும் லாக்கர் பூச்சு (Coating) மற்றும் பென்சிலின் மீது உள்ள எழுத்துக்கள் இரசாயனச் சேர்க்கையால் பதியப்பட்டு இருக்கும்.

அநேக வீட்டில் தொலைபேசிக்கு அருகில் பல பால்பாயிண்ட் பேனாக்கள் வைத்திருப்பார்கள். தொலைபேசியில் வரும் செய்திகளைக் குறிக்க முயலும்போது எந்தப் பேனாவும் எழுதாது. அப்போது நமக்கு ஏற்படும் கோபமும், விரக்தியும் உணர முடியுமே தவிர விவரிக்க முடியாது.

அமைவனம் பால் பாயிண்ட் பேனாக்களுக்கு, பால் பேனா ரீபில்கள் மற்றும் ரீபில்களில் உபயோகப்படுத்தப்படும் மைக்குத் தர நியமங்களை உருவாக்கியுள்ளது.

IS:3705 - 1980 பால் பாயிண்ட் பேனாவுக்கான தர நியமம்.

IS:3707 - 1984 பால் பாயிண்ட் பேனாவுக்கு உபயோகப்படுத்தப்படும் ரீபில்கள்.

IS:5805 - 1970 பால் பாயிண்ட் பேனாவுக்கான மை.

பால் பாயிண்ட் பேனாவுக்கான தர நியமம் 1966-இல் முதன் முதலாக உருவாக்கப்பட்டு 1980-இல் மறுபடி திருத்தியமைக்கப்பட்டது. ஒரு ரீபில் கொண்ட பேனாக்கள், மேசை மீது வைத்துக்கொள்ள உபயோகப்படுத்தும் பேனாக்கள் எல்லாம் இவற்றில் அடக்கம்.

இவ்வகைப் பேனாக்களுக்கு ஒரு மேல் மூடியும் உண்டு. இதனால், ரீபில் மை உலராமல் பாதுகாக்கப்படுகிறது.

பால் பேனாக்கள் தரமுள்ளதா என்று பார்க்க பல பரிசோதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சுவாரஸ்யமான ஒன்று பரிசோதனைக் கருவிகளில் பொருத்தப்பட்ட பால் பேனாக்கள் 500 மீட்டருக்கு மேல் தொடர்ச்சியாகவும் இடைவெளி இல்லாமலும் எந்த இடத்திலும் அதிகமாக மை பரவாமலும் கோடுகள் கிழிக்க வேண்டும். 500 மீட்டர் ஆன பிறகு பேனாக்களின் நுனி சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் நின்று போகும்வரை இந்தப் பரிசோதனையைத் தொடர வேண்டும். அதுபோல் இன்னும் சில பரிசோதனைகளில் தேறிய பின்பு தான் தரமுள்ளவை என்று நிர்ணயிக்கப்படும்.

பேனா செய்வதற்கான தேவையான மூலப் பொருள்கள் அளவுகள் இவைகள் உள்ளடக்கியது இத் தரநியமம். செயல்திறன் சோதனையின் ஒரு அங்கமான ஸ்டார்டிங் டெஸ்டு, ஸ்மியரிங் டெஸ்டு, கிலிப் ஆக்ஷன் டெஸ்டு, நீள அகலக் குறிகள், எழுதும் தூரம் தடைபடாது எழுதும் திறன் அப்ராஷன், ஹார்டுனெஸ் டெஸ்டு இவைகளைப் பற்றியும் விவரிக்கிறது இந்தத் தரநியமம்.

இப்படியாக பல்வேறு விதமான எழுதுகோல்கள், எழுது பொருள் சாதனங்களுக்குத் தரநியமங்களை நுகர்வோருக்காக அமைவனம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இவைகளை எழுதுபொருள் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி எழுது பொருள்களை மக்களுக்கு அளிக்கச் செய்து எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கினைச் செயல்படுத்த வேண்டும். இப்பொருள்களைப் பயன்படுத்துவோர் தரமான பொருள்களையே நாட வேண்டும். எழுத உபயோகிக்கும் உபகரணங்கள் தரமுள்ளவையாக இருந்தால்தான் எழுதுபவரின் கற்பனை வளம் தளராமல், தடங்காமல் இனிமையான சொற்களாக வடிவு பெறும். •

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நவீன ஹெலிகாப்டர்

இந்தியா-ஜெர்மனி கூட்டுத் தயாரிப்பில் பெங்களூரிலுள்ள எச்.ஏ.எல். (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) நிறுவனம் 4 டன் எடையுள்ள நவீன ஹெலிகாப்டர் விமானம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த நவீன ஹெலி காப்டர் விமானத்தில் 14 பேர் பயணம் செய்ய லாம். மணிக்கு 330 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொண்டதாக இந்த விமானம் வடிவமைக் கப்பட்டிருக்கிறது.

இந்த நவீன ரக ஹெலிகாப்டர் விமானத்தை வடிவமைத்து முடிக்க 3 ஆண்டுகள் தேவைப் பட்டது. இந்த புதிய விமானத்துக்கு உலக அள விலான ஏற்றுமதி மார்க்கெட்டில் தனித் தகுதி கிடைக்குமென நம்பப்படுகிறது.

இதன் வெள்ளோட்டத்தினை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் 30-8-'92 அன்று பெங் களூரில் தொடங்கி வைத்தார்.

உலகில் உயர்ந்த விருது

உலகில் வாழும் மனிதகுலத்தின் இன்னல்களைக் குறைக்கவும், மக்கள் அமைதியாக வாழும் வகையில் உலகில் ஒரு நல்ல சூழலை உரு வாக்கவும், மனித ஆற்றலை மேம் படுத்தும் வகையிலும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடும் மனிதர் களைக் கண்டறிந்து அவர்களின் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகை யிலும், அவர்களைப் பெருமைப் படுத்தவும் இந்த நூற்றாண்டின் தொடக்க முதலே பல்வேறு வகை யான விருதுகள் உலகம் முழுவதும் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் மாக்சேசே, புலிட்சர் போன்ற விருதுகள் குறிப்பிடத்தக்க வையாகும். ஆனால், இந்த எல்லா விருதுகளிலும் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது 'நோபல்' விருதே ஆகும். இதனாலேயே அதிக எண் ணிக்கையில் நோபல் விருது பெற்ற வர்களைக் கொண்ட நாடுகள் பெருமை கொண்டாடுவதில் சிறி தளவும் வியப்பில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத் தில் நிறுவப்பட்ட நோபல் பரிசு, இதுவரை பல உயர்ந்த மனிதர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன, நிற, தேச பாகுபாடின்றி எவ்வித அச்சமோ, சலுகையோ கருதாமல் இந்த விருது வழங்கப்படுவது குறிப் பிடத்தக்கதாகும். மற்ற அனைத்து விருதுகளும் ஒரு குறிப்பிட்ட துறை யில் மட்டும் சிறந்து விளங்கும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் நோபல் பரிசோ மிகப் பெரிய முக்கிய துறைகளில் சிறந்து பணியாற்றியவர்களுக்கு வழங்கப் படுகிறது. மேலும், இந்த விருதுடன் அதிக அளவில் பணமுடிப்பும் அளிக்கப்படுவதும் இந்த விருதின் இன்னொரு சிறப்பம்சம் ஆகும். (1979-இல் உலக அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவுக்கு அப்போது 800,000 ஸ்வீடன் குரோனர்கள் (Swedish Kronor) வழங்கப்பட்டது. இன்றைய இந்திய ரூபாய் மதிப்பில் அந்தத் தொகை, ரூபாய் 40 இலட்சங் களுக்குச் சமம். இந்தப் பரிசுத் தொகை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டே போகிறது.

நோபல் பரிசு, 'டைனமைட்' (Dynamite) என்ற வெடிபொருளைக் கண்டுபிடித்த பிரபல விஞ்ஞானி ஆல்பிரட் நோபல் அவர்களின் நினைவாக உருவாக்கப்பட்டது. இவர் ஒரு இரசாயனப் பொறி யாளர். இவர் தாம் கண்டுபிடித்த டைனமைட் என்ற வெடி பொரு ளால் விளையக்கூடிய ஆபத்தைக் கருத்தில் கொண்டு, மனிதகுல மேம் பாட்டிற்குத் தம்மால் இயன்றதைச் செய்ய எண்ணி, தாம் இறப்பதற்கு முன் எழுதப்பட்ட உயிலில் தம்மால் வங்கியில் சேமித்து வைக்கப்பட்ட 8,960,000 டாலர்களுக்குக் கிடைக் கக் கூடிய வட்டித் தொகையை பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம் போன்ற ஐந்து துறைகளில் சிறந்து பணி யாற்றியவர்களுக்கு வழங்குமாறு கூறியிருந்தார். இத்துடன் 1969-இல் ஸ்வீடன் வங்கி பொருளாதாரத் துறையிலும் சிறந்து பணியாற்றுபவர் களுக்கு விருது வழங்க வேண்டு மென்று கருதி அதற்குண்டான பரிசுத் தொகையை நோபல் அறக் கட்டளைக்கு வழங்கியது. இதையும் சேர்த்து மொத்தம் ஆறு துறைகளில் சிறந்து பணியாற்றுபவர்களுக்கு இந்த நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஆல்பிரட் நோபல் அவர்கள் மறைந்த தின மான டிசம்பர் 10-ஆம் தேதியன்று இந்த விருதுகள் வழங்கப்படுகின் றன. நோபல் விருது உருவாக்கப் பட்டு இதுநாள் வரை மேற்கண்ட ஆறு துறைகளில் சிறந்து விளங்கிய பல அறிஞர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில:-

நோபல் விருது 1901-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

முதன் முதலில் நோபல் பரிசு பெற்றவர்கள்

பௌதிகம் - ரான்ட்ஜன்
இரசாயனம் - ஜேகோபஸ் வான்ட் ஹாப்
மருத்துவம் - எமில் வான் பேரிங்
இலக்கியம் - சல்லி புருடோம்
உலக சமாதானம் - ஹென்ரி டுனாண்ட் மற்றும் பிரெடெரிக் பாஸ்லி

பொருளாதாரம் - 1969-இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த விருது முதன் முதலில் ரக்னார் பிரிஸ்க் மற்றும் ஜான் டின்பெர்ஜென் ஆகிய இருவருக்கும் கூட்டாக வழங்கப் பட்டது.

விலங்குகளில் உயர்ந்தது சிங்கம். அதைப் போல, மனிதர்களில் சிறந்தவன் சிறந்த சிந்தனையாளன்.

- தந்தை பெரியார்.

நோபல் பரிசு பெற்றவர்களில் வயது முதிர்ந்தவர் பிடன் ரோவஸ்.

1966-ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை நோபல் பரிசு தமது 87- ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது. இதேபோல் குறைந்த வயதில் நோபல் பரிசு பெற்றவர் வில்லியம் லாரென்ஸ் பிராக். பௌதிகத்தில் இவரின் புதிய கண்டுபிடிப்புக்காக இவருக்கு 1915-இல் 25-வது வயதில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த விருது இவருடைய தந்தை சர் வில்லியம்ஹென்றி பிராக் உடன் சேர்த்து கூட்டாக இவருக்கு வழங்கப் பட்டது. நோபல் பரிசு வரலாற்றிலேயே தந்தையும் மகனும் சேர்ந்து நோபல் பரிசு பெறுவது இதுவே முதல் தடவையாகும். நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி. கதிர்வீச்சு கண்டுபிடிப்புக்காக இவருக்கு 1903-ஆம் ஆண்டு இவருடைய கணவர் பியரி மற்றும் ஹென்ரி பெக்கொர்ரல் ஆகியோருடன் இணைந்து இந்த விருது வழங்கப்பட்டது.

இந்தியாவில் அதுவும் குறிப்பாக ஆசியாவிலேயே முதன் முதலில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை, ரவீந்தர் நாத் தாகூர் அவர்களைச் சாரும். இவருக்கு 1913-இல் இலக்கியத்திற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதையடுத்து சுமார் 55 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஆசியா கண்டத்துக்குக் கிடைத்திருக்கிறது.

நோபல் பரிசு பெற்ற மற்ற இந்தியர்கள்

சர். சி.வி. இராமன் - பௌதிகம் (1930)

அன்னை தெரசா - உலகச் சமாதானம் (1979)

ஹர் கோபிந்த கொரானா - மருத்துவம் (1968)

எஸ். சந்திரசேகர் - பௌதிகம் (1983)

(இவர் சர். சி.வி. இராமனின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

இரண்டாவது முறை நோபல் பரிசு பெறும் முதல் விஞ்ஞானி, மேரி கியூரி. இவர் 1903-இல் முதன் முதலாக பௌதிகத் துறையில் நோபல் பரிசு பெற்றார். பின்னர் ரேடியம் மற்றும் பொலோனியம் கண்டுபிடிப்புக்காக இரசாயனத் துறைக்கான நோபல் பரிசு 1911-இல் இவருக்கு இரண்டாவது முறையாக வழங்கப்பட்டது.

பௌதிகத் துறையில் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கண்டுபிடிப்புக்காக ஜான் பர்டீன் என்பவருக்கு 1956 மற்றும் 1972-இல் கூட்டாக நோபல் பரிசு வழங்கப் பட்டது.

இத்தனை சிறப்புகளையும் பெற்ற நோபல் பரிசுகளைப் பெற உலக அளவில் கடும் போட்டியிருந்தாலும் சிலர் இந்த விருதினை உயர்வாகக் கருதுவதில்லை. 1964-ல் இலக்கியத்துக்காகத் தமக்கு வழங்கப் பட்ட விருதினை ஜீன்பால் சாட்ரே என்பவர் ஒதுக்கிவிட்டார். ஜார்ஜ் பெர்னாட்ஷா தமக்களிக்கப்பட்ட விருதினை (1925) விமர்சித்துப் பேசினார். போரிஸ் பேஸ்டர்நாக் என்பவர் 1964-இல் தமக்கு வழங்கப்பட்ட நோபல் விருதினைப் பெற மறுத்துவிட்டார்.

விஞ்ஞானத் துறைகளில் வழங்கப்படும் நோபல் பரிசு இந்தத் துறைகளில் மேன்மேலும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பச் சாதனைகளுக்கு ஊக்கமளிக்கும். அதே நேரத்தில் சமாதானப் பரிசு அன்பு மற்றும் சகோதரத்தன்மையை உலகில் பரப்பப் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

நன்றி: 'ஹிந்து'

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கான இலவசப் பயிற்சி

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சென்னையிலுள்ள தனிப்பயிற்சி நிலையத்தில், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இப்பயிற்சியில் சேருவதற்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதுகலைப் பட்டதாரிகள், தொழிற்கல்வியில் இளநிலைப் பட்டதாரிகள், ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

ஜூன் 1993-இல் நடைபெறவிருக்கும் பூர்வாங்கத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் இவ்வாண்டு செப்டம்பரில் தொடங்கி ஜூன் 1993 வரை சென்னையில் நடைபெறும். இந்தப்பயிற்சி வகுப்புகள் கோவை, அண்ணாமலைநகர், காந்தி கிராமம், காரைக்குடி, பாளையங்கோட்டை ஆகிய மையங்களிலும் நடைபெறும்.

நவம்பர் 1992-இல் நடைபெறவிருக்கும் இறுதித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் சென்னையில் நடைபெறும். மேற்கூறிய தகுதியுடைய, பூர்வாங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேலும், விவரங்களுக்கு, இரண்டு ரூபாய் தபால்தலை ஒட்டிய சுயமுகவரி எழுதிய உறையுடன் (9.செ.மீ., 27 செ.மீ.) முதல்வர், தனிப் பயிற்சி நிலையம், 12-வது பிரதான சாலை, இரண்டாம் அவின்யு, அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 040 என்ற முகவரிக்குத் தபால் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளலாம் என, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல இயக்குநரிடமிருந்து வந்த செய்திக் குறிப்பு கூறுகிறது.

குடிப்பழக்கத்தால் வரும் கேடு

விடியாத பொழுதென்பர் குடிகாரன் வீடு
வேதனைக்கு விளைநிலமாய் விளங்குபவன் நெஞ்சம்
படியாத போர்களுக்கும் பரிமளிக்கும் வாழ்வு
பண்பான சிறப்புடனே அன்புமிகுந் தோங்கும்
குடியேறிப் போகுந்தினம் குடிப்பவரின் அறிவு
கொள்கைஉயர் குணத்தைக்குடி, குழிதோண்டிப் புதைக்கும்
அடிமைக்கு அடிமை என அடைக்கலமே செய்யும்
அற்பத்தனம் தீதனைத்தும் ஆட்சிதனைப் புரியும்

பேதைமையைக் குடிப்பழக்கம் மேதையெனக் காட்டும்
பித்தர்நிலை அத்தனையும் சொத்தாக நினைக்கும்
வேதனையை அன்றாடம் வலைவிரித்துப் பிடிக்கும்
விரும்பாத தீமைகளைக் கரும்பாகச் சுவைக்கும்
பாதகத்தின் செயல்புரிய காதல்மிகக் கொள்ளும்
பச்சோந்தி போலறிவைப் பலவிதமாய் மாற்றும்
வேதமொழி எனக்கூறி, தீமைகளை விளைக்கும்
விளையாட்டுப் பிள்ளையைப்போல் தெருக்கூட்டி நடிக்கும்

இடிபோன்ற கேடுகளை அடிபணிந்து ஏற்கும்
இசையென்றே தீமொழியில் வசைபாடி மகிழும்
முடிகொண்ட மன்னனைப்போல் குடிகளிடை காட்டும்
முன்னோர்கள் படைத்துவைத்த பானமென்றே குடிக்கும்
அடியோடு செல்வச்சிறப் பழிந்திடினும் உள்ளம்
அச்சமின்றி மதுக்கடை கூத் தரங்கமென்றே நினைக்கும்
படிந்திட்ட உலகமெலாம் குடிப்பழக்கம் மிகுந்தோர்
பகுத்தறிவைப் பறிகொடுத்துப் பரதவிப்பார் உலகே

கடன்பட்டுத் துயரனைத்தும் விலைகொடுத்து வாங்கத்
தயங்காது மயங்காது களிப்பில்வர வேற்கும்
உடன்பிறப்பு சுற்றத்தார் உயர்குடும்பம் அனைத்தும்
உற்றதுணை தாய்வெறுக்க ஊரின்பகை தேடும்
தடம்புரண்ட மலையோரும் வண்டியைப்போல் வீழ்ந்து
தக்கதுணை இன்றி,குடி தவித்திடவே செய்யும்
மடமைதனை மணம்புரிந்து குடித்தனமே பண்ணும்
மதுவாலே வாழ்விழந்த மாந்தர்பல கோடி...!

புலவர் சி. துரைசுவாமி

வளரும் வேளாண்மை:

மா மரத்தைத் தாக்கும் பச்சை முட்புழு அல்லது எரிப்பூச்சிகள்

மா மரத்தைத் தாக்கும் பூச்சிகளுள் எரிப்பூச்சிகள் அல்லது பச்சை முட் புழுக்களும் ஒன்று. பச்சை நிறமுள்ள இப்புழுக்களின் உடலில் முள் போன்ற அவயவங்கள் இருப்பதைக் காணலாம். இந்த முள் போன்ற அவயவங்களில் நச்சுப் பொருள் சேர்ந்திருப்பதால் இவை நம் உடலில் பட்டால் எரிச்சலும் அரிப்பும் ஏற்படும். அதனால் இப் புழுக்கள் எரிப்பூச்சிகள் என்று அழைக்கப்படுகின்றன.

அந்துப் பூச்சிகளின் பச்சை நிற முன்னிறக்கையில் குறுக்காகப் பழுப்புநிறப் பட்டைகளோடு இருக்கும். பெண் அந்துகள் இருபது முதல் முப்பது முட்டைகள் வரை இலைகளின் அடிப்பரப்பில் குவியலாக இடுகின்றன. முட்டைகள் தட்டையாக, மினுமினுப்புடன் இருக்கும். புழுக்கள் தடித்தும் உடலின் அடிப்பகுதி தட்டையாகவும் மேற்பகுதி குவிந்தும் இருக்கும். புழுவின் உடலில் வெண்ணிற நீண்ட கோடுகள் காணப்படும். மார்புப்பகுதி கால்கள் நன்கு வளர்ச்சியடைந்தும் மற்ற வயிற்றுக்கால்கள் வளர்ச்சி குறைந்தும் இருப்பதால் புழுக்கள் நத்தையைப்போல மெல்ல நகருகின்றன. கூட்டுப்புழுக்கள் அரைவட்ட வடிவில் கடினமான உறையிலும் காணப்படும். கூட்டுப் புழுக்களை மரத்தின் பட்டைகளிலும், மரத்தின் கிளைகளிலும் காணலாம்.

புழுக்கள் தளிர் இலைகளை உண்டு சேதம் விளைவிக்கின்றன. இப்புழுக்கள் 'மா' தவிர ஆமணக்கையும் தாக்குகின்றன.

பூச்சி நிர்வாகம்

★ விளக்குப் பொறிகளை மாந்தோப்பின் நடுப்பகுதியில் அமைத்து, அதன்மூலம் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

★ முட்டைக்குவியலையும், புழுக்களையும் சேகரித்து அழிக்கலாம்.

★ மருந்தடிக்கும் முன்னர் மரத்திலுள்ள கூட்டுப்புழுக்களைக் கூரிய இரும்புக்குச்சி கொண்டு குத்தி அழித்தல் நல்லது.

★ எண்டோசல்பான் ஒரு லிட்டர் நீருக்கு இரண்டு மில்லி அல்லது டைக்குளோர்வாஸ் ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மி.லிட்டர் என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

கோடைப் பருவப் பயறுவகைகளுக்கு டிஏபி தெளிப்பு

கோடைப் பருவத்தில் பயிரிடப் பட்டுள்ள உளுந்து மற்றும் பாசிப் பயறு போன்ற பயிர்களுக்கு இரண்டு சத டிஏபி கரைசல் தெளித்து அதிக மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்குத் தேவையான நான்கு கிலோ டிஏபி-ஐ இருநூறு லிட்டர் தண்ணீரில் முதல் நாள் மாலை நன்கு ஊறவைத்து, நன்கு மரக்கழி கொண்டு கலக்கிடவேண்டும். பின்பு, மறுநாள் காலை தெளிந்த - மேலே தங்கியுள்ள நீரை மட்டும் எடுத்துக்கொண்டு கீழே படிந்துள்ள படிமத்தை நீக்கி விடவேண்டும். கைத்தெளிப்பானால் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

விதைத்த இருபது மற்றும் நாற்பது ஆவது நாட்களில் டிஏபி கரைசல் தெளிக்கவேண்டும். இவ்வாறு தெளிப்பதால் தரமான விதைகளும், அதிக மகசூலும் அதிக இலாபமும் பெறலாம். டிஏபி தெளிப்பதால் ஒரு ஏக்கருக்கு ஆகும் செலவு ஐம்பது ரூபாய் மட்டுமே. ஆனால் அதிக மகசூல் கிடைப்பதால் இலாபமாக ரூபாய் இருநூறு கிடைக்கிறது.

வெளியீடு:
வேளாண் தகவல் பணி மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை-3.



நாட்டின் முன்னேற்றத்தில் இரயில்வேயின் பங்கு

நமது நாட்டின் பொருளாதார, தொழில் மற்றும் சமூக மேம்பாட்டில் இரயில்வேத் துறையின் பங்கும் மிக முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மிக வேகமாக மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இரயில்வேயும் அவ்வப்போது திட்டங்களைத் தீட்டி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வருகிறது.

நாட்டில் இரயில் போக்குவரத்து மூலம் இணைக்கப்படாத பகுதிகளைக் கண்டறிந்து அந்த இடங்களுக்கு இரயில் போக்குவரத்து வசதிகளைச் செய்து தருவதில் இத்துறை ஈடுபட்டுள்ளது. நாட்டின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இரயில்வேயும் தனதுபணியை ஓரளவுக்குத்தான் நிறைவேற்ற முடிகிறது.

இந்தியாவில் தற்சமயம் சுமார் 24 ஆயிரம் கி.மீ. தூரத்துக்குக் குறுகிய இரயில் பாதை (Metre Gauge Network) இருக்கிறது. இந்தப் பாதையில் பயணிகள் மற்றும் வியாபாரப் போக்குவரத்து கடந்த ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை. தற்சமயம் இரயில் மூலம் நடைபெறும் சரக்குப் போக்குவரத்தில் சுமார் 9 சதவிகித அளவுக்கே இந்த குறுகிய இரயில் பாதை மூலம் நடைபெறுகிறது. இதைப்போலவே மொத்த இரயில் பயணிகளில் 20 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் இந்த குறுகிய இரயில் பாதையில் பயணம் செய்கிறார்கள்.

இதைக் கருத்தில் கொண்டுதான், நாட்டிலுள்ள அனைத்துக் குறுகிய இரயில் பாதைகளையும் அகல இரயில் பாதையாக மாற்ற இரயில்வே திட்டமிட்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சுமார் 327 கி.மீ. தூர குறுகிய இரயில்பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டது. எட்டாவது திட்ட காலத்தில் சுமார் 6,000 கி.மீ. தூர குறுகிய இரயில் பாதையை அகல ரயில்பாதையாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அகல இரயில்பாதை மாற்றுத் திட்டத்தின் மூலம் தொழில் மற்றும் வர்த்தகத் துறையினரே மிகுதியாகப் பயனடையவிருப்பதால் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை இவர்களும் பகிர்ந்து கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது.

மின்சக்தி

நாட்டின் தற்போதைய மின்சக்தி உற்பத்தித் திறன் 71,000 மில்லியன் வாட். இதைப்போல இருமடங்குத் திறன் அடுத்த 15 ஆண்டுகளுக்குள் (2006-07) தேவைப்படும். அதை உற்பத்தி செய்து எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு ரூ.6,00,000 கோடி முதலீடு தேவைப்படும்!

புனல்மின் திட்டங்கள் மூலம் 84,000 மில்லியன் வாட் மின்சக்தி உற்பத்தி செய்ய இயலும். எனினும் இதில் 20 சதவிகிதமே தற்போது உற்பத்தியாகிறது. பயன்படக்கூடிய நீரில் 75 சதவிகிதம் வீணாகக் கடலில் கலந்து விடுகிறது. இதைப் பயன்படுத்தி, ஆண்டொன்றுக்கு 48,000 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சக்தியை உற்பத்தி செய்யலாம்!

மின்சக்தி பயன்படாத துறையே இல்லை எனலாம். தொழில் துறை - 40.9 சதவிகிதம், வீட்டு உபயோகம்- 32.6 சதவிகிதம், வேளாண் துறை - 13.9 சதவிகிதம், வர்த்தகம் - 5.7 சதவிகிதம், இரயில்வேத் துறை - 2.2 சதவிகிதம், ஏனைய துறைகள் - 4.7 சதவிகிதம். இந்த வகையில் மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது.

எரிசக்தி சிக்கனம், சேமிப்பு மூலம் 2006-07-ஆம் ஆண்டில் மின்சக்திப் பயன்பாடு 14 சதவிகிதம் வரை குறையக் கூடும்.

மின்சார இரயில் பாதை:

இரயில் பாதையை மின் மயமாக்கும் திட்டம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,800 கி.மீ. தூரத்துக்கும் சற்றுக் கூடுதலாக இரயில் பாதை மின்மயமாக்கப்பட்டது. எட்டாவது திட்ட காலத்தில் சுமார் 4,000 கி.மீ. தூர பாதையை மின்மயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் குறைந்து வரும் எண்ணெய் வளங்களை மிச்சப்படுத்துவதோடு, இரயில் பயணங்களைத்துரிதப்படுத்தவும், இந்தத் திட்டம் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—பத்திரிகை தகவல் அலுவலகம்

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் இருந்து திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் 15.9.85-இல் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டபின், இம்மாவட்டத் தொழில் வளர்ச்சி 1.8.86 முதல் மாவட்டத் தொழில் மையல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

1.8.86 அன்று இம் மாவட்டத் தொழில் மையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை 677. பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 16. இதன்மூலம், முறையே 5,460 மற்றும் 3,560 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இம்மாவட்டத் தொழில் மையத்தின் சீரிய முயற்சியிலும், தமிழக அரசு புதிய சலுகைகளையும், மானியங்களையும் கொடுக்க ஆரம்பித்த தன் பயனாலும், இன்று 2,814 சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்மூலம் 15,706 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். அதேபோல் 51 பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் மூலம் 9,605 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இம்மையத்தின் சிறப்புப் பணிகள் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட்ட தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் மூலமாக, இத்தகைய தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் தொழில் முனைவோரின் பங்கும் உண்டு.

திண்டுக்கல் வட்டம் பூட்டுத் தொழிலுக்கும், தோல் பதனிடுவதற்கும் புகழ் பெற்றதாகும். ஏறத்தாழ 150 பூட்டுத் தொழிற்சாலைகளுக்கும் மேலாக இங்கு உள்ளன. இவற்றில் தயாராகும் பூட்டுகள் நல்ல தரமுள்ளவைகளாக இருந்தாலும், தற்கால விஞ்ஞான அடிப்படையில் தயாரிக்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை இன்காட் நிறுவனத்தின் உதவியுடன் ஆய்வு நடத்தியதன் அடிப்படையில், திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள நல்லாம்பட்டி கிராமத்தில் பூட்டுகள் தயாரிக்கும் ஒரு சங்கத்தைத் தொடங்க, சென்னை இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பேங்க் ஆப் இந்தியா ரூபாய் 2,40,000 வழங்கியுள்ளது. இந் நிறுவனம் விரைவில் செயல்பட உள்ளது.

இதே போல், தோல் தொழிலை நவீனப்படுத்தவும், தோல் பொருள் தயாரிப்பதற்குத் தேவையான தோல் பதனிடப்படவும், ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு, அதில் தற்கால விஞ்ஞானத் தொழில் நுட்பப்படி தோல் பதனிட; சிறிய தொழிற்சாலைகளுக்கு உதவி செய்து வருகிறது.

புதிய தொழில்களை அதிக அளவில் தொடங்க தொழில் முனைவோர்களைக் கண்டறியவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் மாதந் தோறும் ஊராட்சி ஒன்றியங்களில் தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சிறு தொழில் பதிவுக்கும், அதன்பின் நிதியுதவி பெறுவதற்கு வழிவகையும் செய்யப்படுகிறது. அரசு வழங்கி வரும், மானியங்கள் நிதி மற்றும் சலுகைகள் பற்றி விளக்கி இலவச ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, இம்மாவட்டத்தில் உள்ள வேடசந்தூர், கொடைக் கானல் வட்டங்கள் மிகவும் பின் தங்கிய வட்டங்களாகவும், நத்தம், நிலக்கோட்டை வட்டங்கள் பின் தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. மிகவும் பின்தங்கிய வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கு முதலீட்டு மானியமாக 20 சதவிகிதம் வரை (அதிகப் பட்சம் 20 இலட்சம் வரை) மானியம் வழங்கப்படுகிறது.

பின்தங்கிய வட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15 சதவிகிதம் முதலீட்டு மானிய

இலவச மருத்துவ முகாம் நிறைவு

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாள் விழாவினையொட்டி, புதுநலத் திட்ட இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

கிராமப் பகுதிகளில் . 311 முகாம்களும், நகரப் பகுதிகளில் 20 முகாம்களும் நடத்தப்பட்டன. 331 முகாம்களில் 2 இலட்சத்து 18 ஆயிரத்து 390 நபர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதில்'34 ஆயிரத்து 727 நபர்கள், நல்ல உடல்நலம் உள்ளவர்களாக பரிசோதனைக்குப்பின் தெரியவந்தது. உடல் கோளாறு உள்ள 2 இலட்சத்து ஓராயிரத்து 751 நபர்களில் பரிசோதனைக்குப்பின் 38 ஆயிரத்து 185 நபர்களுக்குச் சுவாசம் தொடர்பான நோய்களும், 27 ஆயிரத்து 226 நபர்களுக்கு உணவுக் குழாயில் நோய் உடையவர்களாகவும், 26 ஆயிரத்து 136 நபர்கள் கண் நோய் தொடர்புடையவர்களாகவும், 14 ஆயிரத்து 602 நபர்கள் காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய் உடையவர்களாகவும், 12 ஆயிரத்து 689 நபர்கள் பிரசவ உறுப்புகளில் கோளாறு உடையவர்களாகவும் கண்டுபிடிக்கப்பட்டது.

26 ஆயிரத்து 129 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. 21 ஆயிரத்து 83 நபர்களுக்கு சிறுநீர்ப் பரிசோதனையும், 3 ஆயிரத்து 26 நபர்களுக்குச் சளி தொடர்பான பரிசோதனையும் முகாமின் மூலம் செய்யப்பட்டது.

18 ஆயிரத்து 548 குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு, 7 ஆயிரத்து 71 குழந்தைகளுக்கு எடை அளவு மற்றும் பரிசோதனையும் செய்யப் பட்டது.

இப்பரிசோதனையின்போது, மேலும் பரிசோதித்து, உரிய மருத்துவ வசதிபெற அரசினர் தலைமை மருத்துவமனைக்கு 6 ஆயிரத்து 518 நபர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

முகாம்களில் பரிசோதனை செய்யப்பட்ட அனைவருக்கும் மருத்துவ அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. இவர்கள் அருகில் உள்ள வட்டம் மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனையில் அட்டைகளைக் காண்பித்து சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை அரசு செய்துள்ளது.

ஒவ்வொரு முகாம்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், வட்ட அரசு மருத்துவமனை, பழனியில் உள்ள மாவட்ட அரசு மருத்துவமனை, திண்டுக்கல்லில் உள்ள தலைமை அரசு மருத்துவமனை டாக்டர்கள் பங்குகொண்டனர். பரிசோதனைக்குப் பிறகு மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல் தலைமையிடத்து அரசு மருத்துவமனையின் இணை இயக்குநர் திரு. அனந்தகிருஷ்ணன், மாவட்டத் துணை இயக்குநர்கள் திரு. சந்திரசேகரன், திரு. பழனி ஆகியோர் மேற்பார்வையில் டாக்டர்கள் குழு பரிசோதனை செய்தனர்.

கே.பி. நல்லதம்பி,
உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

மாக அதிகப் பட்சம் 15 இலட்சம் வரை கொடுக்கப்படுகிறது. இந்நிறுவனங்களில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதில் விற்பனை வரி தள்ளுபடியும் விற்பனை வரி தள்ளிவைப்பும், முதல் 9 ஆண்டுகளுக்கு 100 சதவிகிதம் முதலீட்டு அளவிற்குச் செய்யப்படுகிறது. இந்தத் தள்ளி வைப்பு வரியை மறு 9 ஆண்டுகளில் வட்டியின்றிச் செலுத்தலாம். மேலும், 15 சதவிகிதம் அளவு விரிவுபடுத்தும் தொழிலகங்களுக்கும் மேற்படி சலுகைகள் வழங்கப்படுகின்றன.

மிகவும் பின்தங்கிய அல்லது பின்தங்கிய பகுதி அல்லாத இடங்களில் சில குறிப்பிட்ட பொருள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், அதன் நிலையான முதலீட்டில் 20 சதவிகிதம் அதிகப் பட்சமாக 20 இலட்சம் வரை மானிய உதவிகள் பெறத் தகுதியுள்ளவை.

20.1.92-க்குப் பிறகு தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்கு மின் மானியம் முதல் ஆண்டில் 40 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 30 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டில் 20 சதவிகிதமும் பெறலாம். மற்றும் சில குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தவிர மற்ற சிறு தொழில் நிறுவனங்கள் புதிய ஜெனரேட்டர் வாங்கிய தொகையில் 15 சதவிகிதமும் (அதிகப்படியாக 5 இலட்சம்) மானிய உதவி பெறலாம்.

திண்டுக்கல், வேடசந்தூர் பழனி வட்டங்களில் அதிக அளவிலான நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நூற்பாலைகளைச் சேர்ந்த துணைத் தொழில்களான விசைத்தறித் தொழில் நூல் முறுக்குதல், நூல் இரட்டிப்பாக்குதல், சைசிங் மற்றும் வைண்டிங் தொழில்கள் வரை வாய்ப்புள்ளது. தற்போது ஒட்டன்சத்திரம் பகுதியில் 200 விசைத்தறிகள் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

வரும் மாதங்களில் மேலும் சுமார் 200 விசைத்தறிகள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் நான்கு இரும்பு உருக்காலைகள் தொடங்கப்பட்டு, சென்னை இரயில்வே இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைக்கும், மின்வாரியத்திற்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்து அனுப்பி உதவி புரிகின்றன. இம்மாவட்டத்தில் மாம்பழம், புளி, தக்காளி, கமலா ஆராஞ்சு, பேரிக்காய் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகள் தொடங்க வாய்ப்பும் வசதியும் உள்ளன.

புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தேவையான உரிமங்கள் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்கள், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலம், சுகாதாரத் துறை முதலியவற்றில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட ஒரு முனைத் தீர்வுக்குழுக் கூட்டத்தில் விவாதித்து, தாமதமில்லாமல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் வசதி வளர்ச்சி நிறுவனம் (TACID) மூலம் முதன் முதலாக இம்மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டிக் கிராமத்தில் வேளாண்மை அடிப்படையிலான தொழில்களைக் கொண்டு ஒரு தொழில் வளாகம் தொடங்க பூர்வாங்க வேலைகள் நடக்கின்றன. இதற்காக ரூ.7 கோடி மதிப்பீட்டில் 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம்:

படித்த இளைஞர்களிடையே நிலவும் வேலை இல்லாத் திட்டத்தைப் போக்கிட இந்தியப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம் இம்மாவட்டத்தில் சீரிய முறையில் அமல் படுத்தப்பட்டு வருகிறது. 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதிற்குட்பட்ட 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற படித்த வேலையில்லாதவர்கள் பயன்பெறும் வகையில், உற்பத்தித் தொழில், சேவைத் தொழில் மற்றும் வியாபாரம் செய்வதற்கு முறையே ரூ.35,000, 25,000, 15,000 பத்து சதவிகித வட்டி விகிதத்தில் 25 சதவிகித மானியத்துடன் கடன் பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இம்மாவட்டத் தொழில் மையம் பரிந்துரை செய்து பெற்றுத் தருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு, 542 நபர்களுக்கு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு, 400 பேர் பயனடைய உள்ளார்கள்.

தொழில் முனைவோர் பயிற்சி

மகளிர் முன்னேற்றத்தைக் கணக்கில் கொண்டு மகளிர்க்கென்று மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி 1991-92-ஆம் ஆண்டில், இம்மாவட்டத் தொழில் மையம் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் இணைந்து 29 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்குத் தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்து வழங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் உதவிக்கு மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

1992-93-ஆம் ஆண்டிற்கு 30 மகளிர்க்கு இதேபோல் பயிற்சியளிக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தற்போது ஆய்வில் உள்ளன. விரைவில் மேற்படி பயிற்சி தொடங்கப்பட உள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற உதவிகளைத் தொழில் முனைவோருக்கு அரசு செய்கிறது. மாவட்டத் தொழில் மையம் மூலமாக இவற்றை நன்கு பயன்படுத்தி, நாடு முன்னேற, தொழில் ஆர்வம் உடையோர் முன் வருவார்கள் என்று நம்பப்படுகிறது.

எம். பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது; அதுபோலவே, சொல்லொணாத் துன்பங்களுக்கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.

- அண்ணல் காந்தியடிகள்

விஷச் சாராயத்தால் ஏற்படும் விளைவுகள்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய மது ஒழிப்பு நடவடிக்கைகள் நல்ல பயனைத் தந்து வரும் சமயத்தில், சிலர் பொது மக்களின் நலனில் அக்கறையின்றி, கள்ளத்தனமாக இலாப நோக்கம் கருதி, கல்ப்படம் செய்து தயாரிக்கும் பட்டைச் சாராயத்தின் காரணமாக அதிகமானவர்கள் உயிரிழக்கவும், பார்வை இழக்கவும் நேரிடுகின்றது.

இம்மாதிரியான கலப்படம் செய்யப்பட்ட பட்டைச் சாராய விளைவுகள் பெரும்பாலும் குறைந்த வருமானம் கொண்ட கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களில் பின்தங்கிய பகுதிகளில் இருக்கும் குடிப் பழக்கம் கொண்ட மக்களிடம் பெண்களைவிட ஆண்களில் அதிகம் ஏற்படுகின்றது.

சில சமயம் நாட்டுப்புற முறையில் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபடுகின்றவர்கள் அதிக லாபம் பெறும் நோக்கத்துடனும், மற்றும் தவறாகப் போதையை அதிகப்படுத்தும் நினைப்புடனும், மீதைல் சாராயம், வார்னிஸ், குளோரால் ஹைட்ரைட் போன்ற நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களைச் சேர்த்து கள்ளச்சாராயம் தயாரித்து, பல உயிர்கள் இறக்கவும், பார்வை இழக்கவும் காரணமாகி விடுகின்றனர்.

இம்மாதிரியாக, தவறான நோக்கத்துடன் நச்சுப்பொருள் சேர்த்து தயாரிக்கப்படும் விஷச் சாராயத்தை உட்கொள்பவர்களுக்கு பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

கள்ளச்சாராயத்தில் இருக்கும் நச்சுப் பொருள்களின் தன்மைக்கு ஏற்பவும் அவற்றின் அளவுக்குத் தக்கவாறும், உட்கொள்பவர்களுக்கு, சாதாரண தொந்தரவு முதல் பார்வை இழப்பு, உயிரிழப்பு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

மீதைல் சாராயம் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயம் உட்கொண்டவர்களுக்கு உட்கொண்ட

டாக்டர் ஹாஜி, எம்.ஏ. அலீம், எம்.டி.,

ஒரு மணி முதல் 36 மணி நேரத்திற்குள் தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

லேசான விளைவாக, குறைந்த அளவு விஷச் சாராயம் உட்கொண்டவர்களுக்கு அசதி, தலைவலி, குமட்டல், வாந்தி, தலை சுற்றல், வயிற்றுவலி போன்ற தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

அதிக அளவில் விஷச் சாராயம் அருந்துபவர்களுக்கு, கண் கூசுதல் பார்வைக் கோளாறு, பார்வைக் குறைவு, பார்வை இழப்பு, மூச்சுத் திணறல், பதற்றம், இசுவை, உடல் நீலம் பாய்தல் போன்ற தொந்தரவுகள் ஏற்படும். அதிக அமிலநிலை, மயக்க நிலை, சுவாச நிறுத்தம் போன்ற பாதிப்பு உண்டாகி, இறப்பும் நேரிட்டு விடுகின்றது.

அதிக அளவிலான விஷச் சாராய காரண இறப்புகள் சுவாச இயக்க நிறுத்தம் காரணமாகவே உண்டாகின்றன.

பார்வை நரம்பு, விழித்திரை பாதிக்கப்பட்டு ஏற்படும் பார்வைக் கோளாறும், பார்வை இழப்பும் விஷச் சாராயத்தின் அளவுக்கு ஏற்ப ஏற்படுவது கிடையாது. சிலருக்குச் சிறிது அளவு விஷச் சாராயமே பார்வை இழப்பை உண்டாக்கும்.

விஷச் சாராயம் காரணமாகப் பார்வை இழப்புடன் ஆபத்தான கட்டத்தில் இருந்து உயிர் பிழைப்பவர்கள் நிரந்தரப் பார்வை இழப்புக்கு ஆளாகின்றனர்.

மீதைல் சாராயம் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயம் உட்கொண்டவரின் உடலில் செரிக்கப்பட்டு வெளியிடப்படும் பார்மிக் அமிலம், பார்மால்டிஹைடு என்ற இரசாயனப் பொருள்களே உடலில் தோன்றும் விளைவுகளுக்குக் காரணமாகும். இவ்வாறு வெளிப்படும் பொருள்கள் உடலின் கல்லீரல், கணையம், சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புகளின் திசுக்களை அழிப்பதாலும், பார்வை நரம்பு, விழித்திரை போன்ற உறுப்புக்களைப் பாதிப்பதாலும், மற்றும்

உடல் அமில நிலையை அதிகரிப்ப தாலும் பல்வேறு பாதிப்புகளை ஏற் படுத்துகின்றன.

60 முதல் 250 மில்லி லிட்டர் மீதைல் சாராயம் கலந்து விஷச் சாராயம் 24 முதல் 36 மணி நேரத்திற்குள் இறப்பை ஏற்படுத்தி விடும். சில சமயம் மிக குறைந்த அளவு மீதைல் சாராயம் கலந்த விஷச் சாராயம் கூட இறப்பை உண் டாக்கும்.

சிகிச்சை

விஷச் சாராயம் அருந்தியவர் களுக்கு உடனடிச் சிகிச்சைகள் அவசியமாகும். உட்கொண்ட இரண்டு மணி நேரத்திற்குள் வாந்தி எடுக்க வைத்து அல்லது இரைப்பை யைக் குழாய்கள் மூலம் சுத்தம் செய்து இரைப்பையில் இருக்கும் சாராயத்தை வெளியேற்றி, சிகிச் சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உடலில் அதிகரித்து இருக்கும் அமில நிலையைச் சீர்செய்ய சோடியம் பைகார்பனேட், 1/6 மோலர் லக்டேட் கரைசல்கள் சிரைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

உட்கொண்ட விஷச் சாராயத் தில் இருக்கும் மீதைல் சாராய அளவு இரத்தத்தில் 20 முதல் 50 மில்லி கிராம் இருக்கும்போது அதன் செரிமானத்தைக் கட்டுப்படுத்த எரிசாராயம் ஒரு கிலோ கிராம் உடல் எடைக்கு ஒரு கிராம் என்ற அளவில் 5 சதவிகிதம் சர்க்கரைக் கரைசலில் முதல் கட்டமாக அரை மணி நேரத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். பின்பு, எரிசாராயம் 7 முதல் 10 கிராம் அளவில் பாதிக் கப்பட்டவர்களுக்கு, கொடுக்கப் பட்ட எரிசாராயத்தின் இரத்த அளவை 100 மில்லி கிராம் என்ற நிலையில் வைப்பதன் மூலம் உட் கொண்ட மீதைல் சாராயம் செரிக் கப்படுவதை உடலில் தடை செய் யலாம்.

இரத்தத்தில் இருக்கும் மீதைல் சாராய அளவு 50 மில்லி கிராமுக் கும் அதிகமானால் இரத்தச் சுத்தி கரிப்பு முறையில் சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

பட்டைச் சாராயம் குடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் அப் பழக்கத்தைக் கைவிட வேண்டும். சட்ட விரோதமாகச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்பவர்கள் நாட்டின் நலன் கருதி மக்களின் உயிர் காக்கப்பட வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் மாற்றுத் தொழில் செய்து வாழ வழி செய்து கொள்ள வேண்டும்.

> குடிப்பவன், தன் சுதந்திரத்தைத் தானே விற்றுவிடுகிறான்; அடிமையாகிறான்.
>
> - மூதறிஞர் இராஜாஜி.

சென்னையில் 1971 செப்டம்பர் மாதத்தில் மீதைல் சாராயம், வார்னிஷ் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயத்தை உட்கொண்ட 20 பேர் உயிர் இழந்தனர். பலர் பார்வை இழந்தனர். 1976-ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீதைல் சாராயம் குளோரால் ஹைட்ரேட் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயத்தை அருந்தி சென்னையில் 126 பேர் இறந்தனர்.

1990 பிப்ரவரி மாதத்தில் தஞ்சாவூர், பண்ருட்டிப் பகுதியில் மீதைல் சாராயம் கலந்த விஷச் சாராயம் உட்கொண்ட பலர் இறந்த தும் மற்றும் பலர் பல தொந்தரவு களுக்கும் ஆளாகவும் நேர்ந்துள்ளது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் கூட இது போன்ற விஷச் சாராயப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு ஆண்டுதோறும் விஷச் சாராயத்தை, கள்ளத்தனமாகக் காய்ச்சி விற்கப்படும் விஷச் சாராய வியாபாரம் காரணமாக அப்பாவி மக்கள் இறந்தும், பார்வை இழந்தும் வருகின்றனர்.

இந்த நிலை மாற குடிப்பழக்கம் கொண்டவர்களும், சாராயம் காய்ச்சு பவர்களும் அதை விட்டுவிடு வதன் மூலம் இதற்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்கலாம்.

எனவே, குடிப்பழக்கம் கொண்ட வர்கள் அப்பழக்கங்களில் இருந்து விடுபட முயற்சி எடுத்து, தேவைப் பட்டால் அப்பழக்கங்கள் மாற்றம் பெற மருத்துவர்களை ஆலோசிக்க வேண்டும். மற்றும் குடிசைத் தொழி லாக மேற்கொள்ளப்படும் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபடுகின்ற வர்கள், வேறு தொழில்கள் செய்ய முற்பட வேண்டும்.

மேலும், விஷச் சாராயம் உட் கொண்டவர்களை உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதன் மூலமும், விஷச் சாராய விபத்துக்கள் பற்றிய செய்திகளை மறைத்துவிடாமல், ஒருவர் பாதிக்கப்பட்டாலும் உடனடி யாக மருத்துவர்களையும், காவல் துறையினரையும் அணுகுவதன் மூலமும் பலர் இறப்பதையும், மற்ற தொந்தரவுகளுக்கு ஆளாவதையும் கட்டுப்படுத்தலாம்.

நிலக்கடலை உற்பத்திக்கு நிதி

தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1992-93-ஆம் ஆண்டில் ரூ.8 கோடியே 85 இலட்சம் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

தரமான விதை உற்பத்தி செய்ய மானிய உதவியும் சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத் திக்கு ரூ.90 இலட்சமும் வழங்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் நிருபர் களிடம் தெரிவித்தார்.

மாணவர் பக்கம்

பாப்பா பாட்டு

சின்ன பாப்பா ஓடிவா
சிங்கார பாப்பா ஓடிவா!
பாட்டு ஒன்னு பாடவா
பாடி நீயும் ஆடவா!
காலை நீயும் எழுந்திரு
கடமை தனைச்செய்திடு
கடவுளைத்தான் தொழுதிரு
கல்வி கற்றுத் தேர்ந்திடு
அம்மா வைநீ வணங்கிடு
அப்பா வுக்குப் பணிந்திடு
குருவை நீயும் மதித்திடு
பெரியோர் புகழ வாழ்ந்திடு

—சு. ஜெயகாந்தம்

அறிவுச் சுடர்

1. நம் அரசியல் நிர்ணயச் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?
   1949
2. இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட, குறைந்தபட்ச வயது என்ன?
   35
3. நம் தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரத்தின் குறுக்குக் கோடுகள் எவ்வளவு?
   24
4. காந்திஜி முதன்முதல் சத்தியாக்கிரகம் செய்த இடம் எது?
   சம்பரான்

காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு எது?
   1931

வன மகோத்சவத்தை ஆரம்பித்தவர் யார்?
   கே.எம். முன்ஷி

'ஐக்கிய நாடுகள் தினம்' எப்போது?
   அக்டோபர் 24

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் எது?
   தி ஹேக்

அவ்வைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான் ஆண்ட பகுதி எது?
   தர்மபுரி

—டி.எஸ். பானு
திருவான்மியூர்



விளையும் பயிர்:

இராமநாதபுரம் மாவட்டம், கீழக் கரை, ஹமீதியா மேல்நிலைப் பள்ளியில் + 2 படிக்கும் மாணவன் எஸ்.சையத் அபுதாஹிர். இவர், கிரிக்கெட் விளை யாட்டில் சிறந்து விளங்கி, சான்றிதழ் பெற்றவர். இதேபோல நாடகங்களிலும் நடித்துள்ளார். பேச்சுப் போட்டியிலும் வெள்ளி பெற்றுப் பாராட்டுதல்கள் பெற்றுள்ள இவர், தேசிய மாணவர் நலத்திட்டத்தின் மூலம், மதுரை காந்தி கிராமத்தில் சமூக சேவை செய் துள்ளார்.



சத்தியசாயி மகாத்மியம்

ஆசிரியர்: கவிஞர் சக்தி தேவன்
வெளியீடு:
சக்தி காரியாலயம்
59, இலட்சுமி சாலை குடியிருப்பு,
பாப்ப நாயக்கன் பாளையம்
கோவை - 641 306

பக்கம்:98 விலை:ரூ.15/-

சத்தியசாயி மகாத்மியம்என்றொரு
சந்தத் தமிழின் அவதாரம்
சத்தியசக்தித் தேவரின்கைகள்
கட்டியசங்கத் தமிழாரம்!

பண்ணிசைவெண்பா பலவகைவிருத்தப்
பாடல்கள்எல்லாம் தேனாகும்!
பக்தியில்உருகிப் பாடிடும்உள்ளம்
பார்க்கக்கிடைப்பது வானாகும்!

பக்கம்அனைத்தும் தேவரின்பக்திப்
பரிமளம்நுகர்வீர் பக்தர்களே!
படிக்கும்வரியில் சாயியின்பாதம்
பார்த்தபின்நீங்கள் முக்தர்களே!

—இனந்தேவன்

நபிகள் பெருமானாரின் வாழ்வும் வாக்கும்

ஆசிரியர்: தங்கவயல் லோகநாதன்
வெளியீடு:
மணி பதிப்பகம்,
58, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
சென்னை-14

பக்கம்:120 விலை:ரூ.15/-

நபிகள் நாயகத்தின் வாழ்க்கைச் சித்திரங்களோடு, அவரது அமுத மொழிகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. மக்கள் மனித நேயத்தோடு வாழ்வதற்கும், அதன் மூலம் சமுதாயம் வளம் பெறுவதற்கும் இந்த மணி மொழிகள் வழிகாட்டும்.

பத்திரிகைகளுக்கு எழுதிப் புகழ் பெறுவது எப்படி?

ஆசிரியர்: கே.ஜி.எஃப். பழனிச்சாமி
வெளியீடு:
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:80 விலை:ரூ.8/-

பத்திரிகைகளில் பெயர் வர ஆசைப்படாதவர் யார்? பெயர் வரவேண்டும் என்பதற்காக எதையாவது எழுதி விடுவதா என்ன? அப்படியானால் எப்படி எழுத வேண்டும்? இதற்கு விளக்கம் தருகிறது. இந்நூல். பத்திரிகைகளுக்குக் கடிதம், துணுக்கு, சிறுகதை, கட்டுரை எழுதுவது பற்றிய விளக்கவுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அறிவுக்கு விருந்து

ஆசிரியர்: பி.வி. கிரி
வெளியீடு:
காண்டீபம்,
306, லாயிட்சு சாலை,
சென்னை-14.

பக்கம்:100 விலை:ரூ.12/-

இந்நூலில் 14 கட்டுரைகள் உள்ளன. இவை மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும். ஒன்றே குலம் ஒருவனே தேவன், எண்ணும் எழுத்தும் கண்ணாகும், இவர்களைப் பற்றி..., தேர்வு வருகிறது, சிறுவர் சோலையிலே, பத்மநாபபுரம் அரண்மனை முதலான கட்டுரைகள் சுவையான பல தகவல்களைத் தருகின்றன. பெரியவர்களும் படித்து மகிழலாம்.

பெண்களைப் பற்றிய பழமொழிகள்

ஆசிரியர்:
முனைவர் சரளா இராசகோபாலன்
வெளியீடு:
ஒளிப்பதிப்பகம்,
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்:128 விலை:ரூ.16/-

பழமொழிகள், நாம் படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, நாம் பயன்பெறுவதற்கும் அவை உதவுகின்றன.

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவங்களை அவ்வப்போது சொல்லி வந்தார்கள். மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். காலப்போக்கில் அவையெல்லாம் பொன்மொழிகளாக, பழமொழிகளாக மக்களிடையே பரவின. அத்தகைய அரிய மொழிகளை அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

குழந்தை, மனைவி, தாய், பெண்ணின் பெருமை, மகப்பேறு, பெண்ணடிமை, திருமணம் இப்படிப் பல்வேறு தலைப்புகளில் பழமொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன் பெறலாம்.

அண்ணாவின் செல்வாக்கு!

"இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்குச் செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும், எழுத்துவன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

"உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவிதக் கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது, அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்களும் சூழ்ந்தனர்.

—ப. ஜீவானந்தம்

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

- கூடுதலாக, 80 அமைச்சுப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 50 காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

தீய சக்திகளின் கொட்டத்தை அடக்கவும், அவர்களுக்கு ஈடுகொடுக்கவும், தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கான மிகப்பெரிய ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசிடம் கொடுத்து சுமார் 80 கோடி ரூபாய் நிதி உதவி கேட்டோம். ஆனால், அதில் இதுவரை 10 கோடி ரூபாய் தான் கொடுத்துள்ளனர். மத்திய அரசின் இந்த உதவியோடு, தமிழக அரசின் சொந்த நிதியையும் பயன்படுத்தி, தமிழகக் காவல்துறையை நவீனமாக்கும் நல்ல திட்டம், விரைந்து நிறைவேறி வருகிறது.

காவல்துறையின் பல்வேறு நிலையில் உள்ள, இன்னும் சில குறைபாடுகளை, இந்த அரசு உணர்ந்து இருக்கிறது; உன்னிப்பாகக் கவனித்து, தீர்வு கண்டு கொண்டிருக்கிறது. சமுதாயத்திற்கு அவர்களின் சேவை, வெகுவாகத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளதால், அந்த எண்ணத்தின் செயல்பாடாகப், பல்வேறு தொடர் நன்மைகளைச் செய்து வருகிறது.

காவல்துறையில் பல்வேறு காலியிடங்கள், சில ஆண்டுகள் வரை நிரப்பப்படாமல் நின்றுவிட்டதை, நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதற்கு ஒரு பரிகாரமாக, சீருடைப் பணியாளர்களை நியமிப்பதற்கு என்றே, ஒரு சிறப்புத் தேர்வாணைக் குழுவினை, இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

காவல்துறையினரின் வெகுநாளைய கோரிக்கையாக ஒன்றை, என்னிடத்தில் அடிக்கடி சொல்லி வந்தார்கள். "இரண்டாம் நிலைக் காவலர்களாக, தமிழகத்தில் 47 ஆயிரம் பேர் இருக்கிறோம், பல ஆண்டுகள் பணிபுரிந்தும் முதல் நிலை எங்களுக்கு எட்டவில்லை. ஆகவே, எங்களுக்கு ஒரு வழிவகை செய்யுங்கள்", எனக் கோரி வந்தார்கள். அவர்களின் கோரிக்கைக்குத் தீர்வு காணும் வகையில், இன்றைய தினம், ஒரு நல்ல முடிவை அறிவிக்க விரும்புகிறேன்.

47 ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களில், 21 ஆயிரம் பேரை, முதல் நிலைக் காவலர்களாக, படிப்படியாகப் பதவி உயர்த்துவது என்றும்; அதே போல, முதல் நிலைக் காவலரிலிருந்து, தலைமைக் காவலராக, 2,700 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவது என்றும், முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை, இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

முதல் கட்டமாக, இந்த ஆண்டில், 9 ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்களாக ஆக்கப்படுவார்கள்; 500 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக ஆக்கப்படுவார்கள். எஞ்சிய அனைவரும், 5 ஆண்டுக் காலத்திற்குள், முதல் நிலைக் காவலராகவும், தலைமைக் காவலராகவும், பதவி உயர்வு பெறுவர், என்பதுதான் இவ்வினிய நிகழ்ச்சியை ஒட்டி, நான் எடுத்துள்ள மகிழ்ச்சியான முடிவு, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இனிமேல், முதல்நிலைக் காவலர்கள், நேரடியாக நியமிக்கப்படமாட்டார்கள் என்பதையும், அவை இரண்டாம் நிலைக் காவலர்களிடமிருந்து, பதவி உயர்வு மூலமே நிரப்பப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப் பல்வேறு வகையில், அரசு, உங்களைக் கவனித்துக் கொள்ளத் தயாராக இருப்பதால், மக்களைக் கவனித்துக் கொள்ள, நீங்கள் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். இன்றைய சூழ்நிலைக்கேற்ப, பிரச்சினைகளை நீங்கள் அணுக வேண்டும். எதிர்வரும் சவால்களைச் சந்திப்பதற்கு, வேண்டிய அமைப்புக்களை

யும், சீர்திருத்தங்களையும் செய்து கொள்ளும் சாத்தியக்கூறுகளை, எங்களது கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பாது பார்த்துக் கொள்வதோடு, நிரபராதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில், நீங்கள் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும். காவல்துறையில் உள்ளவர்கள், நல்லவர்களாக, வல்லவர்களாக, மனித நேயத்தோடு மக்களை அணுகி காவல்துறை, ஒரு Force என்பதைவிட, ஒரு Service என்ற கண்ணோட்டத்தோடு இயங்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் பணி, சமுதாயத்திற்குப் போதுமான அளவு, உரிய நேரத்தில், தொடர்ந்து, நியாயமான முறையில் கிடைக்க வேண்டும், என்ற என் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கும், தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், சிறைத்துறை அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையினருக்கும், அவர்கள், தங்களது உயிரினைத் துச்சமாக மதித்து, உயரிய சாதனை படைத்த மக்கள் பாதுகாப்புப் பணியினை பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதக்கங்கள் பெற்றுப் பாராட்டப்படும் சீருடை அலுவலர்களுக்கு, என் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் மகத்தான ஆதரவோடு, உங்கள் சகோதரியின் தலைமையில் இந்த ஆட்சி கடந்த ஆண்டு அமைந்த பிறகு, முதன் முறையாக முதலமைச்சராக, இன்றுதான் திருச்சி மாநகரத்திற்கு வந்துள்ளேன். திருச்சி மாநகர மக்கள், எனக்கு அளித்த அன்பான வரவேற்பு, என் நெஞ்சை நெகிழ வைத்தது. முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற பின், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்கின்றபோது, அந்த மாவட்ட மக்களைச் சந்திக்க நான் வெறும் கையோடு செல்வது இல்லை.

இதுவரை நான் சென்ற மாவட்டங்களுக்கு எல்லாம், பலகோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களைக் கொண்டு சென்று, அந்த மாவட்ட மக்களின், குறிப்பாக ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரம் உயர, ஏராளமான நலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவற்றைத் துவக்கியுள்ளேன்; உடனடி நிவாரணமாகப் பல கோடி ரூபாய் அளவிலான உதவிகளை, அரசின் சார்பில் வழங்கியுள்ளேன். ஆனால், இன்று திருச்சியில் நடைபெறுவது, காவல்துறையினருக்குப் பதக்கம் வழங்கி, அவர்களைக் கௌரவிக்கும் விழா என்பதால், இந்த விழாவிற்கென்று கடைப்பிடிக்க வேண்டிய சில பிரத்தியேக மரபுகள் உள்ளதால், வேறு நிகழ்ச்சிகளை இவ்விழாவில் இணைக்க முடியாமல் போய்விட்டது.

அதனால்தான், என் பாசத்திற்குரிய திருச்சி மாவட்ட மக்களுக்காக அரசின் ஏராளமான நலத்திட்டங்கள், மற்றும் பல கோடி ரூபாய்

மதிப்பிலான திட்டங்கள் தயாராக இருந்தும் கூட, இவ்விழாவில் அவற்றை அறிவிப்பது, இந்த நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக அமையாது என்பதால்தான், அவைகள் இணைக்கப்படவில்லை. இதற்கு என்றே, திருச்சி மாவட்டத்தில் வேறு ஒரு நகரத்தில், அரசு விழா ஒன்று விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்பதையும், அந்த விழாவில் நான் கைநிறைய நலத் திட்டங்களோடும், உதவிகளோடும் உங்களைச் சந்திப்பேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் தலைசிறந்த மாநிலமாக விளங்க, அமைதிப் பூங்காவாய்த் திகழ, ஒருமைப்பாட்டின் உறைவிடமாய்ப் புகழ்பெற, தமிழக மக்களின் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும், உயர்விற்காகவும், மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளிலும், நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். ●

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 3 விடுமுறை இல்லங்களையும், ஒரு ஓய்வு இல்லத்தையும் தனது செயல்பாட்டின்கீழ் நடத்தி வருகிறது.

இந்த வாரியம் ஜூலை 1992-ல் மட்டும் கண்பார்வை பாதிக்கப்பட்ட 220 தொழிலாளர்களுக்கு, மூக்குக் கண்ணாடிகள் வழங்கியிருக்கிறது. மற்றும் 14 தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,845 செலவில் மாதாந்திரப் பயிற்றுவிப்பு, தேர்வு கட்டணம் கட்ட உதவி புரிந்திருக்கிறது. இவை தவிர 74 தொழிலாளர் குடும்பங்களுக்கு, இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக ரூ.22,200 தொகை வழங்கப்பட்டது.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் புனரமைக்கப்பட்ட வ.உ. சிதம்பரனார் பூங்கா மற்றும் உயிரியல் பூங்கா திறப்பு விழா

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் பேச்சிப்பாறை என்றழைக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ள வ.உ. சிதம்பரனார் பூங்கா 1927-ஆம் ஆண்டு சென்னை மாநில ஆளுநராக இருந்த விஸ்கவுண்ட் கோஷன் பிரபு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1933-ஆம் ஆண்டு இந்தப் பூங்காவினுள் ஒரு மிருகக்காட்சி சாலை ஏற்படுத்தப்பட்டது. 28 ஏக்கர் 24,857 சதுர அடி நிலத்தில் அமைந்துள்ளது இந்த வ.உ. சிதம்பரனார்நகராட்சிப் பூங்கா.

இப்பூங்காவின் அழகு, அமைப்பு சிறப்பு ஆகியவற்றைக் கட்டிக் காக்கவும், மேம்படுத்தவும் 1988-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தால் இப்பூங்காவினைப் புனரமைக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாத இப்பூங்காவினைச் சீரமைக்கக் கடுமையான முயற்சிகள் தற் சமயம் எடுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த ஊக்கத்தின் பேரில் இப்பூங்கா புனரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மாவட்ட வன அலுவலர் ஒத்துழைப்புடன் ஈரோடு நகராட்சி ஆணையர் திரு. பி. சங்கரன் மற்றும் நகராட்சி அலுவலர்களால் இப்பூங்காவினைச் சீரமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. முதல் கட்டமாகப் பூங்காவைப் பராமரிக்க சுமார் 8.00 ஏக்கரைச் சுற்றி வளைக் கம்பிகள் அமைக்கும் பணி ரூ.4 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, பூங்காவைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது.

பூங்காவினை அழகுபடுத்தும் வகையில் பூங்காவில் உள்ள நடைபாதைகள் சீர் செய்தல், வண்ணம் பூசுதல், அலங்கார விளக்குகள் அமைத்தல், அலங்கார நீரூற்றுகள் அமைத்தல், சிலைகள் புதுப்பித்தல், புல்தரைகள் அமைத்தல், புதுவிதமான செடிகள் வைத்தல், நீர்த் தேக்கங்களைப் பராமரித்தல் முதலான பணிகள் ரூ.3.50 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் கருத்தின்பேரில், மாவட்ட வன அலுவலர் அவர்கள் உதவியுடன் பூங்காவினுள் இயற்கைச்சூழ் நிலையில் பறவைகள், மிருககாட்சி சாலை அமைக்கும் பணி சுமார் ரூ.5 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள மான் கூண்டு, மயில் கூண்டு, மிருகங்கள் கூண்டு ஆகியவை புதுப்பித்தல் பணிகள் நடைபெற்றுள்ளன. இக்காட்சிச் சாலைக்குத் தேவையான சிறுத்தைகள், கரடிகள், குரங்குகள், முயல்கள், மான்கள், விதவிதமான பறவைகள் மற்றும் நீர்ப்பறவைகள் முதலானவை சென்னை வண்டலூர் மிருககாட்சிசாலையிலிருந்து பெறப்பட்டுள்ளன.

ஏற்கெனவே அமைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்த சிறுவர்கள் இரயில் புதுப்பிக்கப்பட்டு இரயில் என்ஜின் புதியதாக வாங்கிப் பொருத்தப்பட்டு, இந்த இரயிலை மீண்டும் சிறுவர்களின் உல்லாசப் பயணத்திற்கு விடப்பட்டுள்ளது. அதி நவீன அலங்கார மின் விளக்குகள் மற்றும் மியூசிகல் பௌண்டன், செடியிலேயே இந்திய தேசிய வரைபடம் போன்ற பல சிறப்பான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. ஈரோடு நகர் மக்கள் மட்டுமன்றி பெரியார் மாவட்டத்தில் பல பாகங்களில் இருந்து வரும் பொதுமக்கள் தங்கள் குடும்பத்துடன் கண்டுகளிக்க இப்பூங்கா ஓர் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புகள் பெற்ற ஈரோடு நகராட்சியின் புனரமைக்கப்பட்ட வ.உ. சி பூங்காவினையும்,



சிவகாசி விபத்து: மாண்புமிகு முதல்வர் உதவி

அண்மையில், சிவகாசியில் உள்ள தனியார் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டுச் சிலர் உயிரிழக்கக் காரணமான தீ விபத்து பற்றி - அன்றையதினமே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:

சிவகாசி அருகில் உள்ள நாராயணபுரத்தில் 14.9.92 அன்று மாலை, தனியார் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் மரணம் அடைந்ததையும், 30 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதையும் அறிந்து, நான் மிகுந்த துயரமும், வருத்தமும் அடைந்தேன். காமராசர் மாவட்ட அதிகாரிகளையும், காவல்துறை மற்றும் தீ அணைப்புத்துறை அதிகாரிகளையும் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட வேண்டுமென்று பணித்துள்ளேன்.

விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதமும் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு ரூபாய் 5 ஆயிரமும், காயமுற்ற மற்றவர்களுக்கு ரூபாய் 2,500-ம் முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக உடனடியாக வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளேன்.

மேலும், நிவாரணப் பணிகளைக் கவனிப்பதற்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்களையும், வருவாய் நிர்வாக ஆணையர், திரு. சி.என். ராமதாஸ் அவர்களையும் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் செல்லும்படி ஆணையிட்டுள்ளேன். மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உயிரியல் பூங்காவினையும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 22.8.92 அன்று ஈரோட்டில் திறந்து வைத்தார்.

இவ்விழாவினையொட்டி ஈரோடு நகரின் சுற்றுப்புறச் சூழ லைப் பாதுகாத்திடவும், ஈரோடு நகரினைப் பசுமையாக்கிடும் வகை யிலும் 15 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

''பெரியார் நகர் பூங்கா' அமைப் பதற்கான அடிக்கல்லையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாட்டி வைத்ததோடு சிறுசேமிப்புப் பரிசுக் குலுக்கலில் பரிசு பெற்றவர் களுக்கான பரிசுகளையும், ஈரோடு நகராட்சியின் துப்புரவுப் பணி யாளர்கள் 505 பேர்களுக்கு ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டிலான இலவச மழைக்கோட்டுகளையும் சிறுதொழில் மேம்பாட்டிற்காக 41 நபர்களுக்கு ரூ.2.65 இலட்சம் கடன் உதவிகளையும் மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

'யுனிசெப்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட வீடியோ விளம்பர வாகனத்தையும், பெரியார் மாவட் டத்திற்காக 'யுனிசெப்' நிறுவனத் திடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்வீடியோ விளம்பர வாகனத்தின் மதிப்பு ரூ.8 இலட்சமாகும். தமிழ் நாட்டிலேயே இவ்வாகனத்தை முதன் முதலாகப் பெரியார் மாவட்டத் திற்குத் தான் 'யுனிசெப்' நிறுவனம் வழங்கியுள்ளது என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

இவ்விழாவிற்குப் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார். திருச் செங்கோடு நாடாளுமன்ற உறுப் பினர் டாக்டர் (திருமதி) கே.எஸ். சௌந்தரம், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. பெரியசாமி, மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. சி.கே. காந்திராஜன், டாக்டர் எல்.எம். இராமகிருஷ்ணன், எஸ்.கே. மயில்சாமி கவுண்டர், 'யுனிசெப்' நிறுவனத்தின் சார்பில் திருமதி சரளா ராவ் மற்றும் அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனங் களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. எஸ்.என். பழனிச் சாமி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்க ஈரோடு நகராட்சி ஆணை யாளர் திரு. பி. சங்கரன் நன்றியுரை யாற்றினார். ●

எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

உயிரைக் குடிக்கும்
மதுவைக் குடிக்காதீர்!

பாடநூல் நிறுவனத்தின் பயனுள்ள பணிகள்!

ஈ.வெ.கி. சுலோச்சனா சம்பத்
தலைவர், த.நா.பாடநூல் நிறுவனம்

தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி, தமிழ்க் கல்விக்கு முக்கியத்துவம் தந்து 'இரு மொழிக் கொள்கை' இலட்சியம் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தொடக்கக் கல்வி முதல் தமிழைப் பயிற்று மொழியாக்கவேண்டும். நர்சரிப் பள்ளிகளில் ''மம்மி, டாடி'' தான் சொல்லித் தரப்படு கிறது. அன்னை தந்த பால் ஒழுக, அமுதவாய்த் தேனொழுக ''அம்மா'' என்று சொல்ல முடியவில்லை. ஆரம்ப நிலையிலேயே தமிழ் அழிக் கப்படுகிறது; மறைக்கப்படுகிறது. இதனையெல்லாம் கண்டு மனம் குமுறிய நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ''எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்'' என்று வீரக்குரலை ஒலித் திருக்கிறார்கள்.

இதற்கு, இந்த அரிய முயற்சி களுக்கு வழிகாட்டுவதிலும்; வழி நடத்துவதிலும் அறிஞர்களும், புலவர் பெருமக்களும், ஆசிரியர் பெருமக்களும், தனியார் கல்வி நிறுவனங்களை நடத்தும் தலைமை யாளர்களும் உறுதுணையாக இருப் பது அவசியம்.

டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில்தான் தொடக் கக் கல்வி முதல், தமிழ் கட்டாயம் என்ற நல்ல நிலை ஏற்பட்டுள்ளது. இது மகிழத் தக்க நிலை; தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்துள்ள ஏற்றமிகு நிலை.

மற்றோர் நிலைமையையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூர்ந்து கவனித்துச் சீர்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளார். அது - மாணவர்கள் பள்ளிகளை விட்டுப் பெருமளவில் இடையில் நின்று விடுவதைத் தவிர்க்க உரிய முயற் சிகள் காண்பதில் முனைப்புக் காட்டிவருவதேயாகும்.

உண்மை வாரிசு

மறைந்த மனிதப் புனிதர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், தாம் குழந்தைப் பருவத்தில் வறுமை வயப்பட்டு, கல்வி பெறும் வாய்ப்பை இழந்ததைப் பெரும் குறையாக எண்ணி,வருந்தி - இத்தகைய நிலை சமுதாயத்தில் எந்தக் குழந்தைக்கும் ஏற்படக்கூடாது என்பதால் தான் ''இலவச மதிய சத்துணவுத் திட் டத்தை'' மெத்தப் பாடுபட்டு அமல் படுத்தினார்; அரசில் நிதியாதாரம் இல்லையென்றாலும், ''இது அவசியம்- என்னால் முடியும்'' என்று நிலைநாட்டிக் காட்டினார். இன்றள வும், அவரது உண்மை வாரிசு முதல்வர் புரட்சித் தலைவி அவர் களால், செம்மையாகவும் சிறப்பாக வும் இது நடத்தப்படுகிறது. இனி அவர்களது ஆலோசனையின் பேரில், தனியொரு துறையே இதற் காக ஏற்படுத்தப்பட்டுச் செயல் படுத்தப்படவும் இருக்கிறது.



★ ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும், அவர வர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானா லும், அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானா லும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

இலவச மதிய உணவுத் திட்டம்.
இலவசப் பாடநூல் வழங்கல்,
இலவசச் சீருடைத் திட்டம்,
இலவசக் காலணிகள் வழங்கல்,
இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.

- இப்படி எண்ணற்ற முறை களில், வழிகளில் இளம் சந்ததியின ரைக் கல்வி கற்க வைத்திடும் பெரு முயற்சியில், புரட்சித் தலைவர் அரசின் இலட்சிய வழியில், புரட்சித் தலைவியின் பொற்கால அரசும் முனைப்புக் காட்டி வருகிறது.

இந்த இலவசத் திட்டங்களால் தமிழகத்தில் 62.09 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வரு கின்றனர்.

கல்விப் புரட்சியை முழு வீச் சோடு நிகழ்த்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மிகச் சிறந்த வழிகாட்டுதலோடு செயற்படுகிற கல்வித் துறையில், அதன் துணை அமைப்பாகிய ''தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்'' சமூகக் கண் ணோட்டத்துடன், எதிர்காலச் சந்ததி யினரை ஏற்றமுடன் உருவாக்கித் தருவதில், அடிப்படையான பாட நூல்களைத் தரமாகத் தயாரித்து வழங்குவதில் தனி அக்கறை கொண்டு விளங்கிவருகிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறு வனம் ஆளுநர் குழுவின் ஆளுகை யின் கீழ்ச் செயல்படுகிறது. இந்நிறு வனத்தின் மேலாண்மை இயக்குநரே தற்பொழுது இக்குழுவின் தலை வரும் ஆவார். ஆளுநர் குழுவின் கீழ் - நிதிக்குழு, செயற்குழு, மற்றும் கல்விக்குழு ஆகியவை இந்நிறுவனத் தின் நிர்வாகத்தில் செயல்படுகின்றன. நிறுவன அச்சுப்பணிகளுக்கு ஆலோ சனை கூற அச்சு சிறப்புக்குழு செயல்படுகிறது. நிறுவனத்தின் வட் டார அலுவலகங்கள் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை, கும்பகோணம், சேலம், திருநெல்வேலி,

திருச்சி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், புதுக்கோட்டை, ஈரோடு, மானா மதுரை, கோவில்பட்டி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 14 இடங்களில் செயல்படுகின்றன. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரே இந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலரும் ஆவார்.

தோற்றமும் தொண்டும்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் நாட்டுடைமையாக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த 4.3.1970 அன்று இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. 1 முதல் 12 வகுப்புகளுக்கான தமிழ் வழிப் பாடநூல்களையும், 6 முதல் 12 வகுப்புகளுக்கான ஆங்கில வழிப் பாடநூல்களையும், 1 முதல் 10 வகுப்புகளுக்கான மலையாளம், கன்னடம், உருது மற்றும் தெலுங்கு வழி சிறுபான்மை வழிப் பாடநூல்களையும் அச்சிட்டு விநியோகித்து வருகிறது. இது தவிர நடுவண் அரசு அளித்துள்ள ரூபாய் ஒரு கோடியினைக் கொண்டு தமிழ் வழியில் கல்லூரி நூல்கள் 911 தலைப்புகளில் அச்சிட்டு வெளியிடும் பணியையும் மேற்கொண்டிருந்தது.

1979-ஆம் ஆண்டு முதல் நடுவண் அரசு அளிக்கும் சலுகை விலைத் தாளின் மூலம் மலிவு விலைக் குறிப்பேடுகள் தயாரித்து மாணவ, மாணவியருக்குக் கிடைக்கும் வண்ணம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிறுவனம் இலாபம் ஈட்டும் நோக்குடன் அமைக்கப்பட்டதன்று. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் பொதுக் கல்வி இயக்கக வளாகத்தில் இயங்கி வருகிறது.

அதன் பணியாளர் - அலுவலர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி பண்டிகைக்கு முன் 20 சதவிகித அன்புக்கொடை வழங்கப் பெறுகிறது. இந்நிறுவனத்திற்குப் பள்ளிப் பாடநூல், குறிப்பேடு, மற்றும் தாள் ஆகியவற்றை இருப்பு வைக்கத் தரமணியில் சுமார், 1,20,000 சதுர அடிப் பரப்பில் ஆறு கிடங்குகள் உள்ளன.

பாடநூல் தயாரிப்பு அச்சுப்பணி

"பாடநூல் தயாரிப்பு" என்பது எளிதான காரியமல்ல; மிகப் பொறுப்பான கலை; பொன்னான எதிர்காலத்தை ஏற்படுத்தித்தருவது, இதில் இந்நிறுவனம் வெற்றி கண்டு வருகிறது.



டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு தயாரித்தளித்த கலைத்திட்ட நெறிமுறைகளின்படி இந்நிறுவனம் 1988-89-ஆம் ஆண்டில் 1,3 மற்றும் 6-ஆம் வகுப்புகளுக்கும், 1989-90-ஆம் ஆண்டில் 2,4,7,9 மற்றும் 11-ஆம் வகுப்புகளுக்கும் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளில் - (தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம்) 254 தலைப்புகளில் புதிய வரிசைப் பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளை வெளியிட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டிற்கு மூன்றாவது கட்டமாக 5,8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கு 115 (தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளில்) தலைப்புகளில் புதிய வரிசைப் பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் வெளியிடப்பட்டன. புதிய கல்விக் கொள்கையைப் புத்துணர்வுடன் நிறைவேற்றிக் காட்டுவதில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சி, பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்தியாவில் புதிய கல்விக் கொள்கைக்கிணங்க புதிய வரிசைப் பாடநூல்களை முதலில் வெளியிட்டு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் முன்னணியில் உள்ளது. வாழ்க்கைக் கல்வி, கலைக் கல்வி 1 முதல் 5-ஆம் வகுப்புவரை பாடநூல்/செயல்முறைச் சுவடிகளும், உடற்கல்வி/சுகாதாரக் கல்விக்கு 1 முதல் 10 வகுப்பு வரை ஆசிரியர் கையேடுகளும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்குக் கணிப்பொறி அறிவியல் என்ற பாடநூலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாடநூல்களின் அச்சுப் பணிக்காகவும் அச்சுத் தொடர்பான பல்வேறு பணிகளுக்காகவும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, கூலி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு அச்சுக் கூலி விகிதங்களுக்கு அரசின் ஒப்புதல் பெறப்படுகிறது. பாடநூல்கள் ஏறத்தாழ 150 தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

பாடநூல்களை அச்சிட முதல் தவணையாக 500 டன் தாள் பெற தமிழ்நாடு தாள் ஆலைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகிய நான் தமிழ்நாடு தாள் ஆலைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களை மூன்று முறை நேரில் சந்தித்து வாதாடி டன் ஒன்றுக்கு ரூ.2.250 வீதம் சிறப்புத் தள்ளுபடி பெற்றதன் மூலம் இந்நிறுவனத்திற்கு 1993-94-ஆம் கல்வியாண்டில் மட்டும் ரூ.82.50 இலட்சம் ஆதாயம் கிட்டியது. தாள் கொள்முதலில் இடைவிடாத பேச்சுவார்த்தை மூலம் ஒரே ஆண்டில் இவ்வளவு பெரிய தொகை நிறுவனத்திற்கு ஆதாயமாகக் கிட்டுவதற்குப் பெருமைப் படுகிறேன். மேலட்டை, சிப்பத்தாள் ஆகியன தனியார் நிறுவனத்திடமிருந்து செய்தித்தாளில் விளம்பரம் செய்து ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று ஆளுநர் குழுவின் அங்கீகாரத்திற்குப் பின் வாங்கப்படுகிறது.

பாடநூல் விநியோகம்

1992-93-ஆம் கல்வியாண்டிற்கு விற்பனை மற்றும் இலவச வெளியீடு விநியோக விவரம்:-

விநியோகிக்கப்பட்ட பாடநூல்களின் மொத்த எண்ணிக்கை ..530 இலட்சம்

பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை .. 120 இலட்சம்

அச்சிடப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு ..2,851 இலட்சம்

தமிழ்நாடு அரசு இலவச வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை .. 364 இலட்சம்

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை .. 62.6 இலட்சம்

இலவச வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு ..1,851 இலட்சம்

குறிப்பேடு

பாடநூல் எப்படியோ, அதற்கு ஆதாரமாகக் குறிப்பேடுகளும் மிக முக்கியம். அது தரமான காகிதத்தில், மலிவான விலையில் தரப்படும் என்பதில் இந்நிறுவனம் கவனமாகச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பேடுகள் தயார் செய்து வழங்கும் பொறுப்பை 1.10.1979 முதல் இந்நிறுவனம் ஏற்றுள்ளது. இக்குறிப்பேடுகள் நடுவண் அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் சலுகை விலைத்தாளினால் தயார் செய்யப்பட்டு மலிவு விலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்/பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் பயனடையும் மாணவர்களுக்கு மட்டும் தேவையான குறிப்பேடுகள் தயாரிக்க ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,600 டன் தாள் தேவைப்படுகிறது.

1.4.1990 முதல் நடுவண் அரசு சலுகை விலைத்தாள் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டதால் குறிப்பேடு தயாரிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பெறவில்லை.

சென்ற ஆண்டு தயாரிக்கப்பட்டு கையிருப்பில் இருந்த குறிப்பேடுகளில் இருந்து 1992-93-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்குத் தேவையான குறிப்பேடுகள் ரூ.42 இலட்சத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. கையிருப்பில் உள்ள மீதிக் குறிப்பேடுகள் அனைத்துப் பொதுப் பள்ளிகளிலும் பயிலும் ஆதிதிராவிட மாணவருக்கு விநியோகிக்கத் தேவையான அளவு இல்லாததால், இந்துஸ்தான் தாள் ஆலை நிறுவனத்திடமிருந்து தாள் வாங்கி குறிப்பேடு தயாரித்துப் புதிய விலையில் விநியோகம் செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. காகித ஆலையிலிருந்து தாளினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி நிலைமை

கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் இலாப நோக்குப் பார்க்கக் கூடாது. சேவை மனப்பான்மையே வேண்டும் என்பது முதல்வர் புரட்சித் தலைவியின் எண்ணம். ஆயினும் நட்டத்திற்கோ, விரயத்திற்கோ, இடம் தராது இந்நிறுவனம் செவ்வனே சாதனை புரிந்து வருகிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பாடநூல் விநியோகத்தை இலாப நோக்கின்றி செய்து வந்தும், கிடைக்கப் பெற்ற குறைந்த பட்ச சேமிப்பிலிருந்து ரூ.34 இலட்சம் மதிப்பில் 3 மாடிக் கட்டடம் மற்றும் ரூ.1.20 கோடி மதிப்பில் 10 மாடிக் கட்டடம் ஆகியவை இந்நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டடத்திலுள்ள மாநில மற்றும் மைய அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.3 இலட்சம் வாடகையாகப் பெறப் படுகிறது.

உபரி நிதியிலிருந்து 1981-82 முதல் 1985-86 வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ.25 இலட்சமும் 1986-87-ஆம். ஆண்டு முதல் ரூ.50 இலட்சமும் பள்ளிகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு மொத்தம் ரூ.2.25 கோடி அரசாணையின்படி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சிறப்புகளை நாடறியும், எதிர்காலச் சந்ததிகளை அறிவுபூர்வமாகவும், சமூகக் கண்ணோட்டத்துடனும் உருவாக்குவதில் பாடநூல் நிறுவனம் தனிச்சிறப்பு படைத்து வருகிறது. அதில் ஒரு திருப்புமுனை முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ரூ.20 கோடி மதிப்பில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் அமல்படுத்தப் பட்டது ஆகும்.

அந்த உன்னத இலட்சியத்தின் குறிப்பறிந்து, அவர்தம் நோக்கங்களைச் செயலாற்றும் பொருட்டு, அத்தருணத்தில் நான் இந்நிறுவன மேலாண்மை இயக்குநர் பொறுப்

புகை உடலுக்குப் பகை. 1990-களில் தொழில்துறையில் சிகரெட் பிடிப்பதால் இறப்பவர்களின் எண்ணிக்கை 2.1 கோடியாக இருக்குமென்று அமெரிக்க புற்றுநோய் கழகச் செய்தி தெரிவிக்கிறது.

வளரும் நாடுகளில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. புகை பிடிப்பதால் அமெரிக்காவில் ஆண்டுதோறும் 4,34,000 பேர் இறக்கின்றனர். புகையால் இறப்பவர் ஒருபுறமிருக்க, புகைவிடுபவர்களின் புகையைச் சுவாசித்து இறப்பவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

அமெரிக்காவில் வாரந்தோறும் இதனால் 1,000 பேர் இறக்கின்றனர்.

யைப் பெற்றிருந்தது எனது நற்பேறாகும். இத்திட்டத்தை இரண்டு திங்களில் தயாரித்து முடித்து, முதல் ஆண்டிலேயே வெற்றி பெறச்செய்யப் பட்டது; அவ்வெற்றி இன்றளவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அடியொற்றி அதே வடிவில் தொடர்கிறது.

1992-93-ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1,851 இலட்சம் மதிப்புள்ள ரூ.364 இலட்சம் நூல்கள் , விநியோகிக்கப்பட்டு, 62.6 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இது அரசின் பெருஞ்சாதனை மட்டுமன்று; இதனை மற்ற மாநில அரசுகளும் பின்பற்றக் கருதினாலும், அவர்களால் இயலுமா என்று மலைக்கச் செய்யும் சாதனையாகும். அவ்வகையில் பிற மாநிலங்களுக்குப் பல வழிகளிலும் வழி காட்டுகிற மாநிலமாகத் தமிழகம் அமைந்துள்ளது; பாடநூல் தயாரிப்பு, இலவசமாக வழங்குதல் ஆகிய பணிகளிலும் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறது.

அந்த அளவிற்கு எழை எளிய மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கும் முயற்சியில் இலவசக் கல்வியோடு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டமும் இணைந்து பெரும் சாதனை நிகழ்த்தி வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மற்ற அனைத்துத் துறைகளது முன்னேற்றத்திலும் காட்டுகிற அக்கறை யிலும் மிக முக்கியமான கல்வி, தொழில், விவசாயத் துறைகளில் பேரார்வம் கொண்டு பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறார். குறிப்பாகக் கல்வித் துறைக்கு முதலிடம் தந்து, அதிக நிதி ஒதுக்கி தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியை நிகழ்த்துவதில் முதன்மை பெற்று விளங்குகிறார்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் ராஜநடை போடும் இந்த அரசின் இப்பொற்காலத்தில் பாடநூல் நிறுவனம் விரிவாக்கப்படவிருக்கிறது. கல்வித்துறையில் பல்லாண்டுகளாக நேரடி அனுபவம் பெற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களின் வழிகாட்டுதலின்படி. செயல்பட்டுச் சாதனைகள் பல நிகழ்த்த விருக்கிறது இந்நிறுவனம். தனக்கெனப் பெரிய அச்சகத்தை உருவாக்கிக் கொள்ளவிருக்கிறது. ஊழியர் நலன்களைக் கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களை மேற்கொள்வதுடன் பாடநூல்களின் தரத்தை மேலும் உயர்த்திடவும் ஆர்வம் கொண்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயனுள்ள பணிகள்

'தமிழ்ச் சமுதாயத்தின் அறிவு விழி திறக்கக் கல்வி ஒளிபாய வேண்டும்' என்று விரும்பினார் தந்தை பெரியார். 'அனைவரும் கற்க வேண்டும்' என்ற ஆர்வத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொண்ட அறிவார்ந்த முயற்சிகளையும் நாடறியும். இடைக்காலத்தில் கல்வி ஓடையில் முதலைகள் சில தலைதூக்கின. ஆயினும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பள்ளிகள், கல்லூரிகள், ஏன் பல்கலைக் கழகங்களும் எண்ணிக்கையில் உயர்ந்தன. கற்போர் எண்ணிக்கை கூடியது. மகளிர் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. மகளிர்க்கென்று தனியொரு பல்கலைக் கழகமே நிறுவப் பட்டது. அவர் வழிவந்த டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் கல்விப் புரட்சி வியக்கத் தக்க அளவில் மேலோங்கியுள்ளது. அதற்கு உறுதுணைபுரியும் வகையில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

அடுத்துவரும் ஆண்டுகளில், இந்நிறுவனத்தின் சாதனைகள் மேலும் பல மடங்கு பெருகும். அதற்கான வளர்ச்சிக் கட்டங்கள் அடுத்தடுத்து நிகழவிருக்கின்றன. ஏற்றமிகு எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கிடும் பயனுள்ள சமுதாயப் பணியில் பாடநூல் நிறுவனம் வியத்தகு சாதனை புரிந்து வருகிறது; மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான வழிகாட்டுதலோடு, இப்பணிகளில் மேலும் விரிவாக்கம் பெற்றுத் தமிழகம் முழுவதும் முழுமையான எழுத்தறிவியக்கம் என்ற ஏற்புடைய கொள்கை வெற்றியடையவும்; பள்ளி மற்றும் கல்லூரிகளில் பண்பான பயனுள்ள கல்வி தரப்பட்டு, பண்பட்ட மாநிலமாகப் ''பகுத்தறிவுபுரியாக''த் தமிழகம், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மேலும் பல சரித்திரச் சாதனைகளை நிகழ்த்தும் என்பதில் ஐயமில்லை!

சுற்றுலாப் பயணத்தின்மூலம் இந்தியாவின் அழகைக் கண்டு களிக்க வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் அந்நியச் செலாவணி பெருகியுள்ளது. இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை சுற்றுலாவின் மூலம் ரூ.1,700 கோடி அன்னியச் செலாவணியாகக் கிடைத்துள்ளது.

சென்ற ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கிடைத்த அன்னியச் செலாவணி ரூ.1,085 கோடியாகும்.

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
எஸ்.டி. இராஜேந்திரன்
திடீர் மறைவு!

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக இருந்து திறம்படச் செயலாற்றிவந்த திரு. எஸ்.டி. இராஜேந்திரன் அவர்கள் 11.9.92 அன்று எதிர்பாரா வண்ணம் மறைவெய்தினார் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது மனைவி மக்களுக்குத் 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

—ஆசிரியர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568027

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

7 உறுப்பினர் கொண்ட சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தூதுக் குழுவினர் மதுரை தலைமைப் பாதிரியார் (ஆர்ச் பிஷப்) ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத்தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர் (22.9.'92).

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 28.9.92 அன்று, தலைமைச் செயலகத்தில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த இதழில்

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் முதல்வர் பேருரை ... 2
மத்திய அரசுக்கு முதல்வர் கோரிக்கை ... 9
சட்டப்பேரவையில் துணை மதிப்பீடு ... 15
இலவச வேட்டி வழங்கும் திட்டம் ... 17
கடமை தவறாத காவலர் குடும்பத்திற்கு முதல்வர் நிதியுதவி ... 19
பெரியார் மாவட்டத்தில் சிறுசேமிப்பு ... 20
தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு: முதல்வர் அறிக்கை ... 24
புதுக்கோட்டை மக்களுக்கு முதல்வர் உதவி ... 28
நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் மீன் வளர்ப்பு ... 29
மறைமலைநகர்-காமராஜர் ரயில் நிலையம் ... 31
திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இளம்பிள்ளை வாத மறுவாழ்வு முகாம் ... 33
குடிப்பழக்கம் உயிர்க்கொல்லி ... 34
மாயூரம் வேதநாயகம் பிள்ளை ... 37
காந்தியடிகள் பிறந்த நாள் விழா ... 41
நாடகக் கலைஞர்களுக்கு அரசு சலுகை ... 45

வடலூர் வள்ளல்!

கவிஞர் இளந்தேவன்

எறும்பின் காலடிகள்
எழுப்புகின்ற ஓசையையும்
காதுகளால் கேட்கும்
கருணைமனம் கொண்டவர்யார்?

கொழுத்திருக்கும் கோழி
கூரலகில் இருதுண்டாய்
உயிர்துடிக்கும் சிறுபுழுவின்
ஊமைப் புலம்பல்களில்
தானழுது துடிக்கின்ற
தன்மை யுடையவர்யார்?

மீன்பிடிக்கும் வலைகண்டால்
மீன்துடிக்கும் முன்னாலே
தான்துடித்து விழுகின்ற
தயையுடைய வள்ளல்யார்?

கருவாடு போலிருக்கும்
கந்தையுடை ஏழைமக்கள்
இளைத்திருக்கப் பார்த்துமனம்
இளைத்து, உடல் மெலிபவர்யார்?

என்னுள் இருப்பவர்யார்?
எனக்கெதிரே இருப்பவரின்
கண்ணில் தெரியவர்யார்?
கல்லுருகக் காண்பவர்யார்?

மண்நோக நடக்காமல்
மாதா சிவகாமி
கண்நோக நடக்குமந்தக்
கருணை வடிவினர்க்குப்

பூப்போட்டு அருச்சித்தால்
பொன்னடிகள் நோகுமென்று
பாப்போட்டு அருச்சிக்கப்
பாவலர்காள் வாரீரோ!

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:23 இதழ்:8

16-10-1992

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில்

மாண்புமிகு முதல்வர் பேருரை

என் வழிகாட்டியான புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் செயல்படும் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்புரையாற்ற எனக்கு அழைப்பு விடுத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். இவ்வழைப்பினை ஏற்பதன் மூலம் என்னுடைய வழிகாட்டியான டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப் பாகவே இதைக் கருதுகிறேன். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலங்களை எல்லாம் கடந்ததொரு பார்வையையும், உண்மைகளை ஒட்டு மொத்தமாக உணரக்கூடிய மனப்பக்குவத்தையும், தேவை உள்ளவர்களுக்கெல்லாம் உதவிடும் இதயத்தையும் பெற்றிருந்தார்.

மனித வளத்தை மேம்படுத்துவதுதான் மக்க ளின் மகிழ்ச்சிக்கு ஆதாரம் எனக் கருதிய அவர் தன்னுடைய சிறப்பான கவனத்துக்குரிய துறை யாகக் கல்வியைத் தேர்ந்தெடுத்தார். குழந்தை களின் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகை யில் தமிழகக் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் மதிய சத்துணவுத் திட்டத்தை வழங்கினார். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உயர் கல்வியே திறவுகோள் என்பதை உணர்ந்த அவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் மருத்துவப் பல்கலைக் கழகம், ஆகியவற்றை நிர்மாணித்தார். நமது மாநிலத்தில் குழந்தைகளுக்கும்' இளைஞர்களுக் கும் நீண்டகால நன்மைகளை வழங்கும் கல்வி யின் முன்னேற்றத்திற்கான உறுதியான அடித்தளத்தை (Foundation) அமைத்தார்-

பெரும் வள்ளலாகத் திகழ்ந்த ஜான் டி. ராக் ஃபெல்லர் ஒரு முறை எழுதியதாவது:

அதிகபட்ச நன்மைகளைச் செய்வதற்கும் குறைந்த பட்ச தவறுகளைப் புரிவதற்கும் நாகரீகத்தை வேரிலிருந்து பேணி வளர்ப்பதற்கும் உடல் நலம், நன்மை, மகிழ்ச்சி ஆகியவற்றை எங்கும் பரப்பு வதற்கும் செய்யப்படும் உதவியே உன்னதமான தத்துவமாகும். பெற்றிருக்கும் வளங்களை மேம் படுத்தவும் வளர்க்கவும் இதுவரை இல்லாத இடங்களில் முற்போக்கான, ஆரோக்கியமான உழைப்புக்கு வாய்ப்பளிக்கவும் முயற்சி, காலம், பொருள் ஆகியவற்றை முதலீடு செய்வதே உன்னதத் தத்துவமாகும். அனைத்து உதவிகளி லும் அடிப்படையாக விளங்குவது கல்வியே ஆகும்.

- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஜான் டி. ராக்ஃபெல்லர் அவர்களும் ஒரே இலட்சியத்தையும் ஒரே எண்ணத்தையும் கொண் டிருந்தார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை ஓரளவு நிறைவேற்றியுள்ளோம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் மருத்துவக் கல்வியின் தரத்தையும் உயர்த்தியுள்ளது. மருத்து வக் கல்வியின் தரத்தை உயர்த்தவும், சமுதாயத் தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்புடைய மருத்துவப் பாடத்திட்டம் உருவாக்க வும் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென்று உலக அளவில் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். நமது நாட்டில் பசுமைப் புரட்சியில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் தலையாய பங்கினை ஆற்றிய அனுபவ மும் உள்ளது. 1982- இல் மாநில அரசு அமைத்த குழுவின் பரிந்துரையின் பேரில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒரு சிறப்பான குறிக்கோளுடன் கூடிய ஒரு பல்கலைக் கழகமாகும். நவீன சமுதாயத்திற்கு அறிவினை வழங்கக்கூடிய திறவு கோலாக இப்பல்கலைக் கழகம் விளங்குகிறது. நமது சமுதாயம் அதிக அளவில் பயன்படுத்தும் புத்தக அறிவினை இது உருவாக்குகிறது. நமது சமுதாயத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் அறிவு ஜீவிகளின் தாயகமாக இது விளங்குகிறது. தொழில்நுட்ப அறிவை வழங்கும் திறமை, அனுபவம் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும் பாதுகாக்கவும் உறுதியான கருவி யாக இது விளங்குகிறது. விஞ்ஞான, தொழில் நுட்பத்தில் உயர்மட்டக் கல்வியை மக்கள் பெறும் வகையில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கல்வி போதிக்கும் முக்கிய நிறுவனமாக இது விளங்குகிறது.

'அப்ரஹாம் பிளாக்ஸெனர்' - அவர்களுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் பல்கலைக் கழகமென்பது 'ஒரு காலத்தின் கண்ணாடி', புத்தக வடிவிலும் செயல்முறை வடிவிலும் அடங்கியிருக்கும் தொடர்ச்சியான அறிவியல் - தொழில்நுட்ப சாதனைகளின் களஞ்சியமாகப் பல்கலைக் கழகம் விளங்கி, மாணவர்களுக்குப் பயன்படுகிறது. இன்று உலக மெங்கும் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள், பொருளாதார முன்னேற்றத்திற்கும், உடல் மன ஆரோக்கியத்திற்கும் சமூக நீதிக்கும் சக்திமிக்க, நேரடிப் பங்கினை வழங்கக்கூடிய நிறுவனங் களாகக் கருதப்படுகின்றன.

மனித சிந்தனைகளில் பெரிய முன்னேற்றங்கள் பல்கலைக் கழகங்கள் மூலம் ஏற்பட்டுள்ளன.

விஞ்ஞானங்களிலும் அதன் பல்வேறு கிளைகளிலும் புதிய ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெற்றுள்ளன. விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பல்கலைக் கழகத்திலிருந்து தான் தொடங்கியிருக்கின்றன.

கற்றுக் கொடுப்பதும், தகவல்களைத் தருவதும் சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள சிறப்பான திறமைகளையும் அறிவாற்றல்களையும் மாணவர்க்கு வழங்குவதும் மட்டும் பல்கலைக் கழகத்தின் நோக்கமல்ல. மாறிவரும் மக்களின் தேவைகளுக்கேற்ற அம்சங்களைக் கல்வி முறை கொண்டிருக்க் வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகளை வலியுறுத்தி, மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதே என் கருத்து. பல்கலைக் கழக மாணவர்கள் பாடத்தை மட்டும் படிப்பதில்லை. தன் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரத்தக்க பருவத்தில், உயரிய, உன்னதப் பண்புகளால் கவரப்பட்டு மாணவர் குறிப்பிடத்தக்க ஒருவராகிறார். மனித அறிவு வளர்ச்சியையும், சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதன் மூலமும் 'உள்ளத்தோடு உள்ளம் உராய்ந்து கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதன் மூலமும் பக்குவம் பெற்ற மனிதராக உருவாக மாணவரிடத்தில் இப்பண்புகள் கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றன. பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக்கூடமாக - சத்தியத்தை நாடுவோரின் சங்கமாக அமைய வேண்டும். தற்கால வாழ்க்கைச் சூழ்நிலையில் எவ்வளவுதான் அவசியமாக இருந்தாலும் பொருளைப் பெறுவதையும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதையும்விட மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதை நம்புபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அகிலத்துத் தீமைகளை அகற்ற அளவில்லாத ஆவல், பெருந்தன்மைமிக்க ஒரு நெஞ்சம், பரந்துபட்ட பார்வை இவற்றைப் பெறவும் தன்னலமற்ற, ஒருபால் கோடாத வழியிலே இலட்சியங்களைத் தொடரவும் பல்கலைக் கழகம் மாணவருக்கு உதவ வேண்டும்.

இப் பல்கலைக் கழகத்தின் பணி மகத்தானது. இங்கு மருத்துவர்களையும் - அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்கும் பணி நடந்து வருகிறது. உடல், மன நோய்களை எதிர்த்துப் போராடும் சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளைப் புரியும் பொறுப்பு இந்த இளைஞர்களுக்கு உண்டு. வளர்ந்து கொண்டே வரும் மருத்துவச் செய்திகளை ஒரு மருத்துவ மாணவன் தொடர்ந்து படித்து வருவது மிகவும் கட்டாயமானது. இந்த அறிவு வளர வளர கூடவே தனித்துறைப் புலமையும் வளருவதால் சிறிய, மிகச் சிறிய பிரிவுகளில் கூரிய - மிகக் கூரிய கவனம் செலுத்த வேண்டியது ஒரு மருத்துவ மாணவருக்குக் கட்டாயமாகின்றது. மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும் தங்களது அறிவைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நோயின் தன்மையைப் புரிந்து கொள்ளும் திறமையைக் கூர்மைப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். நோய்க்கேற்ற சிகிச்சையை நோயாளிகளுக்கு வழங்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக இந்நூற்றாண்டின் இறுதியில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை

மருத்துவ அறிவியல் துறையில் அடைந்துள்ளனர்.

உயிரியல், உயிர்-வேதியல், நுண் அறுவை மருத்துவம் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக, இதுவரையிலும் புனிதமரகவும் தொடவே முடியாத பகுதியாகவும் கருதப்பட்ட இதயத்தையும், மூளையையும் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் தொட்டுவிட்டார்கள். வருங் காலத்தில் உடல் உறுப்புகளை மாற்றி, செயற்கை உறுப்புகளைப் பொருத்துவது சாதாரண விஷயமாகிவிடும்.

மருந்துத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக மருந்துப் பொருட்கள் மூலம், நினைவு, எண்ணம், ஆசைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நிலையை எட்டிவிட்டோம்.

நவீன மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள இது போன்ற முன்னேற்றங்கள் மனித சமுதாயம் முழுவதையும் வெகுவாகப் பாதித்து அவற்றின் மீது தொடர்ந்து பெருத்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. மனிதன் மீது மருத்துவ விஞ்ஞானத்தின் பாதிப்பு எதிர்காலத்தில் பெருகும். வாழ்வைக் கட்டுப்படுத்தும் மருத்துவத் துறையின் சக்தி வளர வளர, மருத்துவர் தன்னுடைய திறமையைப் பயன்படுத்தும் முறை நம்மைப் பொறுத்த வரை முக்கியமான ஒன்றாக உள்ளது. நோய்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்டுள்ள சக்திவாய்ந்த புதிய முறைகளால் மருத்துவ விஞ்ஞானம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. விஞ்ஞானம் வழங்கியுள்ள புதிய முறைகளின் மூலம் மருத்துவம் மனித உடலைப் பற்றி, புதிய உண்மைகளையும் நிலைமைகளையும் கண்டறிய முடிகிறது. இப்படிக் குவிந்துள்ள தகவல்கள் நோயைக் கண்டு பிடிக்கவும், சிகிச்சை அளிக்கவும் புதிய வழிமுறையை வழங்கியுள்ளன. மருத்துவத் துறையில் வந்துள்ள விஞ்ஞான அணுகுமுறை, மனித உடலை மருத்துவர் ஒரு பொருளாகவே கருத வழி வகுத்துள்ளது. மருத்துவத்துறையின் வழி முறைகளில் ஒருவர் ஆழமாகச் செல்லச் செல்ல மனித உடலை ஒரு பௌதிகப் பொருளாகவே கருதுகிறார்.

மருத்துவர், மருத்துவ அறிவு, மருத்துவத் தகவல் ஆகியவற்றை முழுமையாகப் பெற்றிருந்தாலும், அவர் மருத்துவ ஞானத்தைப் பெற்றவராகக் கருத முடியாது.

டி.எஸ்.எலியட் ஒரு முறை இக்கருத்தையே எதிரொலித்தார். அறிவைத் தேடுவதில் நாம் தொலைத்துவிட்ட ஞானம் எங்கே? தகவல்களைத் தேடுவதில் நாம் தொலைத்து விட்ட அறிவு எங்கே?

(Where is the wisdom we have lost in knowledge? Where is the knowledge we have lost in information?)

விஞ்ஞானத்திற்குரிய அமைதியான பகுத்தறிவு அடிப்படை மருத்துவத்திற்கும் தேவைப்படுகிறது. அது மனித நேயத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பதாக இருக்கவேண்டும். வாழ்க்கையையும் மனிதனையும் தன்னிகரில்லாததாகவும் சிறப்பாகவும் கருதும் தகுதி வேண்டும். ஒருவர்க்கொருவர் தொடர்பு

அரசு அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு வரும் தனியார் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு, மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் உணவுத் தொகை ரூபாய் முப்பதிலிருந்து, ரூபாய் தொண்ணூறாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் தேதி முதல் இது அமலுக்கு வருகிறது. இதன் மூலம் 1,200 குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்திருக்கிறார்.

கொள்ளும் மனப்பான்மையுடன் மருத்துவர் நடக்க வேண்டும். நிதானம் தவறாத தொழில் நுட்ப நிபுணராகவும் இதயபூர்வமான அன்பும் அக்கறையும் காட்டுகிற தோழனாகவும் இருக்க வேண்டும். மனித இயல்பையும் உயிர்ப் பண்பையும் ஊடுருவிப் பார்க்கின்ற தெளிந்த பார்வை, முழுமையான ஈடுபாடு இவற்றின் அடிப்படையில் மருத்துவத் தொழில் தன் தகுதியை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவரிடம் ஒரு தொலை நோக்குப் பார்வையையும் ஒருங்கிணைந்த முழுப் பார்வையையும் வளர்ப்பதை மருத்துவக் கல்வி குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். மருத்துவ நிபுணர்களுக்கென்று சமுதாயத்தில் தனிப்பட்ட மதிப்பும் குறிப்பிட்ட பணியும் உண்டு. ஒரு நோயாளி நோயினால் பாதிக்கப்பட்ட உடலின் ஒரு பகுதியில் மட்டும் துன்புறவில்லை நோயால் உடல் உள்ளம் முழுவதும் துன்பப்படுகிறான். எனவே மருத்துவரின் தொழில் திறன் பற்றிய ஒரு முழுமையான ஒருங்கிணைந்த பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

பொதுவாக மேற்கத்திய சமுதாயத்தில் மருத்துவத்துறைத் தேர்ச்சி என்பது வெகு ஆழமாக வேரூன்றி விட்டது. பொது மருத்துவர் இல்லையென்றே சொல்லலாம். தனித் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரே கூரையின் கீழ் அலுவலகங்களை வைத்துள்ளனர். நோயாளிகள் ஒரு மருத்துவரிடமிருந்து வேறொருவருக்கு அனுப்பப்படுகின்றனர். எந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவரை முதலில் அணுகுவது என்பதே நோயாளியின் பிரச்சினையாக இருக்கும். நோயாளியைச் சோதனை செய்யப் பொது மருத்துவரே கிடையாது. இந்தியா போன்ற நாடுகளில் பொது மருத்துவருடைய சேவை ஆரம்பம் முதல் கடைசி வரை இருக்க வேண்டுமென்பதே என்னுடைய கருத்து. ஏனெனில் நோயாளியைப் பற்றியும், அவர்களுடைய சூழ்நிலையைப் பற்றியும் பொது மருத்துவருக்கு நன்கு தெரியும். பொது மருத்துவர் வழங்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் தனித்துறைத் தேர்ச்சியாளர் சிகிச்சையளிக்காவிட்டால், குருட்டுத் தனமாகச் சிகிச்சை அளிப்பதாகவே தெரியும். அது நோயாளிக்கு நன்மை பயப்பதைவிட தீமையையே அதிகம் பயக்கும்.

இத்தகைய சூழ்நிலையில் தான் ஒருங்கிணைந்த மருத்துவம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

கனடாவைச் சேர்ந்த தலை சிறந்த மருத்துவ நிபுணர் சர். வில்லியம் ஆஸ்லர் கூறுகையில்''காச நோயின் விளைவு, நோயாளியின் நுரையீரல் களைவிட, , மூளையுடனே அதிகம் தொடர்பு உடையது'' என்கிறார்.

அதேபோல் ஹிபோகிராடஸ் கூறுகையில், ''ஒரு நோயாளி எத்தகைய நோயினால் பாதிக்கப் பட்டிருக்கின்றான் என்பதை விட, எத்தகைய நோயாளி நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதையே அறிய வேண்டும்'' எனக் கூறுகிறார். நோயை எதிர்த்துப் போராடும் உணர்வுள்ள நோயாளி, முற்றிலும் நம்பிக்கையிழந்து நிலை மையை ஏற்றுக்கொள்ளும் நோயாளியைவிட நன்கு வாழ்கிறார்கள் என்பது புற்றுநோய் ஆராய்ச்சியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

நோயைக் காண்பதற்கு முன் நோயாளியைக் காண்பதே சிறந்தது என்பதற்கான ஆதாரங்களை நன்கு புரிந்து கொள்வதே நல்ல மருத்துவருக்கு அழகாகும். அதாவது நோயாளியின் மீது தீவிர நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். மருத்துவர் நோயாளியை நெருக்கமாக உணர வேண்டும். நோயாளியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது அவர்களுடைய பயம், எதிர் பார்ப்புகள் குறித்துச் செயல்படும் போதும் நட்புணர்வோடு அணுக வேண்டும். விஞ்ஞானத் தின் பெயரால் சுவரைவிட கடினமான தடுப்பு களைத் தனக்கும் தன் நோயாளிகளுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளும் மருத்துவர்களை நான் அறிவேன். அவர்களது மனிதாபிமானமற்ற தன்மை நோயைக் குணமாக்குவதற்கு மாறாக அதை மேலும் மோசமாக்குகின்றது. நோயைவிட நோயாளியே முக்கியம் என்பதையே ஹிபோ கிராடஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

''நான் ஏற்றுக்கொள்ளும் மருத்துவக் கோட்பாடு என் திறமைக்கும் தீர்ப்புக்கும் ஏற்றபடி நோயாளிகளுக்கு நன்மை பயக்கும் - அவர் களுடைய காயத்திற்கோ வேறு தவறுக்கோ அல்ல''

நோயாளியின் ஒட்டுமொத்தத் தேவைகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு அவைகளை வழங்கவும் தேவையானவைகளைக் கருத்தில் கொள்ளும் வகையில் இந்த உறுதிமொழியின் பொருள் விசாலப்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவர்களைப் பற்றி மாமுனிவர் திரு வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்-

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

''மருத்துவர் நோயின் தன்மையைக் கண் டறிந்து, அதன் காரணங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் கண்டுபிடித்து, மருத்துவ இயலின் நியதிப்படி சரியாக மருத்துவம் செய்ய வேண்டும்.'

ஒரு மருத்துவரின் வாழ்நாள் முழுமைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய, மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே இருக்கவேண்டிய மனித நேய உறவின் முக்கியத்துவம் பற்றிய தத்துவமே இந்த வரிகளில் அடங்கியுள்ளது.

தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு ஒருங் கிணைந்த சிகிச்சையை வழங்கும் எண்ணத்துடன் கூடிய மருத்துவர்களையும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்குவதே மருத்துவக் கல்வி யின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். இதன் அடுத்தபடி, சமுதாயத்தின் தேவைகளில் அத்தகைய மருத்துவர்களின் பங் கினைப் புரிந்து கொள்வது தான் சமூகம் முழுமைக்கும் முழுமையான ஆரோக்கியமான வாழ்வினை அளிக்கக் கூடிய தகுதிபடைத்த மருத்துவர்களைப் படைப்பதே மருத்துவக் கல்வி யின் குறிக்கோளாக விளங்க வேண்டுமென நம்புகிறேன். சுகாதார பாதுகாப்பு என்பது குணப்படுத்தக் கூடியதாகவும், மேம்படுத்துவதாக வும், நோய் தடுப்பதாகவும், மறுவாழ்வு அளிப்ப தாகவும் இருக்க வேண்டும். சமூக அளவில் முதலில் நோயைக் கண்டறிந்து சிகிச்சையளித்து சாதாரண நோய்களைச் சமாளிக்கும் அடிப்படை மருத்துவரே இன்றைய நம் தேவையாகும். இன் றைய மருத்துவ மாணவர்கள் தனித்துறைத் திறமை பெற்று சமுதாயத்தின் பொது சுகாதாரம் பற்றிய மருத்துவத் தேவைகளைச் சரியாகப் புரிந்து கொள் ளாமல் தங்கள் படிப்பை முடித்துவிடுகின்றனர். சீனா, ஜப்பான், போன்ற நாடுகளில் மருத்து வர்கள் மேற்கத்திய மருத்துவக் கல்வியைப் பயின்று சிறந்த சமூக சுகாதார மருத்துவராகின்றனர்.

நமது நாட்டில், நமது பண்டைய மருத்துவ முறையில், நோயாளியின் உடல், மனம், உணர்வு களுக்குச் சிகிச்சை அளிக்கும் ஒருங்கிணைந்த முயற்சியை வலியுறுத்தும் பாணி உள்ளது. இந்தக் கோணத்தில் ஆராய்ச்சி செய்து, இது போன்ற ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தின் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொண்டு மாணவர் களுக்குப் போதிக்க வேண்டுமென மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டின் இன்றைய தேவை அடிப்படை சுகாதாரக் கவனிப்பு ஆகும். சுகாதாரக் கவனிப்பு மக்களின் - குறிப்பாகக் கிராமத்து மக்களின் - வீடுகளில் வழங்கப்பட வேண்டும். நெடுங்கால மாகத் தனித்தன்மை பெற்ற மருத்துவப் பாதுகாப்பு நகரங்களிலேயே, 20 சதவிகித மக்களுக்கு மட்டும் கிடைத்துவந்துள்ளது.

மருத்துவப் பாதுகாப்பைக் கிராமப்புற மக் களுக்கு வழங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. 2000-ஆம் ஆண்டில் அனைவருக்கும் நல வாழ்வு'' எனும் ஐ.நா. சபையின் அறிவிப்பு வெறும் மருத்துவக் குறிக்கோள் மட்டும் அல்ல. அது ஒரு சமூக இலட்சியம். அதில் ஏராளமான பொருளாதாரச் செய்திகள் அடங்கியுள்ளன.

அடிப்படை சுகாதார நிலையங்களை மேம் படுத்துவதன் மூலமே இக்குறிக்கோளை நாம் அடைய முடியும்.

நமது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்துடன் நாம் அடித்தளம் அமைத்துள்ளோம். குக்கிராமங்களில் வாழும் மக்களுக்குக் கூட சுகாதார மருத்துவ வசதிகளைச் செய்து வருகிறோம். சமீபத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் இலவச சுகாதார முகாம்களை நாம் நடத்தி உள்ளோம். 9,100 முகாம்களில் 51 இலட்சம் பயனாளிகளுக்குச் சிகிச்சை அளித்துள்ளோம். மருத்துவ சுகாதார வசதிகள் மக்களின் வீடு களுக்கே கொண்டு செல்லப்பட்டிருப்பதால், இந்தத் திட்டம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில், வளர்ந்து வரும் மக்கள் பெருக்கத்தால் சுகாதார மருத்துவத் தேவைகளும் ஏராளம். வசதி படைத்தோர் தனித் திறமை பெற்ற மருத்துவப் பாதுகாப்பினை நாடு முழு வதும் ஏற்படுத்திட உதவி புரிந்துள்ளனர். ஆனால் பெரும்பான்மையாக உள்ள ஏழைகள் அரசாங்க மருத்துவமனைகளையே நம்பியுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகளை மேம் படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துவருகிறது. அதே நேரத்தில் அரசின் முயற்சி களை நிறைவு செய்யும் வகையில் தனியார் துறையிலிருந்தும் உதவி பெறுவது அவசிய மாகிறது. புதிய மருத்துவமனைகள், புதிய நோய் கண்டுபிடிப்புக் கருவிகள் தனித்துறை திறமை வாய்ந்த ஒரு புதிய தலைமுறை, புதிய வழிகள், சொகுசுகள், பணம் தந்தால் தாராளமாகக் கிடைக் கின்றன. இவையனைத்திலும் ஒரு வியாபார நோக்கம் உள்ளது. ஆனாலும் தனியார் மருத்துவ மனையில் உள்ள ஒரு சில மருத்துவர்கள் சேவை உணர்வுடன் ஏழைகளுக்கு உதவுகின்றனர். தன்னல மற்ற சேவையால் மருத்துவர்கள் ஒளி விளக்காகப் பிரகாசித்து, எண்ணிக்கையில் குறைவாயிருந் தாலும், நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற மருத்துவப் பாதையை ஒளிமயமாக்கிக் கொண்டுள்ளனர். நீங்கள் உங்கள் வாழ்வில் முன்னேறும் பொழுது ஏழைகளுக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அனைவரது பாராட்டுதலையும் நன்றியினையும் நீங்கள் பெறுவீர்கள். எடுப்பதை விட கொடுப்பதில் (குறிப்பாக ஏழை மக்களின் உடல் நிலை பாதிக்கப்படும்போது) அதிக மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடு கிடை யாது. சாதி, சமய, பொருளாதார வேறுபாடு இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது.

எனவே உங்கள் அறிவையும் திறனையும் கொண்டு ஏழை மக்களின் ஆரோக்கியத்திற்கு உதவுங்கள் என உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நமது புனிதமான நூல்கள் எப் போதும் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதையே வலியுறுத்தி வந்துள்ளன. இதில் மருத்துவர்களே முன்னிலை வகிக்க வேண்டும்.

> முதல் பக்க அட்டையில்...
>
> 29.9.92 அன்று நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில்- மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் காட்சி.
>
> கடைசிப் பக்க அட்டையில்...
>
> 2.10.92 அன்று காந்தியடிகளாரின் பிறந்த நாளன்று, அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.

அனைத்து வசதிகளுடன் கூடிய வளாகம் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நெடுநாள் தேவையாக இருந்து வருகிறது. அதனு டைய அவசியத்தை வலியுறுத்தி துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் என்னுடன் விவாதித்தார். நகரின் மையத்தில் குறைந்த பட்சம் நிர்வாகப் பிரிவினையும் நூலகத்தையும் அமைக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பிரிவினையும் நூலகத்தையும் அமைக்க, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் நிலத்தை அரசு ஒதுக்கித் தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெகுவிரைவில் பல்கலைக் கழகத்தின் முழு வளாகமும் உருவாக இது முதல் படியாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பட்டதாரி களையும், பரிசு பெற்றவர்களையும் நான் பாராட்டு கிறேன். மருத்துவத்துறையில் இன்று இருப்பதைப் பெருமையாக நீங்கள் கருத வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் சேவையை எதிர்பார்க்கின்ற மக்களுக்குச் சுயநலமின்றி உங் களை நீங்கள் அர்ப்பணிப்பீர்கள் என்ற நம்பிக் கையில், உங்களது மருத்துவக் கல்விக்கான பெரும் பகுதி செலவினை ஏழைச் சமுதாயம் ஏற்றுள்ளது என்பதை நீங்கள் உணரவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு டாக்டர் ஆஃப் சைன்ஸ் (Doctor of Science) பட்டம் வழங்கியமைக்காக நான் தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா 29.9.1992 அன்று சென்னைப்பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு மேதகு ஆளுநரும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வேந்தருமான திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

பல்கலைக்கழக வேந்தர், இணை வேந்தர், துணை வேந்தர், ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் ஊர்வலமாகச் சென்று மேடையை அடைந்தனர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடையை அடைந்த போது அவருக்கு பாண்டு வாத்தியம் முழுங்க சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

துணை வேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் (Doctor of Science - Honoris Causa) வழங்குவதற்கான பட்டயத்தைப் (Citation) படித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், மக்கள் நல்வாழ்வுக்காகப் படைத்திட்ட கீழ்க்கண்ட சாதனைகளைப் பாராட்டி அவருக்கு இந்தக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

★ ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவை ஒழித்தல்.

★ 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்ற கொள்கை வழி மருத்துவ வசதிகளைப் பெருக்குதல்!

★ கிராமப்புற மக்களுக்கும் 'அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் ஆர்த்தரோஸ்கோப் 300 எம்.ஏ. எக்ஸ்ரே' கருவி போன்ற நவீன சாதனங்களின் மூலம் பயன் கிடைக்குமாறு செய்தல்.

★ மாநிலம் முழுவதும் பட்டிதொட்டியெங்கும் 9,100 மருத்துவ முகாம்கள் மூலம் 51 இலட்சம் மக்கள் பரிசோதிக்கப்பட்டு, சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்க, 'புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம்!'

★ மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் - வட்டார மருத்துவமனைகளில் தயார் நிலையில் உயிர் காக்கும் மருந்துகள்! மருத்துவமனைகளின் பராமரிப்பில் புதிய உத்வேகம்!

★ கிராமப்புறத் தாய்மார்களுக்குப் பயனளிக்கும் வகையில் குடும்ப நலத்திட்டங்களில் நடைமுறை சாத்தியமான அணுகுமுறை!

★ உடல் ஊனமுற்றோர் நலனுக்கெனத் தனியாக ஒரு இயக்ககம்!

★ சிறப்பினமாக 35 இலட்சம் ரூபாய் செலவில் உடல் ஊனமுற்றோருக்குச் சாதனங்கள்!

★ முதியோர் ஓய்வூதியம் மாதத்திற்கு 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக அதிகரிப்பு!

★ ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதில் பயன் பெறுவோர் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை!

★ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் 72 இலட்சம் சிறார்களுக்கு வழங்கப் படும் சத்துணவில் புரதச் சத்தை அதிகரிக்க 'சோயா மாவு'.

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்படி கருவுற்ற மகளிருக்கு மகப்பேறு காலத்தில் வழங்கப்படும் மாதாந்திர நிதி உதவி 50 ரூபாயிலிருந்து 75 ரூபாயாக அதிகரிப்பு!

★ பள்ளி மாணவ மாணவியருக்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம்!

பல்கலைக்கழக வேந்தர் மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை (Degree of Doctor of Science - Honoris Causa) வழங்கினார். சபையினரின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெறும் இரண்டாவது டாக்டர் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத் தொடர்ந்து பேராசிரியர் ஜே.எஸ். பஜாஜ் (மத்தியத் திட்டக்குழு உறுப்பினர் - நல்வாழ்வு) அவர்களுக்கு டாக்டர் பட்டத்தை (Honoris Causa) மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கினார். மருத்துவக் கல்வியை முடித்த 179 மருத்துவர்களுக்கு டாக்டர் பட்டங்களை மேதகு ஆளுநர் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தருமான திரு. சு.முத்துசாமி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரை ஆற்றினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

மத்திய அரசுக்கு முதல்வர் கோரிக்கை

மத்திய அரசை, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வினை நீக்கக் கோரியும், இரசாயன உரங்களின் விலைகளை மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை:

மத்திய அரசு கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி முதல் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கடுமையான அளவிற்கு உயர்த்தி உள்ளது. மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பெட்ரோலியப் பொருட்களின் விலையும் வெகுவாக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்டுச் சொன்னால், சென்ற ஆண்டு விலைகளோடு ஒப்பிடும் பொழுது இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிவித்த விலை உயர்வு - அதாவது

டீசலுக்கு : 3.43 சதவிகிதம் என்றும்;
பெட்ரோலுக்கு : 3.87 சதவிகிதம் என்றும்;
சமையல் எரிவாயுவுக்கு : 3.93 சதவிகிதம் என்ற அளவில் இருந்ததற்கே தமிழக அரசின் சார்பில் நான் நமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தேன். அந்த விலை உயர்வை ஏழை, எளிய மக்களால் தாங்க முடியாத சுமை என்றும் சுட்டிக் காட்டி இருந்தேன்.

அப்படிப்பட்ட விலை உயர்வே தாங்க முடியாத ஒன்று என்று கருதப்பட்ட நிலையில், தற்போது திடீரென மேலும் அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலை உயர்வு ஐந்து, ஆறு மடங்கு அதிகமான அளவிற்கு அதாவது:

டீசலுக்கு : 20.80 சதவிகிதமும்;
பெட்ரோலுக்கு : 7.04 சதவிகிதமும்;
சமையல் எரிவாயுவுக்கு : 21.84 சதவிகிதமும் என்கிற அளவில் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த விலை உயர்வின் காரணமாகத் தமிழகத்தில் ஒரு லிட்டர் டீசல் ரூ.6.91 என்றும், ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.18.38 என்றும், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று ரூ.86.58 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இது மிகக் கடுமையான பொருளாதாரச் சுமையைச் சாதாரண மக்களின் மீது சுமத்தியுள்ளது என்கிற கருத்து எங்கும் நிலவி வருகிறது.

குறிப்பாகச் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை மட்டும் ரூபாய் 15.52 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது நடுத்தர மக்களுக்கும், தாய்மார்களுக்கும் தாங்க முடியாத பெரிய சுமையாக இருப்பதாக உணரப்படுகிறது.

இந்த விலை உயர்வினால், சாதாரண மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து, ஏழை எளிய மற்றும் நடுத்தர வர்க்க மக்கள், பெரிதும் பாதிக்கப்படுகிற நிலை உருவாகி உள்ளது. குறிப்பாகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பாமர மக்களும், இந்த விலை ஏற்றத்தினால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். மேலும், தமிழ்நாட்டில் விவசாயிகள் கணிசமான அளவில், ஆயில் எஞ்சின் பம்ப்செட்டுகளைப் பயன்படுத்துவதால், இந்த விலை உயர்வு, அவர்களின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதிக்கும்.

இந்த விலை உயர்வின் விளைவாக, சமையல் எரிவாயு விலை, மிக அதிக அளவுக்கு உயர்த்தப்பட்டு இருப்பதால், கிராமப்பகுதிகள் முதல் நகரப் பகுதிகள் மற்றும் மாநகரப் பகுதிகள் வரை எல்லா இடங்களிலும், எல்லா மக்களுக்கும், இது செலவினத்தை அதிகரிக்கும். இந்த மிக அதிக அளவிலான திடீர் விலை உயர்வினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இந்த விலை உயர்வினால், பொதுவாக விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்குத் தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளும், பயன் அளிக்காமல் போய்விடுகிற சாத்தியக் கூறுகள் உள்ளன.

இவ்வாறு சாதாரண மக்களைப் பாதிக்கும் வகையில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையில் விவசாயப் பெருமக்களின் அடிப்படைத் தேவையான இரசாயன உரங்களின் விலைகளும் மூன்று, நான்கு மடங்கு உயர்ந்திடும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

• 1991-92-இல் கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம் 20,100 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. இதே ஆண்டில், ரூ.5,462 கோடி மதிப்புக்கு ஜவுளித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது.

24.8.1992 அன்று மத்திய அரசு உரக் கட்டுப்பாட்டுக் கொள்கையினை மாற்றி அமைத்து 7 வகையான தழைச்சத்து உரங்களை (Nitrogen) கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த தழைச்சத்து உரங்களின் விலை 10 சதவிகித அளவு குறைந்துள்ளது. இதற்காக மத்திய அரசிற்கு நம்முடைய பாராட்டையும், நன்றியையும், தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். இதர உரங்களான மணிச்சத்து (Phosphate) மற்றும் சாம்பல் சத்து (Potash) உரங்களைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கியது. தற்போது கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்குத் தாங்க முடியாத துயரினையும் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களிடம் அதிருப்தியையும் உருவாக்கி உள்ளது. குறிப்பாகக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட இரசாயன உரங்களின் விலை 90 சதவிகிதம் முதல் 260 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது.

குறிப்பிட்டுச் சொன்னால், 50 கிலோ எடையுள்ள D.A.P. (Diammonium Phosphate) உரம் ரூ.241.71-லிருந்து ரூ.454.60 ஆக உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள Super Phosphate ரூ.64.13-லிருந்து ரூ.155-க்கு உயர்ந்துள்ளது. 50 கிலோ எடையுள்ள Muriate of Potash ரூ. 87.85-லிருந்து ரூ.315.15-க்கு உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றமெல்லாம் தன்னிச்சையாக உர உற்பத்தியாளர்கள் நிர்ணயித்த விலை என்பதால், வெளிச்சந்தையில் இதற்கும் மேலும் இவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஏனெனில் அகில இந்திய அளவில் நமது மாநிலம்தான் அதிக அளவில் Potash உரங்களை உபயோகித்து வரும் மாநிலமாகும். இந்த விலையேற்றத்தால் தமிழ்நாடு மற்றவர்களைவிட அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரங்களுக்கான 496 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்ய வேண்டிய தமிழக விவசாயிகள் தற்போது இந்த விலை உயர்வின் காரணமாக ரூ.846 கோடி செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதாவது ஏறத்தாழ 350 கோடி ரூபாய் இரசாயன உரத்திற்காகக் கூடுதல் பளுவைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது வேதனைக்குரியதாக உள்ளது. இவ்வளவு பெரும் சுமையை ஏற்கெனவே துயருற்றுள்ள தமிழக வேளாண் பெருமக்களால் எப்படித் தாங்க முடியும் எனத் தமிழக அரசு பெரும் கவலை கொண்டுள்ளது. அவர்களது கவலையைப் போக்கத் தொடர்ந்து அவர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான் தமிழக மக்களின் எண்ணத்தை, ஏக்கத்தை, துன்பத்தை மத்திய அரசுக்கு ஒருமித்த குரலில் எடுத்துரைக்கிற வகையில் மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள பெட்ரோலியப் பொருட்களின் மிக அதிகமான விலை உயர்வை மறுபரிசீலனை செய்து, இவ்விலை உயர்வினை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்றும், இரசாயன உரங்களின் விலையை மீண்டும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இம்மாமன்றத்தின் மூலம் மத்திய அரசைத் தமிழக அரசின் சார்பிலும்; தமிழக மக்களின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன். •

சுத்தமே சுகம்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எனவேதான், மத்திய அரசு, எட்டாவது திட்டத்தில் ஊரக சுகாதாரத் திட்டத்திற்கு ரூ.674 கோடி ஒதுக்கியுள்ளது. இதனைக் கொண்டு 33.7 இலட்சம் கிராமப்புற வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்படும். கிராம மக்களில் 2-3 சதவிகிதத்தினர் இதனால் பயனடைவர். ஏழாவது திட்டத்தில் இதற்கு ரூ.180.63 கோடி ஒதுக்கப்பட்டது. வேறு பல திட்டங்களின் பலனாக 1985 முதல் 1992 வரை 22.60 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் (1992-93) மட்டும் ரூ.155.50 கோடி செலவில் 3.50 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்படும். இதனால் 17.50 இலட்சம் கிராமப்புற மக்கள் பயன் பெறுவர்.

மஞ்சள்

மங்கையர் மங்கலச் சின்னமாகக் கருதப்படுகின்ற மஞ்சள் ஒருபுறம் இருக்கட்டும். சமையலுக்குப பயன்படும் கறி மஞ்சளைப் பற்றிப் பார்ப்போமா? உலகிலேயே அதிக அளவில் மஞ்சளை உற்பத்தி செய்வது நம்நாடுதான். ஆண்டொன்றுக்கு 323 ஆயிரம் டன் மஞ்சள் இந்நாட்டில் விளைகிறது. இதில், பத்தாயிரம் டன் ஏற்றுமதியாகிறது. இதன்மூலம் கிடைக்கும் வருமானம் ரூ.14 கோடி. வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியால் கிடைக்கும் வருவாயில் 5.2 சதவிகிதம் மஞ்சள் மூலமே!

விரைவில்...

நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகள்!

சென்னை விழாவில் முதல்வர் அறிவிப்பு

சிறந்த நாடகக் குழுவினரான 'நாடகப் பிரியா' என்ற அமைப்பின் 3000-வது நாடக விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 26.9.92 அன்று கலந்து கொண்டு தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

சென்னையிலுள்ள 'மியூசிக் அகாடெமி' அரங்கில் நடைபெற்ற இந்த இனிய விழாவில் நடத்தப்பட்ட திரு. எஸ்.வி. சேகர் குழுவினரின் 'பெரிய தம்பி' என்ற நாடகத்தையும் கண்டு களித்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும் வந்திருந்த இவ்விழாவின் தொடக்கத்தில் திரு. எஸ்.வி. சேகர் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், 'நாடகப் பிரியா' குழுவின் தலைவர் திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் நன்றி கூறினார்.

இவ்விழாவில் - மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊனமுற்ற வாலிபர் மூவருக்கு சைக்கிள்களும், குடிசைப் பகுதிவாழ் மக்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கினார்.

திரைப்பட இயக்குநர்கள் திரு. கே. பாலச்சந்தர், திரு. கே. விசு, சபாக்களின் கூட்டமைப்புத் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி, தமிழ்நாடு இயல் இசை இசை நாடக மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

'நாடகப் பிரியா'வைச் சேர்ந்தோருக்குக் கேடயங்கள் பரிசளித்து - அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய தலைமை உரை விவரம் வருமாறு:

'தமிழ் நாடக உலகில், தனது சிறந்த நகைச்சுவை நாடகங்களின் மூலம், தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்து, அனைவருக்கும் அறிமுகமான நல்ல கலைஞர், எஸ்.வி. சேகர் அவர்கள், கடந்த 18 ஆண்டுகளாக 'நாடகப் பிரியா' என்னும் நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்தியதோடு, '3000-ஆவது முறையாகத் தன்னுடைய குழுவினரோடு நாடகங்களை நடத்தும், சாதனையைப் பாராட்டும் வகையில் நடத்தப்படும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், அவரது 'பெரிய தம்பி' என்னும் நாடகத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பினையும் அளித்துள்ளமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகழ் பெற்ற நாடகக் குழுக்கள்

தொன்றுதொட்டு, அந்தக் காலத்திலிருந்தே நாடகம், தமிழர்களின் வாழ்வில் உண்டு பண்ணியுள்ள ஊக்கம், அளவிட முடியாதது. திரைப்படக் கலை வளர்ச்சி அடைவதற்கு முன்னர், மேடை நாடகங்களை நடத்தியதில், புகழும், பெருமையும் கொண்ட பல நாடகக் குழுக்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்கள்,

மற்றும் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் போன்ற அறிஞர்கள், நாடகக் கலையின் வளர்ச் சிக்காக, அருந்தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பது, நம் அனைவருக்கும் தெரிந்த உண்மை யாகும். சமூக நாடகங்களும், புராண நாடகங் களும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், இந்தியச் சுதந் திரத்திற்கும் எழுச்சி ஊட்டிய வரலாறு நம்மிடம் உண்டு. அந்த வகையில், இன்றைய கால கட்டத் தில், நகைச்சுவை நாடகங்களைப் படைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு, அந்த முயற்சி யில் மகத்தான வெற்றி பெற்ற நாடகங்களை நடத்தி வருபவர் தான். எஸ்.வி. சேகர் அவர்கள். நகைச்சுவை நடிப்புக்குச் சில சிறப்புத் தகுதிகள் உண்டு. நடிகர் ஒருவர் தனது நடிப்பால் காண் போரை அழ வைப்பது எளிது. ஆனால், அதே நேரத்தில், தமது நடிப்பால் சிரிக்க வைப்பது என்பது, மிகமிகக் கடினம்.

இத்தகைய நகைச்சுவை பின்னணி கொண்ட துறையில் தற்போது நகைச்சுவை நாடகங்கள் என்றால், அது எஸ்.வி. சேகருடைய நாடகங்கள் தான் என்ற ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார் சகோதரர் எஸ்.வி. சேகர் அவர்கள்.

நாடகக் கலையினை வெற்றிகரமாக நடத்து வதில், சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நாடகங்கள் ஒவ்வொரு முறையும் நடத்தப்படும் போது, புதிதாக ஒரு நாடகம் அரங்கேற்றுவதைப் போன்ற நிலயை உண்டு பண்ணுவதற்கு, அசாத் தியத் திறமை வேண்டும். நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்கள், நாடக நடிகர்களின் நடிப்பின் நுணுக் கங்களை, நேரடியாக ரசித்து, தங்கள் கருத்துக் களையும் பாராட்டுகளையும் வெளிப்படுத்துகிற வாய்ப்பு, நாடகத்திற்கு மட்டுமே உண்டு. எனவே, நடிகர்கள் சரிவர நாடகக் கர்ட்சிக்கு ஏற்றாற் போல், உணர்ச்சிகளைக் காட்டத் தவறினால், நாடகம் வெற்றி அடைய இயலாது; நடிகர்கள் பாராட்டுப் பெற முடியாது. அதிலும் குறிப்பாக நகைச்சுவை மேடை நாடகங்களில், நடிகர்கள் நகைச்சுவை ததும்ப வசனங்களை உச்சரிக்கும் முறையிலும், குரலின் ஏற்ற இறக்கத்திலும், உடலின் அசைவிலும் தான், நகைச்சுவை உணர் வினை வெளிப்படுத்த முடியும்.

"A sense of timing and ability to deliver the punch lines effectively and the ability to create ripples of laughter through appropriate bodily gestures, are the important assets of a comedy artiste" என்று கூறுவார்கள்.

• நாம் அரசியல் துறையில் முன்னேறி மாற்றம் பெற்றிருக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் இன்னமும் பிற்போக்கான நிலையில்தான் இருக்கிறோம்; இந்த நிலை மாறவேண்டும்.

—தந்தை பெரியார்

சிறந்த நடிகர்

ஒரு நகைச்சுவை நடிகருக்கு உரித்தான அத் தனை அம்சங்களும் அமையப் பெற்ற சிறந்த நடிகர், நமது எஸ்.வி. சேகர் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

ரசிகர்களைச் சிரிக்க வைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு திகழும் எஸ்.வி. சேகர் ஒரு நாடகக் குழுவைத் தொடர்ந்து நடத்தி வருவ தோடு திரை உலகிலும் அறிமுகமாகி, இதுவரை 68 திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

இவரது நாடகங்கள், தொலைக்காட்சியிலும் தொடர் நாடகங்களாக ஒளிபரப்பப்பட்டு, மக்கள் மனதைக் கவர்ந்திருக்கின்றன என்பதெல்லாம், நமக்குத் தெரிந்த செய்திதான். ஆனால், இவரது நாடகக்குழு, பல்வேறு சமுதாயப் பணிகளையும் ஆற்றியிருக்கிறது என்று அறியும்போது, மிகுந்த மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்துகிறது.

அரிமா சங்கம், சுழற் சங்கம் போன்ற சமூக சேவை நிறுவனங்களின் நிதிக்காக, இவர்களது குழு நாடகங்களை நடத்தியோடு, மாணவர் களுக்குக் கல்வி உதவித் தொகை, சீருடை வழங் குதல் போன்ற அரும்பணிகளையும் ஆற்றியிருக் கிறது. இந்த வகையில் கண் தானம், இரத்த தானம், ஆகியவற்றைப் பற்றி, 'நம் குடும்பங்கள்' என்ற தொலைக்காட்சித் தொடர்நிகழ்ச்சி ஒன்றை யும், இவர்கள் படைத்திருக்கிறார்கள். இத்தனை பெருமைகளையும் பெற்ற எஸ்.வி. சேகருக்கும், அவரது நாடகக் குழுவைச் சேர்ந்த நடிக நடிகையர் களுக்கும், மற்றவர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களெல்லாம் விருப்பத்தோடு பங்கேற் றுள்ள இந்த நாடகத்துறை, இன்று எப்படி வளர்ந்து வருகிறது என்பதையும், நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய விஞ்ஞான முன் னேற்றக் காலத்தில், புதிய புதிய விளம்பரச் சாதனங்கள், தொலைக்காட்சி, வீடியோ என்று தோன்றிவிட்ட பிறகு, பலர் வீட்டைவிட்டு வெளியே செல்வதே இல்லை. பரபரப்பான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டுப்போன மக்களுக்கு, ஒரு சில மணி நேரம் நாடக அரங்கில், அமர்ந்து நாடகங்களைக் கண்டுகளிக்கிற வாய்ப்பு, வெகுவாகக் குறைந்துவிட்டது.

சிரஞ்சீவி நாடகங்கள்

அத்தகைய பின்னணியிலும், தொழில் நுட்ப யுகத்தின் வளர்ச்சியால் பாதிக்கப்படாமல், கால வெள்ளத்தால் அழிக்கப்படாமல், இன்னமும் ஒருசில நாடகக் குழுக்கள் தான் இயங்கி வரு கின்றன.

நாடகக் கலையினைத் தொடர்ந்து காத்து வருகின்றன. 'தொலைக்காட்சி, வீடியோ ஆகிய வற்றினால், திரைப்படத் தொழிலே பாதிக்கப் பட்டிருக்கும் போது, நாடகத்தின் நிலை என்ன வாகும் என்கிற கேள்விக்குறி எழுகிறது. இத்

தகைய காலகட்டத்தில் சிறந்த நாடகங்கள் என் றுமே சிரஞ்சீவி நாடகங்கள் தான், என்பதை மெய்ப்பிக்கும் வகையில், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் புராண நாடகங் களையும், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் நகைச்சுவை நாடகங்களையும், வெற்றிகரமாக நடத்தி, நாடகத்தின் தனித்தன்மையை நிலை நாட்டியுள்ளனர்.

அதற்காக நாம் அவர்களுக்கு, நமது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள் ளோம். நாடகமென்பது தொன்றுதொட்டு, தலை முறை தலைமுறையாக, நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற, ஒரு அரிய கலையாகும். இதனை நாம் அழிய விடக்கூடாது.

இன்றைய நாளில், சினிமா, தொலைக்காட்சி என்ற தொழிலுக்குச் செல்லவே அனைவரும் விரும்பும் காலகட்டத்தில், நாடகக் கலையில் முழுமையான ஈடுபாட்டைக் காட்டி, அக்கலை நசிந்துவிடாமல் காக்கின்ற முயற்சியில், ஈடு பட்டுள்ளவர்களை, பாராட்டுவதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து உதவ வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[illegible] சலுகைக் கட்டணம்

எஸ்.வி. சேகர் இங்கே பேசும்போது 2 கோரிக்கைகளைச் சொன்னார். 'நாடகக் குழு ரயிலில் பயணம் செய்யும்போது சலுகைக் கட்டணம் வழங்கப்படுவது போல, அரசாங்கப் பஸ்களில் பயணம் செய்யச் சலுகைக் கட்டணம் கொடுக்கவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

இது மிகவும் நியாயமான கோரிக்கை, அதிகாரி களுடன் கலந்துபேசி பரிசீலித்து விரைவில் நல்ல முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்த கோரிக்கை சென்னை கலைவாணர் அரங்கில் நாடகங்கள் நடத்த சலுகைக் கட்டணம் வழங்க வேண்டும் என்பது.

நாடகக் கலை அழிந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவள் நான். அந்த வகையில் இதற்கு விரைவில் ஆவன செய்யப் படும். இன்னும் சொல்லப் போனால் உடனடி யாகச் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள் கிறேன்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு...

பொதுவாக நான் அரசியலுக்கு வந்தபின், கடந்த 12 ஆண்டுகளாக, அதிலும் குறிப்பாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, நான் ஆற்றிக் கொண்டிருக்கிற பணியில் உள்ள பளு வின் காரணமாக, எந்தவொரு திரைப்படத்தையும் முழுமையாகக் கண்டு களித்ததில்லை. பார்ப்ப தற்கு நேரமும் இல்லை. ஆனால், சில நாட்களுக்கு முன்பு, திரு. விசு அவர்கள் [illegible] ரகசியம்' என்ற ஒரு [illegible] தொலைக்காட்சியில் பார்க்கிற [illegible] கிடைத்தது. அதில் நகைச்சுவை நயத்தோடு திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் மிகச் சிறப்பாக [illegible] திருக்கிறார். அவருடைய [illegible] குழந்தைத் தனமான நடிப்பையும், [illegible] யும், நான் மிகவும் ரசித்தேன். இன்று நான் கடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு 'பெரிய தம்பி' என்

> ◉ மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமையாக இருக்கவேண்டும்.
>
> —டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

னும் அவரது நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

இந்த விழாவில் தமிழகத்தின் தலை சிறந்த திரைப்பட இயக்குநர், திரு. கே. பாலசந்தர், அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து இருக்கிறார்கள்.

திரைப்படத் துறையின் ஜாம்பவானாகத் திகழும் அவர், சமூக நாடகங்களில் மறுமலர்ச்சிக்கு, ஒரு கால கட்டத்தில் வித்திட்டவர் என்றால், அது மிகையாகாது. அவரது அற்புதமான நாடகங்கள், வெற்றிகரமான திரைப்படங்களாக, வெள்ளித் திரையில் மிளிர்ந்ததற்குக் காரணம், அவர் இந்த இரண்டு துறைகளிலும், தனக்கென்று ஒரு தனி இடத்தைப்பெற்றவர் என்பதால்தான். அவரது மிகச் சிறந்த திரைப்படங்களில் ஒன்றான 'மேஜர் சந்திரகாந்த்'-தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். அதன்பின் அவரது அடுத்த திரைப்படங்களான 'பாமா விஜயம்' மற்றும் 'வெள்ளி விழா' ஆகிய படங்களிலும், என்னை நடிக்க அவர் அன்புடன் அழைத்தார்.

பாராட்டுவது என் கடமை

ஆனால், அப்பொழுது நான் நிறைய திரைப்படங்களில் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டிருந்த காரணத்தால், அவரது அழைப்பினை ஏற்று, அந்தப் படங்களில் நடிக்க இயலவில்லை. திரைப்படத் துறையில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தை, தன் சிந்தனையாலும், உழைப்பாலும், திறமையாலும், நிரந்தரமாகப் பிடித்திருக்கும் திரு. கே. பாலசந்தர், அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டுவதை, எனது கடமையாகக் கருதுகிறேன். திரையுலகிலும், நாடக உலகிலும் சேர்ந்தாற்போல் சாதனை படைத்திருக்கும் திரு. எஸ்.வி. சேகர் அவர்களை வாழ்த்திப் பேசிய, பிரபல திரைப்பட இயக்குநர் திரு. விசு அவர்கள், நாடக உலகத்திலே மிகுந்த அனுபவம் பெற்றவர்.

திரையுலகில் தனக்கென ஒரு பாணியைக் கையாண்டு தனி முத்திரையைப் பதித்து வருபவர்.

'In Tamil Nadu, the very name Visu, has become a byword today, for good, clean, wholesome entertainment, which can be enjoyed by the entire family'.

அவர் இயக்கி வெளிவந்துள்ள 'திருமதி ஒரு வெகுமதி' என்ற திரைப்படத்தை நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன். எனக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுது, இவரது திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தேன். அந்த நல்ல சந்தர்ப்பம் மிக விரைவிலேயே வந்தது. தமிழக அரசு தயாரித்துவரும், மதுவிலக்குப் பிரச்சாரப் படமான, 'நீங்க நல்ல இருக்கணும்' என்ற திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பை அவருக்கு அளித்தேன். அவரது திறமையையும், கைவண்ணத்தையும், நீங்கள் அந்தத் திரைப்படத்தில் நிச்சயமாகக் காணலாம்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், வயலின் என்றாலே குன்னக்குடி என்று கூறும் அளவிற்கு, இசை உலகில் உயர்ந்து நின்ற போதிலும், இன்றும் தன் கலைப் பணியினைப் பக்தியுடனும், இதய சுத்தியுடனும், தொடர்ந்து செய்து வருகிறார். அவர் அறிமுகம் தேவையில்லாதவர்; அனைவருக்கும் தெரிந்த இசை வல்லுநர்.

சென்னை சபாக்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், தன்னுடைய கலை ஆர்வத்தாலும், கலைஞர்களுக்கு வழங்குகிற ஆதரவாலும் நாடகக் கலையையும், நாடகக் கலைஞர்களையும் பாதுகாத்து வருகிறார். அந்த வகையில் அவர் தமது பாராட்டுக்கு மட்டுமல்ல, நமது அன்பிற்கும் பாத்திரமானவர் ஆகிறார்.

பெருமைக்குரியவர்களால் இன்று பெரிதும் பாராட்டப்பெற்ற திரு. எஸ்.வி. சேகர் அவர்கள், இந்தப் பாராட்டுக்களுக்கு முற்றிலும் தகுதி உடையவர்.

மனதாரப் பாராட்டுகிறேன்

பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, இன்று நம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று ஒரு சாதனையாளராகத் திகழும் எஸ்.வி. சேகர் அவர்களுடைய தந்தையும், 'நாடகப்பிரியா' குழுவின் தலைவருமான திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்கள், தனது மகனின் இந்த மாபெரும் வெற்றிக்கு மூல காரணமானவர் என்பது, ஒரு சிலருக்கே தெரியும். தன் மகனைக் கலைச் சேவைக்காக அர்ப்பணித்து, அதில் முழு வெற்றி அடைவதற்குத் தேவையான, ஊக்கத்தையும் உதவிகளையும் வழங்கி, உறுதுணையாக இருந்து, தன் மகன் இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு மூல காரணமாகத் திகழ்ந்து, இன்று நம்மிடையே வீற்றிருக்கும் திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

3000 தடவை தங்களது நாடகங்களை நடத்தி மாபெரும் சாதனை புரிந்துள்ள எஸ்.வி. சேகர் அவர்களுக்கும், அவரது தந்தையார் அவர்களுக்கும் 'நாடகப் பிரியா' குழுவில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.வி. சேகரை நான் கேட்டுக் கொள்கிறேன் கடைசி வரை நாடகக் கலையை மறந்துவிடாதீர்கள். இதை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

உலக அளவில் தரமான நாடகங்களைத் தயாரித்து, நடத்திப் பெயரும் புகழும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர்புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார். ●

தஞ்சாவூர்க்கால்வாய்கள் நவீனப்படுத்தப்படும்!

காவல் துறையினர் உடுப்புப் பராமரிப்பு - உணவுக் கட்டண விகிதங்கள் உயர்த்தப்படுகின்றன!

கடன் தொகையைக் கட்டிவிடும் விவசாயிகளுக்கு போனஸ்!

சவ்வரிசி நிறுவன இடர்ப்பாடு களையப்படவிருக்கிறது!

சட்டப்பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் வழங்கிய துணை மதிப்பீடு முழு விவரம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-93-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய்161.29 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 131.83 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 29.46 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், உடனடி செலவு செய்ய வேண்டிய சில இனங்களுக்கு எதிர்பாராத செலவு நிதியிலிருந்து தொகை அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று எதிர்பாராச் செலவு நிதியில் ஈடு செய்வதற்கே முக்கியமாக இத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

காவல்துறையின் சில வகைப் பணியாளர்களுக்கு உடுப்புப் பராமரிப்புப் படிகள் (Kit maintenance allowance), உணவுக் கட்டணங்கள் ஆகியவற்றிற்கான கட்டண வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது. இவற்றிற்கான செலவு ரூபாய் 1.27 கோடி, முதற்கண் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை 30.9.1992-க்கு முன்னர் செலுத்திவிடும் விவசாயிகளுக்கு, காலங்கடந்த வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றுக்குச் சமமான தொகையை 'போனஸ்' ஆக அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் 69 கோடியாகும். முதற்கண் செலவு செய்ய எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 40 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் மொத்தத் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் ரூபாய் 2.19 கோடி செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராத செலவு நிதியிலிருந்து முன்பணம் வழங்குவதன் வாயிலாக, இச்செலவு முதற்கண் செய்யப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில், இவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திட்டங்கள், மற்றும் திட்டப் பணிகள் அனைத்திலும் ஏழை எளியோர் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோரின் நலனுக்கே இந்த அரசு எப்போதும் தலையாய முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. ஏழை எளியோருக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இதற்கிணங்க, கடந்த பொங்கல் திருநாளன்று வேட்டி, சேலை வழங்கப்பட்டது. மேலும், வருகின்ற பொங்கல் திருநாளன்று இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, தற்போது கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற பொங்கல் திருநாளையொட்டி ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும்,

நகர்ப் பகுதிகளில் வாழும் ஏழை எளியோருக்கும் இலவசமாக 60 இலட்சம் புடவைகளும், 60 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்படும். இதற் கென்று, துணை மதிப்பீட்டில், ரூபாய் 45 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த அரசு, உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூபாய் 41.85 கோடி செலவில் அணைப் பகுதி பாதுகாப்புச் சீரமைப்புப் பணிகளை மேற் கொண்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர் பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி முன்பணம் வழங்கப்பட்டு, துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய விடுதலைக்காகப் போராடியோரின் தியாகங்களைப் பாராட்டும் வகையில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகையை அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 மாநில அரசு உதவித் தொகையாக வழங்கி வந்தது. இந்த உதவித் தொகை தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசிடம் உதவித் தொகை பெறும் பலதரப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மாதம் மொத்தமாக ரூபாய் 1000 உதவித் தொகையாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. உயிர்நீத்த விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினர் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்தொகை மாதம் ஒன் றுக்கு ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களின் போது, சுதந்திரப் போராட்ட வீரர்கள் பொன்னாடை களும் நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர். முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.43 கோடி அள விற்கு முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகைகள், துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளன.

சேலத்திலுள்ள சவ்வரிசி நிறுவனத்தின் (Sago Serve) கடுமையான நிதி இடர்ப்பாட்டைக் களை வதற்காக, 1991-92-ஆம் ஆண்டிற்கு இழப்பீட்டு உதவித்தொகை என்ற வகையில், ரூபாய் 50 இலட்சம் அனுமதித்துள்ளது. இது துணை மதிப் பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

1993 ஜனவரித் திங்களில், 10-ஆவது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டுப் போட்டியை குறித்த நேரத்தில் நடத்தும் பொருட்டு சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் புதிய பன்னோக்கு விளையாட்டு அரங்கமொன்றைக் கட்டுவதற்கு அரசு ரூபாய் 7 கோடி அனுமதித்துள்ளது. இதற்கு எதிர்பாராத செலவு நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டுச் செலவிடப்பட்டுள்ளது. இத் தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், தஞ்சாவூர் கால்வாய்களை நவீனப்படுத்தல் என்ற திட்டத்தின் கீழ், கால்வாய் களுக்குப் புதிய கரைகள் அமைத்தல், வடிகால் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்காக ரூபாய் 4.55 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித் துள்ளது. தொடக்கச் செலவுகளுக்காக, எதிர் பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப் பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 2.81 கோடி செலவில் சிறைகளை நவீனப்படுத்துவதற் கான பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் 80 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இது துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் திரைப்பட நகரை உரு வாக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித் துள்ளது. இதற்கு மொத்தச் செலவு ரூபாய் 14.93 கோடியாகும். இதற்கான முதற்கட்டப் பணியை மேற்கொள்ள ரூபாய் 3.93 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர் பாராத செலவு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது துணை மதிப் பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள் ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்களைக் குறித்தும் உரிய முழு விவரங்களும் பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்கு மாறு வேண்டுகிறேன். வணக்கம்.

- தமிழ்நாடு சட்டப் பேரவையில் 21.9.92 அன்று, 1992-93-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளை வைத்து ஆற்றிய உரை. •

இலவச சேலை வேட்டி வழங்கும் திட்டம்:

சட்டமன்றத்தில் முதல்வர் அறிவிப்பு

23.9.1992 அன்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிச்சாமி அவர்களும் துணை மானியக் கோரிக் கையின் மீது உரையாற்றும் பொழுது, இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவை குறித்துச் சரியான விவரங்களை இம்மாமன்றத்திற் குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்கள் அரசு சென்ற ஆண்டு தமிழகத்தி லுள்ள ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங் களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை, எளியோருக்கும் இலவசமாக வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத் தியது. இத்திட்டத்தின் கீழ் 60 இலட்சம் வேட்டி களும் 60 இலட்சம் சேலைகளும் வழங்கத் திட்ட மிடப்பட்டது.

வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் சேலை களில் இது வரை அதாவது 23.9.1992 வரை 59,99,870 சேலைகள் வழங்கப்பட்டு விட்டன. வேட்டிகளைப் பொருத்தமட்டில் வழங்கப்பட வேண்டிய 60 இலட்சம் வேட்டிகளில் இதுவரை 57,69,234 வேட்டிகள் வழங்கப்பட்டு விட்டன.

இனி 130 சேலைகளும் 2,30,766 வேட்டி களும் மட்டுமே வழங்க வேண்டியுள்ளது. மீத முள்ள இந்த வேட்டி, சேலைகள் அனைத்தும் Co-optex மூலமாகப் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் முழுமையாகக் கொடுத்து முடிக்கப் படும்.

ஒரு சில மாவட்டங்களிலுள்ள ஒரு சில தாலுக்காக்களில் வேட்டிகள் இன்னும் பெறப்பட வேண்டியிருப்பதால், ஏற்கெனவே கிடைக்கப் பெற்ற சேலைகளைப் பயனாளிகளுக்கு, வேட்டி களையும், சேலைகளையும் சேர்த்து வழங்கலாம் என்ற அடிப்படையில் வழங்கப்படாமல் உள்ளன. கிடைக்கப்பெற்ற சேலைகளை உடனடியாகப் பயனாளிகளுக்கு வழங்கும்படி ஆணையிட்டுள் ளேன். இன்னும் வழங்கப்பட வேண்டிய 2,30,766 வேட்டிகளும் 130 சேலைகளும் விரை வில் அக்டோபர் 15-ஆம் தேக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு வேட்டி களும், சேலைகளும் வழங்குவது ஒரு மிகப் பெரிய திட்டம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இதனைக் குறிப்பிட்ட காலத் திற்குள் செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை யும் நீங்கள் அறிவீர்கள்.

இத்திட்டத்தில் வழங்க வேண்டிய ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி சேலைகளில் இதுவரை ஒரு கோடியே 17 இலட்சத்து 69 ஆயிரத்து 104 வேட்டி, சேலைகள் கொடுத்து முடித்துள்ளோம் என்பதே ஒரு சாதனை ஆகும். இந்நிலையில் இத்திட்டம் சரிவர செயல்படுத்தப் படவில்லை என்று கூறிய கருத்துக்கள் தவறான தாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டிற்கு அதாவது 1992-93-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டிகளும், சேலைகளும் Co-optex நிறுவனம் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்திலுள்ள ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகைகள் செய்யப் பட்டுள்ளன. என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

- 24.9.92 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு.

• வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும்; உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய்தீர்க்கும் மருந்தளிக்கவேண்டும்.

—அறிஞர் அண்ணா

பூச்சிக்கொல்லி எதிர்ப்புத்திறனை அறிய புதிய கருவி

பயிர்ப்பாதுகாப்பில், பூச்சிக் கொல்லிகளை முழுவதுமாக ஒதுக்கி விட முடியாது. இவைகளைச் சரி யான அளவில் நாம் பயன்படுத் தாமல் இருக்கும்பொழுது, பூச்சிகள் அத்தகைய பூச்சிக்கொல்லிகளை எதிர்க்கும் திறனைப்பெற்று விடு கின்றன. இத்திறன் பன்மடங்கு பெருகி பூச்சிக்கொல்லிகளைத் திறனற்றதாக ஆக்கிவிடுகின்றன. பயிர்ப்பாதுகாப்புக்குப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்து வதற்கு முன்பாக வயலில் தென் படும் பூச்சிகள் எதிர்ப்புத்திறன் பெற்றுள்ளனவா? என்பதை அறிந்து கொள்வதன் மூலம், பயன்தராத பூச்சிக்கொல்லிகளைத் தவிர்க்கவும் முடியும்.

பூச்சிகளுக்குப் பூச்சி எதிர்ப்புத் திறன் உள்ளதா என்பதை அறிய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறையின ரால் ஒரு எளிதாக எங்கும் எடுத்துச் செல்ல வசதியான 'பாட்டர்ஸ்' என்னும் கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இக்கருவியை மின்சாரம் கொண்டும் அல்லது மனித சக்தி மூலமாகவும் இயக்கலாம்.

இக்கருவியில் சோதனை செய் யப்படவேண்டிய பூச்சிகள் அல்லது அவற்றின் புழுப்பருவங்கள் அல்லது குஞ்சுகள் இவற்றை வைத்து எதிர்ப் புத்திறனை அறியலாம். வயலி லிருந்து கொணர்ந்த புழுக்களையும், நாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி களையும் இச்சோதனைக்கு உட்படுத்த வேண்டும். நமக்கு எந்த அளவுக்குப் பூச்சிகள் கொல்லப் படவேண் டுமோ அதற்கு ஈடாகப் பூச்சிக் கொல்லியின் அளவு பயன்படுத்தப் படவேண்டும். பூச்சிகளின் இறப்பு விகிதத்தையும் கணக்கிட வேண்டும். பூச்சிகளின் இறப்பு விகிதம் குறை வாக இருந்தால் அவை எதிர்ப்புத் திறன் பெற்றுள்ளது என்பதை அறியலாம். மேலும் நம் வயலில் காணும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த எந்த அளவுக்குப் பூச்சிமருந்து உப யோகப்படுத்தவேண்டும் என்பதை யும் அறிந்து கொள்ளலாம் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகம் அறிவிக்கின்றது.

—தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக்கழகம்

லாரி உரிமையாளர்கள் - ஓட்டுநர்கள் - ஏஜெண்ட் - ஆகியோரின் முக்கிய கவனத்திற்கு

சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங் களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக எடையுள்ள சுமை ஏற்றிச் செல்வது மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 113-இன் படி குற்றமாகும். மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 114-இன் படி இவ்வாகனங்களைச்சோதனை செய் வதற்கு அதிகாரமுள்ள அலுவலர் களால் சோதனையின்போது அதிக எடை ஏற்றப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டால் அனுமதிக்கப்பட்ட தைவிட பாரம் அதிகமுள்ள சரக் கினை ஓட்டுநரின் சொந்தப் பொறுப் பில் இறக்கி வைக்கச் சொல்லவும் அதுவரைக்கும் சம்பந்தப்பட்ட வாகனத்தை அவ்விடத்திலிருந்து மேற்கொண்டு செல்ல அனுமதிக் காமல் இருக்கவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

வாகனங்களில் அனுமதிக்கப் பட்ட அளவைவிட அதிக பாரம் ஏற்றிச் செல்வது வாகனத்திற்கும், சாலையைப் பயன்படுத்துவோருக் கும் மட்டும் ஆபத்து மட்டும் இன்றி இத்தகைய வாகனங்களினால் சுற்றுப் புறச் சூழல் கேடும் உண்டாகிறது என்றும் இது குறித்துக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கு முதற் படியாகச் சரக்கு வாகனங்களை இயக்குபவர்களை அழைத்து இது குறித்து விளக்கி மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் ஆகிய வற்றை மீறுவோர் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்குமாறு மத்திய தரைப் போக்குவரத்து அமைச்சகத் தால் (போக்குவரத்துப் பிரிவு) கோரப்பட்டுள்ளது.

இதன்படி 21.8.92 அன்று தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர்களுக்குப் போக்குவரத்து ஆணையர், சென்னை-5 அவர் களால் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் இது குறித்து நடத் தப்பட்ட கூட்டத்தில் தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டது. லாரி உரிமை யாளர் சங்கத்தின் பிரதிநிதிகளும், சரக்குவாகனங்களில் அனுமதிக்கப் பட்ட எடைக்குமேல் பாரம் ஏற்றுவ தில்லை என உறுதி அளித்தனர்.

எனவே சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்களில் (Goods Carriages) அனுமதிக்கப்பட்ட எடைக்கு மேல் சரக்கு ஏற்றிச் செல்லக் கூடாதென இதன் மூலம் வாகன உரிமையாளர் களும், புக்கிங் ஏஜெண்டுகளும், ஓட்டுநர்களும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். தவறினால் தணிக்கை அதிகாரி ஓட்டுநரை அவருடைய பொறுப்பில் அதிகமாக ஏற்றப்பட்ட சரக்கை இறக்கி வைக்கும்படி எழுத்து மூலமாக உத்தரவு இடுவார். மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988-இன் பிரிவு 194-இன் படி முதன்முறையாகக் கண்டுபிடிக்கப் பட்ட குற்றத்திற்கு ரூ.2,000 வரை அபராதமும், இரண்டாவது மற்றும் அதற்கடுத்த குற்றங்களுக்கு ரூ.5,000 வரை அபராதமும் வசூலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படு கிறது. மேலும் மோட்டார் வாகனச் சட்டம் 1988- இன் பிரிவு 114-இன் படி, அதிக எடை ஏற்றிய மைக்காக வாகனத்தைச் சோதனை யிட உரிய அதிகாரமுள்ள அலு வலர் வாகனத்தை நிறுத்தச் சொல்லும் போது நிற்காமல் ஓட்டுநர் ஓட்டிச் சென்றாலோ, அல்லது சம்பந்தப் பட்ட அலுவலர் வாகனத்தின் எடை யைச் சோதிக்குமுன் ஏற்றப்பட்ட சரக்கையோ அல்லது சரக்கின் பகுதியை அகற்றினாலோ அல்லது அகற்ற முற்பட்டாலோ மோட்டார் வாகனச் சட்டம் 1988- இன் பிரிவு 194 (2)-இன் படி ரூ.3,000 வரை அபராதமாக வசூலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது 15.9.92 முதல் அமலுக்கு வரும்.

கடமை தவறாத காவலர் குடும்பத்தினருக்கு முதல்வர் நிதியுதவி

கடந்த 6.9.92 அன்று சென்னையில் நடந்த ஒரு சம்பவத்தில் கள்ளச்சாராயம் கடத்தியதாகச் சந்தேகப்பட்ட ஒரு லாரியை மடக்கிச் சோதனையிடச் சென்ற மயிலாப்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் திரு. என்.ஆர். கோபால் மரணமடைந்தார். உடனடியாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயல்லிதா அவர்கள் அவரது கடமை உணர்வையும், வீரச் செயலையும் பாராட்டும் வண்ணம் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயை உதவித் தொகையாக வழங்கவேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

மதுரை, சமயநல்லூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. பி. கிருஷ்ணசாமி அவர்கள் இலங்கைத் தீவிரவாதி ஒருவரால் சுடப்பட்டு மரணமடைந்தார். உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவரது கடமை உணர்வினையும், வீரச் செயலையும் பாராட்டும் வகையில் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மறைந்த உதவி ஆய்வாளர் திரு. பி. கிருஷ்ணசாமியின் மனைவி திருமதி பி.கே. மீனா மற்றும் குடும்பத்தினரையும், மறைந்த காவலர் திரு. என்.ஆர். கோபாலின் மனைவி திருமதி சூரிய குமாரி மற்றும் அவரது குடும்பத்தினரையும், 23.9.92 அன்று தலைமைச் செயலகத்திற்கு அழைத்து வரச் செய்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி, இருவரது குடும்பத்தினருக்கும் உதவித் தொகையாகத் தலா ரூபாய் ஒரு இலட்சம் வழங்கினார்கள்.

பெரியார் மாவட்டம்:

சிறுசேமிப்புத் திட்டப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில் சிறுசேமிப்புப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிறுசேமிப்புத் திட்டத்தில் இம்மாவட்டம் 1987-88-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.10 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.12,85 கோடியில் நிகர வசூலாக ரூ.3.56 கோடி செய்து, 35.6 சதவிகித சாதனை எய்தியது. 1988-89-ஆம் நிதியாண்டில், அரசின் இலக்கான ரூ.12 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.16,88 கோடியில் நிகர வசூலாக ரூ.6,49 கோடி செய்து, 54.1 சதவிகித சாதனை எய்தியது. 1989-90-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.16 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.24.49 கோடியில், நிகர வசூலாக ரூ.12.12 கோடி செய்து, 75.1 சதவிகித சாதனை எய்தியது. 1990-91-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.20 கோடியில், மொத்த வசூலான ரூ.32.00 கோடிக்கு, நிகர வசூலாக ரூ.17.41 கோடி செய்து, 87 சதவிகித சாதனை எய்துள்ளது. 1991-92-ஆம் நிதியாண்டில் அரசின் இலக்கான ரூ.24 கோடிக்கு, மொத்த வசூலான ரூ.55.50 கோடியில், நிகர வசூலாக ரூ.24.33 கோடி செய்து 101 சதவிகித் சாதனை எய்தியுள்ளது. 1992-93-ஆம் நிதியாண்டில் 1992 ஜூலை திங்கள் முடிய அரசின் இலக்கான ரூ.23 கோடிக்கு மொத்த வசூலாக ரூ.15.87 கோடியில், நிகர வசூலாக ரூ.3.55 கோடி செய்து, 15.43 சதவிகித சாதனை எய்தியுள்ளது.

தமிழக அரசின் ஊக்குவிப்புத் திட்டங்கள் காரணமாகவும், வட்டி மற்றும் முதிர்வுத் தொகைகள் கூட்டப்பட்டதன் காரணமாகவும், இம்மாவட்ட மக்கள் சிறுசேமிப்புத் திட்டத்தினை ஏற்றுள்ளனர். அதன் காரணமாக மொத்த வசூலும் நிகர வசூலும் அதிகரித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் 802 பேர் நிலை முகவர்களாகவும், 691 பெண்கள் மகளிர் முகவர்களாகவும், 10 பொது வருங்கால வைப்பு நிதி முகவர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்கள் இத்திட்டத்தில் நல்ல முறையில் பணியாற்றி வருவதால், சிறுசேமிப்பு வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் அதிக அளவில் முகவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, தொடர்வைப்புக் கணக்குகள் புதிதாக ஆரம்பிக்கத் தீவிர இயக்கம் துவக்கப்பட்டு, நடப்பாண்டில் 60,000 கணக்குகள் துவக்கப்படவுள்ளன. ஜூலை 1992 திங்கள் முடிய 16,029 கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்வு செய்து அவ்வூராட்சியின் அனைத்துக் குடும்பங்களையும் இத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணியும் முடிவுறும் நிலையிலுள்ளது.

1981-82-ஆம் ஆண்டுக்கான சிறுசேமிப்பு மாவட்ட ஊக்குவிப்புத் தொகையிலிருந்து தமிழக விழியிழந்தோர் சங்கத்திற்குப் பெருந்துறையில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.75,000 வழங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டுக்கான மாவட்ட ஊக்குவிப்புத் தொகையிலிருந்து ஈரோடு நகராட்சிப் பகுதியில் சாலைகள் அபிவிருத்திப் பணிக்கு ரூ.4.55 இலட்சமும், பெருந்துறை அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பெண்கள் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு ரூபாய் ஒரு இலட்சமும், சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்றங்கரையில் படித்துறை கட்டும் பணிக்கு ரூ.1.50 இலட்சமும், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கு ரூ.5.30 இலட்சமும், சிறுசேமிப்பு விளம்பரப் பலகைகள் அமைக்கும் பணிக்கு ரூ.2 இலட்சமும், மற்றும் சிறுசேமிப்பு அதிக சாதனைக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கியமைக்காக ரூ.2 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் 11,933 முதலீட்டாளர்களுக்கு ரூ.12,00,000 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் 2,750 முதலீட்டாளர்களுக்கு ரூ.3,52,000 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பெரியார் மாவட்டத்தில் சிறுசேமிப்புத் திட்டப் பணிகள் சிறப்போடு நடைபெற்று வருகின்றன.

- எல். நாகராசன்
மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

அஸ்லாம் மாநில முதல்வர் திரு. ஹிதேஸ்வர் சைக்கியாவும் அவரது துணைவியார் திருமதி பிரியா சைக்கியாவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா 'அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தனர் (16.9.'92).

வளரும் வேளாண்மை:



மானாவாரிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

★ விதை முலாம் பூசுதல் பூச்சித் தாக்குதலைக் குறைக்கும். அதாவது சோளத்தில் குளோரிபைரிபாஸ் அல்லது பாசலோன் அல்லது மோனோ குரோட்டோஸ் இவற்றில் ஏதாவதொன்றை நான்கு மி.லிட்டர் மருந்தை இருபது மி.லிட்டர் நீருடன் கலந்து அத்துடன் அரை கிராம் கோந்து (பிசின்) மருந்து ஒட்டுவதற்காகச் சேர்த்து நான்கு கிலோ விதைகளுக்குச் சீராக முலாம் பூசவேண்டும். விதைகளை நிழலில் உலர்த்தி விதைக்கப் பயன்படுத்தவேண்டும். விதை முலாம் பூசுவதால் குருத்து ஈக்களின் தாக்குதல் வெகுவாகக் குறையும்.

சோளக் குருத்து ஈக்களைக் கவர்ந்தழிக்கக் கருவாட்டுப் பொறிகளை ஏக்கருக்கு நான்கு அல்லது ஐந்து என்ற அளவில் விதை முளைத்தவுடன் இருபத்தியோரு நாட்கள் வைக்கவேண்டும்.

சோளத்தில் ஊடுபயிராக அவரைத் தட்டைப் பயிரையும், நிலக்கடலையில் ஊடுபயிராகத் தட்டைப் பயிரையும் பயிர் செய்வதால் பயிரைத்தாக்கும் பூச்சிகளில், அந்துகள் ஊடுபயிரில் கவரப்பட்டு அதிக முட்டைகளை இடும். எனவே பயிர்களில் சேதம் குறையும்.

விளக்குப் பொறிகளை (லாந்தர்) முன்னிரவு நேரங்களில் அமைப்பதன் மூலம் அந்துப் பூச்சிகளின் பெருக்கத்தைக் கண்காணிக்கலாம்.

நிலக்கடலைப் பயிரில் கூட்டம் கூட்டமாக உள்ள புரோடீனியா இளம் புழுக்களையும், வளர்ந்த புழுக்களையும் பொறுக்கி அழிக்க வேண்டும்.

புரோடீனியா புழுக்கள் மற்றும் ஹீலியோதிஸ் அந்துகளை இனக் கவர்ச்சிப் பொறிகளை அமைத்துக் கண்காணிக்கலாம்.

பயிர்களில் தென்படும் முட்டைக் குவியல்களைச் சேகரித்து அழிக்கலாம்.

பருத்தியில் அமில நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்தவேண்டும்.

பருத்திக் குடும்பத்தைச் சார்ந்த வெண்டை, புளிச்சக்கீரை போன்ற பயிர்களை அருகில் பயிர் செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

பருத்தியில் தண்டுக்கூன் வண்டு அதிகம் தோன்றும் பகுதிகளில்

அறுவடை செய்த பயிர் பாகங்களை வயலில் வைப்பதையும், மறுதாம்பு செய்வதையும் தவிர்க்கவேண்டும்.

அந்தந்தப் பயிர்களில் பூச்சிகளின் பொருளாதாரச் சேதநிலை எட்டியவுடன் கீழ்க்காணும் மருந்துகளில் ஏதாவதொன்று காலை நேரங்களில் தூவ வேண்டும்.

கார்பரில் 5 சத நனைதூள் - ஏக்கருக்கு 10 கிலோ

பி.எச்.சி. 10 சத நனைதூள் - ஏக்கருக்கு 10 கிலோ

மேற்குறிப்பிட்ட முறைகளில் பயிர்ப் பாதுகாப்பு செய்து மானாவாரிப் பயிர்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் தகவல் பணிமையம் அறிவிக்கின்றது.

கோடைப் பருவப் பருத்தியில் விதைநேர்த்தி

பொதுவாக விதை உற்பத்தியாளர்கள் முந்தைய ஆண்டு கோடைப் பருவத்தில் உற்பத்தி செய்த விதையையே, அடுத்த ஆண்டு கோடைப் பருவத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள்.
இவ்வாறு ஓராண்டுச் சேமிப்பில் உள்ள விதைகள் வண்டுகளின் தாக்குதலுக்கு உட்பட்டு, விதையின் தரம் மிகவும் குறைகிறது. இப்படித் தரம் குறைந்த விதைகளைத் தரமிக்க விதைகளாக மாற்ற கந்தக அமிலம் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்கவேண்டும்.

செய்முறை: தேவையான விதைகளை ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக்கொண்டு ஒரு கிலோ விதைக்கு 100 மி.லிட்டர் வியாபார அடர் கந்தக அமிலம் என்ற அளவில் சிறுகச் சிறுக ஊற்றி, மரக்கழி கொண்டு நன்கு 2-3 நிமிடம் (விதைகள் காப்பிக் கொட்டை நிறத்தில் வரும் வரை) கலக்க வேண்டும். பின்பு இரண்டு மூன்று முறை குளிர்ந்த நீரினால் விதைகளைக் கழுவி அதன்மேல் உள்ள அமிலத்தை நீக்க வேண்டும். அடியில் தங்கிய முதிர்ந்த விதைகளை எடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்பு காப்டானை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து விதைத்தல் வேண்டும். பூச்சி நாசினியான டி.டி.டீக்கு பதிலாக, 5 சத கார்பரில் மருந்தை 2 கிராம் அளவில் சேர்த்து நேர்த்தி செய்யலாம்.

சென்னை மாநகராட்சியின் மின்சாரச் சுடுகாடு

பெசன்ட் நகரில் மாநகராட்சியின் மின்சாரச் சுடுகாடு 1.9.92 அன்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தச் சுடுகாட்டை, சென்னை மாநகராட்சி சுமார் ரூ.50 இலட்சம் செலவில் நிறுவியுள்ளது. ஏற்கெனவே சோதனை செய்து பார்த்ததில், இந்தச் சுடுகாடு சிறந்த முறையில் இயங்கியது. அதன் அடிப்படையில் 1.9.92 அன்று முதல் சென்னை நகர மக்களுக்கு இந்த வசதியை வழங்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இந்தச் சுடுகாட்டில் இரண்டு மின் உலைகள் உள்ளன. ஒவ்வொரு உலையிலும் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 15 முதல் 20 சடலங்களை தகனம் செய்யலாம். 2-வது உலை இன்னும் 15 நாட்களில் தயாராகி விடும். இதற்குக் கட்டணம், மிகக் குறைந்த அளவு தான். தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் சடலங்களை எடுத்து வரலாம். இது குறித்து மேலும் தகவலறிய விரும்புவோர் 845691 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், இன்னும் ஒரு மாதத்தில் மாநகராட்சி ஒரு அமரர் ஊர்தியைத் தயார் செய்து குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு அளிக்க இருக்கிறது.

நன்மைகள்:

★ விதையின் தரம் உயர்கிறது.
★ விதையின் முளைப்புத் திறன் அதிகரிக்கிறது.
★ விதையின் மேல் உள்ள விதை மூலம் பரவும் பூஞ்சாளக்களை நீக்கப்படுகிறது.
★ விதைப்பது சுலபம், சீரான பருமன் கொண்ட விதைகளானதால் விதை நேர்த்திக்கு எளிதானது.
★ விதைப்பதற்குக் குறைந்த விதைகளே போதுமானது.
★ விதைகள் குறைந்த நீரைக்கொண்டு நன்கு விரைவாக முளைக்கவும் ஏதுவாகிறது.

1,307 டன் தேயிலை ஏற்றுமதி

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாத காலத்தில், இந்திய தேயிலை வர்த்தக அமைப்பு ரூ.9.75 கோடி மதிப்பிலான 1,307 டன் எடையுள்ள தேயிலையை ஏற்றுமதி செய்திருக்கிறது.

நம் நாட்டிலிருந்து அதிக அளவில் தேயிலையை வாங்கிய நாடுகளில் முதலிடம் பெறுவது ஜெர்மனி. இந்த நாடு ரூ.2.29 கோடி மதிப்புக்கு தேயிலையை நமது நாட்டிலிருந்து இறக்குமதி செய்தது. இதைத் தொடர்ந்து ஜப்பான், பெல்ஜியம், மொராக்கோ ஆகிய நாடுகள் அதிக அளவில் இந்தியாவிலிருந்து தேயிலையை வாங்கின.

ஊதாக் கதிர் விளக்குப் பொறியின் மூலம், தானியச் சேமிப்புக்கிடங்கில் பூச்சிக் கட்டுப்பாடு

தானியச் சேமிப்புக் கிடங்குகளில் காணப்படும் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க ஓர் ஊதாக் கதிர் விளக்குப்பொறி நமது வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பொறி ஊதா கதிர்களை வெளியிடும் 4 வாட் விளக்கினைக் கொண்டது. இவ்விளக்கு, புனல் வடிவ அமைப்புக் கொண்ட ஓர் பொறியியல் மேற்புறத்தில் அதன் மையப்பகுதியில் பொறுத்தப்பட்டுள்ளது. **புனலின்** மேல் குறுக்கு விட்டம் 310 மி.மீ. அளவும் கீழ் வட்டம் 85 மி.மீ. அளவும் உடையது. புனலின் அடிப் பகுதியில் கவரப்பட்ட பூச்சிகளைச் சேகரிக்க பிளாஸ்டிக் டப்பா ஒன்று பொறுத்தப்பட்டுள்ளது. இந்த விளக்குப் பொறியை வேண்டிய இடத்தில் தொங்க விடுவதற்குப் புனலின் விளிம்புகளில் பொருத்திகள் உள்ளன.

இப்பொறியை, சேமிப்புக் கிடங்கில் தரையிலிருந்து சுமார் 1.5 மீ உயர்த்தில் சுவர் பகுதியின் அருகில் வைத்தல் வேண்டும். நெல் மற்றும் அரிசியைத் தாக்கும் ரைசோபர்தா, டிரைபோலியம் வண்டு போன்ற பலவகை வண்டுகள் அதிக அளவில் இப்பொறியால் ஈர்க்கப்படுகின்றன. கிடங்கில் வேலை செய்வோர்க்கு இடையூறாக இருக்கும் சோசிட் எனப்படும் பூச்சிகளும் கவரப்படுகின்றன. இப்பொறியை, குறிப்பாக, தானியங்களை நீண்ட நாள் சேமித்து வைக்கும்போதும், பூச்சி தாக்கப்பட்ட தானிய மூட்டைகள் கிடங்கிற்கு வரும்போதும், பூச்சிகளைக் கட்டுப்படுத்த, புகை மூட்டம் போட்ட பின்பும் பயன்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் சேதம் விரைவாகப் பெருகுவதைத் தடுக்கலாம். தானியங்கள் அடிக்கடி போக்குவரத்து உள்ள கிடங்குகளில் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க இப்பொறியைப் பயன்படுத்தலாம்.

இப்பொறி ஒன்றின் விலை சுமார் ரூ.750 ஆகும். இதன் ஆயுட்காலம் 5000 மணி. இதனை ஓர் இரவுக்குப் பயன்படுத்த ஆகும் செலவு 30 காசு என்று பல்கலைக்கழகத்தின் வேளாண் தகவல் பணிமையம் அறிவிக்கின்றது.

சிறப்புத்தள்ளுபடி விலையில் கதர்த் துணிகள்

10 சதம் சிறப்புத் தள்ளுபடி விலையில், காதித் துணிகளை ஆண்டுதோறும் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது; அதன்படி இந்த ஆண்டில், பின்வரும் காலங்களில் விற்பனை செய்யப்படும்:

ரம்ஜான் பண்டிகைக்காலம்	7 நாட்கள்
காமராஜர் பிறந்தநாள் (ஜூலை 1-15)	15 நாட்கள்
பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பிறந்த நாட்கள் (செப்டம்பர் 15-29)	15 நாட்கள்
காந்தி ஜெயந்தி, தீபாவளி (2.10.92-24.10.92) 4,11,18 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளையும் சேர்த்து	23 நாட்கள்
ராஜாஜி பிறந்த நாள் (4.12.92-9.12.92) 6-ந் தேதி ஞாயிறு இல்லாமல்	4 நாட்கள்
கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகைகள் காலம் (17.12.92-31.1.93) (டிசம்பர் 20,25,27, ஜனவரி 3-ம்நாள் ஞாயிறு சேர்க்காமல்)	24 நாட்கள்
ஆண்டு இறுதி 27.3.93-29.3.93 விற்பனை (28ந் தேதி ஞாயிறு சேர்க்காமல்)	2 நாட்கள்
மொத்தம்	90 நாட்கள்

தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது

சட்டப் பேரவையில் முதல்வர் அறிக்கை

1991-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இவ்வரசு பதவியேற்றதும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகளை, குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. புலிகளின் நடவடிக்கைளைத் தமிழகத்தில் அறவே நீக்கிட, புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமெனப் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், 1992-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாளன்று வெளியிட்ட, நிலை ஆணை 330(இ)-ஆம் எண்ணுள்ள தமது அறிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது, ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவித்துள்ளது. இது 1967-ஆம் ஆண்டு சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் (Act 37 of 1967) 3-ஆம் பிரிவின் 1-ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கப்பட்டுள்ளது. 1967-ஆம் ஆண்டு சட்டப்புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் (Act 37 of 1967)-இன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றங்கள் தொடர்பாக, வழக்கு தொடர்வதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், தமிழ்நாடு அரசு உள்துறை செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 28.5.1992-ஆம் நாளிட்ட, 364(இ), 365 (இ)- ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தில் 7,8-ஆம் பிரிவுகளின்படி, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் கையாளக்கூடிய அனைத்து அதிகாரங்களையும், தமிழ்நாடு அரசு செலுத்த வல்லமையுள்ளது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு கையாளத்தக்க அத்தகைய அதிகாரங்கள் அனைத்தையும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகர்களில், காவல்துறை ஆணையாளர்களும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் செலுத்த வல்லமையுடையவர்கள் என்றும், இந்திய அரசு ஆணையிட்டுள்ளது.

சட்டப்புறம்பான எந்தவொரு நடவடிக்கையிலும் பங்கேற்கும், அல்லது அத்தகைய நடவடிக்கையைச் செய்யும் அல்லது அந்நடவடிக்கைகளைப் போதிக்கும், அறிவுறுத்தும், அல்லது அந்நடவடிக்கைகளுக்கு உடந்தையாயிருக்கும், அல்லது அத்தகைய நடவடிக்கையினைச் செய்யத் தூண்டும் எவரும், இச்சட்டத்தின் 13- ஆம் பிரிவின்படி, 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதத் தண்டனையும் பெறுவர். சட்டப்புறம்பான அமைப்பு என்று அறிவிக்கப்பட்ட ஓர் அமைப்பின், சட்டப்புறம்பான எந்தவொரு நடவடிக்கைக்கும், எந்த வழியிலேயும் உதவிபுரியும் எவரும், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை, அல்லது அபராதத் தண்டனை, அல்லது கூட்டாக இவ்விரு தண்டனைகளும் பெறுவர்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்கள், 17.5.1992 அன்று, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் நன்னிலத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு, ஆதரவு அளிப்பதாக வெளிப்படையாக அறிவித்தார்.

அண்மையில் திண்டுக்கல் நகர் அருகிலுள்ள, மேட்டுப்பட்டி என்ற கிராமத்தில் நடைபெற்ற திருமண விழாவில், ஒரு குழந்தைக்கு 'பிரபாகரன்' எனப் பெயர் சூட்டினார்.

சென்னை வந்த மத்தியப் பணியாளர் நல இணை அமைச்சர் திருமதி. மார்கெரெட் ஆல்வா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, முதல்வரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார் (18.9.'92).

பாட்டாளி மக்கள் கட்சியின் நாளேடும், தமிழ் தினசரியுமான 'தினப்புரட்சியில்', 25, 26 மற்றும் 27.8.92-ஆம் தேதிகளில், 'தன்னுரிமை' என்னும் பொருள் பற்றிக்கூறுகையில், டாக்டர் ராமதாஸ் கீழ்க்கண்ட கருத்துக்களை தெரிவித்ததாக அந்த தினசரியில் வந்துள்ளது.

'ஆரியர்களின் மேலாதிக்கத்தின் கீழ், தமிழர்கள் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவிப்பதாகவும், தங்கள் சொந்த மாநிலத்திலேயே அகதிகளாகவும், அடிமைகளாகவும் வாழும் சூழ்நிலைக்கு, அவர்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பின் அடிப்படையில் அவர்களுக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் மற்றும் சமூக பொருளாதார துறைகளில், அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும், கருப்பு சட்டங்கள் அவர்கள் மீது திணிக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்''.

''தினப்புரட்சி''-யில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களையடுத்து, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை செப்டம்பர் திங்கள் 10, 11 மற்றும் 12 தேதிகளில் சென்னையில் நடத்தியது.

மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியவர்களில், டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. தீரன், திரு. ப. நெடுமாறன், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், திரு. பெருஞ்சித்திரனார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

டாக்டர் ராமதாஸ் பேசுகையில், தமிழ்நாட்டு மக்களைக்காப்பாற்றும் நோக்குடன், இம்மாநாடு நடத்தப்படுவதாகக் கூறினார். தனி ஈழம் அடையும் பிரபாகரனின் இலட்சியம், விரைவில் ஈடேறும் என்றும் கூறினார்.

மாநாட்டின் இரண்டாம் நாளன்று உரை நிகழ்த்திய, திலீபன் மன்றத்தைச்சேர்ந்த தியாகுவும், பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை பரப்பு அணி மாநிலத் தலைவர், திரு. சி.ஆர். பாஸ்கரனும், அரசின் பொருளாதாரக் கொள்கையைக் குறை கூறியதுடன், தமிழர்கள் தன்னுரிமை பெற முயற்சி செய்ய வேண்டியதன் அவசியத்தையும், வலியுறுத்திப் பேசினர். மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் அனைவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ததை தீவிரமாகக் கண்டித்ததுடன், விடுதலைப்புலி இயக்கத்தையும், இயக்கத்தின் தலைவரான பிரபாகரன், தமிழீழம் மற்றும் திரு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களையும், ஆதரித்துப் பேசினார்கள். விடுதலைப் புலிகள் வீரத்தோடு போராடி வருவதாகவும், அந்த இயக்கத்திற்கு எத்தனை தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், அத்தடைகளையும் மீறித் தாங்கள் அளித்து வருகின்ற ஆதரவினை எந்த விதத்திலும் விலக்கப்போவதில்லை என்றும், தமிழீழம் அமைவதைப்போல், தமிழ்நாட்டிலும் தன்னுரிமை கிடைக்கவேண்டும் என்றும், அப்படி தன்னுரிமை கிடைக்கவில்லையென்றால், தனித் தமிழ்நாடு கோரிக்கை இங்கு வலிவு பெறப் போகிறது என்றும் பேசினார்கள். பிரபாகரன் வளரக் கூடாதென்ற காரணத்தினாலே, மத்திய

அரசு பிரபாகரன் மீது கொலைப் பழியைச் சுமத்தியிருப்பதாகவும், பிரபாகரன் மீது எவ்வளவு கொலை வழக்கு போட்டாலும், அதைப்பற்றி தமிழ்ச் சமுதாயம் கவலைப்படப் போவதில்லை என்றும், கவலைப்பட வேண்டிய அவசியமும் கிடையாது என்றும், அதே பிரபாகரனை ராணுவ மரியாதையுடன், குண்டு ஒலி முழங்க வரவேற்று, நரசிம்மராவ் பேச்சு வார்த்தை நடத்தப்போகின்ற காலம், கண்ணெதிரில் தெரிவதாகவும், அதற்கான ஆயத்தப் பணிகளை, ராமதாஸ் தலைமையில் தமிழ்ச் சமுதாயம் செய்து கொண்டிருப்பதாகவும், தமிழீழத்துக்காக உயிரைக் கொடுப்பதற்காக, 25 இலட்சம் இளைஞர்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தயார் நிலையிலே இருப்பதாகவும், டெல்லிக்கு வேண்டிய அதிகாரத்தை வழங்குகின்ற நிலையில், தமிழர்கள் வாழும் பகுதி இருக்கவேண்டுமே தவிர, அதிகாரத்தை டெல்லியிலிருந்து வேண்டுகிற நிலை இருக்கக் கூடாது என்றும், அவ்வகையில் தமிழர்கள் வாழ்கிற நாடு, தமிழர்களுக்கே சொந்தம் என்றும் கூறப்பட்டது.

மாநாட்டின் கடைசி நாளான, 12.9.92 அன்று நடைபெற்ற ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள், எல்.டி.டி.ஈ-யையும் பிரபாகரனையும் ஆதரித்து, ''உலகத் தமிழன் பிரபாகரன் வாழ்க'' என்று கோஷத்தை எழுப்பிக்கொண்டு சென்றனர். ஊர்வலத்தில் பிரபாகரனுடைய உருவப் படம் எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் சென்றவர்களில் சிலர், பிரபாகரனின் உருவப்படத்தையும், மற்றும் சிலர் பிரபாகரன், சிவராஜன், ஆகியோரின் உருவப்படம் தாங்கிய தலைப்பாகை அணிந்து சென்றனர். மேலும் தாணு, சிவராஜன் ஆகியவர்களைப் புகழ்ந்தும், 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற கோஷங்களையும் எழுப்பிக் கொண்டும் சென்றனர்.

மாநாட்டில் உரையாற்றிய திரு. தீரன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை இருந்து வருவதாகவும், அந்த தடையை மீறி தாங்கள் அவர்களுக்கு அளித்து வருகின்ற ஆதரவினை எந்த நிலையில் இருந்தும் மாற்றப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. நெடுமாறன், மாநாட்டை டாக்டர் ராமதாஸ் துவக்கி வைப்பது மிகவும் பொருத்தமானது என்று கூறி வழிமொழிந்து பேசுகையில், விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவு எந்த நிலையிலும் அளிக்க தாங்கள் தயாராக இருப்பதாகச் சொல்லியுள்ளார்.

திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் உரையாற்றும் பொழுது 'அரசியல் சட்டம் 21-வது பிரிவின்படி வாழ்வுரிமை, கல்வி உரிமை, நீதி பெற உரிமை போன்றவைகள் கிடைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அந்த உரிமைகள் தமிழர்களுக்கு கிடைக்கின்றதா? எங்கு பார்த்தாலும் தமிழன் தாக்கப்படுகிறான் என்ற நிலைமை தானே இருக்கிறது'' என்று கூறியுள்ளார். இந்திய அரசு நெல்சன் மண்டேலாவையும், யாசர் அராபத்தையும் ஆதரிக்கிறது; விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்கிறது, என்ன நியாயம் என்று கேட்டு, விடுதலைப்புலி இயக்கத்திற்கு எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும், அதை மீறி என்றைக்கும் அவர்கள் அவ்வியக்கத்திற்கு ஆதரவு கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

டாக்டர் ராமதாஸ் பேசுகையில், புறநானூற்றுக் கவிதைகளில் முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வீரம் பற்றிப் பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்களே தவிர, தற்போது AK 47-ஐ கையில் வைத்துக் கொண்டு போராடும் தமிழச்சி பற்றி எழுதுங்கள் என்று சொன்னால், அது தங்களின் வேலை இல்லை என்று பத்திரிகைக்காரர்கள் சொல்வதாகவும், மாவீரனாக பிரபாகரன் திகழ்ந்து கொண்டிருப்பதாகவும், அவரது குறிக்கோள் நிறைவேறப் போகிறது என்றும், தமிழ் ஈழம் மலர்வதைத் தாங்கள் பார்க்கத்தான் போகின்றோம் என்றும் கூறியுள்ளார்.

தமிழ் ஈழம் அமைவதைப் போல தமிழ்நாட்டிலும் தன்னுரிமை கிடைக்க வேண்டுமென்றும், அப்படி தன்னுரிமை கிடைக்கவில்லை என்றால் தனித்தமிழ் ஈழம் போல தனித் தமிழ்நாடு கோரிக்கை எழுந்து வலிமை பெறத்தான் போகிறது என்றும் கூறியுள்ளார்.

உயரே... உயரே..!

உலகின் பெரிய ஏர்லைன்ஸ் நிறுவனங்களில் ஒன்றான இந்தியன் ஏர்லைன்ஸ் தொடங்கப்பட்டு 40 ஆண்டுகள் ஆகின்றன. ஏர்பஸ் ஏ-300, ஏ-320, போயிங் 737 என அனைத்து ரக நவீன விமானங்களையும் இந்நிறுவனம் இயக்குகிறது.

தினசரி 68 இடங்களை இணைக்கும் வகையில் 220 சர்வீஸ்கள் நடத்தப்படுகின்றன. சராசரியாகத் தினமும் 28,000 பேர் இந்தியன் ஏர்லைன்ஸில் பயணிக்கின்றனர். நமது அண்டை நாடுகளுக்கும் (11 நகரங்கள்) இந்தியன் ஏர்லைன்ஸ் சர்வீஸ் உள்ளது.

1985-ஆம் ஆண்டு கம்ப்யூட்டர் முன்பதிவு முறையைச் சென்னை உட்பட ஆறு நகரங்களில் அறிமுகப்படுத்தியது இந்நிறுவனம். தற்போது கஜுரஹோ தவிர அனைத்து விமான நிலையங்களிலும் இவ்வசதி இருக்கிறது.

● உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.

—தந்தை பெரியார்

மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இந்தியாவில் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும், இலங்கைத் தமிழர்களைப் பற்றிய கொள்கை இல்லை, என்ற கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், பணக்காரர்களாலும், அரசர்களாலும் கொண்டுவரப்பட்டதென்றும், மக்களுடைய தேவையை அவை பூர்த்தி செய்யவில்லையென்றும், ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கவும், மேலும் தமிழ் மக்களுடைய அரசியல் மற்றும் குடியுரிமைகளைத் திரும்பப் பெறவும், தன்னுரிமைக் கருத்து உள்ளடக்கிய, புதியதொரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவும், பாட்டாளி மக்கள் கட்சி போராடப் போவதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த டாக்டர் எஸ். ராமதாஸ், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் மற்றும் பலர், திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில், குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட பிரபாகரனை ஆதரித்தும், தமிழ் மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டதாகக் கூறி, அவற்றைக் காப்பாற்ற, தமிழ் மக்கள் தன்னுரிமை பெறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியும், மற்றும் போராட்டம் நடத்தப்போவதாகவும் பேசி, மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றிய நிலையில், அவர்களின் இச்செயல்களின் தன்மை ஆராயப்பட்டு, அவை சட்டவிரோதமான நடவடிக்கைகள் ஆகும், என்று தமிழக காவல்துறை முடிவெடுத்து, டாக்டர் ராமதாஸ் மற்றும் 15 பேர்கள் மீது, 1967-ஆம் வருடத்திய சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப் பிரிவு 13(1) மற்றும் 13(2)-இன் கீழ், வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கினைத் தொடர்ந்து, 18.9.92 அதிகாலை, டாக்டர் ராமதாஸ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் உட்பட, 8 பேர் கைது செய்யப்பட்டனர். எனினும், டாக்டர் ராமதாசும், சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரனும், நீதி மன்றத்தால் ஜாமினில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து பல மாவட்டங்களிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும், தாக்கப்பட்ட சம்பவங்கள் கவனத்திற்கு வந்தது. மொத்தத்தில் 54 அரசுப் பேருந்துகள் மீதும், 17 தனியார் வாகனங்கள் மீதும் கல்வீசப்பட்டதாகவும், மற்றும் 2 அரசு பேருந்துகளும், 2 தனியார் வாகனங்களும், தீயிட்டு கொளுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 19.9.92-ஆம் நாள் வரை, 4,065 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு, சட்டம்- ஒழுங்கு, அமைதி, நிலைநாட்டவும், அரசு மற்றும் பொதுவுடைமை சொத்துக்களைப் பாதுகாக்கவும், விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, அந்தந்த இடங்களின் நிலைமைக்கேற்ப பேருந்துகளை இயக்குமாறும், அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு, பாதுகாப்புப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற, மைய அரசிடம் தொடர்பு கொண்டு, மைய அரசின் காவல் தொகுப்பிலிருந்து, 10 கம்பெனி காவலர்களை அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மைய அரசும் 6 கம்பெனி ஆயுதப்படைகளை அனுப்ப ஏற்பாடு செய்து, அவை தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்துள்ளன. தமிழகத்தில் தற்போது சட்டம்-ஒழுங்கு, முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது.

தமிழகத்தில், தேசவிரோத சக்திகளையும், தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் விளைவிக்க முயற்சி செய்யும் எவரையும், இந்த அரசு எப்போதும் அனுமதிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை தடுத்து நிறுத்தி, அவர்களை வளர விடாது, முளையிலேயே கிள்ளி எறியும் அத்தனை நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

- 21.9.92 அன்று சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை.

தமிழகத்தில் 9 கிணறுகளில் பெட்ரோல் கண்டுபிடிப்பு

தமிழகத்தில் எண்ணெய் நிலவாயுக் கமிஷன் தோண்டிய 56 கிணறுகளில், 9 கிணறுகளில் பெட்ரோல் இருப்பதும், 4 கிணறுகளில் இயற்கை எரிவாயு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி

புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து மனுக் கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 484 நபர்களைத் தேர்ந்தெடுத்து 21.9.92 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

புதுக்கோட்டையிலிருந்து அரசு செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 37 பெண்களுக்கு ரூபாய் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் நிதியுதவியும்,கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 5 பெண்களுக்கு நிதியுதவியும், 2 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 7 விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண நிதியுதவியும், 9 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்குச் சவரப் பெட்டிகளும், 5 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், கடற்சிப்பி பொருட்கள் செய்ய 3 நபர்களுக்கு ரூ.81,500-ம், ஒருவருக்கு கிரஷர் யூனிட் வைப்பதற்கு ரூ.4,36,000-ம் நிதியுதவி வழங்கப்பட்டது .

மாவட்டத்தில் தொழில் தொடங்க, தொழில் வணிகத் துறை மூலம் 10 நபர்களுக்கு ரூ.6,66,681 நிதியுதவியும், வண்டியும் மாடுகளும் வாங்க 32 நபர்களுக்கு ரூ.2,72,000 நிதியுதவியும், 38 நபர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ரூ.2,66,000-ம், செம்மறி ஆடு வளர்க்க 11 நபர்களுக்கு ரூ.16,92,000 நிதியுதவியும், பெட்டிக் கடை வைக்க 12 நபர்களுக்கு ரூ.40,000 நிதியுதவியும், கயிறு திரிக்கும் தொழிலுக்கு 11 நபர்களுக்கு ரூ.16,500 நிதியுதவியும் வழங்கப்பட்டன.

2 நபர்களுக்கு டிராக்டர் வாங்க ரூ.4,37,000-ம், 7 நபர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்க ரூ.2,93,500-ம், லாரி வாங்க 3 நபர்களுக்கு ரூ.12,95,000-ம், 29 நபர்களுக்குச் செயற்கை வைரத்தைப் பட்டை தீட்டும் இயந்திரம் வாங்க ரூ.31,26,000-ம் 'அறிவொளி மகளிர் சைக்கிள் வழங்கும் திட்டத்'-தின் கீழ் 9 பெண்களுக்கு ரூ.12,700-ம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

64 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 13 நபர்களுக்கு நிலப்பட்டாக்களும் வழங்கப்பட்டன. 25 நபர்களுக்கு நலிந்தோர் நல வாழ்வுத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாய்க்கான உதவிகளும், 61 நபர்களுக்கு நகர்ப்புற வேலைவாய்ப்புக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் ரூ.2,53,500 மதிப்பீட்டில் உதவிகளும் வழங்கப்பட்டன.

மொத்தம் 484 நபர்களுக்கு ரூ.1,02,14,464 (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்துப் பதினான்கு ஆயிரத்து நானூற்று அறுபத்து நான்கு மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். இதில் 285 நபர்கள் பெண்களாவர்.

மேலும், 1990-91-ஆம் ஆண்டிற்கு 19 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவியும், 13 கர்நாடகத் தமிழருக்கு மொத்தம் ரூ.65,000-ம் நிதியுதவியும் வழங்கப்பட்டது.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்

மீன் வளர்ப்பு

திரு. எம். அப்துல் ஜலீல்
உதவி இயக்குநர்
மீன் துறை

நிலமும், நீரும் ஒருங்கே பெற்றுள்ள வேளாண் மக்கள் வேளாண்மையுடன் மீன் வளர்ப்பையும் தமது இணைந்த தொழிலாக ஏற்றால், மாவுச்சத்து நிறைந்த வேளாண் விளை பொருள்களுடன் விலங்கினப் புரதச் சத்து மிக்க மீனையும், சமச்சீர் சத்துணவாகப் பெறமுடியும். தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் மீன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படாத நிலையில் பல குளங்கள் உள்ளன. இக் குளங்களில் தீவிர மீன் வளர்ப்பு மேற்கொண்டு ஒரு எக்டேர் நீர்ப் பரப்பில் சுமார் 4,000 கிலோ வரை பெரு ரகக் கெண்டை மீன்களை உற்பத்தி செய்து ஆண்டுக்குச் சுமார் ரூ.20,000 வரை நிகர லாபம் அடையலாம்.

மாறுபட்ட உணவுப் பழக்கங்களையுடைய வெவ்வேறு வகை மீன்களை ஒரே குளத்தில் இட்டு வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதே கூட்டின மீன் வளர்ப்பாகும்.

குளங்களின் அமைப்பும் பராமரிப்பும்

மீன் வளர்ப்பிற்குத் தேர்வு செய்யப்படும் குளத்தில் சுமார் ஒன்று முதல் இரண்டு மீட்டர் ஆழத்திற்குத் தண்ணீர் தேங்கி நிற்கவேண்டும். களிமண் பாங்கானதும், நீர்ப்பிடிப்புத் தன்மையுள்ளதுமாக இருத்தல் வேண்டும். கால்வாய், நீர் ஊற்று அல்லது ஆழ் குழாய்க் கிணற்றுக்கு அருகில் உள்ள, ஒன்று முதல் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள குளங்கள் மீன் வளர்த்துப் பராமரிக்க மிகவும் ஏற்றவை. புதிதாக மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க மிகுந்த செலவாகும். எனவே கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியம், வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, இந்து சமய அறநிலையத்துறை, வனத்துறை மற்றும் தனியார் பொறுப்பிலிருக்கும் குளம், குட்டைகளைத் தூர் எடுத்துக் கரைகளைப் பலப்படுத்தி மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்தலாம்.

மீன் வளர்ப்பிற்குக் குளத்தைத் தயார் செய்தல்

குளத்தில் அதிகப்படியாக வளர்ந்து இருக்கும் நீர்த் தாவரங்களை அகற்ற வேண்டும். குளத்தின் அடியில் சேர்ந்து அமுங்கியிருக்கும் சகதியை முடிந்தவரை அகற்ற வேண்டும். குளத்தில் குறைந்தது 5 அடி நீர் நிற்கும் அளவிற்குக் கரைகளை உயர்த்திப் பலப்படுத்தி வைக்க வேண்டும். குளத்தின் மத்தியில் நான்கு புறமும் பள்ளம் தோண்டி வைத்தல் நல்லது. குளத்தின் கரைகளில் பலன்தரும் மரங்களை வளர்த்தல் நல்லது. குளத்தில் இயற்கையாக வளர்ந்துவரும் நாட்டுக் கொண்டைகள் மற்றும் கெழுத்தி மீன்களை மீன்கொல்லி மருந்துகளை உபயோகித்து அழிக்கவேண்டும். ஒரு எக்டேருக்கு 2,500 கிலோ என்ற அளவில் இலுப்பைப் பிண்ணாக்கை மீன் கொல்லியாகப் பயன்படுத்தலாம். இலுப்பைப் புண்ணாக்கின் விஷத்தன்மை சுமார் 15 தினங்கள் நீரில் இருக்கும். பின்னர் அது குளத்திற்கு உரமாக மாறிவிடும். குளத்தின் நீர் காரத்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும். அமிலத்தன்மை இருந்தால் தேவையான அளவு சுண்ணாம்பிட்டு பி.ஹெச்-8-க்கு மேல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். மீன் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தவில்லையாயின் நீரை வடித்து

தொழில் வளர்ச்சி

சுதந்திரத்திற்குப் பின் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில் இந்தியர்களாகிய நாம் பல துறைகளில் சாதனை புரிந்துள்ளோம். பருத்தி ஆடைகள் தயாரிப்பில் உலகில் இரண்டாவது இடத்திலும், நைட்ரஜன் உர உற்பத்தியில் மூன்றாவது நிலையிலும், கடின நிலக்கரி அகழ்வில் நான்காவதாகவும், சிமெண்ட் உற்பத்தியில் ஐந்தாவதாகவும், மின் உற்பத்தியில் ஒன்பதாம் நிலையிலும் நாம் இருக்கிறோம்; இது பெருமைக்குரிய செய்தியாகும்.

நாட்டின் வளர்ச்சியில், குறிப்பாகப் பொதுத் துறையின் பங்கை மறப்பதற்கில்லை.

1951 ஏப்ரல் முதல் தேதியன்று 29 கோடி ரூபாய் முதலீட்டில் ஐந்து நிறுவனங்களைக் கொண்டிருந்த பொதுத்துறை, 1991 மார்ச் 31-ல் ரூ.1,13,234 கோடி முதலீடு கொண்டு 246 நிறுவனங்களாக வளர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவிகிதத்தை மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் அளிக்கின்றன.

நிலக்கரி, லிக்னைட், பெட்ரோலியம், செம்பு, ஈயம் ஆகியவற்றின் நூறு சதவிகித உற்பத்தியையும் தேசிய எஃகு உற்பத்தியில் 60 சதவிகிதத்தையும் இவை அளிக்கின்றன! அதுமட்டுமின்றி, 23 இலட்சம் பேருக்கு வேலை தந்து வாழ்வும் அளிக்கின்றன பொதுத்துறை நிறுவனங்கள்!

—நன்றி: 'தூவானம்'

குளத்தை உலரச் செய்தும் களை மீன்களை அழிக்கலாம். மேலும் குளங்களில் நீர் உட்புகும் மற்றும் வெளியேறும் மதகுகளைச் சிறிய கண்ணியுடைய இரும்பு வலைகளால் இருப்புச் செய்தும் மீன் குஞ்சுகள் தப்பித்துவிடாதவாறு அமைத்திட வேண்டும்.

உரமிடல்

இயற்கை மற்றும் இரசாயன உரமிடுதல் மூலம் மீன்களுக்கு இயற்கை உணவுகள் அதிக அளவில் கிடைக்கச் செய்ய முடியும். இயற்கை உணவுகளான தாவர நுண்ணுயிர் Phytoplantitai மற்றும் விலங்கு நுண்ணுயிர் Zooplantitai நிறைந்த அளவில் உற்பத்தியாகுமாறு உரமிடுவது அவசியம். பரிந்துரைக்கப்படும் உரங்களின் அளவுகள் வருமாறு:

1. மாட்டுச்சாணம் அல்லது கோழிச்சாணம் .. 10 டன்கள்/எக்டேர்
   5 டன்கள்/எக்டேர்
2. யூரியா .. 200 கிலோ/எக்டேர்
3. சூப்பர் பாஸ்பேட் .. 250 கிலோ/எக்டேர்
4. பொட்டாஷ் .. 40 கிலோ/எக்டேர்

மேற்கூறிய உரங்களில் ஐந்தில் ஒரு பங்கு அடியுரமாக இட வேண்டும். ஈரப்பதமான சாணம் மிகவும் ஏற்றது. சாணத்தைத் தண்ணீர்விட்டு நன்கு பிசைந்து, கலக்கி குளத்தின் மேற்பரப்பில் முழுவதும் தெளிக்கவேண்டும். உரமிட்ட பத்து நாட்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யும் குளம் தயாராக இருக்கும். இவ்வாறு உரமிடுவதால் குளத்தில் மீன்களுக்கு உணவாகப் பயன்படும் தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர்கள் நிறைந்த அளவில் உற்பத்தியாகி மீன்களுக்குத் தொடர்ந்து கிடைக்கின்றன.

மீன்குஞ்சு இருப்புச் செய்தல்

10 செ.மீட்டருக்கு மேல் வளர்ந்த பெரு ரகக் கெண்டை மீன் குஞ்சுகளான கட்லா, ரோகு, மிர்கால், சாதாகெண்டை, புல்கெண்டை மற்றும் வெள்ளிக்கெண்டை ஆகியவை கூட்டின மீன் வளர்ப்பிற்கு ஏற்றவை. மேற்குறிப்பிட்ட மீன் குஞ்சுகளை ஜூன், ஜூலை மாதங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகளினின்றும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் விதைப் பண்ணைகளினின்றும், பெற்று எக்டேருக்கு 5,000 முதல் 7,500 வரை கீழ்க்காணும் விகிதத்தில் இருப்புச் செய்யலாம்.

கட்லா ..	15%
ரோகு ..	20%
மிர்கால் ..	15%
வெள்ளிக்கெண்டை ..	20%
புல்கெண்டை ..	10%
சாதாக்கெண்டை ..	20%

மேற்குறிப்பிட்ட மீன் இனங்களில் கட்லா மற்றும் வெள்ளிக் கெண்டை குளத்தின் மேற்பரப்பில், ரோகு மற்றும் புல்கெண்டை உற்பத்தின் நடுப்பகுதியிலும், மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை குளத்தின் அடிப்பகுதியிலும் காணும் தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர்களை உணவாக உண்பதால் உணவு உண்பதில் மீன் இனங்களிடையே போட்டி இல்லை.

மீன்களுக்கு உணவிடுதல்

குளத்தில் மீன்களுக்கு இயற்கை உணவுகள் கட்டுப்பாடில்லாமல் தொடர்ந்து கிடைக்க உரமிடுதல் அவசியம். எனினும் மீன்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் செயற்கை உணவு அளிக்கப்படுகிறது. குளத்தில் இருப்புச் செய்யப்பட்டுள்ள மீன் குஞ்சுகளின் எடைக்கு 3 சதவிகித செயற்கை உணவு தினமும் அளிக்கப்பட வேண்டும், பொதுவாக அரிசித்தவிடும், கடலைப் பிண்ணாக்கும் முறையே 1:1 என்ற விகிதத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 5000 மீன் குஞ்சுகள் வீதம் இருப்புச் செய்வதானால் அவற்றிற்கு கொடுக்கப்படும் உணவு அளவை பின்வருமாறு கணக்கிடலாம்.

1. முதல் காலாண்டிற்கு ஒரு எக்டேருக்கு .. 3 கிலோ நாள் ஒன்றுக்கு (ஒன்றரை கிலோ புண்ணாக்கு மற்றும் ஒன்றரை கிலோ தவிடு)
2. இரண்டாம் காலாண்டிற்கு .. 6 கிலோ
3. மூன்றாம் காலாண்டிற்கு .. 9 கிலோ
4. நான்காம் க்ாலாண்டிற்கு .. 18 கிலோ

பொதுவாக ஒரு எக்டேருக்கு ஓராண்டிற்கு சுமார் 2,500 கிலோ பிண்ணாக்கும், தவிடும் உணவாக

மறைமலைநகர்- காமராஜர் இரயில் நிலையம்: முதல்வர் அறிவிப்பு

காட்டாங்குளத்தூர் - சிங்கபெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு பிரிவினரிடமிருந்தும் அரசுக்கு வந்துள்ளன. மேலும் 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி, அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர், நம் பாசத்திற்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' என்ற பெயர் நிரந்தரமாக அவ்விடத்திற்கு இட வேண்டும் என்று மறைமலை நகரிய மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அறிவித்திருந்தார்.

பிறகு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜ் நகர் இரயில் நிலையம் என்று பெயரிடச் சொல்லி, போராட்டங்களின் மூலமும், தனிப்பட்ட முறையில் கடிதங்களின் மூலமும் அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமரர் ராஜீவ் காந்தி அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கிற வகையிலும், நேற்று என்னைச் சந்தித்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினை நிறைவு செய்கிற வகையிலும், இது தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்கிற வகையிலும், மறைமலை நகர் இரயில் நிலையத்தை ''மறைமலை நகர் - காமராஜர் இரயில் நிலையம்'' எனப் பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சட்டப் பேரவையில் 24.9.92 அன்று அறிவிக்கப்பட்டது.

கொடுக்கப்படுகின்றன. பாசித்திறன் மிக அதிகமாகத் தோன்றினாலும் நீரின் தன்மை மாறுபாடு அடைந்தாலும் உணவு அளிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டும். இருப்புச் செய்யப்பட்ட மீன்கள் நன்கு வளர்ந்திருக்கின்றனவா என்று அறிய மாதம் ஒருமுறை சோதனை மீன்பிடிப்பு நடத்திட வேண்டும். இது மீன்களுக்கு உணவளிப்பதன் அளவீட்டை அவ்வப்போது நிர்ணயம் செய்யவும் மீன்களின் ஆரோக்கியத்தைச் சோதனை செய்யவும் உதவும்.

மீன்களைப் பாதுகாத்தல்

குளத்தைச் சுற்றிலும் உபயோகப்படுத்தப்பட்ட நைலான் வலைகளை வேலியாக அமைத்தால், தவளை, பாம்பு போன்ற பிற நீர்ப்பிராணிகளிடமிருந்து வளரும் மீன்களைப் பாதுகாக்கலாம்.

மீன் பிடிப்பு

குளங்களில் தண்ணீர் இருக்கும் கால அளவைப் பொறுத்தும், வளர்ச்சியைப் பொறுத்தும், எட்டுமாத இறுதியிலோ அல்லது ஆண்டு இறுதியிலோ அறுவடை செய்வது நல்லது. சில சமயங்களில் சில மீன்களின் வளர்ச்சி மிகக் குறுகிய காலங்களிலேயே நன்கு அமையும். அவற்றை அறுவடை செய்து பிடிபட்ட மீன்களின் எண்ணிக்கையை ஈடு செய்ய அதே இன மீன்களை இருப்புச் செய்து நல்ல பலன் பெறலாம்.

மீன் வளர்ப்புப் பொருளாதாரம்

கலப்பின மீன் வளர்ப்பு முறையில் நவீன யுத்திகளைக் கையாண்டு மீன் உற்பத்தியைப் பெருக்கிட, ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. இருப்பினும் உயர்ந்த அளவாகக் கல்கத்தாவில் உள்ள மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையம் 10 டன்/எக்டேருக்கு உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. தமிழ்நாட்டில் சராசரியாக எக்டேருக்கு 3,000 முதல் 4,000 கிலோ வரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு குறைந்த அளவு மீன் உற்பத்தி எக்டேருக்கு 3,000 கிலோ என்று வைத்துப் பொருளாதாரம் கணக்கிடப்பட்டுள்ளது.

1. குளம் சரி செய்வதற்கு ஆகும் செலவு, உரமிடுதல், மீன் குஞ்சுகளின் விலை, மீன் உணவு, மீன் பிடிக்கச் செலவு, நீரேற்றல் - செலவு மற்றும் காவல் கூலி உட்பட .. ரூ.10,000

2. மீன் உற்பத்தி - 3000 கிலோ விற்பனை மூலம் வருவாய் ரூ.10 கிலோ .. ரூ.30,000

3. நிகர லாபம் .. ரூ.20,000

இந்த வரன்முறை மண்ணின் உரச்சத்தையும், மீனின் வளர்ச்சியையும் பொறுத்து மாறும்.

பொருளாதார ரீதியில் பார்க்கும்போது கூட்டின மீன் வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழிலாகும். எனவே கூட்டின மீன் வளர்ப்பில் ஈடுபட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கி வீடும், நாடும் நலம் பெறச் செய்வோமாக.

இந்தியாவுக்கான பெல்ஜியம் நாட்டுத் தூதர் திருமதி. கிறிஸ்டினா பியூனெஸ்னோப்பென் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (22.9.'92).

தொடர்ந்து மூன்றாம் முறையாக அமெரிக்க நாட்டில் இந்தியர் மேயராகத் தேர்வு

அமெரிக்காவில் உள்ள 'ஹாலிவுட் பார்க்' என்னும் சிறு நகரத்தின் மேயராக பாலா கே. ஸ்ரீநிவாஸ் என்னும் இந்தியர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது இவருக்கு முதல் முறையல்ல; தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார், இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நகரம்டெக்ஸாஸ் மாநிலத்தில் சான் அன்டோனியோ அருகே உள்ளது. இதன் மக்கள்தொகை 3,000-க்கும் குறைவாகும். இந்நகரத்தில் இந்திய வமிசாவளியைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

பாலா ஸ்ரீநிவாஸ் இந்நகரத்தின் மேயராக 1988-ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு, 1985 முதல் அவர் அந்த நகராட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். இந்த ஆண்டு மேயர் தேர்தலில் ஸ்ரீநிவாஸை எதிர்த்து இரண்டு வெள்ளையர்கள் போட்டியிட்டனர். ஆனால் ஸ்ரீநிவாசுக்கு 64 சதவீத வாக்குகள் கிடைத்தன. இவர் டெக்சாஸ் மாநிலக் குடியரசுக் கட்சியின் தீவிர உறுப்பினருமாவார்.

திரு. பாலா ஸ்ரீநிவாஸ் ஐதராபாத்தில் பிறந்தவர். அமெரிக்காவில் மெக்சிகன் பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா "எஞ்ஜினியரிங் அண்ட் லோகோமோடிவ்" நிறுவனத்திலும்,ஐதராபாத்தில் உள்ள "பிராகா டூல்ஸ்" நிறுவனத்திலும் பணியாற்றியவர். 1966-ஆம் ஆண்டில் இவர் அமெரிக்காவில் குடியேறினார்.

அமெரிக்காவிற்கு வந்ததும் இவர் கிளிவ்லண்ட் நகரில் பல ஆண்டுக்காலம் பணியாற்றினார். 1980-இல் இவர் ஹாலிவுட் பார்க்கிற்குக் குடிபெயர்ந்தார். இவரது மனைவி டாக்டராகப் பணி புரிகிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இளம்பிள்ளைவாத மறுவாழ்வு முகாம்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதியில் வாழும் மக்களிடையே இருக்கும் இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் இலவச மருத்துவ முகாம், எலும்பு முறிவு சிகிச்சையில் சிறந்த பயிற்சி பெற்ற நிபுணர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் முதல் கட்டமாக ஆத்தூர், ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக பழனி, சாணார்பட்டி ஆகிய பகுதிகளிலும் நடத்தப்பட்டு இளம்பிள்ளைவாத சிகிச்சை நிவாரணம் அளிக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் நிலக்கோட்டை மற்றும் வேடசந்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இளம்பிள்ளைவாத நோய்க்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 8 இடங்களில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு நிவாரணம் செய்யப்பட்டுள்ளது.

இம்முகாம்களின் மூலம் 325 நபர்களுக்கு இளம்பிள்ளைவாத நோய் கண்டறியப்பட்டு அவர்களின் 30 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு முட நீக்கியல் சாதனம் வழங்கி நிவர்த்தி செய்யப்பட்டது. தலா ரூ.600 வீதம் 30 நபர்களுக்கும் ரூ.18 ஆயிரம் செலவிடப்பட்டது.

தசைப் பயிற்சி மூலம் நிவாரணம் அளித்தலின் பொருட்டு 132 நபர்களுக்குத் தசைப் பயிற்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

முட நீக்கியல் சாதனம்

இம்முகாமில் 118 நபர்களுக்கு முட நீக்கியல் சாதனம் வழங்கத் தேர்வு செய்யப்பட்டது. 118 நபர்களுக்கு முட நீக்கியல் சாதனம் வழங்கும் பொருட்டு தலா ரூ.506 வீதம் மொத்தம் ரூ.73 ஆயிரத்து-370க்கு145 முடநீக்கியல்சாதனங்கள் வழங்கப்பட்டன. இதன் உபயோகம் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ஊன்றுகோல்

இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத நபர்களுக்கு ஊன்றுகோல் மூலம் நடந்திட வழிவகை செய்யும் பொருட்டு, தலா ரூ.385 வீதம் 42 நபர்களுக்கு ரூ.16 ஆயிரத்து 170 மதிப்புள்ள ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்று சக்கர வண்டி

இந்நோயினால் பார்திக்கப்பட்டு நடக்கவே இயலாத 30 நபர்களுக்குத் தலா ரூ.2,200 வீதம் ரூ.66 ஆயிரம் மதிப்புள்ள 30 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 4 நபர்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.8 ஆயிரத்துக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி உதவித் தொகை

கல்வி கற்பதற்கு, இந்நோயினால் பாதிக்கப்பட்ட 4 நபர்களுக்கு மைய அரசின் மூலம் கிடைக்கும் கல்வி உதவித் தொகை தலா ரூ.850 வீதம் ரூ.3 ஆயிரத்து 400-ம் தமிழக அரசின் சார்பில் 171 நபர்களுக்கு ரூ.14 ஆயிரத்து 989-ம் வழங்கப்பட்டுள்ளது.

வங்கிக் கடன்

இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்ட 13 நபர்களுக்குத் தலா ரூ.3 ஆயிரம் வீதம் ரூ.39 ஆயிரம் வழங்கப்பட்டது.

பராமரிப்பு உதவித் தொகை

இந்நோயினால் பாதிக்கப்பட்டு எந்த ஒரு பணியையும் செய்ய இயலாத 5 நபர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டிற்கு பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி)
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

குடிப் பழக்கமாம் உயிர்க்கொல்லி!

மது அருந்துவதால் நூற்றுக் கணக்கான மக்கள் தினமும் உயிர் இழக்கின்றனர். மது அருந்துபவர்களைப் பல கொடிய நோய்கள் தாக்குகின்றன - மனிதனின் ஈரல், நரம்பு தொடர்பான நோய்கள், உயர் இரத்த அழுத்தம், மனநோய் போன்றவைகளை மட்டுமல்ல; பல சாலை விபத்துக்களையும் மது ஏற்படுத்துகிறது.

உலகத்தில் உள்ள மொத்த வயது வந்தவர்களில் 10 சதவிகிதத்தினர் குடிக்கு அடிமையானவர்களாக இருக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டால் ஆக்கத்திறனும், ஊக்கத்திறனும் குறைவதையும் பல விபத்துக்கள் நடைபெறுவதையும், பலபேர் உடல், மன வியாதிகளால் பாதிக்கப்படுவதையும், இதனால் குடிப்பழக்கமுடையோர் குடும்பத்தில் பலவிதப் பிரச்சினைகள் எழுவதையும் நாம் காண்கிறோம்.

எத்தில்-ஆல்கஹால் (Ethyl Alcohol)எல்லா வகை மதுபானம் தயாரிப்பிலும் முக்கியப் பொருளாகும்.

இது - அமெரிக்காவில் தயாரிக்கப்படும் விஸ்கியில் (Whisky) 51.5 சதவிகிதமும், இந்தியத் தயாரிப்புகளான ரம் (Rum), ஜின் (Gin) மற்றும் விஸ்கியில் 42.8 சதவிகிதமும், ஸ்காட்ச் விஸ்கியில் (Scotch Whisky) 62 சதவிகிதமும், கோக்நாக் பிராந்தியில் (Cognac Brandy) 70 சதவிகிதமும், ஒயினில் (Wine) 10-லிருந்து 15 சதவிகிதமும், பீர் வகைகளில் (Beer) 5-லிருந்து 8 சதவிகிதமும் சேர்க்கப்படுகிறது.

குடிக்கப்படும் மது மாற்றம் ஏதுமின்றி வயிறாலும் (Stomach) சிறு குடலாலும், அப்படியே உறிஞ்சப்படுகிறது. பால் மற்றும் கொழுப்புச் சத்துள்ள உணவுப் பொருட்கள் உட்கொள்வதால் மதுவை உடல் ஏற்றுக் கொள்வதைத் தடுக்கின்றது; தண்ணீர், உறிஞ்சும் தன்மையை ஊக்குவிக்கின்றது. மது அருந்திய ஐந்து நிமிடத்தில் அதன் விளைவும் பாதிப்பும் இரத்தத்தில் தெரிகிறது. அதாவது மது அருந்திய ஐந்து நிமிடத்தில் அது இரத்தத்தில் கலந்து விட்டதற்கான அறிகுறி தென்படுகிறது. அதிக அளவு வீரியத்தன்மை (Concentration) 30-லிருந்து 90 நிமிடத்தில் இரத்தத்தில் தெரிகிறது. இரத்தத்துடன் அது உடலின் பல பாகங்களுக்குச் செல்கிறது.

மதுபானம் அருந்திய சிறிது நேரத்தில் ஒருவிதத் தளர்ச்சி ஏற்படுவது போல ஒரு உணர்வு ஏற்பட்டு, அடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற ஆற்றல், நல்ல நிலையில் உள்ளோம் என்ற மன நிறைவு மற்றும், நம்பிக்கை போன்றவை சிதைகின்றன.

இந்த உணர்வு வந்த நிலையில், குடிப்பவன் மேலும் மேலும் மது அருந்துவதற்கு உந்தப்படுகிறான். பிறகு அவன் குடிக்கு அடிமையாகவே ஆகிவிடுகிறான்.

குடித்துப் பழகியவன் எல்லா நேரத்திலும், மதுவின் பாதிப்பிலேயே இருக்க விரும்புகிறான். இவ்வாறு குடிப்பதால் அவனால் மதுவின் அளவைக் குறைக்க இயலாதவனாகி, அதிகரித்துக் கொள்வதனால் அவனுடைய உடல் மிகவும் பாதிப்படைகிறது.

விளைவு - அவனால் கூர்மையாகச் சிந்திக்க இயலாமல் போய் விடுகிறது! அவனுடைய செயல்கள் கோவையாக இல்லாமல், போய் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் செயல்படுவதுடன் பேச்சும் தெளிவாக இல்லாமல் உளறத் தொடங்குகிறான். முகம் வீங்கி அல்லது உப்பலாகி எப்பொழுதும் வேர்த்துக் கொண்டு கண்கள் சிவந்த நிலையில் பார்வைத் தெளிவின்றிக் காணப்படுகிறான்.

இதற்கு, நம் உடலில் உள்ள மத்திய நரம்பு மண்டலம் (Central Nervous System) தளர்ச்சியடைவதே காரணமாகும். மதுவுக்கு அடிமையானவர்கள் செயலற்ற திகைப்பு நிலையை அடையலாம்; அல்லது முற்றிலுமாகச் செயலிழந்து போகலாம்; எல்லா உணர்ச்சியும் இழந்த மயக்க நிலையில் மரக்கட்டைபோல் தள்ளப்படலாம்.

வலிப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்றவை வந்து, உயிருக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. குடிக்கு ஆளானவர்கள், எப்பொழுதாவது மது அருந்துபவர்களைவிட அளவில் சிறிதே அருந்தினாலும் அவர்களையும் கொடிய நோய்கள் தாக்கும்.

குடிக்கு ஆட்பட்டவர்கள் மதுவின்மேல் மிக அழுத்தமான வெறி கொண்டவர்களாக இருப்பார்கள்.

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்மூலம் - அகால மரணம் அடைபவர்களில் குடியினால்தான் இளைஞர்கள் சாவு அதிகம் என அறியப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 80 இலட்சம் அமெரிக்கர்கள் இப்போது குடிக்கு ஆட்பட்டு அவதிப்படுகிறார்கள் என்று நிபுணர்கள் புள்ளி விவரம் தருகின்றனர்.

அவர்களில் மூன்றில் இரண்டு பேர் ஆண்களாக உள்ளனர். மது அருந்துவதால், ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் அதிகப் பாதிப்பு ஏற்படுகிறது என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். அதிலும் - சிகிச்சை பெறும் மூன்றில் இரண்டு அமெரிக்கப் பெண்கள் 35 வயதுக்குட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். The American Council on Alcoholic Problems (ACAP) என்ற அமெரிக்க இயக்கம், மதுபானம் தயாரித்தல், விளம்பரப்படுத்துதல் மற்றும் விற்பனையைக் குறைப்பதற்காக அமைக்கப்பட்டுச் சிறப்புறச் செயலாற்றி வருகிற ஓர் அமைப்பாகும்.

குளிர் காலத்தில் உடலில் வெப்பமூட்டுவதற்காக என்று கூறிப் பலர் மது அருந்துகிறார்கள்; இது மிகவும் தவறு. ஏனென்றால் உண்மையில் நடப்பது இதற்கு நேர்மாறாக உள்ளது.

பொதுவாக - சீதோஷ்ணநிலை குளிராக இருக்கும்போது உடலில் உள்ள சிறிய இரத்தக் குழாய்கள் (நாளங்கள்) சுருங்கி இரத்த ஓட்டத்தைக் குறைக்கின்றது. இதனால், உடலில் உள்ள வெப்பம் உடலின் மேல்பாகத்திற்கு - அதாவது உடலின் வெளிப்பகுதிக்கு வராமல், உடலில் இருந்து வெளியேறாமல் இருக்கும். மது அருந்தியவுடன் இந்த இரத்தக் குழாய்கள் விரிவடையும். அந்த நிலையில் உடல் சூடாக இருப்பதுபோலவும், உடல் கதகதப்பாக இருப்பது போன்றும் உணர்வு ஏற்படுகிறது. ஆனால், உண்மையில் உடலில் உள்ள வெப்பம் வெளியேறி விடுகிறது. ஆனால் இந்த வெப்பம், உண்மையில் வெளியிலிருந்து உடலுக்கு வரும் வெப்பம் இல்லை, உடலிலிருந்து வெளியேறும் சூடுதான் என்பதை மொடாக் குடியர்கள் அறிய வேண்டும்.

மது அருந்துபவர்கள் குடிக்கு ஆட்படுவதற்கு முன்பாகவே மிக எளிமையான முறையில் அதை நிறுத்தி விடலாம். அதற்குத் தகுந்தாற்போலக் குடும்பச் சூழ்நிலையும், சுற்றுப்புறமும், மதுப்பழக்கத்தை விடுவதற்கான நல்ல எண்ணத்தை ஏற்படுத்துவதற்குத் தக்க நண்பர்களும் அமையவேண்டும்.

மது அருந்துவதில்லை என்று சபதம் எடுத்து, விரதம் போல் பாவித்து மனக்கட்டுப்பாட்டுடன் நிறுத்தலாம். •

நன்றி: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'
தமிழில்: இரா. இராசசேகரன்.

தமிழ் மொழியிலே முதன் முதலாகத் தொடர்கதை - அதுவும் கற்பனையில் எழுதிய பெருமைக் குரியவர் யார் என்று கேட்டால் ''மாயூரம் வேதநாயகம் பிள்ளை'' என்று சட்டென்று சிலர் சொல்லி விடுவார்கள்.

ஆம்; 1876-இல் நகைச்சுவை ததும்ப அவர் எழுதி வெளியிட்ட புதுமைத் தொடர்கதை 'பிரதாப முதலியார் சரித்திரம்'- தான் அது. தமிழில் எழுதப்பட்டு, ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்ட முதலாவது கற்பனைத் தொடர்கதையும் இதுதான்!

அதற்குப் பிறகு 1887-இல் 'சுகுண சுந்தரி சரித்திரம்' எற்றொரு கதையையும் எழுதி வெளியிட்ட வேதநாயகம் பிள்ளை கிறிஸ்துவ மதத் தொடர்பாக அவ்வப்போது தாம் எழுதிய பல இசைப் பாடல்களையும் தொகுத்து - 'சத்தியவேதக் கீர்த்தனை' என்றும் 'தேவதோத்திர மாலை' என்றும் 1889-இல் வெளியிட்டார்.

ஆகவே இவர் வெறும் கதாசிரியர் மட்டுமல்ல; இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த தமிழறிஞரும் கூட!

கிறித்தவரான விதம்:

திரிபுரத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் - அதாவது திருநெல்வலி மாவட்டத்தில் உள்ள குளத்தூர் இவரது பிறப்பிடம்.

சவரிமுத்துப் பிள்ளை - ஆரோக்கிய மரியம்மாள் என்பது இவருடைய பெற்றோர் பெயராகும். 11.10.1826 இவர் பிறந்த நாள்.

வேதநாயகம் பிள்ளையின் முன்னோர்கள் சைவ வேளாள குலத்தினராவர். இவருடைய முப்பாட்டனரான மதுரநாயகம் பிள்ளை என்பவர், தம் ஐம்பதாவது வயதில் 'தூலைப் பிடிப்பு நோய்' என்றோர் கொடிய நோயினால் பெரும் அவதிக்கு ஆளானார்.

உள்ளூர் நாட்டு வைத்தியரின் மருந்துகளாலெல்லாம் அந்நோயைக் குணப்படுத்த முடியவில்லை; ஒரு நாள் நோய்ப் படுக்கையிலிருந்து அவர் கனவில், அவர்களது குல தெய்வமாம் கலிவராயன் என்கிற ஐயனார் தோன்றி 'ஆவூருக்கு வந்துள்ள மருத்துவரை அணுகினால் நோய் நீங்கும்' என்றதாம். அதன் படி -

அப்போது புதுக்கோட்டை அரசைச் சேர்ந்ததாக இருந்த ஆவூருக்குச் சென்றார் மருதநாயகம் பிள்ளை.

ஆவூருக்கு வந்திருந்த கிறித்தவப் பாதிரிமார்கள் மேனாட்டு முறைப்படி அவருக்குச் சிகிச்சையளித்தனர்; நோய் நீங்கிக் குணம் பெற்ற மருதநாயகம் பிள்ளை, அவர்களால் கிறித்தவ மதத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது வரலாறு.

ஆகவே - அவர்கள் வழி வந்த வேதநாயகம் பிள்ளையும் கிறித்துவர். எனினும் தம் வாழ்நாள் முழுதும் 'எம்மதமும் சம்மதமே'

என்கிற பொது நோக்குடன் நடந்து கொண்டார் இவர்.

மொழிப் புலமை

இளமை முதலே நல்ல தமிழறிவு கைவரப்பெற்றிருந்தார் வேதநாயகம் பிள்ளை. பிறகு, திரிசிரபுரம் வழக்கு மன்றத்தில் மொழி பெயர்ப்பாள ராக இருந்த தியாகப் பிள்ளையிடம் ஆங்கிலம் கற்று, அம்மொழித் திற மையும் பெற்றார்.

முறைப்படி மரபுக் கவிதைகள் எழுதுமளவுக்கான புலமை வேத நாயகம் பிள்ளைக்கு இருந்தது.

ஒரு நாள் தனது பெரியம் மாளின் மகன் அடைக்கலம் என் பவர் தம் வீட்டுக்கு வந்த போது -

'சீர்பெருகு குளத்தூர்வாழ்
அடைக்கல அண்ணாகருணைத்
தியாக வா, வா!
ஏர்பெருகு நின்சுமுகம்
கண்டுவந்தேன் இன்பமிகும் நீயும்
நானும்
ஓர்உதரம் தனிற்பிறவாத்
தோடமொன்றே, மாமணியும்
ஒளியும் போல
நேர்படவே நிலைநிற்கும்
எந்நாளும் நம்மிருவர் நேசந் தானே!

- என்றோர் அறுசீர் விருத்தம் பாடினார் வேதநாயகம் பிள்ளை; இதுவே இவருடைய முதற்கவிதை எனப்படுகிறது.

தாமே பல நூலும் பயின்று தம் அறிவைப் பெருக்கிக் கொண்டவர் வேதநாயகம் பிள்ளை. அவ்வப் போது பொம்மைக் கல்யாணம், நலங்குப் பாடல், சோபனப் பாடல் முதலானவைகளை இவர் வேடிக்கை யாகப் பாடிக் களித்ததும் உண்டு.

வேலை கிடைத்தது

நம் இந்திய நாடு ஆங்கிலேயர் வசமிருந்த காலம் அது. ஆகவே 22-வது வயதில்தான், அரும்பாடு பட்டு திருச்சிராப்பள்ளி நீதிமன்றத் தில் கார்டன் துரை என்பார் மூலம் 'ரிகார்டு கீப்பர்' என்ற வேலையில் அமர்ந்தார் இவர். பிறகு, பாயிலோ துரை என்பவரின் மூலம் தேர்வு பெற்று அதே நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளர் வேலையில் அமர்ந் தார்.

பகல் முழுவதும் வேலை, மாலை யில் சிலருக்குப் பாடம் சொல்லித் தருதல், இரவில் நூலாராய்ச்சி என நாட்கள் கடந்தன.

ஒரு நாள், வேறொருவர் செய்த பிழை காரணமாக வேதநாயகருக்கு வேலை போய்விட்டது. சிலகாலம் இதனால் தொல்லை துயருக்கு ஆளாக நேர்ந்தது.

பிறகு, கீழ் முறை மன்றத்தில் நீதிபதியாக இருந்த சுவிண்டன் துரை என்பாருடன் பெரிதும் வாதாடி, மீண்டும் அவ்வேலையைப் பெற்றார் வேதநாயகம் பிள்ளை. இதற்குத் துணையாக இருந்தவர், சுவிண்டன் துரைக்குப் பிறகு அப் பதவிக்கு வந்த ஆரிச் துரையாவார்.

தமிழ்மேல் காதல்

இந்தக் கால கட்டத்திலேதான் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இந்த நட்பு நெருக்கத் தால் வேதநாயகம் பிள்ளைக்கு இருந்த தமிழ் மொழியின் மீதான காதல் பெரு வளர்ச்சி பெற்றது.

நாள்தோறும் கவிதைகள் எழுது வதும், மீனாட்சி சுந்தரனாரிடம் அவற்றைக் காட்டி மகிழ்வதும் பொழுதுபோக்காயிற்று.

அவரும் இவரது மொழித் திறத் தைப் பாராட்டிக் கவிதை எழுதி யருளியதுண்டு.

வேதநாயகம் பிள்ளை மீது மீனாட்சி சுந்தரனார் எழுதிய 438 செய்யுட்களைக் கொண்டதோர் தொகுப்பு நூல் - 'குளத்தூர் வேத நாயகம் கோவை' என்றும் 'குளத் தூர்க் கோவை' என்றும் பெயர் பெற்றது; பெரும் புகழ் பெற்றது.

இதற்குப் பிறகு - அவரை, இவர் தம் ஆசானாகவே போற்றி மதிப் பளிக்கலானார்.

முன்சீப் வேலை

1856-இல், பதவி உயர்வு பெற எண்ணிய வேதநாயகம் பிள்ளை, முன்சீப் வேலைக்காக மனுச்செய்து கொண்டார். கும்பகோணம் நீதி மன்றத் தலைவராக இருந்த பீச்

தமிழரசு

தமிழ்நாடு அரசு ஏடு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 24

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை) அரையாண்டுச் சந்தா ரூ. 12

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

—உதவி இயக்குநர்
விற்பனை விநியோகம்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

சாம்பு துரை என்பவரே நேர்காணல் தேர்வு அதிகாரியாக வந்தமர்ந்தார்.

நேர்காணலுக்காக - வேத நாயகம் பிள்ளை, (பிற்காலத்தில் சென்னையில் நீதிபதியாக இருந்த முத்துசாமி ஐயர், ரகுநாத ராவ்) உட் பட அறுபது எழுபதுபேர் வந்திருந் தனர்.

பேட்டி முடிவில் மேலே நாம் குறிப்பிட்ட மூவர் மட்டுமே தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

பின்னர், தரங்கம்பாடி நீதி மன்றத்தில் காலியாக இருந்த முன்சீப் வேலை (சம்பளம் அறுபது ரூபாய் என்பது நூறு ரூபாயாக உயர்த்தப்பட்டது) நம் வேதநாயகம் பிள்ளைக்கு அளிக்கப்பட்டது.

நீதிநூல் வெளியீடு

வேதநாயகம் பிள்ளை பிறகு, 1858 இல் அங்கிருந்து சீர்காழிக்கு மாற்றப்பட்டார். புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் அங்கு வந்து சேர்ந்தார்.

வேதநாயகம் பிள்ளை அவ்வப் போது தாம் எழுதிக் குவித்திருந்த இருநூறு முந்நூறு அறநெறிக் கருத் தமை அரிய கவிதைகளையெல்லாம் அவரிடம் காட்டிச் செப்பனிட்டுக் கொண்டார்.

அவரது சிறப்புப் பாயிரத்தோடு, அத்தொகுப்பானது 'நீதிநூல்' என்ற பெயருடனேயே தனி நூலாக வெளி யிடப் பெற்றது.

வேதநாயகம் பிள்ளை கேட்டுக் கொண்டதற்கிணங்க புலவர் மீனாட்சி சுந்தரனாரால் 'சீர்காழிக் கோவை' என்றோர் அறிய நூல் இயற்றப் பெற்றது. அந்நூல் வேதநாயகர் தலைமையில், சீர்காழி கோயிலி னுள்ளேயே அரங்கேற்றப்பட ஏற் பாடு நடந்தபோது, கிறிஸ்தவர் இவர் என்பதால் சில சலசலப்பு மூண்டது. பிறகு ஒருவாறாக அமை தியான முறையிலே அவ்விழா நடந் தேறியது.

வறியோர்க்கு உதவிடல்

1860-இல், வேதநாயகம் பிள்ளை மாயூரத்திற்கு மாற்றப் பட்டார்.

இவர் சென்ற நேரத்தில் அப் பகுதியில் ஏற்பட்ட கடும் வறட்சி நிலை காரணமாக மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியிருந்தனர்.

• பழமையின் பிடியிலிருந்து பக்குவமாக மக்களை விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்கவேண்டும் வாலிபர்கள்!

—அறிஞர் அண்ணா

இவரோ, தம்மால் முடிந்த அள வுக்கு, அப்பகுதி மக்களுக்கெல்லாம் பேருதவி புரந்தார். உடை கொடுத் தார்; உணவளித்தார்; ஏழைச் சிறார்களுக்குக் கல்வி கற்றிட உதவி புரிந்தார்.

இதற்கெல்லாம் மேலாக தம் வீட்டருகிலேயே கஞ்சித் தொட்டி ஒன்றும் திறந்து, நாள்தோறும் நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட் டோர் பசிறாற வகை செய்தார்.

இவ்வாறான நற்பணிகளுக் காகப் பாவலர் கோபால கிருஷ்ண பாரதியார் - 'நீயே புருட மேரு' எனத் தொடங்கும் இசைப் பாடல் ஒன்றை இயற்றிப் பாடி, இதயம் களித்ததும் உண்டு.

சித்தாந்த சங்கிரகம்

ஆங்கிலத்திலே இருந்த உயர் நீதிமன்றத் தீர்ப்புகளையும் சில வகைச் சட்ட திட்டங்களையும் புரி யாமல் நம்நாட்டுச் சட்டத்துறை யினர் பலரும் குழம்பிக் கொண்டி ருந்த காலம் அது. இதை உணர்ந் தார் வேதநாயகர்.

ஆகவே - 1862-இல் முதன் முதலாக - அவற்றுள் முக்கியமான வைகளைத் தமிழில் மொழி பெயர்த் தெழுதி வெளியிட்டார். 'சித்தாந்த சங்கிரகம்' என்ற இந்த நூல் வழக் காடு துறையைச் சேர்ந்த நம் நாட் டோருக்கெல்லாம் நல்ல உறுதுணை யாக இருந்து உதவியது.

இதன் பின்னாலேதான் அவ் வகை நூற்கள் பலராலும் எழுதி வெளியிடப்பட்டன.

மகளிர் கல்வி, பெண்கள் முன் னேற்றம் பற்றியெல்லாம் மிகுந்த பேரவாக் கொண்டிருந்தார் பிள்ளை யவர்கள்; இதன் காரணமாக 1869-இல், உரைநடையும் கவிதை யும் கலந்த 'பெண்மதி மாலை' என்ற பெருமைக்குரிய நூலொன்றை எழுதி வெளியிட்டுப் புகழ் பெற்றார்.

வேலையை விட்டு விலகுதல்

1872-இல், தஞ்சை மாவட்ட நீதிமன்றத் தலைவராக இருந்த நெல்சன் துரைக்கும் நமது வேத நாயகம் பிள்ளை அவர்களுக்கும் இடையே சில பொறாமையாளர் களால், சரியான உறவு இல்லாத நிலை ஏற்பட்டது.

இதனாலும், முதுமை காரண மாக அடிக்கடி நேர்ந்த உடல் நலி வினாலும் வேலையை விட்டு விலகிக் கொண்டார் வேதநாயகம் பிள்ளை; மாதம் நூறு ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

இதன் பின்னாலே, இவருடைய வாழ்நாள் படிப்பதிலும் எழுதுவதி லும் இனிது கழிந்திடலாயிற்று. அதற்கடுத்த ஆண்டே - திருவருளந் தாதி, திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி போன்ற நூற்களை எழுதி வெளியிட்டார் வேதநாயகனார்.

• அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளே சுதந்திரம் - விடுதலை - உரிமை ஆகிய அனைத்தும்!

—இங்கர்சால்

நீர்

இருக்கும் வளங்களைச் சுரண்டி விட்டால் வருங்காலச் சந்ததியினருக்கும், சுற்றுச் சூழலுக்கும் பிரச்சினைகள் ஏற்படும், நிலத்தடி நீரைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தினால்தான், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும் சமயங்களில் அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

அறிவியல் முறைப்படி நிலத்தடி நீரினைக் குறிப்பிட்ட காலங்களுக்கு மறு ஆய்வு செய்யவேண்டும். நமக்குக் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீரின் வளம், உலகில் உள்ள ஆறுகள், ஏரிகள், அணைக்கட்டுகள், உள்நாட்டுக் கடல்கள் இவற்றின் ஒட்டு மொத்த நீரைக் காட்டிலும் 35 மடங்கு அதிகமாகும்.

நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தினால், உள்நாட்டு, மண்டல, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தோன்றிவிடும்.

குழாய்

குடிநீர், நிலவாயு, கச்சா எண்ணெய் முதலியவற்றை சேதாரமின்றியும், மாசபடாமலும் எடுத்துச் செல்ல குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கி.மு.5000-வது ஆண்டில் சீனர்கள் மூங்கில் மற்றும் களிமண் குழாய்களைப் பயன்படுத்தினார் என நம்பப்படுகிறது. 2000-ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இத்தாலியர்கள் நகரங்களுக்கு குடிநீரைக் கொண்டு செல்ல குழாய்களைப் பயன்படுத்தியதற்கான ஆதாரம் இன்றும் காணப்படுகிறது.

அமெரிக்காவில் முதன் முதலாக 1870-இல் இயற்கை வாயுவைக் கொண்டு செல்ல இரும்புக் குழாய் கட்டப்பட்டது. 1974-75-இல் அலாஸ்காவில் எஃகுக் குழாய் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களைக் கொண்டுசெல்ல 3,473 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

—நன்றி: 'தூவானம்'

நண்பர்களின் வேண்டுகோளின்படி - சென்னையை அடுத்துள்ள பெரிய பாளையத்தில் எழுந்தருளியுள்ள அம்மன் மீதும் அற்புதமான பதிகம் ஒன்று பாடியிருக்கிறார் இவர்.

ஒவ்வோர் கால கட்டத்திலே இவரெழுதிய அல்லது பாடிய பாடல்களெல்லாம் 1878-இல் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

தமிழ்ப் புலமை காரணமாகத் திருவாவடுதுறை ஆதீனத்தார்க்கும், நம் வேதநாயகனார்க்கும் நல்ல தொடர்பிருந்து வந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

வேதநாயகனாரின் நகைச்சுவைப் பாடல்கள்

வேதநாயகனாரின் பாடல்கள் கருத்தாழமும் நல்ல நயமும் உடையவைகளாக மட்டுமல்ல; சில நேரங்களில் நகைச்சுவை உணர்வு பொங்குவதாகவும் அமைந்ததுண்டு.

ஒரு சமயம், இவர் வைத்திருந்த வண்டிக்கு நண்பரொருவர் ஒரு மாடு வாங்கிக் கொடுத்திருந்தார். நல்ல தீனியோடு கொழுத்துவந்த இந்த மாடு, அந்த வேலைக்கும் உதவாததாக இருந்தது.

அந்த மாட்டைப் பற்றி வேதநாயகனார் ஒரு பாட்டே எழுதினார். பாடலில் எவ்வளவு நகைச்சுவை நயம் பொங்குகிறது பாருங்களேன்.

'இட்டமுடன் முதலியார்
வாங்கிவந்த காளைதினம்
இருபோர் தின்னும்;
சட்டமுடன் கொள்ளுண்ணும்
புல்லுண்ணும் அதைப்பண்டி
தன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும்
தொட்டவர்மே லேகழியும் கீழே வீழும்
எட்டாள்கள் தூக்கிடினும்
தடிகொண்டு தாக்கிடினும்
எழுந்தி ராதே!'

விடுதலை வேட்கை

முன்சீப் வேலையை விட்ட பிறகு மாயூரம் (மயிலாடுதுறை) நகரவைத் தலைவராகவும் சில காலம் இருந்தார். வேதநாயகனார்.

எம்.ஏ.,பி.எல்., கற்றுத் தேர்ந்து திருநெல்வேலி வண்ணாரப் பேட்டையில் முன்பு வழக்குரைஞராகப் பணியாற்றிய போது இந்திய விடுதலை வேட்கை தொடர்பான சில பாடல்களை இவர் எழுதியதுண்டு

'பொற்பலகை மீதிவர்ந்து
பொம்மென் றளிமுரல
எற்பூ இடறி
எழிலார் வளம் சிதைத்துச்
சொற்புலவோர் வாழ்த்தும்
சுதந்திரைபேர் நாம்பாடி
விற்புருவம் வேர்வையெழ
ஆடாமோ ஊஞ்சல்,
விருப்பளிக்கு மாபாடி
ஆடாமோ ஊஞ்சல்!'

- என்ற பாடல் மட்டுமல்ல; தேவாரத்தின் பழைய திருத்தொண்டத் தொகைபோல, இவர் ஒரு புதிய திருத்தொண்டத் தொகையும் விடுதலை வேட்கையுடன் எழுதியுள்ளார்.

'தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக்
குயவனார்க் கடியேன்...'

- என்றெல்லாம் அது தொடங்குகிறதென்றால் -

'தன்னுயிரைப் பிறர்க்களித்த
தாதாபாய்க் கடியேன்...'

- என்று இது தொடங்கியுள்ளது. 'பாரத மாதாவினுக்கும் அடியேன்' என்றெல்லாம் தம்மைக் குறித்தும் அதில் சொல்லிக் கொள்ளுகிறார் வேதநாயகர்.

'நெல்லைச் சிறுவன்' என்று அதில் தன்னைப்பற்றி இவர் அடக்கத்தோடு எழுதியிருப்பதும் நினைவு கூரத் தக்கது.

அந்நாளில் - பாவலர் பாரதியாருக்கும், நாவலர் பாதியாருக்கும், மிக நெருங்கிய நட்பினராகவும் இருந்தவர் வேதநாயகம் பிள்ளை.

கடைசிக் காலம்

முதுமைக் காலத்தே 'அதைப்பு நோய்' கண்டு பெரும் அல்லலுக்கு ஆளானார் இவர்.

நாட்டு வைத்தியம், ஆங்கில மருத்துவம் எனப் பலவகை மருத்துவங்களும் மேற்கொள்ளப்பட்டன; பயனில்லை.

21.6.1886 அன்று, நமது பலதுறை அறிஞராம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்கை எய்தினார்.

- பி.எல். ராஜேந்திரன்.

சென்னையில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா!

அண்ணல் காந்தியடிகளின் 124-வது பிறந்த நாள் விழா, சென்னையில் உள்ள காந்தி மண்டபத்தில், 2.10.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பங்கேற்ற இவ்விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், திருக்குறளார் வீ.முனிசாமி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை மூலம் நடத்தப்பட்ட இவ்விழாவில், இயக்குநர் திரு. க.கணேசன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழா முடிவில் துணை இயக்குநர் திரு. இர. அண்ணாதுரை அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிவில் செல்வி ஸ்ரீநிதி ரங்கராஜனின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது; அதைத் தொடர்ந்து 'காந்தி' திரைப்படம் திரையிடப் பட்டது.



விழா மேடையின் ஒருபுறம் காந்தி அடிகளின் முழு உருவப் படமும், இன்னொருபுறம் அவர் துணைவியார் கஸ்தூரிபா அம்மையார் முழு உருவப்படமும் வைக்கப்பட்டிருந்தது. வருகைதந்த பிரமுகர்களுக்கெல்லாம் கதராடை அணிவித்துக் கவுரவிக்கப்பட்டது.

வரவேற்புரை:

செய்தித் துறை இயக்குநர் அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

இன்று காலை முதலே தமிழக அரசு அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி வருகிறது; 1947-ஆம் ஆண்டுக்கு முன்பு, மக்கள் எழுத்தறிவோ கல்வி அறிவோ போதுமான அளவுக்குப் பெறாதிருந்த நிலையிலும் அவர்களுக்குச் சத்தியம், உண்மை, தியாகம் ஆகியவற்றைக் கற்பித்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்து வெற்றி பெற்றவர், காந்தியடிகள். 'வெள்ளையனே வெளியேறு, இயக்கப் பொன் விழா ஆண்டில், விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கெல்லாம் பல்வேறு சலுகைகளை வழங்கிப் பெருமை கொண்டவர் நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களாவர்.

திருக்குறளார்:

தம்முடைய வாழ்த்துரையில் திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் பேசியதாவது:

''இந்திய நாட்டுக்கே விடுதலை வாங்கித் தந்த பெருமையாளரான மகாத்மா காந்தியடிகள் உயர்ந்த பண்புகளை இந்நாட்டில் விதைத்த வரும் ஆவார். தென்னாட்டில் எப்படி பெரியார் தோன்றியிரா விட்டால் அண்ணா இருந்த இடமும், நம் நாவலர் இருந்த இடமும் தெரியாமல் போயிருக்குமோ- அதே போல் வடநாட்டில் காந்தியார் தோன்றியிராவிட்டால் நேரு, படேல், நம் காமராசர் போன்ற பெரும்பெரும் தலைவர்களையெல்

லாம் நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போயிருக்கும்''.

சிலம்புச் செல்வர்

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையாவது:

''நம் நாட்டில் கட்சி வேறுபாடின்றி ஒருவருக்கு விழா எடுக்கப்படுகிறதென்றால், அது காந்தியாருக்குத்தான். இந்திய நாட்டின் ஜனாதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்டவரை ஆக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார் காந்தியடிகள். திருமதி இந்திராகாந்தி அவர்கள், அதை நிறைவேற்றி ஜெகஜீவன்ராம் அவர்களை ஜனாதிபதியாக்க முயன்று- அதனாலேயே காங்கிரஸ் பிளவு பட்டது. அந்தக் கனவு இப்போது தான் நிறைவேறியிருக்கிறது; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவர் இந்நாட்டின் உதவி ஜனாதிபதி ஆக்கப்பட்டிருக்கிறார். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவேண்டிய பொறுப்பு உங்கள் எல்லோரது கைகளிலும் இருக்கிறது''.

சமூக நலத்துறை அமைச்சர்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர்.இந்திரகுமாரி அவர்கள் பேசியதாவது:

''அண்ணல் காந்தியடிகள் தமது ஆன்மீக பலத்தாலும், அமைதி வழியாலும், அறநெறிப் போக்காலும் வல்லரசுகளையே வலிமையிழக்கச் செய்தவராவார். ஆணுக்குப் பெண் தாழ்வில்லை என்பது அவரது முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகும். காந்தியடிகளின் அடியொற்றி ஆட்சி நடத்திவரும் நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், மகளிர் முன்னேற்றம் கருதி, அவர் கனவை நனவாக்கும் விதத்தில் ஆற்றிவரும் மகத்தான பணிகளை நாடு காண்கிறது. இந்த நல்வரசு நிலைபெற- காந்தியடிகள் பிறந்த இந்த நாளில் நாமெல்லாம் சங்கல்பம் ஏற்க வேண்டும்.

கல்வி அமைச்சர்:

மாண்பமிகு கல்வியமைச்சர்

டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''சோப்பு, சீப்பு, கண்ணாடி விற்க இந்த நாட்டுக்கு வந்த வெள்ளையரின் கீழ் நாம் அடிமைப்பட்டோம்; அவர்களை எதிர்த்து நின்று வெல்ல, நாமெல்லாம் ஒன்றுபட்டு நிற்க மூல காரணமானவர் காந்தியடிகளாவார். நாளடைவில், இன்று இந்தியா வெங்கும் பல்வேறு சூழல்களில் அந்த ஒற்றுமை உணர்வு கெட்டிருப்பதைக் காண்கிறோம். அந்த நிலை மாறி, நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட இந்த நாளில் நாமெல்லாம் உறுதி பூணவேண்டும்''

நிதி அமைச்சர்:

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:

''வீழ்ச்சியுற்ற இந்தியருக்கெல்லாம் எழுச்சியூட்டியவர் காந்தி அடிகளாவார். எப்படி வாழ்வது என்றெண்ணும் இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் அவர். இன்றைய தினம் இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது என்றால் அவரே இதற்குக் காரணம். இந்தியாவில் அன்றிருந்த கட்டுப்பாட்டு உணர்வுதான் இப்போது வேண்டப்படுகிறது. மற்றவர்கள், அவர்கள் தவறை உணரச் செய்யத் தனது உடலை, உள்ளத்தைத்தான் காந்தியார் வருத்திக் கொண்டாரே தவிர, மற்றவர்களைத் துன்புறுத்த அவர் எண்ணியதில்லை. ஒவ்வொருவருக்கும் நாணயம் வேண்டும்; நேர்மை வேண்டும்; எழுச்சி வேண்டும் என்பதை நமக்குணர்த்தினார் காந்தியார்; நாமெல்லாம் அதை உணர்ந்து நடந்து கொண்டால் - கடமை ஆற்றினால் வறுமை நீங்கும்-ஏழ்மை அகலும்''.

மேதகு தமிழக ஆளுநர்:

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தமது விழாப் பேருரையில் குறிப்பிட்டதாவது:

''உத்தமமான மனிதர்கள் ஒரு நாட்டுக்கு மட்டுமல்ல; உலகத்திற்கே சொந்தமானவர்கள்; அந்த வகையில் திகழும் காந்தியார் ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆன்ம பலம் உயர்ந்தது என்பதை உலகம் உணரச் செய்தவர்; அமைதிப் புரட்சியின்

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.329 கோடி செலவில் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி உதவியை வழங்க, மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய விவசாயத்துறை இணை அமைச்சர் திரு. கே.சி. வெங்கா அவர்கள் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

1991-'92-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்திற்குக் கடந்த ஆண்டு ரூ.21.96 கோடியும் நடப்பு ஆண்டில் ரூ.35.89 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பாசன வசதி செய்தல், குடிநீர் வசதி வழங்குதல், சாலை வசதி செய்தல், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதல், விவசாய ஆய்வுப் பணிகள் போன்ற கிராமப்புறங்களையே மாற்றி அமைக்கும் பல்வேறுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் உதவியுடன் ரூ.13.65 கோடி செலவில் ஆடு வளர்க்கும் திட்டம், தமிழகத்தில் அமல்படுத்தப்படும். இந்த திட்டத்தின்கீழ் சிறந்த கலப்பின ஆடு வகைகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இதுதவிர, இந்திய விவசாய ஆராய்ச்சி மையத்தின் மூலம் தமிழ்நாட்டில் பயிர் அறிவியல், தோட்டப் பயிர்களை வளர்த்தல், விவசாயப் பொறியியல், விவசாயக் கல்வி, ஆய்வுகள் போன்ற 56 திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டம் எந்த அளவுக்கு அமல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க மாண்புமிகு தமிழக விவசாயத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு மத்திய விவசாயத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

அறிவிப்பாளர் அவர். சமூக, பொருளாதார மாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தப் பாடுபட்ட அவர், உண்மையான ஜனநாயகவாதி என்ற சொல்லுக்குப் பொருளாக விளங்கிய வருமாவார். அந்த மகானின் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம்- அவரது உயர்ந்த இலட்சியத்திற்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்ள முன்வர வேண்டும்''.

பரிசளிப்புகள்:

விழா முடிவில், மேதகு ஆளுநர் அவர்கள்- இந்திய குஷ்ட நிவாரண சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் கவுரவச் செயலாளர் டாக்டர் எஸ்.என். கணபதி அவர்களின் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார்.

அண்ணல் காந்தியடிகளைப் பற்றிய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாநிலக் கல்லூரி மாணவி ஜி.ரேவதி, இரண்டாம் பரிசு பெற்ற காயிதேமில்லத் மகளிர் கல்லூரி மாணவி எஸ். ஸ்ரீதேவி, மூன்றாம் பரிசு பெற்ற புதுக்கல்லூரி மாணவன் சாதிக் பாட்சா ஆகியோருக்கும்- பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற வள்ளல் அழகர்சாமி மேனிலைப் பள்ளி மாணவன் டி. இராஜசேகரன், இரண்டாம் பரிசு பெற்ற சேவா சதன் மாணவி ஆர். இலட்சுமி தேவி, மூன்றாம் பரிசு பெற்ற சாரதா வித்யாலயா மாணவி எம். சண்முகப் பிரியா ஆகியோருக்கும் மேதகு ஆளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக உதவிகள்:

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலம், ஆதி திராவிடர்கள் 20 பேருக்கு ரூ.43,19,351- இருபது அம்சத் திட்டப் பயிற்சியாளர் ஐவருக்கு ரூ.7,500 பெறுமானமுள்ள இஸ்திரிப் பெட்டிகள்- எட்டுப் பேருக்கு ரூ.10,608-48 பெறுமானமுள்ள தையல் எந்திரங்கள் - ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த 7 பேருக்கு ரூ.6,075 விதவைப் பெண்கள் எண்மரின் மறுவாழ்வு நிதி ரூ.24,000 ஒருவருக்கு விபத்து நிவாரண நிதி ரூ.10,000 - முதிய விதவைகள் ஒய்வூதியமாக 130 பேருக்கு ரூ.9,750 ஆகிய நலத்திட்ட உதவிகளும் மேதகு ஆளுநர் அவர்களால் வழங்கப்பட்டன.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, காந்தி மண்டபம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

— நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

உலகச் சுற்றுலா நாள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் உலகச் சுற்றுலா நாள் விழா 27.9.1992 அன்று மாலை மாமல்லபுரத்தில் மிகச் சிறப்பாக் நடைபெற்றது.

இந்த விழாவின்போது மாமல்லபுரம் கலைச் சிற்பங்களை இரவு நேரத்திலும் கண்டுகளிப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்ட சிறப்பு மின் ஒளித் திட்டத்தையும், வார இறுதிக் கலை நிகழ்ச்சியையும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞான தேசிகன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி பி. சிவகாமி, இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுலாத் தினம் கொண்டாடப் படுவதாகக் கூறினார். 1971-இல் ஐந்து உணவு மற்றும் தங்கும் விடுதிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கடந்த ஆண்டு (1991-92) ரூ.33 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது, இந்த ஆண்டில் இது 41 இலட்சமாக உயரக்கூடுமென்றார். கடந்த ஆண்டில் 1.11 கோடி சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வருகை செய்ததாகவும் அவர் கூறினார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி கி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை யேற்றுப் பேசுகையில், மாமல்லபுரத்தில் 1992 செப்டம்பர் மாதம் முதல், வார இறுதியில் நாட்டிய நிகழ்ச்சி நடத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருப்பதாகக் கூறினார். தற்சமயம் மாமல்லபுரத்திலுள்ள நான்கு கலைச் சிற்பங்களுக்கு மின் ஒளி வசதி செய்யப்பட்டிருப்பதாகவும், மற்ற கலைச் சிற்பங்களுக்குப் படிப்படியாக மின் ஒளி வசதி செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாமல்லபுரத்தைத் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக ஆக்கியிருப்பதால், மாமல்லபுரத்தில் போக்குவரத்து வசதியை மேம்படுத்த முட்டுக்காடு முதல் பாண்டிச்சேரி வரையிலான மாமல்லபுரச் சாலையை நான்கு வழிப்பாதையாக மாற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிற்பங்களுக்கு ஒளிவிளக்கு ஏற்றிவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், மாமல்லபுரம் பழங்காலச் சிற்பங்களை உள்ளடக்கிய ஒரு சிறந்த சுற்றுலாத் தலம். உலகின் பல பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருவதால், இங்குள்ள கலைச் சிற்பங்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பராமரிக்க பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், இந்த மின் விளக்குகள் நிரந்தரமாக எரிய வழிவகை செய்யப்படும் என்றார்.

மாமல்லபுரம் வழியாகச் செல்லும் சென்னை-கன்னியாகுமரி வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை ரூ.56 கோடி செலவில் மேம்படுத்தப்படுவதாகவும் இந்தப் பணி திட்டமிட்டபடி 4 ஆண்டுக் காலங்களில் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார் நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 187 கி.மீ. தூர சாலை மேம்பாட்டுத் திட்டப்பணி நடைபெற்று வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்கார்.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. சு. மச்சேந்திரநாதன் இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நிகழ்த்துகையில், இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாமல்லபுரத்தில் நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுமென்றும், 1993 சனவரி திங்கள் முதல் ஒவ்வொரு வாரமும் மூன்று நாட்கள் (வெள்ளி, சனி, ஞாயிறு) இந்த நாட்டிய நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அயல் நாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், ஏராளமான பொது மக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

விழா தொடங்கும் முன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடற்கரைக் கோயில் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள வண்ண மின் விளக்குகளைப் பொத்தானை அழுத்தித் தொடங்கிவைத்தார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.

நாடகக் குழுவினர் அரசு பஸ்களில் 50 சதவிகித கட்டணத்தில் பயணம் செய்யலாம்!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

''ஒய்.ஜி.பி. நடிப்பு மற்றும் நுண்கலைப் பயிற்சிப் பள்ளித் தொடக்க விழாவும், ''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' (யு.ஏ.ஏ.) என்ற நாடகக் குழுவின் 40-வது ஆண்டு விழாவும் சென்னை 'மியூசிக் அகடமி'யில் 30.9.92 அன்று சிறப்புற நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி நடிப்புப் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கிவைத்தார்.

ஒய்.ஜி.பி. நடிப்புப் பள்ளிக்குத் தமது சொந்தப் பணத்தில் இருந்து 2 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்.

விழா மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, தொழில் அதிபர் நல்லி குப்புசாமி அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

''ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்களையும், அவரது மனைவி ராஜலட்சுமி மற்றும் இந்த ''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' குழுவில் தொடர்பு உள்ள மற்றவர்களையும் சிறு வயது முதலே எனக்குத் தெரியும்.

எனக்கு 4 வயது இருக்கும்போது எங்களது குடும்பம் சென்னையில் குடியேறியது. அப்போது, 'ஒய்.ஜி.பி.' அவர்கள் எங்களது நெருங்கிய குடும்ப நண்பர் ஆனார்.

''யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' சபாவின் நாடகங்களில் எனது தாயார் மற்றும் அத்தை ஆகியோர் நடிப்பார்கள். நானும் எனது சகோதரரும் ஒய்.ஜி.பி. வீட்டில் நீண்டநேரம் இருந்து பொழுதைக் கழித்து இருக்கிறோம்.

நான் பள்ளி மாணவியாக இருந்த போது, 'ஒய்.ஜி.பி.' அவர்களின் மனைவி இன்னொரு தாய் போன்று இருந்தார்கள். அவர்கள் எனக்கு நிறைய அறிவுரைகளும், படிப்பில் வழிகாட்டுதலும் செய்தார். எனது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அவர் செய்துள்ள உதவிகளுக்கு நான் மிகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நாடகம், என்பது அறிவு, ஒழுக்கம் நிரம்பிய ஒரு கலை. வாழ்க்கையே ஒரு நாடகம். நாம் எல்லோரும் அதில் நடித்துக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால், நாடக நடிகர்கள் மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கையில் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதிலும் நகைச்சுவை நாடக நடிகர்கள் பொறுப்புகளைச் சவாலுடன் சந்திக்க வேண்டியவர்கள்.

சினிமா, டெலிவிசன் மற்றும் வீடியோ வளர்ச்சியினால் இப்போது நாடகங் களுக்கு மவுசு குறைந்து வருகிறது.

மக்கள் இப்போது வீட்டிலேயே இருந்து கொண்டு டெலிவிசனில் சினிமா பார்ப்பதையே விரும்புகிறார்கள். பணத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்த விரும்புகிறார்கள். அத்துடன் வீட்டில் தனிமையில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கவே ஆசைப்படுகிறார்கள். மக்கள் வீட்டை விட்டு வெளியே வர விரும்பாவிட்டால், நாடகக் கலை அழிந்துவிடும். எனவே நாடகக் கலை மிகப் பெரிய சவாலை எதிர்நோக்கி உள்ளது.

பாதுகாக்க வேண்டும்

நாடகம் ஒரு பழமையான கலை. அதைப் பாதுகாக்க வேண்டும். என்ன விலை கொடுத்தாவது நாடகக் கலையைக் காப்பாற்ற வேண்டும்.

கலையை நேசிப்பவர்கள் அனைவரும் இதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம் நாடகத் துறையில் சம்பந்தப்பட்ட எழுத்

தாளர்கள், நடிகர்கள், இயக்குநர்கள் நாடகங்கள் தரமுடையதாக, மக்களுக்குப் பொழுது போக்கு அம்சம் நிறைந்ததாக, அவர்கள் கொடுக்கும் பணத்துக்குப் பயனுள்ளதாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். 'யு.ஏ.ஏ.' நாடகக் குழுவினர் தரமான நாடகங்களைத் தயாரித்து வழங்குகிறார்கள். தொடர்ந்து 40 ஆண்டுகளாக நாடகங்களை நடத்திச் சாதனை புரிந்து உள்ளார்கள்.

இந்த நடிப்புப் பள்ளியைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே நடனமாடிய மதுவந்தியின் நடனத்துக்கு டாக்டர் பத்மா சுப்பிரமணியம் பாடல்களைப் பாடினார்.

சர்வதேசப் புகழ் வாய்ந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் நடனத்தைத் தான் நான் கண்டிருக்கிறேன். இன்று இங்கு அவரது பாடல்களைக் கேட்டேன். அற்புதமாக, அழகாகப் பாடினார். அவருக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய சலுகைகள்

நாடகக் குழுவினருக்கு இரண்டு அறிவிப்புகளை இங்கே வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாடகக் குழுவினர் அரசாங்கப் போக்குவரத்துக் கழகப் பஸ்களில் பயணம் செய்ய 50 சத விகித சலுகைக் கட்டணம் வழங்கப்படும்; இதற்கான உத்தரவை இன்று பிறப்பித்துள்ளேன்.

நாடகக் குழுவினர் சென்னை கலைவாணர் அரங்கில் நாடகம் நடத்துவதற்கு 50 சதவிகிதக் கட்டணச் சலுகை அளிக்கவும் உத்தரவிட்டு இருக்கிறேன்.

திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி அவர்கள் இங்கே பேசும்போது, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் 'பென்சன்' தொகையில் 3 ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை மாற்றி ஆயுள் முழுவதும் 'பென்சன்' கிடைக்கும் அளவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்துத் தகுந்த உத்தரவு பிறப்பிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடங்கப்பட்டு உள்ள நடிப்புப் பயிற்சிப் பள்ளியின் காப்பாளராக இருக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

விழாவில் இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திரு. எம். கோபாலகிருஷ்ணன், இயல், இசை, நாடக மன்றத் தலைவர் திரு. ஆர்.எஸ். மனோகர், தொழில் அதிபர் திரு. டி.டி. வாசு, நகர சபாக்களின் கூட்டமைப்புத் தலைவர், திரு. ஆர். கிருஷ்ணசாமி, திரைப்பட இயக்குநரும் நடிகருமான விசு ஆகியோர் பேசினார்கள்.

நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன், ஒய்.ஜி. ராஜேந்திரன், பிரியா மூர்த்தி ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

தொடக்கத்தில் திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்கள் வரவேற்றுப் பேசினார். நடிகர் ஒய்.ஜி. மகேந்திரன் விழா முடிவில் நன்றி கூறினார்.

ஒய்.ஜி.பி. அறக்கட்டளை, யுனைடெட் அமெச்சூர் நாடகக் குழு ஆகியவற்றின் சார்பில் இந்த விழா நடைபெற்றது.

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

மதுரை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 543 நபர்களைத் தேர்ந்தெடுத்து 28.9.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மதுரையிலிருந்து அரசுச் செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத்துறைகள் மூலமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 8 பேர்களுக்கும், விதவை மகள் திருமண உதவி 9 பேர்களுக்கும், நலிந்தோர் உதவித் திட்டத்தின்கீழ் 33 நபர்களுக்கு நிதி உதவியும், 6 பேர்களுக்குத் தையல் இயந்திரங்களும், மூன்று சக்கரவண்டிகள் 4 பேர்களுக்கும், காதொலிக் கருவிகள் 5 நபர்களுக்கும், குடும்ப நலத் திட்டத்தை மேற்கொண்டமைக்காக 4 பெண்களுக்குத் தங்கப்பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 19 பேர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் தொழில் முதலீட்டு மானியமும், செம்மறியாடு வளர்க்க 53 நபர்களுக்கு ரூ.3,98,000 மானியத்துடன் கூடிய கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 79 பேர்களுக்கு ரூ.57,93,000 கடனுதவியும், பால் பண்ணை அமைக்க 13 பேர்களுக்கு ரூ.6,58,000 மானியத்துடன் கூடிய கடனுதவியும், செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிலுக்கென 14 பேர்களுக்கு ரூ.61,64,000 கடனுதவியும், தொழிற்கூடங்கள் அமைக்க 7 நபர்களுக்கு ரூ.33,00,000 கடனுதவியும், விசைத்தறி அமைக்க ஒருவருக்கு ரூ.12,50,000 கடனுதவியும், 31 நபர்களுக்குக் குடும்ப நல நிதியாக ரூ.15,80,000-மும், தவணை முறையில் வீடுகள் கட்ட 20 நபர்களுக்கு ரூ.34,93,000 கடனுதவியும், பவர் டில்லர் வாங்க 14 பேர்களுக்கு ரூ.7,76,000 கடனுதவியும், ஆட்டோ ரிக்ஷா வாங்க 10 நபர்களுக்கு ரூ.4,24,000 கடனுதவியும், திராட்சைச் சாகுபடி செய்ய 8 நபர்களுக்கு ரூ.4,21,000 கடனுதவியும், டிராக்டர்கள் வாங்க 18 நபர்களுக்கு ரூ.39,44,000 கடனுதவியும், சொட்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ள 26 பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ.12,51,000-மும், லாரிகள் வாங்க 5 பேர்களுக்கு ரூ.19,26,000 கடனுதவியும், வேன்கள் வாங்க 5 நபர்களுக்கு ரூ.11,51,000 கடனுதவியும் வழங்கப்பட்டன.

மொத்தம் 543 நபர்களுக்கு ரூ.4,16,27,000 (ரூபாய் நான்கு கோடியே பதினாறு இலட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 292 பேர் பெண்களாவர்.

இதுதவிர, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.1,24,000 நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.



கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி உயர் அலுவலர்களுடன் முதல்வர் ஆலோசனை

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றியும், மாநிலக் கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும், கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, காவல்துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 23.9.'92 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார். தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த சில வன்முறைச் சம்பவங்கள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் கடலோரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப., கடற்படை பொறுப்பு அதிகாரி கமாண்டர் திரு. எச்.சஹானி, கடலோரப் பாதுகாப்பு- கிழக்குப் பகுதி கமாண்டர் திரு. ஜே.பி. கார்னேரோ, தமிழக காவல்துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., காவல் துறைத் தலைவர் (புலனாய்வு) திரு. கே.கே. இராஜசேகரன் நாயர், இ.கா.ப., முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி. திரு. தேவாரம் இ.கா.ப. மற்றும் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் திரு. ஆர். இராஜகோபாலன், இ.கா.ப. ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பார்த்தோம் படித்தோம்:

1.9.92 இதழில், 'நம்மை வாழ வைக்கும் பூண்டு' எனும் கட்டுரை, மிகவும் பயனுள்ள நமது பண்டையத் தமிழர் மருத்துவத்தை விளக்கும் அருமையான கட்டுரை.

—இரா.மாறன்
சாலியமங்கலம்
(தஞ்சை மாவட்டம்)

இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களைப் பற்றிய இனிய அறிமுகம் அருமை. திரு.வி.க. பற்றிய கட்டுரையும் பயனுள்ளதாக இருந்தது.

—ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி (கோவை மாவட்டம்)

அறிவியல் சம்பந்தமான கட்டுரைகள், தேசபக்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் இடம்பெற்றால், இளம் தலைமுறையினருக்கும் பெரிதும் பயன்படும்.

—கே. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி

'நம்மை வாழ வைக்கும் பூண்டு' போன்ற மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

—பி. நடராஜன்
போரூர், சென்னை-116.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 48-வது பிறந்த நாள் நினைவாக வெளியிட்ட கட்டுரை அருமை.

—ச. பொன்னுசாமி,
கு. அய்யம்பாளையம்,
(சேலம் மாவட்டம்)

கோழிப்பண்ணை, எண்ணெய்ப் பனை ஆமணக்கு, மாம்பழம் போன்ற கட்டுரைகள், என் போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயன்படும்.

—கே.எம்.தங்கவேல்,
உப்புக்காரன் தோட்டம்
(கோவை மாவட்டம்)

'ஓட்டுநர்களும் குடிப் பழக்கமும்' எனும் கட்டுரை சிறப்பானது. பயனுள்ளது. ஒட்டுநர்களின் பொறுப்பைத் தெளிவாகக் காட்டுவது.

—க. பெரியசாமி
(நடத்துநர்)
கோவை-27

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

இந்த இதழில்...

சிவகங்கைச் சீமையிலே	... 2
உலகச் சிக்கன நாள்	... 9
தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம்	... 11
நல்லுறவை வளர்க்கும் சார்க் நாடுகள் கலை விழா	... 15
ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி	... 17
செய்திகள்... செய்திகள்... செய்திகள்	... 18
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	... 19
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகப் பணிகள்	... 21
நேரு வழி நடப்போம்!	... 23
திருக்கோயில் திருப்பணிகள்	... 24
வயிற்றுப்போக்கு நோயைத் தடுக்கத் தமிழக அரசு நடவடிக்கை	... 26
மாணவர் பக்கம்	... 27
நூல் நயம்	... 28
குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடல்கள்	... 29
டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்	... 33
சாதனைகள்புரியும் தமிழ்நாடு காவல்துறை	... 35
மத்திய ரிசர்வ் போலீஸ் படைப் பிரிவு விழாவில் மாண்புமிகு முதல்வர்	... 46

வீரமங்கை வேலுநாச்சியார்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஐப்பசித் திங்கள் - 16

மலர்:23 இதழ்:9

1-11-1992

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

சிவகங்கைச் சீமையிலே

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்-சிவகங்கையில் உள்ள ஆயுதக் காவல் படைத் திடலில், தமிழ்நாடு கனிம நிறுவன கிராஃபைட் சுரங்கப் பணி தொடக்க விழா, கண்ணதாசன் மணிமண்டபத் திறப்பு விழா, அரசு திட்டப் பணிகள் தொடக்க விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை 21.10.92 அன்று மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இதற்காகத் தனி விமானம் மூலம் வருகைதந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அன்று காலை 11.30 மணியளவில் மதுரை விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாலும், வாரியத் தலைவர்களாலும், அரசு உயர் அதிகாரிகள்- காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோராலும் மகிழ்வோடு வரவேற்கப்பட்டார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.ஆதிசேஷய்யா, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் திரு. டேவிதார், மதுரை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. பாலச்சந்திரன், மதுரை இராஜாஜி மருத்துவமனை டீன் திரு. வீரபாகு ஆகியோரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றனர்.

பல்லாயிரக்கணக்கில்- ஆண்களும் பெண்களுமாக விமான நிலையத்தில் கூடியிருந்தவர்களும் உற்சாகமான வாழ்த்து முழக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள்.

மாண்புமிகு முதல்வரின் வருகையையொட்டி மதுரையில் ஆங்காங்கே வகை வகையான வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

நகரிலிருந்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற ஆன்றோர்களின் திருவுருவச் சிலைகளெல்லாம் மாலையிட்டும், மலர்க் கோல வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஆண்டின் பெரும்பாலான காலம் மணல் பரப்பாகவே காணப்படும் வைகையாற்றிலும் தண்ணீர் கரைபுரண்டோடியது.

மதுரையிலிருந்து சிவகங்கை நோக்கி...

சிறிது நேர ஓய்வுக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கார் மூலம் ஒரு மணியளவில் சிவகங்கை நோக்கிப் பயணமானார்.

வீதியின் இருமருங்கிலும் ஏராளமான பொதுமக்கள் சாரிசாரியாக நின்றிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தொலி எழுப்பியும், பாண்டிய நாட்டுக்கே உரிய வண்ணம் தாரை, தப்பட்டை, கொம்பு கொண்டு முழக்கியும் வரவேற்றார்கள்.

வெயிலையும் பொருட்படுத்தாமல் அம்மக்கள் நின்றிருப்பதைப் பார்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆங்காங்கே அம்மக்கள் வழங்கிய மாலைகளை- சால்வைகளை- பூரண கும்ப வரவேற்பை- ஆரத்தித் தட்டு வரவேற்பைக் காரினின்றும் இறங்கி ஏற்றுக் கொண்டார்கள்.

மேலூர், மலம்பட்டி வழியே- சிவகங்கை செல்லும் 70 கி.மீ சாலையில், கார்களின் அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வழிநெடுகிலும் வரவேற்பு வண்ணச் சுவரொட்டிகளும், வரவேற்பு வளைவுகளும், பல நிறக் கொடித் தோரணங்களும் அணி செய்து கொண்டிருந்தன.

சில மைல்களுக்கப்பால், சாலையின் வலதுபுறத்தில்- மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கவிருக்கும் கிராஃபைட் சுரங்கப் பணிக்கான விரிவான இடம் காணப்பட்டது.

கோமளிப்பட்டி, தென்னம்பட்டி மக்களின் வரவேற்புப் பதாகையையொட்டியிருந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தாரின் அறிவிப்புப் பலகையில்- 'திட்டம் துவங்கப்பட்ட நாள் 1.8.92, திட்டப்பணி நிறைவு பெறுவதாகக் கருதப்படும் நாள் 31.1.1994, திட்ட முதலீடு ரூ.22 கோடி' என்பன போன்ற குறிப்புகள் காணப்பட்டன.

சிவகங்கைச் சீமையிலே...

சிவகங்கையில், மருதுபாண்டியர் நகரில் இருந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வண்ண விளக்குகளாலும், பலநிறக் கொடித் தோரணங்களாலும், பாங்குற அழகுபடுத்தப்பட்டிருந்தது.

அதையடுத்தாற்போலச் சிறிது தூரத்தில் இருந்த 'வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகை'யின் நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்புப் பதாகையில் 'காவியத் தலைவியே வருக' என்ற வாசகங்கள் வண்ண மலர்களால் காட்சி தந்தன.

அதற்குக் கொஞ்ச தூரத்தில் உள்ள ஆயுதக் காவல் படைத் திடலில்தான் விசாலமான விழா மேடையும், அதைத் தொடர்ந்து மாநாட்டுக்கு அமைப்பது போலப் பல இலட்சம் பேர் அமரத்தக்க விரிவான- தட்டுப்பந்தலும் போடப்பட்டிருந்தது. நுழைவு வாயிலில் தஞ்சாவூர் பாணி கீற்றுக் கோபுரங்கள் இரண்டு நிமிர்ந்து நின்றன.

மேடைக்குச் செல்லும் வழியில் மலர்கள் பரப்பப்பட்டிருந்தன. இருமருங்கிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கச் சிவகங்கைச் சிறுமியர் முகத்தில் முறுவலும், கரத்தில் பூத்தட்டுமாகப் பூரிப்போடு நின்றிருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்- காமராஜர்- இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாரியங்களின் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற- சட்டமன்ற உறுப்பினர்கள்- இலட்சோபலட்சம் பொதுமக்கள் ஆகியோர் வருகை தந்திருந்தார்கள்.

ரோஜா, கனகாம்பரம், செவ்வந்தி, முல்லை, மல்லிகை, வாடாமல்லி போன்ற மலர்களால் கண்ணைக் கவரும் விதத்தில் அழகுற அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில்- அறிஞர் அண்ணா, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

விழா தொடங்குமுன், பாண்டியன் போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 4 மணியளவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிந்தார்; பொது மக்கள் வாழ்த்தொலி மண்ணதிரச் செய்தது. மேடைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாலாபுறமும் அலைமோதிய மக்களைப் பார்த்து மகிழ்வோடு கையசைத்தார்.

விழா நிகழ்ச்சிகளைச் செய்தி- மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப. அவர்கள் தொகுத்து வழங்கினார்.

பொதுப்பணித்துறை அமைச்சர்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தம்முடைய வரவேற்புரையில் - "வாடிக் கிடக்கும் நம்முடைய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு வளம்சேர்க்க, வாராது வந்த மாமணியாக வந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை, மாவட்ட மக்கள் சார்பில் வரவேற்பதில் மகிழ்கிறேன். இந்த மாவட்டம் தொழில்வளம் பெறவேண்டும்; மாவட்ட மக்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக் கிட்டவேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்துடனேயே இன்றைக்கு கிராஃபைட் சுரங்கப்பணி முதலான பல தொழில்கள் இங்கே துவக்கி வைக்கப்படுகின்றன. இனி இந்த மாவட்டம் உள்ளபடியே பசும்-பொன் மாவட்டம் ஆகிவிடும்!" என்று குறிப்பிட்டார்.

திட்ட விளக்க உரை

திட்ட விளக்கவுரையாற்றிய - தமிழ்நாடு கனிம நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், திரு. ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப.. அவர்கள் - "கால்டுவெல், இராமநாதபுரத்தைப் பாலைவனபூமி என்று அப்போது எழுதினார்; அப்படிப்பட்ட பகுதியில்தான் இன்று கிராஃபைட் சுரங்கம் தோண்டப்படவிருக்கின்றது; இன்னும் ஆயிரம் ஆண்டுகள் போனால் வைரமாக மாறக்கூடியது இந்த கிராஃபைட். மன்னர் சேதுபதி, வேலுநாச்சியார் முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களால் வீரம் மட்டுமே விளையும் நிலமாக இருந்த இந்த பூமி, இனி மாண்புமிகு முதல்வர் அவர்களால்

வீரமும் விவேகமும் பல்வகை வளமும் விளையும் பூமியாக மாறும்'' என்றார்.

தொடக்க விழாக்கள்

அதன்பின் - மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - கிராஃபைட் சுரங்கப்பணி, அரசு திட்டப் பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார். 52 புதிய பேருந்து வழித்தடங்கள் தொடங்கி வைக்கப்பட்டன. கண்ணதாசன் மணி மண்டபம் திறந்து வைக்கப் பட்டது. பல்வேறு அரசு வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

வாழ்த்துரைகள்

தமிழக அரசின் தொழில்துறை முதன்மைச் செயலர், திரு. சி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., சிவ கங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கரு. முருகானந்தம், சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், திருமதி புலவர் ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. கோ. விசுவநாதன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் வாழ்த்துரை, கவிதை நடையிலேயே அமைந்திருந்தது.

தலைமையுரை:

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாத் தலைமையுரையாற்றினார். இது வீரம் செறிந்த மண், தமிழ்மணம் கமழ்ந்தமண்; புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார்-

''வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்(று)
உடலினால் பரலாய்க் காண்பர்;
கள்ளத்தால் நெருங் கொணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?''

- என்று கேட்டார்; அது இந்த நாள் என்று கூறுகிற அளவிற்கு இங்கே இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; வாளெடுத்து வேலுநாச்சியார் உலவிய இம்மண்ணுக்கு, செங் கோலெடுத்து ஆட்சி செலுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வருகை தந்து பெருமை செய்திருக்கிறார்'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

விழாப் பேருரை

இதன்பின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

அதனையடுத்து - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராம நாதபுரம் மற்றும் காமராசர் மாவட்டங்களைச் சேர்ந்த நலிந்த பிரிவினருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

திட்டப் பணிகள்!

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், 21.10.92 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கையில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்கள்- அரசு நலப்பணிகள் குறித்த விவரங்கள் வருமாறு:

★ ரூ.22 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராஃபைட் சுரங்கத் திட்டம்.

★ ரூ.5.30 கோடி செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள உபமின் நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள்.

★ ஊரக வளர்ச்சித் துறையில் பள்ளிக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறுகள் ரூ.5.09 கோடி செலவில்.

★ ரூ.4.35 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள்.

★ சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காரைக்குடியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக 1.53 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடியிருப்புகள்.

★ சிவகங்கை நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 86 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகள்.

★ 2.34 கோடி ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள்-

★ 61 இலட்சம் ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணிகள்.

★ கிராமப்புறச் சாலைகளை ரூ.3.89 கோடி செலவில் மேம்படுத்துதல்.

★ 'கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம் ரூ.55 இலட்சம் செலவில்.

★ பொதுப்பணித்துறை மூலம் அணைக்கட்டுகள், அரசு கட்டடங்கள் ரூ.2.75 கோடி செலவில்.

★ காரைக்குடி நகராட்சியில் ரூ.24 இலட்சம் செலவில் வணிக வளாகம்.

★ 50 புதிய பேருந்து வழித்தடங்கள்.

★ 6.53 கோடி ரூபாய் செலவில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 2,448 பணிகள்.

★ சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குப் பயன்தரத் தக்க வகையில் 3 கோடி ரூபாய் செலவில் நலத் திட்டங்கள்.

★ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராசர் மாவட்டங்களிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனுச் செய்த 1,500 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்.

- மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ரூ.3,586.64 இலட்சம் மதிப்பீட்டிலான பின்கண்ட 5 திட்டங்களுக்கும் கால்கோள் நாட்டித் துவக்கி வைத்தார்.

துறையின் பெயர் திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)
கால்கோள் நாட்டுதல் மற்றும் துவக்கி வைத்தல்	
1. தமிழ்நாடு கனிம நிறுவனம்/ கிராஃபைட் திட்டம்	ரூ. 2200.00
2. ஊரக வளர்ச்சித்துறை (வேலைகள்)	887.44
3. தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை	389.20
4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (வீடுகள்)	86.00
5. காரைக்குடி நகராட்சி - அங்காடி வளாகம் கட்டுதல்	24.00
மொத்தம்	3,586.64

அதேபோல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.2279.60 இலட்சம் மதிப்பீட்டிலான பின் கண்ட 8 திட்டங்களைத் திறந்து வைத்தார்கள்.

1. ஊரக வளர்ச்சித்துறை - பள்ளிக் கட்டடங்கள் - தொகுப்பு வீடுகள் - ஜீவன்தாரா கிணறுகள் முதலியன	ரூ. 509.83
2. தமிழ்நாடு மின்சார வாரியம் - துணை மின் நிலையம்	ரூ. 530.05
3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் - குடிநீர் வழங்கும் திட்டம்	ரூ. 435.34
4. பொதுப்பணித்துறை - பல்வகை மேம்பாட்டுத் திட்டங்கள்	ரூ. 330.64
5. மருதுபாண்டியர், கட்டபொம்மன், நேசமணி போக்குவரத்துக் கழகங்கள் - புதிய பேருந்துகள் இயக்குதல்	ரூ. 300.00
6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - எல்.எம்.டி. திட்டம் வீடுகள் கட்டும் திட்டம்	ரூ. 153.87
7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் - கிட்டங்கி திறப்பு விழா	ரூ. 11.00
8. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - புதிய பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி திறப்பு	ரூ. 7.97
மொத்தம்	2279.60

புதுடெல்லியில் தமிழகக் கலைக் குழுவிற்குப் பரிசு

மதங்களிடையே ஒற்றுமையை வலியுத்தும் வகையில் ''பூல்வாலோங்கி சாயர்'' என்று அழைக்கப்படும் மலர்ப் பேரணி விழா 11.10.1992 அன்று மேதகு குடியரசுத் துணைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு இவ்விழாவில் கலந்து கொண்ட தமிழகக் கரகாட்டக் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடந்தது. மேலும் இந்து, முஸ்லிம், கிறித்துவ மத ஒற்றுமையை விளக்கும் வகையிலான விசிறிகள் இரண்டும் இவ்விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் எடுத்துச் செல்லப் பட்டது.

மேதகு குடியரசுத் துணைத் தலைவர், டெல்லி துணைநிலை ஆளுநர் மற்றும் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற பேரணியில் மேற்படி கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும் வண்ண விசிறிகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கான தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைக்குழு அளித்த கலைநிகழ்ச்சி சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுக்குரியது என்றும் அறிவிக்கப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தமிழக அணிக்குச் சிறந்த கலைக்குழுவினருக்கான பரிசினை வழங்கினார்.

இவை தவிர - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.292.10 இலட்சம் மதிப்பீட்டிலான 12 வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

1. இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி	ரூ. 100.00
2. ஊரக வளர்ச்சித்துறை - நலத் திட்டங்கள்	ரூ. 67.72
3. வருவாய்த்துறை	ரூ. 34.43
4. சமூகநலத்துறை - நலத் திட்டங்கள்	ரூ. 32.00
5. கூட்டுறவுத்துறை - விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்	ரூ. 30.00
6. வேளாண்மைத்துறை - வேளாண் கருவிகள் வாங்க மானியம்	ரூ. 11.86
7. சமூக நலத்துறை - நலத்திட்ட உதவி	ரூ. 5.87
8. சிறுசேமிப்புத்துறை - பரிசு வழங்குதல்	ரூ. 3.81
9. மாவட்டத் தொழில் மையம் - மின்னழுத்தக் குறைவு ஈட்டு மானியம்	ரூ. 3.05
10. தாட்கோ - நலத்திட்ட உதவி	ரூ. 3.04
11. ஆதிதிராவிடர் நலத்துறை - உதவி மானியம்	ரூ. 0.16
12. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை - நலத் திட்டங்கள்	ரூ. 0.16
மொத்தம்	292.10

சுருக்கம்

	ரூ. இலட்சத்தில்
1. கால்கோள் விழா	ரூ.3586.64
2. திறப்பு விழா	ரூ. 79.60
3. நலத்திட்ட உதவிகள் வழங்குதல்	ரூ.292.10
மொத்தம்	6,158.34

ரூ.22 கோடி செலவிலான கிராஃபைட் சுரங்கம் வெட்டும் பணிகளையும் முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிவைத்தார். கவிஞர் கண்ணதாசன் மணி மண்டபத்தையும் திறந்து வைத்தார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: 'முடிகொண்டான்'.

ஜனநாயகத்தில்

ஓர் அரசைக் குறைகூறுவது விமர்சனம் செய்வது தவறல்ல; ஆனால், அவை ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும் என்பதே நம்எதிர்பார்ப்பு!

- சிவகங்கைச் சீமையில் முதல்வர் உரை

சங்க காலம் முதல், வீர வரலாறு தொடர்ந்து வரும் வெற்றிச்சீமை, இந்த சிவகங்கைச் சீமை. மாமன்னர்கள் மருது சகோதரர்களும், மானங் காத்த மாவீரர்களும், சீறிவரும் புலியை முறத்தால் துரத்திய மறக்குல மாதரசிகளும், மாபெரும் புலவர்களும் வாழ்ந்த மண் இந்த மண்! திராவிட இயக்கச் சீர்திருத்தச் செம்மல்களைத் தந்ததும் இந்த மண்! திராவிட இயக்க வெற்றி மாநாடுகளைக் கண்டதும் இந்த மண்! இந்த மண் சிவந்திருக்கிறது. காரணம் என்ன என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். தாயகத்தின் விடுதலைக்காகவும், திராவிட இயக்கத்தைக் காப்பதற்காகவும், செந்தமிழ்ச் சிங்கங்கள் சிந்திய செங்குருதி தந்த செம்மைதான் இந்த மண்ணின் சிவப்புக்குக் காரணமாக இருக்க வேண்டும், என்று உணர்ந்தேன்.

தமிழக வரலாற்றில் பசும்பொன்னால் பொறிக்கத்தக்கத் திருப்பெயர், முத்துராமலிங்கத் தேவர்! அந்தப் பெருமகனின் பெயரைத் தாங்கி இருக்கிற, புகழுக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், வேலும், வாளும் விளையாடிய இப்பகுதியில், மருதிருவர் புகழ் பாடும் சிவகங்கை நகரில், வீரத்தின் விளை நிலங்களாகிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில், தமிழ் கூறும் நல்லுலகில், எல்லா இடங்களிலும், 'தேவர்' என்று குறிப்பிட்டால், முத்துராமலிங்க தேவர்தான். என்று எவரும் உணர்ந்து கொள்ளும் அளவுக்குக் கொள்கைக் கோபுரமாய் உயர்ந்து நிற்பவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்.

புகழ் சேர்த்தவர்!

சத்தியத்தின் .நிலைக்களமாய், சான்றாண்மையின் பிறப்பிடமாய், தேசியம், தெய்வீகம், செந்தமிழ் என்ற மூன்றும், ஓர் உருவாய்ப் பிறந்து வந்தது போல் வந்த அந்த வரலாற்று நாயகருக்கு அவர் பெயரால் மாவட்டம் அமைத்து, மாபெரும் புகழ் சேர்த்தவர். பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

'பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்' என்ற பெயரில், புரட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட இந்த மாவட்டத்துக்குப் 'பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று,

இடைக்கால அரசு ஒன்று பெயர் வைத்தது. தேவர் திருமகன் என்றாலே அவர்தான் என்றாலும், பெயர் விளங்கத்தானே பெயர் வைக்கிறோம். அந்தப் பெய்ரையே மறைத்து விட்டால் எப்படி?

வாழையடி வாழையென வருகிற தமிழ்ச் சமுதாயம் அந்தத் திருப்பெயரை மறந்துவிடக் கூடாதே என்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும், ''பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்'' என்ற பெயர் மாற்றம் செய்ய உத்தரவிட்டேன். 'முத்துராமலிங்கம்' என்னும் திருப்பெயர் மீது, பெயர் மாற்றம் செய்த பெருமக்களுக்கு என்ன கோபமோ தெரியவில்லை - மறைத்துவிட்டார்கள். ஊரையே கபளீகரம் செய்ய வல்லவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரையே கபளீகரம் செய்ததில் வியப்பில்லை அல்லவா? நாட்டுக்கும், மொழிக்கும், நாளெல்லாம் உழைத்த பெருமக்களின் திருநாமம். நாவில் என்றும் நடமாட வேண்டும் என்பதே. நாட்டுமக்களின் விருப்பம். அந்த விருப்பத்தின் செயலாக்கம் தான் இந்தப் பெயர் மாற்றம்!

நெஞ்சம் வணங்கும் பூமி

எவ்வளவு பெரிய இலட்சியவாதிகள் வாழ்ந்த மண் இந்த மண் என்று நினைக்கையில், என் நெஞ்சம் இந்தப் பூமியை வணங்குகிறது. சிவகங்கைச் சீமை என்றாலே, அது வீரத்தின் விளை நிலம் என்று, பள்ளி மாணவரும் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு, இந்த மண்ணில், வீரத்தின் விதைகள் ஊன்றப்பட்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து, அடிமை இந்தியாவில் கேட்ட முதற்குரல்கள், தெற்கேதான் தோன்றின. மருது பாண்டியர்கள். மாவீரன் புலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன், இவர்களின் குரல்கள் சுதந்திரத்தின் முதற் குரல்கள், அந்த மகத்தான வீரர்களின் வரிசையில் இடம்பெற்ற, மருது சகோரர்களைப் பற்றி, இந்த மண்ணில் நின்று கொண்டிருக்கிற நான், நினைக்காமல் இருக்க முடியுமா?

மாசு மருவற்ற மறவர்குல மாணிக்கங்கள், மருது சகோதரர்கள், விடுதலைக்குப் போரிட்ட வீரத்துக்காக மட்டுமல்ல; தஞ்சமடைந்த ஊமைத் துரையைத் தலைபோனாலும் காப்போம் என்னும் தர்ம சிந்தனைக்காகவும், நம் நெஞ்சில் பெரிய மருதும், சின்னமருதும், நீங்கா இடம் பெறுகிறார்கள். இந்த அறப்பண்பும், மான உணர்வும், இந்தியாவில் அன்றைக்கு ஒரு சில அரசர்களுக்காவது இருந்தால், பாரதம் 19-ஆம் நூற்றாண்டிலேயே சுதந்திரம் அடைந்திருக்கும். என்ன செய்வது? எல்லோரும் அப்படி இல்லையே! இன்றையச் சூழ்நிலைகூட அதுதானே!

இலட்சியத்தை முன் வைத்து, வீறு நடை போடும் அரசுகளைக் காட்டிக் கொடுப்பதும், போகிற போக்கிலே சேற்றை அள்ளி வீசுவதும், கொள்கையில்லாத சில குழப்பவாதிகளின் கூடப் பிறந்த குணமாகத்தானே இருக்கிறது! இருந்தாலும், சூழ்ச்சி தன்னை, வஞ்சகம் தன்னை, பொறாமை தன்னைத் தொகை தொகையாய், எதிர் நிறுத்தித், தூள் தூளாக்கும் மறச்சிந்தை கொண்ட நீங்கள், இன்றைக்கு எனக்கு இருப்பதைப் போலவே, அன்று மக்கள், மருது சகோதரர்களுக்கு மாபெரும் அரணாய் இருந்தார்கள்.

மருது சகோதரர்களின் ஆட்சியை வரலாறு வாழ்த்துகிறது. வீரத்தால் மட்டுமல்ல, நிர்வாகச் சிறப்பாலும் நீடு புகழ் பெற்றவர்கள் மருது பாண்டியர்.

இயல்பாகவே பின் தங்கிய பகுதியாக இருக்கிற இந்தச் சீமையில், அன்ன சத்திரம்வைத்து, ஆருயிர் மக்களைக் காத்தவர்கள் அவர்கள். காளையார் கோயில், குன்றக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர், மானாமதுரை, முத்தனேந்தல் போன்ற இடங்களில், அவர்கள் அமைத்த அன்ன சத்திரங்கள், நன்றியுணர்வுமிக்க மக்களால், இன்றும் நினைவு கூரப்படுகின்றன. அதே பணியைத்தான், இன்று உங்களது அரசு, உங்கள் அன்பையே பெரிதாக எண்ணும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மூலம் நிறைவேற்றுகிறது!

காலம் மாறலாம். கடைப்பிடிக்கின்ற ஆட்கள் மாறலாம். ஆனால் நல்ல தத்துவங்கள் நம்மிடையே நிலைக்கின்றன. நல்லவர்களால் நாளும் தொடரப்படுகின்றன.

அன்று, 1801 அக்டோபர் முதல்நாளில், அசுரத் தனமான படை பலத்தால், மூர்க்கத்தனத்தால், ஆங்கிலேயர்கள், சிவகங்கைச் சீமையைப் பிடித்த போதும், மருது பாண்டியர்களைப் பிடிக்க முடியவில்லை; சூழ்ச்சியாலேயே ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளத் தெரிந்த வெள்ளையர்கள், எவரும் எப்போதும் நினைத்துப் பார்த்திராத, கொடுமையான தந்திரத்தைக் கையாண்டார்கள்.

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்ட

ஒரு கயவனால், சின்ன மருது காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிறைப்பட்டார். பெரிய மருதை எப்படிப் பிடிப்பது என்று திட்டமிட்ட வெள்ளையர், ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். ''10 நாட்களுக்குள், பெரிய மருது தங்களிடம் வந்து சரணடையாவிட்டால், அவரது அன்புக்கும், அளவற்ற ஈடுபாட்டுக்கும் உரிய, காளீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் காளையார் கோயில் இடித்துத் தள்ளப்படும்'' என்பதுதான் அந்த அறிவிப்பு.

வெள்ளையர் தந்திரம் பலித்தது. தன்னைத் தந்தாவது ஆலயத்தைக் காக்கவேண்டும் என்னும் தியாக உணர்வில், பெரிய மருது தன்னைத்தானே வெள்ளையரிடம் ஒப்படைத்தார்.

1801-ஆம் ஆண்டு, இதே அக்டோபர் மாதம் 27-ஆம் நாளில், பெரிய மருது திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார். அதற்கு மூன்று நாள் முன்பே, சின்ன மருது தூக்கில் போடப்பட்டார்.

ஆலயம் காக்க, தெய்வ உணர்வை மங்காது வளர்க்க, பாரம்பரிய மிக்க கலைச் சின்னங்களைப் பாதுகாக்க, என்ன விலை தரலாம் என்றால் தன்னையே விலையாகத் தரலாம் என்னும் தத்துவத்தை நிலைநாட்டியவர் பெரிய மருது. ஆகவேதான், இந்த மண்ணில் வாழும் மக்கள், இன்றைக்கும் 'மருது' என்னும் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள்.

அன்று பெரிய மருது போதித்த தத்துவத்தைத்தான், இன்று உங்கள் அரசு, உங்கள் சகோதரியின் தலைமையிலான அரசு, செயல்படுத்தி வருகிறது. கோயில் விளங்க குடிமக்கள் விளங்குகிறார்கள். என்பதுதானே, தமிழ்த்தாய் தந்த தத்துவம். அந்தத் தத்துவத்தின் செயற்பாடுதான், தமிழக அரசின் ஆலய மேம்பாட்டுத் திட்டம்.

நலத்திட்ட உதவிகள்

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 16 மாத காலத்தில், ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற பிரிவினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும் பணிகளை அறிந்தவர்கள் நீங்கள். மாவட்டந்தோறும் மக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று, தகுதியுள்ள அனைவரையும், தலைமைச் செயலகத்துக்கு, அரசாங்கச் செலவில் வரவழைத்து, பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, நலத்திட்ட உதவிகளை, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புக்கு அரசு வழங்கி வருகிறது.

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக மருத்துவ முகாம்கள் நடத்தும் திட்டம். தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் வருவது தவிர, மருத்துவர்களே மக்களைச் சந்தித்து நோயை அறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மகத்தான திட்டமாக, இத்திட்டம் ஏழை எளியோரைக் கவர்ந்துள்ளது.

தமிழகத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியவர்களுக்கும், இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். வருகின்ற ஆண்டும் இலவச சேலை வேட்டி, உங்களுக்குக் கிடைக்கும்; கண்டிப்பாகப் பொங்கல் தினத்திற்கு முன்பே கிடைக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் அரசாக, உங்கள் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் காண்கின்றீர்கள். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினருக்கும் உரிய உதவிகளை வழங்க, அவர்களைப் பாதுகாக்க, இந்த அரசு என்றுமே தயங்கியதில்லை. உங்கள் சகோதரியாகிய நான், கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும் சுமந்து வந்து, உங்கள் முன் இன்று நிற்கிறேன்.

ரூபாய் 62 கோடிக்கான திட்டங்கள்

இன்று உங்களைக் காண வந்திருக்கின்ற நான், உங்கள் மாவட்ட வளர்ச்சிக்காக, ஒன்றல்ல, இரண்டல்ல, 62 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கிறேன். பல்வேறு துறைகளின் மூலம், இப்பகுதி மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள் இவைகள்.

இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த, சிவகங்கை கிராபைட் திட்டப்பணி, இன்று முதல் தொடங்குகிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1970-ஆம் ஆண்டிலேயே, சிவகங்கைப் பகுதியில் தரமான கிராபைட் படிமங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், இத்திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க, 477 ஏக்கர் பட்டா நிலத்தை ஆர்ஜிதம் செய்து, 423 ஏக்கர் அரசு புறம்போக்குகளையும் சேர்த்து ஆக மொத்தம் 900 ஏக்கர் நிலம், 'டாமின்' நிறுவனத்திடம் 1984-ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

(தொடர்ச்சி 41. ஆம் பக்கம் பார்க்க)

உலகச் சிக்கன நாள்

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

ஆண்டுதோறும், அக்டோபர் 30-ஆம் நாளை, உலகச் சிக்கன நாளாகக் கொண்டாடும் நிகழ்ச்சி, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் நடைபெற்று வருகின்றது. அக்டோபர் திங்கள் இறுதியில், உலகச் சிக்கன நாளைக் கொண்டாடிச் சிக்கனப் பழக்கத்தையும், சேமிப்புத் தன்மையையும், உலக மக்களிடையே சீரிய முறையில் ஏற்படுத்த வேண்டும் என்பது, 1924-ஆம் ஆண்டில், இத்தாலி நாட்டு மிலான் நகரில் கூடிய, உலகச் சேமிப்பு வங்கிகளின் பேராளர்கள் எடுத்த முடிவாகும்.

சிக்கனம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு நாட்டிற்கும் சேமிப்பைத்தரும்; சேமிப்பு, சீரான வசதிகளைப் பெருக்கும்; சீரான வசதிகள், செம்மையான வாழ்வை உருவாக்கும்; செம்மையான வாழ்வு, நல்ல மனநிறைவை அளிக்கும்; மனநிறைவு, மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கும்.

'வாழ்க்கையின் மிகப்பெரிய சாதனை, என்றென்றும் மகிழ்ச்சியோடு இருத்தல்' என்று மேனாட்டுப் பேரறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். 'சிக்கனம் வீட்டைக் காக்கும்; சேமிப்பு நாட்டைக் காக்கும்' என்பது பழமொழி. ஒருவர், ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு, வாழ்க்கையில் உழலவும் கூடாது; கருமித்தனத்தைக் கடைப்பிடித்து, வாழ்க்கையில் கலங்கவும் கூடாது. தேவையானவற்றிற்கு மட்டுமே, தேவையான அளவுக்குச் செலவிடப் பழகுவது, என்பது சிக்கன நெறிமுறையாகும்.

100-க்கு 85 பேர்களிடத்தில், ஏழ்மை - வறுமை - இல்லாமை - போதாமை போன்ற நெருக்கடி நிலைமைகள் தாண்டவமாடும் நமது நாட்டில், ஓரளவுக்கு அக்கொடுமைகளிலிருந்து விடுபட, ஒவ்வொருவருக்கும் சிக்கன வாழ்வுதான் பெரிதும் கைகொடுக்க வல்லதாகும். சிக்கனத்தின் மூலம் கிடைக்கும் சேமிப்பு, தேவைகளை நிறைவேற்றும் என்பது மட்டுமல்லாமல், எதிர்பாராமல் நேரிடும் தொல்லைகளையும், துயரங்களையும் சமாளிக்கவும் பெரிதும் பயன்படும்.

'பணம் பத்தும் செய்யும்', 'பணம் பாதாளம் வரை செல்லும்', 'பணந்தான் எப்போதும் பேசும்', 'பணம் இல்லாதவன் அம்பில்லாத வில்', 'பணந்தான் பணத்தைக் கொண்டுவரும்' என்பது போன்ற பழமொழிகள், ஒவ்வொருவருடைய இருப்பிலும் பணம் இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்,
பொருளல்ல தில்லை பொருள்'

- என்பது வள்ளுவர் வாக்கு.

ஏழை எளியவர்களாக வாழும் கீழ்த்தர, நடுத்தர வகுப்பு மக்களுக்குப் பெருந்துணையாக அமைவன, சிக்கன வாழ்வும், சேமிப்பு முறையுந்தான். ஒவ்வொருவருக்கும் வருமானம் தேங்கித் தேங்கி நின்று, நகர்ந்து நகர்ந்து, மெல்ல மெல்லத்தான் வரும்; ஆனால் செலவினமோ அவ்வப்போது நாலுகால் பாய்ச்சலில் பறந்து சென்று கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு குடும்பத்திலும், எதிர்பாராத பெருஞ் செலவினங்கள், பிள்ளைகளின் படிப்புக்குச் செலவிடுதல் - வாழ்க்கை வசதிகளுக்குச் செலவு செய்தல் - திருமணங்களை நடத்துதல் - கொடிய நோய் நொடிகளைத் தீர்த்தல் ஆபத்திலிருந்து மீளுதல் ஆகியவற்றைப் பொறுத்துத் திடீர் திடீரென்று ஏற்படவே செய்யும். இப்படிப்பட்ட எதிர்பாராத செலவினங்களை ஈடுகட்ட, ஒவ்வொருவரும், தமக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியைச், சேமிப்புக் கணக்கில் சேர்த்து வைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது.

மக்கள் அனைவரும் கடினமாக உழைக்க வேண்டும்; பெரும்பொருள் ஈட்டவேண்டும்; சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும்; சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும் என்ற உணர்வை, உலகோர்க்கு ஊட்டுவதற்காகவே, 'உலகச் சிக்கன நாள்' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில், முதல் சேமிப்பு வங்கி, 1833-ஆம் ஆண்டு கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாவது சேமிப்பு வங்கி, 1834-ஆம் ஆண்டு சென்னையில் தோன்றிற்று. சேமிப்பு வங்கி நிறுவுதல் என்பது, படிப்படியாக வளர்ந்து, இந்தியா முழுவதும் இன்று, 1,40,000-க்கு மேற்பட்ட அஞ்சலகங்களிலும், தமிழ்நாட்டில் 12,000-க்கு மேற்பட்ட அஞ்சலகங்களிலும் சேமிப்பு வங்கிகள் பணியாற்றி வருகின்றன. மக்கள் தாங்கள் சேமிக்கும் பணத்தை, எளிதாக வைப்பு நிதியாகப்

கல்வி

மக்கள் உடலுக்கு உணவு எத்தகையதோ, அத்தகையது மக்கள் அறிவிற்குக் கல்வி.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

போட்டுவைக்கவும், அது வட்டியோடு வளர்ந்து நிற்கவும், தேவைப்படும்போது அதனைப் பெற்றுக் கொள்ளவும், இந்தச் சேமிப்பு வங்கிகள் பெருந் துணை புரிகின்றன. மக்களின் வருவாய்த்தன்மை -சேமிப்பின் அளவு - தேவைப்படும் காலம் ஆகியவற்றைப் பொறுத்து மத்திய- மாநில அரசுகளால் கூட்டாக நடத்தப்படும் சிறுசேமிப்பு இயக்கம், பதினொருவகையான சேமிப்பு முறை களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

எடுத்துக்காட்டாக, இந்திரா சேமிப்புப் பத்திரம், கிசான் சேமிப்புப் பத்திரம் ஆகியவற்றில் முதலீடு செய்யும் முதலீட்டாளருக்கு, 5 ஆண்டுகளில் சேமிப்பு வைப்புத்தொகை, இரண்டு மடங்கா கிறது. ஒருவர் கிசான் சேமிப்புப் பத்திரத்தில் ரூ.5,000 முதலீடு செய்தால், 5 ஆண்டுகள் கழித்து அவருக்கு ரூ.10,000 திருப்பித்தரப்படு கிறது. அதோடு அவருக்கு ஊக்கத்தொகையாக ரூ.50-லிருந்து ரூ.100 வரை முதலிலேயே தரப் படுகிறது. அவரை அறிமுகப்படுத்துகிற முகவருக்கு ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ரூ.500 பெறுமானமுள்ள பத்து பரிசுக் கூப் பன்கள் முதலீட்டாளருக்கு அளிக்கப்படுகின்றன. பரிசுச் சீட்டுக் குலுக்கலில் வெற்றி பெறுபவர் களுக்கு மாருதி கார் 1, ஸ்கூட்டர் 1, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி 2, குளிர்பதனப் பெட்டி 3, 4 கிராம் தங்க நாணயம் 5, தையல் இயந்திரம் 10, கைக்கடிகாரம் 30, சுவர்க்கடி காரம் 300 என்ற வகையில் 352 பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறுசேமிப்பு நிதியை வெற்றி கரமாகத் திரட்டித்தருகின்ற மாவட்டங்களுக்கு, நலப்பணிகளுக்குப் பயன்படுத்த, ரூ.75 இலட்சம் வரையில், ஊக்கத்தொகையாக வழங்கப்படு கின்றது. மேலும் மாநில அரசுக்கு, மாநிலத்தில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் சிறுசேமிப்பு நிதியிலிருந்து, 100-க்கு 75 சதவிகிதம் என்ற வகையில், குறைந்த வட்டியில், நீண்ட காலத் தவணையில், கடனுதவி வழங்கப்படுகிறது.

சிறுசேமிப்பு இயக்கமானது, முதலீட்டாளர் - முகவர் - மாவட்ட ஆட்சியகம் - மாநில அரசு ஆகிய அனைவர்க்கும் நல்ல முறையிலே பயன்படு வதாகும். இதனால் யாருக்கும் எந்தவிதமான இன்னலோ, இழப்போ கிடையாது.

சிக்கன வாழ்வுக்கு ஊக்கந்தந்து வரும் சிறு சேமிப்பு இயக்கம், ஆண்டுக்கு ஆண்டு மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று வருகிறது. 1972-73-இல் சிறுசேமிப்பு மூலம் நிகர இருப்பு ரூ.20 கோடியே 27 இலட்சம் கிடைத்தது. அதிலிருந்து தமிழக மாநில அரசுக்கு ரூ.13 கோடியே 38 இலட்சம் கடனுதவி கிடைத்தது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.584 கோடியே 69 இலட்சம் நிகர இருப்பு ஏற்பட்டது. அதிலிருந்து ரூ.349 கோடியே 75 இலட்சம் மாநில அரசுக்குக் கடனுதவியாகக் கிடைத்தது.

இத்தகைய கடனுதவி மாநில அரசின் கடுமை யான நிதிப்பற்றாக்குறையை, ஓரளவுக்கு ஈடுகட்டு வதற்குப் பெரிதும் பயன்பட்டுவருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், மக்களின் நலத்திட்டங்களையும் நிறைவேற்றி வருவதில் முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்போ மிக அதிகமாக இருந்து கொண்டுவருகிறது. அரசின் வரி வருமானமும், வரியில்லா வருமானமும் குறைந்த அளவில் இருந்துவரும் நிலையில், செல வினங்கள் பல்வேறு வகைகளில் பெருகிக் கொண்டே போகின்றன. அதனால் நிதிப்பற்றாக்குறை மத்திய அரசைப் பொறுத்தும், மாநில அரசுகளைப் பொறுத்தும் பெருகிக் கொண்டே இருக்கிறது. 1992-93-ஆம் ஆண்டு இறுதியில், தமிழக அரசைப் பொறுத்து, ரூ.800 கோடி அளவிற்கு, நிதிப்பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்ப்பார்க் கப்படுகிறது. வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படு கின்ற வகையில் அமைந்துள்ள சிறுசேமிப்பு வங்கிகளில், மக்கள் இந்த ஆண்டு ரூ.1000 கோடி அளவுக்கு, நிகர வைப்புத்தொகை ஏற்படு கின்ற முறையில் கடமையுணர்வோடு முதலீடு செய்வார்களேயானால், அதன்மூலம் தமிழக அரசுக்கு ரூ.750 கோடிக்குக் கடனுதவி கிடைக்கப் பெறும். அப்படிக் கிடைக்கும் வாய்ப்பு ஏற் பட்டால், 1993-94-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், புது வரிபோட வேண்டிய அவசியம் ஏற்படாமல் போகும். அந்த நிலை பொதுமக்களுக்கு நலம் பயப்பதாக அமையும்.

'வருமுன் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

- என்பது வள்ளுவர் வாக்கு.

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள், இழப் புகள், தொல்லைகள், துயரங்கள் ஆகியவற்றி லிருந்து காக்க வல்லது, சேமிப்புத் தொகைதான், சேமிப்பை வெற்றிகரமாக ஆக்கிக்காட்டுவது சிக்கன உணர்வு; அந்தச் சிக்கன உணர்வு, எல் லோர்க்கும் ஏற்பட, இந்த உலகச் சிக்கன நாள் பயன்படுகிறது.

மக்கள் சிறுகச் சிறுகச் சேர்த்துப், பெரு வாழ்வு வாழ வழி வகுப்பார்களாக!

தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் முதல்மைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் முதலிடத்தை, தமிழகம் அடைவதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் எடுக்கப் போவதாக உறுதி அளித்தார்.

தொழில் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்பு மற்றும் பிரச்சினைகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவாக விவாதித்தார். இதன் தொடர்பாக, மாநிலத்தில் தொழில்களை வளர்ப் பதற்குப் புதிய தொழில் கொள்கை உருவாகியது. தொழில்கள் வளர்ச்சிக்கு இது மிகவும் வழிகோலும் எனத் தொழில் அதிபர்கள் பாராட்டினர்.

புதிய தொழில் கொள்கை

கவர்ச்சிகரமான சலுகைகளையும், வரிச் சலுகைகளையும் வழங்குவது - தொழில்கள் வளர்வதற்கான அடிப்படை வசதிகளை முன்னு ரிமை அடிப்படையில் உருவாக்குவது - தாய் நிறுவனங்களைப்போல மாநிலத்தில் பெரிய முதலீடுகளை உருவாக்குவது - புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது - தொழில் உறவுகள் பற்றிய கொள்கைகளை வகுத்து, தொழிலாளர் நலத்தை வளப்படுத்துவது - நலிந்த தொழிற்சாலைகளைச் சீரமைப்பது - பொது நிறுவனங்களைச் செம்மைப் படுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது - சிறு தொழில்களை வளர்ப்பதற்குப் புதிய உத் வேகத்தை உருவாக்குவது - நீண்டகால வளர்ச் சிக்கு - புதிய கனிமக் கொள்கையை வகுத்துக் கொள்ளுவது என்கிற வகையில் புதிய தொழில் கொள்கையை முதல்வர் அவர்கள் வகுத்து இந் நாட்டிற்கு வழங்கினார்.

தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்குக் கால அவகாசம் தேவைப்பட்டாலும் பதினைந்தே மாதங்களில் புதிய தொழில் கொள்கையின் மூலம் தமிழகம் தொழில் துறையில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய தொழிற் சாலைகளை உருவாக்குவதற்கும் விரிவாக்கு வதற்கும் மிகக் கவர்ச்சிகரமான சலுகைகளை அறிவித்திருக்கிறார். நாட்டிலேயே அனைவரையும் கவரக்கூடிய சலுகைகளை வழங்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்றால் மிகையாகாது. தொழிலில் மிகவும் பிற்பட்ட 31 வட்டங்களில் 20 இலட்சம் ரூபாய் முதலீட்டில் உள்ள தொழில் களுக்கு 20 சதவிகிதம் மானியமாகவும், தொழி லில் மிகவும் பிற்பட்ட 82 வட்டங்களில் ரூபாய்

15 இலட்சம் மூலதனத்தில் உள்ள தொழில்களுக்கு 15 சதவிகிதம் மானியமும் வழங்குவது - மின் அணுத் தொழிற்சாலைகளுக்குக் கூடுதலான உதவித்தொகை வழங்குவது - தொழில் முதலீட்டு உதவித் தொகை வழங்குவதற்கான தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுப்பது - 30 சதவிகிதப் பெண்கள் பணிபுரிகின்ற நிறுவனங்களுக்கு 5 சதவிகித உதவித் தொகை வழங்குவது - மின் சக்திப் பெருக்கு இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு 15 சதவிகிதத் தொகை அளிப்பது - மிகப் பெரிய திட்டங்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவது என்கின்ற வகையில் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ரூபாய் 50 கோடி முதல் 100 கோடி வரை முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்குச் சலுகைத் தொகை ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடி முதல் ரூ.200 கோடி வரை முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்கு ரூ.50 இலட்சம் உதவித் தொகையும், ரூ.200 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்ட திட்டங்களுக்கு உதவித்தெகை ரூபாய் ஒரு கோடி வழங்குவது என்றும், பின்தங்கிய மிகவும் பின்தங்கிய வட்டங்களில் விற்பனை வரி 9 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்தும், பிற பகுதிகளில் உள்ள தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி செய்வது என்றும், மிகப்பெரிய தொழிற்கூடங்களுக்கு விற்பனை வரித் தள்ளுபடி சிறப்புத் திட்டமாக அமல்படுத்துவது என்றும், ரூ.50 கோடி முதல் ரூ.100 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு, 5 ஆண்டு விற்பனை வரி விலக்கு அல்லது 10 ஆண்டுக்கு விற்பனை வரித் தள்ளுபடி செய்வதென்றும், ரூ.100 கோடி முதல் 300 கோடி வரை முதலீடு செய்யும் தொழிற்சாலைகளுக்கு 6 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு வரி வசூல் தள்ளி வைப்பு செய்வதென்றும், ரூ.300 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைக்கு 7 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 14 ஆண்டிற்கு வரிவசூல் தள்ளிவைப்பது என்றும், தொழிற்கூடங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மின்கட்டணம் விலக்கு அளிப்பதென்றும், அரசால் உருவாக்கப்பட்டுள்ள, தொழிற்பேட்டைகளில், தொழிற்கூடங்கள் கட்டுவதற்காக வாங்கப்படும் நிலங்களுக்குப் பத்திர வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பது, மின் இயக்கித் தயாரிப்புத் தொழிற்கூடங்களுக்கு மின் கட்டணச் சலுகை வழங்குவதென்றும் அரசு ஆணையிட்டு, தொழில் வளர்ப்போர்க்கு, ஊக்கத்தை உருவாக்கித் தொழில்வளர்ச்சியைத் தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது.

தொழில் வளர அடிப்படை வசதி

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை வழங்கினார். சாலைகளையும், புதிய நீர் விநியோகமும் விரைந்து உருவாக்கப்பட்டதன் மூலம் தொழில் வளர்ச்சியில் நல்ல விளைவுகள்



நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏற்படத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் ஏற்பட்டுள்ள விளைவு நிறைவுடையதாகவும் உள்ளதோடு, மின்வெட்டே இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சிக்கான அடிப்படைத் திட்டங்களை நிறைவேற்ற புதிய கழகத்தை உருவாக்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்ததையொட்டி, ''தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்'' உருவாக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், திண்டுக்கல்-அண்ணாமாவட்டத்தில் நிலக்கோட்டை ஆகிய நான்கு புதிய மையங்களில் மேம்பாட்டுப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. இந்த நான்கு வளர்ச்சி மையங்களிலும் ரூ.125 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. மேலும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் புதிய வளர்ச்சி மையம் ஒன்றும் மிகப் பெரிய அளவில் உருவாக்கப்பட உள்ளது. திருப்பூரில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் பணியன்உற்பத்தித் தொழில்களை உருவாக்க சிறப்புத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்'' செயல்படுத்தத் திட்டம் வகுத்துள்ளது. இதற்கான நிதி 'அடிப்படை வசதிகள் குத்தகை நிதி நிறுவனத்திடமிருந்து' பெறப்படும்.

ஜெயங்கொண்டத்தில் மின் சக்தியை உருவாக்குவதற்காக, கூட்டுறவு முறையில், நிலக்கரிச் சுரங்கம் உருவாக்கும் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கான திட்ட அறிக்கை உலகில் முன்னணியில் நிற்கும் நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அடிப்படைக் கொள்கைகளை இந்நிறுவனம் வழங்கும். அரசு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் மேம்பாட்டை உருவாக்கும்.

இந்திய சிங்கப்பூர் வர்த்தக மையத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு, அலுவலர்கள் குழு ஒன்று சிங்கப்பூர் சென்று புதிய முதலீடுகள் தமிழகத்தில் செய்வது குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றங்களை உருவாக்க இருக்கிறது. இத்தகு வியாபார மையத்திற்கு, சென்னைக்குஅருகிலுள்ள சோலிங்கநல்லூரில் 700 எக்டேர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை மேம்பாடு செய்வதற்கான தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மிகப் பெரிய முதலீடுகள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகப்பெரிய முதலீட்டில் தாய்த் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு மிக முக்கியத்துவம் தந்துள்ளார். தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடுகள், மிகக் குறைந்துள்ளது என்பதை அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். மத்திய அரசின் மூலதனம் 1969-இல் 10 சதவிகிதமாக இருந்தது 1989-இல் 5.2 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. தமிழ்நாடு மத்திய அரசின் முதலீட்டில் ஒரு பெரிய தொழிற்சாலையைக் கூட நீண்டகாலமாகக் காணமுடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் இடைவிடாத முயற்சியால் ரூ.2000 கோடி முதலீட்டில் ஆரோமேட்டிக் தொழிற்சாலைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. இது கடந்த 20 ஆண்டுகளில் மிகப் பெரிய சாதனையாகும். இத்தொழிற்சாலை மூலமாகப் பல்வேறு சிறு தொழிற்சாலைகள் உருவாகவும், 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

தமிழ்நாடு மோட்டார் பாகங்கள் உற்பத்திக் கேந்திரமாகத் திகழ்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.675 கோடி முதலீட்டில், ஒசூரில் அசோக் லேலண்ட்' அமைக்க இருக்கும் புதிய தொழிற்சாலைக்கு அனைத்து வசதிகளையும் உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் மோட்டார் உற்பத்தித் தொழிலுக்குப் புதிய உத்வேகத்தை உருவாக்கித் தந்திருக்கிறார். சேலத்தில், கேதான் சூப்பர் மேக் நிறுவனத்தால் ரூ.250 கோடி செலவில் மேக்னைட் தொழிற்சாலை, ரூ.500 கோடி செலவில், தமிழ்நாடு செய்தித்தாள் உற்பத்தித் தொழிற்சாலை விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றை உருவாக்கித் தந்ததன் மூலம் தமிழகத்தில் 10 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படாமல் இருந்த திட்டங்கள் ஓராண்டில் நிறைவேற்றப்பட்டிருப்பது மிகப் பெருமைக்குரியதாகும்.

தொழில்கள் தொடங்க புதிய முதலீடுகள்

தொழிற்சாலைகள் பொருட்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. ரூ.100 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள 3 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. ரூ. 40 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள ஆர்.ஆர்.மிடி.பாம் லிட். கம்பெனி நடப்பாண்டிற்குள் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.



மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவி மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத் திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் சேலம் இரும்பு ஸ்டீல் கம்பெனி நிறுவனம், அலுமினிய உருட்டுத் தகடு தயாரிப்புத் தொழிற்சாலை, தஞ்சை மாவட்டத்தில் வீடியோ தொழிற்சாலை ஆகிய மூன்று தொழிற்சாலைகள் ரூ.350 கோடி மூலதனத்தில் உருவாக்கப்பட இருக்கிறது. மேலும் 9 பெரிய திட்டங்கள் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திலும், எல்காட் நிறுவனத்திலும் பரிசீலனையில் உள்ளது. புதிய தொழில்களுக்கு வழிகாட்டுவதற்கு வழிகாட்டி நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய முதலீடுகளைத் தமிழகத்தில் உருவாக்க வழிகாணப்பட்டு வருகிறது. புதிய தொழில் நுட்பங்களையும் அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளையும் இந்நிறுவனம் கண்டெடுக்கும். வெளிநாட்டு மூலதனங்களைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும், தொழில் முதலீட்டுக் கழகமும், 1991-92-ஆம் ஆண்டில் இலக்கினைஎய்தியிருக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.161 கோடியும், சிறு தொழில் வாணிபக் கழகம் ரூ.41 கோடியும் எய்துள்ளது. 1992-93- ஆம் ஆண்டில் தொழில் முன்னேற்றக் கழகம் ரூ.180 கோடியும், சிறு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.50 கோடியும் வழங்கத் திட்டமிட்டுள்ளது. திருநெல்வேலி, தஞ்சை, நாகை, தென்னார்க்காடு, செங்கை ஆகிய மாவட்டங்களில் புதிதாகச் சர்க்கரை ஆலை தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

5 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்தவும், விரிவாக்கம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழில் உறவுகள், தொழிலாளர் நலன், நலிவுற்ற தொழிற்கூடங்கள் மேம்பாடு ஆகியவை பேணப்பட்டு வருகிறது. நீண்டகாலமாக மூடிக்கிடந்த பின்னி ஆலை தொடங்கப்பட்டதன் மூலம் 7,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்புப் பெற்றார்கள். கடந்த காலத்திய கடுமையான பிரச்சினைக்கு முடிவு காண்கின்ற வகையில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதல்வரின் தனி முயற்சி காரணமாக, 3,000 வேலையாட்கள் பணிபுரியும் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மீண்டும் திறக்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிபுரியும் தொழிலாளர்கள் நன்றியினைத் தெரிவிக்கிறார்கள். பல்லாண்டாய் மூடிக்கிடந்த இந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டு இப்போது உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

புதிய திட்டங்களும் நிதியும்!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின் பேரில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், வேளாண்மை உற்பத்தி ஆணையர், சிறப்புச் செயலர், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் உற்பத்தியாளர் இணையத்தின் தலைவர் மற்றும் அதன் நிர்வாக இயக்குநர் ஆகியோர் கொண்ட குழு, குஜராத் மாநிலத்திலுள்ள தேசிய பால் பெருக்கு வாரியத்திற்குச் சென்று அதன் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவினரைச் சந்தித்து தமிழகத்தில் வேளாண்மைத் துறைக்கும் அதனைச் சார்ந்துள்ள துறைகளுக்கும், புதிய திட்டங்களும், அதற்குரிய நிதிகளையும் பெற்று வருவதற்குச் சென்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்லாசியுடன் சென்ற இக்குழு, தேசிய பால் பெருக்கு வாரியத்தின் நிர்வாகத்தினரைச் சந்தித்து, இரு தரப்பினரும் கூட்டுக்கூட்டம் நடத்தியதன் பயனாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்ட திட்டங்களுக்கும் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டிற்கும், தேசிய பால் பெருக்கு வாரியம் மாண்புமிகு முதல்வரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ரூ.103 கோடியை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்து, முன்பணமாக அளித்த ரூபாய் ஒரு கோடியே 53 இலட்சத்திற்குரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் 25.9.1992 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சிறுதொழில்கள்

சிறுதொழில் அதிபர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட கலந்துரையாடல் நிகழ்த்தியதன் மூலம் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பொதுத்துறை நிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை முப்பது நாட்களுக்குள்ளாக செலுத்தவேண்டும் என்றும், அரசுச் செயலர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள குழுவிற்குப் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு நலிவுற்ற சிறிய தொழில்கள் மீண்டும் உயிர்பெறவும், ரூ.70 கோடி திட்டத்தில் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கவும், புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்கு ஒரு முதலீட்டு நிறுவனம் உருவாக்கப்படவும், திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் படிப்படியாகக் குறித்த காலத்தில் உதவித் தொகையை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1991-92-இல் 15,400 தொழிற்கூடங்கள் பதிவு செய்யத்திட்டமிடப்பட்டு, 17,422 புதிய தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்பட்டன. கடந்த 6 திங்களில் 11,900 புதிய தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் 20,100 தொழிற்கூடங்கள் பதிவு செய்யப்படும். தொழில் நுட்ப மேம்பாட்டுப் பணிகள் ஓராண்டில் மிக விரைவுபடுத்தப்பட்டு வருகிறது.

கனிம வள வளர்ச்சிக் கொள்கை

சுற்றுப்புறச் சூழலைக் கருத்தில் கொண்டு கனிமச் செல்வத்தை முறையாக வளர்ப்பதற்காக கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. கிரானைட், லிக்னைட், சுண்ணாம்புக்கல் ஆகிய கனிமங்கள் இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு வெட்டி எடுக்கப்படும்.

கருங்கற்கள் தொடர்பாக, புதிய கொள்கை வகுக்கப்பட்டு கடந்த 3 திங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 19,000 கன அடி கற்களை ஏற்றுமதி செய்வதற்கு அங்கீரித்துள்ளது. இப்புதிய கொள்கை செயல் ஆக்கப்படுவதற்கு முன்னர் மாதம் ஒன்றுக்கு 5000 கன அடி கற்கள் மட்டுமே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்தினை, புதிய கொள்கையின் மூலம் கிரானைட் தொழிலுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

1991-92-இல் தமிழ்நாடு கனிம நிறுவனம் குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்டியிருக்கிறது. சிவகங்கையில் கிரா:பைட் தொழிற்சாலை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. பல்லாண்டாய் இத்திட்டம் நிறைவேற்றப்படாமலே இருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். சிவகங்கையில் கிரா:பைட் தொழிலில் புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு மிகவும் உயர்ந்த தூய்மையான கிரா:பைட் தயாரிக்கப்பட இருக்கிறது. தொழிலில் பின்தங்கிய அந்தப் பகுதியில் பல தொழிற்கூடங்கள் உருவாகுவதற்கு வழிவகை காணப்பட்டிருக்கிறது.

கடந்த 15 திங்களாய் மிகவும் பொருளாதாரப் பிரச்சினையில் நாடு இருந்த போதிலும், தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் மிகவும் தீவிரமான அக்கறை காட்டப்பட்டு வருகிறது. புதிய முதலீட்டிற்கு தமிழகத்தில் புதிய கவர்ச்சி எழுந்துள்ளது. மிகுந்த செயல்திறன் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் புதிய தொழிற் கொள்கை வகுத்து தொழில் வளர்ச்சியில் மிகச் சிறந்த மேன்மையை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

(16.10.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில்துறை குறித்து ஆய்வு செய்த பின் வெளியிட்ட அறிக்கை).

நல்லுறவை வளர்க்கும் சார்க் நாடுகள் கலைவிழா

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 1989-இல் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் (SAARC) மாநாட்டின்போது, தெற்காசிய நாடுகளில் கலை விழாக்களை நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். இந்தக்கருத்தின் அடிப்படையில் இந்தியா பொறுப்பேற்று நடத்தும் 'சார்க்' நாடுகளின் முதலாம் தெற்காசியக் கலைவிழா, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு., பி.வி. நரசிம்மராவ் அவர்களால் அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் புதுடெல்லியிலுள்ள தீன் மூர்த்தி பவனில் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்க விழா நிகழ்ச்சிகளில் இந்தியா, வங்காளம், பூடான், நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான், இலங்கை ஆகிய சார்க் நாடுகள் ஏழும் பங்கு பெற்றன.

சார்க் நாடுகள் உறவோடு இணைந்து பரிவோடு உலக அமைதியை நிலைப்படுத்தவும், நல்லுறவை வலுப்படுத்தவும் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்க வேண்டும் என்பதில் இந்திய அரசு காட்டிவரும் ஈடுபாட்டைப் பறைசாற்றுவதாக இந்தக் கலைவிழா பதினாறு நாட்கள் பயனுற நடைபெற்றது.

இந்தக்கலைவிழா டெல்லி, சண்டிகார் ஆகிய இடங்களிலும், ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாம், குஜராத், ஹரியானா, இமாசலப்பிரதேசம், கர்நாடகம், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், மணிப்பூர், ஒரிசா, இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முப்பது நகரங்களிலும் நடைபெற்றது.

இதன் நிறைவு விழா அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி திருவனந்தபுரத்தில் நடந்தது.

இந்த கலைவிழாவின் தேசிய அமைப்புக் குழுவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலைவிழா தமிழ்நாட்டில் அக்டோபர் மாதம் 18,19,20 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசும் இந்திய கலைப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய இந்தச் சிறப்புமிகு கலைவிழாவினை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் அக்டோபர் திங்கள் 18-ஆம் நாள் சென்னையில் மியூசிக் அகாடெமியில் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

வங்கதேசம் (Bangladesh), பூடான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நாட்டுப்புறக் கலைக் குழுக்கள் இந்த 3 நாள் கலை நிகழ்ச்சியில் இடம் பெற்றன.

தொடக்க நாளான 18-ஆம் தேதி 14 பேர் கொண்ட வங்கதேசக் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சியும், 19-ஆம் தேதி 25 உறுப்பினர்களைக் கொண்ட பூடான் நாட்டுக் கலைக் குழுவின் கலை நிகழ்ச்சியும், கடைசி நாளான 20-ஆம் தேதி 19 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தான் நாட்டினரின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன.

தொடக்க விழா மாண்புமிகு கல்வி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வங்கதேச கலைக் குழுவினரை, சென்னை சரசாலய பரத நாட்டியக் குழுவினர் புஷ்பாஞ்சலி நடனமாடி வரவேற்றது அற்புதமாக இருந்தது.

அடுத்து, வங்க தேசத்தின் புகழ்பெற்ற நாட்டுப்புற நடனத்தை அந்நாட்டு வழக்கப்படி வங்கதேச கலைக்குழுவினர் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து மிக அருமையாக ஆடினார்கள்.

'Expectation' என்ற நடனம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கவிதைத் தொகுப்பிலிருந்து இனிமையான பாடலொன்றுக்கு நடனமாடி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள்.

அடுத்து, பாம்பாட்டி நடனம். இதில், பாம்பாட்டி மகுடி ஊதிக் கொண்டே பாம்பைத் தேடும்



காட்சி அற்புதமாகவும் அழகாகவும் இருந்தது.

இதைத் தொடர்ந்து வங்கதேசக் கலைஞர்களின் 'நாங்கோர் செரியா' எனப்படும் பழங்குடி நடனம் (Folk Dance) நடைபெற்றது. மீனவர்கள். படகில் சென்று கடல் அலைகளின் சப்தத்திற்கு ஏற்ப ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து மிக எளிமையான உடைகளோடு அற்புதமாக ஆடி அவையோரின் பாராட்டைப் பெற்றனர்.

அடுத்து நடைபெற்ற வங்க தேசத்தில் பிரசித்திப் பெற்ற விழாக்கால நடனமான 'சட்கா' நடனம் (Chatka Dance), Kula Dance, கல்யாண நடனம் (Wedding Dance) போன்ற நாட்டுப்புற நடனங்கள் வங்க தேசத்தின் கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தையும், சுற்றுச் சூழலையும் எடுத்துரைப்பதாக இருந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

கலை நிகழ்ச்சியின் இறுதியாக வங்காள தேசத்தின் விடுதலை வேள்விக்கு வித்திட்ட வங்கக் கவி காஜி நஸ்ருல் இஸ்லாம் அவர்கள் இயற்றிய கவிதைக்கான நாட்டியம், கண்களுக்கு விருந்தாக இருந்தது. வங்க தேசத்தின் விடுதலைக்காகப் போராடும் ஆண்களும், பெண்களும் எவ்வாறு தம் கடமைகளைச் செய்தனர் என்பதைச் சித்திரித்துக் காட்டினார்கள்.

சென்னை கலாச்சேத்திரா மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியோடு முதல்நாள் 'சார்க்' கலைவிழா இனிதே நடந்து முடிந்தது.

சார்க் கலை விழாவின் இரண்டாம் நாளான 19.10.'92 அன்று, 25 கலைஞர்களைக் கொண்ட பூடான் நாட்டின் கலைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் கூட்டுறவு , அன்பு , ஒற்றுமை ஆகியவற்றைப் பறைசாற்றும் 'போதிமரக் கொம்பு' என்ற வரவேற்புப் பாடலும், தாண்டவக் கூத்து, இடுகாட்டு நடனம், Mask Dance போன்ற நாட்டுப்புற நடனங்களும், ஒப்பனை பாட்டிசை நிகழ்ச்சிகளும் கண்ணைக் கவருபவைகளாக இருந்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மூன்று நாள் கலைவிழாவின் இறுதி நாளான 20-ஆம் தேதியன்று, 19 கலைஞர்களைக் கொண்ட பாகிஸ்தான் நாட்டின் கலைவிழா சிறப்பாகவும் எளிய முறையிலும் நடந்தது. பாகிஸ்தானின் கவினார்ந்த நாட்டுப்புற நடனமாகிய கலாஷ் சாரல் குழுவினரின் நடனம், பாங்கரா, பவுலோ, ஜட்கா போன்ற நடனங்களும் கண்ணுக்கு விருந்தாகவும் நினைவில் நீங்கா இடம் பெறுபவையாகவும் இருந்தது பாராட்டுக்குரியதாகும்.

பலதரப்பட்ட மக்களையும், வாழ்க்கைத் தரத்தையும், பண்பாட்டையும் கொண்ட நாடுகளை ஒன்றோடு ஒன்று இணைக்கப் பயன்படுவது கலை ஒன்றே ஆகும். பக்கத்து நாடுகள் ஒத்துழைப்புடனும், சமாதானத்துடன் வாழவும், ஒரு நாட்டு மக்கள் இன்னொரு நாட்டு மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் இத்தகைய கலைவிழாக்கள் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை!

நிகழ்ச்சித் தொகுப்பு:ஜே.சி.

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த 522 மனுதாரர்களுக்கு 32 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

பெரியார் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 522 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அரசுச் செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்து வந்து அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.10.92 அன்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்டத்தின் கணிப்பொறி (Computer) தொழில் தொடங்க 3 நபர்களுக்கு ரூ.72,150-ம், இதரத் தொழில் தொடங்க 6 பேர்களுக்குக் கடன் மற்றும் மானியத் தொகையாக ரூ.1,25,000-மும், தாட்கோ மூலம் 3 நபர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்க ரூ.1,80,000-மும், கூட்டுறவுத்துறை மூலம் டிராக்டர் வாங்க ஒருவருக்கு ரூ.2,00,000 கடனுதவியும், கறவை மாடுகள் வாங்க 5 நபர்களுக்கு ரூ.18,500-ம், 6 நபர்களுக்குப் பண்ணை சாராக் கடனாக ரூ.1,20,000-மும், வேளாண்மைத்துறை மூலமாக 3 பேர்களுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவி, கைத்தெளிப்பான்கள் வாங்க ரூ.35,300 கடனுதவியும், கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் 9 பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

கலப்புத் திருமண நிதியுதவி 3 பேர்களுக்கும், விதவை மகள் திருமண நிதியுதவி 5 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவி 5 பெண்களுக்கும், 4 பேர்களுக்குக் காதொலிக் கருவிகளும், உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு மானியம் இருவருக்கும், முடிதிருத்தகம் அமைக்க 5 பேர்களுக்குக் கடனுதவியும், சலவைப்பெட்டிகள் 5 பேர்களுக்கும், சவரப் பெட்டி 5 பேர்களுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா 72 பேர்களுக்கும், விதவை உதவித்தொகை 10 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இருவருக்கு உதவித்தொகையும், நலிந்தோர் குடும்ப நல உதவி 10 பேர்களுக்கும், விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் இரண்டு நபர்களுக்கு ரூ.20,000 உதவித் தொகையும், தீவிர சுகாதாரத் திட்டத்தின்கீழ் வீடுகளில் கழிப்பிடம் கட்டியுள்ள 5 நபர்களுக்கு அரசு மானியமும், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 6 நபர்களுக்கு ரூ.23,000 உதவித்தொகையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 36 பேர்களுக்குக் கறவை எருமைகள் வாங்க ரூ.2,11,800 கடனுதவியும், வெள்ளாடு வளர்க்க 20 பேர்களுக்கு ரூ.40,000 கடனுதவியும், செம்மறியாடுகள் வளர்க்க 18 பேர்களுக்கு ரூ.1,48,600 கடனுதவியும், செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலுக்கென 30 பேர்களுக்கு ரூ.5,32,000 கடனுதவியும் வழங்கப்பட்டன.

மொத்தம் 522 நபர்களுக்கு ரூ.32,00,000 (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 407 பேர் பெண்களாவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெண்ணாடத்தைச் சேர்ந்த நவநீதம்-மேகராஜ் தம்பதியினரின் குழந்தைக்கு ராமச்சந்திரன் என்றும், மும்தாஜ்பேகம்-ராமச்சந்திரன் தம்பதியினரின் குழந்தைக்கு ராஜலட்சுமி என்றும் பெயர் சூட்டினார்.

காந்தி கிராமப் பல்கலைக்கழக வேந்தர் தேர்வு

காந்தி கிராமப் பல்கலைக்கழக வேந்தரர்க, குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே, இந்தப் பதவியை குடியரசுத் துணைத் தலைவராக இருந்த காலத்தில் திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களும், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும் வகித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்த தேசிய பால்வள நிறுவனம் ரூ.103 கோடி நிதியுதவி

தமிழ்நாட்டில் விவசாயிகளும், பொதுமக்களும் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டுக்கு ரூ.103 கோடி வழங்க இசைந்திருக்கிறது.

தமிழக விவசாயத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஓர் உயர் மட்டக்குழு அண்மையில் குஜராத் மாநிலம் ஆனந்த் சென்றிருந்தபோது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இந்த ஒப்பந்தத்தின்படி முதல் தவணையாக 1.53 கோடி ரூபாய் தேசிய பால்வள நிறுவனத்தால் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது. தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து இவ்வளவு பெரிய தொகை பெறப்படுவது இதுவே முதல் முறையாகும்.

எண்ணெய் வித்துக்கள்: இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக தீவிர எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் ரூ.40 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னார்காடு ஆகிய மாவட்டங்கள் ஒரு பகுதியாகவும் திருச்சி, தஞ்சாவூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்கள் இன்னொரு பகுதியாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்த 2 பகுதிகளிலும் தனித்தனியாக தலைமை இடங்கள் அமைத்து ஆயிரம் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் எண்ணெய் வித்துக்களைக் கூட்டுறவு சங்கங்களே வாங்கி, எண்ணெய் பிழிந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 3 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

காய்கறி, பழங்கள்:

அடுத்து, ரூ.45 கோடி செலவில் காய்கறி மற்றும் பழங்கள் வாங்கி விநியோகிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி விவசாயிகளிடமிருந்து காய்கறிகள், பூக்கள், பழங்கள் போன்றவற்றை அரசே நேரடியாக வாங்கி சுத்தப்படுத்தி நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும். இதற்கென மாதவரத்தில் ஒரு நவீன சுத்திகரிப்புப் பண்ணை அமைக்கப்படும். இந்தத் திட்டம் இந்த நிதியாண்டிற்குள் (1992-93) செயல்படத் தொடங்கும்.

விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் 1992 இறுதிவரை நீட்டிப்பு

விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் இந்த ஆண்டு (1992) இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் உரம், விதை, பூச்சிமருந்து போன்றவை வாங்குவதற்காக அரசு வழங்கிவந்த மானியம் 1992 செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியுடன் முடிவடைவதாக இருந்தது. இதை மேலும் சிறிதுகாலம் நீட்டிக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க இந்த மானியம் இந்த ஆண்டு இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் 31-12-1992 வரை மானியம் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தகவலை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய்: ஓர் எச்சரிக்கை!

இந்த நூற்றாண்டுக்குள் அதாவது 2000-வது ஆண்டுக்குள், 80 இலட்சம் பெண்களும், ஒரு கோடி குழந்தைகளும் எயிட்ஸ் நோய்க் கிருமியால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுகிறது உலகச் சுகாதார நிறுவனம்.

எயிட்ஸ் நோய்க் கிருமிகளால், தற்போது உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைப் பேர் தெரியுமா? ஒரு கோடிப் பேர்!

இவர்களில் 30 இலட்சம் பேர் பெண்கள் 10 இலட்சம் பேர் குழந்தைகள் என்று இந்தக் கணிப்பு கூறுகிறது.

எயிட்ஸ் நோய்க் கிருமிகள், பெண்களிடமிருந்து ஆண்டுகளுக்குத் தொற்றுவது குறைவு என்றும், ஆண்களிடமிருந்து பெண்களுக்கு இந்தக் கிருமிகள் அதிகமாகத் தொற்றுகிறது என்றும் ஆய்வு மூலமாகத் தெரிய வருகிறது.



பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

'வள்ளலார்' என்ற சொல் எப்படி வடலூர் இராமலிங்க அடிகளாரை மட்டுமே குறிக்கிறதோ, 'பெரியார்' என்ற சொல் எப்படி ஈரோட்டு இராமசாமிப் பெரியாரை மட்டுமே குறிக்கிறதோ, 'அண்ணா' என்ற சொல் எப்படி காஞ்சி தந்த அறிஞர் அண்ணாவை மட்டுமே குறிக்கிறதோ - அதேபோலத் 'தேவர்' என்ற சொல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை மட்டுமே குறிப்பிடுவதாகிவிட்டது.

தென்பாண்டி மண்டலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் தன்னேரில்லாத் தலைமகனாகவும், நாட்டு விடுதலைப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தவர்தான் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்; 30.10.1908-இல் பிறந்த அவர் மறைந்த நாள் 30.10.1963 ஆகும்.

நலிந்து கிடக்கும் மக்களின் வாழ்விலே நம்பிக்கை ஒளி ஊட்டவும், நாட்டு விடுதலைக்காகவும் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட அந்த வைர நெஞ்சனின் பெற்றோர்- உக்கிர பாண்டியத்தேவர், இந்திராணி அம்மையார் ஆகியோராவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்ற சிற்றூர் இவர் பிறந்த ஊர்.

இவர் பிறந்த இரண்டு மூன்று திங்கள்களிலேயே தாயார் இந்திராணி அம்மையார் இறந்து போனார். அதன் பிறகு இவரைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தவர் பாட்டியார் இராணி அம்மையார் ஆவார்.

இவருக்குப் பாலூட்டி வளர்த்த பெருமை ஒரு முஸ்லீம் தாய்க்கும் உண்டு.

சிறுவன் முத்துராமலிங்கத்தின் கல்விக்கண் திறந்தவர்கள் முதலில் கிறித்துவப் பாதிரிமார்களேயாவர்; அதன் பிந்திய காலப் பள்ளிப் படிப்பு - கமுதியிலும், பசுமலை உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை ஐக்கியக் கிறித்தவ உயர்நிலைப் பள்ளியிலும் மாறிமாறிச் சில காலம் தொடர்ந்தது. பத்தாம் வகுப்புப் படிப்போ இராமநாதபுரம் அரசர் உயர்நிலைப்பள்ளியில்.

இந்தக் காலகட்டத்தில் - ஊரெங்கும் பரவிய பிளேக் நோய் காரணமாக, படித்தது போதுமென்று ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டார் இளைஞர் முத்துராமலிங்கம். தவமிருந்து பெற்றெடுத்த ஒரே மகன் என்பது தான் இதற்கு முக்கியக் காரணமாகும். அதற்குமேல் இவர் படித்தெல்லாம் அனுபவப் படிப்புத் தானே தவிர, பள்ளிப் படிப்பல்ல!

சோதிடம், வான சாஸ்திரம், மருத்துவம் ஆகியவைகூட இவருக்குக் கைவந்த கலை ஆயிற்று. ஆங்கிலத்திலும் தமிழிலும் வாதாடுமளவுக்குத் திறமை வாய்க்கப் பெற்றார். சாயல்குடியில் 23.6.1933 அன்று நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் தொடர்பான் விழா ஒன்றில் தான் முதன்முதலாக மேடையேறிப் பேசினார். 'மேதை இவர்' என்று அன்று முதலே மக்கட் கூட்டத்தால் மனதாரப் போற்றிப் புகழப்பட்டார், தேவர்.

நாளடைவில், மற்ற மாநிலங்களில் மட்டுமல்ல; இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் இவருக்கு அழைப்பு வந்தது. அந்நாட்டு மக்களெல்லாம் தேவர் திருமகனின் தேசிய உணர்வுமிக்க - சமய மணங்கமழுகின்ற - தமிழினிமை மாறாத அருவி போன்ற சொற்பெருக்கில் திளைத்துச் சொக்கிப் போனார்கள்.

ஆங்கிலேயரின் வாய்ப்பூட்டுச் சட்டத்தால் கொடுமைப்படுத்தப் பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் 'தேசியம் காத்த செம்மல்' எனக் கூறிச் சிறப்பித்தார்.

தான் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியில் அமரப் பெரும்பாடுபட்ட இவரைத் தீரர் சத்தியமூர்த்தி 'காங்கிரஸ் காத்தான்' என்று குறிப்பிட்டு இறும்பூதெய்தினார்.

வட இந்திய மக்கள், நேதாஜியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவரைத் 'தென்னாட்டு போஸ்' என்றார்கள்.

பர்மியக் குடியரசுத் தலைவரோ 'இவர் ஓர் இந்து சமயப் புத்த மேதை' என்றார்.

சர்க்கரைப் பந்தலிலே தேன் மழை பெய்தாற்போலச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறம் மிக்க தேவர் - 'வேதாந்த பாஸ்கர', 'பிரவசன கேசரி', 'சன்மார்க்க சண்டமாருதம்' என்றெல்லாம் போற்றப்பட்டார்.

கடைசிவரை திருமணமே செய்து கொள்ளாமல் - நாடு, மொழி, மக்கள் என்றே வாழ்ந்த பெருமையாளர் இவர். ஆனால், இதன் காரணமாகவே சேது நாட்டுக்குப் பெருமை சேர்த்த இவருடைய மரபு, இவரையடுத்துச் செழிக்காமல் பட்டுப் போயிற்று.

தெய்வ பக்தி மிக்கவரான தேவர் தீண்டாமைக் கொடுமையைச் சாடினார்; சாதி சமய ஏற்றத்தாழ்வுகள் மாற்றப்பட வேண்டுமெனப் பாடுபட்டார். 'அரிசன மக்களின் ஆலயப் பிரவேசம்' பற்றி அண்ணல் காந்தியடிகளால் அறிவிக்கப்பட்டபோது, மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் அரிசனங்களோடு திரு. வைத்தியனாதய்யர் நுழைவதாக ஏற்பாடு; ஆனால் - 'அது நடக்காது' என்கிற அச்சுறுத்தல் நிலை அன்று அங்கே உருவாயிற்று. பிறகு அன்றைய முதலமைச்சர் மூதறிஞர் ராஜாஜி ஆலோசனையின் பேரில், தேவர் திருமகன் துணையோடுதான் அன்று மதுரை

★ தந்தை பெரியார் அவர்களாலேயே பெரியார் என்று பாராட்டப்பட்டவர் பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர். பி.கே. மூக்கையாத் தேவர் பொன்விழா மலரில், தந்தை பெரியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையொன்றில்- 'பெருமைமிக்க பெரியார் முத்துராமலிங்கத்தேவர்' என்று குறிப் பிட்டிருக்கிறார்.

★ தேவருக்கு நாம் செய்யும் ஒரே கடமை- அவருடைய ஆத்மா சாந்தியடைய நாம் எடுத்துக் கொள்ளும் ஒரே பணி- தேவருடைய உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணங்களை நிறைவேற்றுவது தான்.

—அறிஞர் அண்ணா

★ பசும்பொன் தேவர் பேசினால், தமிழன்னையே பேசுவதாக நான் நம்புகிறேன். தேவரின் திரு வாயில் அமர்ந்து கொண்டு என் தமிழ்த்தாயே அவர்மூலம் பேசுகிறாள் என்றே எண்ணுகிறேன்!

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

யம்பதியில் ஆலயப் பிரவேசம் அமைதியான முறையிலே நடத்தப் பட்டது.

தமக்குச் சொந்தமாக இருந்த பத்தாயிரம் பனைமரங்களையும் மரமேறிப் பிழைப்பு நடத்தும் ஏழை எளிய மக்களுக்கே இனாமாக உரிமையாக்கியவர் தேவர்; இது மட்டுமல்ல. இவர் தந்தை உக்கிர பாண்டியததேவர் காலத்தில் காமாட்சி நாடார் குடும்பத்தாருக் கும் இவர்கள் குடும்பத்திற்கும் இடையிலிருந்த நட்புறவு நேர்த்தி மிக்கதாகும்.

அரிசனங்களின் முன்னேற்றத் திற்கான அரும்பணிகள் பல ஆற்றிய சிறப்புக்கும் உரியவரான இவர் அவர்களில் சிலருக்குக் குறைந்த குத்தகைக்கும், பலருக்குக் குத்தகை இல்லாமலுமே தமது பெரும்பகுதி விளை நிலத்தைக் கொடுத்தார்.

அரிசனச் சிறார்கள் பலர் இவர் வீட்டிலேயே குருகுல வாசமிருந்து எல்லா நலங்களும் பெற்று உயர்ந் ததும் உண்டு.

குற்றப் பரம்பரைச் சட்டம்

மறவர் குல மாணிக்கமாகிய முத்துராமலிங்கத் தேவர் முன் னின்று செய்த பெரும் பணிகளிலே ஒன்று - ஆங்கில ஆட்சியில் அறிமுக மாகி, அதற்குப் பிறகும் தொடர்ந்து அமலில் இருந்த பிறமலைக் கள் ளர்கள் மீதான குற்றப் பரம்பரைச் சட்டத்தை அரசு திரும்பப் பெறச் செய்ததேயாகும்.

தேவரினத்தவர், தினசரி காவல் நிலையத்திற்குப்போய், 'எங்கே சென்றும் எக்குற்றமும் இழைக்க வில்லை' எனக் கட்டைவிரல் ரேகை வைத்து வர வேண்டுமென்பதே அச்சட்டம்; ''இந்த இழிநிலையை மாற்றாவிட்டால் நாங்கள் எங்கள் கட்டைவிரலையே வெட்டிக் கொள்ளு வோம்; அப்புறம் எப்படி உங்களால் ரேகை வாங்கமுடியும்?'' என்று அன்று கர்ஜித்தது இந்தப் பசும் பொன் சிங்கம். அரசால் எதிர்த்து நிற்க இயலவில்லை. அச்சட்டம் அவர் பலம் அறிந்தபின் கைவிடப் பட்டது. பின்தங்கிய வகுப்பினர் இதனால் பெருமை பெற்றார்கள்; தேவரைக் குலதெய்வமாகவே கொண்டாடினார்கள்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து பிரஜா சோஷலிஸ்ட் என்றோர் இயக்கத்தை ஆரம்பித்த ஜெயப்பிரகாசர் அவர்களும் முத்து ராமலிங்கத் தேவரிடத்திலே பெரு மதிப்புக் கொண்டிருந்தார்.

தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி, வெற்றி கண்டவரும் ஆவார் தேவர்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பின்னர், இவருக்கும் நேதாஜிக்கும் இடைப்பட்ட தொடர் புகள் அரசால் கண்காணிக்கப் பட்டன. அதன் விளைவு - அஞ்சா நெஞ்சன் முத்துராமலிங்கத்தேவர் கைதானார். முடிவாக 1945 செப்டம்பர் 5-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார்.

அதற்கடுத்த சில மாதங்களி லேயே சென்னை சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் வந்தது.

தொடர்ந்த சிறைவாசத்தால் உடல்நிலை பெரிதும் பாதிக்கப் பட்டிருந்த போதிலும், தனது மன வலிமையை மாற்றார் உணர வேண்டும் என்கிற நோக்கோடு அத்தேர்தலில் போட்டியிட்டார் பசும்பொன்தேவர். எதிர்த்து நிற் பார் யாருமில்லை; எனவே போட்டி யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாளடைவில் - தேவர் பெரு மகனாரை ஆன்மீகம் ஆட்கொண் டது. சிறந்த முருக பக்தரானார் இவர். திருப்புகழ் தேவாரம், திருவாசகம், திருமந்திரமெல்லாம் இவருடைய சொற்பொழிவினி டையே சுவை சேர்த்திடலாயின.

1962-இல் 55-ஆம் வயதடைந்த அந்த வீரத் திருமகனின் யாக்கை, வெப்பு நோயால் பாதிக்கப்பட்டது. அந்த நிலையில் வந்த நாடாளு மன்றத் தேர்தலிலும், அருப்புக் கோட்டைத் தொகுதியிலே போட்டி யிட்டார் தேவர். நோயின் கடுமை காரணமாகத் தொகுதிக்குள் ஒரு முறைகூட சென்று பிரச்சாரம் செய்ய முடியாத நிலை; அந்நிலை யிலும் அவரே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆனால் - டில்லி மாநகர் சென்று பதவிப் பிரமாணம் எடுக்கக் கூட உடல்நிலை இடம் தரவில்லை; முடிவில் - 1963 அக்டோபர் 30-ஆம் நாள் அதிகாலை 5 மணி யளவில், மனிதர்களால் வெல்ல முடியாத அந்த மாவீரனை மரணம் வெற்றி கொண்டுவிட்டது. தென் பாண்டிச்சீமையே தேம்பியழுதது.

- பி.எல். ராஜேந்திரன்.

தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகப் பணிகள்

இந்தியாவில் மக்கட் தொகைப் பெருக்கம், இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு மாபெரும் தடை யாக உள்ளது. எனவே, முன் னேற்றத்திற்கான முதற்படி விவசாயத்துறை என எண்ணி விவ சாயத்தில் பசுமைப் புரட்சி ஏற் படுத்தி, உணவுப் பொருள் உற்பத் தியை அதிகரிப்பதில் ஒரு பங்கு வகித்தாலும், தொழில் வளர்ச்சியின் மூலம் ஒரு மாபெரும் சாதனையை ஏற்படுத்தினாலொழிய வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலாது.

ஆகவே, மிகவும் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் உள்ள உபயோகப் படுத்தப்படாத இயற்கை வளங்களை அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பட்டதாரிகளைக் கொண்டு கண் டறிந்து, அவர்கள் மூலம் பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் களை ஏற்படுத்தி முன்னேற்ற மடையச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் மூலம் 'தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முனைவோர் குழு' 1982-இல் அமைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் பரிந்துரையின் படி இந்தியா முழுவதிலும் இருந்து 13 மாவட்டங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டன. இதில் தருமபுரி மாவட்டம் ஒன்றாகும். இச்சிறப்புத் திட்டத்திற்கு 'அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முனைவோர் மேம் பாட்டுத் திட்டம்' எனப் பெயரிடப் பட்டது. தருமபுரி மாவட்ட வளர்ச் சிக் கழகம் மூலம் 1985-86-ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சுய தொழில் அமைக்க அனைத்து உதவிகளையும் இம்மாவட்ட வளர்ச்சிக் கழக 'STED' (Science and Technology Entrepreneurship Development Project) பிரிவு செய்து வருகிறது.

இப்பிரிவு இதுவரை 24 தொழில் முனைவோர் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தி, அவற்றின் மூலம் 2,177 அறிவியல், பொறியியல் பட்டதாரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு இத் திட்டத்தில் செயல்பாட்டினையும், இதரத் தொழில் துறை நிறுவனங் களின் பணிகளையும் உதவிகளையும் விளக்கிக் கூறியுள்ளது.

இப்பிரிவு, இம்மாவட்டத்தில் 321 புதிய தொழில்கள் தொடங்கு வதற்கான சாத்தியக் கூறு - தொழில் திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து வைத்துள்ளது.

183 தொழில் முனைவோர்கள் தொழில் திட்ட அறிக்கை தயாரிக்க வும் இது உதவி செய்துள்ளது. 129 நபர்களின் திட்டங்களைப் பரி சீலனை செய்து, நிதி நிறுவனங் களுக்குப் பரிந்துரை செய்து, அவர் களுடன் தொடர்பு கொள்ள இணைப்புப் பாலமாகச் செயல் பட்டு உள்ளது. இதில் 84 பேர் உற்பத்தியைத் தொடங்கிட அனைத்து உதவிகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட முழுமைக்கும் இரு பெரும் தொழில் கருத்தரங்குகள் மற்றும் மூன்று தொழில் முனைவோர் பயிற்சித் திட்ட வகுப்புகள் செவ்வனே நடத் தப்பட்டுள்ளன.

தொழில் முனைவோரின் ஊக்கத்திற்காகவும், உதவிக்காகவும் 'STED NEWS' என்ற இதழ், மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப் படுகிறது. இதுவரை 18 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

'மொத்த வேலை வாய்ப்பினை உருவாக்கும் பயிற்சித் திட்டம்'

இந்திய அரசு, இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் மூலம் மொத்த வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டம்' என்ற புதிய திட்டத்தை, தருமபுரி மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. திறன் வளர்க்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து, அவற்றின் மூலம் சுய வேலைவாய்ப்பையோ அல்லது தொழில் பயிற்சி அளித்த நிறுவனங் களில் பணியில் அமர்த்தவோ செய் வதே இத்திட்டம்.

1990-91-ஆம் ஆண்டு மூன்று துறைகளில் பயிற்சிகள் அளிக்கப் பட்டன:

1. தையல் பயிற்சி
2. பட்டு நூற்புப் பயிற்சி
3. அச்சகப் பயிற்சி.

தையல் பயிற்சி

தையல் கலையில் திறனை வளர்த்துக் கொள்ளும் அடிப்படை யில் இப்பயிற்சிக்காக 25 கிராமப் புற மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டச் சமூகநல அலுவலர் மற்றும் தருமபுரி தையல் மகளிர் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

பா. வேங்கடசாமி,
மேலாண்மை இயக்குநர்
தருமபுரி மாவட்ட
வளர்ச்சிக் கழகம்
தருமபுரி



மொத்த வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கைமுறைக் காகிதம் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

தையல் பயிற்சி முடிவடைந்த உடன், தையல் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறுவதற்காகச் சேர்க்கப்பட்டனர். இதனால் இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள், இச்சங்கத்தின் மூலம் ஆண்டிற்கு ரூ.3,000 முதல் ரூ.4,000 வரை வருமானம் பெற வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இது தவிர, வெளியிடத்திலிருந்தும் தையல் வேலை மூலம் வருமானம் பெறுகின்றனர். தைப்புத் துணி ஏற்றுமதியாளர்களிடமிருந்து, இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள், தையல் வேலை பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டு நூற்புப் பயிற்சி

பட்டு நூற்பில் திறனை வளர்த்துக் கொண்டு வேலை வாய்ப்புப் பெற மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் கருத்தான்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பட்டு நூற்பு மையத்தில் 21 கிராமப்புறத் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு 11.8.90முதல்10.2.92 வரைஇத் திட்டத்தின் மூலம் 6 மாதப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி பட்டுவளர்ச்சித்துறைமற்றும்கோவை வடக்கு சர்வோதயச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்பட்டது. பயிற்சி மையத்தைத் தற்போது கோவை வடக்குச் சர்வோதய சங்கம் ஏற்று நடத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள் இந்த மையத்திலேயே தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

அச்சகப் பயிற்சி

அச்சு கோத்தல், அச்சடித்தல், பைண்டிங், ஸ்கிரீன் பிரிண்டிங் ஆகியவற்றில் திறமை வளர்த்துக் கொண்டு வேலை வாய்ப்புப் பெற தருமபுரி மகளிர் எழுதுபொருள் தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 7.1.91 முதல் 6.4.91 வரை 24 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் இச்சங்கத்திலேயே உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

மொத்த வேலை வாய்ப்புத் திட்டம் (1991-92)

பயிற்சி பெற விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பயிற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. பயிற்சிகள் முடிந்ததும் பயிற்சி பெறும் நிறுவனங்களிலேயே தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற அல்லது சொந்தமாகத் தொழில் அமைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விஞ்ஞானத் தொழில் நுட்பம் மூலம் அதிக அளவில் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத் தென் வட்டாரக் கருத்தரங்கம் 29.9.92 அன்று தருமபுரியில் நடைபெற்றது. மத்திய விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறை இணை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் இக்கூட்டத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பிரிவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களைக் கொண்டு கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

தருமபுரி மாவட்டத்தில் தொழில் தொடங்க விரும்பும் அறிவியல் மற்றும் தொழில் பயிற்சி பயின்றவர்கள், தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்களைச் சந்தித்து விவரம் பெறலாம்.

நேரு வழி நடப்போம்

அட்டை சொல்லும் கவிதை:



கவிஞர் பி.வி. கிரி

நேரு மாமா பிறந்தநாளில்
 நெஞ்சம் உயர்த்துவோம்
'யாரும்நம்மில் அடிமையில்லை'
 என்று கூறுவோம்!

நாளைஉலகம் நமதுகையில்
 நடை பயிலுவோம்
வேளைவந்தால் நாட்டைக்காக்கும்
 வீரம் கொள்ளுவோம்!

நமதுநாடு நமதுமக்கள்
 நாளும் போற்றுவோம்
சமத்துவமாய் வாழ்வோமென்று
 சபதம் செய்குவோம்!

ஊனமுற்ற யாவருக்கும்
 உதவி செய்குவோம்
காணுகின்ற உயிர்களிடம்
 கருணை காட்டுவோம்!

'நல்லநூல்கள் நல்லநண்பர்'
 என்று சொல்லுவோம்
வல்லவராய் விளங்கும்வண்ணம்
 வாழ்ந்து காட்டுவோம்!

உலகம்போற்றும் நேருவழியில்
 உவந்து செல்லுவோம்
திலகம்போல நாடுதிகழ
 தினமும் உழைப்போம்!

திருக்கோயில் திருப்பணிகள்

ஓராண்டில் இந்து சமய அறநிலையத்துறையின் முன்னேற்றப் பணிகள்

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும் புதிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு மாநில அளவில் தமிழ்நாடு 'திருக்கோயில் நிர்வாக வாரியம்' என்ற அமைப்பும் மாவட்ட அளவில் 'மாவட்டக் குழுக்கள்' என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாகத்தில் புதிய சகாப்தத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. மாநில அளவில் அமைந்துள்ள தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தில் அரசு அலுவலர்களும், சமூகத்தில் பல துறைகளில் திறமைமிக்க சான்றோர்களும் உறுப்பினர்களாகத் திகழ்கிறார்கள்.

திருக்கோயில் நிர்வாக வாரியம்

திருக்கோயில் நிர்வாக வாரியம் 2 கூட்டங்களை நடத்தி, 225 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. முதல் கூட்டத்தில், 47 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணி ரூ.94.29 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், தொழில் நுட்ப அனுமதியும் வாரியம் வழங்கியுள்ளது. மேலும் 33 திருக்கோயில்களுக்கு ரூ.136 இலட்சத்திற்கான ஒப்பந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது வாரியக் கூட்டத்தில் 32 திருக்கோயில்களில் ரூ.169.44 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 12 திருக்கோயில்களில் ரூ.141 இலட்சத்திற்கு ஒப்பந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. 63 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறத் திருப்பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 131 திருக்கோயில்களுக்கு 1402-ஆம் பசலியில் ரூ.3,757 இலட்சத்திற்கு வரவு செலவுத் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் குழுக்கள்

திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் 17 மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவாக வருமானமுள்ள கோயில் நிர்வாகப் பொறுப்பு இக்குழுக்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 17 மாவட்டக் குழுக்கள் 61 கூட்டங்களை நடத்தியுள்ளது. இராமநாதபுரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் வடக்கு மற்றும் தெற்குக் கோபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம் சீரமைப்புப் பணி நடைபெற்று முடியும் தறுவாயில் இருக்கிறது. இக்குளத்தில் சேருகின்ற நீரைச் சுத்தம் செய்வதற்கு, குளத்தில் நான்கு இடங்களில் சுழற்சி முறையில் சுத்தம் செய்யும் இயந்திரங்களை நிர்மாணிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள்.

வல்லுநர் குழு

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலவர் விக்கிரகத்தைப் பாதுகாப்பதற்கு 'வல்லுநர் குழு' ஒன்றைத் தமிழக அரசு அமைக்க உத்தரவிட்டு, அந்தக் குழு அமைக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை தந்துள்ளது.

புத்தொளிப் பயிற்சி

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஏற்கெனவே பணியிலிருக்கின்ற அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு வேத ஆகமப் பயிற்சி மீண்டும் ஓர் ஆண்டுக் காலத்திற்கு அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 10 மையங்களில் 500 அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் 'புத்தொளிப் பயிற்சி' மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றுவருகிறார்கள்.

வேத ஆகமக் கல்லூரி

வேத ஆகமங்களைப் பயிற்றுவிக்கும் பள்ளிகள் பயிற்சி அளிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் வேத ஆகமக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது. வேத ஆகமக் கல்லூரி ஒன்றினை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்வதற்காக அரசு வருவாய்த் துறைச் செயலர், வணிகவரி மற்றும் அறநிலையத் துறைச் செயலர், அறநிலையத்துறை ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் ஆகியோரைக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்றினை அமைக்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

உலோக நோய்த் தடுப்பு மையம்

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை 'உலோக நோய்' தாக்காமல் பாதுகாக்கக் குளிர்சாதன வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இலண்டனில் இருந்து மீட்கப்பட்ட பத்தூர் அருள்மிகு நடராசர் திருமேனியைப் பாதுகாப்பாக வைக்க அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் திருப்பணி தொடங்கப்பட்டு, முடிவடையும் தறுவாயில் உள்ளது.

கன்னியாகுமரி தேவஸ்வம் திருக்கோயில்களைப் பராமரிப்பதற்காக அரசு மானியமாக ரூ.13.7 இலட்சம் ஆண்டு தோறும் வழங்கி வருவது 1992-ஆம் ஆண்டிலிருந்து ரூ.10 இலட்சம் ஆண்டொன்றுக்குக் கூடுதலாக வழங்கப்படும்.

எச்சரிக்கை மணி - பாதுகாப்புப் படை

திருக்கோயில்களிலுள்ள நகை, உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பதற்காக 337 திருக்கோயில்களில் 'எச்சரிக்கை மணி' பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டு மற்றும் சிலை உடைப்பு ஆகியவற்றைத் தடுக்க 'திருக்கோயில் பாதுகாப்புப்படை' அமைக்கப்பட்டு வருகிறது. இப்பாதுகாப்புப்படையில் 1000 காவலர்களும், 3000 ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களும், நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். 2,552 கோயில்களில் இப்பாதுகாப்புப்படை அமைக்கப்படகிறது.

வருவாயை வசூலிக்க ஒரு கால பூசை நடத்த

திருக்கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகைப் பாக்கியை வசூலிக்க ஐந்து வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், ஆறு வருவாய் நீதிமன்றங்கள் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திருக்கோயில்களில் நிதி வசதியின்மையால், ஒரு காலப் பூசை கூட நடத்த முடியாத திருக்கோயில்களில் பொதுமக்கள் நன்கொடை வழியாக ரூ.25,000 மூல நிதியாகக் கொண்டு, செயல்படுத்தவும், பொதுமக்கள் வழியாக ரூ.25,000 திரட்ட முடியாத பகுதிகளில் ரூ.12,500-ஐ மாண்புமிகு முதல்வர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்குவது என உத்தரவிடப்பட்டு, இவ்வாண்டு 400 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படவிருக்கிறது.

திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிக்கு பொதுநலநிதி, மாண்புமிகு முதல்வர் திருக்கோயில் திருப்பணி நிதி, உபரி நிதி வசதியுள்ள மற்ற திருக்கோயில்கள் நிதியுதவி, பொதுமக்கள் நன்கொடை ஆகியவை மூலம் நடைபெற்று வருகின்றன. ஆகம விதியின்படி 12 ஆண்டிற்கு ஒருமுறை திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்கிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 16 மங்களா சாசனம் பெற்ற திருக்கோயில்களுக்கும், 19 பாடல்கள் பெற்ற திருக்கோயில்களுக்கும், திருப்பணி செய்ய முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோயில்களில் திருப்பணி

1.6.91 முதல் 30.6.92 முடிய 205 திருப்பணிகள் ரூ.1,085 இலட்சம் மதிப்பீட்டிலும், 247 பழுது பார்த்தல் மற்றும் இதரக் கட்டுமான வேலைகள் ரூ.656 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ரூ.535 இலட்சம் மதிப்பீட்டில் 387 திருப்பணிகள், ரூ.651 இலட்சம் மதிப்பீட்டில் 252 பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமான வேலைகள் நடத்துவதற்குத் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.134.29 இலட்சம் மதிப்பீட்டில் 35 திருப்பணிகளும், ரூ.49.26 இலட்சம் மதிப்பீட்டில் 5 பழுதுபார்த்தல் மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ரூ.166.99 இலட்சம் மதிப்பீட்டில் 87 திருப்பணிகளும், ரூ.85.74 இலட்சம் மதிப்பீட்டில் 58 பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமான வேலைகளுக்கும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ.93 இலட்சம் செலவில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் வணிக வளாகம் கட்டப்பட்டிருக்கிறது. இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில், திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் திருக்கோயில், சென்னை சித்தி புத்தி விநாயகர் திருக்கோயில் ஆகிய இடங்களில் வணிக வளாகம் கட்டும் பணி தொடங்கியுள்ளது.

திருமண மண்டபங்கள்

அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் 2 திருமண மண்டபங்கள், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் 2 திருமண மண்டபங்கள், பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் 3 திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திருமண மண்டபங்கள் கட்டுவதற்கான கோரிக்கைகள் பொதுமக்களிடமிருந்து வந்த வண்ணமிருக்கின்றன. இக்கோரிக்கைகளைப் பரிசீலித்து, தேவையான இடங்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஓய்வுத்தொகை உயர்வு

திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓதுவார்களுக்கு ஓய்வுத் தொகை ரூ.250-லிருந்து ரூ.300-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைப் போன்று அர்ச்சகர்களுக்கும் ரூ.300 ஓய்வு ஊதியம் அளிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல நிதி ரூ.20,000-லிருந்து ரூ.30,000- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சம்பளப் பாக்கி

திருக்கோயில்களில் நிதி வசதிக் குறைவால் மாதம் ரூ.400 வரை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு, ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியிலிருந்து பெறும் வட்டியிலிருந்து சம்பளப் பாக்கி கொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது 678 திருக்கோயில்களில் பணிபுரியும் 1,245 பணியாளர்களுக்கு ரூ.15.41 இலட்சம் சம்பளப் பாக்கியாக வழங்கப்பட இருக்கிறது.

(16.10.92 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது பெறப்பட்ட தகவல் தொகுப்பு).

வயிற்றுப் போக்கு நோயைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை

கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைத் தொடர்ந்து அண்மையில் பெய்த பெருமழையின் விளைவாக, மாநிலத்தில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, தருமபுரி, இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் சில இடங்களில் அசுத்தமான குடிநீரைப் பருகியதன் காரணமாக வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது. அதில் பெரும்பாலானோர் காலரா நோயால் பாதிக்கப்படவில்லை என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் உள்ளூர்த் திருவிழாக்கள் மற்றும் கண்காட்சியின்போது கிணறுகள் போன்ற பாதுகாக்கப்படாத நீர் ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்துப்பருகுவதும் இந்நோய் தோன்ற ஒரு காரணமாகும். இத்தகைய நோய் கண்டுள்ள குடியிருப்புகளிலுள்ள கிணற்றுக்குள் கழிவு நீர் மற்றும் வயல்களிலிருந்து அசுத்த நீர் கசிந்ததன் விளைவாக, கிணற்று நீர் கெட்டுப் போயிற்று. பொதுவாக வயிற்றுப்போக்கு இந்தக் காலங்களில் ஏற்படுவது வழக்கம்.

தடுப்பு நடவடிக்கைகள்

இந்தப் பகுதிகளில் சுமார் 10 இலட்சம் நபர்களுக்குக் காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. மேலும், 25 ஆயிரம் நீர் ஆதாரங்களில் குளோரின் சேர்க்கப்பட்டு பாதுகாப்புத் தரப்பட்டுள்ளது. வயிற்றுப்போக்கின் காரணமாக மரணம் நேராமல் தடுப்பதற்காக உப்பு கலந்த கரைசல் மற்றும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. வீடுகளில், குடிநீரில் குளோரின் கலக்க குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று நிலைமையைக் கண்காணித்து வருகிறார்கள். அனைத்துச் சுகாதார அலுவலர்களும் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர்.

போதுமான மருந்துகளும் குளோரின் மாத்திரைகளும் கையிருப்பில் உள்ளன.

மக்கள் ஒத்துழைப்பு தேவை

இதுபோன்ற தடுப்புப் பணிகளில் பொதுச் சுகாதாரத் துறையோடு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன்பும், இயற்கைக் கடன்களை முடித்த பிறகும் கைகளை நன்றாகக் கழுவவும். நல்ல சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடித்தல், நன்றாகக் கொதிக்க வைத்து குளிர்ந்த தண்ணீரை மட்டுமே பருகுதல், புதிதாகச் சமைக்கப்பட்ட உணவு வகைகளையே சாப்பிடுதல், குளிர்ந்து போன உணவு வகைகள் மற்றும் ஈக்கள், புழுக்கள் மொய்த்த உணவுப் பண்டங்களைத் தவிர்த்தல், வயிற்றுப்போக்கு அல்லது வாந்தி ஏற்பட்டவுடன் மரணத்தைத் தவிர்க்க உடனடியாக அருகிலுள்ள சுகாதார மையம் அல்லது சுகாதாரப் பணியாளரை அணுகி உரிய மருத்துவ உதவி பெறுதல், வீட்டில் கிடைக்கும் பானங்கள் மற்றும் உப்பு கலந்த நீரைப் பருகுவதன் மூலம் வயிற்றுப்போக்குச் சாவுகளைத் தடுக்க முடியும் என்பதை அனைவருக்கும் தெரிவித்தல் போன்ற முறைகளைக் கையாண்டு, பொதுச் சுகாதாரத் துறைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஐ.நா. விருது பெறும் இந்தியர்

மனிதக் குடியிருப்புக்களுக்கான ஐக்கிய நாடுகள் மையத்தின் விருதைப் (Habitat scroll of Honour) பெற இந்தியாவைச் சேர்ந்த பிரபல கட்டடக்கலை நிபுணர் திரு. லாரி பேக்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஏழை மக்களின் குடியிருப்புப் பிரச்சினையில் அக்கறை செலுத்துபவராகவும், மனிதக் குடியிருப்புக்களை மேம்படுத்துவதற்கான பணிகளிலும் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

நமது நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இவ்வாண்டு அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டு முதல் எட்டு மாதங்களில் மட்டும் 12 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ளனர். இதன் மூலம் அந்நியச் செலாவணியாக மட்டும் 2,383 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

மாணவர் பக்கம்

தெரிந்து கொள்ளுங்கள்

இம்சாகர் என்ற பொருத்தமான பெயர் தாங்கி, பனி (ஹிம்) படர்ந்த ஜம்மு தாவியிலிருந்து கடல் (சாகர்) சூழ் குமரி முனைக்கு வரும் வாராந்திர இரயில், கடக்கும் தொலைவு 3,726 கி.மீ! நாட்டில் மிக நீண்ட தொலைவைக் கடக்கும் இரயில் இதுதான்!

★ 1991 மக்கள் தொகைக் கணக்குப்படி இந்திய கிராமங்களில் வசிப்போரின் எண்ணிக்கை 627.1 மில்லியன்.

★ இந்தியாவின் உயரமான மலைச சிகரம் எதுவென்றால் எவரெஸ்ட் எனப் பட்டென்று பதில் வரும். ஆனால் K-2 சிகரமே இந்தியாவின் உயரமான மலைச் சிகரம் (8,611 மீ). உலகின் உயரமான சிகரம் என்ற பெருமை எவரெஸ்ட்டுக்குத்தான். அது நமது அண்டை நாடான நேபாளத்தில் உள்ளது. இந்திய எல்லைக்குள் உள்ள K-2 இரண்டாவது இடத்தையும், கஞ்சன் ஜங்கா (8,598 மீ) மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

★ இந்தியாவிலிருந்து வியத்நாமிற்கு ஏற்றுமதி 12.87 மில்லியன் அமெரிக்க டாலர் (1991-92-ல்); அங்கிருந்து நமது இறக்குமதி 38.03 மில்லியன் அமெரிக்க டாலர். இங்கிருந்து இயந்திரங்கள், உபகரணங்கள், மின்னணுக் கருவிகள், மருந்துப் பொருட்கள், பருத்தி நூல், துணிகள் ஏற்றுமதியாகின்றன. அங்கிருந்து பட்டு, அரிசி, மரம் இறக்குமதியாகின்றன.

★ தேசியமயமாக்கப்பட்ட பின்னர் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 8,000-லிருந்து 70,000-ஆக உயர்ந்துள்ளது.

-தூவானம்



தம்பி, உன்னைத் தான்

—கோ. ஜெயச்சந்திரன்

தேகப் பயிற்சி தினமும் செய்!
திடமாய் நெஞ்சில் உறுதி வை!
காகம் போலக் கூடி இரு!
கடின உழைப்பால் லாபம் பெறு!

எதையும் தீர ஆய்ந்தே அறி!
ஏகும் தீய ஆசை முறி!
நிதமும் நீரில் சீராய்க் குளி!
நேர்த்தி யாக உண்மை விளி!

அளவாய் அறுசுவை உணவை உண்!
அகந்தை விடுத்தே இறைவனை எண்!
அளவாய்ப் பேசி அன்பைப் பெறு!
அமைதியில் என்றும் மகிழ்ச்சி உறு!

வெற்றி பெற...

நாம் மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்தி சிரத்தையுடன் கஷ்டப்பட்டு உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது.

—பண்டித நேரு

உலகில் உள்ள வௌவால்கள்

ஆசிரியர்:

பேராசிரியர் கே.கே. ராஜன்

வெளியீடு:

சூடாமணி பிரசுரம்,
36-ஏ/7, கோவிந்தன் சாலை,
சென்னை-33.

பக்கம்:208 விலை:ரூ.40/-

உலகில் காணப்படும் விந்தையான பிராணிகளுள் வௌவாலும் ஒன்று. பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்த இவற்றில் தான் எத்தனை வகைகள் உள்ளன!

வௌவால் இனத்தில் சைவமும் உண்டு. அசைவமும் உண்டு. 250 மைல் தூரம் வரை பறந்து செல்லும் இந்த வௌவால்களுக்கு, பாழடைந்த கோயில்கள், குகைகளே தஞ்சம் புகும் இடங்கள். இவை 20 ஆண்டுகளுக்கும் மேலும் உயிர் வாழ்கின்றனவாம்.

உலகில் காணப்படும் வௌவால் வகைகளையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டி, அவை பற்றிய விந்தைச் செய்திகளைச் சுவைபடத் தருகிறார் நூலாசிரியர். ஏராளமான படங்களும் உள்ளன.

பள்ளி மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் நூல் இது.

—மறைமலை

வள்ளுவத்தில் அறிவியல்

ஆசிரியர்: மருத்துவர் க. கோபால்

வெளியீடு:

வள்ளுவர் அறிவியல் மையம்,
கே.ஜி. மருத்துவமனை,
அரும்பாவூர்-621 103.

பக்கம்:112 விலை:ரூ.18/-

திருக்குறள் ஒரு 'கணிப்பான்' (கம்ப்யூட்டர்) போல எப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்நூல் வாயிலாக நிலை நிறுத்துகிறார் நூலாசிரியர்.

திருக்குறளில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும் திறம் பாராட்டுதற்குரியது.

நான்கு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, வள்ளுவர் காட்டு அறிவியல் கோட்பாடுகளை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அலசியிருப்பது நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

தொடக்கத்திலேயே அறிவைப் பகுத்திருக்கும் பாங்கு, ஆதிபகவன், உணவு, எண்ணெழுத்து ஆகியவற்றைக் கையாண்டிருக்கும் அழகு எல்லாம் சிந்தைக்கு விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன. திருக்குறளாராய்ச்சி செய்யும் மாணவர்க்கு இது ஒரு கையேடாக விளங்கும்.

—பி.வி.கிரி

நூல் நயம்

மஞ்சள் இஞ்சி வெங்காயம் வெள்ளைப்பூண்டு வைத்தியம்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்

வெளியீடு:

தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை மேற்கு,
சென்னை-94.

பக்கம்:80 விலை:ரூ.10/-

அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் பொருள்களே, நமக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன.

மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவை அன்றாடச் சமையலின் இன்றியமையாத பொருள்கள் இவற்றின் மருத்துவக் குணங்களை விளக்குகிறது இந்நூல். இல்லத்தரசிகளுக்கு இது ஒரு கையேடு.

பகவான் பாபாவின் அருள்வாக்கு

ஆசிரியர்: எஸ். கோவிந்தராஜுலு

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:112 விலை:ரூ.10/-

மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன் அணிந்துரையுடன் கூடிய இந்த நூலில், பக்த கோடிகளைப் பரவசப்படுத்தும் வகையிலான செய்திகள் ஒரு பக்கத்திற்கு ஒன்று வீதம் தரப்பட்டுள்ளது.

'இதயமும் மனமும் பூட்டும் சாவியும் போன்றவை...' என்பது முதல் கட்டுரைத் தொடக்கம்; 'சேத்ரம் என்ற சொல்லுக்கு விளைநிலமென்ற வேறொரு பொருளும் உண்டு..' என்பது கடைசிக் கட்டுரையின் தொடக்கம்.

அந்தந்தக் கட்டுரையின் கீழும் அதனதன் கருத்தோடு கூடிய 4 அடிக் கவிதைகள் ஒவ்வொன்று போடப்பட்டுள்ளது; மரபுக் கவிதையிலும் சேராமல் புதுக் கவிதையிலும் அவை சேராதிருப்பது மட்டுமே நமது குறை.

மற்றபடி- அட்டையும் செய்திகளும் பக்தர்களுக்கு அற்புதம்.

உலகம் போற்றும் சாதனை புரிந்த சான்றோர்கள்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்

வெளியீடு:

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.14/-

ஜார்ஜ் வாஷிங்டன் முதலாக- இரவீந்திரநாத் தாகூர் ஈறாக 33 ஆற்றலாளர்களின் வாழ்க்கை வரலாறு இந்தப் புத்தகத்தில் இரத்தினச் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. நான்கைந்து கட்டுரைகளில், படங்கள் போடப்பட்டுள்ளன.

இன்னின்ன துறையில் என்றில்லாமல்- பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்தோரின் சரித்திரச் சுருக்கத் தொகுப்பே இந்நூல்.

பொருளடக்கம் சேர்க்கப்பட்டிருந்தால், பொட்டுவைத்த நெற்றிபோல் இந்நூல் பொலிவுற்றிருக்கும்.

—'சோழராஜா'

தமிழிலக்கியத்தில் மனையியல்

ஆசிரியர்: ஜான் ஆசீர்வாதம்

வெளியீடு:

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:80 விலை:ரூ.23/-

இல்லறமே நல்லறம் என்பார்கள். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்றும் பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள். அந்த வகையில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை அழகாகத் தெளிவுபட எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

'திருமணங்கள்' எனும் முதல் கட்டுரையில் திருமண வகைகளைக் கூறி, அவற்றை விளக்கும் அருமை படித்து மகிழ்தற்குரியது.

இதேபோல, உறவுமுறைகள், சிறு குடும்பங்கள், கர்ப்பிணிக்குச் சடங்குகள், குழந்தை பிறந்ததும் சடங்குகள், குழந்தை வளர்ப்பு, தாய்ப்பால், புலால் உணவு, சைவ உணவு, விருந்தோம்பல் ஆகிய கட்டுரைகளும் இலக்கிய மேற்கோள்களுடன், அக்கால வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

★ சமயம் சமயம் என்று நான்
எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள
மாட்டேன்; சமயத்தின் பெயரால்
செய்யப்படும் கொடுமைகளை
அறவே ஏலேன்.

—காந்தியடிகள்

தமிழ் வளர்த்த பெரியார்:

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடல்கள்

" ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்! "



– இந்தப் புகழ் வாய்ந்த பாடலை எழுதியவர் யார்? அவர்தான் 'குழந்தைக் கவிஞர்' என்று குவலயமெல்லாம் போற்றும் அழ. வள்ளியப்பா அவர்கள்.

எப்போதும் மலர்ந்த முகம், இதழில் புன்சிரிப்பு, மழலைப் பேச்சு, எளிய உடை இவற்றின் மொத்தத் திருஉருதான் அழ. வள்ளியப்பா.

வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளோடு குழந்தையாக, தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார். அவரைச் சுற்றி எப்போதும் மலர்களைப் போல மழலைச் செல்வங்கள் சூழ்ந்து கொண்டே இருக்கும். அவர்களோடு கொஞ்சிக் குலவி மகிழ்வதே அவரது சிறந்த பொழுதுபோக்கு.

அவரது சிந்தனையெல்லாம் குழந்தைகளுக்குப் பாடல்கள் எழுதுவது, கதைகள் சொல்வது, குழந்தை இலக்கியம் வளரப் பாடுபடுவது...! இப்படி அவர் நாளெல்லாம் உழைத்தார்.

1950-இல், குழந்தை எழுத்தாளர் சங்கம் தோற்றுவித்து, அதைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து, அதன்மூலம் ஏராளமான எழுத்தாளர்கள் உருவாக வழிவகுத்தார். பாரதிதாசன் பரம்பரை போல, வள்ளியப்பா பரம்பரை என்று சொல்லத் தக்க வகையிலே, அவரைக் குருவாக ஏற்றுக் குழந்தை இலக்கியம் படைப்பவர்கள் இன்று ஏராளம்.

குழந்தை இலக்கிய மாநாடுகளை நடத்தி, குழந்தை இலக்கியத் தொண்டர்களைச் சிறப்பித்தவர். தாம் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்ளாமல், தம்மோடு இருப்பவர்களைக் கலந்து கொள்ளச் செய்து ஊக்கந்தந்தவர்.

நவம்பர் - 7 குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த நாள். அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் குழந்தை உள்ளம் என்பார்கள். வள்ளியப்பாவும் கள்ளமில்லாதவர். எல்லாவற்றையுமே வெளிப்படையாகப் பேசுவார். யாரையும் குறை சொல்ல மாட்டார். எல்லாரையும் நிறைவாகப் பேசுவார். திறமை மிக்கவரைப் பாராட்டுவார்; உற்சாகமூட்டுவார்.

அன்பு, அடக்கம், பொறுமை இம்மூன்றும் இவரது மூலதனங்கள்.

''குழந்தைகள் இன்பமே எனது இன்பம் – அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கியக் குறிக்கோள்'' என்று முழங்கியவர் அவர்.

இத்தகு அருமையும் பெருமையும் மிக்க வள்ளியப்பா, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இராயவரத்தில், 1922-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 7-ந் தேதி பிறந்தார். பெற்றோர் அழகப்பா- உமையாள் ஆச்சி.

இவரும் ஏடு தூக்கிப் பள்ளி சென்றார். சிறுவயதில் பெற்றோர்கள் கொடுத்த காசில் தின்பண்டம் வாங்கித் தின்னாமல், புத்தகங்கள் வாங்கிப் படித்தார். நூல்கள் வாங்க வாங்க அதுவே ஒரு குட்டி நூலகமாகக் காட்சியளித்தது. பாரதிமேல் மோகம் கொண்டு பாரதி வாலிபர் சங்கம் அமைத்து, பாரதி பாடல்களைப் பரப்பினார்.

1940-இல் திரு. வை. கோவிந்தன், வள்ளியப்பாவைச் சென்னைக்கு அழைத்து வந்தார். சென்னையில், தான் நடத்தி வந்த 'சக்தி' அலுவலகத்தில் பொருளாளராக நியமித்தார். அங்கு 'சக்தி' இதழின் ஆசிரியர் திரு. தி.ஜ.ர. நட்பு இவருக்குக் கிடைத்தது. தி.ஜ.ர. வைத் தம் குருவாக ஏற்றார்.

1941-இல் இந்தியன் வங்கிப் பணியில் சேர்ந்தார். 1944-இல் திருமணம் நடைபெற்றது. இதே ஆண்டில், இவரது 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதி சிறிய அளவில் வெளிவந்தது. இதுவே இவரது முதல் நூல். பிறகு 1954-இல் இது பெரிய அளவில் மலர்ந்தது.

பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய சிறுவர்கள் இதழை நடத்தியவர். 1951-இல் 'பூஞ்சோலை' திங்களிதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றினார்.

மூதறிஞர் இராஜாஜி, தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமிழ்ப் பணியாற்றினார். தம்முடைய 13-ஆம் வயதிலிருந்தே கவிதை எழுதத் தொடங்கிய குழந்தைக் கவிஞர், 60 நூல்கள் எழுதியுள்ளார். தமிழக மற்றும் மத்திய அரசின் பரிசுகள் பெற்ற இவர், தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்தவர். 1966-இல் அச் சங்கத் தலைவராக இருந்தார்.

இவர் எழுதிய 'நம் நதிகள்' எனும் தென்னாட்டு ஆறுகளைப் பற்றிய நூல், 14 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தெலுங்கில் இவர் பாடல் தொகுப்பும் வெளிவந்துள்ளது.

தென் மொழிகள் புக் டிரஸ்ட்டில் பணியாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கியுள்ளது.

குழந்தைக் கவிஞர் இறுதியாகப் பணியாற்றிய குழந்தைப் பத்திரிகை 'கோகுலம்'. அதை முழுக்க முழுக்க, குழந்தைகளுக்கென்றே தயாரித்த பெருமை இவரையே சாரும்.

இவர் பலரைப் பற்றி நூல்கள் எழுதினார். ஆனால், பலர் இவரைப் பற்றி நூல்கள் எழுதிப் பெருமை பெற்றார்கள்.

டாக்டர் பூவண்ணன் எழுதிய 'வள்ளியப்பா வாழ்க்கை வரலாறு,' திரு. கதி. கணேசன் எழுதிய 'குழந்தை இலக்கியத்தில் வள்ளியப்பா ஒரு வழி காட்டி,' திரு. வே. கிருட்டிணசாமி எழுதிய 'குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை யாகும். சென்னை மற்றும் கேரளப் பல்கலைக் கழகங்களில் இவரது கவிதைகளை ஆய்வு செய்து, டாக்டர் மற்றும் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்கள் அவரைப் போலவே எளிமையும், இனிமையும் கொண்டவை; சொல்லும் பொருளும் இணைந்தே வருவன; சந்தம் தேன் சிந்தும் மலராகக் காட்சியளிக்கும். நடை பயிலும் குழந்தை முதல், நரைமுடிக் கிழவர் வரை தட்டுத் தடங்கலின்றி பாடிப்பாடி மகிழலாம். அந்த அளவுக்கு அவரது பாடல்கள் இயல்பாகவே அமைந்திருப்பதுதான் அதற்குக் காரணம்.

கண்ணனைப் பற்றி ஒரு பாட்டு.

'கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்.

வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்'

- என்று கண்ணனின் தன்மைகளைக் கூறிக்கொண்டே போய் இறுதியில்,

'நல்ல வர்க்கே அருளுவான்
நாங்கள் போற்றும் கண்ணனாம்'

- என்று முடிக்கிறார். இறைவன் நல்லவர்களுக்கு மட்டும்தான் நன்மை செய்வார் என்பதை ஒரே வரியில் அழகாக எடுத்துக் காட்டுகிறார் கவிஞர்.

'நெல்லுக்குள்ளே அரிசி இருக்கு,
சொல்லாதே!
நெருப்புக்குள்ளே சூடு இருக்கு,
சொல்லாதே!
சொல்லுக்குள்ளே பொருள் இருக்கு,
சொல்லாதே!
சோற்றுக்குள்ளே சத்து இருக்கு,
சொல்லாதே!'

- இப்படி கவிதை நீள்கிறது. முடிவில்,

'நாமிப்போது பேசியதை யெல்லாம் நீ
நாலுபேர்கள் காதுகேட்கச் சொல்லாதே!'

- என்று நகைச்சுவையோடு கவிதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

மெத்தப் பெரிய கண்ணாடி
வீட்டில் என்னிடம் இருக்கிறது.'

- என்று கண்ணாடியைப் பற்றிய ஒரு பாடலில்,

'கொன்றிடு வேன்' என விரலைநான்
கோபமாய் எதிரே நீட்டிடுவேன்.

'நானும் அப்படித் தான்' என்றே
நன்றாய்த் திருப்பிச் செய்திடுமே!'

- என்று கண்ணாடியின் தன்மையைக் கூறி, இறுதியாக,

'நன்மை செய்தால் நன்மைதான்
நம்மை நாடி வந்திடுமே.

தீமை செய்தால் தீமைதான்
திரும்பி வந்து சேர்ந்திடுமே!'

- என்று குழந்தைகளுக்கு நீதி புகட்டுகிறார். இவ்வாறு கவிஞரின் ஒவ்வொரு பாடலுமே இனிக்கும் கற்கண்டுகளாய், இதயத்துக்கும் இதமூட்டுபவையாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

'தோலை உரித்த பிறகுதான்,
சுளையைத் தின்று பார்க்கலாம்.

ஓட்டை உடைத்த பிறகுதான்,
உள்ளே பருப்பைக் காணலாம்.

உலையில் அரிசி வெந்துதான்,
உண்டு பசியைப் போக்கலாம்.

துணியைத் தைத்த பிறகுதான்,
சொக்காய் போட்டு மகிழலாம்.

எழுத்தைக் கற்ற பிறகுதான்,
ஏட்டைப் படித்து அறியலாம்.

பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்.'

- என்று உழைப்பின் உயர்வைச் சொல்லாமல் சொல்கிறார்.

மலரைப் பற்றி ஒரு பாடல். மலரின் மணம், வண்டு ரீங்காரம், பூசைக்கு உதவிடும், ஆசையாகச் சூடிக் கொள்ளல் - என்று மலர்களின் மாண்பினைக் கூறி,

'மலர் என உள்ளம் - நமக்கு
மலர வேண்டுமடி,
பலரும் போற்றிடவே - 'உலகில்
பண்புடன் வாழ்வோமடி.'

- என்று முடிக்கிறார். மலர்ந்த முகம் வேண்டும் என்பதை நாசூக்காகப் பிஞ்சு மனத்தில் பதிய வைக்கும் அழகே அழகு!

படிக்கும் பழக்கம் இளமை முதலே வரவேண்டும், படிப்படியாய் அது வளர வேண்டும். நல்ல நூல்களை வாங்க வேண்டும்; நல்ல நூல்களைத் தேடிப் போக வேண்டும். இப்படியெல்லாம் சொன்னால் அடம் பிடிக்கும் குழந்தைகளைக் கவர முடியுமா? அதனால்தான் பாட்டுப்பாடி பக்குவமாய்த் தம் பக்கம் இழுக்கிறார் கவிஞர்.

'தேனி ருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்,

சீனி யுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்,

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்,
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்,

பள்ள மான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்,
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்!'

- 'மனிதனுக்குப் பெருமை எப்போது வருகிறது?' இந்த வினாவுக்கு விடையை ஒரே வரியில் சொல்லிவிடாமல்,

'சோலை மகிமை பெறுவதே
சுகந்த முள்ள மலர்களால்

நாடு மகிமை பெறுவதே
நன்கு பெருகும் வளத்தினால்

நூல்கள் மகிமை பெறுவதே
நுட்ப மான கருத்தினால்.'

- அதைப் போல,

'மனிதன் மகிமை பெறுவதே
மாண்பு மிக்க அறிவினால்!'



- என்று முடிவில் அந்த வினாவுக்குரிய விடையைக் கூறுகிறார். அதனால்தானே பாரதியும் 'அறிவே தெய்வம்' என்றார்!

மனிதனுக்கு அறிவு எவ்வாறு அவசியமோ அதைப்போல, அன்பும் அவனுக்கு அவசியமாகிறது. அதனால்தான் திருவள்ளுவரும் 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?' என்றார். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர். இப்படி அன்பின் மகத்துவத்தைப் பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள்.

இனிப்பில் லாத கரும்பினை
எவரும் விரும்பித் தின்பாரோ?

இசையில் லாத பாட்டினை
எவரும் விரும்பிக் கேட்பாரோ?

மணமில் லாத மலரினை
மகிழ்ந்து எவரும் அணிவாரோ?'

- என்று கேள்விகள் கேட்டுக் கொண்டே போய் அதைப்போல,

'அன்பில் லாத மனிதரை
யார்தான் விரும்பப் போகிறார்!'

- என்று அன்புடன் பதில் கூறுகிறார் கவிஞர். இதை வலியுறுத்தும் இன்னொரு பாடல்தான்,

'பட்டை போடப் போடத்தான்
பளப ளக்கும் வைரமே.

மெருகு கொடுக்கக் கொடுக்கத் தான்
மினுமி னுக்கும் தங்கமே

அரும்பு விரிய விரியத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே.

அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே!'

- உலக அமைதிக்கு அன்புதான் அடித்தளம் என்பதை அழகாக உணர்த்துகிறார் கவிஞர்.

நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட உத்தமர் அண்ணல் காந்தியடிகள், தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாட்டுக்காகத் தத்தம் செய்தவர்'. அவரது அறிவுரைகள், அனுபவங்கள் எல்லாம் உலக மக்கள் வாழ வழிகாட்டுபவையாகும். அகிம்சை, வாய்மை இரண்டையும் இரு கண்களாகப் பாவித்து, வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகியவர். காந்தி வழி வாழ்ந்தால் உலகில் அமைதி ஏற்படும், சண்டை ஒழியும், கருணை வெள்ளம் பெருகும் என்பதனை விளக்கிட,

'காந்தி சொன்ன வழிகளைக்
கடைப் பிடித்து நடந்திடின்,
சாந்தி எங்கும் நிலவிடும்,
சத்தி யந்தான் வென்றிடும்'



- என்று தொடங்கும் பாடலின் இறுதி வடிவமாக, காந்தி வழி சென்றால்,

'உலகில் அமைதி ஏற்படும்;
யுத்தம் யாவும் ஒழிந்திடும்;
கலகம் நீங்கி எங்குமே,
கருணை வெள்ளம் பெருகிடும்'

- என்று நம்பிக்கை தெரிவிக்கின்றார் கவிஞர்.

கதைப் பாடல்கள் (Story Poems) கவிஞருக்குக் கைவந்த கலை. 'குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள்' என்ற பெயரிலே ஒரு நூல்கூட வெளிவந்துள்ளது. 'மலரும் உள்ளம்' கவிதைத் தொகுதியில் வரும் 'பூனைக் கல்யாணம்' ஒரு நல்ல நகைச்சுவை. 'நல்லவனும் கெட்டவனும்' நமக்கெல்லாம் நல்ல பாடம். கெட்டவன் என்று உடனே பெயரெடுக்கலாம். ஆனால் நல்லவன் என்ற பெயர் பெற நாட்கள் மிக ஆகும் என்று உணர்த்துகிறது இப்பாடல். இப்படி ஏராளமான கதைப் பாடல்கள் எழுதிய கவிஞர், வேடிக்கைப் பாடல்களையும் எழுதியுள்ளார். 'ஒட்டைச் சிவிங்கி' என்பது ஒரு பாடல். அதை 'நடக்கும் ஏணி' என்று வர்ணிக்கிறார் கவிஞர்.

'சிரிக்கும் பூக்கள்' கவிஞரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு. அருமையான பாடல்கள் இதில் புதைந்துள்ளன. கவிஞரின் எண்ணத்தில் எழுந்த எல்லாப் பாடல்களுமே இதயத்தைக் கவர்வன. எதை எடுப்பது? எதை விடுப்பது?

ஆண்டவன் தந்த கை எதற்கு?

அள்ளிச் சோறு தின்பதற்கு, அழுக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு, ஆடை ஒழுங்காய் அணிவதற்கு, அழகாய் எழுதிப் படிப்பதற்கு, அனுதினம் வேலை செய்வதற்கு என்று சொல்லிக் கொண்டே போய், அனைவருக்கும் உதவி செய்வதற்கு என்று கோடிட்டுக் காட்டும் கவிஞர்,

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் விமானம் மூலம் விதை தூவும் பணி

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நத்தம், அழகர்கோவில், கன்னிவாடி காப்புக் காட்டுப் பகுதிகளில் 25 ஆயிரம் எக்டேர் காடுகள் வன வளம் இழந்து இருந்தது. இந்த வன வளம் இழந்த பகுதிகளில் மீண்டும் காடுகளை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் மத்திய அரசின் தரிசு மேம்பாட்டு வாரியம் விமானம் மூலம் விதை தூவும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இம்மாவட்டத்தில் 1989-ஆம் ஆண்டு முதல் ஒட்டன்சத்திரம், கன்னிவாடி, சிறுமலை, வத்தலக்குண்டு பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டுகளாக 11 ஆயிரம் எக்டேரில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது. இவ்விதை தூவப்பட்ட பகுதிகளில் மரங்கள் முளைத்து நல்ல பயன் கொடுத்து வருகின்றன.

எனவே, இந்த ஆண்டும் பருவமழை தொடங்கிய இந்நேரத்தில் 3 ஆயிரத்து 500 எக்டேரில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது. ஒரு எக்டேரில் விமானம் மூலம் விதை தூவ சுமார் ரூ.650 செலவு செய்யப்படுகிறது. ஒரு எக்டேரில் மருந்து பூசப்பட்ட 10 கிலோ விதை தூவப்படுகிறது. இதற்காகச் சுமார் ரூ.23 இலட்சம் இந்த ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

மூங்கில், புளி, வேம்பு, உடை, முள் மரங்கள் போன்ற 17 வகையான மர விதைகள் தூவப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டு 13 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 13 கோட்டங்களில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டக் கோட்டத்தில் தான் அதிக நிலப்பரப்பு 3,500 எக்டேர் பரப்பில் விதை தூவப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் நத்தம், அழகர்கோவில், கன்னிவாடி ஆகிய காப்புக் காட்டுப் பகுதிகளில் விமானம் மூலம் விதை தூவப்பட்டுள்ளது.

- எம். பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

ஆண்டவன் தந்த கை எதற்கு? அவரை நன்றாய்த் தொழுவதற்கு

என்று முடிக்கிறார். இறைவனை இரு கை கூப்பி வணங்க வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

'கோடி கோடி பேர்கள் என்றன்
கூடப் பிறந்தவர்
குமரி முதலாய் இமயம் வரையில்
வாழ்ந்து வருபவர்'

– என்று தொடங்கும் 'கூடப் பிறந்தவர்' பாட்டு, ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஓர் உன்னதப் பாடல்.

சிறுவர்க்கான பத்திரிகைகளாகட்டும், புத்தகங்களாகட்டும் அவை படங்களோடு வெளிவர வேண்டும். வெறும் எழுத்துக்கள் அடைத்துக் கொண்டிருந்தால் வெறுப்பைத் தான் தரும். ஒரு சிறுவர் பத்திரிகை எப்படி இருக்க வேண்டும் என்று, சிறுவர் பத்திரிகை பலவற்றை நடத்திய குழந்தைக் கவிஞர் கூறுவதுதான் பொருத்தமானதாக இருக்கும். அவர் கூறுகிறார்:

'சிறுவருக் கான பத்திரி கைகள்
நிறைய வேண்டும்
சித்திரம் எல்லாப் பக்கங் களிலும்
திகழ வேண்டும்
அருமை யான கதையும் பாட்டும்
இருக்க வேண்டும்
அறிவைப் புகட்டும் கட்டுரை பலவும்
அமைய வேண்டும்'

– கவிஞரின் ஆசையை நிறைவேற்றுவது நம் கடமை!

மத்திய அரசின் பரிசு பெற்ற 'பாட்டிலே காந்தி' முழுவதும் கவிதை வடிவம் கொண்டது. பொதுவாக, குழந்தைக் கவிஞரின் புத்தகங்கள் என்றால் அதில் படங்கள் நிறைய இருக்கும். அதைப்போல இந்துப் புத்தகத்திலும் படங்களுக்குக் குறைவில்லை.

காந்தி பிறந்த நாளைக் குறிப்பிடுகையில்,

'சத்தியமே குழந்தையாக
வந்து தித்த நாள்!'

என்கிறார். அவரது மறைவைக் குறிக்கும்போது,

'அறவழி காட்டிய பேரொளியை,
அன்பு வடிவாம் மாமணியை,
குறளிலே கூறிய பண்பனைத்தும்
கொண்டவர் தம்மைக் கொன்றுவிட்டான்!'

–என்று கண்ணீர் சிந்துகிறார்.

குழந்தைக் கவிஞரின் பாடல்கள் குழந்தைகளின் உள்ளத்திலே நல்ல பண்புகளைப் பதிய வைத்தன. நாட்டுப் பற்று, மொழிப்பற்று, அன்பு, அடக்கம், அறிவு முதலான நற்பண்புகள் வளர வழி வகுத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, குழந்தைகள் மகிழ்ச்சியோடு ஆடிப்பாட அவை உதவின. பெரியவர்கள்கூட அவர் பாடல்களைக் குழந்தைகளைப் போலப் பாடினார்கள். தம் பிள்ளைகளை 'இப்படித் தான் வளர்க்க வேண்டும்' என்றும் அந்தப் பாடல்கள் வாயிலாக அவர்கள் கற்றுக் கொண்டார்கள். அதுவே அவருக்குத் தாம் மேற்கொண்ட பணிக்குக் கிடைத்த வெற்றிதானே!

- பி.வி. கிரி

சாதனைகள் புரியும் தமிழ்நாடு காவல் துறை

மாண்புமிகு முதல்வர் அவர்களின் கொள்கைக்கிணங்க, 1991 ஜூலைத் திங்கள் முதல் 1992 ஜூன் வரையிலான ஓராண்டுக் காலத்தில் அனைத்து வகையிலும் தமிழ்நாடு காவல் துறையினரின் திறமைக்குத் திருப்தியளிக்கக்கூடிய வகையில் மகத்தான வெற்றியைத் தந்த காலமாக அமைந்திருந்தது.

தமிழ்நாடு காவல்துறை ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான சாதனைகளைப் புரிந்திருக்கிறது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலைக்குக் காரணமாக விளங்கிய வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் பயங்கரவாதத் திட்டங்கள் ஒடுக்கப்பட்டு, தமிழகம் இன்று பாதுகாப்பு நிலவுகின்ற அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மிகவும் பரபரப்பான சிக்கலான வழக்குகளும் மிகச் சுலபமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கு நிலைமை

தமிழ்நாட்டில் நடந்த மிகப் பெரிய துயரமானதொரு தருணத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவியின் அரசு பதவியேற்றது. பொதுமக்களின் மனதில் நியாயமானதொரு பயம் ஏற்பட்டிருந்ததைப் போக்குவது தலையாய கடமை என்று கருதிய, மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாநிலக் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை மிகுபயன் தந்தது.

நமது கடல் எல்லையோரப் பகுதியைத் தீவிரமாகக் கண்காணித்த காவல் துறையினர் 150 விடுதலைப் புலிகளையும், அவர்களது பற்றாளர்களையும் கைது செய்ததோடு, ஏ.கே.47 தானியங்கித் துப்பாக்கிகளையும் மற்றும் 146 வகையான பயங்கர ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் ரகசியமாகப் பயன்படுத்தி வந்த தகவல் தொடர்புச் சாதனங்களையும், வண்டிகளையும், படகுகளையும் மற்றும் போலி ஆவணங்களையும் கைப்பற்றினர்.

எரிபொருள் மற்றும் மருந்துகளைக் கடத்தி வந்த தடங்கள் வெற்றிகரமாக மூடப்பட்டது, போராளிகளுக்குப் பெருத்த அடியாக அமைந்தது. பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்கள் அகற்றப்பட்டு, பல்வேறு மாவட்டங்களிலுள்ள சிறப்பு முகாம்களில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு மறுவாழ்வளிக்கின்ற பணியும் தொடர்ந்து

சென்னையில் மேலும் இரண்டு இடங்களில் மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்படும்!
—முதல்வர் அறிவிப்பு

காவல் துறையின் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கிராமப்புற மக்கள், காவல் துறை மேல் அதிகாரிகளைச் சந்திக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும், காவல் துறை மேல் அதிகாரிகள் பொதுமக்களை, சில குறிப்பிட்ட நாட்களில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு, நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக, மக்கள் குறை தீர்க்கும் நாளைக் காவல் துறை நடத்த ஆணையிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் (Superintendent of Police) ஒரு குறிப்பிட்ட உட்கோட்ட (Sub-Division) தலைமையிடத்திற்குச் சுழல் முறையில் சென்று, அங்கு பொதுமக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று, நேரில் அவர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றை தீர்க்க உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

அந்த இடத்திலேயே தீர்வு காணக் கூடிய பிரச்சினைகளுக்கு அங்கேயே முடிவு எடுக்கப்படும். இதர மனுக்கள் விசாரிக்கப்பட்டு 15 தினங்களுக் குள் மனுதாரருக்குப் பதில் அனுப் பப்படும்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காவல்துறை மேல் அதிகாரிகளான காவல் துறை இயக்குநர் மற்றும் இணை இயக்கு நர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு காவல் நிலையங்களுக்கும் முன்னறி விப்பின்றி திடீர் சோதனை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தி யுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை நகரில் தொடங்கப்பட்ட 'அனைத்து மகளிர் காவல் நிலையம்', மகளிர் மத்தியில் நல்ல வரவேற் பினை ஏற்படுத்தியிருக்கின்ற கார ணத்தினால், சென்னையில் மேலும் இரண்டு இடங்களில், வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் ஒவ்வொரு காவல் மாவட்டத் தலைமையிடங்களில் ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நடைபெற்று வருகின்றது. காவல் துறையினரின் கடுமையான நடவடிக்கையால் விடுதலைப்புலி களின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டதோடு, அவர்களின் ஆதரவாளர்களும் செயலிழந்து விட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

ஆயுதப்படைக் காவல்பிரிவின் பாராட்டத்தகு பணி

இந்த ஆண்டில் கடலோரப் பகுதிகளில், போராளிகள், அவர்களுடைய ஆதரவாளர்களின் நடவடிக்கைகளைத் துப்பாக்கி ஏந்திய 10 கம்பெனிக் காவலர்கள் கண்காணிக்க ஈடுபடுத்தப்பட்டார்கள். முக்கியமான 34 இடங்களில் கண்காணிப்புச் சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, வாகனங்கள் செல்லமுடியாத மீன்பிடிக்கின்ற கிராமங்களிலும், காவலர்கள் கால்நடையாகச் சென்று, போராளிகளின் நடமாட்டத்தைக் கண் காணிக்கின்ற பணியை மேற்கொண்டு வரு கிறார்கள்.

அரசியல் கட்சியின் போராட்டங்கள்

தமிழ்நாட்டில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கட்சிப் போராட்டங்கள் மிகவும் சாமர்த்தியமாக, புத்திக் கூர்மைச் செயலோடு, எத்தகு குற்றச் சாட்டோ, பிரச்சினைகளோ, அசம்பாவிதங்களோ எழாத வண்ணம் சமாளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குற்றங்கள்

கொலைக் குற்றங்களைக் கணக்கிடுகின்ற போது 1990-இல் 1,654 கொலைகளும், 1991-இல் 1,624 கொலைகளும் நடந்துள்ளன. திருட்டுத் தொடர்பான குற்றங்கள் 1.1.91 முதல் 30.9.91 வரையில் 26,609 குற்றங்களும், 1.1.92 முதல் 30.9.92 வரையில் 25,609 குற்றங்களும் நடந் துள்ளன.

அ) தருமபுரி மாவட்ட பெண்ணாகரத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை முயற்சியில் சம்பந்தப்பட்ட வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆ) ரூ.50,000 தராவிட்டால் குழந்தை நட்சத்திரம் ஷாமிலியைக் கொலை செய்து விடுவ தாக மிரட்டிய 19 வயது இளைஞன் திருப்பூர் அருகில் கைது செய்யப்பட்டான்.

இ) அவினாசி தேவராயம்பாளையத்தைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தியிடமிருந்து ஏராளமான எரிசாராயம், 11 ஊர்திகள், 100 ஜில்லட்டின் குச்சிகள் மற்றும் ரூ.14,09,150 ரொக்கமும் கைப்பற்றப்பட்டன.

ஈ) சேலத்தில் அங்கீகாரம் பெறாத ஒரு நிதி நிறுவனத்தைச் ,சார்ந்த 72 பேரைக் கைது செய்து ரூ.1,53,92,118 கைப்பற்றப்பட்டது.

போதை மருந்துகளைப் பொறுத்தவரை 675 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 57,325 கிலோ எடையுள்ள ரூ.11,57,64,440 மதிப்புள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகக் கண்காணிப்புப் பணி

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய், சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பதுக்கியும், கடத்தியும் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தும், பொதுமக்களுக்கு அல்லல் களை உருவாக்குகின்றவர்களைக் கண்டுபிடித்து பொருட்களைக் கைப்பற்றுவதோடு இத்தகு செயல் களைச் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கின்ற பணியை உணவுப் பொருள் விநி யோகக் கண்காணிப்புக் காவல்துறை பாராட்டத் தக்க வகையில் மேற்கொண்டு வருகிறது.

இக்கண்காணிப்புக் காவல் பிரிவு மாநிலம் முழுவதும் 5,900 திடீர் சோதனைகளை நடத்தி 4,290 குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. இதில், 509 பதுக்கல் குற்றங்கள், 842 கடத்தல் குற்றங்கள், 931 உணவுப் பொருள்கள் கலப்படக் குற்றங்கள் அடங்கும். 501 வாகனங்கள் கைப் பற்றப்பட்டதோடு 513 பேர் கைது செய்யப் பட்டனர். 2,22,83,047 ரூபாய் மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன. இதில் ரூ.77,25,969 மதிப்புள்ள அரிசியும், ரூ.48,06,323 மதிப்புள்ள நெல்லும் அடங்கும்.

வனப்பாதுகாப்பு

வனச் சொத்தைப் பாதுகாக்க வனப்பாது காப்புக் கண்காணிப்புக் காவல் பிரிவு மகத்தான பணியை ஆற்றிக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் 96 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.63,50,456 மதிப்புள்ள சந்தன மரங்களும், ரூ.5,63,956 மதிப்புள்ள பிற மரங்களும் கைப்பற்றப்பட்டன.

மதுவிலக்குக் கண்காணிப்பு

தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கை தீவிர மாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையொட்டி, மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றிடவும், திருட்டுத்தனமாக "மதுவினைக் காய்ச்சி விற்ப வர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மது விலக்குக் கண்காணிப்புக் காவல் பிரிவு அயராத பணியை மேற்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் தமிழகம் முழுவதும் திடீர்ச் சோதனையை நடத்தி 4,05,728 குற்றங்களைக் கண்டுபிடித்து நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1,59,77,931 லிட்டர் ஊறல் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டது. மேலும், 35,08,932 லிட்டர் சாராயம் 1,80,008 லிட்டர் எரிசாராயம் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

போக்குவரத்துக் கண்காணிப்பு

சாலைப் போக்குவரத்து விதிகள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப் படுத்தப் பட்டு வருகிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும் 1,85,567 வாகனங்கள் கூடுதலாகச் சாலைகளில் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வலிமை என்பது என்ன?

வலிமை என்பது அசைக்க முடியாத மன உறுதியிலிருந்து வருகிறது. மனத்தின் தூய்மை அதிகம் இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும்.

—அண்ணல் காந்தியடிகள்



நிர்வாகச் சீரமைப்பு

இந்த அரசு பதவியேற்ற நேரத்தில் மிகுந்த நிதிநிலை நெருக்கடி இருந்தது. இருப்பினும், காவல்துறையின் மனித ஆற்றலை மேம்படுத்தவும், காவல் துறையை நவீனப்படுத்தவும் தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டது. 1992-93-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் சென்ற ஆண்டை விட 9 சதவிகிதம் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்பிரிவின் சிறப்புப்பாதுகாப்புக் குழு (Special Security Group) பிரபலமானவர்களைப் பாதுகாக் கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு டி.ஐ.ஜி.யின் தலைமையின் கீழ் இயங்கும் இப் பிரிவில் அறிவாற்றல் மிக்க இளைய அலுவலர்கள் 90 பேரும், 250 நபர்களும் மிகக்குறுகிய காலத் தில் மிகச் சிறப்பான பயிற்சிகளைப் பெற்று பாதுகாப்புத் தகுதிகளை முழுவதுமாக அறிந்து பணியாற்றுகிறார்கள்.

தமிழகத்திலுள்ள 1,075 காவல் நிலையங் களுக்கும் ஒரு காவல் நிலையத்திற்கு ஒரு ஜீப் என்கிற வகையில் வழங்க தமிழக அரசு முடிவு செய்து இதுகாறும் 331 வாகனங்கள் வாங்கப் பட்டுள்ளன. தற்போது காவல்துறையில் 3,980 வாகனங்கள் உள்ளன.

மகளிர் பாதுகாப்பு

ஆண்களைவிடப் பெண்களுக்கு மிகுந்த பாது காப்பு தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஆயிரம் விளக்கில் முழுவதும் பெண் காவலர்களே பணிபுரிகின்ற காவல் நிலையம் தோற்றுவிக்கப்பட்டு மிகச் சிறப்பாகப் பணி

யாற்றிக் கொண்டிருக்கிறது. பெண் காவலர்களின் பணி மிகவும் தேவைப்பட்டதாகக் கருதப்படுவதால், அவர்களைக் காவல்துறையில் பயன்படுத்திக் கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டு வருகிறது. பணியிலுள்ள பெண்காவலர்கள் பயன்படுத்துவதற்கான சீருடைகள் தைத்துத் தரப்பட்டுள்ளன.

காவல்துறையினருக்கு உதவி

சமுதாயத்தில் ஏற்படும் வன்முறைகள், குற்றங்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுகின்ற மகத்தான பணியைக் காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். அத்தகைய காவல்துறையில் பணிபுரிகின்றவர்களின் நலனை அரசு மிகுந்த அக்கறையோடு பரிசீலித்து செயல்படுத்திக் கொண்டு உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு காவல் பணியிலிருந்து இறந்து போன கும்பகோணத்தைச் சேர்ந்த ஆய்வாளரின் மனைவிக்கு ஓய்வூதிய தொகையை 15 நாட்களுக்குள், பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் நேரில் வழங்கியது நினைவு கூரத்தக்கதாகும்.

பணிபுரியும் காலத்தில் மரணமடையும் காவல் துறையினருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, இறந்துபோன நபர் வாங்கிய கடைசிச் சம்பளத்தொகை, அவர் உயிரோடிருந்தால் ஓய்வுபெறும் நாள் வரை கணக்கிட்டு அவரது குடும்பத்தாருக்கு வழங்கப்படும். அதைப்போல பணிக்காலத்தில் நிரந்தர இழப்புகளைப் பெற்றவருக்கும், படுகாயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் உதவித்தாகை ரூ.5,000-லிருந்து ரூ.20,000-மாகவும், ரூ.3,000-லிருந்து ரூ.5,000 மாகவும் வழங்கப்படவுள்ளது.

காவல்துறையினரின் நல உதவிக்கு (Police Benevolent Fund) அரசு வழங்கும் உதவித்தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறையினருக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, மாவு, பாமாயில் ஆகிய அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் பாதி விலையில் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. காவல் துறையினரின் வீட்டுவசதி நிறுவனம் 27.11.91 முதல் வீடு கட்டுகின்ற பணியை மேற்கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் 14.10.1992 அன்று நடத்திய காவல்துறை ஆய்வுக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட தகவல் தொகுப்பு).

செம்பாக்கத்தில் சீரிய பணிகள்!

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது தான், 'ரோட்டரி சங்கம்' (Rotary Club) போன்ற அமைப்புகளில்- மக்கள் நலத் திட்டங்களைப் பரவலாக நிறைவேற்றும் பொருட்டு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும்-(I.A.S. Officers) பங்கேற்க அனுமதிக்கப்பட்டது.

தமிழகமெங்கும் அவ்வமைப்பினர் நல்ல வண்ணம் செயல்பட்டு வருகின்றனர். அண்மையில், சென்னையை அடுத்துள்ள செம்பாக்கம் கிராமத்தில் (19.9.92) நடைபெற்றது ரோட்டரி சங்கத்தாரின் ஒரு சிறப்பான நிகழ்ச்சி. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களான திரு. வி. சுந்தரம் (அரசுச் செயலர், பொதுப்பணித் துறை)- திரு. சி.என். ராம்தாஸ் (முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்) ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

காமராஜபுரம் குடியிருப்புப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில், ராஜகீழ்ப்பாக்கம்- ஆலவட்டம்மன் கோயில் அருகே ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து, அதில் 5HP சப்மர்ஷன் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

அதேபோல, சிவகாமிநகர் பகுதியில், சென்னை ரோட்டரி சங்கத்தார் அன்பளிப்பாக வழங்கிய மேனிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து 'பைப் லைன்' அமைத்து- அப்பகுதிக்குக் குடிநீர் வழங்கும் ரூ.50 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

சென்னை ரோட்டரி சங்கத் தலைவர் திரு. எஸ். கிருஷ்ணன் வரவேற்புரையோடு- தொடங்கிய இக்கூட்டத்தில்- தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம். கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சி.சுப்பிரமணியம்- மற்றும் திருமதி இந்திரா சுப்ரமணியம், திருமதி எலிசபெத், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி மணிமேகலை, திரு. ஆர்.பி. ரங்கநாதன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்கள்.

திரு.எம்.பாலாஜி நன்றி கூறினார்.

கிராம மக்கள் சிலருக்கு இந்நிகழ்ச்சியின் போது புகையா அடுப்புகள் வழங்கப்பட்டன.

—பி.எல்.ஆர்.

பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை

- காஞ்சி சுந்தரம்

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி என்று திருஞான சம்பந்தரால் புகழ்ந்து பாடப்பெற்ற பதியாம் திருநெல்வேலியின் மேற்கே, திருக்குற்றாலத்துக்கு வடக்கே சங்கரனாயனார் கோயிலுக்குப் போகும் சாலைகள் பிரியும் இடத்தில், தொண்டர்கள் நாயினார் கோயில் உள்ளது. அதற்கு மிக அண்மையில் உள்ளது 'புட்டாபரத்தியம்மன்' கோயில். அந்தக் கோயிலை அடுத்துள்ள தெரு புட்டாபுரத்தியம்மன் கோயில் தெருவாகும். அங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'பி.ஏ. பிள்ளை' என்னும் பெரியார் வாழ்ந்திருந்தார்.

அவருடைய இயற்பெயர் காந்திமதி நாதப் பிள்ளை. பட்டம் பெற்ற பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே பணியாற்றி வந்தார். அவரது துணைவியார் மீனாட்சி. இவர்களது மகவுதான், கா.சு. பிள்ளை என்று அழைக்கப்பெற்ற கா. சுப்பிரமணிய பிள்ளை.

திருநெல்வேலிக்கு மேற்கே இருப்பது சி.எம். கல்லூரி. இக்கல்லூரிக்கு, மேற்குக் கிளை என்றும் கிழக்குக் கிளை என்றும் இரண்டு பள்ளிகள் நடந்து வந்தன. அதில் கிழக்குக் கிளைப் பள்ளியில் தான் சுப்பிரமணிய பிள்ளை படித்து வந்தார். 1899- இல் நான்காவது வகுப்பில் முதல் மாணவராகத் தேறினார். 1902- இல் நடுத்தரத் தேர்விலும் மாகாணத்தில் முதல் மாணவராகத் தேறினார்.

பின்னர், சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. வகுப்பில் இவர் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தது வரலாறு. 1910-இல் இவர் முதன்மை பெற்று பி.ஏ. பட்டம் பெற்றார். 1913-இல் ஆங்கிலத்திலும் 1914-இல் தமிழிலும் ஆக இவர் முதல் மாணவராகத் தேறி இரண்டு மொழிகளிலும் 'கலைப் பேரறிஞர்' (Master of Arts) என்ற பட்டமும் புகழும் பெற்றார். அதுவும் போதாதென்று சட்டப் பேரறிஞர் தேர்வும் எழுதி, எம்.எல். (Master of Laws) பட்டமும் பெற்றார். சட்டத் துறையில் பிள்ளை எடுத்துக் கொண்ட பாடம் (Laws of Property) உடைமைச் சட்டம். இவர் பெற்ற தகுதியைக் கண்டு, நண்பர்களும், உறவினர்களும் இவரை 'எம்.எல். பிள்ளை' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கத் தொடங்கினர்.

மாணவராக இருந்தபோது சென்னை விக்டோரியா விடுதியில் இருந்தார். அதனைவிட்டு விட்டு, சென்னை திருவல்லிக்கேணி- பெரும் வழியில் இருந்த ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார். அவர் தங்கியிருந்த வீட்டிலேயே 'நண்பர் சங்கம்' தொடங்கினார். அதில் உறுப்பினர் நால்வரே! இவரே அதன் தலைவர்! தமிழில் ஏதாவது ஓர் அரும்பொருள் பற்றி டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை பேசுவார்! புலவர் சண்முக நயினார் பிள்ளை, ஏதாவது ஓர் அரும்பொருள் பற்றி ஆங்கிலத்தில் பேசுவார்! மற்றொரு நண்பர் பஞ்சாபகேச ஐயர், 'வாரச் செய்திகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில், அவ்வாரத்தில் நிகழ்ந்த முதன்மையான செய்திகளை எடுத்து மொழிவார். தலைவராகிய சுப்பிரமணிய பிள்ளை அவர்களோ, அந்நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துகளை, எடுத்து முடிவுரை நிகழ்த்துவார்.

எம்.எல். பட்டம் பெற்ற சுப்பிரமணிய பிள்ளை, வழக்குரைஞராகப் பணிபுரிய விரும்பவில்லை. எனவே, சென்னை எழும்பூரில் வாழ்ந்து வந்த நீதிபதி சேஷகிரி ஐயரைக் கண்டு சட்டக் கல்லூரியில் ஓர் ஆசிரியர் வேலைக்கு (Lecturer) உதவிடுமாறு வேண்டிக் கொண்டார். அவர் விருப்பத்தை அறிந்த நீதிபதி சேஷகிரி ஐயர் உதவியால் சட்டக் கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார் சுப்பிரமணியப் பிள்ளை.

சிறந்த கவிதைக்காக, நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் குடும்பத்தின் பேரில், கல்கத்தா பல்கலைக் கழகம், சட்டத் துறையில், சட்டக் கலை பற்றி கொடுக்கப்பெறும் மூன்று பொருள் பற்றி கட்டுரைப் போட்டி நடத்தி அதில் வெற்றி பெறும் ஒருவருக்குப் பரிசும் பாராட்டும் அளிக்கப்பட்டு வந்தது. இந்தியா முழுவதிலும் இருந்த சட்டக் கல்வி பயின்ற அனைவரும் கட்டுரை எழுதி அனுப்பி இருந்தார்கள். சுப்பிரமணியப் பிள்ளையும் எழுதி அனுப்பியிருந்தார். 'குற்றங்களின் நெறிமுறைகள்' (Principles of Criminalogy) பற்றிய சுருக்கத்தை அனுப்பியிருந்தார். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சர். அசுடோஷ் முகர்ஜி (Sir Asutosh Mukerji) அவர்கள் ஆராய்ந்த கட்டுரைகளில், சுப்பிரமணியப் பிள்ளையின் கட்டுரையைத் தேர்ந்தெடுத்தார். கல்கத்தாவுக்குச் சென்று அக்கட்டுரையின் பன்னிரண்டு பகுதிகளையும் விவரித்துச் சொற்பொழிவாற்றினார். பத்தாயிரம் வெண்பொற்காசும் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டமும் பெற்றார். இந்தியா மட்டுமின்றி உலகின் பல திசைகளிலும் அவரைப் பாராட்டிச் செய்திகள் வந்து குவிந்தன.

சுப்பிரமணியப் பிள்ளை திருவள்ளுவர் கழகம் கண்டார். திருக்குறள் பற்றி அரும்பெரும் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். நீதிபதி சதாசிவ ஐயர் போன்றவர்கள் வந்து கேட்டு வியந்து பாராட்டி மகிழ்வார்கள். அந்நாளில் தான் உலகில் புகழ்பெற்ற நோபல் பரிசுக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சென்னைக்கு வந்து பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். தம் குடும்பப் பெயரில் பரிசும் பாராட்டும் வழங்கப் பெற்ற திரு. கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்களை இல்லத்தில் கண்டு அளவளாவி புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கிய தமிழவேள் த.வே. உமா மகேசுவரன் பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியரைத் தேர்ந்து அமைப்பதற்கான உட்கழகத்தின் தலைவர் பொறுப்பில் இருந்தார். அவர், கா. சுப்பிரமணியப் பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார்.

1929-30-இல், இவர் அண்ணா

மலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரா சிரியராகப் பணியாற்றினார்.

1934-ஆம் ஆண்டில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தோற்று விக்கப்பட்டது. இச்சங்கத்தில் 62 உறுப்பினர்கள் இடம் பெற்றார்கள். சங்கத்தின் தலைவர் பொறுப்பில் கா.சுப்பிரமணியப் பிள்ளை இருந்தார். தமிழர் மாநாடும் புலவர் மாநாடும் 15.12.1940-இல் நடத்தினார்.

காஞ்சிபுரத்தில் சில காலம் வாழ்ந்து வந்தார் கா. சுப்பிரமணியப் பிள்ளை. பழந்தமிழர் நாகரீகம் அல்லது பொருளதி காரக் கருத்து எனும் சிறந்த ஆராய்ச்சி நூலும் வான நூலும் இவரால் இங்கே தான் இயற்றப்பட்டன.

காஞ்சிபுரத்தில் இருந்த நாட்களில் கா. சுப்பிரமணியப் பிள்ளையைப் பற்றிய வாத நோய், சென்னையில் உள்ள தியாகராய நகரில் வாடகை வீட்டில் தங்கியிருந்தபோதும் தொடர்ந்தது; வறுமையும் தொடர்ந்தது. இந்த நிலையை பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், அண்ணாமலை அரசரிடம் எடுத்துச் சொன்னார். அதுகேட்ட நாளன்றே தமிழ்ப் பேராசிரியராக 1940-ஆம் ஆண்டு அமர்த்தப் பெற்றார்.

ஆசிரியர் மூவகையினர் என்று இலக்கணம் கூறும். 1. நூலாசிரியர், 2. உரையாசிரியர், 3. போதகாசிரியர்.

கா.சு. பிள்ளை, இம்மூவகை ஆசிரியராக இருந்ததோடு பத்திரிகை ஆசிரியராகவும் கவிராயராகவும் விளங்கி இருக்கிறார்.

கல்லூரிப் பேராசிரியராகவும்; 'தமிழ் மாணவன்' என்று தம்மைக் கூறிக் கொள்வதிலே பெருமை பாராட்டிய ஆங்கிலக் கவிஞராகிய டாக்டர் ஜி.யு. போப்பையர்,தமிழ்ப் பெருநூலாகிய திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து எழுதினார். அவ்விரு நூல்களுக்கும் இவர் பொழிப்புரை எழுதிப் போற்றினார். ஆதலின் உரையாசிரியராகவும்; வர லாற்று நூல்; ஆராய்ச்சி நூல்கள், கதைகள்; கலை நூல்கள்; பதிப்பு நூல்கள்; ஆங்கில மொழிபெயர்ப்புகள்; ஆங்கிலக் கட்டுரைகள் போன்றவற்றை யாத்துள்ளதால் நூலாசிரியர் என்ற பெருமையும் பெற்று விளங்கினார்கள். 'எம்.எல். பிள்ளை' என்று அழைக்கப் பெற்று வந்த பல்கலைப் புலவர் கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள். 30.4.1945 அன்று, காலமானார்.

(கா.சு. பிள்ளை பிறந்த நாள்: 5.11.92).

குமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வர் உதவி

குமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்குத் தலா ரூ.10 ஆயிரம் வழங்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளச் சேதம் மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பரிசீலனை செய்தார். இங்கு ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் கண்டு தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளு வதற்காக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் மற்றும் தமிழக அரசின் வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் திரு. சி.என். இராமதாஸ் ஆகியோரை உடனடி யாகக் குமரி மாவட்டத்துக்குச் செல்லும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட் டுள்ளார்.

அத்துடன் இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாகப் பலியானவர்களின் குடும்பத்துக்குத் தலா ரூ.10 ஆயிரம் தமிழக அரசின் சார்பில் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கல்வியமைச்சருக்குக் கூடுதல் பொறுப்பு

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகத்துக்கு அமைச்சரவையில் கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்த தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சரிடம் ஏற்கெனவே, கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைகள் உள்ளன.

8.ஆம் பக்கத் தொடர்ச்சி

உலக அளவில் உயர் தொழில்நுட்பப் பொருட்கள் தயாரிக்கத் **தேவையான, 96 சதவிகிதத்திற்கு** மேலான **செறிவூட்டப்பட்ட கிராபைட் தயாரிப்பதற்கு, மேலைநாட்டுத் தொழில் நுட்ப நிறுவனங்களுடன் ஆலோ சனைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், இத்திட்டம் ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் ஏதும் இல்லாமல், தேக்க நிலையிலேயே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபொழுது கிடந்தது. மிகவும் பிற்பட்ட மாவட்டமாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு, இத் திட்டம் ஒன்று தான் நிரந்தரமாக உயர்வினை அளிக்க முடியும். இப்பகுதி மக்களின் பொருளா தார நிலையைச் சீர்செய்ய முடியும். என்று நான் நன்கு அறிந்ததனால், இத்திட்டத்திற்கு உடனடி யாகச் செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டேன்.**

இடைப்பட்ட காலத்தில், 1988-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், இத்திட்டத்திற்கு மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர், மதிப்பிற்குரிய திரு. ராஜீவ்காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டது.

அன்றைய தினம், ஜெர்மனிய நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன், செயல்படுத்துவதாக இருந்த இந்தத் திட்டம், தற்போது நமது நாட்டின் தொழில்நுட்ப உதவியுடனேயே, செயலாக்க முடிவு செய்து, இன்று முதல் கிராபைட் சுரங்கப் பணிகளும், ஆலை கட்டுமானப் பணிகளும் தொடங்குகின்றன.

ஏறத்தாழ 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும் இத்திட்டம். இன்னும் 18 மாதங்களில் முழுமையாக நிறைவு பெறும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

இத்திட்டத்தில் தயாரிக்கப்படும் கிராபைட், 96 சதவிகிதத்திற்கு மேற்பட்ட கரிச்சத்து செறிவூட்டப் பட்டதாகவும் ஒரே சீரான தரமான பெரிய செதில்கள் கொண்டதாகவும் இருக்கும். இத் திட்டத்தை நிறைவேற்றும் பணியை இயந்திர வியல், மின்னியல் மற்றும் கட்டடவியல் சிறப்புப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள, குறிப் பிட்ட காலத்திற்குள் பணியைச்செய்து முடிக்கும் திறமை கொண்ட, உலக அளவில் பெயர் பெற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளோம். எனவே இப்பணி, கண்டிப்பாக 1994-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் நிறைவு செய்யப்பட்டு, உற்பத்தி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை கிராபைட் திட்டம், 22 கோடி ரூபாய் செலவில் அரசால் செயல்படுத்தப்பட்டா லும், இதில் தயாரிக்கப்படும் உயர் ரக கிரா பைட்டைப் பயன்படுத்தி, பல உயர் தொழில் நுட்பப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள், அமைய உள்ளன. அவற்றின் மதிப் பீடு, ஏறத்தாழ 200 கோடி ரூபாயிலிருந்து, 800 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இத்திட்டம் இப்பகுதியின் முன்னேற்றத்திற்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எக்காரணத்தைக் கொண்டும் இத்திட்டம் தாமதப்படவோ, தடைப்படவோ கூடாது என்ற உறுதியான முடிவின் அடிப்படையிலும் விரைவில் இத்திட்டத்தின் பயன் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும், அரசு அனைத்து ஆக்கப்பூர்வமான துரித நடவடிக் கைகளை மேற்கொண்டு, இன்று இப்பணியைத் தொடங்கி உள்ளது. இப்பகுதி மக்களின் மனம் நிறையும் வண்ணம், இன்று இப்பணியைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத் ததை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பச்சை விளக்கு

தமிழகத் தொழில் முன்னேற்றம் மஞ்சள் விளக்காக இருக்கிறதென்றும், அதனைப் பச்சை விளக்காக மாற்ற வேண்டுமென்றும் சகோதரர் ப. சிதம்பரம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மூடிக்கிடந்த பல தொழிற்சாலைகளை எங்கள் முயற்சியால் திறந்து வைத்து அப்போதே மஞ்சள் விளக்கைப் பச்சை விளக்காக மாற்றிவிட்டோம். தமிழகத்தில் எரிந்து கொண்டிருக்கும் பச்சை விளக்கை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழகத் தொழில் முன்னேற்றத்திற்கு உதவுவ தாகத் தெரிவித்த சகோதரர் ப. சிதம்பரத்தின் கருத்துக்களை வரவேற்கிறேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பச்சை விளக்காக எரிந்து கொண்டிருப்பதால்தான், இன்று இந்த கிராபைட் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இனி என்றென்றும் தமிழகத்தில் பச்சை விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே போக்குவரத்துத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது நம் அரசு. இன்று, 52 வழித்தடங்களில் புதிதாகப் பேருந்

துகள் இயங்கத் தொடங்குகின்றன. இவற்றால் இப்பகுதி மக்கள் கூடுதலாகப் போக்குவரத்து வசதிகளைப் பெறுகின்றார்கள்.

இந்த மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இம் மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றம், சமீபகாலம்வரை, மதுரையிலேயே தான் இயங்கி வந்தது. இதனை அறிந்த நான், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் தொடர்பு கொண்டு, உடனடியாக இம் மாவட்ட நீதிமன்றத்தை மதுரையிலிருந்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் இதர வசதிகளை உடனடியாகச் செய்துதர வேண்டும் என்றும், அரசு அலுவலர்களுக்கு ஆணையிட்டேன். அதன்படி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம், கடந்த 28.8.1992 அன்று சிவகங்கையில் திறக்கப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவ்வாறே காமராசர் மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், இராமநாதபுரத்திலும் தற்போது திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சிவகங்கைச் சீமை, வீரத்தின் விளைநிலம் மட்டுமல்ல, விவேகத்தின் பிறப்பிடமும் கூட, இதே மண்ணில்தான் எடுக்க எடுக்கக் குறையாத கல்விச் செல்வத்தை எம் மக்களுக்குக் கொடுப்பதே எங்கள் தலையாய கொள்கை எனத் தந்தை பெரியார் அவர்களை முடிவெடுக்க வைத்து, பெரியார் அறக்கட்டளை மூலம், கல்விப் பணிகள் தொடரக் காரணமாயிருந்த சீர்திருத்தச் செம்மல், 'சிவகங்கை இராமச்சந்திரன்' என இன்றைக்கும், நம் திராவிட இயக்கத்தினரால் போற்றிப் புகழப்படும் பெருந்தகையாளர் வாழ்ந்தார், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அசைக்க முடியாத நல்லாட்சி

இன்றைக்குத் தமிழகத்தில், அசைக்க முடியாத நல்லாட்சி ஒன்றை நடத்தி வரும் எங்கள் இயக்கம், ஆரம்பத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமாய் அரும்பிய வேளையில், கடும் எதிர்ப்புக்களை எல்லாம் உடைத்து எறிந்து, இப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வேர் ஊன்றி வளர, வழி வகுத்துக் கொடுத்தவர் அவர்.

அப்பெருந்தகையாளருக்கு ஒரு சிறப்பினைச் செய்திட நான் முடிவு செய்துள்ளேன். சிவகங்கை நகரில் இயங்கி வரும் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இனி பெரியவர் இராமச்சந்திரனார் அவர்களின் பெயரைத் தாங்கி, 'இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை' என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவருக்குச் செய்யும் இச்சிறப்பை, இப்பகுதியில் வாழ்ந்த திராவிட இயக்க வரலாற்று நாயகர்கள், அனைவருக்கும் செய்த சிறப்பாகவே நான் கருதுகிறேன்.

கண்ணதாசன் மணிமண்டபம்

திராவிட இயக்கம் தமிழ்ச் சமுதாயத்திற்கு



வழங்கியுள்ள கொடைகள் ஆயிரம் உண்டு. அவைகளில் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைபெற்றிருக்கிற பெருமை, அது கவியரசு கண்ணதாசனை நமக்கு வழங்கியதுதான். அரண்மனைத் தமிழையும், ஆலயத் தமிழையும், உயர்குடி மக்களிடம் உலாவந்த தமிழையும், பாமர மக்களிடம் கொண்டு வந்து சேர்த்த பெருமை, தமிழ்க் கவிகளில் பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் அடுத்து, கவியரசு கண்ணதாசன் அவர்களையே சாரும்.

ஒரு மகா கவிக்குரிய ஆளுமை, தாய்மொழியில் அளவற்ற புலமை, நினைக்கிற கருத்துக்களை நெஞ்சுரத்தோடு சொல்லுகிற துணிவு, ஆகியவற்றின் தொகுப்புதான் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். அவர் தமிழ்க் கவிதை உலகில் மட்டுமல்லாமல், திரைப்பட உலகிலும் மாபெரும் கவிப் புரட்சி செய்தவர். இன்று சாதாரண மக்களின் நாவில் நடம்புரிவது அவரது கருத்துச் செறிவான தத்துவப் பாடல்கள்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மேலும் உரைநடை, நாடகம், சிறுகதை ஆகிய துறைகளிலும், அவர் ஆற்றியுள்ள இலக்கியத் தொண்டு மகத்தானது; மரியாதைக்குரியது.

எனவேதான், கவியரசு கண்ணதாசன் அவர்களை நினைவுகூரும் வகையில், காரைக்குடியில் ஒரு மணி மண்டபத்தை, 55 இலட்சம் ரூபாய் செலவில், தமிழக அரசு அமைத்துள்ளது.

இந்த மணி மண்டபத்தில் அவருடைய புகழைப் பறைசாற்றும் வண்ணம், அவருடைய படைப்புகளைக் கொண்ட நூலகமும், அவரது வாழ்க்கையை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட உள்ளது. இந்த மணி மண்டபத்தில், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாகக் கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றமிகு இவ்விழாவில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் புகழுக்கு மரியாதை செலுத்திடும் வகையில் அவரது நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணி மண்டபத்தைத் திறந்து வைத்ததில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இராணி வேலுநாச்சியார் சிலை

அடுத்ததாக - இராணி வேலுநாச்சியார் சிலை அமைப்புக் குழுவினர், சிவகங்கை அரண்மனை வாசலில் அமைந்துள்ள சிலையைத் திறந்து வைக்க

வேண்டுமென்ற கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனை ஏற்று பல்லாண்டுக் காலம் சிவகங்கையில் நல்லாட்சி புரிந்த வீரமங்கை இராணி வேலு நாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

அண்மையில் பெண் குழந்தைகளைப் பாது காக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப்படுத்தியிருக்கிறேன். சமுதாய வீதியில் விலைபோகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாகப் பெண் குழந்தைகள் எத்தனைக் காலம் இந்தத்தேசத்தில் துன்பப்பட வேண்டுமோ தெரியவில்லை.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!'' என்று கவிஞர்கள் பெண்ணின் புனிதத்தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திறமையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக்கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும் அந்த அறிவியல் தகவலை அறிந்துகொண்டு, பெண் குலத்தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை தொடர்கிறது. இந்தக் கொடுமைக்குச் சமூகம் மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால் பெண்ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் வகுத்த வழியிலே நடைபோடும் பொறுப்பான அரசு ஒரு பெண்ணையே முதல்வராகக் கொண்ட இந்த அரசு எப்படி இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

போராடி வென்ற பெண்கள்

'வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது உலகறிந்த தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உணராத சில மக்களும், நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்துவிடலாமா? அவ்வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா? என்ற அவல நிலை ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின்றது. குறிப்பாக சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் இந்நிலை ஒரு சில இடங்களில் தொடர்கின்றது. ஆட்சிக்குத் துணை நின்றவர்கள் என்ற அளவில் மட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து, போர்க்களத்துக்கும் சென்று போராடி, வெற்றி வாகை சூடிய பெண்கள் இல்லையா?

நமது வரலாற்றில் ராணி வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள், ஜான்சிராணி லட்சுமிபாய் போன்ற வீரப் பெண்மணிகள், அரசு பீடம் ஏறி வெற்றிகரமாக ஆட்சி புரிந்து மக்கள் நலம் காக்கவில்லையா? அவர்கள் எல்லாம் பெண்கள் தானே?

ஏன், நமது பாரத நாட்டுப் பிரதமராக, அன்னை இந்திரா காந்தி அவர்கள் எத்தனைக்

காலம் ஆட்சி நடத்தினார்? இன்று உங்கள் சகோதரியான என் கையில்தானே தமிழகத்தின் கோடானு கோடி மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள்? நானும் ஒரு பெண் தானே!

பெண்களைத் தெய்வமாகப் போற்றுகிற மரபு நம் மரபில்லையா? செல்வத்துக்குத் திருமகள், கலைகளுக்குக் கலைமகள் வீரத்துக்கு மலைமகள் என்று போற்றுவதெல்லாம் மேடைக்காக மட்டும் தானா அல்லது கோயில்களுக்கு மட்டும்தானா?

திராவிட இயக்கத்தின் அடித்தளமே பெண்ணுக்குச் சம உரிமை என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில் தானே அமைக்கப்பட்டது! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெண்களின் உயர்விற்காகவும், உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்டனர். இத்தனை முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும் பெண் குழந்தைகளை அழிக்கும் எண்ணம் ஒரு சிலர் மனதில் தோன்றுகின்றது என்றால் அவர்கள் எத்தனைக் கீழ்த்தரமானவர்கள்?

பெண்கள் நாட்டின் கண்கள் என்று ஒரு பக்கம் பாடம் படிப்பதும், மறுபக்கம் பெண் மகவுகளைப் பலியிடுவதும், அதற்கு வரதட்சணை போன்றவற்றைக் காரணம் காட்டுவதும் எத்தகைய மோசடிகள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலே தைக்கும் அளவுக்கு, உணர்த்தும் எழுத்துக்களும் பேச்சுக்களும் இன்றைய தேவை.

இந்த மாபெரும் கொடுமைக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் புதியதொரு புரட்சிகரமான திட்டத்தை அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை பெண் என்று அறிந்து அதனை வேண்டாம் என்று எண்ணும் பெற்றோர்கள் தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள். அவர்களை வளர்த்துக் காக்க எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தைகளைப் பெற்றெடுங்கள். அவர்களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை

என்றால் அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள் நாங்கள் அவர்களை வளர்க்கின்றோம். அவ்வாறு நேரில் வந்து ஒப்படைத்தால், அந்தப் பெண் குழந்தையின் பெற்றோர் யார் என்று தெரிந்துவிடுமே! ஊரார் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாதே என்று அஞ்சுபவர்கள் கூட கவலைப்பட வேண்டாம். சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் உள்ள பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல் அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போங்கள்.

பெண்கள் இந்நாட்டுக்குத் தேவை

உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை அரசுக்கு வேண்டும் தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் தாரமாக ஒரு பெண் வேண்டும்; தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும். ஆனால், தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர்களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க அவர்கள் எங்களுக்குத் தேவை. இந்நாட்டுக்குத் தேவை. எனவே, அவர்களை ஏற்று வளர்த்துக் காக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும் பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவு செய்து தயங்காமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெண் சிசுக்களின் பெருங்கொலை என்பது நாகரீகத்தின் சீரழிவு, பண்பாட்டுப் படுகொலை. தர்மத்தின் பேரழிவு. எனவேதான் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் நான் இந்தப் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இப்படி அல்லும் பகலும் தமிழக மக்களின் நலனையே தலையாய கடமையாகக் கொண்டு செயலாற்றிவரும் இந்த அரசை - குறிப்பாக என்னைக் குறைகூறி வருபவர்களும், குற்றம்சாட்டி வருபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஜனநாயகத்தில் ஓர் அரசைக் குறை கூறுவது விமர்சனம் செய்வது தவறல்ல. அவை ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் நம் எதிர்பார்ப்பு இதற்கும் மேலாக இன்றைக்கு மக்களது கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியில், அளவிலா அவதூறுகளை அள்ளி வீசுகிறவர்களும் புதிதாக முளைத்திருக்கிறார்கள்.

கோமாளிகள் கோமாளிகளாக இருப்பதில் குற்றமில்லை. அவர்கள் குழப்பவாதிகளாகவும், குடிகேடர்களாகவும் மாறி இருப்பது தான் கொடுமை. இந்த அரசியல் அநாதைகளை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டியது உங்கள் கடமை.

இந்த அரசியல் கோமாளிகள், ஆக்கபூர்வமான காரியங்கள் நிறைவேற்றப்படுவதைப் பொறுக்க மாட்டார்கள். ஏழை எளியோர் ஏற்றம் பெறுவதைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். தன் பெண்டு,. தன் பிள்ளை, தன் வீடு என்ற குறுகிய வட்டத்திலேயே வாழ்ந்து, அந்தச் சுயநலச் சுவர்களுக்கு உள்ளேயே தங்களது அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொள்ள முற்படுபவர்களுக்கு வேறு வகையில் சிந்திக்கத் தெரியாயாது.

இப்படிப்பட்டவர்களுக்குத் துணை போகின்றவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள்தான் மக்களை நம்பாது மகஜர்களை நம்புகின்ற கூட்டம். தங்களது பொய்யான அறிக்கைகளால் பூகம்பத்தை ஏற்படுத்திவிட முடியம் என்று பகல் கனவு காணும் அரசியல் புல்லுருவிகள். அத்தகையோரின் ஆர்பாட்டங்களை யாரும் பொருட்படுத்தத் தேவை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மாய்மாலத்தால் வீழ்த்தலாம் என்று வீண் கனவு காணும் வீணர்கள் இவர்கள். உங்களுக்கு இவர்களைப் பற்றி மிகவும் நன்றாகவே தெரியும்! இந்த வீணர்கள் உங்களை ஏமாற்றவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும். உங்களை ஏமாற்ற நினைக்கும் இந்த அரசியல் கோமாளிகள் விரைவில் ஏமாறத்தான் போகின்றார்கள். ஏற்கெனவே முகவரி அற்றுப் போய், மூலையில் முடங்கிக் கிடந்து எப்போதாவது தங்கள் தலையை நீட்டும் இந்தச் சந்தர்ப்பவாதிகள், அரசியல் களத்திலிருந்தே அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பது உறுதி.

நாங்கள் நடந்து செல்லும் பாதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த பாதை. இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடந்து வந்த பாதை, அவர்கள் அடியொற்றி வழி நடக்கும் நாங்கள்தான். இன்று திராவிட இயக்கத்தின் திருவிளக்கை ஏந்திச் செல்ல வேண்டியவர்கள் என்று உங்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதை நாங்கள் ஒருகணமும் மறவோம். எங்கள் கவனத்தைத் திசைதிருப்பி எங்கள் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, எங்கள் மீது களங்கம் சுமத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணம் ஈடேறப் போவதில்லை.

நான் சட்டத்தை மீறவில்லை

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும் ஏழை எளியோரின் இதயத்தில் இடம்பிடித்துள்ள மக்கள் தொண்டர்களையும் எவராலும் என்றைக்கும் அசைக்க முடியாது என்பதுதான் உண்மை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுகளையும் குறைபாடுகளையும் சிலர் திட்டமிட்டே கூறி வருகிறார்கள். அவற்றில் எள் அளவும் உண்மை இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்குப் பணிபுரிய நானும், என் மீது நம்பிக்கை வைத்து அன்பும் ஆதரவும் காட்ட நீங்களும் நிலையாக இருப்பதைப் பொறுக்காத சில பொய்யர்களின் புலம்பல்களை, நீங்கள் நம்ப வேண்டாம். உங்கள் அன்புச் சகோதரியாகிய

நான் எந்தச் சட்டத்தையும் எந்தத் தருணத்திலும் மீறவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த இனிய விழாவில் நான் கலந்து கொள்ளும் இந்த நல்ல நேரத்தில் வறட்சியே வாடிக்கையாகிவிட்ட இந்த பசும்பொன் பூமி ஈரப்பசையுடன் காட்சி அளிக்கிறது. செம்மண்ணின் சிவந்த பரப்பில் பசுமைப் பொலிவுகளைப் பார்க்கின்றேன். உங்கள் சகோதரியின் ஆட்சியை வாழ்த்தும் வகையில் வானத்தின் நன்கொடையாக மழை பொழிந்திருக்கிறது. உங்கள் மனமும் நிறைந்திருக்கிறது. இந்தப் பசுமை இங்கே நிரந்தரமாக நிலைத்திட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்த வகையில்தான் இன்று சிவகங்கை கிராபைட் சுரங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இன்று 23 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இப்பகுதி மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன• 36 கோடி ரூபாய் அளவிலான புதிய திட்டங்களுக்குக் கால்கோள் நாட்டப்பட்டுள்ளன. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,500 பயனாளிகள் பயன் பெற 3 கோடி ரூபாய் அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் எங்கள் முயற்சியின் முதல் கட்டமாக இன்று மொத்தம் 62 கோடி ரூபாய் அளவிலான ஆக்கபூர்வமான பணிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழா, இத்தனைச் சீரும் சிறப்புமாக நடைபெற அல்லும் பகலும் கண் துஞ்சாது உழைத்த உங்கள் மாவட்டத்தையே சார்ந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கண்ணப்பன் அவர்களைப் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கண்ணப்பன் என்றாலே திறமையின் மறு பெயர் என்று கூறலாம். எந்தப் பணியை அவரிடம் ஒப்படைத்தாலும் அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமை படைத்தவர் அவர். இந்த விழாவை இங்கு ஒரு வெற்றித் திருவிழாவாக நடத்திக் காட்ட வேண்டும் என்ற அவரது நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறி உள்ளது. அவருக்கு மீண்டும் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்காக அவருடன் இணைந்து செயல்பட்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சகோதரர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும், இவர்கள் இருவருக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து உள்ளார்கள். சிவகங்கை கிராபைட் திட்டத்தை எப்படியாவது விரைவில் தொடங்க வேண்டும் என்பதில் மிக்க ஆர்வமும், அக்கறையும் கொண்டு, பல முயற்சிகள் மேற்கொண்டவர் அவர். இன்று சிவகங்கை கிராபைட் சுரங்கப் பணிகள் தொடங்குவது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறேன். இந்த விழாவில் அவரும் கலந்து கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. ஏ.என். தியானேஸ்வரன் அவர்களுக்கும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். தங்கவேலு அவர்களுக்கும், அரசு நலத்திட்ட உதவிகள் பெறப் பயனாளிகளைத் தங்கள் மாவட்டங்களிலிருந்து அழைத்து வந்த காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. வி. குணாளன் அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். ஜனார்த்தன் அவர்களுக்கும் என் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சிறக்க அரும்பாடுபட்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்களுக்கும் நல்ல முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ள காவல் துறையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, ஆனால் என் இதயபூர்வமாக ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மதுரையிலிருந்து சிவகங்கை வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும் நீண்ட நேரமாக வழி மேல் விழி வைத்து என் வருகைக்காகக் காத்து நின்று என்னைக் கண்டவுடன் மகிழ்ந்து உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

பாண்டிய நாட்டுப் பண்பு மணக்க, இன்று நீங்கள் சாட்டிய அன்பும் எனக்களித்த இனிய வரவேற்பும் என்றென்றும் என் நெஞ்சில் நிலைத்திருக்கும். இந்த அன்பிற்கும், பாசமிக்க வரவேற்பிற்கும் என் இதயங்கனிந்த நன்றியை, உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பாசமும், பரிவும் உங்களுக்கான பணிகளை, இன்னும் வேகமாக நான் தொடர எனக்குப் புதிய ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளித்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில்பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.தங்கவேலு, இ.ஆ.ப., நன்றி கூறினார்.

(21.10.92-இல், சிவகங்கை விழாவில் ஆற்றிய உரை.)

மத்திய ரிசர்வ் போலீஸ் படைப் பிரிவு விழாவில் மாண்புமிகு முதல்வர்!

சென்னையை அடுத்துள்ள செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆவடியில் உள்ள மத்திய ரிசர்வ் போலீசாரின் அணிவகுப்புத் திடலில் 24.10.92 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவரைக் கேரள பாணியில் உடையணிந்திருந்த சிறுமிகள் மலர் தூவி வரவேற்றார்கள்.

மத்திய ரிசர்வ் போலீசார் (சி.ஆர்.பி.எஃப்) 252 பேர்களும், 37 உதவி ஆய்வாளர்களும் தமது பயிற்சி முடிந்து படையில் இணைவது குறித்து நடத்தப்பட்ட இவ்விழாவில் கலந்துகொள்ள வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை - ரிசர்வ் போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு. டி.பி.என். சிங், மற்றும் உயர் அதிகாரிகளான திரு. கார்த்திகேயன், திரு. துபே ஆகியோர் வரவேற்றார்கள்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பயிற்சிக் காலத்தில் சிறந்த முறையில் தேர்வு பெற்ற உதவி ஆய்வாளர்கள் - திரு. சுரேஷ், திரு. கோபால் குமார், திரு.அஜய் குமார் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக்கோப்பைகள் வழங்கினார். தனிச் சிறப்புக்குரிய வகையில் தொண்டாற்றிய 35 அதிகாரிகளுக்கு பதக்கங்கள் அணிவித்துப் பாராட்டினார்.

உயர் அலுவலர்கள் கூறிய உறுதிமொழி, அணிவகுப்பில் நின்ற அனைத்துக் காவல்துறையினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின், தேசியக் கொடிக்கும் இளம் நீலவண்ண ரிசர்வ் போலீசார் படைக் கொடிக்கும் மரியாதை செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, பாண்டுவாத்தியம் முழங்க, பயிற்சி- முடித்த வீரர்களின் பாங்கான அணிவகுப்பு ஏழிலுற நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை 'சல்யூட்' அடித்து ஏற்றுக்கொண்டார்.

அடுத்ததாக-டைரக்டர் ஜெனரல் திரு.டி.பி.என். சிங் வரவேற்புரையாற்றிவிட்டு, மத்திய ரிசர்வ் போலீஸ் சார்பில் முதல்வருக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

அப்படையினர் பணியினைப் பலபடப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் முடிவில், திரு. கார்த்திகேயன் ஐ.ஜி. அவர்கள் - தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய 3 மொழிகளிலும் நன்றி கூறினார்.

முடிவில் - எட்டுப் பிரிவாக அணிவகுத்து நின்ற மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர், துணை கமாண்டர் ரவிதீப் சிங் சாஹி - ''ஜெயலலிதா கி...'' என்று உரத்த குரலில் சொல்ல - அத்தனை வீரர்களும் ஒருமித்த குரலில் 'ஜே!... ஜே!... ஜே!...'' என மும்முறை கூறி வாழ்த்தொலி முழக்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் - மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கான பயிற்சி முடிந்து செல்பவர்களின் அணிவகுப்பில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறந்த அணிவகுப்பில் கலந்துகொண்ட அதிகாரிகளுக்கும், போலீசாருக்கும் நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்குப் பதக்கம் பெற்றவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் முழு உறுப்பினர்களாகச் சேர்வதில் சப்-இன்ஸ்பெக்டர்களும், போலீசாரும் மிகவும் பெருமை கொள்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கு மிகவும் புகழ்வாய்ந்த பின்னணி உண்டு. இந்தப் படைக்கு உள்ள புகழ் வாய்ந்த பாரம்பரியத்துக்காக இந்தப் படையினர் பெருமை கொள்ளலாம். இந்தப் படை - தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க உதவுவதில் சிறந்த சேவைகளைச் செய்து இருக்கிறது.

1959-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி சீனத் தாக்குதலின் போது முதலில் 10 ரிசர்வ் போலீஸ் படையினர் நாட்டுக்காகப் போராடித் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். நாடு முழுவதிலும் அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி, வீரமரணம் அடைந்த போலீசாருக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக ஆண்டு தோறும் கடைப்பிடிக்கப்படுகிறது.

1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் தாக்குதலின்போது, அதை எதிர்ப்பதில் கட்ச் பகுதியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை முக்கியப் பங்கு வகித்தது. 1971-ஆம் ஆண்டு நடந்த போரின் போதும் பாகிஸ்தானை எதிர்த்துப் போராடியது. நமது நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட நாச சக்திகள் பிரிவினை சக்திகளை ஒடுக்குவதிலும் மத்திய ரிசர்வ் போலீஸ் படை புகழ்பெற்று இருக்கிறது.

தற்போது மத்திய ரிசர்வ் போலீஸ் படை பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், அசாம் மாநிலங்களில் தீவிரவாதிகளையும், வன்முறையாளர்களையும் எதிர்த்துப் போராடிக்கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டிலும், மற்ற இடங்களிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதிலும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களைப் பிடிக்கத் தமிழக அரசுக்கும், விசேஷ புலனாய்வுப் படைக்கும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் ஆற்றிய உதவிகளை நாம் அறிவோம்.

பல்வேறு காரணங்களுக்காக மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பணியை அதிக அளவில் பல மாநிலங்கள் கோரி வருகின்றன. வன்முறையாளர்கள் மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெரிய வெற்றியை அடைந்துள்ளது.

இந்தப் பணியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 619 பேர்கள் உயிர் இழந்துள்ளனர். 2,336 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இந்தப் படையில் உள்ள 517 பேர்கள் இன்று வீரப்பதக்கங்கள், விருதுகளால் கவுரவிக்கப்பட்டுள்ளனர். இது மட்டுமல்லாமல், விளையாட்டுத் துறையிலும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் சிறந்து விளங்குகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக, இந்தப் படையின் அதிகாரிகள் மற்றும் போலிசாருக்கு உள்ள கட்டுப்பாடு நேர்மை மற்றும் பணியில் உள்ள முழு ஈடுபாடு இவைகளால் இத்தகைய பெரிய வெற்றிகளை அடைந்திருக்க முடியும்.

எனவே மத்திய ரிசர்வ் போலீஸ் படையைத் தேசிய சீருடைப் பணியில் ஒரு முன்னணிப்

படையாக மத்திய அரசாங்கம் கருதுவதில் எந்தவித வியப்பும் இல்லை. இந்தப் படையின் பணிகளை விரிவுபடுத்த மத்திய ரிசர்வ் போலீஸ் படை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெண் போலீஸ் பிரிவை முதன் முதலாகத் தொடங்கியது. மத்திய ரிசர்வ் போலீஸ் படைதான் என்பதையறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பயிற்சிக்கு இந்தப் படை அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. எந்தச் சீருடைப்பணி என்றாலும் சரி; அதன் முறையான பணிக்குப் பயிற்சிதான் அடிப்படையான காரணமாகும். எண்ணம் மற்றும் திறமைகளைக் கூர்மைப்படுத்த இது உதவும். ஆயுதம் மற்றும் கருவிகளின் நவீன வளர்ச்சி களோடும் போலீசாருக்குத் தொடர்பு ஏற்படுத்த வும், இதனைப் பயன்படுத்த-சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும் இது வழிவகைகளை ஏற்படுத்து கிறது.

இந்தப் படை பணியாற்ற வேண்டிய சமுதாயத் தின் சமூக, பொருளாதாரச் சூழ்நிலையின் பின்னணியைப் பற்றி அறியவும் இந்தப் பயிற்சி உதவும். இந்தப் படையினர் ஆற்ற வேண்டிய அனைத்துப் பணிகள் பற்றியும் விரிவான முறை யான பயிற்சி அளிக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன்.

இங்கு நீங்கள் பெற்ற பயிற்சி, நீங்கள் ஆயுதங் களோடு இல்லாத நேரத்திலும் சமூக விரோதி களையும், சட்டத்தை மீறுபவர்களையும் சமாளிக் கும் வகையில் உங்களுக்குத் தன்னம்பிக்கை அளிக் கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

விரைவில் நீங்கள் உங்கள் படைப் பிரிவில் சேருவீர்கள். இந்தப் பயிற்சியின்போது நீங்கள் கற்றவைகளையெல்லாம் அப்போது நடைமுறை யில் செயல்படுத்த வேண்டியது இருக்கும். தொடக்க காலத்தில் உங்கள் கடமைகளை ஆற்றும் போதுபல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண் டிய நிலை ஏற்படலாம். இங்கு நீங்கள் பெற்ற முறை யான பயிற்சி மற்றும் இங்கு நீங்கள் கடைப்பிடித்த கட்டுப்பாடான உணர்வுகள் எவ்வித அச்சுறுத் தலையும் தைரியமாக எதிர்நோக்கவும் சூழ் நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவுமான மனப்பக்குவத்தை உங்களுக்கு அளிக்கும்.

பாரபட்சமற்ற, மதச்சார்பற்ற, கட்டுப்பாடு விசுவாசமான பணிகளுக்கு, மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெயர் வாய்ந்தது. சேவை மற்றும் விசுவாசம் என்ற மத்திய ரிசர்வ் படையின் குறிக்கோளை நீங்கள் உங்கள் நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். துன்ப மான சூழ்நிலையிலும் நீங்கள் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பாரம்பரியத்தையும் புகழை யும் காப்பாற்றி உங்கள் பிரிவுக்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

கடின உழைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றினால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இங்கே உங்களுக்குப் பயிற்சி அளித்தவர்களெல் லாம் கடின உழைப்பினாலும் கட்டுப்பாடான வாழ்க்கையினாலும் மட்டுமே இந்த நிலைக்கு வந்துள்ளனர்.

உங்கள் வாழ்வின் இந்த முக்கியமான நிகழ்ச் சியில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு: 'ராஜூ'.

நேருவின் அமுத மொழிகள்

வாழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண் பவன் எவ்வளவுதான் அறிவுக்கூர்மை படைத் திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்ற லும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றைய தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட் சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927





தமிழரசு

16-11-1992 ரூ.1

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

JL 192444

இந்த இதழில்...

தென் மாநிலங்கள் ஏற்றம் பெற... —மாண்புமிகு முதல்வர் உரை	...	2
புதிய பாதை —மாண்புமிகு முதல்வர் உரை	...	9
ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி	...	11
சலங்கை விழா	...	12
உணவு-நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகள் - ஆய்வு	...	15
அரசின் சாதனைகள் - ஓர் ஆய்வு	...	17
வாழ்வின் விடிவெள்ளி அறிவொளி	...	24
கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்	...	27
திருவண்ணாமலை-சம்புவ்ராயர் மாவட்டத்தை வளமாக்கும் பணிகள்	...	29
இந்திரா காந்தி வாழ்விலே •••	...	33
கலை உலகின் முழு நிலவு	...	37
ஏழை எளியோருக்கு எண்ணிலா வீடுகள்	...	41
தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள்	...	43
கூட்டுறவு முறையில் நாய் வளர்க்கத் திட்டம்	...	45
புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்	...	47

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

கார்த்திகைத் திங்கள் - 1

மலர்:23 இதழ்:10

16-11-1992

கூட்டுறவில் இனிமை உள்ளது. கூட்டுறவாக இருப்பவர்களில் நலிந்தவர்கள் வலிவுற்றவர்கள் என்று யாரும் இல்லை. ஒருவர் மற்றவருக்குச் சமம். என்னுடையது, உன்னுடையது என்ற உணர்வே இல்லை. அவ்வாறே ஒரு சங்கம், நாடு, மனித சமுதாயத்தை ஒரு குடும்பமாய் எடுத்துக் கொண்டால் எல்லா மனிதர்களும் கூட்டுறவாளர்கள் ஆவார்கள்.

- மகாத்மா காந்தி

கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு' 'உறவு' என்று இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள்படும். உறவு கூட்டுடன் சேர்ந்தால்தான் தோழமையின் அடிப்படையாக - இலாபமற்ற நோக்கம் தெளிவாகிறது.

- பேரறிஞர் அண்ணா



"கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல - தரத்தை மட்டுமல்ல - அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல - தங்களுக்கு முடிவதை - பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவியக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்".

- டாக்டர் எம்.ஜி.ஆர்.

39-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினையொட்டி, கூட்டுறவு தொடர்பான கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

தென் மாநிலங்கள் ஏற்றம் பெற....

மாண்புமிகு முதல்வர் உரை

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை மாநகரத்தில் தென் பிராந்தியக் குழுவின் 21-வது கூட்டத்தில் உங்களையெல்லாம் வரவேற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இக்கூட்டத்தை நடத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் சென்னையைத் தேர்ந்தெடுத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். 1957-1978-லும் தென் பிராந்தியக் குழுக்கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டிருக்கிறது. 14 ஆண்டுகளுக்குப்பிறகு சென்னையில் இக்குழுக்கூட்டம் நடைபெறுவது குறித்து மகிழ்கிறேன். பொது நலன் கருதி மாநிலங்கள் மத்திய அரசுக்கு இடையே ஒருங்கிணைந்த கருத்து உருவாக இந்தக் கூட்டம் புதிய தொடக்கத்தை உருவாக்கும் என நம்புகிறேன். மத்திய உள்துறை அமைச்சர், முதலமைச்சர்கள், பாண்டிச்சேரி துணை ஆளுநர், பிற அமைச்சர்கள் தலைமைச் செயலர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு எனது இதயப் பூர்வமான வரவேற்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வந்து தங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் திருப்திகரமானதாக இருக்குமென நம்புகிறேன்.

பிறநாடுகளை விட, மக்கள் தொகையிலும் பரப்பிலும் மிகப் பெரிய அமைப்பிலுள்ள மாநிலங்களைக் கொண்ட நமது ஆட்சி அமைப்பில் தென் பிராந்தியக் குழு நல் இணக்கத்தோடு, பொதுக் காரியங்களுக்குப் பயனுள்ள வகையில் காரியமாற்றும். இத்தகைய குறிக்கோளை அடைவதற்குப் பிராந்தியக் குழுக்கள் உத்வேகப்படுத்தப்பட்டு முக்கியப் பரிந்துரைகளை வழங்க

வேண்டுமென சர்க்காரியாக் கமிஷன் கூறியுள்ளது.

அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் பிராந்தியக் குழுக்கள், குழுவின் பரிந்துரையோடு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்திய அரசு கமிஷனின் பரிந்துரைகளைச் வழிகோலும். மற்றும் பிற வெளி நாடுகளில் தேசிய ஒருமைப்பாட்டுத் தன்மையினைப் பேணுவது தேவைப் பட்ட கட்டாயமாக இருக்கின்றது. இந்த வகையில் வெளிநாடுகளில் அடிக்கின்ற காற்று நம்மை ஊடறுத்த போதும் மாநிலங்களிடையே நல்

நீண்ட பெரும் விவாதப் பொருள்களுக்கிடையே பொது நலன் கருதி சில பிரச்சினைகளை எடுத்து வைக்க விரும்புகின்றேன். நிதிப்பற்றாக் குறை என்கிற நிலையில் உரங்கள் எரிபொருள்கள், சமையல் எரிவாயு மற்றும் அரிசியின் விலையைக்

செயலாக்கம் புரிவதில் விரைவான முடிவினை எடுக்கும் என நம்புகிறேன். பிராந்திய ஒத்துழைப்பு உலகம் முழுவதும் புதிய உற்சாகத்தோடு எடுத்துரைக்கப்படும். அநேக வெளி நாடுகளில் வெற்றிகரமாக நடைபோடுகிற அமைப்பினைக் கண்டறிவது, முழு தேசத்தின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இணக்கம் உருவகப் புதிய உறவுப் பாலங்களை அமைத்துக் கொண்டு நம்முடைய நாடு, இந்த நிலைமையைப் பேணுவதில் நல்ல இடத்தில் உள்ளது. பிராந்தியக் கூட்டங்களின் ஊக்கமிக்க செயல்பாட்டினை மத்திய அரசு மிகுந்த ஈடுபாட்டோடு செயல்படுத்துவது இதனை வெகுவாக ஊக்கப்படுத்தும்.

கூட்டியதன் மூலம் மாநிலங்கள் மிகப்பெரிய கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நிலைமை, மக்களோடு, அவர்களின் அன்றாட வாழ்வோடு மிக நெருக்கமாக உள்ள மாநிலங்கள் நேர் எதிர்மாறான நடவடிக்கைகளைச் சந்தித்தாக வேண்டிய நிலைமை உள்ளது.

தமிழகத்தில் பொது உணவு விநி

யோசுத் திட்டத்தை மிகவும் சரியாக நடைமுறைப்படுத்துவதால் ஏழை மக்கள் அரிசி வாங்குவதற்கேற்ப விலையைக் கட்டுப்பாடாக வைத்துள்ளோம். எப்படியோ இத்தகைய கொள்கைகளில் மத்திய அரசு நிதிப் பற்றாக்குறைச் சுமையை மாநில அரசுகளுக்கு மாற்றிவிட்டது. அரசுப் பணியாளர்களுக்கு கூடுதல் விலைவாசிப்படி கொடுப்பதன் மூலம் அதிகப் பண வீக்கத்தை உருவாக்கக் கூடிய தன்மையில் தவிர்க்க முடியாத சுமையாக அமைந்து விட்டது.

கடுமையான நிதிப்பற்றாக்குறை நிலைமையில் வளர்ச்சிப் பணிகளைப் பாதிக்காத அளவிற்கு நாங்கள் பார்த்துக் கொள்ள முயன்ற போதும் மத்திய அரசு பொதுவாக இத்தகைய நிலைமையை உணர்ந்து மாநிலங்களுக்கு உதவிட முன் வரவேண்டும். உணவுப் பொருள்களின் விலையை உயர்த்துவதில் மத்திய அரசு முயற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே உணவுப் பொருட்கள் மீது ஏற்பட்ட விலை உயர்வு பிரச்சினையில் தாங்க முடியாத சுமையைத் தாங்கியுள்ள நாங்கள் மேலும் விலை உயர்வுச் சுமையை தாங்குவது இயலாததாகும்.

சிறு சேமிப்பு வசூலில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்குவதை மீண்டும் கொண்டு வரவேண்டும் எனச் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன். இதனால் சிறு சேமிப்பு வசூல் மிகவும் பாதிக்கப் பட்டதோடு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. சிறுசேமிப்பு வசூலில் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் 1992-93-ஆம் ஆண்டுத் திட்டத்தை உருவாக்கிய போதிலும் மாநிலத் திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் சிறுசேமிப்பு வசூலை அதிகப்படுத்தவும், இதன் மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், சிறுசேமிப்பு வசூலுக்கு ஊக்கத் தொகை வழங்குவது குறித்து இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென இந்தக் குழு தீர்மானம் போட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலங்களுக்குத் தேவைப்படும் சாதாரண வழிமுறை ஏற்பாடுகள் 1988-ஆம் ஆண்டிலிருந்து ஒரு தேக்க நிலையை அடைந்துவிட்டது என்பதையும் உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதிலிருந்து ஆண்டுத் திட்ட மதிப்பீடுகள் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இவ்வரையறை மாற்றியமைக்கப்படுவதற்கு இதுவே தருணம் ஆகும். நடப்பு நிதியாண்டில் இந்த வரைமுறை 2 மடங்கு ஆக்கவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த அனைத்து முதலமைச்சர்களும் ஒத்துக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

வெளியிலிருந்து நிதி உதவி பெற்ற திட்டங்களுக்கு மைய அரசு நிதி உதவி அளிப்பது மாநிலங்கள் கவனத்தை உடனடியாக ஈர்க்கும் விஷயமாகும். மாநில அரசுகள் வெளி நிதி உதவி அளிப்புத் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் மத்திய அரசு உதவ வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது ஏற்கெனவே 1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் ஒத்துக் கொள்ளப்பட்டது. அதனை நடப்பு நிதியாண்டில் ஊக்கமாகச் செயல்படுத்த வேண்டும். மத்திய அரசு இந்தப் பிரச்சினைக்குப் புதிய வழிமுறைகளை இதுவரை தரவில்லை. மிகவும் நிதி நெருக்கடியான இந்த ஆண்டில் வெளிக் கடன்களைப் பயன்படுத்துவதில் இவ்விதச் சுணக்கம் ஆழ்ந்த கவலையை அளிப்பதோடு வெளி வட்டாரக் கடன்களைப் பயன்படுத்துவதிலும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதற்கான வழிமுறைகளை விரைவாக மத்திய அரசு வெளியிடும் என நம்புகிறேன்.

ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப் பட்ட சரக்கு வரி விதிப்பு முடிவினை நாடாளுமன்றக் கூட்டத்தில் அறிமுகப்படுத்துவதில் காலத் தாமதம் செய்வதாகக் கருதுகிறோம். மேலும், இந்தப் பிரச்சினையைத் தேசிய பொது நிதி நிறுவனம் அதன் கொள்கை, செல்லையாக்குழு ஆகியவை காலத் தாமதத்தை உருவாக்குவதாக மிகவும் கவலையோடு கருதுகிறோம். ஏற்கெனவே திரு ராஜீவ்காந்தி அவர்கள் கூட்டிய முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட முடிவினை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும். அடுத்து வருகிற நாடாளுமன்றக் கூட்டத்திலாவது இதனை அறிமுகப் படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது தொழில் வளர்ச்சிக்குச் சரியான சுற்றுபுறச் சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற பொறுப்பு மாநில அரசுகளுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரம், சாலை, தண்ணீர், தகவல் தொடர்பு ஆகியவற்றைப் பொதுத்துறைக்கு உருவாக்கித் தருவதற்கு மிகப்பெரிய மூலதனம் தேவைப்படுகின்றது. ஆகவே, மாநிலங்களுக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. கூட்டு நிறுவன வரி முன்பைவிட கூடுதலாக இருப்பதால் மாநிலங்களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டுமென்பது எனது கோரிக்கையாகும். இந்த வரித் தொகையை மாநிலங்களுக்கிடையே பங்கிடு செய்வதில்விரைவாகத் திருத்தம் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டுமெனத் தென் மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கோரிக்கை வைக்குமென நம்புகிறேன்.

தமிழகத்திலும் தென் மாநிலங்களிலும் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசின் மூலதனம் மிகக் குறைவாகவே இருக்கிறது. பம்பாயில் எரித்து வீணாக்கக்கூடிய இயற்கை வாயுவைத் தென் மாநிலங்களுக்குக் கொண்டுவர தெற்கு மாநிலங்கள் வேண்டுகோள் வைத்துள்ளன. 8-வது திட்டத்தில், இந்த திட்டத்தைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பிரச்சினை மாநில அமைச்சர்களின் குழுவில் எடுத்துரைக்கப்பட்டதே தவிர, வேறு எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. எரிவாயுக்குழாய் அமைக்கத் திட்டமிட்டபோது வழக்கமான சந்தேகங்கள் எழுந்தது. ஆனால், செயலாக்கத்தில் நிற்கவில்லை. மேற்கிலும் வடக்கிலும் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதில் முன்னோடியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதி தேவையாகும். மூலதனத்தோடு ஒப்பிடுகிறபோது நீண்டகால மதிப்பு மிக்க திட்டங்களாகும். அனைத்து தென் மாநிலங்களும் இந்தத் திட்டங்களுக்கு அதிக மூலதனம் வைத்திருக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் மூலதனமிட ஒத்துக் கொள்ளப் பட்ட அடிப்படையில் தென் மாநிலங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தினைத் தெரிவிக்கிறேன். அதாவது கொங்கன் ரயில் பாதை போல இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இணைய வேண்டும். இதன் மூலம் தென் மாநிலங்களில் புதிய மின்சார உற்பத்தித் திட்டங்கள், உர உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றைத் தென் பகுதியில் உருவாக்க முடியும். இந்தப் பொதுக்காரியத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். தென் மாநிலங்களை மிகவும் மாற்றியமைக்கக்கூடிய சக்தி வாய்ந்த எதிர்காலத்தை உருவாக்க தலைவர் அனைத்து உதவியையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

''தீபகற்ப நதி நீர்த் தொகுப்பு'' மத்திய மாநில அரசுகள் முக்கிய அங்கம் வகிக்கின்ற மற்றொரு விஷயமாகிறது. தென் மாநிலங்களில் கடலுக்கு வீணாகப் போகின்ற நீரை எடுத்து, மக்கள் பயன்படும் வகையில் செய்வதே சிறந்தது. கேரள மாநிலத்தோடு மேற்கத்திய நதி மீதான இருதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. நாம் இப்பிரச்சினையைப் பரஸ்பரக் கூட்டுறவு உணர்வுக்கு இணையாக எடுத்துக்கொள்வோம் என நம்புகிறேன். 8-வது ஆண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதி நீர்த் தொகுப்பிற்காகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் எனக்கு உறுதியளித்திருக்கிறார்கள். வெகு காலத்திற்கு வரைபலகையில் இது இருக்கக்கூடாது என்பது என் கருத்து. அநேகத் தொழில் நுட்பக் கேள்விகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையில் மிக விரைவில் திடமான நடைமுறைகள் தேவைப்படுகின்றன.

1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினைச் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்திருந்தேன். மாநில நிதி நிலையங்களுக்கு மறு நிதிக் குறியீடு வெட்டப்பட்டிருக்கின்ற சில அவசரமான நிலைமை நினைவுக்கூரப்படுகிறது. கடன்களை வசூல் செய்வதென்பது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தா

மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்கள் தமது துணைவியாருடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (9.11.'92).

மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. கே.விஜய பாஸ்கர ரெட்டி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (9.11.'92).

லும், திரும்பவும் கடன் வழங்கப் படுவது சுருக்கப்பட்டுள்ளது. இது, ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்குக் கூட, மாநில நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்க முடியாத நிலையையே குறிக்கிறது.

இத்தகைய மோசமான நடவடிக்கைகள் வளர்ச்சியை வேகப்படுத்தும் எங்களது முயற்சிக்குப் பாதகம் விளையும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கிற முடிவினை மறு ஆலோசனை செய்து மறுநிதி இலக்கினை ஏற்கெனவே இருந்த நிலைக்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன். தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நடத்துவதற்கு விரைவான நடவடிக்கையை எடுக்க இயலும் என நான் கருதுகிறேன்

உரங்களின் விலை ஒரு முக்கியமான அவசரமான பிரச்சினையாக நமக்கெல்லாம் இருக்கிறது. பாஸ்பேட், பொட்டாஷ் ஆகிய உரங்களின் விலை இதற்கு முன்னர் இல்லாத உயர்ந்த விலை, விவசாயிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனால் ராபி பருவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக பொட்டாஷ் உரத்தின் விலை 3 மடங்கு உயர்ந்திருக்கின்றது. இந் நாட்டில் தமிழகந்தான் பொட்டாஷ் உரத்தை மிக அதிக அளவில் பயன்படுத்துகிறது. உரத்திற்கு கொடுக்கப்பட்ட மானியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன கட்டாயம் ஏற்பட்டது என்பதை என்னால் உணர முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விலையைக் குறைப்பதற்காக ஒரு தடவை மானியம் மத்திய அரசு அறிவித்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பாஸ்பேட் பொட்டாஷ் ஆகியவற்றின் விலை அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்பது உண்மையிலேயே மன அதிருப்தியை அளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் உரத்தைப் பயன்படுத்துவது மிகவும் குறைந்திருப்பது மிகவும் ஆழந்த கவலையை உருவாக்கியிருக்கிறது. இதனால் உணவு உற்பத்தி பாதிக்கின்ற நிலை உள்ளது. இப்பிரச்சினைக்குப் பரிட்சார்த்தமான முடிவினை நாம் கண்டாக வேண்டும். விலையின் உயர்வைப் படிப்படியாக சில ஆண்டுகளில் உருவாக்கியிருக்கலாம் என்பது என் கருத்து. உரவிலை ஏறியதால் உரங்கள் [illegible]ாங்குவதற்கான கடன் வசதி போதுமானதாக [illegible]க்குமா எனக் கருத்தில் [illegible] [illegible]வேண்டும்.

உயர்ந்துவிட்ட [illegible] [illegible]லையைச் சமாளிக்க வங்கிகள் மேலும் கடன் உதவி வழங்குவதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மைய அரசு எடுக்க வலியுறுத்தும் மன்றமாக இதை நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மத்தியசாலைநிதி, அதற்கு ஆகின்ற செலவு கூடியிருப்பதை இக்குழுக் கூட்டத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ள விளக்க உரையில் காண முடிகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு நிதியினைப் பெற்றவுடன் மாநில அரசுக்கு ஒதுக்கப்பட வேண்டிய பங்கினை ஒதுக்கப்படவில்ல என்பதாகும்.

சாலைகளைப் பராமரிப்பதும், புதுப்பித்தலும், பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கையாளுவதும், இத்தருணத்தில், குறிப்பாக புதிய தொழில் வளர்ச்சி சிறந்த அடிப்படை வசதிகளைப் பொறுத்தே அமையும்பொழுது முக்கியமான பிரச்சினையாகிறது. நிதியிலிருந்து பெறப்பட்ட மாநில அரசுக்குச் சேரவேண்டிய தொகை இன்னும் கிடைக்காத நிலைக்கு திருப்திகரமான தகுந்த பதில் இன்னும் வரவில்லை. இந்த நடப்பு நிதி ஆண்டிலேயே அந்நிதிகள் நமக்குக் கிடைக்க வழி வகுத்தலில் எல்லோருக்கும் உடன்பாடு உண்டு என்பதை நான் நம்புகிறேன்.

தென் பிராந்திய தேசிய நெடுஞ் சாலைக்கு ஒதுக்கிய முதலீடு போது

யானதல்ல என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிழக்கு தேசிய நெடுஞ்சாலை மற்றும் நான்கு வழித் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கும் நான் வேண்டியிருக்கின்றேன். தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி அளிக்க வெளி உதவி பெறுவதில் மத்திய அரசு புனையும் என்பதைக்கருத்தில் கொள்கிறேன். தென் பிராந்திய மாநில அரசுக்கு ஒரு கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

தென் மாநில அரசுகள் சுற்றுலாத்தரத்தை உயர்த்த கூட்டாக இணைந்து செயல்படும் என்ற ஆலோசனைக்கு இசைவு தெரிவிக்கின்றேன். தென் மாநிலங்கள் சுற்றுலா வளர்ச்சிக்கான பணிகளை இணைந்து செய்யும் கருத்தை நான் ஏற்கிறேன். தொழில் வளர்ச்சிக்குச் சுற்றுலா மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வேலைவாய்ப்பிற்குச் சுற்றுலா நல்ல இடத்தை வழங்குகிறது. பழஞ் சிறப்பைத் தென்பகுதி வெளிபடுத்துவதால் சுற்றுலாப் பயணிகள் நிரம்ப வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. சிறப்புமிகுந்த சுற்றுலாப் பகுதிகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டின் தெற்குப்பகுதி சிறப்புடையதென அறிவிப்பு செய்வதன் மூலம் ஒரு தெளிவான வழிமுறையும் அதன் மூலம் மூலதனமிடுகிற ஈடுபாடும் ஏற்படும். நாம் இத்தகைய பொதுவான காரியத்தில் இணைய வேண்டும்.

பொது நலம் கருதி சில தகவல்களைத் தர விரும்புகிறேன். இக் கூட்டத்தில் விவாதித்திருப்பதற்காகத் தரப்பட்டிருக்கும் பொருள்களைத் திருப்பிப் பார்க்க விழைகிறேன்.

காபி, தேயிலை ஆகியவற்றிற்குத் தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். போடப்பட்டிருக்கும் வரி மிகக் குறைவானதாகும். தற்சமயம் கேரளம், கர்நாடகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட வழியில் சிறிய விவசாயிகளுக்கு வரி விலக்கும் விவசாய வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்களித்தும் அதிக அளவில் அதிக வருமானம் பெறும் சாகுபடியாளர்களுக்கு வரி விதித்தும் மாற்றியமைத்திருக்கிறோம். தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கிற வரி மிகக் குறைவானது என்பதால் மீண்டும் மாற்றியமைப்பதற்கு வழியில்லை. நிதிப்பற்றாக்குறை மிகுதியாக உள்ள நிலையிலுள்ள இம்மாநிலத்தில் மேலும் வரிக்குறைப்பு என்பது மிகவும் கஷ்டமானதாகும்.

மாநிலங்களிடையே சாலைப் போக்குவரத்தில் பல பிரச்சினைகள் இருப்பதை விவாதப் பொருளிலே குறிக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் அகில இந்தியச் சுற்றுலா உரிமங்களில் உள்ள வரி விதிப்புக் குறித்த பிரச்சினைகள் கொண்டு செல்லப்பட்டன. மாநிலங்களுக்கிடையே சுற்றுலாப் பயணிகள் வெகு சுலபமாக வந்து போகின்ற வகையில் இப்பிரச்சினையில் பொதுவான கருத்திற்கு வரப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான ஒன்றுபட்ட ஒத்துழைப்புத் தன்மையின் மூலம் இக்கேள்விக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். கர்நாடக அரசுடன் பெங்களூருக்கும், பாண்டிச்சேரிக்கும் தமிழகத்தின் வழியில் சாலை மாற்றத்தை நிர்மாணிப்பதில் எங்களுடைய எண்ணங்கள் ஒத்துப்போகிற நிலைமை உருவாகியுள்ளது. சாலைப் போக்குவரத்துப் பிரச்சினையில் ஒரு விரைவான முடிவிற்கு வரவேண்டுமென்பது எனது கருத்தாகும். இந்த வழியில் கர்நாடக அரசு இரண்டு மாநிலத்திற்கிடையே பஸ் போக்குவரத்தினை அனுமதிப்பதில் தற்போதுள்ள செயல்பாட்டினை ஏற்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு

21-வது தென் மாநில முதல்வர்களின் மாநாடு சென்னையில் 10-11-1992 அன்று நடைபெற்றது. 14 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் சென்னைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு ஆந்திர முதல்வர், திரு. கே. விஜய பாஸ்கர ரெட்டி, அமைச்சர் திரு. ரோசையா, மாண்புமிகு கேரள முதல்வர், திரு. கருணாகரன், மேதகு புதுவை துணைநிலை ஆளுநர் டாக்டர் ஹர் ஸ்வரூப் சிங், மாண்புமிகு புதுவை முதல்வர், திரு. வி. வைத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். கர்நாடக மாநில முதல்வருக்குப் பதிலாக, அம்மாநிலத்தின் அமைச்சர் திரு. மல்லிகார்ஜுன் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில், அமைச்சர்கள் திரு. எம். அருணாசலம், திரு. இராமேஸ்வர் தாகூர், திரு. எஸ்.பி. நியாமா கவுடா, டாக்டர் பலராம் ஜாக்கர், திரு. எம்.எம். ஜேக்கப் ஆகியோரும், தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு திரு. அரங்கநாயகம், மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாநாடு, காலை 10 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை தலைமைச் செயலகத்தின் 10-வது மாடியிலுள்ள மாநாட்டு மண்டப நுழைவாயிலின் அருகே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வரவேற்றார்.

மாநாடு நடைபெறுவதையொட்டித் தலைமைச் செயலகத்தில் செய்யப்பட்டிருந்த அலங்கார ஏற்பாடுகளால் அப்பகுதியே விழாக்கோலம் பூண்டிருந்தது. தலைமைச் செயலகத்தின் நுழைவாயிலிலிருந்து மாநாடு நடைபெற்ற இடம் வரை பல வண்ணக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மாநாட்டு மண்டப கட்டடத்தின் நுழைவாயில் அருகே வருபவர்களை வரவேற்க அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வரவேற்பு அரங்கம் அனைவரின் கண்களையும் கவர்ந்தன.

மாநாடு முடிந்த பிறகு, மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பகல் விருந்தளித்தார்.



சென்னையில் 10.11.'92 அன்று நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டின் போது, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் குறித்து விவாதிப்பதற்கான தரப்பட்டிருக்கிற பொருள்களில் அநேகக் கருத்துகள் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப விழிப்புணர்வை வளர்ப்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் பலமுள்ளதாக ஆக்கப்பட்டு அறிவியல் வளர்ச்சி மிகப் பெரிய செயல்பாடு உள்ளதாக அமைந்திட அக்கருத்தோடு நான் முழுவதும் ஐக்கியமாகிறேன். சென்னையில் அகில இந்திய ஜவகர்லால் நேரு அறிவியல் கண்காட்சியினை விரைவில் நடத்த விருக்கிறோம்.

அறிவியல் தொழில் நுட்பத்தை விளம்பரப்படுத்துகின்ற வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தவிருக்கிறோம். நம்முன் உள்ள நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து நாம் அடிக்கடி எடுத்துரைக்கிற தன்மையில் ஈடுபட வேண்டுமென்பது என் கருத்தாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மிகப்பெரிய கழிவு நீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, சூரிய மின்சக்தி ஆகியவை குறித்து உடனடியாக நினைத்துப்பார்க்கிறோம். இதற்கு மூலதனமும் முன்னோடி தொழில் நுட்பமும் மிகப் பெரிய அளவில் தேவைப்படுவதால் இத்தகைய புதிய தொழில் நுட்பங்களை ஏற்பதற்கும் நடத்துவதற்கும் மத்திய அரசு உடனடியாக முடிவு செய்ய வேண்டியது தேவையாகிறது. நீண்ட விளக்கமான திட்டமான இவற்றை அணுகுவதற்கு மிகவும் உன்னிப்பாக இருக்கிறோம். இதைப் போலவே மற்ற அரசுகளும் ஆர்வம் உள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். பாரதப் பிரதமர் அவர்கள் இத்தகைய எரிசக்தியை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வமாக இருப்பதால் மத்திய அரசு தனிச் சிறப்பு நிதியினை வழங்கும் எனக் கருதுகிறேன். மலை வாழுநர் மேம்பாடு குறித்து சில பிரச்சினைகள் எழுப்பப் பட்டுள்ளன. தமிழகத்தில் மலை வாழுநரிடம் கொத்தடிமை முறை முழுவதுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

கொத்தடிமை முறை மீண்டும் வந்துவிடாமல், தடுக்கத் தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 500 பேர் வாழக்கூடிய மலை வாழுநர் கூட்டமைப்பு என்கிற வகையில் அமைக்குமாறு எனது கருத்தினை தெரிவிக்கிறேன். இதன் மூலமாக மலை வாழுநரின் மேம்பாடுகளை வளர்க்கச் சிறப்புத் திட்டங்களை உருவாக்க முடியும். ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்காக ஒரு சிறப்புக் கூட்டுத் திட்டம் வகுக்கப்பட்டதில் ஒரு முன்னேற்றமான அடி எடுத்து வைக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டில் 11.77 சதவிகிதம் முன்னேற்றம் எட்டியுள்ளதை மகிழ்ச்சிகரமாகக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் மேலும் சிறப்பாகச் செய்வதற்கு முடிவு செய்திருக்கிறோம்.

சந்தனக்கட்டை விஷயத்தில் ஒரு பொதுவான விதிமுறை வகுப்பதற்கும், வனக்குற்றப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கும் பொருளில் குறிக்கப்பட்டிருப்பதை அறிகிறேன். வனக்குற்றங்கள் தொடர்பாக மாநிலங்களுக்கிடையே நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். எங்களைப் பொறுத்தவரை முழு அளவில் ஒத்துழைப்புத் தருவோம். பொதுவான சந்தனமர விதிகள் இருப்பதற்குத்தடை ஏதும் இல்லை. வெளிநாட்டிற்கு சந்தனக்கட்டைகளை ஏற்றுமதி செய்கின்ற கொள்கையில் சில பிரச்சினைகள் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். 1992 ஏப்ரல் முதல் தேதி முதல் சந்தன மரங்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தென் மண்டலத் தழு மாநிலங்களுக்கிடையே நல்லுறவுகளை உருவாக்கும் ஒரு, மாதிரி மன்றமாகப் (Model Inter-State Forum) பரிணமிக்கும் என்ற நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

புதிய உறவுகளும், புதிய மன ஒற்றுமைகளும் உலகமெங்கும் பரவி வருகின்ற இந்தத் தருணத்தில், நம்மை நாமே புரிந்துகொண்டு, மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான புதிய பாலங்களை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

★ ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும்தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.

★ எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, சரி என்று பட்டபடி நட என்பதேயாகும்.

★ வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

புதிய பாதை

- மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விவாதித்து முடிவெடுக்க மாண்புமிகு முதலமைச்சரும் திட்டக்குழுத் தலைவருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் 30.10.92 அன்று மாநிலத் திட்டக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதியமைச்சரும், திட்டக்குழுத் துணைத் தலைவருமான டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கீழ்க் கண்ட உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்
2. டாக்டர் பி.பி. சுந்தரேசன்
3. டாக்டர் (திருமதி) ராஜம்மாள் பி. தேவதாஸ்
4. திரு. ஆர். திருமலை, இ.ஆ.ப (ஓய்வு)
5. டாக்டர் எம். நடராசன்
6. திரு. கே.வி. பழனிதுரை
7. திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., (தலைமைச் செயலர்)
8. திரு. என். நாராயணன், இ.ஆ.ப., (நிதித்துறைச் செயலர்)
9. திரு. எம்.பி. பிரானேஷ், இ.ஆ.ப., (திட்டம் & வளர்ச்சித்துறை) திட்டக்குழுவின் செயலர் & உறுப்பினர் செயலர்
10. திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., (மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயலர்)

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை:

மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்திற்கு நான் தலைமை தாங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன். தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக நாம் இங்கே கூடியுள்ளோம். நாம் பதவியேற்றபொழுது, திட்டமிட்ட வளர்ச்சி தொடருமா என்பதே சந்தேகமாக இருந்தது. இதுவரை இருந்திராத பொருளாதாரச் சிக்கலை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. திட்டமிடுதல் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால், கடந்த காலத் தவறுகளைக் கருத்தில் கொண்டு, மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய நாம் தவறினால் மக்களுடைய தேவைகளையும் குறிக்கோள்களையும் புறக்கணித்ததாகிவிடும். தேசிய வளர்ச்சிக் குழு அளவில் முன்னுரிமைகளை மாற்றியமைத்து புதிய சந்தர்ப்பங்களை ஆராய்ந்து, நம் முன் உள்ள பணிகளை வரையறுப்பது சாத்தியமாகி உள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிகமான பண வீக்கம், குறைந்த உற்பத்தி என்னும் நிலைமையிலிருந்து நாம் விடுபட்டு, தொடர்ந்து வளர்ச்சியுறும் பாதைக்குச் செல்லவேண்டும். கடந்த காலத் தவறுகள், திட்டமிடும் முறையில் புதிய உத்வேகத்தைக் கொண்டு வருவதற்கான தேவை ஆகியவை எட்டாவது திட்டத்திற்கான தேசிய அணுகுமுறையைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன. இந்த மாறுதல்களையெல்லாம் மனதில் கொண்டு 8-வது திட்டத்திற்கான அணுகுமுறைக்குப் பொதுவான ஒப்புதல் அளிக்கின்ற அதே நேரத்தில் தமிழ்நாட்டிற்குத் தேவையான குறிப்பிட்ட திட்டங்களை வகுக்க முடிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

எட்டாவது திட்டம் பெரும் பொருளாதார நிதி, நெருக்கடிகளுக்கிடையே தான் வடிவமைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். மத்திய அரசையும் மாநில அரசுகளையும் இதே நிலைதான் சூழ்ந்திருக்கிறது. நிதிநிலைமை நிச்சயமாகத் திருப்தியளிப்பதாக இல்லை. 7-வது திட்டத்தில் இருந்த அளவுக்காவது 8-வது திட்டத்திற்கு நிதி ஒதுக்க இயலுமா என்பதே சந்தேகமாக உள்ளது. எனவே மாநிலத்தின் 8-வது திட்டத்தை நடைமுறை சாத்தியமாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. ரூ.10,200 கோடி அளவுக்கு 8-வது திட்ட நிதிக்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். 7-வது திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடாக ரூ.5,750 கோடியை விட இது 77.39

சதவிகிதம் கூடுதல் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு 8-வது திட்ட காலத்தில் அனேக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாகிறது. மாநிலத்தின் நிதி ஆதார நிலைமை பல ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டதாக இருப்பதால் நான் இதில் எந்தவித நீக்குப்போக்கையும் காட்ட இயலாது. அசாதாரணமான நிதி இடர்ப்பாடுகள் நிலவியபோதும் 8-ஆம் திட்டத்தை முழுமையாக்க முடிந்திருக்கிறது என்பதே மகிழ்ச்சியளிக்கக்கூடிய நற்சகுனமாக விளங்குகிறது. 1992-93-ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டை ரூ.1,751 கோடி அளவுக்குத் தீட்டியிருப்பதன் மூலம் 8-ஆம் திட்டத்திற்கான சரியான பாதையை நம்மால் சமைக்க முடிந்திருக்கிறது. இதுவே ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாநிலத்தின் 8-வது திட்ட வடிவமைப்பிற்குத் தங்களது அனுபவக் களஞ்சியத்திலிருந்தும், அறிவுக் களஞ்சியத்திலிருந்தும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கியமைக்காக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களாகிய - புகழ்பெற்ற வல்லுநர்களுமாகிய உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனைய வல்லுநர்களோடும் அலுவலர்களோடும் நீங்கள் நிகழ்த்திய விரிவான பேச்சுவார்த்தைகள் மூலம் உறுதியான, துரித வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளை உங்களால் வகுக்க முடிந்திருக்கிறது. நம் பணி, நம் கண்முன்னே வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது. தொடக்கப் பிரிவில் (Primary Sector) நல்ல, பலதரப்பட்ட வளர்ச்சியை நாம் உறுதி செய்ய வேண்டும். இரண்டாவது பிரிவிற்கு (Secondary Sector) ஒரு புதிய வேகத்தை வழங்கக்கூடிய பல புதிய உத்திகளை எட்டாவது திட்டம் வழங்குகிறது.

வேளாண்மை மற்றும் அது தொடர்பான துறைகளில் சீரான வளர்ச்சியை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். வறட்சி நிவாரணப் பணிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். நீர்த்தேக்கங்களைச் சீர்படுத்துவது முக்கிய வளர்ச்சிப் பணியாகக் கருதவேண்டும். வெளிப்பரப்பு நீர் முழுவதும் (Surface Water) உபயோகப்பட்ட நிலையில்-நிலத்தடி நீர் (Ground Water) வேகமாக உபயோகப்படுத்தப்படுகின்ற சூழ்நிலையில், இது தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

இரண்டாவது பிரிவிற்குப் புதிய வேகத்தைத் தர புதிய தொழிற் கொள்கையை ஏற்கெனவே நாம் வகுத்துள்ளோம். தமிழ்நாட்டிலுள்ள அடிப்படை வசதிகள் நாட்டிலேயே தலைசிறந்ததாக விளங்க அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம். தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லாத நிலையை உருவாக்க எடுக்கப்படும் தீவிர முயற்சியில் கூடுதலாக 1,630 மெகாவாட் மின்சக்தியை உருவாக்குவோம். வேகமான தொழில் வளர்ச்சி உருவாக வழிகோலும் வளர்ச்சி மையங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். நாம் வகுத்துள்ள இந்தத் தொலைநோக்குப் பார்வை நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

எட்டாவது திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்தத் திட்டங்களுக்கு ஆதாரங்களை வழங்கினால் மட்டும் போதாது. இதன் வழிமுறைகளையும் மக்களுடைய ஒத்துழைப்பையும் முக்கிய அம்சங்களாகும். இதுமட்டும்தான் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பெரும் வெற்றி பெறுவதை உறுதி செய்யும். மனிதவள மேம்பாட்டின் வெற்றிகரமான சாதனையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை வேகமாக முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளை அடைய கல்வி, சுகாதாரம், உணவு, சமூக சேவை ஆகியவற்றில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவோம்.

பரவலாக்கப்பட்ட திட்டம் (Decentralised Planning) மற்றும் தொலைநோக்குத் திட்டம் (Perspective Planning) உள்பட பல விஷயங்கள் நம் முன்னே உள்ளன. பதினைந்தாண்டுத் திட்டம் என்னும் நீண்ட கால யோசனையை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் நீண்ட கால முன்னேற்றத்திற்குத் தேவையான உத்வேகத்தை அளிக்கக்கூடிய மாற்றங்களை அளிப்பது அதில்தான் சாத்தியமாகும். திட்டங்களைப் பரவலாக்கும் போது மாவட்ட அளவில் பொறுப்புகளைக் கொடுத்து அவர்கள் பதில் சொல்லும் நிலைமையை (Accountability) உறுதி செய்யும் வகையில் நாம் புதிய திட்டத்தைத் தொடங்க வேண்டும். மாவட்ட அளவில் முடிவுகள் எடுக்கும் வகையில், மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் மாவட்டத் திட்டம் வகுக்கும் யோசனையை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள விடையை நாம் காண முடியும் என நம்புகிறேன்.

தமிழ்நாடு ஒரு புதிய வளர்ச்சிச் சந்திப்பில் உள்ளது. மிகவும் தைரியமாக நடவடிக்கைகள் எடுத்து முன்னேற வேண்டும்.

நாம் பல புதிய உத்திகளைப் பற்றி தைரியமாகச் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்நாடு சீரான வளர்ச்சிக்கான புதிய பாதையை வகுக்க முடியும், இந்த உரையுடன் தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி முடிவு செய்ய, விவாதங்களை இந்தக் கூட்டத்தில் தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி.

தம்முடைய குழந்தைகளிடமும், நாட்டிடமும் அன்பு கொண்ட தம்பதிகள், குடும்பநலத் திட்டத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

— இந்திரா காந்தி

ஏழை எளியோருக்கு முதல்வர் உதவி

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 453 நபர்களைத் தேர்ந்தெடுத்து, சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 2.11.92 அன்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 11 நபர்களுக்கு மூலதன மானியமாக ரூ.4.13 இலட்சமும், தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் ஒருவருக்குச் சுமை ஊர்தியும், 2 நபர்களுக்கு டீசல் டிரக்கும், வேன் வாங்க ஒருவருக்கும், ஆக ரூ.15.44 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்பட்டது.

தாட்கோ மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்க இருவருக்கும், இயந்திரக் கலப்பை வாங்க, ரைஸ் மில் யூனிட் அமைக்க, டிராக்டர் வாங்க மொத்தம் ரூ.8.65 இலட்சம் கடன், மற்றும் மானியமாகவும், கூட்டுறவு நிலவள வங்கி மூலம் 6 நபர்களுக்கு டிராக்டர் வாங்க ரூ.10.76 இலட்சமும், பூட்டு வியாபாரம் செய்ய ஒருவருக்கு ரூ.20,000-மும், நெசவுத் தொழில் செய்ய ஒருவருக்கு ரூ.10,000 கடனாகவும் வழங்கப்பட்டது.

மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வண்டி மாடுகள் வாங்க 26 நபர்களுக்கு ரூ.2.18 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனும், செம்மறி ஆடுகள் வளர்க்க 29 நபர்களுக்கு ரூ.2.29 இலட்சம் கடனுதவியும், பெட்டிக் கடை வைக்க 49 நபர்களுக்கு ரூ.2.69 இலட்சமும், சைக்கிள் கடை வைக்க 24 நபர்களுக்கு ரூ.1.44 இலட்சமும், இதரத் தொழில்கள் மேற்கொள்ள 89 நபர்களுக்கு ரூ.4.995 இலட்சம் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்பட்டது.

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் செம்மறி ஆடுகள் வளர்க்க, எரிசாணவாயு கலன் அமைக்க, மர அறுவை மில், மாவு மில் அமைத்தல் போன்ற தொழில்களுக்கென 41 நபர்களுக்கு ரூ.8.61 இலட்சம் கடன் உதவியும், கால்நடைப் பராமரிப்புத்துறை மூலம் செம்மறியாடு வளர்க்க 17 நபர்களுக்கு ரூ.1.378 இலட்சம் கடனுதவியும், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம் மூலமாக சிறுதொழில்கள் செய்ய 14 நபர்களுக்கு ரூ.1.80 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டது.

பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் 5 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், சமூக நலத்துறை மூலம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் தொகையாக 78 பெண்களுக்கு ரூ.3.90 இலட்சமும், கலப்புத் திருமண நிதி உதவி 6 பெண்களுக்கும், விதவை மறுமண நிதி உதவி 3 பெண்களுக்கும், பார்வையற்றோர் திருமண நிதி உதவி ஒருவருக்கும், தையல் இயந்திரம் 2 பெண்களுக்கும், மூன்று சக்கர வண்டி இருவருக்கும், சக்கர நாற்காலி ஒருவருக்கும், காதொலிக் கருவிகள் இருவருக்கும், ஆக மொத்தம் 17 நபர்களுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. வருவாய்த் துறை மூலமாக 4 நபர்களுக்குக் குடும்பச் சேமநல நிதி உதவியாக ரூ.2.33 இலட்சமும், விபத்து நிவாரண உதவியாக ஒருவருக்கு ரூ.10,000-மும் வழங்கப்பட்டது.

மொத்தம், 453 நபர்களுக்கு ரூ.1,09,75,000 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். இதில் 239 பேர் பெண்களாவர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

சலங்கை விழா

குன்னக்குடி வைத்தியநாதன்
தலைவர்:
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்தியப் பாரதத்திலே நெடியதாம் ஒரு கலை பரதக் கலை. எவ்வளவோ கலைகள், இந்தியக் கலாச்சார அடிப்படையில், நமது நாட்டில் உலா வந்தாலும், பரதக் கலையின் சிறப்புக்கு ஈடு இணையே கிடையாது என்றே சொல்லலாம். எப்படி எனில், எந்த ஒரு கலை, இந்தியக் கலாச்சார அடிப்படையில் அமைந்த கலை, இறைவனை இணைத்து, வாழ்த்திப் பாடி, நாட்டிலே சிறந்ததாக இருந்தாலும், பரதம் என்ற நடனக்கலை அல்லது நாட்டியக் கலை, சகல வல்லமை படைத்த, சர்வேஸ்வரனான நடராஜப் பெருமானுடன் இணைந்த ஒரு காவியக் கலை. அந்த நடராஜ பெருமானின் வண்ண ஓவியமான அற்புதச் சிற்பத்தின் சொந்தமாக விளங்கும் இந்த நர்த்தனக் கலைக்குப் புகழுக்கு மேல் புகழாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அருள்பிரசாதமான கலை

ஆண்டவனின் அருள் பெற்ற, அருள் பிரசாதமான கலை. இதில் முக்கியமாக, இந்திய மண்ணின், அதிலும் தமிழகத்திலிருந்து பல வல்லுநர்கள், நாட்டிய சாஸ்திரத்தை உலக அளவில் பறைசாற்றி பெருமை அடைந்து பெரும் வழிகாட்டிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டியக் கலையில் முக்கியமாக இசையும், வார்த்தைகளின் ஓசையும், உடலின் அசைவும், எட்டு (8) திசையும் நோக்கி, நாம் அதை மனதில் லயித்து, நினைத்து, அதில் அசைபோட வைக்கிறது. நாட்டியக் கலையை நன்குணர்ந்து புலமை பெற்றவர்கள், பாடல்களிலும், இசையிலும், தாளத்திலும், பாவத்திலும் என்ன, இசை சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளிலும் அவர்கள் வல்லவர்களாக விளங்குவார்கள்; அல்லது விளங்க வேண்டும். அதற்கு அவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நவரசங்களும் ஒன்று சேர்ந்த நளினமான கலை

ஒருவர் பரதத்தை நன்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால், ஒரு பாரம்பரியம் மிக்க குருவைத் தேர்ந்தெடுத்து, நாட்டிய சாஸ்திரத்தில் அவர் போதிய புலமை பெற்றிருக்கிறார் என்பதை அறிந்து, முழுமையாக அதே குருவிடம் கற்றுக் கொள்வது சாலச் சிறந்தது. அதே நேரத்தில், நல்ல நாட்டிய இசை ஆசிரியர்களைச் சந்தித்து, கண்டு, கேட்டு நமது குருவின் ஆணைப்படி, நாம் எப்படி ஆடுகிறோமோ, அதனுடன் பல சிறந்த பாணியையும் பார்த்து, ரசித்து, நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதால், இந்த சாஸ்திரத்தில் முழுமை பெறலாம் என்பது என்னுடைய நோக்கம்.

தமிழகத்தில் எந்தத் தேவாலயங்களுக்குச் சென்றாலும், சிற்ப வடிவத்தில் இந்தக் கலை சிலிர்த்து நிற்கிறது. ஒவ்வொரு சிலையும் சொல்லும் அற்புதப் பாவங்கள், அகம் மகிழ வைக்கிறது. நவரசங்களும் ஒன்று சேர்ந்த நளினமான கலை இது. அழகு நங்கையர்க்கு, மங்கையர்க்கு ஏற்ற மாபெரும் புனிதக் கலை இது. புண்ணியம் செய்யும் பூவையர்களுக்கே பூஜைக்குரியது. இப்படி எவ்வளவோ சிறப்புகளை நடன கலைக்குச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக தமிழகத்தில் பரதக் கலை என்று சொல்லும்போது, நமது நாட்டின் பெயர் 'பாரதம்' என்று நாம் சொல்வது புரிகிறதா? ஆம். பாரதம என்ற 4 எழுத்தில் பாவுக்குப் பிறகு கால் வாங்கியிருக்கிறது. அந்தக் காலை எடுத்தால், பரதம் என்ற கலையின் பெயர் வரும். பரத கலைக்குக் கால் எடுத்து தானே ஆட வேண்டும்? "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" என்று பாடுகிறோம். "இடது பதம் தூக்கி நின்றாடும் நடராஜன் அடி பணிவையே!" என்று பாடவில்லையா? சரி, மறுபடியும் இடத்திற்கு வருகிறேன். பாரதத்தில் காலை எடுத்துவிட்டால், பரதம் என்ற கலையின் பெயர் வந்து விட்டது. இந்த 'பரதம்' என்ற வார்த்தையின் முதல் எழுத்தை எடுத்துவிட்டால், 'ரதம்' என்று வரும். ஆடும் மங்கை ரதம் போல், ஆடி அசைந்து வர வேண்டும். அப்போது தான், அது பார்ப்பவர்கள் கண்களுக்கு அழகான விருந்து படைக்கும். 'ரதம்' என்ற வார்த்தையில் முதல் எழுத்தை எடுத்து விட்டால், ஆங்கிலச் சொல் ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். அதாவது, 'Dham' . அந்த ஆடும் ஆரணங்கிற்கு 'DHAM' இருந்தால்தான், நடனம் முழுமை பெறும். அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் மக்களும், ...ம் என்று மகிழ்ச்சி அடைந்து பெருமைப்படுவார்கள்.

சலங்கை விழா

அண்மையிலே, இந்தக் கலையின் சிறப்புக்காக, வளர்ச்சிக்காக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலமாக, 'சலங்கை விழா' என்ற ஒரு சிறப்பான விழா சென்னை. தி.நகர், வாணி மகாலில், நவம்பர் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை சிறப்பாக நடந்தது. ஒவ்வொரு நாளும், வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்காக மாலையில் ஒரு நிகழ்ச்சியும், புலமை பெற்ற கலைஞர்களுக்குப் பிறகு ஒரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு நாளும் இரண்டு நிகழ்ச்சிகளை இணைத்து ரசிகப் பெருமக்களின் கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தாகப் படைக்கப்பட்டது.

நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விருப்பப்படி நல்ல கலைகளை வளர்க்கவும், அதில் புலமை மிக்கவர்களைப் பெருமைப்படுத்தவும், புதிய பல இளம் கலைஞர்களை இந்த நவபாரதத்தின் நவரசக் கலையான நாட்டியக் கலையில் நல்ல புலமை மிக்கவர்களாக ஆக்கவும், ஆக்கப் பூர்வமான இயக்கமாகிய இந்தத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைமைப் பொறுப்பை அடியேனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் இனிய ஆணைப்படி செயல்படுவதில், என்னுடைய செயலாக்கத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லி,

பார்த்தோம்-படித்தோம்

படித்து மகிழ்ந்தேன்!

16.10.92 இதழில், நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகளைத் தமிழக முதல்வர் அறிவித்த செய்தியினைப் படித்து மகிழ்ந்தேன். இயல் இசை நாடகத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் வரவேற்கத்தக்கது.

-ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி (கோவை மாவட்டம்)

படித்துத் தெளிந்தேன்!

தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் முழுமையாக நிலைநாட்டப்பட்டு அமைதி நிலவுகிறது என்கிற சட்டமன்ற உரையைப் படித்தேன். மிகவும் உன்னதமான முறையில் தெளிவுபட விளக்கி உள்ளதைப் படித்துத் தெளிந்தேன்.

—ஏ.சேகரன்
பெத்த நாடார்பட்டி
(திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்)

கவிதை-சிறப்பு

கவிஞர் இளந்தேவன் அவர்களின் 'வடலூர் வள்ளல்' கவிதை சிறப்பாக இருந்தது.

—இன்பவல்லி வாசுதேவன்
கீரைச்சாத்து.

கட்டுரை அருமை!

பி.எல். இராசேந்திரன் அவர்கள் எழுதிய தமிழ் வளர்த்த பெரியார் வேத நாயகம் பிள்ளை அவர்களின் கட்டுரை மிக அருமை.

—எல். மாணிக்கம்,
வரைமாணிக்கம்
(புதுக்கோட்டை மாவட்டம்)

இதழ்தோறும் வெளியிடுக!

வேதநாயகம் பிள்ளை கட்டுரை போல, இதழ்தோறும் ஒரு தமிழறிஞர் கட்டுரை வெளியிட வேண்டுகிறேன்.

—வெ. சிவநேசன்
இராமச்சந்திரபுரம்
(கோவை மாவட்டம்)

நிச்சயம் திருந்துவார்கள்!

'குடிப்பழக்கமாம் உயிர்க் கொல்லி' பயனுள்ள கட்டுரை. இதைப் படித்தால் குடிகாரர்கள் நிச்சயம் திருந்துவார்கள்.

—வி.இரஷ்யா
மாளூத்து,
(மதுரை மாவட்டம்)

தொடர்ந்து வெளியிடுக!

'உயிர்க்கொல்லி குடிப்பழக்கம்' போல மதுவிலக்கு தொடர்பான கட்டுரையினைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

—வி.சென்றாயன்
கருப்பூர்,
(சேலம் மாவட்டம்)

ஒவ்வொரு வரியும் அருமை!

புலவர் தணிகை உலக நாதன் அவர்களின் 'குடியைக் கெடுக்கும் குடி' கவிதை ஒவ்வொரு வரியும் அருமை!

—ஸ்ரீநிவாஸ்பிரபு
சென்னை

'மாணவர் பக்கம்' பக்கத்தை அதிகப்படுத்தவும்.

—ர. பூபதி
பூனாம்பாளையம்

பயனுள்ள கட்டுரை

மீன் வளர்ப்புக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

—கெ. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி.

கலைகளுக்கு எல்லாம் வரப்பிரசாதமாக இருக்கும், தமிழக முதல்வராகக் காட்சியளிக்கும் அவருக்கு நுண்கலை சம்பந்தப்பட்ட அனைத்துக் கலைஞர்களும், தங்களது நன்றிகளை, மலர் மாலைகளாகச் சமர்ப்பிக்கிறார்கள்.

இந்த விழாவை 'சலங்கை விழா' என்று ஏன் குறிப்பிட்டோம் என்றால், பரதக் கலையில் 'சலங்கை ஒலி' என்பது சாதாரண ஒலி அல்ல. ஆடுபவர்களுக்கு மந்திர ஒலி ஆகும். பதம் பாடும்போது, அந்தப் பாதங்களில் ஒலிக்கும் மணிகள் சரங்களாகக் கோக்கப்பட்ட. அந்தச் சலங்கையின் மந்திர நாதம், மத்தள நாதத்துடன் (மிருதங்கம்) இணைந்து, மகத்தான மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

சலங்கையின்றி ஆட முடியாது. ஆடலாம், ஆடினால் அழகாக இருக்காது. பாபநாசம் சிவன் பாடலில் கூட, பாடலின் சரணத்தில், ''திருவடிச் சிலம்புகள் கலீர் கலீர் என'' என்று ஆரம்பித்திருக்கிறார். அந்தச் சிலம்பின் அல்லது சலங்கையின் இசைக்குக் 'கலீர்' என்று பெயரே சேர்த்திருக்கிறார். அதைச் சொன்ன இடம் இருக்கிறதே, அது பாடலின் சரணம். பாதத்திற்கு மறு பெயர் 'சரணம்' அல்லவா? ஆகவே, சரணத்திலே சலங்கையின் சப்தம் வருவது சரி என்று கூறுகிறாரோ சிவன் என்று நினைக்கத் தோன்றுகிறது.

சலங்கைக் கலை

பொதுவாக, நிகழ்ச்சிக்குப் பெயர் கொடுக்கும்போது, ''பரத நாட்டிய நிகழ்ச்சி'' என்றோ, ''நாட்டியக் கலை நிகழ்ச்சி'' என்றோ அல்லது 'நிருத்தியம்' என்றோ பல பெயர் கொடுத்து, இந்தக் கலையை அறிமுகப்படுத்தினாலும், 'சலங்கைக் கலை' என்று இக்கலையைச் சொல்லுவதில் எனக்கு என்னவோ ஒரு மகிழ்ச்சி ஊற்றெடுத்தது. அதன் அடிப்படையில் தான், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பல புதுமைகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், இந்த விழாவிற்குப் பெயர் வைக்கப்பட்டாலும், 'சலங்கை விழா' என்று பெயரிட்டு, நடனப் புலமை பெற்ற கலைஞர்கள் அனைவரும் இந்த விழாவை வாழ்த்திப் பாராட்டியதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

சிறப்பாக வெளிவரும் 'தமிழரசு'

மேலும், 'தமிழரசு' பத்திரிகை, சரியான கருத்துக்களையும், பற்பல அறிவுப் பூர்வமான விஷய தானங்களையும், சிறப்பான முறையில் தொகுத்து வழங்கி வருவது கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைவதுடன், எனக்கு இந்தச் 'சலங்கை விழா' பற்றி, 'தமிழரசு' மூலமாக எனது எண்ணங்களை வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்து, நல்ல வாய்ப்பை எனக்குக் கொடுத்த 'தமிழரசு'-க்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

உணவு-நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் செயல்பாடுகள் ஆய்வு

மாண்புமிகு தமிழக முதல்வர் 3.11.1992 அன்று காலை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயல்பாட்டை ஆய்வு செய்தார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர், திரு. ஜி. விஸ்வநாதன், தலைமைச் செயலர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலர், நிதிச் செயலர், முதல்வரின் செயலர், குடிமைப்பொருள் வழங்கு ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோரும் பங்கேற்றனர். இந்த ஆய்வின்பொழுது பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1992-ஆம் ஆண்டு ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின்கீழ், சம்பா பயிரில் 12.50 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு புதிய சாதனை படைக்கப்பட்டு உள்ளது. இது சென்ற சம்பா பருவத்தின் கொள்முதலைக் காட்டிலும் 2.00 இலட்சம் டன் அதிகமாகும். குறுவைப் பருவத்திலும் கொள்முதலில் கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறுவைப் பருவம் 15.12.1992-இல் முடிவடைந்தாலும், குறுவைக்கென நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்கான 4 இலட்சம் டன் நெல்லும் அக்டோபர் மாத இறுதிக்குள்ளாகவே அடையப்பட்டுவிட்டது. சென்ற ஆண்டு குறுவைக் கொள்முதல் மொத்த அளவு 2.00 இலட்சம் டன்களே ஆகும்.

குறுவைக் கொள்முதல் இலக்கு, குறுவைக் கொள்முதல் காலம் முடிவுறும் முன்பே அடையப் பெற்றிருந்தாலும், காவிரி டெல்டாப் பகுதி விசசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கொள்முதலை மேலும் தொடர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அறிவுறுத்தினார். இதன்படி குறுவைக் கொள்முதல் மேலும் தொடரப்படும். இந்நிலையில் சுமார் 5.5 இலட்சம் டன் நெல் குறுவைப் பருவத்தில் மட்டும் கொள்முதல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே, சம்பா பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 12.50 இலட்சம் டன் நெல்லையும் சேர்த்து 1992-ஆம் ஆண்டு மொத்த கொள்முதல் சுமார் 18 இலட்சம் டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நெல் கொள்முதலில் ஒரு புதிய சாதனையாகும். 29.1.1992 அன்று வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்யப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்கு முன் 5,000 டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. எனவே, 1992-ஆம் ஆண்டில் 17.95 இலட்சம் டன் நெல் விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் மூலமே பெறப்பட உள்ளது. இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

பொது விநியோகத் திட்டம் சீராகவும் செம்மையாகவும் நடைபெற எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதல்வர் ஆய்வு செய்தார். நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் சரியான எடையில் அரிசி வழங்கப்பட்டு, அதைக் கூட்டுறவுத் துறை பணியாளர் மேற்பார்வையில் நியாயவிலைக் கடைகளுக்கு லாரிகளில் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பொதுமக்களுக்கு நல்ல முறையில் வழங்கப்படுவதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்தார். சில நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் செவ்வனே பொருட்கள் வழங்கப்படுவதற்குச் சில சமூக விரோதிகள் ஊறு செய்வதைக் காவல் துறையின் உதவியுடன் முற்றிலுமாகத் தடுத்து நீக்கவேண்டுமென்று அறிவுறுத்தினார். நியாய விலைக் கடைகளுக்கு அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் தங்களது பணிகளை, தீவிரமாகவும் தொடர்ந்தும் ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கிராமப்புற மக்கள் பெரும்பாலும் மாலை நேரத்திலேயே நியாய விலைக் கடைகளுக்கு வந்து பொருட்களை வாங்குவதையும், இந்த நியாய விலைக் கடைகள் பலவற்றில் மின்சார வசதி இல்லாததையும் சுட்டிக்காட்டி, அவற்றிற்கு மின்சார வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நியாயவிலைக் கடைகளுக்குத் தேவையான புதிய கட்டடங்களை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துமாறு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்

குடும்ப அட்டைதாரர்களுக்குப் புதிய குடும்ப அட்டை 1993 ஜனவரி மாதம் முதல் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். புதிய குடும்ப அட்டை வழங்கப்படும்பொழுது, போலிக் குடும்ப அட்டைகளை முழுமையாக நீக்கி

விட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழு திருத்தியமைக்கப்பட்டு அதன் முதல் கூட்டத்தை 1992-ஆம் ஆண்டு இறுதிக்குள் கூட்ட வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையைக் குறைக்கும் பொருட்டு அரசு அண்மையில் அறிவித்த போனஸ் திட்டத்தின்கீழ் விவசாயிகள் அடைந்த பயனைப் பற்றியும் முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்தத் திட்டத்தின்கீழ் 1.7.1991 அன்று நிலுவையில் உள்ள அசலையும் அதற்குப்பின் அவர்கள் செலுத்தவேண்டிய தொகையையும் 30.6.1992-க்குள் செலுத்தும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 1.7.1991 அன்றிருந்த தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்கான தொகையை அரசு போனசாக வழங்கும்.

இந்தத் திட்டத்தின் பலன் 30.9.1992 வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இது வரை 55.75 கோடி ரூபாய் அரசு போனசாக வழங்கியுள்ளது. சுமார் 4.48 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளார்கள். அவர்கள் திருப்பிச் செலுத்தியுள்ள தொகை ரூ.250.80 கோடி ஆகும்.

தொடக்க நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படும் நீண்டகாலக் கடன்கள் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தப்படாததால், மாநிலத்திலுள்ள 181 தொடக்க நிலவள வங்கிகளில் 38 வங்கிகளே நபார்ட் நிறுவனத்தின் மறு நிதியுதவி பெறத் தகுதியுடையதாய் உள்ளன. இதனால் நடப்பு ஆண்டில் இவ் வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடனளவு ரூ.41 கோடி தான். விவசாயப் பெருங்குடி மக்கள் நீண்ட காலக் கடன்கள் பெறுவதற்குச் சிறந்த சாதனமாக விளங்குகின்ற இத்தகைய நிலவள வங்கிகளை நபார்ட்டின் மறுநிதியுதவி பெறத் தகுதி உள்ளனவாக ஆக்கப்பட, வங்கிகள் தாங்கள் வழங்கிய கடனை வசூலிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். குறிப்பாக, திருப்பிச் செலுத்த வசதியும் வாய்ப்பும் இருந்தும், திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து தொகை வசூலிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள மேல் நிலைப் பணியாளர்களுக்காக ஒரு பொதுவான பணிக்குழு (Common Cadre) அமைக்கப்படுவதைப் பற்றியும் முதல்வர் அவர்கள் ஆராய்ந்தார்.



இவ்வாறு ஒரு பணிக்குழு அமைக்கப்படுவதைக் கொள்கையளவில் ஏற்று, இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கையை விரைவில் அளிக்க ஒரு குழுவையும் அமைக்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

சட்டப்பேரவையில் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இத்துறைக்கான மானியக் கோரிக்கையின்பொழுது வெளியிடப்பட்ட அறிக்கைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்கள் ஆராய்ந்தார்.

அதன்படி, நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறு வியாபாரதிற்கென ஒரு இலட்சம் பேருக்குக் கடன்கள் வழங்குவதற்கான குறியீட்டில், 48,562 பேருக்கு ரூ.28.62 கோடி கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. 17,479 பெண்களுக்குக் கடனாக வழங்கப்பட ரூ.11.01 கோடியும் இதில் அடங்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் முற்றிலும் மகளிராலேயே நடைபெறும் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளை ஒன்று நிறுவப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி இதுவரை 11 மாவட்டங்களில் அனைத்து மகளிர் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் இத்தகைய கிளைகளைத் திறக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்காக 100 துவக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வேளாண் இடுபொருள் அங்காடிகள் ஆரம்பிக்கப்படும். திட்டத்தின்கீழ் 100 அங்காடிகள் தொடங்கப்பட உள்ளன. ஒவ்வொரு அங்காடிகளும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ரூ.18,500 நிதியுதவி அளிக்கின்றது.

கூட்டுறவுத் துறையின் மூலம் இரண்டு கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஒன்று தருமபுரி மாவட்டம் பர்கூரிலும், மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொடங்கப்பட்டுள்ளன.

அரசின் சாதனைகள்

- ஓர் ஆய்வு

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் பணிகளை ஆய்வு செய்தார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோரும், அரசு உயர் அதிகாரிகளும் பங்கேற்ற இக்கூட்டத்தில் சென்ற ஆண்டு மற்றும் நடப்பு ஆண்டின் சாதனைகளும் முன்னேற்றங்களும் ஆய்வு செய்யப்பட்டன.

அப்போது ஆய்வு செய்யப்பட்ட மேற்கூறிய நான்கு துறைகளைப் பற்றிய குறிப்புரை பின்வருமாறு:

பொதுப்பணித்துறை

எட்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து குறித்த தேதியாகிய ஜூன் 12-ஆம் தேதி குருவைப் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் தஞ்சைத் தரணியில் 5 இலட்சம் ஏக்கரில் மிகச் சிறப்பான விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தஞ்சை கழிமுகப் பகுதியில் உள்ள வாய்க்கால், வடிகால் முதலியவற்றில் மண்டிக் கிடந்த மணல், செடி கொடி ஆகியவற்றை புல்டோசர்களைப் பயன்படுத்தி 1.20 கோடி ரூபாய் செலவில் முழுமையாக அகற்றி வாய்க்கால்களில் கடைமடைப் பகுதிவரைக்கும் தண்ணீர் சென்று பாயும் வகையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

பெரியார் மற்றும் வைகை நீர்த்தேக்கங்களில் கிடைக்கப் பெற்ற நல்ல நீர்வரத்தை முன்னிட்டு, வரட்சிப் பகுதிகளாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டம் ஆகிய பகுதிகளில், 44,000 ஏக்கர் பரப்பளவுள்ள விரிவாக்கப் பகுதிகளுக்குப் பாசன நீர் திறந்துவிடப்பட்டது.

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 22 நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 35,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தவும், இடைவெளிப் பகுதியான 8,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் 58,300 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி உருவாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு இவ்வாண்டு ரூ.27 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

காவிரி கழிமுகப் பகுதியில் வாய்க்கால் வடிகால்களை நவீனப்படுத்த ரூபாய் 4.50 கோடி அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் கடைமடைப் பகுதிகளில் பாசன வசதியும் வடிகால் வசதியும் கிடைக்கப்பெறும்.

கடலரிப்புப் பணிகளுக்காக ரூபாய் 4.25 கோடி நிதி, அரசால் ஒதுக்கப்பட்டு, வட சென்னையில் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களைப் பாதுகாக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 7 பாசன அமைப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் உலக வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென இந்த ஆண்டு ரூபாய் 17 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 3,21,000 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைகின்றன. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு சேத்தியாத்தோப்பு அணைக்கட்டைச் சார்ந்த கால்வாய்கள் மற்றும் வடிகால்களை மேம்படுத்துவற்காக அரசு ரூபாய் 7.60 கோடி அளவில் அனுமதி வழங்கியுள்ளது. இதன்மூலம் 47,900 ஏக்கர் நிலங்கள் பயன்பட உள்ளன.

உலக வங்கி உதவியுடன் தமிழகத்தில் உள்ள 9 அணைகளைப் பாதுகாக்க ரூபாய் 42 கோடிக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த ஆண்டு இப்பணிகளுக்கு ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, வீடூர், கோமுகி, பொன்னணையாறு மற்றும் உப்பாறு அணைகள் வலுப்படுத்தப்படும்.

பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வைகை அணையிலிருந்து பெரியாறு முக்கியக் கால்வாய் தலைப்பு வரை இணைப்புக் கால்வாய் வெட்டுவதற்கு ரூ.25 கோடி செலவில் உலக வங்கி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் பெரியாறு முக்கியக் கால்வாயின் கீழ் உள்ள 85,500 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் சீரிய முறையில் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணா நீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ் பணிகள் முடுக்கி விடப்பட்டு இந்த ஆண்டு ரூபாய் 32 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மார்ச்சுத் திங்கள் 1995-க்கு, ஒரு ஆண்டு முன்பாகவே, 1994 மார்ச்சுத் திங்களில் இத்திட்டம் முடிக்கப்பட உள்ளது. ஆந்திர மாநில முதல் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆந்திரப் பகுதி தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளைத் தீவிரப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் 1995 ஜூன் திங்களுக்குள் சென்னைக் கிருஷ்ணா குடிநீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் 2-வது கட்டப் பணிகள் 150 பொதுப் பணித்துறை ஏரிகள்

★ கூட்டுறவு நிறுவனங்கள் சமூக முன்னேற்றத்தின் சாதனங்கள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் 'ஆவின்' நிறுவனம் அடையாறு ஆவின் பாலகத்தை மனவளர்ச்சி குன்றியோர் உதவி நிறுவனத்தின் பொறுப்பில் விட்டுள்ளது.

மற்றும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகள் ஆக மொத்தம் 230 ஏரிகளை நவீனப்படுத்த ரூ.50 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய திட்டங்கள்

1. காவிரி கழிமுகப் பாசன ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூபாய் 952 கோடி அளவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மைய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பாசன அமைப்புகளையும் மேம்படுத்துவதற்காகவும், பராமரிப்புப் பணிகளை முழுமையாகச் செய்து முடித்து, அதன் செயல் திறனை அதிகரிப்பதற்காகவும், ரூ.900 கோடி அளவில் உலக வங்கி உதவி பெறத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

முதல்வர் ஆலோசனை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது, இந்தத் துறையானது நீர்ப்பாசன நிர்வாகத்தினை நீர்ப்பாசன பொறியியல் அமைப்புகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் பாசனம் செய்யப்பட்ட நீரானது கிராம அளவில் விளை நிலங்களில் எவ்வாறு நிறைவாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். ஏனெனில் விளை நிலங்களில் பாசன நீரானது நிறம்படப் பயன்படுத்தப் படுவது விவசாயிகளின் பொறுப்பாக இருந்தபோதிலும், பொதுப்பணித்துறையானது தன்னுடைய அலுவலர்கள் மூலம் விவசாயிகளை நீர்ப்பாசன நீர் நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்து, தக்க ஆலோசனைகள் மற்றும் பயிற்சியை வழங்கி, பாசன நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்தத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இது போன்ற விவசாயிகளை நீர்ப்பாசன நிர்வாகத்தில் நன்கு ஈடுபடுத்தி ஊக்குவித்தால், விவசாயிகள் மென்மேலும் சிறந்த முறையில் வேளாண் பணிகள் செய்ய உதவிகரமாக இருக்கும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை தெரிவித்தார்.

சிறிய நீர்ப்பாசனம்

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்யும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள நீர்ப்பாசன ஏரிகளைச் சீராக்குதல், நல்ல முறையில் பராமரித்தல், ஏரிகளின் கரைகள் பலப்படுத்துதல், கண்மாய்கள் பழுதுபார்த்தல், கால்வாய்கள் செப்பனிடப் படுதல், பாசன ஏரிகள் மற்றும் கால்வாய்கள் தூர் வாரப்படுதல் ஆகியவைகளை விரைந்தும், திறம்படவும் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் பொதுப்பணித்துறையானது வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் பகுதிகளில் புதிய நீர்ப்பாசன ஆதாரங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து ஒருங்கிணைந்த திட்ட முன் மொழிவுகளைத் தயாரித்து விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் பொதுப் பணித்துறை அலுவலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

நெடுஞ்சாலைத்துறை

தமிழகத்தில் உள்ள அரசு சாலைகளின் பராமரிப்பிற்காகக் கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட குறைந்த நிதி ஒதுக்கீட்டின் காரணத்தினால் பெரும்பாலான சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இச்சாலைகளை 5 ஆண்டுகளில் சீரமைப்பதற்காக அரசு 150 கோடி ரூபாய் செலவில் 'பழுதடைந்த சாலைகள் சீரமைப்புத் திட்டம்' என்ற புதிய திட்டத்தினை 1991-92-இல் அறிமுகப் படுத்தியது.

இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல், 581 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் ரூ.20 கோடி செலவில் பழுது நீக்கப்பட்டு, சீர் செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கு நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8000 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் சீர் செய்யப்படவுள்ளன. இவற்றுள் ஆகஸ்ட் 1992 வரை, 2,737 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகள் சீர் செய்யப்பட்டுவிட்டன.

பழுதடைந்த பாலங்கள்

அரசு சாலைகள் உள்ள பெரும்பாலான பாலங்கள் கட்டப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும், அவற்றில் பெரும்பாலானவை தற்போதைய கனரக வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவையாக இல்லாததாலும் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இலாயக் கற்றவையாக உள்ளன. அண்மையில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வின் படி, தமிழகத்தில் தற்போது அரசு சாலைகளில் சுமார் 3,401 பாலங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திரும்பக் கட்டுவதற்குச் சுமார் 290 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவற்றின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு தமிழக அரசு நடப்பு ஆண்டில் 7 முக்கியப் பாலங்களை ரூ.247 இலட்சம் செலவில் திரும்பக் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான நடப்பு 1992-93-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.100 இலட்சங்களாகும்.

பாலங்கள் - சாலை மேம்பாட்டுப் பணிகள்

திட்டப்பணிகளின் கீழ், பகுதி 2 திட்டத்தின் கீழ், சாலை மேம்பாட்டுப்பணிகள், பாலப்பணிகள் ஆகியவற்றிற்கு அரசு ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்துப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 117 பாலங்களும், 129 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 66 பாலப் பணிகளும், 104.50 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளும் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டு, ஆகஸ்டு 92 முடிய, 37 பாலப்பணிகளும், 70.70 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1000-க்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 186 கிராமங்களுக்கு 512 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் ரூ.15.36 கோடி செலவில் அமைக்கப் பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 180 கிராமங்களுக்கு 500 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள் ரூ.15 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் செல்லும் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு அரசு மற்றும் மாவட்டச் சாலைகளாகப் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 762 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.22.80 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் 530 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.16 கோடி செலவில் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், சென்னை திருவான்மியூரில் இருந்து கடலூர் வரையுள்ள 166 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை ரூ.75 கோடி செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தேசிய நெடுஞ் சாலைத் தரத்திற்கு மேம்பாடு செய்யப்படவுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 166 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியை 7 மீட்டர் அகலமுள்ள ஒடு தளமாக அகலப்படுத்தவும், சாலையின் ஒரு தளத்தின் இருபுறமும் 1.50 மீ. அகலத்திற்குக் கடினப் பகுதியாகத் தரமுயர்த்தவும், 8 பெரிய பாலங்கள் 38 சிறுபாலங்கள் மற்றும் 21 குழாய்ப் பாலங்கள் கட்டப்படவும், 370.50 எக்டேர் பரப்புள்ள நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவும் வழிவகை செய்யப்படவுள்ளது.

நடப்பு ஆண்டு 1992-93-இல், ஆக்ஸ்ட் 92 முடிய 27 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 8 பெரிய பாலங்கள், 45 சிறுபாலங்கள் கட்டும் பணியும், 42 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியைத் தரமுயர்த்தும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்திற்கு அக்டோபர் 92 முடிய ரூ.16.81 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சந்தைச் சாலைகள்

இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு- அம்பேத்கர், தென்னார்க்காடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம்- காயிதே மில்லத், திருச்சி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 19 சந்தை மையங்களுக்குச் செல்லும் 800 கி.மீ. நீளமுள்ள 176 ஊரகச் சாலைகளை ரூ.45.28 கோடி செலவில் உலக வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 1995-96-இல் முடிக்கப்படும்.

நகரிய மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ரூ.133.60 கோடி மதிப்பீட்டில் 33 பணிகள் உலக வங்கியின் கடனுதவியுடன் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ரூ.11.25 கோடி மதிப்பிலான 6 பணிகள் 1991-92-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டன.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 29 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தரமுயர்த்தப்படவும், 5 சாலை மேம்பாலங்கள், 2 பெரிய பாலங்கள், 32 சிறுபாலங்களும், கட்டப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் ஆகஸ்ட் 1992 முடிய 2 சாலை மேம்பாலங்களும், 12 சிறுபாலங்களும், 8.5 கி.மீ. நீள சாலை தரமுயர்த்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு ஆகஸ்ட் 1992 முடிய ரூ.8.27 கோடி செலவிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

உலக வங்கியின் கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும்



இத்திட்டத்தின் கீழ் சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை (எண்45-இல்) தாம்பரம் முதல் புக்கத் துறை வரையுள்ள 39.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை 4 வழித்தடமுள்ள சாலையாக மேம்பாடு செய்ய வும், புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள 93.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியைத் தரம் உயர்த்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் செங்கல்பட்டு அருகே பாலாற் றின் மீது ஒரு பாலமும் மதுராந்தகம் மற்றும் விக்கிர வாண்டி ஆகிய ஊர்களுக்குப் புறவழிச்சாலை அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டன. நடப்பு 1992-93-ஆம் ஆண்டில் புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையுள்ள சாலைப்பகுதியைத் தரமுயர்த்தும் பணி முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆரம்பம் முதல் செப்டம்பர் 1992 முடிய ரூ.53.14 கோடி செலவிடப் பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளும், பராமரிப்புப் பணிகளும் மைய அரசின் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் 26 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதிகள் தரமுயர்த்தப்பட்டன; 190 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. மற்றும் 2 பாலங்களும் 19 சிறுபாலங்களும் கட்டி முடிக்கப்பட்டன.

நடப்பு 1992-93-இல் 80 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளைத் தரமுயர்த்தவும், 3 சிறுபாலங்கள் மற்றும் 10 மிகச் சிறுபாலங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டு ஆகஸ்ட் 1992 முடிய 41 கி.மீ. நீள சாலைப்பகுதிகளைத் தர முயர்த்தும் பணியும், 110 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளைப் புதுப்பிக்கும் பணியும், 2 சிறுபாலங்கள் மற்றும் 6 சிறுபாலங்கள் கட்டும் பணியும் முடிக்கப்பட்டு விட்டன.

தேசிய நெடுஞ்சாலையில்
புதிய திட்டப் பணிகள்

பெங்களூர்-சேலம்-மதுரை தேசிய நெடுஞ்சாலை (எண்.7)-யில் கிருட்டிணகிரியில் இருந்து ஒசூர் வரை யிலான 61 கி.மீ. நீள சாலைப்பகுதியையும், மதுரையில் இருந்து திண்டுக்கல் வரையிலான 60 கி.மீ. நீள சாலைப் பகுதியையும் நான்கு வழித்தட அகலமுள்ள சாலைகளாக மேம்பாடு செய்திட மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான 'சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தனியார் மூலம் தயாரிக்க, மைய அர சினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆய்விற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்துதல்

தமிழகத்தில், சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரையுள்ள 737 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையையும், 504 கி.மீ. நீளமுள்ள நாகப்பட்டினம்-கடலூர்-மைசூர் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்திடும் திட்டங்கள் மாநில அரசினால் மைய அரசிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்படும்போது இதனைக் கருத்தில் கொண்டு இறுதியாக்கப்படும் என்று மைய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் பாராளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் காமராசர் மாவட்டம் அறிவொளி இயக்கத்தின் மூலம் முழு எழுத்தறிவுப் பெற்ற மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது நமது மாநிலத்தில் முழு எழுத்தறிவு பெற்ற மூன்றாவது மாவட்டமாகும். பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட் டங்களாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

மைய சாலை நிதித் திட்டப் பணிகள்

பாராளுமன்றத்தில் 13.5.1988-இல் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி பெட்ரோல், ஆயில், டீசல் ஆகிய பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையினால் மைய அரசிற்குக் கிடைக்கும் ஆயத்தீர்வையில், தமிழக அரசிற் குச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.26.18 கோடி அளிக்கப்பட வேண்டும். இத்தீர் மானத்தின்படி 1988-89-இல் இருந்து 1991-92 முடிய உள்ள நான்கு ஆண்டுகளுக்கு ரூ.104.72 கோடி தமிழக அரசிற்கு அளிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.392.78 கோடி மதிப்பிலான 576 பணிகளுக்கான பிரேரணைகள் மைய அரசிற்கு மாநில அரசினால் 6.6.90-இல் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இத்திட்டத்தின் கீழ் மைய அரசு, 1991-92-இல் ரூ.498.76 இலட்சம் மதிப்பிலான 8 பணிகளுக்கும், 1992-93-இல் ரூ.105 இலட்சம் மதிப்பிலான ஒரு பணிக்கும் மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் தஞ்சை நகரில் அமைந்துள்ள குறுகிய ரயில்வே மேம் பாலத்தினை ரூ.250 இலட்சம் மதிப்பீட்டில் திரும்பக் கட்டும்பணி குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் கயத்தாறு, புளியங்குளம், குமரி மாவட்டத்தில் முப்பந்தல், தூத்துக்குடிக்கு அருகில் முல்லைக்காடு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டை ஆகிய இடங்களில் அரசுத் துறையில் 105 காற்று மின் ஆலைகள் இது வரையில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மின் திறன் 16.05 மெகாவாட் ஆகும்.

1992 அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி வரையில் 86 மில்லியன் யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு மின் வாரியத்திற்கு இந்தக் காற்றாலைகள் வழங்கி உள்ளன. இது தவிர, தனியார் சார்பாக 26 காற்று மின் ஆலைகள் 6.5 மெகாவாட் அளவிற்குக் கயத்தாறிலும், முப்பந்த லிலும் நிறுவப்பட்டுள்ளன. ஆக மொத்தம் தமிழகத்தில் 22.55 மெகாவாட் அளவிற்குக் காற்று மின் ஆலைகள் மூலம் மின்சார உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

காற்றின் மூலமாக நீர் இறைத்து விவசாயத்திற்கும், குடிநீர்த் தேவைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இதுவரையில் 702 காற்றாலைகள் தமிழகத்தில்

நிறுவப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும், அனைத்துத் தமிழக மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப நிறுவப்பட்டு விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இதுவரை 1659 வீடுகளில் சூரிய ஒளி சுடுநீர்ச் சாத னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவை தவிர 246 பெரிய அளவு சூடுநீர்ச் சாதனங்கள் தொழிற் கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. 1991-92 ஆண்டுக்கு வீடுகளில் மட்டும் நிறுவப்பட வேண்டிய குறியீடான 200 சாதனங் களையும் தாண்டி 500 சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 238 சூரிய அடுப்புகள் சமையல் தேவைக்காக மக்களுக்கு மாநில அரசு, மைய அரசு மானியங்களோடு கொடுக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயு

தமிழ்நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனம் இதுவரை பெரிய அளவிலான சாண எரிவாயுக் கலன்கள் 46 நிறுவியுள்ளது. 1991-92- ஆம் ஆண்டு மட்டும் பெரிய அளவிலான சாண எரிவாயுத் திட்டங்கள் 7 முடிக்கப் பட்டுள்ளன.

எரிசக்தி தாவரக் காடுகள்

நெல்லை மாவட்டத்தில் 523 எக்டேர் பரப்பளவில் எரிசக்தி தாவரக் காடுகள் அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக இத்திட்டம் நடைபெற்று வருகின்றது. இவை முழுமையாக வளர்ச்சி அடைந்தபிறகு சுற்று வட்டாரத்தில் உள்ள மக்களின் தேவைக்குப் பயன் படுத்தப்படும். இத்திட்டம் திருவண்ணாமலை சம்புவ ராயர் மாவட்டத்தில் மேல் செங்கம் என்ற இடத்தில் 100 எக்டேர் பரப்பளவில் 1991-92-ஆம் ஆண்டில் துவக்கப் பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

சக்தி தன் நிறைவுக் கிராமம்

சக்தி தன் நிறைவுக் கிராமம் என்ற அடிப்படையில் 49 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்தக் கிராமங்களில் 14.96 இலட்சம் ரூபாய் செலவில் மரபு சாரா எரி சக்தி சாதனங்களான மேம்படுத்தப்பட்ட அடுப்பு, மெட்டல் அடுப்பு, நீர் இறைக்கும் காற்றாலை, சூரிய ஒளி சக்தி யினால் இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டி, சூரிய ஒளி சக்தியால் இயங்கும் தெரு விளக்குகள், சூரிய ஒளி சக்தியால் இயங்கும் வீட்டு விளக்குகள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. சூரிய ஒளி சக்தியினால் இயங்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் தமிழகத்தில் இதுவரை ரூ.5.16 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ பொது விநியோக முறையில் உணவுப் பொருள் வழங்க ரூ.2600 கோடி செலவாகிறது. இந்தியாவில் உள்ள மொத்தம் 3.8 இலட்சம்நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள் வழங்கப்படுகிறது. தொலைவுப் பகுதி யில் வாழும் 16 கோடி மக்களுக்கு உதவிட 1700 வட்டாரங்களில் 11,000 கடைகள் திறக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக சக்தி

தமிழகத்தில் 13 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார வளர்ச்சி ஒன்றியங்களில் (பஞ்சாயத்து யூனியன்களில்) ஒருங்கிணைந்த ஊரக சக்தி தன்னிறைவுத் திட்டம் அமல் படுத்தப்பட்டு வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.32 இலட்சம் செலவில் இந்த 13 பஞ்சாயத்து யூனியன் களில் மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் மெட்டல் அடுப்புகள், டீசல் நீர் இறைப்பான்களில் மேம்படுத்தப்பட்ட புட் வால்வுகள், நீர் இறைக்கும் காற்றாலைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

மரபு சாரா எரி சக்தி வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தியதற்காக மைய அரசு தமிழகத் துக்குச் சென்ற ஆண்டு சுழற்கேடயம் வழங்கிச் சிறப் பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மின்வாரியத்தின் சாதனை

இந்த அரசு பதவி ஏற்றபொழுது உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு உச்ச தேவையில் 30 சதவிகிதமும் மின் சக்தியில் 25 சதவிகிதமும் அமலில் இருந்தது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக அனல் மின் நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டதாலும் புனல் நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு வரலாறு காணாத அளவில் இருந்ததாலும் மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு மின் உபயோகத் தில் இருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளும் 19.10.92 முதல் அறவே நீக்கப்பட்டுள்ளன. இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாண்டுகளுக்குப் பின்னர் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது. இது நாம் பெருமைப்படக்கூடிய அரிய சாதனையாகும்.

மின் நிலையங்களின் நிறுவுத்திறன் அதிகரிப்பு

புதியதாக 224.67 மெகாவாட் அளவு நிறுவுத்திறன் கீழ்க்கண்டவாறு கூடுதலாக்கப்பட்டது.

தூத்துக்குடி அனல் மின் திட்டம் - பிரிவு 4	... 210 மெ.வா
நரிமணம் வாயுச்சுழலி திட்டம்	... 10 மெ.வா
புளியங்குளம் காற்றாலை	... 1.5 மெ.வா
கயத்தாறு காற்றாலை விரிவாக்கம்	... 0.2 மெ.வா
கயத்தாறு நெடுஞ்சாலையோரக் காற்றாலை	... 0.22 மெ.வா
மரவக்கண்டி புனல் மின் திட்டம்	... 0.75 மெ.வா
பூனாச்சி புனல் மின் திட்டம்	... 2 மெ.வா
மொத்தம்	224.67 மெ.வா

கூடுதல் மின் உற்பத்தி

	1990-91 (ஜூலையிலிருந்து ஜூன் வரை (மில்லியன் யூனிட்டுகள்)	1991-92	% அதிகரிப்பு
புனல்	3,829	4,632	(+) 20.97
அனல்	9,433	9,960	(+) 5.59

மத்திய அரசு மின் நிறுவனங் களிலிருந்து வாங்கப்பட்ட மின்சாரம்	8,037	8,664	(+) 7.80
மொத்தம்	21,299	23,256	(+) 9.19

இந்த ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் ரை 6,253 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

புனல்	... 2185
அனல்	... 2376
மத்திய அரசின் மின் நிறுவனங்களிலிருந்து வாங்கப்பட்ட மின்சாரம்	1692
மொத்தம்	6253
	மில்லியன் யூனிட்டுகள்

இது கடந்த ஆண்டு இதே காலத்தில் உற்பத்தி செய்ததைவிட 10.2 சதவிகிதம் கூடுதலாகும்.

வட சென்னை அனல் மின் திட்டம்

இத்திட்டத்தின் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் 210 மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவு 1993 செப்டம்பர் மாதத்திலும் இரண்டாவது பிரிவு 1994 மார்ச் மாதத்திலும் மூன்றாவது பிரிவு 1994 ஜூன் மாதத்திலும் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான தற்போதைய மதிப்பீடு ரூ.1405 கோடியாகும். ஆசிய வளர்ச்சி வங்கி இந்தத் திட்டத்துக்கென சுமார் ரூ.479 கோடி நிதி உதவி அளிக்கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது கட்ட விரிவாக்கத் திட்டங்களுக்குத் தேவையான நிலக்கரியைத் துறைமுகத்திலிருந்து அனல் மின் நிலையத்திற்குக் கொண்டு வரும் வெளிப்புற நிலக்கரி கையாளும் அமைப்பின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.100.58 கோடி ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத்திற்கு ரூ.68 கோடி நிதி உதவி அளிக்கிறது.

பேசின் பாலம் எரிவாயு மின் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 எரிவாயு மின் உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்படவுள்ளன. இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ.373 கோடியாகும். இத்திட்டத்திற்கென 11,450 மில்லியன் யென் கடன் வழங்க ஜப்பானிய அரசு இசைந்துள்ளது. இப்பிரிவுகள் 1994-95 ஆண்டில் செயல்படத் துவங்கும்.

கீழ்க்கண்ட புனல் மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. கீழ் பவானி வலதுகரைக் கால்வாய் ... 2×4 மெகாவாட்
2. சாத்தனூர் அணை புனல் மின் திட்டம் ... 1× 7.5 மெகாவாட்
3. பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் ... 3×50 மெகாவாட்

● நீங்கள் கண்ணியமாக வாழவிரும்புகிறீர்களா? அப்படியானால் குடிப்பழக்கத் தீமையை விலக்கி விடுங்கள்!

—அண்ணல் காந்தியடிகள்

சென்னைப் பெருநகர் மின் விநியோகம்

சென்னைப் பெருநகர் மின் விநியோகத்தைச் சீரமைத்து மேம்படுத்தும் வண்ணம் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி 150 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாக மின் விநியோகப் பிரிவில் முதன் முறையாக 230 கிலோ வோல்ட் மின் தொடர் புதைவடம் அமைத்தல், 230 கிலோ வோல்ட் வாயுக் காப்புத் துணை மின் நிலையம் அமைத்தல், மின் விநியோகத்தைச் சீராகக் கண்காணிக்க ஒரு நவீனக் கட்டுப்பாடு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டம் 1994-95-இல் முடிவடையும்.

1991-92-ஆம் ஆண்டில் வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 419.9 கிலோ மீட்டர் நீள புதிய மிகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 13 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 217.1 கிலோ மீட்டர் நீள புதிய மிகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன. மேலும் இவ்வாண்டு இறுதிக்குள் 20 புதிய துணை மின் நிலையங்களும் 380 கிலோ மீட்டர் நீள புதிய மிக உயர் அழுத்த மின் பாதைகளும் நிறுவப்படவுள்ளன.

புதிய மின் இணைப்புகள்

இந்த அரசில் கடந்த ஜூலை 91 முதல் செப்டம்பர் 92 முடிய 5,23,990 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 18,198 உயர் அழுத்த/தாழ் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்புக் கொடுத்ததும் அடங்கும்.

சிறப்புச் சுயநிதித் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் கட்டுப்பாடான நிதி நிலையைக் கருத்திற்கொண்டு 40,000 வேளாண்மை பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மின்சார வாரியத்தின் நிதி நிலைமையைக் கருதி புதியதொரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பயன் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் ரூபாய் இருபத்தைந்தாயிரம் அல்லது இணைப்புகளுக்குண்டான செலவு இவற்றில் எது அதிகமோ அதைச் செலுத்தி முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 3,809 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக்கோரி மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 1,715 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருடாந்திர இலக்கான 40,000 விவசாய மின் இணைப்புகள் தவிர கூடுதலாக இந்த மின் இணைப்புகள் தரப்படுகிறது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 1992 செப்டம்பர் வரை 40,865 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 29,135 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்பு விருதுகள்

1990-ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் சிறப்பு விருதைத் தூத்துக்குடி அனல் மின் நிலையம் 5-வது முறையாகப் பெற்றது. 1991-ஆம் ஆண்டிலும் இதே அனல் மின் நிலையம் ஆறாவது முறையாக மைய அரசின் சிறப்பு விருதைப் பெற்றிடும் தகுதியினை 69.95 சதவிகிதம் அளவு செயல்திறனை எட்டியதன் மூலம் பெற்றுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் காற்றின் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு மின்சார வாரியமும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் இணைந்து முதல் இடத்தைப் பெற்று மைய அரசின் பரிசைப் பெற்றுள்ளன. தொடர்ந்து இரண்டாம் முறையாக இவ்விருதினை நாம் பெற்றுள்ளோம். மேலும் 1989-90-ஆம் ஆண்டிலும் 1990-91-ஆம் ஆண்டிலும் காற்று மின் உற்பத்திப் பிரிவுகளைச் செம்மையாகப் பயன்படுத்தியமைக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.75 ஆயிரம் பரிசாகப் பெறப்பட்டது.

நிலக்கரி தேவை

அனல் மின் நிலையங்களில் இப்பொழுது நிலக்கரியின் மொத்தக் கையிருப்பு, சுமார் 7.23 இலட்சம் டன் ஆகும். இது தவிர 1.95 இலட்சம் டன் நிலக்கரி, ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினத் துறைமுகங்களில் உள்ளது. மேலும் கோடை காலத்தில் நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக அனல் மின் நிலையங்களில் மின்னுற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க நம் மாண்புமிகு முதலமைச்சரின் தீவிர முயற்சியால் 20 இலட்சம் டன்கள் உயர்ந்த தரமுள்ள நிலக்கரி, குறைந்த சுங்கவரி விதிப்புடன் இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் காரணமாக நம் அனல் மின் நிலையங்கள் கோடை காலத்தில் தடை இன்றி இயங்க முடியும்.

1500 மெகாவாட் திறன் கொண்ட பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையம் ரூபாய் 7,000 கோடி செலவில் அமைப்பதற்காக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிக் கழகத்துடன் கூட்டுத்துறை மூலமாக வேலை நடைபெற்று வருகிறது.

தனியார் துறைகள் பங்கேற்பு

தனியார் துறைகளின் மூலம் மின் நிலையங்களை அமைப்பதற்குக் கீழ்க்கண்ட திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊனமுற்ற குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு மானியத்தொகை உயர்வு!

-மாண்புமிகு முதல்வர் ஆணை

தனியாரால் நடத்தப்பட்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்ட உடல் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயின்றுவரும் குழந்தைகளுக்கு, குழந்தை ஒன்றுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.30 வீதம் உணவு செலவுத் தொகை மானியமாக அரசால் 1976-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தொகை மிகவும் குறைவாக உள்ளதாகவும், இதை உயர்த்தித் தரவேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேற்படி தொகையை ரூ.90 ஆக 1.8.1992 முதல் உயர்த்தி உத்தரவிட்டு உள்ளார். இதனால் 1,200 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைவர்.

அனல் மின் நிலையங்கள்

பிள்ளைப் பெருமாள் நல்லூரில் வாயுச்சுழலி	... 300 மெ.வா
தூத்துக்குடி நான்காம் நிலை	... 500 மெ.வா
கடலூரில் அனல் மின் திட்டம்	... 1000 மெ.வா

புனல் மின் நிலையங்கள்

பேச்சிப்பாறை	... 2 650 கி.வா
திருமூர்த்தி	... 3 650 கி.வா.
துக்களப்பட்டி	... 1 350 கி.வா
முக்குர்த்தி	... 2 350 கி.வா

மேற்கண்ட திட்டங்களுக்கான செயற்குறிப்பு தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

மேற்கூறிய திட்டங்களைச் செயலாற்றத் தனியார் நிறுவனங்கள் மிகுந்த ஆர்வம் காட்டியதால் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களையும் தனியார் துறையிடம் ஒப்படைக்க வாரியம் தீர்மானித்து அதற்கான விளம்பரத்தைச் செய்தித்தாள்களில் வெளியிட உள்ளது.

அனல் மின் நிலையங்கள்

அ. வட சென்னை அனல் மின் நிலையம் III கட்டம்	... 2×500 மெ.வா
ஆ. வேம்பார் அனல் மின் நிலையம்	... 2×250 மெ.வா

டீசல் இஞ்சின் மின் நிலையங்கள்

அ. கடலூர் டீசல் இஞ்சின் மின் நிலையம்	... 100 மெ.வா

(— 26ஆம் பக்கம் பார்க்க)

அறிவொளி இயக்கம்

வாழ்வின் விடிவெள்ளி அறிவொளி

- இரா. கண்ணன்
பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர்
சென்னை

கல்லாதவர்கள் கற்கிறார்கள்.
கற்றவர்கள் கற்பிக்கிறார்கள்.

தொண்டுள்ளம் கொண்டவர்கள்
தொடர்கிறார்கள் இயக்கத்தினை.

- அதுதான் அறிவொளி இயக்கம், தமிழகத்தின் பல மாவட்டங்களில் பார்க்குமிடமெல்லாம் அறிவொளி இயக்க முழக்கங்கள், வாசகங்கள்! மக்களின் இயக்கமாக மாபெரும் உருவெடுத்துப் பவனி வரும் ஓர் இயக்கமாக இது வளர்ந்து வருகிறது.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற பாரதியின் கூற்று பழ நினைவாய் அமையாமல், புதிய உருவம் பெற்றுப் பெரும் உலா வருகிறது.

இந்தியாவின் மாநிலங்களில் எழுத்தறிவு அதிகம் பெற்ற மாநிலமாம் கேரளத்திற்கு அடுத்து தமிழ்நாடு 63.72 சதவிகித கல்வியறிவு பெற்ற ஒன்றாகும். முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்ற நிலை எய்திட எடுத்துக்கொண்ட முயற்சிகளில் இன்று ஒளி வீசி உலா வருவது அறிவொளி இயக்கமாகும்.

1976-ஆம் ஆண்டு தொடங்கிய பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் இதுவரை பயன்பெற்ற 78 இலட்சத்தினர் தவிர்த்து மேலும் சுமார் 82 இலட்சம் பேரினை அறிவொளி இயக்கத்தின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்களாக்கிட இவ்வியக்கம் செயல்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி- கட்டபொம்மன், கன்னியாகுமரி, மதுரை, வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சீரிய தலைமையின்கீழ் மாவட்ட எழுத்தறிவுக் குழு அமைக்கப்பட்டு செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கம் தன்னார்வத் தொண்டர்களின் ஈடு இணையற்ற பெரும் முயற்சியினாலும் செயல்பாட்டினாலும் வெற்றியைப் பெற்று வருகிறது. இந்த இயக்கத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனப் பிரிதிநிதிகள் ஆகியோர் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

அறிவொளி இயக்கத்திற்காகும் செலவினை இந்திய அரசும் மாநில அரசும் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. • புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் நிறைவு பெற்று அம்மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்களில் மேன்மை தாங்கிய ஆளுநர் அவர்கள் பங்கேற்று இம்மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்கள் என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.



கற்போம் கற்பிப்போம்

கற்போம் கற்பிப்போம்

மாண்புமிகு அமைச்சர்களும் இவ்விழாக்களில் பங்கேற்றுச் சிறப்புறச் செய்தனர். தமிழகத்தில் 1995-ஆம் ஆண்டிற்குள் எல்லா மாவட்டங்களிலும் அறிவொளி இயக்கம் செயல்படுத்தப்பட்டு தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்று அறிவிக்கப்படும் வகையில் அறிவொளி இயக்கச் செயல்பாடுக்ளில் மூன்று சுற்றுகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

செயல் திட்டம்

முதல் சுற்று - 1991-92-ஆம் ஆண்டு

வ. எண்	மாவட்டம்	வயதுப் பிரிவு	கற்போர் எண்ணிக்கை (இலட்சத்தில்)
1.	காமராசர்	9-45	2.40
2.	பசும்பொன்	15-35	1.00
3.	புதுக்கோட்டை	9-45	2.90
4.	கன்னியாகுமரி	15-35	0.84
5.	மதுரை	15-35	4.20
6.	திருநெல்வேலி-கட்டபொம்மன்	15-35	2.80
7.	வட ஆர்க்காடு-அம்பேத்கர்	15-35	4.80
			18.94

இரண்டாம் சுற்று - 1992-93-ஆம் ஆண்டு

1.	இராமநாதபுரம்	15-35	1.50
2.	கோயம்புத்தூர்	9-45	5.00
3.	நாகப்பட்டினம்-காயிதே மில்லத்	9-45	3.60
4.	திண்டுக்கல்-அண்ணா	15-35	3.30
5.	சேலம்	15-35	6.00
6.	பெரியார்	15-35	4.00
7.	தர்மபுரி	15-35	4.60
8.	சென்னை	9-45	2.80
9.	தஞ்சாவூர்	9-45	4.10
10.	தென்னார்க்காடு	15-35	5.40
			40.30

இவற்றில். இராமநாதபுரம், கோயம்புத்தூர், திண்டுக்கல்-அண்ணா, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களில் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

மூன்றாம் சுற்று - 1993-94-ஆம் ஆண்டு

1.	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	15-35	8.53
2.	திருவண்ணாமலை-சம்புவராயர்	15-35	4.43
3.	நீலகிரி	15-35	0.62
4.	திருச்சி	15-35	7.54
5.	சிதம்பரனார்	15-35	2.00
			23.12

முழு எழுத்தறிவை எய்திட மாவட்டங்களான புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களில் 'பயிற்றுப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்ற அளவில் தொழில் கல்வி, வாழ்க்கைக் கல்வி, நடைமுறைக் கல்வி போன்ற அத்துணை அம்சங்களும் அடங்கிய தொடர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிவொளி இயக்கத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் தங்கள் வாழ்க்கைக்குகந்த ஒரு கல்வி முறையைப் பெற வேண்டும் என்பதற்காகத் தொடர்கல்வித் திட்டத்தின் மூலம் பல வளர்ச்சித் துறைகளின் பணிகள் பற்றியும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில் வாழ்க்கைக் கல்வியைக் கற்பிக்கும் வகையில் தொடர்கல்வி மையங்கள் அமையும். இம்மையங்களில் பிரச்சினைகளை விவாதிக்கும் விவாத அரங்குகளும், விளையாட்டு வசதிகளும், சிறிய நூலகம், செய்தித் தாட்கள் வசதியுடன் கூடிய வாசிப்பு வசதிகளும் ஏற்பாடு செய்யப்படும்.

1995-ஆம் ஆண்டில் தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்படும் வகையில் அறிவொளி இயக்கப் பணிகளின் அத்துணை முயற்சிகளும், தேசிய எழுத்தறிவு இயக்கம் மற்றும் மாநில எழுத்தறிவு இயக்கங்களின் குறிக்கோள்களின்படி செயல்படுத்தப்படும். இக்குறிக்கோள்கள் வெற்றிபெற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உறுதுணையாக உள்ளனர் என்பதோடு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககமும் இப்பணியில் முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கற்போம் கற்பிப்போம்

(−23 ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆ. சமயநல்லூர் டீசல் இஞ்சின் மின் நிலையம் ... 100 மெ.வா

புனல் மின் நிலையங்கள்

1. மலை ஓடை திட்டங்கள்

அ. பெரிய/நடுத்தரத் திட்டங்கள்

பவானி கட்டளை அணைக்கட்டு முதல் கட்டம் ... 90 மெ.வா
பரலயார் புனல் மின் திட்டம் ... 25 மெ.வா
கொல்லி மலை புனல் மின் திட்டம் ... 20 மெ.வா
பவானி கட்டளை அணைக்கட்டு இரண்டாவது கட்டம் ... 30 மெ.வா

ஆ. சிறிய/நுண்ணிய திட்டங்கள்

தாழியார் புனல் மின் திட்டம் ... 2×250 கி.வா
சிறுவாணி புனல் மின் திட்டம் ... 1×3000 கி.வா
கள்ளர் பள்ளம் புனல் மின் திட்டம்... 1×5000 கி.வா
கீழ் கோத்த குடியாறு புனல் மின் திட்டம் ... 1×5000 கி.வா
மஞ்சளார் புனல் மின் திட்டம் ... $1 \times 10,000$ கி.வா

கால்வாய்த் திட்டங்கள்

அ. விலாம்பட்டி புனல் மின் திட்டம்... 1×500 கி.வா
ஆ. பூசாரி பட்டி புனல் மின் திட்டம்... 1×300 கி.வா

தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின்படி புதிய உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தில் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:

முதல் ஆண்டு ... 40 சதவிகிதம்
இரண்டாவது ஆண்டு ... 30 சதவிகிதம்
மூன்றாவது ஆண்டு ... 20 சதவிகிதம்

மேலும் விரிவாக்கப் பிரிவுகளும் புதிய தொழிற்சாலைகளுக்குண்டான கட்டணச் சலுகைகளைப் பெறும்.

நூறு சதவிகித ஏற்றுமதி நிறுவனங்கள் எதிர்காலத்தில் மின்வெட்டிலிருந்து முழு விலக்குப் பெறும்.

புதிய தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்ளத் தயார் நிலையில் இருக்கும் பட்சத்தில் மூன்று மாதங்களுக்குள் மின் இணைப்பு வழங்கிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

திட்டச் செலவுகள்

1991-92-இல் மூலதன திட்டச் செலவு ரூ.536.99 கோடியாகும். திட்டம் சாராச் செலவு ரூ.54.40 கோடியாகும். இந்த ஆண்டு மூலதனத் திட்டச் செலவு ரூ.573.78 கோடியாக இருக்கும். திட்டம் சாராச் செலவு ரூ.91.07 கோடியாகும்.

1991-92-இல் மின்சார வாரியத்தின் வருவாய் ரூ.1760.71 கோடி. இந்த ஆண்டு இது ரூ.2064.36 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இந்தத் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஓய்வுக் கால சேமநல நிதித் திட்டம் 1992 செப்டம்பர் திங்கள் 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி பணியிலிருந்து ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை ஓய்வு காலச் சேம நல நிதியாக வழங்கப்படும். இந்தத் தொகை ஓய்வு பெற்ற தொழிலாளி இறக்கும் வரை அவருக்கு மாதந்தோறும் வழங்கப்படும்.

ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் தொழிலாளி இறந்துவிட்டால் அவரது வாரிசுகளுக்குத் தொழிலாளி ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுக் காலம் கணக்கிடப்பட்டு, அதுவரை மாதந்தோறும் அவருக்குத் தரப்பட்ட ஓய்வூதியத் தொகை சேம நல நிதியாக வழங்கப்படும்.

தாமாக விரும்பி ஓய்வு பெறும் தொழிலாளர்களைப் பொருத்தவரை அவர்கள் இன்னும் எத்தனை ஆண்டுக்காலம் பணிபுரிய வேண்டுமோ அத்தனை ஆண்டுகளை (எட்டு ஆண்டுகளுக்கு அதிகம் இல்லாமல்) 15 ஆண்டுகளிலிருந்து கழித்த பிறகு வரும் காலத்துக்கு அவர்களுக்கு மாதந்தோறும் இந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

பணிபுரியும்போது ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவரது வாரிசுகளுக்கு தற்போதுள்ள சலுகைகளுடன் 15 ஆண்டுக்காலத்துக்கான ஓய்வூதியம் மாதந்தோறும் வழங்கப்படும்.

பணி நீக்கம் செய்யப்படும் தொழிலாளியைப் பொருத்தவரை அவர் பணி நீக்கம் செய்யப்படும் நாள்வரை இந்தத் திட்டத்தின்கீழ் செலுத்தியுள்ள அவரது பங்குத் தொகையுடன் அதற்கான வட்டித் தொகையும் அவருக்குத் திரும்பத் தரப்படும்.

கூட்டுறவு

கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன், நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாக வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், மத்திய மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைத் தொடங்கிப் பராமரித்து, பொருளாதாரத்தினை மேம்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், 1,416 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 18 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 9 வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கமும், ஒரு பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கமும், ஒரு கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் ஆகக் கூடுதலாக 1,446 கூட்டுறவுச் சங்கங்கள் 30.6.92-இல் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 2,33,906 உறுப்பினர்கள் உள்ளனர்.

ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கெனத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களும் மகளிருக்காகத்தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. விவசாயிகள் மற்றும் நிலமில்லாத கூலிகள் ஆகியோருக்கு, வருவாய் கிடைப்பதற்காக ஆடு

வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற தொழில்களுக்காகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் சங்கங்களின் சொந்த நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன.

டாக்டர் எஸ்.பி. அன்புமணி
இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத் துறை
சென்னை.

ஆடு வளர்ப்புக்கு 1 அலகுக்கு ரூ.8,000 வீதம் கடனுதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு உறுப்பினர்க்கு வழங்கப்படும் ஒரு அலகு என்பது, 20 பெண் ஆடுகளும், 1 ஆண் ஆடும் சேர்ந்தவையாகும். இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு 50 சதவீதம் மானியமாக கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் அரசு உதவி பெற்று வழங்கப்படுகிறது.

உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது தவிர, இறைச்சி வகை உயர்ரக ஆடுகளை இனவிருத்தி செய்யவும், அவற்றிற்காக மருத்துவப் பரிசோதனை, குடற்புழு நீக்கம் போன்ற மருத்துவ உதவிகளும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. தேவைப்படும் உறுப்பினர்களுக்குத் தரமான ஆடுகள் வாங்கி விற்பனை செய்யவும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவி செய்கின்றன. இவற்றிற்கு ஈட்டுறுதிப் பாதுகாப்பும் செய்யப்படுகின்றன.

கோழி வளர்ப்பில், நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு இறைச்சிக்காகத் தனிவகைக் கோழிகளையும், புரதச் சத்து மிகுந்த அதிக

முட்டையிடும் கோழி வகைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு, கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் கடன்கள் வழங்குகின்றன.

150 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பு இன ஆடுகள் அபிவிருத்தித் திட்டம் நடத்தவும், ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளது.

நலிந்த பிரிவினர் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களிலும், வறட்சிப் பகுதியான மாவட்டங்களிலும் பெருமளவில் கோழி வளர்ப்பைச் செயல்படுத்துவதற்குத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் 90 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு ரூ.123 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதியுதவிக்காகத் தமிழக அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

பாசனமும் பயிரும்

● கிடைக்கக்கூடிய நீர் ஆதாரத்தைக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்கும் எண்ணத்தோடு நாட்டில் சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாய் பாசன வசதி மேம்பாட்டிற்காக நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பெரும் தொகை முதலீட்டின் விளைவாகப் பாசன வசதி 1950-51-இல் 22.6 மில்லியன் எக்டேராக இருந்தது. 1991-92-ஆம் ஆண்டு முடிவில் 83.4 மில்லியன் எக்டேராக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் மிகப்பெரிய நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன வேலைகள் முடிக்கப்பட்டு உணவு தானிய உற்பத்தியில் மிகப் பெரிய சாதனை அடைந்ததோடு தன்னிறைவையும் எட்டச் செய்துள்ளது.

இந்திய சுதந்திரத்திற்கு முன் 0.4 சதவிகிதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, சுதந்திரத்திற்குப் பின் பாசன வசதிகளினால் 2.6 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

1945-46-ஆம் ஆண்டில், அதாவது சுதந்திரத்திற்கு முன் பாசனத் திட்டங்களில் செலவிடப்பட்ட ரூ.149 கோடி ரூபாய்க்கு 7 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிற்குப் பலன் கிட்டியது. பிறகு, இப்பலன் குறையத் தொடங்கியது. பல நோக்கு மற்றும் பெரிய பாசனத்திட்டங்களில் செய்யப்படும் முதலீடுகளுக்குத் தக்க பலன் கிடைக்கவில்லை. மாறாக நட்டமே ஏற்பட்டு வந்தது.

• 1987-88-ஆம் ஆண்டில் 1484 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு இழப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் ஆண்டிற்கு ஆண்டு பாசனத்தின் மூலம் ஏற்படும் இழப்பு அரசுக்குப் பெரும் கவலை அளிக்கும் பிரச்சினையாக இருந்து வந்தது. இதை ஆராய்ந்துதான் திட்டக் கமிஷன் பாசனத் தண்ணீருக்கு விலை நிர்ணயிப்பதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பனை எண்ணெய்

● பண்டிகைதோறும் மக்களிடையே, குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பெண்களிடையே புழங்கும் ஒரு சொல் 'பாமாயில்'.

'ரேஷனில் தராங்களா என்ன?' இது பெண்களின் பண்டிகைக் காலக் கேள்வி!

இதனாலோ என்னவோ நம் நாட்டில் 1996-97-ஆம் ஆண்டின் இறுதிக்குள் எண்பதாயிரம் எக்டேர் நிலப்பரப்பில் செம்பனையை வளர்க்க மத்திய அரசு 94 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இப்பயிரில் செய்யப்படும் அதிக முதலீட்டையும் அது பலன்கொடுக்க ஆகும் காலத்தையும் கணக்கில் கொண்டே அரசு உதவித் தொகை வழங்க முன்வந்துள்ளது. முதலாண்டுக்குப் பனங்கன்று வளர்க்க எக்டேருக்கு 3,750 ரூபாய் அதிகமாகவும், அதையடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இடு பொருள்களுக்கு எக்டேருக்கு அதிக அளவில் 12,500 ரூபாய் வழங்கவும் முன்வந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், உற்பத்திக்கான தொழில் நுட்ப மிஷன், இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம், மத்திய உயிரியல் தொழில்நுட்பத்துறை, மத்திய அறிவியல், தொழிலியல் ஆராய்ச்சிக் கழகம், மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியில் உருவாகும் திட்டம் இது. பனை எண்ணெய் தனியார், கூட்டுறவு மற்றும் கூட்டுத்துறையில் உற்பத்தி செய்யப்படும். விதைப் பண்ணைகள் மூன்றும் பனைக் கன்று தோட்டப்பண்ணை பத்தும், செயல்முறை விவசாயப் பண்ணை மூலமாகவும் எக்டேர்களிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து 2000-வது ஆண்டில் நம் நாட்டில் பனை எண்ணெய் உற்பத்தி ஆண்டுக்கு 1.76 இலட்சம் டன்களாக இருக்கும். இது நாட்டின் எண்ணெய்த் தேவையைச் சமாளிக்க உதவும்.

'துவானம்'.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தையும், திருவண்ணாமலை நகரையும் பசுமையானதாகவும், எழிலுடையதாகவும் உருவாக்க, பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தன்னிறைவுத் திட்டமும், ஆதி திராவிட நலத்துறையின் பணிகளும் செவ்வனே செயல்பட்டு வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை வளமாக்கும் பணிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தையும், திருவண்ணாமலை நகரையும் மரக்கன்றுகள் நட்டு பசுமையாக்கி, அழகுபடுத்தும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இச்சீரிய திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. தீனபந்து, [illegible], அவர்கள் தொடங்கி வை[illegible] வட்ட முழுமையாக மரக்க[illegible]றுகள் நடவும், திருவண்ணாமலை நகரில், மற்றும் திருவண்ணாமலை மலைப்பகுதிகளிலும் மரக்கன்றுகள் நடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, திருவண்ணாமலை நகரின் பல்வேறு பகுதிகளில், புங்கன், வேம்பு, புளியன், கொன்றை, அசோகா, இலவன் பஞ்சு, சவுக்கு, சிங்கப்பூர் பனை, முருங்கை, பப்பாளி, தென்னை போன்ற மரக்கன்றுகள் 12,000 நடப்பட்டுள்ளன. நகரின் முக்கியப் பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு அவற்றில் குரோட்டன்ஸ் வகைச் செடிகள் நடப்பட்டு நகருக்கு அழகூட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இச்சீரிய திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு அறிவித்தபடி, ஆறாம் வகுப்புப் பள்ளி மாணவ மாணவிகள் 2000 பேர்களுக்கு, 500 தென்னங்கன்றுகளும், பப்பாளி, முருங்கை போன்ற 1,500 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு உள்ளன. மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை, உணர்த்தும் பொருட்டும் அவர்களது பெயரையே அம் மரக்கன்றுகளுக்கு வைக்கப்பட்டு பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளும் அலுவலர்களும், பொதுமக்களும், மாவட்ட ஆட்சியர் திரு கே. தீனபந்து, அவர்கள் தலைமையில் திருவண்ணாமலை நகர்ப் பகுதியில் அக்டோபர் 7,8 தேதிகளில் 12,000 மரக்கன்றுகள் நட்டு, அனைவருக்கும் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியது பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

பள்ளி, மாணவ மாணவியர்கள் 10,000 பேர்கள் மரம் வளர்ப்பதன் பயன்கள், தேவைகள் ஆகியவற்றை விளக்கிடும் அட்டைகளை ஏந்தி முழக்கமிட்டு, திருவண்ணாமலை நகரில் ஊர்வலமாக வந்து பொது மக்களுக்கு மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார்கள்.

இதைப்போலவே பள்ளி மாணவ மாணவியர், சாரண, சாரணியர்கள், நாட்டு நலத் திட்டப் பள்ளி மாணவர்கள் மிகவும் உற்சாகத்தோடு திருவண்ணாமலை மலைப் பகுதிகளில் 500 அடி உயரத்தில் 2000 மரக்கன்றுகள் நட்டு சாதனை படைத்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டப் பணிகள் நடைபெறும் 1992 அக்டோபர் 7 மற்றும் 8 தேதிகளில் பொதுமக்கள் அனைவருக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும் என அறிவித்து, மரக்கன்றுகள் வழங்கியது இச் சீரிய திட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் அமைந்தது.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1980 ஏக்கரில் 21 இலட்சத்து 60 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலைப் பகுதியைச் சுற்றி 8 ஆயிரம் ஏக்கரில் 1240 புளியமரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை நகரில் ஒரு தெருவில் மரக்கன்றுகள் நட்டால், அந்த மரக்கன்றுகள் அருகில் ஒரு வீட்டில் உள்ள குழந்தையின் பெயரை அந்த மரக்கன்றுக்கு வைத்து, அதை அந்தக் குழந்தையின் பெற்றோரையே பாதுகாக்கும் புதிய திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. மாவட்ட அளவிலும், திருவண்ணாமலை நகரிலும் நடப்படும் மரக்கன்றுகளைப் பாதுகாக்க இரும்புக்

கம்பி வளையம் வைக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், மரக்கன்றுகள் வளர்த்த வகையில் மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங் களுக்கும் மொத்தம் இரண்டு கோடியே பதினாறு இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது. கலசப் பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கிடைக்கும் இப்பங்குத் தொகை பல்வேறு திட்டப் பணிகள் மேற் கொள்ளப் பயன்படுத்தப்படும்.

எனவே, நாட்டுக்கும் வீட்டிற்கும் நன்மைகள் பல பயப்பதோடு இயற்கை வளத்தைப் பெருக்கவல்ல சீரிய திட்டமான மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டத்தில் அனைவரும் ஆவர்த்தோடு ஈடுபட்டு நாட்டில் பசுமைப் புரட்சி செய்து அரசுக்குப் பெருமை சேர்த்து நன்மைகள் பல அடைய பாடுபடுவோமாக!

★ ஜப்பான் நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியம் 23 மகளிர் கூட்டுறவாளர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. மகளிர் பிரச்சினை களை நன்கறிந்த ஆறு வல்லுநர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் இக்குழு வில் இடம் பெற்றுள்ளனர். கூட்டுறவு அமைப்புகளில் மகளிர் பெரும்பகுதி பங்கு பெற ஆலோசனைகளை இக்குழு வழங்கும்.

தன்னிறைவுத் திட்டப் பணிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள போளூர் செங்கம், வேட்டவலம், பெரணமல் லூர் ஆகிய நான்கு பேரூராட்சி களில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத் தின் கீழ் திட்டப்பணிகளை நிறைவேற்ற ரூ.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்டு அரசுக்குப் பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள 11 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட உள்ளன. குப்பை அள்ளத் தற்சமயம் பயன்படுத்தப் படும் மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக மூன்று சக்கரச் சைக்கிள் வண்டிகள் 14 வழங்குதல், குடிநீர் வழங்கும் சிறிய இழுவை டேங்கர் வாங்கவும், தெருவிளக்குகளை அதி கரித்தல், 99 சாலைகள் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், 25 கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல் மற்றும் 3 சமுதாயக் கூடங்கள் கட்டு தல் போன்ற 228 பணிகள் மேற் கொள்ள இந்த நிதி உதவி கோரப் பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சிகளில் குடி நீர்க் குழாய்கள் அதிகரித்தல் மற்றும் பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டத்தின் கீழ் அரசு ரூ.4.50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்தொகையில் தேசூர் பேரூராட்சிக்கு ரூ.2 இலட் சம் வேட்டவலம், கண்ணமங்கலம், போளூர், களம்பூர், வந்தவாசி ஆகிய பேரூராட்சிகளுக்கு ஒவ்வொன்றுக் கும், ரூ.50 ஆயிரம் வீதம் செல விடப்படத் திட்டமிடப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

மேலும், சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு மானியமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி உள்ளது. இத்தொகை செங்கம், போளூர் ஆகிய பேரூராட்சிகளுக்கு ரூ.50 ஆயிரம் வீதம் ஒதுக்கப்பட்டு மொத்தம் 11 பணிகள் நிறை வேற்றத் திட்டமிடப்பட்டு நடை பெற்று வருகின்றன.

சிறுசேமிப்பு சிறப்பு ஊக்கு விப்புத் திட்டத்தில் சிறப்புச் சாதனை புரிந்த வேட்டவலம் பேரூராட்சிக்கு ரூ.50 ஆயிரமும், கண்ணமங்கலம் பேரூராட்சிக்கு ரூ.10,000-மும் அரசு மானியமாகக் கிடைத்துள்ளது. இத்தொகையைக் கொண்டு வேட்ட வலத்தில் ஒரு சிற்றுண்டிக் கடை கட்டும் பணியும், கண்ணமங்கலத் தில் குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணியும் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் நலப் பணிகள்

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற் றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகை யில் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்த 1992-93-ஆம் நிதியாண் டில் ரூ.2,31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள 56 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளி களில் பயிலும் ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்த கங்கள் வழங்கவும் மற்ற பிற பள்ளி களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடக் கிறிஸ்தவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்க மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 41 இலட்சம் இந்த நிதியாண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மாணவ மாணவியர் களின் மொத்த எண்ணிக்கை 24,830 ஆகும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர், மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ மாணவியர்களுக்கு மேல் நிலைக் கல்வி பயில இந்த நிதி ஆண்டில் ரூ.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வரு கிறது. ஆதிதிராவிடர் நலத்துறை யின் சார்பில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூ.2 கோடியே 31 இலட்சத்தில் கல்விப் பணிகளுக்காக மட்டும் ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப் பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர்களுக்கான மத்திய சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ், 100 இந்து ஆதிதிராவிட இளைஞர் களுக்கு இராணுவம் மற்றும் காவல் துறையில் சேர, செங்கம் வட்டம் பரமனந்தல் கிராமத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூபாய் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும். இம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் சார்பில் 18 மாணவர் விடுதிகளும், 12 மாணவியர் விடுதிகளும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதியில் 1,229 மாணவர்களும், 649 மாணவியர் களும் தங்கிப் படித்து வருகிறார்கள்.

பா. நாராயணமூர்த்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

மது மனிதர்க்குப் பகை

—கவிஞர் பூங்கோவன்

ஆழ்கடலில் வீழ்த்திவிடும்; ஆற்றல் போக்கும்;
அறியாமை இருளினிலே மூழ்க வைக்கும்;
சூழ்கின்ற இன்னல்கள் கடுமை யாக்கும்;
சுற்றத்தைப் புறக்கணிக்கும்; தூது கவ்வும்;
ஏழ்மையாக்கும்; இரக்கின்ற நிலைஉண் டாக்கும்;
எள்ளிநகை யாடுவோர்க்கோ இடம ளிக்கும்;
பாழ்மனமே! போதையான 'மது'வைக் கண்டால்
பகைவனென்றே எண்ணிஉடன் விலகிப் போ!போ!

'மதுவேண்டும்' என்பார்கள் செல்வம் போக்க!
மடமையிலே வாழ்க்கைதனை தொலைத்து மூழ்க!
'மதுவேண்டும்' என்பார்கள் கல்வி நீக்க!
மண்ணிலுள்ள பெருமைகளை ஒழித்துக் கட்ட!
'மதுவேண்டும்' என்பார்கள் வறுமை யாக்க!
மயங்கிவீழ்ந்து சேற்றினிலே புதைந்து போக!
'மதுவேண்டும்' என்பார்கள் மானம் போக்க
மரியாதை போன்றவறறை விட்டொ ழிக்க!

அறநெறியும் 'ஆற்றலெலாம்' அழிந்து போக
அன்புமனம் பாசமெலாம் குலைந்து போக
உறவினர்கள் உற்றார்கள் தொடர்பு போக
உண்மைநிலை என்னவென்றே மறந்து போக
திறமைநீங்கிச் சோம்பலிலே உழன்று போக
தேசத்தைக் கூசாமல் ஏசிப் பேச
மறதியினால் மனைவிமக்கள் விட்டுப் போக
'மதுவேண்டும்' என்பார்கள் இவற்றிற் காக?

போதை தரும் மதுவினாலே இன்ப முண்டோ?
பொல்லாத தீமையன்றோ வந்து சேரும்!
பாதையிலே முள்ளிருந்தால் களைதல் போல
பண்புதனைக் குலைக்கின்ற மதுவொ ழிப்போம்!
வாதுதரும் விடமென்றே ஒதுக்கி வைப்போம்;
வாழ்நாளை அழிக்கின்ற அரக்க னென்போம்!
மோதுகின்ற உணர்வுகளை நிறுத்தி வைத்து
முதுமையிலும் இளமையோடு திகழ்ந்து வாழ்வோம்!

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	6.25% w.e.f. 24.4.92
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	12.25%
	For 271 DAYS and above but upto 364 days	12.00%
	For 1 YEAR and above	12.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

இந்திரா காந்தி வாழ்விலே...

1917 - நவம்பர் 19. இந்திரா பிறப்பு.

1922 - இந்திரா அகமதாபாத்துக்கு வந்தார். அண்ணல் காந்தியடிகளின் ஆஸ்ரமத்தில் தங்கினார்.

1923 - டிசம்பர், இந்திரா மாடர்ன் பள்ளியில் சேர்ந்தார். கமலா நேருவுக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்தது. கமலா நேரு நோய்வாய்ப்பட்டார்.

1926 - மருத்துவச் சிகிச்சைக்காகக் கமலா-நேரு சுவிட்சர்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் இந்திராவும் சென்றார். இந்திரா இண்டர்நேஷனல் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்திரா, ரோமன் ரோலண்ட், ஐன்ஸ்டின், சர் ஜகதீஸ் சந்திரபோஸ், எர்னஸ்ட் டாலர், ரோஜர் பிட்வின் போன்றவர்களைச் சந்தித்தார்.

1927 - தந்தை நேருவுடன் இந்திரா ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்றார்.

1927 - நேரு குடும்பம் இந்தியா திரும்பியது. இந்திரா அலகாபாத் செயிண்ட் மேரிஸ் கான்வெண்டில் சேர்க்கப்பட்டார்.

1928 - ஜவகர்லால் தன் மகளுக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். இவைதான் பிற்காலத்தில் 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற நூலாக வெளி வந்தன. இந்திரா, காந்தியடிகளின் சர்க்கா சங்கத்தைத் தொடங்கினார். மோதிலால் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக ஜவகர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1929 - ஜவகர்லால் நேரு காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1930 - ஏப்ரல் 6

மோதிலால் நேரு தனது மாளிகையைக் காங்கிரஸ் கட்சிக்கு அளித்தார். அது சுயராஜ் பவன் என்ற புதுப் பெயர் பெற்றது. இந்திரா அலகாபாத்தில் வானர சேனை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். சிறுவர் சிறுமிகளைக் கொண்ட அந்த அமைப்பு காங்கிரஸ் ஊழியர்களிடையே துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் செல்வது, தகவல்களைக் கொண்டு செல்வது, கொடிகளைத் தயாரித்து அளிப்பது போன்ற பணிகளைச் செய்தது.

1930 - அக்டோபர் 26

ஜவகர்லால் நேரு இரண்டாவது முறையாகத் தொடர்ந்து தன் மகள் இந்திராவுக்குக் கடிதங்கள் எழுதினார். இந்தக் கடிதங்கள் 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் நாள் வரை தொடர்ந்து எழுதப்பட்டன. இவைதான் 'உலகச் சரித்திரம்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன.

1930 - நவம்பர் 14

நேருவின் பிறந்தநாள் ஊர்வலத்திற்கு இந்திரா காந்தி தலைமை வகித்தார். நேரு சிறையிலிருந்ததால் அவரது பேச்சைக் கமலா நேரு படித்தார்.

1931 - ஜனவரி 1

கமலா நேரு கைது செய்யப்பட்டார்.

1931 - பிப்ரவரி 2

மோதிலால் நேரு மறைவு.

1931 - ஜூன்

இந்திரா புனேயில் உள்ள பீப்பிள்ஸ் ஓன் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

1931 - டிசம்பர்

ஜவகர்லால் நேரு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

1932 - பிப்ரவரி

புத்தகங்களை விரும்பிப் படிப்பது போல், இந்திரா காந்தி விளையாட்டு களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். மலையேறுதல் முதல் இந்திய நடனம் வரை அனைத்தையும் கற்றார்.

1932 - செப்டம்பர் 18

காந்தியடிகளை, அவர் இருந்த சிறைக்குச் சென்று சந்தித்தார் இந்திரா காந்தி.

1924 - ஜூலை - 1935 ஏப்ரல்

தாகூரின் சாந்திநிகேதனில் இந்திரா காந்தி படித்தார்.

1935 - மே

கமலா நேரு மருத்துவச் சிகிச்சைக் காக ஐரோப்பா சென்ற பொழுது இந்திரா காந்தியும் உடன் சென்றார்.

1936 - பிப்ரவரி 28

லாவ்ஸனேயில் கமலா நேரு இறந்தார்.

1937 - இந்திரா காந்தி ஆக்ஸ்போர்டு பல் கலைக்கழகத்தில் படித்தார். அப் பொழுதுதான் அங்குப் படித்துக் கொண்டிருந்த பெரோஸ் காந்தி அவ ருக்கு நண்பரானார்.

1941 - இந்திராவும், பெரோஸ் காந்தியும் கப்பலில் தாயகம் திரும்பினர். வரும் பொழுது இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

1942 - மார்ச் 26

இந்திரா காந்தி-பெரோஸ் காந்தி திருமணம்.

1942 - ஆகஸ்ட் 7

பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் ஜவகர்லால், பெரோஸ் காந்தி, இந்திரா காந்தி மூவரும் கலந்து கொண்டனர்.

1942 - செப்டம்பர் 10

அலகாபாத்தில் இந்திரா காந்தி பேசிய கூட்டத்தில் பிரிட்டிஷ் இரா ணுவ வீரர்கள் சூழ்ந்து கொண்டு அவரைக் குறிபார்த்துச் சுட முனைந் தனர். பெரோஸ் காந்தி குறுக்கிட்டுத் தடுத்தார். இந்திரா காந்தியும் பெரோஸ் காந்தியும் கைது செய்யப் பட்டு, நைனி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

1943 - மே 13

வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ் சத்தின் காரணமாக இந்திரா காந்தி விடுதலை செய்யப்பட்டார்.

1944 - ஆகஸ்ட் 20

இந்திரா காந்தியின் முதல் ஆண் குழந்தை ராஜீவ் பிறப்பு.

1946 - டிசம்பர் 14

இந்திரா காந்தியின் இரண்டாவது ஆண் குழந்தை சஞ்சை பிறப்பு.

1947 - ஆகஸ்ட் 15

நாடு விடுதலை அடைந்தது.

1947-48

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி, டில்லியில் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிக்கும் பணிகளில் இந்திரா காந்தி ஈடுபட்டார்.

1948 - அக்டோபர்

வெளிநாடுகளுக்குத் தன் தந்தை ஜவகர்லால் நேருவுடன் பயணம் மேற் கொண்டார்.

1953 - ஏப்ரல் 16

இந்தோனேஷியா பாண்டுங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

1953-54 - இந்திரா காந்தி முதல் தடவையாக சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார்.

1955 - ஏப்ரல்

பாண்டுங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

1955 - செப்டம்பர் 19

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு உறுப்பினராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.



★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!

உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

கல்வியின் பயன், பெருந்திரளான மக்களுக்குப் போய்ச் சேர்வதோடு, பின் தங்கிய மற்றும் அடித்தள மக்களின் நிலையை மேம்படுத்து வதற்காகவும் இருந்தால்தான் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

— இந்திரா காந்தி

1955 - செப்டம்பர் 22

அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட் டித் தலைவராக இந்திரா காந்தி தேர்ந் தெடுக்கப்பட்டார்.

1958 - பிப்ரவரி 23

காங்கிரஸ் கட்சியின் பார்லி மெண்டரி போர்டுக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1959 - பிப்ரவரி 8 - 1960 ஜனவரி 18.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்திரா காந்தி பணி யாற்றினார். மகாராஷ்டிர மாநிலம், கேரள மாநிலம் அரசியல் நிலைமை களை அறியச் சுற்றுப் பயணம் மேற் கொண்டார்.

1959 - டிசம்பர்

கேரள மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பொறுப்புகளை இந்திரா காந்தி கவனித்துக் கொண்டார்.

1960 - செப்டம்பர் 8

இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி மறைவு.

1960 - நவம்பர் 18

பாரிஸிலுள்ள யுனெஸ்கோ நிறு வனத்தின் நிருவாக வாரிய உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இந்திரா காந்தி.

1961 - ஆகஸ்ட்

இந்திரா காந்தி கென்யா, உகாண்டா, தான்சானியா, இரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1963 - ஜனவரி 19

மத்திய மக்கள் குழுத் தலைவராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1963 - நல்லெண்ணப் பயணமாகப் பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திரா காந்தி சென்றார்.

1964 - மே 27

பிரதமர் ஜவகர்லால் நேரு மறைவு.

1964 - ஜூன்

புதிய பிரதமர் லால்பகதூர் அமைச் சரவையில் செய்தி- ஒலிபரப்புத் துறை யில் அமைச்சராகத் திருமதி இந்திரா காந்தி நியமிக்கப்பட்டார்.

1964 - ஆகஸ்ட் 20

மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1966 - ஜனவரி 10

தாஷ்கண்டில் லால்பகதூர் சாஸ்திரி மரணமடைந்தார்.

1966 - ஜனவரி 19

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அக் குழுவின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1966 - ஜனவரி 24

இந்தியப் பிரதமராக இந்திரா காந்தி பதவி ஏற்றார்.

1967 - பிப்ரவரி

பொதுத்தேர்தலில் ரே-பெரேலி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத் திற்கு இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1967 - மார்ச் 13

இந்திரா காந்தி, இரண்டாவது முறை யாகப் பிரதமராகப் பதவியேற்றார்.

1969 - ஜூலை 19

14 பெரிய வங்கிகளை நாட்டுடைமை யாக்கினார் இந்திரா காந்தி.

1970 - டிசம்பர் 27, இந்திரா காந்தியின் ஆலோசனையின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

1971 - மார்ச் 1-10

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றது.

1971 - மார்ச் 18

இந்திரா காந்தி, மூன்றாவது முறை யாகப் பிரதமராகப் பதவி ஏற்றார்.

1975 - ஜூன் 26

குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

1977 - மார்ச் 21

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியும், காங்கிரஸ் (இ) கட்சியும் தோற்றார்கள்.

1977 - மார்ச் 21

பிரதமர் பதவியை இந்திரா காந்தி ராஜினாமா செய்தார்.

1978 - மே 15

சிக்மகலூர் தேர்தலில் இந்திரா காந்தி வெற்றி பெற்றார்.

1979 - ஜூலை 15

திரு. மொரார்ஜி தேசாய் அமைச்சரவை பதவி விலகியது.

1979 - ஜூலை 18

திரு. சரண்சிங் பிரதமரானார்.

1979 - ஆகஸ்டு 20

சரண்சிங் ராஜினாமா செய்தார்.

1979 - டிசம்பர் 15

குடியரசுத் தலைவர் திரு. என். சஞ்சீவரெட்டி பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

1980 - ஜனவரி 14

காங்கிரஸ் (இ) தேர்தலில் வெற்றி பெற்றது. திருமதி இந்திரா காந்தி ரேபரேலி, மேடக் இரு தொகுதிகளில் இருந்தும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980 - ஜனவரி 15

திருமதி இந்திராகாந்தி நான்காவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றார்.

1980 - ஜூன் 23

திரு. சஞ்சய்காந்தி, எம்.பி. விமான விபத்தில் இறந்தார்,

1983 - மார்ச்

அணி சேரா இயக்கத்தின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி டில்லி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1984 - அக்டோபர் 31

இந்திரா காந்தி இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு நடந்து செல்லும் போது, பாதுகாப்புக் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வேதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

தவப் புதல்வி

—பி.வி. கிரி

பாரதி பாடிய
புதுமைப் பெண்ணாய்
பாரதம் உயரப்
பாடு பட்டவர்!

சாந்தி நிகேதனின்
சிறந்த மாணவி
காந்தி வழிநின்று
கடமை புரிந்தவர்!

விடுதலைப் போரில்
வீரம் காட்டி
அடிமைத் தளையை
அறுத்த வீராங்கனை!

இதயம் கவரும்
இருபது அம்சம்
உதயம் இவரால்!
உயர்ந்தோர் பலராம்!
மேடை தோறும்
முழங்கிய சிங்கம்
சோடையே போகாத
சொக்கத் தங்கம்!

பண்டித நேரு
பாருக் களித்த
எண்டிசைப் புகழ்
இணையிலாத் தலைவி!

உலக மெங்கணும்
உலா வந்தவர்
திலகம் போலே
திகழ்ந்த பேரொளி!

தன்னல மின்றித்
தாய் நாட்டுக்கே
தன்னையே ஈந்த
தவப் புதல்வி!

கலை உலகின் முழு நிலவு

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

—புலவர் தமிழ்ப்பித்தன்

எந்தக் கதையைச் சொன்னாலும் அதன் வாயிலாக ஒரு கருத்து- நீதி- வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டும் என்பதில் கலைவாணர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார்.

அவர் கலை உலகில் காலடி எடுத்து வைத்து, நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கிய காலத்திலும் சரி, திரைப்பட உலகில் பவனிவந்து, வெள்ளித்திரையில் முக்கியமான வேடங்களில் காட்சி தந்த காலத்திலும் சரி, நீதி நெறிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதில் முனைப்பாகவே இருந்தார்.

திரைப்படத்தில் அவர் பங்குபெறும் காட்சிகளுக்குரிய கதை அமைப்பு, உரையாடல்கள் ஆகியவற்றை அவரே அமைத்து வந்தார். பகுத்தறிவுக் கருத்துக்களை உரையாடல்களில் புகுத்துவதும்- மூட நம்பிக்கைகளுக்குச் சவுக்கடி கொடுப்பதும் அவரது வழக்கம். பிறர் மனம் புண்படாத வகையில், சீர்திருத்தக் கொள்கைகளைத் திரைப்படங்களில் உலாவரச் செய்த பெருமை அவருக்கு உண்டு.

இந்நாளில் சமூகக் கதைகள் பொது மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெறுகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சமூகக் கதைகள் அவ்வளவாக வெளிவரவில்லை. பெரும்பாலும் புராணக் கதைகளே திரைப்படங்களாக வெளிவந்தன. அதனால் புராணப் படங்களில் தான் அவரும் நடிக்க வேண்டியிருந்தது. என்றாலும், அந்தப் படங்களிலும் சீர்திருத்தக் கருத்தை- பகுத்தறிவுக் கொள்கையை மிக எளிதாக- வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல- எடுத்துச் சொல்லி விடுவார். இந்த வகையில் அவருக்கு இணை அவரேதான்!

நகைச்சுவைக் கலைஞன் என்பவன் உலகுக்கு அறிவூட்டத் தக்கவன் என்று அவர் பொதுமேடைகளில் குறிப்பிடுவதுண்டு. விஜயநகர மன்னரான கிருஷ்ண தேவராயரின் அவையில் அங்கம் வகித்த தெனாலி ராமனின் கதையைச் சான்று காண்பிப்பார். தெனாலிராமன் பற்பல சமயங்களில் நகைச்சுவையின் வாயிலாக மன்னருக்கு அறிவுரை வழங்கிய செய்திகளை எடுத்துரைப்பார் கலைவாணர்.

நமது தமிழ்த் திரைப்படங்கள் அந்நாளில் உருவாக்கப்பட்ட விதம் குறித்துப் பாவேந்தர் பாரதிதாசன் ஒரு முறை குறிப்பிட்டார்; அது வருமாறு:

பரமசிவர் அருள்புரிய,
வந்துவந்து போவார்
பதிவிரதைக் கின்னல்வரும்;
பழையபடி தீரும்

பகுத்தறிவுக்கு ஓர் அங்குலம் கூட இடம் தராத அளவுக்குப் படங்களை உற்பத்தி செய்து கொண்டிருந்த கலை உலகைத் தனது கூர்மையான பார்வையால் நோக்கினார் கலைவாணர். பகுத்தறிவுப் பிரச்சாரத்தை - சீர்திருத்தக் கொள்கைகளை- திரைப்படத்திலே துணிவோடு எடுத்துச் சொன்னார். ஒவ்வொரு படத்தின் வாயிலாக ஒவ்வொரு கருத்தை- நீதியை வலியுறுத்தினார். இருண்ட வீடாகக் காட்சி தந்த பட உலகத்திற்கு வெளிச்ச விருந்தை வாரி வாரி வழங்கினார். அவற்றில் ஓரிரண்டை இங்கே நினைவு கூர்வோம்.

சாலிவாஹனன் என்றொரு திரைப் படம். ரஞ்சன் கதாநாயகனாக நடித்து 1944-இல் வெளிவந்த அந்தப் படத்தில் கலைவாணர் நகைச்சுவைப் பாத்திரத்தை ஏற்றிருந்தார்.

தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண் ஒருத்தியைக் காதல் செய்கிறார்; அவளும் காதலிக்கிறாள்; காதல் வளர்கிறது; அந்தப் பெண்ணின் வயிற்றில் சிசுவும் வளர்கிறது. இந்நிலையில் அந்தப் பெண், தான் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவரைக் காதல் செய்து விட்டோமே, அது கைகூடாதே என்று நினைத்துத் தன்னை மாய்த்துக் கொள்ள நினைக்கிறாள்- அதாவது தூக்குக் கயிற்றில் தொங்குவதற்குத் திட்டமிடுகிறாள். அந்தத் திட்டத்தை அறிந்து கொண்ட கலைவாணர், தக்க சமயத்தில் அந்த இடத்திற்குச் சென்று தடுத்தாட் கொள்கிறார்.

"நான் தாழ்ந்த சாதி" நீங்க உசந்த சாதி, அதுனாலெ நம்ம காதல் நிறைவேறாது" என்று அந்தப் பெண், கண்ணீர் வடித்தவாறு தெரிவிப்பாள்.

"அதென்ன ஒசந்த சாதி, தாழ்ந்த சாதி" என்று கேட்டு விட்டு, "ஆமா இந்த உப்பு இருக்குதே அதை நான் வாயில போட்டா கரிக்குது, ஒனக்கு எப்படி இருக்குது?" என்று வினவுவார்.

"எனக்கும் கரிக்கத்தான் செய்யுது"- காதலி பதில் தருவாள்.

"சரி, இந்த மிளகாயைக் கடிச்சா எனக்கு உறைக்குது; ஒனக்கு...?"- அப்பாவிபோலக் கேட்பார்.

"எனக்கும் உறைக்கத்தான் செய்யுது"- காதலியின் பதில்.

"நீ உப்பைத் தின்னாலும் கரிக்குது, நான் தின்னாலும் கரிக்குது. நீ மிளகாயைக் கடிச்சாலும் உறைக்குது, நான் கடிச்சாலும் உறைக்குது! இதில எல்லாம் ஒரு வித்தியாசமுமில்லையே! அப்புறம் ஒசந்த சாதி, தாழ்ந்த சாதின்னு என்ன வித்தியாசம்" என்று வினாத் தொடுத்து, சமூகத்தில் இருந்து வந்த சாதி வேற்றுமை என்னும் இழிதன்மைக்குச் சாட்டையடி கொடுத்தார் கலைவாணர்.

சிவகவி என்னும் திரைப்படத்தில் (1943) கதாநாயகனான அம்பலவாணன் (தியாகராஜ பாகவதர்) காளியின் அருள் பெற்றுப் பொய்யாமொழி என்னும் பெயரும் பெற்றுக் கவிபாடும் திறமை எய்துகிறான். கதாநாயகனுடன் ஒரே குருகுலத்தில் கல்வி பயிலும் சரவண முத்து (கலைவாணர்) என்பவனும் காளி கோவிலுக்குச் சென்று வரம் கேட்க முனைகிறான். தனது நண்பன் ஒருவனையும் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். சரவண முத்துவின் நோக்கம் உணர்ந்து கொண்ட அந்த நண்பன் அவனை எள்ளி நகையாடுகிறான்.

''உனக்கெல்லாம் காளி வரம் கொடுக்க மாட்டாப்பா'' என்கிறான் நண்பன்.

''ஏனப்பா கொடுக்க மாட்டா?'' என்று கோபத்துடன் வினவுகிறான் சரவணமுத்து.

''நீ இன்னிக்குக் குளிக்கவே இல்லை''- நண்பன் காரணம் கூறுகிறான்.

''குளிக்கிறதுக்கும் சாமி வரம் கொடுக்கிறதுக்கும் சம்பந்தமே இல்லப்பா! தெரிஞ்சுக்கோ!'' என்று தெரிவிக்கும் கலைவாணர் அடுத்தொரு விளக்கத்தை வழங்குகிறார்.

''நித்தம் நித்தம் நீராடி
நெடுமால் அருளைப் பெறலாமேல
தத்தும் தவளை மீன்களுமத்
தனிப்பே றடைய வேண்டாவோ

அப்படின்னு ஒரு கவிஞர் பாடியிருக்கிராரு.

தவளை, மீனு, ஆமை இதுகள்லாம் எப்பப்பார்த்தாலும் தண்ணீரிலதானே கெடக்குதுக! அதுகளுக்கு வரமா கெடைக்குது'' என்று வினாத்தொடுத்து, அரியதொரு உண்மையைச் சுட்டிக்காட்டி 'உடல் சுத்தம் முக்கியமல்ல, உள்ளச் சுத்தம்தான் முக்கியம்' என்னும் கருத்தை மிக நுட்பமான விதத்தில் எடுத்துக் கூறுவார்.

சிவகவி புராணக் கருத்தமைந்த படம்; புராணப் பாத்திரங்கள் இடம் பெற்ற படம்; அந்தப் படத்தில் 20-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும்- நாஞ்சில் நாட்டவருமான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை வரிகளை எடுத்தாண்டு, அவரிடம் தனக்கிருந்த பேரன்பைத் தக்க வகையிலே நிலைநாட்டி விட்டார் கலைவாணர்.

கடவுளின் பெயரைச் சொல்லிச் சமுதாயத்தில் எவரையும் ஏமாற்றுகிறார்கள்; எந்தத் தவற்றையும் செய்கிறார்கள். இந்த இழிநிலையை அகற்ற வேண்டும் என்ற கருத்தைப் பல படங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

மனோன்மணி என்னும் திரைப்படத்தில் (1942) இந்தக் கருத்தை ஒரு துணைக் கதையாகவே உருவாக்கி, நகைச்சுவையை வழங்கி- அதன் வாயிலாகப் பகுத்தறிவு விருந்தை அளித்தார்.

வாழ்க்கையை வெறுத்த மணி என்பவன், துறவியாகிப் பிச்சை எடுக்கிறான். அப்போது ஒரு செல்வந்தரின் வீட்டு வேலைக்காரி ஒருத்தியைக் கண்டு காதல் கொள்கிறான். அந்த விநாடி முதல் சந்நியாச வாழ்வைத் துறந்துவிட்டு சம்சார வாழ்வில் ஈடுபடத் துடிக்கிறான். அந்தப் பெண்ணை அடைவதற்குரிய வழியைச் சிந்திக்கிறான். அவள் ஒரு செல்வந்தரின் மகள் என்பதையும் பின்னர் அறிந்து கொள்கிறான்.

ஒருநாள் பகல் வேளை. அந்தப் பெண்ணின் தந்தை தன் வீட்டு எருமையை மேய்ச்சலுக்கு அனுப்பி, பின்னர் வீட்டுக்கு இழுத்துச் செல்லும்போது, மணி அந்த எருமையை அவிழ்த்து விட்டுவிட்டு, அந்தக் கயிற்றிலே தன்னை இணைத்துக் கொள்கிறான். செல்வந்தர் கயிற்றை இழுக்க- அது மிகவும் கடினமாக இருக்க- உடனே அவர் திரும்பிப் பார்க்க- அங்கே மாட்டைக் காணோம்; மனிதன் நிற்கிறான்.

''அய்யா உங்களால் இன்று நான் சாப விமோசனம் பெற்றேன்; மாடாக இருந்த நானே மனிதனாகிப் போனேன்! நான் வருகிறேன்!'' என்று சொல்லிப் புறப்படுகிறான் மணி! செல்வந்தர் வியக்கிறார்; என்ன செய்தி என விசாரிக்கிறார். ''பகவான் கிருஷ்ணரின் சாபத்தால் மாடாக இருந்ததாகவும், இன்று செல்வந்தரால் விமோசனம் பெற்றுவிட்டதாகவும், தான் தேவலோகத்தைச் சேர்ந்தவன் என்றும் பொய் சொல்கிறான். அதைக் கேட்ட அந்தச் செல்வந்தர் வியப்படைந்து, மணியைத் தன் வீட்டுக்கு வருமாறு வேண்டி, அழைத்துச் சென்று, மகளிடம் அறிமுகம் செய்து வைக்கிறார். தனது வீட்டிலேயே தங்க வேண்டும் என்றும் வேண்டுகிறார். மணிப்பண்டாரம் ஒப்புக் கொள்கிறான். எல்லையற்ற மகிழ்ச்சியுறுகிறான்.

இப்படியே சில காலம் செல்ல, செல்வந்தரின் மாடு ஒரு நாள் திரும்பிவந்து விடுகிறது. மணிப் பண்டாரத்தின் குட்டு உடைகிறது; உண்மையை அறிந்த செல்வந்தர் துடிக்கிறார்; வெடிக்கிறார்; 'வீட்டை விட்டு வெளியே போ! என அவனைத் துரத்தி அடிக்கிறார். அப்பேரது அவரது மகள், ''அப்பா அவரை அனுப்ப வேண்டாம்; அனுப்பினால் நானும் அவருடனேயே போய் விடுவேன்'' என்று உறுதியுடன் கூற, வேறு வழியின்றி அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார் செல்வந்தர்.

பொய் சொன்னால் மக்கள் கொஞ்சங்கூட யோசித்துப் பார்க்காமல், ஏமாந்து விடுகிறார்கள் என்ற கருத்தை எடுத்துரைத்துடன், காதல் திருமணம் நாட்டில் நடைபெற வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார் கலைவாணர்.

அறிவியல் கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர் கலைவாணர்- 'நல்லதம்பி' என்னும் படத்தில் (1949) அறிவியல் வளர வேண்டும் என்னும் கருத்தை உடுமலை நாராயண கவியைக் கொண்டு பாடலாக உருவாக்கி- முழங்குகிறார். பாடலின் வடிவமைப்புதான். கவிராயரின் பணி; பாடலுக்குரிய கருத்துக்களை வழங்கியவர் கலைவாணர் தான்.

தன் மனைவியிடம் தெரிவிப்பது போல் அமைந்த அந்தப் பாடல் வருமாறு.

விஞ்ஞானத்தை வளர்க்கப் போறண்டி
—மேனாட்டாரை
விருந்துக் கழைச்சுக் காட்டப்
போறண்டி

தஞ்சாவூரு ஏட்டை நிறுத்தி
தலைகீழா பாடம் படிச்சு
பொஞ்சாதி புருஷன் இல்லாமெ
புள்ளையும் குட்டியும்
பொறக்கிறாப்புலே. (விஞ்)

தந்தை பெரியார் 1943-இல் 'இனி வரும் உலகம்' என்ற நூலில் எழுதிய கருத்தைத்தான் 'பொஞ்சாதி புருஷன் இல்லாமெ புள்ளையும் குட்டியும் பொறக்கிறாப்புலெ' என்று கூறுகிறார் கலைவாணர். இன்று உலகப் புதுமையாகத் திகழும் Test ube baby என வழங்கப்படும் சோதனைக் குழாய்க் குழந்தையைத்தான் கலைவாணர் இந்தப் பாடலில் சுட்டிக் காட்டுகிறார். அறிவியல் வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வம் இந்தப் பாடல் வரிகளால் பளிச்சென விளங்குகிறது.

பாடலின் அடுத்த வரிகள் பண்பிலே புடம்போட்டு எடுக்கப்பட்டவை; அவை வருமாறு

அஞ்ஞானத்தை அழிக்கப் போறேண்டி
—அணு சக்தியாலே
ஆயுள்விருத்தி பண்ணப் போறேண்டி
அடுத்த நாட்டுக் காரன்போல
ஆளைக் கொல்லாமெ- ஊரைப்
பாழு பண்ணாமெ-தீமை (அஞ்ஞான)

அணு ஆற்றலை எரிசக்திகுண்டாக ஆக்கி- ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசிமா- நாகசாயி நகரங்களில் அதனைப் போட்டு அன்றைக்கு வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்ததுடன், இன்றைக்கு வாழ்ந்துவரும் தலைமுறையினருக்கும் பாதிப்பை ஏற்படுத்திய பாதகர்களின் தீய செயலை எண்ணினால், மனித சமுதாயமே நடுநடுங்குகிறது. அதனால்தான் 'ஆளைக் கொல்லாமெ- ஊரைப் பாழு

பண்ணாமெ - ஆக்க வேலைக்கு அணு சக்தியைப் பயன்படுத்த வேண்டும்' என்ற நீதியை- இந்தப் பாடலில் தெரிவிக்கிறார் கலைவாணர்.

கலைவாணர் சகல கலாவாணர்; அவர் பாடுவார்; ஆடுவார்; நடிப்பார்; நடிக்க வைப்பார்; எழுதுவார்; எழுத வைப்பார்; இயக்குவார்; மேடையில் உரை ஆற்றுவார்; மக்களை மகிழ வைப்பார். வில்லிசைப் பாடலால் காந்தியின் கதையைப் பரப்புவார்; ஹரிகதா காலட்சேபம் செய்யும் பாகவதர்களைப் போல, கதா காலட்சேபமும் செய்வார்.

வெறும் கதையை மக்கள் மன்றத்தில் சொல்லித் தனது காலட்சேபத்தை நடத்த அவர் விரும்பியதில்லை. கல்வியினால் ஒருவன் உயர்வடைய முடியும் என்னும் கருத்தை உலகுக்கு உணர்த்தும் வகையில், கிந்தனார் கதா காலட்சேப நிகழ்ச்சியை, பட்டி தொட்டிகளிலும் நகரங்களிலும் வெற்றிகரமாக நடத்தி, எல்லாத் தரப்பு மக்களின் இதயங்களையும் கவர்ந்தார்.

நகைச்சுவை மன்னர் என்றும் கலைவாணர் என்றும் சிறப்புப் பெயர்களை மக்கள் மன்றத்திடமிருந்து பெற்ற என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள், 1934-இல் முதன் முதலாக சதிலீலாவதி என்றும் படத்தில் நடித்தார். அவரது கடைசிப் படமான அரசிளங்குமரி (1961-இல்) அவரது மறைவுக்குப் பின்னர் வெளிவந்தது. ஏறக்குறைய 150 படங்களுக்கு மேல் நடித்திருக்கும் அவர் கலை உலகின் முழுநிலவு என விளங்கினார்.

கலை உலகில் கருத்துக்களை வாரி வாரி வழங்கியது போல தனது வாழ்க்கையிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பணத்தை வாரி வாரி வழங்கியிருக்கிறார். (அந்த நிகழ்ச்சிகளையே ஒரு நூலாகப் படைக்கலாம்). கலியுலகக் கர்ணன் என்று பல பெருமக்களாலும் அவர் பாராட்டப் பெற்றிருக்கிறார்.

தியாகராய நகரில் வாணி மகாலுக்கு அருகில் 14.1.1969 அன்று கலைவாணரின் உருவச் சிலையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள். உலகத்திலேயே ஒரு நடிகருக்கு எழுப்பப் பெற்ற முதற் சிலை இதுதான். நகைச்சுவைத் துறையில் தொடக்கத்தில் மேல்நாட்டு நடிகரான சார்லி சாப்ளினைக் கலைவாணர் பின்பற்றியதுண்டு. அந்த சார்லி சாப்ளினுக்கு அவரது 92-வது பிறந்த நாளையொட்டி இலண்டன் வெஸ்டர் சதுக்கத்தில் 1981 ஏப்ரல் 16-ஆம் நாளில் சிலை எழுப்பப் பட்டது. ஆங்கிலேயர்கள் தமது நாட்டு நகைச்சுவை நடிகருக்குச் சிலை அமைப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் தான் பெற்ற நகைச்சுவை திலகம், கலை உலகின் முழுநிலவு கலைவாணருக்குச் சிலை எழுப்பி நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.!

அன்னை தெரசாவுக்கு விருது

உலகின் உயர்ந்த விருதான நோபல் விருதினைப் பெற்றவரான, அன்னை தெரசாவுக்கு 'இந்தியாவின் தவப்புதல்வி' என்ற விருதினை 8.11.'92 அன்று புதுடெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் வழங்கினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பூட்டா சிங் தலைமையில் இயங்கும் பாரத் ஏக்தா அந்தோபன் என்ற அமைப்பின் சார்பில் இந்த விருது வழங்கப்பட்டது.

கனவு நனவாகிறது:



ஏழை எளியோருக்கு எண்ணிலா வீடுகள்!

—அ. கனகசபாபதி
பதிவாளர் (வீட்டுவசதி),
சென்னை.

தமிழ்நாட்டில் செயல்படும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. பதிவாளரின் கீழ் ஒரு இணைப்பதிவாளர், துணைப் பதிவாளர் நேர்முக அலுவலர் மற்றும் இதரப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் மாநிலத்தில் துணைப்பதிவாளர் அளவில் நிர்வகிக்கப்படும் ஒன்பது மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலத் துணைப்பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் 1 முதல் 5 மாவட்டங்கள் வரை உள்ளன. மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமாக, கிராம வீட்டுவசதித் திட்டம் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்

கிராமப்புறங்களில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக் கொள்வதற்காக நிதி உதவியானது 1978-79-ஆம் ஆண்டில் இருந்து அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென சென்னை மாவட்டத்தைத் தவிர, மற்ற மாவட்டங்களில் ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் இந்தக் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

ஒவ்வொரு வீடும் ரூ.10,000 மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. இதில் ரூ.7,000 இருபது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் கடனாகவும், ரூ.1,500 அரசு மானியமாகவும் வழங்கப்படுகிறது. மீதி ரூ.1,500 பயனீட்டாளரால் ஈடு செய்யப்படுகிறது. கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 31.3.92 வரை 3,50,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காகத் தேவைப்படும் நிதி வசதியானது அரசிடமிருந்தும் மற்றும் அரசின் பொறுப்புறுதியின் பேரில் அட்கோ நிறுவனத்திடமிருந்தும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் பெற்று வருகிறது. இதனைத் தவிர வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராமப்புறங்களில் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டமும் 1989-90 முதல் செயல்படுத்தப்படுகிறது.

கிராமப்புறங்களில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்க்கு, கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 3,50,108 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.22,000 கடனாகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.60,000 கடனாகவும் வழங்கி வருகிறது. 31.3.92 வரை குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 5,424 வீடுகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்க்கான திட்டத்தின் கீழ் 5,214 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் குடியிருப்புக்களை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் இந்தியாவிலேயே முதன் முறையாகக் கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா) வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி கிரா மத்திலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் வீடுகளை மேம்படுத்தும் பணி யான கூரைக்குப் பதில் ஒடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி, தண்ணீர் வசதி ஆகியவை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனீட்டாளர்களுக்கு 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ரூ.2000 கடனாகவும் ரூ.500 தமிழக அரசு மானியமாகவும் அளிக்கின்றது. பயனீட்டாளர்கள் ரூ.500 முதலீடு செய்திடல் வேண்டும். இத்திட்டத் தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 30,000 வீடுகள் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நகர்ப் புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் உறுப்பினர் களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்குகின்றன. இதற்கான கடன் வசதி தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி மற்றும் அட்கோ நிறு வனத்திடமிருந்தும் கடனுதவி பெற்று வழங்கு கின்றன. நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங் கங்கள் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்ட தனி நபருக்கு உச்ச வரம்பு ரூ.1.50 இலட்சம் வரை கடன் வழங்குகின்றன.

தமிழ்நாடு முழுவதும் நகராட்சிகளில் நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. இச்சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைந்து கடன் பெற்று அங்கத் தினர்களுக்குக் கடன் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் இந்திய அளவில், எல்லா மாநில வீட்டுவசதி இணையங்களிலும் முன்னணியில் உள்ளது, என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் 31.3.92 வரை 1,12,518 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்

1. கூட்டுறவு கட்டடச் சங்கங்கள் .. 342, 2. கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் .. 173, 3. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்.. 190, 4. கூட்டுறவு வீட்டமைப்புச் சங்கங்கள் .. 38, 5. கூட்டுறவு நகரியம் .. 1, 6. கூட்டுறவு வாட கைக் குடியிருப்புச் சங்கங்கள் .. 3, 7. தொழி லியல் தொழிலாளர் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் .. 29, 8. கூட்டுறவு வீட்டு மனைச் சங்கங்கள் .. 82, 9. அரிசன் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் .. 2, 10. வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் .. 165 ஆக மொத்தம் 1,025 சங்கங்கள் உள்ளன.

இதனால், பயன்பெறும் உறுப்பினர்கள் (31.3.92) .. 4,73,264

கட்டப்பட்ட வீடுகள் (31.3.92)

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்படி (1978-ஆம் ஆண்டிலிருந்து 31.3.92 வரை) .. 3,50,108

ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காகன திட்டப்படி (1989-90 முதல் 31.3.92 வரை) .. 5,424

இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டப்படி (1989-90 முதல் 31.3.92 வரை) .. 5,214

ஈ. நகரிய வீட்டுவசதித் திட்டப்படி (1959-லிருந்து 31.3.92 வரை) .. 1,12,518

வழங்கப்பட்ட கடன் அளவு

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டத்திற்கு .. ரூ.188.50 கோடி

ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு .. ரூ.14.21 கோடி

இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு .. ரூ.26.83 கோடி

ஈ. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டப்படி .. ரூ.479 கோடி

வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் .. 165

1991-92-இல் கட்டப்பட்ட வீடுகள்

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டம் .. 30,000
ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் .. 1,504
இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் .. 1,789
ஈ. நகரிய வீட்டுவசதித் திட்டம் .. 9,057

ஆக மொத்தம் 42,350 வீடுகள்.

வழங்கிய கடன் அளவு ரூ.113.20 கோடி

1992-93-இல் கட்டப்படவிருக்கும் வீடுகள்

அ. கிராமிய வீட்டுவசதித் திட்டம் .. 30,000
ஆ. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு .. 6,352
இ. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு .. 2,272
ஈ. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டப்படி .. 10,000
உ. சுப்ரா திட்டப்படி .. 30,000

ஆக மொத்தம் 78,624 வீடுகள், இவற்றுக்காக ஆகும் செலவு ரூ.136.04 கோடி.

இலட்சியத்தில் பக்தி

ஆசை இருந்தால் மட்டும் போதாது. இலட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்துக்கும் சிரத்தை தேவை.

—பண்டித நேரு



கலை உலகம்



1990 மற்றும் 1991-ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளுக்கான சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களைத் தெரிவு செய்வதற்காக, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பிரதாப் சிங் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1990-ஆம் ஆண்டிற்கு 29 திரைப்படங்களும், 1991-ஆம் ஆண்டிற்கு 58 திரைப்படங்களும் விருதிற்கான போட்டியில் கலந்து கொண்டன.

அனைத்துத் திரைப்படங்களையும் திரை யிட்டுப் பார்த்த பின்னர், 28.10.1992 அன்று சென்னை, தமிழக அரசின் தலைமைச் செயலகத் தில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்வுக் குழு, விருதுக்குரிய சிறந்த திரைப்படங்கள், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோர்களைத் தெரிவு செய்து அதற்கான பட்டியலைத் தமிழக அரசிடம் வழங்கியது.

தமிழக அரசு, திரைப்பட விருதுக்கான தேர் வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், திரைப்பட விருதுகளுக்காகக் கீழ்க்கண்ட திரைப் படங்களையும், நடிகர் நடிகைகளையும், தொழில் நுட்பக் கலைஞர்களையும் தேர்வு செய்துள்ளது.

திரைப்பட விருதுகள்

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு ... ரூ. 1.25 இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம்.

2. இரண்டாம் பரிசு ... ரூ.75,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

3. மூன்றாம் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

4. சிறப்புப் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கான பரிசுகள்

5 சவரன் மதிப்புள்ள பதக்கம் மற்றும் சான்றிதழ்கள்.

1990-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு : புது வசந்தம்
2. இரண்டாம் பரிசு : கேளடி கண்மணி
3. மூன்றாம் பரிசு : கிழக்கு வாசல்
4. சிறப்புப் பரிசு : அஞ்சலி

கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர் : கார்த்திக் (கிழக்கு வாசல்)
2. சிறந்த நடிகை : ரேவதி (கிழக்கு வாசல்)
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : சத்தியராஜ் (நடிகன்)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : கௌதமி (நம்ம ஊர் பூவாத்தா)
5. சிறந்த இயக்குநர் : விக்கிரமன் (புது வசந்தம்)
6. சிறந்த கதையாசிரியர் : விசு (வரவு நல்ல உறவு)
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் : வாசு (நடிகன்)
8. சிறந்த இசை அமைப்பாளர் : தேவா (வைகாசி பொறந்தாச்சு)
9. சிறந்த பாடலாசிரியர் : வாலி (கேளடி கண்மணி)

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் — பேரறிஞர் அண்ணா.

கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு சகாப்தம்!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும்; மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் — மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர், உலகிலேயே, இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழவில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக - தாமும் நல்லவராக - மற்றவர்களையும் திருத்துபவராக - கருத்துக் கருவூலமாக - வாழ்ந்தார்; இன்று அவரை இழந்து, தமிழகம் தவிக்கிறது!

10. சிறந்த பின்னணிப் பாடகர் : எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (கேளடி கண்மணி)
11. சிறந்த பின்னணிப் பாடகி : சித்ரா (வைகாசி பொறந்தாச்சு)
12. சிறந்த ஒளிப்பதிவாளர் : அப்துல் ரகுமான் (கிழக்கு வாசல்)
13. சிறந்த ஒலிப்பதிவாளர் : விஸ்வநாத் (வைகாசி பொறந்தாச்சு)
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) : கணேஷ் குமார் (ஒரு வீடு இரு வாசல்)
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் : சலம் (உலகம் பிறந்தது எனக்காக மற்றும் நடிகன்)
1,6. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : விக்ரம் தர்மா (நடிகன்)
17. சிறந்த நடன ஆசிரியர் : சுந்தரம் (அஞ்சலி)

1991-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு : சின்னத்தம்பி
2. இரண்டாம் பரிசு : என் ராசாவின் மனசிலே
3. மூன்றாம் பரிசு : குணா
4. சிறப்புப் பரிசு : சேரன் பாண்டியன்

கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர் : பிரபு (சின்னத்தம்பி)
2. சிறந்த நடிகை : குஷ்பு (சின்னத்தம்பி)
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : ராஜ் கிரண் (என் ராசாவின் மனசிலே)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : பானுப்பிரியா (அழகன்)
5. சிறந்த இயக்குநர் : பி. வாசு (சின்னத்தம்பி)
6. சிறந்த கதையாசிரியர் : ஈரோடு சவுந்தர் (சேரன் பாண்டியன்)
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் : ஈரோடு சௌந்தர் (சேரன் பாண்டியன்)
8. சிறந்த இசை அமைப்பாளர் : மரகதமணி (அழகன்)
9. சிறந்த பாடலாசிரியர் : பிறை சூடன் (என் ராசாவின் மனசிலே)
10. சிறந்த பின்னணிப் பாடகர் : மனோ (பல படங்கள்)
11. சிறந்த பின்னணிப் பாடகி : சுவர்ணலதா (சின்னத்தம்பி)
12. சிறந்த ஒளிப்பதிவாளர் : ரகுநாத் ரெட்டி (அழகன்)
13. சிறந்த ஒலிப்பதிவாளர் : சம்பத் (சேரன் பாண்டியன்)
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) : ஜெயச்சந்திரன் (மாநகரக் காவல்)
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் : தோட்டாத் தரணி (தளபதி)
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : சூப்பர் சுப்பராயன் (மாநகரக் காவல்)
17. சிறந்த நடன ஆசிரியர் : டி.கே.எஸ். பாபு (சின்னத்தம்பி)

கூட்டுறவு முறையில் நாய் வளர்க்கத் திட்டம்

பன்னெடுங்காலமாக நாய் மனிதனுக்குத் தோழனாகவும், காலவலானகவும் விளங்கி வருகிறது.

"வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா"

— என்று பாரதியார் நாயினை மனிதனின் தோழனாய்ப் பாடியுள்ளார்.

அன்புக்கு இலக்கணமாய்த் திகழும் நாய் மனிதனுக்குப் பல்வேறு விதங்களில் பயன்படுகிறது.

அன்பு விலங்காய் -
பணக்காரன் முதல் பாமரன் வரை
வீட்டையும், உடைமையும் காக்கும் காவல் நாயாய் -
வேட்டை நாயாய் -
துப்பறியும் நாயாய் -
குருடர்களுக்கு வழி காட்டும் நாயாய் -
ஆட்டு மந்தைகளைக் காக்கும் நாயாய் -
நீரில் மூழ்குபவரைத் தூக்கி உயிர்காக்கும் நாயாய் -
வெடி மருந்துகளையும், போதை மருந்துகளையும்
மோப்பத்தால் உணர்ந்து தூதுவனாய் -
செய்தி கொண்டு செல்லும் தூதுவனாய் -
நிலத்தடியிலும், பனிப்புதைப்பிலும் இருக்கும்
பொருட்களைக் கண்டுபிடிக்கும் நாயாய் -
பல்வேறு வீர விளையாட்டுகளைக் காட்டும்
வித்தை நாயாய் இது விளங்குகிறது.

இராஜபாளையம் நாய்

பல்வேறு நாய் இனங்கள் உலகில் இருக்கின்றன. அல்சேசன், டாபர்மேன், பொம்மரேனியன், டேசன்ட், லேபிரடார், டால்மேசியன், கிரேட்டன் போன்று உலகில் சுமார் 400 இனங்கள் பல்வேறு தேவைகளுக்காகப் பழக்கப்பட்டு உள்ளன. இவற்றுள் தமிழகத்தின் இராஜபாளையம், கோம்மை, சிப்பிப்பாறை, கன்னி என்ற நான்கு இனங்கள் பழங்காலந்தொட்டு இருந்து வருகின்றன. இவற்றினில் இராஜபாளையம் இனம் காமராசர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையத்தில் தோன்றிய ஒன்றாகும்.

பண்டைக் காலத்தில் பெரும் நிலக்கிழார்கள் இந்நாயினை மிக்க அக்கறை கொண்டு வளர்த்து வந்துள்ளனர். தற்போது இராஜபாளையம் இனம் வளர்ப்பு அதனைப் பேணிக் காக்கும் ஏழைத் தொழிலாளிக்குத் தொழிலாக உள்ளது. இந்நாய் காட்டு வேட்டைக்கும், வீட்டுக் காவலுக்கும் மிகவும் பயனுள்ளதாகும். நம்பகமான நண்பனாகவும் செயல்படுகின்றது.

இனப் பண்புகள் மாறாது வளர்க்கப்பட்டு வந்த இராஜபாளையம், காலப்போக்கில் சிதைவுறத் தலைப்பட்டது. தனி ஆர்வம் கொண்டு இந்நாயினைப் பராமரிக்காத காரணத்தினால் தூய்மையான இந்த இனத்தில் கலப்பினங்கள் தோன்றிலாயின. இவ்வாறே சிறப்புக் கவனம் செலுத்தப்படாவிட்டால், சிறிது காலத்தில் இராஜபாளையம் என்ற நாய் இனமே அழிந்து விட வும் ஏதுவாகலாம். ஆகவே, இந்த இனத்தின் தூய பண்புகள் அழிந்திடாது காத்திடுதல் அவசியமாகும்.

நாய் பராமரிப்பு முறை

குட்டிகளுக்கு பிறந்தவுடன் கண் இமை மூடியிருக்கும். சுமார் 10 நாட்கள் சென்ற பின் கண் திறந்து பார்வை தெரியும். பெண் நாய் 2 முதல் 12 குட்டிகள் வரை ஈனும். குட்டிகளுக்குத் தாய்ப்பால் அவசியம் தர வேண்டும். வளர்ப்பதற்குக் குட்டிகளை, தாயிடமிருந்து சுமார் 6 வாரங்கள் கழித்து எடுப்பதே நலமாகும். குட்டிப்பருவத்தில் பால் அடிக்கடி அருந்துவதற்குத் தர வேண்டும். பின்பு உணவு தர வேண்டும். குடல் புழு நீக்குவதற்கு மருந்து மாதத்திற்கு ஒரு முறை தர வேண்டும். குட்டிப் பருவத்தில் 2-வது மாதத்தில் டிஸ்டெம்பர் (Distemper) என்ற தொற்று நோய்த் தடுப்பூசி போட வேண்டும். பின்பு 6-வது மாதத்திற்குள் வெறி நோய்த் தடுப்பூசியும், மற்றும் நிகழ்வில் உள்ள நோய்களுக்குத் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும்.

நாய் உணவில் இறைச்சி கலப்பது நலமாகும். காய்கறிகள், அதிகமாய்க் கலந்து தரலாம். உப்பு, காரம், இனிப்பு உணவில் அதிகம் சேர்க்காது இருக்க வேண்டும். நல்ல உடற்பயிற்சியும் தேவையான கட்டளைப் பயிற்சியும் (Training) நாய்க்குத் தரப்பட வேண்டும். பேன், உண்ணி, தாய் ஈ ஆகியவற்றை பற்றாது நாயினை நன்கு பராமரித்து வளர்க்க வேண்டும். இவ்வாறு வளர்த்தால் தான் நாய் மனிதனுக்குப் பயனுள்ள நண்பனாய் அமையும்.

வலிப்பு நோயாளிக்கு இலவச மாத்திரைகள் - அரசு அறிவிப்பு:

வலிப்பு விழிப்புணர்ச்சி வாரம் 11.11.92 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார். வலிப்பு நோய் குணமடைந்த 4 பேர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்கள் பேசுகையில், ''வலிப்பு நோய்களுக்குத் தேவையான நான்கு நாட்கள் தொடர்ந்து உண்ண வேண்டிய மாத்திரைகளை, சமூக நலத்துறையே இலவசமாக வழங்கும் எனவும், திருமண விவகாரத்துச் சட்டத்தில் வலிப்பு நோயும் விவாகரத்து செய்ய ஒரு காரணமாக அமைகிறது. ஆகையால் இச்சட்டத்திலிருந்து வலிப்பு நோயை நீக்கி விதி விலக்களிக்க 2 அல்லது 3 மாதத்திற்குள் மைய அரசுடன் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளப்படும் என்றும், பள்ளிகளில் வலிப்பு நோய் வந்த மாணவ-மாணவியர்களை உதாசினப் படுத்தினால், அப்பள்ளி நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், அரசு என்னதான் திட்டங்களை நன்முறையில் செயல்படுத்த முயன்றாலும், மக்களிடம் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்காவிடில் அரசின் திட்டங்கள் எந்த வகையிலும் வெற்றியடைய வாய்ப்பில்லை. திருமண விவாகரத்துச் சட்டங்களிலிருந்து வலிப்பு நோயை நீக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

சமூக நலத்துறைச் செயலர் ஆர்.கிருபாகரன். சமூக நலத்துறை இயக்குநர் திரு கண். தீனதயாளன் ஊனமுற்றோர் நல்வாழ்வு இயக்குநர் திரு. ஏ. [illegible], இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. எம். கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் சி.வி. வேல் முருகேந்திரன், நரம்பியல் மருத்துவர் திரு. ஜகந்நாதன் ஆகியோர் பேசினர்.

தொகுப்பு: சண்முகசுந்தரம்.

குட்டி சுமார் 9 மாதத்தில் பெரிய நாயாகிறது. ஆண் நாயினை சுமார் 12 மாதத்திற்குப் பின் இனவிருத்திக்குப் பயன்படுத்தலாம். பெண் நாய் சுமார் 8 மாதத்தில் முதலில் பருவத்திற்கு வரும். ஆனால், அதற்கு அடுத்து வரும் பருவத்தில்தான் அதனை இனவிருத்தி செய்யலாம். ஆண்டிற்கு இருமுறை இனவிருத்திக்கான பருவத்திற்கு வரும். ஜூன், ஜூலை மற்றும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் இப்பருவம் வரும் நாயின் சினைக்காலம 62 நாட்கள்.சுமார் 2 முதல் 12 குட்டிகள் வரை ஈனும்.

நாய் வளர்ப்பு ஒரு இலாபகரமான தொழிலாகும். இராஜபாளைய இனக்குட்டிகளின் தேவை அதிகமானதாகவும், கிடைப்பதற்கு அரியதாகவும் உள்ளது. அதிக விலை கொடுத்து வாங்கி வளர்க்க ஆர்வமுள்ளவர்கள் பலர் உள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பால் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பொதுவான திட்டங்களிலிருந்து சிறிது மாறுபட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் ஒரு பகுதியினரை வேளாண்மையை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்தி வருவதிலிருந்து மாற்றி, தங்களுடைய வறுமையை நீக்குவதற்குத் தங்களின் தொழிலாக இராஜபாளையம் போன்ற நாய்களை வளர்த்து, அதனின்று கிடைக்கும் குட்டிகளை விற்பனை செய்து தமது வருவாயினைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கும் பொருட்டு, காமராசர் மாவட்டத்தில் நாய் வளர்ப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்பின் மூலம் இத்திட்டத்தினைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டப் பொருளாதார அறிக்கை

இத்திட்டத்தின் மூலம் ஒருவருக்கு 2 பெண் குட்டிகள் வழங்கப்படும்.

முதலீடு: 2 பெண் குட்டிகளின் விலை தடுப்பு மருந்து விலை உட்பட .. ரூ.1,500

செலவு: 2 குட்டிகளுக்கும் உணவு மற்றும் பராமரிப்புச் செலவு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு .. ரூ.1,000

வரவு: ஓராண்டிற்கு 5 குட்டிகள் வீதம் 10 குட்டிகள் ஒரு குட்டியின் விற்பனை விலை ரூ.600 வீதம் .. ரூ.6,000.

கடனும் தவணையும்

மொத்த வங்கிக் கடன் .. ரூ.500

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியம் .. ரூ.833

கடன் திரும்பச் செலுத்தும் தவணைத் தொடக்கம் .. ஓராண்டிற்குப் பின்

தவணைக் காலம் .. 3 ஆண்டுகள்.

மானியம் நீக்கி வங்கிக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டிய தொகை .. ரூ.1,667

ஓராண்டிற்குப் பின் வசூலிக்கப்படும் முதல் தவணை ரூ.555

ஓராண்டுக்கான வட்டி 10 சதவிகிதம் .. ரூ.166

வங்கிக்கு ஓராண்டிற்குப் பின் செலுத்தும் தொகை .. ரூ.721

ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் இலாபம்

மொத்த வருமானம் நாய்க் குட்டிகள் விற்பனை மூலம் ரூ.6,000

வங்கிக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய தொகை .. ரூ.721

நிகர இலாபம் .. ரூ.5,279.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்:

பொதுமக்கள் பயன்பெறுவது எப்படி?

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இன்னும் செம்மையான முறையில் செயல்படுத்தவும், ஆண் குழந்தைகளே வேண்டுமென்ற மனப்பான்மையை மக்களிடையேயிருந்து போக்கவும், பெண்சிசுக் கொலையைத் தடுக்கவும், பெண் குழந்தைகளின் நலனை மேம்படுத்தவும் அரசு தீவிரமாக ஆலோசனை செய்தது.

அதன் அடிப்படையில் சிறு குடும்ப நெறியை மக்களிடையே பரப்பவும், ஏழைக் குடும்பங்களிலுள்ள பெண் குழந்தைகளுக்கு உதவும் பொருட்டும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் ஒரு புது திட்டத்தை அறிவித்தார். ''புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்'' எனப் பெயரிடப்பட்ட இந்தப் புதிய திட்டத்தை, 1992 அக்டோபர் திங்கள் முதல் அமல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் குடும்பத்தில், ஒரு பெண் குழந்தையின் பெயரில் தமிழக அரசின் சார்பில் ரூ.2,000 முதலீடு செய்யப்படும். இப்பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளிலிருந்து, பள்ளி இறுதிப் படிப்பு வரை முதலீடு செய்யப்படும் தொகையிலிருந்து ஒரு சிறு தொகை, கால இடைவெளியுடன் அப்பெண்ணுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவது எப்படி?

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் குடும்பத்தின் தலைவனோ அல்லது தலைவியோ கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்திருக்க வேண்டும். கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் நேரத்தில், அந்நபருக்கு வயது 35-க்குள் இருக்க வேண்டும்.

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் பெற்றோர்களுக்கு, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தைகள் இருக்கக் கூடாது.

★ இத்திட்டத்தில் சேர விரும்பும் பெண் குழந்தை, அந்த வீட்டின் ஒரே பெண் குழந்தையாகவோ அல்லது இரண்டாவது பெண் குழந்தையாகவோ இருக்கலாம்.

★ இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் பெண் குழந்தைகள், இந்தத் திட்டத்தில் சேரும் நேரத்தில், வயது மூன்றுக்கும் குறைவாக இருக்க வேண்டும்.

★ இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் பெண் குழந்தையின் குடும்பம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பமாக இருத்தல் அவசியம். இந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.6,400/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

எப்படி விண்ணப்பம் தருவது?

இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் பெண் குழந்தையின் பெற்றோர் தகுந்த சான்றுகளுடன், அதற்கான விண்ணப்பத்தில், மாவட்டச் சமூக நலத்துறை அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மாவட்ட சமூக நலத்துறை அலுவலரின் பரிந்துரையின் பேரில், அப்பெண் குழந்தையின் பெயரில் அரசு ரூ.2 ஆயிரம் முதலீடு செய்யும். இந்தத் தொகைக்கு ஓராண்டுக்கு 12 சதம் வட்டி கிடைக்கும்.

இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயனடையும் பெண் குழந்தைகள் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாதவாறு பள்ளி இறுதிப் படிப்புவரை படித்தால்தான், இந்தத் திட்டத்தின் முழுப் பயனையும் பெறமுடியும்



மரபு சாரா எரிசக்தி உற்பத்தியில் தமிழகத்துக்குத் தேசிய விருது!

நவீன எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்த ஆண்டு தோறும் தேசிய அளவில் விருதுகள் வழங்கப்படுகின்றன. காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

மரபுசாரா எரிசக்தித் துறை பொறுப்பு வகிக்கும் மாநில அமைச்சர்களின் மாநாடு, புது டெல்லியில் 5.11.92 அன்று நடைபெற்றது. மாநாட்டை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில், மரபு ச்ாரா எரிசக்தி வளங்களைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருதினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் மாண்புமிகு தமிழக பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களிடம் புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டின்போது வழங்கினார்.

காற்றாலை மூலம் எரிசக்தித் துறையை வளப்படுத்தியமைக்காக தமிழக அரசைப் பாராட்டிப் பேசிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை வலுப்படுத்த அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், அரசு அலுவலர்கள் ஆகிய அனைவரும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே மின் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொண்டு வந்தாலும் இன்றும் ஏறத்தாழ ஒரு இலட்சம் கிராமங்கள் நமது நாட்டில் மின் வசதியின்றி உள்ளன.

சுற்றுச் சூழலுக்கு ஓரளவாவது கேடு ஏற்படாத வகையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும், விநியோகிப்பதும் இயலாத காரியம் என நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், மின்திட்டங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியைப் பெறுவது கடினமாகிவிட்ட படியாலும், மரபுசாரா எரிசக்தித் திட்டங்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. என மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறினார்.

மரபுசாரா எரிசக்தித் திட்டம்பற்றி ஆராயப்பட்ட போது, அது மிகவும் செலவு குறைந்த ஒன்றாகக் கண்டறியப்பட்டிருப்பதால், வர்த்தக ரீதியில் லாபகரமானதாக இத்திட்டத்தைக்கொண்டுவர முயல வேண்டும் எனவும் மாண்புமிகு பிர்தமர் அவர்கள் இம்மாநாட்டின் போது கேட்டுக் கொண்டார்.

இத்தகைய கூட்டம் இவ்வாண்டில் இரண்டாவது முறையாக நடத்தப்படுவது மரபுசாரா எரிசக்தித் திட்டம் மக்கள் மனதில் இடம் பிடிக்கத் தொடங்கி விட்டது என்பதையே காட்டுவதாகவும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறினார்.

என்ற விதத்தில் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டத்தில் சேரப் பதிவு செய்யும் பெண் குழந்தைகள், அரசு இறுதியில் வழங்கும் ஒட்டு மொத்தத் தொகையான ரூ.10 ஆயிரத்தைப் பெற குறைந்தது 10-வது தேர்ச்சி பெற்றவராகவும், தமது 20-ஆம் வயது முடியும் வரை திருமணம் செய்யாமலும் இருத்தல் அவசியம்.

இந்தத் திட்டத்தில் சேர்ந்த பெண் குழந்தை 20 வயதுக்குள் இறந்து விட்டால், அந்தக் குடும்பத்தின் இன்னொரு பெண் குழந்தை 20 வயது பூர்த்தி செய்யாமல் இருந்தால், இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, முழுப் பயனையும் பெறலாம்.

இந்தப் புதிய, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; நடப்பு நிதியாண்டு முதலே செயல் படுத்தப்படும். 1992 அக்டோபர் திங்கள் முதல் நாளுக்குப் பிறகு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெற்றோர்கள் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடைய வராவார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

சிவகங்கை இராமச்சந்திரனார்

தோற்றம்:
16.9.1884

மறைவு:
26.2.1933

இந்த இதழில்...

போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் ... 2

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 6

1993-'94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்டத்துக்கு ரூ.2,101 கோடி ஒதுக்கீடு ... 9

''நீங்க நல்லா இருக்கணும்'' ... 11

முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ... 16

கூட்டுறவு (கவிதை) ... 17

மூதறிஞர் இராஜாஜி ... 18

சிவகங்கை இராமச்சந்திரனார் ... 24

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற ... 29

மக்கள் நல்வாழ்வுத் துறை —மாண்புமிகு முதல்வர் ஆய்வு ... 33

கூட்டுறவுத் துறையின் மாநிலத் தொடக்க விழா ... 36

வீராங்கனை ருக்மிணி லட்சுமிபதி ... 37

மக்கள் கவிஞன் பாரதி ... 40

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

கார்த்திகைத் திங்கள் - 16

மலர்:23 1-12-1992 இதழ்:11

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாடு கண்டனர் (26.11.'92).

போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள்:

தமிழக வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு முதல்வர் உதவி

ரூ.530 கோடிக்கு வெள்ளச் சேதம்: பிரதமருக்கு முதல்வர் கோரிக்கை

வங்கக் கடலில் 11.11.92 அன்று உருவான புயல், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. தமிழகத்தில் பன்னிரண்டு மாவட்டங்களில் குறிப்பாக, கன்னியாகுமரி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, மாவட்டங்களில் கோரமான சம்பவங்களை ஏற்படுத்தி அகில இந்தியாவையும் உலுக்கிவிட்டது. இப்புயலின் சீற்றத்திற்கு 230 பேர் பலியாயினர்.

தமிழ்நாட்டை நோக்கி 11.11.92 அன்று பிற்பகல், நாகப்பட்டினத்துக்குத் தென்கிழக்கே 650 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் மையம் கொண்டிருந்தது. இந்தப் புயல் 12.11.92 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கையைத் தாக்கி விட்டு, தமிழ்நாட்டை நெருங்கியது. இராமேஸ்வரம், இராமநாதபுரத்தில் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. பலத்த சூறாவளிக் காற்றுடன் மழை கொட்டியது. தென் மாநிலக் கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் , புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிதம்பரனார், நெல்லை-கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. இராமேசுவரத்தில் சூறாவளிக் காற்றுடன் அடைமழை கொட்டியது.சூறாவளிக் காற்று வீசியதால் இராமேசுவரம் கடற்கரையில் இருந்த ஏராளமான மீனவர்களின் குடிசைகள் காற்றில் பறந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. வழக்கமாக அமைதியாக இருக்கும் இராமேசுவரம் கடலில் 20 அடி உயரத்துக்கு ராட்சத அலைகள் எழுந்தன.

காவல் துறையினரின் எச்சரிக்கை

இராமேசுவரம் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தொடர்ந்து பாம்பன், மண்டபம், தங்கச்சி மடம் ஆகிய பகுதிகளில் போலீசார் ஒலி பெருக்கி மூலம் ‘மன்னார் கடல் பகுதியைப் புயல் இரவில் கடக்கும். 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும், பலத்த மழை பெய்யும், மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குப் போகக் கூடாது’ என எச்சரித்தனர்.

மீனவர்கள்

தனுஷ்கோடி முகுந்தராயபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள 1000 மீனவர்கள் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள முகுந்தராய சத்திரத்துக்குக் கொண்டுவரப்பட்டு, பள்ளிக்கூடங்களில் தங்க வைக்கப்பட்டனர். நாகை, வேதாரண்யம் கடலிலும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடலில் ராட்சத அலைகள் எழும்பின. நாகை துறைமுகத்தில் இரண்டாம் எண் எச்சரிக்கைக் கூண்டு தொங்கவிடப்பட்டது. கடலுக்குள் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என எச்சரிக்கப்பட்டனர்.

எச்சரிக்கையையும் மீறி சில மீனவர்கள் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். கடல் கொந்தளிப்பில் நள்ளிரவில் பாலகிருஷ்ணன் என்பவரின் படகு சிக்கியது. இந்தப் படகில் இருந்த மீனவர்கள் இருவர் நீரில் மூழ்கி பலியானார்கள். இறந்து போன 2 பேருடைய (மாணிக்கசுவாமி - வயது 24, இளைய பெருமாள் - வயது 26) குடும்பத்தாருக்குத் தலா ரூ. 21,000 வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஸ்கந்தன் உத்தரவிட்டார்.

பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டையில் பலத்த மழை காரணமாக, பழஞ்சூர் கிராம ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, 100 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது. நஸ்விணி ஆற்றில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறியதில் 500 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது. அதிராம்பட்டினம் முத்துப்பேட்டைப் பகுதியில் 1000 ஏக்கர் பயிர் தண்ணீரில் மூழ்கியது.

தனுஷ்கோடி

13.11.92 அன்று இரவு தனுஷ்கோடி ம்முழுவதுமாகக் கடலில் மூழ்கி விட்டது. இராமேசுவரம், திருச்செந்தூர் ஆகிய நகரங்களுக்குள்ளும் கடல்நீர் புகுந்துவிட்டது.

புயல் கரையைக் கடந்தபோது தூத்துக்குடியில் மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

இதுகுறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜனார்த்தனன் கூறியதாவது:

‘கடல் கொந்தளிப்பால் மன்னார் வளைகுடாக் கடலும், பாக் வளைகுடாக் கடலும் சீறிப் பாய்ந்து, தனுஷ்கோடி நிலப் பகுதியை விழுங்கி விட்டது. அந்த நகரம் இருந்த இடமே தெரியாமல் கடலில் மூழ்கி விட்டது. அங்கு இருந்த 500 மீனவர் குடிசைகளும் கடலில் மூழ்கி விட்டன. அங்கிருந்த மீனவர்கள் ஏற்கெனவே பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பாம்பனில் 100 குடிசைகளைக் கடல் நீர் சூழ்ந்துவிட்டதால் அதில் வசித்தவர்கள் குழந்தைகளுடன் புயல் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம் புகுந்தனர். ஓலக்கூடா கிராமத்துக்குச் செல்லும் சாலை கடல் நீரால் துண்டிக்கப்பட்டு விட்டதால், அங்கு போக முடியவில்லை. தர்காவலசை, தோப்பு வலசை, அழகாத்தா வலசை, கோவில்வாடி ஆகிய கிராமங்களில் 300 வீடுகள் நாசமாகிவிட்டன.

இராமேசுவரம்

இராமேசுவரம் கடற்கரையையொட்டி உள்ள வீடுகளையும், துறைமுகம் பகுதியில் உள்ள வீடுகளையும் தண்ணீர் சூழ்ந்து ஏறத்தாழ 500 வீடுகள் தண்ணீரில் மிதந்தன. கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 200-க்கும் மேற்பட்ட படகுகள் நொறுங்கின.

மதுரை மாவட்டத்தில் நிலச் சரிவு

மதுரை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள மேக மலைப் பகுதியிலும் பலத்த மழை கொட்டியது.

சின்னமனூர் வட்டாரத்தில் பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டு ஆண்களும் பெண்களும் பலியாயினர். இப்பகுதி தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த பகுதியாகும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மலைச் சரிவில் குடிசைகள் போட்டு வசித்து வந்தனர். தொடர்ந்து பெய்த பலத்த மழையினால், இங்கு நிலச்சரிவுகள் ஏற்பட்டு, இவர்களின் குடிசைகள் மீது விழுந்தது. இதனால் குடிசைகளில் வசித்தவர்கள் உயிரோடு மண்ணில் புதைந்து மூச்சுத் திணறிச்செத்தனர். 100-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சிதம்பரனார் மாவட்டம்

புயல் வெள்ளத்தால் சிதம்பரனார் மாவட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்த பொழுது, மணிமுத்தாறு அணைக்குத் திடீர் என 40,000 கன அடிநீர் வந்தது. மேலும், தண்ணீர் வந்தால் ஆபத்து என்று கருதி, அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. ஏற்கெனவே ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் அணையின் நீரும் சேர்ந்து கொண்டதால்

ஆற்றில் வெள்ளம் அதிகரித்து, தாமிரபரணி ஆற்றில் மோதி திரும்பியது. இதனால் உடைப்பு ஏற்பட்டது.

கரை உடைந்ததால் ஆற்று

வெள்ளம் ஆத்தூர், புன்னக்காயல், சேந்தமங்கலம் கிராமங்களுக்குள் புகுந்தது. இந்த மூன்று ஊர்களும் வெள்ளத்தில் மிதந்தன. இதில் ஆத்தூர் மிகவும் பாதிக்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள மக்களுக்கு 10,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில்...

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் வீடுகள் இடிந்து 3 பேர் பலியாயினர். ஊட்டி - லவ்டேல் காந்திப் பேட்டையில் ஒரு வீடு இடிந்து இரண்டு பெண்களும், மஞ்சூர் ஓனிக் கெண்டி அண்ணாநகர் பகுதியில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து ஒரு பெண்ணும் பலியானார்கள். கெத்தையில் பள்ளிக்கூடக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து தரைமட்டமானது. பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்தன. மழை வெள்ளப் பாதிப்புகள் குறித்து நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர் நிருபர்களிடம் கூறியதாவது:-

'பலத்த மழை காரணமாகப் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. இதற்கான மீட்புப் பணி நடந்து வருகிறது. ரேலியா அணை, தொட்டபெட்டா அணை ஆகியவை நிரம்பி வழிகின்றன. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு மேடான பகுதிகளில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலேயே அதிக அளவு மழை குன்னூர் ரேலியா அணைப் பகுதியில் பெய்துள்ளது. இங்கு 680 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. குன்னூரில் 430 மி.மீட்டர் மழை பெய்துள்ளது'.

கொடைக்கானலில்...

கொடைக்கானலில் அடைமழையால் வீடுகள் இடிந்ததில் இந்திரா நகரைச் சார்ந்த ஐந்து பேர் மரணம் அடைந்தனர்.

திருச்செந்தூர்

திருச்செந்தூர் கடற்கரை ஓரமுள்ள மீனவர்கள் காலனிக்குள் கடல்நீர் புகுந்ததால், 150 குடிசைகள் நீரில் மூழ்கின. 600-க்கும் அதிகமான பனை மரங்கள் சாய்ந்தன. ஏராளமான வாழை மரங்கள் சேதமடைந்தன. நள்ளிரவு ஒரு மணியளவில் கடல்நீர் புகுந்தது. அங்கிருந்த 480 குடிசைகளுக்குள் கடல் நீர் புகுந்ததால் அங்குள்ளவர்கள் உடனே அருகே உள்ள புயல் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப் பட்டனர்.

வாழைத் தோட்டங்கள் அழிந்தன. பயிர்கள் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. குடிசைகள் இடிந்து சேதம் அடைந்தன. ஏரி, குளங்களில் உடைப்பு ஏற்பட்டு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

25 பேர் மரணம்

விக்கிரமசிங்கபுரத்தில் ஆற்றுக்கு அருகிலுள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் மரணம் அடைந்தனர்.

சென்னையில்...

சென்னையில் செய்த அடைமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது.

பெரம்பூர், ஓட்டேரி, நேருஜி நகர், வியாசர்பாடி, புளியந்தோப்பு, ராயபுரம், பனைமரத் தொட்டி, டி.பி. சத்திரம், சூளை, வில்லிவாக்கம், சிட்கோ நகர், திருமலை நகர், மைலாப்பூர் போன்ற பகுதிகளில் குடிசைகளை மழை நீர் சூழ்ந்தது.

மாநகராட்சி சார்பில் 20 பம்பு செட்டுகள் மூலம் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 40,000 உணவுப் பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டு, குடிசை வாசிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

கொருக்குப்பேட்டை எம்.ஜி.ஆர். நகரில் 2,000 குடிசைகள் வெள்ளத்தில் மிதந்தன.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில்...

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செங்கம் அருகே வெள்ளத்தால் 7 பேர் பலியானார்கள்.

ஆறு அமைச்சர்கள்

வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணியை மேலும் துரிதப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், ஆறுதல் கூறவும், வெள்ளப் பகுதிகளுக்கு உடனடியாகச் செல்லும்படி மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. நாகூர் மீரான் ஆகியோருக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

முதல்வர் உதவி

நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த மாவட்டங்களில் பல்வேறு பணிகளுக்காக முதல்வர் ரூ.10 கோடி ஒதுக்கினார். (16.11.92).

பிரதமர் உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு பிரதமர் அவர்கள், பிரதமர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூ.32 இலட்சம் வழங்க உத்தரவிட்டார். இதில் தமிழ்நாட்டுக்கு ரூ.20 இலட்சமும், கேரளாவுக்கு ரூ.10 இலட்சமும், பாண்டிச்சேரிக்கு ரூ.2 இலட்சமும் வழங்கப்படுகிறது. வெள்ளச் சேதம் பற்றி கணக்கெடுக்கப்பட்டபின் அடுத்தகட்ட நிவாரண உதவித் தொகை வழங்கப்படும். (15.11.92)

வெள்ளப் பகுதிகளில் முதல்வர்

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.1992 அன்று மதியம் 12.30 மணியளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வந்தடைந்தார். பின்னர், தூத்துக்குடியிலிருந்து சாலை வழியே புறப்பட்டு முதலில் தூத்துக்குடி நகரைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்.

தூத்துக்குடியில்...

தூத்துக்குடி நகரில் புயலாலும் வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட முக்கியப் பகுதியான திரேசாபுரம் கடற்கரைப் பகுதியினைப் பார்வையிட்டு, அங்குள்ள மீனவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். புயலால் பாதிக்கப்பட்டு, உடைந்து கிடந்த கட்டுமரங்களையும், படகுகளையும் பார்வையிட்டார். மீனவர்களின் குறைகளைக் களைவதற்காக அவர்களின் உடைந்த படகுகளையும் கட்டுமரங்களையும் கட்டுவதற்கு ஆகும் செலவில் 50 சதவிகித அரசு மானியமாகவும், 50 சதவிகித அரசு ஏற்பாடு செய்யும் கடனாகவும் வழங்க ஆணையிட்டார். திரேசாபுரத்திலிருந்து சாலை வழியே புறப்பட்டு புயலாலும், வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட வண்ணம் 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முக்கானிக்குச் சென்றார்.

முக்கானிக்குச் செல்லும் வழியில் முத்தையால்புரம், சவேரியார்புரம், பழையகாயல் மற்றும் வழியில் குக்கிராமங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறங்கி நடந்து சென்று பார்வையிட்டார். அக்கிராம மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

முக்கானிக்கு அடுத்துள்ள ஆத்தூர் பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. ஆத்தூர் கிராம மக்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டதை அறிந்து, உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று, உடைந்து கிடந்த பாலத்தைப் பார்வையிட்டார். மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற நிவாரண உதவிகள் 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி மற்றும் பண உதவித் தொகை இதுவரை தங்களுக்குச் சேரவில்லை என்று மக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து, எல்லாக் கிராமங்களுக்கும் அரசு நிவாரண உதவிகள் அன்று இரவுக்குள்ளாகவே வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். முக்காணி, ஆத்தூர் மற்றும் பழையகாயல் ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார். அதன்படி அரசுத்தரப்பு உதவிகளும், உணவுப் பொட்டலங்களும் இந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த அரசு உதவிகளும், உணவுப் பொட்டலங்களும் எல்லா மக்களுக்கும் சரியான முறையில் சேர்வதை மேற்பார்வையிடுமாறு தன்னுடன் வந்த மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ்.முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. நாகூர் மீரான் ஆகியோருக்கு ஆணையிட்டார்.

ஆத்தூர் பாலத்தில் ஏற்பட்டுள்ள உடைப்பை உடனடியாகச் சீர் செய்துதருமாறு அந்தக் கிராம மக்கள் கூறியபோது இன்னும் ஒரு வார காலத்திற்குள் இந்தப் பாலம் சீர்செய்யப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மக்களிடம் தெரிவித்தார். தம்முடன் வந்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களிடமும் இந்தப் பாலத்தை உடனடியாக ஒருவார காலத்திற்குள்

(தொடர்ச்சி.. 41 ஆம் பக்கம் பார்க்க)

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

நமது நாட்டின் கோடிக் கணக்கான மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க முக்கியமான ஒரு கூட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இன்று கூடியுள்ளது.

இதுபோன்றதொரு கூட்டத்தில் அயோத்தி பிரச்சினை பற்றி ஒருமித்த கருத்தை நாம் உருவாக்க முடியுமா என்பது கேள்வி அல்ல. ஏனெனில், இந்தப் பிரச்சினை சிக்கலான பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியது.

எந்தவொரு முடிவும் நாட்டின் எதிர் காலத்தின்மீது, அழிக்க முடியாததொரு பாதிப்பை ஏற்படுத்தும்.

இங்குக் கூடியுள்ள அனைத்து மதத் தலைவர்களும் தங்களுடைய முதிர்ந்த அறிவாற்றலினால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, இந்தத் தடையைக் கடந்து, சமுதாயத்தின் உயிரோட்டமாக அமைந்துள்ள அமைதிப் பாதையில் நாட்டை எடுத்துச் செல்ல இயலுமா என்பதே கேள்வி.

இந்த அயோத்திப் பிரச்சினைக்கு அரசியல் நிர்ணயச் சட்டம், சட்டம், வரலாறு, அரசியல், சமூகம், இனம் என்று பல கோணங்கள் உண்டு.

தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்று உலகமே உற்றுநோக்கிக் கொண்டுள்ளது. இந்த உண்மையை நன்கு உணர்ந்து, நாட்டின் ஒற்றுமையையும், ஸ்திரத் தன்மையையும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அமைந்துள்ள கொள்கையின்படி பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்.

1991 நவம்பர் திங்கள் 2-ஆம் நாளன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், அயோத்திப் பிரச்சினை பற்றி நான் கூறியதை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

"இதில் அடங்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், ராமஜென்மப் பூமி, பாபர் மசூதி பிரச்சினைப் பற்றி ஒரு முடிவு நாம் எடுத்தோமேயானால், அது நாடு முழுமைக்கும் இந்து-முஸ்லீம் உறவுகளிடையே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்".

முதலில் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உள்ள மதச் சார்பற்ற தன்மை, பெரும்பான்மையான மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைச் சிறுபான்மையினரும் அனுபவிக்கும் வகையில், நாம் நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பை நமக்குச் சுமத்துகிறது. அதே நேரத்தில், அரசியல் நிர்ணயச் சட்டம் வழங்கியுள்ள சாதாரண உரிமைகளைக் கூட பெரும்பான்மையினர் அனுபவிக்க முடியாத வகையில், சிறுபான்மையினர், அரசியல், சரித்திர, சமூக, காரணங்களைச் சொல்லி நடந்து கொள்வது முறையல்ல. இந்த நாட்டில் இந்துக்களே பெரும்பான்மையினர் என்பது அனைவரும் அறிந்ததே. அவர்கள் தங்களுடைய மதக் குறிக்கோள்களை அமைதியான முறையில், அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கொள்கைகளுக்கு மாறாமல் அனுசரிப்பார்களேயானால் அதற்கு நாம் அனுமதி அளித்தாக வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், சிறுபான்மையினரைப் போன்றே பெரும்பான்மையினரும் உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்யும் பொறுப்பு இந்திய அரசாங்கத்துக்கு உண்டு.

குறிப்பாக, அயோத்திப் பிரச்சினைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், உத்திரப்பிரதேச அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில் இந்துக்கள் விரும்பியபடி கட்டடத்தைக் கட்டுவதை அனுமதிக்க வேண்டும்.

உச்சநீதிமன்றம் உத்திரப்பிரதேச அரசுக்கு விடுத்துள்ள ஆணைகளும், உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குகளும், உத்திரப்பிரதேச அரசு, கையகப்படுத்தியுள்ள நிலத்தில் கர சேவை செய்வதையும் அல்லது வேறு எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதையும் சட்ட ரீதியாகத் தடை செய்கின்றன.

இந்த நிலத்தில் கட்டடம் கட்ட எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்ற நிலையை நாம் ஏற்றுக் கொண்டால், மைய அரசும் உத்திரப்பிரதேச அரசும் இது தொடர்பான சட்டச் சிக்கலைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

ஆனால், இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுப்பதைத் தள்ளிப்போட ஒரு காரணமாகச் சட்டச் சிக்கலைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல, எதிர்த்து வரும் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சமாளிப்பது அரசாங்கத்திற்கு மென்மேலும் கடினமாகிவிடும். எனவே, கரசேவை புரிவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான முடிவினைப் இப்பேரவை எடுத்தாக வேண்டும். கர சேவை புரிவதை நீதிமன்றம் அனுமதிக்கக்கோரி அனைத்து முயற்சிகளையும் எடுத்தாக வேண்டும்.

பிரச்சினைக்குரிய நிலத்தின் அடுத்த கேள்வி அப்படியே இருக்கும். இது தொடர்பான இரண்டு பிரிவினரையும் கூட்டி, அவர்களுடைய வாதங்களுக்கு ஆதாரங்களை அவர்கள் கொணர பிரதமர் முயற்சிகளை எடுத்து வருகிறார். இருப்பினும், இம்முயற்சிகள் பிரச்சினையைத் தீர்க்காது என்றே நான் கருதுகிறேன். பிரதமரும் இதை அறிவார். எனவே, பிரச்சினைக்குரிய நிலத்தில் கோவில் இருந்தது என்ற அடிப்படைப் பிரச்சினையை உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இதனால் எந்தப் பயனும் இருக்காதென்றே நான் கருதுகிறேன். வரலாற்றை நிரூபிக்கவோ, பொய்ப்பிக்கவோ நாம் ஏன் முயற்சிக்க வேண்டும்? வரலாற்று உண்மைகளை முடிவு செய்ய உச்சநீதிமன்றத்தை நாம் அழைக்க வேண்டுமா? இந்த வகையில் வரலாற்றைத் திருப்பி எழுதுவதில் நாம் வெற்றி பெறுவோமா? அல்லது, நம் நாட்டின் நலனுக்கு இது தேவையா? இந்தக் கேள்விகள் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

மசூதியைப் பற்றிய பிரச்சினையை அப்படியே விட்டுவிட வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆய்ந்த முடிவாகும். 1528-க்கு முன்பு இங்கு ஒரு கோவில் இருந்ததா என ஆராய்ந்து பல பிரச்சினைகளை கிளப்பத் தேவையில்லை.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழவும் நம் தலைவர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு சமுதாய அமைதியையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்த அரசியல் நிர்ணயச் சட்டமும், இந்திய மக்களின் அறிவுக் கூர்மையும் வழி வகுத்துள்ளது.

சுருங்கக் கூறின், என்னுடைய கோரிக்கை இதுதான். உத்திரபிரதேச அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை புரிந்திடத் தகுந்த சூழ்நிலையை உருவாக்குங்கள். வரலாற்றுக் கேள்விகளுக்குள் செல்லாமல், மசூதியை அப்படியே விட்டுவிடுங்கள். இந்நாட்டின் குடிமக்களை அமைதியாக வாழ அனுமதியுங்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி திரு. வி.பி. சிங் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ஒரு மாநில அரசு ஏற்றுக்

கொள்ளாவிட்டால், அரசியல் நிர்ணயச் சட்டப்படி அரசாங்கம் நடைபெறவில்லை என்று கருதி மாநில அரசைக் கலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் கூறினார்.

நீதிமன்றங்களின் உத்தரவிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற பொதுவிதியைக் குறிப்பிட்ட சம்பவங்களுக்கு மட்டுமே வலியுறுத்துதல் என்பது சரியல்ல. உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட, காவிரி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றம் ஒரு இடைக்கால உத்தரவைப் பிறப்பித்த போது கர்நாடக அரசு அதை ஏற்கவில்லை. மைய அரசின் ஆலோசனை பேரில் குடியரசுத் தலைவர் இப்பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்டார். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு சரியானதுதான் என உச்ச நீதிமன்றம் தன்னுடைய கருத்தைத் தெரிவித்தது. ஒன்றரை ஆண்டுக் காலம் கழிந்த பின்பும் கர்நாடக அரசு இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை. நீதித் துறையை கர்நாடக அரசு அவமதித்து விட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இதை கவனத்தில் கொள்ளவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டப்படி நடைபெறாததைக் கண்டித்துத் தீர்மானம் நிறை வேற்றவில்லை. தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவோ, இந்திய அரசோ, கர்நாடக அரசைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்தவில்லை. எனவே, உத்திர பிரதேச அரசைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்துவது சரியல்ல, என்றே நான் கருதுகின்றேன்.

பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தது வருத்தத்துக்குரியதாகும். அனைத்துக் கட்சிகளும், அனைத்து உறுப்பினர்களும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சி இங்கே தனிமைப் படுத்தப்படும் என்ற பயந்ததைப் பற்றி திரு. இந்திரஜித் குப்தா இங்கே குறிப்பிட்டார். அது உண்மைதான். அவர்கள் இந்தக் கூட்டத்தில் தனிமைப் படுத்தப்படலாம். ஆனால், வெளியே, மக்களிடையே அயோத்தியாவில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்ற ஆசை, இந்நாட்டின் பெறும்பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது.

மக்களின் கருத்தை நாம் மதித்தாக வேண்டும் மக்களின் கருத்தை, அதுவும் அந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் கருத்தை அலட்சியப்படுத்தக் கூடாது - அலட்சியப்படுத்திட முடியாது.

இக்கூட்டத்தில், என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

(புதுடெல்லியில் 23.11.92 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை).

புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்குத் தமிழக அரசு ரூ.68.52 கோடி நிதி ஒதுக்கீடு!

புயல் வெள்ள நிவாரண நிதிக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின்பேரில், கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 17.11.92 அன்று மாவட்டங்களுக்காக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 21.11.92 அன்று சாலைகளையும் பாசன ஏரிகளையும் சீர்படுத்த ரூ.20 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று 1,43,128 சிறு, நடுத்தர விவசாயிகளுக்கும் 45,902 மற்ற விவசாயிகளுக்கும் மானியத்தொகையாக ரூ.8.6 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று வாழை, காய்கறிகள், உருளைக்கிழங்கு,ரப்பர் ஆகியவைகளை 18,871 எக்டேர் நிலத்தில் பயிரிட்டு, இழந்த சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.4.28 கோடி வழங்கப்பட்டது.

★ 22.11.92 அன்று, மணலில் புதைந்த 2,500 எக்டேர் நிலத்தைச் சீர்படுத்தவும் 500 பாசனக் கிணறுகளைத் தூர் எடுக்கவும் ரூ.3 கோடி ஒதுக் கப்பட்டுள்து.

★ 26.11.92 அன்று 2 படகுகளையும், மீன்பிடி வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு மானியத் தொகையாக 8.21 கோடி வழங்கப்பட்டது. 1920 படகுகள் முழுவதுமாகச்சேதமடைந்துள்ளன; 444 படகுகள் ஓரளவு சேதமடைந்தன. 1,522 கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன.

★ கடல்மீனவர்களுக்குத் தேசிய சேமிப்பு மற்றும் நிவாரண நிதியின் திட்டத்தின் கீழும், மீனவர்களுக்கான தேசிய நிதியிலிருந்தும் 82,000 மீனவர்களுக்கு 25.11.92 அன்று ரூ.6.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நோயிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றத் தேவையான மருந்துப் பொருட்களை வழங்க 26.11.92 அன்று ரூ.30 இலட்சம் வழங்கப் பட்டது.

★ துணி, அரிசி, மண்ணெண்ணெய், குடிசைச் சீரமைப்பு ஆகியவைகளுக்காக உடனடி நிவாரணத் தொகையாக ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தம், புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அரசு ரூ.68.52 கோடி ஒதுக்கியுள்ளது.

1993-94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்டத்துக்கு ரூ.2,101 கோடி ஒதுக்கீடு

1993-94-ஆம் ஆண்டு தமிழகத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மத்தியத் திட்டக் குழுத துணைத் தலைவர் திரு. பிரணாப் குமார் முகர்ஜியுடன் டெல்லியில் 14.11.92 அன்று விரிவான விவாதம் நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வருடன், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நிதிச் செயலர் திரு. நாராயணன், திட்டச் செயலர் திரு. எம்.பி. பிரானேஷ், முதல்வரின் செயலர் திரு. எஸ்.ஆர்.கருப்பண்ணன் ஆகியோர் சென்றிருந்தனர்.

பாராட்டு

1991-92-ஆம் ஆண்டுக்கான திட்ட முதலீடு ரூ.1,605 கோடி என்று ஒப்புதல் அளிக்கப்பட்டாலும் கூடுதலாக 45 கோடி ரூபாய் அதாவது ரூ.1,650 கோடி என்ற வகையில் அமைந்ததற்காக, தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு எடுத்துக் கொண்ட விசேஷ முயற்சிகளையும், இந்த ஆண்டில் தமிழகப் பொருளாதாரத்தின் பிரமிக்கத் தக்க வளர்ச்சியையும் திட்டக் குழுத் துணைத் தலைவர் பாராட்டினார்.

தென் தீபகற்ப நதிநீர் வினியோக அமைப்பை உடனடியாகத் தொடங்கத் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இதை ஒரு தேசிய திட்டமாக எடுத்துச் செயல்படுத்த வேண்டுமெனவும் முதல்வர் கேட்டுக் கொண்டார்.

எரிவாயுத் திட்டம்

பம்பாயிலிருந்து இயற்கை எரிவாயுவை அனைத்துத் தென் மாநிலங்களுக்கும் கொண்டு வருவதற்கான தென்னக எரிவாயு வினியோக அமைப்புக்குத் தென் மாநிலங்கள் அனைத்தும் கூட்டாக நிதியுதவி செய்யவேண்டுமெனக் கோரி, சென்னையில் நடந்த தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைத் திட்டக் குழுத் துணைத் தலைவர் கவனத்துக்குக்

தமிழகத்தில் 2,000 எக்டேர் பரப்பில் பாமாலின் மரங்கள் பயிரிடப்படும்!

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள், தென் அமெரிக்காவைச் சேர்ந்த 'கோஸ்டாரிக்கா' நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் விதைகளை வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப., அவர்களிடம் 25.11.92 அன்று தலைமைச்செயலகத்தில் வழங்கினார். வேளாண்மைத்துறை சிறப்புச் செயலர் திரு. ஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப. அவர்களும் உடனிருந்தார்.

மொத்தம் 3.4 இலட்சம் பாமாலின் விதைகள் மூன்று கட்டங்களாக, 'கோஸ்டாரிக்கா' நாட்டிலிருந்து வாங்கப்பட உள்ளது. இதன் மதிப்பு ரூ.50 இலட்சமாகும். முதல் கட்டமாகத் தற்பொழுது 96,000 பாமாலின் விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த விதைகளைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டை அரசு விதைப் பண்ணையிலும், திருச்சி மாவட்டம் இனுங்கூர் அரசு விதைப் பண்ணையிலும் நாற்றங்கால்கள் அமைக்கப்படும். இந்த நாற்றங்கால்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கன்றுகளைக் கொண்டு தமிழகத்தில் 2,000 எக்டேர் பரப்பில் பாமாலின் மரங்கள் பயிரிடப்படும்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், தரமான கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பதை முறைப்படுத்துவது குறித்தும், தரமான கால்நடைத் தீவனங்களை வழங்குவது குறித்தும், முட்டை விலையினைக் குறைப்பது குறித்தும் தலைமைச்செயலகத்தில் அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

கொண்டுவந்த முதல்வர் அவர்கள், இந்த முக்கியமான திட்டத்துக்கு ஒப்புதல் பெற அவர் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரூ.1,200 கோடி முதலீட்டிலான பள்ளிக் கல்வித் திட்டம், ரூ.320 கோடி முதலீட்டிலான காவிரி நதி மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டம், ரூ.530 கோடி செலவிலான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் இரண்டாவது திட்டம் போன்ற வெளி உதவி தேவைப்படும்.

தமிழ்நாட்டின் பல பெரிய திட்டங்களை, திட்டக் குழுத் துணைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது, அவற்றிற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டியதன் அவசியத்தையும் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார். புயல் ஆபத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் பாசன நீர்த் தொகுப்புத் திட்டம் ஆகியவை குறித்தும் உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டார். சென்னை நீர்வழித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு உலகச் சுற்றுச் சூழல் நிதியிலிருந்து உதவி பெறலாம் என்றும் முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தமிழகம் எதிர்நோக்கியுள்ள விசேஷ வளர்ச்சிப் பிரச்சினைகளை முதல்வர் அவர்கள் திட்டக் குழுத் துணைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். குறிப்பாகக் கடற்கரையோரம் மற்றும் கடல் எல்லைப் பிரச்சினைகள் குறித்து முதல்வர் விளக்கினார். சென்னை நகர மேம்பாட்டுப் பணிகளுக்கும் முதல்வர் அவர்கள் உதவி கோரினார். தனி நபர் வருமானத்தைப் பொருத்த மட்டில் தேசிய சராசரி விளிம்பில் தமிழ்நாடு இருப்பதால், தமிழகத்துக்கு அதிக அளவில் மத்திய உதவி வழங்கவேண்டியதன் அவசியத்தை முதல்வர் வலியுறுத்தினார். தெலுங்கு கங்கை மற்றும் அதனைச் சார்ந்த சென்னை நகரக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதி அளிக்க விசேஷக் கடன் பத்திரங்களை வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

1991-92-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டையும் மிஞ்சி தமிழகம் சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டிருப்பதையும், 1992-93-ஆம் ஆண்டில் நல்ல சாதனைகள் இருந்ததையும் கருத்தில் கொண்டு 1993-94-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்ட மதிப்பீடு ரூ.2,101 கோடி எனக் கூட்டத்தின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது. இது 1992-93-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 20 சதம் கூடுதலாகும்.

தமிழ்நாட்டின் 1993-94-ஆம் ஆண்டுத் திட்டத்தின் முன்னுரிமைத் திட்டங்கள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். விவசாயம், ஊரக வளர்ச்சி மற்றும் பாசனத் திட்டங்களுக்கான முதலீடு ரூ.432.97 கோடியிலிருந்து 459.70 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். இதைப்போலத் தொழில் மற்றும் மின்சாரத் திட்டங்களுக்கான முதலீடு ரூ.563.50 கோடியிலிருந்து ரூ.658.05 கோடியாகவும், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முதலீடு ரூ.126.74 கோடியிலிருந்து 299.45 கோடி ரூபாயாகவும், உயர்த்தப்படும். கல்வி, சுகாதாரம், சத்துணவு உள்ளிட்ட சமூக நலப் பணிகளுக்கான திட்ட முதலீடும் ரூபாய் 611.46 கோடியிலிருந்து ரூ.665.88 கோடிக்கு உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டின் 1993-94-ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.2,101 கோடி என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது 1992-93-ஆம் ஆண்டுத் திட்டத் தொகையைவிடக் கணிசமான உயர்வு என்பதைப் பிரதிபலிக்கிறது.

நீங்க நல்லா இருக்கணும்

'மதுவிலக்குப் பிரச்சார'த் திரைப்பட வெளியீட்டு விழா

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான மதுவிலக்குப் பிரச்சார உயர்மட்டக் குழு, மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருந்தது. ரூ.85 இலட்சம் செலவில் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு பிரபல திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்படத்தின் வெளியீட்டு விழா 26.11.92 அன்று மாலை, சென்னைக் கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இப்படத்தின் இயக்குநர் திரு. விசு விளக்கவுரையாற்றினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உள்துறைச் செயலாளர் அவர்களும், ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனர் திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களும் திரைப்படத்தின் நாயகன் திரு. நிழல்கள் ரவி அவர்களும் பொன்னாடை போர்த்தினார்கள். 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படத்தின் படச்சுருளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வெளியிட, திரைப்பட விநியோகஸ்தர்கள் சார்பில், திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை உரையில் கூறியதாவது:-

மதுப்பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து, அவனை மிருகமாக மாற்றி விடுகிறது என்றார், மகாத்மா காந்தி அவர்கள். மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது என்றார், தந்தை பெரியார். மதியை மயக்கும் குடிப்பழக்கத்தை, சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பது தான், பெரியோர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து.

குடியின் கொடுமை, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி, அனைவரையும் அழிக்கும் அரக்கத்தனம் கொண்டது. குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள், முதலில் தம்மை அழித்துக் கொள்கிறார்கள். அடுத்து அவர்களைச் சார்ந்துள்ளவர்களை, நிலையான பாதிப்பிற்கு ஆட்படுத்துகிறார்கள்

குறிப்பாக, மனைவி மக்களின் நலன், முழுமையாகப் புறக்கணிக்கப் படுவதோடு, அவர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களது சந்ததியினரின் மன நலத்திற்கும், பெரும் பாதிப்பையும் தீங்கினையும் விளைவிக்கிறார்கள். இப்படி, இவ்வளவு தீமைகளை விளைவிக்கக் கூடிய மதுப் பழக்கம், தேவை தானா? பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும், நியாயத்தோடு எழ வேண்டிய நேர்மையான கேள்வி இது.

சாதாரண மனிதனை வறுமையில் வாட்டி, ஏழ்மையில் ஆழ்த்தி, அவனை வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுத்து வருகின்ற மதுவிற்கு, சாவு மணி அடிப்பது, நமது சமுதாயத்தின் தலையாய கடமை. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, அரசு எத்தனை உதவிகள் செய்தாலும், அவற்றின் முழுப் பயனும் அவர்களுக்குப் போய்ச் சேராமல், அவர்களைத் தொடர்ந்து வறுமையில் ஆழ்த்தும் வலிமை படைத்த, மது அரக்கனை ஒழிக்கவும், அவர்கள் மதுப் பழக்கத்தை விட்டொழிக்கவும் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதே, சரியான மார்க்கமாகும்.

சட்டத்தை மட்டுமே வைத்துக் கொண்டு, சமுதாயத்தின் குடிப் பழக்கத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்பது, நாம் அனுபவ பூர்வமாக அறிந்த உண்மை. எனவே தான், குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களின் மனமாற்றத்திற்கு உதவுகிற வகையில் தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும், என்ற எண்ணம் உருவானது. அதன் அடிப்படையில்தான், குடியின் தீமையை வலியுறுத்த, நல்ல திரைப் படம் ஒன்றை, வணிக ரீதியில் தயாரித்து, அதைத் தமிழகம் எங்கும் திரையிட்டு, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று, நான் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும், மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழு முடிவெடுத்தது.

தற்போது அந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு, குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களிடையே ஒரு மனமாற்றத்தை உண்டாக்கவும், மதுவை நாட எத்தனித்து, எப்போதும் மனக்கிலேசத்தில் தத்தளிக்கும் இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், ஒரு முழு முதல் முயற்சியாகத்தான், 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற இந்தத் திரைப் படம், தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் நாளை முதல் வெளியிடப்படுகிறது.

இந்தத் திரைப்படத்திற்கு நான் ஏன் இந்தப் பெயரைச் சூட்டினேன் என்றால், தமிழக மக்கள் ஒவ்வொருவரும் 'நல்லா இருக்கணும்' என்பது தான் என்னுடைய ஆசை; இதுவே எங்கள் அரசின் குறிக்கோள் இலட்சியம் சிந்தனை ஆகும். ஆகவேதான், தமிழக மக்களின் வாழ்வு வளம் பெறவேண்டும் என்பதற்காக, எல்லா முயற்சிகளையும் எங்கள் அரசு, தொய்வில்லாமல் தொடர்ந்து எடுத்து வருகிறது.

காலம் காலமாக இருந்து வரும் ஒரு சமூகத் தீமையைக் களைய, மக்களிடையே இதைப்பற்றி ஒரு புதிய கருத்தைச் சொல்ல, ஒரு திரைப்படத்திற்கு வலுவான கதை, கதைக்கேற்ற பாத்திரப்படைப்பு, உயிரோட்டமுள்ள வசனம், கருத்து மிக்க பாடல்கள், நிச்சயம் தேவை. 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப் படத்தில், அத்தனை அம்சங்களும் நிறைந்துள்ளதாக நான் கருதுகிறேன்.

சமுதாயப் பார்வையோடு, குடிப் பழக்கத்தை எதிர்க்கும் ஒரு சீர்திருத்தக் கருத்தை, வலியுறுத்தும் படமாக இருந்தாலும், குறிப்பாக குடிப்பழக்கம் உள்ளவனாக, அவனது மனைவியாக, உறவினர்களாக நடிப்பதற்கு, நடிகர் நடிகையர்களே தயங்குகிறார்கள். தன்னை ஒரு குடிகாரன் என்று, தன் நிழல் கூடச் சொல்லிவிடக் கூடாது என்று, எந்த ஒரு மனிதனும் விரும்புவது இயற்கை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழக அரசுக்காக, அரசின் நல்ல நோக்கத்திற்காக, சமுதாயத்தில் நிலவி வரும் ஒரு கொடுமையைக் களைய, தம்மால் இயன்ற பணியை ஆற்ற விழைந்துள்ள, இந்தத் திரைப் படத்தில் நடித்த, நடிகர், நடிகையர், கலைஞர்கள், திரைத் தொழில் நிபுணர்கள் ஆகியோருக்கும், இந்தப் படத்தை ஒரு துணிச்சலான முயற்சியாக எடுத்துக்கொண்டு, திரைப் படத்தைத் திறம்பட முடித்துக் கொடுத்துள்ள ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினருக்கும், என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் மக்கள் மனதைத் தொட்டு, மதுவிலக்குக் கொள்கை, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகின்றேன். தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு, இந்தத் திரைப்படம், மேலும் வலிமை சேர்க்கும் என்பதிலும் ஐயமில்லை.

இந்தத் திரைப்படத்திற்குக் 'கேளிக்கை வரி' விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், சிக்கனமாகச் செலவு செய்து, இந்தத் திரைப்படத்தைத் தயாரித்ததோடு மட்டுமன்றி, 30 பிரிண்டுகள் எடுப்பதற்கான செலவையும், இந்தத் திரைப்படத்தை விளம்பரப்படுத்துவதற்கான செலவையும் சேர்த்து, மொத்தம் 88 இலட்சம் ரூபாயில் முடித்துள்ளார்கள் என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில், இந்தத் திரைப் படத்தைத், தங்களது சொந்தப் பொறுப்பில் வெளியிடவும் முன் வந்துள்ளார்கள். படம் வெளியிடப் பட்ட 90 நாட்களுக்குள், இதற்காக அரசு செலவு செய்த 85 இலட்சம் ரூபாயும் அரசிடம் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்கள். இந்தச் செய்தி நிதி அமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்தத் திரைப்படம் முக்கியமாக, மக்களிடையே ஒரு மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வசூலிலும் ஒரு சாதனையை நிகழ்த்த வேண்டும் என்ற என் விருப்பத்தினை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் திரைப்படம் படைக்கப்பட்ட தன் நோக்கம் நிறைவு பெறும் வகையில், தமிழக மக்கள் இதனைக் கண்டுகளித்துப் பயன்பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் வெற்றிகரமாக நூறு நாட்கள் ஓடி, நூறாவது நாள் விழாவில் நான் பங்கு கொண்டு இப்படத்தின் வெற்றிக்கு உழைத்த அனைத்துக் கலைஞர்களுக்கும் என் கரங்களால் வெற்றிக் கேடயங்களை வழங்க வேண்டும் என்னும் என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஜி.வி. பிலிம்ஸ் அதிபர் திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள் நன்றி நவின்றார்.

அதைத் தொடர்ந்து 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம் திரையிட்டுக் காட்டப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இறுதி வரை இருந்து திரைப்படத்தைக் கண்டு களித்தார்கள்.

இத்திரைப்படம் 27.11.92 முதல் தமிழகமெங்கும் திரையிடப் பட்டது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

தமிழ்நாட்டில் 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு காடு வளர்க்கும் திட்டத்தின்கீழ், வறட்சிப் பகுதிகளில் 90 இலட்சம் மரக் கன்றுகள் நடப்படும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 65 இலட்சம் எக்டேர் நிலங்கள் உள்ளன. இதில் 30 இலட்சம் எக்டேர் நிலங்கள் விவசாயம் செய்ய முடியாமல் வறண்டுபோய் உள்ளன. இந்த நிலங்களில் விவசாயக் காடுகள் வளர்க்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன்படி இவ்வாண்டில் (1992-'93) 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் காடுகள் வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இதற்காக ரூ.2 கோடியே 21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களில் 90 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப் படும்.

தமிழகத்துக்கு ரூ.54 கோடி விவசாய மானியம்

சிறு விவசாயிகளுக்கு உதவும் திட்டங்களை நிறைவேற்ற தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு ரூ.53.82 கோடி மானியம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 42 இலட்சம் சிறு விவசாயிகள் பயன் பெறுவர்.

உர விலை உயர்வால் அவதிப்படும் விவசாயிகளுக்கு உதவும் விவசாயத் திட்டங்களுக்கு மானியம் வழங்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அறிவித்த ரூ.500 கோடியிலிருந்து இந்த மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று மத்திய அரசு தமிழகத்துக்கு இந்நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

மத்திய அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி சிறு விவசாயிகள் பயன்பெறும் விதத்தில் 9 திட்டங்களை நிறைவேற்ற, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. உயர்ரக விதைகள் உற்பத்தி செய்து கூடுதலாக இருப்பு வைத்தல், உரம் கிடைக்காத பகுதிகளுக்கு எளிதில் உரம் கிடைக்க சிறந்த உர சேமிப்புக் கிடங்குகளையும் மண் ஆய்வு மையங்களையும் நிறுவுதல், சிறிய டிராக்டர்களுக்கு மானியம் வழங்குதல், உரத் தரக் கட்டுப்பாடு நிறுவனத்தை மேம்படுத்துதல், ஆழ்குழாய் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்தல், பழம்-காய்கறி உற்பத்தியாளர் சங்கங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற திட்டங்கள் இதில் அடங்கும்.

இந்தத் தகவலை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் அண்மையில் சென்னையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

நீலப் புரட்சி

பசுமைப் புரட்சி, வெண்மைப்புரட்சி பற்றி பெரும்பாலானோருக்கும் தெரியும். ஆனால் நீலப் புரட்சி பற்றி எத்தனைப் பேருக்குத் தெரியும்?

மீன் பிடித் தொழிலில் சாதனை படைப்பதையே நீலப் புரட்சி என்கிறோம். 7,500 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையும், இருபது இலட்சம் சதுர கிலோ மீட்டர் நீளக்கடல் பரப்பும் கொண்ட இந்தியா, ஆழ்கடல் மீன் பிடிப்பில் முன்னேறி வருகிறது.

இந்தியக் கடற் பகுதியில் 39 இலட்சம் டன் மீன் வளம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 50 சதவிகித மீன்கள் மட்டுமே பிடிக்கப் பட்டு வருகிறது. ஆனால், ஆழ்கடலிலுள்ள செதில் மற்றும் சிப்பி மீன்கள் இன்னும் முழுவதுமாகப் பிடிக்கப்படவில்லை.

மீன் வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, மீன்பிடித் துறைகள், குளிர் சாதனம் மற்றும் பதனப்படுத்தும் வசதிகளை அரசு ஏற்படுத்தி வருகிறது.



புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா

பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்



காமராசர் மாவட்டம், இராச பாளையத்தில் உள்ள முடிதிருத்து வோர் கூட்டுறவுச் சங்கம், நகராட் சிப் பகுதியை எல்லையாகக் கொண்டு 20.6.1966 அன்று பதிவு செய்யப்பட்டு 24.6.1966 முதல் செயல்பட்டு வருகிறது.

அங்கத்தினர்களும், பங்கு மூலதனமும்

சங்கத்தில் 172 மருத்துவ குலத் தொழிலாளர்கள் அங்கத்தினர் களாக உள்ளனர். ரூ.10,115 பங்கு மூலதனத்துடன் இச்சங்கம் இயங்கி வருகிறது.

நோக்கமும, செயல்பாடும்

அங்கத்தினர்களின் சுயவேலை வாய்ப்புக்குக் கருவிகள் வாங்கிட வும், முன்கடனைத் தீர்க்கவும் கடன் உதவி செய்வது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற் கருவிகள் வாங்கவும் முன்கடன் தீர்க்கவும் இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் இதுவரை 66 அங்கத்தினர்களுக்குத் தலா ரூ.1,000 வீதம் ரூ.66,000 மத்திய காலக் கடனாக வழங்கப் பட்டுள்ளது. இதில், தற்போது 61 அங்கத்தினர்களிடமிருந்து ரூ.50,361.65 நிலுவையாக இருக் கிறது. மத்திய வங்கிக்குச் சங்கம் செலுத்த வேண்டிய கடன் நிலுவை மட்டும் ரூ.28,847 ஆகும்.

குளிரூட்டப்பட்ட முடிதிருத்தகம் ஒன்றும், நவீன முடிதிருத்தகம் ஒன்றும் சங்கத்தால் இங்கே நடத்தப் பட்டு வருகிறது. இதன் மூலம் 6 அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இச்சலூன்கள் மூலம் சராசரியாக மாதந்தோறும் ரூ.3,000 முடிதிருத்தகச் சங்கத் திற்குக் கிடைத்துவருகிறது.

அரசு உதவி

சங்கம் நடத்திவரும் சலூன் களுக்குத் தேவையான தொழிற் கருவிகள் மற்றும் குளிர்சாதன இயந்திரம் வாங்கிடத் தமிழக அரசு ரூ.11,000 மானியமாக வழங்கியுள் ளது. மேலும், சங்கத்தின் செயல் திறனை அதிகரிக்கும் பொருட்டு இராசபாளையம் மற்றும் திருவில்லி புத்தூர் முடிதிருத்துவோர் கூட்டுற வுச் சங்கங்களுக்கு இளநிலை ஆய் வாளர் பணியிடம் ஒன்றை இல வசப் பணி அடிப்படையில் தமிழக அரசு வழங்கி சங்க வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

இச்சங்கத்திற்கு, 1990-91-ஆம் ஆண்டிலிருந்து மொத்த நட்டம், ரூ.40,690.56-ஐ, 1991-92-ஆம் தணிக்கையாண்டில் ரூ.8,632.20 நிகர லாபமாக ஈட்டி மொத்த நட்டத்தை ரூ.32,058.36 ஆகக் குறைத்து, தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திருவில்லிபுத்தூர்

திருவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியிலும் அதேபோல் ஒரு முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

அங்கத்தினர்களும், பங்கு மூலதனமும்

சங்கத்தில் 77 மருத்துவ குலத் தொழிலாளர்கள் அங்கத்தினர் களாக உள்ளனர். இச்சங்கம் ரூ.3,461 பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது.

நோக்கமும், செயல்பாடும்

அங்கத்தினர்களின் சுயவேலை வாய்ப்புக்குக் கருவிகள் வாங்கிட வும், முன் கடனைத் தீர்க்கவும் கடன் உதவி செய்வது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற் கருவிகள் வாங்கிட அங்கத்தினர் களுக்கு ரூ.12,500-ஐ தமிழக அரசு வட்டியில்லாக் கடனாக வழங்கி உள்ளது. இதில், தற்போது 52 அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக் கப்பட வேண்டிய கடன் நிலுவை யாக ரூ.8,222.52 உள்ளது. சங்கம் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூ.3,250 ஆகும்.

சங்கம் நவீன முடிதிருத்தகம் ஒன்றை நடத்தி வருகின்றது. இதன் மூலம் 2 அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. இதன் மூலம் சராசரியாக மாதந்தோறும் ரூ.1,000 வருமானமாகச் சங்கத் திற்குக் கிடைத்துவருகிறது.

அரசு உதவி

சங்க அங்கத்தினர்களுக்குத் தொழிற்கருவிகள் வாங்குவதற்காக ரூ.12,500-ஐ வட்டியில்லாக் கடனாகவும், ரூ.5,000-ஐ மானிய மாகவும் தமிழக அரசு வழங்கியுள்ளது. சங்கத்தின் செயல் திறனை மேலும் அதிகரிக்க இராச பாளையம் மற்றும் திருவில்லி புத்தூர் முடிதிருத்துவோர் கூட்டுற வுச் சங்கங்களுக்கு இளநிலை ஆய் வாளர் பணியிடம் ஒன்றை இலவசப் பணி அடிப்படையில் தமிழக அரசு வழங்கி, சங்க வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

திருவில்லிபுத்தூர் முடிதிருத்து வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1990-91-ஆம் ஆண்டிலிருந்த மொத்த நட்டம் ரூ.1,248.94 ஆகும். ஆனால் 1991-92-ஆம் தணிக்கையாண்டில் ரூ.1,714.82 நிகரலாபமாக ஈட்டி மொத்த நட் டத்தை ரூ.12,482.94 ஆகக் குறைத்து, தற்போது நல்ல முறையில் இச்சங்கம் செயல்பட்டு வருகிறது.

டிசம்பர்:9 பிறந்த நாள் நினைவாக...

மூதறிஞர் இராஜாஜி

இடைவிடாத முயற்சியும், தாம் கொண்டுள்ள கொள்கையில் உறுதியும், தன்னம்பிக்கையும், தளராத ஊக்கமும், நன்னடத்தையுமே ஒருவரைக் குன்றின்மேல் விளக்காக உயர்த்திவிடும். இவை எல்லாமே ஒருவரிடம் அமையப் பெறுவது அபூர்வம் என்பார்கள்.

ஆனால், அவையெல்லாம் கொண்டு உயர்ந்தவர்களையே பெரியோர் போற்றுவர்; மதிப்பர். இதில் சந்தேகமே இல்லை!

அப்படிப் போற்றிப் புகழப்பட்டவர்தான், பெரிதும் மதிக்கப்பட்டவர்தான் சி. ராஜகோபாலாச்சாரியார்.

'தான் கொண்டுள்ள கருத்தில் உறுதியும், எடுத்த செயலை ஏற்றமுடன் செய்து முடிக்கும் திறமையும், மன உரமும், அடக்கமும், அன்பும், விடா முயற்சியும் கொண்டவர்தாம் என்னுடைய அன்பிற்குரிய இராஜாஜி' — என்று மகாத்மா காந்தியடிகளே அவரை மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

இப்போது தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூருக்கு அருகில் இருக்கும் தொரப்பள்ளி என்னும் கிராமம், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தது ஒரு காலத்தில். அங்கு, சக்கரவர்த்தி ஐயங்காருக்கும் சிங்காரம் அம்மையாருக்கும் மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர்தான் இராஜகோபாலாச்சாரியார்.

1878 டிசம்பர் 9-ஆம் நாள் பிறந்த இவர்தான், பிற்காலத்தில் நாட்டு மக்களால் 'இராஜாஜி' என்று மிகுந்த மரியாதையோடு அழைக்கப்பட்டார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயரோ இராஜகோபாலன் என்பதாகும்.

என்ன புத்தகமானாலும் எடுத்துப் படிக்கும் குணம் இளமைக் காலத்திலேயே இவரிடம் அமைந்திருந்தது.

ஏழு வயது வரை தன் தந்தையாரிடமே பால பாடம் பயின்ற இவர், அதன் பிறகே, பள்ளியில் சேர்க்கப்பட்டார்; பின்னர், பெங்களூரில் உள்ள இலண்டன் மிஷன் பாடசாலையிலும், அங்குள்ள சர்வ கலாசாலையிலும் என்று இவருடைய படிப்புத் தொடர்ந்தது.

எதுவானாலும் படிப்பது-படித்ததில் சிறந்ததை மனதில் பதிய வைத்துக் கொள்ளுவது என்னும் நல்ல பழக்கத்தினாலேயே, பதினெட்டு வயதுக்குள்ளாக பி.ஏ. பட்டம் பெற இவருக்கு முடிந்தது. கல்லூரிப் பாடம் ஆயிற்று; வாழ்க்கைப் பாடத்தில் தேர்ச்சிபெற வேண்டாமா?

அலர்மேல் மங்கை என்பாரை இராஜாஜிக்கு மணம் முடித்து வைத்தார்கள் பெற்றோர்.

குடும்பமும் ஆயிற்று; வளமான குடும்பமே எனினும் செலவுக்கு வருவாய் தேட வேண்டாமா?

வழக்கறிஞர் தொழிலே வளமான தொழில் எனப் பலராலும் மதிக்கப்பட்ட அந்நாளில், இவருக்கும் அப்படியோர் ஆசை ஏற்பட்டது. சொல்வன்மையும், சோர்வின்மையும், வாதத்திறமையும், 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும்' ஆற்றலும் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றிருந்த இராஜாஜி, சென்னை சட்டக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தார்.

அப்போது, சென்னைக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தரோடு இராஜாஜிக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. அதன் காரணமாக அளவற்ற இறையுணர்வும், தேசிய உணர்வுகளும், தியாகச் சிந்தையும் இராஜாஜிக்கு ஏற்படலாயின.

சட்டத் தேர்வில் பி.எல். பட்டம் பெற்றாயிற்று. பின்னர், சேலத்தில் இவருடைய வழக்கறிஞர் தொழில் தொடங்கப்பட்டது.

எதையும் நுணித்தாராய்ந்து இவர் செய்யும் வாதத் திறமை எல்லோரையும் கவர்ந்தது. தொழில் நேர்த்தி காரணமாகப் புகழும் பொருளும் பெருகின. ஆனாலும், அநீதியை நீதியாக நிரூபிக்க இவர் அஞ்சினார். நீதி தம் பக்கம் இருந்தும் வழக்காடப் பொருளுதவி இல்லாது தவித்த ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகக்கூட வழக்கு நடத்தி வாதிட்டுத் துணை புரிந்தார்.

இவ்வாறான பண்புகளால் மக்களிடம் இவருக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது. இதனால், நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்ட இராஜாஜி, சேலம் நகராட்சித் தலைவரானார்!

ஐயங்காராகப் பிறந்திருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்தில் இவர் பேரார்வம் காட்டினார். அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் அவர்களுக்கெல்லாம் போதுமான இடம் கிடைக்கப் பேருதவி செய்தார்.

தன்னுடைய சமுதாயமே ஒதுக்கி வைக்கிற அளவுக்கு இத்தகைய சீர்திருத்தச் செயல்களில் தீவிரமாக இருந்தார். இந்தத் தீவிரமே, பிற்காலத்தில் இவர் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், அரிசன மக்களின் ஆலயப் பிரவேசச் சட்டத்தை இயற்றச் செய்தது.

தன் இனத்தார் தன்னை ஒதுக்கி வைக்குமளவில் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்தில் இவருடைய ஆர்வம் அளவற்றதாயிருந்தது.

காந்தியாரின் கொள்கையிலும், கதரியக்கத்திலும் இராஜாஜிக்கிருந்த பற்று, 1917-இல் காந்தியடிகளை நேரில் சந்தித்த பின்னர் இன்னும் பெருகியது. இதன் காரணமாக நகராட்சித் தலைவர் பதவியைத் துறந்து, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி இந்திய விடுதலைப் போராட்டத்தில் தானும் இணைந்தார். வெள்ளை ஏகாதிபத்தியம் இவருடைய வேகமும் விவேகமும் கண்டு கதிகலங்கி வேலூர்ச் சிறையில் இராஜாஜியை அடைத்து வைத்தது.

'காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது' என்ற கருத்துடையவரான அவர், சிறை வாசத்தையும் வீணே கழிக்கவில்லை! 'இராஜகோபாலாச்சாரியாரின் சிறை வாசம்' என்றொரு புத்தகத்தை எழுதி முடித்தார் அங்கே!

அந்த அருமையான புத்தகம், 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்கிற வேகத்தை நாட்டு மக்களிடையே உண்டாக்குவதாக அமைந்திருந்தது.

இத்தகைய எழுத்தாற்றல், சில காலம் காந்தியடிகளாரின் 'யங் இந்தியா' ஏட்டிலே பொறுப்பாசிரியராகவும், 'விமோசன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவுமே இவரை விளங்கிடச் செய்தது.

1925-ஆம் ஆண்டில் திருச்செங்கோட்டுக்கு அருகில் உள்ள புதுப்பாளையத்தில் 'காந்தி ஆசிரமம்' நிறுவி அதன் தலைமைப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார் இராஜாஜி. அந்நாளில் கதர்த் தொழிலின் வளர்ச்சி, மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றுக்

நினைவில் இராஜாஜி!

1973 - டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

1975- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் தமிழக அரசால் கட்டப்பட்டு, 5.5.1975 அன்று திறக்கப்பட்டது. இராஜாஜி வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான படங்களும், இராஜாஜி பற்றிய நூல்களும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நூலகக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இராஜாஜி நினைவு இல்லம்

1978-தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசுடைமையாக்கி, 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார். இராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படங்கள் அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.



சென்னை உயர்நீதிமன்றத்துக் கருகில் இராஜாஜி சிலை 24.12.78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.

காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு பாடுபட்டார்.

1930-இல், வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கினார், அப்போது வேதாரண்யத்திலும், தண்டியிலும் சட்டத்தை மீறி தலைமை தாங்கி உப்புக் காய்ச்சிய பெருமை இவருடையது.

1937-ஆம் ஆண்டு தேர்தலின் பின், சென்னை முதலமைச்சராகப் பதவி வகித்த இராஜாஜி, முதன் முதலாக மது விலக்குச் சட்டத்தைச் சேலம் மாவட்டத்தில் கொண்டு வந்து மக்கள் மது அரக்கனின் கோரப்பிடியில் சிக்குவதை அடியோடு தவிர்த்தார். விவசாயக் கடன் நிவாரண மசோதாவை மிக்க துணிவுடன் கொண்டுவந்து விவசாயிகளின் துயர் துடைத்தார்.

அப்போது இவர் செய்த துணிச்சலான காரியம் ஒன்று, ஆங்கிலேயர்களையே அதிரவைப்பதாக இருந்தது.

சென்னையில், அப்போது மவுண்ட் ரோடாக இருந்த அண்ணா சாலையில், அரக்க குணம் படைத்த ஆங்கிலத் தளபதியின் சிலையொன்று வைத்திருந்தார்கள். அதை இரவோடு , இரவாகக் கொண்டு போய் பொருட்காட்சி சாலையில் வைக்கும்படி செய்து விட்டார் இராஜாஜி.

அவரது இந்தத் துணிவுகண்டு ஆங்கிலத் துரைத்தனம் மிரண்டது; இந்தியப் பெருமக்கள் மகிழ்ந்தார்கள்.

காந்தியார் மூட்டிவிட்ட சுதந்திரக் கனலின் சூடு பொறுக்காத வெள்ளையர்கள், நம் இந்தியத் திருநாட்டுக்கு விடுதலை வழங்கினர். 1946-இல் உருவான இந்திய அரசின் இடைக்கால அமைச்சரவையில் இராஜாஜியும் அங்கம் வகிக்கும் பேறு பெற்றார்.

1947 ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று இந்தியாவில் சுதந்திரச் சூரியன் உதயமானது. அதன்பின்-1948 முதல் 1950-ஆம் ஆண்டு வரையிலே, இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்று பார் புகழ நிர்வகித்த முதலாவது இந்தியக் குடிமகன் இவரே!

1952-இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்ற இராஜாஜி 'மூதறிஞர்' எனக் கற்றறிவாளர்களால் போற்றிப் புகழப் பட்டார்.

பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையில், போராட்டங்கள் பல வெடித்தன. அமைதியான அணுகுமுறையால் அவற்றையெல்லாம் வெற்றி கண்டார். விற்பனை வரிச்சட்டம், விவசாய நிலக் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகளை இயற்றினார்.

அவர் முதலமைச்சராக இருந்து நாடாண்ட காலத்தில், தமிழகம் நல்லபல முன்னேற்றங்களைக் கண்டது. வளர்ச்சிப் பணிகளைப் பெற்றது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலருக்கும் இராஜாஜிக்கும் நாளடைவில் கருத்து மோதல்கள் ஏற்படலாயின; கொள்கைக் குழப்பங்கள் ஏற்பட்டன. போராட்டமே வாழ்க்கையாக வாழ்ந்த இவர், அக்கட்சியை விட்டுவிலகி 1959-ஆம் ஆண்டில் அகில இந்திய சுதந்திரக் கட்சியைத் துவக்கினார்.

அக்கட்சி துவக்கப்பட நேர்ந்த காரணம், இனிச் செயல்படவிருக்கும் விதம் ஆகியவை பற்றி 'கல்கி' என்கிற தமிழ் ஏட்டிலும், 'சுதந்திரா' என்னும் ஆங்கில ஏட்டிலும் தொடர்ந்து எழுதிவரலானார்.

அப்போது காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தது. நாடாளுமன்றத்தில், நன்முறையில் அதை எதிர்த்து நின்று வெல்லக்கூடிய சக்தியுடையதாக சுதந்திரக்கட்சியை உருவாக்கும் அவரது முயற்சி ஏனோ முழு வெற்றிதரவில்லை. ஆகவே, அக்கட்சியானது தனித்தியங்கும் தன்மையை இழந்து பலவீனப்பட நேர்ந்தது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிகுதியாகப் பெற்றிருந்தவர் 'பாரத ரத்னா' பட்டம் பெற்ற இராஜாஜி.

'கண்ணன் காட்டிய வழி', 'சக்கரவர்த்தித் திருமகன்', 'வியாசர் விருந்து', 'குடி கெடுக்கும் கள்', 'உப நிடதப் பலகணி', 'சிசு பரிபாலனம்', 'தாவரங்களின் இல்லறம்', 'திண்ணை இராமாயணம்' போன்ற பல அருந்தமிழ் நூற்கள் தமிழிலக்கியத்திற்கு அவரால் அளிக்கப்பட்ட அருஞ் செல்வங்களாகும். ஏராளமான சிறுகதைகளையும் அவர் கருத்துக் கருவூலமாகப் படைத்தளித்திருக்கிறார்.

இத்தனை அருமை பெருமைகளுக்கு உரியவரான மூதறிஞர் இராஜாஜி அவர்கள், 25.12.'75-ல், சென்னையில் இயற்கை எய்தினார்.

நாடு நலம்பெறப் பாடுபட்ட அந்த நல்லறிஞர் இன்றில்லை என்றாலும், அவரது புகழ் என்றும் நின்று நிலவுமன்றோ?

—பி.எல். இராஜேந்திரன்



மூதறிஞர் இராஜாஜி பொன் மொழிகள்

நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

அயராது உழைக்கும் அஞ்சல் துறை

அயராது உழைக்கும் துறைகளில் அஞ்சல் துறையும் ஒன்று. தமிழ்நாட்டில் மட்டும் 12,157 அஞ்சல் நிலையங்கள் மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் 10,075 நிலையங்கள் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த ஆண்டு கூடுதலாக 42 அஞ்சல் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

விரைவு அஞ்சல் சேவை நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. நாட்டில் முதன்முறையாக 1.8.1986 முதல் இச்சேவை தொடங்கப்பட்டது. நாடு முழுவதிலும் 62 நகரங்களுக்கும், 48 வெளி நாடுகளுக்கும் இவ்வசதி உள்ளது.

கடந்த ஆண்டு விரைவு, அஞ்சல் சேவைப் பட்டுவாடா 211 சதவிகிதம் அதிகரித்தது. வருமானம் 58 சதவிகிதம் உயர்ந்தது.

சென்னையில் சில இடங்களில் பலவண்ண அஞ்சல் பெட்டிகள் வைக்கப்பட்டு உள்ளன. மாவட்ட ரீதியாக அஞ்சல்களை இதில் போடலாம். அஞ்சல் பிரிப்பகப் பணியை எளிதாக்க இது உதவுகிறது.

பண்டிகைக் காலங்களில் வாழ்த்து அஞ்சல்களை முன்னதாகவே போட்டால், பட்டுவாடா சிரமமின்றி நடக்கும். அதேபோலப்பெரிய அளவு வாழ்த்து அட்டைகளுக்குப் பதிலாக, நடுத்தர அளவு அட்டைகளை அனுப்பி அஞ்சல் துறைக்கு உதவலாம்.

அஞ்சல்

நாடு சுதந்திரம் அடைந்த சமயம் (1947-48) 23,341 ஆக இருந்த அஞ்சலகங்களின் தற்போதைய (1990-91) எண்ணிக்கையோ 1,48,719; இதில் 1,32,646 கிராமப்புறத்திலும், 16,073 நகர்ப்புறத்திலும் அமைந்துள்ளன. ஒரு அஞ்சலகமானது சராசரியாக 22.10 சதுர கி.மீட்டர் சுற்றுப்புறத்திற்கும், 4,607 மக்களுக்கும் செயலாற்றுகிறது. இது, சர்வ தேச அஞ்சல் அமைப்பின் கோட்பாடுகளுக்கு (20-40 சதுர கி. மீட்டர் அல்லது 3,000-4,000 மக்கள்) உட்பட்டுள்ளது.

நாட்டில் மொத்தம் 5,20,000-க்கும் மேற்பட்ட அஞ்சல் பெட்டிகள் உள்ளன. அஞ்சலைக் கையாளுவதற்காக 548 மெயில் அலுவலகங்கள் செயல்படுகின்றன. சாலை, இரயில் மற்றும் ஆகாய மார்க்கமாக அஞ்சல் அனுப்பப்படுகிறது.

• குடி என்பது வளர்ந்து கொண்டே வரும் சமூகத் தீமை!

- மகாத்மா காந்தியடிகள்

200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்காசிப் பாண்டியர் செப்பேடுகள் கண்டுபிடிப்பு!

ஸ்ரீவலவரகுணராம பாண்டியனின் காலத்தில், காஞ்சிபுரத்துக் கையிலாசப் பரம்பரையைச் சேர்ந்த சிவந்தபாதமூருடைய தேசிகருக்கு அமைத்துக் கொடுத்ததைக் குறிக்கிறது. மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல்களுள் ஒன்றான வலைவீசு புராணம் இச்செப்பேட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இதே ஆண்டில் எழுதப்பட்ட அடுத்த செப்பேட்டில் முதலில் ஐந்து வரிகள் கிரந்தத்திலும் பின்னர் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. சிவபூசையின் சிறப்பு, சிவபக்தி விரதங்களின் மகிமை ஆகியவை காணப்படுகின்றன. கிருஷ்ண அவதாரம், காஞ்சி கைலாயப் பரம்பரையினரின் மரபு, தென்காசியில் சிவாலய மடம் அமைத்த குறிப்பு,பாரிமகளிர் திருமணம்,

18-ஆம்நூற்றாண்டில் தென்காசிப் பகுதியில் ஆண்டு வந்த பாண்டியர் தம் செப்பேடுகள் மூன்றும்,நாயக்க மன்னன் விஜயரங்க சொக்கநாதர் காலத்துச் செப்பேடு ஒன்றும் ஆக நான்கு செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

தென்காசியைச் சேர்ந்த திரு.பி என்.முனுசாமி நாயுடு அவர்களிடம் இருந்த இச்செப்பேடுகளைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன காசிநாதன் அறிவுரையின்படி, துறையின் காப்பாட்சியர்கள், திரு.சந்திரவாணன்,மற்றும் திரு.வெ.வேதாசலம் ஆகியோர் சென்று பார்த்து, துறைக்குப் பெற்றுள்ளனர்.

முதல் செப்பேடு கி.பி.1753-இல் எழுதப்பட்டுள்ளது. தென்காசி விஸ்வேஸ்வரர் சன்னதியில் அபிஷேகமடம் ஒன்றினை முச்சங்கம் அமைப்பு போன்ற பல குறிப்புகளை இச்செப்பேடு தருகின்றது. மெலும், வரதுங்கப் பாண்டிய மன்னனால் எழுதப் பெற்ற பிரம்மோத்திரக்காண்டம், கருவை அந்தாதி, கருவை வெண்பா ஆகிய நூல்களையும், அதிவீரராமப் பாண்டியனால் எழுதப்பெற்ற நளன் கதை, வெற்றி வேற்கை,காசிக்காண்டம் ஆகிய நூல்களையும் தெரிவிக்கிறது. சொக்கலிங்கப்பூசைக்குக் கொடுத்த வரிகளின் பெயர்கள் பலவற்றையும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

வளையம் கோப்பதற்கான துளையுடன் காணப்பெறும் மூன்றாம் செப்பேடு படையாட்சியர் என்ற பள்ளிகள் ஐவர் சிவனின் மழுப்படையிலிருந்து பிறந்த வறலாற்றைக் கூறி, அவர்கள் மேற்குறித்த காஞ்சி கைலாயப் பரம்பரையின் சிவந்த பாதமூருடைய தேசிகரிடம் தீட்சை பெற்றதையும் அவர்கள் அம்மடத்திற்கு அளித்த கொடையினையும் குறிக்கிறது. இவர்கள்இவ்வுலகில் இருந்த இரு அரக்கர்களையும் இலங்கை மன்னன் ஒருவனையும் கொன்றனர் என்றும் கூறுகிறது செப்பேடு.

கி.பி. 1703-இல் எழுதப் பெற்ற நான்காம் செப்பேடு, மதுரை நாயக்கர் விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் தளகர்த்தரான, வேங்கட கிருஷ்ண மகிபாலனின் மகனான அரங்கசாமி நாயுடு என்பவர் அளித்த கொடையினைத் தெரிவிக்கிறது. மேலப்புலியூரைச் சேர்ந்த கவிராயகுமாரப் பாரதி பண்டாரம் என்பவர் 'வாகன கவி சாகித்யம்' என்ற நூலினை எழுதியமைக்கும், குற்றாலம் லோகநாயகி சந்நிதானத்தின் ஸ்தானிகமாகப் பணியாற்றியதையும் பாராட்டி இக்கொடை அளிக்கப்பட்டது. இச்செப்பேடு தெலுங்கில் உள்ளது.

18-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் சமய, பண்பாட்டுக் கூறுகளைத் தெளிவாகக்காட்டுவதோடு, காஞ்சி கைலாயப் பரம்பரையைப் பற்றிய அரிய செய்தியினையும் தருவதால் இச்செப்பேடுகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

Agencies	-	முகமையாளர்
Booster	-	ஊக்கியம்
Bunk	-	கடை, பெட்டிக்கடை
'Petrol Bunk	-	கல்லெண்ணெய்க் கடை)
Confrontation	-	எதிர்நிற்றல்
Chronic discase	-	விளியா நோய்
Corroborate	-	உறுதியூட்டு
Dilemma	-	தத்தளிப்பு, இருநிலைத் தவிப்பு
Distinction	-	சிறப்பு நிலை
Dock Charges	-	கப்பல்தளக் கட்டணங்கள்
Formality	-	முறைப்பாடு
Hallo	-	ஏலோ
Implication	-	உட்குறிப்பு
Indebtedness	-	கடன்பாடுகள்
Merit	-	தகுதி நிலை
Outstanding	-	மாண்சிறப்பு நிலை
Passed	-	ஏற்றுக்கொள்ளப்பெற்றது
Real Estate	-	நிலபுலச் சொத்து
Ribbon	-	மிளிர் நாடா
Screen Printing	-	திரை அச்சு, வலைத் திரையச்சு
Squad	-	பிடிக்கும் படை
Stall	-	கடை, காட்சிக் கடை

- நன்றி: முத்தமிழ் ஆய்வு மன்ற மலர்

மாணவர் பக்கம்

வௌவால்கள்

★ வௌவால்கள் (Bats) குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டிகளின் வகையைச் சார்ந்தது. உலகில்' சுமார் 950 வௌவால் இனங்கள் வாழ்ந்து வருவதாக விலங்கியலார் புள்ளி விவரம் கொடுத்துள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை திட்டவட்டமானது என்று உறுதியாகச் சொல்லமுடியாது. மேலும், புதிய இனங்கள் (Species) கண்டுபிடிக்கலாம்.

★ வௌவால்கள் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி வகையைச் சார்ந்த போதிலும், வானில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவையாகும்.

★ வௌவால்கள் கூடுகட்டி வாழ்வதில்லை. கூர்மையான பற்களை வைத்து மரக்கிளைகளில் துளை செய்து கூட வாழாது. இவைகள் இயற்கையான பாறை இடுக்குகளிலும், இருண்ட குகைகளிலும், உயர்ந்த மரங்களிலும் எந்தவித மாற்றமும் செய்யாமல் வாழ்ந்து வந்துள்ளன. இருப்பினும் -

★ குகைகளில் வாழ்ந்த வௌவால்கள் மனிதன் கட்டிய வீட்டின் கூரையில் வாழத் தொடங்கின. இருண்ட கோயில்களும், கல்லறைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் அவை வாழ்வதற்கு இடங்களாயின. இருப்பினும், 'யூரோடெர்மா பைலோ பேக்டம்' (Uroderma Bilo Bactum) என்ற வௌவால் இனம் வாழை இலையின் நடுநரம்புப் பகுதியைப் பற்களால் வெட்டி, அந்த இலையைக் கூடாரம் போல மாற்றி அதற்குள் வாழ்கிறது.

★ கிரேக்க இலக்கியத்தில் சொர்க்கலோகத்தின் ராணியாக ஜீனோ (Juno)-வின் வாகனம் மயில் என்றும், நரகலோகத்தின் தேவதையான புரோஸ்பரினின் (Prosperine) வாகனம் வௌவால் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ சீனாவிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் வௌவால்களை நன்மையினையும் இன்பத்தினையும் தரும் விலங்காகக் கருதுகிறார்கள்.

- நன்றி:
திரு. கே.கே. ராஜன் எழுதிய 'உலகில் உள்ள வௌவால்கள்'

பள்ளிக்கூடம் போகணும்!

— கவிஞர் ஆர்.சி. தமிழன்பன்

சாரைசாரையாக எறும்பு
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
தானியத்தை உணவுக்காகச்
சேகரிக்கப் போகுது!

வட்டமிட்டே வண்டுசுழன்று
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
வண்ணப்பூவின் இனியதேனைச்
சேகரிக்கப் போகுது!

பறவைக்கூட்டம் சிறகடிச்சு
எங்கே போகுது - பாப்பா
எங்கே போகுது?
பழமரத்தில் இரையைத்தேடிச்
சேகரிக்கப் போகுது!

எழுத்தறிவு சேகரிக்க
எங்கே போவது - பாப்பா
எங்கே போவது?
இனியகல்வி தந்துதவும்
பள்ளி போகணும்!

பொன்மொழிகள்

[illegible]

வாழ்க்கை வரலாறு

சிவகங்கை இராமச்சந்திரனார்

எஸ்.ஆர். இராமச்சந்திரன்
நிறுவனர்
எஸ்.ஆர்.ஆர். அறக்கட்டளை

சிவகங்கை இராமச்சந்திரனார் அவர்கள் பகுத்தறிவு இயக்கம் அரும்பிய காலத்தில் அதன் வெற்றிக்கு உழைத்த வீரர், தந்தை பெரியார் அவர்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பெருந்தகையாளர், சமூக நீதிக்காகக் கால மெல்லாம் உழைத்த சாதனையாளர், தடைகளைத் தகர்த்துத் தன்மானப் பாதையில் தாழ்த்தப்பட்ட மக்களையும், பிற்பட்டோரையும் அழைத்துச் சென்ற தலைவர், சுயமரியாதைப் பணிக்காக அமைச்சர் பதவியை ஏற்க மறுத்த இலட்சியவாதி, 'பழங்குடி மக்களின் பாதுகாவலர்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட புகழாளர்.

அவரது நினைவைப் போற்றும் வகையில், 21.10.'92 அன்று சிவகங்கையில் நடைபெற்ற மாபெரும் விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிவகங்கையில் இயங்கிவரும் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு, 'இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை' என்று பெயர் சூட்டிச் சிறப்பித்தார். அதையொட்டி, 'சிவகங்கை இராமச்சந்திரனார்' என்னும் இவ்வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

சிவகங்கை இராமச்சந்திரனார், பிரபல வழக்கறிஞராகவும், தாலுகா போர்டு தலைவராகவும், தேவஸ்தான கமிட்டித் தலைவராகவும் மதுவிலக்குக் கமிட்டித் தலைவராகவும், நீதிக்கட்சியின் தென்மண்டலத் தலைவராகவும் புகழோடு வாழ்ந்தவராவார்.

பிற்படுத்தப்பட்ட முக்குலத்தோர் குடியில், 16.9.1884 தேதியில் பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகாவில், ஆ.தெக்கூர் கிராமத்தில் பிறந்தார் - தந்தையார் சுப்பிரமணியன் சேர்வை. தாயார் சங்காமிருத அம்மையார்.

இவரது அம்மான் தமிழ்ப் பேராசிரியர், முத்துராமலிங்கம் அவர்களின் கண்காணிப்பில், திருவனந்தபுரத்தில் மெட்ரிகுலேஷன் வரை படித்து முதன்மையாகத் தேறி, பிறகு மதுரைக் கல்லூரியில், எப்.ஏ. முடித்து, திருச்சி செயின்ட் ஜோசப் கிறிஸ்துவக் கல்லூரியில், பி.ஏ. முடித்தார். சில மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு சென்னைப் பல்கலைக்கழக, சட்டக்கல்லூரியில் 1913-இல் சேர்ந்து பி.எல். முடித்தார். 1915-இல் மதுரையில் வழக்கறிஞராகச் சிறிதுகாலம் பணியாற்றி, பிறகு 1916-இல் சிவகங்கையில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கினார். 1916-இல் ஆரம்பித்த தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

20.11.1916-இல் சர்.பிட்டி. தியாகராயர் கையெழுத்திட்டு வெளியிட்ட ''பார்ப்பனர் அல்லாத மக்களின் உரிமைச் சாசனம்'' (The Magnacarta of Non-Brahmins), பட்டி-தொட்டிகளிலெல்லாம் பரவும் வண்ணம் தென் மண்டலம் முழுதும் இவர் அதனைப் பிரச்சாரம் செய்தார்

ஈரோட்டில் 10.5.1930-இல் நடைபெற்ற இரண்டாவது மாநில சுயமரியாதை மாநாட்டையொட்டி, தந்தை பெரியார் முதல் மதுவிலக்கு மாநாடு, பெண்கள் விடுதலை மாநாடு போன்ற சிறப்பு மாநாடுகளை நடத்தினார்.

திராவிட இயக்க வரலாற்றில் நடைபெற்ற முதல் மதுவிலக்கு மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் சிவகங்கை இராமச்சந்திரனார். பெண்கள் விடுதலை மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் டாக்டர் எஸ். முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்கள். தமிழகத்தில் முதல் மதுவிலக்கு மாநாடு நடத்திய பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு.

27.10.1930 முதல் 4.11.1932 வரை திவான் பகதூர் சித்தூர் பி.முனிசாமி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட நீதிக்கட்சி அமைச்சரவை சென்னை மாகாணத்தில் ஆட்சி புரிந்தது - அந்த அமைச்சரவையில் சிவகங்கை இராமச்சந்திரனார் பங்கு பெற வேண்டுமென்று முதல்வர் பி. முனிசாமி வேண்டிய போது, தந்தை பெரியார் கருத்துப் படி சுயமரியாதை இயக்கப் பணிகளுக்காக அமைச்சர் பதவி வேண்டாமென்று மறுத்தார்.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக்கட்சியினர் வெற்றி வாகை சூடினர். ஆனால், சர்.பிட்டி. தியாகராயர், முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்து, கட்சிப் பணிக்குத் தன்னை இணைத்துக் கொண்டார் என்பது வரலாறு.

இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை

தந்தை பெரியார் அவர்களுக்கு, சிவகங்கை இராமச்சந்திரனார் உறுதுணையாக இருந்தார். ஆரம்பத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமாய் அரும்பிய வேளையில், கடும் எதிர்ப்புகளை எல்லாம் உடைத்து எறிந்து, இப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வேரூன்றி வளர வழிவகுத்துக் கொடுத்தவர் அவர். அப்பெருந்தகையாளருக்கு ஒரு சிறப்பினைச் செய்திட, நான் முடிவு செய்துள்ளேன். சிவகங்கை நகரில் இயங்கி வரும் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இனி பெரியவர் இராமச்சந்திரனார் அவர்களின் பெயரைத் தாங்கி, ''இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை'' என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

—சிவகங்கை விழாவில்
மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

சர்.பிட்டி. தியாகராயர், 28.4.'25-ல் மறைந்த பின்னர், 1926-இல் பிறந்த தன் மகனுக்குத் ''தியாகராசன்'' என்று பெயர் சூட்டினார் இராமச்சந்திரனார்.

1925-இல் அம்புரோட்டில் (வடஇந்தியாவில்) நடைபெற்ற அனைத்து இந்தியப் பிராமணர் அல்லாதார் காங்கிரசுக்கு, தமிழ் நாட்டுப் பிரதிநிதியாகப் பங்கு கொண்டு இவர் சிறப்பித்தார்.

தோழர் இராமச்சந்திரன் நல்ல வாக்கு விலாசமுள்ள வக்கீலாகவும் தருந்த வரும்படியும், மேலும் மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய சௌகரியமும் இருந்தும் அவைகளை இலட்சியம் செய்யாமல், இயக்கத்திலேயே கவலை கொண்டு மற்றவைகளை அலட்சியம் செய்து வந்த உண்மைச் சுயமரியாதை வீரர் ஆவார்.

—தந்தை பெரியார்

1929-இல் . இராமநாதபுரம் மாவட்ட தேவஸ்தானக் கமிட்டித் தலைவரானார் இராமச்சந்திரனார். சமூகத்திற்கு அவர் எவ்வாறு தொண்டாற்றினார் என்பதற்கு அநேக சான்றுகள் உள்ளன. தேசியக் காங்கிரஸ் கட்சியில் காலியாக உள்ள ஒரு இடத்திற்கு, நாடார் வகுப்பைச் சேர்ந்த திரு. சு.ஆ.முத்து நாடார் பெயரை, தேவஸ்தான போர்டுக்குப் பரிந்துரை செய்தார் - ஆனால், முத்து நாடார் பெயர், வேட்பாளர் பட்டியலில் இல்லாததால், அது மறுக்கப்பட்டது. மேலும், அவர் தேவஸ்தான போர்டு துறை அமைச்சருடன் நேரில் பேசி, விருதுநகர், திரு பெ.சி.சிதம்பர நாடார் அவர்களை, கமிட்டி உறுப்பினராக நியமனம் செய்தார். மிகவும் தாழ்த்தப்பட்ட நாடார் வகுப்பினரைச் சேர்த்ததால் பெரியார் மிகவும் பாராட்டினார்.

அன்றைக்குத் தாழ்த்தப்பட்டுக் கிடந்த சமுதாயங்களில் ஒன்று நாடார் சமுதாயம். கோவில் நுழைவுக்காகப் போராடிக் கொண்டிருந்த வகுப்பு. இராமநாதபுரம் மாவட்டத்தில், கமுதி கோயிலுக்குள் நுழைய



இன்று ஏற்பட்டுள்ள அளவு சமூக விழிப்புணர்ச்சி ஏற்படாத நாட்களில் ஜாதிப் பித்தம் மேலோங்கி வர்ணாஸ்ரம தர்மம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த நாட்களில், சமரச ஞானம் பேசுவதே கடினமான காரியமாகக் கருதப்பட்ட காலத்தில், துணிந்து சமுதாய சீர்திருத்தத் தொண்டாற்றிய வீரர், பழங்குடி மக்களின் பாதுகாவலர் பெரியவர் சி.இராமச்சந்திரன் அவர்கள்.

—பேரறிஞர் அண்ணா

ஆகமப்படி அருகதை அற்றவர்கள் நாடார்கள் என்ற தீர்ப்பை இலண்டனில் இருந்த பிரிவி கவுன்சில் கூட தந்து விட்டது - அதற்கு மேல் பெரிய நீதிமன்றமே கிடையாது.

ஆனால், சமூகநீதிக்காக வாழ் நாள் முழுதும் போராடிய இராமச் சந்திரனார் அவர்கள், தான் தேவஸ் தான கமிட்டிக்குத் தலைவர் என்ற முறையில், புரட்சிகரமான செயல்கள் செய்தார்.

மேலும், 11.6.1932-இல் தேவஸ் தானக் கமிட்டிக் கூட்டத்தை கூட்டி, நாடார் வகுப்பைச் சேர்ந்த திரு. வி.வி. இராமசாமி நாடாரை கமிட்டியின் தலைவராக நியமித்து சரித் திரம் படைத்தார். அப்போதைய கமிட்டி உறுப்பினர்கள், செட்டிநாடு அரசர், இராமநாதபுரம் சேதுபதி முதலியோர் ஆவார்கள்.

அக்கூட்டத்தில் குத்தூசி குருசாமி அவர்களும் தீப்பொறி பறக்கும் உரை நிகழ்த்தினார். அந்த நிகழ்ச்சியின் விளைவாக சுயமரியாதை இயக்கத்திற்கு ஈர்க்கப்பட்டேன் என்று டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

சிவகங்கை இராமச்சந்திரனார், சிறந்த வழக்கறிஞராகவும், சிவ கங்கை சமஸ்தான வக்கீலாகவும், வழக்காடும் ஆற்றலைக் கண்டு, அன்றைய நீதிக்கட்சி அரசு, இவரை மாவட்ட நீதிபதியாகப் பணியாற்ற அழைத்தது. அப்பொழுது, ஆங்கிலேயர்கள்தான், 75 சதவிகிதம் நீதிபதியாக இருந்தார்கள்.

''தாழ்த்தப்பட்ட இனமக்களைத் தட்டியெழுப்புவேன் - அதற்காகவே பெரியார் அவர்களோடு சேர்ந்து அல்லும்பகலும் பாடுபடுவேன். எனக்குப் பதவி வேண்டாம்'' என்று பகன்ற நியாய உணர்வும், திடமான ஆணித்தரப் போக்கும் கொண்டவர் இராமச்சந்திரனார்.

செங்கல்பட்டில் 1929 பிப்ரவரியில் நடந்த முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில் பங்கு கொண்டு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

தீர்மானம்: ''மக்கள் தங்கள் பெயர்களோடு ஜாதி, அல்லது வகுப்பைக் காட்டுவதற்காகச் சேர்க்கப்படும், பட்டங்களை விட்டுவிட வேண்டுமென்று இம்மாநாடு பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது''.

''ஜாதி அல்லது சமயப் பிரிவுகளைக் காட்டும் குறிகளை யாரும் அணிந்து கொள்ளக்கூடாது என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது''.

இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பெரியார் பேசினார்.

விருதுநகரில் 1931-ஆகஸ்டு மாதம் நடந்த, மூன்றாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் முக்கியப் பங்கு ஏற்று, ''மத நடுநிலைமை'' (Secular State) பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இராமச்சந்திரனார் எண்ணற்ற எதிர்ப்புக்களை முறியடித்து நடத்திய ''இராமநாதபுர மாவட்ட ஆதி திராவிடர் மாநாடு'' வரலாற்றுப் புகழ் வாய்ந்தது - அதன் மூலம் ''ஆதிதிராவிடர்களின் பாது காவலன்'' என்ற பெயர் முக்குலத்துத் தலைவர் ஒருவருக்குக் கிடைத்தது எளிதான ஒன்றல்ல - சிவகங்கையைச் சுற்றியுள்ள, கொட்டகுடி, அகிலாண்டபுரம், காஞ்சிரங்கால் போன்ற கிராமங்களில் ஆதிதிராவிடர் நிறைந்த பகுதிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக இரவுப் பள்ளிகள் நிறுவினார் அவ்வாறு அவர் அமைத்துக் கொடுத்த பள்ளியில் படித்துத் தேறி கொட்டகுடியில் ஆசிரியையாகப் பணிபுரிய வாய்ப்புப் பெற்ற அகிலாண்டபுரத்துச் சிறுமிதான், பிற்காலத்தில் காங்கிரசு அமைச்சர் கக்கன் அவர்களின் துணைவியார் பார்வதி கக்கன் ஆவார்.

முதல் சுயமரியாதை மாநில மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியத் தலைவர்கள்

1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ந் தேதி செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநில மாநாட்டில் முதல்வர் டாக்டர் பி. சுப்பராயன் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். திரு. டபிள்யூ. பி.ஏ சவுந்திரபாண்டிய நாடார் தலைமை வகித்தார். திரு. ராவ் பகதூர் எம்.கே. ரெட்டி மாநாட்டின் வரவேற்புக்குத் தலைவராகச் செயல்பட்டார். திரு. சர்.பி.டி. ராஜன் கொடியேற்றினார். திரு. எஸ் முத்தையா முதலியார் வேளாண்மைக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். திரு. திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர், திரு. சர்.முகம்மது உஸ்மான், திரு. ராகவேந்திரா ராவ், திரு. நீலகிரி சஞ்சீவ்அய்யா எம்.எல்.சி. மைசூர் டாக்டர் ர.ராமசாமி முதலியார், தந்தை பெரியார், திரு. சிவகங்கை எஸ். இராமச்சந்திரன், திரு. ஏ.டி. பன்னீர் செல்வம் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

25.5.1929 அன்று பட்டுக் கோட்டையில் நடைபெற்ற முதலாம் மாவட்ட சுயமரியாதைத் தொண்டர் மாநாட்டையடுத்து, இறுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தலைமை ஏற்ற சிவகங்கை இராமச்சந்திரனார் ஆர்வம் பொங்க முழங்கினார்.

1992-நோபல் விருது பெறும் விஞ்ஞானிகள்

சர்வதேச அளவில் பல துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ராயல் ஸ்வீடன் விஞ்ஞான அகாடமி ஆண்டுதோறம் நோபல் விருதுகளை வழங்கி வருகிறது. இவ்வாண்டிற்கான விருது அண்மையில் அறிவிக்கப்பட்டது. விருது பெற்றவர்கள் வருமாறு:

பௌதிகம் (இயற்பியல்): பௌதீகத்துக்கான 1992 நோபல் விருது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி திரு. ஜார்ஜெஸ் சார்பாக் என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பௌதீகத்தில் இவரின் புதிய கண்டுபிடிப்புக்காக இவருக்கு 6.5 மில்லியன் குரோனர்கள் (3.5 கோடி ரூபாய்) வழங்கப்படுகிறது.

இரசாயனம் (வேதியியல்): இரசாயனத்துக்கான 1992-ஆம் ஆண்டு நோபல் விருது கலிபோர்னியா (அமெரிக்கா) நாட்டு விஞ்ஞானி பேராசிரியர் ரூடால்ப் ஏ.மார்க்ஸ் என்பவருக்கு வழங்கப்படுகிறது. வேதியியல் கிரியைகளில் மின்னணுப் பரிமாற்ற விளைவுகள் (Theory of electron transfer reactions in Chemical System) பற்றிய தத்துவ விளக்கத்திற்காக இவருக்கு நோபல் விருது வழங்கப்படுகிறது.

இலக்கியம்: இலக்கியத்தில் 1992-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு மேற்க்கிந்திய தீவுகள் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் திரு. டெரிக் வால்காட் என்பவருக்கு கிடைத்துள்ளது. இங்கிலாந்து நாட்டில் வசித்து வரும் இவருக்கு மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த செயின்ட் லூயிஸ் பூர்வீகமாகும்.

பொருளாதாரம் (பொருளியல்): பொருளியல் துறைக்கான இவ்வாண்டின் நோபல் பரிசு அமெரிக்க நாட்டின் சிகாகோ பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. கேரி எஸ். பெக்கர் என்பவருக்கு வழங்கப்படவிருக்கிறது. 61 வயதாகும் திரு. பெக்கருக்கு நோபல் விருதுடன் 1.2 மில்லியன் அமெரிக்க டாலர் கிடைக்கும்.

மருத்துவம்: மருத்துவத் துறைக்கான இவ்வாண்டின் நோபல் விருது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இரு உயிர் வேதியியல் வல்லுநர்கள் திரு. எட்மாண்ட் பிஷ்ஷர் மற்றும் திரு. எட்வின் கிரெப்ஸ் ஆகியோருக்கு வழங்கப்படும்.

வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளர்களாகப் பணியாற்றும் இவர்களின், தசைகளிலுள்ள புரதத்தை எப்படி தசைச் செல்கள் தங்களுடைய வேலைகளுக்குத் தேவையான சக்தியாக மாற்றுகின்றன என்ற கண்டுபிடிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகின்றது.

அமைதி: அமைதிக்கான நோபல் பரிசு அமெரிக்கா கண்டத்திலுள்ள குவாடிமாலா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைக்குழு அமைப்பாளர் செல்வி ரிகோ பெர்டா மென்சுவுக்குக் கிடைத்துள்ளது. 33 வயதான இவர் நாட்டை விட்டு ஓடி மெக்சிகோவில் தஞ்சம் புகுந்திருக்கிறார்.

பொதுவுடைமை இயக்கத் தலைவரான ஜீவா, அண்ணல் இராமச் சந்திரனாரின் சீடர் எனப்பெயர் பெற்றவர் - ஒருமுறை ஜீவாவை இழிவாகப் பேசிய அமராவதி புதூர் காவல்துறை அதிகாரியை எதிர்த்து, இராமச்சந்திரனார் ஜீவாவுக்காகப் போர்க்குரல் எழுப்ப, மாவட்ட ஆட்சித் தலைவரே வந்து மன்னிப்புக் கேட்க நேர்ந்ததாக உண்மை வரலாறு உண்டு.

தன்னை உருவாக்கிய பெருந்தகை இராமச்சந்திரனாரின் நினைவுப் பூங்காவை, அறிஞர் அண்ணா அவர்கள் 28.2.1948-இல் திறந்து வைத்த காலத்தில், தலைமறைவாகக் காடுகளில் வாழ்ந்த ஜீவா அவர்கள், தாடி வளர்த்த நிலையில் அவ்விழாவில் காட்சியளித்துப்பங்கு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1916-ஆம் ஆண்டு தொடங்கிய, பெரியார் இயக்கப் பணி இன்று வரை தொடர்ந்து இந்த குடும்பத்தாரால் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராகப் பணியாற்றி, மறைந்த சமூகநீதிக் காவலர் இராம சுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்., அவர்கள், இவரது மூத்த மகனாவார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் தலைவர், சிவகங்கை வழக்கறிஞர் இரா.சண்முகநாதன், பி.ஏ.,பிஎல்., அவர்கள் இவரது மருமகன் ஆவார்.

நூல்நயம்

தர்ம பாதை

ஆசிரியர்:
டாக்டர் ஏ.வி.எம். முருகன்
வெளியீடு:
கார்த்திக் பதிப்பகம்
36-ஏ/7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.
பக்கம்:120 விலை:ரூ.18/-

துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன?

'மனிதனின் ஆசையும், பொய்யான ஆக்கிரமிப்புத் தன்மையுமே ஆகும்' என்பது புத்தரின் கருத்து.

உலக மக்கள் உணர வேண்டி, உய்ய வேண்டி அவர் காட்டிய வழிதான் தம்மபதம் அதாவது தர்மப்பாதை. இதற்குத் தமிழ் வடிவம் கொடுத்து, எளிய இனிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

புத்தரின் கொள்கைகள், போதனைகள் எல்லாம் மக்கள் வாழ்க்கை நெறியுடன் வாழ்வதற்கு அடித்தளமாக உள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய கருத்துக் குவியல் இது.

உலகைப் பயமுறுத்தும் எய்ட்ஸுக்குச் சித்த வைத்தியம்

ஆசிரியர்: டாக்டர் துர்க்காதாஸ்
எஸ்.கே. ஸ்வாமி
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004
பக்கம்:184 விலை:ரூ.22/-

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களுள் எய்ட்ஸ் நோய் தலைமையிடம் வகிக்கிறது. புற்றுநோய் போன்ற பயங்கர நோய்களுக்குக் கூட இன்று நவீன மருத்துவம் உண்டு.

ஆனால், எய்ட்சுக்குத் தகுதியான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றே தெரிகிறது. ஆனால், அதன் அறிகுறியைத் தெரிந்து கொண்டு அந்த ஆபத்திலிருந்து விடுபட சித்த வைத்தியம் உதவுகிறது என்று இந்நூலாசிரியர் உறுதி கூறுகிறார். அதற்கான காரண காரியங்களையும் இந்நூலில் விளக்கியுள்ளார். அத்துடன் இந்நோயின் ஆரம்பக்கால அறிகுறியையும் பட்டியல் போட்டுத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

இதேபோல, எய்ட்ஸ் கூடிய அறிகுறிகளும், ஆரம்ப நிலைக்குரிய சித்தர் மூலிகைகளும் எனும் தலைப்பில் வைத்திய முறையைக் கூறுகிறார்.

இந்நோயின் தன்மை குறித்து உலக மருத்துவர்கள் கூறிய கருத்துரைகளையும் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டுகிறார். வயது வந்த (Adults) எல்லாரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய பலப்பலச் செய்திகள் இதில் பொதிந்துள்ளன.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கான சட்டங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்,
வெளியீடு:
முத்துமணி பதிப்பகம்,
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:76 விலை:ரூ.10/-

ஒரு மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் வருவாய்த் துறைக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் பெரும் பங்குண்டு. இந்தப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்களுக்கான சட்ட திட்டங்களை விளக்குவதே இந்நூல். அத்துடன், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் எவ்வாறு துரிதமாக நிறைவேற்றப்படுகின்றன என்பது பற்றியும் இது தெளிவுபடுத்துகிறது.

புலவர்கள் புலமை விளையாட்டு!

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்
வெளியீடு:
கலைவாணர் பதிப்பகம்,
3/17, சத்தியமூர்த்தி நகர்,
சென்னை-600 035.
பக்கம்:112 விலை:ரூ.18/-

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்கள் எல்லாம், இன்றளவும் பாடிப் பாடி மகிழ்கின்ற கருத்துக் கருவூலங்கள்.

பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர் பெரு மக்களின் பாடல்களைத் தொகுத்து, அதற்கு விளக்கவுரை தந்துள்ளார் நூலாசிரியர். அத்தனையும் கற்கண்டுகளாய் இனிக்கின்றன. அனைவரும் படித்து மகிழலாம்.

வீடியோ படம் எடுப்பது எப்படி?

ஆசிரியர்: ரவிராஜ்
வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.
பக்கம்:60 விலை:ரூ.20/-

வீடியோ என்பது, விஞ்ஞானம் நமக்கு வழங்கியுள்ள வரப்பிரசாதங்களில் ஒன்று. இன்றைய காலகட்டத்தில், வீடியோ இல்லாமல் நிகழ்ச்சிகள் இல்லை என்கிற அளவுக்கு, அதன் தேவை இன்றியமையாததாக இருக்கின்றது.

அத்தகு விந்தைக்கருவி குறித்தும், அதைக் கையாளும் முறைகள் குறித்தும் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. தக்க வகையில், விளக்கப்படங்கள் சேர்த்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

வீடியோ கலை ஆர்வலர்கள், பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு இந்நூல் நல்ல வழிகாட்டி.

கல்வியியல் கட்டுரைகள்

ஆசிரியர்: சோ. சந்திரசேகரன்
வெளியீடு:
சூடாமணி பிரசுரம்
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.
பக்கம்:116 விலை:ரூ.18/-

'**இ**ளமையில் கல்' என்றனர் பெரியோர். ஆனால், வறுமையின் காரணமாக இளமையில் பலர் கல்வி கற்க வியப்பில்லாமல் போய்விடுகிறது. அத்தகையவர்களுக்கு உதவுவதுதான் தொலைக்கல்வி, திறந்த கல்வி, இதை நயம்பட உரைக்கிறார் ஆசிரியர்.

கல்வித் தொழில் நுட்பவியலைப் பற்றிக் கூறும்போது, இன்றைய கல்விச் செலவுகள் அதிகரிப்பு குறித்தும் அதைச் சமாளிக்கும் வழிவகை குறித்தும் அலசுகிறார். இதேபோல் மரபுக் கல்வி, முறைசாராக் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி ஆகியவற்றைத் தக்க மேற்கோள்களுடன், தம் ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டு விளக்கியிருக்கும் பாங்கு சிந்தனைக்கு விருந்தாய் அமைகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள், இத்துறை ஆய்வாளர்கள் அனைவருக்கும் இது ஒரு வரப்பிரசாதம்.

—பி.வி.ஜி.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற...

ச. ரகுபதி இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலை-வாய்ப்பு நிறுவனம்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழிக்கேற்ப, நம் நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள்.



வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி அப்பாவி பொதுமக்களைச் சிலர் ஏமாற்றுவது அன்றாடம் நாம் அறிந்ததே. இத்தகைய இன்னல்களிலிருந்து மக்களை மீட்கவும், வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரிய விரும்பும் நபர்களுக்கு அரசே தகுந்த ஏற்பாடுகள் செய்யவும் கருதி, தமிழக அரசு 'அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்' என்ற ஒரு தனி அமைப்பினை 1979-ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவியது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் கிருஷ்ணமாசாலையில் அமைதியாகச் செயல்பட்டுவரும் இந்நிறுவனம், தொடக்கத்திலிருந்து இதுவரை சுமார் 5 ஆயிரம் நபர்களுக்கு வெளிநாடுகளில் பணிபுரிய ஏற்பாடு செய்து தந்திருக்கிறது.

இந்நிறுவனம் செம்மையாகச் செயல்படுவதால் வளைகுடாப் போரினால் இந்நிறுவனத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் ஈடு செய்து இலாபத்தில் தற்சமயம் இயங்க முடிகிறது என்பதை அறிந்து பெருமைப்படலாம்.

வளைகுடாப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புகள் திடீரெனப் பெருகி, இந்நாடுகளிலுள்ள பல முன்னணி ஒப்பந்தக்காரர்கள் தங்களிடம் ஏற்கெனவே பணியாற்றி வளைகுடாப் போரின்போது இந்தியா திரும்பிய பணியாளர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொண்டார்கள்.

அதே நேரத்தில் குவைத், சவூதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளிலுள்ள அரசுத்துறைகள் மற்றும் தொழிற்கூடங்களிலுள்ள பணிகளைப் பல புதிய ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்டனர். பிலிப்பைன்ஸ், வங்கதேசம், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து குறைந்த கூலிக்குப்

வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பொதுமக்களைச்சிலர் ஏமாற்றுவதைத் தடுக்கவும், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்பும் நபர்களுக்கு அரசே தகுந்த ஏற்பாடுகள் செய்து தரவும் அமைக்கப்பட்டது 'அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்'.

இந்நிறுவனம் இதுவரை சுமார் 5 ஆயிரம் நபர்கள் வெளிநாடுகளில் பணி புரிய ஏற்பாடு செய்து தந்துள்ளது.

பணியாளர்கள் கிடைத்தாலும், நமது நாட்டின் பணியாளர்களுக்கு அதிகத் தேவையும், மதிப்பும் இருந்தது.

இதன் விளைவாக, இந்தியாவிலுள்ள பல தனியார் நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் வளைகுடாப் போர் முடிவுற்ற பின்னர் ,அயல்நாடுகளுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கான தங்கள் கட்டணத்தைப் பலமடங்கு உயர்த்திவிட்டனர். ஆனால், அதே சமயம் தமிழக அரசுக்குச் சொந்தமான 'அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்' அமைதியான முறையில் செயலாற்றி, நியாயமான கட்டணம் வசூலித்து அயல்நாடுகளுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்து அனுப்பி வைக்கிறது.

இந்நிறுவனம், அயல்நாட்டுப் பணிகளுக்குச் செல்ல விரும்பும் நபர்களிடமிருந்து ரூபாய் நூறு மட்டும் பதிவுக் கட்டணமாக வசூலித்துக் கொண்டு அவர்களைப் பற்றிய முக்கிய விவரங்களை விண்ணப்பங்களின் மூலம் பெற்று, தனது தகவல் வங்கியில் பதிவு செய்து வைத்துக் கொள்கிறது.

அயல்நாட்டுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கும்பட்சத்தில், தமிழக அரசு நிர்ணயித்துள்ள ஒரு சிறுதொகையைப் பணிக் கட்டணமாக (Service charge) இவர்களிடமிருந்து வசூலித்துக் கொண்டு இவர்களை அந்தப் பணிகளுக்கு இந்நிறுவனம் அனுப்பி வைக்கும்.

வளைகுடாப் போருக்குப் பிறகு வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெருகியதைத் தொடர்ந்து அந்நாடுகளில் பணியாற்ற இந்நிறுவனம் 458 நபர்களைத் தேர்வுசெய்து இதில் 208 நபர்கள் இதுவரை அந்நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குவைத் நாட்டில் தொழில்நுட்பத் துறைகளில் பணியாற்ற கம்மியர் (Mechanic) Valve Fitter, Welder, மின்வினைஞர் (Electrician) போன்ற பணிகளுக்கு இந்நிறுவனத்தில் நவம்பர் முதல் வாரத்தில் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன. மேற்கண்ட பணிகளுக்கு இந்நிறுவனத்திடம் பதிவு செய்து கொண்டுள்ள தகுதிவாய்ந்த நபர்கள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

பெரும்பாலும் அயல்நாடுகளில் வேலை அளிக்கும் நிறுவனங்களின் ஒப்பந்தக்காரர்களே இந்நிறுவனத்துக்கு நேரில் வந்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நபர்களை நேரில் பேட்டி கண்டு, தேர்ந்தெடுப்பதால் இடைத் தரகர்களின் இன்னல்களும் பொருள் விரயமும் இதனால் பெரிதும் தவிர்க்கப்படுகின்றன.

மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தச்சர்கள், விற்பனையாளர்கள் போன்ற பல்வேறு தகுதியுடைய நபர்களுக்குச் சவுதி அரேபியா, குவைத், ஓமன்! மலேசியா, சிங்கப்பூர் போன்ற வளைகுடா நாடுகளிலும், கிழக்கு ஆசியா நாடுகளிலும் பெரும் தேவையிருப்பதால் அந்நாடுகளுக்கு இவர்களைக் குறைந்த செலவில் அனுப்பிவைக்க இந்நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது.

மேலும், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்குச் சவுதி அரேபியாவில் சுகாதாரத் துறையில் பெருமளவு தேவையிருப்பதால், மேற்கண்ட பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க இந்நிறுவனம் தற்சமயம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதவிர மதீனா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் தச்சர்கள், வர்ணம் பூசுபவர்கள், உதவியாளர்கள் போன்ற பணிகளுக்கு அந்நாடுகளின் விருப்பத்திற்கிணங்க, தகுதி வாய்ந்த முஸ்லிம் நபர்கள் மட்டும் தேர்வு செய்து அனுப்பப்படவிருக்கின்றனர்.

மேலும், பஹரெய்ன், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வீட்டுப் பராமரிப்புப் பணிகளுக்குப் பெண் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியும் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. அயல்நாடுகளில் இந்நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள தேவை பூர்த்தி செய்யப்பட்டால் இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் (1993 மார்ச் மாதத்திற்குள்) ஏறத்தாழ 2000 நபர்கள் இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது.

அயல்நாட்டுப் பணிகளுக்குச் செல்பவர்களுக்கு, அந்நாடுகளுக்குச் செல்வதற்கான விமானக் கட்டணம், பாஸ்போர்ட், விசா (VIS), போன்றவற்றை இவர்களைப் பணிக்கு அமர்த்தும் அந்நாட்டு நிறுவனமே இலவசமாகப் பெற்றுத் தருகிறது.

சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசின் 'அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்' போன்று டெல்லி, பம்பாய், ஐதராபாத், திருவனந்தபுரம், சண்டிகார் போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே மாநில அரசு நிறுவனங்கள் இத்தகைய பணியை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் வெளிநாட்டிலுள்ள வேலை அளிப்போரிடம் திறமையான நபர்களை அனுப்பும் நிறுவனம் என்ற பெருமையும், நல்ல பெயரும் தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துக்குக் கிடைத்திருப்பது பாராட்டுக்குரியது.

அயல்நாடுகளில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணிகளுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் பெருமளவு தேவை இருப்பதைக் கருத்தில் கொண்டு இதுவரை சுமார் 12 ஆயிரம் நபர்கள் இந்நிறுவனத்தின் தகவல் வங்கியில் (DATA BANK) பதிவு செய்து வைத்துள்ளனர். அரசுப்பணிகளில் பணிபுரிவோரும் இந்நிறுவனத்தில் பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். ஆனால், எந்தப் பணியானாலும் அனுபவம் இன்றியமையாத் தேவையாகும்.

மேலும், தற்போது இந்நிறுவனம் சென்னை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் பாண்டிச்சேரி மாநிலத்திலும் உள்ள பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் (Passport) பெற்றுத் தரவும் ஆவன செய்து வருகிறது.

இதுவரை சுமார் 400 நபர்களுக்கு இந்நிறுவனத்தின் மூலம் பாஸ்போர்ட் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடு சென்று பணிபுரிய விரும்பும் தகுதிவாய்ந்த நபர்கள் ரூ.100-ஐ ப் பணமாக நேரடியாகவோ அல்லது 'டிமாண்ட் டிராப்ட்' மூலமாகவோ தங்கள் பெயருடன் கீழ்க்கண்ட முகவரிக்குச் செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
12, முதல் மாடி, கிருஷ்ணமா சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

தமிழ்நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் அரசு அதிகாரிகள் திடீர்ச் சோதனை!

1992 செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு முழுவதும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறை அலுவலர்களும் உணவுப் பொருள் வழங்கல் சி.ஐ.டி. பிரிவு அலுவலர்களும் இன்றியமை யாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் 950 திடீர்ச் சோதனைகள் நடத்தினர்.

இச் சோதனைகளில் கள்ளக்கடத்தல், கள்ள வணிக மும், பதுக்கல்களும், கலப்பட இனங்களும் இதர இனங் களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் ரூபாய் 60.65 இலட்சங்கள் மதிப்புள்ள நெல், அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுவன்றி 26 லாரிகள், 14 வேன்கள், 2 கார்கள், 3 சைக்கிள்கள், 55 மாட்டு வண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் இம்மாதத்தில் 26,965 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கம் செய்யப் பட்டுள்ளன. 4 மண்ணெண்ணெய் சில்லறைப் பதிவு சான்றுகள் மீதும், 4 மண்ணெண்ணெய் கைவண்டிக் காரர்கள் மீதும் அபராதம் விதிக்கப்பட்டது.

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்குத் திரு.வி.க. விருது

தமிழ்நாடு அரசால் ஆண்டு தோறும் வழங்கப்பெறும் திரு.வி.க. விருதினை இந்த ஆண்டு (1992) பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்களுக்கு வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், ஐதராபாத் உசுமானியப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகவும் திகழ்ந்தவர். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களோடு நெருங்கிப் பழகியவராகவும், 100-க்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை யாத்தளித்த பெருமைக்குரியவராகவும் விளங்குகிறார். தம் ஓய்விற்குப் பிறகு, வள்ளியம்மாள் மேனிலைப்பள்ளி, கல்லூரி முதலியவற்றைச் சென்னை அண்ணாநகரில் அமைத்துக் கல்வித் தொண்டாற்றி வருகிறார்.

நாடறிந்த புலமையும், உலகம் சுற்றிய அனுபவமும் வாய்ந்த பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்களுக்கு 1992-ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது தமிழக அரசின் சார்பில் வழங்கப்பெறுகிறது.

தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிவரும் திரு.வி.க. விருது, 1979-ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகிறது.

இதற்கு முன் இவ்விருதைப் பெற்றவர்கள் வருமாறு:

ஜெகசிற்பியன், நாரணதுரைக் கண்ணன், அ.கி.பரந்தாமனார், திருக்குறள் முனிசாமி, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், கோவி. மணிசேகரன், சு.த. திருநாவுக்கரசு, கா.மு.ஷெரீப், சுப்பு ரெட்டியார், மணவை முஸ்தபா, தமிழண்ணல், புலவர் கா.கோவிந்தன், அ.ச. ஞானசம்பந்தம், ராஜம் கிருஷ்ணன்.

துணுக்குகள்

உலகிலேயே அதிக வயதானவர்

உலகிலேயே மிகவும் வயதானவர் ஐக்கிய அரபுக்குடியரசு நாட்டைச்சேர்ந்த திரு. முசாபா.152 வயது வரை வாழ்ந்த இவர், அண்மையில் காலமானார்.

1840-ஆம் ஆண்டில் பிறந்த இவர், தமது வாழ்நாளில் ஒரு முறைகூட மருத்துவரிடம் சென்றது கிடையாதாம். ஒட்டகத்தின் பால், பேரீச்சம் பழம், அரிசி, இறைச்சி ஆகியவற்றையே இவர்தம் வாழ் நாள் முழுவதும் உண்டு வந்தார். தமது வாழ்நாளில் ஆறுமுறை திருமணம் செய்து கொண்ட இவருக்கு, 11 பிள்ளைகளும் 33 பேரக் குழந்தைகளும் இருந்தனர்.

சாதனை படைத்த இந்தியர்கள்!

1993-ஆம் ஆண்டுக்கான 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் புதிய சாதனை நிகழ்த்தியுள்ள இரண்டு இந்தியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இதில் ஒருவர் சுஜய்குமார் மல்லிக். இவர் ஒரு ஊசி துவாரத்தில் 2 மணி நேரத்தில் 11,796 தடவை நூலைக் கோத்துச் சாதனைப் படைத்திருக்கிறார்.

இன்னொருவர் பெயர் பிபிந்தர் சிங் தெதி. இவர் ஒரு மணி நேரத்தில் 3,196 தடவை தரையில் உட்கார்ந்து எழுந்து சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு இந்திரா காந்தி விருது

1992-ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டுக்கான இந்திரா காந்தி விருது, மகாராஷ்டிர மாநிலம் வார்தாவிலுள்ள பால்னார் பரம்தம் ஆசிரமத்திற்கு வழங்கப்படவிருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறை

மாண்புமிகு முதல்வர் ஆய்வு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் செயல்பாடுகளை 12.11.92 அன்று ஆய்வு செய்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தலைமைச் செயலர், நிதிச் செயலர், மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர், தனிச் செயலர் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் அனைத்துத் துறைத் தலைவர்களும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நடத்தப் பெற்று 10,000 மருத்துவ நல முகாம்களைத் தொடர்ந்து, அதன்மேல் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். தாய், சேய் நலம் பற்றிய திட்டங்கள் நமது மாநிலத்தில் மேலும் சிறப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் இம்மாநிலம் குழந்தை இறப்பு விகிதத்தை மிகவும் குறைவாகக் குறிப்பிடத்தக்க நிலையில் கொண்டு வந்துள்ளது. 1990-இல் குழந்தை இறப்பு விகிதம் 1000 பிறப்புக்கு 59 என்று இருந்தது. இதுபோலவே பிறப்பு விகிதமும் கூட குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் 1000-க்கு, 21.6 ஆக 1990-இல் இருந்தது. மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்களில் உள்ள அனைத்து அலுவலர்களையும் நமது மாநிலத்தில் மக்கள் தொகையை ஒரு நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தினார்கள். 1991-92-ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட குடும்ப நல நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்த அரசு முதல்நிலை அடைந்துள்ளது.

இதற்காக அனைத்து அலுவலர்களையும் பாராட்டி, 1992-93-ஆம் ஆண்டுகளில் மட்டுமன்றி இனிவரும் ஆண்டுகளிலும் இந்த இலக்கினை அடைய வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார். மருத்துவ நலத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகிகள், சிசு உயிர் பிழைத்தல் மற்றும் தாய் நலப் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நன்முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

தாய் மற்றும் சேய்ப் பாதுகாப்பு நலனுக்கென்று ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையம், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிடமில்லாத பிற இடங்களில் உள்ள மருத்துவமனைகள் ஆகியவைகளில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் விரைவில் நடத்தப்பட வேண்டுமெனவும் ஆணையிட்டார்.

நடமாடும் மருத்துவமனைகள்

கிராமங்களில் அறுவைச் சிகிச்சை மற்றும் இதர வசதிகள் அளிப்பதற்கு நடமாடும் மருத்துவத் திட்டம் (Mobile Hospitals) செயல்படுத்தப்படவேண்டும் என்றும் ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிராமப்புறங்களில் தேவைப்படும் உயர் மருத்துவ வசதியை இத்திட்டத்தின் வாயிலாக வழங்க முடியும் என்பதால், இரயில்வே நிர்வாகத்துடன் இணைந்து ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தவும் ஆலோசனை வழங்கினார். எய்ட்ஸ் கட்டுப்பாடு, காசநோய், புற்றுநோய் மற்றும் இருதயநோய், சுற்றுப்புற சுகாதாரம் முதலியன பற்றி கிராமப் பகுதிகளில் 'நடமாடும் கண்காட்சிகள்' (Mobile Exhibitions) மூலம் ஒரு புதிய சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இக்கூட்டத்தில் அவர் ஆலோசனை வழங்கினார்.

எய்ட்ஸ்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில், ஹெச்.ஐ.வி. தொற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் நோயினால் ஏற்படும் அபாய விளைவுகளை எல்லாத் தரப்பு மக்களின் கவனத்திற்கும் கொண்டு செல்ல ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். இந்நோய்க்கு மருத்துவ நிவாரணம் இல்லை, மருந்தும் இல்லை. தடுப்பு முறை ஒன்றுதான் இதற்கு வழியாகும். இந்நோய் பரவுதலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மக்களிடையே தகவல் தொடர்புச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

மேலும், எல்லாத் திரையரங்குகளிலும் 'சிலைடு' மற்றும் சிறிய விளம்பரப் படங்கள் மூலம் இந்நோயின் அபாயம் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார். தொண்டு நிறுவனங்கள் மற்றும் மக்களிடையே பிரபலமாக உள்ளவர்களையும் இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறையில் உள்ள அலுவலர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை அமைத்து, அதன் மூலம் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்புப் பெற வேண்டும். ஒருமுறை பயன்படுத்தி அழித்து விடக்கூடிய ஊசியை (Disposable Syringe) அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்தும் முறையினைத் 'தேசிய எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டத்தின்' கீழ், உதவி பெற்று விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று கருத்தறிவித்தார்.

'தனி நபர் உடல்நலம் மற்றும் சுகாதாரம்' (Personal hygiene) பற்றிய எண்ணத்தையும் அவசியத்தையும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். காலரா, மூளைக் காய்ச்சல், எய்ட்ஸ் முதலிய சிக்கலான பிரச்சினைகளை உறுதியுடன் எதிர்த்துச் சமாளிப்பதற்குத் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும், எய்ட்ஸ் கட்டுப்பாடு மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம் ஆகியவை பற்றிய திட்டத்தைத் தயாரித்துச் செயலாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

புற்றுநோய்க் கட்டுப்பாடு

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறியைக் கண்டறிய வேண்டும் என்று வலியுறுத்திய

சுகாதாரம்

வயிற்றுப்போக்கு நோய் எளிதில் பரவக் கூடியது. குறிப்பாக ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளை இந்நோய் அதிகம் தாக்குகிறது. குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு அல்லது பேதி ஏற்படும் போது உடனடியாக சிகிச்சை அளிக்கத் தவறினால் உயிருக்கே ஆபத்தாகும்.

சுத்தமில்லாத குடிநீர், சுத்தம் செய்யப்படாத பாலூட்டும் குப்பிகள் முதலியன இந்நோயைப் பரப்பத் துணை போகின்றன. அழுக்கான கைகளுடன் உண்ணுதல், பராமரிக்கப்படாத கழிப்பிடங்கள், ஈக்கள் ஆகியவற்றாலும் கிருமிகள் பரவி வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது.

வயிற்றுப்போக்கின் மூலம் உடலில் உள்ள உப்புச் சத்து விரயமாகிறது. நமது உடலில் 80 சதவீதம் நீர் உள்ளது. இந்நோயினால் நீரும், உப்பும் உடலிலிருந்து வெளியேறி தளர்ச்சியடைந்து செயல்பட முடியாத நிலை ஏற்படுகிறது. இதைத்தான் நீரிழப்பு என்கிறோம்.

நீரிழப்பு குழந்தைகளுக்கு மோசமான விளைவுகளைத் தோற்றுவிக்கும். இதை ஈடுகட்ட உடனடியாக உப்பு-சர்க்கரை கலந்த நீரைக் கொடுக்க வேண்டும். நன்கு கொதிக்க வைக்கப்பட்டு ஆறிய 200 மில்லி லிட்டர் நீரில் ஒரு சிட்டிகை உப்பும், ஒரு தேக்கரண்டி சர்க்கரையும் சேர்த்தால் நிவாரணி ரெடி!

எலுமிச்சை-சர்க்கரை கலந்த சாறு, நீர் ஆகாரம், உப்பு-தயிர் கலந்த லஸ்ஸி, பார்லி நீர், இளநீர் ஆகியவற்றையும் நோயால் தாக்கப்படும் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் - அடையாறு புற்றுநோய் நிறுவனம் மற்றும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா புற்றுநோய் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தென்னார்க்காடு மாவட்டத்தில் துவக்கவிருக்கும் 'புற்றுநோய் கண்டறியும் திட்டம்' தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, சென்னை அரசு பொது மருத்துவமனையிலுள்ள பார்னார்டு நிலையக் கதிர்வீச்சு மற்றும் புற்றுநோய்ப் பிரிவுகளுக்கு ஒளிக்கதிர் சிகிச்சைப் பிரிவு உடனடியாக நிறுவப்பட வேண்டும் என்றும் கூறினார். ரூ.125 இலட்சம் இந்த இரண்டு பிரிவுகளுக்கும் செலவழிக்கப்படும், ஒளிக்கதிர் சிகிச்சைப் பிரிவுகள் தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், இதனால் தொலை தூரத்தில் உள்ள கிராம மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்,

உலக வங்கி உதவியுடன் நல்வாழ்வுத் திட்டம்

வெளிநாட்டு உதவியுடன் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். சென்னை மாநகராட்சி நீங்கலாக, மேலும் 23 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு 'இந்திய மக்கள் தொகைத் திட்டம் - V (Indian Population Project Phase V) விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். ரூ.65 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினால், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடிசைவாழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பிரசவத்திற்குமுன் மருத்துவ வசதி மற்றும் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து அளித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் மக்கள் தொகையுள்ள அனைத்து நகரங்களும் பயன்பெறும். இத்திட்டத்தில் 3000 மக்கட் தொகையுள்ள பகுதிக்கு ஒரு பல்நோக்கு - சுகாதாரப் பெண் பணியாளரும், 30,000 மக்கட் தொகையுள்ள பகுதிக்கு ஒரு பெண் மருத்துவ அலுவலரும் பணியாற்றுவர்.

நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். மைய அரசு - சர்வதேச ஆய்வுக் குழுவைத் தமிழகம், மற்றும் மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம், ஒரிஸா, அரியானா மாநிலங்களுக்கு அனுப்பியது. இத்திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து இதில் கண்டறிந்த தகவல்கள் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவையை அளித்து, தமிழகம் இதில் சிறப்பான இடத்தைப் பெறுவதற்குப் பாடுபட்ட அலுவலர்களை இக்கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட்டினார். இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டு, கிராமங்களில் குழந்தைகள் மரண விகிதத்தை மேலும் குறைக்கவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

கண்பார்வைப் பாதுகாப்புத் திட்டம்

கண்பார்வைப் பாதுகாப்பு, காசநோய்க் கட்டுப்பாடு, தொழுநோய்க் கட்டுப்பாடு முதலிய திட்டங்கள் செயல்பாடு பற்றி முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளாகக் கண்புரைநோய் அறுவைச் சிகிச்சை ஆண்டுக்கு ஒரு இலட்சம் நபர்களுக்கு மட்டுமே செய்யப்பட்டு வந்தது. ஆனால் 1991-92-ஆம் ஆண்டில் மட்டும் 1.5 இலட்சம் நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, புதிய ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டது. இப்பணியில் தொண்டு நிறுவனங்களின் பங்கினையும், சேவையையும் முதல்வர் பாராட்டினார். மேலும், முழு கண்பார்வைப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், உலக வங்கி உதவியுடன் ஒரு திட்டத்தைத் தயாரிக்குமாறு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இத்திட்டம் 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயலாற்றப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மலேரியா நோய் ஒழிப்பு

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் எல்லாம் - நீர் தேங்கியுள்ள பகுதிகளிலும், தெருக்களிலும் மலேரியா நோய் ஏற்படுவதையும், பரவுவதையும் கட்டுப்படுத்தத் தடுப்பு மருந்துகளைத் தெளிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அலுவலர்கள், சென்னை மாநகராட்சியினர் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து விவாதித்து மலேரியா ஒழிப்புத் திட்டத்தைச் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மருந்துகள்

அரசு மருத்துவமனைகளில் மருந்துகளின் இருப்பு (Stock) குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருந்துகளின் விலை ஏற்றம், அதனால் இதற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வாங்கும் மருந்துகளின் அளவு குறைந்துள்ளது பற்றியும் சுட்டிக்காட்டினார். மேலும் அவர் பேசுகையில் - ஏழை மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் மலிவான விலையில் கிடைப்பதற்காக மைய அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று மைய அரசினைக் கோரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் கருத்துத் தெரிவித்தார்கள். இதனால் மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் மாநில அரசின் நிதித் திறன் குறையாமலிருக்கும், மைய அரசின் தற்போதைய தாராள (விற்பனைக்) கொள்கை, ஏழை மக்களுக்குத் தேவையான மருந்துகளின் விலை ஏற்றத்தை உண்டாக்காமல் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

மருந்துகள் தாராளமாகக் கிடைப்பதற்கும், அவைகளின் விலைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதற்கும் மைய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படும்; மருந்துகள் கொள்முதல் செய்தல், இருப்பு வைத்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் ஒரு மையமான இடத்திலிருந்து செயல்படவேண்டும்; இந்த முறையின் மூலமாக மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகள், தங்களுக்குத் தேவையான மருந்துகளை மாவட்ட மருத்துவக் கிடங்குகளிலிருந்து உடனுக்குடன் பெற இயலும். இப்பணி விரைவாக ஆய்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அறிவுறுத்தினார்.

அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் தற்போதைய மருத்துவர்களின் எண்ணிக்கையை ஆய்வு செய்த அவர், எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் ஒரு பெண் மருத்துவர் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளைவிட வட்ட மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அதிகமாக அளிக்க வேண்டியுள்ளது. இந்த மருத்துவமனைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும், தகுந்த புறநோயாளிப் பிரிவு (Out Patient Ward) நிறுவப்பட வேண்டும் என்றும், இதனால் புறநோயாளி சிகிச்சையின் தரம் மேம்படுத்தப்பட முடியும் என்றும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். மேலும் வட்ட மாவட்ட மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, தகுந்த திட்டம் தீட்டி விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழரசு

அடுத்த இதழில்...

- நீங்க நல்லா இருக்கணும்! —திரைப்பட விமர்சனம்
- வரலாறு படைத்த டாக்டர் ஆர்.கே. சண்முகனார் —பேராசிரியர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு
- மூளைக் காய்ச்சல் நோய் எப்படி ஏற்படுகிறது? —டாக்டர் எம்.ஏ. அலிம் எம்.டி.,
- அதிசய மருந்து அதிமதுரம்! —டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்
- சிறுசேமிப்புத் திட்டங்களும் அரசு அளிக்கும் சலுகைகளும்
- ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி —பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி
- மாவட்டங்களில் - அரசு நலத்திட்டப்பணிகள் —தொகுப்புக் கட்டுரைகள்

மற்றும் கவிதைகள் —
கார்ட்டூன் — சுவையான துணுக்குகள் முதலியன

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க!

கூட்டுறவுத் துறையின் மாநிலத் தொடக்க விழா

இந்தியக் கூட்டுறவு விழாவின் மாநிலத் தொடக்கவிழா, வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத் தலைநகரான வேலூரில் மிகவும் சிறப்புற நடைபெற்றது; இது 39-வது இந்தியக் கூட்டுறவு வார விழாவாகும். இதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் இவ்விழா ஒரு வார காலம் தொடர்ந்து நடைபெற்றது.

14.11.92-இல் அண்ணா கலையரங்கத்தில் இவ்விழா தொடங்கும் முன்பாக- அன்று மாலை - மாணவ மாணவிகளும் பொதுமக்களும் பங்கேற்ற கூட்டுறவுப் பேரணி வேலூர் நகரை வலம் வந்தது; அப்பேரணி வந்து சேர்ந்த பின்னர் மாணவ மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சி அண்ணா கலையரங்கில் நடைபெற்றது. அங்கு, கூட்டுறவை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் நிறுவப்பட்டிருந்தது.

இந்தியக் கூட்டுறவு வார விழாவின் மாநிலத் தொடக்கவிழா, அவ்வரங்கில், இனிதே தொடங்கியது. வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு.இராமசுந்தரம் இ.ஆ.ப., அவர்கள், விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

வரவேற்புரை:

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளரும், சிறப்பு அலுவலருமான திரு. மு.கிருஷ்ணசாமி வரவேற்புரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து— பெரணமல்லூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.சீனுவாசன், தண்டராம்பட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. சுந்தர், போளூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. வேடியப்பன், வேலூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.ஞானசேகரன் முதலானோரும்— தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ஐ.தி.ஆச்சார்யுலு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு உணவு கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலர் திரு. ஏ.கே. வெங்கட்ட சுப்பிரமணியன், இ.ஆ.ப., ஆகியவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள், அவ்விழாவைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

அதற்கு முன்னதாகக் 'கூட்டுறவு முரசு' என்கிற மாதமிருமுறை தமிழ் ஏடு ஒன்றினையும், 'The Tamil Nadu Journal of Co-operation' என்கிற ஆங்கில மாத ஏடு ஒன்றினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டு வழங்கினார். இவ்விரு ஏடுகளும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் வெளியீடுகளாகும்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

''இங்கிலாந்து நாட்டில் தோன்றி, இன்று உலக நாடுகளிலெல்லாம் ஓர் இயக்கம் பரவியிருக்கின்றதென்றால், அது கூட்டுறவு இயக்கம்தான். நம் இந்திய நாட்டில்- இந்த இயக்கமானது தமிழ்நாடு, குஜராத், மகாராட்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களிலேயே வலுப்பெற்றுள்ளது. இந்த மூன்றில் எங்கே பெரிய அளவில் பரவியிருக்கிறதென்றால், அது நமது தமிழ்நாட்டிலேதான் என்று கூறிக்கொள்ளுவதிலே நான் பெருமைப்படுகிறேன். இந்தப் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் அரசு சார்பில் நான் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சித் திறத்தால், இன்னும் ஒரே ஆண்டுக் காலத்தில்- இந்தியாவிலேயே எந்தக் குறையும் இல்லாதது தமிழ்நாடு கூட்டுறவுத் துறையே என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம்.''

—இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு குறித்த கட்டுரைப் போட்டிகளிலும், பேச்சுப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கும் - மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறந்து விளங்கிடும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் பரிசுகளும் கேடயங்களும் வழங்கினார்.

இந்த விழாவில் - கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில், முதியோர் இல்லம் ஒன்றிற்கு 3 மின்விசிறிகள் வழங்கப்பட்டன. விழா முடிவில் - வடஆர்க்காடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு. க.பு.பெ. பன்னீர்செல்வன் நன்றி கூறினார்.

இரவில்- நடிகை ஜெயசத்தியா குழுவினரின் 'சொன்னாக் கேட்டுக்கணும்' என்கிற நாடகம் நடத்தப் பெற்றது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.எல்.ஆர்.

கூட்டுறவு

நாட்டில் தற்போது, 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 16 கோடி உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச்சங்கங்களின் மொத்த மூலதனம் ரூ.70,000 கோடி. விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் 1990-91-இல் ரூ.5,603.5 கோடி கடனாக அளித்தன. ரூ.6,274 கோடி வேளாண் பொருட்களை வர்த்தகம் செய்துள்ளன.

உழவர்களுக்குத் தேவையான உரங்கள், இடுபொருட்கள் ஆகியவற்றை அளிப்பதற்காக 76,000 உரக் கடைகளை அமைத்து, அதன் மூலம் 52 இலட்சம் டன் உரங்களை விநியோகித்தன.

வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி

ரகமி

(அந்நாளில் நம் இந்தியச் சுதந்திரப் போராட்டங்களில் பெரிதும் ஈடுபட்டுச் சிறை சென்ற முதல் வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி ஆவார். 1892-ஆம் ஆண்டு டிசம்பர் 6-இல் பிறந்த இவரது பிறந்ததின நூற்றாண்டு டிசம்பர் 6-ந் தேதி நிறைவடைகிறது. அதனையொட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.)

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!'' என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் வாக்கினைச் சிறப்பிக்கும் வகையில், பிறந்தவர்தான் சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி ஆவார்.

அந்நாளில் நம் நாட்டு விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து, ''வந்தே மாதரம்! பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திஜிக்கு ஜே! இந்திய வீரப் பெண்மணிகளே! காந்தியடிகளின் தலைமையில் அணிவகுத்து நம் தாய் நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்ற முன்வாருங்கள்!'' என முழக்கமிட்டே சிறை சென்ற முதல் பெண்மணி ருக்மிணிலட்சுமிபதி!

தமிழகத்தில் 1937-ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி தலைமையிலான அமைச்சரவையில், துணைச் சபாநாயகராகப் பதவி வகித்த பெண்மணி ருக்மிணி லட்சுமிபதி. அடுத்து, 1946- ஆம் ஆண்டு தமிழகத்தில் 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் தலைமையிலான அமைச்சரவையில் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த முதல் பெண்மணி ருக்மிணி லட்சுமிபதி" ஆவார்! பல சிறப்புகளைக் கொண்ட ருக்மிணிலட்சுமிபதி இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளதை, வரலாற்றிலேயே அவருக்குத் தனி இடம் தந்துள்ளது.

சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் வாழ்ந்தவர் பழம்பெரும் வழக்கறிஞர் 'ராஜா' தும்மலபல்லிராமராவ். ஆந்திர மாநிலம் 'கோல் கொண்டா' வைணவரான இவர், ஆசாரம் மிகுந்த பெரிய குடும்பி. இவர் தனது மூன்றாவது மகள் சூடாமணியை மதுரையிலே வாழ்ந்து வந்த அதே 'கோல்கொண்டா' வைணவரும் பிரபல தனவந்தரான 'ஹூக்கில்லா' சீனிவாசராவுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். திருமணத்திற்குப் பின் சென்னை திருவல்லிக்கேணிக்கே குடி வந்த சீனிவாசராவ் சூடாமணி தம்பதியருக்கு, மூத்தது சுந்தரராஜன் என்ற மகனுக்குப்பின், 1892-ஆம் ஆண்டு டிசம்பர் 6- இல் சென்னையில் பிறந்தவரே ருக்மிணி ஆவார்.

தனது 10 வயதான மகன் சுந்தர ராஜனுக்கு 7 வயதான ராஜாமணி என்ற சிறுமியைப் 'பால்ய விவாகம்' செய்தவர், மகள் ருக்மிணிக்குப் பால்ய விவாகம் செய்யாமல் அவள் படித்துப் பட்டங்கள் பெறவேண்டுமென்றே விரும்பினார். திருவல்லிக்கேணியிலிருந்து எழும்பூரிலுள்ள 'மாநிலப் பயிற்சிப் பள்ளியில் கல்வி பயில, தன் மகள் ருக்மிணியுடன் மருமகள் ராஜாமணி இருவரையுமே, கைரிக்ஷா வண்டி மூலம் அனுப்பி வந்தார். இளம் வயதிலேயே ருக்மிணி தமிழ், ஆங்கிலம், இந்தி, லத்தீன், பிரெஞ்சு மொழிகளில் முதல் தரத்தில் தேர்ச்சியும் பெற்றார். இந்துஸ்தானி, மற்றும் மேல்நாட்டுச் சங்கீதங்களைப் பயின்ற இவர் வீணை மீதுள்ள ஆர்வத்தினால் அந்நாளைய பிரபல வீணைப் பாடகி தனம்மாளிடம் முறைப்படி வீணையும் பயின்றார்.

ருக்மிணி பள்ளி இறுதி வகுப்பு படிக்கையில் அவரது தந்தை சீனிவாசராவ் காலமானார். இதனால் ருக்மிணி தனது படிப்பை நிறுத்தாமல், மேலும் தனது இடைநிலைக் கல்வியைப் 'பெண்டிர் கிறிஸ்துவக் கல்லூரி'யில் படித்து வந்தார். திருமண வயதான ருக்மிணிக்குப் பல இடங்களிலிருந்து பெண்கேட்டு

வந்தும், ருக்மிணி தனது திருமணத்தைப் பற்றி யோசிக்காமல் கல்லூரிப் படிப்பிலேயே வெகு தீவிரமானார். அந்நாளில் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலேயே தனது சிறு மருத்துவமனையை வைத்து சிகிச்சைகளைச் செய்து வந்தவர் 'ஆசந்த' லட்சுமிபதி என்ற இளம் மருத்துவர். இவரது பூர்வீகம் ஆந்திராவிலுள்ள 'ஆசந்த' என்ற தனிச் சிறப்புகள் வாய்ந்த ஊர். 'ஆசந்த-ஸ்ரீஸ்வாமுலவாரு' என்றழைக்கும் வெங்கட சுப்பராயுடு குடும்பத்தைச் சேர்ந்தவர் லட்சுமிபதி. 'ஆசந்த' லட்சுமிபதிக்கு இளமையிலேயே மனைவியான சீதம்மா, மூன்று குழந்தைகளுக்குத் தாயானபின், தனது நாலாவது பிரசவத்திலேயே காலமானார். மனைவியை இழந்து லட்சுமிபதி தனது மேல் படிப்பு மற்றும் உத்தியோகத்திற்காகவும் சென்னைக்கு வந்தவர் திருவல்லிக்கேணியிலேயே ஓர் அறையில் தங்கினார்.

இவரது மருத்துவமனைக் கட்டடத்திலேயே 'விஞ்ஞானச் சந்திரிகை' என்ற நூலகத்திற்குத் தனது பாட நூல் சம்பந்தமாக அடிக்கடி வரும் கல்லூரி மாணவியான ருக்மிணியின் மீது ,அந்த இளம் டாக்டர் லட்சுமிபதியின் பார்வைகளும் பட்டன. அதோடு ருக்மிணியின் குடும்பத்தினரும் இவரிடம் சிகிச்சைக்கு வருவதும் உண்டு. ஒரு சமயம் ருக்மிணி தனது உள்ளங் காலில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை பெற தனது சிற்றன்னையோடு லட்சுமிபதியின் மருத்துவமனைக்கு வந்தார். சிகிச்சையின் போது இவர்கள் இருவர் சந்திப்பில் ஏற்பட்ட ஒரு புதிய ஸ்பரிசம் அவர்கள் மனதில் வேரூன்றித் துளிர்விடத் தொடங்கியது.

லட்சுமிபதியின் வரலாறுஅப்போதைய நிலைமையை நன்கறிந்த ருக்மிணி அவருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட விரும்பினார். பலத்த எதிர்ப்புகளுக்கிடையே 1911-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ந் தேதி சென்னையில் ருக்மிணிக்கும், ஆசந்த லட்சுமிபதிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது.

கணவர் ஆசந்தலட்சுமிபதி சிறந்த தேசியவாதி. சுதேசியத்தில் பற்று மிகுந்தவர். அன்றைய அரசியலின் முக்கியத் தலைவர்களெல்லாம் லட்சுமிபதியின் இல்லத்திற்கே வந்து, இந்தியச் சுதந்திரம், சுதேசியம் மற்றும் அரசியலைப் பற்றி விவாதிப்பதும் உண்டு. இவர்களது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ருக்மிணிலட்சுமிபதியின் மனதிலும் சுதந்திரப்பற்று ஆழப்பதிந்தது. தானும் அரசியலில் ஈடுபட விரும்பியதற்கு அவர் கணவர் லட்சுமிபதியும் அந்த எண்ணத்தை மேலும் ஊக்குவித்தார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் படித்த ருக்மிணிலட்சுமிபதி சமூக சேவை, சீர்திருத்தங்களில் பெரிதும் ஈடுபட்டார். 'பாரத ஸ்திரி மகா மண்டலம்' சென்னைக் கிளையின் செயலாளராகவும், இந்தியப் பெண்டிர் சங்கத்தின் உறுப்பினராகவும் பணியாற்றினார். சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை ஒழித்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் மேன்மை அடையவும், வெகு தீவிரமானார். அக்காலத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்களில் பெண்கள் திருமண வயது வரம்புச் சட்டம் (சாரதா சட்டம்) இவரால் வலுப்பெற்றது. பெண்களை ஒருங்கிணைத்து அவர்களைப் பொது வாழ்விலும், அரசியலிலும் பங்குபெற முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

இவரது ஆங்கிலப் பேச்சுத் திறமையைக் கண்ட அன்றைய பிரிட்டிஷ் அரசு 1926-ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற 'மகளிர் வாக்குரிமைக்கான 10-வது சர்வதேச மாநாட்டிற்கு 'இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள அனுப்பி வைத்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திய ருக்மிணி லட்சுமிபதி ஐரோப்பாவிலும், பிரிட்டனிலும் விரிவான சுற்றுப் பயணத்தின்போது இந்தியரின் பெருமை, இந்தியச் சுதந்திரம் பற்றிச் சொற்பொழிவுகள் செய்ததோடு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க அந்தந்த நாடுகளிலுள்ள திட்டங்களையும் நன்கறிந்தவர்.

நாடு திரும்பிய அவர் 1928-இல் தேசிய காங்கிரஸ் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டதோடு, தேசியத் தலைவர்களின் ஆலோசனைப்படியே நாட்டு விடுதலைக்காகத் தீவிரமானார். இச்சமயத்தில்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் சாதாரண உப்பிற்கு வரிவிதித்தது. இதனை எதிர்த்து மகாத்மா காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டு மார்ச் 12-இல் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து 'தண்டி' என்ற இடத்திற்குத் தனது தொண்டர் படையுடன் சென்று ஏப்ரல் 9-ந் தேதி ஆட்சியாளரின் தடை உத்தரவுகளை மீறி உப்பு அள்ளினார்.

அதுபோலவே தமிழ்நாட்டிலும் வேதாரண்யம் என்ற இடத்தில் அரசின் தடைகளை மீறி இராஜாஜியின் தலைமையில் தொண்டர்கள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். இதில் ருக்மிணி லட்சுமிபதியின் பங்கு மகத்தானது. ஆண்களுக்குச் சரியாக ஒரு பெண்மணி இத்தனைத் துணிச்சலோடு போராட்டத்தில் ஈடுபட்டதையும் அரசாங்க உத்தரவுகளை மீறியதற்காகவும் அன்றைய அரசு அவரை கைதுசெய்து நீதி விசாரணை செய்து, ஓராண்டு வெறும் காவல் தண்டனை அளித்து வேலூர் சிறைக்கு அனுப்பியது. அங்கு சிறையில் பல பெண் கைதிகளோடு இருக்க வேண்டிய நிலைமையையும், அசௌகரியங்களையும் நேரிலேயே கண்ட ருக்மிணிலட்சுமிபதி, சிறையில் அரசியல் கைதிகளில் பெண்களுக்கெனத் தனி அறை ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தினார்.

அடுத்து, 1932-இல் ஒத்துழையாமை இயக்கத்தின் போதும், பின்னர் தனி நபர் சத்தியாக்கிரகத்தின்போதும் இவர் சிறை சென்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராகவும் சிறிது காலம் பொறுப்பேற்றிருந்தார். 1937-இல் பண்டித நேரு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவில் ருக்மிணிலட்சுமிபதி அதில் முக்கிய இடமும் பெற்றிருந்தார். 1935-இல் சென்னை நகரில் பொதுத் தொகுதியிலிருந்து காங்கிரஸ் வேட்பாளராக மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜஸ்டிஸ் கட்சிக்குப் பின்பு முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை மூதறிஞர் ராஜாஜியின் தலைமையில் அமைந்தபோது, அதில் ருக்மிணிலட்சுமிபதி துணைச் சபாநாயகராகப் பதவியும் வகித்தார். அப்போது அவர் இந்திய நல்லெண்ணக் குழுவில் இடம் பெற்று ஜப்பான் நாட்டிற்குச் சென்று வந்தார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து மீண்டும் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றது. தமிழகத்தில் 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் தலைமையிலான அமைச்சரவையில் ருக்மிணிலட்சுமிபதி சுகாதார அமைச்சராகப் பதவி ஏற்றதும் அவர் மருத்துவத்துறையிலும் பொதுமக்கள் நலனில் தானாகவும், தனது கணவர் டாக்டர் 'ஆசந்த' லட்சுமிபதியுடன் இணைந்து தன்னலன் கருதாது ஆற்றிய பணிகள் ஏராளம்!

தவிர, சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு வாரியம் போன்ற பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் ஆர்வத்துடன் பணியாற்றினார். சென்னையில் கௌரவ நீதிபதியாகவும் இருந்தார். தொழிலாளர் நலன்களில் பெரிதும் அக்கறை கொண்ட இவர் தொழிலாளர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் ஆராய்ந்து சுமுகம் காண்பதில் மிக்க திறமை பெற்றவர். இவரது தொழிலாள நலம் நேரிலேயே கண்ட, திரு.வி.க. அவர்கள் இவரைத் 'தொழிலாளர்களின் தாயார்' என்றும் பாராட்டியுள்ளார்.

மத உணர்வின்றி, நடைமுறைக்கேற்ற வகையில் தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டவர். சாதி ஒழிப்பு, தீண்டாமை, தேவதாசி முறை ஒழிப்புப் போன்ற சமூக மேம்பாட்டுச் சட்டங்களை இயற்றி அவைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு ஏற்ற விழிப்பு உணர்ச்சியை மக்களிடம் உருவாக்க, தகுந்த அறிவுரைகள் வழங்கிய பெருமை ருக்மிணி லட்சுமிபதிக்கே உண்டு!

ஒரு சமயம் சென்னைக்கு வருகை தந்த காந்தியடிகளைச் சந்தித்த ருக்மிணி லட்சுமிபதி அவருடைய கையெழுத்தைப் பெற முயன்றபோது காந்தியடிகள், 'என் கையெழுத்துக்குப் பதிலாக நீ எனக்கு என்ன தரப்போகிறாய்?' என வேடிக்கையாகக் கேட்டதற்கு, உடனே அவர் தனது கைகளிலிருந்த தங்க வளையல்களைக் கழற்றிக் காந்தியடிகளிடம் கொடுத்த பெருமை இவருக்கு உண்டு. அன்று முதல் அவர் தனது கரங்களில் தங்க வளையல்களை அணியாமல், சாதாரண வளையல்களையோ, சிற்சில சமயங்களில் வெறும் கையோடு மிக்க எளிமையான தோற்றத்திலேயே இருப்பார்.

தேசத் தொண்டு, பொதுநலன் இவை இரண்டிலுமே தனது வாழ்வைக் கழித்து வந்த சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணிலட்சுமிபதி சிறிது காலம் உடல் நலமின்றி 1951-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6-இல் சென்னையில் காலமானார். அப்போது அவருக்கு வயது 58.

பெருந்தலைவர் காமராஜ், சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், எம். பக்தவத்சலம், கிருஷ்ணஸ்வாமி, எஸ். சத்தியமூர்த்தி, பண்டித ஜவகர்லால் நேரு, ருக்மிணி லட்சுமிபதி.

முதல் அட்டை:

வெள்ளைச் சேத அறிக்கையினை, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குதல்.

இரண்டாம் அட்டை:

சிவகங்கை இராமச்சந்திரனார்.

நான்காம் அட்டை:

மகாகவி பாரதியார், மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் நினைவாக அவர்களது திருவுருவப்படங்கள்.

கல்வி

• 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'. இதனைச் சிரமேற்று அறிவொளி இயக்கங்கள் இதுவரை 178 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

தற்போது நமது நாட்டின் சராசரி எழுத்தறிவு 52.11 சதவிகிதமாகும். எட்டாவது திட்டக் காலத்தில் எழுத்தறிவு இயக்கங்களின் மூலம் 350 மாவட்டங்களில் சராசரி எழுத்தறிவு விகிதத்தினை 70-வது சதவிகிதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று ஆந்திரப்பிரதேசத்தில் 16 மாவட்டங்களிலும், தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களிலும், மேற்கு வங்காளத்தில் 11 மாவட்டங்களிலும், மகாராஷ்டிராவில் 10 மாவட்டங்களிலும், முழு எழுத்தறிவு இயக்கம் செயல்பட்டு வருகிறது.

டிசம்பர் 11 பிறந்தநாள் நினைவாக...

மக்கள் கவிஞன் பாரதி

- பேரறிஞர் அண்ணா

பாரதி பிறந்த இந்த நாடு-முரண்பாடுகள் செறிந்த களம், அகந்தையும், அடக்கமும்-கொடூரமும் அன்பும்-நாட்டிலே ஒருங்கே குடிகொண்டு இருந்தன. செயல்திறம் ததும்பிக் கொண்டு இருந்தது; அதே வேளையில், மக்களை மனம் குலையச் செய்து, செயல் அற்றவர்கள் ஆக்கும் அபத்தக் கற்பனைகளும் அளவு மீறி உலவின; பகட்டான கற்பனைகள் - பல்லாயிரக்கணக்கான ஊமை மக்கள் - அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை - அச்சமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை - பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி - அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

பைரன், எட்மண்ட்பர்க்கு-ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள்-தங்கள் எழுத்தால், பேச்சால்! அவர்களை-அவர்களது எழுத்துகளை, பேச்சுகளை, வரவேற்க, நாட்டிலே இருந்தவை பாரதமும் பாகவதமும் தான்.

பைரன்-மிகச் சிறந்த ஆங்கிலக் கவிஞர்; காதற் கவிதைகள் தீட்டுவதில் வல்லவர்; கற்பனை வளம் மிக்கவர்.

எட்மண்ட் பர்க்கு-தலைசிறந்த சொல்லாற்றல் படைத்தவர். பிரிட்டன் நாட்டுப் பாராளுமன்ற விவாதங்களில் தம் நாவன்மையை நன்கு மிளிரச் செய்தவர். இருவருமே உலகப் புகழ் பெற்றவர்கள்.

அப்போது, துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி, நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன! முரண்பாடுகள் நிரம்பிய இந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் மணியோசைகள்-நகராக்கள்-கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை.

பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கு இணங்க வரலாறு ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. வரலாற்றுப் பல்லக்கை விரைவான ஓட்டத்தில் செலுத்திடப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டியிருந்தது. பாரதியின் சிறப்பு-அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி, மகத்தான முறையில் அவர் அப் பணியைச் செய்தார்.

பாரதி வெறும் தேசியக் கவிஞர் அல்லர்; சீர்திருத்த வானில் மின்னிய விடி வெள்ளி அவர்!

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம், நாடு அந்திய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அது மட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள் தங்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து, உண்மையான விடுதலை வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் அவர்கள் உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என்று அவாவினார். புதிய விழிப்புப் பெற்று, புதுமை ஆண்களாகவும் பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார்.

மூட நம்பிக்கை நிர்மூலம் ஆக்கப்பட வேண்டும் - அறிவியல் ஆக்கம் பெறுவதற்காக! சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும்.

கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனைக் கொடுங்கோலன் என்றும் மக்கள் எளிதாக நம்பி விடுவார்கள். ஆதலால் மக்கள் கவிஞனின் வேலை, தொல்லைமிக்கதாக ஆகிறது.

பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.

(பேரறிஞர் அண்ணா வானொலியில் 'People's Poet' என்னும் தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

5 .ஆம் பக்கத் தொடர்ச்சி

சீர் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தான் பயணம் செய்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போர்வை, துண்டு, வேட்டி, சேலை ஆகியவற்றுடன் 2 கிலோ அரிசியையும் வழங்கினார். மேற்கண்ட கிராமங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதியம் 1.30 மணியிலிருந்து ஆரம்பித்து, இரவு 8.30 மணி வரை பார்வையிட்டார்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்...

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஆறுதல் கூறி, அரசுத் தரப்பில் அனைத்து உதவிகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

விக்கிரமசிங்கபுரத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட உடைப்புகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் புனித மேரி உயர்நிலைப் பள்ளி அருகில் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள உடைப்பையும், மண் அரிப்பையும் நேரில் பார்வையிட்டார். புனித மேரி உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பாதிரியார்கள் மாண்புமிகு முதல்வரிடம் ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்தில் அப்பள்ளியைச் சுற்றியுள்ள பகுதி முதல்வர் அவர்கள் விசாரித்து, பின்பு அதற்கான பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என ஆணையிட்டார்.

விக்கிரமசிங்கபுரத்தில் இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பனஞ்சாவடி, பள்ளிக்கால் பொதுக்குடி, எடைக்கால், கபாலிபாறை, பாப்பாக்குடி, அரிராம் நகர், லட்சுமிபுரம், முக்கூடல், அரியநாயகபுரம், அரசன் குளம், சங்கன்திரடு, நடுக்கல்லூர், சுத்தமல்லி, பேட்டை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை முதலான ஊர்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு

ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.11.92 அன்று, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திற்குச் சென்று புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரத்திற்கு ஹெலிகாப்டரில் சென்று, அங்கு வெள்ளத்தால் உயிரிழந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 25 நபர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு களில் மழை வெள்ளம் அதிக அளவில் தேங்கிவிடுவதாகவும், அதனால் சில சேதங்கள் ஏற்படுவதாகவும், அதனைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அப்பகுதிகளில் எதிர்காலத்தில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாவண்ணம் எவ்வாறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் மாண்புமிகு மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். மேலும், வழிநெடுகிலும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பல இடங்களில் நிறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை அளித்துக் கொண்டே சென்றார்.

விக்கிரமசிங்கபுரம், எடைக்கால், முக்கூடல், சங்கன்திரடு, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி,

அவர்களுக்கு ஆறுதல் அளித்துப் பேசினார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ்.முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. டி.எம். செல்வகணபதி, திரு. நாகூர் மீரான் ஆகியோர் மாண்புமிகு முதல்வருடன் சென்று ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

பாளையங்கோட்டையில் மனோன் மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திருமதி

வி. வசந்தி தேவி அவர்கள், பல்கலைக்கழகத்தின் சார்பாக முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரில் வழங்கினார்.

16.11.1992 **அன்று** சிதம்பரனார் மாவட்டம் முக்கானி அருகிலுள்ள ஆத்தூர் பாலம் உடைந்துள்ளதைப் பார்வையிட்ட பிறகு இந்தப் பாலம் ஒரு வார காலத்திற்குள் போக்குவரத்துக்காகச் சீர் செய்யப்படும் என்று அப்பகுதி மக்களுக்கு உறுதி அளித்து இருந்தார். அதன் தொடர்பாக, பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. வி. சுந்தரம், வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர், திரு. சி.என். இராமதாஸ், வேளாண்மைத் துறை சிறப்புச் செயலர், திரு. ஆர்.சி. பண்டா மற்றும் பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.என். கிருஷ்ணன் ஆகிய நால்வரையும் நேரடியாக ஆத்தூர் சென்று இந்தப் பணி குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று பணித்தார்.

மேலும், அப்பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் கிடைத்து விட்டனவா என்பதையும், அவர்களின் மறுவாழ்விற்குத் தேவைப்படும் உதவிகள் என்ன என்பதையும் கேட்டறிந்து வரவேண்டும் என்று இந்தக் குழுவை அங்கே அனுப்பினார்.

அலுவலர்களுடன் ஆலோசனை

தூத்துக்குடியில் உயர் அலுவலர்களின் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டி புயல்-வெள்ளச் சேதங்கள் பற்றி ஆலோசனை நடத்தினார். தலைமைச் செயலாளர், திரு. டி.வி. வெங்கட்ராமன், வருவாய் நிர்வாக ஆணையாளர், திரு. சி.என். ராமதாஸ், பொதுப்பணித்துறைச் செயலர், திரு. வி. சுந்தரம், வேளாண்மைத் துறைச் சிறப்புச் செயலாளர், திரு. ஆர்.சி. பண்டா, பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.என். கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் புயல் வெள்ளச் சேதத்துக்கு ரூ.500 கோடி நிதி உதவி தேவை எனக் கோரி, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்தி ஒன்றை மாண்புமிகு முதல்வர் அனுப்பினார். அதில் அவர் கூறியிருந்ததாவது:

'தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விரிவாக நான் பார்த்துவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சந்தித்த பிறகு, வெள்ளச் சேத அளவு குறித்து அதிகாரிகளிடமும் விவாதம் நடத்தினேன்.

புயல் மற்றும் கடும் மழையினால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சேதம் ரூ.500 கோடி என்று மதிப்பிடப்

பட்டுள்ளது. அதிக அளவில் மத்திய அரசாங்கம் நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை உள்ள அளவுக்குச் சூழ்நிலை மிகவும் மோசமாக உள்ளது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். உடனடியாகத் தமிழக அரசு மத்திய அரசுக்கு விரிவான ஒரு அறிக்கையை அனுப்பும். அரசு கோரியுள்ள நிதி உதவியை விரைவில் தமிழக அரசுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மூன்றாம் நாள் (18.11.1992) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஹெலிகாப்டர் மூலம் தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றார்.

தூத்துக்குடியில் இருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு, சிதம்பரனார் மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆத்தூர், புன்னக்காயல், உமரிக்காடு, ஏரால், மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்.

பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டரில் கன்னியாகுமரி, குளச்சல், தக்கலை, குலசேகரம், கிள்ளியூர், பூதப்பாண்டி, நாகர்கோயில், விளவங்காடு, திருவட்டாறு, குழித்துறை ஆகிய ஊர்களில் தாழ்வாகப் பறந்து வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டார்.

நாகர்கோயிலில் ஆயுதப்படை மைதானத்தில் இறங்கி, அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, மக்களிடம் பேசினார். மக்களின் துயரத்தைத் துடைக்க எல்லா வழிகளிலும் இந்த அரசு தயாராக உள்ளது என்றும், நிவாரணப் பணிகள் வேகமாகச் செயல்படுத்துகிறது என்றும், நிவாரணப் பணிகளைத் தலையாயக் கடமையாக மேற்கொண்டு, உடனுக்குடன் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம் என்றும், வெள்ளச் சேதப் பகுதிகளைத் தானே நேரில் பார்த்து, அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, வெள்ளச் சேதத்தின் மதிப்பீடு ரூ.500 கோடியாகும் என்று கணக்கிட்டு, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ.500 கோடியைத் தமிழகத்திற்குச் சிறப்பு நிவாரண உதவியாக உடன் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், விரைவிலேயே மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு இந்த அரசு முயலும் என்றும், உடனடியாக மக்களுக்கு நிவாரண உதவிகள் போய்ச் சேரவேண்டும் என்ற காரணத்தால் தான், ஏற்கெனவே ரூ.10 கோடியை இந்த அரசு தனது நிதியிலிருந்து ஒதுக்கி இருக்கிறது என்றும், இந்த அரசிற்கு மக்களின் துயரைத் துடைப்பதைத் தவிர வேறு பணி ஏதும் முக்கியம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், நாகர்கோயிலை அடுத்துள்ள கோதை கிராமத்துக்குச் சாலை வழியே சென்று பழையாற்றை ஒட்டியுள்ள சலவைத் தொழிலாளர் குடியிருப்பில் ஏற்பட்டுள்ள சேதங்களை, சேறும் சகதியிலும் நடந்து சென்று பல இடங்களைப் பார்வையிட்டார். அங்குள்ள பெண்களிடம் பரிவுடன் குறைகளைக் கேட்டு, மீண்டும் அவர்கள் குடியிருப்பிற்கு இதுபோல் வெள்ளப்பாதிப்பு ஏற்படாவண்ணம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்ற உயர் அதிகாரிகளுக்கும் ஆணையிட்டார். அதன் விவரத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பெண்களிடம் தெரிவித்தார்.

அப்பகுதியில் உள்ள 72 வயது முதியவர் இதுபோன்ற வெள்ளப் பெருக்கு இப்பகுதியில் தன் வாழ்நாளிலேயே கண்டதில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார். குமரேசன் (ஒன்பதாம் வகுப்பு), அய்யப்பன் (பத்தாம்

வகுப்பு) ஆகிய இரண்டு மாணவர்கள் தங்களுடைய புத்தகங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக மாண்புமிகு முதல்வரிடம் கூறினார்கள். உடனே அவர்களுக்குத் தேவையான நோட்டு, புத்தகங்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்தார். மேலும் தலா 50 ரூபாயை அவர்களுக்கு வழங்கினார். கோதை கிராமத்தில் பள்ளிக்கு அருகில் மக்களுக்கு நிவாரண உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிககப்பட்ட கோட்டார், எடலக்குடி, கரிய மாணிக்கபுரம், ஆசிரமம், வழுக்குப் பாறை, கொட்டாரம், பழநித் தோட்டம், கன்னியாகுமரி, எலங்கா மணிபுரம், ஒசரவலை, வந்தானம் புதூர், அரசன்குளம், பரமார்த்த லிங்கபுரம், அஞ்சு கிராமம், கிருஷ்ணம்புதூர், மொரப்பனார் பாலம், பாளையங்கோட்டை, வசவப்புரம், முரப்பாடு, செல்லக் காடு, தெய்வச் செயல்புரம், மங்கிரி, மறவன்மடம் ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடு இரவுவரை நிவாரண உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிக் கொண்டே 19.11.1992 அதிகாலை 1.00 மணி அளவில் தூத்துக்குடிக்கு வந்தடைந்தார்.

தென் மாவட்டங்களில் மூன்று நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், தூத்துக்குடி விருந்தினர் மாளிகையிலிருந்து வாகைகுளம் விமான நிலையத்திற்கு வரும் வழியில் உள்ள கிராமங்களில் ஆங்காங்கே மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். சிலுக்குப்பட்டி என்னும் கிராமத்தில் பல ஆண்டுகளாகக் குடிநீர்ப் பிரச்சினை உள்ளது என்பதனைக் கேட்டறிந்து உடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மேற்கண்ட கிராமத்திற்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்யும்படி ஆணையிட்டார்.

மேலும், மூன்று குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி பண அன்பளிப்பு தலா 100 ரூபாய் வழங்கினார். பிறகு, தனி விமானம் மூலம் தூத்துக்குடியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.11.1992 அன்று மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

பிரதமருடன் தொலைபேசியில் பேச்சு

வெள்ளப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு முதல்வர் 19.11.92 அன்று சென்னை திரும்பினார். உடனே, மாண்புமிகு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுடன் அவசரமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் தமிழ்நாட்டில் வீசிய புயலாலும் வெள்ளத்தாலும் இதுவரை வரலாறு காணாத சேதம் ஏற்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசுக்குச் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், ரூ.500 கோடி கொடுத்து உதவும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பிரதமருக்கு அழைப்பு

''புயலால் - வெள்ளத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்களைப்பார்வையிடத்தமிழ்நாட்டிற்கு வாருங்கள்'' என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்தார். அதற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் செனகல் நாட்டிற்கு சென்று வந்த பிறகு, தமிழ்நாட்டிற்கு வருவதாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்தியாளர்களிடையே பேசும் போது:

'சேத விவரங்கள் பற்றி முழு அளவில் அறிக்கை தயாரிக்கும்படி தமிழக அரசு தலைமைச் செயலாளரிடம் தெரிவித்துள்ளேன். தமிழக அரசு மத்திய அரசிடம் முறையாகக் கோரிக்கை வைக்கும் முன்னர்

★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

★ மூட நம்பிக்கையும், குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மத்திய அரசின் சார்பில் பார்வையாளர்களை அனுப்பி வைத்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறினார்.

மத்திய அமைச்சர்கள் வருகை

வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மத்திய அமைச்சர்கள் திருவாளர்கள் பல்ராம் ஜாக்கர், அருணாசலம், முள்ளப்பள்ளி ராமச்சந்திரன், குரியன் ஆகியோர் 16.11.92 அன்று மாலை சென்னை வந்தனர்.

அவர்கள் 17.11.92 அன்று சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் தூத்துக்குடி சென்றார்கள்.

ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் மூழ்கிக்கிடக்கும் நெல் பயிர்கள், சாய்ந்து கிடக்கும் வாழைத் தோப்புகள் ஆகியவற்றை ஹெலிகாப்டரில் இருந்தபடியே பார்த்தனர். தாமிரபரணி ஆற்றோரப் பகுதிகளிலும் சேத விவரங்களைப் பார்த்தனர். அவர்களுடன் வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர் திரு. சி.என். ராமதாஸ் அவர்களும் சென்றார்.

பின்பு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தினால் சேதம் அடைந்த பகுதிகளை நேரில் பார்த்தோம். பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. உயர்மட்ட அதிகாரிகளுடன் இது பற்றிப் பேசினோம். வெள்ளச் சேத விவரங்கள் பற்றிய முழு தகவல்களைப் பிரதமரிடம் தெரிவிப்போம். இது பற்றிய அறிக்கையையும் பிரதமரிடம் கொடுப்போம். அதன் பிறகு மத்திய அரசு தேவையான உதவிகளை அளிக்கும்' என்று கூறினார்.

பிரதமருடன்சந்திப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 23.11.92 அன்று காலை 10 மணிக்கு மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

வெள்ள நிவாரணம் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களின் மறுவாழ்வுக்காக 530 கோடியே 4 இலட்சம் ரூபாய் மத்திய உதவிகேட்டு தமிழக அரசு தயாரித்துள்ள மனுவைக் கொடுத்தார்.

தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் அடங்கிய 'வீடியோ கேசட்' மற்றும் போட்டோ ஆல்பத்தையும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

பல மாவட்டங்களில் மோசமான அழிவுகளை ஏற்படுத்திய புயல் வரலாறு காணாத அளவுக்கு இருந்தது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கினார்.

சாலைகள், பாலங்கள், நீர்ப் பாசன ஆதாரங்கள், பயிர்கள்,

சொத்துக்கள் இந்த புயலால் பெருமளவில் சேதம் அடைந்துள்ளன. அநேக உயிர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

230 பேர்கள் உயிர் இழந்துள்ளனர். ஏறத்தாழ 2 இலட்சம் குடிசைகள் பாதிக்கப்பட்டு, அழிந்துள்ளன. 51 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் உள்ள பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏராளமான கால்நடைகள் உயிர் இழந்துள்ளன என்றும், ஏராளமான சாலைகள், நீர்ப்பாசனக் குளங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. ஏராளமான பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

ஏறத்தாழ 2 ஆயிரம் மீன் பிடி படகுகள் சேதம் அடைந்துள்ளன. மாநிலத்தை மீண்டும் இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் இருந்து 530 கோடியே 4 இலட்சம் ரூபாய் விசேஷ நிதி உதவி கேட்டார்.

வெள்ள சேதங்களை பார்வையிட தமிழ்நாட்டுக்கு வரவேண்டும் என்று பிரதமருக்கு ஏற்கெனவே விடுத்த அழைப்பை மீண்டும் நேரில் விடுத்தார்.

விரைவில் தமிழ்நாட்டுக்குச் சுற்றுப் பயணம் வருவேன் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் பதில் அளித்தார். மேலும், சிறப்பு நிதி உதவி கேட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடுத்த கோரிக்கை அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் உறுதி அளித்தார்.

இந்தச் சந்திப்பு 15 நிமிடங்கள் நடந்தது.

பிரதமர் உதவி

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க உடனடியாக ரூ.21 கோடியே 90 இலட்சம் வழங்க மாண்புமிகு பிரதமர் அவர்கள் உத்தரவிட்டார்.

அத்துடன் 1993-94-ஆம் ஆண்டுக்கான மத்திய நிவாரண நிதியில் இருந்து மேலும் 2 தவணை தொகையை உடனடியாக வழங்கும் படியும் மாண்புமிகு பிரதமர் உத்தரவிட்டார்.

மேலும் ரூ.35 கோடி

வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ரூ.10 கோடி வழங்கினார். பிறகு மேற்கொண்டு ரூ.35 கோடி அனுமதித்து உத்தரவிட்டார். சென்னை நகரிலும் மாவட்டங்களிலும் பழுதடைந்துள்ள சாலைகளைச் சீர்செய்தல், பொது கட்டடங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்ட வேலைகளைச் சீர்செய்தல், வெள்ளப் பகுதிகளில் மீண்டும் விவசாய வேலைகளைத் தொடங்குதல் ஆகிய பணிகளுக்கு இந்தத் தொகை செலவிடப்படும். இந்தத் தொகையையும் சேர்த்து, இதுவரை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் ரூ.45 கோடி வழங்கினார்.



வெள்ளத்தில் சிக்கிய பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றியவர்களுக்கு முதல்வர் அன்பளிப்பு!

13.11.1992 அன்று சிதம்பரனார் மாவட்டத்தில், தாமிரபரணி ஆறு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதாலும், வீசிய புயல் காரணமாகக் கடல் கொந்தளித்து ஆற்று நீரைக் கடல் உள் வாங்காத காரணத்தாலும், புன்னக்காயல் கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டது.

அப்போது ஆறுமுகநேரி காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. ஸ்டீபன், தலைமைக் காவலர் திரு. முத்துசாமி, காவலர்கள் திரு. நெல்சன், திரு. மாசானம் ஆகியோரைக் கொண்ட மீட்புப் பணிக் குழு ஒன்று, உணவு மற்றும் மருந்துப்பொருட்களை எடுத்துக் கொண்டு புன்னக்காயல் கிராமத்திற்குச் சென்றது. திரு. சேகர், திரு. செந்தில்குமார் என்ற இரு படகோட்டிகள் விடா முயற்சியுடன் படகினைச் செலுத்தி 6 முறை அக்கிராமத்திற்குச் சென்று வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க உதவியாக இருந்தனர்.

ஒரு சமயத்தில் படகு கவிழ்ந்து சேதமடைந்த நிலையிலும் தங்கள் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுப் படகைச் செலுத்தினர். இந்தக் குழுவில் திரு. டேவிட்வின்சென்ட் என்கிற தீயணைப்பு அலுவலரும், திரு. மீனாட்சி சுந்தரம் என்கிற முன்னணித் தீயணைப்பாளரும் இடம் பெற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்தார்கள்.

16.11.1992 அன்று சிதம்பரனார் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிவாரண உதவிகளை வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மேற்கண்ட செய்தி தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம் இன்னுயிரையும் துச்சம் என மதித்து வெள்ளத்தில் சிக்குண்ட பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றிய இக்குழுவினரின் வீரத்தையும், கடமையுணர்வினையும் பாராட்டி, காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், அவர்களுக்கு உதவியாக இருந்த படகோட்டிகள் இருவருக்கும் தலா ரூ.10,000 தனது சொந்த நிதியிலிருந்து வழங்குவதாக அறிவித்தார். உடனடியாக அப்போது பணியில் இருந்த திரு. ஸ்டீபன், உதவி ஆய்வாளரை நேரில் அழைத்து, அந்த இடத்திலேயே அவருக்கு ரூ.10,000 தனது சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்தத் தீரமிகு செயல் புரிந்த குழுவில் இடம் பெற்றிருந்த 3 காவலர்கள், 2 தீயணைப்புப்படை வீரர்கள் மற்றும் 2 படகோட்டிகள் ஆகிய 7 பேரையும் 21.11.1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது இல்லத்திற்கு வரவழைத்து அவர்களை வெகுவாகப் பாராட்டி, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000-த்தைத் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். இந்த நிகழ்ச்சியின்போது, காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. வால்டர் தேவாரம் அவர்கள் உடன் இருந்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

நாகர்கோயில் வழியே சுசீந்தரம் சென்று அங்கு சாலையில் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு, மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். பரமார்த்த லிங்கம் என்கின்ற முத்து என்ற இளைஞர் அப்பகுதியில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பல பேரைக் காப்பாற்றினார் என்பதைக் கேள்வியுற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து அவருக்கு 10,000 ரூபாயை வழங்கி அவரது வீரத்தையும், நல் உணர்வையும் பாராட்டினார். மேலும், அவருக்கு அரசு அலுவலகத்தில் கடைநிலை ஊழியர் பதவி வழங்க வேண்டும் என்று ஆணையிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முதல்வர் உதவி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.'92 அன்று வ.உ.சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி அருகிலுள்ள திரேஸ்புரம் பகுதியில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் மீனவர்களின் பல வள்ளங்களும், கட்டுமரங்களும், பெருமளவு சேதமடைந்துள்ளதைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் புதிய வள்ளங்களைக் கட்டுவதற்கும், சேதம் அடைந்த வள்ளங்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும், மீன்பிடி வலைகள் மற்றும் துடுப்புகள் ஆகியவைகளை மீனவர்களுக்குத் தந்து உதவ வேண்டும் என்பதை மனதில் கொண்டு புதியதோர் திட்டத்தை அந்த இடத்திலேயே மீனவர்கள் முன்பாக அறிவித்தார்.

அத்திட்டத்தின்படி புதிய வள்ளங்கள், கட்டுமரங்கள் கட்டுவதற்கும், சேதம் அடைந்த வள்ளங்களைப் புதுப்பிப்பதற்கும் ஆகும் செலவில் 50 சதவிகிதம் அரசு மானியமாகவும், 50 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அங்கேயே உத்தரவிட்டார். அதனடிப்படையில் புயலால் பாதிக்கப்பட்ட வ.உ.சிதம்பரனார், இராமநாதபுரம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மீனவர்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றி உடனடியாக ஆய்வு செய்யப்பட்டது. அந்தப் பகுதிகளில் இதுவரையில் 1920 வள்ளங்கள் முழுமையாகவும், 444 வள்ளங்கள் பகுதியாகவும், 1,522 கட்டுமரங்கள் முழுமையாகவும் தொழில் செய்ய முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர சிலருடைய வீடுகள், மீன்பிடி வலைகள், துடுப்புகள் ஆகியவைகளும் சேதம் அடைந்துள்ளன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் மேற்கண்ட அரசு உத்தரவின்படி 8.01 கோடி ரூபாய் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகை உடனடியாக மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படும்.

இதைத்தவிர, சேமிப்பு நிவாரணத் தொகையாக ரூ.45-ஐ மீனவர்கள் ஒவ்வொரு மாதமும் 8 மாதங்களுக்குச் செலுத்தி வருகிறார்கள். இதற்குச் சமமான தொகையை மாநில அரசும், மைய அரசும் செலுத்தி, இம்மீனவர்களுக்கு மீன்பிடிப்பு இல்லாத 4 மாதங்களுக்கு மாதம் ரூ.270 வீதம் நிவாரணமாகத் திருப்பித்தரப்படும். இத்திட்டத்தின் கீழ் அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் இதுவரையில் 82,645 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். இதனடிப்படையில் மீனவர்களுக்குச் சேமிப்பு நிவாரணமாக வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார். இந்தச் சேமிப்பு நிவாரணத் தொகையும் உடனடியாக மீனவர்களுக்கு வழங்கப்படும். இதுவரையில் எந்த அரசும் இந்த அளவுக்கு மீனவர்களுக்கு உதவிகள் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு

இந்த இதழில்...

வெள்ளப் பகுதிகளில் நிரந்தரப் பாதுகாப்புப் பணி ...	2
தியாகத் திருநாளாம் கொடிநாள் ...	6
ரூ.8,500 கோடி முதலீட்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் ...	8
உணர்ச்சிகளுக்கு ஆளாகிவிடாமல் அமைதி காப்பது நமது கடமை! — *மாண்புமிகு முதல்வர் அறிக்கை* ...	11
தொட்டில் குழந்தைகளுக்கு முதல்வர் பெயர் சூட்டினார் ...	13
அறிவொளி இயக்கம் ...	14
டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் - தொடக்க விழா ...	17
அதிசய மருந்து அதிமதுரம் ...	19
பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ...	21
மாணவர் பக்கம் ...	23
கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மருத்துவமனை ...	24
வாழ்த்துக்கள் பிறந்த கதை! ...	26
தமிழ்நாட்டை மேம்படுத்தும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ...	27
சிறுசேமிப்புத் திட்டங்களும் அரசு அளிக்கும் சலுகைகளும் ...	33
நீங்க நல்லா இருக்கணும் ...	36
வரலாறு படைத்த டாக்டர் ஆர்.கே. சண்முகனார் ...	41
வேளாண் உற்பத்திக்கு முன்னோடித் திட்டங்கள் ...	45

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2023

மார்கழித் திங்கள் - 1

மலர்: 23 இதழ்: 12

16-12-1992

தனுஷ்கோடி மூழ்கிவிடுமுன்பாக அங்கிருந்த 132 நபர்கள் இராமேஸ்வரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

திட்ட விவாதங்கள் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ள டெல்லி சென்றிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை திரும்பியவுடன் 16,17, 18.11.92 ஆகிய தேதிகளில் புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார். அவர் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண உதவிகளை நேரில் வழங்கி, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.

பழுதடைந்த அடிப்படை வசதிகளைச் சீர்படுத்தவும், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் உதவிகள் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டது.

★ 17.11.92 அன்று மாவட்டங்களுக்காக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 21.11.92 அன்று சாலைகளையும் பாசன ஏரிகளையும் சீர்படுத்த ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று 1,43,128 சிறு, நடுத்தர விவசாயிகளுக்கும் 45,902 மற்ற விவசாயிகளுக்கும் மானியத் தொகையாக ரூ.8.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று வாழை, காய்கறிகள், உருளைக்கிழங்கு, ரப்பர் ஆகியவைகளை 18,871 எக்டேர் நிலத்தில் பயிரிட்டு, இழந்த, சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.4.28 கோடி வழங்கப்பட்டது.

★ 22.11.92 அன்று, மணலில் புதைந்த 2,500 எக்டேர் நிலத்தைச் சீர்படுத்தவும் 500 பாசனக் கிணறுகளைத் தூர் எடுக்கவும் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 26.11.92 அன்று படகுகளையும், மீன்பிடி வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு மானியத் தொகையாக ரூ.8.21 கோடி வழங்கப்பட்டது. 1,920 படகுகள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன. 444 படகுகள் ஓரளவு சேதமடைந்தன. 1,522 கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன.

★ கடல் மீனவர்களுக்குத் தேசிய சேமிப்பு மற்றும் நிவாரண நிதியின் திட்டத்தின் கீழும், மீனவர்களுக்கான தேசிய நிதியிலிருந்தும் 82,000 மீனவர்களுக்கு 25.11.92 அன்று ரூ.6.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நோயிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றத் தேவையான மருந்துப் பொருட்களை வழங்க 26.11.92 அன்று ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டது.

★ துணி, அரிசி, மண்ணெண்ணெய், குடிசை சீரமைப்பு ஆகியவைகளுக்கான உடனடி நிவாரணத் தொகையாக ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம், புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அரசு ரூ.68.52 கோடி ஒதுக்கியுள்ளது.

புயல் தடுப்புப் பணிகளுக்காக உலக வங்கித் திட்டம் ஒன்றைத் தயாரித்து மத்திய அரசிடம் வழங்குவோம். 1990 மே திங்களில் கடும் புயல் ஆந்திரப் பிரதேச மாநிலத்தைத் தாக்கியபோது ஏற்பட்ட சேதங்களுக்காக நிதியுதவி கோரி, உலக வங்கியை அணுகியதுபோல, இப்பொழுதும் மத்திய அரசு உலக வங்கியை அணுக இது உதவும்.

23.11.1992-அன்று மாண்புமிகு பிரதமர் அவர்கள், சீரழிவு நிவாரண நிதியிலிருந்து (Calamity Relief Fund) மூன்று காலாண்டுத் தவணைத் தொகை முன்பணமாக ரூ.21.9 கோடி வழங்கியுள்ளார்.

வெள்ளச் சேதங்கள் மிகவும் பயங்கரமாக ஏற்பட்டுள்ளன. அவை, 9-வது நிதிக்குழு அறிக்கையில் கண்டுள்ள விளக்கத்திற்குச் சரியாகப் பொருந்தியுள்ளன. எனவே, தமிழ்நாடு மைய அரசுக்கு வைத்துள்ள கோரிக்கையைத் தனி கவனத்துடன் பரிசீலித்து, அதில் கேட்டுள்ள ரூ.530.04 கோடியை உதவித் தொகையாக விரைவாக வழங்க வேண்டும்.

பிறகு நிருபர்களைச் சந்தித்து மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியதாவது:

'தமிழகத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதம் பற்றி இங்கு விவாதித்தோம். நிவாரணம் கேட்டுத் தமிழக அரசு வெள்ளச் சேத அறிக்கை கொடுத்துள்ளது - தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதம் பற்றித் தமிழக அரசு சார்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

'நவம்பர் மாதம் என்பது பயங்கரம் விளைவிக்கக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கடலோரப் பகுதிகள் புயலால் பாதிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு தமிழ்நாட்டைத் தாக்கியுள்ளது.

இந்தியாவில், கடலோரப் பகுதியில் அதிகமான அளவு புயல் வெள்ளச் சேதம் ஏற்படுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இங்கு விவாதித்தேன்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து நிரந்தர பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்துவது பற்றி ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கு மத்திய அரசு முடிந்த அளவு உதவி செய்யும்'.

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திற்குப் பிறகு வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு பிரதமர் அவர்கள் புறப்பட்டார். அவருடன் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. வைத்தியலிங்கம் அவர்களும் உடன் சென்றனர்.

முதலில் பாண்டிச்சேரி பகுதியில் சேதத்தைப் பார்வையிட்டார். அடுத்து, மதுரை, காமராசர், இராமநாதபுரம், சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்களில் விமானத்தில் தாழ்வாகப் பறந்தபடியே வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகள் பற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விளக்கினார்கள்.

தமிழ்நாட்டில் வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் சென்ற விமானம் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தது. இரவு 7.25 மணிக்குத் தனி விமானத்தில் முதல்வர் சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது:-

'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மேகமலைப் பகுதி, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் கடும் சேதம் அடைந்த பகுதிகளை நானும் பிரதமரும் விமானத்தில் பறந்து சென்றபடியே பார்த்தோம். நாங்கள் நன்றாகப் பார்ப்பதற்கு வசதியாக 2 ஆயிரம் அடி உயரத்தில் - அதாவது மிகவும் தாழ்வாக விமானம் பறந்து சென்றது.

இந்தச். சேதத்தைப் பார்வையிட்ட பிரதமர் அவர்கள், உடனடி நிவாரண உதவிகளுக்காக ரூ.50 கோடி வழங்குவதாக என்னிடம் தெரிவித்தார்.

தென் மாவட்டங்களில் வெள்ளச் சேத விவரங்கள் பற்றிப் பிரதமரிடம் தெளிவாக, விவரமாகக் கூறியிருக்கிறேன்.

இது தவிர, தமிழ்நாடு அரசு ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு, சீரமைப்பு, கட்டுமானப் பணிகளுக்காக ஒரு திட்டத்தைத் தயாரித்து, உலக வங்கியின் நிதி உதவியினைப் பெற அனுப்ப இருக்கிறது. இந்த 1000 கோடி ரூபாய் புனரமைப்புப் பணி திட்டத்துக்கு உலக வங்கியின் உயர் அதிகாரிகளோடு பிரதமர் அவர்களே தொடர்பு கொண்டு பேசி, நிதி உதவி பெற்றுத்தருவதாக என்னிடம் தெரிவித்திருப்பது எனக்கும் பெருமகிழ்ச்சியளிக்கிறது.

'அதோடு வெள்ளச் சேதங்கள் பற்றி மதிப்பீடு செய்ய, மத்திய அதிகாரிகள் சென்னை வருகிறார்கள். இதுகுறித்து அவர்களும் மத்திய அரசுக்கு அறிக்கை அளிப்பார்கள்.''

- என். இளங்கோ.

தியாகத் திருநாளாம்

கொடி நாள்

முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடிநாளினை யொட்டி 7.12.92 அன்று தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

என் அன்பிற்குரிய தமிழகப் பெருமக்களே!

நாடெங்கும் இன்று கொடிநாள் கொண்டாடப்படுகிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து, நமது தாய்த் திருநாட்டிற்குப் பெருமை சேர்க்கும், சீரிய பாதுகாப்புப் பணியில் அயராது ஈடுபட்டிருக்கும், நமது முப்படை வீரர்களின் புகழினை, நாம் போற்றிப் பாடும் நன்னாள் தான், 'கொடிநாள்'.

தங்களுடைய சொந்த நலனைக் கருத்தில் கொள்ளாமல், நாட்டு நலனைப் பாதுகாக்கும் ஒரே இலட்சியத்தோடு, இரவென்றும் பகலென்றும் பாராமல், பனியென்றும் மழையென்றும் தயங்காமல், மலை முகட்டிலும், ஆகாயத்திலும், ஆழ் கடலிலும், வீரம் விவேகம் மற்றும் பொறுப்புணர்வோடு கடமையாற்றித் தம்முயிர் ஈந்து நம்முயிர் காக்கும் தியாக மறவர்கள் நமது முப்படை வீரர்கள். நமது அன்பிற்கும் பாராட்டிற்கும் உரிய, முப்படை வீரர்களின் எண்ணற்ற தியாகச் செயல்களை நினைவு கூர்ந்து, அவர்கள் அனைவருக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் தியாகத் திருநாள் தான், இந்த கொடிநாள்!!

நமது நாட்டின் எல்லைகளைத் தொடர்ந்து பாதுகாத்து, அந்நியரின் ஆதிக்கத்தையும் எதிரிகளின் ஊடுருவல்களையும் முறியடிக்கும் முப்படை வீரர்களின் பணி, அவைகளோடு மட்டும் நின்று விடுவதில்லை; நாட்டை அழிக்க முயலும் தீய சக்திகள் நம் நாட்டில் தலைதூக்க முற்படும்போதெல்லாம், அவற்றை அடக்கவும், அழிக்கவும் நமது முப்படை வீரர்கள் தான் உதவுகிறார்கள். மேலும், இயற்கையின் சீற்றங்களால் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட மக்களை அபாயங்களிலிருந்து மீட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதும் முப்படை வீரர்களே.

வீரத்திற்கு வணக்கம் செலுத்தி, வீரர்களை ஊக்குவிக்கும் பழம் பெரும் பண்பாடு கொண்டது, நம் இந்தியத் திருநாடு; குறிப்பாக, போரில் கணவனை இழந்த தலைவி, பால்வடியும் முகம் கொண்ட தன் மகனுக்கு, வேல் தந்து போருக்கு அனுப்பி, பரணி பாடிய வீர வரலாற்றினைக் கொண்டது, நம் தமிழ்நாடு, அப்படிப்பட்ட வீர வரலாற்றின் விளை நிலமாக இருக்கும் நம் இந்திய நாடு காக்கும் நற்பணியில் தங்களின் இன்னுயிரை இழந்த படை வீரர்களின் குடும்பங்களுக்கு, அரணாகவும், ஆதரவாகவும் இருக்க வேண்டியது நமது கடமை ஆகும். இவர்களது வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளிலும் துன்பங்களிலும், நாம் பங்கு கொண்டு, அவர்களுடைய துயரினைத் துடைத்திட



ஓடோடிவர வேண்டியது தான், நமது மனிதாபிமானத்தின் வெளிப்பாடு. கொடிநாள், அவர்கள் அனைவருக்கும் உதவிடும் நல்வாய்ப்பினை, நமக்கு வழங்கியுள்ளது.

நாடு காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமது முப்படை வீரர்களுக்கும், அப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற முன்னாள் படை வீரர்களுக்கும், அரசு பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நன்கொடை வழங்குவதில் தமிழ்நாடே முதன்மையாக இருந்து வருகிறது. 1991-ஆம் ஆண்டு கொடிநாள் நிதியாக 1.75 கோடி ரூபாய் தமிழ்நாட்டு மக்கள் வாரி வழங்கியுள்ளார்கள். 1992-ஆம் ஆண்டிற்குரிய கொடிநாளில், கொடிநாள் நன்கொடை, முந்தைய வசூல் சாதனைகளை எல்லாம் முறியடிக்கும் என்பதில், எனக்குச்சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வாறு மக்கள் மனமுவந்து அளிக்கும் தொகைகள், உடல் ஊனமுற்ற வீரர்களுக்கும், போரில் தலைவனை இழந்த குடும்பங்களுக்கும், வெற்றிவாகை சூடித் திரும்பி, தற்போது வயது முதிர்ந்து ஓய்வு பெற்ற வீரர்களின் நலனுக்காகவும், உதவித்தொகையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்தகையோரின் குழந்தைச் செல்வங்களின் படிப்பிற்கும் உதவித்தொகை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பெட்டிக்கடை வைப்பதற்கு, மாவரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் போன்றவை வாங்குவதற்கு நிதி உதவி அளித்து, அவர்கள் அதன்மூலம் தாமே வருவாய் ஈட்டிட வழிவகுக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. தொழில்கள் தொடங்க, அவர்கள் வங்கிகளிடம் இருந்து பெறும் கடனுக்கு, வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. சிறுநீரக மாற்றம், இருதய அறுவைச் சிகிச்சை போன்ற பெரிய மருத்துவ சிகிச்சைகளுக்கு, 20,000 ரூபாய் வரை இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் துன்புறுவோருக்கும், கண்பார்வை இழந்தவர்களுக்கும், மாதாந்திர நிதியுதவி அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் அளிக்கப்படுகிறது. உலகப் போரில் பணியாற்றி தற்போது ஆதரவற்ற வயதான முன்னாள் படை வீரர்களுக்கு, மாதம் 150 ரூபாய் வீதம், அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படுகிறது.

அவர்களது தேவைகளைப் பொறுத்து அவரவருக்கு உரிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் அவர்களுக்கு உதவியாகச் சென்ற ஆண்டு மட்டும் 1.45 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 11,340 பேர் உதவிகள் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

நாட்டினைக் காத்த நல்ல வீரர்களின திறமையான சேவையை, மேலும் பயன்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, 'கோவில் பாதுகாப்புப் படை' ஒன்றினை அமைக்க, அண்மையில் நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம், நமது பெருமை மிகுந்த கோவில்களைப் பாதுகாக்கும் பணியில், 3,000 முன்னாள் படை வீரர்கள் மீண்டும் பணியாற்றும் வாய்ப்புப் பெறுகிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் புரிந்த வீர சாகசச் செயலுக்காகவும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காகவும், மத்திய அரசு 'வீர விருது' மற்றும் 'சிறந்த சேவைக்கான பதக்கங்கள்' வழங்கிவருகிறது. அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், ஒருசில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர்களுக்கு மட்டுமே, மாநில அரசு புகழ்க் கொடையாகப் பண முடிப்பு வழங்கி வந்தது. இதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், 1947-ஆம் ஆண்டு முதல் விருது பெற்ற தமிழ்நாட்டு வீரர்கள் அனைவரும், தமிழக அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்புப் பெறும் வகையில், தேவையான ஆணைகளை இந்த ஆண்டு விடுதலை நாளில் வெளியிட்டேன். இதனை, அன்று கோட்டையில் நிகழ்த்திய எனது உரையிலும் குறிப்பிட்டேன்.

முன்னாள் படை வீரர்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன், கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, வீட்டு வசதிக்கான இட ஒதுக்கீடு, மருத்துவமனைகளில் சலுகை, தொழிற்கூடங்களில் ஒதுக்கீடு, வேலைவாய்ப்பில் சிறப்புரிமை போன்ற பல உதவிகளை அரசு வழங்குகிறது. அரசின் முயற்சியோடு இணைத்து, நமது முழு ஈடுபாட்டினைக் காட்டி, வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவோம். தமக்கென வாழாமல், பிறர்க்கென வாழும் இந்தத் தியாக மறவர்களின் தன்னலம் கருதாப் பணிக்கு நாம் நன்றி செலுத்துவோம்; முப்படை வீரர்களின் நலன் காப்போம்! கொடிநாள் நிதிக்கு வாரி வழங்கிடுவோம்! இந்த முயற்சிகளுக்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும், உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

ரூ 8,500 கோடி முதலீட்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992 டிசம்பர் திங்கள் 4,5 தேதிகளில் தொழிலதிபர்களிடமும், தொழில் முனைவோர்களிடமும் பேசி மாநிலத்தின் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்வதற்கான பல்வேறு தொழில் திட்டங்ளுக்கு ஒப்புதல் அளித்தார்கள். இந்த 2 நாள் கூட்டத்தில் தனியார் துறையில் ரூ.5400 கோடி செலவில் மின் திட்டங்கள் தொடங்கப்படுவது உட்பட மொத்தம் ரூ.8,500 கோடி முதலீட்டில் தொடங்கப்படவுள்ள 27 புதிய தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு. டி.வி.வெங்கட்ராமன், தொழில்துறை முதன்மைச் செயலர் திரு. சி. இராமச்சந்திரன், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. எஸ். அர்விந்த், முதல்வரின் செயலர் எஸ்.ஆர். கருப்பண்ணன், தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு. என். ஹரிபாஸ்கர் உட்பட அரசின் மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

புதிய தொழிற் கொள்கை

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் ஒரு ஒருங்கிணைந்த புதிய தொழிற் கொள்கையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992- ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அறிவித்தார். இந்தக் கொள்கையில் கவர்ச்சிகரமான சலுகைகள், அடிப்படை வசதி மேம்பாடுகளுக்கு முன்னுரிமை, தொழில் உறவுகளில் புதிய கொள்கை, தொழிலாளர் நலம் என அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெளியிலிருந்தும், நமது நாட்டின் வெளியிலிருந்தும் முதலீடுகளைக் கொண்டு வந்து பெரிய தொழிற்சாலைகளை நிறுவ ஊக்கமளிக்கப்படும் என்று இந்தக் கொள்கை உறுதியளிக்கிறது. புதிய தொழில் கொள்கையின் முக்கியமான அம்சங்களையும் சலுகைகளையும் அனைவருக்கும் பரப்ப அரசும் மற்ற நிறுவனங்களும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சமீபத்திய திட்டங்கள்

புதிய கொள்கை தொழில் அதிபர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த இரு திங்களில் பல புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஓசூரில் ரூ.675 கோடி முதலீட்டில் தொடங்கப்படவுள்ள அசோக் லேலண்ட் திட்டம், சேலம் மாவட்டத்தில் ரூ.200 கோடி முதலீட்டில் எல்.எம். டபிள்யூவின் இரும்புத் தொழிற்சாலை ரூ.800 கோடி செலவில் வெளிநாட்டில் வாழும் இந்தியர் நெய்வேலியில் துவங்கவிருக்கும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தித் திட்டம் ஆகியவை, கடந்த சில மாதங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களாகும். ரூ.100 கோடி முதலீட்டில் 4 புதிய ஏற்றுமதியை மையமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியா-சிங்கப்பூர் வர்த்தகம் நடைபெற தகுந்த ஒரு இடத்தை தேர்ந்தெடுத்துள்ளது. சிங்கப்பூரிலிருந்து முதலீடுகளைக் கவரத்தக்க வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

கூட்டம்

தமிழக அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் மாநில நிறுவனங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக நிறைய புதியத் திட்டங்களான முன்மொழிவு வந்திருப்பதை, 15.10.92 அன்று நடைபெற்ற தொழில்துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். புதிய முதலீடுகளுக்கு மிகவும் ஏதுவான இடமாக தமிழகம் மலர்ந்து வருவது குறித்து மகிழ்வடைந்தார். இந்தப் **பின்னணி**யில்தான், குறிப்பிட்ட சில திட்டங்களின் முன் வரையோடு அரசினை அணுகியவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்து அவர்களுடன் விவாதித்து அதே இடத்தில் ஒப்புதலையும் அளிக்க முன்வந்தார். இந்த 2 நாள் விவாதத்தின்போது 24 தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்களது திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தார். ஆரம்பக் கட்டத்திலுள்ள சில திட்டங்களுக்குக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தார். பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்குவதில் உள்ள சலுகைகளையும், பெண்களை அதிகமாக வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளையும் கவனத்தில் கொண்டு அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்க முதல்வர் வலியுறுத்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்தத் திட்ட மதிப்பீடு ரூ.8,500 கோடியாகும். இதனால் 8,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 12,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்த திட்டங்களுக்கு மற்ற துறையினர் உடனடியாக எவ்வித தாமதமுமின்றி ஒப்புதல் அளித்தாக வேண்டும் என அரசு நிறுவனங்களுக்கும் துறையினர்களுக்கும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். ஒப்புதலுக்கு வரும் திட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இதுபோன்று மேலும் கூட்டங்களை நடத்த முதல்வர் உத்தேசித்துள்ளார்.

புதியத் திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் தொழிலதிபர்களை தனித்தனியே சந்தித்து அவர்களுடைய திட்டங்களைப் பற்றி விவாதித்தார்.

1. திரு. ஜெயரத்தினவேலு - கோக் ஓவன் திட்டம் - முதலீடு ரூ.140 கோடி.

2. திரு. தினேஷ் டால்மியா - எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால் - முதலீடு ரூ.37 கோடி.

3. திரு. தியாகராஜ செட்டியார் - மெம்ப்ரேன் கீ ஸ்விட்சஸ் - முதலீடு ரூ.12 கோடி.

4. திரு. எப்.ஜே. ஹேரிஸன் - ஆட்டோமொபைல் டயர்ஸ் - முதலீடு ரூ.400 கோடி .

5. திரு. புன்னூஸ் (எ) அப்பச்சன் - தீம் பார்க் - முதலீடு ரூ.15 கோடி.

6. திரு. ஜி.எஸ். கேசவமூர்த்தி- (அ) வன்னிலின்-முதலீடு ரூ.30 கோடி (ஆ) போட்டோகாயிங் கெமிக்கல்ஸ் முதலீடு ரூ.25 கோடி.

★ அன்பும், சத்தியம் என்கிற வாய்மையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை

—காந்தியடிகள்

7. திரு. ப. மருதைப்பிள்ளை - ஷு அப்பர்ஸ் - முதலீடு ரூ.13 கோடி.

8. திரு. ராம் வி. தியாகராஜன் - என். புடானல் - முதலீடு ரூ.20 கோடி

9. திரு. எம்.வி. சுப்பையா - (அ) அம்மோனியா ஸ்டோரேஜ் டெர்மினல் - முதலீடு ரூ.25 கோடி

(ஆ) வினில் அஸிடேட் மானோமர் முதலீடு ரூ.125 கோடி

10. திரு. எஸ்.எஸ். போதார் - பாலியெஸ்டர் பிலமெண்ட் யார்ன் - முதலீடு ரூ.100 கோடி.

11. திரு. ஏ.சி. முத்தையா - காஸ்டிக் சோடா கால்ட் பொருள்கள் - முதலீடு ரூ. 135 கோடி.

12. திரு. என். சங்கர் - சின்தெடிக் ரூடைல் - முதலீடு ரூ.235 கோடி.

13. திருமதி மல்லிகா சீனிவாசன்- இன்ட்ரா ஆக்குலர் லென்ஸ் - முதலீடு ரூ.15 கோடி

14. திரு. ஜான் ஹார்மிஸ் - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.3,000 கோடி

15. திரு. விஜயகுமார் ரெட்டி - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.1,600 கோடி.

16. திரு. ஜி.எம். சுவாமி - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.800 கோடி.

17. திரு. எச். பிரநேசர் - (அ) சிட்ரிக் ஆசிட் - முதலீடு ரூ.100 கோடி.
(ஆ) பாலிமெர் கெமிக்கல்ஸ் - முதலீடு 1,000 கோடி.

18. டாக்டர் கே. அஞ்சிரெட்டி - மருந்து பொருட்கள் - முதலீடு ரூ.70 கோடி.

19. திரு. என்.வி. சௌத்ரி - பல்க் டிரக்ஸ் இன்டெர்மீடியட்ஸ் - முதலீடு ரூ.20 கோடி.

20. திரு. ரவி. என். ருயா - எண்ணெய் கண்டுபிடிப்பு மற்றும் உரத் தொழிற்சாலை - முதலீடு ரூ.1,000 கோடி.

21. திரு. பாவன் போதார் - பிளாஸ்டிக் தொழிற்சாலை-முதலீடு ரூ.32 கோடி.

22. திரு. கமால் ஆஸ்வல் - கெமிக்கல்ஸ் - முதலீடு ரூ.100 கோடி.

23. திரு. பீட்டர் ஜெ.எல்.பிரபு செருப்புத் தொழிற்சாலை - முதலீடு ரூ.11 கோடி.

24. திரு கே. ஜெகதீஸ் ரெட்டி- வீவிங் மில் - முதலீடு ரூ.16 கோடி.

மொத்தம் ரூபாய் 8,486 கோடி.

புதிய தொழிற் கொள்கையில் தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமை தொழில்கள் சம்மந்தப்பட்ட திட்டங்களே இதில் பெரும்பாலும் அடங்கி உள்ளன. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழகத்தில் தொழில் துவங்க ஆர்வம் காட்டியவர்களில் பாதிப்பேர் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, பஞ்சாப் போன்ற



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் முதலமைச்சரின் நிவாரண நிதிக்காகச் சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் சார்பாக ரூ.4 இலட்சத்து 5 ஆயிரத்திற்கும், சேரன் பொறியியல் கழக ஊழியர்கள் சார்பில் ரூ.16 ஆயிரத்து 80- க்கும் காசோலைகள் வழங்கினார் (30.11.92).

வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலேயே தொழில் தொடங்க சிறந்த சூழ்நிலையை கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு என்பதையே இது குறிக்கின்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் நான்கு பேர் வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் - அமெரிக்காவிலிருந்து இருவர், ஜெர்மனியிலிருந்து ஒருவர், இங்கிலாந்திலிருந்து ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்கள் முன்மொழிந்த திட்டங்கள், அரசு நிறுவனங்களால் விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு, முதல்வர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்து தொழிலதிபர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளனர். பேயர் இந்தியா (Bayer India) கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு. பிரநேசர், தமிழ்நாட்டில் இவ்வளவு விரைவாக ஒப்புதல் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாட்டிலேயே மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழ்நிலை தமிழ்நாட்டிலிருப்பதால், தாங்கள் முதலீடு செய்வதற்கு தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்ததற்காக அமெரிக்காவைச் சார்ந்த திரு. ஹேரிசன், திரு. ஜான் ஹார்மிஸ் ஆகியோர் முதல்வரிடம் தெரிவித்தனர். அவர்களது திட்டங்கள் வேகமாக பரிசீலிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது தங்களை மிகவும் கவர்ந்ததாகக் கூறினர். இங்கிலாந்து நாட்டின் ஜி.டி.எஸ். பேப்ரிகேடர்ஸ் நிறுவனத்தின் உதவியோடு 100 சதவிகிதம் ஏற்றுமதி திட்டத்தை நிறுவவுள்ள திரு. பாவன் போதர் இதுபற்றி கூறுகையில், இந்தியாவில் முதன்மையாக உள்ள மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தமிழ்நாடு சிறந்த முதலீட்டுச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதால் அவர் தனது தொழிற்சாலையை தமிழகத்தில் உருவாக்கியதாக கூறினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் முற்போக்கான தலைமையின் கீழ் சுமூகமான சூழ்நிலை நிலவுவதை, வெளிமாநிலத்திலிருந்து வரும் தொழிலதிபர்கள் மிகவும் பாராட்டினார்கள்.

கடந்த 15 மாதங்களாக நாடு தொழில்துறை தேக்கத்துடன் கூடிய தீவிர பொருளாதார சிக்கலின் பிடியில் சிக்கியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் கூட, தமிழ்நாடு வேகமான தொழில் வளர்ச்சிக்கு தம்மை ஈடுபடுத்தி, பீடு நடை போட்டு உள்ளது. 90-களில் தொடர்ந்து முன்னேறுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. புதிய முதலீடுகளுக்குச் சிறந்த தளமாக தமிழகம் உருவாகி வருகிறது. அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், வரி சலுகைகள், தீவிர முன்னேற்ற முயற்சிகள் ஆகியவற்றில் தொடர்ந்த முயற்சியும், சிறந்த பலன்களை தந்துள்ளது. அதன் பயனாக தமிழ்நாட்டின் உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடமிருந்தும், வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் தமிழ்நாட்டில் முதலீடு செய்யக் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் முற்போக்கான தலைமையினாலும், தெளிந்த பார்வையினாலும், இத்தகைய பெரிய மாற்றங்கள் சாத்தியமாயின. தொழில் துறையில் வேகமான, சீரான வளர்ச்சியைப் பெற விளைவுகளை குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கைகளை எடுக்கும்படி மாண்புமிகு முதல்வர் வலியுறுத்தினர். மிகவும் துரிதமான முன்னேற்றத் திட்டங்களை வகுக்க தொழிற்துறையும், மாநிலத் தொழில் வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

உணர்ச்சிகளுக்கு ஆளாகிவிடாமல் அமைதி காப்பது நமது கடமை!

- மாண்புமிகு முதல்வர் அறிக்கை

அயோத்தியில் உள்ள பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 7.12.92 அன்று கூறி இருப்பதாவது:-

'அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தில் நடந்ததாகக் கூறப்படும் புனிதமற்ற அனைத்துச் செயல்களையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது கோர்ட்டு உத்தரவுக்கு எதிரானது.

சமூக ஒற்றுமைக்கு மேலும் சேதம் ஏற்படுத்தாமல் தடுக்க, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இந்த நெருக்கடியான நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அமைதியையும் ஒற்றுமையையும் பேணிக்காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அறிக்கையில் கூறி இருந்தார்.

இச்சம்பவத்தினால் நாடெங்கும் பதட்ட நிலை காணப்பட்டது. ஆங்காங்கே காவல் துறையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். நாடெங்கும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் 10-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் நடைபெறும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். அதன் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:

'அயோத்தியில் கடந்த 6-ந் தேதி பாபர் மசூதி உடைக்கப்பட்ட அராஜகச் செயல் மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி ஆகும். அதனை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் உச்ச நீதி மன்ற ஆணைகளை மீறியதோடு மதச் சார்பற்ற இந்தியத் திருநாட்டை துண்டாக்கும் வகையில் - குந்தகம் விளைவிக்கும் வன்முறையில் ஈடுபட்டது கடுமையாகத் தண்டிக்கத் தக்கது.

நாடு முழுவதும் மதத்துவேஷம் என்ற விஷத்தை தூவும் வகையில் நடைபெற்ற செயல்களுக்கு அ.இ.அ.தி.மு.க. ஒருமித்த கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையிலும், இந்த அராஜகச் செயலால் பாதிக்கப்பட்டு, பதட்டம் அடைந்துள்ள இஸ்லாமியச் சகோதரர்களின் நலன் காத்து, அவர்களுக்கு ஆதரவு தரும் வகையிலும், நாட்டின் நலனுக்காக அனைத்துச் சமயங்களுக்கிடையே ஒற்றுமை உணர்வை வலியுறுத்தும் வகையிலும் வருகின்ற 10.12.92 அன்று மாநில அளவிலான வேலை நிறுத்தத்தில் அ.இ.அ.தி.மு.கழகம் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்குப் பொதுமக்கள் தங்கள் முழு ஆதரவினையும் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.''

— இவ்வாறு இந்த அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்

முழு அடைப்பின் போது பொது மக்கள் அமைதி காத்துப் பொது வேலை நிறுத்தம் முழு அளவில் வெற்றியடைய ஒத்துழைக்கும்படி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதன் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

''பாபர் மசூதி இடிக்கப்பட்டது துரதிருஷ்டமான பல விளைவுகளை நாட்டில் ஏற்படுத்திவிட்டது. பல உயிரிழப்புகள் ஏற்பட்டு விட்டன.

சகிப்புத் தன்மைக்குத் தமிழக மக்கள் மிகவும் பெயர் போனவர்கள். பல்வேறு இன மக்கள் தமிழ்நாட்டில் மிகவும் அமைதியாகவும், சமாதானத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள் தொடர்ந்து வாழ்வார்கள்.

இந்தக் கடுமையான நேரத்தில் உணர்ச்சிகளுக்கு ஆளாக நம்மை விட்டுவிடாமல், அமைதி காக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

பல்வேறு பிரிவினரிடையே ஒற்றுமையையும், அமைதியையும், காத்து சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க அரசுக்கு உதவும்படி சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து மாநிலத்தில உள்ள அனைத்து மக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பல சமுதாய மக்களிடையே நல்லெண்ணத்தைப் பராமரிக்க அரசுக்கு ஒத்துழைப்பு நல்கும்படி

அனைத்துத் தரப்புத் தலைவர்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்று நடக்கும் முழு அடைப்பின்போது எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் இல்லாமல் அமைதியாக நடத்தி முழு வெற்றியைச் செய்ய ஒத்துழைக்கும்படி தமிழக மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்த அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் கூறியிருக்கிறார்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து, தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிகள் சார்பில் முழு அடைப்பு நடந்தது. கடைகள் மூடப்பட்டிருந்தன. பஸ்கள், இரயில்கள் ஓடவில்லை.

முழு அடைப்பை அமைதியாக நடத்தியதற்காக தமிழக மக்கதளுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நன்றி கூறியிருக்கிறார். இதன் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

''அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழகத்தில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் மிகவும் கட்டுக்கோப்புடனும், அமைதியுடனும் நடைபெற்றது குறித்து, நான் தமிழக மக்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடந்த ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் மூலம் தமிழக மக்கள் இந்திய ஒருமைப்பாட்டின் மீதும், அதன் மதச்சார்பற்ற கொள்கையின் மீதும், கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற உணர்வாக அமைந்துள்ளது.

என்றுமே அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு இருக்கும் என்பதைத்தான் இன்று நடந்த பொது வேலை நிறுத்தம் வெளிப்படுத்துகின்றது.

இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சோதனைக் கட்டத்திலும், மிக அமைதியுடனும் பொறுப்புடனும் நடந்து கொண்ட தமிழக மக்கள் வன்முறைக்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதனை இது முழுமையாக வெளிப்படுத்துகின்றது.

இன்று தமிழகம் முழுவதும் அமைதியோடு நடந்த பொது வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய தமிழக மக்களுக்கு மீண்டும் நன்றியை எனது சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் ஆலோசனை

சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி

இன்று (3.12.1992) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தின் ஜவகர்லால் நேரு 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டத் தங்கக் கோப்பைப் போட்டி துவக்க விழாவினைப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நேரு விளையாட்டு அரங்கில் 1993 ஜனவரி மாதத்தில் பெரிய அளவில் நடத்துவது குறித்து ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்கள். நேரு விளையாட்டு அரங்கின் கட்டுமானப் பணிகளில் உள்ள முன்னேற்றத்தையும் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள், திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஆகியோரும், தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உள்துறை, பொதுத்துறை, கல்வித்துறை, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றின் செயலாளர்களும், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டுக் குழுமம், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு, காவல் துறைத் தலைவர், தமிழ்நாடு காவல்துறை கூடுதல் தலைவர், சென்னைக் காவல்துறை ஆணையாளர், தனி அலுவலர், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. சி.ஆர். விஸ்வநாதன், திரைப்பட இசை அமைப்பாளர் திரு. (சங்கர்) கணேஷ் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

தொட்டில் குழந்தைகளுக்கு முதல்வர் பெயர் சூட்டினார்

16-12-1992

சேலம், மதுரை மாவட்டங்களில் சில இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தால் உடனடியாகக் கொல்லப்படுகிறார்கள் என்கின்ற சோகச் செய்திக் கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாங்கொண்ணா துயர் அடைந்தார். இதைத் தடுத்து நிறுத்தும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்படி, இம்மாவட்டங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சத்துணவுக் கூடங்கள் முன்பு தொட்டில்கள் வைக்கப்படும். பெண் குழந்தைகள் வேண்டாம் எனக் கருதுபவர்கள் இந்தத் தொட்டிலில் குழந்தைகளைப் போடலாம். அக்குழந்தைகளை அரசே வளர்க்கும்.

இத்திட்டம் அமலாக்கப்பட்டு தொட்டில் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தாய்-சேய் நல விடுதி மற்றும் சுகாதார நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த அரசுத் தொட்டில்களில் 11 குழந்தைகள் போடப்பட்டன.

தொட்டில்களில் போடப்பட்ட அந்தக் குழந்தைகளில் 5 பெண் குழந்தைகள் ரெயில் மூலம் 4.12.92 அன்று சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன. இந்தக் குழந்தைகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பெண் குழந்தைகள் சென்னை கோட்டையில் உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களது அறைக்கு 5.12.92 அன்று கொண்டு வரப்பட்டன. தாயே வேண்டாமென ஒதுக்கிய சேய்கள் ஒவ்வொன்றாக மாண்புமிகு முதல்வரிடம் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குழந்தையையும் பாசத்தோடு முத்தமிட்டு, முதல் குழந்தைக்கு 'ஜெயலட்சுமி' என்றும், அடுத்து வந்த 3 குழந்தைகளுக்கு முறையே 'ராஜலட்சுமி', 'மகாலட்சுமி', 'தனலட்சுமி' என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

உடல்நலக்குறைவால் கொண்டு வர முடியாத குழந்தை ஒன்றுக்குக் 'கல்யாணி' என்று பெயர் சூட்டினார்.

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டிவிட்டு இந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்காக, தாம்பரம் எஸ்.ஓ.எஸ். சமூக சேவை இல்லத்தில் பணிபுரியும் அமுதாவிடம் குழந்தைகளை மாண்புமிகு முதல்வர் ஒப்படைத்தார்.

இந்தக் குழந்தைகளை ஒப்படைத்ததற்கான பதிவுப் புத்தகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களே குழந்தைகளின் பெயர் மற்றும் விவரங்களை எழுதினார். இந்தக் குழந்தைகளின் நலன். மற்றும் வளர்ச்சி குறித்து அவ்வப்போது தனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என சமூக நலத்துறை அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில்

அறிவொளி இயக்கம்

ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.
தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர்

பசுமைப் புரட்சியின் மூலம், வயல்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கும் உழவர் களையும், நீலப்புரட்சி மூலம் மீன் பிடித்து வாழும் மீனவர்களையும் தொழில் துறைகளில் சிறந்து விளங் கும் பெருமக்களையும் பெரிதும் தன்னகத்தே பெற்று விளங்குவது தென்னார்க்காடு மாவட்டம்.

மொழி மனிதனை விலங்கு களிலிருந்து வேறுபடுத்திக் காட்டு கின்றது என்றாலும் கல்வி அறிவு அவனைக் காட்டுமிராண்டிகளிட மிருந்து உயர்த்திக் காட்டுகிறது. இலக்கியத்தை இன்று நுகர்வதற்கும், நடைமுறை வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கும், சிறு சேமிப்புச் செய்திடவும், குடும்பநலம் பேணவும், புதிய தொழில் நுட்பங் களைத் தேர்ந்தெடுத்து வேளாண் துறையில் வித்தகம் படைக்கவும், பிற துறைகளில் பெரும் புகழ் சேர்க்கவும், புதுமைகளைப் புகுத்த வும், வளமையைத் தேக்கவும் கல்வி இன்றியமையாதது.

நமது தென்னார்க்காடு மாவட் டத்தில் அறிவொளி இயக்கம் விரை வில் அமலுக்கு வரவிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் உதவி யுடன் இந்த உயரிய திட்டம் விரை வில் அரங்கேற இருக்கிறது. இதன் மூலமாக 9 வயதிலிருந்து 45 வய துள்ள படிப்பறிவில்லாதவர்களுக்கு எழுத்தறிவு கற்றுத் தரப்படும். கல்வி அறிவு பெற்ற தன்னார்வத் தொண் டர்கள் இந்த மகத்தான பணியைச் செவ்வனே செய்யவிருக்கிறார்கள். ஏறத்தாழ ஓராண்டுக் காலம் நடக்கவிருக்கும் இந்தப் பணியின் மூலமாகக் கல்வி அறிவு இல்லாத வர்களுக்கு முழு எழுத்தறிவு தரப் படவிருக்கிறது.

சூழ்நிலையினால், வாய்ப்பின் மையால், போதுமான வசதியின்மை யினால் கல்வி அறிவு பெற இய லாமல் போய் விட்டவர்கள். இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி பெற்றவர்கள் உதவி புரிய நீட்டும் நேசக்கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கரை ஏற வேண்டும். இந்த மகத்தான செய லினால் சுயசக்தி பெற்று சுதந்திரக் காற்றைச் சுவாசித்து எழுத்தறிவில் லாத பாமர மக்கள் அனைவரும் படிப்பறிவு பெற்றவர்களாக மாற வேண்டும். இதுவே ‘அறிவொளி இயக்கப்’ பணி. இவ்வாறு பாமர மக்களும் படிப்பறிவு பெறுவதால் இன்னொரு விழி அவர்களுக்குக் கிடைக்கிறது!

தென்னார்க்காடு மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை 48,70,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ஆண்கள் 24,75,000 பேர். பெண்கள் 23,95,000 பேர்.

மொத்த மக்கள்தொகையில் படிக்காதவர்களின் எண்ணிக்கை 22,28,000 ஆகும்.

இந்த ‘அறிவொளி இயக்கத்’ திட்டத்தின் மூலமாக நாம் 9 வயதி லிருந்து 45 வயது நிரம்பியுள்ள வர்களையும் எழுத்தறிவு பெற்றவர் களாக மாற்ற இருக்கிறோம். அவர்கள் எண்ணிக்கை சுமார் 7 இலட்சம் இருக்கும் என்று தோராய மாகக் கணக்கிடப்படுகிறது. ஆனால் அவர்களின் உண்மையான எண் ணிக்கை ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் நடக்கவிருக்கும் மதிப் பீட்டின் போதுதான் தெரியவரும். இந்த 9 வயதிலிருந்து 45 வயதுள்ள வர்களைத் தேர்வு செய்யக் காரணம் என்னவென்றால், 9 வயதுக்கு உட்பட்டவர்கள் கல்வி அறிவு பெறாமல் இருந்தால் அவர்களைப் பள்ளிகளின் மூலம் கல்வி அறிவு பெறவைக்க இயலும் என்பதுதான்.

இந்த ‘அறிவொளி இயக்கம்’ காலவரைக்குட்பட்ட திட்டமாகவும், ஆர்வமுடைய அனைவரையும் உள் ளடக்கிய திட்டமாகவும், தன்னார் வத் தொண்டர்களை மையமாகக் கொண்ட திட்டமாகவும் மலர இருக் கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ் வொரு நபருக்கும் 60 ரூபாய் வீதம் செலவிடப்படவிருக்கிறது. தன்னார் வத் தொண்டர்களின் பணி முற்றி லும் தன்னலமற்ற, ஊதியத்தை எதிர்பாராத சேவை மனப்பான்மை கொண்ட பணியாகும்.

இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த ‘அறிவொளி இயக்கம்’ என்னும் பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஏற்படுத்தப்படும். அதன் தலைவர் மாவட்ட ஆட்சியர் ஆவார். அவர் தலைமையின் கீழ் ஒரு நிர் வாகக் குழு அமைக்கப்படும். அந்த நிர்வாகக் குழுவின் கீழ் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும், நகராட்சி, ஊராட்சி அளவிலும், கிராம அளவிலும் எழுத்தறிவுக் குழுக்கள் அமைக்கப் பட்டுக் கிராம அமைப்பாளர்கள் மூலமாகப் படிப்பறிவு சொல்லித் தரப்படும்.

இந்த ‘அறிவொளி இயக்கம்’ அனைத்துத் தரப்பினரின் ஒத் துழைப்பில்தான் முழுமையான வெற்றியைப் பெற முடியும். எப்படிப் பாதத்தின் விரல்கள் அனைத்தும் ஒத்துழைத்தால்தான் நடை பயில இயலுமோ, அதைப் போலவே இம் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரும் ஒருங்கிணைந்து ஒத் துழைப்பைக் கொடுத்தால்தான் அறிவொளி இயக்கம் வெற்றி நடை போட முடியும். அறிவொளி இயக் கத்தைச் செயல்படுத்துகின்ற வகை யிலும், அனைத்து மக்களின் ஒத் துழைப்பைக் கோருகின்ற வகை யிலும், மாவட்ட அளவிலான ஒருங் கிணைப்புக் கூட்டம் டிசம்பர் மாதம் முதல் தேதியிலும், இரண்டாம் தேதியிலும் முறையே கடலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது; விழுப்புரத்தில் நடக்கவுள்ள கூட்டம் விரைவில் உருவாக இருக்கின்ற வள்ளலார் மாவட்டப் பிரமுகர்களை உள்ளடக் கியதாக அமையும்.

மாவட்டக் கூட்டத்தைத் தொடர்ந்து இத்திட்டத்தின் பயன்களை விளக்கி மாவட்டத்திலுள்ள சுமார் 300 மையங்களுக்குக் கலைப் பயணக் குழுக்கள் பயணம் செய்து கலை நிகழ்ச்சிகளின் மூலமாக எழுத்தறி வின் சிறப்பம்சத்தை எடுத்துக் கூற விருக்கின்றன. பாமர மக்களும், கல்வி கற்கத் தூண்டும் வகையில் எளிமையாக இக் கலைநிகழ்ச்சிகள் அமையவிருக்கின்றன. இக் கலைப் பயணம் பிரம்மாண்டமான ஆரம்ப விழாவோடு தொடங்கவிருக்கிறது. நிகழ்ச்சிகளின் போது கிராமத்தில் எழுதப் படிக்கச் சொல்லித்தர முன் வரும் தன்னார்வத் தொண்டர் களைப் பதிவு செய்தும், படிக்காத வர்களின் பெயர்களைப் பதிவு செய்தும் இத்திட்டத்திற்கான ஆரம் பக் கட்ட வேலைகள் தொடங்க உள்ளன.

கலைப்பயண விழா முடிவு பெற்ற பிறகு, ஓரளவு மாவட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படும். கிராம அளவிலான அமைப்பாளர்களைக் கண்டறிந்த பிறகு நகராட்சி, ஊராட்சி அளவிலான கூட்டங்கள் நடைபெறும். கூட்டங்களின் வாயி லாக இத்திட்டத்திற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். அதன் பிறகு மாவட்டம் முழுவதும் ஒரே நாளில் படிக்காதவர்களின் எண் ணிக்கையை மதிப்பீடு செய்யும் ‘சர்வே’ நடைபெறும். அதன் பிறகு முறையான பயிற்சி ஆரம்பிக்கப் படும்.

நமது மாவட்டத்திலுள்ள அனை வரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்தத் திட்டத்தின் பயனை முழுவது மாக அடையுமாறும் கல்விச் செல்வம் பெறுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் - தொடக்க விழா

தமிழகத்தின் பல பகுதிகளில் பெண் சிசுக் களைக் கொலை செய்யும் அநாகரீகமான, சமூக விரோதச் செயலைத் தடுக்கும் நோக்குடன் தமிழக அரசு அண்மையில் "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாது காப்புத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறி வித்தது.

அதையொட்டி 4.11.92 அன்று சேலம் நகரில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அன்று காலை நிகழ்ச்சியாக அஸ்தம்பட்டி, கொங்கணாபுரம், காக்காபாளையம் ஆகிய இடங் களில் பெண் குழந்தைகள் பராமரிப்பு இல்லத் தைத் தொடங்கி வைத்து அரசுத் தொட்டில்களை வழங்கினார். மாலையில் 10 ஆயிரம் பெண்கள் கலந்துகொண்ட பெண்கள் விழிப்புணர்ச்சிப் பேரணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு ஊர்வலத்தில் நடந்து வந்து இறுதியில் நேரு கலை யரங்கத்தில் நடைபெற்ற விழாவில் விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் குறிப் பிட்டு பேசியதாவது-

"இங்கே கூடியுள்ள கூட்டத்தைப் பார்க்கும் போது இன்னும் ஆறு மாதத்தில் பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் உணர்வு தாய்மார்களிடம் நிரம்பி வழிவதைப் பார்க்கிறேன். வீடு வீடாகச் சென்று தன்னுடைய பணிகளைச் செய்யும் இந்தச் சமூக நலத்துறையினர் குறைந்த சம்பளத்தில் எங்களுக்கு இப்படிப்பட்ட வேலையைத் தருகிறீர் களே என்று நீங்கள் எண்ணுவதையும் பார்க் கிறேன். அதனால்தான் இந்த மாத இறுதிக்குள் சமூக நலத்துறையினைச் சார்ந்தவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த புரட்சித் தலைவி உத்தேசித் துள்ளார்கள். நீங்கள் மனச்சுமை இல்லாமல் தெம்பும் திராணியுடனும் பணியாற்ற வேண்டு மென்று உணர்ந்துதான் புரட்சித்தலைவி இந்த நல்ல முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். பெண் சிசுக் கொலை என்பது இன்று நேற்றல்ல. மூன்று தலைமுறைகளாக நடைபெறும் நிகழ்ச்சி. இதற்குப்போய் இன்றுதான் முதலமைச்சர் உத்தர விட்டுள்ளார்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், இன்றைக்குத்தான் அப்படிப்பட்ட முதலமைச்சரைத் தமிழகம் பெற்றுள்ளது. இது வரை இருந்த வேறு எந்த முதலமைச்சரும் இப்படி யொரு நடவடிக்கை எடுக்கவில்லை. பெண்ணாக இருப்பதால்தான் இன்றைய முதல்வர் பெண் களின் துயரை நீக்க நல்ல நடவடிக்கை எடுத்து வருகிறார்".



பெண்கள் விழிப்புணர்ச்சிப் பேரணியிலும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத் தொடக்க விழாவிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஏ.இராமையா, இ.ஆ.ப., தமிழக ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து இயக்குநர் திரு. கண்.தீன தயாளன், இ.ஆ.ப., இணைச்செயலாளர் திரு. பிச்சாண்டி, இ.ஆ.ப., மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. சுப்பிரமணியம், இ.கா.ப., மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், சமூக நல அலுவலர் திருமதி சரோஜா அவர்கள் வரவேற்றார். மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நா.தில்லைகோவிந்தன் நன்றி கூறினார்.

நூல் நயம்

காகிதத் தொட்டில்

ஆசிரியர்: மணவாளன் எத்திராசு

வெளியீடு:

கோமளவல்லி பதிப்பகம்,
18, பத்மாவதி நகர்,
மாதவரம் பால் பண்ணை,
சென்னை-600 051.

பக்கம்:112 விலை:ரூ.15/-

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் இணைந்த கதம்பச் சரம் இந்நூல். காந்தியடிகள், பெரியார், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் ஆகிய பெருமக்கள் குறித்து எழுதப் பெற்ற கவிதைகள் சுவை நல்குகின்றன. சொல்லாட்சி இந்தக் கவிஞருக்கு நன்கு கைவந்திருக்கிறது. ஆபாசமில்லாத எழுத்துகள் அவனியில் பவனி வரவேண்டும் என்ற இவரது இலட்சியத்தை இவரது கவிதைகளின் வாயிலாக உணர முடிகிறது. போராட்டம், பள்ளியறை, நிலவு ஆகிய கவிதைகள் நெஞ்சைத் தொடுகின்றன.

—தமிழ்ப்பித்தன்

பெரியார் எனும் பேரொளி

ஆசிரியர்: பூவை. அமுதன்

வெளியீடு:

கார்த்திக் பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-26.

பக்கம்:96 விலை:ரூ.12/-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறே இந்நூல்.

தந்தை பெரியாரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் - வைக்கம் போராட்டம் உட்பட, சுவையாக எழுதப் பட்டுள்ளன.

டாக்டர் தயா மணிவிழா மலர்

வெளியீடு:

'பூக்கூடை' கிறிஸ்தவ
இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:103 **விலை:ரூ.4/-**

தமிழறிஞர் அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் மணி விழா மலர் சிறப்பாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் முதலானோர், டாக்டர் தயாவின் சிறப்பியல்புகளையும், தமிழ்த் தொண்டுகளையும் விளக்கி எழுதியுள்ளனர்.

செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

ஆசிரியர்: சுவாமி விஜயானந்தர்

வெளியீடு:

வள்ளி புத்தக நிலையம்,
8-ஏ, சுந்தரேஸ்வரர் கோயில் தெரு,
சென்னை-600 014.

பக்கம்: 200 விலை:ரூ.30/-

'வீட்டைக் கட்டிப்பார். கல்யாணம் நடத்திப் பார்' என்பார்கள். வீடு கட்டுவதற்கு முன்பாக, நல்ல மனையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வீடு கட்ட நாள் குறித்தல், பூமி பூசை, கிணறு இருக்க வேண்டிய இடம், வீடு கட்டும் போது கடைப்பிடிக்க வேண்டியவை முதலான விளக்கங்களுடன் கூடிய மனையடி சாஸ்திர நூல் இது.

வீட்டைக் கட்டிய பிறகு, வாடகைக்கு அமர்த்துதல், வீட்டை விரிவுபடுத்துதல், வீட்டின் அளவு, பெயர் சூட்டுதல் முதலான குறிப்புகளும் இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இவை தொடர்பான 90 விளக்கப்படங்களும் உள்ளன.

வீடு கட்டுவோர்க்கு, இதில் கூறப் பட்டுள்ள குறிப்புகள் பெரிதும் பயன்படும்.

- பி.வி. கிரி.

காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்

ஆசிரியர்: விஷ்ணு பிரபாகர்

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020.

பக்கம்:109 விலை:ரூ.10/-

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் உணர்வுபூர்வமான தொகுப்பே இது.

'என் வாழ்வே எனது செய்தி' என்றார் காந்தியடிகள். அவரது அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ சாதனைகளும் நிகழ்ந்திருக்கின்றன. சத்தியம் மனித நேயம் முதலான பண்புகள் அவரிடம் இழைந்திருந்தன. அவையெல்லாம் நமக்குப் படிப்பினையாக விளங்குகின்றன.

இந்நூலில் 64 சிறுசிறு நிகழ்ச்சிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மூல நூலான இந்தியிலிருந்து பி.ஆர். குசேல்ராம் தமிழில் வடிவம் தந்திருக்கிறார்.

குறிப்பாக இளைய சமுதாயம் இந் நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

- மறைமலை.

சிற்றுண்டிகள்

ஆசிரியர்: திருமதி பவானி விஸ்வநாத்

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

பக்கம்:132 விலை:ரூ.14/-

அன்றாட உணவு வகைகளில் சிற்றுண்டியும் ஒரு வேளை உணவாக ஆகிவிட்ட இந்நாளில், பல வகையான சிற்றுண்டிகள் பற்றியும் அவற்றின் செய்முறை பற்றியும் விளக்குகிறது இந் நூல்.

புகழ்பெற்ற காஞ்சிபுரம் இட்லி முதல் கேழ்வரகு இட்லி வரை பலவகையான இட்லி வகைகளின் செய்முறை மற்றும் சுவை பற்றி கூறியிருப்பது அருமை.

இதைப் போலவே தோசை, உப்புமா, பொங்கல் வகைகள் பற்றியும் அவற்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் அளவு ஆகியவை பற்றியும் விளக்கமாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

— ஜே. சந்திரன்.

'வழி தவறிய ஆடுகள்'

ஆசிரியர்:

குழிபிறை வீ.கே. கஸ்தூரிநாதன்

வெளியீடு:

சுகுமாரி பதிப்பகம்
குழிபிறை
புதுக்கோட்டை மாவட்டம்

பக்கம்:104 விலை:ரூ.12/-

இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ஓர் பள்ளி ஆசிரியராகையால், தொகுப்பில் உள்ள ஒவ்வொரு சிறுகதையும் ஓர் நீதியை மையமாக வைத்து எழுதப் பட்டுள்ளது.

ஆசிரியர், பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரது கடமைகளை வலியுறுத்தும் கதைகள். குடி குடியைக் கெடுக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமான கதை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் மேன்மை, சுயவேலை வாய்ப்பின் பெருமை ஆகியவற்றைச் சுருக்கமாக, தெளிவாகத் தன் கதைகளில் விளக்கி இருக்கிறார்.

உரையாடலுக்குப் பயன்படுத்தும் குறியீடுகளை (கொட்டேஷன் மார்க்) முறையாகப் பயன்படுத்தி இருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

—என்.கே.சாமி

சித்த மருத்துவம்

அதிசய மருந்து அதிமதுரம்

—டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

அதிமதுரம் ஒரு அதிசய மருந்து! அதனால் தீரும் நோய்கள் ஏராளம்! சாதாரண நோய்களை மட்டுமல்ல, படுபயங்கர நோய்களையும் இந்த அதிமதுரம் அதிவிரைவில் குணமாக்குகிறது.

இதனால் என்னென்ன நோய்கள் தீருகின்றன?

இரத்தக் கொதிப்பு, மயக்கம், நாவறட்சி, தாகம், விக்கல், வாந்தி, இருமல், பிடிப்பு, சுளுக்கு, தலைவலி, ஒற்றைத் தலைவலி, ஜுரம், சிறுநீர் எரிச்சல், கற்றாழை நாற்றம், காமாலை, உஷ்ணத்தினால் உண்டாகும் இருமல், கண் ஒளிபெற, தாதுவிருத்தி மற்றும், மூப்பிணியால் வரும் ரணம், கெட்டநீர், வெறிநோய், வெண்புள்ளி (வெண்குஷ்டம்) எலும்பு பற்றிய நோய், நஞ்சு ஐயத்தாலுண்டான கோழையைச் இளகச் செய்யும், தீக்குற்றத்தின் தன்மையைச் தாழச் செய்யும்.

இரத்தக் கொதிப்பு, மயக்கம் நீங்க:

அதிமதுரம் 20 கிராம், திப்பிலி 10 கிராம், ஏலரிசி 5 கிராம், தோல் நீக்கிய சுக்கு 10 கிராம் இவைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் தூள் செய்து, அதிலே 50 கிராம் அஸ்கா சர்க்கரையைச் சேர்த்து கலந்து ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொள்ளவும். காலை-மாலை கால் டீஸ்பூன் வீதம் வெந்நீரில் அருந்த, இரண்டு வாரத்தில் பித்தத்தினால் உள்ள மயக்கம், வாய்க்கசப்பு, இரத்தக் கொதிப்பு ஆகியவை நீங்கும்.

வறட்சி தாகம், இருமல் நீங்க:

அதிமதுரம் 18 கிராம், ஏலம் 18 கிராம், நெல்லி 18 கிராம், சந்தனம் 18 கிராம், வால்மிளகு 18 கிராம் ஆக எல்லா வகைகளையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து இதனுடன் அஸ்கா சர்க்கரை 50 கிராம் கலந்து சேமித்து வைத்துக் கொள்ளவும். இந்தச் சூரணத்தை முக்கால் டீஸ்பூன் அளவு வெந்நீரில் கலந்து அருந்த நோய்கள் நீங்கும்.

விக்கல், வாந்தி, நாவறட்சி நீங்க:

நம் தேவைக்கு ஏற்றபடி உத்தேசமாக அதிமதுரம், சுக்கு, கடுக்காய், இஞ்சி, பெருங்காயம், ஓமக்காய் ஒன்று எல்லா வகைகளையும் எடுத்து. அம்மியில் வைத்துத் தூள் செய்து சேமித்து வைத்துக் கொண்டு, விக்கலாவது அல்லது வாந்தியாவது வரும் நேரங்களில் இத்தூளை அரை டீஸ்பூன் எடுத்து தேனில் குழைத்து உள்ளுக்குக் கொடுத்தால் இவைகள் நீங்கும். மற்றும் நமக்குத் தேவைக்கு ஏற்றபடி அதிமதுரம், திப்பிலி, நாவல் துளிர் இவைகளை எல்லாம் சேர்த்து தூள் செய்து, சிறிது தேனுடன் குழைத்துச் சாப்பிட நாக்கு வறட்சி நீங்கும்.

சாதாரண இருமலுக்கு:

அதிமதுரத் துண்டு ஒன்றை வாயிலிட்டுச் சுவைத்து வரும் பாலை விழுங்க இருமல் தணியும்.

உஷ்ணத்தினால் உண்டாகும் இருமலுக்கு:

அதிமதுரம், கடுக்காய், மிளகு ஓர் அளவாக எடுத்து இளவறுப்பாய் வறுத்துத் தூள் செய்து சேமித்து வைத்துக் கொண்டு, இருமல் சமயங்களில் அத்காளை ஆறு கிராம் அளவில் தூளை எடுத்து தேனில் கொடுக்க இருமல் நீங்கும்.

தலைவலி நீங்க:

நம் தேவைக்கு ஏற்றபடி உத்தேசமாக எடுத்துக் கொள்ளவும். அதிமதுரம், சோம்பு, அஸ்கா சர்க்கரை ஆக வகைக்கு 35 கிராம், கொடிவேலி வேர்பட்டை 17 கிராம் எடுத்து இவைகளை எல்லாம் சேர்த்து இடித்து, தயார் செய்தால் சூரணமாகி விடும். நோய் வரும் காலங்களில், அல்லது வரும் நேரங்களில். இச்சூரணத்தை 4 கிராம் அளவில் எடுத்து வாயில்போட்டு மென்று தண்ணீர் அருந்த நாளடைவில் நோய்கள் நீங்கும். குறிப்பு: தயார் செய்த சூரணத்துக்கு, அதிமதுரச் சூரணம் என்று பெயர்.

தேவையான அதிமதுரத்தை எடுத்து, அம்மியில் வைத்து தாய்ப்பால் விட்டு அரைத்து, அந்தச் சாரத்தைக் கண்ணில்விட, கண் ஒளி பெறும். இது தவிர, இதன் இலையை அரைத்துப் பூசிவர, உடலிலும் அக்குளிலும் உண்டாகும் கற்றாழை நாற்றம் சொறி, சிரங்கு இவை நீங்கும்.

காமாலைக்கு:

நமக்குத் தேவைப்பட்ட உத்தேசமாக அதிமதுரம், முட்சங்கன் வேர்ப்பட்டை இந்த இரண்டையும் சமமாக எடுத்துப் பழச்சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். அரைப்பு சரி இல்லை என்றால், தொடர்ச்சியாக நாட்கள்- இரண்டு ஆனாலும் பரவாயில்லை. நன்றாக அரைக்க வேண்டும். கோலி அளவு உருட்டி வைத்துக் கொண்டு

பசுப் பாலில் காலை-மாலை இரு வேளை கொடுக்க காமாலை நீங்கும்.

பிடிப்பு, சுளுக்குகளுக்கு:

பிடிப்பு, சுளுக்கு உண்டானால் அந்த இடங்களில் நல்ல சிற்றாமணக்கு எண்ணெய்யை இலேசாகத் தடவி, குன்றி இலையை அதன்மேல் ஒட்டவைக்க அப்போது உடலில் ஒருவித விறுவிறுப்பு தென்பட்டு வலி நீங்கும்.

சூடு தணிய:

உடலில் சூடு தணிய, அதிமதுரம் 18 கிராம் எடுத்து வெந்நீரில் அரைத்துக் கலக்கி, பிறகு வடிகட்டி, வடிகட்டியதைக் காலை-மாலை கொடுக்கலாம். (அதிமதுரம் அரை பலம் கொண்டது 18 கிராம்)

வயிற்றில் மறித்த பிள்ளை விழ:

அதிமதுரம் 35 கிராம், தேவதாருக்கட்டை 35 கிராம் இரண்டையும் அம்மியில் வைத்து வெந்நீர் விட்டு அரைத்துக் கொண்டு, உட்கொள்ளும் அளவு: 17 கிராம் வீதம் இருவேளை (காலை-மாலை) வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

சிறுநீர் எரிச்சலுக்கு:

அதிமதுரம் 72 கிராம், பசும்பால் 800 கிராம், பசுநெய் 800 கிராம், பழுப்புச் சர்க்கரை 800 கிராம் இவைகள் எல்லாம் சேர்த்து, பதமாகக் காய்ச்சி எடுத்தால் லேகியமாக ஆகும். இதை நெல்லிக் காயளவு 10 கிராம் எடுத்து தினம் காலை-மாலை சாப்பிட நாளடைவில் சிறுநீர் எரிச்சல் நீங்கும்.



பூச்சிகளை நெருங்க விடாத புதிய வகை உருளைக்கிழங்கு!

பூச்சிகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய புதிய வகை உருளைக்கிழங்கு ஒன்றை நியூயார்க்கில் உள்ள கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த வகை உருளைக்கிழங்கைப் பயிரிடுவதால் பூச்சி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் செலவு மிச்சமாகிறது. இந்தப் புதிய உருளைக்கிழங்கு வர்த்தக ரீதியில் விரைவில் விற்பனைக்கு வர உள்ளது.

இந்த உருளைக்கிழங்குச் செடியின் இலைகளிலும், தண்டுகளிலும் இரண்டு விதமான நார்கள் வளர்கின்றன. இந்த நார்களிலிருந்து 'தார்' போன்ற ஒருவித இரசாயனப் பொருள் வடிந்து கொண்டே இருக்கிறது. இதனால் இந்தச் செடிகளைப் பூச்சிகளும் வண்டுகளும் நெருங்குவதில்லை.

'கொலராடோ வண்டுகள்' என்று அழைக்கப்படும் ஒருவித வண்டு வகை தான் அமெரிக்காவில் உருளைக்கிழங்குப் பயிரைப் பெருமளவில் நாசம் செய்கின்றது. ஆனால், இப்போது உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய ரக உருளைக் கிழங்கின் இலைகளைக் கொலராடோ வண்டுகள் உண்ணும்போது, அவற்றில் படிந்துள்ள தார் போன்ற பொருள் அந்த வண்டுகளை வெகுவாகப் பாதிக்கின்றது. பெண் வண்டுகள் இந்த இலைகளை உண்ணும்போது அவற்றின் இனப் பெருக்கத்திறன் மிகவும் பாதிக்கப் படுகிறது.

கொலராடோ வண்டுகளைப் போலவே இதர வகையான பூச்சிகளையும் இந்தப் புதிய உருளைக்கிழங்கு ரகம் அருகே நெருங்கவொட்டாமல் தடுக்கிறது. பொலிவியா நாட்டு உருளைக்கிழங்கு ரகத்திலிருந்து இந்தப் புதிய ரக உருளைக் கிழங்கைக் கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 15 ஆண்டுக்கால ஆராய்ச்சிக்குப் பிறகு உருவாக்கியுள்ளனர். பெரு நாட்டின் தலைநகரான லிமாவில் உள்ள சர்வதேச உருளைக் கிழங்கு ஆய்வு மையமும் இதற்கு ஒத்துழைப்பு அளித்துள்ளது.

பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலத்துறையில் இடம் பெறும் பல்வேறு நலத் திட்டங்களில் பெண்களுக்காகப் பெண்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள பெண்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம், ஆண்டு வருமானம் ரூ.6,400-க்கும் குறைவாக உள்ள பெண்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதாகும். இதன் மூலம் அவர்களின் குடும்பங்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் பொருட்டு வழிவகைகள் செய்யப் படுகின்றன.

தற்சமயம் ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது அரசின் கொள்கையாகும். இச் சங்கங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும், அரசு சார்ந்த திட்டங்கள் மூலம், வழங்கப் பட்டு வருவதால் நிலையான சந்தை வாய்ப்புக் கிடைத்து வருகிறது.

மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்

கீழ்க்கண்ட வகை மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் மூலம் செயல்பட்டு வருகின்றன.

அ) மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 73
ஆ) ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 22
இ) சாக்கட்டி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 19
ஈ) பெண்கள் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கம்	.. 13
உ) மகளிர் காலணி தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 38
ஊ) திரவ சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 1
எ) மகளிர் நல்லூர் கயிறு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	.. 1
மொத்தம்	167

தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் (இலவசச் சீருடைத் திட்டம்)

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 34 இலட்சம் மாணவர்களுக்கும், 30 இலட்சம் மாணவிகளுக்கும் மேலும் 3.4 இலட்சம் மாணவிகளுக்குத் ஆடைகள் இந்த மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன. இதே போன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப் பாட்டின் கீழ் பயிலும் பள்ளி மாணவ மாணவியர் ஆகியோர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளையும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன. இதன் மூலம் சுமார் 5.48 கோடி ரூபாய் தையற் கூலியாக அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகின்றன. இச்சீருடை தைப்பதற்குத் தேவையான துணிகள் 'கோ-ஆப்டெக்ஸ்', 'காதி' துறைகள் மற்றும் தமிழ்நாடு துணி நூல் நிறுவனங்கள் (Tamil Nadu Textile Corporation) மூலம் பெறப்படுகின்றன.

காலணி தொழிற் கூட்டுறவுச் சங்கம் (இலவசக் காலணி வழங்கும் திட்டம்)

ஒவ்வொரு ஆண்டும் சுமார், 3 இலட்சம் ஜோடி காலணிகள் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இத்துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனம் இக்காலணிகளைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களை வழங்கி வருகிறது.

இணை உணவு மற்றும் ஊட்டச்சத்து தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் (ஊட்டச்சத்து மாவு)

ஆறு மாதங்களுக்கு மேல், ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்

கும் கருவுற்ற பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மையங்களக்குத் தேவையான இணை உணவு மற்றும் ஊட்டச்சத்துணவினை 22 மகளிர் ஊட்டச்சத்துத் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 995 மெட்ரிக் டன் கோதுமை இலவசமாகக் கொடுத்து வருகிறது. இதைத் தவிர பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 1,480 மெட்ரிக் டன் கோதுமை மலிவு விலையில் வழங்கி வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளை உலக வங்கி சுவீடன் சர்வதேச நிதியுதவி நிறுவனம், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

சாக்கட்டிச் சங்கம்

இத்துறையின் கீழுள்ள சாக்கட்டித் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் தயாரிக்கப்படும் சாக்கட்டிகள் அரசால் நடத்தப்படும் பள்ளிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கம்

இத்துறையின் கீழ் 13 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பதிவேடுகள் இச்சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகின்றன.

கயிறு தயாரிக்கும் பெண்கள் கூட்டுறவுச் சங்கம்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நல்லூரில் இருக்கும் பெண்கள் கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் தென்னை நார் பிரித்து எடுக்கும் தொழிலின் மூலம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இச்சங்கத்தின் கீழுள்ள ஐந்து உற்பத்தி நிலையங்களின் மூலம், தென்னை நார் பிரித்து எடுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தின் மூலம், மானியம் பெற்று, பணிமனைகள் (Work shed) அமைக்கப் பட்டுள்ளன. இதைத் தவிர இந்தியக் கயிறு வாரியம், ஆண்டிற்கு 80 நாட்களுக்கு 20 சதவிகிதத் தள்ளுபடியில் விற்பனை செய்ய ஊக்கமளித்து வருகிறது. இவ்வாரியம் மூலம் மாதிரி கயிறு கிராமம் (Model coir village) அமைக்கப் பட்டுள்ளது.

திரவ சோப்பு

1987-ஆம் ஆண்டில் திரவ சோப்புத் தயாரிக்கு சங்கம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள நாராயணபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் திரவ சோப்பு, சோப்புத் தூள் மற்றும் பாத்திரங்கள் சுத்தம் செய்யும் தூள் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றது.

இச்சங்கங்களைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்

1991-92-இல் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 73, அவற்றில் பயன்பெறுவோர் 26,135 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.5,48,00,000

காலணி சங்கங்களின் எண்ணிக்கை 38, அவற்றில் பயன்பெறுவோர் 3,512 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.12,75,000

சாக்குக்கட்டி சங்கங்களின் எண்ணிக்கை 19, அவற்றில் பயன்பெறுவோர் 1,052 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.51,000.

சத்துணவு மற்றும் இணை உணவுச் சங்கங்களின் எண்ணிக்கை 22, அவற்றில் பயன்பெறுவோர் 1,154 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.31,02,000.

எழுதுபொருள் சங்கம் 13, அவற்றில் பயன்பெறுவோர் 1,129 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.5,40,400.

திரவ சோப்புச் சங்கம் 1, அவற்றில் பயன்பெறுவோர் 28 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.11,500.

நல்லூர் கயிறு சங்கம் 1, அவற்றில் பயன்பெறுவோர் 115 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.1,05,000.

மொத்தச் சங்கங்களின் எண்ணிக்கை 167.

அவற்றின் மூலம் பயன் பெறுவோர் 33,125 பேர்.

வழங்கப்படும் மொத்த ஊதியம் ரூ.5,98,84.900.

மாணவர் பக்கம்

பொது அறிவுத் தகவல்கள்

• காப்பியின் பிறப்பிடம் எத்தியோப்பியா ஆகும். நிலக்கடலையின் தாயகம் பிரேசில் ஆகும்.

• 'கோவா' கீழ்நாடுகளின் உரோமாபுரி எனப்படுகிறது. இங்கு கிறித்துவ ஆலயங்கள் மிகுதி.

• நமது உடலில் சுமார் 200 அவுன்சு குருதி உள்ளது. குருதியளிப்பு செய்யும் போது 2 அவுன்சு எடுக்கப்படுகிறது.

• ஒரு காரட் வைரம் என்கிறோம். ஒரு காரட் என்றால் 200 மிலிகிராம் ஆகும்.

• இந்தியாவில் 1963-இல் விண்வெளி ஆராய்ச்சித் திட்டம் துவங்கப்பட்டது.

• உலகிலேயே விரைவாகப் பேசக்கூடிய மொழி பிரெஞ்சு, அடுத்து சப்பானிய மொழி, அதற்கடுத்தது செர்மன் மொழி ஆகும்.

• அலகாபாத் நகரப் பகுதியில் தான் இந்திய நிலையான நேரம் கணிக்கப்படுகிறது.

• நம் உடம்பில் குருதி ஒட்டமில்லாத நிரந்தரப் பகுதி விழிவெண்படலம் (Cornea) ஆகும்.

• நமது நாட்டில் 'கருப்பு' துக்கத்தைக் குறிக்கும் நிறமாகும். ஆனால் சீனாவில் வெள்ளை நிறம் துக்கத்தைக் குறிக்கும். துருக்கியில் நீலநிறமும், எகிப்தில் மஞ்சள் நிறமும் துக்கத்தைக் குறிக்கும்.

• 'சாக்' கடலில் மீன்களே கிடையாது.

• ஒட்டகச் சிவிங்கியின் குருதி அழுத்தம் மனிதனை விட இரண்டு மடங்கு மிகுதியாகும்.

• ஒட்டகத்தை விட நீண்ட நாட்கள் குடிநீரின்றி வாழும் தன்மை எலிகளுக்கு மட்டுமே உண்டு.

• நம் உடலில் உள்ள எல்லா பாகங்களிலும் செல்வளர்ச்சி உள்ளன; ஆனால் மூளையில் மட்டும் செல் வளராது. புது செல்கள் தோன்றாது.

—நன்றி: 'தமிழ்ப்பாவை'



ஏசு பிறந்தார்

மக்கள் வாழ எண்ணியே
மகான் ஏசு பிறந்தார்
திக்கு எட்டும் கிறித்தவர்
தெய்வ மாகச் சிறந்தார்!

அன்பு வேண்டும் என்றார்
அகில மெங்கும் திகழ்ந்தார்
துன்பம் வந்த போது
துவள வேண்டாம் என்றார்!

உலகம் போற்றும் பைபிளில்
உயர்ந்த கருத்து சொன்னார்
திலகம் போன்று நாட்டிலே
திகழ நன்மை செய்தார்!

ஏசு சொன்ன கருத்தினை
ஏற்று நாளும் வாழுவோம்
மாசு இல்லா உள்ளமே
ஏசு வாழும் இல்லமே!

—பி.வி. கிரி



கிறிஸ்துமஸ் மரம்

• கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரித்து ஆனந்திக்கும் பழக்கத்தைக் கிறிஸ்துவ மக்களுக்குக் கற்பித்தவர், விசுவாச வீரர் மார்ட்டின் லூத்தர் அவர்களே ஆவார். இப்பழக்கம் 1840-ஆம் ஆண்டு உலகெங்கும் பரவ ஆரம்பித்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

—நன்றி: 'கிறிஸ்மஸ் களஞ்சியம்'

முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து

• கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

1846-இல், முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து, ஜோசப் கன்டால் என்னும் ஓவியரால் வரையப் பட்டது. இது கடிதம் எழுதும் நேரத்தை மிச்சப் படுத்தியது. இது பலராலும் பாராட்டப் பெற்று கடைப்பிடிக்கப்படுகிறது.



மக்கள் நல்வாழ்வு

கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மருத்துவமனை

பல்வேறு தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. கைவினைப் பொருள்கள், ஆடு, கோழி, பன்றி, வளர்த்தல், பால், நுகர்பொருள் வாணிகம், இப்படிப் பல தொழில்கள் கூட்டுறவு மூலம் பாங்காய் வளர்ந்து வருகின்றன. இதே போல மருத்துவமனையும் கூட்டுறவுக் குடையின் கீழ் வளர்ந்து வருகிறது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

காமராசர் மாவட்டம், தளவாய் புரத்தில், ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் சுகாதாரச் சங்க மருத்துவமனை ஒன்று இயங்கிவருகிறது. இது கூட்டுறவுத் துறையில் நடத்தப்பட்டு வரும் மருத்துவமனையாகும்.

இந்தச் சங்கத்தின் நோக்கங்களாவன:

சங்க உறுப்பினர்களுக்குக் குறைந்த செலவில் மருத்துவச் சிகிச்சை அளித்தல் உடல் அரோக்கியத்தைப் பேணுதல், உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினரின் சிகிச்சைக்காகும் பொருளாதார நட்டத்தைக் கட்டுப்படுத்துதல்.

உறுப்பினர்களின் நலனுக்காக, தகுதி பெற்ற மருத்துவர், மருந்தாளுநர் முதலியவர்களை வைத்து மருத்துவமனை நடத்துதல்.

உறுப்பினர்களின் நன்மைக்காகக் குழந்தைகள் நல மையம், மகப்பேறு இல்லம் நடத்துதல்.

கிராமப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்திருத்தல், தொற்று நோய்களிலிருந்து தடுத்தல்.

உறுப்பினர்களிடையே பொறுப் புணர்ச்சியை வளர்த்தல் குடும்ப நலத்தைக் காத்தல்.

பொதுவாக மேலே சொல்லப்பட்டவைகளில் ஒன்று அல்லது அனைத்தையும் கூட்டுறவுச் சட்டம், விதி இவைகளுக்கு உட்பட்டு நடத்துதல்.

சங்கததைப் பதிவு செய்யும் நேரத்தில் தளவாய்புரத்திலும் இதன் சுற்று வட்டாரம் 15 கி.மீ. தொலைவு வரையிலும் அரசு மருத்துவமனை ஏதும் கிடையாது. மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. போக்குவரத்து வசதியும் போதிய அளவு இல்லை. மகப்பேறு இல்லமும் அண்மையில் ஏதுமில்லை. இந்நிலையில் இங்குள்ள பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து சுகாதாரக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினர். சங்கத்திற்கு மருத்துவமனைக் கட்டடம், மகப்பேறு இல்லம் கட்ட முடிவெடுத்தனர்.

சங்கம் ஆரம்பித்தவுடன் களவாய்புரம் ஊராட்சிமன்றக் கட்டடத்தின் ஒரு பகுதியில் பகுதி நேர மருத்துவ அலுவலரால் மருத்துவமனை நடத்தப்பட்டது. சங்கம் வளர்ச்சிஅடைய அடைய சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது.

தாராள மனப்பான்மை கொண்ட திருவாளர் ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் அவர்களின் குமாரர்கள் கட்டடம் கட்ட நன்கொடையாக ரூ.15,000 அளிப்பதற்கு முன்வந்தார்கள். அரசு மானியம் ரூ.15,000-த்துடன் ரூ.38,100.31 செலவில் 12 படுக்கைகள் கொண்ட பொதுப் பிரிவுக் கட்டம் 26.12.1961-ல் கட்டி முடிக்கப்பட்டது.

பின்னர் திரு. ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் அவர்களின் குமாரர்கள் நன்கொடைத் தொகை ரூ.19,000-ம் அரசு மானியம் ரூ.16,000-ம் சேர்த்து ரூ.35,000 செலவில் தங்கள் தாயாரின் நினைவாக 14 படுக்கைகள் கொண்ட மகப்பேறு இல்லம் 30.9.73-இல் கட்டப்பட்டது.

திரு. பி.கே.எல். மாரிமுத்து நாடார் அவர்களின் நன்கொடை தொகை மூலம் ரூ.6,000 தொற்று நோய் (காலரா) பிரிவுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

நவீனமயமாக்கப்பட்ட Stalbion 60/Simplex 60 M.A. X-Ray பிரிவு ரூ.72,500 மதிப்பில் தீர்மானிக்கப்பட்டு குறைந்த கட்டணத்தில் பொதுமக்கள் வசதிக்காகச் செயல்பட்டு வருகிறது.

இது தவிர, நவீன அறுவைச் சிகிச்சைப்பிரிவு ரூ.62,800 மதிப்பில் அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் நலிவுற்ற பிரிவினருக்குக் குறைந்த கட்டணத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

'குமுதம்' வார இதழ் நடத்தி வரும் 'மாதம் ஒரு மாவட்டத்தில் பொதுப்பணி நிறைவேற்றுதல்' என்ற திட்டத்தின் கீழ், காமராசர் மாவட்டத்தில் எங்கள் கூட்டுறவு மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டு, இ.சி.ஜி. கருவி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

தளவாய்புரம் மற்றும் அதன் சுற்று வட்டாரம் 15 கி.மீ. தொலைவில் உள்ள சுமார் 50 கிராமங்களில் வசித்து வரும் சுமார் 60,000 ஏழை எளிய மக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதி இக்கூட்டுறவு மருத்துவமனை மூலம் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

மருத்துவமனை அலுவலகம், பொதுப் பிரிவு, மகப்பேறு பிரிவு, காலரா பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு மருந்து சோதனைக் கூடப் பிரிவு ஆகியவைகள் உள்ளன.

முதலுதவி, கட்டு கட்டுதல், மருந்துகள், குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து, டாக்டரின் பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பெரிய மற்றும் சிறிய அறுவைச் சிகிச்சைகள் மிகக் குறைந்த கட்டணத்தில் நன்கு செய்யப்படுகிறது. தினமும் 100 முதல் 150 வெளி நோயாளிகள் மருத்துவ வசதி பெற்று பயனடைந்து வருகிறார்கள். பொது மற்றும் மகப்பேறுப் பகுதிகளில் உள்ள படுக்கைகள் மொத்த எண்ணிக்கை 26. மகப்பேறு கட்டணமாக ரூ.50 மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள்

நிர்வாகச் செலவில் ஏற்படும் மொத்த இழப்பில் - ஓராண்டிற்கு 75 சதவிகிதம் அல்லது 10,000 என்ற உச்ச அளவுக்குட்பட்டு, 1975-76-ஆம் ஆண்டிலிருந்து தொடர் நிர்வாக மானியமாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதனை நிரந்தர நிர்வாக மானியமாக சிப்பந்தி சாதல்வார் செலவில் 50 சதம் வழங்க வேண்டும் எனக் கோரிய பிரேரணை மண்டல இணைப்பதிவாளர் அவர்கள் மூலம் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மருத்துவத்துறை மற்றம் குடும்பநல நலம், சென்னை-6 அவர்களால் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்ய இந்த மருத்துவமனையைத் தேர்ந்தெடுத்து அனுமதி வழங்கியுள்ளார்கள்.

எதிர்காலத் திட்டங்கள்

1. குளியலறை, கழிவறை வசதிகளுடன் கூடிய நவீன அறுவைச் சிகிச்சைப் பிரிவு கட்டுதல், இதற்கான பிரேரணை ஏற்கெனவே வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2. மருத்துவ அதிகாரிகள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர். எனவே, இவர்களுக்குத் தனித்தனியே குடியிருப்பு வசதி செய்தல் மற்றும் இதர பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. ஆண்டுக்குச் சுமார் ரூ.2.00.000 வரை மருந்துகள் நோயாளிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அரசு உதவியைப் பெற்று ஏழை மக்களுக்கு இதனையும் இலவசமாக வழங்குதல்.

4. மருத்துவமனையில் 'ஸ்கேன்' பிரிவு ஏற்படுத்துதல்.

5. சிகிச்சை பெற்றுச் செல்லும் நோயாளிகளுக்கும் அவசர நோயாளிகளுக்கும் வாகன வசதி ஏற்படுத்தித் தருதல்.

6. உள் நோயாளிகளுக்கு அரசு மானியத்தில் ரொட்டி, பால், பழம் வழங்குதல்.

மருத்துவமனையில் நடைபெறும் அறுவைச் சிகிச்சைகள்

இப்பகுதி விசைத்தறிக் கூடம் நிறைந்த இடமாக உள்ளதால் தினமும் கை அடிபடுதல், விரல் நசுங்குதல் போன்றவை சாதாரணமாக நடைபெறுகிறது. பெரிய மற்றும் சிறிய அறுவைச் சிகிச்சைகள் கைதேர்ந்த மருத்துவரால் நடத்தப்படுகிறது. தொண்டையில் புற்றுநோய், வயிற்றில் புற்று நோய் தோல் பட்டை எலும்பில் புற்று நோய், வயிற்றில் புண், குடலில் புண் அல்லது துவாரம் விழுதல், இரண்யா ஹைடிரோசில், தொண்டைப் புண் சிறுநீரகத்தில் கல் முதலிய பெரிய அறுவைச் சிகிச்சைகள் முதல் எல்லாவற்றுக்கும். சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. எலும்பு முறிவு, பல் பிடுங்குதல் பல் சம்பந்தப்பட்ட நோய்கள், காது, மூக்கு, தொண்டை முதலிய நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவீன வசதிகளுடன் கூடிய அறுவைச் சிகிச்சைக் கூடம் எமது மருத்துவமனையில் உள்ளது.

இம்மருத்துவமனையானது, கூட்டுறவுத் துறையில் பழுத்த அனுபவமுள்ள பெரியோர்களாலும் நன்கொடையாளர்கள் ஆகியோரின் உதவியாலும் அரசு மானியத்தாலும் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நோயாளிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதியை நன்கு பயன்படுத்திக் கொள்வதால் இந்த வட்டாரத்தில் புகழ் பெற்று விளங்குவதோடு, தமிழ்நாட்டிலேயே முன்மாதிரியாக உள்ளது. தற்போது சங்கம் முதுநிலை ஆய்வாளர்/தனி அலுவலர் நிர்வாகத்தின் கீழ் இது இயங்கி வருகிறது.

வாழ்த்துக்கள் பிறந்தகதை

விழாக்காலங்களில், நண்பர்கள், உறவினர்கள் என்று பலரைச் சந்தித்து, உள்ளத்தின் நெகிழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் நாம் வாழ்த்துகிறோம். நேரில் சந்திப்பவர்களைத் தவிர, தொலைவில் இருக்கும் நண்பர்களுக்கும் நாம் வாழ்த்து மடல்களை அனுப்பி மகிழ்விக்கிறோம்.

வாழ்த்து மடல்கள், நமது உள்ளத்தின் உணர்வுகளை, நட்பின் பிரியத்தைப் பகிர்ந்து கொள்ள உதவும் ஊடகம். இன்று உலகெங்கிலும் விழாக்காலங்கள், திருமணம், பிறந்த நாள் என்று வரும்போது, தபால்காரரின் பைகளில் உலவி வரும் இந்த வாழ்த்து மடல்களின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்வோமா?

நூற்றாண்டுகளுக்கு முன்னர் சீனர்கள் தங்களின் புத்தாண்டுப் பிறப்பை வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வுடன் கொண்டாடினர்.

எகிப்தில் ஆறாவது நூற்றாண்டில் எழுப்பப்பட்ட சமாதிகளின் மீது தனி நபர்களின் வாழ்த்துக்கள் பொறிக்கப்பட்டன. அக்காலத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் ஊடகமாகப் பதக்கங்கள், தாமிர நாணயங்கள் உட்பட பயனுள்ள பலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

ஜெர்மனியர்கள் பதினான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்ட வாழ்த்து மரச் சட்டக் கலைப்படைப்புகளைப் பயன்படுத்தினர்.

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பத்திரிகைகளில் கவிதைகள் வாயிலாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இங்கிலாந்து, அமெரிக்க முதலிய நாடுகளில் கைகளினால் எழுதப்பட்ட வாழ்த்து மடல்கள் வெகு நாட்களுக்கு முன்பிருந்தே அனுப்பப்பட்டு வந்தன.

இவை இன்றைய மடல்களைப் போலல்லாமல், பெரியதாகவும், தனி நபர்களை வாழ்த்தியும், நண்பர்களுக்கும், குடும்ப அங்கத்தினர்களுக்கும், காதலர்களுக்கும் அனுப்பப்பட்டன. இதுவே, இன்றைய வாழ்த்து மடல் கலைக்கு முன்னோடியாகும்.

கிருஸ்துமஸ் வாழ்த்து மடல்கள் அனுப்பும் பழக்கம் இங்கிலாந்து நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் உருவானது. பதினாறு வயது 'வில்லியம் மா எக்லி' உருவாக்கிய கிறிஸ்துமஸ்-புத்தாண்டு வாழ்த்து மடல் இன்று பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. வாழ்த்து மடல்கள் அனுப்பும் பழக்கம் இங்கிலாந்திலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவியது.

ஆரம்ப கால வாழ்த்து மடல்கள் பூக்கள், இளம்பெண்களின் படங்கள், இயற்கைக் காட்சிகள், கிருஸ்துமஸ் அடையாளங்களான வால் நட்சத்திரம், வான சாஸ்திரிகள், ஒட்டகங்கள், குழந்தை ஏசு என்று பலவற்றைத் தாங்கி வந்தன.

1900-களின் ஆரம்பத்தில் வாழ்த்து மடல்கள் மிகுந்த கலை நயத்துடன் வெளியிடப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டில் பெரும்பாலும் ஒரு பக்க மடல்களே வெளியிடப்பட்டன. பின்பு இருபக்க மடல்கள் புழக்கத்திற்கு வந்தன.

லூயிஸ் பிராங் என்பவர் 1879-ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து மடல்களை வெளியிட்டார். 1887-ஆம் ஆண்டு அவர் காதலர்கள் தினமான 'வாலன்டைன் 61' தினத்தில் சிறப்பு மடல்களை வெளியிட்டார். இது ஐந்து சென்டிலிருந்து மூன்று டாலர்கள் வரை விற்கப்பட்டது. பின்பு லித்தோகிராம் முறையில் வண்ணத்தில் வாழ்த்து மடல்கள் வெளியிடப்பட்டன.

விடுமுறை நாட்களுக்கு ஏற்ப வாழ்த்து மடல்கள் 1912-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

பின்பு, 1914-இல் அன்னையர் தினர், 1916-இல் தந்தையர் தினம், 1919-இல் நண்பர்கள் தினம் என்று பல தினங்களுக்கு ஏற்ப வாழ்த்து மடல்கள் வெளியிடப்பட்டன. 1920-களில் ஏற்பட்ட விளம்பர உத்திகள் மூலம் வாழ்த்து மடல்களின் தயாரிப்பு, தொழில் ரீதியாகச் சிறப்புப் பெற்றது. இன்று தழைத்து நிற்கும் இத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்பத்தினால் சிறப்படைந்துள்ளது.

வாழ்த்து தெரிவிப்பது என்பது நமது பாரம்பரியமும்கூட, சிலப்பதிகாரத்தில் கண்ணகி-கோவலன் திருமணத்தைத் தேவர்களும், முனிவர்களும் வாழ்த்தினார்கள் என்பதிலிருந்து, சமீபத்திய இலக்கியங்கள் வரை வாழ்த்துக்கள் குறித்து நமக்கு எடுத்துரைக்கின்றன. ஆனால், வாழ்த்து மடல்கள் அனுப்புவது என்பது காலனியாதிக்கத்தில் கலாச்சாரப் பாதிப்பு என்றே கூறவேண்டும்.

- நன்றி: 'தூவானம்'.

உண்மை

வெளிச்சம் கண்டிப்பாக இருளைப் போக்கிவிடும். அது போலவே உண்மை நிச்சயம் நன்மையை உண்டாக்கும்.

—சுவாமி விவேகானந்தர்

தமிழ்நாட்டை மேம்படுத்தும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்!

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிராமக் குடிநீர், கிராமச் சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சிறுபாசன மேம்பாடு, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய சிறப்புத் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1991-92 நிதியாண்டிற்கு ரூ.194.6 கோடி ரூபாயும், 1992-93 நிதியாண்டிற்கு ரூ.192.62 கோடி ரூபாயும், 386 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்புத் தன்னிறைவுத் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும் முடியும் தறுவாயை எட்டிக்கொண்டு வருகிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிக்கும் திட்டம் ஆகிய இரண்டையும் இணைத்து ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 80 சதவிகிதமும் மாநில அரசு 20 சதவிகிதமும் நிதி வழங்குகிறது.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.211 கோடி மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், கிராமச் சாலைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.73. கோடி மதிப்புள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், ரூ.85 கோடி மதிப்புள்ள பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

மில்லியன் கிணறு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் 2,771 பாசனக் கிணறுகள் இலவசமாக வெட்டி கட்டிக் கொடுக்கப்பட்டன. மேலும், 5658 கிணறுகள் அமைக்கின்ற பணி நடப்பு நிதியாண்டிற்குள் முடிக்கப்பெறும்.

ஆதி திராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள்

8,898 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.9.62 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 24,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கிராமப்புற மக்கள் பயனடைகின்ற வகையில் வங்கிக் கடன் அரசு மானிய உதவியுடன் விவசாயப் பணிகளை மேம்படுத்த, கறவை மாடுகள், ஆடுகள் வாங்க, வளர்க்க, விவசாயக் கருவிகள் வாங்க வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான மானியத் தொகையினை 50 சதவிகிதம் மத்திய அரசும், 50 சதவிகிதம் மாநில அரசும் வழங்கி வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,23,969 நபர்கள் பயனடையும் விதத்தில் ரூ.43.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுகாறும் ரூ.1,698 இலட்சம் வழங்கப்பட்டு 55,640 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்திருக்கின்றனர்.

ஊரகச் சுகாதாரத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், கிராமங்களில் வாழுகின்ற தனி நபர் வீடுகளுக்குக் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு மாநில அரசு, யுனிசெஃப் நிறுவனம், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. பெரியார் மாவட்டத்தில் 33,304 கழிப்பறைகள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பெரியார் மாவட்டத்தில் ரூ.80 இலட்சம் செலவில் 5,000 கழிப்பிடங்கள் கட்டப்பட்ட இருக்கின்றன. எஞ்சியுள்ள 20 மாவட்டங்களில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் 25,000 கழிப்பிடங்கள் கட்ட மதிப்பிடப்பட்டுள்ளது.

ஊரகக் குடிநீர்த் திட்டம்

கிராமப்புறங்களில் குடிநீர்த் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றி, உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் ரூ..1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது ரூ.5 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 93,526 ஆழ்துளைக் கிணறுகளும், 36,325 துணைக் கிணறுகளும் அதில் அமைக்கப்பட்ட 24,470 கையிறைப்பான்களும் பராமரிக்கப்படுகின்றன.

கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறப் பெண்கள் குழுக்களாக அமைக்கப் பட்டு, தொழிற்பயிற்சி அளிக்கப் படுகிறது. இதற்காக ரூ.20.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு ரூ.15.20 இலட்சம் செல விடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண் டிற்குள் ரூ.15 இலட்சம் செலவில் 300 குழுக்கள் அமைக்கப்பட்டு 62,190 பெண்களுக்குக் கைத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

கிராமங்களில் வாழுகின்ற வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள இளைஞர்களுக்குச் சிறு தொழில் களில் பயிற்சியளித்து அவர்கள் சுய மாக வேலைவாய்ப்பினைப் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்க மாகும். நடப்பு நிதியாண்டில் ரூ.2.64 கோடி செலவில் 19,800 இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்புப் பயிற்சியளிக்கத் திட்ட மிடப்பட்டு இதுகாறும் ரூ.34 இலட்சம் செலவில் 9,668 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நடப்பு நிதியாண்டிற்குள்ளாக ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பயிற்சியளிக் கப்படும்.

ஊராட்சித் தெரு விளக்குகள்

ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிவதற்கு தரமான குழல் விளக்குகள், பிறபொருட்கள் பெற்றுக் கொடுப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.50 கோடி ஒதுக்கப் பட்டு வந்தது. தற்பொழுது ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

டானிடா திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மரக்காணம், பரங்கிப்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 3 ஆண்டுக் காலத் தில் குடிநீர்த் திட்டம், சுற்றுப்புறச் சுகாதாரம், காடுகள் வளர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளுக்காக டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் ரூ.8.23 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள் ளன. நடப்பு நிதியாண்டில் ரூ.2.52

கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறை வேற்றப்படும்.

ஊராட்சி ஒன்றியம், கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்

நடப்பு நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழையூர், எஸ். புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு அலுவலகக் கட்டடங்களும், தஞ்சாவூர், தேவகோட்டை ஆகிய இடங்களில் கோட்ட வளர்ச்சி அலுவலகமும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பேரூராட்சிகள்

நடப்பு நிதியாண்டில், பேரூராட்சி களில் உள்ள சாலைகளைச் சீர் படுத்த, மேம்படுத்த இதுகாறும் ரூ.8.46 கோடி செலவிடப்பட்டுள் ளது. குடிநீர்க் குழாய்களை மாற்றி யமைப்பதற்கு ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.14 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. சிறிய குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு ரூ.12 இலட்சம் செலவிடப்பட்டிருக் கிறது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 5,945 தொகுப்பு வீடுகள் கட்ட ரூ.828 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. புழுதிகள் அற்ற சாலைகள் அமைக்க ரூ.50 இலட்சமும், கழிவுநீர்க் குழாய் இணைப்புகளுக்காக ரூ.10 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பேரூராட்சிகளுக்குச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் பேரூராட்சி களில் அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தருவதற்காக ஆண்டு ஒன்றிற்கு ரூ.50 கோடி வீதம், 3 ஆண்டுகளில் ரூ.150 கோடி மதிப் பீட்டில் பணிகளை நிறைவேற்று வதற்காகத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி மேம் பாட்டிற்காக ரூ.85 கோடி நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு பணிகள் நடைபெற்று வரு கின்றன. துப்புரவுப் பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற ரூ.6 கோடி செலவில் புதிய வாகனங் களை வாங்கவும், மெரீனா மற்றும் எல்லியட்ஸ் கடற்கரைப் பகுதி களைப் பராமரிக்க, அழகுபடுத்த ரூ.1.80 கோடியும், நகரின் மத்திய பகுதியில் குறுகலான பின்னிப் பாலத்தை ரூ.1.50 கோடி செலவில் அகலப்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைபிறப் பித்தார்கள்.

சென்னை மாநகராட்சியில் சொத்து வரி மூலம் ரூ.50 கோடி அளவிற்கு வசூலாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. மாநகராட்சி களில் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் சொத்து வரி வசூலிக் கும் முறையைப் பரிசீலித்து, திருத் திய முறையை அமல்படுத்த அரசு கருதியுள்ளது. எழில் மிகு சென்னை-2000 திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 5 ஆண்டுகளில் ரூ.1,250 கோடி செலவில் பல் வேறு வளர்ச்சிப் பணிகள் நிறை வேற்றப்பட இருக்கின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 5 ஆண்டுகளில் ரூ.240 கோடிக்கான திட்டங்களை நிறைவேற்றும்.

நேரு விளையாட்டரங்கம்

சென்னையிலுள்ள நேரு விளை யாட்டரங்கை அனைத்து நாட்டுத் தரம் வாய்ந்ததாகவும் பல்வேறு விளையாட்டுகளுக்குப் பயன்படக் கூடியதாகவும் அனைத்து வசதிகளை யும் கொண்ட நவீன விளையாட்ட ரங்காகவும் உருவாக்கவும் ரூ.36 கோடி செலவில் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது.

தற்பொழுது சென்னை மாநகராட் சியில் 10,000 துப்புரவுப் பணி யாளர்கள் பல்வேறு பகுதிகளி லிருந்து பணிக்கு வருவதைக் கருத் தில் கொண்டு அவரவர் பணியிடங் களுக்கு ஏற்றவாறு அந்தந்தப் பகுதி யில் குடியிருப்பு வசதி செய்வதற் கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மதுரை மாநகராட்சி

வளர்ந்து வரும் மதுரை மாந கரில் மழைநீர் வடிகால்கள், கால் வாய்கள், ஆகியவற்றைத் தூர் வார வும், அப்பகுதிகளில் பணிகளை நிறைவேற்ற இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கழிவு நீர் அகற்றும் இறைக்கும் நிலையத் தினைத் திறம்படச் செயல்படத் தேவையான பணியாட்களை நியமிக் கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நவீன அடுக்குமாடிப் பேருந்து நிலையம் ஒன்று ரூ.25 கோடி செலவில் அமைக்கப்பட வுள்ளது. இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டதும், பணிகள் நடை பெறும். இம்மாநகராட்சியின் வருவாய் நடப்பாண்டில் ரூ.2 கோடியாக உயர்ந்துள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி

கோவை மாநகராட்சியில் மேலும் 600 துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்யவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் கோவை மாநகராட்சி இவற்றின் பொதுவான கட்டுப்பாட்டில் சிறு வாணிக் குடிநீர்த் திட்டம் இயங்கி வருவதை மாற்றி, கோவை மாநக ராட்சியே இக்குடிநீர்த் திட்டத்தைப் பராமரிப்புச் செய்யவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை கூறி, அதற்கேற்பப் பணிகள் நடைபெற உள்ளன.

ரூ.4 கோடி செலவில் கோயம் புத்தூர் மாநகராட்சியில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூ.20 இலட்சம் செலவில் புதியதாகத் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் ரூ.53 இலட்சம் செலவில் 5 தாய்-சேய் நல விடுதிகள் கட்டும் பணிகள், சத்தியமூர்த்தி சாலையில் விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகள் நடைபெற உள்ளன.

ஓசூர் மற்றும் திருத்துறைப்பூண்டி பேரூராட்சிகள் நகராட்சிகளாக உயர்த்தப்படவுள்ளன. திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகளும் மாநகராட்சிகளாக அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்

நிதி வசதி குறைந்த 70 நகராட்சி களில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்குத் தெருவிளக்குகள் அமைப்பதற்காக அரசு ரூபாய் ஒரு கோடி சிறப்பு மானியமாக நடப் பாண்டிற்கு வழங்கியிருக்கிறது. நகராட்சி நகரியங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிர்வாகத்தை மேலும் சீரமைக்கவும் பொதுமக்களுக்கு ஆற்றும் தொண்டின் தரத்தை உயர்த்தவும் உயர்மட்ட வல்லுநர் குழு, மாநில அளவில் ஆலோ சனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் குறைகளைப் போக்கு வதற்காகக் குறைதீர்க்கும் நாள் நடைபெற்று வருகிறது. நகராட் சிகள், மாநகராட்சிகள் ஆகிய வற்றில் பணிபுரியும் சிறந்த பணி யாளர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங் கும் திட்டம் சிறந்த நிர்வாகம் நடத் தும் நகராட்சிக்கு விருதும் வழங்கப் பட இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக் குள் நகராட்சிப் பணியாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் நிறைவேற்றப் பட உள்ளது.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் 1989-93 முடிய 5 ஆண்டுகளுக்கு ரூ.167.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 41 நகராட்சிகளில் ரூ.54.36 கோடிக்கான பல்வேறு வளர்ச்சிப் பணிகள் இந்நிதியைக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.126.85 கோடிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதிக்காக அரசு ரூ.51 கோடி இதுகாறும் வழங்கியுள் ளது. 265 திட்டப் பணிகள் இத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு 97 திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டன.



ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத் தின்கீழ், 39,653 நபர்கள் பயன் படுத்தப்பட்டார்கள். இதன் மூலம் 28.81 இலட்சம் வேலைவாய்ப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 24,484 நபர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப் பட்டு 49.32 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு நாட்கள் உரு வாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.33.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் 59 நகராட்சி களில் ரூ.9.37 கோடி செலவில் 39,476 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டிற்குள் அனைத்து நகராட்சி களிலும் இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப் படுகிறது.

தற்போது ஊராட்சிகள், பேரூ ராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் 3 இலட்சம் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்களது குழந்தைகள், மருத்துவம், விவசாயம், பொறியியல் துறையில் பட்டப் படிப்பும் பெறுவதற்கு இடம் கிடைப் பது சிரமமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களது குழந்தைகள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் பெயரில் மருத்துவம், விவசாயம், பொறி யியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

சாதி சமய பேதமற்ற குடியிருப்புகளை ஏற்படுத்த இந்து, கிறிஸ்துவர், இஸ்லாமியர் வழி பாட்டுத் தலங்களுடன் அனைத்து வசதிகளோடு 350 குடியிருப்புகள் கொண்ட புதிய மாதிரி நகர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் உருவாக்கப்பட இருக்கிறது. முதற் கட்டமாக மாவட்டந்தோறும் ஒரு மாதிரி நகர் அமைக்கப்படும்.

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களுக்கு விளையாட்டில் ஆர்வமும் பயிற்சியும் ஏற்படுத்து

வதற்கு வசதியாக 386 ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டரங்கம் கட்டப்படும். முதற்கட்டமாக 22 மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றி யங்கள் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் சூட்டப்படும்.

நகராட்சி பேரூராட்சிகளில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயர் சூட்டப்படும். ஏழை எளிய வர்கள் பயன்படுத்தும் வகையில் இத்திருமண மண்டபங்களுக்கு வாடகை குறைக்கப்படும்.

பேருந்து நிலையங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைப்பதற் கான திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சென்னை மாநகர் தவிர தமிழ **கத்தில் அனைத்துப்** பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் வடி கால் வசதிகள் ஏற்படுத்தித் தருதல், இவ்வாரியத்தின் பணியாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப குடிநீர் வசதியற்ற 2,483 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் வாழுகின்ற 418 குடியிருப்புகளுக் குக் குடிநீர் வசதி வழங்கப்பட்டு விட்டது.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டத் தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 4,958 குடியிருப்புகளுக்கு 67 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 3,653 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்படும். சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.47 கோடி செலவில் 3,111 குடியிருப்பு களுக்கும், ஆதிதிராவிடர் பழங்குடி யினர் சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ.15 கோடி செலவில் 3,369 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், அம்பேத்கர் நூற்றாண்டு நினை வாகக் கூடுதலாக 1,000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் நடப்பாண்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

நடப்பு நிதியாண்டில் 1,994 ஆழ்குழாய்க் கிணறுகள் வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் அமைக்



கப்பட்டுள்ளன. கிழக்கு இராமநாத புரம், சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் 1,236 குடிநீர் வசதி ஆதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு ரூ.9கோடி செலவில் 217 குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. பரிசோதனையாக கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் 9,000 கிராமப் புறக் குடியிருப்புகளுக்கு 530 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய் வதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நகர்ப் புறக் குடிநீர் வசதித் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள 290 நகரங்களில் குடி நீர் வசதி படிப்படியாகச் செய்து தரப்படும். நடப்பாண்டில் ரூ.25 கோடி செலவில் 70 திட்டங்கள் செயல்படுத்தப்படும். உலக வங்கி நிதியுதவியுடன் 2 மாநகராட்சிகள், 10 நகராட்சிகள், 76 ஊராட்சிகள், 955 கிராமப்புறக் குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் ரூ.322 கோடி மிகப் பெரும் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத் தினைச் செயல்படுத்துவதில் எற் படும் அனைத்து இடர்ப்பாடுகளை யும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆந்திர முதல்வர் அவர் களுடன் கலந்து ஆலோசித்து வழி வகை செய்துள்ளனர். உலக வங்கிக் குழுவும் இத்திட்டத்தை ஆய்வு செய் துள்ளது. உலக வங்கி ஏற்பு அளித்த வுடன் இப்பணிக்கு உலக வங்கி நிதி உதவி செய்யும். இத்திட்டப் பணி களுக்காக நடப்பாண்டிற்கு ரூ.34 கோடி நிதியினை அரசு ஒப்பளித் துள்ளது. சென்னை நகரில் போடப் பட்டுள்ள குடிநீர்க் குழாய்கள் துருப் பிடித்தும் பழுதடைந்தும் இருப்ப தால் நடப்பு நிதியாண்டில் 73 கி.மீ. குழாய்கள் புதுப்பிக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மணலியில் உருவாகவுள்ள 'ஆரோ செம்' நிறுவனத்திற்கு 6 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.



உயிரைப் பறிக்கும் நஞ்சு

—மயிலை வே. தமிழ்மணி

கள்ளாம் மதுவைக் குடிப்பதுவோ? - கடைசிக்
காலத்தைக் கூவி அழைப்பதுவோ?
உள்ள பொருள்பேர் இழப்பதுவோ?-சுற்றி
ஓங்கும் இடரை வளர்ப்பதுவோ?

கள்வர் பொருளைக் களவாடல்போல்-மது, உன்
கருத்தைக் கவர்ந்துன் அறிவழிக்கும்!
கள்ளமில் கற்றோர் வெறுத்திடுவார்! - பெற்றோர்
மனைமக்கள் கண்ணீர் தனில் கரைவார்!

மகன்குற்றம் எல்லாம் பொறுத்திடும்தாய்-குடித்த
மகனைக் கண்டுள்ளம் கொதித்தழுவாள்!
அகத்தால் புறத்தே வெளித்தோன்றும்-வெட்கமாம்
அணங்கும் உனைக்கண்டு வெட்கிடுவாள்!

தூங்குவோர் மெய்யறி வற்றவராம்!-அவர்கள்
செத்தாரில் வேறல்லர் குடித்தவர்போல்!
ஓங்கும் உயிரைப் பறிக்கும் நஞ்சாம்!-மதுவாம்
உயிர்க்கொல்லி நஞ்சை அருந்துவதோ?

உற்றார் உறவினர் கண்டெள்ளுவார்! - பிறந்த
ஊரார், கைகொட்டிச் சிரித்திடுவார்!
பெற்றோர் மனைமக்கள் வாழ்விழப்பார்! வறுமைப்
பெருந்தீ பசித்தீயில் வீழ்ந்தெரிவார்!

சொத்து சுகம்எல்லாம் போயொழியும்!-பந்தம்
சொந்தம் அனைத்தும் அழிந்துபடும்!
சித்தம் தடுமாறி வீழச்செய்யும்!-உடல்
செல்லரித்துச் சாவை அணைத்துவிடும்.

மதுவைக் குடிப்பதால் பாழ்பட்டவர்-தம்மைக்
கண்டும் மதுவைக் குடிப்பதுவோ?
மதுவை மறந்தின்பாய் வாழ்ந்திடுக! உன்னைச்
சார்ந்துள்ளோர் வாழ்ந்திட வாழ்ந்திடுக!

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	6.25% w.e.f. 24.4.92
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	12.25%
	For 271 DAYS and above but upto 364 days	12.00%
	For 1 YEAR and above	12.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

சிறுசேமிப்புத் திட்டங்களும் அரசு அளிக்கும் சலுகைகளும்

டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறுசேமிப்பு இயக்குநர்

மக்களிடையே சிக்கன வாழ்வின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதற்காகவே உலகச் சிக்கன நாள் கொண்டாடப்படுகிறது.

தனி மனிதனின் பல்வேறு தேவைகளுக்கும், நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் நிதி பெரிதும் தேவைப்படுகிறது. பொதுமக்கள் தங்களது வருவாய் முழுவதையும் அவ்வப்போது செலவழித்து விட்டால் தங்களுடைய எதிர்காலச் செலவுகளுக்குப் பிறரை நாடவேண்டிய நிலை ஏற்படும். அதைப்போலவே அரசும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் போதிய நிதியினை உள்நாட்டிலேயே திரட்ட முடியாவிட்டால் மற்ற நாடுகளிடம் நிதி உதவி கோரவேண்டி இருக்கும். மாறாக, பொதுமக்கள் சிக்கனத்துடன் வாழ்ந்து தங்களுடைய வருவாயின் ஒரு பகுதியைச் சேமித்து வருவார்களேயானால் அத்தகைய சேமிப்பு வளர்ந்து அவர்களுடைய எதிர்காலத் தேவைகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும். அவ்வாறு பொதுமக்கள் அரசின் பல்வேறு சேமிப்புத் திட்டங்களில் பெருமளவு முதலீடு செய்தால் அதன் மூலம் கிடைக்கும் நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் வளர்ச்சித் திட்டங்களக்குப் பிற நாடுகளின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது. எனவேதான் 'சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்'' என்ற கொள்கையைத் தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.

பொதுமக்கள் சேமிப்பதற்குத் தனியார் நிதி நிறுவனங்கள், அரசு வங்கிகள், சிறுசேமிப்புத் திட்டங்கள் எனப் பல வழிகள் உள்ளன. ஆனால், இவற்றில் அரசு வங்கிகள் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்கள் தவிர மற்ற நிதி நிறுவனங்களில் செய்யும் முதலீடுகளுக்கு முழுமையான பாதுகாப்பு இல்லையென்பதைப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், சிறுசேமிப்புத் திட்ட முதலீடுகள் பாதுகாப்பானவை என்பதுடன் அதிக வட்டியும் வருமான வரிச் சலுகையும் பெற்றுத் தருகின்றன. மேலும், மக்களுடைய பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப உதாரணமாக அதிக வருவாய் விரும்புவோர், வருமான வரிச்சலுகை பெற விழைவோர், அல்லது தொடர் வருவாய் பெற விரும்புவோர், தங்கள் தேவைக்கேற்ப சிறுசேமிப்புத் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யலாம். இந்திரா விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் போன்றவைகளில் முதலீடு செய்தால் 5 ஆண்டுகளில் இரட்டிப்புப் பணம் பெறலாம். அதைப்போலவே வருமான வரிச்சலுகைக்குத் தேசிய சேமிப்புத் திட்டம் 1992 தேசிய சேமிப்புப் பத்திரம் பப்ளிக் பிராவிடெண்ட் பண்டுத் திட்டம் இருக்கின்றன. மாத வருவாய் பெற விரும்புபவர்களுக்கு மாத வருவாய்த் திட்டம், ஆண்டு வருவாய் பெற விரும்புவோர்க்குக் குறித்த கால வைப்புத் திட்டம் ஆகியவை இருக்கின்றன. இவை தவிர அன்றாடம் உழைத்துச் சம்பாதிப்பவர்களுக்கும் மாதச் சம்பளம் பெறுவோருக்கும் ஏற்றவாறு ரெக்கரிங் டெபாசிட், அஞ்சலகச் சேமிப்பு மற்றும் வங்கிக் கணக்கு இருக்கின்றன.

சிறுசேமிப்பின் மூலம் வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் 75 சதவிகிதத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது. இத்தொகை, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் பெருமளவில் சிறுசேமிப்பில் முதலீடு செய்தால் அதிலிருந்து அதிகத் தொகையைத் தமிழக அரசு நீண்ட காலக் கடனாகப் பெற்று அதன்மூலம் நிதிநிலையில் ஏற்படும் பற்றாக்குறையைச் சீர்செய்வதுடன் கூடுதல் வரிவிதிப்பையும் தவிர்க்க முடியும். எனவே, பொதுமக்கள் சிக்கனத்துடன் வாழ்ந்து சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமிக்கத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்களிடையே சிக்கனத்தையும் சேமிப்பையும் ஊக்குவிப்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை

குறிப்பிட்ட சில சிறுசேமிப்புத் திட்டங்களில் தமிழகத்தில் ரூ.1,000 அல்லது அதற்குமேல் 1.4.92 முதல் 31.3.93 வரை முதலீடு செய்பவர்களுக்கு முதலீட்டுத் தொகையில் ஒரு சதவிகிதம் ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. சிறப்பாக 1.6.1992 முதல் 30.9.1992 முடிய கிசான் விகாஸ் பத்திரங்களில் முதலீடு செய்தவர்களுக்கு 2.25 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. 1.10.92 முதல் 31.12.92 முடிய மாதாந்திர வருவாய்த் திட்டத்தில் செய்யப்படும் முதலீட்டிற்கு

2 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

முதலீட்டாளர்களுக்கு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்

குறிப்பிட்ட சிறுசேமிப்புத் திட்டங்களின் முதலீட்டாளர்களுக்கு ஒவ்வொரு ரூ.500-க்கும் ஒரு கூப்பன் வழங்கப்படும். ஒரு வரிசையில் ஒரு இலட்சம் இலவசப் பரிசுக் கூப்பன்களை வழங்கி முடிந்ததும் குலுக்கல் நடத்தி மாருதி கார் உட்பட 536 பரிசுகள் வழங்கப்படும்.

பரிசுகள் விவரம்

1. சூப்பர் பம்பர் முதல் பரிசு - ஒரு மாருதி கார்.
2. இரண்டாம் பரிசு - இரண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்.
3. மூன்றாம் பரிசு - மூன்று 165 லிட்டர் குளிர்பதனப் பெட்டிகள்.
4. நான்காம் பரிசு - 10 தையல் இயந்திரங்கள்.
5. ஐந்தாம் பரிசு - 20 பிரஷர் குக்கர்கள்.
6. ஆறாம் பரிசு - ரூ.100 மதிப்புள்ள 500 இந்திர விகாஸ் பத்திரங்கள்.

மொத்தப் பரிசுகள் 536

முகவர்களுக்குப் போனஸ் பரிசு

பரிசுக் குலுக்கலில் முதல் மூன்று பரிசு பெற்றவர்கள் முகவர்கள் மூலமாக முதலீடு செய்திருப்பார்களானால் அவர்களுக்கும் கீழ்க் கண்டவாறு பரிசு வழங்கப்படுகிறது.

1. முதல் பரிசு - மோஃபா
2. இரண்டாம் பரிசு - சைக்கிள்
3. மூன்றாம் பரிசு - பிரீஃப்கேஸ்

மாவட்ட/மாநில அளவில் அதிக வசூல் செய்த முகவர்களுக்குப் பரிசு

மாநில/மாவட்ட அளவில் முதன்மையாக வசூல் செய்யும் முகவர்கட்கும் பரிசு வழங்கப் படுகிறது.

மாநில அளவில் முதன்மையாக வசூல் செய்யும் முகவருக்கு ரூ.2000, மாவட்ட அளவில் முதன் மையாக வசூல் செய்த முகவருக்குப் பரிசு ரூ.1000, பள்ளி மாணவர்களுக்கும், சஞ்சாயிகா திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும்

ஆசிரியருக்கும், தலைமையாசிரியருக்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஊக்கத்தொகை.

சஞ்சாயிகா திட்டம் செயல்படும் பள்ளியில் மாணவர்கள் ஒரு கல்வியாண்டில் ரூ.100 சேர்த் தால் அவர்களுக்கு ரூ.2 ஊக்கப்பரிசு வழங்கப் படுகிறது. ஒரு கல்வியாண்டில் ரூ.5,000 சேர்த்த பள்ளியில் மாணவர்கள் 75 சதவிகிதம் அல்லது 100 சதவிகிதம் சேர்த்து சஞ்சாயிகா திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும் ஆசிரியர் தலைமையாசிரி யர்களுக்கு முறையே ரூ.75 மற்றும் ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

ஒரு பள்ளியில் ஒரு கல்வியாண்டில் ரூ.50,000 வரை சேர்த்திருந்தால் அப்பள்ளிக்கு ஐந்து மின் விசிறிகள் அன்பளிப்பாக வழங்கப் படுகின்றன.

முகவர்கட்கு ஊக்கத்தொகை

மேலும், சிறுசேமிப்பு வசூலில் ஈடுபட்டுள்ள எஸ்.ஏ.எஸ் முகவர்களுக்கு ஊக்கமளிக்கின்ற வகையில் மத்திய அரசு தரும் கமிஷன் தொகைக்கு இணையாக மாநில அரசு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது. எம்.பி.கே.பீ.ஒய். முகவர்களுக்கு அவர்கள் பெறும் கமிசன் தொகையில் பாதியைத் தமிழக அரசு ஊக்கத்தொகையாக வழங்குகிறது.

முகவர்கட்கும் இலவசப் பரிசுக் கூப்பன்

தவிர, முகவர்கள் மூலம் செய்யப்படும் முதலீடுகளுக்கு ரூ.10,000- க்கு ஒரு கூப்பன் வீதம் இலவசப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டு ஒரு இலட்சம் கூப்பன்கள் கொண்ட வரிசைக்குக் குலுக்கல் நடத்தி மாநில அளவில் கீழ்க்கண்டவாறு 900 பரிசுகள் வழங்கும் திட்டத்தைக் கடந்த ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாகவும் முன்னோடித் திட்டமாகவும் தமிழக அரசு அறி வித்துச் செயல்படுத்தி வருகிறது.

5 முதல் பரிசு - ஸ்கூட்டர்கள்.
10 இரண்டாம் பரிசு - 10 மொப்பட்டுகள்
15 மூன்றாம் பரிசு - 8 கிராம் தங்க நாணயங்கள்
20 நான்காம் பரிசு - மிக்சிகள்
50 ஐந்தாம் பரிசு - சைக்கிள்கள்
300 ஆறாம் பரிசு - பிரிஃப் கேஸ்
500 ஏழாம் பரிசு - சுவர்க் கடிகாரங்கள்.

மொத்தம் 900 பரிசுகள்.

மாவட்டங்களுக்கும் ஊக்கத் தொகை

சிறுசேமிப்பில் சிறப்பான சாதனை புரியும் மாவட்டங்களுக்குத் தமிழக அரசு ஊக்கத் தொகை வழங்கி அதன் மூலம் குடிநீர் வசதி, மருத்துவ வசதி மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

● மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதனாவான்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் ஊக்கத் தொகை

இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு சேமிப்பு வசூலில் சிறந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு மாவட்ட அளவில் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

ஐந்து ஊராட்சிகளுக்கு ரூ.10,000 வீதம் ரூ.50,000.

இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.50,000 வீதம் ரூ.1,00,000

சிறந்த நகராட்சி அல்லது நகரியம் ரூ.50,000 வீதம் ரூ.50,000

மொத்தம் ரூ.2,00,000

20 ஆண்டுகாலத் தமிழக வசூல் வளர்ச்சி

தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாகச் சிறு சேமிப்பு இலக்கும் நிகர வசூலும் படிப்படியாக உயர்ந்து கடந்த ஆண்டு வரலாறு காணா உயர் வசூலை எட்டியது.

பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் மூலம் தமிழக அரசு சென்ற ஆண்டு ரூ.580 கோடி அளவிற்கு நிகர வசூல் செய்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகர வசூல் அதிகரித்து வருகிறது. இவ்வாண்டு தமிழக அரசு நிகர வசூல் ரூ.550 கோடியாக இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்விலக்கினை எய்துவதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகராட்சி ஆணை யரும் இவ்வலுவலகத்திலுள்ள பல்வேறு அலுவலர் களும் அயராது உழைத்து வருகின்றனர். எனவே, தமிழக மக்களின் வீடு வளம் பெறவும் இந்த நாடு நலம் பெறவும் சிறுசேமிப்புத் திட்டங்களிலுள்ள பல்வேறு பயன்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைத் தங்களுக்கு ஏற்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் இன்றே சேமித்து வளம்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்கள்

புத்தகங்கள் இருவகைப்படும். ஒருவகை பொழுதுபோக்க உதவுகிறவை. மற்றொருவகை வாழ்க்கைக்கு உதவுகிறவை.

—ரஸ்கின்

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே

—கதே

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் கைத்தறி மற்றும் துணி நூல் துறை நிறு வனங்கள் சார்பாக ரூ.60 இலட்சத்திற்கான காசோ லையை, நேரு விளையாட்டரங்கை நவீனப்படுத்தும் பணிக்கென வழங்கினார் (7.12.92).

திரைப்பட விமர்சனம்

நீங்க நல்லா இருக்கணும்

'குடி குடியைக் கெடுக்கும்' என்பதை நாசூக்காகச் சொல்ல வேண்டும். அதை உணர்வு பூர்வமாக உணர்த்த வேண்டும். முடியுமா?

'முடியும்' என்பதை 'நீங்க நல்லா இருக்கணும்' படத்தைப் பார்த்தபோது உணர முடிகிறது.

குடிக்கு அடிமையாகிவிட்ட ஒருவனை பெண்ணொருத்தி திருத்த முற்படுகிறாள். 'எப்படி' என்பதை விளக்கும் கதைதான் இது.

தமிழக அரசுக்காக, ஜீ.வி. பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்துக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

அரசம்பட்டிக் கிராமத்து அபலைப் பெண் அஞ்சலை (பானுப்பிரியா) தன் குடிகாரக் கணவன் மாணிக்கத்தின் (நிழல்கள் ரவி) உயிரைக் காப்பாற்ற படாதபாடு படுகிறாள். மரணத்தின் பிடியிலிருந்து அவனைக் காப்பாற்ற அவள் சந்திக்கும் சோதனைகளும், வேதனைகளும் ஏராளம். அதைச் சாதனையாக்கிக் காட்டச் சபதம் ஏற்கிறாள். அந்தச் சபதத்துக்குச் சாரமாக இருந்து உதவுகிறார் பத்திரிகை நிருபர் காதர்பாட்சா (விசு). அவரோடு பாதிரியாரும் (கிஷ்மு) சேர்ந்து கொள்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆசியும் ஆதரவும் அவர்களுக்கு முழு அளவில் கிடைக்கிறது.

கணவனது உயிரை மீட்க, கலியுக சாவித்திரியாக மாறுகிறாள் அஞ்சலை.

மருத்துவச் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்கிறாள். அங்கு நவீன மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை நடக்கிறது. மாணிக்கம் மரணத்தின் பிடியிலிருந்து பிழைத்துக் கொள்கிறான். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறாள் மனைவி, அஞ்சலை.

பிறகு, தாயகம் திரும்புகின்றனர் தம்பதியர். பெற்றோரும், மற்றோரும் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால், புதுவாழ்வு காணக் கனவு கொண்டிருந்த அஞ்சலைக்குப் பேரிடி! அது என்ன? அதைச் சித்திரிப்பதுதான் இந்தக் கதை.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருப்பவர் விசு. அருமையாகச் செய்திருக்கிறார்.

பாடலுடன் தொடங்கும் படத்தின் முதல் காட்சியே நம் மனத்தைக் கவர்கிறது. குடிகார மகனுக்குப் பெண் கேட்டுத் தந்தை (மேஜர் சுந்தரராஜன்) கதறும் காட்சி மனத்தை நெகிழவைக்கிறது.

'ஏழை எளிய மக்களின் துயர் தீர்க்க மலிவு விலை மதுக்கடைகளை மூடுவேன் என நான் அறிவித்திருந்தது, உங்கள் அனைவருக்கும் தெரியும். அதன்படி, இந்த அரசு பதவியேற்றதும் மலிவு விலை மதுக் கடைகளை மூடத்தான் முதல் கையெழுத்துப் போட்டேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்' என்று நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றும் உரை நம்மைப் பெருமிதமடைய வைக்கிறது.

சாராய சாம்ராஜ்யத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் மாணிக்கமும் சரி, அவனைக் கட்டிக் கொண்டு அல்லல்படும் அஞ்சலையும் சரி அந்தப் பாத்திரங்களாகவே மாறிவிடுகிறார்கள். ஆம். நிழல்கள் ரவி, பானுப்பிரியா நடிப்புக்குச் 'சபாஷ்' போடலாம்.

குடிகாரக் கணவனைக் கட்டிக் கொண்டு, ஒரு பெண் படும்பாடு தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. செய்திப்படமாக இல்லாமல், சமுதாய நிகழ்வுகளைக் கண்முன் காட்டும் ஒரு திரைக் காவியமாகவே விளங்குகிறது. எம்.எஸ். விஸ்வநாதனின் இசையமைப்பு, பாடல்கள், ஒளிப்பதிவு எல்லாம் சிறப்பாக உள்ளன.

கிராமிய மணம் கமழும் ஒரு நல்ல குடும்பக் கதை என்பதற்கும், உணர்ச்சிகரமான நிகழ்ச்சிகளால் பின்னப்பட்டிருக்கும் கதை என்பதற்கும் பல காட்சிகளைச் சான்றாக நாம் காட்டலாம்.

★ கையில் ராந்தல் விளக்கை ஏந்தி, குடித்துவிட்டுச் சாலையில் விழுந்து கிடக்கும் கணவனைத் தேடிச் செல்லும் காட்சி -

★ முதல் இரவு என்று கூடப் பார்க்காமல், குடித்துவிட்டு நிலை தடுமாறி வரும் கணவனைப் பார்த்து ஆத்திரம் பொங்க, அவனை இழுத்துக் கொண்டு காவல் நிலையத்துக்குப் போகும் காட்சி -

★ குடிகாரக் கணவன் நிலையை எண்ணி இறைவனிடம் முறையிடும் காட்சி -

★ தாய் (மனோரமா) இறந்த நிலையிலும், குடியை மறக்காத மகன் மாணிக்கம் கதறியழும் காட்சி, சிதை எரியும்போது 'இனிமே குடிக்க மாட்டேன் என்று அவன் சபதமேற்கிற காட்சி -

மாங்கல்யப் பிச்சை கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலில் விழுந்து அஞ்சலை ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் காட்சி -

குடியின் கொடுமையை விளக்கி-மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்திமதி கூறும் காட்சி - எல்லாம் மனத்தில் ஆழப் பதிகின்றன.

ஜி. சீனிவாசன், கிஷ்மு, வெண்ணிற ஆடை மூர்த்தி, ஒய்.ஜி. மகேந்திரன், பூர்ணம் விஸ்வநாதன், சூர்யகாந்த், திலீப், சாருஹாசன், (சங்கர்) கணேஷ், வடிவுக்கரசி, பல்லவி, இந்திராதேவி, சங்கீதா முதலானோரும் கதைக்கு வலிவும், பொலிவும் தருகிறார்கள்.

பானுப்பிரியா தீ மிதிக்கும் காட்சி மட்டுமல்ல, 'மாங்கல்யப் பிச்சைக்கு மடி ஏந்தினேன்' என்ற பாடலுக்கு ஆடும் நடனமும் அருமை. 'சிவசங்கரி ஜெகதீஸ்வரி' பாடலும் இனிமை.

'குடும்பத்திலே கிடைக்கிற போதை, பொண்டாட்டி - குழந்தைங்ககிட்டே கிடைக்கிற போதை, சாராயத்திலே கிடைக்காதுப்பா. சாராயங்கறது, முதல்லே நீ அதைக் குடிப்பே. அப்புறம் அது ஒன்னைக் குடிச்சிடும்' என்று வருகிற கட்டத்தில் விசு மனதில் நிற்கிறார்.

ஆம். விசு தனக்கே உரித்தான பாணியில், மிகக் கச்சிதமாக நடித்திருக்கிறார். மனோரமா வழக்கம் போல் பிரகாசிக்கிறார். மேஜர் மேஜர்தான். வெண்ணிற ஆடை மூர்த்தியை விசு சந்தித்துப் பேசும் காட்சி நல்ல நகைச்சுவை.

அல்லல்படும் அஞ்சலைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி செய்வதாக உறுதி கூறும் காட்சியும் நம் மனத்தில் நிற்கிறது.

அமெரிக்காவில், கண்ணுக்கினிய காட்சிகளோடு கதையும் விறுவிறுப்பாகச் செல்கிறது. சிறிது நேரம் வந்தாலும் டாக்டராக வரும் ஜீ.வி. பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்.

தாயகம் திரும்பிய மாணிக்கம் தம்பதியர், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திக்கிறபோது, குடிக்கு அடிமையான மாணிக்கத்தைப் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்திமதி கூறும் காட்சி தத்ரூபமாக எடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், முதல்வர் அவர்களின் அறிவுரையும், குடிப்பழக்கம் உள்ளவர்கள் திருந்துவதற்கு ஒரு பாடமாக இருக்கிறது.

படத்தின் உச்சக்கட்டம் நம் உள்ளத்தைத் தொடும்படியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

புதுவாழ்வு மலரப் போகிறது என்று அகமும் முகமும் மலர மகிழ்ச்சியில் மிதந்த அஞ்சலைக்கு, அன்று இரவு பூகம்பமே ஏற்படுகிறது. துன்பத்தையே சந்தித்துக் கொண்டிருந்த அவள், இன்பத்தின் விளிம்புக்கு வருகிற சமயத்தில், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, குடித்துவிட்டு தள்ளாடியபடி வீட்டு வாயிலிலே வந்து நிற்கிறான் கணவன்! எப்படி இருக்கும் மனைவிக்கு?

பட்டபாடெல்லாம் பாழாகிவிட்டதே என்கிற ஆதங்கத்தில் அஞ்சலை தன்னையே அழித்துக் கொள்கிறாள். உடைந்த பாட்டிலால் குத்திக் கொண்டு உயிரையே தியாகம் செய்கிறாள்.

ஊரே திரண்டு வருகிறது மயானத்துக்கு. குடிகார ஆண்கள் எல்லாம் மதுப்பாட்டில்களை உடைத்து 'இனி மதுவைத் தொட மாட்டோம்' என்று உறுதியேற்கிறார்கள். மனைவியின் மரணம் மாணிக்கத்தின் கண்களைத் திறக்கிறது.

'இந்த நாட்டுக்கு ஒரு அஞ்சலையின் மரணம் போதும். அவளது மரணம் அரசம்பட்டிக் கிராமத்து மக்களைத் திருத்தியது போல, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும், அனைத்துக் குடிகாரர்களையும் திருத்தவேண்டும் என்பதே என் விருப்பம். அது மட்டும் நடக்குமானால், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே வளமான மாநிலம் என்ற அளவுக்குக் கொண்டு வர இந்த அரசால் முடியும்...'

என்று இறுதிக் காட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முத்தாய்ப்பாகக் கதையை முடித்து வைக்கும் வகையில் கருத்துரை வழங்கும் காட்சி நம் கண்களை விட்டு அகலாத காட்சியாக அமைகிறது.

மொத்தத்தில், குடிக்கு அடிமையானவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால், அந்தப் பழக்கத்திலிருந்து விடுதலை பெறுவார்கள் என்பது நிச்சயம்.

- பி.வி: கிரி.



‘எய்ட்ஸ்’ நோய்த் தடுப்பு நாள்

உயிர்க்கொல்லி நோயாம் ‘எய்ட்ஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்ச்சி வாரம்’ - சென்ற நவம்பர் மாதக் கடைசியில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

இது தொடர்பாக மருத்துவர்கள் - பத்திரிகையாளர்கள் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு. கே. இன்பசாகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

பொது நிகழ்ச்சி

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 1.12.92 அன்று, ‘உலக எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நாள்’ பொது நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.

“மருந்துகள் இன்னும் கண்டறியப்படாததால், எய்ட்ஸ் நோய் பரவும் விதம் குறித்து மக்களிடையே பிரச்சாரம் செய்ய இளைஞர்கள் முன்வர வேண்டும்” என்றும் அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்கு மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு. கே. இன்பசாகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவின் முக்கிய மருத்துவரான டாக்டர் இராதாகிருஷ்ணன் இவ்விழாவில் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் டாக்டர் காந்திராஜ் நன்றி கூறினார்.

மாணாக்கர் பேரணி

இவ்விழா நடைபெற்ற நாளன்று மாலையில் - எய்ட்ஸ் நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணி, கீழ்ப்பாக்கம், பால்பர் சாலையில் தொடங்கி - ‘உலக எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நாள்’ நிகழ்ச்சி நடைபெற்ற கலைவாணர் அரங்கில் முடிவுற்றது.

- ‘ராஜூ’

பார்த்தோம் படித்தோம்

1.12.92 இதழில், பண்டித நேரு, முத்துராமலிங்கத்தேவர் திருவுருவப் படங்கள் கண்ணைக் கவர்ந்தன. சிக்கனமும் சேமிப்பும் எவ்வளவு முக்கியம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நறுக்குத் தெறித்தாற் போன்று விளக்கியுள்ளது அருமை.

—ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி

1.12.92 இதழில், ‘குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்கள்’ பற்றி பி.வி. கிரி எழுதியுள்ள கட்டுரையைப் படித்தேன். படித்தேன் குடித்ததுபோல இன்ப வெள்ளத்தில் திளைத்தேன்.

—புலவர் தணிகை உலகநாதன்,
சென்னை-1.

திருத்தம்

‘தமிழரசு’ *1.12.’92* இதழில் உள்ள ‘மூதறிஞர் இராஜாஜி’ கட்டுரையில் அவரது பிறந்த நாள் டிசம்பர் 9 என்றிருப்பது தவறு; டிசம்பர் 10 என்பது சரி.

வரலாறு படைத்த டாக்டர் ஆர்.கே. சண்முகனார்

பேராசிரியர்
டாக்டர் சை.வே. சிட்டிபாபு

தமிழ்த்தாய் ஈன்ற சான்றோர்களில் தலைசிறந்த ஆற்றலாளருள்ஒருவர்டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஆவார். பொருட் செல்வம், குணச் செல்வம், கலைச் செல்வம், நல்லறிவுச் செல்வம், நாவியலும் உரைச் செல்வம், தமிழாயும் விருப்புச் செல்வம் ஆகிய அனைத்துச் செல்வங்களும் ஒருங்கே அமையப் பெற்ற மாமனிதராகத் திகழ்ந்த இவரின் வாழ்க்கை இந்திய வரலாற்றில் ஒரு பொன்னேடாக மிளிர்கிறது என்னும் கூற்று மிகையாகாது.

சரியாக நூறு ஆண்டுகளுக்குமுன் அக்டோபர் திங்கள் 17-ஆம் நாளன்று காலை 5 மணிக்கு சண்முகனார் அவர்கள் பிறந்த அந்நாள் தீபாவளி நாளாக அமைந்திருந்தது. அவரது எதிர்காலம் ஒளிமயமானதொரு காலமாக விளங்கப் போவதென்பதைப் பறைசாற்றுவது போல் இருந்தது எனலாம். அவர் தோன்றிய குடும்பம் கோவையிலே ஒரு வணிகச் சமுதாயச் செல்வந்தர் குடும்பம் ஆகும். எனவே, வணிகர் குல பாற்கடலில் வலம்புரியாய் முகிழ்த்த அவர் செல்வச் செழிப்போடு வளர்ந்தார் என்பதில் வியப்பில்லை. ஆனால், உல்லாசத்திலோ ஆடம்பரத்திலோ மனதைச் சற்றும் பறிகொடுக்காமல் அவர் அறிவுச் செல்வத்தின் உயர் தன்மையையே நாடிப் படிப்பில் மட்டுமே முழுமையாகத் தன் கவனத்தைச் செலுத்தினார்.

கோவையிலே இலண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியிலே படித்த அவர் ஒவ்வொரு ஆண்டும் வகுப்பிலே முதல் மாணவராக விளங்கியதை அவரது தலைமை ஆசிரியர் எவரிடம் பேசினாலும், ‘மாணவன் என்றால் சண்முகம் போல் பிரகாசிக்க வேண்டும்’ என்று செல்லிப் பரவசப்படுவாராம். புத்தகப் பிரியரான சண்முகனார் அவர்கள் பத்தாம் வகுப்பு தேறுவதற்குள் மார்லி (Morley) எழுதிய, புகழ் பெற்ற ‘கிளாட்சனின் வாழ்க்கை’ என்ற நூல் முழுவதையும் படித்துவிட்டார் என்றால், அது வியப்புக்குரியதுதானே! பள்ளியில் விவாதப் போட்டிகளிலும் கலந்து கொண்டார். அதுவே அவருக்குப் பிற்காலத்தில் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்க நல்ல முற்பயிற்சியை அளித்தது என்று கூறலாம்.

மெட்ரிகுலேசனில் தேர்ச்சி பெற்ற பிறகு சென்னையில் அப்பொழுது பாரிமுனைப் பகுதியில் எஸ்பிளனேட் என்று கூறப்படும் இடத்திலிருந்த சென்னை கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து *1915*-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். கல்லூரியில் படித்த காலத்தில் திரு. ஆர்.கே.எஸ். அவர்கள் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வல்லவரானார். கோபால கிருஷ்ண கோகலே, விபின் சந்திரபால், பாலகங்காதர திலகர் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் எழுச்சிமிகு பேச்சுக்கள் அவரை வெகுவாகக் கவர்ந்தன. பி.ஏ. படித்து முடித்ததும் சண்முகனார் அவர்கள், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்றார். அப்பொழுது ஒருமுறை அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி ஒன்று ஒய்.எம்.சி.ஏ.-வில் நடந்தபோது அதில் கலந்துகொண்டு, கேட்டாரைப் பிணிக்கும் வகையில் மிக அற்புதமாகப் பேசி முதற் பரிசைத் தட்டிச் சென்றதை அனைவரும் மனதாரப் பாராட்டினார்கள்.

முதலில் வழக்குரைஞராக வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று எண்ணியிருந்த சண்முகனார் அவர்கள் அத்துறையில் நீண்ட நாட்கள் இருக்காமல் அரசியலில் அடி எடுத்து வைத்து *1920*-ஆம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் நீலகிரி தொகுதியில் உறுப்பினராக நுழைந்தார். சர். பிட்டி தியாகராயச் செட்டியார், பனகல் அரசர் சர்.பிட்டி இராஜன், சர்.ஏ. ராமசாமி முதலியார், திரு. பி. சுப்பராயன் போன்றோர் இருந்த அந்த சட்டசபையில் திரு. ஆர்.கே.எஸ். அவர்களின் ஆணித்தரமான சொற்பொழிவுகள் யாவரையும் வியக்க வைத்தது. அவரது வாதத் திறமையும், கருத்துச் செறிவும், ஆழ்ந்த புலமையும், பிறர் எளிதில் புரிந்து கொள்ளும்படி தெளிவாகப் பேசும் ஆற்றலும் அவரை ஒரு மிகச் சிறந்த சட்டசபையானர் என்பதை வெளிப்படுத்தின. அன்றைய நாளேடுகள், அவரது பட்ஜெட் பேச்சுகள், பொருள் ஞானத்திலும் சரி,

முறையிலும் சரி, அலசி ஆராயும் தன்மை யிலும் சரி, தனித்தன்மையோடு மிளிர்ந் தன என்பதைச் சுட்டிக்காட்டின.

'பரந்த கண்ணோட்டமுடைய, திறமை மிக்க இளைஞர் ஆர்.கே.எஸ். டெல்லி சட்டசபைக்குப் (தற்போதைய பாராளு மன்றம்) போனால் அது அவருக்கும், நாட்டுக்கும் நல்லது என்று அன்னி பெசண்ட் அம்மையார் போன்றோரும் மற்ற நெருங்கிய நண்பர்கள் பலரும் வற் புறுத்த, சண்முகனார் அவர்கள் 1923-இல் டெல்லியிலுள்ள மத்திய சட்ட சபைக்குத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். அப்பொழுது இந்தியாவில் மாபெரும் அரசியல்வாதிகள், சொல் லேருழவர்கள், செல்வாக்கும், செல்வமும் மிகுந்தவர்கள், புகழ்பெற்ற சட்டவல்லு ந ர்கள், வர்த்தகர்கள், கீர்த்தி மிகு அறிஞர்கள், தியாகிகள் எனப் பலரும் மத்திய சட்டசபையை அலங்கரித்திருந் தனர். அவர்கள் மத்தியில் இளைய உறுப்பினராக மத்திய சட்டசபையில் நுழைந்த ஆர்.கே.எஸ். அவர்கள் தனது கூர்ந்த மதியினாலும் பேச்சாற்றலாலும் அனைவரது கருத்தையும், கவனத்தையும் ஈர்த்தார்.

நிதி, வர்த்தகம், கைத்தொழில் பற்றிய பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறித்து அவர் ஆற்றிய திறனாய்வு மிக்க உரைகள் வேறு யார் பேசியதையும் விஞ்சக் கூடியதாகப் பளிச்சிட்டன என்பதை அரசியல் அறிஞர்கள் யாவ ருமே ஒப்புக் கொண்டுள்ளனர். இதுவே பண்டித மோதிலால் நேரு அவர்கள் அவரை அழைத்து தம் சுயராச்சியக் கட்சி யில் சேர்த்துக் கொள்ளச் செய்தது. அது மட்டுமல்ல, அக்கட்சியின் கொரடா ஆகவும், அவர் இருக்கும்படி பண்டித மோதிலால் நேரு செய்வித்தார்.

1924-ஆம் ஆண்டு அவர் டெல்லி சட்டசபைக்கு வந்தபோது, மந்திரிசபை யிலும் ஆட்சிப் பொறுப்பிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களான சில பிரிட்டிஷ் காரர்கள் இருந்தனர். சர்.மால்கம் ஹெய்லி (Sir Malcolm Haily) சர். அலெக்சாண்டர் மட்டிமன் (Sir Alexander Muddiman) சர் பேசில் பிளாக்கட் (Sir Basil Blacket) போன்ற வல்லவர்கள் வைஸ்ராய் நிர்வாக சபை உறுப்பினர் களாக இருந்தார்கள். இவர்களை எதிர்த் துப் பேசக்கூடிய சொல்வன்மையை ஆர்.கே.எஸ். அவர்கள் வெளிப்படுத் தியது இந்தப் பிரிட்டிஷ்காரர்களைக் கலங்க வைத்தது என்றால் மிகையாகாது. காரணம் அவர் பேசியதில் கருத்து ஆழமும், அழுத்தமும், மறுக்க முடியாத உண்மையும், புள்ளி விவரங்களும் இருந் ததுதான். 'பொதுமக்கள் கருத்து அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக இல்லை', ஒரு பிரிட்டிஷ் அதிகாரி குறிப்பிட்டி ருந்தார். சண்முகனார் இதற்குச் சாட்டை யடி எனத் தந்த பதில். 'பொதுமக்களின் கருத்து என்பது வீதியில் போவோர் வருவோரின் கருத்தல்ல. பிரச்சினையின் தன்மையைப் புரிந்துகொள்ளக் கூடிய வர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய கருத்துத்தான் பொதுமக்கள் கருத்து' என்பதுதான். 1928-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை சர்.பேசில் பிளாக்கட் தயாரித்த முறை சரியல்ல என்பதைக் கண்டுபிடித்துவிட்ட ஆர்.கே.எஸ். அவர்கள் 'இது மட்டும் ஒரு கம்பெனியின் வரவு செலவுக் கணக்காக இருக்குமே யானால் பிளாக்கட்டை வழக்குமன்ற கூண்டிலே ஏற்றி இருப்பார்கள்' என்று நையாண்டி செய்தார்.

சண்முகனார் ஆற்றிய மிகச் சிறந்த பேச்சுக்களில் ஆட்டவா ஒப்பந்தத்தின் மீது ஆற்றிய உரை ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதிநிதி களில் ஒருவர் என்ற முறையில் அவரைத் தேசியவாதிகள் வன்மையாகக் குறை கூறியதற்கு அவர் கொடுத்த பதிலாவது: 'பிறர் குறை கூறுவது கண்டு முட்டாள் தனமாக நான் வருந்தமாட்டேன் அவர்கள் குறை கூறுவது எவ்வளவு மனப்பூர்வமானதோ அந்த அளவுக்கு எனது செய்கையும் மனப்பூர்வமானது என்பதைக் குறை கூறு பவர்கள் உணரவேண்டும் என்பதே எனது விருப்பம்'. தனது நிலையில் எந்த சுய நலமோ அடிமைப் பான்மையோ மருந்துக்கும் இல்லை என்பதைத் தெளிவு படுத்தினார்.

1933-ஆம் ஆண்டு மார்ச் 14-ஆம் நாள் ஆர்.கே.எஸ். அவர்களின் வாழ்க் கையில் ஒரு மிக முக்கியமான நாளாகும். அன்றுதான் அவர் டெல்லி மத்திய சபையின் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தென்னிந்தியர் மற்றும் முதல் தமிழர் என்ற சிறப்பு அவரையே சாரும். மேலும், அவர்தான் அந்தப் பதவியிலே அமர்ந்த வர்களில் குறைந்த வயதினர் என்ற புகழையும் ஈட்டினார். அப்பொழுது அவ ருக்கு 40, வயது தான் என்று நினைக்கும் போது நமக்கு ஏற்படும் வியப்பு கொஞ்ச நஞ்சம் அல்ல. திரு. சண்முகனார் சட்ட சபையில் தலைவராக ஆனது அப் போதைய நிதி அமைச்சர் சர். ஜார்ஜ் ஷூஸ்டருக்கு யின நிம்மதியைத் தந்ததாம். நிதிப் பற்றிய விவாதம் ஒன்றில் பதில் கொடுக்க எழுந்த அவர் பேசியதாவது:

'இன்று என் பொறுப்பு மிகவும் எளிதாகி விட்டது. ஏனெனில், எனக்கு எப்போதும் தலைவலியைத் தருகிற சண்முகனார் இப்பொழுது சட்டமன்றத் தலைவராக வந்துவிட்டார். சிறிதளவு இரக்கம் காட்டினால் கூட ஒருவன் அதற்கு நன்றி செலுத்த வேண்டுமென் றால் விவாத அரங்கிலிருந்து ஒரு கடுமை யான விமரிசகர் ஆன சண்முகனார் அவர்கள் விலகி வேறொரு உயர்ந்த பதவியான அவைத் தலைவர் பதவிக்குப் போய்விட்டதற்கு நான் கடவுளுக்கு எவ்வளவு நன்றி செலுத்த வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். சட்ட சபையின் தலைவராக ஆர்.கே.எஸ். அவர்கள் அணுவளவும் பாரபட்சமில் லாமல் நடந்துகொண்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது திறமையை மெச்சி, அவருக்கு 'சர்' பட்டத்தை வழங்கியது.

பல எதிர்ப்புச் சக்திகள் செயல்பட்ட காரணத்தினால் 1934-இல் நடந்த மத்திய சட்டசபைத் தேர்தலில் சர். ஆர்.கே.எஸ். அவர்கள் வெற்றி பெற முடியாமற் போனது ஒரு துரதிஷ்டமே யாகும். இருப்பினும் இந்தத் தோல்வியே அவரை கொச்சி சமஸ்தானத்தின் திவானாகச் செல்ல வழிவகுத்தது. வைசிராய் வெலிங்டன் அழைப்பை ஏற்று அவர் கொச்சினுக்குச் சென்று தான் ஏற்ற ஒரு பொறுப்பான பதவிக்குச் சேர்ந்த பெருமை அளப்பரியது. ஜனநாயகப் பூர் வமான பொறுப்பாட்சியைக் கொச்சினில் முதன்முறையாக நிலைநாட்டியதே சர். சண்முகம் அவர்கள்தான். அரசாங்க அலுவல்களைக் கண்ணுங்கருத்துமாக கண்காணித்து சமஸ்தானத்தில் நிலவிய பூசல்களையும், ஊழல்களையும், கோளாறு களையும் களைந்தெறிந்தார். தக்க நபர் களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழுவை முதல்முறையாக அமைத்ததே அவர்தான்.

சமஸ்தானத்தின் பொருளாதாரத் தைப் பலப்படுத்தி இலாபகரமான வரு வாய்க்கு வழிவகுத்தார். தென்னிந்தியா வின் தலைவாசல் (Gate way of South India) என்றும் 'அரபிக் கடலின் அழகு ராணி' என்றும் கொச்சி பாராட்டுப் பெற அங்குத் துறைமுகம் அமைத்த சாத னையே அது. தாழ்த்தப்பட்ட ஈழவர் களுக்குப் பல உரிமைகளை வழங்கினார். எர்ணாகுளத்தை ஓர் அழகு நகரமாக ஆக்கினார். கொச்சி ராஜ்யத்தின் மக்கள் பயனுறும் வகையில் மின்சாரத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினார். ரயில் பாதை சிறப்பாகவும், சாலைகள் சீர் திருத்தப்படவும், போக்குவரத்துத் தொடர்பு உண்டாக நீண்டதொரு கால்வாய் வெட்டப்படவும் காரணமாக இருந்தார். மிக வயதான மகாராஜா ராமவர்மா அவர்கள் சர். ஆர்.கே.எஸ்.-விற்கு 'மாவீரர்' என்ற சிறப்புப் பட்டமளித்து கௌரவித்தார். மகாராஜாவின் மறை விற்குப்பின் கொச்சின் திவான் பதவியை விட்டு விலகி கோவைக்குத்திரும்பினார்.

சர். சண்முகனார் அவர்கள் 1924-ஆம் ஆண்டு முதன்முறையாகத் தூதுக்குழு ஒன்றின் உறுப்பினராக

சிவராஜ், ஆர்.கே. சண்முகம் செட்டியார், இராமச்சந்திர செட்டி, பி.டி. இராசன்

தமிழரசு

அடுத்து வரும் இதழ்களில் தொடரவிருக்கும் புதுமைகள்!

- மாதம் ஒரு மருத்துவர்!
  —நோய்கள் பற்றிய உங்கள் கேள்விகளுக்கு, மாதம் ஒரு மருத்துவர் பதில் கூறுகிறார்.
- இலக்கிய விருந்து
  —பண்டைய பெருமையைப் பறைசாற்றும் பகுதி
- மாணவர் இளைஞர் பக்கம்
  மாணவ மணிகள் தங்கள் திறமைகளை வெளிப் படுத்தவும், பொது அறிவு, சுயவேலை வாய்ப்புப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் உதவும் பகுதி.
- சிறுகதைச் செல்வம்:
  சிந்திக்கத் தூண்டும் சிறந்த சிறுகதைகள்.
- அன்றாட வாழ்வில் அறிவியல்
  அறிஞர் பெருமக்களின் அறிவியல் கட்டுரைகள்.
- கவிதைப் போட்டி
  வாசகர்களின் புலமையை வெளிப்படுத்தும் புதுப்பகுதி.

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கிருந்து ஐரோப்பாவிலுள்ள சர்வதேச நிறுவனங்கள் சிலவற்றைக் கண்டுவிட்டு புதிய கருத்துக்களோடு தாயகம் திரும்பினார். 1926-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'காமன்வெல்த் பார்லிமெண்டரி' மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகப் பங்கு கொண்டு, பெரும்பாலான ஆங்கிலேயர்களை விட அற்புதமாக ஆங்கிலத்தில் பேசியதை ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வியந்து பாராட்டின.

1940-இல் இந்திய பர்சேஸிங் மிஷினின் தலைவராக அமெரிக்கா சென்றார். 1944-இல் அமெரிக்காவிலுள்ள பிரிட்டன் வுட்ஸில் (Britton Woods) நடந்த சர்வதேச நிதி மாநாட்டில் பங்கு கொண்டு இந்தியாவின் சார்பில் எடுத்துரைத்த கருத்துக்கள் யாவரையும் வியக்கச் செய்தன.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் அதாவது நம் சுதந்திர நாளன்று அண்ணல் காந்தி அடிகளின் பரிந்துரையை ஏற்று பண்டித ஜவகர்லால் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்தியாவின் முதலாவது நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். திரு. ஆர்.கே.எஸ். அவர்கள் அவ்வமயம்தான் 'சர்' பட்டத்தையும் துறந்தார். ஓராண்டே நிதி அமைச்சராக இருந்து அண்ணல் காந்தி அடிகளே பாராட்டும் வகையில் நாட்டின் நிதி நிலையைச் சாமர்த்தியமாகக் கட்டிக் காத்தார். அவரால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் அனைவராலும் போற்றி வரவேற்கப்பட்டது. ஆனால், கருத்து வேற்றுமைகள் சில எழுந்த காரணத்தினால் நிதி அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார். அதற்கு முன்பு 'Sterling Balances' என்னும் சிக்கலான பிரச்சினையைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு திறமையாகப் பேசி, இந்தியாவிற்குச் சாதகமாகத் தீர்த்து வைத்தது வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

அறிஞர் சண்முகனார் அவர்களுக்கு 1948-இல் அண்ணாமலைப் பல்கலைகக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலப் புலமை பெற்றிருந்த அவர் தமிழிலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர் என்பதை நாம் மறக்க முடியாது. தான் முதலில் தமிழின்பால் ஈடுபாடு கொள்ளாமல் போனதற்கு வருந்தி, பிறகு உலகம் போற்றும் தமிழ்ப் பேரிலக்கியங்களைக் கற்க ஆரம்பித்து, பிறகுதான் வாழ்வின் முழுமையைக் கண்டறியக் கூடிய மனிதன் ஆனேன் என்று அவர் கூறியுள்ளது, அவரது அடக்கமான மாண்பினைக் காட்டியது.

காவியங்களுள் உயிர்ப்பாயுள்ள சிலப்பதிகாரம் ஒரு தமிழ்க்கோயில் ஆகும் என்று திரு.வி.க. அவர்கள் சொல்வார்கள். அப்பேர்ப்பட்ட சிலப்பதிகாரத்தில் டாக்டர் சண்முகனார் அவர்கள் உள்ளத்தையே பறிகொடுத்து தமிழர் எல்லாம் மகிழ்ச்சியோடு வரவேற்கும்படியாக அவ்விலக்கியத்திற்குப் புத்தம்புத்துரை எழுதி வெளியிட்டது தமிழ் வரலாற்றில் ஒரு மைல்கல் போன்றதாகும். சிலம்புக்கெனப் பிறந்து, சிலம்புக்கென வளர்ந்து, சிலம்புக்கென வாழ்ந்தவர் டாக்டர் ஆர்.கே.எஸ். அவர்கள்.

1951-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பு ஏற்று நிர்வாகத்தில் செம்மையையும், தமிழிலக்கிய ஆராய்ச்சியில் புத்துணர்வினையும் ஊட்டினார். தமிழ்ப் பெருங் காப்பியமான கம்பராமாயணத்தினைச் சிறந்த பல்கலைக் கழகப் பதிப்பாக வெளியிடத் திட்டமிட்டது இவரது தமிழ்ப் பண்பாட்டினையே காட்டுவதாகும்.

வள்ளுவர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்து வாழ்தலே மக்களுக்கு நலன் பயப்பதாகும் என்பதைத் தமது அனுபவத்தால் அறுதியிட்டுக் கூறினார் திரு. சண்முகனார் அவர்கள், மற்றும் அவரது தமிழிசைத் தொண்டு செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியாரின் பெருமதிப்பையும் நட்பையும் பெற்றுத் தந்தது. அண்ணாமலை அரசருக்கும் அவரது திருமகனார் முத்தைய வேளுக்கும் வலதுகரமாக அமைந்த டாக்டர் ஆர்.கே.எஸ். தமிழிசை இயக்கத்தில் உண்மையும், நியாயமும் இருப்பதை அருமையான வாதத் திறமையோடு பேசியதைத் தமிழ் உலகம் என்றும் மறக்காது.

'உள்ள நெகிழ்ச்சியையும் பக்தி உணர்ச்சியையும் எடுத்துக்கட்டும்படியாகத் தான் உலகிலே இசை பிறந்தது. சிறப்பாகத் தேவாரப் பண், பக்தி உணர்ச்சி ததும்பும் அரிய களஞ்சியம். எனவே அதைப் பாடுபவரும், கேட்பவர்களும் அதே உணர்ச்சியில் மூழ்க வேண்டியது அவசியம். பொருள் தெரியாமல் இசை பாடுவதில் பயனே கிடையாது'', என்று அவர் கூறுவதில் நியாயம் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

டாக்டர் ஆர்.கே.எஸ். ஒரு சர்வதேசப் பொருளாதார நிபுணர்; அரசியல் விவேகங் கொண்ட தகைமையாளர்; நிர்வாகத்தில் திறமையாளர்; இலக்கிய மேதை; நாவீறு படைத்த அஞ்சாநெஞ்சம் படைத்தவர்; கலை அறிஞர்; தமிழிசைப் பிரியர்; பாவலர் போற்றும் முத்தமிழ்க் காவலர்; சமூகத் தொண்டில் திளைத்த செயல் மறவர்; சிறுமை சிந்தியாத பேராளர்; 'Character' என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் மொழிப்பெயர்ப்பதென்றால் 'நாணயம்' என்றுதான் சொல்ல வேண்டும் என்று அருமையாக எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல் தன் வாழ்நாளெல்லாம் நாணயமாக நடந்து கொண்ட சான்றாண்மையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நாணயத்தோடு நா நயத்தையும் இணைத்து,

'சொலல் வல்லன், சோர்விலன்
அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது'

என்னும் தெய்வப் புலவரின் கூற்றுக்கு ஒரு மகத்தான எடுத்துக்காட்டாக விளங்கிய அற்புதர் டாக்டர் ஆர்.கே.எஸ். அவர்கள், நந்தா விளக்காக அந்தமிலாக் காலம் வரை மனித இனத்தின் மேம்பாட்டிற்காக உறுதுணையாக ஒளிர்வதாக!

வாலாஜா பேட்டையிலிருந்து ஐரோப்பாவிற்கு

• வாலாஜா பேட்டைக்கும், ஐரோப்பாவிற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! தமிழ்நாட்டின் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள சிறிய நகராட்சியான வாலாஜா பேட்டையிலிருந்து ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பிரம்புப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான 'ஆர்டர்' கிடைத்துள்ளது.

'பிரம்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவும் விதமாகக் கடந்த 35 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறது. 1957-இல் தொடங்கிய இந்தச் சங்கத்தின் வர்த்தகப் பரிமாற்றம் ஆண்டொன்றுக்கு ஏழு இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது. இதன் மாத விற்பனை நாற்பதாயிரம் ரூபாயாகும்.

வேளாண் உற்பத்திக்கு

முன்னோடித் திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 29.10.1992 அன்று தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்னுரிமை அடிப்படையில் வேளாண்மைத் திட்டப் பணிகள் நடைபெறுவது குறித்து ஆய்வு செய்தார். அத்துறையின் செயலாக்கப்பணிகளைப் பரிசீலித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், மேலான கவனத்தைச் செலுத்துமாறு அறிவுரை பகர்ந்தார்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்க

1. இப்போதுள்ள வேளாண் பயிற்சித் திட்டங்களைப் பயன்படுத்தி விவசாயிகள் மத்தியில் வேளாண்மை விரிவாக்கம், தகுதி வாய்ந்த நீர் நிர்வாகம், நவீன விவசாய . முறைகள் ஆகியவற்றைக் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு எடுத்துரைத்தல்.

2. குறைந்த மழையினால் பாசனத்திற்கு நீர் குறைவாக உள்ள நேரத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தைச் செயல்படுத்த ஒரு நீண்ட காலமுறை வகுத்துத் தருதல்.

3. மாநில முழுவதுமுள்ள பயனில்லா நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் பயிர் வளர்ப்புத் தொழில்நலத் திட்டத்தின் அடிப்படையில் வேளாண் காடுகள், தோட்டக்கலை மற்றும் மானாவாரிப் பயிர்களைப் பயிரிடுதல்.

4. தோட்டக்கலை மற்றும் பயிர் வளர்ப்பிற்குச் சொட்டுநீர்ப் பாசனம் நீர்த் தெளிப்பான் பாசனம் ஆகிய நுண் நீர் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

5. சென்னை, மதுரை, கோவை, நெல்லை போன்ற நகரங்களை ஒட்டிய நகர்ப்புறப் பகுதிகளில் தோட்டக்கலை மற்றும் காய்கறி உற்பத்தி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்தல், உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து அதிக இலாபம் சம்பாதிக்கும் இடைத்தரகர்களை அகற்றி, காய்கறி பயிரிடுதல், வளர்த்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் திட்டம் வகுத்துச் செயல்படுதல்.

6. தரிசு நிலங்களிலும் மழை பெய்யும் பகுதிகளிலும், எலுமிச்சை, கொய்யா, நார்த்தை ஆகிய குறைந்த விலையுள்ள பழங்களைத் தோட்டக்கலை வளர்ப்புத் திட்டத்தில் பயிரிட்டு வளர்த்தல்.

7. மத்திய அரசின் சலுகை விலையில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்க வழி வகுத்தல்.

8. திருவண்ணாமலை-சம்புவராயர் போன்ற மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் திட்டங்களுக்கு உரிய முன்னுரிமை வழங்குதல்.

9. மிக உயர்ந்த பயிர்களுக்கு, கழிவுநீரைப் பயன்படுத்துதல் பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மைத் துறை ஆகிய துறைகள் இணைந்து செயல் வடிவத் திட்டத்தை உருவாக்குதல்.

10. பாசுமதி நெல்லைப்போல வாசமிகு புதிய நெல் ரகம் 'ஜெஜெ 92'-ஐ வியாபார நோக்கோடு பயிரிட விரைவில் வெளியிடுதல்.

11. மாநிலத்திலுள்ள பள்ளிகளில் 6-வது படிக்கின்ற 60,000 மாணவர்களுக்குத் தென்னங்கன்று பயிரிடுவதற்காகப் 'புரட்சித் தலைவி தென்னங்கன்று விநியோகத் திட்டத்தின்' கீழ் கூடுதலாக ரூ.10 இலட்சம் செலவில் விநியோகித்தல்.

12. தேசிய பால்பெருக்குக் கழகம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பழங்கள் காய்கறிகள் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்கின்ற வகையில் சென்னை மாநகரத்தில் பழங்கள் காய்கறித் திட்டம் செயல்படுத்துதல்.

- என்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைக்கேற்ப வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் செயல் வடிவக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

• தாய்மை, கண்ணீரைச் சிந்திக் கொண்டே தம்முடைய இனிய புன்முறுவல்களை என்றும் மலர்ந்த நிலையில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

—ரவீந்திரநாத் தாகூர்

உணவு உற்பத்தியில் தமிழகம்

1991-92-ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 71.07 இலட்சம் டன்னாகும். இது 1989-90-வது ஆண்டில் 60.63 இலட்சம் டன்னாக இருந்தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் 2-வது இடத்திலும் தேங்காய் உற்பத்தியில் 2-வது இடத்திலும் இருக்கிறது.

இந்த ஆண்டு குறித்த காலத்தில் மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் மற்றும் இடுபொருள் விநியோகத்தின் காரணமாக வழக்கமாகப் பயிரிடப்படும் 6 இலட்சம் எக்டேருக்குப் பதில், இவ்வாண்டு 8.72 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ரூ.10.85 கோடி மதிப்பீட்டில் 20 மாவட்டங்களில் நெல் உற்

பத்திக்கு ஒருங்கிணைப்புத் திட்டம் விரிவு படுத்தப்பட்டது. ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் ஜோவர் மற்றும் கேழ்வரகு உற்பத்தித் திட்டம் 15 மாவட்டத்திலிருந்து 17 மாவட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.

உரங்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.1,000 மானியம் வழங்குவதற்கு மத்திய அரசு ரூ.34.32 கோடி ஒதுக்கீடு செய்து இதன்மூலம் 45 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் 4 இலட்சம் டன் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்படும் வகையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் - சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.54 கோடி முதலீட்டில் உர மானியம் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே வழங்கப்பட்டது.

எண்ணெய்ப் பனை உற்பத்தி

எண்ணெய்ப் பனை உற்பத்தி தமிழ்நாட்டில் 15,000 எக்டேர் பரப்பில் பயிரிட வாய்ப்புள்ளது. தொடக்கமாக 2 நாற்றங்கால்களில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பட்டுக்கோட்டையில் 25,000 எண்ணெய்ப் பனை மரக் கொட்டைகள் பயிரிடப்பட்டுள்ளன.

கோஸ்டாரீகா-விலிருந்து நவம்பர் திங்களில் 3.4 இலட்சம் உயர் ரக எண்ணெய் தரும் பனை வித்துக்களை இறக்குமதி செய்து ரூ.1.07 கோடி செலவில் 2000 எக்டேர் பரப்பில் நாற்று உருவாக்கும் திட்டம் செயல்படவிருக்கிறது.

எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திட்டத்தின் கீழ், சூரியகாந்தி பயிரிடும் திட்டம் இப்போதுள்ள 25,000 எக்டேரிலிருந்து 50,000 எக்டேருக்கு மாற்றப்படவிருக்கிறது. அதிகப் பலன் தரும் சூரியகாந்தி விதைகள் 18 டன் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 50,000 எக்டேர் பரப்பில் சோயா பீன்ஸ் பயிரிடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம்

எண்ணெய் வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் 1000 எண்ணெய் வித்து வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 4 இலட்சம் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களுக்கு, தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் ரூ.40 கோடி நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் சோயாபீன்ஸ் வளர்ப்புத் திட்டத்தையும் இந்த நிறுவனம் (TANCOF) செயல்படுத்தவிருக்கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், திருச்சி மாவட்டத்திலுள்ள குமலூரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிலக்கடலை வித்து உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சுமார் 5 இலட்சம் டன் உயர்வதுடன் ஏறத்தாழ 10 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெறும்.

வேளாண் காடு வளர்ப்புத் திட்டம்

14 மாவட்டங்களில் 84 பகுதிகளில் ரூ.31.65 கோடி மதிப்பீட்டில் ஐந்தாண்டுக் காலத் திட்டமாகத் தேசிய நீர் சேமிப்பு மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. 89,000 எக்டேர் குறியீட்டில் கடந்த ஒன்றரையாண்டுக் காலத்தில் 17,400 எக்டேர் நிலப் பரப்பில் மண் மற்றும் ஈரப்பசைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் வளாப்புத் திட்டத்தின்கீழ், உலக வங்கியின் உதவியுடன் பாலாறு, வெள்ளாறு ஆகிய நீர்ப் பாதுகாப்புக் கேந்திரங்களின் மூலம் 12 மாவட்டங்களில் ரூ.47.32 கோடி மதிப்பீட்டில் 36,000 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் தொடக்கமாக நீர்வளம், வேளாண்மைக்குரிய நிலவளம், கால்நடைத் தீவன உற்பத்தி வளம் ஆகியவற்றை நிர்மாணிக்கின்ற பணி முடிவுற்றுள்ளது.

கடந்த 1½ ஆண்டுகளில் வறட்சிக்கு இலக்காகும், பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 30,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.930 இலட்சம் செலவில் மண் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில விரிவாக்கம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

17 மாவட்டங்களில் உள்ள பத்தாயிரம் எக்டேர் தரிசு நிலத்தில் நிரந்தர மரம், வருடாந்திர ஊடு பயிர் பயிரிட ரூ.150 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுப்பெரிக்கும் விறகை நம்பி வாழும் கிராமப் பெண்கள் பயனடையும் வகையில், ரூ.6 கோடி முதலீட்டில் 100 கிராமங்களில் உள்ள 10 ஆயிரம் எக்டேர் நிலப் பரப்பில் மரம் வளர்போர் கூட்டுறவுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தேசிய பால்பெருக்குக் கழகம், தேசிய தரிசு நில மேம்பாட்டுக் கழகம் மற்றும் தேசிய மரம் வளர்ப்போர் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் மூலம் இத்திட்டத்திற்கு உதவி செய்யப்படும்.

புதிய 'ஜெ.ஜெ. 92 அரிசி' வெளியீடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்துள்ள, புதிய வாசமிகு அரிசியான 'ஜெ.ஜெ-92' 1993 பொங்கல் நாளன்று வெளியிடப்படும். இது பாசுமதி அரிசிக்கு இணையானதாகவும் எக்டேருக்கு 3.3 மெட்ரிக் டன் விளைச்சல் தரக்கூடியதுமாகும்.

காவிரி டெல்டா பகுதியில், தென்னை வளர்ச்சிக்காக 2 வகை உயர் ரகத் தென்னை வகைகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசத் தென்னங்கன்றுகள்

இளைய சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ரூ.5 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் 30 ஆயிரம் தென்னங்கன்றுகள் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்க ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்குப் பழங்கள், காய்கறிகள்

சென்னை நகரில் 10 பெரிய கடைகள் மற்றும் 150 விற்பனை நிலையங்கள் மூலம் - பழங்கள், காய்கறிகள், பூக்கள் போன்றவற்றை விற்பனை செய்ய ரூ.45 கோடி செலவில் பழங்கள் மற்றும் காய்கறித் திட்டங்களை 1993-94 முதல் அமல்படுத்த மத்திய பால்பண்ணை வளர்ச்சி வாரியம் இசைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் சென்னையில் ஒரு மைய பதப்படுத்தும் பிரிவும் திருச்சியில் வாழைக்காக ஒரு குளிர் சாதனப் பிரிவும் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு

இலட்சம் தோட்டக்கலை விவசாயிகளுக்குச் சென்னையிலுள்ள சுமார் 30 இலட்சம் நுகர்வோருடன் தொடர்பு ஏற்படும்.

தேசிய வாழை ஆராய்ச்சி மையம்

திருச்சி மாவட்டம் பொதவூரில் ரூ.2 கோடி முதலீட்டில் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஒன்றை நிறுவ மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

உதகை தாவரவியல் பூங்காவை அழகுபடுத்தும் திட்டம்

இந்திய-ஜெர்மானிய மேம்பாட்டு நிதியுதவியின் கீழ் உதகையிலுள்ள தாவரவியல் பூங்கா ரூ.71.5 இலட்சம் செலவில் அழகுபடுத்தப்படுகிறது. இங்கு ஒரு கண்ணாடி மாளிகை, கலையம்சத்துடன் கூடிய நுழைவாயில் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் உடையதாக அமைக்கப்படும்.

உதகை ஏரியில் மண் அரிப்பு, வண்டல் படிவு போன்றவற்றைத் தடுப்பதற்காக இந்த ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிரி முகடுகளைச் சீர்ப்படுத்தும் திட்டம் ரூ.90 இலட்சம் செலவில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.

பூங்காக்கள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 21 கோயில்கள் கண்டறியப்பட்டு இந்தக் கோயில்களுக்குத் தேவையான பூக்கள் மற்றும் பழங்கள் இந்தத் தோட்டங்களிலேயே கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும். தற்போதுள்ள தோட்டக் கலைப் பூங்காக்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் சிறிய பாசனத் திட்டத்துடன் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் மாநிலத்திலுள்ள சுமார் 20 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர்.

தோட்டக்கலை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம்

மாம்பழத்துக்குத் தருமபுரி மாவட்டம், வாழைப்பழத்திற்குத் திருச்சி மாவட்டம், திராட்சைப் பழங்களுக்கு மதுரை மாவட்டம் என அடையாளம் கண்டுகொள்ளப் பட்டுள்ளது. இந்தப் பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, இந்த இடங்களில் தோட்டக்கலை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலங்கள் அமைக்க மத்திய அரசை அணுகத் தகுந்த செயற்குறிப்புகள் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு

மாண்புமிகு முதல்வரின் ஆலோசனையின் பேரில், தருமபுரி மாவட்டத்தில் 'சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பை' நிறுவ மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை இதற்கான மாதிரித் திட்

டத்தைத் தயாரித்து வருகிறது. விவசாய மேம்பாடு, வேளாண் காடு வளர்ப்பு, பெண் விவசாயிகளுக்கு விவசாயத் தொழில் நுட்பப் பயிற்சி போன்ற பணிகள் ரூ.330 கோடி முதலீட்டில் 5 வெளி உதவித் திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டம் ரூ.309.29 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் ரூ.14.54 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.40 கோடி கூடுதலாகச் செலவழிக்கப்படும். இந்தப் பல நோக்குத் திட்டம் விவசாயத் திட்டமிடல், விதை உற்பத்தி, கால்நடை மேம்பாடு, வனவளம் போன்ற பணிகளுக்கு உதவும். மாநிலத்தில் விவசாய முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்களில் கிராமப்புறச் சாலை அமைத்தல், கிராமக் குடிநீர் விநியோகம் போன்ற திட்டங்களும் இதன் மூலம் செயல்படுத்தப்படும்.

டானிடா உதவியுடன் நடைபெறும் 'வேளாண் திட்டத்தில் தமிழகப் பெண்கள்' என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு விவசாயத் தொழில்நுட்பம் குறித்து 6 மாவட்டங்களில் சுமார் 11,400 விவசாயப் பெண்மணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முதலீடு ரூ.4.12 கோடி.

வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் வறண்ட தரிசு நிலங்களில் ரூ.175 இலட்சம் செலவில் 90 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

நெல்லை-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் டானிடா திட்டத்தின் கீழ் ரூ.6.47 கோடி செலவில் காற்று அரிமானத்தால் பாதிக்கப்பட்ட 5,725 எக்டேர் பிரச்சினைக்குரிய நிலம் விரிவான நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

உணவு-வேளாண் நிறுவனத்தின் (F.A.O) உதவியுடன் அவினாசிலிங்கம் கிராமியப் பல்கலைக் கழகத்தின் மூலம் ரூ.25 இலட்சம் செலவில் 8 மாவட்டங்களிலுள்ள 25 ஆயிரம் பெண் விவசாயிகளுக்கு 'அறுவடைக்குப் பிந்திய தானியப் பாதுகாப்புத் தொழில் நுட்பம்' குறித்துப் பயிற்சி அளிக்கப்படும்.

1993-94 முதல் செயல்படும் 5 திட்டங்கள்

கீழ்க்கண்ட ஐந்து திட்டங்களை வெளியார் நிதியுதவியுடன் செயல்படுத்த அனுமதி வழங்குவது இறுதிக் கட்டத்தில் உள்ளது.

அவையாவன:

1. உலக வங்கி உதவியுடன் வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டம்

2. ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் நிதியுதவியுடன் ரூ.20.35 கோடி முதலீட்டில் வேளாண் விளைபொருள் விற்பனை மேம்பாட்டுத் திட்டம்.

3. ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் உதவியுடன் ரூ.81.80 கோடி செலவில் தென்னை மேம்பாட்டுத் திட்டம்.

4. காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.12.50 கோடி செலவில் 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் விரிவான நீர்வள மேம்பாட்டுத் திட்டம்; இந்தத் திட்டத்துக்கு டானிடா நிதியுதவி அளிக்கும்.

5. டானிடா நிதியுதவியுடன் நடைபெறும் 'வேளாண் திட்டத்தில் தமிழகப் பெண்கள்' திட்டத்தின் இரண்டாம் பகுதி ரூ.15 கோடி செலவில் மாநிலம் முழுவதும் 7 ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

வெளியார் நிதியுதவி தேவைப்படும் கீழ்க்கண்ட மூன்று வேளாண் திட்டப் பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த மூன்று திட்டங்களுக்கு ரூ.250 கோடி தேவைப்படுகிறது. இதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது.

* 4 மாவட்டங்களில் ரூ.150 கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் 50 ஆயிரம் எக்டேர் நிலச் சீரமைப்புத் திட்டம்.

* உணவு-வேளாண் நிறுவன (F.A.O) உதவியுடன் ரூ.75 கோடி செலவில் மலைப்பகுதிகளில் வேளாண் மேம்பாட்டுத் திட்டம்.

* ஐரோப்பியப் பொருளாதார சமூக நிதியுதவியுடன் தென்னை விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில் வாசனைப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம்.

விவசாயப் பணிகளை இயந்திர மயமாக்குதல்

விவசாயப் பணிகளை இயந்திர மயமாக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 200 டிராக்டர்களும் 2,425 பவர் டில்லர்களும் (Power Tillers) வாங்கப்பட்டுள்ளன. பவர் டில்லர்களுக்கு ரூ.240 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 பவர் டில்லர்களும், 30 டிராக்டர்களும் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதுதவிர தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவு இணையத்தின் (ENCOFED) மூலம் பொருளாதார நிலையில் நலிந்த விவசாயிகளுக்கு டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. மேலும் இந்த இணையத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தெளிப்பான், உரம், பூச்சிக் கொல்லி மருந்து, பம்பு செட் போன்ற இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. 1992-93-இல் ரூ.70 கோடி செலவில் இந்த இணையத்தின் மூலம் உரங்கள் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

• கண்ணுக்கு மை இடுவதைப் போலப் பிறமொழிகளைப் பயன்படுத்த வேண்டும்; மை அதிகமானால் எப்படி கண்ணை அரித்து விடுகிறதோ, அதைப்போல பிறமொழிகளை அதிகம் கற்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

—அறிஞர் அண்ணா

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.


பொங்கல் இதழ்—
16.1.1993
● மாவட்ட வரலாற்றுச் சிறப்புகள்!...
● அரசு ஆற்றிவரும் அரும்பணிகள்!...
● நல்வாழ்வு பெற்ற நலிவுற்றோர்
சந்திப்புக் கட்டுரைகள்!
● அழகிய புகைப்படங்கள்!...
● அத்தனையும் தாங்கி பத்திரப்படுத்த
தக்கதாக அற்புதமாய் வெளிவருகி